UNIVERSAL
LIBRARY
OU_208034
UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. TH·894.8111 S 69 K Accession No. TH. 719

Author Somasundaranar, P.V.

Title Kurunthogai. 1955.

This book should be returned on or before the date last marked below.

கழக வெளியீடு : எஅ/ந.

குறுந்தொகை



பெருமழைப் புலவர்,

திரு. பொ. வே. சோமசுந்தரனார்

எழுதிய

உரையுடன்



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1

First Edition: May, 1955.

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, Madras-1. C. 1200.

பதிப்புரை



சங்ககாலப் பழந்தமிழ் நூல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப் பல வாகப் பிரிவுபடுத்தப் பெற்றுள்ளன. அவற்றுள் இக் குறுந்தொகை எட்டுத்தொகையில் இரண்டாவதாக 'நல்ல குறுந்தொகை'யென ஆன்றோரால் பாராட்டுப் பெற்றது.

இந் நூற்கு ஏற்கெனவே, விரிந்த உரையுள்ளது. ஆயினும், மாணவரும், கற்றுத்துறைபோகும் அறிஞர் களும் கற்பதற்கும் எளிதில் பொருளுணர்தற்கும வாய்ப்பாக, தலைப்பில் பாட்டின் எண்ணும், வாயில் களின் கூற்றும், துறையும், அதன் விளக்கமும், பாட்டுக்குச் சொல்லுரை, விளக்கவுரை, இலக்கணக் குறிப்புக்களும் சுருக்கமும் பெருக்கமுமின்றி அள வோடு சுவை கெழுமப் பெருமழைப் புலவர், திரு. பொ. வே. சோமசுந்தரனாரவர்களைக் கொண்டு எழுதுவித்து அழகிய முறையில் நூல் முழுதுக்கும் எழுதிச் சிறந்த முறையில் செப்பஞ் செய்து வெளியிட்டுள்ளோம்.

பண்டைக்கால நம் தமிழகப் பெரியோர் ஒழுக லாறுகளையும் பழக்க வழக்க ஒழுக்க முறைகளையும் கணவன் மனைவியர் காதல்வாழ்வினையும் அறம் மறம் மானம் உரிமை செம்மை வண்மை தொழில் பண்பாடு ஆகிய சீரிய தன்மைகளையும் அறிந்தின் புறற் கேற்ற முழு மணிப்பேழை இக் குறுந்தொகைப் பெருநூல்.

இதனை நம் தமிழ்நன்மக்கள் உள்ளன்புடன் வாங்கிக் கற்றும் கற்பித்தும் சொல்லியும், நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் அறப்பெரு வாழ்வு வாழ்ந்து இன்புறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
பதிப்புரை	....	3
அணிந்துரை	....	5
பாடிய சான்றோர்	....	33
கடவுள் வாழ்த்து	....	க
நூல் : (க முதல் சoக பாட்டுக்கள்)	....	ச - ருகூசு
செய்யுள்முதற்குறிப்பு அகரவரிசை	....	ருகூஎ
அருஞ்சொற்பொருள் அகரவரிசை	....	சுoஉ

அணிந்துரை

க. நூல் வரலாறு

இக் குறுந்தொகை என்னும் சீரிய இலக்கியம் பண்டைக் காலத்து நல்லிசைப் புலவர்களாற் பாடப்பட்ட, பாட்டுந் தொகையும் கீழ்க்கணக்குமாகிய முத்திறத்து நூல்களுள் நடு நின்ற தொகைநூல்களை எட்டனுள் ஒன்றாகும்.

> ''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப்பத்து ஒங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறம் என்று
> இத்திறத்த எட்டுத் தொகை''

என வரும் இப் பழைய வெண்பாவால் எட்டுத்தொகை நூல்கள் இன்னவை என்று உணரலாம்

இவ்வெட்டுத் தொகைநூல்கள், அகம் புறம் என்னும் பொருணெறி மரபுபற்றிப் பல்வேறு காலங்களிலே பற்பல நல் லிசைப் புலவர்கள் தனித்தனியே பாடிய செய்யுள்களின் தொகு தியே யாகும். கலியுணர்ச்சி மிக்கிருந்த அக்காலத்துச் சான் றோர், அச செய்யுட்களைப் பொருள்பற்றியும், யாப்புப்பற்றியும், எட்டு நூல்களாக வகுத்துத் தொகுத்துள்ளார்கள். அவற்றுள், இக் குறுந்தொகையும், நற்றிணையும், நெடுந்தொகையும், (அக நானூறு) ஆசிரியப்பாவா னியன்ற ஆயிரத்திருநூறு செய்யுட் களின் தொகுதியாகும் பொருளானும், யாப்பானும், இச் செய் யுள்களனைத்தும் ஒரே இனத்தின்பாற் படுவனவாயினும், இவை யிற்றை ஒன்றுந்த தொகை செயயுமிடத்து, நூல் மிகவும் நீளி தாம் என்று கருதி, சிறுமை, பெருமை, இடைநிகர்வு என்னும் முத்திறத்த அடிவரையறைகளானே மூன்று தொகைகளாகப் பகுத்துள்ளனர். அவற்றுள இக் குறுந்தொகை நான்கடிச் சிறு மையும், எட்டடிப் பெருமையும் உடைய நானூறு செய்யுட்களின் தொகுதியாகும். குறிய அடிகளையுடைய செய்யுட்களின் தொகையாகலின், இது குறுந்தொகை என வழங்கப்பட்டது. ஒன்பதடிச் சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையும் உடைய நானூறு செய்யுட்களின் தொகை நற்றிணை யாகும். பதின்மூன் றடிச் சிறுமையும் முப்பத்தோரடிப் பெருமையும உடைய செய் யுள்களடங்கிய தொகை நூல் நெடுந்தொகை என வழங்கப்படு கின்றது.

இனி இம்மூன்று தொகைநூல்களும், இப்முறையே தொகுக்கப்பட்டிருப்பினும் இக் குறுந்தொகைநூலின்கண் இற்றைநாள் நானூறிருறு செய்யுள்களும், அவையிற்றுள் ஒன்பதடிப பெருமையுடைய இரண்டு செய்யுள்களும (க oள, கூகூக.) காணப்படுகின்றன இம் மாறுபாடு இந்நூலினகண் ஒரு செய்யுளையும், மற்றோர செய்யுளினகண் ஓர அடியையும இடையே செருகியதனால் ஏற்பட்டதாகும.

உ. நுவல்வோர்

இனி, இக் குறுந்தொகையின்கண் அடங்கிய செய்யுள்களை இயற்றிய நல்லிசைப் புலவர்கள் இருநூற்றைவர் ஆவர் என இந்நூலிறுதியினமைந்ததொரு பழைய குறிபபால உணரலாம். இப் பொழுதும இநநூன முகபபே கடவுள வாழ்தது பாடியமைதத, பாரதமபாடிய பெருநதேவனுரை விலகி இருநூற்றைவர் பெயரே உளளன; எனினும இடை இடையே உளளே பதுச செய்யுளகள் ஆசிரியர் பெயர காணப்படாதனவாகவும் உள்ளன. ஆசிரியர் பெயர காணப்படாத செய்யுள்களை, அவ்வச் செய்யுளின் முனனினற செய்யுளைப பாடிய ஆசிரியரே பாடினர் என்பது தோனறப பிற்காலததே ஏடெபெயர்தஎழுதுவோர் ஆசிரியர் பெயர். எழுசாது விடடிருக்கக்கூடுமெ என்று கருதின், ஒருவாறு இதற்கோர் அமைதி கண்டவராவோம இஃது அமைதி காண வியலாதெதாரு பிறழ்ச்சி எனக் கருதுவாருமு உளர் இத தொகை நூலுக்குப, ஏனை நானகு தொகை நூலுக்கும மூகப பின்கட் பாரதம பாடிய பெருந்தேவனுர் என்னும நல்லிசைப் புலவர் சிறந்த பொருளமைதியுடைய கடவுள் வாழ்த்துச் செய்யுள்களை யாத்துச் சேர்த்துள்ளனர்.

ஊ. நுதலிய பொருள்

இக் குறுந்தொகை நூலின்கண் அடங்கிய செய்யுள்கள் அனைதுமெ தமிழ்மொழிக்கே சிறந்த அகம்புறம் என்னும் இரு வகைப் பொருளகளில் அகப்பொருள்பற்றி எழுந்தனவாகும. "ஒத்த அன்பான் ஒருவனும ஒருதியும கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரினபம, அக்கூட்டதின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தததமக்குப் லைக இவ்வாறிருந்தெனக் கூறபபடாததாய், யாண்டும உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோ பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பதிற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம்," என்பா ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஆகவே, இந்நூல் அறம பொருள் இன்பம் என்னும் உறுதிப்பொருள் மூன்றனுள், இன்பம் பொருளாக எழுந்த நூல் ஆதலுணர்க.

ஆழ்ந்து சிந்திப்போர்க்குத் தமிழ்ச்சான்றோர் வகுத்த தோதிய அகப்புறப் பொருள்கள் என்பன, முறையே அன்பினது அழகிய ஒழுக்கமும், வீரத்தினது அழகியஒழுகலுமாகும என்பது புலனும். மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள், பற்றறுத்து என்றும் அழிவில்லாத வீட்டின்பத்தை எய்துதல ஒன்றேயாகும் என்பர சான்றோர். அவ் வீட்டின்பம எய்துதற்குச் சிறந்த ஏதுவாக அமைவது அருள்உடைமையே யாகும. "அருள் இலலார்க்கு அவ்வுலகம இல்லை" எனவரும் திருக்குறளும இதனை யுணரலாம. அவ் வருட்குத் தாயாக அமைவது பண்பு, அன்பு எனபதாகும. "அருள்என்னும் அன்பின் குழவி" என வள்ளுவனாரும் அருளை அன்பினது குழவியாக உருவகித்தோதுதல் காண்க. அன்பினது முதிரவே அருள; அன்பினது பயனே வீடு. "அன்பே சிவம"; "அன்பெனும் ஒன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்றால" என்பது சிறந்த நல்லிசைபபுலவர் ஒருவரின் திருவாய்மொழி என்க.

மக்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகிய வீட்டின்பத்தைத் தரவலலது அன்புடைமையே ஆகலின், அவ்வன்பினை வளர்க்கும் நெறியறிந்து நன்கு வளர்த்துக் கோடலே இவ்வுலக வாழ்க்கையின் சிறந்த பயனும் அங்ஙனம் நெறியின்று வளாக்கப்பட்ட அன்புப் பெருக்கமே ஒன்றோ டொன்மையினபதனையும், வீட்டின்பத்தையும் ஒருங்கே அளிக்கும சிறப்புடையது என்னும் கொள்கையுடையர் பண்டைநாள் இதுதமிழகத்தே சிறந்திருந்த மெய்க்காட்சியாளர் என்பதனைப பண்டைத தமிழிலக்கியங்களாகிய பாட்டுந் தொகையும் கீழ்க்கணக்குமாகிய அரிய அறிவுக் கருவூலங்களை நன்கு ஆராய்வோர் நனகுணரலாம வடவாரியர தமிழகம புகுவதறகு முன்னரும், சமயக்கணக்கர் புத்த சமயம் சமண சமயம முதலிய ஒன்றனோடொன்று முரணிய சமயக் கொள்கைகளை யாண்டும் பரப்புவதற்குமுன்னரும் ஆகிய நெடும் பண்டைக காலத்திலேயே—கல மீதான்றி மண் தோன்றுக் காலத்தின்முன் தோன்றி முதிர்ந்து ஏனைநாட்டினர் போல வயிற்றுக்கிரை தேடி நாடோடிகளாக உலகெங்கும் சுற்றி நிலையின்றித் திரியாமல், ஓரிடத்தே ஒன்றுகூடி வாழும சிறப்புடைய ராயினர் தமிழ்மக்கள அங்ஙனம் நிலைபேறுற்று வாழ்ந்த அச் சான்றோர் தம் வாழ்க்கையின் பயனாக "வையகத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்," "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற் போஒய் பெறுவ தெவன்," "இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான், முயல்வாருள் எல்லாந் தலை," "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது," "அன்போ டியைந்த

வழக்கென்ப ஆருயிர்க்கு, என்போடியைந்த தொடர்பு,'' ''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு, என்புதோல் போர்த்த உடம்பு,'' என்பனபோன்ற என்றென்றும் அழியாத நற்காட்சிகளைத் தம் நுண்மாண் நுழைபுலனாலே கண்டு, அங்ஙனமியைய மக்களை இனிதின் அழைத்துச் செல்வாராயினர். அக்காலத்தே அவ்வன்புநெறி பற்றி வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட அன்பொழுக்கங்களின் அழகின் பிழிவே இக்குறுந்தொகையும் பிறவுமாகிய இலக்கியங்கள் என்று உணர்தல் வேண்டும்.

இனி, வீடுபேற்றிற்கு முதலாக அமைந்த கடவுட் பண்பாகிய அன்பொழுக்கத்தினைக்

> ''கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப''

எனத் தொல்காப்பியனார் வகுத்தோதினர். அவற்றுள் முன்னின்ற கைக்கிளை ஒருதலைக்காமம் என்றும், இறுதியினின்ற பெருந்திணை பொருந்தாக் காமம் என்றும் ஒரு புடை இழுக்குடையனவாகக் கருதப்படும். எஞ்சிய குறிஞ்சி முதலிய ஐந்துவகை யொழுகலாறும் மறுவற்ற உழுவலன்பு காரணமாக நிகழ்வனவாகலான், இவ் வொழுகலாற்றின்கட் காணப்படும் கருத்தழகே இக் குறுந்தொகை முதலிய அகப்பொருணூல்களின் செய்யுளகட்குச் சிறந்தரிமையுடைய உயிர்ப்பொருள்களாகும். இவற்றை உரிப்பொருள் என்று ஓதுப.

இனிச் செய்யுளின்கண் அருவமாய் உயிராய் அமைதற்குரியது இவ்வுரிப்பொருள் எனவே, அவ்வுயிர் நிற்றற்கு உடலாயமைந்த செய்யுளுறுப்புக்களை அழகுறுதற் பொருட்டும், நல்லுடலிலே உயிர்இருகை விளங்குதல் போன்றும் போலே செய்யுளின்கண் உரிப்பொருள் விளங்கிய தோற்றுதற்கு ஏதுவாகவும் காட்சிப் பொருளீட்டத்தை முதற்பொருள் என்றும், கருப்பொருள் என்றும் இருவகைப் பொருள்களாக வகுத்துள்ளனர். நிலப்பகுதிகளும் காலக்கூறுகளும் முதற் பொருள் எனப்படுப; தெய்வமும் நாணிலங்களிலே வாழும் உயிர்ப பொருளாகிய புற் பூண்டுகளும், மரங்களும், மாக்களும், விலங்குகளும், பறவைகளும், தொழிலும், தொழிற்கருவிகளும், இசையும், இசைக்கருவிகளும், பிறவும், கருப்பொருள் எனப்படும். இவ்விருவகைப்பொருள்களும் காட்சிப்பொருள்களாய்த் தம் அழகானே பொறிகட்கு இன்பம் பயப்பன. உரிப்பொருள கருத்துப்பொருளாய் மனவுணர்ச்சிக்குத் தனது அழகானே பேரின்பம் நல்குவதாம்.

காம முதலிய எண்வகை மெய்ப்பாடுகளும் கண் முதலிய உறுப்புக்களிலே விளங்கித் தோன்றுமாறு கூத்தாடவல்ல ஆடகளமகளாருருத்தி, தனது கூத்தியல் நன்கு விளங்கி அவையினர்க்குத் தோன்றும் பொருட்டு, அழகிய ஆடரங்கும், ஒளியத் திரைகளும், பல்வேறு இசைக் கருவிகளும், சுடர்விளக்கங்களும் சிறப்ப அமைத்துக்கொண்டு, அவைகள பொலிந்து தோன்றுதற்குரிய வேனிறுகாலத்து இரவுப்பொழுதினையும், தேர்ந்து கொண்டு, கூத்தியற்றி அவையினரைப் பெரிதும மகிழ்வித்தல் காண்டும்; மேலும், அவள அவலச்சுவையை வெளிப்படுத்துங்கால அதற்கேற்ற ஆடைகளையும, காமச்சுவையைப் புலப்படுத்துங்கால் அதற்கேற்ற ஆடைகளையும் உடுத்து வருதலும் காண்டும் அங்ஙனமே, புணர்தல் முதலிய ஐவகை அன்பொழுக்கத்தின் கருத்தமைகை ஒதுவார்க்கு விளக்க முற்படும் நல்லிசைப் புலவனும, அவ வொழுக்கங்கட்கு ஏற்ற முதற் பொருளையும், கருப்பொருளகளையும, தனது செய்புளிலே நன்கு புலபடுத்திக் தான் கருதிய உரிப்பொருள் நன்கு விளங்தும்படி செய்கின்றனன இச்செயலே, "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும பாடல்சான்ற புலனெறி வழக்கம்" என ஆசிரியர் தொலகாபியனாரற் கூறப்பட்டதாகும்.

இனி, இக் குறுந்தொகை, அன்பொடு மரிய அகனைந் திணையை முதலிய பொருளாகக் கொண்டு, நில முதலிய முதற் பொருள்களையும், கருப்பொருள்களையும், அவ்வுரிப் பொருட் கிணங்க விரித்து, நாடக வழக்கத்தினை தலைவன் முதலிய உயர்பினர் கூற்றாகச் சிறுபான்மை உலக வழக்குந் தழீஇப் புனையப்பட்ட அருமைக செய்யுட்டொகுதி என உணர்தல் வேண்டும்

ப. நாவலந்தீவு

இனி இக் குறுந்தொகையின்கண் அடங்கிய தீஞ்சுவைச் செய்யுள்களைப் புனைந்த நலலிசைபபுலவர்கள் அவறறை யாத்துள்ள அழகினைச் சிறிது ஆராய்வாம ஒளியத்துறை கைபோகிய ஒரு கலைஞன, தனக்குச் சிறப்பாக அமைந்துள்ள அழகுணர்ச்சியானே இறைவனாற் படைக்கப்பட்ட அகல்விசும் பினிடத்தும், அவ் விசுமபிலியகதும் திங்கள்மண்டிலம, ஞாயிற்று மண்டிலம், விண்மீன் முதலியவற்றினும், கடலிடத்தும், நால்வகை நிலத்தினும காலகங்களினும், மயில முதலிய பறவைகளிடத்துமம, மான் முதலிய விலங்குகளினிடத்தும் இன்னேன்ன பிற பொருள்களிடத்தும், ஆடவர் மகளிர் இளைஞர் முதியோர் ஆகிய பலவேறு மாந்தரிடத்தும், கண்டு துகர்ந்து

இன்புற்ற அழகினைத் தான் உணர்ந்ததினும் சிறப்பக் காண்போர் உணர்ந்தின்புறுமாறு, வறிய கிழியினகண், பொன்மை முதலிய வண்ணங்களையும் திகிலிகையையும் கொண்டு ஓவியமாகத் தீட்டுகின்றான். இங்ஙனம அவன் கண்டோர் கண்ணையும் மனத்தையும கவர்கின்ற ஓவியத் தீட்டுதற்கு எது வாவது அவன் ஏனையோரினும் பார்க்க உலகியற்பொருள் களின் அழகைக் கூர்ந்துநோக்கியுணரும் உணர்ச்சி வன்மை யுடையனாதலே ஆகும். இவ் வுலகின்கண் தனது ஓவியத்திற் குரிய அழகுக்குறிப்புகளை அவன் ஒருபொழுதிலே, ஓரிடத் திலே கண்டானுமல்லன்; பற்பல பொழுதுகளிலே பற்பல இடங்களிலே அவன அவைபிற்றை உணர்ந்து தன் உள்ளத்தி னுள்ளே உருப்படுத்திக் கொள்கின்றான் கூர்த்தஉணரும உணர்ச்சி வலிமையாலேன இயற்கையின்கண் தான் கண்ட அரை குறையான எழிற்கூறுபாடுகளை, ஓவியமாக்குங்கால் நிறைவு படுத்தித் தீட்டுகின்றான் அங்ஙனம தீட்டப்பட்ட ஓவியங் களிலே முதற்பொருளும கருப்பொருளுமாகிய காட்சிப் பொருள்களின் அழகு வெளிப்பாட்டினும அவ் வோவியத்தே உருப்பெற்ற நங்கையின் முகத்திலே வெளிப்பட்டுத் தோன்றும் காமமுதலிய குண வெளிப்பாடே அவ் வோவியத்தின் உயிரா யமைந்து காட்சியாளரைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்வதா தலே உணரலாம்.

இவ் வோவியப் புலவன் போலவே, நல்லிசைப்புலவனும் தனது செய்யுட்கு முதலாக அமைந்த அழகுப்பண்புகளை உலகின் பலவேறு பொருள்களினும், பல்வேறு காலங்களினும கண்டு கண்டு தன்னுளளதே அமைதலைத் கொள்பவனு கின்றான். ஓவியப் புலவன் வண்ணமும கிழியும் கொள்வது போலவு, இயற்புலவன் நல்லியல்புடைய நால்வகைச் சொற் களாலே கொண்டு தான் உணர்ந்த அழகெல்லாம தன் செய்யுளைப பயில்வோரும் உணருமபடி இனிய செய்யுளாகப் புனைந்து தரு கின்றான் எனவே, செய்யுளகள் அழகுப் பண்பின் பிழிவுகளை ஆகின்றன. மங்கிமடியும் கிழியும் வண்ணமும கொண்டு தீட்டியமையாலே ஓவியம் காலத்திலே அழிந்தொழிய, நல் லிசைப் புலவன் தீட்டிய செய்யுள் ஓவியமோ கடவுட்டன்மை யுடைய சொல்லாலே தீட்டப்பட்டமையானே அக் கடவுளை போல் காலத்தை வென்று என்றும் நின்று நிலவுவதாகின்றது.

இனி, இக குறுந்தொகையிற் காணப்படும சிரிய கருத் தோவியங்கள தமது எழிலானே தமமை ஆக்கிய நல்லிசைப் புலவர்களின் துண்மாண் துழைபுலனின் சிறப்பினை நன்கு புலப் படுத்துகின்றன. மேலும் பிற்றைநாட்புலவர்கட்கும் அவர்

கட்கும் உள்ள வேற்றுமைகளையும் அவைகள் தெரியக் காட்டி நிற்கின்றன.

வடமொழி முதலிய பிறமொழிவாணர்கள் தங்கள் இலக்கியங்களை ஆக்குதற்குப் பெரும்பாலும் அறிவுவறு பொருந்தாத கற்பனைகளையே பயில வழங்குவராயினர் பாற்கடலும், கருப்பஞ் சாற்றுக் கடலும், மேலுலகங்களும், கீழுலகங்களும், அரக்கர்களும், தேவர்களும், பிசாசர்களும், இன்னோரன்ன பொருந்தாத புனைவுகளை அவர்கள் இலக்கியங்களில் யாண்டுங் காணலாம். பல்லாயிரம் ஆண்டு உயிர்வாழ்ந்திருப்போரையும், பதினாயிரம் மைல்களை மணற்றேர்களையும் அவர்கள் இலக்கியங்களில்தான் காண்கின்றோம். இப் புனைவுகள் ஆராய்ச்சி அறிவிற்குச் சிறிதும் பொருந்தாத பொய்ப் புனைவுகளாயதும் அன்றோ? நாகரிக நாட்டுப் பிற்றைநாட்புலவர்களும் "வானதனாகும அறிவு" என்றபடி அவ் வடவர் கூட்டுறவானே கல்லாவிழுநத அவர் நெறியே பற்றிப் பிற்றை நாள் வீண்பகும் இலக்கியங்கள் பலவற்றை யாத்து அமைத்தனர்.

நம் சங்ககாலத்து இலக்கியங்களிலே, இத்தகைய பொருந்தாப் புனைவுகளை யாண்டும் காண்டல் அரிது. ஓரோவழி யாண்டேனும் காணப்படினவும் அக் காலத்தே வடவர் தொடர்பு மையாலே வந்த சிறிய இழுக்குகளாகவே காணப்படுகின்றன. நம் பழம்புலவர்கள் உலகியற் பொருள்களின் இயல்பினை யாண்டும் தன்மைநவிற்சியாலே விளக்குவதைக் காணலாம். காய்கூறும் பொருளை புலப்படுத்தின்பொருட்டு, உவமை யணியை அவர்கள் வழங்குகின்றனர் இக் காரணத்தாலே இக் குறுந்தொகை முதலிய இலக்கியங்கள் இயற்கையை நன்கு பொருந்தத் தழுவிச்செல்வதைக் காணலாம். ஒருதலைக் காட்டாக ஒரு செய்யுளைக் காட்டுதும்.

பாலைதினையாலே ஒரு பூம்பொழிலின்கண் தம்முள் தாமே தலைப்பட்டு யாழோர் மணம் புணர்ந்த தலைவனும் தலைவியும், பிற்றை நாள்—தலைவி இற்செறிக்கப்பட்டமையாலே—ஒருவரை ஒருவர் கண்டளவளாவப் பெறாது வருந்துகின்றனர். தலைவியின் உசாத்துணையாகிய தோழியின் உதவியாலே, தலைவன் ஊர் துஞ்சும் நள்ளியாமத்திலே புலிவழங்கும் காட்டினூடே தமியனாய்த் தலைவியின் மனைக்கு வருகின்றான். அன்றிரவு திசையிருண்டு வானம் முகிலான் மறைக்கப்பட்டு விடாது மழை பொழிந்து கொண்டிருக்கின்றது.

ஈண்டுத் தலைவியும் தோழியும் "அந்தோ! இக்கொடிய இரவிலே யாம் நம்பெருமானை வருக எனறு கூறிவிட்டோமே!

இவ்விடா மழையினூடே அவர் வரின் என்னுவர்?" என்று எண்ணி நடுங்குகின்றனர். அங்ஙனம் நடுங்கி அவன் வருந் திசை நோக்கி நிற்கும் தோழியின் முன்னே, தலைவன் வந்து நிற்கின்றான். அவன் வருகை கண்ட தோழி அச்சத்தாலே நடுங்கிக் கூறுவதனைக் கேளுங்கள்.

"பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே!
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலையே!
எல்லே சேறலின் இருள்பெரி தபட்டன்று!
பல்லோர் துஞ்சும் பாழைட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழும் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே!" (கூதிர்)

என்பதாம். இச்செய்யுள் உலகியலோடு சிறிதும் மாறுபடாமற் பொருந்த இணைந்தியங்குவதை உணர்க. இச்செய்யுளினது இணையற்ற பாவிகம் இதன் ஒவ்வோரடியினும் தெற்றெனப் புலப்படுவதனை உணர்ச்சி நிக்கோர் உணர்வது ஒருதலை. இச் செய்யுள், ஒரு சார் அவலச்சுவையையும், மற்றொரு சார் உயிரை யும் கீழாக மதிக்கும் காதல் வலிமையையும், மற்றொரு சார் காதல் தன்னலதகை மறுதலைக் காதல்செய்யபபட்டாரின் நலத்தையே ஒப்புதற்கு விதுப்புற்று நிற்றலையும், கூதிர்காலத்து நள்ளிரவின்கண பெருமழை பொழியும் காட்சியையும் பயில் வோருளத்தே ஒரு சேரக் கொணர்ந்து குவித்து விடுவதனையும் உணர்க

ஆசிரியர் திருவள்ளுவனார்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" (குறள்-எக)

என்னும் திருக்குறளானே, அன்பினதுண்மை அன்பு செய்யப் பட்டாரது துனபங கண்டுழியே வெளிப்பட்டுத் தோன்றும் என்றார். கருதலெதாத்த காதலர்கள் இடையீடின்றி உடனுறைதல் அவர்க்குப் பேரின்பமே தரும் செயலாயினும, அவ்வின்பத்தை அவர்கள தத்தம் உளளததுணர்வானே நுகர்தலன்றிப் புறத் தார்க்கு அவர்தம் அன்பின் பெருமை அவ்வுடனுறைவானே விளங்கித் தோன்றுமாறில்லை. எனவே, அவ்வன்பினது மாண் பினைக் காதலருடைய சொற்களானும், செயல்களானும், வெளிப் படுத்திப் பாவிகமாக்கிக் காட்டக் கருதிய நல்லிசைப புலவர்கள், அக் காதலர்களின் உடனுறைதற் காட்சியை விரும்புவதில்லை. குறிஞ்சி யொழுக்கம் புணர்தலாக இருந்தும் அவ்வொழுக்கத்தி னும இற்செறிப்பு முதலிய · இடையூறுகளைப் படைத்துக்

கொண்டு நொடிப் பொழுதும் பிரிந்துறைதலாற்றாத காதலர்களை நெடிது பிரித்துக் காட்டி அவர் தம் சொற்களினின்றும் செயல் களினின்றும் அக் காதலினது பெருமையெல்லாம் நமக்குப்புலப் படுத்துகின்றனர்.

கூதிர்ப் பருவத்து நள்ளிரவிலே, புலியும் கரடியும் களிறும் பாம்பும் இரைதேர்ந்து திரிகின்ற மலையிடைச் சிறு நெறியிலே, அடர்ந்த காட்டினூடே, தலைவியாவர் யாருமின்றித் தன் காதலே வழிகாட்ட வரும் அவ்விளைஞன் உயிரினும் சிறந்தது காதல எனபதனைத் தன் ஒழுக்கத்தாலே விளக்குகின்றான்.

இனித தலைவனைக காணப் பெறாது இற்செறிக்கப்பட்ட தலைவியோ, கண் விழிப்புறுதல தோளை நெகிழ்த்து உலகெல் லாம துயிலும் நள்ளிரவினும துயிலாது நலிகின்றாள் இங்ஙனம் இருக்கவும், தோழி தன்முன் வந்நின்ற தலைவனைக் கடிதல் காதலன்பின் ஒப்பற்ற அழகென்றனைப் புலப்படுத்துகின்றது. என்னை? காதலன்பிற் சட்டுண்ட தலைவன் தலைவியர் இரு வரும ஒருவரையொருவர் பிரிந்து தனித தனியுங்கால் அவர்கள் படும் ஆறலறுணுத துனபங்களை அவர்களின் அகத்துறையும் அன்பின பெருமையை நனகு புலப்படுத்தப போதியவே எனி னும் இங்கிலையினும பார்க்க அவ்வின்பை வெளிப்படுத்தும உயரிய நிலையும ஒன்றுளது; அது யாதெனின், பிரிந்துறைவோர தத் தம தனிமைத துனபத்திறுதுத தாமே ஆற்றுராவது போக்கித் தமதிற் பிரிந்துறைவோர நிலையை எண்ணித தம் துயர் மறந்து அவர் நிலைகளே பரிந்து வருந்துமொரு காட்சியே யாகும். அன்புடைமையை வெளிப்படுத்த இந்நிலையினும சிறந்தது பிறி தில்லை என்றே கருதி கலிங்கத்துப் புலவரான கப்ப நாடரும், தங்காப்பியத்தினை முத்தமிழாகிய வான்மீகி இராமாயணத்திலே காணப்படாதிருந்தும அரக்கன் சிறையிலே அருந்துயர் எய்திய சீதை, தன்னிலையை மறந்து கல தலைவனது நிலையை உன்னி உன்னி வருந்துவாளாக,

"அருந்தும் மெல்லடகு ஊரிட அருந்தும் என்றழுங்கும்
விருந்து கண்டபோது என் உறுமோ என்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித் திடலும்உண் டெழாதாள்"

எனச் செய்யுள் புனைந்து காட்டுவாராயினர்.

இக்குறுந்தொகையில் எண்ணிக் காட்டப்பட்ட செய்யுளும் இத்துறை பற்றியே இயற்றப்பட்டதாதல் உணர்க. "பெயல் கண் மறைத்தலின் விசும்பு காணலையே! நீர் பரந்தொழுகலின்

நிலங்காணலையே! என்று வரும் அடிகள் தோழியினது அக நிலையையும அவளது மருட்கையையும் எத்துணைத் தெளிவாகப் புலப்படுத்துக்கின்றன.

இரவின்கண் வழிப்போவார் வானத்தின்கண் மின்னி மிளிரும விண்மீன்களைக கொண்டு திசை தெரிந்து செல்லுவர். வானமோ சிறிதும் இடமின்றி முகில்களானே மறைக்கப்பட்டுளது. இங்ஙனமாகவும நீ எவ்வாறுதான் திசை தெரிந்து வந்தாயோ! என்றும், இடையறாது பெய்கின்ற மழையானே நிலத்தின்கண் யாண்டும நீர் பெருகி வழிகளையும் மறைத்து ஒழுகுதலானே வழி கூட அறிந்து கொள்ள வியலாதே! இங்ஙனமாகவும எவ்வாறுதான் வந்தாயோ! என்றும், ஏனையிரவுகளினும் பார்க்கச் செறிந்து கிடக்கும அந்நள்ளிருளே நோக்கி மருள்வாள், 'இருள் பெரிது பட்டன்று' என்றும், உலகிலே உளளமாந்தரெலலாம் துயிலில் கோடலின் யாண்டும் அமைதி நிலவி அச்சத்தையே தூண்டும இடையிரவாயிற்றே இதன்கண் எவ்வாறுதான் வந்தனையோ! என்பாள, 'பல்லோர் துஞ்சும பானாட் கங்குல்' என்றும், எப்பூதோ கோபுரமும மதிலும மாடங்களுமமைந்த நகரம போலாது, இக்காட்டி னூடே சூழ்ந்திப் புறத்தாக்குப் புலனுகாத சிறிய வூர்; இப்பேரிருளிலே இவ்வூர் இருக்குமிடத்தைத்தான் நீ அறிந்து வந்ததெவ்வாறு? என வியப்பாள், 'எம சிறு குடி யாங்கறிந்தனையோ!' என்றும், இத் தோழி விதிர் விதிர்த்து அடுத்தடுத்து வினவும மொழிகள் நமது இரக்கத்தைத் தூண்டி, "ஏனை இவ்விளைஞன் இவ் வமயத்தே இவ்வாறு வந்தான்!" என நமமையும அத்தோழியோடே கோகுமாறு செய்து விடுகின்றன வல்லவோ!

இப்பேரிருளிலே நீ இங்ஙனம் வந்தமைக்காக யாங்கள் மகிழ்கின்றோம என்னுது, நின் வருகைக்கு யான் பெரிதும வருந்துவேன் என்னும் போதோ இச்செய்யுளின் பாவிகம் மிக மிக உயர்ந்து சுவைபடுதாகின்றது. இதனையிலே நிகழ்கின்ற செய்யுள் இன்னும் பற்பல இக்குறுந்தொகையிலே உள்ளன.

நு. சொல்லமைதி

இனி, இக் குறுந்தொகைச் செய்யுள்களின் அடங்கிய சொல்லமைதியினைச் சிறிது காண்பாம். ஓவியம் தீட்டுவோன் ஒரு மகளின் உருவமமைய அவ்வோவியத்தின் புறங்கோடுகளை வரைந்த மாத்திரையானே, இவ்வுருவம ஒரு மகளின் உருவம் எனக் காண்போர்க்குப் புலனுகிவிடும். அங்ஙனம புலனுகும் அளவன்றி, அவ்வோவியத்தின் எழிலிலே உள்ளம் ஈடுபடும்படி செய்வதற்கு அக் கோடுகள் மட்டும் அமையாவாம். மேலும்,

ஆவ் வோவியன் தனது மெல்லிய தூரிகையாலே பல்வேறு வண்ணங்களை வண்மையும் மெனமையும்பட இனிதே தீட்டிய பின்னரே அவ்வோவியம் கண்கவர் வனப்புடையதாகத் திகழ்கின்றது இவ் வோவியன் செயல் போன்றே நமது பண்டைக்கால நல்லிசைப் புலவர்கள் தாம் சொல்லும் சொற்களின் பொருள் அதரகுரிய நிறப்பண்பும் குணப்பண்பும் பிறவும் விளங்கத் தோன்றுமாறு செய்ய ஒருவகை உபாயத்தை மேறகொள்கின்றனர். அஃதாவது, யாதானும ஒரு பொருளைச் சொல்லக் கருதும்போது, அப்பொருளின் சிறப்பியல்களுள் அப் பொருளை தோற்றுதற்கே ஒருவகை தோன்றுமாறு அடைமொழிகளாஞதல், உவமையாஞதல, புனைந்து அழகுறுத்திக் கூறுதலேயாகும இத் தெறியைக் கையாளுதற்கு உலகியற் பொருள்களை அப் புலவர் பெருமக்கள கூர்ந்து நோக்கி, அவையிற்றின் சிறப்பியல்புகளை நன்குணர்ந்திருந்தமையே காரணமாகும். பிற்றை நாட் புலவர்கள இவ்வுணர்ச்சி குறைந்தமையாலே, இத் தெறியைப் பெரிதும் புறக்கணித்து விட்டனர். பண்டைத் தமிழப் புலவர்கள சொற்களைப் புனையும் அழகினை இத் தூலினின்றும் கீழ் காட்டுகின்ற தொடர்களிலே காண்க.

சிறுமி: "அரும்பிய சுணங்கின் அம்பகட் டிளமுலைப் பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற் கல்கெழு கானவர் குறுமகள்," கடல் "நீலிற விரி நீர்ப் பெருங் கடல்" வானம்: "அகலிரு விசும்பு", மழை; "மின்னுச் செய் கருவிய பெயன் மழை", நெருஞ்சிப் பூ: "புன்புலை தமன்ற சிறியிலை நெருஞ்சிக் கட்கின் புதுமலர்", வெளவால்: "நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை", தினை: "பைநரச் செந்தினை", அரவு: "பொறிவரி வெஞ்சின அரவு", நள்ளிரவு: உருமுரலும் அரையிருள நடுநாள", ஆண்மான்: "நெறிகோட் டிரலைமான்", ஆம்பல்: "அந்தண் பழனத்து ஏந்தெழின் மலர தூம்புடைத் திரளகால் ஆமபல்". குளம்: "கடும்புனல் அடைகரை நெடுங்கயம" ஆண்புலி: "குழங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை", ஆவிரம்பூ: "பொன்னேர் ஆவிரைப் புதுமலர்", கள்ளிக்கிளை: "பொரிகாற் கள்ளி விரிகாய் அங்கவடு", நங்கைப்பூ: "நுண்ணூள்ளீங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த வண்ணத் தாய்ம்மலர்," பாடலி நகரம்: "பொன்படி பாடலி," அன்றில்: "நெருப்பின்னன செந்தலை அன்றில்;", என வரும்.

இங்ஙனம் சொற்களை அடை புணர்த்து அவற்றின் சிறப்பியல்பெலாந் தோன்றக் கூறுதல் உலக வழக்கன்று கட்டுரைகளினும இங்ஙனம் கூறுதலில்லை. இவ்வழக்குச் செய்யுட்கே சிறந்துரிமையுடைய தொரு வழககாம். பண்டைநாட் புலவர்கள்

தாம் கூறும் சொல்லினது பொருள் நன்கு புலப்படும் பொருட்டு இவ்வுபாயத்தைக் கைக்கொண்டனர். பெரும்பாலும், பொருளோடு பொருந்தாத அடை மொழிகளை எதுகை மோனைகளின் பொருட்டு அவர்கள் சொற்களோடு பொருத்திப் பூணுதலைக் காண்டல் அரிது செய்யுளின் ஓசை இழுமென ஒழுகிப் பயில் வார்க்கு இன்பஞ் செய்யும் பொருட்டுக் குறைச் சொற்களாகிய எச்சங்களைப் பெரும்பாலும் திரித்து அளபெடைச் சொற்களாக்கி வழங்குவதை யாண்டுங் காணலாம்; அவை :

"பரிலியது கெழீஇய நட்பு," "பைந்தாது படீஇயர்," "மாசறக் கழீஇய யாணை," "அகலுறத் தழீஇக் கேட்குநர்," "மெய்யுறன் மரீஇய," "மலரிற் சாஅய்," "மள்ளர் குழீஇய," "மகளிர் தழீஇய," "கலிங்கஞ் கழாஅ தகடீஇ," எனவரும் இனி, இவ்வெச்சச் சொற்களேயன்றிக் குறிய ஓசையுடைய பெயரச் சொற்களையும், சிறுபான்மை அளபெடை பூணாததுச் செலிக் கிணைமை பயப்பச் செய்தல் காணலாம். அவை, "குரீஇ" (குருவி) "பரீஇ" (பருந்தி) "யாஅம்" (யாமரம்) "சேஎய்" (சேய்— முருகன்) எனவரும யாம மேலே காட்டிய சொற்றொடர்கள் ஓதுவார்க்குப் பொருளை புலப்படுத்துவதோடு வீறுடைய தனித் தமிழ்ச்சொற்களின் தொடையலாய்ச் சிறந்த மணிமாலைகள் போன்று வனப்பெய்தி இன்பம செய்தலையும் ஓதியுணர்க.

கூ. உவமை யமைதி

ஒரு பொருளைக் கூற்றன் உணர்த்துவோர், கேட்போர்க்கு அதனோடு ஒப்புடைய பொருளை உவமைகூறி உணர்த்துதலை உலகியலிலும பரக்கக காணலாம பொருளை புலப்பாடு திறனிற் செய்யும நல்லிசைப் புலவர்களுக்கும உவமை கூறல் இன்றியமை யாததாகின்றது. இதன் இன்றியமையாமை பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார், "உவம இயல" என ஓரியல் வகுத்து, அது உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும பொதுவாம என்னும் கருத்தினை மெய்ப்பாட்டியலுக்குப் பின்னர்ச் செய்யுளியலைச் சார்வைத்து அதன் இயல் எல்லாம நுண்ணிதின் ஆராய்ந்து வரையறை செய்தனர இவ்வுவமைக்குப் பொருளோடே நெருங்கிய பொதுத்தன்மை யுண்மையை நன்கு ஆராய்ந்து, உவ மையும பொருளும சாலப பொருந்தின என்று உலகத்தார மகிழும்படியே பண்டைநாட் புலவர்கள் தேர்ந்தமைத்துச் செய்யுள் புனைந்தனர் என்பதனை, இக் குறுந தொகையினுள் யாண்டுங் காணலாம். "பொன் போல் ஆவிரை" "பூப்போல் உண்கண்" எனச் சொற்பொருள் விளக்கம் பற்றி வரும் சிறுசிறு உவமைகளி னும் இப் பொதுத்தன்மையின் நெருக்கத்தினை நன்குணரலாம்.

இனிச் செய்யுளிற் திரண்ட கருத்தைப் பொருளை விளக்கும் பொருட்டு இக் குறுந்தொகையில் வரும் உவமை மாண்பினையும் சிறிது ஆராய்வாம்.

ஓரிடத்தே ஒரு பரத்தை தன்னை ஒரீஇத் தலைவியின் மனையில் வதிகின்ற தலைவனைப் பழிக்கத் தொடங்குகிறாள். 'அத் தலைவன் தனக்கென்று ஒரு சிறிதும் அறிவுடையானலலன், ஆகலின் அவன் மனைவியின் சொற்கேட்டு அவள் கூறியபடியெல்லாம் நடப்பவன் ஆகிவிட்டான், அவன் எமமை ஒரீஇ இருத்தற்கு யாம் குறைபாடுடையேமல்லேம்' எனத் தலைவனை அவள பழிக்கின்றாள. அவள இக் கருத்தினை விளக்கக்கூறும் உவமை உளளி உள்ளி மகிழற்பாலதாம. அது வருமாறு,

> "கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
> பழன வாளை கதூஉ மூரன்
> எம்மிற் பெருமொழி கூறித் தம்மில்
> கையுங காலுந் தூக்கத் தூக்கும்
> ஆடிப் பாவை போல
> மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே." (அ)

என்பதாம்.

ஆலங்குடி வங்கனார் என்னும் நல்லிசைப் புலவர் இயற்றிய செய்யுளாகும இது இதன்கண் வரும் வெளிப்படை உவமை விளைபற்றி வந்ததாகும். மேலும், இதன்கண் மறைந்துறையும் உவமையும் ஒன்றுளது அதனைப் பின்னர் விளக்குவாம். இதன்கண் ஆடிப்பாவை என்றது தலைவனுக்கு உவமை. ஆடிப்பாவை யாவது: கண்ணாடி நோக்குவோர்க்கு அக் கண்ணாடிக்குள்ளே தோன்றும அவருடைய எதிருருவம் கண்ணாடிக்குள் தோன்றும் பாவைக்கு ஒரு சிறிதும உணர்ச்சியின்றென்பது யாவரும் அறிவர். அங்ஙனம் உணர்ச்சியற்ற அப் பாவையோ, தன் முதலுருவம செய்யும் தொழிலை எல்லாம் தவறுமற் செய்கின்றது. இத்தப் பாவைபோன்றே தலைவன் தனக்கென அறிவில்லாதவனாய், தலைவி செய்விப்பன எல்லாம் செய்பவனாய் அவளிடத்தே அடங்கினான் என்பாள், ஆடிப் பாவையின் செயலை உவமித்தாள். எதிர் நின்றார் கையும் காலும் தூக்க ஆடிப்பாவையும் தூக்குதலை யாம் அறிவேமல்லமோ! இத்தனை நெருக்கமான உவமை தேர்ந்து கூறுதல் உணர்ச்சிமிக்கார்க்கன்றி ஏனையோர்க் கேலாதாம்.

இனி, இவ்வுவமையினது அழகிலே உள்ளம் பறிகொடுத்த பிற்றைநாட் புலவர் சிலர், இதனைப் பொன்போற் போற்றித்தத் தஞ் செய்யுளிலே பொதிந்து வைப்பாராயினர். சீவகசிந்தாமணி

யிலே "மூடி இவ்வுலக மெல்லாம் நின்னடித் தருவல் இன்னே, ஆடியுட் பாவை போனீ அணங்கிய தணங்க வென்றனை" என்றும், இதனினும் சிறப்ப, ஞாணுமிர்த்திலே "மாற்றிரி, ஆடிப் பாவையோடு அலர் நிழற்பாவை நைகால் மெய்பிறிது எவையும் பைப்பையத் தூக்கிற் றாக்கிமே லுயர்தல்", என்றும், தமிழ் விடு தூதினகண், "ஆடிவந்த நற்பாவைபோல் அடியார்கூட விளையாடி வந்த கோமானே" எனவும் வருகளுணர்க

இனி, இச் செய்யுளின்கண் வெளிப்படையாகத் தலைவன் பழிக்கப்படுதலை இவ்வுவமை நன்கு விளக்குகின்றது. இச்செய்யுளின்கண் முன்னின்ற,

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்."

என்றதும ஒரு அழகான உவமமேயாகும். அகப்பொருட் செய்யுட்கு, முன்னர்க்காட்டிய உவமத்தினும் இவ்வுவமமே சாலச சிறந்ததாம்.

செய்யுளின்கண், வெளிப்படக் கிளந்தோதும் பொருளினும் ஆழ்ந்து நோகுமு இயல்புடைய நுண்ணுர்வினர்க்கு மட்டுமே புலனகும் குறிபபுப பொருளே ஆற்றவும இன்பம் செயவதாம் இன்பம பற்றிய அகபபொருட்பகுதிக்கு வெளிப்படைப் பொருளினும குறிப்புப் பொருளே சிறப்புடையதாம் எனபது சான்றோர் கொளகை இச்செய்யுளின்கண் கூறப்பட்ட ஆடிப் பாவை உவமை யாவாக்கும ஓதும்போதே தெற்றென வெளிப் பட்டுவிட்டது. இவ்வுவமை போன்றே முன்னிரண்டடிகளிலே ஆலங்குடி வங்கனர் ஒரு அழகான உவமை கூறிவைத்துள்ளார். ஆடிப்பாவை உவமை போல இது தெற்றென வெளிப்பட வேண்டா; செய்யுளை ஆழ்ந்து நோக்குவார்கு மட்டுமே அது புலப்படுதாக என்பது அந் நல்லிசைப் புலவரின் கருத்து இங் நனம் வரும் உவமையே உளளுறையுவமை எனப்படும்.

ஆசிரியர் தொல்காப்பியனர் உவமஇயலின்கண் இவ்வுள் ளுறை வுவமையை விரிவாக ஆராய்ந்துள்ளனர். மேலும், அகத் திணையியலிலே இவ்வுள்ளுறையுவமம் பிறக்கும் நிலனும், அதன் றன்மையும் கூறியுள்ளார,

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே (அகத்-நூ)

என்னும் இந் நூற்பா, உள்ளுறை தோன்றும் நிலம் உணர்த்து கின்றது.

உள்ளுறை உவமம் தெய்வம் முதலிய கருப்பொருள்களுள் தெய்வத்தை ஒழித்து, ஒழிந்த கருப்பொருள்களே தனக்குத் தோன்றும நிலனுகக் கொண்டு புலப்படுமம என்பது, இதன் பொருளாம

> ''உள்ளுறுத் ரு இதனெடு ஒத்துப் பொருள் முடிகென
> உள்ளுறுத்து இறுவதை உளளுறை உவமம்'' (அகத் சூ.)

எனவரும் நூற்பா அவ்வுள்ளுறையுவமம் கொளளும் ஆறு கூறுகின்றது. இதன் பொருள: செய்யுளோ யாக்கும புலவன் ஒருவன், யான் புலப்படக் கூறுகின்ற இவ்வுவமத்தோடே புலப் படக் கூறுத உவமிகபபடும பொருள ஒதது முடிவதாக என்று தன உள்ளத்தே கருதித் தான் அகங்னம கருதும் மாத்திரையே யன்றியும, கேட்டோர் மனததினகண்ணும் அவ்வாறே நிகழ்த்து வித்து, அங்னம உணர்ததுதற்கு உறுபபாகிய சொலலெல் லாம நிறையக்கொண்டு முடிவது உள்ளுறை உவமம் ஆகும் என்பதாம.

வியப்பு! வியப்பு!! தமிழ் நூலோர வகுத்த இவ்விதிகள் அவரகளது கலியுணாச்சியின் துணுக்கதைத நன்குணாததி நம்மை வியக்குமபடி செய்கின்றனவல்லவோ இக் குறுந் தொகைக முதலிய அகமபறறிய நூலகளிலே, இவ்வுள்ளுறை யுவமதனைத யாண்டுங் காணலாம. ''உணர்சசிவாயின உணர்வோர் வலிதேத'' என்பா தொல்காபபியா இவ் வுளளுறையுவமங்கள் தமமை ஆக்கிய புலவரின் கருத்தித்வெனப பயில்வோர்க்கு மெலல மெல்ல உணர்ததுங்கால் உண்டாகும் இனபம இலகி யங்களில் நுகரும் இன்பங்களிலே தலைசிறந்த இன்பமாம என்பது மிகையனறு இவ்வின்பம் ஏனை மொழிகளிலே எய்தபபடாத தனித்தமிழ்ப் பேரின்பமும் ஆகும.

இனி, ''கழனி மாஅத்து விளைந்தகு தீம பழம் பழன வாளை கதூஉமூரன்'' என்னும இதனைதாரின்கண் பொதிந்துளள உளளுறை என்ன? கழனி, மாமரம, பழனம, வாளை என்பன வெல்லாம மருதக் கருப்பொருள்களே ஆகும. தலைவன்பால் ஊடல்கொண்ட பரதனையே அவளைப் பழிக்கின்றுளாகலான மருதனதிணையின பாற்படும இசசெய்யுள், இதன்கண் வெளிப் படக் தலைவனை உவமை கூறிப் பழிக்கும பரதனை, இவ்விரண் டடிகளிலே தனது மாண்பு தோன்ற உள்ளுறை பொதிவாளா யினள. அஃதாவது, அத் தலைவி தன்பால் வந்த தலைவனை மடக் கிக்கொண்டு தன்னில்லிலேயே வைத்துகொளளுமாறு போல யாம செய்யேம்! யாமோ மனங்கனிந்து நமபால் வலிந்து வருவாரை மட்டுமே நுகரும் இயல்புடையேம எனத் தனக்

கோர் பெருமையை ஏறட்டுக் கொள்கின்றாள். அதனையே இவ் வுவமை உள்ளுறையாகக் கொண்டுள்ளது. எங்ஙனமெனின்,

வயல் வரம்பிலே நிற்கின்ற தேமாமரத்தின்கண்ணே தோன்றி முதிர்ந்த கனி, தானே கனிந்து காம்பற்று நீர்வாவியின்கண் வீழும்போது மட்டும் அந நீர்வாவியில் உறையும் வாளை அதனை நுகர்வதாகின்றது. அதுபோலத் தலைவன் நெஞ்சம் காமத்தாற் கனிந்து எம்மில்லதிற்குத் தானே வரும்பொழுதே அவனை யாம் நுகர்வதன்றித் தலைவிபோல மடக்கிக்கொண்டு நுகர்வேமல்லேம் என்பதாம்.

இனி, மற்றொரிடத்தே காம நோயாலே நீ மிகவும் உடல் மெலிந்தாய். இது நின் பெருமைகுத்தகவன்று காண் எனத் தன்னைத் தன் நண்பன் இடித்துரைத்தபொழுது தலைவன், காம நோய் தன் வரைத்தாகாது பெருகி நலிதற்குக் கூறும் உவமை ஆற்றவும் இனிதாம். அது வருமாறு,

> "இடிக்குரல் கேளிர் நுங்குறை ஆகம்
> நிறுக்க லாற்றிலேன் நன்று மற்றில்ல
> ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
> கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
> வெண்ணெய் உணங்கல் போலப்
> பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற்கு அரிதே" (நற்)

என்பதாம்.

ஞாயிறு, ஈண்டு காமநோய்க்கு உவமையாகும். வெவ்வறை-வெப்பமேறிய பாறைக்கல். அஃதீண்டு காமத் தீயாற் சுடப்பட்ட நெஞ்சிற்கு உவமை. கையில ஊமன், செயலற்ற தலைவனுக்கு உவமை. வெண்ணெய் உணங்கல், உருகும் தலைவனுடலிற்கு உவமை. (இச்செய்யுளின்கண் அமைந்த உவமைகளை இங்ஙனம் பொருந்தக் காண்பது, வெண்ணெய் உணங்கல் காமநோய்க்கு உவமையாகக் கருதுவாரும் உளர். அது பொருந்தாமை ஆராய்ந்து கண்டுகொள்க)

இனி, இவ்வுவமையின்கண் அமைந்த நெருங்கிய பொதுத் தன்மைகளை உணர்ந்து காண்மின். காமவொள்ளெரி வெதுப்பிய நெஞ்சம ஞாயிற்றினது வெயிலானே வெப்பமேறிய பாறைக் கல்லோடே எத்துணைப் பொருத்தமாகவுளது. ஞாயிற்றின் வெப்பம இயற்கையின் உளதாதல் போன்று, காமநோயும் இயற்கையாக உளது என்பது குறிப்பு. அவ்வெப்பத்தில் உருகாது வெண்ணெய் காக்கப்படுதற்கு குளிர் நிழல் வேண்டுமாறு போல ஈண்டுத் தலைவியின் ஆதரவு ஆகிய நிழல் வேண்டும்.

உடல் சிந்தை வயத்ததாகலின் நெஞ்சத்தை ஆதாரமாகிய பாறையாகவும், உடல் ஆதேயம் ஆகிய வெண்ணெயாகவும் கூறப்பட்டன. உடல் நெஞ்சத்தின் வயத்தது என்றது நெஞ்சம் நலிந்தழி நலிந்தப், அது தழைத்தழித் தழைத்தங் காட்டலா லானும், அல்லதூஉம்,

> "நைவளம் நவிற்றுமொழி நண்ண வரலோடும்
> வையநுகர் கொற்றவனும் மாதவனு மல்லார்
> கைகள் தலைப்புக்கன கருத்துளது மெல்லாம்
> தெய்வமென உற்ற உடல் சிந்தை வயம் அன்றே"

எனவரும் கம்பநாடர் செய்யுளானும் தெளிக.

இனித் தலைவன் தன்னை, அவ்வெண்ணெய் காக்கும் கை யில்லாத ஊமனோடு ஒப்பித்தது சாலவும் பொருத்தமாகும். என்னை? அவ்வூமன் வெண்ணெய் உருகாதிருத்தலையே விரும்பு கின்றானெனவும், வெயிலான் அஃதுருகுமபோது, கையின்மையால் அதனை நிழலில் சேர்த்துப் பாதுகாத்தற்கியலாமையானும், ஊமனுகலிற் பிறர்பாற் கூறிக் காத்துக்கோடற் கியலாமையா னும், பரிந்து வருந்துமாற்றினையே அமைவான். அங்ஙனமே, தலைவனும் தன் உடல் மெலியாதிருத்தலையே பெரிதும் விரும்பு கின்றானெனினும், தானே தலைவியின்பாற் செல்ல வியலாதவனுக வும், மறைச்செய்தியாகலின் பிறர்பாற் கூறி அவளை எய்த மாட்டாதவனுகவும் இருந்து வருந்துகின்றான் அல்லனே? இங் ஙனமே இக் குறுந்தொகையிற் பற்பல உவமைகள் அமைந்து பெரிதும இன்புறுத்துகின்றன.

ஏ. செய்யுள் நுணுக்கம்

இக் குறுந்தொகைக்கண் அடங்கிய செய்யுள்கள் பலவும் பெரிதும் ஆழ்ந்த நுண்பொருள்களையுடையனவாய்த் திகழ்கின் றன. இக் குறுந்தொகைக்குப் புறத்துறுப்பாகப் பாரதம் பாடிய பெருந்தேவனுராற் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துச் செய் யுளும் இந்நூற் செய்யுளின் நுண் பொருட்கேற்பவே மிகவும் நுண்ணிதாய் அமைந்துள்ளது.

ஒரு நூலின் தொடக்கச் செய்யுள் அந்நூல் முதலிய பொருள்களைத் தன்னகத்தே கருவாக நுண்ணிதாகக் கொண்டி ருத்தல் வேண்டும் என்பர் சான்றோர். நல்லிசைப் புலவர்களின் செய்யுள் அங்ஙனம் நிற்றலை, திருக்கோவையாரில் "திருவளர் தாமரை" என்று தொடங்கும் செய்யுட்குப் பேராசிரியர் விரித்த உரையானும தெளியலாம். இக் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து, செந்தமிழ்த் தெய்வமாகிய முருகப்பெருமானை வாழ்த்

தியதாகும். அகப்பொருண் மரபில் முருகப்பெருமான் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சிக் கடவுளாகக் கூறப்பட்டனர். தொகைநூல்களுள் இக் குறிஞ்சித்தொகையே முதற்றொகை நூல் என்று இற்றை நாள் ஆராய்ச்சியாளரும் கூறுகிற்பர். பத்துப்பாட்டின் முதற்பாட்டுமை திருமுருகாற்றுப் படையாக அமைந்திருத்தலையும் நோக்குக. பாட்டின்முன் முருகப் பெருமான் வாழ்த்தாக முருகாற்றுப்படை அமைந்தாற் போன்று தொகை முன்னும் அக்கடவுளே வழிபடற்பாலார் என்று இப்புலவர் பெருமான் கருதினர் போலும். முதற் றொகை நூலுக்கு முதனிலமாகிய குறிஞ்சிக் கடவுள் வாழ்த்தே பொருத்தமாதலும் உணர்க. இரண்டாவதாகிய நற்றிணையின் கண் இரண்டாம் நிலக்கடவுளாகிய திருமாலே வாழ்த்தியிருத்தலும் இக்கருத்தை வலியுறுத்தும். அஃதொக்கும், அங்ஙனம் ஆயின் மூன்றாந் தொகை நூலாகிய நெடுந்தொகையின்கண் இந்திரனே வழிபடவேண்டுமாலோ? எனின், அற்றன்று, சமயக் கணக்கர்கள முருகப்பெருமானையும், திருமாலையும் முழுமுதற் கடவுளராகக் கொண்டு வழிபடுகின்றமையானும், அம் மாண்பினோடொக்கும் சிறப்பும் உண்மையானும் முதலிரு தொகை நூல்களினும் முருகனையும் திருமாலையும் வணங்கி இந்திரனையும் வருணனையும் அங்ஙனம் வழிபடாமையின் ஏனை மூன்று தொகை நூல்களில் பிறவாயாக்கைப் பெரியோனையே வழிபடுவாராயினர் என்க.

இனி, இன்பம் துதலிவந்த இக் குறிஞ்சித்தொகை முகப்பிலே அவ்வின்பப் பேற்றிற்கெல்லாம் ஏதுவாவது அப்பெருமானுடைய திருவருட் காவல் உண்மையே; ஆகலின், அந்நன்றி நினைந்து அப்பெருமான் திருவடிகளை வணங்கி மேலும் பேரின்பப் பெருவாழ்வு எய்துமின் உலகீரே என ஆற்றுப்படுப்பார்,

> "தாமரை புரையும் காமர் சேவடிப்
> பவழத் தன்ன மேனித திகழொளிக்
> குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
> நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
> சேவலங் கொடியோன் காப்ப
> ஏமவுகல் எய்தின்றால் உலகே"

என, இனிதாக வாழ்த்துவாராயினர். "தாமரை என்னும் அழகிய மங்கலச் சொல்லால் எடுத்து உலகே என்னும் மங்கலச் சொல்லோடு முடியும் இவ்வினிய செய்யுள, இக் குறிஞ்சித்தொகைக்குரிய நான்கடிச் சிறுமைக்கும் எட்டடிப் பெருமைக்கும் நடுநின்ற ஆறடியானே அமைந்துளளது. அறுமுகவொருவனை ஆறடிக

ளானே வாழ்த்துதலும் பொருந்துவதே என இந் நல்லிசைப் புலவர் கருதியும் இருப்பர்.

இனி, அகப்பொருள் நூலாகிய இக் குறுந்தொகைக் கேற்பவே இதன்கண் மருதக் கருப்பொருளாகிய தாமரையும், நெய்தற் கருப்பொருளாகிய பவழமும், முல்லைக் கருப்பொருளாகிய குன்றியும், குறிஞ்சி முதற பொருளாகிய குன்றும் கூறப்பட்டமை யுணர்க இனி இறைவனுக்கு இயல்பாகவுள்ள மறத திருவருளைக் குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல் உடைமையானும, அறத்திருவருளைக் காவற்றொழில் கூறினமையானும் பெறவைத்தமை யுணர்க.

இனி, இந்நூலினகத்தே உள்ள இரண்டொரு செய்யுள்களை ஆராயவாம். காதலன்பினது பெருமையைத் தோழிக்குணர்த்துவாள் ஒரு தலைவி,

> "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
> நீரினும் ஆரள வின்றே சாரல்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே." (கூ)

என்று கூறுகின்றாள். மக்கள் வாழ்க்கைக்கு இவ்வுலகத்தினும் இவ்வுலகம் கடந்து எய்தநிற்கும் வீட்டுலகத்தினும் ஆக்கமாக அமைவது அன்பென்னும் அககடவுட் பண்பேயாகும். மனிதன் அறிவுக்குச் சிறந்த கருவியாகவுள்ள சொற்களின் எல்லையைக் கடந்துநிற்கும் பொருள்களும் சிலவுள. அவற்றுள் இவ்வன்பும் ஒன்றாகும். எனவே, அறிவினால் அறியவொண்ணாதமை அதே சமயத்தில் உணர்ச்சிக்கு நன்கு புலனாவதும் அன்பின் தன்மையாம். இறைவனும்கூட இத்தன்மையுடையவன் என்றே மெய்ந்நூல்கள் கூறுகின்றன. நாம் அன்பு செலுத்தும் ஒருவர் ஆக்கத்தோடே வருதல் கண்டால் நம்நெஞ்சம் இன்பத்தாலே நெகிழ்ந்து பொங்குகின்றது. இந் நெகிழ்ச்சியாலாறும் இன்பமும் நமக்கு உணர்வின்கண் தெற்றெனப் புலனாகின்றது. இத்தகைய இன்பத்தைச் செய்யும் அவ்வன்பு எத்தகையது? அதன் இயல்பு யாதென நம்மை வினவின் அதற்கு யாம்யாது கூறவல்லோம்?

அன்புக்கு நிலைக்களமாக விளங்கும் தலைவனது கேண்மையை அவனோடளவளாவி உணர்ந்த தலைவி, அதனைத் தன் அறிவாலே ஆராயப் புகுந்தாள். ஆராய்ந்து ஆராய்ந்து அதற்கோர் எல்லைகாணப் பெறாது வியந்தாள். இவ்வியப்பு நிலையில் இருக்கும்பொழுது, தலைவன் சிறைப்புறமாக வந்து நின்றான். அவன் வந்து நிற்றலை உணர்ந்த தோழி அவன் வரவுணராதாள்

போன்று தலைவியை நோக்கி, நின்னுற் கேண்மை கொள்ளப் பட்ட தலைவன் கேண்மைக்குத் தகுதியில்லாதவன் போலும் என்றாள். இங்ஙனம் அவள் கூறியது களவின்பமே விரும்பித் திருமணம் புரிந்து கொள்ளலிலே கருத்தின்றித் திரியும தலை வற்கு அவன் குறையைக் குறிப்பால் உணர்த்தும் பொருட்டே யாகும், "நேசனைக் காணுவிடதுதே நெஞ்சாரவே துதித்தல்" என்றபடி தலைவனைக் காணுத அப்பொழுது அவனது ஒப்பற்ற அன்பினைகண் நெஞ்சம் போக்கி வியபபுற்றிருந்த தலைவிக்குத் தோழி கூறிய மொழிகள் சுருக்கென்று உளளத்தே தைத்தது உடனே சொல்லிக் காட்ட வியலாத அவ்வன்பின் தன்மையைச் சொல்லத் தொடங்கினாள்.

இவ்வுலகத்தே மக்கள் அறிவாலே எல்லையற்ற பொருள் களாக அறியப்பட்டவை மூன்று பொருள்களே யாகும். அவை : அகலிருவிசும்பும், மாயிருஞாலமும், விரிதிரைக் கடலுமாம். தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும, எல்லையற்ற பெருமைக்கு உவமையாக இப பொருள்களையே எடுத்துக் கூறினர். "ஞாலத் தின் மாணப் பெரிது," "கடலிற் பெரிது," "வானுயர் தோற் றம்," என்பன வளளுவர் இன்மொழிகளாம இத்தலைவியும் எல்லை காணப்படாத தலைவனது அன்பின் பெருமைககு இம் மூன்றையும ஒருசேர உவமை யாக்கினாள். அப்பெருமை தானும் முத்திறத்ததாகக் கண்டு அம முத்திறத்த பண்புகட்கும் இம் மூன்று பொருளையும் அவள் எடுத்துக் கூறுவாளாயினள்.

அன்பினது பரப்பிற்கு நிலப்பரப்பு ஒவ்வாது என்பாள், நிலத்தினும் அகலத்தாற் பெரிதென்றாள்; அவ்வன்பினது உயர்ச் சிக்கு வானமும் ஒவ்வாதென்பாள், வானினும் உயர்ந்த தென் றாள். மற்று, அதன் ஆழத்திற்கோ கடலும் ஒவ்வாதென்பாள், நீரினும் ஆரளவின்று என்றாள். இவ்வுவமைகளா லெல்லாம் அவள் விளக்கியது, அன்பெனும் ஒனறின் பெருமையை யாரும் அளந்தறிய வொண்ணு தென்பதேயாம்.

இனி இத்தகைய கேண்மை இவ்வுலகத்தில் எவ்வாறு தோன்றுகின்றது? இஃது ஒரு பிறப்பிலே ஒருவர்க்கு வாய்க்கும் எளிமையுடையதென்று எண்ணுதல் புல்லிதாம். பண்டும பண் டும் எத்தனையோ பிறப்புக்களிலே இக்கேண்மை பழகிப் பழகி முதிர்வதாதல் வேண்டும். இங்ஙனம் அன்பாலே பிணிக்கப்பட் டாரை இடையிடையே நிகழும் சாக்காடும் வேறு பிரிக்கும் ஆற் றலுடையதன்று. எத்தனை உடல்கள் நிலையாமையுடைய இவ் வுலகியற்கேற்ப இறந்து ஒழியினும், அன்புடையோர் உயிர்கள் மீண்டும் மீண்டும் சேர்க்கப்படுகின்றன. இது நியதி; ஊழின் செயல் என்று கருதிய தலைவி, அக்கருத்தை அழகிய தோர்

உள்ளுறை உவமத்தாலே குறிப்பால் உணர்த்துவாள், கருங்கோற் 'குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பு' என்றாள். வலிய கிளையை யுடைய குறிஞ்சியின் கண்ணே மலரும் பற்பல பூக்களிடத் தேயுள்ள தேனைக் கவர்ந்து கொடு போய், வண்டுகள் பெரியதேனடையை இயற்றி விடுமாறு போல, ஊழ் பற்பல பிறவிகளிலே பயின்றுவந்த அன்புப் பண்பை எல்லாம் ஒரு சேரத் திரட்டிக் கொணர்ந்து இப்பெரிய நட்பினை இயற்றியிருத்தல் வேண்டும் என்பது இதன்கண் உள்ளுறை பொருளாகும்.

ஈங்கே தலைவனது கேண்மையைத் தலைவி இங்ஙனம் வியக்கக் கண்டோம். இனி மற்றோரிடத்தே ஒரு தலைவன் தலைவி கேட்ப வியத்தலைக் காண்மின்; அஃதாவது,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே." (சு0)

என்பதாம்.

'நூறாண்டு பழகினும் ஊர்க்கர் கேண்மை நீர்க்குட் பாசி போல் வேர்க் கொள்ளாதே' என்று கேண்மைப் பண்பின் அருமையைப் புலப்படுத்தினர் ஒரு புலவர். இத்தலைவனே முன்னர் ஒரு நாளும் ஒரு கொடிப்பொழுதும் பயின்றிராத இந்நெஞ்சங்கள் எத்துணை நேரியனவாக ஒன்றுபட்டு விட்டன என்று ஆற்றவும் வியப்படைகின்றான்.

பெயனீர் வானின் கண்ணது; நிலத்தின் கண்ணதாகிய செம்புலத்தின் கண்ணே அது வீழ்ந்தவுடனேயே அந்நிலத்தினது நிறத்தையும், சுவையையும் தன்னுடையதாய் ஏற்று வேற்றுமை யின்றிக் கலந்துவிட்டது. "நிலத்தொடு நீரியைந் தன்னர்" என்பர் வள்ளுவனாரும். இங்ஙனம் கலத்தற்குக் காரணம் பண்டைப் பிறவிகளின அன்புப் பயிற்சியே யாகும் எனபதே இத்தலைவனுடைய கருத்துமாகும். தமிழகத்துப் பண்டைச் சான்றோர் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கும் இயல்புடையன. அவை நன்மை செய்தால் நல்லுலகங்களிலே சென்று வதிதலும், தீமை செய்தாற் தீய நரகங்களிலே சென்று வதிதலும், அற்புளஞ் சிறந்த உயிர்கள் பிறவிதோறும் கேண்மை கொள்ளுதலும் உடையன என்னும் சீரிய கொள்கை யுடையர் என்பதற்கு இக்குறுந்தொகையின்கண் பற்பல சான்றுகள் காணலாம்.

அ. நகைச் சுவை

மடைநூல் வல்லுநன் தான் சமைக்கும் இன்சுவை யடிசிற்கு மிகையும் குறையுமின்றி உப்பிட்டுச் சமைக்குமாறு போன்று, நமது பண்டை இலக்கியங்களிலே ஆங்காங்கு நகைச் சுவையைத் தரும் நிகழ்ச்சிகளை நல்லிசைப் புலவர்கள் விரவி வைத்துள்ளனர். இக் குறுந்தொகையிலே, தலைவன் சிறைப்புற மாக வந்து நிற்கும் செவ்வியில் அவன் வரவுணராதாள் போன்று தோழி தலைவனுக்குணர்த்தக் கருதிய செய்திகளை அவன் குறிப்பால் உணர்ந்து கொள்ளும் பொருட்டு தலைவிக்குப் பிறிதொன்று கூறுவாள்போல் கூறும் கூற்றுக்கள் பல, நகைச் சுவை யுடையனவாகக் காணப்படுகின்றன. சில செவ்விகளில் தலைவி கூற்று நிகழ்தலும் உண்டு. ஒரு தலைவன், இயற்கை மணம் நிகழ்ந்த பின்னர்த் தலைவியைக் காண்டற்குச் செவ்வி பெறுமல் நாள தோறும் பகற்பொழுதிலே ஏதிலான் போல வந்து வந்து வறிதே மீள்வானாயினன். இங்ஙனம் மீள்வதற்குக் காரணம் தலைவியின் தந்தை கடலில் மீன் வேட்டம்புக்க பொழுது ஒரு சுறாமீன் அவனைக் கோட்டாற் கிழித்துப் புண் செய்தமையால் அவன் வீட்டிலேயே உறைந்தமையாகும்

சின்னாளில் தலைவியின் தந்தை புண் தணிந்து மீன்வேட் டைக்கு நீனிறப் பெருங்கடலிற் சென்று விட்டனன். அது காறும் அவனுக்குப் பணிசெய்யும் பொருட்டு வீட்டிற் றங்கிய தாயும், உப்பை மாறி வெண்ணெல் கொள்ளும்பொருட்டு அளதகத்திற்குச் சென்று விட்டாள் நல்ல செவ்வி ; இப்போது தலைவன் வரின் நன்று என்று தலைவி நினைக்கும் பொழுதே, தலைவன் வந்துவிட்டான். வீட்டின்கண் இத்தகைய செவ்வி யுண்டாயிருப்பதை அவன் அறியான். ஆதலால் அவன் வழக்கம் போல் திரும்பிப்போய் விடவும் கூடும் இச்செய்தியை அவ னுக்குக் குறிப்பால் அறிவிக்க எண்ணிய தலைவி, அவன் வருகை கையை அறியாதாள் போன்று தோழிக்குக் கூறுபவள்,

"என் அன்புடைய தோழியே! இப்போது நமக்கு ஒரு தூதுவர் இன்றியமையாது வேண்டப்படுகின்றனர். அத்தூது வரோ தேரில் ஏறிக்கொண்டு, தூரிய வழிகளிலே குதிரைகளைத் தூண்டவேண்டியதில்லை. அவர் குதிரைகள் இளைப்புறவும் வேண்டா ; அவருடைய கடமையை வருத்தமின்றியே செய்யக் கூடும்" என்று தொடங்கினள். இங்ஙனம் கூறுவதன் கருத் தென்னை? தலைவன் சிறைப்புறமாக நிற்கின்றான். அவனுக்கே இச்செய்தியை உணர்த்துவோர் வேண்டும் என்பதேயாம். நம் தூதுவர்க்குத் தேர் வேண்டா ! குதிரையும் வேண்டா ! அவர் குதிரைகள் இளைப்புறவும் வேண்டா ! என்ற இச்சொற்களைக்

கேட்டவுடன், தலைவன் நகைச்சுவையாலே பெரிதும் இன்புற்று, அவள் கூறப்போகும் பின்மொழிகளை ஆவலோடு கூர்ந்து கேட்டிருப்பன். அச் செய்யுள் வருமாறு:

"சேயாறு சென்று தனைபரி யசாவாது
உசாவுநர்ப் பெறினே நன்றுமற் றில்ல
வயசுரு எறிந்த புண்தணிந்து எந்தையும்
நீலிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிலை கழனிச சென்றனள் அதனால்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்கு
இனிவரின் எளியள் என்னுந் தாதே" (நகூக)

என்பதாம்.

இனி ஒரு தலைவற்கு "நாளைப் பகற் பொழுதிலே கடற்கரை மருங்குள்ள இருண்ட புன்னைமரச் சோலையின் கீழமைந்த மணற்பரப்பிலே நீ வருவாயாக! யான் தலைவியை அவ்விடத்திற்கு அழைத்து வருவேன்" என்று தோழி கூறியிருந்தாள். அவனும் அவ்வாறே காலந்தவறுமல் மறுநாள் அம்மணற் பரப்பிற்கு வந்து சேர்ந்தான். வீட்டிலிருந்து தோழியும், தலைவியும் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் தனது வருகையை உணர்ந்திலர் என்று கருதிய தலைவன், அவர்களை அசதியாடி நகும் பொருட்டு, அயலிலுள்ள புன்னைமரச் செறிவிலே மறைந்து கொண்டான்.

இல்லத்தினின்று வரும் தோழியோ அவன் வருகையை முன்னரே அறிந்துகொண்டே வந்தாள். குறியிடத்தே அவனைக் கண்டிலள். "இப்போது வந்த தலைவன் யாண்டுப் போயிருக்கக் கூடும! அவன் நம்மை அசதியாடி நகைக்கும பொருட்டு மறைந்திருத்தல் திண்ணம நல்லது! அவனை யானே அசதியாடி நகைபபேன்!" எனத தனக்குள் ஒரு சூழ்ச்சி செய்து கொண்ட வளாய், அயலிற் கிடந்த மணறகுன்றிலேறிக் கடற்பரப்பை நோக்கி னினறு, தலைவிக்குக் கூறுகின்றாள்; "அன்னாய் நல்ல தண்ணிழல் பொருந்திய இம்மணற்பரப்பிற்கு யான் தலைவரை வருமாறு கூறியிருந்தேன்! இக்குறியிடமோ வெறிச்சென்று தனித்துக் கிடக்கின்றது! அத்தலைவரோ இன்னும் வந்திலர். ஆனால் அதோ பார்! கடலிலே நம் தமையன்மார்கள் திமில்கள் விரைந்து வருகின்றன!"

ஈண்டுத்தோழி "திமில்கள் வருகின்றன" என்றது முழுப் பொய். தலைவனை அல்லற்படுத்தி நகையாடற் பொருட்டுக் கூர்த்த மதியுடைய தோழி, இவ்வனம் படைத்துமொழிந்தாள்.

இச்சொற் கேட்டலும் பதங்கியிருந்த தலைவன் நெஞ்சம் என்ன பாடுபடும் என்று எண்ணுகின்றீர்கள். திமில்கள் வந்து விட்டால் அன்று கூட்டம் நிகழாது என்பது தலைவன் அறிவான். திமில்களும் வந்து விடடனவோ! யான் முன்னரே வந்து விட்டேனே! என்று தலைவன் கூறிக்கொண்டே தோழிநின்ற மணற்குன்றில் விதுப்புற்று விரைந்து ஏறியிருப்பன். அத் தோழியோ தன்னை நகைக்க எண்ணிய அதலைவனை மெல்ல நகைத்திருடபள். இக்காட்சியைக் கண்டு நின்ற தலைவியும், கவிழ்ந்து நிலனேக்கி மெல்ல நகுவள். இதனைப் பயிலும் நமது நெஞ்சிலோ எலையில்லாத நகைச் சுவை தோன்றி இன்புறுத்துகின்றது. அச்செய்யுள்,

> "இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
> நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
> கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
> இன்னும் வாரார் வருஉம்
> பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே" (கஉக)

என்பதாம்.

இனிச் சிறந்த இலக்கியங்கள் பன்னிற மலர்களும் கெழுமிக் கட்கினிதாய் மகிழ்விக்கும் கடிமலர்ப் பொழில் போல இருப்பதடனே, தீஞ்சுளை பலாவுமு, தேமாங்கனியும், வாழையும் பிறவும் செறிந்த பழமரதோட்டம் போலவும இருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் கூறுப. அஃதாவது, இலக்கியங்கள் நவில்தொறும் நவில்தொறும் சுவை பெரிதுடையவாகி மேலும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருளியல்புகளையும் உயிர்க்கு ஊட்டி ஆக்கந்தருவனவாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம்.

இக் குறுந்தொகையில் நாடக வழக்கானே கூற்று நிகழ்த்தற்குரிய தலைவன், தலைவி, தோழி, அறிஞர், செவிலி, பாங்கன் முதலியோருடைய கூற்றுக்களிலே ஆங்காங்கு அவ்வுறுதிப் பொருளியல்புகள துண்ணிதாக வெளிப்பட்டு உயிருணவாக அமைவதைக் காணலாம்.

ஒரு தலைவி "கடவுள் நண்ணிய பாலோர் போல ஒரீஇ ஒழுகும் என்னைக்கு" என்று கூறும் உவமையை ஆராய்ந்து பாருங்கள். எண்ணிறந்த பிறப்புக்களிலே அன்பு நெறி நின்று தொடர்புடையார்பால் அன்பு செலுத்திப் பயின்று பயின்று மூதிர்ந்ததன் பயனாக உயிர் அருள் உடைமையை எய்து

கின்றது. அவ்வருள் வாய்க்கப் பெற்ற வுயிர் தொடர்பு பற்றுது எல்லா வுயிரிடத்தும் நிரம்பிய அன்புடையதாய் யான் எனது என்னும் இருவகைச் செருக்கும் அற்றதாய்க கடவுட்டன்மை கைவந்த தாகும். இத்தகைய உயர்நிலையை உயிர் எய்து வதனையே தொல்காப்பியனார், ''காமநீத்தபால்'' என்றும் ''அருளொடு புணர்ந்த அகறல்'' என்றும் கூறுகின்றனர். இந் நெறி உயிர் கடவுளை எய்துதற்குத் தமிழர் கண்ட தனி நெறி யாகும். கடவுள் நண்ணிய பாலோர் ஒரீஇ ஒழுகுவர் என்றது, யான் எனது என்னும இருவகைச் செருக்கிற்கும் இடனு யமைந்த பொருள்களிலே பற்று வையாது ஒழுகுவர் என்ற வாறும இத் தொடரிலே கடவுள் உண்மையும், பாலோர் என்றதனால் அக் கடவுட்பொருளின் வேறாய் உயிர்கள் உண்மை யும், ஒரீஇ என்றதனால் பற்றுதற்குரிய பொருள்கள் அவ்விரு பொருளின் வேறாக உளவாதலும், வீடு பேறடைய முயல்வோர் பற்றுதற்குரிய பொருள்களிற் பற்றொரீஇ அவ் விறைப்பொரு ளின் அருள்வழி நின்று ஒழுகுவர் என்பதும் உணரலாம். இவ் வோர் இனிய அடியானே பண்டைத் தமிழ்ச் சான்றோரின் கடவுணெறி இற்றெனத் தெற்றெனப் புலனுதல் அறிக

இனி, மற்றோரிடத்தே ''வினையே ஆடவர்க் குயிரே வாணுதல், மனையுறைமகளிர்க்கு ஆடவர் உயிர்'' எனவரும் அடிகள் இவ் வுலகியல் நடத்தற்கு இனறியமையாதது தொழில் நலனே ஆகலின், ஒவ்வொரு ஆடவனும அத் தொழிற் முறையை உயிராகப் போற்றி ஒழுகவேண்டும் என்று ஆடவர் கடமையையும, இல்லிருந்து அறம் போற்றும் மகளிர, தம் கணவரை உயிராகக் கொண்டு போற்றவேண்டும் என்று, மகளிர் கடமையையும, எவ்வளவு அழகாக உணர்த்துகின்றன. இன்னும் ''சான்றோர் புகழும் முன்னர் நாணுப'' என்பது சால் புடைமையின் மாணபினையும, ''இல்லோன் இன்பங்காமுற்றாங்கு'' எனபது நல்குரவின் சிறுமையையும், ''உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்'' எனபது மடியினது இழிபையும், ''அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதமாகப், பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ அன்னே'' என்பது நல்லறம செய்தோர் நல்லுல கடைவர் எனபதனையும், ''பெண்கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னே'' என்பது, தீவினை செய்தோர் தீ நரகெய்துவர் எனபதனையும் காட்டுகின் றன. இன்னோரன்ன குறிப்புக்கள் இந்நூலின்கண் பற்பல விடங்களிலே வந்து பல்வேறு உறுதிப்பொருள்களையும் நுண் ணிதில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்து கின்றன.

கூ. வரலாற்றுச் சான்றுகள்

பண்டைக்காலத்து நல்லிசைப் புலவர்கள் தன்மை நவிற்சியையே சிறந்த அணியாக மேற்கொண்டு இலக்கியங்களை யாத்தமையாலே, அக்காலத்து நாளில இயல்புகளும், மக்கள் ஒழுகலாறும், அரசியல், வாணிகம், உழவு முதலிய தொழிற்முறை இயல்புகளும, மக்கள் வாழ்க்கைப்பண்பாடும், அவர்கள் கையாண்ட கருவிகளின் இயல்பும் பிறவும், அறிதற்கு இக்குறுந தொகையும் இதனோடொத்த பிற இலக்கியங்களும் நல்ல சான்றுகளைத் தம்பாற்பொதிந்துகொண்டுள்ளன. புறப்பொருட் பகுதியிலக்கியங்களைப்போல அகப்பொருட் பகுதியிலக்கியங்களிலே அச்சான்றுகள் மிகுதியாகக் காணப்படாவிடினும், புலவர்கள் சார்த்து வகையாலே கூறுகின்ற வேந்தர் வரலாற்றுக் குறிப்புகளும், புலவர் வரலாற்றுக்குறிப்புகளும், ஊர்கள், காடுகள், மலைகள, மக்கள், விலங்குகள், பறவைகள், ஓரறிவுயிர் வகைகள், தொழில்கள், உணவு வகைகள், ஒழுக்கவகைகள, முதலியவற்றைப்பற்றிய குறிப்புகளும், ஆங்காங்கே பற்பல உள்ளன. அவையெல்லாம் வரலாற்று நூல்வல்லுநர்க்குப் பெறலரும் செல்வங்களாம் என்பதில் ஐயமில்லை.

கூ. உதுதற்குரியோரும் நூற்பயனும்

இனி, இக் குறுந்தொகை முதலிய நல்லிலக்கியங்களைப் பயில்வதனால் உண்டாகுமு பயனைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். முழுவதுமு கட்டுற்று உணர்ச்சியற்ற நிலையினின்றுமு உயிர்கள் திருவருளாலே இயக்கப்பட்டு, ஒன்றறிவுயிர் ஆகிய புற்பூண்டு முதல், ஆறறிவுயிராகிய மக்கட் பிறப்பு இறுதியாகவுள்ள அறுகூற்றினமைந்த எண்ணிறந்த பிறவிகளிலே உழன்றுழன்று முழுவதும் கட்டற்றதொரு உயர்நிலைக்குச் செல்கின்றன என்பது பண்டைச் சான்றோரின் கொள்கை என்பதனைப் பழைய தமிழ் இலக்கியங்களை ஆராய்வோர் உணர்தல் கூடுமு இக்காலத்தே வழங்கும் சைவ சமயக்கொள்கை இப்பண்டைத் தமிழ்மக்களின் இக்கொள்கையினின்றே உருப்பெற்றது என்று எண்ண இடமுளது. மேலே கூறிய எண்ணரிய பிறவிகளினும், மானிடப் பிறவியே அரிதெனச் சான்றோர் கூறுவதுமு, அப்பிறவி முழுவதும் கட்டற்ற உயர்நிலையை உயிர் எய்துதற்குரிய சிறிய கருவியாக உள்ளமைபற்றியே யாம்

இனி, ஒன்றறிவுயிர் முதல் ஐந்தறிவுயிர் இறுதியாகவுள்ள உயிர்களோ தாமியைந்துள்ள உடலையே பொருளாகக்கொண்டு அதனை ஓம்புதலும் தம்மினம் வளர்த்தலுமாகிய இருவகைத்

தொழிலின்கண்ணே அடங்கி நிற்பனவாம். இவை ஒழிந்த ஏனை மக்கட் பிறப்பினர் மட்டுமே உடலோடே தமமுயிர் ஆக்கத்தை யும் கருதி, உடலுக்கு ஆக்கந்தரும் உணவுப் பொருளீட்டுத லோடே உயிர்க்கு ஆக்கந்தரும் உணர்வுப் பொருளையும் ஈட்டி நுகர்ந்து மேலும் வளர்ச்சி எய்துதற்குரியர் ஆவர்.

மானிடரினத்திலே, ஆறாவதறிவாகிய மனவுணர்ச்சி மரு வுப்பெறாத மானிடரே சாலப் பலர். இத்தகையோரையே "மாவும் மாக்களும் ஐயறி வுயிரே," எனத் தொல்காப்பியனர், அறிவு வகையாலே இவர் விலங்குகளே யாவர் என்பதுபடக் கூறிப் போந்தார். இவ்வினத்துமாக்கட்கு இலக்கியங்கள் இருந் தும் இல் பொருள்களேயாம். இவ்வினத்தாரும் மானிடரே எனக் கொண்டு, சீரிய இலக்கியங்களை இவர்க்கு ஓதுவித்தலும் பயனில் செயலேயாம். அம்மாக்கள் இலக்கியங்களைப் பல்லாண்டு ஓதியும் ஓதாதவர்களேயாவர். இவர்களைக் கருதியே, "ஓதியும் ஓதாதார் உணர்விலார்" என்ற மெய்ம்மொழி எழுந்ததாகும்

இனி, உடலுக்கு உரந்தரும் சத்துணவை ஆராய்ந்து அவை யிற்றை அளவறிந்து கூட்டி மடைநூல் வல்லான் ஒருவன் சமைத்து நல்கியது இன்சுவை அடிசிலாகின்றது. இவ்வின்சுவை யடிசில் உண்பார்க்கு இனிப்புமுதலிய அறுவகைச் சுவையறதி யாதனை இன்பம் நல்குவதோடு அமையாது, மேலும் உண்பார்தம் உடலில் குருதியாய்த் தசையாய் என்பாய் இன்னோரன்ன பிற தாதுப் பொருள்களாய் மாறி அவ்வுடலினை நன்கு செழிக்கச் செய்கின்றது.

இங்ஙனமே, நல்லிசைப் புலவர்கள் உயிர்க்கு ஆக்கந்தரும் சத்துணவைத் தமது கூர்த்த நுண்ணுணர்வாலே இறைவனது படைப்பினின்றும் திரட்டி, அவையிற்றை மாசுபோக்கி அள வறிந்து கூட்டி, இன்சுவைச் செய்யுளாய்ச் சமைத்தளிக்கின்றனர். இச் செய்யுள்களாகிய கலியமிழ்தங்களோ தமபால் அமைந்த காம முதலிய எண்வகைச் சுவைகளாலே, தம்மை நுகரும் திரு வுடைய மனவுணர்ச்சி பெற்ற மக்கட்கு ஆற்றலும் பேரின்பம் நல்குவதோடமையாது, மேலும் அவர்தம் உயிரின்கண் மெய் யுணர்ச்சியைத் தூண்டிப் பெரிதும் வளர்த்து, இறுதியில் அவர் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகிய முழுமுதற் கட்டற்ற நிலைக்கு உயர்த்துகின்றன.

இலக்கியங்கள், இத்தகைய பெருஞ் சிறப்புடையனவாதல் குறித்தன்றே தெய்வப்புலமைத்திருவள்ளுவனரும் உடற்கு ஆக் கந்தரும் உணவை மட்டும் உணர்வாரை வாயுணர்வின் மாக்கள் என்றும், அவர்தம் வாழ்க்கை, பயன்படா வெற்று வாழ்க்கையே

யாம் என்பதனை "வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்?" என்று வினவுமாற்றால் உணர்த்தியும், மற்று, இலக்கிய நுகர்ச்சியுடையோரை அமிழ்தண்ணும் அமரரோடு ஒப்பித்தும், இலக்கியங்களை அமிழ்த உணவோடு ஒப்பித்தும், தம் திருக்குறளிலே,

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

எனத் தெளித்தோதுவாராயினர்.

இனி உயிர்தானும் யாதொன்றனை விரும்பிப் பெரிதும் பயின்றது அப்பொருளே தானும் தன்மையுடைத் தென்பர் அளவை நூலோர். அழகுணர்ச்சி மிகுந்த சான்றோர்கள், உலகிற் காணப்படும் காட்சிப் பொருள்களினின்றும், உணரப்படும் கருத்துப் பொருள்களினின்றும், தாம் நுகர்ந்த அழகுகளையே செய்யுளாக நமக்கு அளிக்கின்றனர் இவ்வழகுதானும் இறைப்பொருளின் ஒரு தோற்றமேயன்றி வேறில்லை. எனவே அழகுப் பிழம்புகளாகிய இச் செய்யுள்களில் இருந்து யாம் சுவைபடுதும், சொல்லழகும் பொருளழகும் அணியழகும் இசையழகும் ஆகிய பல்வேறு வகையிற் றோன்றும் அவ்வோர் அழகேயன்றி வேறென்னை? இவ்வழகிலே ஆர்வத்துடன் பயிலும் உயிரும் நாளடைவில் அவ்வழகேயாய் விடுகின்றது. அழகே கடவுள்! அவ்வழகாக உயிர் பரிணமிப்பதே வீடு எனவே, இந்நூலின் முடிந்த பயன் இதனைப் பயில்வோர் அந்தமில் இன்பத்து அழிவில் வீடு எய்துவர் என்பதேயாம்.

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே."

தமிழ் வாழ்க.

மேலைப் பெருமழை,
சயபாண்டு ஆவித்திங்கள்
ஐந்தாநாள்.

இங்ஙனம்,
பொ. வே. சோமசுந்தரன்

பாடிய சான்றோர்

[பெயர், செய்யுள் எண்கள்]

அஞ்சிலாந்தையார், உகூச
அண்டர்மகன் குறுவழுதியார், நகூஙி
அணிலாடு முன்றிலார், சக
அம்மூவனார், சகூ, கஉஙி, ககூங, நOங, நOசூ, நகஅ, நஉஎ, நகாO, நஙிக, நகூஎ, சOக
அரிசில் கிழார், ககூங
அழிசி நசசாத்தனார், உஎக
அள்ளூர் நன்முல்லையார், நஉ, சூஎ, சூஅ, கூங, கூச, கசO, கஙிஎ, உOஉ, உஙஎ
அறிவுடைநம்பி, உஙO
ஆசிரியர் பெருங்கண்ணனார், உஙூ
ஆதிமந்தியார், நக
ஆரியவரசர் யாழ்ப்பிரமதத்தனார், கஅச
ஆலகுடி வங்கனார், அ, சஙி
ஆலத்தூர் கிழார், கஉஉ, நஙிO
இடைக்காடனார், உஙிக
இருந்தையூர்க் கொற்றன் புலவனார், நஙஙி
இளங்கீரந்தையார், கசஅ
இளங்கீரனார், ககசூ
இளம்பூதனார், உங்கச
இறையனார், உ
ஈழத்துப் பூதன்றேவனார், நசஙக
உகாய்க்குடி கிழார், ஈங
உருத்திரனார், உஎச
உரோடகத்துக் கந்தரத்தனார், கஙிஙி
உலோசசனார், களஙி, களள, உOஙி, உசஅ
உழுந்தினைம் புலவனார், நகூங
உறையனார், உOள
உறையூர்ச் சல்லியன் குமாரனார், நOக
உறையூர்ச் சிறுகந்தனார், உஙிள
உறையூர்ப் பல்காயனார், நஎச
உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கங்ங
உறையூர் முதுகூத்தனார், நஙிங
நஎக
உறையூர் முதுகொற்றனார், உஉக
நகூO
ஊண் பித்தையார், உங்உ
எயிற்றியனார், உஅசூ
ஐயூர் முடவனார், களங, உசூ, நஉஉ
ஒக்கூர் மாசாத்தியார், களசூ, கங்க, கஅசு, உஉO, உளஙி
ஒருசிறைப் பெரியனார், உளஉ
ஓதஞானியார், உஉள
ஓதலாந்தையார், கள, உக, உஉகூ
ஓரம்போகியார், கO, எO, களஉ. களள, நஅச
ஓரிற் பிசசையார், உளள
ஔவையார், கஙி, உங, உஅ, உகூ நக, சங, அO, கூக, கூக, கOஉ, கஙிஅ, கஅங, உOO, நகூசூ, நஅஅ
கங்குல் வெள்ளத்தார், நஅள
கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார், உகங, உகச
கச்சிப்பேட்டு நன்னகையார், நO, களள, கஅO, ககூள, ககள, உஅள.
கடம்பனூர்ச் சாண்டிலியனார், நOள
கடியலூர் உருத்திரங் கண்ணனார், நஙிஉ
கடுகு பெருந்தேவனார், உஙிங
கருங்தோட் கரவீரனார், சூக
கடுவன் மள்ளனார், அஉ
கண்ணனார், உசச

கணக்காயன் தத்தனார், ஈ0ச
கதக்கண்ணனார், கூச
கபிலர், கஈ, கஅ, உநி, ஈஅ, சஉ, அள, கூநி, க00, கபசு, ககநி, கஉக, கசஉ, கநிஈ, கஅள, ககஅ, உபஅ, உஉ நி, உசக, உசசு, உசக, உகசு, உஅஅ, உகக, ஈகஉ, ஈநிநி, ஈநிள, ஈசுக, ஈஅநி
கயத்தூர் கிழார், ஈநிச
கயமனார், கூ, ஈநிசு, ஈளஅ, ஈகூசு
கருவூர்க் கதப்பிள்ளை, சுச, உசுநி, ஈஅ0
கருவூர கிழார, கஎ0
கருவூர்ச சேரமான் சாத்தனார், உசுஅ
கருவூர்ப் பவுத்திரனார், கசுஉ
கருவூர் ஓதஞானியார், எக
கல்பொரு சிறுநுரையார், உகூ0
கல்லாடனார். உசுO, உசுக
கலவ மகனார, ஈஉச
கழாக் கீரனெயிற்றியார, உநி, உசுக, ஈ ஈ0
கள்ளிலாத்திரையனார், உகூஈ
காக்கை பாடினியார நசசெள்ளை யார், உக0
காமஞ்சேர் குளத்தார், சு
காலெறி கடிகையார், உசுள
காவன்முல்லைப் பூதனார், க0ச, உகக
காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத் தனார், உகுள
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், உகுள
காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங் கண்ணனார், ஈசுள
கிடங்கிற் குலபதி நக்கண்ணனார், உநிஉ
கிள்ளிமங்கலங் கிழார், எசு, கக0, கநிஉ, கஅக
குட்டுவன் கண்ணனார், கள
குடவாயிற் கீரத்தனார், உஅக, ஈசுக
குடவாயிற் கீரனக்கனார், எக
குப்பைக் கோழியார், ஈ0நி
குழற்றத்தனார், உசஉ
குறியிறையார், ஈகூச
குறுங்கீரனார் ஈஅஉ
குறுங்குடி மருதனார், ஈசச
குன்றியனார், நி0, நிக, ககள, உஈஅ, ஈ0க, ஈஈசு
கூடலூர்கிழார், கசுக, கசுள, உகச
கூவன் மைந்தனார், உஉச
கூழிக கிரற்றனார், உளசு
கொல்லனழிசியார, உள, கஈஅ, கசஈ, உச0
கொலவிக் கண்ணனார், ஈச
கொற்றனார், உகஅ, ஈநிஅ
கோக்குளமுற்றனார, கூஅ
கோப்பெருஞ் சோழர், உ0, நிஈ, கஉக, கசள
கோவதத்தர், சுசு, ககச.
கோவூர கிழார், சுநி
கோவேங்கைப் பெருங்கதவ்வா, கஈச
சத்திநாதனார், ககக
சாத்தனார், ஈசக
சிறைக்குடி ஆந்தையார், நிசு, நிள, சுஉ, கஈஉ, கசுஅ, உஉஉ, உளஈ, ஈ00
செம்புலப் பெயனீரார், ச0
செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தனார், உஉஅ
செல்லூர்க் கொற்றனார், ஈசுஈ
சேந்தம் பூதனார், உசச
சேந்தன் கீரனார், ஈகக
சேரமானெந்தையார், உஉ
தங்கால் முடக்கொல்லனார், உகள
தாமோதரனார், கூஉ
தாயங் கண்ணனார், ஈகக
திப்புத்தோளார், க
தீண்மிதி நாகனார், ககக
துயபிசேர் கீரனார், சுக, ஈகசு, ஈஉ0, ஈகூஉ
தூங்கலோரியார், கநிக, உகூநி
தேரதரனார், ககநி
தேவகுலத்தார், ஈ
தொல்கபிலர், கச
நக்கீரனார், எஅ, கபீநி, கசஈ, கசுக, உசுசு, உஅ0, ஈசுஅ
நம்பி குட்டுவனார், க0க, உசஈ
நரிவெரூஉத்தலையார், நி, உஈசு
நன்னாகையார், ககஅ, ஈஉநி
நாகம் போத்தனார், உஅஉ

நாமலார் மகனார் இளங்கண்ணனார், உஙO
நெடும்பல்லியத்தனார், உ Oஉ
நெடும்பல்லியத்தையார், கஎஅ
நெடுவெண்ணிலவினார், சஎ
நெய்தற்கார்க்கியர், ஙிஙி, உகஉ
படுமாத்து மோசிகீரனார், ஙிங, எஙி, ஙிஅஉ
பலுமாத்து மோசி கொற்றனார், ஙிஎசு
பதடி வைகலார், ஙிஉஉ
பதுமனார், சு
பரணர், ககக, உச, ஙிசு, சுO, எஙி, அக, கஉO, கஉஅ, கசுஙி, ககக, உஙிஅ, ஙிக, உகஉ, உகஅ, ஙிஉஅ, ஙிசுஙி, ஙிகக
பரூஉ மோவாய்ப் பதுமனார், கOக
பணம்பாரனார், ஙிஉ
பாண்டியன பன்னெடுந்தார், உ எO
பாண்டியனேனெடுஞ் செங்கண்ணனார், கஙிசு
பாகாப்பார், உஙிச
பாரதம் பாடிய பெருந்தேவனார், கடவுள் வாழ்த்து
பாலைபாடிய பெருங கடுங்கோ, ககசு, ஙிஎ, கஉச, கஙிஙி, கஙிஎ, உO க, உஙிக, உசுஉ, உஅஙி, ஙிகஅ
பூங்கண்ணனார, உஙிஙி
பூங்கணுத்திரையார், சஅ, கஎக
பூதத்தேவனார், உஅங
பூதமபுலவனார, ககO
பெருங்கண்ணனார், உஅக, ஙிகO
பெருங்குன்றூர் கிழார், ஙிஙிஅ
பெருஞ்சாத்தனார, உசுஙி
பெருந்தோட் குறுஞ்சாத்தனார், ஙிO அ
பெரும்பதுமனார், எ
பெரும்பாக்கனார், உகசு
பேயனார், உஙிங, ஙிஙிக, சOO
பேயார், ஙிஙிக
பேரிசாத்தனார், உஎஅ, ஙிகச, ஙிசுசு
பேரெயின் முறுவலார், கஎ
பொதுக்கயத்துக் கீரந்தையார், ஙிஙிஎ
பொன்மணியார், ஙிகக
பொன்னாகனார், ககச
மடல்பாடிய மாதங்கீரனார், கஅஉ
மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார், உஉங
மதுரைக் கண்டரதத்தனார், ஙிகஎ
மதுரைக் கண்ணனார், கOஎ
மதுரைக் கதக்கண்ணனார், அச
மதுரைக் காஞ்சிப்புலவரா, மாங்குடி கிழார், மாங்குடி மருதனார், (இம் மூன்று பெயரும் ஒருவரையே குறிப்பனவாகக் கருதப் படுகின்றன) ககசு, கஎங, ஙிOஉ
மதுரைக் கொல்லன் புலவனார், ஙிஎங
மதுரைச் சித்திரலெச் சாத்தனார், கஙிச
மதுரை நல்வெள்ளியார், ஙிசுஙி
மதுரைப் பெருங்கொல்லனார், கசக
மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போதனார், ஙிஙிஉ
மதுரை மருதனிளநாகனார், எஎ, கசO, உஎக, ஙிசுஎ
மதுரை யளக்கர் ஞாழலார்மகனார் மள்ளனார் கஅஅ, உகஙி
மதுரை யறுவை வாணிகன் இளவேட்டனார், கஅஙி
மதுரை யாசிரியர் கோடங்கொற்றனார், கசச
மதுரை யீழத்துப் பூதன்றேவனார், கஅக, ஙிசO
மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார், சO, உஉசு
மதுரை வேளாதத்தனார், ஙிகஙி
மள்ளனார், எஉ
மாடலூர் கிழார், கஙிO
மாதிரத்தனார், ககஙி
மாமலாடனார், சச
மாமூலனார், கக
மாயெண்டனார், உஙிஙி
மாலை மாறனார், உசஙி
மாவளத்தனார், ஙிசஅ
மிளைகந்தனார், ககசு
மிளைகிழான் நல்வேட்டனார், ஙிசக

மிளைப் பெருங்கந்தனார், கஉசு, உ0ச, உஉச
மிளைவேள் தித்தனார், உஅச
மீனெறி தூண்டிலார், இச
மோசிகீரனார், இக, அச
மோசி கொற்றனார், கஎள
மோதாசனார், உஉக
வடமவண்ணக்கன், அக
வடம வண்ணக்கன் தாமோதரனார், அஇ
வடம வண்ணக்கன் பேரிசாத்தனார், கஇக
வருமுலையாரித்தியார், கஎச
வாடாப் பிரபந்தனார், கஉக
வாயிலான் றேவனார், க0உ, க0அ
வாயிலிளங் கண்ணனார், கஉசு
விட்ட குதிரையார், எச
வில்லக விரலினார், கஎ0
விற்றூற்று மூதெயினனார், கஎஉ
வெண்கொற்றனார், அள
வெண்பூதனார், அங
வெண்பூதியார், கூள, களச, உகக
வெண்மணிப்பூதியார், உகக
வெள்ளி வீதியார், உசு, சச, இஅ, க0உ, கசசு, கசக, கசசு, கஅசு
வெள்ளூர்கிழார்மகனார் வெண்பூதியார், உகக
வேட்டக் கண்ணனார், கஅக.
வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார், கஉஉ

க

குறுந்தொகை

மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

துறை :—இஃது, அகப்பொருள் துறைச் செய்யுளாகிய இக்குறுந்தொகைக்குப் புறத்துறுபபாய் வந்தது ; புறப்பொருட் பாடாண் திணையைச் சார்ந்தது. அஃதாவது, இந்நூல் ஓதுவார் நூலின் முடிந்த பயனுகிய சிட்டின்பத்தையும இமமையின்பத் தையும எய்துமாறு கடவுளை வாழ்த்தியது.

இதன்கண், நல்லிசைப் புலவராகிய பெருந்தேவனார் “சேவடியையும, மேனியினையும், ஒளியினையும, உடுக்கையினையும், வேற்படையையும, சேவலங் கொடியினையும உடைய முருகக் கடவுள் காத்தலானே உலகம இன்புறறு வாழாகின்றது. யாமும் அப்பெருமானை சேவடியை வணங்குவோமாக,” என்று அறிவுறுத்துகின்றனர்.

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நேஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நேடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

—பரணர் பாடிய பெருந்தேவனார்.

(இதன் பொருள்) தாமரைபுரையும் காமர் சேவடி - செந் தாமரை மலரை ஒக்கும் அடியாராத விருப்பத்தைச் செய்யும் சிவந்த திருவடியினையும், பவழத்தன்ன மேனி - பவழம்போலும் சிவந்த நிறத்தையுடைய திருமேனியினையும், திகழ் ஒளி - விளங்காகின்ற ஒளியினையும், குன்றி ஏய்க்கும் உடுக்கை - குன்றி

மணியின் நிறம் போன்ற சிவந்த நிறமுடைய ஆடையினையும், குன்றின் நெஞ்சுபக எறிந்த அம்சுடர் நெடுவேல் - கிரௌஞ்ச மலையினுடைய மார்பம பிளக்கும்படி விசியருளிய அழகிய ஒளியையுடைய நெடிய வேறபடையினையும, சேவல அம் கொடி யோன் - கோழிச்சேவல் எழுதிய அழகிய கொடியினையும் உடைய முருகக் கடவுள், காபப உலகு ஏம லவகல எயதின் று - காத்தலாலே உலகத்து வாழும் உயிர்கள் இனபமான நாட்களை எய்தாநினறன.

விளக்கம் :—சேவடி எனப் பொருட்குக் கூறிய செம்மையை உவமத்திற்கும் எற்றிச செஙதாமரை மலர் என்க. தாமரை மலர் அடியின் நிறத்திற்கும், அழகிற்கும் உவமை. தூற்றெடுக்கத்தினின்ற இசசெய்யுளின்கண் தாமரை முதன்மொழியாய் நின்று மஙகலமாதலும் உணர்க. தாமரை, மலாக்கு ஆகுபெயா. சரவணப் பூமபொய்கையிலே பதுமப் பாயலிற் ரோன்றியவா முருகக் கடவுள் என்ப வாகலின், அத் தாமரையையே அதன்கட் பயின்ற அடிக்கு உவமையாக நிலோற் தோதினர் என்க முருகக் கடவுள் செஙநிறமுடையராகலின் அடி யின்கண அந்நிறத்தை விதந்தோதாதனர் புரையும் - ஒகரும் : உவம வுருபு காமர் - விருப்பம. அனபராயினர்க்கு மேலும் மேலும் விருப் பததை எழுவித்துத தம்பாலரக்கும திருவடிகள் என்பார் 'காமர் சேவடி' எனறார். "அவன் அருளாலே அவன்றாள் வணஙகி" என வரும் ஆன்றோர் அநுபவ மொழியும் ஈண்டு நினைவு கூரக சேவடியே வீடாயிருக்கும் என்பவாகலின் சேவடியை முற்பட வோதினர். இக் கருததே பற்றி "நின்னிற் பிறந்த நின் தாளிணையவை" (பரிபா - ச.) எனப பிற சான்றோரும கூறுதல் காணக ஆசிரியர் திருவள் ளுவ ரும் "தாள் தொழாஅரெனின்" (குறள் - உ) என்றும், "மாணடி சேராதார்" (குறள் - ஈ.) என்றும், "வேண்டுதல் வேண்டாமை யிலான அடி" (குறள் - ச.) என்றும், "தனக்குவமை யில்லாதான்ம தாள்" (குறள் - எ.) என்றும், பிறண்டும் திருவடியையே விதந்தோது தலும் உணர்க.

மேனி, ஈண்டு நிறத்திற்கு ஆகுபெயர். அடிமுதல் யாண்டும் செம்மை கூறலின், ஒளியையும் செவவொளி என்க. இறைவன் 'ஞானமயன்' என்னும் மரபுபற்றித திகழொளி என்றார. ஒளி ஈண்டு அறிவின் மேற்று. சூன்றிமணி புறனெல்லாம் சிவப்பும் மூகநிற் கரு நிறமும் உடைதாயினும், பெரும்பான்மை பற்றியும், மேலே செந்நிறத் தையே விதநதோதுதல் பற்றியும் அதன் செந்நிறத்தையே தருசியாற் கொள்க எய்க்கும் - உவமவுருபு. முருகக் கடவுள் செந்நிற ஆடை யுடையர் என்பதனைச் "செய்யன் சிவந்த ஆடையன்' எனவரும் திருமுருகாற்றுப்படையானும் உணர்க.

குன்று, ஈண்டுக் கிரௌஞ்சமலை. இதனைக் "குருகு பெயர்க் குன்றம்" என்பது தமிழ்மரபு. (சிலப் - குன்றக் - கo.) கெஞ் சென்றது அம்மலையின் நடுவிடத்தை. பகைவர் மார்பினும் மலை திண்ணிதாகலின், வேலின் ஆற்றல் கூறுவார் குன்றம் பிளந்தமை யையே கூறினர். பக - பிளகரும் படி. எறிதல் - வீசுதல். முருகக் கடவுளுக்கு வேல் 'ஞானசத்தி' என்பவாகலான் "அஞ்சுடா நெடு வேல்" என்றார். அஞ்சுடர் - அழகிய அறிவொளி என்க. அக்

கடவுளின் வெற்றி தோன்றச சேவலங் கொடியை எடுத்தோதினர். சேவல் - கோழிச சேவல்; மயிற் சேவல் எனினுமாம். இச்செய்யுளை ஓதுவார் உளத்தே அப்பெருமான் திருவுருவம் திகழ்ந்து தோன்று மாறு அழகுற ஓதியிருத்தல் உணர்ந்தின்புறுக.

சேவலங் கொடியோன் என்னுந் தொடையும் அக்கடவுளின் உருவச் சிறப்பும், தெறற் சிறப்பும் ஓதி, அவனுடைய அளிசசிறப் போதுகின்றார்; உலகங் காவலற்குத் தெறலும, அளியும் இன்றியமையாமையின் என்க. காப்ப என்றது, மன்னா போன்று இறைப்பொருள் முதலிய கைம் மாறு கருதாது, தமது பேரருள் எதுவாகக் காவாநிற்க என்பதுபட நின்றது. இறைவன் நிகழ்த்தும் படைத்தற் றொழில் முதலிய ஐந்தொழிலும், அழுந்து தோகருவார்களுக் காத்தற் றொழிலாகவே முடிதலின், அஃதொன்றனையே எல்லாம் அடங்க விதந்தோதினர். காப்ப ஏமவைகல் எயதின்று என ஏதுக்கூறலான், காவாகால் உயிர்கள் இன்புறமாட்டா என அதன் எதிர்மறைப் பொருளையும் கூறிகொள்க. அப்பெருமானே எல்லீரும் வாழ்த்தி இன்புறுமின் என்பது இசை எசசம்.

இந்நூல் இன்ப நூலாகலின் அவ்வின்பத்தை தொடுத்து நுய்க்க எதுக கூறினார். இன்பம் எனப் பொதுவாகக் கூறவின, இம்மை மறுமை வீடு என்னும் மூதிறற இன்பமும் கொள்க ஏமவைகல் எய்தின்றென்றதனால் ஈண்டை உலகம் என்றது அறிவில் உலகினை ஒழித்து அறிவுடைய உலகதனை. அஃதாவது, உயிர்களைக் குறித்து நின்றது, என்னை? இன்புறுவன அவையேயாகலின். இவையிற்றை அசேதனப் பிரபஞ்சம் என்றும், சேதனப் பிரபஞ்சம் என்றும் அளவை நூலோரும் வழங்கிதோதுதலறிக.

இனி, இசசெய்யுள் அகப்பொருட்பகுதியைச சார்ந்ததன்றெனினும் அகப்பொருட்டுறை பற்றிய இந்நூற்குப் புறத்துறைப்பாக நிற்றற் கேற்ப இதன்கண் 'தாமரை' என மருதக கருப்பொருளும, 'பவழம்' என நெய்தற் கருப்பொருளும், 'குன்றி' என முலலைக் கருப் பொருளும், 'குன்றின்' எனக் குறிஞ்சி முதற்பொருளும், ஆக, நானிலக் கருப்பொருள்களும் முதனிலமாகிய குறிஞ்சித தெய்வமும் கூறிய அழகுணர்ந்து இனபுறுக.

இனி இசசெய்யுளை யாத்த நல்லிசைப்புலவரான பாரதம்பாடிய பெருந்தேவனார், இத்தொகை நூற்றெயன்றி ஐங்குறுநூறு, தொகைத் தொகை, புறநானூறு, நற்றிணை என்னும் நூலகட்கும் இன்னோரன்ன கடவுள் வாழ்த்துப் பாடி அமைத்துள்ளனர். தொகைநூல்களுள், இக் குறுந்தொகையே முதற்கண் செய்யப்பட்டதென்னும் வரலாறறு நூலோர கருதுதிற்றேற்பவே நானிலங்களுள் முதனிலமாகிய குறிஞ்சிக் கடவுளை இந்நூற்கண்ணும், இரண்டாந் தொகையாகிய நற்றிணைக்கண், இரண்டாம் நிலமாகிய முல்லைக் கடவுளையும் வாழ்த்தி, எஞ்சிய நிலக் கடவுளாகிய இந்திரனையும் வருணனையும், இம்முருகனையும் திருமாலையும் போலச் சமயக்கணக்கர் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடாமையின், எஞ்சிய நூல்களில் சிவபெருமானையும் வாழ்த்தினர் என்றுணர்க. எஞ்சிய மூன்று நூல்களிலும் இவர் சிவபெருமானையே வாழ்த்துவதனை நோக்கின், இவர சைவசமயத்தைச சார்ந்தவர் என்று எண்ணவும் இடமுளது.

பாட்டு - க : தோழி கூற்று

துறை :—தோழி கையுறை மறுத்தது. அஃதாவது, தோழியின் வாயிலாய்த் தலைவியைக கூடக் கருதிய தலைவன், செங்காந்தண் மலரைத் தோழிக்குக் காட்டி இதனைக் கையுறை யாக ஏற்றுக்கொடுபோய த தலைவிக்குக் கொடுத்திடுக என வேண்டாநிற்பத் தோழி, தலைவி அரியள என்பதுபட அதனை மறுத்தது.

இதன்கண், தலைவ! நீ தந்த இச் செங்காந்தண்மலர் எங்கட்கு அரும்பொருள் அன்று; எமது மலையின்கண் இது நிரம்ப வளதுகாண்! ஆகலின் இவ்வெண்பொருள் எமக்கு வேண்டா எனத், தோழி கையுறை மறுதலைக் கூறுகின்றாள.

க. செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானை
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

—நிப்புத் நோளர்.

(இ - ள்.) செங்களம் படக் கொன்று அவுணர்த் தேய்த்த-போர் உடறறிய களம் உதிரதாலே சிவந்த களமாம்படி அசுரர்களைக் கொன்று இவ்வியாக்கிய, செங்கோல் அமபில் செங் கோட்டு யானை - குருதியாற் சிவந்து திரண்ட அம்பினையும் சிவந்த மருப்பினையுடைய யானையினையுப, கழல் தொடி - உழலும் தொடியினையும் உடைய, சேய் குன்றம - செவ்வேள் எழுந்தருளியிருக்குப் எமது பலை, குருதிப பூவின் குலைக்காந் தட்டு - உதிரப போன்று சிவந்த பூகளையுடைய கொத்துக்கள் நிறைந்த காந்தண் மலரினை நிரமபவுடைத்து.

விளக்கம் :—இதனுல் யாங்கள் குறைவிலேமாகலின் நுங்கையு றையை ஏலேம் எனபது குறிப்பெச்சம. இனி "இக்காந்தண்மலர் தெய்வத்திற்கு உரியதாகலான் இதனை மகளிர் சூடல் மரபன்றென மறுத்தாளுமாம்" என்பாருமுளர். "வள்ளிதழ் ஒண் செங்காந்தள் ஆம்பல் அணிசசம் . . . . பல்வேறு உருவின் வனப்பமை கோதையெம் மெல்லிரு முசசிக் கவின்பெறக்கட்டி" (குறிஞ் - கூக - கஐச.) என்புழி மகளிர் செங்காந்தண்மலர் சூடும் மரபுண்மை அறியப்படுதலானும, மரபன்றுயின் அறிவுமிக்க தலைவன் மரபறியான் எனப்பட்டு இழுக் காம் ஆதலானும் அது கருதன்றென்க. இனி "நீ கொணாந்த காந்தட் கையுறை நின் கைப்பட்டுக் கரிந்துகாட்டலின் இதனைத்

தலைவிகாணின் ஆற்றுள் எனக்கருதி மறுத்தாள்" என்பாருமுளர். இங்ஙனம் கூறின், எங்குன்றம் குலைக்காந்தட்டென்பது பொருட்சிறப் பின்றி வெற்றென நிற்றலுணர்க.

இனி இச்செய்யுளை, பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் "தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது" என்னும் துறைப்படுத்தோதுவர். அஃதாவது, தலைமகனது வரவுணர்ந்த தோழி தலைமகளைப் பொழி லின்கண் ஒரு குறியிடத்தே கொண்டுசென்று "சேயுயர்குன்றம் குருதிப் பூவின் குலைகாந்தட்டு ஆண்டுத் தெய்வம் உறைதலின் கின்னல் வரப் படாது; யான் சென்று கொய்துவருவன்; நீ அதுகாறும் இப்பொழி லிடத்தே நிற்கக்கடவாய்" என நிறுத்தி நீங்குதல் என்பதாம்.

செங்களம்படக் என்றது போர்க்களம் உதிரத்தாற் சிவக்கும்படி என்றவாறு. இஃது அவுணரின் மிகுதியை உணர்த்தற்குக் குறிப்பேது வாதல் உணர்க. தெய்த்த என்றது, அவுணர் பின்னும் உயிருட னிருந்து நல்லோரை நலியாதபடி எஞ்சாமற் கொன்ற என்பதாம். இது முருகப்பெருமானுடைய தெறல் கூறிற்று. களம் குருதியாற் செந்நிளம் பட்டாங்கே அம்பும், யானை மருப்பும் குருதியாற் சிவந்தன என்க. எனவே, அப்பெருமானுடைய வோர்தியும் பகைதெறும் ஆற்ற லுடைத்து என்றவாறு.

சுழல் தொடி, உழலும் தொடி : வினைத்தொகை. செறிய இடப் படாமையின் கழல்கின்ற தொடி எனப்பட்டது. இனி, சுழல்தொடி என்பதை உம்மைத் தொகையாகக்கொண்டு வீரக்கழலும் வீரவலயமும் என விரித்தலும் ஒன்று. சேயோன் - முருகக் கடவுள். "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்றார் தொல்காப்பியனாரும்.

மயிலேயன்றி முருகப்பெருமானுக்கு யானை ஊர்தியும் உண்டென் பதை "வேழமேற்கொண்டு அங்குசம் கடாவ வொருகை" எனவரும் திருமுருகாற்றுப்படையானும் உணர்க. குருதிப்பூ - உவமத்தொகை. காந்தட்டு - காந்தளையுடையது. இதனைப் பாடிய புலவர் பெயர் "கீரந்தையார்" எனவும் காணப்படுகின்றது.

பாட்டு - உ : தலைவி கூற்று

துறை :—நலம் பாராட்டல். இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டுநின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்ந்ததைத் தனது அன்பு தோன்ற அவள் நலத்தைப் பாராட் டுதல்

இதன்கண், தலைவன் தலைவியின் கூந்தலில் உறையும் வண்டொன்றினை விளித்து, "வண்டே! நீ மலர் தேர்ந்து கொங் குண்ணும வாழ்க்கையுடையாய்; ஆதலின் நீ அறியும் பூக்களில் இவள கூந்தலினுங் காட்டில் நறியன உள்ளனவாக அறிதியோ?" என வினவுமுகத்தானே, அவள் கூந்தலின் இயற்கை மணத் தைப் பாராட்டுகின்றான்.

உ. கோங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

—இறையனார்

(இ - ள்.) கொங்கு தேர் வாழ்க்கை அம் சிறைத் தும்பி - பூந்துகளையே ஆராய்ந்து உண்ணுகின்ற வாழ்க்கையினையும அழகிய சிறகுகளையும் உடைய வண்டே, காமம் செப்பாது கண்டது மொழிமோ - யான் விரும்பியதனை அறிந்து முருகன் கூறுமல் நீ வாய்மையாக அறிந்ததனையே கூறுவாயாக, பயிலியது கெழீஇய நட்பின் மயில் இயல் செறி எயிற்று அரிவை கூந்தலின்—எழுமையும் என்னுடு பயின்றடிப்பட்ட அன்பினையும் மயில்போன்ற சாயலினையும் நெருங்கிய எயிற்றினையுமுடைய இவளது கூந்தல் போன்று, நீ அறியும் பூ நறியவும உளவோ—நின்னால் அறியப்பட்ட மலர்களுள் வைத்து நறுமணமிக்க மலர்களும் உள்ளனவாக அறிந்ததுண்டோ?

விளக்கம் —இவள் கூந்தல் போன்று இனிது கமழும் மலர் பிறிது காண்டும் யான் அறிந்திலேன், ஒருகால் பூத்தேரும் வாழ்வுடையை நீ அறிந்ததுண்டாயிற் கூறுக என்றவாறு. கொங்கு - பூந்துகள்: தேனுமாம். பூகளைத் தேவதே உன் தொழிலாகலின் நின்னை வினவுவல் என்பான், 'கொங்குதேர் வாழ்க்கை' என்றான். அஞ்சிறை என்பதனை அகஞ்சிறை எனக்கொண்டு "உள்ளிடத்தே சிறகினையுடைய" என்பாரும் உளர். இங்ஙனம் கூறுவார் கருதியதன்னையோ அறிகிலம். ஊழன்தேர் வாழ்க்கையுடைய பறவைகளிற்றும் நீ சிறந்தனை என முருகன் கூறுவான், கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி. என்றான். தும்பி, வண்டினத்துட் சிறந்ததென்ப காமம் செப்புதல் - விருவிற்கு வேரிய விடை கூறுதல் வினவுவார் மகிழும்படி அவர் விரும்புவதறிந்து கூறுதல். மொழிமோ - என்பதன்கண் மோ, முன்னிலையசை.

கண்டது - வாய்மை, உண்மையாக அறியப்பட்டது. பண்டு எவ்வாற்றானும் யாம் ஒருவரை ஒருவர் அறியாதிருந்தும், நம் அன்புடை நெஞ்சம் செம்புலப் பெயனீர் போலக் கலந்தவின் இங்கட்புப் பண்டும் பண்டும் பற்பல பிறப்புக்களில் பயின்று சிறப்பொடு பெருகி, நெஞ்சிற் பின்னி நீகாகல் செல்லா உழுவலன்பு என்று தேவிக்கு உணர்த்துவான், பயிலியது கெழீஇய நட்பென்றான். இது குறிப்பால் தம்மிலை உரைத்தவாறும். "உடுத்து வழிவந்த உழுவலன்பு" (பெருங் கதை - உ - கக: நகூ.) என்றார் பிறரும்.

இனி இச்செய்யுளை ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக் களவியல் கo-ம் சூத்திரத்துக்கு எடுத்துக்காட்டி, "இதனுள் தும்பி என்றது முன்னிலையாக்கல். கண்டது மொழிமோ என்றது,

சொல்வழிப்படுத்தல். கூந்தலின் நறியவும் உளவோ என்றது, நன்னய மூரைத்தல். காமம் செப்பாதென்றது என்நிலத்து வண்டாகலின் எனக்காகக் கூறுது மெய்கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித்தென்றது. பயிலியது கெழீஇய நட்பென்றது தம் நிலை யுரைத்தல்" என மிக அழகாக விளக்கங் கூறியுள்ளார்.

தும்பி விடைதாராதாகவும், விடைகூறுவது போன்று வினவியது, பாடல் சான்ற புலனெறி வழக்கம். இதனை "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச் செய்யாமரபிற் றொழிற்படுத் தடக்கியும்" (பொருளி-உ.) என வரும் தொல்காப்பிய விதியானும் உணர்க. சாயல்-மென்மை. அது காட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்ட லாகாது மனனுணர்சுக்குப் புலனுக மாதர் அழகிற்கிடப்பதொன்று. தான் நோக்குங்கால் அவள நிலநோக்கி மெல்ல நக்கபொழுது அவள் எயிற்றழகைக கண்டனனுகலின், அதன் நலம் பாராட்டுவான் செறி யெயிற்றரிவை என்றான். அரிவை - பருவப் பெயராகாது இவள் என்னும் சுட்டுப் பொருட்டாய் நின்றது.

இனி, இப்பாடல் சிவபெருமான் "நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறித்" தருமி என்னும் அந்தணன் பொருட்டுப் பாடியது என்னும் வரலாறொன்று வழங்குதலும அறிக.

பாட்டு - ங : தலைவி கூற்று

துறை :—தலைமகன் சிறைப்புறமாக அவன் வரைந்து கொள்வது வேண்டி த தோழி இயற்பழித்த வழித் தலைமகள் இயறபடமொழிந்தது. அஃதாவது, களவின்பத்தையே விரும் பித தலைவன் வரைந்துகோடல் கருதானுய்த் திரிதல் தங்கட்கு இன்னுதாதலின், அவன தம்மனைப படப்பையருகே வந்து நிற்றல கண்ட தோழி, அவன் வருகையை யறியாதாள் போன்று அவனைப் பழித்துரைகக கேட்ட தலைவி, அது பொருது அவனைப் பாராட்டியது.

இதன்கண், தலைவி, "யான் தலைவனைடு கொண்டுள்ள நட்புரிமை நிலத்தினும் பெரிது; வானினும் உயாந்தது; கடலினும ஆழமானது" என்று, பாராட்டித் தோழிக்குக் கூறு கின்றாள்.

ங. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனைடு நட்பே.

—தேவகுலத்தார்.

(இ - ள்.) சாரல் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனைடு நட்பு - மலைச்சாரலின்கண்

உள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சியினது பூவிற் றேனைக் கவர்ந்து கொண்டுவந்து வண்டுகள் பெரிய தேனிறாலைக் கட்டா நிற்கும் நாட்டையுடைய தலைவனைடு எனக்குளதாகிய நட்பு, நிலத்தினும் பெரிது - அகலத்தால நிலவுலகத்தினுங் காட்டிற் பெரிதாம், வானினும் உயர்ந்தன்று - கருதுங்கால் விசும்பினுங் காட்டில் ஒக்கத்தால் உயர்ந்ததாம், நீரினும ஆர அளவின்று - அதன்கண் ஆழ்ந்து காணுங்கால் கடலினுங் காட்டில் அளத்தற் கரிய ஆழமுடையதாம.

விளக்கம் :—சாரல் - மலைப்பக்கம். குறிஞ்சி மரத்தின் கொம்பு கரிய நிறமுடைமையின் கருங்கோற் குறிஞ்சி எனப்பட்டது. கோல் - கொம்பு. பூக்கொண்டென்புழிப் பூவிறறேனைக் கவர்ந்து கொண்டு வந்து என்க. தேன் ஆகுபெயராய் இறலுக்கு ஆயிற்று. இழைத்தல் - செய்தல். இழைத்தற் றொழிற்கு வினைமுதல் வருவித்துக் கூறப் பட்டது. வண்டுகள் குறிஞ்சிப்பூவிற் றேனைக் கவாந்து கொணர்ந்து பெரிய தேனடையை இழைக்கும் என்றது, பால்வரை தெய்வம் யாங்கள் பண்டு பற்பல பிறப்புகளிலே பயின்றழிப்பட்ட அன்புரி மையை ஈட்டி இப்பெரிய நட்பினை இழைத்தது என்னும் உள்ளுறை உவமை என்க. இங்ஙனமாகலின் தலைவர் என்னை மறப்பாரல்லர் அவர் அன்பு பெரிது என இயற்பட மொழிந்தபடியாம.

எவ்வாற்றானும் அளத்தற்கரிதென்பாள் அகலம், உயரம், ஆழம் ஆகிய மூன்றற்கும் தனித்தனிச சிறந்த உவமை எடுத்தோதினள். பெருமைப் பண்பிற்கு ஆசிரியர் திருவள்ளுவனாரும், இவற்றையே சிறந்தனவாகக்கொண்டு தாந்திருக்குறளில “ஞாலத்தின் மாணப் பெரிது” (குறள் - கூஅ.) என்றும், “வானுயர் தோற்றம்” (குறள் - உஎஉ.) என்றும், “கடலிற் பெரிது” (குறள் - கூஅ.) என்றும இனிதின் ஓதுதலுணர்க.

இத்தகைய பேரன்பினனாகலின் அவன் என்னை அருளாதிரான் என, அவன் சால்புடைமையை உயர்த்தோதியவாறு.

பாட்டு - ச : தலைமகள் கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது—தலைவன் வரைபொருட் பொருட்டு அகன்றானாக, அப்பிரிவை ஆற்றாது இவள் இறந்து படுவாளோ எனக் கவலையுற்ற தோழிகாது யான ஆற்றுவன் கவலற்க என்பதுபடத் தலைவி கூறியது.

இதன்கண், “தோழி! சான்றோராகிய நங்காதலர் தண் ணளியை நினைந்தே யான் ஆற்றியிருப்பேன்; யான் ஆற்றாது வருந்துவது எற்றுக்கெனில் சால்புடைய அவரை நீ சால்பிலர் என்று கூறுகின்றமை கேட்கப் பொறுமைக்கே காண்” எனத் தலைவி கூறுகின்றாள்.

ச. நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே.

—காமஞ்சேர் குளத்தார்.

(இ-ள்.) என் நெஞ்சு நோம் என் நெஞ்சு நோம்-(தோழீ!) என் உள்ளம் வருந்தாகிற்கும எ ன் உள்ளம் வருந்தாகிற்கும; அஃதெறுக்கெனின், இமைதீய்ப்பு அன்ன கண்ணீர் தாபதி அமைதற்கு அமைந்த நம் காதலர் - கண்ணிமைகளைச சுடுவது போன்ற வெம்மையிக்க கண்ணீரைத் தடுத்து யாம் ஆற்றியிருத்தற்குக் காரணமான தண்ணளி பொருந்திய நம்முடைய தலைவர், அமைவிலர் ஆகுதல் - நின்வாயாலே சால்பிலார் என்று கூறப்படுவாராதற்கு, நோம் என் நெஞ்சு - என் நெஞ்சு பெரிதும் நோவாகிற்கும.

விளக்கம் :—நோமென் நெஞ்சே என்னும் சொல் ஆற்றுமை மிகுதி தோன்ற மும்முறை அடுக்கிவந்தது. தலைவனைத் தோழி 'அமைவிலர்' என இயற்பழித்தாளாக, அது பொருது தலைவி, நின்னால் அமைவிலர் என்று கூறப்படுதற்கே என் நெஞ்சு நோமென்பாள் தோழி கூற்றைக் கொண்டு கூறுவாள் நங்காதலர் அமைவிலர் ஆகுதல் என்றாள். அமைதற்கு அமைந்தாராகவும் அஃதறியாது அமைவிலர் எனப் பழித்தல் பொறேன் என்பது கருத்து. அமைதற்கமைந்த காதலர் என்றது, அவர்தம் காதற்சிறப்பை நினைந்து ஆற்றியிருத்தற்கேற்ற சால்புடையோர் என்றபடி. அவர் நல்லர், அருளுடையர் ஆகலின் மறவாது வந்து அளிசெய்வர் என்று எண்ணுங்கால், கண்ணீர் தடுத்து யான் ஆற்றியிருப்பல் என்பாள், கண்ணீர் தாங்கி அமைதற்கு அமைந்த காதலர் என்றாள் அமைதற்கு அமைந்த சிறப்புடைய காதலையுடையார் என்க. பிரிவின் கொடுமை கூறுவாள் இமைதீய்ப்பன்ன கண்ணீர் என்றாள். பிரிவால் உண்டாகிய வெம்மையை அவர் தண்ணளியைக் கருதும் கருத்தாகிய நீரான் அவித்து யான் ஒருவாறு ஆற்றுவேன் என்றவாறு. நினையுந்தோறும் நெஞ்சங் குளிர்த்தறகுக காரணமான காதலமைதியுடையாரை நீ அமைவிலர் என்பது கேட்டே என் நெஞ்சம் வருந்துகின்றது; அங்ஙனம் கூறுதேகொள், ஆற்றுவிக்கவேண்டிய நீயே இப்போது என்னை ஆற்றுது வருந்தச செய்கின்றனை எனக் கடிந்து கூறினள் என்க. அவர் பிரிவு நோய் செய்வதாயினும் அவர் சால்பு அந்நோய்க்கு மருந்தாயமையுமாகலின் யான் ஆற்றுவல் என்றபடி.

அமைவு - காதலற்கேற்ற எல்லாப் பண்புகளானும் நிறைதல்.

பாட்டு - நி : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது. அஃதாவது, வரைவிடை வைத்துப்

பொருள்வயிற் பிரிந்த தலைவனது பிரிவாற்றுமையாலே மிகவும் வருந்திய தலைவியின் நிலைகண்டு கவலையுற்ற தோழிக்குத் தலைவி அக்காமநோயின் கொடுமை செப்பியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி "இக்கண்கள் தம்மகத்தே காதலர் உளராகவும், அஃதறியாவாய் அவர் பிரிந்து போயினர் என்று கருதி உறங்காமல் வருந்தாநின்றன. இத்தகைய மடமையைச் செய்யும் இயல்பிற்றே காமநோய்" என்று கூறுகின்றாள்.

ரு. அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கும் இன்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே.

—நரிவெரூஉத்தலையார்.

(இ - ள்) தோழீ—, வதி குருகு உறங்கும் இன்னிழற் புன்னை - தன்னிடத்தே தங்கிய குருகுகள் தம் பேடையை மறந்து உறங்குதற்குக் காரணமான இனிய நிழலையுடைய புன்னை, உடைதிரைத் திவலை அரும்பும் தீநீர் மெல்லம் புலம்பன் - கரையினை மோதி உடைகின்ற அலைகள் சிதறிய நீர்த்துளியாலே அரும்பெடாநிற்றற்கிடமான இனிய நீர்ப்பரப்பினையுடைய நெய்தனிலத்தையுடைய தலைவன், பிரிந்தனென - தம்மகத்தே பிரியாது வற்புறுப்பவும் அஃதறியாது பிரிந்துபோயினனாக, பலஇதழ் உண்கண் பாடு ஒல்லா - பலவாகிய இதழ்களையுடைய தாமரை மலர் போன்ற என் மையுண்ட கண்கள் துயில் பொருந்தாவாயின. அது கொல் காமநோய் - அத்தகைய மடமையைச் செய்யுந் தன்மையுடையதோ காமப்பிணி?

விளக்கம் :—செய்யுளாகலின் சுட்டுப் பெயர் முன்வந்தது. அது கொல் என்றது - அத்தன்மைத்தோ என்று வியந்தவாறு.

"கற்புத் தானிலள் நற்றவ உணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்று
இகழ்ந்தனை ஞெகிழ நயந்தோன் என்னுது
புதுவோன் பின்றைப் போயதென் நெஞ்சு
இதுவோ அன்னாய் காமத் தியற்கை" (மணி - நு : அசு-கo.)

என, மணிமேகலையார் வியந்தமையும் ஈண்டு நினைவுகூரற்பாற்று. "அதுவென்றது கண் உறங்காமையைச் சுட்டிநின்றது" என்பாரு மூளர்.

பிரிந்தென என்றது, அவர் பிரிவிலராய்த் தம்பால் இருப்பவும் அஃதறியாது பிரிந்தார் எனத் தம் மடமையான் உட்கொண்டு என்ற

வாறு. இத்தகைய மடமையும் காமநோய் செய்யும்போலும் என்று அதன் கொடுமை கூறியபடியாம். "கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும், எழுதேங் கரப்பாக் கறிந்து" (குறள் - கக உ எ.) என்னும் குறட் கருததை நினைந்து, தம்மகத்தே பிரியாது வீற்றிருப்பவும், என உரை விரித்தாம். தம்மால் இடையீடின்றிக் காணப்படும் தலைவரைப் பிரிந்தாரெனக் கருதும் மடமையைக் காமநோய் செய்யுங்கொல் என்று வியந்தாள் என்க.

வதி குருகு : வினைத்தொகை. வதி குருகுறங்கும் என்றது, கடற் கரைக்கு இரைதேடற்பொருட்டு வந்த குருகுகள் ஆண்டுள்ள நிழல் இனிமையானே தங்குணை மறந்து துயில்வது போன்று, நந்தலைவர் நம்மை மறந்து ஆண்டுள்ள பிறவின்பத்தால் தங்குவாராயினர் என்னும் குறிப்புடைத்தென்க. மெல்லம் புலம்பு - நெய்தனிலம். புலம்பு: ஆகுபெயர்.

இனி, "வதி குருகு உறங்கும்.. . புலம்பன் என்றது, அயல் நாட்டவரும் வந்து துய்த்துறங்கும் பெருமனையுடையான் என்றும், அமமனை கடல்தருஞ் செல்வதத்தால் வளம்பல உடைத்தென்றும் குறிதத்தான் ஆண்டுச்சென்று உறங்கப்பெறுமைக்கு வருந்துவாள்," என்னும் குறிப்பிற்று என்பாருமுளர்.

பாட்டு - கூ : தலைவி கூற்று

துணை :—வரைவிடை வைதத்துப் பிரிந்தவழி ஆற்றுளாய தலைமகள தோழியை நெருங்கிச் சொல்லியது ஆம்தாவது, தலைவன் தலைவியை மணஞ்செய்தற்குப் பொருளீட்டப் பிரிந தானை, அப்பிரிவாற்றுமையால வருந்திய தலைவி தனக்கு உசாத் துணையாகாது துயின்ற தோழியைப் பழிதத்துத் தன் வருத்த மிகுதிதோனறக் கூறியது.

இதன்கண், தலைவி தோழி கேட்குமபடி "இருளோ நள்ளென்னுமம ஓசையுடைத்தாயிருந்தது; இவ்விடையாமததே புறநகூறும் மடவோரும வாயவிந்து உறங்காநின்றனர்; இப் பேருலகம் முழுதுமே துயின்று கிடகினறது. யான ஒருதத மட்டுமே இவவுலகில் துயிலாது வருந்துகின்றேன்" என்று கூறு கின்றாள்.

கூ. நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே. —பதுமனார்.

(இ - ள்.) நள் என்றன்று யாமம் - இவ்விடையிரவு நள் என்னும் ஓசையுடைததாயிருக்கின்றது, சொல்லவிந்து இனிது அடங்கினர் மாக்கள் - புறங்கூறல் தவிர்ந்து இனிதாக உறங்கு வாராயினர் மாக்களும், முனிவின்று நனந்தலை உலகமும்

துஞ்சும் - என்னே வெறுப்பதில்லையாய் இவ்வகன்ற உலகமும் துயிலாநின்றது, ஓர் யான் மன்ற துஞ்சாதேன் - யான் ஒருத் தியேபோலும் ஒருதலையாகத் துயிலாதிருப்பேன்.

விளக்கம்:—யாமம் நள்ளென்றன்று, மாக்கள் அடங்கினர் என மாறுக. நள்: ஒலிக்குறிப்பு. இனி, நளி என்னும் உரிச்சொல்லாகக் கொண்டு, யாமம் செறிந்த இருளையுடையதாயிற்று எனினுமாம். அலர் தூற்றித் திரிதலையே தொழிலாகவுடைய மாக்கள் அத்தீத்தொழில் விட்டுத் துயிலுதல், அவர்க்கும் தனக்கும் இனிதே என்பாள், இனி தடங்கினர் மாக்கள் என்றாள். தன்னை அலர் கேட்டு வெறுக்கின்ற உலகமும் வெறுப்பொழிந்து துயில்கின்ற தென்பாள், முனிவின்று உலகமும் துஞ்சும் என்றாள். இன்றி என்னும் வினையெச்சத்திறுதி யகரம், செய்யுளாகலின் இன்று என உகரமாகத் திரிந்தது.

ஓர் யான் எனபதனை வினைதெதாகையாகக் கொண்டு, இவற் றையுமை, காமவருத்ததையும் உணராநின்ற யான் ஒருத்தியே எனக் கொள்வாருமுளர். தோழியை நோகி ஓர்யான் துஞ்சாதேன் என்றது எனக்கு உசாத்துணையாய் ஆற்றுவிகரும் கடமையுடைய நீயும் இனிதே துயின்றனை என இடித்துக் கூறியபடியாம்.

"மன்னுயி ரெல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை" (குறள் - கஉக அ.)

என்னும் அருமைத் திருக்குறளை இதனோடு ஒப்புக்காண்க.

பாட்டு - எ : கண்டோர் கூற்று

துறை:—செலவினை கண் இடைச்சுரத்தை கண்டோர் கூறி யது. அஃதாவது, தலைவி தன தமரின் நீங்கித் தலைவனோடு உடன் போகும்பொழுது அவர்கள் சென்ற பாலை நிலத்தின்கண் ஆற்றெதிர்ப்பட்டோர் இவளைக்கணடு இரங்கிக் கூறியது.

இதன்கண், தோற்ற முதலியவற்றால் இவர் உயர்குடி மக்களாகக் காணப்படுகின்றனர். இவள் சிலம்பு அணிந்திருக் கின்றாளாகலின், இவர்கள் மணம் செய்துகொண்டாராகக் கருத வும் இடமில்லை. மெல்லடியுடைய இந்நல்லாளும் இவ்வில் லோனும் யாவரோ அறிகிலேம்; இக்கொடிய பாலைநிலத்தே வழிச்செல்கின்றார்; அளியர்! என இரங்கி ஆற்றிடைக் கண் டோர் கூறுகின்றனர்.

எ. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றூலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே.

—பெரும்பதுமனார்.

(இ - ள்.) வில்லோன் காலன கழல் - கையின்கண் வில்லையுடைய அவ்வினைஞன் கால்களிடதனே கழல கட்டப்பட்டுள்ளன, தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பு - வளைய ணிந்த அமமசளின் மெல்லிய அடிகளின் மேலே கிடப்பனவும சிலப்புகள், நல்லோர் - தோற்றத்தானே உயர்குடிப் பிறந்த நன்மையுடையோராகக காணப்படுகின்ற இவர்கள், யார்கொல் - எவ்வூரினரோ? யாவர் மக்களோ? யாங்கள் அறிகின்றிலம், அளியர் - அளிக்கத்தக்கார், ஆரியர் கயிறு ஆடு பறையின் - ஆரியக் கூத்தர்கள் கயிற்றில் ஏறி ஆடுங் கால் முழங்கும் பறையின் ஓசைபோல, கால் பொரக்கலங்கி வெண் நெற்று ஒலிக்கும் வேய்பயில் அழுவம் முன்னியோர் - மேல்காற்று மோதுதலானே நிலைகலங்கி வாயையினது வெள்ளிய நெற்றுக்கள் ஒலித்தற்கு இடமாகிய மூங்கில்கள் அடர்ந்த பாலைநிலத்தின்கண்ணே செல்லக் கருதிச் செல்லா நிற்போர்.

விளக்கம் :—உடன்போக்கின்கண் தம்மைப் பிரிந்து சென்ற தலைமகளைத் தேடிவரும் செவிலி, ஆண்டெதிர்ப்பட்டாரை நீயிர் வரும வழியில நும்மெதிர் சென்றோர் யாரையேனும் கண்டனிரோ? என்று வினையவடருக் கண்டோம் என இவவிவவடையாளமுடைய இததகை யோர் செல்லாநின்றனர் என்கின்றனர். ஆகலின் வில், கழல், சிலம்பு, தொடி முதலிய அடையாளங்கள் எடுத்துக் கூறுகின்றனர் என்க.

வில்லோன் என்றதனால், தலைவன் கையில் விற்படையோடே தலைவியை விழிப்புடன் பாதுகாத்துச செல்லுதல் விளக்கப்பட்டது; தொடியோள் என்றதனாலும் உடன்போக்காலே அவள் உடல பூரிதது மகிழ்சசியோடே போகின்றமை தெரிதறதேர்ந்தப்பட்டது. என்னை, மகளிர் மனம் வருந்தியவழி உடல் மெலிந்து வளைகழலலும், உவந்த வழி உடல பொலிந்து அது செறிதலும் உண்மையான் என்க.

காலன - காலிடத்தன; மேல - மேலே கிடப்பன. கழல்கள் மறக்குடிப் பிறப்பும் வெற்றியும் குறித்துக் கட்டப்படுவன ஆகலான், அதனை அவன் உயர்குடிபிறந்த உரவோனுகலைக் குறிப்பாற பெறவைத்தனர் என்க. மெல்லடி என்றதும், தலைவியின் உயாகுடிப பிறப்பையும் அவள் ஒருபொழுதும் நடந்தறியாத தன் மெல்லிய அடிகளாலே அவன் பின்னர் அன்பின் வலிமையாலே நடக்கின்றவள் என்பதையும் குறிப்பாற் கூறியவாறு.

சிலம்புண்மை கூறியது, அவர்கள் காதலர் ஆகியவழியும், இன்னும் மணவினை நிகழ்த்தப்படாதவர் என்பது உணர்த்தற்பாருட்டென்க. நல்லோர் என்றது, அவவிருவர்தும் முகப்பொலிவும் தோற்றமும் கண்டு கூறியதாம். இத்தகைய உயர்குடிப்பிறப்பும் ஒழுக்கமுமுடைய நல்லோர் பாலைசசுரத்தின்கண ஸாதியுமின்றிக் காலாலே நடந்து சேறலாயிற்றே என்றிரங்குவார் அளியர் எனறார். தாம. ஏ. அசைகள.

ஆரியர் - ஈண்டுக் கயிறுடுதல் யினையாற் கூத்தர்க்காயிற்று. எனவே ஆரியக் கூத்தர் என்றவாறும். அவர் மூங்கிலே நட்டுக் கயிறு கட்டி அதன்மேல் ஏறியாடுவர் என்பதனை, "ஆடியற் பாணிக கொக்கும் ஆரிய அயிழ்தப் பாடற் கோடியர்," (கம்பர் - கார்கால - கூகூ.) எனப் பிறர் கூறுமாற்றாலும் உணர்க.

பாட்டு - அ : காதற் பரத்தை கூற்று

துறை :—கிழத்தி, தன்னை ப புறனுரைத்தாள எனக்கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச சொல்லியது. அஃதாவது, தலைவி தன்னை இகழ்ந்து கூறினள் எனப் பிறர் சொல்லக்கேட்ட பரத்தை, தலைவிக்குப் பாங்காயினர் கேட்கும்படி தலைவனை இகழ்ந்து கூறியது.

இதன்கண், தலைவன் எனக்கு வயப்பட்டான் போன்றிருந்துவிட்டுத தலைவியின்பாற் சென்று அவட்கஞ்சி, அவள மனமபோன்று இயைந்து ஒழுகுகின்றான் ஆகலின், அவள் செருக்குற்று என்னை இகழ்வாளாயினள் எனப் பரத்தை கூறுகின்றாள.

அ. கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே.

—ஆலங்குடி வங்கனார்.

(இ - ள்.) கழனி மாத்து விளைந்துகு தீம்பழம் - வயல் வரம்பிலுள்ள மாமரத்து விளைந்து தானே உதிர்ந்த இனிய பழத்தை, பழன வாளை கதூஉம் ஊரன் - பக்கத்திலுள்ள பொய்கையின்கண் வாழும் வாளைமீன் கவ்வாநின்ற ஊரையுடைய தலைவன், எம் இல் பெருமொழி கூறி - எம் மனையிடத்தே இருந்து எம்மைப பெருமைப்படுத்தும மொழிகளைக் கூறிவிட்டுச் சென்று, தம் இல் - தம்முடைய வீட்டில், கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவைபோல-முன்னின்றார் கையையும் காலையும் தூக்குமபொழுது தாமும் கைகால்களைத் தூக்கும் இயல்புடைய கண்ணாடியிற றோன்றும் பாவையைப் போன்று, தன் புதல்வன் தாய்க்கு மேவன செய்யும் - தன் மகனுடைய தாயாகியவளுக்கு அவள் விரும்பியவற்றை அறிந்து அவற்றிற் கியைய ஒழுகாநிற்பன்.

விளக்கம் :—கழனி - வயல். மா - மாமரம். அத்து - சாரியை. தீம் பழம் - இனிய பழம். கழனி மாத்து விளைந்துகு தீம்பழம் பழன வாளை கதூஉம் ஊரன் என்றது, தலைவிக்கே உரியவனெனிய தலைமகனை எம்மனோர் வாய்ப்பு நேர்ந்துழி நுகர்வர் என வெறுத்தோதியவாறும். கதூஉதல் - கவ்வுதல். தீம்பழம் பழனவாளை கதூஉம் ஊரன் என்றதனால் மருதநிலத்தலைவன் என்பது போந்தமை உணர்க.

அவனுக்குப் பரத்தையரும் பலர் என்பது கருதி எம்மில் எனப் பன்மை கூறினள்.

பெரு மொழி - பெருமைப்படுத்தும் மொழி. இனி "சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை" (புறம் - ஏ) என்புழிச் சிறுசொல்-இகழ்ச்சிச் சொல் என்று பொருள்பயந்தாங்கு பெருமொழி புகழ்ச்சி மொழி எனினுமாம். தலைவிக்கும் அவனுக்கும் பொதுவாகலான் தம் இல் எனப் பன்மை கூறினள். தலைவன் ஆண்மையினிழிந்து மனையாளைத் தாழ்ந்து ஒழுகுகின்றானெதலின் அவன் மனைவிக் கென்னது புதல்வன் தாய்க்கென்றாள். எனவே, மனைவியர்க்குரிய அடக்கம் இலள் என்று தலைவியையும், அவட்குத் தாழ்ந்தொழுகுவானாகலின் ஆண்மையிலன் என்று தலைவனையும் ஒருசேர இகழ்ந்தாளாதலறிக.

ஆடி - கண்ணாடி. பாவை - அதன்கட்டோன்றும் நிழலுரு.

கண்ணாடியிற்பாவை முன்னின்றார் செய்தன செய்தலன்றித் தானொன்று கருதிச செய்தலின்றாதல் போலத் தலைவனும் தலைவி செய்விப்பன செய்வதன்றித் தனக்கெனச செயலிலன என்றிகழ்ந்தவாறு.

மேவன - விரும்புவன. இங்ஙனம் தலைவன் அவட்கடகஙகிக் கிடக்கின்றமையால் அவள் எம்மனோரை அடக்கமின்றி இகழ்பவளாயினள் என்பது கருத்து. யாம் இகழக்கடவேம் அல்லம் என்றபடி.

பாட்டு - கூ : தோழி கூற்று

துறை :— தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது; அஃதாவது, தலைவன் தனது பரத்தைமையால் ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்க்கக் கருதிய தோழியின்பாற் குறையிரப்ப தோழி, தலைவி ஊடல தீர்வாள என்ற குறிப்பைத் தலைவனுக்குக் கூறியது.

இதன்கண், தலைவி உடல் மெலிவுற்றாளேனும் தின் கொடுமையை நாணி என்னை மறைத்தொழுகுகின்றாளாகலின் அவள் காய்மைத்தன்மை யுடையவளாயினள்; நீ அவளை அடைதல் எளிதெனத தோழி கூறுகின்றாள்.

கூ. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமுழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணிக் கரப்பா டெம்மே.

—கயமனார்.

(இ - ள்.) மாஅயோள் - மாமை நிறமுடைய தலைவி, மடைமாண் செப்பில் தமிய வைகிய பெய்யாப் பூவின் - மூட்டு வாயால் மாட்சிமைபபட்ட செப்பினுள் வைச்சப்பட்டுத் தனித் தனவாக இருந்த சூடப்படாத பூக்களைப்போன்று, மெய் சாயினள் - உடல் மெலிந்தாள், பாசடை நிவந்த கணைக் காலநெய்தல்-பசிய இலைகளுக்கு மேலே உயர்ந்து நின்ற திரண்ட தாளையுடைய நெய்தற் பூக்களை, இன மீன் இருங்கழி ஓதம மல்குதொறும் - கூட்டமாகிய மீன்களையுடைய கரிய கடற் கழியின்கண் வெள்ளம் பெருகுந்தோறும், கயம் மூழ்கும் மகளிர் கண்ணின் மாணுமை - குளத்தில் மூழுகாநின்ற மகளிரினது கண்களை ஒதத்தருகுக் காரணமான, தண்ணந் துறைவன் கொடுமை - குளிர்ந்த துறையினையுடைய தலைவனது கொடு மையை, நம்முன் நாணிக் கரப்பாடும - நம்முன்னே சொல்லுதற் கும நாணமுறாது மறைத்துப் பேசா நின்றாள் ஆதலின், யாய் ஆகியள - தாயாந் தன்மையை உடையள் ஆயினள.

விளக்கம் :—முன்னிலைப் புறமொழியாகக் கூறுகின்றாளாகலின் நின்கொடுமை என்னுது துறைவன் கொடுமை என்றாள். சினத்தற்குக் காரணம் நின்னிடத்து உளதாய வழியும் நின் சிறுமைகருதக் தானே காணுகின்றாளாகலின் அசிறுமையை எனக்கு மறைத்தாற்போன்றே உனகும் மறைப்பாள் ஆதலின் அவோ எய்துதற்கு வழியுளது என்றவாறு.

எத்தகைய குற்றத்தையும் மனங்கொள்ளாது போற்றுந்தன்மை தாய்மைகே உரியதாகலின் தலைவி தன்னிலையினும் உயாந்த தாய்ப் பண்பினை எய்தியிருக்கின்றாள் எனத் தலைவியின் பெருந்தன்மையை எடுத்துக காட்டினள் என்க. எனவே அவள் பெருந்தன்மையே உனக்கு வாயிலாகும் என்று உபாயம உணர்த்தியவாறும்.

> “பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
> குறைபதி என்னும் உலகு” (குறள்-கபகஅ)

என்றோதுபவாகலான் தலைவன் பழிக்குத் தலைவி நாணிக் கரப்பாடி னள் எனத் தலைவியின் தகவுடைமையை எடுத்துக்காட்டினள் என்க.

மாயோள் - இயல்பாகவே மாமை நிறமுடைய தலைவி. மடை - மூட்டுவாய். மாண் - மாட்சிமையுடைய எனவே உள்ளே காற்றும் ஒளியும புகாதபடி மூட்டுவாயாற் சிறந்த செப்பு என மலரின் நலங் கெடற்கு எதுக்காட்டியவாறு காண்க.

தமிய - தனித்தனவாக. என்றது, பிறந்த கொடியினும் இராது, தாம் அடருறுதலவேண்டிய சூழலினும் இராது தனிப்பட்டிருந்த என்றவாறு. பெய்யாப்பூ - சூழலிலே பெயயப்படாத பூ. எனவே நினைஞல் உகரப்படாத தலைவி என்றவாறு. மெய் சாயினள் - உடல் மெலந்தாள். இஃதனம் உடல் மெலிந்தமையாலேதான் யான் நீ செய்த கொடுமையை அறிந்தேன்; அவள் அதனை எனக்கும் மறைத்தாள் என்றபடி. பாசடை - பசிய இலை. பாசடை நிவந்த நெய்தல் என்றது,

குடிப்பிறப்பின் அடங்காது மிக்க பரத்தையர், கண்கள் என்றற்கு உள்ளுறையாகக் கொள்க. இனமீன் - கூட்டமான மீன். மகளிர் கண்ணுக்கு ஒவ்வா நெய்தல் ஒவ்வுவனபோற் றோன்றும் என்றது, சிறப்பில்லாத பரத்தையர் தலைவனுக்குச் சிறந்த தலைவிபோற் றோன்றினர் என்னும் உள்ளுறை தோன்ற நின்றது.

கயம் - குளம். தண்ணந்துறைவன் - குளிர்ந்த துறையை உடைய தலைவன்; விரித்தல் விகாரம். இனிக் குளிர்ந்த அழகிய துறைவனுமாம். கொடுமை - தலைவியைப் பிரிந்தமையும், பரத்தையைத் தலைவியோடொப்பக் கருதினமையும் என்க.

தலைவனையும் உளப்படுத்தி நம்மூன் நாணிக் கரப்பாடும் எனப் பன்மை கூறினாள். கரப்பாடுதல் - தலைவன் கொடுமை தோன்றுதபடி பேசுதல்.

பாட்டு - கo : தோழி கூற்று

துறை :— தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. அஃதாவது : கூ-ம் செய்யுட்குரைத்தாங் குரைத்துக்கொள்க.

இதன்கண், தலைவி தலைவன் செய்த கொடுமையை மறைத்து அவன் நாணும்படி வாராநின்றாள் எனத் தோழி கூறுகின்றாள்.

கo. யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலின் நாணிய வருமே.

—ஓரம்போகியார்.

(இ - ள்.) யாய் ஆகியள் - தாய்மைத் தன்மையுடையளாய தலைவியானவள், விழவு முதலாட்டி - தலைவன் விழவிற்கு முதன்மையை ஆளும் தன்மையுடையளாயினள்; எற்றாலெனின், பயறுபோல் இணர பைந்தாது படீஇயர் - பயற்றங் கொத்துக்கள் போன்ற பூங்கொத்துக்களின் உள்ள பசிய பூந்தாதுக்கள் தம்மேற் படியும்பொருட்டு, உழவர் வாங்கிய கமழ் பூ மென்சினைக் காஞ்சி யூரன் கொடுமை - உழவர்கள் வளைத்த நறுமணங் கமழ்கின்ற பூக்களையுடைய மெல்லிய கிளைகளையுடைய காஞ்சி மரத்தையுடைய ஊரனது கொடுமையை, கரந்தனள் ஆகலின் - பிறர் அறியாதபடி தன்னுள்ளே மறைத்தாளாகலின், நாணிய வரும் - அக்கொடுமை செய்தோன் தானே நாணும்படி அவனை எதிர்கொள்ள வாராநின்றாள்.

விளக்கம் :— யாய் ஆகியள் என்றதற்கு கூ-ம் செய்யுட்குக் கூறிய விளக்கங் காண்க. தலைவன் கொடுமையை மனங்கொள்ளாது அவனை வரவேற்கவும் வருகின்றாளாகலின் தாய்மைத் தன்மையை எய்தினாள்

என வித்தந்தோதினள். அத்தன்மையை அவள் எய்தாள் எனில் ஊடல் தீர்தல் அரிதென்பதுபட நின்றது.

விழவு ஈண்டு இன்பம் என்னும் பொருட்டாய் நின்றது. எனவே தலைவன் இல்லறத்தே எய்தும் சிறப்பிற்கெல்லாம் முதலாந்தன்மை யுடையவள் எனத் தலைவியின் சிறப்போதுமாற்றால் இன்பத்திற்கேது வாகாத பரத்தையரை விரும்பியொழுகும தலைவன் பேதைமையைக் குறிப்பாற் சுட்டிக்காட்டினள் என்க.

உழவர் காஞ்சிப்பூவின் தாது தம்மேற் படிதலை விரும்பி வளைத் தமையால் அச்செயலை அவர்மேற் படிந்த பூந்தாது உணர்த்தினும் போன்று, தலைவன் பரத்தையோ டாடினமையை அவன் மேனியிற் பட்ட சந்தனம் முதலியவை உணர்த்தும் என்பது குறிப்பு. இங்ஙனம் உணர்த்தும் எனபதை—"எரியிதழ் சேர்ந்தக எதிலார்ப் புணர்ந்தமை, கரிகூறும் கண்ணினை,'' எனவும், "பிறர் கூந்தல் மலர்நாறும் மார்பினை,'' எனவும், "எதிலார் தொடியுற்ற வடுக்காட்டி,'' எனவும் வரும் கலியானும் (எஅ) அறிக. காஞ்சி - மருதக்கருப்பொருள். நாணிய - நாணமுறும்படி.

"இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (குறள் - நகச.)

என்னும் திருக்குறட் கருத்து ஈண்டு நினைவுகூரற்பாலது.

பாட்டு - கக : தலைவி கூற்று

துறை :—தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்வாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது. அஃதாவது, தலைவனுடைய பிரிவாற்றுமையால் உடல் மெலிந்து வருந்திய தலைவி தன் நெஞ் சிற்குக் கூறுவாள்போல அவ்வருத்த மிகுதியைத் தோழிக்குப் புலப்படுத்தியது.

இதன்கண், தலைவி தன் நெஞ்சை விளித்து, "நெஞ்சே நாம் அவரைப் பிரிந்தமையால் உடல் மெலிந்து கண்கலுழ்ந்து அழுதலினின்றும் தப்புவோம். யான் வேற்று நாட்டில் அவர் இருப்பினும் அங்குச் செல்லத் துணிந்தேன். ஆதலால் நீயும் உடன்வருவாயாக'' எனக் கூறுகின்றாள்.

கக. கோடூர் இலங்குவளை ஞெகிழ நாடோறும்
பாடில கலிழும் கண்ணெடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உயகுவம் ஆங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே முனைஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னுட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.

—மாமூலனார்.

(இ - ள்.) கோடு ஈர் இலங்கு வளை ஞெகிழ - சங்கினை அரிந்தியற்றிய விளங்குகின்ற வளையல் கையினின்றும் கழலாகிற்ப, நாள்தோறும் - வரைவிடை வைக்கும் ஒவ்வொரு நாளும், பாடுஇல கலிழும் கண்ணொடு - துயிலுதல் இல்லாதனவாய்க் கலங்கி அழுகின்ற கண்களுடனே, புலம்பி - தனித்திருந்து வருந்தி, ஈங்கு இவண் உறைதலும் உய்குவம் - இவ்விடத்தே இவ்வாறு தங்குதலையும் தப்புவேம், என் நெஞ்சே இனி முனைது ஆங்கே எழு வாழி - என்னுடைய நெஞ்சமே இப்பொழுதே முற்பட நீயும் அவ்விடத்திற்கு எழுக நீ வாழ்வாயாக, குல்லைக் கண்ணி வடுகர் முனையது - கஞ்சங் குல்லையைத் தலையிற் சூடும் கண்ணியாகவுடைய வடுகருடைய பகைப்புலத்ததாகிய, பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர் - பலவாகிய வேற்படையையுடைய கட்டி என்பானுடைய நல்ல நாட்டிற்கு அப்பால், மொழி பெயர் தேஎத்தர் ஆயினும் - நந்தலைவர் நம் மொழி மாறின நாட்டில் இருப்பாராயினும், வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டு - அவரைக் காணும்பொருட்டு ஆறு செல்லுதலை யான் ஆராய்ந்து துணிந்துள்ளேன் அவருடைய நாட்டிடத்தே.

விளக்கம் :—கோடு - சங்கு. ஈர்தல் - அரிதல். வளை - வளையல், சங்கை அரிந்து வளையல் செய்தணிதலை "கடற்கோ டறுத்த அரம் போழ் எல்வளை," (ஐங் - ககூ) எனப் பிறர் கூறுமாற்றானும் உணர்க. பிரிவாற்றுமையால் உடல் மெலிந்தமையின் வளை ஞெகிழ்ந்ததென்றவாறு. பிரிவாற்றுமையால் உடல் மெலிந்துழி வளை ஞெகிழ்தலுண்மையை,

"துறைவன் துறந்தமை தூற்றுகொன் முன்கை
இறையிறவா நின்ற வளை" (குறள் - ககநிஎ.)

என வரும் திருக்குறளானும் உணர்க.

ஞெகிழ்தல் - கழலுதல். நாடொறும், வரைவிடைவைத்த ஒவ்வொரு நாளும் என்க. பாடு - துயில். கலிழ்தல் - கலங்கியழுதல்; கண்ணீர் ஒழுகுதலுமாம். புலம்பி - தனித்து, "புலம்பே தனிமை" என்பது தொல்காப்பியம் (உரி - நஉ.) ஈங்கு இவண் என்றது, இவ்வாறு துயருறுதற்கு இடனுகிய இவ்விடத்தே என வெறுத்தோதிய வாறு. யான் ஆராய்ந்து துணிந்தபடி வழிபடின் இத்துன்பமும் ஒழியும் என்பாள் புலம்பி உறைதலும் உய்குவம் என்றாள். உய்தல் - தப்புதல். அஃதாவது துன்பத்தினின்றும் விடுபடல். நெஞ்சே முனைது ஆங்கே எழுவாழி என மாறுக. முனைது - முற்பட. குல்லை - கஞ்சங்குல்லை. கண்ணி - தலையிற் சூடும் மாலை. வடுகர் - வேங்கட மலைக்கு வடபாலுள்ள ஒரு சாதியினர். முனை - பகைப்புலம். மொழி பெயர் தேஎம் - தமிழல்லாத வேறு மொழி வழங்கும் நாடு. மொழி பெயர் தேஎத்தினராயினும் என்றதன்கண் உம்மை மொழிபெயர் தேஎத்தராகாமை குறித்து நின்றது. எனவே யாண்டுளர் ஆயினும் ஆக யான் வழிபடல் சூழ்ந்திசின் என்றவாறு.

கட்டி, சேரனுடைய படைத்தலைவருள் ஒருவன் என்றும் கங்க நாட்டுத் தலைவன் என்றும் கூறுப. இவனைப் பாடியவர், மாமூலனாரும், பரணரும், குடவாயிற் கீரத்தனாருமாவர் (அகம்: உஉசு - சசச.) வழி படல் - ஆறு செல்லுதல். வழிபாடு செய்தல் எனினுமாம்.

பாட்டு - கஉ : தலைவி கூற்று

துறை :—ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிவினை ஆற்றாது பெரிதும் வருந்தாநின்ற தலைவி இறந்துபடுவாளோ எனக் கவலையுற்ற தோழிக்குத் தலைவி, யான் வருந்துவது பிரிவிற்கன்று வேறொன் றினுக்கு என்று கூறியது.

இதன்கண், தலைவி தனது ஆற்றாமை கண்டு வருந்திய தோழியை நோக்கி, யான் ஆற்றேனாவது அவர் பிரிந்தார் என்ப தற்கன்று. அவர் சென்ற வழியின் கொடுமையை எண்ணியே வருந்துகின்றேன். அஃதறியாது இவ்வூர் அயன்மை கூறி என்னை இடித்துரையாநின்றது என்று கூறுகின்றாள்.

கஉ. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவவர் சென்ற ஆறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

—ஒதலாந்தையார்.

(இ - ள்.) அவர் சென்ற ஆறு - தலைவர் சென்ற வழி, எறும்பி அளையில் குறும்பல் சுனைய - எறும்பின் வளைகளைப் போன்ற குறிய பலவாகிய சுனைகளையுடையனவும், உலக்கல் அன்ன - கொல்லனது உலையின்கண் உள்ள பட்டடைக் கல்லை ஒத்த வெம்மையுடையனவுமாகிய, பாறை ஏறி - பாறையின் மேல் ஏறி, கொடுவில் எயினர் - கொடிய வில்லையுடைய வேடர், பகழி மாய்க்கும் கவலைத்து என்ப - அம்புகளைத் தேய்த்துக் கூர்மை செய்தற்குக் காரணமான கவர்த்த வழிகளை உடைத்து என்று கூறுவர், அது அவலங்கொள்ளாது - அதுபற்றி வருத்தங் கொள்ளாமல், இவ் அழுங்கல் ஊர் - ஆரவாரத்தையுடைய இந்த ஊர், நொதுமல் கழறும் - அயற்றன்மையுடைய சொற்களைக் கூறி இடித்துரையா நிற்கும்.

விளக்கம் :—எறும்பி - எறும்பு. எறும்பை எறும்பி என்னும் வழக் குண்மை திருவெறும்பியூர் என்பதனானும் அறிக. அளை - வளை.

குறியனவாயும் பலவுமாயும் இருத்தற்கு எறும்புவமை உவமை என்க. உலக்கல் - கொல்லன் உலையிற் பட்டடைக்கல். இது வெப்பமுடைமைக்கு உவமை என்க. பாறை-கற்பாறை. பாறையில் ஏறுதல் சேய்மைக் கண் ஆறுசெல் வம்பலரை அறிதற் பொருட்டாம். கொடுவில்-கொடிய கொலைத்தொழில் செய்தற்குக் கருவியாகிய வில் என்க. வளைந்த வில் எனினுமாம். எயினர் - எயினச் சாதியார்; பாலைநில மாக்கள். எனவே, இது குறிஞ்சி திரிந்த பாலை ஆதலறிக. பகழி - அம்பு. மாய்த்தல் - தேய்த்துக் கூராக்குதல். கவலை - கவர்த்த வழி. ஆறு - வழி. குறும்பல் சுனைய என்றது நீர் வறந்த சிறு சுனைகள் என்னும் குறிப்பிற்றாய் உண்ணுநீர் பெருமையும், உலக்கல் அன்ன பாறை என்றது வழியின் வெப்ப மிகுதியும், எயினர் பகழி மாய்க்கும் என்றது இடுக்கண் உடைமையும் காட்டித் தலைவர் சென்ற வழியின் கொடுமையை விளக்கின. அது என்றது, அத்தகைய கொடுமைக்கு என்ற படியாம். அவலங் கொள்ளற்குரியது அதுவே ஆகவும் அதற்கு வருந்தாமல் என்பான் அதுமற் றவலங்கொள்ளாது என்றாள். தொதுமல் - அயன்மை. கழறுதல் - இடித்துரைத்தல். அழுங்கல் - ஆரவாரம். இவ்வூர் என்றது தோழியை. அவளே அயன்மை கூறி இடித்துரைப் பாளாகலின் என்க. "எதிலர் என்னும் இவ்வூர்" எனவரும் திருக்குறட் பகுதிக்கு (ககஉக.) "தன் கருத்தறியாமை பற்றிப் புலந்து சொல்கின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து 'இவ்வூ'ரென்றாள்," எனப் பரிமேலழகர் கூறினமையானும் இக்கருத்தினை உணர்க.

பாட்டு - கஙு : தலைவி கூற்று

துறை :—தலைவன் தோழியிற் கூட்டங்கூடி ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி தோழிக் குரைத்தது. அஃதாவது, பாங்கியிற் கூட்டத்தின் பின்னர்த் தலைவன் பிரிந்தானுக, அப்பிரிவாற்றாது வேறுபட்ட தலைவியைக்கண்டு கவன்ற தோழிக்குத் தலைவி தன் ஆற்றுமைக்குக் காரணங் கூறியது.

இதன்கண், தலைவி, தலைவர் என்னைப் பிரிந்து பெரிய நோயைச் செய்தனர்; அதனால் என் கண்கள் பசலை பாய்ந்தன; யான் வருந்தாகின்றேன் எனத் தோழிக்குக் கூறுகின்றாள்.

கஙு. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகற்
பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
நோய்தந் தனனே தோழி
பயலை ஆர்ந்தன குவளையங் கண்ணே.

—கபிலர்.

(இ - ள்.) தோழி - தோழியே! மாசு அறக் கழுவிய யானை போல - அழுக்கறக் குளியாட்டப்பட்ட யானையைப்போன்று,

பெரும் பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல் - பெரிய மழையினை ஏற்றுத் தூய்மையான பெரிய சருச்சரையை உடைய சிறிய கல்லினுடைய, பைதல் ஒருதலை சேக்கும் நாடன் - குளிர்ச்சியையுடைய ஒரு பக்கத்தே என்னுடன் தங்கிய தலைவர், நோய் தந்தனனே - என்னைப் பிரிந்து வருத்தத்தைத் தந்தார் அதனால், பயலை ஊர்ந்தன குவளை அம் கண்-குவளைமலர் போன்ற அழகிய என் கண்கள் அத் தன்மைகெட்டுப் பசலை நிறம் கொண்டன.

விளக்கம்:—மாசு - அழுக்கு. அது யானை தன் உடம்பிற் புழுதியை வாரி வீசிக்கொள்ளல் முதலியவற்றால் உண்டாய தென்க. கழீஇய - குளியாட்டப்பட்ட. பாகனற் கழுவப்பட்ட என்றவாறு. பெரும் பெயல் - பெரிய மழை. உழத்தல் அம்மழையினின்று ஏற்றுக்கோடல். இரும்பிணர் - கரிய சருச்சரை எனினுமாம். துறுகல் - சிறிய கற் பாறை. இது தோழியிற் கூட்டம் நிகழ்ந்த இடத்தின்கண்ணது என்க. பைதல் - குளிர்ச்சி; பசுமையுமாம். ஒருதலை - ஒருபக்கம். சேக்கும் - தங்கும். என்றது, மனைப்படப்பையின் மருங்குள்ள தூய துறுகல்லின் ஒருபக்கத்தே குளிர்ந்த இடத்தே என்னோடு தங்கிய தலைவன் என்றவாறு. நோய் தருதல் - தான் பிரிந்து அதனால் வருத் தத்தை உண்டாக்குதல். தோழி: விளி. பயலை - பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. இதனை,

> "விளக்கற்றம் பார்க்கும் இருளேபோற் கொண்கன்
> முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (குறள் - கஅக)

என வரும் திருக்குறளானும் உணர்க.

நோய் தந்தனனே என்ற பாடத்தை ஒய்தந்தனன் எனக்கொண்டு- ஒய்தந்தனன் என்னின்று ஒழியத்தலைப்பட்டான் என்பாருமுளர்.

பாட்டு - கச : செவிலி கூற்று

துறை:—"மடன்மா கூறும் இடனுமா ருண்டே" என்பத னால் (தொல் - களவி - கக) தோழி குறைமறுத்துழித் தலைமகன் மடலேறுவன் என்பதுபடச் சொல்லியது; அஃதாவது, தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைவன் இனி யான் மடன் மா வூர்ந்து என்னைத் துன்புறுத்தியவள் இன்னுளென்பதை ஊரறியச்செய்து பல்லோரும் பழிதூற்றச் செய்வேன் என அத் தோழி கேட்பக் கூறியது.

இதன்கண், தலைவன், யான் இன்மொழியரிவையை மடன் மா வேறிப் பெறுவேன். யான் அங்ஙனம் பெற்றபொழுது இவ்வூரிலுள்ளோர் அறிவாராக. ஆனால் அங்ஙனம் மடன்மே லேறி இவளைப் பெறுதற்கு என்னை மடன்மா மேலே கண்ட பலரும் இவனேபோலும் இந்நல்லோளுடைய கணவன் என்று

கூறுகிற்பர் என்பதற்கே சிறிது நாணுகின்றேன் எனத் தோழி கேட்பக் கூறுகின்றாள்.

கசு. அமிழ்துபொதி செந்நா அஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே பெற்றாங்
கறிகதில் அம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவன் இவனெனப்
பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே.

—தொல்கபிலர்.

(இ - ள்.) அமிழ்து பொதி செந்நா அஞ்ச வந்த - அமிழ்தத்தின் தன்மையைத் தன்னிடத்தே கொண்ட செவ்விய நாவானது அஞ்சும்படியாக முளைத்தெழுந்த, வார்ந்து இலங்கு வை எயிற்று - ஒழுங்குபட்டு விளங்காநின்ற கூர்த்த பற்களையும், சில்மொழி அரிவையை - சிலவாகிய மொழிகளையும் உடைய தலைவியை, யான் பெறுகதில் அம்ம - யான் மடன் மாவேறிப் பெறுவேனாக, பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூர் - அவ்வாறு பெற்ற பின்னர், இவ்வூரில் உள்ளோர் அறிந்து கொள்வாராக, மறுகில் நல்லோள் கணவன் இவன் என—தெருவின்கண் இந் நல்லாளுடைய கணவன் இவன்போலும் என்று, பல்லோர் கூற - பலரும் கூறுகிற்கும் அச்சிறு பொழுதைக்கே, யாம் நாணுகம் சிறிது - யாங்கள் நாணுகிற்பேம் சிறிது.

விளக்கம்:—அமிழ்தம் போன்று சுவைக்கும் இனிய மொழியைப் பேசும் செவ்விய நாவென்பான், அமிழ்து பொதி செந்நா என்றான். இனி, அமிழ்து பொதி செந்நா அமிழ்து பொதி எயிறு என மீண்டும் எயிற்றோடும் கூட்டி அமிழ்தம்போன்ற ஊறலையுடைய எயிறு என்றும் கூறிக்கொள்க. என்னை? "அமிழ்தத் தன்ன அந்தீங் கிளவி" என்றும், (குறுந் - உஉசு.) "முள்ளுறழ் முளை எயிற்று அமிழ்தூறுந் தீநீரை" என்றும் (கலி - ச.) பிறசான்றோரும் இரண்டிற்கும் அமிழ்தத்தன்மை காட்டுவர் ஆகலின் என்க. நா அஞ்சுதற்குக் காரணம் கடியவாகிய பற்கள் தன்னருகே வளர்வதனால் என்க. மெல்லிய நா கடிய பற்களுக்கு அஞ்சுதல் என்றது மெலியோர் கொடியோர்க் கஞ்சும் இயல்புண்மையின் என்க.

வார்தல் - ஒழுங்குபடுதல். வை - கூர்மை. "வையே கூர்மை" என்பது தொல்காப்பியம், (உரி-அசு.) மகளிர்கள் பாரித்துப் பேசாமல் சில மொழிகளே பேசுதல் அழகென்பர். ஆதலின் சின்மொழியரிவை என்றான். அரிவை பருவங் குறியாது தலைவி என்னும் பொருட்டாய் நின்றது. தில், அம்ம, ஈரிடத்தும் அசைகள். நீ குறை மறுத்தாலும் யான் மடன்மாவேறி அவளைப் பெறுவது திண்ணம் என்பான் பெறுக யானே என்றான்.

இவ்வாறு மடன்மாவேறிப் பெறுவதில் உள்ள இடையூறும் ஒன்றுளது. அஃதாவது, இங்ஙிகழ்ச்சியை அறியாத ஊர் முழுதும் அறிந்தபோது இவள் கணவன்போலும் இவன் எனப் பல்லோரும் கூறுங்கால் யானும் அவளும் சிறிதுபோழ்து நாணும்படிவரும் அத் துணையே என்பான், பல்லோர் கூற நாணுகம் சிறிதே என்றான். சிறிதே என்றது காலச்சிறுமையைக் குறித்தது.

நல்லோள் என்றது மடன் மாவூருங்கால் தலைவன் தன் கையிற் கொண்டுள்ள தலைவியின் உருவத்தை என்க. நல்லோள் என்றது இங்ஙனம் மடன் மா வூரவிட்டாள் நல்லோள் அல்லள் என்றபடி.

பாட்டு - கரு : செவிலி கூற்று

துறை :—உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள் ; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத் தொடு நின்றது. அஃதாவது, தலைவனோடு தலைவி தமரிற் பிரிந்து சென்றபின்னர்த் தோழி அச்செய்தியைத் தன் தாயாகிய செவிலிக்கு அறிவுறுத்தச் செவிலி அச் செய்தியை நற்றாய்க்கு நின் மகள் கற்புக்கடம் பூண்டாள் என்று கூறியது.

இதன்கண், செவிலி நற்றாயை நோக்கி நின் மகள் வெள் வேல் விடலையொடுகொண்ட காதற்கேண்மை அவர் தம்மூள் பலரறிமணம் செய்துகொண்டமையால் நாலூர்க் கோசர் நன் மொழிபோல உண்மையாயிற்று என்று அறிவுறுத்துகின்றாள்.

கரு. பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தோன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவாள் முன்கை மடந்தையொடு நட்பே.

—ஔவையார்.

(இ - ள்.) தோழி - தோழியே, ஆய்கழல் சேயிலை வெள் வேல் விடலையொடு - அழகிய வீரக் கழலையும் சிவந்த இலையையும் உடைய வெள்ளிய வேலினை ஏந்திய தலைவனோடே, தொகுவாள் முன்கை மடந்தை நட்பு - பலவாகத் தொக்க வளையணிந்த முன் கையினையுடைய நின் மகள் கொண்ட கேண்மை, பறைபட - மணப்பறைகள் ஆரவாரிப்பவும், பணிலம் ஆர்ப்ப - சங்குகள் முழங்காநிற்பவும், இறை கொள்பு - தலைவன் தன் மனையிடத்தே இறை கொள்ளுதலானே, தொல் மூதாலத்து - பழைதாகிய ஆலமரத்தின்கீழ், பொதியில் தோன்றிய - மன்றத்திடத்தே கூடித் தோன்றிய, நாலூர்க் கோசர் நன்மொழி போல - நான்கு

ஊரிலுள்ள கோசர்களுடைய நன்மையுடைய மொழியைப் போன்று, வாய் ஆகின்று - உண்மையாகியது ;

விளக்கம் :—பறை - மணப்பறை. "பல்லார் அறியப் பறை யறைந்து நாட்கேட்டுக் கல்யாணம் செய்து" (நாலடி - அசு) என்றார் பிறரும். பணிலம் - சங்கு. இறை கொள்பு - தங்குதல் கொண்டு ; என்றது தலைவியோடே மணத்தவிசிலிருந்து மணவினை செய்து என்ற வாறு. கொள்பு - செய்பெனெச்சம் கொள்ளலான் என ஏதுப்பொருள் குறித்துநின்றது. இறை கொள்பு என்பதனைக் கோசர்க் கேற்றுவாரு மூளர். தொன் மூதாலம் - பழைதாய் முதிர்ந்த ஆலமரம். பொதியில்-பொதுவிடம், மன்றம். பழைய ஆலின்கீழ்க் கூடிய கோசர் என்க. நாலூர் - ஒரூருமாம். கோசர் என்போர் மோகூர்ப்பழையனுடைய அவைக்களத்துள்ள மறவர் என்ப. இவர் சொன்னசொற் பிழையாது ஒழுகுவோராகலின் அவருடைய நன்மொழியை உவமையாகக் காட்டினாள். கோசர் வாய்மொழியுடையோர் என்பதனை "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை வளங்கெழு கோசர்" எனப் பிறர் கூறுமாற்றானும் உணர்க (அகம் - உ0கு). நன்மொழி நன்மை விளக்கும் மொழி. வாய் - வாய்மை. ஆய்கழல் - ஆராய்ந்து கட்டிய கழலு மாம். தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவனுடைய வீரம் கூறுவாள் வெள்வேல் விடலை என்றாள்.

சேயிலை என்பதனைச் செயலை எனத்திருத்தி அசோகு சூடப்பட்ட வெள்வேல் என்பாருமுளர். மேலும் தொகுவளை என்பதனைத் தொடி வளை எனத் திருத்திச் "செறிக்கும் வளை" என்றும் கூறுவர்.

பாட்டு - ககூ : தோழி கூற்று

துறை :—பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றுமை கண்டு தோழி கூறியது ; அஃதாவது, பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்த தலைமகன் மீண்டு வாராமை கண்டு வருந்திய தலைவியை அவர் இன்னே வருவரெனக் கூறித் தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தலைவியை நோக்கித் தோழி அன்னாய் நின் னேத் தலைவர் மறந்தமைவாரல்லர். அவர் சென்ற பாலைநிலத்தே ஆண்பல்லி தன் காதற்றுணையாகிய பெண்பல்லியை அழைத் தலைக் கேட்பர். அங்ஙனம் கேட்டபொழுது உன்னை நினைந்து விரைந்து மீண்டுவருவர், என்று கூறுகின்றாள்.

ககூ. உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ-ள்.) தோழி—, கள்வர்தம் பொன் புனை பகழி செப்பம் கொண்மார் - ஆறலைகள்வர் தம்முடைய இரும்பைத் தலையிற் புனைந்த அம்பினைச் செம்மை செய்தற் பொருட்டு, உகிர்நுதி புரட்டும் ஓசைபோல - நகத்தாலே அவ்வம்பின் நுனியைப் புரட்டுதலாலே எழும் ஒலியைப்போன்று, செங்கால் பல்லி தன் துணை பயிரும் - சிவந்த காலையுடைய ஆண் பல்லி தனது காதற்றுணையாகிய பெண் பல்லியை ஒலிசெய்து அழைத்தற்கிடனாகிய, அங்கு - அவ்விடத்தே, கள்ளியங் காடு இறந்தோர் - கள்ளிக் காடுகள் மிக்க பாலையைக் கடந்து சென்ற தலைவர், உள்ளார் கொல்லோ - நம்மை நினையாரோ.

விளக்கம்:—தோழி : விளி. உள்ளுதல் - நினைத்தல். உள்ளார் கொல்லோ என்ற வினா, உள்ளுவர் என்னும் பொருள்பட நின்றது. கள்வர் - ஆறலைப்போர். மூங்கிற்கோலின் ஒருதலையில் இரும்பால் இலை முதலிய வடிவங்களிற் செய்யப்பட்ட உறுப்பினைச் செருகியதே அம்பாகலின் பொன்புனை பகழி என்றார். பொன் - ஈண்டு இரும்பென்க. செப்பம் - செம்மை. கொண்மார் - கொள்ளும் பொருட்டு. செப்பம் கொள்ளுதலாவது - அம்பின் நுனியைத் தீட்டிக் கூர்மை செய்தவழி மிகவும கூரிதாய நுனி தீட்டுதற் றொழிலால் ஒருபாற் கோடுமென்றே அக்கோட்டத்தை உகிரால் வருடி நேரிதாக்கிக்கோடல். "உலக்கல் அன்ன பாறையேறிக் கொடுவில் எயினர் பகழிமாய்க்கும்" எனப் பன்னிரண்டாஞ் செய்யுளில் எயினர் அம்பு தீட்டுதல் கூறப்பட்டமையும் காண்க. புரட்டுதல் - கோடிய நுனியை நேர்செய்தல். மிகவும் கூரிதாகிய நுனியாகலின் நகத்தால் வருடி நேர்செய்தல் அமைவதாயிற்று என்க.

அம்பின் நுனியை உகிரால் வருடும் ஓசையைப் பல்லியின் ஓசைக்கு உவமையாகக் கண்ட அருமை நினைந்து நினைந்து இன்புறற்பாலது. அங்கால் என்பதனை - அங்கு ஆல் எனக் கண்ணழித்து ஆல் அசை என்க. அழகிய கால் எனக் கொண்டு கள்ளிக்கேற்றுவாரும் உளர்.

பல்லி துணை பயிரும் ஒலி கேட்புழி அவர் தம் துணையாகிய உன்னை நினையாதிரார்; நினைப்பராகலின் விரைந்து வருவர் வருந்தாதேகொள் என ஆற்றியவாறு.

பாட்டு - கஎ : தலைவன் கூற்று

துறை:—தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறை மறுமற் கூறியது. அஃதாவது, தன் குறையை நிறைவேற்ற மறுத்த தோழியைத் தலைவன் நீ மறுப்பாயாயின் யான் வேறு வழியானும் தலைவியைப் பெறுதல்கூடும் என்பதுபடக் கூறியது.

இதன்கண் குறைமறுத்த தோழியை நோக்கித் தலைவன் தான் மடலூர்தல் முதலியன செய்தேனும் தலைவியைப்

பெறுவேன் என்பது குறிப்பாற் ரோன்றுமாறு, காமம் காழ் கொண்டோர் இன்னின்ன செய்வதுண்டு என உலகியல் மேலிட்டுக் கூறுகின்றான்.

கஎ. மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடப
மறுகி னூர்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே.

—பேரெயின் முறுவலார்.

(இ - ள்.) காமம் காழ்கொளின் - உலகத்து ஆடவர் காம நோய் நனிமுதிர்ந்தால், மாவென மடலும் ஊர்ப - குதிரையல்லாத பனைமடலைக் குதிரையாகக் கொண்டும் செலுத்துவர், பூஎனக் குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப - சூடும் மரபில்லாததாயினும் சூடும் மரபுடைய பூவாகக்கொண்டு குவிந்த அரும்பையுடைய எருக்கம் பூமாலையினையும் தலையிலே சூடிக் கொள்வர், மறுகின் ஊர்க்கவும் படுப - இவற்றோடமையாது தெருவிடத்தே நின்று பலராலும் தூற்றி ஆரவாரிக்கவும் படுவர், பிறிதும் ஆகுப - இவ்வாற்றால் தங்கருத்து முற்றுதாயின் சாதற் குரிய செயலையும் துணிந்து செய்வாரும் ஆவர்.

விளக்கம்:—எனவே இம் மிகைச் செயல்களில் யான் இறங்கும்படி நீ செய்யாமல் என் கருத்தை நிறைவேற்றித் தருதலே உனக்கும் எனக்கும் தலைவிக்கும் நலமாகும் என்றவாறுதலறிக.

மா - குதிரை. பனைமடல் மாவாகாதிருக்கவும் அதனை மாவாகக் கொண்டென்பார் மாவென என்றார். பூஎன என்றது ஈண்டுச சூடும் பூவல்லாதிருந்தும் சூடும் பூவாகக கொண்டென்றவாறு. குவிமுகிழ் - கூம்பிய அரும்பு. கண்ணி - தலையிற் சூடும் மாலை. மார்பிலணியும் மாலையைத் தார் என்ப. இதனை,

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் ரோருங் கொன்றை" (புறம்-க)

எனவரும் புறப்பாட்டானும் அதன் உரையானும் உணர்க: காழ் - வயிரம். காமம் காழ் கொள்ளுதல் - காமநோய் ஆற்றொணாதவாறு முதிர்தல். "நிறையும் உண்டோ காமங் காழ்கொளின்" எனப் பிறரும் ஓதுதல் காண்க.

இனிக் காமங்காழ்கொளின் என்றதற்குக் காமமாகிய கனி பரலை (விதை) உடையதாஞல் என்று கொள்வார்க்குக் கனி விதையை உடைத்தாதல் பிஞ்சாயிருக்குங்காலும் உண்மையின் அது பொருந்தா தென்க. காமத்தை மரமாகவும் காழை விதையாகவும் கொள்வாரும் உளர். விதை முதிர்வதல்லது மரம் முதிர்தலின்மையின் அதுவும் உரையன்றென்க. பிறிதும் என்றது ஈண்டுக் கைகூடாவழிச் சாதலை

என்க. மடலூர்ந்தவழிக் கண்டோர் பலரும் இவன்போலும் இவள் கணவன் என்பன போன்ற சொற்களால் மறுகிற் பேசுவாராகலின் அதனை ஆர்க்கப்படுவர் என்றான்.

பாட்டு - கஅ : தோழி கூற்று

துறை :—இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது. அஃதாவது, மணைப்படப்பையில் இரவுக்குறிக்கண் தலைவியைப் புணர்ந்து செல்லும் தலைமகனைத் தோழி தனியிடத்தே கண்டு தலைவியின் வருத்தநிலையுணர்த்தி விரைவில் அவளைப் பலரறிமணம் செய்துகொள்ளல் வேண்டும் என வற்புறுத்திக் கூறியது.

இதன்கண் தோழி தலைவனை நோக்கி நாடனே! சிறிய பலாக்கொம்பிலே பரிய பழம் தூங்கிஞற்போன்று தலைவியின் உயிராகிய சிறிய கொம்பிலே காமமாகிய பெரும்பழம் கனிந்து தூங்குகின்றது. இச் செவ்வியறிந்து நீ அக்கனியை நுகர்ந்தின்புறக் கடவாய். இன்றேல் அக் காமமுதிர்ச்சி அவள் உயிர்க்கு இறுதியைப் பயக்கும் என்று கூறுகின்றாள்.

கஅ. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட சேவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

—கபிலர்.

(இ - ள்.) வேரல் வேலி வேர்க்கோட் பலவின் சாரல் நாட - மூங்கிலாகிய வேலியை உடையதும், வேரிலேயே குலைகளை யுடையதுமாகிய பலாமரம் மிக்க இனிய மலைப்பக்கத்தையுடைய நாட்டையுடையவனே, செவ்வியை ஆகுமதி - நீ துய்த்தற்குரிய தகுதியை உடையனாகுக, யார் அஃது அறிந்திசினோர் - நின்னை யல்லாற் பிறர் யாரே அதனை அறிந்து கொள்வார் உளர், சாரல் சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு - மலைப்பக்கத்தேயுள்ள பலாவினது சிறிய கொம்பின்கண்ணே பெரிய பழம் தூங்கிஞற் போன்று, இவள் உயிர்தவச் சிறிது - இத்தலைவியின் உயிரோ ஆற்றவுஞ் சிறியது, காமமோ பெரிது - அவ்வுயிரின்கட் கனிந்த காமநோயோ ஆற்றவும் பெரியதாம்.

விளக்கம் :—தலைவியின் உயிர்க்குப் பலாவின் சிறிய கொம்பும், அவ்வுயிரின்கண் தோன்றிக் கனிந்த காமத்திற்கு அக்கொம்பிற்றோன்றி முதிர்ந்த பலாக்கனியும் உவமைகள் என்க.

தலைவியோடு இயற்கைப் புணர்ச்சி எய்திய நீயே அவள் காம நோயின் செவ்வியறிந்து நுகர்ப்பாலையல்லால் பிறர் யாரும் இலர் என்பாள், யார் அஃதறிந்திசினோர் என்றாள். ஒருவருமிலர் என்பது கருத்து. நின்னுட்டுப் பலாமரங்கள் வேரிலே பழுப்பனவும் மூங்கில் வேலியை இயல்பாக உடையனவும் ஆதலின், அப்பழத்திற்காதல் மரத்திற்காதல் கேடின்மையின் நீ தலைவியின் நிலையைச் சிக்கிக்காதிருக்கின்றாய் என்பாள், 'வேரல் வேலி வோக்கோட் பலவின் சாரல் நாட' என்று விளித்தாள். ஆகுமதி என்பதன்கண், மதி : முன்னிலையசை. செவ்வியை - செவ்வியுடையை. ஈண்டுச் செவ்வி என்றது தலைவியின் காமம் பதனழியாவாறு அதன் நிலையறிந்து துய்க்கும் காலத்தியற்கையை. அஃதாவது, பலர்அறி மணம் செய்துகொண்டு அவளைப் பிரியாது நுகர்தல் என்க. களவு நினைந்தாங்கு நுகர்தற்குரியதல்லா இடையூறு பலவுடைத்தாகலின் செவ்வியறிதற் கியலாமையறிக.

சிறு கொம்பிற் பலாக்கனி பின்னும் பருத்து முதிருமாயின் அக்கொம்பினை முறித்துக்கொண்டு வீழ்ந்து சிதறுமாறுபோலத் தலைவியின் காமம் பின்னும் முதிருங்கால் அவள் உயிருக்கு இடையூறு செய்து தானும் கெடும் என்பது உவமையாற் போந்தமை உணர்க.

> "மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
> செவ்வி தலைப்படு வார்" (குறள் - கஉஅகூ)

என்னும் அருமைத் திருக்குறளானும் காமச் செவ்வியை அறிதல் அருமை உணர்க. உயிர் அணுவென வழங்கப்படுதல் பற்றித் தவச் சிறிதென்றாள். தவ - மிகுதி : உரிச்சொல்.

பாட்டு - ககூ : தலைவன் கூற்று

துறை :—உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது. அஃதாவது, தனது பரத்தமை காரணமாக ஊடியிருக்கும் தலைவியைத் தலைமகன் நெருங்கியான் தவறிலேன் எனப் பணிமொழி பல கூறியுணர்த்தவும், அவள் ஊடல் தீர்ந்திலளாகப் பின்னர்த் தலைவன் தன் நெஞ்சை நோக்கிப் புலந்து கூறியது.

இதன்கண், தலைவன், 'நெஞ்சே! நீ எவ்வியென்பானை இழந்த பாணர் வறுந்தலைபோலப் பொலிவிழந்து வருந்தக் கடவை; ஏனெனில் இவள் நமக்கு ஏதிலாள் ஆயினள் ஆகலான்' எனப் புலந்து கூறுகின்றான்.

ககூ. எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றீனமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தேல்லுறு மெளவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

—பரணர்.

(இ - ள்.) எவ்வி இழந்த வறுமை யாழ்ப்பாணர் - எவ்வி என்பானை இழந்துவிட்டமையாலே நல்குரவுற்ற யாழினையுடைய பாணரின், பூவில் வறுந்தலை போல - பொற்றுமரைப்பூச் சூடப் படாத வறிய தலை பொலிவிழந்திருத்தல்போல, புல் என்று இனை மதி - புற்கென்று வருந்துக, நெஞ்சே வாழிய - என் நெஞ்சமே நீ வாழ்வாயாக; அஃதெற்றுலெனின், மனைமரத்து எல்லுறு மௌவல்நாறும் பல்லிரும் கூந்தல் யாரளோ நமக்கு - மனைப்படப்பைக்கண் உள்ள மரத்தின்மேற் படர்ந்த இராப் பொழுதினையுற்ற முல்லைமலர்கள் போன்று மணங்கமழாநின்ற பலவாகிய பெரிய கூந்தலையுடைய இவள் நமக்கு ஏதிலாள் ஆயினள் ஆகலின்.

விளக்கம்:—நெஞ்சே வாழிய எவ்வியிழந்த பாணர் தலைபோல நீ இனிப் பொலிவிழந்து வருந்தக் கடவாய் அஃதெற்றுலெனின், இவள் நமக்கு ஏதிலாள் ஆயினள் ஆகலின் என இயைத்துக் கொள்க.

எவ்வி என்பான் வேளாளர் வகுப்பினனும் மிழலைக் கூற்றத்துத் தலைவனுமாவான். இவன் யாழ்ப்பாணர்கட்குப் பெரிதும் பரிசில் வழங்கிப் போற்றியவன். இவன் இறந்தபின்னர் வழங்குவாரின்மை யின் யாழ்ப்பாணர் தலை பொற்பூச்சூடாத வறுந்தலை ஆயின என்றபடி. பாணர்க்குப் பொற்பூ வழங்குதல் பண்டைக்கால வழக்கம். எவ்வி இறந்தமையால் வருந்திய பாணர் நிலையினை "எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர், கைதொழு மரபின் முறித்திடைப் பழிச்சிய, வள்ளுயர் வணர் மருப்பு" (ககஎ) என வரும் அகப்பாட்டானும் உணர்க.

எவ்வியை இழந்தமையால் வறுமையுற்ற பாணர் என்க. புல்லென் றல் - பொலிவிழத்தல். இனை - வருந்துக. மதி : முன்னிலை அசை. வருந்துக என்றுணர்கலிற் பரிந்து பின்னும் அந்நெஞ்சை வாழ்த்தினன் என்க. நின்பாற் குற்றமின்றுகவும் இனைகின்றாய் ஆகலின் வாழி என்றான் என்க.

எல்லுறும் மௌவல் - இராக்காலம் எய்தப்பெற்ற முல்லை என்க. மனைமரத்தின்கட் படர்ந்த முல்லை இராப்பொழுதில் சூடப்படாமல் மணந்தாற்போல இவள் நலம் நம்மால் நுகரப்படாமல் திகழ்கின்றது என்பது குறிப்பாகக் கொள்க. எல்லுறு முல்லை என்பதற்கு ஒளி யுடைய முல்லை என்றல் பொருள் சிறவாமை காண்க. எல் - இரவு.

பாட்டு - உ0 : தலைவி கூற்று

துறை :—செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத் தது. அஃதாவது, பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன் தன் கருத்தைத் தோழிக்குக் கூறினானாகத் தோழி தலைவன் பிரியக் கருதியதைத் தலைவிக்குக்கூற அவள் புலந்து கூறியது.

இதன்கண், தலைவனது பிரிவுணர்த்திய தோழியை நோக்கி அவர் அருளும் அன்புமின்றி நம்மைப் பிரியக் கருதின் நாமென்

செய்கோம். அங்ஙனம் பிரிவோர் அறிஞர் ஆயின் ஆகுக அப் பிரிவை ஆற்றாது வருந்தும் யாம் பேதையம் ஆவேமெனில் ஆகுக என்று கூறுகின்றாள்.

உ0. அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே.

—கோப்பெருஞ்சோழன்.

(இ - ள்.) மடந்தை - தோழீ, அருளும் அன்பும் நீக்கி - அருளையும் அன்பையும் தம் உள்ளத்தினின்றும் அகற்றி, துணை துறந்து - எனக்குத் துணையாந் தன்மையையும் அகற்றி, பொருள்வயின் பிரிவோர் - நிலையில்லாத பொருளைக் கருதி அதன்பொருட்டுப் பிரியக் கருதுவோர், உரவோர் ஆயின் - அறிவுடையரே ஆனால், உரவோராக - அறிவுடையர் ஆகுக, மடவம் ஆக நாம் - அவர் பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் யாம் அறிவிலேம் ஆயின் ஆகுவம், என்பதாம்.

விளக்கம் :—அருள், தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண் மேலும் செல்வதாகிய இரக்கம். அன்பு, வாழ்க்கைத் துணையும், புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட்டோன்றும் காதல். பொதுவாகப் பெண்பால் என்று நினைந்தவழி என்பால் அருள் கொள்ளல் வேண்டும்; சிறப்பாக மனைவி என்று நினைந்தவழி என்பால் அன்பு கொள்ளல் வேண்டும்; இவ்விரண்டின் ஒன்று நின்ற வழியும் என்னைப் பிரிவாரல்லர். அவர் பிரியக் கருதினராயின் இவ்விருபெருங் குணங்களுமே நீத்தவராதல் வேண்டும் என்பாள் அருளும் அன்பும் நீக்கி என்றாள். இனி துணை துறந்து என்றதற்கு எனக்குத் துணையாந் தன்மையின் அகன்றெனக் கோடலே பொருட் சிறப்புடையதாதல் அறிக. தமக்குத் துணையாகும் என்னைத் துறந்து எனக் கொள்ளின் துணை துறத்தல் தலைவன் தன்பத்திற்கே எதுவாதல் அறிக.

அருளும் அன்பும் நீத்துப் பாதுகாக்கப்படுவாரைத் துறத்தல் அறிவுடையார்க் கேலாமையின் அச்செயல் செய்யத் துணிந்தார் சான்றோர் ஆகார் என்பாள், உரவோராயின் என்றாள். இனி அன்புடையார் பிரியப்பொறாத நாம் அறிஞர் அல்லராயின் ஆகுக என்றதும். அன்புடையாரைப் பிரியப்பொறாத மடமையே நமக்கு வேண்டும். பிரியக் கருதுவது அறிவென்றே கூறுவாருளராயின் அவ்வறிவு வேண்டா.

மடவம் - அறிவில்லாதேம். அறிவுமிக்க தலைவரே அவ்வறிவோடு பொருந்தாத செயலைச் செய்யக் கருதின் யாம் என் செய்வேம் என்பது கருத்து.

பாட்டு - உக : தலைவி கூற்று

துறை :—பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி அவர் வரக் குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு என்று தன்னுள்ளே கவன்றூட்கு அவளது குறிப் பறிந்த தலைமகள் "கானம் அவர் வருங்காலத்தைக் காட்டிற் றுயினும் யான் கார்காலம் என்று தேறேன் (எற்றுலெனின்) அவர் பொய் கூறாராகலின்" எனத் தான் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.

அஃதாவது, தலைவன் யான் இன்ன பருவத்தே மீண்டு வருவேன் ஆற்றியிரு எனக் கற்பித்த சொற்படியே தலைவி ஆற்றி யிருந்தாள்; தலைவன் குறித்த பருவம் வந்தது; ஆனால் தலைவன் வரவில்லை; அதுகாறும் அரிதின் ஆற்றியிருந்த தலைவி, இனி ஆற்றுள் எனத் தோழி கவல்வதைத் தலைவி குறிப்பால் அறிந் தாள். "கானம் அவர் கூறிய பருவத்தைக் காட்டிற்றுயினும் இது அப்பருவம் அன்று," ஏனெனில், அவர் பொய் கூறார் அல்லரோ எனத் தான் ஆற்றியிருப்பேன் என்பது தோன்றக் கூறியது.

இதன்கண், தோழி இக்கொன்றைக் கானம் இது கார்காலம் எனக் கூறினும் யான் அதனை நம்பேன்; எற்றுலெனின் அவர் பொய் கூறுவார் அல்லர் என்பது யான் நன்கு அறிந்துளேன் ஆகலின் எனத் தலைவி கூறுகின்றாள்.

உக. வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை
கானங் காரெனக் கூறினும்
யானே தேரேன் அவர் பொய்வழங் கலரே.

—ஓதலாந்தையார்.

(இ - ள்.) வண்டுபடத் ததைந்த கொடி இணர் இடை யிடுபு - வண்டுகள் வந்து மொய்க்கும்படியாக நெருங்கி மலர்ந்த நீண்ட பூங்கொத்துக்களை இடையே மேற்கொண்டு, பொன் செய் புனையிழை கட்டிய மகளிர் கதுப்பில் தோன்றும் - பொன்னால் செய்த ஒப்பனை செய்தற்குரிய அணிகலன்களை யாத்த மகளிருடைய கூந்தலைப்போன்று தோன்றுகின்ற, புதுப் பூங் கொன்றைக் கானம் - புதிதாக அலர்ந்த மலர்களையுடைய கொன்றை மரம் நிறைந்த காடு, கார் எனக் கூறினும் - இது

கார்ப்பருவம் என்று தெரிவிப்பினும், யான் தேறேன் - யான் இது கார்ப்பருவம் என்று தெளியேன்; எற்றுலெனின், அவர் பொய் வழங்கலர் - தலைவர் பொய் கூறுவாரல்லர் ஆகலான்; என்பதாம்.

விளக்கம்:—வண்டு படுதல் - வண்டு மொய்த்தல். தகைந்த - நெருங்கிய; மலர்ந்த எனினுமாம். கொடி இணர் - நீண்ட பூங்கொத்து. கொன்றைப் பூங்கொத்து மாலைபோன்று நீண்டு தூங்குதலின் கொடியிணர் என்றார். இடை இடுபு - இடை இடையே மேற்கொண்டு, மகளிர் பொன்னுற் செய்த தலையணிகலன்களை இடையிடையே கூந்தலின்கண் அணிந்தாற்போன்று கொன்றை மரத்தின் தழையிடையே நீண்ட பூங்கொத்துக்கள் தோன்றும் என்க. பூணையிழை - பூணைத் தொகை. பூணுதல்-ஒப்பனை செய்தல். இழை - அணிகலன். கட்டுதல்-கை செய்தல். கதுப்பு - கூந்தல். புதுப்பூங்கொன்றை என்றது புதிதாக அண்மையிலே மலர்ந்த கொன்றை என்றவாறு. கொன்றை கார்ப்பருவத்திலே மலரும் இயல்புடையது ஆகலின், அது மலர்ந்தமை கார்ப்பருவம் இது என்று கூறுவது போன்றிருத்தலின் காரணம் கூறினும் என்றார். காரணம் ஒன்றறிவுயிர் ஆகலான் ஆராய்ந்து தெளிய வல்லதன்று. யாஞை ஆராயும் அறிவுடையேன்; சான்றாண்மை மிக்க தலைவர் கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டும் வருவேன் எனப் பிரிந்தார். அவர் வாராமையாலேயே இது கார்ப்பருவம் அன்றென்பது ஐயமறத் துணியப்படும். எனெனில் சான்றோர்கள் பொய் கூறமாட்டார் அல்லரோ என்றபடி.

யாஞை, என்பதன்கண் ஓகாரம், பிரிநிலை.

பாட்டு - ஊஉ : தோழி கூற்று

துறை :—செலவுக் குறிப்பறிந்து ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது அஃதாவது, தலைவர், தன்னைப் பிரிந்து செல்வார்கொல் என்று ஐயுற்று வருந்திய தலைவியை, அவர் உன்னைப் பிரிந்து செல்லும் வன்கண்ணர் அல்லர்; உன்னையும் உடன் அழைத்தே செல்வர் எனக் கூறித் தோழி தேற்றியது.

இதன்கண், தலைவர் பிரிவர் போலும் என்று வருந்திய தலைவியை நோக்கித் தோழி, 'அன்னாய்! உன்னை யார்தான் பிரிய எண்ணுவர்? உன்னைத் தலைவர் தம்மூடன் அழைத்துச் செல்வர் வருந்தாதே கொள்' எனத் தேற்றுகின்றாள்.

ஊ. நீவார் கண்ணை நீயிவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனில் அஞ்சினை கமழும்
சேமூர் ஒண்ணுதல் நின்னெடுஞ் செலவே.

—சேரமானெந்தை.

(இ - ள்.) நீர் வார் கண்ணை — தலைவர் பிரிவார் என்று கருதி மளவாமே ஆற்றாது நீர் ஒழுக்கும் கண்களை உடையை ஆயினை, நீ இவண் ஒழிய யாரோ பிரிகிற்பவர் — இத்தகைய நீ இவ்விடத்தே தனிதெதாழியவிட்டு உன்னை யார் தாம் பிரிய வல்லர் ஆவர், சாரல் சிலம்பு அணிகொண்ட வலம் சுரி மராஅத்து — மலைப்பக்கத்தேயுள்ள தாழ்வரை அழகு கொள்ளற்குக் காரணமான வலப்பக்கத்தே சுரிந்த இதழையுடைய கடப்ப மரத்தினை, வேனில் அஞ்சினை கமழும் — வேனிற்காலத்து அழகிய கொம்புகள் போல்பூ மணக்கும், தேம ஊர் ஒண்ணுதல் — வண்டுகள் ஊர்தரும் ஒளியுடைய நுதலினையுடையோய், செலவு நின்னெஞ்சம் — தலைவர் கருதிய செலவு உன்னையும் உடன்கொண்டு செல்லும் செலவேயாம்.

விளக்கம் :— தலைவர் நின்னைப் பிரிந்து செல்லும் வன்கண்ணர் அல்லர்; உன்னையும் அழைத்தேகுவர் வருந்தற்க என்று கூறி, ஆற்றிய படியாம்.

தோழி தலைவியைக் கண்டபொழுது அவள் பிரிவர் என்னும் அச்சத்தாற் கண் கரிந்து அழுதுகொண்டிருந்தாள் ஆகலின், "நீர்வார் கண்ணை," என்றாள். பிரிவா என்னும் எண்ணம் தோன்றியதற்கே இங்ஙனம் வருந்துபவையுடைய உன்னை யார்தாம் பிரிந்து செல்லத் துணிவர் என்பாள், 'யாரோ பிரிகிற்பவர்,' என்றாள். யாரோ என்றது மக்களுள் அத்துணை வன்கண்ணர் இருத்தல் அரிது ஆகலின், எத்தகையோரும் பிரியத் துணியார்; அங்ஙனம் ஆகவும் அருள் நிரம்பிய சான்றோராகிய நுந்தலைவர் நீ இவ்வெழிலியப் பிரிவர் எனறு நினையாதே கொள் என்றவாறு.

அவர் செலவு கருதியது உண்மையே ஆயினும் நின்னெஞ்சும் செல்லுதலையே கருதியுள்ளார் என்பாள் 'நின்னெஞ்சும் செலவே' என்றாள்; செலவு நின்னெஞ்சமே என மாறுக.

சாரற் சிலம்பு, மலைப்பக்கத்துள்ள தாழ் வரை. வலஞ்சுரி — வலப்பக்கமாகச் சுரிந்த என்க. மராம் — கடப்பமரம். வேனில் அம் சினை-வேனிற்காலத்து அழகிய கொம்பு. வேனிற்காலத்துக் கடப்பங் கொம்பு மணக்குமாறு போல, மணக்கும் நுதல் என்க. தேம் — வண்டு. ஊரும் என்ற வினையால் தேம் — வண்டெனலே நன்று. மணம் என் பாரும் உளர். வேனிலஞ்சினை கமழும் தேமூர் நுதலை நுகர்ந்த தலைவரும் நின்னைப் பிரிய வல்லுநரோ என்று குறிப்பால் ஓதியவாறு என்க. நின்னெஞ்சே ஆகும் என ஆக்கசசொல் எசசமாய் நின்றது.

பாட்டு - உஉ : தோழி கூற்று

துறை :— கட்டுக் காணிய நின்றவிடத்துத் தோழி அறத் தொடு நின்றது; அஃதாவது : இயற்கைப் புணாசசிக்குப் பின்னர்ப் பிரிந்த தலைவனைப் பின்னர்க் கூடப் பெறுமையால் ஆற்றுமை மிக்கு மெலிந்த தலைவியைக் கண்டு இந்நோய்க் கார

ணம் அறிவான் கட்டுவிச்சிபாற் குறிகேட்கத் தலைப்பட்ட செவிலிக்குத்தோழி, இந்நோய் தெய்வத்தான் வந்ததன்று; ஓர் தலைவனால் ஆயிற்றெனக் குறிப்பாற் கூறி அறத்தொடு நின்றது.

இதன்கண், தோழி குறி சொல்லும் கட்டுவிச்சி தெய்வம் பராவிப் பாடுவாளை நோக்கி, 'அகவன் மகளே பாடுக! பாடுக! தலைவருடைய நல்ல மலையைப் பாடும் பாட்டையே இன்னும் பாடுக' என, அவர் மலையைப் பாடும் பாட்டு இவள் நோய்க்கு மருந்தாகும் என்பதுபடக் கூறுகின்றாள்.

உஉ. அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டேஅவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

—ஔவையார்.

(இ - ள்.) அகவன் மகளே அகவன் மகளே — கட்டுவிச்சியே! கட்டுவிச்சியே! மனவுக்கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே — சங்குமணிக் கோவைபோன்ற நன்மையுடைய நெடிய கூந்தலையுடைய கட்டுவிச்சியே! பாடுக பாட்டே—நீ இப்பொழுது பாடிய பாட்டையே மீண்டும் பாடுவாயாக, இன்னும பாடுக பாட்டே—இன்னும் குறிகூறுதலை விட்டு அப்பாட்டையே பாடுவாயாக, அவர் நன் நெடுங்குன்றம் பாடிய பாட்டே—அப்பாடல் எதுவென்னில் அவருடைய நன்மை மிக்க நெடிய குன்றத்தைப் பாடிய அப்பாடலையே.

விளக்கம்:—அகவன் மகள் - அழைக்கும் மகள்; கட்டுவிச்சி குறி சொல்வுழித் தெய்வங்களையும் குறி சொல்லப்படுவோர் குலத்தோரையும் அழைத்துப் பாடுதல் பற்றி, அகவன் மகள் என்பது அவளுக்குப் பெயராயிற்று. ஈண்டு அகவன் மகள் என்றது, கட்டுவிச்சி என்னும் பெயர் மாத்திரையாய் நின்றதென்க.

தலைவன் நன்னெடுங்குன்றத்தைப் பாடி வேறு பாட்டெடுக்கும் நிலையில் கட்டுவிச்சியை விளிக்கின்றமையின் இருமுறை அடுக்கிவிளித்தாள். ஒரு காரியத்தின் மனம் போக்கியிருப்பாரைத் தம் சொல்வுழித் திருப்ப முயல்வோர், இருமுறை மும்முறை அடுக்கி விளிக்க நேருதலை உலகியலிற் காண்க. மனவு - சங்குமணி. கோப்பு - கோவை. இது கட்டுவிச்சியின் மூப்பையும் அழகையும் எடுத்தோதியவாறும். நன்மை - கூந்தலின் சுரிவு நெய்ப்புடைமை அடர்வு முதலியன.

பாட்டே என்பதன்கண், ஏகாரம் இடையிடையே உரை விரவுதலொழித்துப் பாட்டை மட்டுமே பாடுக என்று உரையைப் பிரித்தலிற் பிரிநிலை என்க. அங்ஙனம் கூறக்கேட்ட கட்டுவிச்சி மீண்டும் ஒரு முறை பாடினளாக அப்பாட்டே தலைவிக்கு இன்பஞ்செய்தல் கண்டு

மீண்டும் பாடுக பாட்டு என்றாள். என்றவள் அவள் வெவ்வேறு பாட்டுக்களைப் பாடாமல் தலைவன் மலையைப் பாடும் பாட்டொன்றையே பாடுக வென்பாள் 'அவர் நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே' எனச் சுட்டினாள் என்க.

கட்டுவிச்சி, தெய்வம் பராவுவாள் முருகவேள் உறைவதொரு மலையைப் பாடினாளாக, அம்மலையே தலைவன் மலையுமாகலின் அப்பாடல் கேட்டுத் தலைவி மகிழ்வெய்துதல் கண்ட தோழி மீண்டும் அம்மலையையே பாடுக என்றாள். 'அவர் நன்னெடுங்குன்றம்' என்றது, செவிலி இது தெய்வத்தான் வந்ததன்று; ஒரு தலைவனால் வந்தது போலும் என, அறிதற்கு எதுவாதல் அறிக. அவர் என்றது அம்மலைக்குரிய முருகவேள் என்று ஒரு பொருள் குறித்து நின்றதும் உணர்க.

இனி, கட்டுவிச்சி குலத்தோரை எல்லாம் அழைத்துப் பாடலின் தலைவன் தாய் மரபினராகலின், அம்மரபினர் மலையும் பாடப்பட்டமை கண்டு இன்னும் பாடுக என்றாள். எனவே, தலைவன் தாய் மரபினன் என்பது கொள்க என்றார் ரா. இராகவ ஐயங்கார் அவர்கள். "யாயும் ஞாயும் யாரா கியரோ" என்றபடி தலைவன் தாய் மரபினன் ஆதல் ஒரு தலையன்று, மேலும் தாய் மரபினன் ஆயின், களவொழுக்கம் வேண்டா. இயற்கைப் புணர்ச்சியும் மிகை; கொடுப்பக்கொள்ளலே அனையும் என்க.

முருகவேள் மலையைப்பாட அம்மலையே தலைவன் மலையுமாதல் கண்டு, அம்மலையைப் பாடும் பாட்டையே பாடுக என்றாள் என்பதே பொருந்துவதாம்.

பாட்டு - உசு: தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது; அஃதாவது : 'இன்ன பருவத்தே மீண்டு வருவல்; அதுகாறும் ஆற்றியிரு' எனக் கூறிச்சென்ற தலைவன், அப்பருவம் வந்தழியும் வாராமை கண்ட தலைவி ஆற்றாது கூறியது.

இதன்கண், 'தலைவர் கூறிய இளவேனிற் பருவம் வந்தும் அவர் வந்திலர். வேம்புகள் மலர்ந்தன. அவை சூடப்படாமல் ஒழியும் கொல்லோ? என் நிலை கண்டு யான் ஞெண்டுகளாலே மிதிக்கப்பெற்ற அரைப்பழம், குழையுமாறு போலக் குழையும் படி, கொடியோர் நா அலாதூற்று கின்றன. என் செய்சேர்? எனத் தலைவி கூறுகின்றாள்.

உசு. கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிர் மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே —பரணர்

(இ - ள்.) கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர் - கரிய தாளையுடைய வேம்பினது ஒள்ளிய பூவின் புதிய வருவாயானது, என்னே யின்றியும் கழிவது கொல்லோ - என் தலைவர் இல்லாமலும் வறிதே கழிந்து ஒழியுமோ? ஆற்றயல் எழுந்த வெண் கோட்டு அதவத்து - யாற்றின் அருகில் ஒங்கிய வெள்ளிய கொம்புகளையுடைய அத்திமரத்தினது, எழுகுளிர் மிதித்த ஒரு பழம்போல - ஏழு நண்டுகள் பற்றிக் குழைத்த ஒற்றைப்பழம் குழையுமாறுபோல யான் குழையா நிற்ப, கொடியோர் நா காதலர் அகலக் கல்லெனற - புறங் கூறுவோர் நாவானவை காதலர் அகன்றமை காரணமாக அலர்தூற்றிக் கல்லென்று முழங்கா நின்றன.

விளக்கம்:—வேனிற் பருவத்துச் சூடற்குரிய வேம்பின் ஒண்பூவும் அவர் வராமையாற் சூடப்படாது வறிதே கழிகின்றன; மேலும் கொடியோர் நாவானவை, ஏழுநண்டுகள் பற்றிக் குழைத்த ஓர் அத்திப்பழம் போன்று யான் குழையும்படி அலர்தூற்றி முழங்கா நின்றன; யான் எவ்வாறு ஆற்றுகோ என்றாள் என்க.

'கருங்கால் வேம்பின் ஒண்பூ' என்றது, சொல்லோவியமாய்ப் பொருள்புலப்படுத்துதல் உணர்க. யாணர்-புதுவருவாய். ஒண்டுவேனிற் பருவத் தொடக்கத்தே புதிதாக மலர் வருதலைக் குறித்து நின்றது.

"புதிது படற்பொருட்டே யாணர்க் கிளவி" (உரி: அக.)

என்பது தொல்காப்பியம். என்னே - என் தலைவர். தலைவனை என்னே என்னும் வழக்குண்மையை,

"அன்னே என்னே என்றலும் உளவே
தொன்னெறி மரபிற் சொல்லினும் எழுத்தினும்
தோன்ற மரபின என்மனார் புலவர்" (பொருளியல்: 13உ.)

என்னும் தொல்காப்பிய விதியான் உணர்க. ஆறு - நீர் யாறு அதவத்து - அத்திமரத்தினது. அதவம் - அத்தி மரம். அத - அத்தி மரம் எனபாருமுளர். அத்து - சாரியை. எழுகுளிர் - ஏழு நண்டுகள்; என்றது பல நண்டுகள் என்றவாறு. எழுகளிறு எனப் பாடங்கொண்டு ஏழுயானைகள் என்பாரும் உளர். ஏழு யானைகள் மிதிப்புழிப் பழம் உருத்தெரியாது சிதைந்தழியுமாகலின் குழைந்தது எனல் பொருந்தாமை உணர்க. புறங்கூறுவோர் ஆகலிற் 'கொடியோர்' என்றாள்; காதலர் அகல்தலைத் தலைக்கூடாகக் கொண்டு கொடியோர் நா கல்லெனற என்க.

பாட்டு - உரு: தலைவி கூற்று

துறை:—வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது அஃதாவது, தலைவன் வரைந்து கொள்ளாது காலம் நீடிக்கச் செய்தல் கண்ட தலைவி, வருந்தித் தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'தலைவர் என்னை மணந்து கொள்ளாதொழியின், யான் என் செய்வேன்! இக்களவுமணம், பிறர் அறியாமல் நிகழ்ந்ததாயிற்றே! சான்றோராகிய அவரே பொய்ப்பராயின் பிறசான்றுகளும் இலவே' என்று தோழிக்குக் கூறுகின்றாள்.

உரை. யாரும் இல்லைத் தானே களவன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.

—நற்றிணை.

(இ - ள்.) தோழி! தான் மணந்த ஞான்று - தலைவர் என்னைக் களவில் மணந்தபொழுது, யாரும இல்லை - அவ்விடத்தே சான்றாகத் தக்கார் ஒருவரும் இலர், தானே களவன் - அவரே அது நிகழ்ந்த களத்திருந்தவருமாவர், தான் அது பொய்ப்பின் - அவரே தாம் கூறிய சூளுறவு பொய்ப்பாராயின், யான் எவன் செய்கோ - யான் பின்னர் என்செய்ய வல்லேன், ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் - ஓடாநின்ற நீரின்கண்ணே உணவின் பொருட்டு ஆரலமீன் வரவினைக் கூர்ந்து நோக்கும், தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால குருகும் உண்டு - தினையின் தாள்போன்ற சிறிய பசிய கால்களையுடையனவாகிய நாரைகளும் ஆண்டுளவாயின.

விளக்கம்:—யாரும் இல்லை என்றது - கரிகூறத்தக்கார் பிறர் யாரும் அவ்விடத்திலில்லை என்றவாறு. தானே களவன் - அக்களத்திருந்தோன் தானே ஆவன் என்க. களவன் - களத்திருந்தோன்; நடுக்கூறு வோனுமாம். ஓரம்பலத்திருந்து ஏனையோர்க்கு நடுக்கூறும் சிறப்புடைய அவனே பொய்ப்பின் அதற்கு யான் என்செய்யமாட்டுவன் என்றவாறும். கள்வன் என்றும் பாடம். கள்ளன் பொய்த்தல் இயல்பாகலின், அப்பாடஞ் சிறவாமை உணர்க. பொய்த்தல் - ஈண்டு "நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேன்; நின்னை விரைவில் மணந்து கொள்வேன்" என்று தலைவன் கூறிய மொழியிற் றப்பிநடத்தல். செய்கு - செய்வேன். ஓ: அசை.

தினைத்தாள் நாரையின் கால்கட்குவமை. கால - காலை உடையன வாய. குருகு - குருகுகள். உண்டு என்பதை ஒருமைச சொல்லாகக் கொண்டு, குருகு இருந்தது என்றும், கால என்பது பால் வழுவமைதி என்பாரும் உளர்.

"கோறில்லை உண்டு ஐம்பான் மூவிடத்தன" (நன்னூல்: கூகூக.)

என்னும் நூற்பாவில் உண்டு ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுச்சொல் என்பவாகலான், காலவாகிய குருகுகள் என்பது தவறுகாமை உணர்க.

இனி,

'சான்றவர் சான்றுண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை' (திருக்குறள்: கூகூ0)

என்பவாகலின். அவன் பொய்த்துழி யான் செய்யக் கடவதென் கொல் எனை, அவன் பழிக்கு நாணிக் கூறினுளுமாம். குருகுகள் ஆண்டிருந்தன; அவை சான்று கூறும் தகுதியுடையன அல்ல; மேலும் அவை தத்தம் இரை தேருவதன்கண் மனம்போக்கியிருந்தனவாகலின், இவர் குரலறையைக் கேட்டிலிரா. இராவாயினும தன்னைஞ் சறிந்தது பொய்த்தவழி அறிவிலாப் பூதங்களும் நகும் என்ப. அவ்விடத்தே இருந்த நாரைகள் நகும் என்பதற்கேனும் நாணுது அவா பொய்ப்பாராயின் யான் என் செய்கோ? என்றவாறும்.

பாட்டு - உகூ : தோழி கூற்று

துறை :—தோழி அறத்தொடு நின்றது, அஃதாவது. தலைமகளது வேறுபாடுகண்டு நற்றாயும் செவிலித்தாயும், 'இஃது எற்றினுளையிற' றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காணுகின்ற காலத்தே, தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம் என்று கூறக் கேட்ட தோழி செவிலிகுத் தலைவி கற்புக்கடம்பூண்ட செய்தியை அறிவித்தது.

இதன்கண், நாடன் தக்கோன் ஆகவும், தலைவி தகான் போலக் கொண்டு, அவன் மறந்தால் இங்கிலையில் உயிர்தீதலே செய்யற்பாலது எனத் தீது மொழியினும், கட்டுவிச்சியும் இவள நோய்க்காரணம் அறியமாட்டாளாய், இது தெய்வத்தான் வந்ததெனினும் இவள் நோய்க்குக் காரணமாவான் ஒரு தலைவன் உளன்; அவனை ஆண்டிருந்த குரங்கும் அறியும எனத, தலைவியின் நோய்க்காரணம் கூறுவாள போன்று அவள் கற்புக்கடம் பூண்ட செய்தியைச் செவிலிக்குக் கூறுகின்றுள்.

உகூ. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றுன்று நாடன்
தஃஅன் போலத் தான்றீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும்அக் கொடிமோ னையே.

—கொல்லனழி F.

(இ - ள்.) அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை மேக்கு எழு பெருஞ்சினை இருந்த தோகை - அரும்புகள் முற்றவும் மலர்ந்த வலிய தாளையுடைய வேங்கை மரத்தினது மேலே ஓங்கிய பெரிய கொம்பிலிருந்த மயில்கள், பூக்கொய் மகளிரில் தோன்றும் நாடன் - அதன் மலரைக் கொய்கின்ற மகளிரைப் போன்று தோன்றுதற்கிடனான நாட்டையுடைய தலைவன், தகாஅன் போல - தன்னை மறந்து துறந்தான் சான்றோன் அல்லன் போலும் என்று கருதி, தான் தீதுமொழியினும் - தான் உயிர் விடுவதென்னும் இன்னுச்சொல் கூறினாளேனும், தேம் கொக்கு அருந்தும் முள் எயிறு அறுத்து துவர்வாய் - தேமாவின் கனியை உண்ணுகின்ற முள்போலும் கூரிய எயிற்றினையும் செவ்விய வாயினையும் உடைய, வரையாடு வன் பறழ்த் தந்தைக் கடிவனும் அறியும் - மலையிலே விளையாடுதலைச் செய்யும் வலிய குட்டிக்குத் தந்தையாகிய ஆண்குரங்கும் அறியும், அக் கொடியோனை - இவள் இன்னலுறும்படி செய்த அக்கொடுமையுடையவனாகிய தலைவனை.

விளக்கம்:—அரும்பற மலர்தல் என்றது, அரும்புகள் இல்லையாம்படி முழுவதும் மலர்ந்த என்றவாறு. கருங்கால் - வலியதாள். காரியதாளுமாம். வேங்கை - வேகுகை மரம். இது குறிஞ்சிக் கருப்பொருள். தோகை - மயில் ஆகுபெயர். தகாஅன் - தகுதியிலலாதவன்; ஈண்டுத் தகுதி சான்றாண்மை. தகான் போல என்றது தலைவன தகுதியுடையனே ஆகவும் இவள் தகுதியில்லாளாகக் கருதி என்றவாறு. எனவே, இவள் தகுதியுடைய ஒரு தலைவனோடு கேண்மை கொண்டாள். இற்செறித்தலாலே இவளைப் பிரிந்தானல்லது தகுதியின்மையாலன்று. இவள் தகாஅன் எனக் கருதல் பிழை என்றாளாயிற்று. இதனால் விரைவில் அத்தலைவனுக்கு இவளை மணஞ் செய்து கொடுத்தலே இவள நோய்க்கு மருந்தாமன்றி கட்டுக்காண்டல் வெறியாடல் முதலியன மருந்தாகா என, அறிவித்தாளுமாம்.

தலைவி பெருநாண் உடையளாதலின், இதனை அறிவிக்கமாட்டாது தீது மொழிகின்றாள் என்பாள், தான் தீது மொழியினும் என்றாள். கடுவனும் அறியும், அதுதானும் தன் கண்ணுற் கண்டதாகலின் பொய்க்காது புகலும். இக்கட்டுவிச்சியோ கண்காணாள் ஆகலின், பொய்ப்பாளாய்ப் பிறிதொன்று கூறுவாளாயினள் எனக் கட்டுவிச்சியை அசதியாடியபடியாம்.

குட்டியை உடைய தந்தையாகலின் அன்புடைய இவள் நிலைக் கிரங்கிப் பொய்க்காது என்பாள், வன்பறழ்த் தந்தைக்கடுவன் என்றாள். தேக் கொக்கு - தேமாமரம். கொடியோன் என்றதும் கொடியோன் அல்லனாகவும் தலைவியால் கொடியோன் என்று கூறப்படுபவன் என்னும் குறிப்பிற்று. இதனால் கட்டுக்காணவேண்டா, இவள் கணவனுடன் விரைவில் கூடுதற்கான மணவினை மேற்கோடலே நன்றென அறத்தொடு நின்றவாறறிக.

மகளிர் அல்லாத மயில் மகளிர் போன்று தோன்றுமென்றது, நோய்க்காரணமாகாத தெய்வம் கட்டுவிச்சிக்கு நோய்க்காரணமாகத் தோன்றியதென்னும் உள்ளுறை தோன்ற நின்றது.

பாட்டு - உஎ : தலைவி கூற்று

துறை :---பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்தமையை இவள் ஆற்றாது இறந்துபடுவளோ எனத் தோழி கவன்றாளாக, அது கண்ட தலைவி யான் ஆற்றுவல் என்பதுபடக் கூறியது.

இதன்கண், 'தோழீ! என் அழகு எனக்கும் ஆகாது தலைவர்க்கும் பயன்படாது வீணே பசலைபாய்ந்து கெடா நின்றது' எனத தலைவி கூறுகின்றாள்.

இச் செய்யுள் வெள்ளிவீதியார் என்னும் நல்லிசைப் புலமையாட்டியார் தம் கணவனைப் பிரிந்தகாலத்தே ஆற்றாது கூறியது என்றும், தம் பெயரையாதல் கணவன் பெயரையாதல் கூறின் புறமாமென்றஞ்சி வாளா கூறப்பட்டு அகமாயிற்றென்றும் கூறுப.

உஎ. கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை உண்ணியர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே.

—வெள்ளிவீதியார்.

(இ - ள்.) நல் ஆன் தீம்பால் - நல்ல ஆவினது இனிய பால், கன்றும் உண்ணாது - அவ்வாவின் கன்றாலும் உண்ணப் படாது, கலத்தினும் படாது - கறக்கும் கலத்தினும் வீழாது, நிலத்து உக் காங்கு - மண்ணில் வீணே சிந்தினாற் போல, திதலை அல்குல் என் மாமைக் கவின் - தேமல் படர்ந்த அல்குலிடத்து எனது மணிநிற அழகினை, எனக்கும் ஆகாது - எனக்கும் பயன் படாமலும், என்னைக்கும் உதவாது - தலைவர்க்கும் இன்பம் செய்யாமலும், பசலை உணீஇயர் வேண்டும் - பசலை தான் உண்ணுதலை விரும்பா நிற்கும்.

விளக்கம் —'' விடுநில மருங்கிற் படுபுல் லார்க்கு
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்

பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும் ”

(மணி. கஉ : ஙக-ச.)

என்பவாகலின் நல்லான் என்றார்.

நாவிற்கு இனிதாகலின் தீம்பால் என்றாள். கன்றுண்ணவே கருதி அமைந்த பாலாகலின் கன்றை முதற்கட் கூறினாள். கன்று வயிறார உண்ட பின்னர்க் கறத்தலே முறையாகலின் கறவைக் கலம் பிற்கூறப் பட்டது. “கறவை கன்றார்த்திக் கலநிறை பொழிதரும்,” எனப் பிற ரும் (மணி. கஉ : கூங) ஓதுதல் காண்க. உக்காங்கு - சிந்தினாற்போன்று. பால் நிலத்துகுதல் அது பயன்படாது வீணுதல். ஆகவே, என் அழகு எனக்கும் அழகாயிருந்து ஆக்கந்தருதலின்றியும், தலைவரை இன்புறுத் தலின்றியும் பசலையால் கெட்டது என்றிரங்கியவாறு. என்னை - தலைவர். பசலை - காமநோய்கொண்ட மகளிர் மேனியிலுண்டாகும் நிறவேறு பாடு. மாமை-கரிய நிறம். மாமைக்கவின் என்றது, கரிய மேனியின்கட் கட்டழகினை. உணீஇயர் : செய்யியர் என்னும் வாய்பாட்டு வினை யெச்சம். வேண்டும் - விரும்பும் என்னும் பொருட்டு. திதலை - தேமல். கவின் - அழகு.

நல்லான் தீம்பால் கன்றிற்கும் பயன்பட்டுக் கலத்தினும் நிறையு மாறுபோல, என் கவின் எனக்கும் பயன்பட்டு தலைவர்க்கும் இன்பம் நல்கற்பாற்று மன் ; அங்ஙனம் இன்றிப் பசலையாலே அழிந்தது என்ற வாறும். இது காம நோயின் கொடுமை கூறியவாறும்.

பாட்டு - உஅ : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, இயற்கை மணம்புணர்ந்த தலை மகன், தலைவியை வரைந்து கொள்ளுதற்காம் பொருளீட்டப் பிரிந்தவன் விரைந்து வாராமையால் தலைவி ஆற்றுள் எனக் கவன்ற தோழிக்கு, ‘என் துன்பத்தை அறியாமல் உறங்காநின்ற இவ்வூரினர் திறத்து யான் என்செய்வேன்’ எனத் தலைவி சினந்து கூறியது.

இதன்கண், தலைவி “என் உயவுநோய் அறியாது துயில் கின்ற இவ்வூர்க்கு யான் மூட்டுவேனே! தாக்குவேனே! கூவு வேனே என்செய்வேன் எனச் சினந்து கூறுகின்றாள்.

உஅ. மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பேற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே.

—ஔவையார்.

(இ - ள்.) அலமரல் அசைவளி அலைப்ப - சுழல்கின்ற வாடையாகிய வீசுங்காற்று வருத்தாநிற்ப, என் உயவுநோய் அறியாது - எனக்குண்டாகிய வருத்துதலையுடைய காமநோயின் கொடுமையை அறியாதே, துஞ்சும் ஊர்க்கு - இனிதே துயில் கொள்ளாநின்ற இவ்வூரின் திறத்தே, மூட்டுவேன் கொல் - என் னிலையை அவர் அறியுமாறு மூளச்செய்து அறிவிப்பேனோ, தாக்குவேன் கொல் - அன்றி அவர் மெய்யிற் புடைப்பேனோ, ஓர் பெற்றி மேலிட்டு - ஏதேனும் ஒன்றனைத் தலைக்கிடாக மேற் கொண்டு, ஆஅ - அந்தோ, ஒல்லெனக் கூவுவேன் கொல் - ஒல லென்னும் முழக்கம் உண்டாகும்படி கூப்பிடுவேனோ, யானும் ஓரேன் - யானும் யாதுசெய்வதென்று தெரியகில்லேன.

விளக்கம் :—மூட்டுதல் - தான் மறைவாகக் கொண்டுள்ள இக்களவு மணத்தைச்சியை அவர் தினையுமாறு அறிவித்தல். தாகுதல் - உறங்கு வோ அது தீத்தெழும்படி புடைத்தல். ஆஅ, என்றது ஆற்றுமையால் எழுந்த இரக்கக் குறிப்பு. இங்ஙனம் கூறாது ஆவென்றும் ஒல்லென்னும் ஒலியுண்டாகவும் என்பாரும் உளர். ஒல் - ஒலிகுறிப்பு - ஒல்லென்னும் ஓசையுண்டாகும்படி என்க. கூவுதல் - உரக்கக் கூப்பிடுதல். மூளச் செய்தல் மனத்தானும் கூவுதல் மொழியானும் தாக்குதல் உடலானும் நிகழுவனவாகலான், என் மனமொழி மெய்களான் முயன்ற இவ்வர்க்கு அறிவிப்பேனோ என்றவாறு.

துஞ்சும் ஊர் என்றது, தான் இத்துணைத் துன்பமுறுதலையும் உணராது இன்றுயில் கொள்ளும் செவிலி நற்றாய் முதலியவரை எதிர்மை காட்டி வெறுத்துக கூறியவாறும். மூட்டுவேன் என்பதும் பாடம். மூட்டுதலும் தாக்குதலும் மெய்யின் தொழிலாய் ஒன்றுகலின், மூட்டுவேன் என்றபாடங்கொண்டனர் முதுபெரும புலவர் ரா. ஸ்ரீராகவ ஐயங்கார் அவர்கள்.

அசைவளி என்பதற்கு - அசைந்து வருகின்ற தென்றற் காற்று என்றனர் உ. வே. சா. ஐயரவர்கள். வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் கூதிர்காலமாகலின் வளி ஈண்டு வாடையே ஆதல் காண்க.

பாட்டு - உக : தலைவன் கூற்று

துறை :—இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன் இவர் எம்மை மறுத்தார் என்று வரைந்துகொள்ள நினையாது பின் னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக கூறியது. அஃ தாவது, தலைவியை இரவின்கண் வந்து கூடிச் செல்லும் தலை வனை வரைந்துகொள்ளறபொருட்டு இரவின்கண். இனி வாராதே கொள் எனை, ஏதுக் காட்டித் தோழி மறுத்தாளாக, அவள் கருத் தறியாது பின்னும் அவன் இரவுகுறியை விரும்பும் தன் நெஞ் சினை நோக்கி அக்கூட்டம் இனி அரிதாம் என்பதுபடக் கூறியது.

இதன்கண், 'நெஞ்சே நீ பெறுதற்கரிய தொன்றினைப் பெற விரும்புகின்றனை; அதுபற்றிப் போராடவும் செய்கின்றனை; நின் போராட்டம் நின் சொல்லைத் தழீஇக் கேட்குநர்ப் பெறின் மிகவும் நன்றேயாம்; அங்ஙனம் கேட்பாரைத்தான் பெறுகின்றிலை' என்று தலைவன் கூறுகின்றான்.

உஉ. நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதவா உற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதால் அம்மநின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

—ஔவையார்.

(இ - ள்.) நெஞ்சே - என் நெஞ்சமே!, நல்லுரை இகந்து புல்லுரை தாஅய் - நல்ல மொழிகள் நீங்கிப் புல்லிய மொழிகள் பரக்கப்பட்டு, பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல - முகில் துளிக்கும் நீரை எதிர்ந்துள்ள பசிய மட்கலம் போல, உள்ளந் தாங்கா வெள்ளம் நீந்தி - உளந்தாங்கலாற்றாத ஆசைப் பெருக்கில் நீந்தாநின்று, அரிது அவாவுற்றனை - நின்னைப் பெறுதற்கரிய தொன்றினைப் பெறுதற்கு விரும்பாநின்றனை, உயர் கோட்டு மகவுடை மந்திபோல - உயர்ந்த மரக்கொம்பின்கண் உள்ள குட்டியை உடைய மந்தி அதனை அகனுறத் தழுவிக் கொள்ளுமாறு போல, அகன் உறத் தழுவிக் கேட்குநர்ப்பெறின் - உள்ளத்தே பொருந்துமாறு தழுவி நினது குறையைக் கேட்பாரை நீ பெறுவாயாயின், நின் பூசல் பெரிதும் நன்றால் - நின்னுடைய ஆரவாரம் மிகவும் நன்றேயாகும்

விளக்கம்:—அங்ஙனம் நின்பூசலை அகனுறத் தழுவிக் கேட்பாரின் மையின் உன்பூசல் பயனின்றாகும் என்பது கருத்து. நல்லுரை - தன் விருப்பத்திற் கிணங்கி இரவுக்குறியில் வரவுடன்படுதல். புல்லுரை இரவுக்குறி மறுத்தல். இரவுக்குறி மறுக்கும் தோழி அதற்குக் காரணம் பல கூறி மறுத்தலால் அம்மொழியின் விரிவுடைமையைத் தாஅய் என்றான். தாஅய் - பரக்கப்பட்டு நல்லுரை அரிதாகிப் புல்லுரையே பெரிதும் பரவுகின்றது என்று புலந்தவாறு. நல்லுரை - புகழ் என்றும், புல்லுரை - பழி என்றும் கூறிப் புகழ் இகந்து பழி பரவுமாறு அரிதவாவுற்றனை என்றான் என்பாருமுளர். இரவுக்குறி விரும்புதல் புகழ் ஒழியவும் பழி பரவவும் ஏதுவாகுமையின் அஃதுரையன்றென்க. பெயல் நீர் - முகில் துளிக்கும் மழைநீர். பெயல் நீர் ஆசைவெள்ளத்திற்கும் அதனைத் தாங்காது உருகும் உள்ளம் பசுமட்கலத்திற்கும் உவமை. பசுமட்கலம் - சுடப்படாத குயக்கலம். அது தண்ணீர் பட்டவுடன் உருகி அழிதலின் எண்ணியவுடனே உருகும் உளத்திற்கு

உவமையாக்கினன். நீந்துதல் அவ்வாசை வெள்ளத்திலேயே கரை காணாது கிடந்து உழத்தல். இங்ஙனம் உழத்தலோடன்றிப் பெறற்கரிய தலைவியையும் பெற எண்ணுகின்றாய் என்பான் அரிது அவாவுற்றனை என்றான். அரிது - தலைவியைப் பெறும் பேறென்க.

அவ்வவா நிறைவேறாது அரிதாதற்குக் காரணம், தன் மொழியை ஏற்றுக் குறையுடம் படாமையாகும். குறையுடம் படுவாராயின் இம் முயற்சி மிகவும் நன்றேயாம். அங்ஙனம் அவர் உடம்படாமையானே நின் பூசல் மிகவும் தீதேயாயிற்று என்றானும். மகவுடை மந்தி உயர் கொம்புகளில் இருக்கும்போது தன்னைத் தழுவியிருக்கும் குட்டியைத் தானும் தழுவிக் கோடல் இயல்பு. அங்ஙனமே அவர் மொழியைத் தழுவிக் கூறும் உன் உரையை அவர் தழுவுவாராயின் நின் அவா நன்றும் என்க. அம்ம - அசை. பெறினே என்றது - பெற்றாயில்லையே என்றவாறு.

பசுமட்கலம் நீர் பெய்துழி உருகிக்கெடும் என்பதை,

"ஈர்மட் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்கேற் றாங்கு" (நற் : ஈ ரு அ)

என்றும்,

"பசுமட் கலத்துணீர் பெய்திரியற்று" (குறள் : ஈ ரு ரு)

என்றும் பிறரும் கூறுமாற்றான் உணர்க.

பாட்டு - ஈ ரு : தலைவி கூற்று

துறை :—தலைமகள் கனவு நலிவுரைத்தல். அஃதாவது, 'அவா நின்னை வரைந்து கோடற் காரணத்தாற் பிரியவும் நீ ஆற்றுவாகின்றதென் ?' என, விளைய தோழிக்குத் தலைமகள் 'யான் ஆற்றியுளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙனம் நலிந்தது' என்று கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கிப், 'பொய் வல்லாளராகிய தலைவர், என் மெய்யோடு பொருந்திய நனவுபோலும் கனவு தோன்றி மருட்டலாலே விழிப்புற்றுத் தலைவர் உளர் எனக் கருதிப் படுக்கையைக் கைகளாலே தடவி ஏமாற்றமடைந்தேன்' என்று கூறுகின்றாள்.

ஈ ரு. கேட்டிசின் வாழி தோழி அல்கற்
பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய
வாய்த்தசைப் பொய்க்கனை மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே.

—கச்சிப் பேட்டு நன்னாகையார்.

(இ - ள்.) தோழி - தோழியே, வாழி கேட்டிசின் - யான் கூறுவதைக் கேட்பாயாக, அல்கல் - நெருநல் இரவின்கண், பொய்வலாளன் மெய் உற மரீஇய - பொய்யை மெய்போலச் செய்யும் வன்மையுடைய தலைவர் என் உடலோடு பொருந்த அணைந்த, வாய்த்தகைப் பொய்க் கனவு மருட்ட - நனவுபோலும் தன்மையையுடைய பொய்யாகிய கனவுத்தோன்றி மயக்கா நிற்ப, ஏற்று எழுந்து - உறக்கம் நீங்கி உணர்ச்சி ஏற்று எழுந்து, அமளி தை வந்தனன் - தலைவர் ஆண்டுளராகக் கருதிக் கை யாலே படுக்கை முழுதும் தடவாநின்றேன், வண்டுபடு குவளை மலரில் சாஅய் - வண்டுகள் மொய்த்து உழக்கிய குவளை மலரைப் போல நலிந்து, மன்ற தமியேன் - தேற்றமாகத் தனித்தவளா யினேன், யான் அளியேன் - ஆகலால் யான் இரங்குதற் குரி யேன்.

விளக்கம் :—கேட்டிசின் என்றதன்கண் சின் முன்னிலையசை. வாழி - அசைநிலை. அல்கல் - இரவு. ஈண்டு முன்னுள் இரவிற் கண்ட கனவே கூறுகின்றுழி ஆகலின். நெருநல் இரவென்க. பொய் வலாளன் என்றது நின்னிற பிரியேன் பிரிவின் ஆற்றேன் எனப் பொய்யை மெய்போலப் பேசவல்லான் என்றவாறு. கனவிடத்தும அவன் பொய்யை மெய்யாகக் கருதும்படி செய்தான் இஃதொரு மாய மிருந்தவாறு என வியததற்கும பொய்வலாளன் என்றது இடந் தருதல் அறிக. எனவே நனவினும் பொய்வல்லான் கனவினும் பொய்வல்லான் என்ற படியாம். மெய்யுறல் மரீஇய கனவு வாய்த் தகைக் கனவு எனத் தனித்தனிக் கூட்டுக. மெய்யுறல் - மருவுவது போலத் தோன்றிய கனவு, நனவுபோலத் தோன்றிய கனவு என்க. வாய்த்தகை - உண்மையாம் தன்மை. அஃதாவது நனவு போன்றது என்றவாறு.

மரீஇய - மருவிய - புணர்ந்த. பொய்க்கனவு என்றது பொய்யா யிருந்தும் மெய்போல மருட்டிய அதன் ஆற்றலே வியந்தபடி. மருட் டல் - மயக்குதல். ஈண்டு பொய்யை மெய்யாகக் கருதுதல். மருட்ட - மருட்டலாலே என ஏதுப் பொருளில் நின்றது. ஏற்றெழுதலாவது- உணர்ச்சி ஏற்று உறக்கத்தினின்றும் எழுதல். அமளி படுக்கை. தை வருதல் - தடவிப்பார்த்தல்.

வண்டுகள் மொய்த்தலானே குவண்டமலர் காமநோயானே நலிந்த உளத்திற்கு உவமை என்க. சாஅய் - நலிந்து ; வருந்தி. தமி யேன் - தனியேன். மன்ற - தேற்றமாக ; நிச்சயமாக. அளியேன் - இரங்குதற்குரியேன்.

காம மிக்கவர் இவ்வாறு கனவுக்கண்டு மருளுதல் உண்மையை,

"நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலின் உண்டென் உயிர்" (குறள் - கூகூகூ.)

"நனவினுற் கண்டனூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது" (குறள் - கூகூகுஎ.)

என்றற் றொடக்கத்துத் திருக்குறள்களானு மறிக.

பாட்டு - நக : தலைவி கூற்று

துறை :—நொதுமலர் வரைவுழித் தோழிக்கு அறத்தொடு நின்றது. அஃதாவது, தலைவி ஒரு தலைவனோடு களவுமணம் புணர்ந்து, கற்புக்கடம் பூண்டமையை அறியாது அயலார் அவளை மகட்பேசி வந்தவிடத்து அதுகாறும் தன் தலைவனைப் பற்றிய செய்தியை வெளியிடாத தலைவி, அதனைத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழிக்கு, 'யானும் ஓர் ஆடுகள மகள்; என் கைவளை நெகிழ்த்த தலைவனும ஓர் ஆடுகள மகனேயாவன்; அவன் இப்போது யாண்டுள்ளானோ? யான் அவனை யாண்டும் தேடியும கண்டேனில்லை' என்று தானொரு தலைவனோடு கேண்மை கொண்டமையை வெளிப்படுத்துரைக்கின்றாள்.

நக. மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடு நிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே.

—ஆதிமந்தியார்.

(இ - ள்.) மள்ளர் குழீஇய விழவினானும் - மறவர்கள் கூடியுள்ள சேரி விழாவிடத்தும, மகளிர் தழீஇய துணங்கை யானும் - மகளிர் தம்முள் தழுவியாடும் துணங்கைக் கூத்தின் கண்ணும், யாண்டும் - இவையல்லாத பிறவிடங்களிலும், மாண் தக்கோனைக் காணேன் - தேடியும் மாட்சிமை மிக்க தகுதி யுடைய தலைவனைக் கண்டேனில்லை, யானும் ஓர் ஆடுகள மகளே - இங்ஙனம் யாண்டுஞ் சென்று தேடுதலானே யானும் கூத்தாடும் களத்திற்குரிய மகளே ஆயினேன், என்கைக் கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த - எனது கையிலணியப்பட்ட சங்கினை அறுத் தியற்றிய விளங்கும் வளையல்கள் கழலும்படி செய்த, பீடு கெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே - பெருமை பொருந்திய தலைவ னும் என்னைல் ஆடுகளந்தோறும் தேடப்பட்டு ஆடுகள மகனே ஆயினன்.

விளக்கம்:—மள்ளர் - போர் மறவர். குழீஇய - குழுவிய ; கூடிய. விழவு - சேரிவிழா. திருவிழாக் காலங்களில் போர் மறவர் சேரிகளிலே கூடி விளையாட்டுப் போர் நிகழ்த்துதல் வழக்கம். இதனை "மாயோன் மேய ஓணநன்னாள்.....மறங்கொள் சேரி மாறுபொரு செருவில் மாறு தற்ற வடுப்படு நெற்றிச் சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்" (நிகக—சு.) எனவரும் மதுரைக் காஞ்சியானும் உணர்க.

இனி, மகளிர் துணங்கைக் கூத்தாடும் வழக்கத்தை "நிறைதொடி கல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக் கரையிடைக் கிழிந்த நின் காழகம் வந்துரையாக்கால்" (கலி எங: கசு - எ.) எனவரும் கலியானும் அறிக. மகளிர்ஆடும் துணங்கைக் கூத்திற்றலைக் கொள்பவன் என்பாள் ஆடுகள மகன் என்றாள் என்க.

துணங்கை - ஒருவகைக் கூத்து. அஃதாவது, "முடக்கிய இருகை பழுப்புடை ஒற்றத், துடக்கிய நடையது துணங்கையாகும்." (திவாகரம்) என்ப. மாண்தக்கோன் - மாட்சிமையாலே தகுதியுடையோன் என்க. இதனால் தலைவனுடைய குடிப்பிறப்பு முதலிய சிறப்புக்களை உணர்த்தியவாறு. யானும் ஓர் ஆடுகளமகளென்றது, குலமகளிர் போகக் கூடாத இடமெல்லாம் போய்த் தேடினேன் என்பது பற்றித் தன்னை இகழ்ந்து கூறியவாறு. என்கை என்றது, நிறையழியாத் திண்மையுடைய என் கைவளையலையும் நெகிழ்த்தற்குரிய தோடையான் என்பது தோன்ற நின்றது.

இதனால் என்னைக் காதலிக்கப்பட்டான் ஒரு தலைவன் உளன் எனத் தலைவி தோழிக்கு அறிவித்தவாறறிக.

இப்பாடல் கரிகான் மன்னன் மகளாராகிய ஆதிமந்தியார் என்னும் நல்லிசைப் புலமையாட்டியார் தங் கணவனைக் காணுது தேடிய பொழுது கூறியதென்ப. இவர் கணவன் பெயர் ஆட்டனத்தி என்ப. இதனை "யானே காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து ஆதிமந்திபோலப் பேதுற்று அலந்தனன் உழல்வேன் கொல்லோ" (அகம். சருி.) எனவரும் வெள்ளிவீதியார் பாட்டானும்,

"ஆட்டனத்தியைக் காணீரோவென
நாட்டி னூட்டின் ஊரி னூரின்
கடல்கொண டன்றெனப் புனல் ஒளித்தன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
ஆதிமந்தி போல" (அகம். உருசு)

என வரும் அகப் பாட்டானும் உணரலாம்.

இச செய்யுள் சுட்டியொருவர் பெயர் கூறப்படாமையின் அகமாய் இதன்கண் கோக்கப்பட்டதென்க.

பாட்டு - கூஉ : தலைவன் கூற்று

துறை :—பின்னின்றான் கூறியது. அஃதாவது, தோழியின் வாயிலாய்த் தலைவியைப் பெறுகிழைந்து தோழியை இரந்து பின்னின்ற தலைவன் அவள் தன் குறையை ஏற்றுக் கொள்ளாமை கண்டு மீண்டும் நெருக்கிக் கூறியது.

இதன்கண், 'நான் தலைவியைப் பிரிந்திருக்கவும் ஆற்றேன்; நீ மறுக்கின்றாய், யான் மடலேறும் வாயிலாய்த் தலைவியை அடைய முயலின் அச் செயல் அவட்குப் பழி விளைக்கும். அது செய்யா வழி யான் வாழ்தலும் இயலாது. ஆதலின் உயிர் நீத்தலே நன்று' எனத் தலைவன் தோழிக்குக் கூறுகின்றான்.

கூஉ. காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) காலையும் பகலும் கையறு மாலையும் ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்று - காலைப்பொழுதும் நண்பகற் பொழுதும் செயலறுதற்குக் காரணமான அந்திப்பொழுதும் ஊர்முழுதும் துயிலா நின்ற இடையிரவும் விடியற்காலமும் என்ற, இப்பொழுது இடைதெரியின் - இப்பொழுதுகளின் செவ்விகள் தெரியப்படுமாயின், காமம் பொய் - அங்ஙனம் தெரிந்துகொள்வோருடைய காமம் உண்மைக் காமமன்று, பிரிவு தலைவரின் - இடைதெரியா இக்காமக் கூட்டத்திற்குப் பிரிவு வருமாயின், மா என மடலொடு மறுகில் தோன்றி - இஃ தொரு குதிரை எனக் கண்டாரிகழப் பனைமடலாற் செய்த குதிரையோடே தெருவிலே வெளிப்பட்டு, தெற்றென - கண்டோ ரெல்லாம் இவனே இங்ஙனே செய்தாள் இவளெனத் தெளிந்து கொள்ளும்படி, தூற்றலும் பழி - தலைவியின் குறை எடுத்துரைத் தலும் அவட்குப் பழிதரும் செயலாம், வாழ்தலும் பழி - அப் பழி தூற்றலை அஞ்சுமிடத்து யான் இவ்வுலகில் வாழ்தலும் எனக்குப் பழிதருமே செயலாம்.

விளக்கம் :—அதனால் நீ குறை நேராயாயின் யான் பிரிதல் ஒரு தலை என்றுணியிறது காலை முதலிய கால வேற்றுமைகள் காமத் தைக் கொண்டார்க்குத் தோற்றமாட்டா என்றான். என்றது, காமம் உளத்தை முழுதும் தன் வயப்படுத்திவிடும் இயல்பிற்றாகலின், அதனாற் பற்றப்பட்டார் அஃதொன்றனையே அறிவதல்லது பிறிதொன்றனையும் அறியமாட்டார் என்றவாறு. ஈண்டுக்கூறிய காமவியல்பு,

"எனைநான் என்பதறியேன் பகல்
இரவாவதும் அறியேன்" (திருவாசகம், உயிருண்-கூ)

என்ற வீட்டின்பவியலை குறித்தோதிய ஆன்றோர் அநுபவ மொழியுடன் ஒத்திருத்தல் உணர்க. இடைதெரிதல் - ஒன்றற்கொன்று வேற்றுமை தெரிதல்.

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்" (குறள் - கூஉஎ)

எனறபடி காமநோய் கொண்டார் மாலைப்போதில் கையறு நிலை எய்து லின், மாலையைக் 'கையறு மாலை' என்றான். 'ஊர்துஞ்சுயாமம்'

என்றது, யான் மட்டும் அஞ்சாத யாமம் என்னும் குறிப்புடைத்தாத லறிக. சிறுபொழுது ஐந்தென்பாரும் ஆறென்பாருமாய் ஆசிரியர் இருதிறப்படுவர். இப்பாட்டுச் சிறுபொழுது ஐந்தே கூறினமை அறிக.

மாவென - குதிரையாகக் கொண்டெனினுமாம். மறுகு - வீதி. தலைவி எனக்குச் செய்த குறையைப் பலரறியத் தூற்றுங்கால் அச் செயல் அவட்குப் பழியாவதோடு பிறர் பழிதூற்றுமாற்றால் யானும் பழிக்கப்படுவேன் என்பான், பொதுவில் 'தூற்றலும் பழியே' என் றான். மடலேறுது வாழ்வேனையின் என் கையறுநிலை பழிக்கு என்னை ஆளாக்குதல் ஒருதலையாகலின், வாழ்தலும் பழி என்றான். எனவே இவ்வெல்லாந்தீரச் சாதலே நன்றென்றவாறும்.

பாட்டு - ௩௩ : தலைவி கூற்று

துறை :—வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில்நேர்வாள் கூறியது. அஃதாவது, தன்னெடு ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்க்கும் பொருட்டுத் தலைவனால் விடப்பட்ட பாணன், தலைவியைக் கண்டு பேசுங்கால் ஊடல் தீர்ந்த தலைவி அக்குறிப்பைப் பாணன் அறியுமாறு தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி 'அன்னாய் இப் பாணன் ஓர் இளமாணாக்கன். தனதல்லாத வேற்றூரிடத்தும் பெரிய தலைமைத் தன்மையுடையனாகக் காணப்படுகின்றான். இவன் இவனுடைய ஊர் மன்றத்தே எத்தகைய சிறப்புடையன் கொல்லோ?' என, வியந்து கூறுகின்றாள்.

௩௩. அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.

—படுமரத்து மோசிகீரனார்.

(இ - ள்.) அன்னாய் - தோழியே, இவன் ஓர் இளமாணாக் கன் - இப்பாணனைக் காண் இவன் ஆண்டு முதிராத இளமாணாக் கனாகவே உள்ளான், இரந்து ஊண் நிரம்பா மேனியொடு - ஏற்றுண்ணும் உணவினையுடைமையின் நன்கு வளர்ச்சி பெறாத உடலினையுடையனாயிருந்தும், விருந்தின் ஊரும் பெருஞ்செம்ம லன் - தனக்குப் புதியதாகிய இவ்வேற்றூரிடத்தும் பெரிய தலைமையுடையனாக விளங்குகின்றான், தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ - இவன் தன்னுடைய ஊர் மன்றத்தே எத் தகைய சிறப்புடையனோ!

விளக்கம்:—தோழியைத் தலைவி அன்னை என்றலும் தலைவியைத் தோழி அன்னை யென்றலும் மரபு. இதனை,

"அன்னை என்னை யென்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்ரு மரபின என்மனார் புலவர்" (தொல்-பொருள்-நூஉ)

எனவரும் நூற்பாவான் உணர்க. இளமாணாக்கன் - ஆண்டானும் கல்வியானும் முதிராத இளைஞனாகிய மாணாக்கன் என்க. இரந்தூண் - ஏற்றுண்ணும் உணவு. நிரம்பாமை - ஈண்டு மேனி வயதிற்கேற்ற வளம்பெறுமை என்க. நிரம்பாமைக்கு இரந்தூண் குறிப்பேதுவாதலுணர்க. மேனியொடும் என்பதன்கண் சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் ரொக்கது. பெருஞ் செம்மல் - பெரிய தலைமைத்தன்மை. ஈண்டுப் பாணனுக்குத் தலைமைத் தன்மையாவது தலைவனுக்குத் தூதாகத் தான் மேற்கொண்டு வந்த செயலை நன்கு முற்றுவித்தல்.

"அறிவுரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள்-ஈஅச)

என்பது திருக்குறள். வினை இனிது முடித்தற்கு இவை மூன்றும் ஏதுவாம் என்பது தூதிலக்கணம் நிரம்பிய கல்வியும் தோற்றச் சிறப்பும் ஆண்டு முதிர்வும் இல்லாதிருந்தும் இவன் இளமையுறப் பேசாநின்ரூன், என அவனது இயற்கை மதி நுட்பத்தைப் பாராட்டியவாறு.

விருந்தின் ஊர் - புதிய ஊர்; என்றது அவனுக்குப் புதிதாகிய வேற்றூர் என்றவாறு. இன் - சாரியை. தன்னியல்பு பிறரான் நன்கறியப்படாத இப்புதிய ஊரினிடத்தேயும் பெருஞ்செம்மலன் ஆயினன். இவனை நன்கறியும் அவனுடைய ஊர் மன்றத்தே இவன் பெரிதும் சிறந்த செம்மல் உடையன் ஆதல் ஒருதலை என்று வியந்தவாறு. இங்ஙனம் தன்னை வியத்தல் தான் மேற்கொண்டு வந்த வினையின்கண் அவட்கு உடன்பாடு உண்டெனப் பாணன் அறிதற்கு ஏதுவாதலறிக.

இனி விருந்தின் ஊரும் என்றதற்குப் "புதிதாகப் பெறும் விருந்தின் பொருட்டுச்செல்லும்" என்றும், "பலர் அழைத்து இடும் விருந்திடையூடும் யானை, பரி, தேர் இவற்றின் ஊர்ந்து செல்லும்" என்றும் கூறுவாருமுளர்.

பாட்டு - நச: தோழி கூற்று

துறை:—வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது: அஃதாவது, தலைவியால் விரும்பப் பட்ட தலைவனே மகட்பேசி வரைந்துகொள்ள வந்துளனான் என்ற செய்தியை ஊரவர் மேலிட்டுச் சொல்வாளாய்த் தோழி தலைவிக்கு அறிவுறுத்தியது.

இதன்கண், தோழி, 'தலைவனே மணம் பேசி வந்துள்ளான் ஆதலின், இவ்வூர் இனி ஒவலர் ஒறுப்பவும் தேறலர் மறுப்பவும்

தமியராய் உறங்கும் வருத்தமின்றுய் இனியது கேட்டின் புறுவ தாக' எனத் தலைவி கேட்பக் கூறுகின்றாள்.

நசை. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமியர் உறங்கும் கௌவை யின்றுய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனைஅ தியானெயங் குருகின் கானலம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே.

—கொல்லிக் கண்ணனார்.

(இ - ள்.) ஓவலர் ஒறுப்பத் தேறலர் மறுப்ப - விட்டு நீங்காத தாயர் வைது ஒறுக்கவும் களவிற் கூடியது தேறாத தந்தை முதலியோர் தலைவர்க்கு மணமறுக்கா நிற்பவும், தமியர் உறங்கும் கௌவை இன்றுய் - தலைவரைக்கூடப் பெறாது தனித் துள்ள தலைவியர் தமியராக உறங்கும் வருத்தம் இல்லாதவராய், இவ்வூர் இனியது கேட்டு இன்புறுக - இவ்வூரிலுள்ளார் இனிய செய்தி யொன்றனைக்கேட்டு இன்புறுவாராக; அஃதியாதெனின், முனைஅது - தாயர் மறுத்தற்கும் வரைவுடன் படுதற்கும் முன்னரேயும், கானலம் யானெயங்குருகின் பெருந்தோடு - கடற் கரையின்கண் உள்ள வண்டாழ்ங் குருகின் பெரிய தொகுதி, அட்டமள்ளர் ஆர்பபு இசை வெரூஉம் - பகைவரைக் கொன்ற மறவரது ஆரவார முழக்கத்தினை அஞ்சுதற்குக் காரணமான, குட்டுவன் மாந்தை அன்ன - குட்ட நாட்டரசனுடைய மாந்தை என்னும் நகரத்தை ஒத்த, எம் குழல் விளங்கு ஆய் நுதல்- எமது கூந்தல் புரண்டு விளங்காநின்ற பலரும் ஆராய்ந்து நன்றென்றற்குக் காரணமான நுதலையுடையாளுக்கு, கிழவனும் அவனே - உரிய தலைவனும் இப்பொழுது தமரால் வரைவுடன் படப்பட்டவனே ஆகலான்.

விளக்கம்:—ஓவலர் ஒறுப்பத் தேறலர் மறுப்ப என மாறுக. ஓவலா - தலைவியைவிட்டு நீங்காத செவிலி, நற்றுய் முதலியோர். அவர் ஒறுத்தலாவது, புறம்போகாது இற்செறித்தலும் காம் துயிலாதிருந்து காத்தலும் பிறவும் செய்தல் தேறலர் - தன்னையர், தந்தை முதலியோர்- இவர் தலைவன் வரைவுவேண்டுழி, இத்தலைவன் தலைவியோடு இயற் கைப் புணர்ச்சி பெற்றமை தெளியாது மறுத்தனர் என்றபடி. முன்னர் மறுத்துப் பின்னர்த் தலைவனுடைய தகுதி கண்டு உடன்பட்டனர் என்க. தமியா - தனித்தவராய். உறங்குங்கௌவை என்றது, ஆற் றுமையாலே கண்படை இலதாகவும் தமர்க்கஞ்சி உறங்குவாள்போல் வருந்திப் பொய்த்துயில் கோடல் என்றவாறு. எனவே, ஒறுத்தலால் உண்டாம் கௌவையும், மறுத்தலால் உண்டாம் கௌவையும், தமியர்

உறங்குதலான் உண்டாம் கௌவையும் ஒருசேர இலவாகும்படி இனியது கேட்டின்புறுக என்றவாறு. இனியது: வரைவுமலிந்த செய்தி. இனி வரைவின்கண் எழும் இன்னிய இசை என்பாருமுளர். இசையினும் இச்செய்தியே இனிதாகலின் செய்தியென்றலே நன்றென்க.

தமியர் என்றும், இவ்வூரார் என்றும் படர்க்கைப் பலர்பாலிற் கூறினளேனும், ஈண்டு அது தலைவியைச் சுட்டியே பேசப்பட்டதென்க. எனவே, 'அன்னாய் நீ இனி எத்தகைய கௌவையுமிலையாய் இனியது கேட்டின்புறுக; அஃதியாதெனின் நமர் வரைவுடன்பட்டனர்; யாருக்கெனின், நின் தலைவனுக்கே' என்றறிவுறுத்தியபடியாம்.

முனைஅது - வரைவுடன்படுதற்கு முன்னரே என்க. முனைது ஆய்தற் கிழவனும் அவனே என்றது பினைதும் அவனே தலைவனைத் தமரால் உடன்படப்பட்டான் என்றறிவித்தவாறும்.

யானையங்குருகு - வண்டாழ்ங்குருகு என்பார் நச்சினார்க்கினியர். (மதுரைக் - ஈஎசை. உரை) ஆனைச்சாத்தன் என்பாரும் உளர். அட்டமள்ளர் - பகைவரைக்கொன்ற வீரர். தோடு - தொகுதி. குட்டுவன் - குட்டநாட்டையுடைய மன்னன், சேரனுமாம்.

யானையங்குருகு தாம் வெருவ வேண்டா ஆர்ப்பிசையை வெரூஉம் என்றது, தலைவி அஞ்சவேண்டாதவருக்கு அஞ்சுகின்றாள் என்றபடி. மரந்தை என்று பாடங்கொள்வாருமுளர்.

பாட்டு - நெய்தல் : தலைவி கூற்று

துறை:—பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்தமையால் பெரிதும் வருந்திய தலைவியைத், 'தோழி நீ இங்ஙனம ஆற்றுயாகின்றது கோரிதோ?' என்றுட்குத் தலைவி ஆற்றுமைக்குக் காரணம் கூறியது.

இதன்கண், தலைவி தோழியைநோக்கி, 'என் கண்கள் அவர் பிரிந்த காலத்தே அழுது தடைசெய்யாதுடன்பட்டு, அவர் பிரிந்த பின்னர் அழுதலாலே பெரிதும் நாணில வாயின' என்று கூறுகின்றாள்.

நெடு. நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபோ தியவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.
—கழார்க்கீரனெயிற்றி.

(இ - ள்.) நாள் நேர்பு - வேனிற் பருவத் தொடக்கத்தே மீண்டுவருவல் என்ற தலைவர்க்கு அவர் பிரியுங்கால் அந்நாளை யுடம்பட்டுப் பின்னர், சினைப் பசும்பாம்பின் சூல் முதிர்ப்பு அன்ன-கருக்கொண்ட பச்சைப் பாம்பினது சூலினது முதிர்வினை

ஒத்த, கனைத்த கரும்பின் கூம்பு பொதியவிழ - பருத்த கரும்பினது குவிந்த அரும்பு மலரும்படி, நுண் உறை அழி துளி தலைஇய - நுண்ணிதாகத் தூவுகின்ற முகிலினின்றும் அழிந்து வீழ் மழைத்துளியோடு கூடிய, தண்வரல் வாடையும் - தண்ணிதாக வருதலையுடைய வாடைக்காற்றையுடைய கூதிர்க் காலத்தும், பிரிந்திசினோர்க்கு அழல்-பிரிதுறையும் தலைவர் பொருட்டு அழுதலாலே, மன்ற எம் கண் நாணில - தேற்றமாக எம்முடைய கண்கள் நாணம் இல்லாதன ஆயின.

விளக்கம்:—நாள் சேர்தலாவது, போர் முதலியன குறித்துப் பிரியும் தலைவன் யான் இன்ன காலத்தே மீண்டு வருவன் அதுகாறும் ஆற்றியிரு என்று தேற்றுங்கால் அதற்கு உடம்பட்டிருத்தல் வேனிற் பருவத் தொடக்கத்தே வருவன் எனக் கூறிச சென்றான் ஆகலின் கூதிர்பருவத்து வாடைக்கு ஆற்றாது அழுதல் நாணின்மைக்கு ஏதுவாயிற்று. கூதிர்ப் பாசறை வேனிற் பாசறை என்றிரு பாசறையிருப்புக்களுள், ஈண்டுக் கூதிர்ப் பாசறைக்கண் தலைவன் பிரிந்துறைகின்றானதல் வாடை என்றதனால் உணர்க.

இனி, வாடைப்போதிற்கு முன் வருவன் என்று கூறிப் பிரிந்தான் என்பாரும் உளர். கூதிர்ப்பாசறைக்கு அப்பருவ வரவின் முன்னமே வருதல் கூடாமையினானும், வாடைக்கு முன் வருவன் எனறான் வாராமைக்குக் கண்கள் அழுதன வெனின், அவை நாணில என்றல் பொருந்தாமையானும், அதுபொருந்தாமை யறிக. வாடைப்போதிற் பிரிந்துறைதற்கு முன் உடன்பட்டும் பின்னர் வாடைக்கு ஆற்றாதழுதலே நாணிலவாதற்கு ஏதுவாம் என்க.

சினைப் பசும் பாம்பென்புழி, சினை என்றது வாளா பொருட்கேற்ற அடைமாத்திரையாய் நின்றது. கனைத்த - பருத்த. கூம்பு - மலர்ப் பொதி. நுண் உறை - நுண்ணிதாகத் தூவுகின்ற துளி என்க. கார்ப் பருவம் போன்று கூதிர்ப்பருவத்தில் பெருமழையின்றிச் சிறுதூற்றலே உளதாகலான், நுண்ணுறை என்றார். அழி துளி - முகிலினின்றும் அழிந்து வீழ் துளி என்க. பெருந்துளி என்பாரும் உளர் அழிதுளி-மிக்க துளி எனினுமாம், அழிமிகுதிப் பொருட்டாதலை "அழிபசி" என்னும் குறட்பகுதிக்குப் (உஉசு.) பரிமேலழகர் "மிக்கபசி" என உரை கூறுமாற்றானும் உணர்க. தலைஇய - கூடிய. பெய்த எனினுமாம். தண் வரல் வாடை - தண்ணிதாக வருதலையுடைய வாடை என்க. வாடை உடம்பட்ட நாள் ஆகலின், வாடையும் அழல் நாணுத் தகவுடைத தென்றார். அழலே என்பதன் கண் ஆன் உருபு தொக்கது. இது செய்யுள்விகாரத்தாற் றொக்கது என்பர், மயிலை நாதர் (நன் - ங்சுஉ.)

பாட்டு - ஙசு : தலைவி கூற்று

துறை:—வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாள் எனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்று வித்தது. அஃதாவது, வரைவின்பொருட்டுப் பொருளீட்டத் தலைவன் பிரிந்தானாக, அப்பிரிவினைத் தலைவி ஆற்றாள் எனத், தோழி வருந்

தினுள் ; அதுகண்ட தலைவி, 'நான் ஒருவாறுக ஆற்றியிருக்கின் றேன் ; அங்ஙனமாகவும் நீ என் பொருட்டு வருந்துவானேன்? வருந்தற்க' என்பதுபடச் சொல்லியது.

இதன்கண், 'குன்றநாடர் என் தோள் மணந்த காலத்தில் யான் நின்னைப்பிரியேன் என்று சூளுறவு செய்தனர். அதற் கிணங்க அவர் வந்திலர் எனின், அது அவர் செய்த தவறுகும். நான் ஒருவாறு ஆற்றியிருக்கின்றேன். அவர் செய்த தவறு னைக்கு நோயாகாதன்றே! ஆகாதாகவும் நீ எற்றிற்கு வருந்து கின்றனை வருந்தாதிரு' என்று தோழியைத் தலைவி தேற்று கின்றுள்.

நூசு. துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவரும் குன்ற நாடன்
நெஞ்சுகள னுக நீயலென் யானென
நற்றோள் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னனே.

—பரணர்.

(இ - ள்.) தோழி—, துறுகல் அயலது மாணை மாக்கொடி - பொற்றைக் கல்லின் பக்கத்தே உள்ளதாகிய மாணை என்னும் பெரிய கொடி, துஞ்சு களிறு இவரும் குன்ற நாடன் - துயில் கின்ற யானையின்மேற் படராநின்ற குன்றங்களையுடைய நாட் டிற்குத் தலைவன், நெஞ்சு களனுக நீயலன் யான் என - தன் நெஞ்சே அறியும் அவைக்களனுக நின்னையான் பிரியேன் என்று கூறி, நற்றோள் மணந்த ஞான்றை - எனது நல்ல தோள்களை அணைந்த பொழுது, அவன் தாவா வஞ்சினம் உரைத்தது - அத் தலைவன் கெடாத சூளுறவினைக் கூறியது, நோயோ தோழி நின் வயினனே - நோயாகுமோ நின்னிடத்தும் ஆகாதன்றே.

விளக்கம்:—துறுகல் - பொற்றைக்கல். இது யானை போறலை, "துறுகல் யானையிற் றோன்றும்," (குறுந்-உசுக) என்றும், மாசறக் கழுவிய யானைபோலப், பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்," (குறுந்-கசு) என்றும், "கூழை யிரும்பிடி கைகரந் தன்ன, கேழிருந் துறுகல்" (குறுந்-ககக.) என்றும் இந்நூலிற் பிறண்டும் வருதலானும் உணர்க.

மாணை மாக்கொடி - ஒரு காட்டுக் கொடி. மாக்கொடி என்பதற்குக் கரிய கொடி எனினுமாம். துஞ்சு களிறு இவரும் என்றது, தங்குகின்ற யானையைத் துறுகல் என்று கருதிப் படரும் என்றபடி. எனவே, நிலை பேறின்றித் திரியும் யானையை நிலைபேறுடைய துறுகல்லாகக் கருதி மாணைக் கொடிபடர்ந்து பின்னர் அந்த யானை போயபின் பற்றுக்

கோடற்று அலமருதல் போன்று, யான் சூளுறவின்படி உறுதியாய் நில்லாதானைப்பற்றி இதுபோழ்து அலமருகின்றேன் என்று உள்ளுறை காண்க. களன் - ஈண்டு வீரர்கள் வஞ்சினங் கூறும் அவைக்களன். தலைவன், தன்னெஞ்சே அவைக்களனுக்குக் கொண்டு தாவா வஞ்சினம் உரைத்தான் என்றவாறு. தாவா - கெடாத. வஞ்சினம் கெடப்படாதாகவும் கெடுத்தொழிந்தான் என்றவாறு. நீயல் - பிரிதல். நீயலென் - பிரியேன். நற்றோள் என்றது, அற்றை நாள் மெலியாதிருந்தமையையும் இற்றைநாள் மெலிந்தமையையும் கருதிக் கூறியபடியாம். நற்றோள் மணத்தல் - இடக்கரடக்கல். மற்று - அசை. வஞ்சினம் உரைத்து அதனிற் றவறியது அவனுக்கு நோயாகும், எனக்கும் அவனுக்கும் இன்பதுன்பம் ஒன்றாய் வருதலின் எனக்கும் நோயாம். ஆகவும், அவன் தவற்றிற்கு நாணி, யான் ஒருவாறு ஆற்றுவேனாகவும் அவ்வஞ்சினம் உனக்கும் நோயாகுமோ? ஆகாதன்றே; நீ ஏன் வருந்துகின்றனை? வருந்தற்க, என்று ஆற்றுவித்தாள் என்க. நோயோ என்றதன்கண் ஓகாரம் ஆகாமை குறித்து நிற்றலின் எதிர்மறைப் பொருட் டென்க.

நெஞ்சு களனாக என்பதற்கு "நின் நெஞ்சு இடமாக இருந்" தென் பாரும் உளர். நெஞ்சு இடமாக இருத்தலில் பிரிந்தபொழுதும் தவறு இலனாகலின், அஃதுரையன் றென்க.

பாட்டு - உள : தோழி கூற்று

துறை :—தோழி கடிது வருவாரென்று ஆற்றுவித்தது; அஃதாவது, தலைவன் பிரிவை ஆற்றுத பெரிதும் வருந்திய தலைவியை நோக்கி, அவர மிகவும் அன்புடையராகலின் விரைந்து வருவார் என்று கூறித தோழி தலைவியை ஆற்றுவித்தது

இதன்கண், 'தலைவியே! தலைவர நின்பாற் பெரிதும் விருப்பமுடையர். மேலும் அவர் சென்ற வழியின்கண் ஆண்யானை தன் பிடியானையின் பசிபோக்கும பொருட்டு யாமரத்தின் பட்டையை உரித்து அதன் நீரைப் பிடிக்கு ஊட்டும்; அங்ஙிகழ்ச்சியைக் காண்டலும் தலைவர் நின்னை நினைந்து மீள்வர்' என்று கூறித் தோழி தேற்றுகின்றாள்.

உள. நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) தோழி—, அவர் சென்ற ஆறு - தலைவர் சென்ற வழியின் கண்ணே, பிடி பசிகளைஇய - பெண் யானைகளின் பசியை அகற்றும் பொருட்டு, பெருங்கை வேழம் - பெரிய துதிக்கையை உடைய களிற்றியானைகள், மென்சினை யாஅம்

பொளிக்கும் - மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தின் பட்டையை உரியாகிற்கும், அன்பின - அன்புடையனவாம் ஆதலால், நசை பெரிதுடையர் - நின்பால் மிகவும் விருப்பமுடைய தலைவர், நல்கலும் நல்குவர் - நல்குதலையும் செய்வர்.

விளக்கம் :—நசை - ஈண்டுக் காதல் விருப்பத்தின் மேற்று. நசை பெரிதுடையர் என்றது, பேரன்பினர் என்றவாறு. நல்கலும் நல்குவர் என்பது, நல்குவர் என்னும் ஒருசொல் விழுக்காடு. "உண்ணலும் உண்ணேன்" (கலி - ..) மயங்கலும் மயங்கும்" (சிலப் உ : கடிச.) என் புழிப்போல. நல்கலுக்கு நசையுடைமை குறிப்பேதுவாக நின்றது. கலைஇய - கலைய, தீர்க்க என்றபடியாம். தன்பசி தீராது பிடிபசி தீர்க்க முயலும் சிறப்புடைய கையாகலின் பெருங்கை என்றுள். பெருமையுடைய கை என்க ; கைக்குப் பெருமை ஈதலேயாகலின். வேழம் - ஈண்டுக்களிறு. நீர் வறந்து தழைக லிலவாகிய கிளையென்பார், மென்சினை என்றார். ஈண்டு மென்மை, நல்குரவின் மேற்று. என்னை நல்கூர்ந்தாரை மெலியர் என்பவாகலின் என்க. கோட்டால் என்றது கையாற் பொளிக்கும் என்றலின், பொளித்தல் ஈண்டு உரித்தற்றொழில் குறித்து நின்றது யாஅம் - ஒருமரம். இதனை "யா" என்று வழங்குதலும் உண்டு தலைவர் சென்ற வழியில் பிடிகட்கு யாஅம் பொளிந்தூட்டும் களிறுண்டாகலின், அவ்வண்புச செயலைக் காணுங்கால் நின்னை நினைவுகூர்வர் ; கூர்ந்தவழி நின்பால் நசைபெரிதுடையராகலின் விரைந்து மீண்டு வந்து நல்குவர் என்றுள் என்க.

இனி ஆறு அன்பின என இடத்து நிகழ்தொழிலை இடத்தின் மேல் ஏற்றிக் கூறினுமாம்.

பாட்டு - உஅ : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றுமை தோன்றத் தோழிக்குக் கூறியது. அஃதாவது, வரைந்து கொள்ளற்கு வேண்டிய பொருளீட்டல் நிமித்தம் பிரிந்த தலைவன், நீண்டநாள் மீண்டு வாராமையால் ஆற்றுமை மிக்க தலைவி, தன் வருத்தம் தோழிக்குப் புலப்படுமாறு கூறியது.

இதன்கண், 'பிரிவினை ஆற்றியிருக்கும் வன்மையுடையோர்க்குக் குன்றநாடன் கேண்மை என்றும நன்றுகும்,' எனத் தன் ஆற்றுமை புலப்படத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

உஅ. கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருகு உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரோ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.

—கபிலர்.

(இ - ன்.) தோழி—, கான மஞ்ஞை அறை ஈன் முட்டை-காட்டகத்தே வாழும் மயில் பாறையின் கண் ஈன்ற முட்டையினை, வெயில் ஆடும் முசுவின் குருளை உருட்டும் - வெயிலில் விளையாடுகின்ற குரங்குக்குட்டி உருட்டாநிற்கும், குன்ற நாடன் கேண்மை - மலைநாட்டையுடைய தலைவனுடைய நட்பு, என்றும் நன்று மன் - எப்பொழுதும் நல்லதேயாகும் அஃதியார்க்கோ வெனின், உண் கண் நீரொடு தணப்ப - மையுண்ட கண்களிற் பெருகும் நீர் கண்டு வைத்தும் அதனைமேட இரங்காது ஒருபடித் தாய் அவர் பிரியா நிற்ப அத்தகைய வன்கண்ணரை, உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே - பின்னர் எப்பொழுதும் நினையா திருக்கும் ஆற்றல்வன்மை யுடையார்க்கு.

விளக்கம்:—கானமஞ்ஞை - காட்டில் வாழும் மயில். மயிலின் முட்டையைக் குரங்கின்குட்டி வெயிலில் உருட்டும் என்றதற்கு, முட்டையகத்துள்ள குஞ்சிற்குண்டாம் தீமை கருதாமல் குரங்குக்குட்டி வெயிலில் உருட்டுதல் போன்று, யான் எய்தும் துன்பத்திற் கிரங்காமல் இவ்வூரார் யாண்டும் அலர் தூற்றுநிற்ப என்னும் உள்ளுறை காண்க. அறையீன் முட்டை என்றது, தன்குடிப்பிறப்பைக் குறித்தது. நீரோடு ஓராங்குத் தணத்தலாவது, நீரைக் கண்ட காட்சியோடே ஒருபடித் தாய்ப்பிரிதல் என்க. எனவே, வன்கண்ணர் என்றாளாயிற்று. அத் தகைய வன்கண்மையுடையார் நம்மை நினைந்து அருளுவாரல்லர் என்பது குறிப்பு. இத்தகைய வன்கண்மையுடையோர் கேண்மை கொண்டா னும் அவரை உள்ளாத வன்கண்மை யுடையேனையின், அவர் கேண்மை நன்றேயாகும்; அது பெற்றிலேன் என்பாள் அதனைப் பிறர் மேலிட்டு அவர் கேண்மை உள்ளாதாற்றல் வல்லுவோர்க்கு என்றும் நன்றுமன் என்றாள். மன் : யானது பெற்றிலேன் என்னும் பொருட்டு. உள்ளாது ஆற்றல் - நினையாது பொறுத்தல். வல்லுவோர் - வன்மையுடையோர்.

உண்கண் நீரொடு தணப்ப என்றதற்கு "அவன் தணந்தவுடன் தம் உண்கணீரும் ஒரேபடியாகத் தணப்ப என்பாரும் உளர்.

பாட்டு - ஈக : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்கு "யாங்ஙனம் ஆற்றுவேன்" எனத் தனது ஆற்றுமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது. அஃதாவது, தலைவன் பிரிவாலே மிகவும் ஆற்றுமை எய்திய தலைவியைத் தோழி, 'நீ இவ்வாறு ஆற்றுயாகின்றதென் ?' என வினவியாட்கு 'யான் ஆற்றுவல்; என் ஆற்றுமைக்குக் காரணம் வேறு' என்று கூறியது.

இதன்கண், 'நான் ஆற்றுவேன் எனினும் தலைவர் சென்ற நெறி, கடத்தற்கரிய பாலைக் கடுஞ்சுரம் என்று கூறுப; அது

கேட்டே யான் இப்போது ஆற்றேன் ஆயினேன்' எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

ஈக. வெந்திறற் கடுவளி பொங்காப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்பநம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே.

—ஔவையார்.

(இ - ள்.) வெந்திறல் கடுவளி பொங்காப் போந்தென - வெப்பமிக்க வலியையுடைய கடிய காற்றுப் பொங்கி வந்ததாக, நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும் - நெற்றாக விளைந்த வகையின் வற்றல்கள் ஆரவாரித்தற்குக் காரணமான, மலை உடை அருஞ்சுரம் என்ப - மலைகளும் உடையாகின்ற கடத்தற் கரிய சுரம் ஆகும என்று கூறுவர், நம் முலையிடை முனிநர் சென்ற ஆறு - நம் முலையிடத்தே துயிலுதலை வெறுத்துப் பொருளீட்ட விரும்பிச் சென்ற நம் தலைவர் போனவழி.

விளக்கம் :—அதனை நினைந்தே யான் இப்போது ஆற்றேனாகின்றேன் என்றாள் என்பது கருத்தாகக் கொள்க. வெந்திறல் - சுடுகின்ற ஆற்றல். பாலை நிலக் காற்று கதிர்வெம்மையை ஏற்றுச் சுடுமியல்பிற்றாதலின், வெந்திறல் என்றாள். கடுவளி என்றது, விரைந்து வீசும் பெருங்காற்றென்றவாறு. பொங்கர்ப்போந்தென என்றும் பாடம். பொங்கர் - மரக் கொம்பென்க. நெற்றுவிளை உழிஞ்சில் பொருட்கேற்ற அடை. நெற்று - முதிர்ந்த காய். மலையுடை அருஞ்சுரம் என்றதற்கு மலைகளும் பிளத்தற்குரிய வெப்பமிக்க சுரம் என்க. மலைகளையுடைய அருஞ்சுரம் எனினுமாம். அருமை - ஈண்டு ஊடுபோய்க் கடத்தற் கருமை குறித்து நின்றது.

மலையுடை அருஞ்சுரம் என்றதனால் இது குறிஞ்சிதிரிந்த பாலை என்க. என்னை "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து...பாலை என்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப், கக: சுசு—சு.) என்பவாகலான்.

குளிர்ந்த முலையிடைத் துயின்று இன்புறவேண்டியவர், அதனை வெறுத்துப் பொருளை விரும்பிக் கடத்தற் கரிய சுரத்திடைப் போயினரே ஆண்டவர் என்படுவரோ! என்பாள், 'முலையிடை முனிநர்' என்றாள். முனிநர்-வெறுத்தவர். முலையிடைமுனிநர் என்றது பொருளினை விரும்பினவர் என்னும் குறிப்புடைத்து.

பாட்டு - சுo : தலைவன் கூற்று

துறை :—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்ப் பிரிவை ஒரனைக் கருதியஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடுகண்டு தலைமகன் கூறியது. அஃதாது, பால்வரை தெய்வம் கூட்டுவித்தலால், கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே தமியர் எதிர்ப்

பட்டுப் புணர்ந்த வழித் தலைமகள் 'இவன் எவ்விடத்தானே, நம்மைப்பிரிவானே மறந்து துறப்பானே துறப்பான் எனின் யாம் உயிர் வாழுமாறென்னோ?' என்று, அஞ்சினளாக, அவள் கருத்தைக் குறிப்பால் அறிந்த தலைமகன், 'நம் கேண்மை பிரியும எளிமைத் தன்'றெனத் தேற்றியது.

இதன்கண், தலைவன் தலைவியை நோக்கி, 'நின் தாயும் என் தாயும் பண்டு கேளிரல்லர்; எந்தையும் நுந்தையும் உறவினர் அல்லர்; நீயும் யானும் இப்போது எதிர்ப்பட்டறிந்ததல்லால் பண்டு ஒருவரை ஒருவர் அறிந்திலோம்; அங்ஙனமாகவும், நம் உள்ளம் இரண்டறக் கலந்தன; ஆதலால், இந்நட்பு ஊழானே நிகழ்ந்ததாம் ஆகலின், யாம் பிரிவோமல்லேம்' என்று தேற்றுகின்றான்.

சo. யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.

—செம்புலப் பெயனீரார்.

(இ - ள்.) யாயும் ஞாயும் யாராகியரோ - என் தாயும் நின் தாயும் ஒருவர்க்கு ஒருவர் என்ன உறவுடையர் ஆகுவர்? எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் - என் தந்தையும் நின் தந்தையும் எம்முறையினையுடைய உறவினர் ஆகுவர்?, யானும் நீயும் எவ்வழி அறிதும் - யானும் நீயும் இப்பொழுது அறிந்ததையல்லால் முன்பு எவ்வாற்றான் ஒருவரை ஒருவர் அறிந்துள்ளோம்? இம்மூன்றானும் தொடர்புடையோம் அல்லமாகவும், செம்புலப பெயல் நீர் போல - செந்நிலத்தே பெய்யப்பட்ட மழை அந்நிலத்தியல்போடே ஒன்றுறக் கலந்தாற்போன்று அன்புடை நெஞ்சம் தாம் கலந்தன - அன்புடைய நம் நெஞ்சங்கள் தாமாகவே கலந்தன காண்.

விளக்கம்:—யாய், ஞாய் - தாய். என்பன முறையே என்தாய், நின்தாய், அவர் தாய் எனத் தன்மை முதலிய மூன்றிடமும் பற்றிவரும், எந்தை நுந்தை தந்தை என்பன போல. யாராகியர் - யாராந்தன்மை புடையர். என்ன உறவினையுடையார் என்றவாறு. நின்தாயும் என்தாயும் ஒருவருக்கொருவர் யாதோர் உறவும் இலராகவும் என்க. எந்தை - என் தந்தை; நுந்தை - நின்தந்தை. கேளிர் - உறவினர். உறவினராவார் ஒருவர்க்கொருவர் யாதானொரு முறைபற்றியே உறவுடையர் ஆதலின், அம்முறைகளுள் எம்முறைபற்றிய உறவினர் என்பான், 'எம்முறைக் கேளிர்?' என்றான். எம்முறையானும் அவர்கள் கேளிர் அல்லர் என்றவாறு.

உறவென்பது தாய் மரபு பற்றியும், தந்தை மரபு பற்றியுமே வரு வது. அவ்விரு மரபானும் யாம் தொடர்புடையேம் அல்லம். உறவினர் அல்லாவிடத்தும் ஒருவரை ஒருவர் அறியுமாற்றானே நட்புக்கிழமை கோடலும் உண்டு. அங்ஙனம் யாம் இதற்கு முன்னர் எவ்வாற்றானும் அறிந்திலம் என்பான், 'யானும் நீயும் எவ்வழி அறிதும்' என்றான். ஒரு வழியானும் அறிந்திலேம் என்றவாறு. கண்டறிதல், கேட்டறிதல் ான அறிதற்கு வழி இரண்டென வாகலான், இவற்றுள் ஒருவழியானும் அறிந்திலம் என்பான், 'எவ்வழி அறிதும்' என்றான், என்க. இங்ஙனம் உறவுத் தொடர்பும், நட்பு மில்லாத நம் நெஞ்சங்கள் இயல்பாகவே அன்புநிரம்பியுள்ளன. அதற்குக் காரணம் யாம் பற்பல பிறப்புக்களிலே யின்று பயின்று முதிர்ந்த உழுவலன்புடையே மாதலே என்பான், அன்புடைநெஞ்சம்' என்றான்.

வானத்தின்கண் தன் தன்மைத்தாய் நீர் நிலத்தோடு சேர்ந்தவழித் ன்றன்மை திரிந்து நிறம் சுவை முதலிய நிலத்தின் றன்மையைத் தன தாக ஏற்றுக் கொள்ளுமாறு போலவும், நெகிழ்ச்சி தண்மை முதலிய ரின் தன்மையை நிலம் தனதாக ஏற்றுக் கொள்ளுமாறு போலவும் ம் நெஞ்சங்கள், தத்தம் தன்மை திரிந்து ஒன்றன்றன்மையை ஒன்றேற் ுக் கலந்தன என்பான், 'செம்புலப் பெயனீர் போல நெஞ்சம் லந்தன' என்றான். செம்புலத்திற் பெய்தநீர் போல என்றாரேனும் செம்புலமும் அதன் கட்பெய்த நீரும் கலந்தாற் போல என்பது கருத் ாகக் கொள்க. செம்புலப் பெயனீர் என்னும, இவ்வினிய தொடரை ாதத அருமைகருதி இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் "செம்புலப் பெயனீரார்," எனப்பட்டார்.

பாட்டு - சுக : தலைவி கூற்று

துறை :—பிரிவிடைவேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குத் ழுத்தி உரைத்தது; அஃதாவது. தலைவன் பிரிந்தமையால் ற்றுமைமிக்க தலைவியைக்கண்டு கவலை கொண்ட தோழியை நாக்கிப், 'பிரிவின் கொடுமை அங்ஙன மிருக்கின்றது' எனத் லைவி கூறியது.

இதன்கண், 'தலைவர் உடனுறையும் காலத்தில் யான் திரு ிழா எடுக்கும் ஊர் போலப் பொலிவுறுகின்றேன்; அவர் பிரிந்த பாழுதோ மக்கள் போகிய புலம்பில் போலப் புல்லென்று ருந்தாநிற்பன்; இது என்னியல்பாயினும் ஒருவாறு ஆற்றுவல்' ன்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

சுக. காதலர் உழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய அங்குடிச் சீறார்
மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
[1]புலம்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழியவர் அகன்ற ஞான்றே.
—அணிலாடு முன்றிலார்.

1. (பாடம்) புலப்பில்.

(இ - ள்.) தோழி—, காதலர் உழையராக-தலைவர் பக்கத் திருப்பராக அப்பொழுது, பெரிது உவந்து - மிகவும் மகிழ்ச்சி யுற்று, சாறுகொள் ஊரிற் புகல்வேன் - திருவிழாக் கொண்ட ஊர் பொலிவுறுமாறுபோலப் பொலிவுற்று மகிழாநிற்பேன், மன்ற - தேற்றமாக, அவர் அகன்ற ஞான்று - தலைவர் பிரிந்த பொழுதோ, அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர் - பாலைநிலத்து வழியிலே பொருந்திய அழகிய குடிகளையுடைய சிறிய ஊரின் கண் உள்ள, மக்கள் போகிய அணில் ஆடு முன்றில் புலம்பு இல் போல - தன்கண் வாழும் மாந்தர் குடியோடப்பட்ட அணில்கள் விளையாடாநின்ற முற்றத்தையுடைய தனித்த வீட்டைப் போல, புல் என்று அலப்பென் - பொலிவழிந்து வருந்தா நிற்பேன்.

விளக்கம்:—உழை - பக்கம். உழையர் - பக்கத்திலிருப்பவர். உட னுறைபவராக என்றவாறு. சாறு - விழா. விழா நிகழும் ஊர், ஒப்பனை செய்யப்பட்டுப் புதிதாகப் பொலிவுறுமாறு போல என்க. விழாக் கொள்ளும் ஊரினர் மகிழுமாறு போல என்பாருமுளர். பின்னர் மக்கள் போகிய புலம்பில் போல என்ற விடத்து, ஆண்டுப் புற்கென் னும் தூணையே புலம்பில் உவமையாஞற் போல, ஈண்டும் பெ லிவுறுந் தூணையே விழாக் கொள் ஊர் உவமையாகலின், ஈண்டு ஊர் என்றது ஆகுபெயர் அன்றென்க புலம்பில் போலப் புற்கென்று அலப்பேன் என்றதனால் ஈண்டும் சாறு கொளூரிற் பொற்புற்றுப் புகல்வேன் என்க. புகல்தல் - மகிழ்தல்.

"அருந்தவன் மூந்துகூற அலங்கல்வே ளுய்கன் சென்று
பொருந்துபு சிறுவற் கொண்டு பொலிவொடு புகன்று போக"
(சிந்தாமணி - நூஅ)

என்புழியும் அஃ திப்பொருட்டாதல் அறிக. மன்ற - தேற்றமாக. அத்தம் - பாலை நிலம். மக்கள் போகிய என்றது, தன்கண் குடியிருந்த மக்கள் குடியோடிப் போகப்பட்ட என்றவாறு. பாலை நிலத்து வாழ் வோர், நீர் உணவு முதலிய பெறுது குடியோடிப் போதல் வழக்கம் என்க. மக்கள் போகியது அணிலாடுதற்கு ஏது வென்க.

புலம்பு இல் - தனித்த வீடு. புலம்பு - தனிமை. அலப்பென் - வருந்துவேன் - அலப்பு என் என, விஞவாக்குவாரு முளர்.

இனி, காதலர் உழையராக அத்தம் நண்ணிய இச்சீறூரைச் சாறு கொள் ஊர்போல விரும்புவேன் என்றும், பிரிந்தவழி மக்கள் போகிய புலம்பில் போல, அலப்பென் எனறும் கூறினஞள் என்பாரும் உளர். விரும்புவேன் என்றதற் கேற்ப முனிவேன் என்னுமையின் அது பொருளன் றென்க.

பாட்டு - சுஉ : தோழி கூற்று

துறை:—இரவுக்குறி வேண்டிய கிழவர்க்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது; அஃதாவது, 'தலைவியை இரவுக்குறி

யிடத்தும் அடைதல் வேண்டும் அதற்கு ஆவன செய்க' எனத் தோழியைத்தலைவன் குறை யிரப்ப, அவள் அதற்கு உடன்படுவாள் போல மறுத்துக் கூறியது.

இதன்கண், 'தலைவ! காம நுகர்ச்சி ஒழிவதாயினும் எம் முடைய காதற் றொடர்பு எஞ்ஞான்றும் ஒழியுமியல்பிற்றன்று காண்' என்று தோழி கூறுகின்றாள்.

சுஉ. காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத் தியம்பு நாடவெம்
தோடர்புந் தேயுமோ நின்வயி னானே.

—கபிலர்.

(இ - ள்) யாமத்துக் கருவி மாமழை வீழ்ந்தென-நள்ளிரவின்கண் தொகுதியையுடைய பெரிய மழை பெய்தது என்று, அருவி விடரகத்து இயம்பும் நாட - அதனாற் பெருகிய அருவி நீர் வழிநாள் மலைமுழைஞ்சுகளிலே யாவரும் அறியத தூற்றும் நாட்டையுடையவனே, காமம ஒழிவதாயினும் - காமப்புணர்ச்சி ஒரோவழி ஒழியுமாயினும, நின்வயின் எம் தொடர்புந் தேயுமோ - அவ்வொழிவு காரணமாக நின்னிடத்து யாம் கொண்டுளள காதல வளர்வதேயன்றித் தேய்ந்து அழியுமோ?

விளக்கம்:—காமம் என்றது, ஈண்டு மெய்யுறு புணர்ச்சியை. ஒழியுமாயினும் என்றது, யாண்டும் ஒழிவது மன்று, ஒரோவழிச செவ்வி பெறுது ஒழியுமாயினும் என்றவாறு. எனவே - இரவுக்குறியில் தலைவியைப்பெறுதல் அரிது எனக் குறிப்பான் மறுத்தாளாயிற்று.

'யாவரும் உறங்கும் இடையிரவிலே மழை பெய்ததாயினும் அதனாற் பெருகிய அருவி, மழை யுண்டென்று அறியாதாரையும் அறியக் காட்டி வழிநாள் முழைஞ்சுகளிலே முழங்கினாற் போன்று, நீ இரவின்கண் யாருமறியாது இவளைக் கூடிப் பிரிவாயினும் அதனாலுண்டாகிய வேறுபாடு வழிநாள் பலரும் அறியத்தூற்றும் என்னும் உள்ளுறை கருதி, யாமத்துக் கருவி மாமழை வீழ்ந்தென அருவி விடரகத்து இயம்பும் நாட' என்றாள் என்க. இதனால் இரவுக்குறி மறுத்தமைக்கு ஏதுக் காட்டியவாறு.

கருவி - மின் இடி முதலிய தொகுதி என்க. விடரகம் - மலை முழைஞ்சு. இயம்புதல் - கூறுதல் போன்று ஒலித்தல். மழையுண்மையை அருவியாணர்தல் கருதலளவையின்பாற்படும். தொடர்பு என்றது, காதற் றொடர்பினை. தேயுமோ என்ற வினா தேயாது வளரும் என்னும் பொருட்டு. இது தலைவனுக்குக் குறைநேர்வாள் போலத் தோன்றுமாறுணர்க.

பாட்டு - சுசு : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது. அஃதாவது தலைவன் பிரிவினுல் ஆற்றுமை மிகக தலைவி (தனவருத்ததிற்குத்தானே காரணம எனத) தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'தலைவர் பிரியார் என்னுங் துணிவால் யான் வாளாவிருந்தேன். அவரோ, ஆறறுள் எனக் கருதிக் கூறாது பிரிந்தார். இவ்வாற்றுல் யான் இப்போது பெரிதும் துன்புறுகின்றேன்' எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றுள்.

சுசு. செல்வார் அல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒல்வாள் அல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை, இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே.

—ஔவையார்.

(இ - ள்.) செல்வார் அல்லர் என்று யானிகழ்ந்தனனே - தலைவர் நம்மைப் பிரிந்து போகார் என்னும் துணிவாலே யான் செலவழுங்குவித்தலில் சோர்ந்திருந்தேன், ஒல்வாள் அல்லள் என்று அவர் இகழ்ந்தனர் - பிரிவுணர்த்தின் இவள் உடம்படுவாளல்லள் என்று கருதி அவர் பிரிவுணர்த்தலில் சோர்ந்தனர், ஆயிடை - அவ்வழி, இருபோ ஆண்மை செய்த பூசல்-இருவரிடத்தும் உளவாகிய ஆண்மைகள காரணமாக நிகழ்ந்த பூசலாலே, நல் அராக் கதுவியாங்கு - நல்லபாம்பு கடித்தாற் போன்று, என் அல்லல் நெஞ்சம அலமலக்குறும் - வருந்தா நின்ற என் நெஞ்சம் மேலும் சுழலா நிற்கும்.

விளக்கம் :—நசை பெரிதுடைய பேரன்பினர் ஆதலால், என்னை வருந்தும்படி விட்டுப் பிரிவாரல்லர் என்னும் நம்பிக்கையால் யான் சோர்ந்திருந்தேன் என்பாள், 'செல்வாரல்லர் என்று யானிகழ்ந்தனன்' என்றுள். இகழ்தலாவது, செயத்தக்கதொன்றனைச செய்யாது சோர்ந்துவிடுதல். செயத்தக்க செய்யாதுகெட்டேன் என்று இரங்கியவாறு. ஒல்வாளல்லள் - உடம்படுவாளல்லள். யான் சோர்ந்தவிடத்தும் அவர் பிரிவுணர்த்தியிருப்பரேல், அப்பொழுது விழிப்புற்று அழுங்குவிப்பேன். அவரோ யான் உடம்படமாட்டேன் என்று அறிந்து, பிரிவுணர்த்தாது பிரிந்தார் என்பாள், 'ஒல்வாளல்லள் என்று அவரிகழ்ந்தனர்', என்றுள். ஆயிடை என்றது, அவ்வாறு இருவரும் இகழ்ந்தவிடத்தென்றவாறு.

பூசல் - ஈண்டுப் பிரிவுத்துன்பம். இருபேர் - இரண்டு பெயர்; இருவர் என்றவாறு. பேர் என்பதை ஆண்மைக்கு அடையாக்குவாருமுளர். ஆண்மை - ஆளுந்தன்மை. ஈண்டுச் செல்வார் அல்லர் என்னுந்

துணிவை ஆளுந்தன்மையும், அன்புடையாளைப் பிரியும் வன்கண் மையை ஆளுந்தன்மையும் என்னும் இரண்டு ஆண்மையும் என்க. இவ்வாண்மைகளாலே விளைந்த பூசலாகலின் அவற்றின் செயல் என் றுரை. பூசல் - ஈண்டுத்துன்பம் என்னும் பொருட்டு. இனிப்பூசல் என்பதனைப் போர் என்றுகொண்டு இரண்டு ஆண்மைகளும் செய்த போரிலுல் என்பாரும் உளர். அவை போர செய்தனவென்றல் பொருந் தாமை யுணர்க.

நல்லரா - நல்ல பாம்பு. கதுவுதல் - கவ்வுதல்; ஈண்டுக்கடித்தல் என்னும் பொருட்டு. ஆங்கு, உவமவுருபு. அல்லல் நெஞ்சம் என்றது பிரிவால் இயல்பாகவே வருந்தும் நெஞ்சம் என்றவாறு அலமலக் குறும் - சுழலும். அலமரல் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்தது போலும். அல்லல் நெஞ்சம் மேலும் அலமரும் என்க.

பாட்டு - சசு : செவிலித்தாய் கூற்று

துறை :—இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. அஃதாவது, இயற்கைப்புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவி தலைவனுடன் தமர் அறியாது போயினளாக, அவளைத் தேடிச்சென்ற செவிலி, பாலைநிலத்தே பெரிதும் வருந்திக் கூறியது.

இதன்கண், செவிலி, என் கால்கள் நடக்கமாட்டாவாய்த் தளர்ந்தன ; கண்கள் கூர்ந்து நோக்கி நோக்கி ஒளி மழுங்கின ; எண்ணிறந்தார் பிறரை யான் எதிரே கண்டேன் எனினும் அவரைக் கண்டிலேனே என்று வருந்திக் கூறுகின்றாள்.

சசு. காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

—வெள்ளி வீதியார்.

(இ - ள்.) காலே பரிதப்பின - என் கால்கள் நடந்து நடந்து செலவு தடுமாறின, நோக்கி நோக்கிக் கண் வாளிழந் தன - கண்கள் சேய்மையில் வருவாரைக் கூர்ந்து பார்த்துப் பார்த்துத் தம்புலனுகிய ஒளியை இழந்தன, மன்ற - தேற்றமாக, இவ்வுலகத்துப் பிறர் அகல் இரு விசும்பின் மீனினும் பலர் - இந்நிலவுலகத்து என் மகளும அவள் தலைவனும் அல்லாதார் அகன்ற பெரிய வானத்திலுளள மீன்களினும தொகையாலே மிக்கவராவார்.

விளக்கம்:—பரி - செலவு, தப்புதல் - மாட்டாவாதல். நடந்து நடந்து இளைத்து இனி நடக்கவும் இயலாதவளாயினேன் என்றவாறு. எதிரே சேய்மையில் வருவாரை இவர் அவரோ என ஐயுற்று. அவர்

அண்மையில் வருந்துணையும் கூர்ந்து கூர்ந்து நோக்கினேன் என்பாள் 'நோக்கி நோக்கி' என்றாள். வாள் - ஒளி. அதனை யிழத்தலாவது கண்கள் தமக்குரிய அவ்வொளிப்புலனைக் கொள்ளமாட்டா தொழிதல். யாதாமொரு பொருளைக் கூர்ந்து நோக்கியவழிக் கண்கள் ஒளியிழத்தல் ஆண்டான் முதிர்ந்தார்க்கு இயல்பு.

தன் மகளும் அவள் தலைவனுமோ என்று எண்ணி எண்ணி அருகிற்சென்று எண்ணிறந்தோரைப் பார்த்தேன், அவரை மட்டும் கண்டேனில்லை என்பாள், 'மீனினும் பலர் உலகத்துப் பிறர்' என்றாள்.

இச்செய்யுளை வெள்ளி வீதியார் என்னும் நல்லிசைப்புலமையாட்டியார், தம் கணவனைக் காணுது தேடிய பொழுது அவனைக் காணுதையர்ந்து பாடினர் என்ப. இது சுட்டி ஒருவர் பெயர் கூறப்படாமையால் இந்நூலின்கட் கோக்கப்பட்டதென்க. வெள்ளி வீதியார் தம் கணவனைத் தேடிய செய்தியை அவரே,

"யானே காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று அலந்தனன் உழல்வேன் கொல்லோ"
(அகம் - சஅ.)

என அகத்திற் கூறும் குறிப்பானும், உணர்க.

பாட்டு - சுரு : தோழி கூற்று

துறை :—தலைமகற்குப் பாங்காயினர் வாயில் வேண்டிய வழித் தோழி வாயில் நேர்ந்தது. அஃதாவது, பரத்தையிற் பிரிந்த தலைவன் ஊடிய தலைவியின்பால் தூதரைவிட, அவர் சென்று தலைவியை ஊடல் தீரும்படி வேண்டினராகத் தோழி தலைவி ஊடல் தீர்ந்தமை கண்டு அதனைத் தூதர்க்குக் கூறியது.

இதன்கண், தலைவன் பெரிதும் கொடுமை செய்திருப்பவும் அதனைப் பாராட்டாமல் தலைவி வாயில் நேர்ந்தாள். இங்ஙனம் கொழுநன் குறையைப் பாராட்டாமை குடிப்பிறந்தார் குணமாகும். குடிப்பிறத்தலும் கொடிதே எனத் தோழி கூறுகின்றாள்.

சுரு. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதே
மறுவருஞ் சிறுவன் தாயே
தெறுவ தம்மவித் தீண்டப்பிறத் தல்லே.
—ஆலங்கூடி வங்கனர்.

(இ - ள்.) காலை எழுந்து - நாட்காலையிலேயே விழித்தெழுந்து, கடுந்தேர் பண்ணி - விரைந்து செல்லுமியல்பினையுடைய தேரினை ஒப்பனைசெய்து, வாலிழை மகளிர்த் தழீஇய

சென்ற - தூய அணிகலன்களையுடைய பரத்தையரைத் தழுவப் போன, மல்லலூரன் எல்லினன் பெரிதேல் - வளப்பமிக்க ஊரையுடைய தலைவன் பெரிதும் விளக்கமுடையனுயின், சிறுவன் தாய் மறுவரும் - மகப்பயந்த தாய்மைத் தன்மையுடைய தலைவி உளம் சுழல்வாள், இத்திணைப் பிறத்தல் தெறுவது - இவ்வுயர் குடிப்பிறத்தல் துன்பந்தருவதேயாம்.

விளக்கம்:—காலை எழுந்தென்றது, தலைவன் பரத்தையர் இல்லிற் கேகுதலின்கண் பெரிதும் விருப்பமுடையான் என்று குறிப்பான் இகழ்ந்தவாறு. கடுந்தேர் - விரைந்து செல்லுதற்குரிய நல்லுறுப்புக்களும் நல்ல குதிரையும் உடையதாய் விரைந்தோடும் தேர். கடுந்தேர் என்றதும் அவன் உள்ளம் பரத்தையர்பால் விரையுந்தன்மை நினைந்துரைத்ததாம். பண்ணி - ஒப்பனை செய்து. வாலிழை மகளிர் என்றது பரத்தையரை; இழை தூயரல்லால் உளந்தூயரல்லாப் பரத்தையர் என்றவாறு. தழீஇய - தழுவற்பொருட்டு. தான் தழுவவிரும்புவதல்லால் அவர் தழுவ விருமபார் என்றவாறு. இதனைப் "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்", (கூகசு) என்னுந் திருக்குறளானும் உணர்க. மல்லலூரன் - மருதநிலத்தலைவன். எல்லினன் - விளக்கம் உடையன். பெரிதென என்றும் பாடம். தலைவன் பரத்தையோடாடிய மகிழ்ச்சியால் மெய்ப்பாடுற்று விளங்குதலைக் காண்பாளேல் சிறுவன் தாய் மன மறுவரும் என்க. மறுவருதல் - சுழலுதல். மனம் சுழல்வாள் ஆயினும் ஏற்றுக்கொள்வாளாயினள்; இஃதவள் குடிப்பிறப்பானுண்டாய பண்பு. குடிப்பிறந்தார் மனம் வருந்தியும் கடமை செய்யவேண்டுதலின், அது துன்பந்தருவதாயிற்றென்க. குலமகளிர் தலைவர் குறை பாராட்டாது ஏற்றுக்கொள்ளும் இயல்புடையராதலை,

> "சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்
> காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா
> தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
> இகழினும் கேள்வரை எத்தி இறைஞ்சுவர்" (உ0: அசு - து)

எனவரும் பரிபாடலானும் உணர்க.

தெறுவது - துன்பந்தருவது. பிறத்தல் தெறுவது என்க. சிறுவன் தாய் என்றுளள, தலைவன் இழுத்தியாம் கேண்மையை நீத்தொழுகலின். இனிச் சிறுவன் தாய் என்றது, பரத்தையர் அறிவறிந்த நன்மக்கட்பேற்றிற்கு ஆகாமையைக் குறிப்பாற் கூறியவாறுமாம்.

பாட்டு - சுசு : தலைவி கூற்று

துறை:—பிரிவிடை ஆற்றாள் எனக்கவன்ற தோழிக்குத் தலைவி ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது; அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே தலைவி இப்பிரிவை ஆற்றாளோ எனத் தோழி கவல்வதை அறிந்த தலைவி 'தோழி கவலற்க! யான் ஒருசில நாட்களானே ஆற்றியிருக்க வல்லேன் ஆயினேன்', என்று கூறியது.

இதன்கண், 'தோழி நமக்கின்னு செய்யும் புன்கண் மாலையும் தனிமையும் அவர் சென்ற நாட்டில் அவர்க்கும் உளவாகலான் அவர் நம்மை நினைந்து வருவர் என, யான் ஆற்றியிருக்கின்றேன்' என்று தலைவி கூறுகின்றாள்.

சசு. ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவினுண் தாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையோடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே.

—மாமலாடனார்.

(இ - ள்.) தோழி—, ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன - ஆம்பல் பூவினது வாடலை ஒத்த, கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ - குவிந்த சிறகுகளையுடைய இல்லத்தே தங்குதலையுடைய குருவிகள், முன்றில் உணங்கல் மாந்தி - முற்றத்திலே உலரவைத்த புழுங்கலைத் தின்று, மன்றத்து - மன்றத்தின்கண் உள்ள, எருவின் துண் தாது குடைவன ஆடி - எருவாகிய துண்ணிய துகளிலே குளிப்பனவாய் விளையாடி, இல் இறைப்பள்ளி தம் பிள்ளையோடு வதியும் - இல்லத்தே இறப்பின்கண் சேக்கையில் தம்முடைய குஞ்சுகளோடு தங்குதற்குக் காரணமான, மாலையும் புலம்பும் புன்கண் - மாலைக்காலமும் தனிமையும் தரும் வருத்தம், அவர் சென்ற நாட்டு இன்றுகொல் - தலைவர் சென்றுள்ள நாட்டின் கண்ணே இலதேயோ?

விளக்கம்:—'இங்கு எனக்கு மாலையானும் தனிமையானும் வரும் புன்கண், அவர்க்கும் உளதாகலின் நம்மை நினைந்து விரைவின் வருவர் என யான் ஒருவாறு ஆற்றியிருக்கின்றேன் ஆதலால் தோழி நீ கவலற்க.' என்பதாம்.

சாம்பல் - பூவாடல். ஆம்பற்பூவின் வாடலைச் சிட்டுக்குருவியின் குவிந்த சிறகுக்கு உவமை கூறியது உணர்ந்து இன்புறற்பாலது. சிட்டுக்குருவி மனையிறப்பில் உறையும் இயல்புடையதாகலின், 'மனையுறை குரீஇ' என்றாள். மனையுறை குரீஇ என்றது, பெயர் மாத்திரையாய் நின்றது. குரீஇ - குருவி. முன்றில் - முற்றம். உணங்கல் - ஈண்டு உலரவைத்த புழுங்கல் நெல்லைக் குறித்து நின்றது; பிற கூலங்களுமாம். மாந்தி - தின்று. மன்ற தெருவின் நுண்டாது எனப் பாடங்கொண்டு "தேற்றமாக வீதியிடத்தே புழுதியாடி" என்பாரு மூளர்; மன்றத்தின்கண் எருத் தாதுளவாதலை 'தாதெரு மன்றம் தானுடன் கழிந்து' (சிலப் - கசு: கஅஉ) என்பதனானும் அறிக. நுண் தாது - நுண்ணிய துகள். சிறு குருவிகள் நுண்தாது அல்லது புழுதி

யிற் குடைந்தாடுதல் இயல்பு. இறைப்பள்ளி - இறப்பின்கட் குரீஇ உறையும் சேக்கை.

பிள்ளை - ஈண்டுப்பார்ப்புகள். பறவைக்குஞ்சினைப் பிள்ளை என்னும் மரபுண்மையை"

"அவற்றுட்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" (மரபு - சூ : ச)

எனவரும் தொல்காப்பியத்தானும் உணர்க. இன்றுகொல் - என்னும் ஒருமையோடியைய மாலையும் புலம்புந்தரும் புன்கண் என மாறுக. இன்று என்பதனை இரண்டனோடும் தனித்தனிக் கூட்டியுரைப் பாருமுளர்.

பாட்டு - சஎ : தோழி கூற்று

துறை :—இரவிலவந்தொழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது. அஃதாவது, இரவுக் குறியிடத்தே தலைவியைக் காண வந்த தலைவன் கேட்கும்படி நிலவை நோக்கி இரவுக்குறி மறுத்தமை குறிப்பாய்த் தோன்றும்படி தோழி கூறியது.

இதன்கண், தோழி நிலவை நோக்கி 'நெடு வெண்ணிலவே! நீ தலைவன் இரவுக்குறியிடத்தே தலைவியை எய்துதற்கு நல்லையல்லை' என்று கூறுகின்றாள்.

சஎ. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே

—நெடுவெண்ணிலவினர்.

(இ - ள்.) நெடு வெண் நிலவே - நெடிய வெண்ணிற நிலாவே, கருங்கால் வேங்கை வீ யுகு துறுகல் - வலிய தாளையுடைய வேங்கை மரத்தின் பூக்கள் உதிரப்பட்ட பொற்றைக்கல், இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை - பெரிய புலியினது குட்டிபோலக் காணப்படும் காட்டின் நடுவிலே, எல்லி வருநர் களவிற்கு நல்லை அல்லை - இரவின்கண் வந்தொழுகும் தலைவர் களவொழுக்கத்திற்கு நீ நன்மை விளைப்பாயல்லை.

விளக்கம் :—கருமை - ஈண்டு வன்மை குறித்து நின்றது. கால் - அடி மரம். வேங்கை - ஒருமரம். வீ - பூ. கரிய துறுகல் மேலே வேங்கைப்பூ உதிர்ந்து கிடத்தலால் அக்கல் நோக்குவார்க்குப் புலிக் குட்டிபோலத் தோன்றும் என்க. துறுகல் - புலிக்குட்டி போன்றும், அதன்மேல் உதிர்ந்த வேங்கைப் பூக்கள் புலிக்குட்டியின் வரிகள்

போன்றும் தோன்றும் என்க. அஞ்சவேண்டாத பொருள்களும் அசைஞ்செய்யும் காடு என்றவாறும். எல்லி - இரவு. "எல்லியம்போது வழங்காமை மூன்னினிதே" (இனியது - கூ) என்புழியும், அஃதப் பொருட்டாதல் அறிக. தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், நாய் துஞ்சாமை முதலியன, இரவுக் குறிக்கண் நிகழும் இடையூறுகளாம். இவற்றை,

"இரும்பிழி மகாஅரிவ் வழுங்கல் மூதூர்
விழவின் ரூயினும் துஞ்சா தாகும்
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகோ ளருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவேல் இளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும
அரவவாய் ஞமலி குரையாது மடியில்
பகலுரு உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே" (கஉஉ)

எனவரும் அகப்பாட்டானும் உணர்க.

களவிற்கு நல்லை அல்லை என்றது. இரவின்கண் தலைவன் வருங் கால் அஞ்சுதகுந வல்லாத் துறுகல் முதலியவற்றை அஞ்சுதகுநவாகக் காட்டுதலும், அவன் வருகையைப் பிறர் காணுமாறு செய்தலும் உடையை ஆகலான், நல்லையல்லை என்றவாறு. இனிக் களவிற்கு நல்லையல்லை எனவே கற்பிற்கு நீ மிகவும் நல்லை என்பது குறிப்பாற் போதருதலின், இரவுக்குறி மறுத்து வரைவு கடாவினள் ஆதலும் உணர்க.

நெடு வெண்ணிலவென்றதன்கண், நெடுமை, காலம் நீளுதலைக் குறித்தது. விரைவின் மறைவாயுமின்றி இரவெல்லாம் விளங்கும் நில வென்பாள் நெடு வெண்ணிலவென்றாள்

பாட்டு - சஅ : தோழி கூற்று

துறை :—பகற்குறிக்கட் காணும்பொழுதினும் காணப் பொழுது பெரிதாகலின், வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது அஃதாவது, பகற்குறிக்கண் தலைவன் தலைவியொடு பழகுவானாயினும், அதற்குரிய செவ்வி பெற்றுக் கூடும்பொழுது சிறிதாகவும் பிரிந்துறைபொழுதே பெரிதாகவும் இருத்தலால், அப்பிரிவையும பொறாது வருந்திய தலைவியின் வருத்த மிகுதி கண்டு தோழி கூறியது.

இதன்கண், தலைவி, ஆயமகளிரோடாடலும் அயர்த்து, இடையறாது வருந்துவாளாயினள். 'இவ்வருத்தந்தீரும் மருந்

தாகிய நசையாகு பண்பின் ஒரு சொல்லே அருளித் தலைவர் இவள் வருத்தந் தீரார் கொல்லோ?' எனத் தோழி கூறுகின்றாள்.

சூ. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

—பூங்கணுத்திரையார்.

(இ - ள்.) தாதில் செய்த தண்பனிப் பாவை - பூந்தாதாலே செய்யப்பட்டதாய்க் குளிர்ந்த பனியிடத்தே கிடந்த விளையாட்டுப் பாவை, காலை வருந்தும கையாறு ஓம்பென - காலை வெயிலிற் கிடந்துமுறுகும வருததமாகிய கையறவினைப் பரிகரிததுக் காப்பாயாக என்று, ஓரை ஆயம கூறக்கேட்டும் - விளையாட்டு மகளிர் சொல்லுதலைக் கேட்டிருந்தும அது செய்யாளாய், இன்ன பண்பின் இனை பெரிது உழக்கும - இத்தகைய தன்மையோடே துன்பம் பெரிதும எய்தாநிற்கும், நன்னுதல் பசலை நீங்க - நல்ல நுதலையுடைய இத்தலைவியின் பசலை நீங்கும்படி, அன்ன நசையாகு பண்பின் ஒருசொல - அததகைய விருப்பத்தை உண்டாககும் தன்மையையுடைய ஒரோ ஒருசொல் கூறுதல், காதலர் தமக்கு இசையாது கொல் - இந்நோய் தந்த காதலருக்கு இயலாததேயோ.

விளக்கம்:—தாது - பூந்தாது. பூந்தாது முதலியவற்றாற் செய்த பாவை, தண்பனியிலே கிடக்கும் பாவை எனத தனித்தனிக் கூட்டுக. காலை வருந்தும் கையாறு என்றது, காலைவெயிலிலே கிடந்து முறுகும் துன்பம் என்றவாறு; பாவையைப் பிள்ளையாகக்கொண்டு போற்றுதலான், அது காலைவெயிலிற் கிடந்து முறுகுதலைப் பிள்ளையுறும் துன்பமாகக் கருதிக் கையாறு என்றாள். கையாறோம்பலாவது அப்பாவையை எடுத்து அதை அழுமாறுபோலக்கொண்டு அவ்வழுகை தணியப்பாராட்டுதல். விளையாடும் மகளிர் பாவையைத தலைவியின் மகவாகப் பாவிததுக் குழந்தை வெயிலிற்கிடந்து அழுகின்றது, அதனை எடுத்து ஓலுறுத்தி அழுகை தணிப்பாய் எனக் கூறக்கேட்டும், அது செய்யாளாய் வருந்துகின்றாள் என்றவாறு. இங்ஙனம் விளையாடுதல் மகளிர் இயல்பு. எனவே தலைவி ஆய மகளிரோடே இருந்தும் விளையாட்டில் மனம் வையாது தலைவனையே நினைத்துப் பெரிதும் வருந்தாநின்றாள் என்றாளாயிற்று.

முன்னெல்லாம் தானே பாவையை எடுத்து ஓலுறுத்திப் பாராட்டியவள் இப்போது மகளிர் கூறக்கேட்டும் செய்திலள் என்பாள் கூறக்

கேட்டும், என்றாள். கேட்டும் அது செய்யாது இனை பெரிதழக்கும் நன்னுதல் என்க. தலைவியின் மெலிவினைத்தானே கண்கூடாகக் கண்டு நிற்கின்றாளாகலின், இன்ன பண்பின் எனச்சுட்டிக் கூறினாள். இன்ன பண்பின் இனை - இங்ஙனம் செய்யுந்தன்மையுடைய வருத்தம். நன்னுதல்: அன்மொழித்தொகை. முன்னர் நன்றாயிருந்த நுதலின்கட் பசலையை நோக்கி நன்னுதல் பசலை நீங்க என்றாள். பசலை - மகளிர்க்குப் பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு.

அன்ன நசை - அத்தகைய விருப்பம். முன்னர் இன்ன பண்பின் இனை என்றாள் ஆகலின், இதற்கையை இனை நீங்க அத்தகைய விருப்ப மாகின்ற ஒருசொல் என்றாள். அத்தகைய விருப்பமாவது பிரிவின்றி உடனுறைதல் வேண்டும் என்னும் விருப்பம். அதனைத்தரும் ஒருசொல் ஆவது "நின்னை வரைந்து கொள்வேன்காண்" என்னும் சொல். பலப்பல சொல்லி நலம்பாராட்டும் தலைவர்க்கு இச்சொல் ஒன்று கூறுதல் இயலாதோ என்றபடி.

இனி இசையாது கொல்லோ என்பதற்குப் பசலையை வினை முதலாக்கிப், பசலை தலைவர் தமக்கு ஒருசொல் இசையாதோ என்பாரும் உளர்.

பாட்டு - சகூ : தலைவி கூற்று

துறை :—தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக் கண்டவழி அவ்வாற்றாமை நீங்கு மன்றே ; நீங்கியவழிப் பள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பரத்தையர் மாட்டுச் சென்றான் ; அவ்வழித் தலைமகள் ஆற்றாமை மிக்கு வருந்தியிருந்தாள் ; தலைவன் மீண்டுவந்தமை கண்டு ஆற்றாமை நீங்கி மகிழ்ந்தாள் : புணர்ச்சிக்குப்பின் தன்னோடேயிருந்த தலைவனை நோக்கி மகிழ்ச்சி மிகுதியால் தலைவி கூறியது.

இதன்கண், 'சேர்ப்பனே ! இப்பிறவி மாறி மறுபிறப்புக் கூடியவிடத்தும் நீயே என் கணவனாகக்கடவை ; யானே நினது காதலியாகக்கடவன் ; பால்வரை தெய்வம் அங்ஙனமே கூட்டுவ தாக' என்கிறாள்.

சகூ. அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

—அம்மூவனார்.

(இ - ள்.) அணில் பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து - அணிலின் பல்லையொத்த முட்களையுடைய தாது

முதிர்ந்த முள்ளிச்செடிகளையும், மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப - நீலமணியினது நிறத்தை ஒத்த கரிய நீரையுமுடைய கடற்கரையையுடைய தலைவனே, இம்மை மாறி மறுமையா யினும் - இப்பிறப்பு நீங்கி நமக்கு மறுபிறப்பு எய்துமிடத்தும், என் கணவன் நீ ஆகியர் - என் காதலங்கேள்வன் நீயே ஆகுக, நின் நெஞ்சு நேர்பவள் - நின் உளமொத்தவள், யான் ஆகியர் - யானே ஆகுக.

விளக்கம் :—முண்டகம்-முள்ளிச்செடி என்னும் பொருட்டாகலான், அணிற்பல்லன்ன முள் முண்டகம் என்னுது, வாளா முண்டகம் என்றார். அணிற்பல்லன்ன முள்ளையுடைய முண்டகம் என்க. முண்டகம் - கழி முள்ளி. கொங்கு - பூந்தாது. அணிற்பல்லன்ன முள்ளும் கொங்கும் உடைய முண்டகம்போலப் பரத்தமையும், இல்லறவொழுக்கமும் ஒருசேர உடையையாயினும் நீயே என் கணவன் ஆகுக என்றவாறும். நெஞ்சு நேர்தல் குலமகளிர்க்கன்றி பரத்தையர்க்கின்மை குறித்து, மறுமைக் கண்ணும் நீ பரத்தமையுடையை யாயினும் நெஞ்சு நேர்பவள் யாஞகியர் என்றாள். குலமகளிர்க்கு நெஞ்சு நேர்வார் கணவரையின் றிப் பிறரின்மையின் நெஞ்சு நேர்பவன் என்னுது கணவன் என்றாள். கணவனே என்புழி இறுதியிலின்ற ஐ - சாரியை நீ பரத்தமையுடையை யாயினும் நின்கேண்மையை யான் பிறவிகடோறும் விரும்புகின்றேன் என்றவாறு.

இது தலைமகன் நலம் பாராட்டியவழித் தலைவி கூறியது எனக் கருதுவாருமுளர்.

பாட்டு - ரு0 : தலைவி கூற்று

துறை :—கிழவர்க்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி கூறியது. அஃதாவது, தலைவன் ஊடியிருந்த தலைவியின் ஊடல் நீக்கத தூதுவிட்டபொழுது அத்தூதுவர்க்குத் 'தலைவன் தகாத வொழுக்கினன்' எனத் தலைவி கூறியது.

இதனகண், 'தலைவர் தம்பரத்தமையால் தாம் ஆடுந் துறையை அழுகுபடுத்தினர்; தாம மணந்த என் தோளை மெலி வித்தனர்' எனத தலைவி கூறுகின்றாள்.

ரு0. ஐயவி அன்ன சிறுவீ ஞாழல
செவ்வீ மருதின் செம்மலோடு தாஅய்த்
துறைஅணிந் தன்றவ ரூரே யிறையிறந்
திலங்குவளை ஞெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

—குன்றியனார்.

(இ - ள்.) ஐயவி அன்ன ஞாழல் சிறுவீ - வெண்சிறு கடுகை ஒத்த ஞாழலினது சிறிய பூக்கள், செவ்வீ மருதின்

செம்மலொடு தாஅய்-சிவந்த பூக்களையுடைய மருத மரத்தினது வாடற்பூவோடு பரந்து, அவர் ஊர் துறை அணிந்தன்று - தலைவருடைய ஊரின் கண்ணதாகிய நீர்த்துறையை அழகு செய்யாநின்றது, அவர் மணந்த தோள் - அத்தலைவரால் மணக்கப்பட்ட என் தோளோ எனில், இலங்குவளை இறையிறந்து நெகிழச் சாஅய் புலம்பு அணிந்தன்று-விளங்காநின்ற வளையல் முன்கையினீங்கிக் கழலும்படி மெலிந்து தனிமைத்தன்மையையே பூண்பதாயிற்று.

விளக்கம் :—ஐயவி - வெண்சிறுகடுகு. இது ஞாழற்பூவிற்கு உவமை. சிறுவீ - சிறியபூ. ஞாழல் - ஒருமரம். ஞாழற் சிறுவீ என மாறுக. செவ்வீ - சிவந்தபூ மருது - மருதமரம். செம்மல் - வாடற்பூ. தாஅய் - பரந்து. துறை - நீராடுந் துறை. அணிந்தன்று - அழகு செய்தது. இறை - முன்கை. நெகிழ்தல் - நெகிழ்தல்; கழலுதல். சாஅய் - மெலிந்து. புலம்பு - தனிமை.

தலைவர் பரத்தையரோடு ஆடுதலானே நீர்த்துறையில் ஞாழற் பூக்கள் சிதறி அழகு செய்தது. என் தோள்கள் பிரிவாற்றுமையாலே மெலிந்தன என்றவாறு. புலம்பு அணிதலாவது, தனித்திருக்கும் தன்மையை விளங்கவுடைத்தாதல். என்னைத் தலைவர் புறக்கணித்து அடாது செய்கின்றனர் என்று புலந்தபடியாம்.

தலைவர் தனக்கு எதிலர் ஆயினும் என்பது தோன்ற, எம்மூர் என்னாது அவர் ஊர் என்றாள்.

இனி, தலைவர் பிரிந்தமையால் என்னைச் சூடப்படாது ஞாழற்பூ வாடியுதிர்ந்து நீர்த்துறையிலே பரந்து அணிந்தது. என் தோள்கள் மெலிந்தன எனினுமாம், ஞாழற்பூவினை மகளிர் சூடும் வழக்கத்தினைக்.

> " கொழுங்கழல் ஞாழன் முதிரிணர் கொண்டு
> கழுமம் முடித்துக் கண்கூடு கூழை
> சுவன்மிசைத் தாதெரு தாழ, அகன்மதி
> தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்து
> ஈங்கே வருவாள் இவள் யார் கொல்." (கலி - நிசு)

எனவரும் கலியானும் உணர்க.

பாட்டு - நிக : தோழி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது அஃதாவது, தலைமகன் மணம் செய்து கொள்ளுதற்கு வேண்டியவற்றை முயன்று செய்யாநிற்கவே காலம் நீளுதல் பொறுத்த தலைவி, பெரிதும் வருந்தினளாக, 'மணவினைக் குரியன நிகழ்கின்றன; அண்மையில் நிகழும். அது காறும் ஆற்றியிரு' எனத் தோழி தலைவிக்குக் கூறியது.

இதன்கண், 'தலைவனே யானும் பெரிதும் விரும்புகின்றேன்; நற்றாயும் விரும்புகின்றாள்; தந்தையும் அவனுக்கே உன்னைக் கொடுக்க விரும்புகின்றார்; அலர் தூற்றும் இவ்வூர் தானும் அவனொடு நின்னைத் தொடர்பு படுத்தியே தூற்ற நிற்கும்; இவ்வேதுக்களால் விரைவில் வரைவு நிகழ்தல் ஒருதலை' என்று தோழி கூறுகின்றாள்.

நக. கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனே
யானும் காதலென் யாயுநனி வெய்யள்
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்ப லாரும் அவனொடு மொழிமே.

—குன்றியனார்.

(இ - ள்.) கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்-வளைந்த முட்களையுடைய கழிமுள்ளியினது மிக்க பனிக்காலத்துக் கரிய மலர், நூலறு முத்திற் காலொடு பாறித் துறைதொறும் பரக்கும் - நூல் அற்றுச் சிதறிய முத்துக்களைப் போன்று காற்றாலே சிதறப்பட்டு நீர்த்துறைகள் தோறும் பரவா நிற்றற்கிடமான, தூ மணற் சேர்ப்பனே - தூய மணலையுடைய கடற்கரையையுடைய தலைவனே, யானும் காதலென் - யானும் விரும்பா நின்றேன், யாயும் நனி வெய்யள் - நற்றாயும் பெரிதும் விரும்புதல் உடையள், எந்தையும் கொடீஇயர் வேண்டும் - நம் தந்தையும் அவனுக்கு நின்னை மணஞ் செய்வித்தலை விரும்பா நின்றான், அம்ப லூரும் அவனொடு மொழிமே - சிலர் அறியப் பழிதூற்ற நின்ற இவ்வூரினரும் இவற்றிற்கு இயைய அவனோடே நின்னைத் தொடர்பு படுத்தியே கூறுகின்றனர்.

விளக்கம்:—கூன்முள் - வளைந்தமுள். முண்டகம் - கழிமுள்ளி. கூர்ம்பனி என்பதற்குக கூரசெய்யும் பனி என்பாரும் உளர். அஃதாவது, குளிர்மாற் குன்னுக்கச் செய்யும் பனி என்பது கருத்து. அஃதப் பொருட்டாதல் "மாதிகூர" எனவரும் நெடுநல்வாடையான் அறிக. மாமலர்-கரியமலர். முள்ளிப்பூக கருநிறமுடைததாதலை "மணிப்பூமுண்டகம்" (மதுரைக் - கூசு.) என்பதனானும் உணர்க. கோவை செய்த தூல் அறுந்தமையாலே தனித்தனியாகச் சிதறிய முத்துப் போல என்க. ஈண்டு இவ்வுவமை வினைபற்றி வந்தது. கால் - காற்று. ஒடு: ஆனுருபின் பொருளதாய் நின்றது காற்றாலே சிதறி என்க. பாறுதல் - பரத்தல். துறை - நீர்த்துறை. 'வரிக்கும' என்றும் பாடம். வரித்தல் - அழகு செய்தல், வரிவரியாய்க்கிடக்கும் எனினுமாம். தூமணல் - வெண்மணலுமாம். சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன்.

முள்ளுடைய செடியின் மலர்ந்த மலரைக் காற்றுச் சிதறச் செய்து மணற்றுறையை அழகுபடுத்தும் என்றது, காவன் மிக்க பெருங்குடிப்

பிறந்த தலைவியைப் பால்வரை தெய்வம் தலைவனுடனே கூட்டி அணி செய்யா நிற்கும் என்பதாம்.

யானும் காதலென் என்றது நின்னில் விரும்பப்பட்ட தலைவன் நின் பெருமைக் கேற்ற தகுதியுடையனுதல் கண்டு அவன் நினக்குத் தலைவனுதலே யான் பெரிதும் விரும்பா நின்றேன் என்றவாறும். யானும் என்றதன்கண் உம்மை, எண்ணும் மையாதலோடு நீயே யன்றி யானும் காதலென் என்னும் பொருளுடைத்தாதலும் அறிக. யாய் - தாய். யாய் என்பது என்தாய் என்னும் பொருட்டு. ஈண்டுத் தனக்கும் தலைவிக்கும் வேற்றுமை கருதாது நற்றாயையே என்தாய் என்றாள் என்க. எந்தை என்பதும் அது.

கொடுஇயர் - கொடுக்க, மணஞ்செய்விக்க என்றவாறு. வேண்டும் என்பதற்கு வரைவொடு வருதலே வேண்டுவன் எனினுமாம். ஊரவர் தலைவனோடு நின்னைச் சேர்த்துப் பழிதூற்றலுமாம் வரைவு விரைவின் நிகழ்தற்கு ஏதுவாமாற்றான் நலந்தருவதாம் என்பாள், ஊரும் அவனுமும மொழிம் என்றாள். மொழியும் என்பது மொழிம் என ஈற்றயிர் மெய் கெட்டது.

"இங்ஙனமாதலின் விரைவில் வரைவு நிகழும் அதுகாறும் ஆற்றுக" என்பது கருத்தாகக் கொள்க.

பாட்டு - நுஉ : தோழி கூற்று

துறை :—வரைவு மலிவுகேட்ட தலைமகட்குத் தோழி "முன்னுளின் அறத்தொடு நின்றமை காரணத்தான் இது விளைந்தது" என்பது படக் கூறியது. அஃதாவது, தலைவன தலைவியை வரைந்து கோடற்குரிய முயற்சி நிகழ்தலை அறிந்து மகிழ்ந்த தலைவிக்குத் தோழி, 'இச்செயல் யான் அறத்தொடு நின்றமையானே நிகழ்கின்றது' என்பது தோன்றக் கூறியது.

இதன்கண், தோழி, தலைவியை நோக்கி, 'நீ சூர் தீண்டப் பெற்ற தன்மையை யுடையையாய்க் கற்பிற்கு இழுக்குண்டாகுமோ என்று நடுங்கினமை கண்டு யான் அடிக்கடி இரங்கினேன் அல்லனோ? அவ்விரக்கத்தின் விளைவே இவ்வரைவு மலிவு' எனக் கூறுகின்றாள.

நுஉ. ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் கூவிளிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரிந்தனென் அல்லனே இறையிறை யானே.

—பனம்பாரனார்.

(இ - ள்.) ஆர்கலி மிதித்த நீர் திகழ் சிலம்பில் - கடலே மிதித்தற்குக் காரணமான அருவி நீர் விளங்கும் மலையிடத்தே உறைபும், சூர் நசைந்தனையையாய் - தீண்டிவருத்தும் தெய்வத் தாலே விரும்பப்பட்ட தன்மையை உடையளாகி, நடுங்கல் கண்டே - செவிலி கட்டுக் காணுமிடத்தும் வெறியாடுமிடத்தும் நம் கற்பிற்கு என்னுகுமோ என்று நீ நடுங்குதலைப் பார்த்து, நரந்தம் நாறும் குவையிருங் கூந்தல் நிரைந்து இலங்கு வெண்பல் மடந்தை - நரந்தம்பூ மணத்தற்கு இடனாகிய தொகுதியாகிய கூந்தலையும் நிரல்பட்டு விளங்கா நின்ற வெள்ளிய பல்லினையும் உடைய மடந்தையே, யான் இறை இறை பரிந்தனன் அல்லனே - யான் சிறிதுசிறிது இரங்கி வருந்தினேன் அல்லனே.

விளக்கம்:—ஆர்கலி மிதித்தலாவது கடனீரை உந்தித்தள்ளுதல். ஆர்கலி - கடல். கடலை மிதித்த நீர் திகழ் சிலம்பு என்றது, தலைவன் வரைவு மலிந்தமை அலர் தூற்றிய இவ்வூரினர் வாயை அடக்கிற் றென்னும் குறிப்புடைத் தென்க.

சிலம்பிற் சூர் - மலையுறை தெயவம். சூரமகளிராகிய தெய்வமு மாம். சூர் நசைந்தனையை யாய் என்றது, சூர் விரும்பி நின் மெய்யைத் தீண்டிவருத்தாதிருப்பவும் கட்டுவிச்சி செவிலி முதலியோராலே சூர் தீண்டப்பட்டவளாகக் கருதப்படுதற்கு ஏற்றவளாகி என்றவாறு. நடுங் குதல் - தன்பொருட்டாகச் செவிலி எடுக்கும் வெறியாடலால் கற்புக்கு ஏதம் வினையுங்கொல்! இந்நோய் நமமால் வந்ததன்று தெய்வத்தால வந்ததுபோலும் எனத் தலைவர் கருதின் நம் நிலை என்னும்! எனக்கருதி மெய் நடுக்கமுறுதல். வரைவு மலிந்தமை உணர்ந்த பின் தலைவி நலிவ கன்று முகமலர்ந்து முறுவல் பூப்பத் தோன்று கின்றமையின் இங்கலம் தோன்ற நரந்த நாறும் குவையிருங் கூந்தல் நிரந்திலங்கு வெண்பல் மடந்தை எனச் சொல்லோவியப் படுத்துரைத்தாள். இறை இறை - சிறிது சிறிது. நின்னைக் காணும் பொழுதெல்லாம் என்றவாறு.

பரிந்தனென் அல்லனே என்றது இரங்கினேன் அல்லனே அங்ங னம் இரங்கிச் செவிலிக்கு அறத்தொடுநின்றேன் அதன் பயனே இவ்வரைவு மலிவு என்ற வாறும்.

பாட்டு - நாக : தோழி கூற்று

துறை :—வரைவு நீட்டித்த வழித் தோழி, தலைமகற் குரைத்தது. அஃதாவது, 'தலைவன் வரைந்து கொள்வேன்' என்று உறுதிமொழி கூறிய பின்னரும் காலந் தாழ்த்தலாலே ஆற்றுமை மிக்க தலைவியின் நிலைகண்டு தோழி தலைவனை நோக்கிக் கூறியது.

இதன்கண், 'தலைவனே! நீ மொழிந்த சூள்மொழிகளின் படி ஒழுகாமை எம்மைப் பெரிதும் வருத்தும்' எனத் தோழி கூறுகின்றாள்.

ஙூ. எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேரிறை முன்கை பற்றிச்
சூர மகளிரோ டேற்ற சூளே

—கோப்பெருஞ் சோழன்.

(இ - ள்) மகிழ்ந - தலைவனே, நனைமுதிர் புன்கின் பூத் தாழ் வெண்மணல் - அரும்பு முதிர்ந்த புன்கமரத்தினது பூக் கள் உதிர்ந்து கிடந்த வெள்ளிய பணற் பரப்பு, வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும் - வேலனால் ஒப்பனை செய்யப்பட்ட வெறியாடுதற்குரிய இடங்கள் தோறும், செந்நெல் வான்பொரி சிதறியன்ன - சிவந்த நெல்லினது வெள்ளிய பொரியைச் சிதறி னாற் போன்று தோன்றுகிற்கும், எக்கர் நண்ணிய எமமூர் வியன் துறை முன்றில் - இடுமணல் பொருந்திய எம்முடைய ஊரின் கண் உள்ள அகன்ற நீர்த்துறை முன்றிலிடத்தே, நேர் இறை முன்கை பற்றி - நேரிய சந்தினையுடைய முன்கையைப் பிடித்துக் கொண்டு, சூர் அர மகளிரொடு உற்ற சூள் - நீ சூரமகளிரைக் சுட்டிக்கூறிய வஞ்சினம், எம் அணங்கின - எம்மை வருத்தா நின்றன.

விளக்கம் :—மகிழ்ந முன்றிலிடத்தே முன்கைபற்றி நீ சூரமகளிர்ச சுட்டி உரைத்த சூள் எம் அணங்கின என இயைத்துக்கொள்க.

சூள் உரைத்தோர் அதன்படி ஒழுகாவிடின் அச்சூளொடு சார்த்திய தெய்வம் அச்சூளுரைத்தாரைத் துன்புறுத்தா நிற்கும். ஆதலால், நீ அதனை அஞ்சாது மறந்து திரிவை எனினும் அச்சூளானே நினக்கு ஏதம் வரும் என்று எண்ணி யாங்கள் வருந்தா நின்றேம் என்பாள், சூள் எம்மணங்கின என்றாள். தலைவி தலைவன் இருவர்க்கும் இன்ப துன்பம் ஒன்றாய் வருதலின், தலைவற்குறும் ஏதம் தலைவியதாய்க் கொண்டு கூறினள் என்க. முன்றிலை வியன்றுறையோடும் கூட்டி வியன்றுறை முன்றில் என்க. முன்றில் - முற்றம். பூத்தாழ் வெண் மணல், வேலன் புனைந்த வெறியயர் வெங்களத்தே பொரி சிதறிக்கிடந் தாற்போன்று தோன்றும் என்க. பூ, வெண்பொரிக்கும் வெறியாடு களம், வெண் மணற்கும் உவமைகள். வான்பொரி - வெள்ளியபொரி. அஞ்சவேண்டாத களம் அஞ்சுதற்குரிய வெறியாடு களம்போலத் தோன்றும் என்றது, அஞ்சவேண்டாத சூள், அஞ்சுதற்குக் காரண மாயிற்று என்னும் உள்ளுறை தோன்ற நின்றதுணர்க. அஞ்சற்க என்று சூள் மொழிந்தாய், அச்சூள் மொழிக்கே யாம் இதுபொழுது அஞ்சுகின்றேம் என்றவாறு. எக்கர் - இடுமணல். பலமுறையும் சூள் மொழிந்தான் என்பதுதோன்ற அணங்கின எனப் பன்மையாற் கூறினள். சூர மகளிரொடு-சூரமகளிரின் பெயரோடு சேர்த்து என்க.

பாட்டு - நிசு : தலைவி கூற்று

துறை :—வரைவு கீட்டித்த வழி ஆற்றுளாகிய தலைமகள், தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரைந்து கோடற்கண் கருத்தின்றிக் களவின்பமே விரும்பி ஒழுகுதலானே அதனால் உண்டாகும் துனபத்தை உணர்ந்து வருந்திய தலைவி வரைவு முடுக்குதல் வேண்டித் தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'தோழி கேள் ! யான் இவ்விடத்திலிருக்கின்றேன். என்னலனே கானக நாடனோடு அவன் இருக்குமிடத்திற்குச் சென்றுவிட்டது. இந்நிலை என்னால் ஆற்றுதற்கரிதாம்' என்று தலைவி கூறுகின்றாள்.

நிசு. யானே யீண்டை யேனே யென்னலனே
ஏனல் காவலர் கவணெலி வோடிக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனேறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனை டாண்டோழிந் தன்றே.

—மீனெறிதூண்டிலார்.

(இ - ள்.) தோழி, யானே ஈண்டையேன் - யான் மட்டும் இவ்விடத்திலேயே இருக்கின்றேன் என் நலன் - என்னுடைய பெண்மை நலமோ எனில், ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக் கான யானை கைவிடு பசுங்கழை - தினைப்புனம் காப்போர் விடும் கவண் கல்லினது ஓசையை அஞ்சிக காட்டியானை (தான் வளைத்துப் பின்னர்) கைவிட்ட பசிய மூங்கில், மீனெறி தூண்டிலின் நிவக்கும் - மீனால் இரைகதவப்பட்ட தூண்டிற்கோல் போன்று நிமிராநிற்கும், கானக நாடனொடு - காட்டையுடைய தலைவனோடே, ஆண்டு ஒழிந்தன்று - அவ்விடத்தேயே நீங்கியொழிந்தது.

விளக்கம் :—என்னை வறியளாக்கி என் நலனெல்லாம் உடன் கொண்டு சென்றார்; அதனால் யான் ஆற்றுகிலேன் என்றவாறு. யானே என்பதன்கண், ஏகாரம் நலனைப் பிரித்தலின் பிரிநிலை ஏக. எனக் குரியதாயிருந்தும் என்னைக் கைவிட்டுச்சென்ற தென்பாள், என்னலனே என்றாள். நலன் - சாதியொருமை.

நலனுவன: அழகு சிந்தை உணர்வு தேசு நாணம் நிறை மூதலாயின.

"பயிரொன்று கலையும் சங்கும் பழிப்பறு நலனும் பண்பும்
செயிரின்றி யலர்ந்த பொற்பும் சிந்தையும் உணர்வும் தேசும்
வயிரஞ்செய் பூணும் நாணும் மடனுந்தன் நிறையும் மற்றும்
உயிரொன்றும் ஒழிய எல்லாம் உருத்தொரு தெரிவை நின்றாள்."
(உலா - அ)

எனவரும் கம்பராமாயணச் செய்யுளாலும் மகளிர் இழக்கும் நலங்களை அறிக.

இனி ஏனல் காவலர் கவண் ஒலியை வெரீஇ யானை உணவாக வளைத்த பசுங்கழையைக் கைவிடும் என்றது, உள்ளுறை உவமமாம். மீனெறி தூண்டில் ஏனையுவமம் என்க. யானும் அலரஞ்சி அவருள் வழிப்படாது இவ்விடத்திருக்கின்றேன் என்பது உள்ளுறையாகக் கொள்க.

கானயானை இரையின் பொருட்டு வளைத்த பசுங்கழையைக் கவண் ஒலி வெரீஇக் கைவிடும் கானகம் என்க.

இங்ஙனமாகலின் யான் ஆற்றேனாகின்றேன் என்று கூறி விரைவில் அவர் வரைந்துகொள்ளுமாறு நீ முயல்க எனக் குறித்தவாறும்.

பாட்டு – நிரு : தோழி கூற்று

துறை :—'வரைவொடு புகுதானேல் இவள் இறந்துபடும்' எனத் தோழி தலைமகன் சிறைப்புறத்தானைக் சொல்லியது. அஃதாவது, வரைவுநீட்டித்தல் பொருது, பெரிதும் தன்புறு நின்ற தலைவியின் நிலைமையைத் தலைவன் அறிந்துகொள்ளுமாறு செய்ய நினைந்த தோழி, அவன் சிறைப்புறமாக வருதல் கண்டு அவன் வரவினை அறியாதாள்போல அவன் கேட்கும்படி கூறியது.

இதன்கண், 'இவ்வூர், தலைவி ஒருசில நாட்களே வாழ்தற் குரியதாய் இன்னுதாக மாறிவிட்டது என்று, அவள் ஒருசில நாளில் இறந்துபடுவாள்' என்பதுபடத் தோழி கூறுகின்றாள்.

நிரு. மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்
கையற வந்த தைவரல் ஊதையொடு
இன்னு உறையுட் டாகும்
சின்னட் டம்மவிச் சிறுநல் லூரே.

—நெய்தற் கார்க்கியர்.

(இ - ள்.) இச்சிறு நல்லூர் - முன்பெல்லாம் வாழ்தற் குரியதாயிருந்த நன்மையுடைய இச்சிறிய ஊர், மாக்கழி மணிப் பூக்கூம்பத் தூத்திரை பொங்கு பிதிர்த் துவலையொடு - பெரிய கழியிடத்தே உள்ள நீலமணிபோலும் நிறமுடைய பூக்கள் குவியும்படி தூவுதலையுடைய அலைகளிடத்துப் பொங்கிய பிசிராகிய துளிகளோடே, மங்குல் தைஇ - முகில்களையும் அணிந்து கொண்டு, கையற வந்த தைவரல் ஊதையொடு - பிரிந்துறை வோர் செயலற்று வருந்தும்படி வந்துள்ள தடவுதலுடைய

வாடைக்காற்றோடு, இன்ஞ உறையுட்டாகும் - இன்னல் மிக்க உறையுமிடத்தையுடையதாகும் ஆதலால், சில்நாட்டு - இவ்வூர் சிலவாகிய வாழ்நாள்களே மட்டுமே உடைத்து.

விளக்கம் :—மாக்கழி - பெரிய கடற்கழி (பேரோடை) கரிய கழியுமாம். மணிப்பூ என்றது நெய்தற் பூவை. மணி - நீலமணி. பூக்கூம்பும் படி கையற வந்த ஊதை என்க. தூ - தூவுதல். தூத்துவலை, திரை பொங்கு பிதிர்த்துவலை எனத் தனித்தனிக் கூட்டுக. மங்குல் - மேகம் - தை இ - அணிந்து. கையற - செயலற்று வருந்தாநிற்ப. தலைவனைப் பிரிந்துறையும் தலைவி ஆற்றுமையால் கையற்று வருந்த என்று அறிவித்தவாறு. வந்த என்றது யாம் விரும்பாதிருப்பவும் தானே வந்த என்றவாறு. தைவரல் - தடவுதல். இது வாடையின் இயல்பு. இத்தைவரல் இன்ஞமைக்கேது என்க ஊதை - வாடைக்காற்று. பிரிவாலே வருந்தியிருத்தற் கிடமானதுமன்றிப் பிரிந்தோரைத் தைவந்து வருத்தும் ஊதையினையும் உடைத்தாய் இன்ஞதாகும் என்க. உறையுட்டு - உறையுளை உடைத்து. இத்தகைய இன்ஞ உறையுள் தன்கண் வாழ்வார்க்களிக்கும் வாழ்நாளும் சிலவே என்பாள், சின்ஞாட்டு என்றாள். சில்நாட்டு - சிலவாகிய நாள்களையுடையது. வாழ்வோர் நாளை இடத்திலேற்றிக் கூறப்பட்டது. இத்தகைய இன்ஞமையுடைய உறையுளில் தலைவனைப் பிரிந்துறைய நேர்ந்த தலைவி, இன்னும் ஒருசில நாள் மட்டுமே உயிர் வாழ்வாள்போலும் என்றபடி. எனவே விரைவில் வரைந்து கொள்ளல்வேண்டும் என அறிவித்தவாறுயிற்று.

"மணிப்பூ முண்டகத்தின் வேறாய் மணிமருள் நெய்தலை மணிப்பூ என வழங்கிக் காட்டியதனால் இவர் நெய்தற் கார்க்கியர் எனப்பட்டனர் ஆவார்" என ஊகிப்பாருமுளர். இப்பெயர் இக்கருத்தாலே வழங்கப்பட்டதாயின் "மணிப்பூக் கார்க்கியர்" எனவே வழங்கியிருப்பின் இன்னும் விளக்கமுடைத்தாகும்.

பாட்டு - நகூ : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் கொண்டதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்ற வழி, இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது ; அஃதாவது 'தலைவியையும் உடன்கொண்டு செல்க' எனத் தோழி வேண்டிஞள். தலைவன் அவ்வேண்டுகோட்கிணங்காஞய்த் தலைவியைவிட்டுத் தனித்துச்சென்றான் ; அங்ஙனம் செல்லும் வழியிடையே உள்ள தீமைகளைக்கண்டு 'தலைவியை அழைத்துவாராதது நன்றேயாயிற்று ; அவள் உடன்வரின் இத்தீங்கினை ஆற்றாள்' எனத் தலைவன் கூறியது.

இதன்கண், 'தலைவி என்னோடு வந்திருப்பாளாயின் நாயுண்ட இவ்வழுகல் சின்னீரைத் சன் கையால் கொண்டு உண்ண நேர்ந்திருக்கும்; அவ்வாறாயின் அவள் பெரிதும் இரங்கத்தக்கவள் ஆவாள் ; வாராமையே நன்றாயிற்று' என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

ருசு. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் மெம்மோ டுணீஇயர்
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியளெங் நெஞ்சமர்ந் தோளே.

—சிறைக்குடி ஆந்தையார்.

(இ - ள்.) வேட்டச் செந்நாய் - வேட்டஞ்செய்து உயிர் வாழும இயல்புடைய செநநாய்கள், கிளைத்தூண் மிச்சில் - தங்கால்களாலே தோண்டி உண்ணப்பட்டு எஞ்சியதாகிய, குளவி மொய்தத அழுகல சின்னீர் - காட்டுமல்லிகையின் இலைகள் உதிர்ந்து மூடியதனாலே அழுகிய சிறிதாகிய நீரினை, வளையுடைக் கையள் - வளையணிந்த கையினையுடையளாய் எமமொடு உணீஇ யர் - அக்கையாலே முகந்து எம்மோடு சேர்ந்து உண்டற்கு, வருகதில - வருவாளாக அது எமககு விருபபம, எம் நெஞ்சு அமர்ந்தோள் - எமது நெஞ்சிடத்தே வீறறிருந்த தலைவி அங்ங னம் வந்துளாளாயின், அளியளோ அளியள் - பெரிதும் இரங்கத் தக்கவள் ஆவாள்.

விளக்கம் :—வேட்டையாடி உண்டலே செந்நாய்க்கியல்பாதலின், வேட்டச செந்நாய் என்றான். வேட்டையாடும் செந்நாய் திரியும் நெறி யென நெறியின் நீங்கு குறித்தவாறுமாம். நாய் நாவானககி நீர் குடிக் கும் இயல்பிற்று. நக்கிக் குடித்தற்கும் போதாமையாறறேண்டியுண்டது என்பான். கிளைத்தூண் மிச்சில் என்றான். கிளைதல் - தோண்டுதல், ஈண்டுச செந்நாய் காலாலே தோண்டின என்க. ஊண் மிசசில் - உண் டெஞ்சியது. எனவே, எச்சில் நீர் என்றவாறு. நாயுண்டெஞ்சிய மிசசில் என்றது, அந்நீரின் தூய்தல்லாத் தன்மையை நன்கு எடுத்துக் கூறிய வாறும்.

குளவி - காட்டுமல்லிகை. ஈண்டு அதன் சருகிற்கு ஆகுபெயர். மொய்த்தல் - சருகு உதிர்ந்து மூடுதல். இனி, குளவி வண்டுமாகலின் மொய்த்த என்ற வினைக்கேற்ப வண்டெனினுமாம். அழுகற்கேது வெயிலாற் கொதித்தும் இரவிற் குளிர்ந்தும் கிடத்தல் எனலாம். இனிச் சருகு மொய்த்தழுகிய எனினுமாம். சின்னீர் - சிறிய அளவுள்ள நீர். நாயுண்டமிச்சில் ஆதல் மட்டுமின்றி அழுகலும் உடைய நீர் என உண்ணத்தகாமைக்கு இரண்டு எதுக் கூறினான் என்க.

இவ்வழுகனீரை அவள் உண்டல் கிடக்க அழகிய அக்கையாலே தொடுதலும் இரங்கத்தக்கதென்பான், அவள் கையின் அழகை வினவு கூர்ந்து வளையுடைக்கையள் என்றான். வருகதில் என்பதில், தில் விழைவுப்பொருளும் ஒழியிசைப்பொருளும் ஒருசேரக் குறித்துநின்றது

"விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப திலலைச் சொல்லே." (இடை - கி)

என்பது தொல்காப்பியம். எனவே வருக தில் என்றதற்கு வருவாளாக, அது எமக்கு விருப்பம்; அங்ஙனம் வாராதொழிந்தமை நண்றென்று பொருள் காண்க. அம்ம - கேள் என்னும் பொருட்டு. தன் நெஞ்சொடு கூறுகின்றான் ஆகலின் கேள் என்றான் என்க.

'அன்பிலாமையால் அவளை வாரற்க என்றேன் அல்லேன், இத் தீமை நினைந்தே கூறினேன்' என்பான், என் நெஞ்சமர்ந்தோள் என்றான்.

இனி. இச்செய்யுளை "இது களவிற் றலைவன் தலைவியை உடன் கொண்டுபோகத் துணிந்தது" (தொல் - அகத - சசு) என்று இளம் பூரணரும், "உற்பிற்றலைவன் தோழி கேட்பக கூறியது" (தொல் - கற்பு - டு) என நச்சினார்க்கினியரும் கருதாகின்றனர்.

பாட்டு - டுள : தலைவி கூற்று

துறை :—காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள தோழிக்குச் சொல்லியது; அஃதாவது, தாய் முதலியவர்களால் இற்செறிக்கப்பட்ட தலைவி, அக்காவல மிகுதியால் தலைவனைக் காணப்பெறாளாயப் பெரிதும வருதலமுற்றுத் தோழிகுக் கூறியது.

இதன்கண், மகன்றிற் பறவைகள்போன்று பிரிந்து வாழ வியலாத நீங்காத காமத்தோடே தலைவரைப் பிரிந்துறைவதை விட அவர் பிரிந்தவுடனே ஒருவராயிருந்து உயங்கும் புன்மை யிற் றப்பும்பொருட்டு 'எமமுயிர் போவதாக; இஃது எமக்கு விருப்பம்' என்று தலைவி, தோழிக்குக் கூறுகின்றாள்.

டுள. பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவேம் ஆகிய வுலகத்
தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே.

—சிறைக்குடி ஆந்தையார்.

(இ - ள்.) தோழி—, கடன் அறிந்து இருவேம் ஆகிய உலகத்து - செய்யக்கடவ கடமைகளையறிந்து ஓர் உயிர்க்கு ஈருடம்பினேமாய்ப் பயின்றுவரும் இவ்வுலகதனின்கண்ணே, ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கு-பிரிவினாலே ஒருவராகித் தனித்துறையும் சிறுமையினின்றும் யாம் தப்புதற் பொருட்டு, பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன-தாம் வாழும் நீரின்கண் உள்ள நீர்ப்பூ வொன்று தம்மிடை நின்று மறைக்க நேரினும்

அம்மறைவானேரும் நொடிப் பொழுதும் பலயாண்டுகள் கழிந்தாற் போலக் கருதித் துன்புறும், நீர் உறை மகன்றில் புணர்ச்சி போல - நீரின்கண் வாழும் மகன்றிற் பறவைகளின் சேர்க்கையைப் போன்று, பிரிவு அரிதாகிய தண்டாக் காமமொடு-பிரிந்துறைதல் அரிதாகிய துய்த்தமையாத காமத்தோடே, உடன் உயிர் போகுக தில்ல - பிரிவு நேர்ந்த அப்பொழுதே இவ்வுயிரும் இவ்வுடலை விட்டுப் போவதாக; இஃது எனக்கு விருப்பம்.

விளக்கம்:—மகன்றில் - நீரின்கண் வாழும் ஒருவகைப் பறவை. இப்பறவைகள் ஆணும் பெண்ணும் கூடி இணைபிரியாது வாழும் இயல்புடையன. தம்முட் சிறியதொரு பிரிவு நிகழினும் ஆற்றாது உயிர் விடும் ஆராக்காதலுடையன என்பர். இதனைக் "குறுங்கான் மகன்றி லன்ன உடன்புணர் கொள்கைக் காத லோரே" என இந்நூல் நகைச்சுவை செய்யுளில் வருதலானும்,

"மூடியா நுகர்ச்சி முற்றுக் காதல்
அடியோர் மைந்தர் அகலத் தகலா
அவர்ஞெமன் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி" (அ : சஉ-ச.)

எனவரும் பரிபாடலானும் உணர்க.

மகன்றிற் பறவைகள் இணைந்து நீரிடை நீந்துங்கால் அந்நீரில் நிற்கும் தாமரைமலர் ஒன்று அவற்றிடையே நிற்க விலகிச் செல்லுமல்லவோ? அங்ஙனம் விலகிச் செல்லுங்கால் அப்பூவானே மறைக்கப்படும் காலம் எத்துணைச் சிறிதாம், அச்சிறுகாலப் பிரிவுதானும் பல யாண்டுகள் பிரிந்தாற் போன்ற வருத்தத்தைச் செய்வதாக ஆற்றுமையுறும் மகன்றில் போல என்பாள், 'பூவிடைப்படினும் யாண்டு கழிந்தன்ன புணர்ச்சி மகன்றில்' என்றாள். மகன்றிற் புணர்ச்சி - அங்ஙனம் சிறுபிரிவும் நிகழாது ஓம்பி உடனுறையும் மகன்றிற் பறவைகளின் சேர்க்கை. தண்டாக் காமம் - துய்த்தமையாத காமம். உடன் - பிரிவு நிகழ்ந்த பொழுதே. மகன்றிற் பறவைகள் பிரிவு வந்துழி இறக்குமாறுபோல என் உயிரும் போவதாக என்றாள் என்க.

புன்மை - ஈண்டுச் சிறுமை; பிரிவாலே நிகழும் சிறுமையை உயிரோடிருந்து நுகர்தலேவிட இறந்துபடுதலே நன்றென்றவாறும். தலைவருக்கும் தனக்கும் உயிர் ஒருங்கே போக என்பாரும் உளர். தலைவருயிர் போக எனத் தலைவி கூறுதல் சிறப்பல்லாமை உணர்க. தில் - விழைவுப் பொருள் குறித்து நின்றது. உயல் - தப்புதல்.

பாட்டு - நிகழ : தலைவன் கூற்று

துறை :—கழற்றெதிர்மறை. அஃதாவது, இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவியைக் காணப் பெறுமையாற் பெரிதும் துன்புற்று நலிந்த தலைவனைப் பாங்கன் இது நின்பெருமைக்குத் தகவாகாதென இடித்துக் கூறிய பொழுது தலைவன் அவனுக்கு மறுமொழியாகக் கூறியது.

இதன்கண், 'என்னை இடித்துரைக்கும் நண்பரீர்! நீயிர் இடித்துரை வழங்குவதை விட்டு என்னையைத் தணிக்க வேறு செயல் ஏதேனும் உளதாயின் அது செய்தலே நன்று. இந்நோய் என் ஆற்றலானே தடுத்தற்குரியதாக எனக்குத் தோன்றிற்றில்லை' எனத் தலைவன் பாங்கனுக்குக் கூறுகின்றான்.

நூ. இடிக்குங் கேளிர் நுங்குறை ஆக
நிறுக்க லாற்றினே நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.

—வெள்ளி வீதியார்.

(இ - ள்.) இடிக்குங் கேளிர் - இடித்துரை வழங்கும் கேண்மையுடையீரே, நுங்குறை ஆகம் நிறுக்கல் ஆற்றின் நன்று மற்று இல்ல - நீயிர் செய்யும் இடித்துரைச் செயல் என் னுடம்பு உருகாமல் நிறுத்துதலைச் செய்யின் நற்செயல் இத னிற் பிற இலவாகும். ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில் - ஞாயிற்று மண்டிலம் காய்தலானே வெம்மையுடைத்தாகிய பாறையின் ஒருபுறத்தே வைக்கப்பட்டு, கையில் ஊமன் கண் ணிற் காக்கும் வெண்ணெய் உணங்கல் போல - கையில்லாத தொரு மூங்கையன் கண்களான் மட்டும் பாதுகாக்கும் வெண் ணெய் உணங்கல் போன்று, ஆகம் நோன்று கொளற்கரிது - யானும் இவ்வுடல் உருகாமல் பொறுத்தல் அரிதாகும், அஃதெற் றலெனின், பரந்தன்று இந்நோய் - அவ்வாகத்தின்கண் இந்த நோய் பரந்ததாகலான்.

விளக்கம்:—இடிக்குங் கேளிர்-குற்றங்கண்டவிடத்துக் கடிய கூறித் திருத்துதற்குரிய நண்பர்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிகண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (குறள் - எசஅ.)

என்னுந்திருக்குறள் ஈண்டு நினைவு கூரற்பாற்று. இடிக்குங்கேளிர் என்றமையால் அவர் இடித்துரைத்தமையும் பெற்றாம். இடித்துரைத் தலாவது "தேரோன் தெறுகதிர் மழுங்கினும் திங்கள் தீரா வெம்மை யோடு திசை நடுக்குறுப்பினும் பெயராப் பெற்றியிற் றிரியாச் சீர்சால் குலத்திற் றிரியாக கொள்கையும் கொள்கையொடு நலத்திற் றிரியா நாட்டமும் உடையோய் நீ கண்டதன் அளவையிற் கலங்குதி இஃது நின் பெருந்தகவிற்கு ஒல்லுமோ" என்று இன்னோன்ன உரைத்தல்.

கேளிர், நும் என்னும் பன்மைச் சொற்கள் செறல்பற்றி நண்பன் ஒருவனுக்கே வந்தன. நும் குறை - நுமது செயல். அஃதாவது,

இடித்துரைக்கும் இச் செயல் என்றவாறு. நண்பன் செய்யும் செயல் தன்பம் போக்கவல்லதாதல் வேண்டுமன்றே நும் இடித்துரை எனக் குற்ற நோயைப் போக்குமாயின் நன்று; அஃது அத்துயரைப் போக்க வல்லதன்றென்பான், 'நுங்குறை ஆகம் நிறுக்கலாற்றினே நன்று' என் றான். ஓகாரம் அதுசெய்திலது என்னும் பொருள்பயந்து எதிர்மறை யாயிற்று. ஆகம் - உடம்பு. உடம்பை நிறுத்தலாவது, அந்நோயான் உருகாது பாதுகாத்தல். நிறுத்துமாயின் இது மிகவும் நன்று இதனின் நன்று வேறு இல என்றான் எனக.

இந்நோய் நீயிர் இடித்துரை வழங்கினும் என்னைப் பொறுத்தற் கரிது என்பான் நோன்று கொளற் கரிது என்றான்.

நோற்றற் கரிதாயினமைக்கு ஏதுக் காட்டுவான் பாறையில் வைத்த வெண்ணெய் உணங்கல் போல இந்நோய் பரத்தலான் உடல் உருகா நின்றது என்றான்.

வெண்ணெய் உணங்கல், ஆகத்திற்கு உவமை. அதனை ஞாயிறு காய்தல், நோய்பரத்தற்குவமை. கையில் ஊமன் - தலைவனுக்கு உவமை. கையில்லாமையால் உருகும் வெண்ணெயை எடுத்து நிழலி லிட்டு உருகாமற் பண்ணவும், ஊமனுகலின் பிறர்க்கதனை உரைக்க வியலாமை பற்றிப் பிறரானே ஓம்பவும் இயலாதவன் ஆனைப் போன்று யானும் என் ஆகத்தை யானேயாதல் பிறர் உதவியாலாதல் ஓம்ப முடியாதவன் ஆயினேன்; ஆகவே, உன் இடித்துரை பயனில் சொல் லாம் என்றவாறு.

பாட்டு - நுகை : தோழி கூற்று

துறை :—பிரிவிடை அழிந்த கிழத்தியைத் தோழி வற் புறுத்தியது. அஃதாவது, பொருளுவயிற் பிரிந்த தலைவன் மீண்டு வாராமையால், ஆற்றுமை மிக்க தலைவியைத் தோழி அவன் வருவதற்கு ஏதுக்காட்டி ஆற்றியது.

இதன்கண், 'அவாவளவிற்றாகப் பொருள் யாண்டும் நிரம்பா இயல்பிற்றாதலை அவர் நன்கு அறிகுவர். மேலும், நின்பாற் பெரிதும் அன்புடையவர் ஆதலின், நின்னை அருளுதற் பொருட்டு விரைவின் மீண்டு வருவர். அவர் வருங்காறும் ஆற்றியிரு!' எனத் தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

நுகை. பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அரலைக் குன்றத் தகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையோடு பொதிந்த குளவி நாறுநின்
நறுநுதல் மறப்பரோ மற்றே முயலவும்
சுரம்பல விலங்கிய அரும்பொருள்
நிரம்பா ஆகலின் நீடலோ இன்றே.

—மோசி கீரனார்.

(இ - ள்.) பதலைப் பாணிப் பரிசிலர் கோமான் - ஒருகட் கிணைப்பறையை முழக்கும் தாளத்தையுடைய இரவலர்க்குப் புரவலனாகிய மன்னனுடைய, அரலைக்குன்றத்து அகல்வாய்க் குண்டுசுனைக் குவளையொடு பொதிந்த - அரலை என்னும் குன்றின்கண் உள்ள அகன்ற வாயையுடைய ஆழமுள்ள சுனையின்கண் மலர்ந்த குவளைமலர்களோடு சேர்த்துக் கட்டப்பட்ட, குளவி நாறும் நின் நறுநுதல் - காட்டுமல்லிகையின் மணம் கமழும் நின்னுடைய நறிய நெற்றியை, மறப்பரோ - தலைவர் மறந்துவிடுவாரோ, முயலவும சுரமு பல விலங்கிய அரும் பொருள் - அடுத்து முயன்றவிடத்தும பாலைநிலம் பற்பல குறுக்கிட்ட கிடைத்தறகு அரிய பொருள், நிரமபா ஆகலின் நீடல் இன்று - முறறக் கைகூடாவாதலின் காலம் நீட்டித்தல் இல்லை.

விளக்கம் :—பதலை - ஒருகட் கிணைப்பறை. பரிசிலர் - பாணர் முதலியோர் : பரிசிலர் கோமான் - இரவலரைப் புரக்கும் வேந்தன். அரலைக்குன்றம் : ஒருமலை : இது சேலத்தைச் சோந்த ஓசூர்ப்புறத்துள்ள 'அரலிருண்டா' என்னும் மலை என்றும், ஈண்டுக் கோமான் என்றது, நள்ளி என்னும் வள்ளலை என்றும், கருதுவாரும் உளர். குண்டுசுனை - ஆழ்ந்தசுனை. பொதிந்த - கட்டப்பட்ட. குளவி - காட்டு மல்லிகை ; மலைப்பச்சையுமாம். மறப்பரோ - ஓகாரம் எதிர் மறை. மறவார் என்றபடி. மற்று, ஏ அசைகள். முயலவும் என்றது, பலநாள் அடுத்து முயன்றாலும் என்றவாறு. விலங்கிய - குறுக்கிட்ட. அரும்பொருள் - தேடுதற்கு அரிய பொருள். நீடல் - காலம் தாழ்த்து இருத்தல். அவர் நின்னை மறவார் ; காலம் தாழ்த்தாது மீண்டு வருவர் என்று தேற்றியவாறு.

பாட்டு - சுஅ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை யாற்றுமையிற் றலைமகள் தோழிக்கு உரைத்தது. அஃதாவது, தலைவனது பிரிவை ஆற்றுத தலைவி, 'தலைவரைக் காணத்தானும் பெறேன்' என, வருந்தித் தோழிக்குக் கூறியது.

இதன்கண், நெடியமலையின் உச்சியிடத்தே உள்ள தேனைக் கண்ட மூடவன், அதனைப் பெறலாற்றாமல் கீழிருந்து உள்ளங் கையைச் சிறுகுடையாகக் கோலிக்கொண்டு, அத்தேனைச் சுட்டிச் சுட்டித் தன வறுங்கையை நக்குவதுபோன்று, தலைவரைக் கூடப்பெறுதலிடத்தும் காணவாவது பெறுவனேல் அக் காட்சிமட்டுமே, எனக்கினியதாம் எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

சுஅ. குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை மூடவன்

உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் ஈயவா ராயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே.

—பரணர்.

(இ - ள்.) கூதளி யாடிய நெடுவரை - கூதளங்கொடி காற்றாலே ஆடாநின்ற நெடிய மலையிடத்தே, பெருந்தேன் கண்ட குறுந்தாள் இருக்கை முடவன் - பெரிதாகிய தேனிறாலைக் கண்ட குறுகிய கால்களையுடைய நடத்தலும் நிற்றலுமின்றி இருத்தற் றொழிலையே உடைய முடவன், உள் கைச் சிறுகுடை கோலிக் கீழ் இருந்து - உள்ளங்கையினைச் சிறிய உண்கலமாகக் குவித்துக் கொண்டு நிலத்தே இருந்தபடியே இருந்து, சுட்டுபு நக்கியாங்கு - அத்தேனிறாலைப் பன்முறையும் ஏனைக்கையாற் சுட்டிச் சுட்டித் தன் வறுங்கையை நக்கினாற்போன்று, காதலர் நல்கார் ஈயவார் ஆயினும் - நங்காதலர் நம்மை அருளாராயினும் விரும்பாராயினும், பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே - பலகாலும் அவரை நங்கண்ணாற் பார்த்திருத்தலும் உள்ளத்திற்கு இன்பமாம், அது பெற்றேனில்லையே.

விளக்கம் :—குறுந்தாளை முடவனுக் கேற்றுக. குறுந்தாளுடைமையின் நிற்றலாற்றாது இருத்தலொன்றே யுடைய முடவன் என்க. கூதளி - ஒருகொடி,

"பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரை ஞங்க
அறனின்றலைக்கும் ஆஞ வாடை" (உஙிங)

என்னும் அகப்பாட்டில் கூதளி கொடியாதல் தெரித்தோதுதல் காண்க. இனி, குறுந்தாட் கூதளி என்றதற்கு குறுகிய தாளையுடைய கூதளஞ்செடி என்பாருமுளர்.

ஏறுதற்கியலாத மலை என்பாள் நெடுவரை என்றும், முடவன் மிகுந்த ஆசை கொள்ளற்குரிய தென்பாள் பெருந்தேன் என்றும் கூறினாள். இருக்கைமுடவன் - நிற்றலும் நடத்தலும் ஏறுதலும் செய்யவியலாது இருத்தற்றொழில் ஒன்றே உடைய முடவன். பிரிந்து சென்ற தலைவன் இருக்குமிடந்தேடிச் செல்லற்கோ வேறுவழியானே அவனைப் பெறமுயலுதற்கோ வழியின்றி இருந்து வருந்துதல் ஒன்றே உடையேன் என்பாள் இருக்கை முடவனைத் தன்னோடு ஒப்பித்தாள் என்க.

உள் கை - உள்ளங்கை. சிறுகுடை - பனை ஓலை முதலியவற்றாற் செய்த சிறிய உண்கலம். "வேணீருண்டகுடை" (உசு) எனக் கலியினும் வருதல் காண்க. குடைபோறலிற் குடை என்றார். கீழ் இருந்தென்றது, முடவனின் இயலாமையைக் குறித்தது.

சுட்டுபு - சுட்டிக்காட்டி, ஒருகையைக் குடையாகக் கோலிக் கொண்டு மற்றொருகையின் விரலால் தேனிருலைச் சுட்டிச் சுட்டிக் காட்டிக்கொண்டு உள்ளங்கையை நக்கினாற் போன்றென்க.

மூடவன் எத்துணை அவாவினும் இரங்காமலும் அவனை விரும்பா மலும் இருக்கும் தேனிருல் போன்று தலைவர் நல்கார் நயவாராயினர் ஆயினும், என்க. இது கண்விதுப்புறல் கூறியவாறு.

"பேணுது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணுது அமையல கண்" (குறள் : கூஉஅசு)

என்னுந் திருக்குறள் ஈண்டு நினைவு கூரற்பாலது.

பாட்டு - சுக : தோழி கூற்று

துறை :—தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது. அஃதாவது, தலைவன் பரத்தையிற் பிரிந்தமையால் தலைவி ஊடி யிருந்தாளாக, அவ்வூடல் பேர்ப்பான் தலைவன் பாணர் முதலி யோரைத் தூதாகவிட்டான். அத்தூதர்களை நோக்கித் தோழி தலைவன் கொடுமையைக் குறிப்பாற் கூறியது.

இதன்கண், 'தலைவன், பரத்தையர்க்கு ஊர்ந்தின்புறும் தேர்போல்கின்றான்; தலைவியோ ஊர்ந்தின்புறுது தேரினை ஈர்த் தின்புறும் சிறார்போன்று அவனுக்கு எண்மையைச் செய்தல் மாத்திரையாலே இன்புறுவாளாயினள்' என்று தோழி தூதர்க்குக் கூறுகின்றாள்.

சுக. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறுஅர் ஆயினுங் கையின்
ஈர்த்தின் புறாஉம் இகுளையோர் போல
உற்றின் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வகுளையே.

—தும்பிசேர் கீரனார்.

(இ - ள்.) தச்சன் செய்த சிறுமா வையம் - தச்சனாற் செய்யப்பட்ட சிறிய குதிரைகளையுடைய தேரினை, ஊர்ந்து இன்புறுஅர் ஆயினும் - ஏறிச் செலுத்தி இன்பமடையாராயினும், கையின் ஈர்த்து இன்புறுஉம் இகுளையோர்போல - தம் கையானே அதனை இழுத்தன் மாத்திரையால் இன்புறுகின்ற இளஞ்சிறார் போன்று, உற்று இன்புறேம் ஆயினும் - யாரும் தலைவரோடு மெய்யுற்று இன்பம் எய்தேமாயினும், நற்றேர்ப் பொய்கை ஊரற்கு - நல்ல தேரினையுடையரும் வாவிகளையுடைய ஊரினை

யுடையரும் ஆகிய அத்தலைவர்க்கு, எண்மை செய்து இன் புற்றனம் - எண்மையாகிய செயல்களைச் செய்தன்மாத்திரை யானே இன்பமடைவேமாயினேம் அதனால், செறிந்தன வளை - எம் கையின்கண் செறிவுடையவாயின வளையல்கள்.

விளக்கம் :—தேரின் அழகுதோன்றத் தச்சன் செய்த வையம் என்றார். சிறுமா வையம் - சிறியதும் குதிரைகளையுடையதுமாகச் செய்யப்பட்ட தேர். குதிரை - தச்சனாற் செய்யப்பட்ட குதிரை. தேர் ஊர்ந்தின்புறுதற்கே உரியதாகவும் அது செய்யாது ஈர்த்தின்புறும் சிறார்களின் எண்மைநிலை காட்டி அவவெண்மையைத் தம்மெண்மைச் செயற்கு ஒப்பித்தாள் என்க. ஈர்த்து - இழுத்து. இளையோர் ஈண்டு மறுகில் ஆட்டயரும் இளஞ்சிறார். தலைவராகிய தேரினை இப்போது ஊர்ந்தின்புறுவோர் பரத்தையராக யாமோ அவருக்கு எண்மை செய்து ஈர்த்து இன்புறுவேமாயினேம் என இரங்கினாள் என்க. உற்றின் புறுதல் - மெய்யுறு புணர்ச்சியாலின்புறுதல். நற்றேர் என்றது, அவன் பரத்தமைக்குத் துணைக்கருவி ஒன்றனைச் சுட்டிப் பழித்தவாறு. நற்றேருடையனாதல் பரத்தையிற் பிரிதற் பொருட்டே என்பது கருத்து. "காலை எழுந்து கடுந்தேர் பண்ணி" என இந்நூலிற் பிறண்டும் வந்தமை காண்க. (சுரு) பொய்கையூரன் - மருதநிலத்துத் தலைவன், எண்மை செய்தலாவது மனத்தால் ஊடியிருந்தேயும் உணவிடுதல் வாய்பூச நீர்பெய்தல் முதலிய கடமைகளைச் செய்தல.

இது, 'களவுக்காலத்து ஆற்றவும் அரியராயிருந்தேம்; இக்கற்புக் காலத்து ஆற்றவும் எளியராயினேம்' எனத் தம் எண்மைநிலை காட்டி இரங்கியதென்க. என்னை?

> "அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
> எண்மைக் காலத்து இரக்கத் தானும்" (தொல்-கற்பு-கூ)

எனத் தொல்காப்பியனார் ஓதுதலும் அறிக.

"பொய்கை யூரன் கேண்மை செய்தின்புற்றனெம்" எனப் பாடம் ஓதி அதற்கியையப் பொருள் காண்பாரும் உளர்.

பாட்டு - கூஉ : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் இடந்தலைப் பாட்டின்கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது அஃதாவது, இயற்கைப் புணர்ச்சி எய்தித் தலைவியைப் பிரிந்தபின்னர் மீண்டும் இடந்தலைப்பாட் டின்கண் தலைவியைக் கூடவிழையும் தன் நெஞ்சிற்குத் தலைவன் தலைவியின் நலனுரைத்தது

இதன்கண், 'அவள் ஆ! எத்துணை நறியள்! நல்லோள்! அவள் மேனி தளிரினும் மெல்லிது! முயங்கற்கு மிகவும் இனி யது!' என்று தலைவன் தன் நெஞ்சொடு கூறிக்கொள்கின்றான்.

கூஉ. கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங் கற்கும் இனிதே.

—சிறைக்குடி ஆந்தையார்.

(இ - ள்.) கோடல் எதிர் முகைப் பசு வீ முல்லை-காந்தள் மலர் அரும்பிய அரும்பாகிய பசிய முல்லை என்னும் இவை யிற்றை, நாறு இதழ்க் குவளையொடு இடைப்பட விரைஇ-மணங்கமழும் இதழ்களையுடைய குவளை மலரோடே நடுவே நடுவே கலந்து, ஐது தொடை மாண்ட கோதை போல-அழகி தாகத் தொடுத்தற் றொழிலானே மாட்சிமைப்பட்ட மாலைபோல, நறிய நல்லோள் மேனி-நறுநாற்றத்தையுடைய நல்லோளது மேனி, முறியினும் வாய்வது - தளிரையுங் காட்டில் நிறனும் மென்மையும் பொருந்தியது மேலும், முயங்கற்கும இனிதே-தழுவுவதற்கும் மிகவும் இனியது.

விளக்கம்:—கோடல் - காந்தள் மலர். இது, தலைவியின் கைகளை நினைந்து கூறியது. எதிர்முகைப் பசுவீ முல்லை - அரும்பி மலராத நிலையிலுள்ள பசிய பூவும் முல்லையும். இது புதிதாக முளைத்தெழும் தலைவியின் எயிற்றொழுங்கினை எண்ணி இயம்பியது. நாறிதழ்க் குவளை, இமையையுடைய கண்களைக் கருதியதென்க. இவ்வுறுப்புக்கள் அழகுற அமைந்திருக்கும் அருமை கருதி, 'ஐது தொடைமாண்ட கோதை' என்றான். ஐது - அழகிது. தொடை-தொடுத்தற் றொழில். மாண்ட - மாட்சிமைப் பட்ட. கோதை - மாலை. நறிய நறுமையுடைய. இது மேனிக்கு அடை. மூக்கிற்கு இனிமையாகிய நறுமையோடே ஏனைப் பொறிகட்கும் மனத்திற்கும் இன்பமாகிய நலன் எல்லாம் குறையற உடையள் என்பான், நல்லோள் என்றான். மேனி - ஈண்டு உடம்பிற்கு ஆகுபெயர். முறி - ஈண்டு மாந்தளிர் என்க. மாந்தளிர் முயங்கின் வாடிக் குழைந்து கரிந்து கெடுமாகலின், இம்மேனி முயங் கிற் றளிர்ப்பதன்றிக் கெடாதென்பான், 'முறியினும் வாய்வது' என்றான். "உறுதோ றுயிர்தளிர்த்த"லுண்மை கருதி முயங்கற்கும் இனிதே என்றான். இதனைப் "புணர்ந்தழி மகிழ்ந்து கூறியது" என்பர் நச்சினார்க்கினியர். (தொல் - அகத். கள; களவு - கூ.)

பாட்டு - கூஙு : தலைவன் கூற்று

துறை:—பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லி யது அஃதாவது, இன்மையதினிவு கருதிப் பொருளீட்டி வரல் வேண்டும் என்று அவாவிய தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறியது.

இதன்கண், தலைவன் தன் நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே ஈதலும், இன்பம் நுகர்தலும், பொருளில்லார்க்கு இல்லை என்று கருதி, அப்பொருளீட்டற்கு விரைகின்றாய். அத்தொழிற்குச் செல்லுங்கால் தலைவி உடன் வரமாட்டாளன்றே! பிரிதற் கியலாத அவளைப் பிரிந்து போம்படியோ தூண்டுகின்றாய்; அவளைப் பிரிதலும் இயலுமோ கூறுதி' எனக் கூறுகின்றான்.

கூஉ. ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்
செய்வினை சைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ
எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே.

—உகாய்க்குடிகிழார்.

(இ - ள்.) நெஞ்சே - என் நெஞ்சமே! நீ, ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் என - வறியோர்க்கு வழங்குதலும் இன்பங்களை நுகர்தலும் பொருளில்லாதார்க்கு இல்லை என்று கருதி, செய்வினை சைம்மிக எண்ணுதி - அப்பொருளினை ஆக்கிக் கொள்ளும் செயல்களையே மிகுதியும் எண்ணுகின்றனை, அவ் வினைக்கு - அப்பொருள் ஈட்டுஞ் செயலுக்கு யாம் போமிடத்து, அம் மா அரிவையும் வருமோ - அழகிய மாமை நிறத்தையுடைய நந்தலைவியும் நம்மோடே வருவாளோ, வாராளன்றே? எம்மை உய்த்தியோ - அவள் வாராதொழியினும் ஒழிகவென்று எம்மை மட்டும் செலுத்தாகின்றனையோ, உரைத்திசின் - உன் கருத்தினை எமக்கு விளங்கக் கூறிக்காண்.

விளக்கம்:—ஈதல் - வறியோரின்மை தீரக் கொடுத்தல். ஈதல் இல்லை எனவே புகழும் இல்லை என்பதாயிற்று. என்னை?

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்" (குறள் - உகூஉ.)

என்றோதுபவாகலான் என்க. வாழ்தலின் ஊதியம் ஈதலானே உறுதலின் அதனை முற்கூறினான். துய்த்தல்-ஐம்பொறியாலும் புலன்களை ஆராதகர்தல். எனவே பொருளிலாதார்க்கு அறமும் இன்பமும் இல்லை என்றதாயிற்று. இதனை,

"இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருள்நன் குடைய ராயினும் ஈதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானும் அறிவேன் மன்னே" (அகம் - கூகூதி.)

என்றும்,

"இசையும் இன்பமும் ஈதலு மூன்றும்
அசைவுட னிருந்தோர்க் கரும்புணர் வின்மென,"
(நற் - உகச.)

என்றும்,

"இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்" (குறள் - கo சஉ.)

என்றும் பிறசான்றோர் கூறுமாற்றானும் இத்திருக்குறட்கு "ஈயாமையானும் துவ்வாமையானும் அவை இலவாயின" எனப் பரிமேலழகர் விளக்கங் கூறுமாற்றானும் அறிக. எனவே ஈதலுந் துய்த்தலும் இல்லென்றது இம்மையும் மறுமையும் கெடும் என்பதாயிற்று.

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கில்லென" என்னும் தூணையும் பொருள்கடைக்கூட்டும் நெஞ்சின்கருத்தினைக் கொண்டு கூறிய தென்க. செய்வினை - பொருள் செய்தற்குரிய தொழில். அஃது நாடிடையிட்டும் கடல் கடந்தும் சென்று வணிகம்செய்தலும் பிறவும் என்க. சைம்மிக எண்ணுதலாவது-மேலும் மேலும் கருதுதல். பொருளீட்டப் போங்கால் தலைவியை உடன்கொண்டு சேறலில்லை ஆகலின், அவள் நம்மோடு வரற்பாலள் அல்லளே என்பான், 'அம் மா அரிவையும் வருமோ,' என்று வினையினன். வரமாட்டாள் ஆதல் அறிந்து வைத்தும எண்ணுகின்றனை என்றவாறு.

இனி எம்மை உய்த்தியோ என்றது, அவளைப் பிரிந்துபோதல் எனக் கியலாதென்பது நீ நன்கறிந்துவைத்தும் எம்மை உய்த்தியோ என்றவாறு. எனவே தலைவியைப் பிரிந்து போதல் இயல்வதன்று என்றபடியாம்.

பாட்டு - சுசு : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றுமை கண்டு வருவர் எனச் சொல்லிய தோழிக்குக் கிழவதி உரைத்தது. அஃதாவது-தலைவன் பிரிந்தமையாலே பெரிதும் ஆற்றுமை எய்திய தலைவியைத் தோழி அவர் விரைவில் வருவர் ஆற்றுக என்று தேற்றினளாக, அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி 'தோழி! நந்தலைவர் நமது வருத்தத்தை நன்கு அறிந்தவராயிருந்தும் தாம் வரக்குறித்த பருவத்தினும வந்திலராய்த் துரிய நாட்டின்கண்ணே தங்கினரே! யான் என் செய்கோ!' என்று வருந்துகின்றாள்.

சுசு. பல்லா நெடுநெறிக் ககன்று வந்தெனப்
புன்றலை மன்றம் நோக்கி மாலை
மடக்கண் குழவி அணவந் தன்ன
கோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் தோழி சேய்நாட் டோரே.

—கருவூர்க் கதப்பிள்ளை.

(இ - ள்.) தோழீ—, பல் ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தென-பலவாகிய பசுக்கள் நெடிய வழிக்கட் பிரிந்து போயின வாக, மடக்கண் குழவி - மடப்பம் பொருந்திய ஆன்கன்றுகள், மாலை - அவை மீண்டு வருதற்குரிய பொழுதாகிய அந்திமாலையில், புன்றலை மனறம் நோக்கி - அவை வாராமையானே பொலிவிழந்த மன்றத்தைப் பார்த்து, அணைவந்தன்ன - தலை நிமிர்ந்து ஏமாற்ற மடைந்து வருந்தினாற் போன்று, நோயேம் ஆகுதல் அறிந்தும் - யாமும் சகிர்பார்த்து வருந்துவேமாதலை அறிந்து வைத்தும், சேய்நாட்டார் - தூரிய நாட்டிற் சென்ற தலைவர், சேயர் - காலத்தானும் சேயராய் வாராராயினர்.

விளக்கம்:—பல்லா - பலவாகிய ஆன்கள். நெடுநெறி - தூரியவழி. அகன்று வருதல் - பிரிந்து போதல். ஈண்டு வந்த என்றது, சென்ற என்னும் பொருளில் வந்தது. வந்தென-சென்றதாக என்க. நாகிளங் கன்றென்பார், மடக்கட்குழவி என்றார். அணைவருதல் - தலையை நிமிர்த்து நோக்குதல். அணைவந்தன்ன - அணைந்து நோக்கினாற் போல. அணைவந்தன்ன நோயேம் என்றதனால் கன்றுகள் அணைவந்து நோய் கூர்ந்தாற் போன்ற நோய் என்க. "மூயக்கிடைத் தண்வளி போழினும் பசப்புறும்" எம்மியல்பு கண்டவராகலின் நெடிய பிரிவை ஆற்றுது பெரிதும் நோய் உடையேம் ஆவேம் என்பதை அவர் நன்கறிகுவர். அங்ஙனம் அறிந்துவைத்தும் காலந் தாழ்த்திருந்தனரே என்பாள், 'நோயேம் ஆகுதல் அறிந்தும் சேயர்' என்றாள். சேய்மை - ஈண்டுக் காலச் சேய்மை. நாட்டினும் சேயராய்க் காலத்தினும் சேயராயினர் என்று வருந்தியபடியாம். சேயர் என்றது, அவர் மீண்டு வருவல் எனக்குறித்த பருவம் கடந்தும் வாராது நெடிது தாழ்த்தனர் என்ற வாறு. சேய் நாடு - தூரிய நாடு. :

பாட்டு - கூறு : தலைவி கூற்று

துறை:—பருவங்கண்டு அழிந்த தலைமகள், தோழிக்கு உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்து செல்லுங்கால், 'யான் கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருகுவன; அது காறும் ஆற்றியிரு' என்று தேற்றிப் பிரிந்தவன், அப்பருவம் வந்த பினனரும் வந்திலாமையானே ஆற்றுமைமிக்குத் தலைவி தோழிக்குக் கூறியது

இதன்கண், வன்மையுடைய பரலில் வீழ்ந்த தெளிந்த நீரைப்பருகித் தன் காதற்றுணையோடே இரலைமான் துள்ளி யாடாநிற்குமபடி கார்ப்பருவம் வந்தது. அது, 'யான் வரும் பருவத்தே மீண்டு வருவன் எனக் கூறிச்சென்ற நுந்தலைவர் வருகையைப் பெரிதும் விரும்பி, வாராமையானே வருந்தி நொந்து உறைகின்றீரோ நீயிர் அளியரோ அளியர், எனக்கூறி இரங்குவதுபோன்று எனக்குத் தோன்றுகின்றது' எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

கூடு. வன்பரல் தெள்ளறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவற் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநோந் துறைய இருந்திரோ எனவே.

—கோவூர்கிழார்.

(இ-ள்.) தோழீ, வன்பரல் தெள்ளறல் பருகிய இரலை - வலிய பரற்கறைகளிடத்தே நின்ற தெளிந்த நீரைப் பருகிய ஆண் மான், மறுவற்று இன்புறு துணையொடு உகள - தான் இன்பமெய்துதற்குக் காரணமான பெண்மானிருக்குமிடத்திற்கு மீண்டு வந்து அதனோடே துள்ளி விளையாடாநிற்குமபடி, தளிதரு தண்கார் தான் - மழைத்துளியை உலகிற்குதவும் குளிர்ந்த கார்ப்பருவம், வாரா துறையுநர் வரல நசைஇ - தாங்குறித்துச் சென்ற காலத்தே மீண்டும் வருதலின்றி ஆண்டே உறையும் வன்கண்ணர் ஆகிய நுந்தலைவர் வருதலை விரும்பி, வருந்தி நொந்து உறைய இருந்திரோ - மிகவும் வருந்தியிருத்தற் பொருட்டு உளராயினீரோ? என - என்று என்னை வினைதற்கு, வந்தன்று - வந்தது

விளக்கம்:—வன்பரல் - வன்மையுடைய பருக்கைக் கற்கள். வன்பரலின்மேல் மழை பெய்தமையால் நீர் நின்றதென்க. அறல் - நீர். சேறில்லாது பரற்கல்லின்மேனின்ற நீர் ஆகலின் தெளிந்த நீர் என்றார். முதுவேனிற் பருவங்கழிந்து கார்ப்பருவத்தின்கண் தலைப்பெயல் பொழிந்தமை தோன்ற 'வன்பரல் தெள்ளறல் பருகி' என்றார். இரலை - கலைமான். ''அறுகோட்டிரலையொடு மான்பிணையுகளவும்'' (ஐங்.) என்றார் பட்டினப்பாலையினும். உகளுதல் - துள்ளி விளையாடல். இன்புறுதுணை - காமவின்பந்துய்த்தற்குக் காரணமான பிணைமான். இதுவும் ஆற்றுமை மிகுதற்குக் குறிப்பேதுவாய் நின்றமை காண்க. மான் உகளுதற்குத் தண்கார் ஏதுவென்க. மறுவற்று - மீண்டுவந்து. தான் - அசை. வந்தன்று - வந்தது. தளிதருதண்கார் - மழைத்துளியை உலகிற்கு வழங்கும் தண்மையுடைய கார்ப்பருவம். தண்கார் என்றார், தண்ணளியுடைய கார் என்பதும் தோன்ற என்க.

'பருவம் வந்தும் வாராமையானே நீர் இறந்துபடுவீரே! இறந்து படாது இருந்தமை அவ்வன்கண்ணர் வருவர் என்னும் நசையாற் போலும். இருந்திடுமின்! இருந்தமையால் வருந்தி நோதலே பயன்; ஊழ்வினையை யாரே வெலவார்; ஊழ்வினை ஊட்டாகழியுமெனின் இறந்துபடுவீர்; வருந்தி நோதற்குரிய ஊழுண்மையின் இருந்தனிர்' எனக் கார்ப்பருவமானது வினவுதல்போன்று வந்தது என விரித்துக் கொள்க.

''தன் கற்பால் இட்ட வழக்காயிருக்குங்கார் இவ்வாறு இருந்திரோ எனக் கேட்குமாறு தலைவர் பருவந்தப்பியும் உயிர் வாழ்தலை நொந்து உரைத்தவாறு''; என்பாருமுளர்.

பாட்டு - கூசு : தோழி கூற்று

துறை :—பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி பருவ மன்றென்று வற்புறீஇயது. அஃதாவது, 'கார்ப்பருவம் தொடங்குங்கால் மீண்டு வருகுவல்' எனத்தலைவன் கூறிச் சென் றான் ; அப்பருவந்தொடங்கியும் வந்திலன் ; அதனால், தலைவி ஆற்றுமைமிக்கு வருந்தினள் ; அதுகண்ட தோழி, 'இது கார்ப பருவம் அன்று ; கார்ப்பருவம் வருமுன் தலைவர் வருவர் ; அது காறும் ஆற்றியிருத்தலே நின்கடன்' என வற்புறுத்தியது.

இதன்கண், "தோழீ ! கொன்றைமரங்கள் இணர்ஞ்ழ்த் தமை கண்டு, இது கார்ப்பருவம்போலும் அவர் வந்திலரே என்று நீ ஆற்றுயாகின்றாய்; வாய்மையாக இது காப்பருவம் அன்று ; இப்பொழுது பெய்த மழை, நிலைபெற்ற பருவ மழையன்று ; இம்மழை வேனிற் பருவத்தே ஒருசேலெனத் தோன்றிப் பெய் யும் மழையாகும் ; இக்கொன்றைகள் தம் அறியாமையாலே இம்மழையைப் பருவ மழையாகக் கருதின ; அறிவு மிக்க நீ அங்ஙனம் கருதாது உண்மையுணர்ந்து ஆற்றியிருக்கக் கடவை" எனத் தலைவியைத தோழி தேற்றுகின்றாள்.

கூசு. மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே

—கோவத்தனார்.

(இ - ள்.) தடவுநிலைக் கொன்றை மன்ற மடவ - பரிய அடி யினையுடைய இக்கொன்றைமரங்கள் தேற்றமாக அறியாமை யுடையன எற்றாலெனின், கல்பிறங்கு அத்தம் சென்றோர் - மலை கள் விளங்கும பாலைநிலத்து அருவழியைக் கடந்து சென்ற நந்தலைவர், கூறிய பருவம் வாரா அளவை - தாம் மீண்டு வரு தற்கு எவ்வியாகக் கூறிச்சென்ற கார்ப்பருவம் வருதற்கு முன் னரே, வம்ப மாரியைக் கார் என மதித்து - இம்முதுவேனிற் பருவத்தே ஒருசேலெனத்தோன்றி மறைந்த நிலையற்ற மழை யினைப் பருவமழையென்று கருதி, நெரிதரக் கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்தன - செறியும்படி கொம்பினிடத்தே உள்ள வாகிய நெடிய பூங்கொத்துக்களை மலர்வித்தன ஆகலான்.

விளக்கம் :—தடவுநிலைக்கொன்றை - பரிய அடிமரத்தினையுடைய கொன்றை என்க. நிற்றலால் அடிமரத்தினை ஆகுபெயராண் நிலை என்றார். தடவு - பெருமை. "தடவும் கயவும் நளியும் பெருமை" (உரி - உஉ.) என்

பது தொல்காப்பியம். மடவ - அறியாமையுடையன. மன்ற-தேற்றமாக; (நிச்சயமாக.) குறிஞ்சி திரிந்த பாலை என்பாள் கல்பிறங்கு அத்தம் என்றாள், கல் - மலை. பிறங்குதல் - வெயிலானே விளங்குதல். மரங்கள் பிறங்காது வறிய மலைமட்டுமே பிறங்கும் அத்தம் என்றவாறு. அத்தம் - அருவழி. அத்தஞ் சென்றோர் நிரம்பிய அறிவினராகலான் அவர் கூறிய சொற்பிறழார்; அவர் வந்திலர் என்பதே இது கார்ப் பருவம் அன்றென்பதற்குச் சான்றென்பாள் 'அத்தம் சென்றோர் கூறிய பருவம் வாரா வளவை' என்றாள். இது காப்பருவம் அன்றென்ப தற்கு எதுக்காட்டியவாறு. கொன்றைமரம் கருதலளவை முதலிய வற்றால் அளந்து காணும் தகுதியுடையன அல்லவாதலின், ஒன்றை ஒன்றாகக்கண்டு மயங்கின என்றவாறு. நெரிதல் - செறிதல், தழைத்து என்றவாறு. கொன்றைமரங்கள் கார்ப்பருவத்தே தழைத்துச செறிந்து இணரூழ்க்கும் இயல்பின. ஆதலின், தலைவி அவையிற்றைக் கண்டு இது காப்பருவம் எனக் கருதி வருந்தினள் என்க. அது கார்ப் பருவமே ஆகவும் தோழி அது கார் அனறென மருட்டி இது படைத்து மொழிகின்றாள் என்க. பருவம் - கார்ப்பருவம். கொடியிணர் - கொடி போன்று நெடியதாய் நீண்ட பூங்கொத்து. ஊழ்த்தல் - மலர்தல். வம்பமாரி - வேனிற் பருவத்தே ஒருசேலெனத் தோன்றிப் பின் மாறி விடுகின்ற நிலையில்லாத மழை. "வம்பு நிலையின்மை" (உரி - உக.) என்பது தொல்காப்பியம்.

பாட்டு - கூஎ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றாது தலைமகள் தோழிக்கு உரைத் தது. அஃதாவது, தலைவனது பிரிவை ஆற்றாது மெலிந்த தலைவி தோழிக்குக் கூறியது.

இதனகண், 'நமமைப் பிரிந்துசென்ற வன்கண்ணராகிய தலைவர் நம்மை அன்பொடு மறந்திருப்பரோ? மறவாரெனின் வந்திருப்பரே' எனறு தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

கூஎ. உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல ஒருகா சேய்க்கும்
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) தோழி—, கிள்ளை வளைவாய்க்கொண்ட வேப்ப ஒண்பழம் - கிளி தன் வளைந்த வாயிலே கொண்டுள்ள வேம்பி னது ஒள்ளிய பழம், புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள் உகிர்ப் பொலங்கலம் ஒரு காசு ஏய்க்கும் - ஒருத்தி புதிய நாணினை ஊடுசெலுத்தும் பொருட்டு மூணமாட்சிமைப்பட்ட

வளைந்த உகிர்களிடையே கொண்ட பொன் அணிகலத்தின் ஒற்றைக் காசினை ஒக்கும், நிலம் கரி கள்ளியங்காடு இறந்தோர் - நிலம் கரிந்துள்ள கள்ளியை உடைய பாலைநிலத்தைக் கடந்து சென்ற நந்தலைவர், உள்ளார் கொல்லோ - நம்மை நினையவும் மாட்டாரோ ?

விளக்கம்:—நினைவராயின் வருவரே என்று இரங்கியபடியாம். உள்ளல் - நினைவு கூர்தல். தோழி : அண்மைவிளி. கிள்ளை - கிளி; வளைவாய் வளைவுடைய அலகு. வேம்பமரத்தினது ஒண்பழம் என்க. வேம்பு பாலைக்கருப்பொருள். புதுநாண் - புதிய நூல். கிளி தன் அலகிலே கொண்டுள்ள வேப்பம்பழம் சிவந்த நகங்களையுடையாள் ஒருத்தி நூலை நுழைக்கும் பொருட்டுத் தன் பெருவிரல னும் சுட்டு விரலானும் உகிர் நுனியிலே பற்றிய பொற்காசிற்கு உவமை என்க. நுழைப்பான் - நுழைக்கும்பொருட்டு. பான் விகுதிபெற்ற வினையெசசம். நுழைப்பான் என்பதனை உயர்திணை ஆண்பாலாகக்கொண்டு நுழைக்கும் பொற்கொல்லன் என்பாருமுளர். பொற்கொல்லன் உகிரினைச் சிவந்த கிளிவாயோடு உவமித்தல் பொருந்தாமையுணர்க. ஈண்டுத் தோழி நூலற்ற அணிகலன்களைப் புதுநாணிற் கோக்கும் தொழிலுடையளாகலின், மகளிர் உகிரினை நினைந்து கூறுதலே இயல்பென்க. செவ்விரல் ஆகலின் ஒருதுதி எனத் தகுதியால் எழுவாய் வருவித்துரைத்துக் கொள்க. மகளிர் விரலுதி உகிர்க்குக் கிளிவாயை உவமை கூறும் வழக்கத்தைச் "சார்ந்தன ளிருந்து வாங்குபு கொண்டு கிள்ளைவாயி னன்ன வள்ளுகிர் நுதிவிரல் சிவப்பக் கதியறிந் தியக்கலின்" (ச - எ: சக - கூ.) எனப் பெருங்கதையினும் "கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்ளுகிர்" (பொருந - கூச.) எனப் பொருநராற்றுப்படையினும் பிற சான்றோர் கூறுமாற்றான் அறிக.

வேம்பின் ஒண்பழம் என்றது. வேம்பின் பூத்தளிர்க்கும் காலத்து வருவன் என்றவர், அது பழமாய்க் கிளியாலே கொள்ளப்படும் இப் பருவத்தும் வந்திலர் என காலநீட்டித்தமை கருதிக் கூறியவாறென்க. இக்கருத்தினை "வேம்பின் ஒண்பூவுரைப்பத் தேமபடு கிளவியவர் தெளிக்கும்பொழுதே" (கூகo.) எனவரும ஐங்குறுநூற்றுப் பகுதியானும் அறிக.

இதனால் பண்டைநாளில் பொற்காசு வேப்பம் பழம்போன்று உருண்டை வடிவிற்றாயிருந்தமையும் உணரப்படும்.

பாட்டு - கூஅ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது. அஃதாவது, தலைவன் முன்பனிப் பருவத்தும வாராமையால் பெரிதும் வருந்திய தலைவி தனது ஆற்றுமையைத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி, 'உழுந்தின் முதிர்காயை மானினங் கவர்ந்துண்டற்குக் காரணமான, இப்பனிப் பருவத்திலும் என் நோய் தீர்க்கும் மருந்து அவர்தம் மார்பன்றிப் பிறிதில்லை

யாகவும் அவர் வந்திலரே! எங்ஙனம் ஆற்றுகேன்!' என வருந்தித் தோழிக்குக் கூறுகின்றாள்.

கூஉ. பூழ்க்கா லன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினங் கவரும்
அரும்பனி அச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) பூழ்க் காலன்ன செங்கால் உழுந்தின் - குறும் பூழ்ப்பறவையின் கால் போன்ற சிவந்த தாளையுடைய உழுந்தினது, ஊழ்ப்படுமுதுகாய்-ஊழ்த்தலையுடைய முதிர்ந்த காய்களை, உழையினம் கவரும் அரும்பனி அச்சிரந் தீர்க்கும் - மானினங்கள் தின்னற்பொருட்டுக் கொள்ளாநின்ற பொறுத்தற்கரிய இம் முன்பனிக்காலத்துண்டாகும் வருத்தத்தைப் போக்குதற்குரிய, மருந்து அவர் மணந்த மார்பே - மருந்தாகற்பாலது என்னை மணந்த அத்தலைவர் மார்பு ஒன்றேயல்லது, பிறிது இல்லை - வேறு இல்லையாம்.

விளக்கம்:—பூழ் - குறும்பூழ்; காடை; இஃது ஒரு பறவை. செங்கால் - சிவந்த தாள். ஊழ்ப்படுதல் - மலர்தல், மலர்தலினின்றும் தோன்றிய முதுகாய் என்க. முதுகாய் - நெற்று. உழை - மான். கவர்தல் - இரையாகக் கோடல், அச்சிரம் - முன்பனிக்காலம், அச்சிரந்தீர்க்கும் என்றது, முன்பனிக்காலத்தால் உண்டாகிய நோயைத் தீர்க்கும் என்றவாறு. நோய் - காமநோய், உழுந்தின் முதுகாயை உழையினங் கவரும் என்றது, என் கணவனூர் நுகர்தற்குரிய என் மாமைக் கவினைப் பசலையுண்டு கழிகின்றது என்னும் குறிப்புடையது என்க.

காமநோய்க்கு மருந்து நோய்செய்யும் மார்பேயன்றி வேறின்மையால் மணந்த மார்பே மருந்து பிறிதில்லை என்றாள்.

உழுந்து பனிப்பருவத்தே மலரெடுத்துக் காய்க்கும் இயல்பிற்று. இதனை, "இரும்பனிப் பருவத்து மயிர்க்காய் உழுந்து" (அகு.) என வரும் நற்றிணையானும் உணர்க.

தலைவர் என்னை மறந்தனர் போலும் என்பது கருத்தென்க.

பாட்டு - கூகூ : தோழி கூற்று

துறை :—தோழி இரவுக்குறி மறுத்தது. அஃதாவது, வரைந்து கோடலிற் கருத்தின்றிக் களவின்பமே விரும்பி ஒழுகுந்தலைமகன் இரவுக்குறிக்கண் வருவானைத் தோழி வரைவு கடாவுதல் நிமித்தம் 'இரவின்கண் வாரற்க' என மறுத்தது.

இதன்கண், 'நாடனே நீ இரவின்கண் இங்ஙனம் வாரற்க; வரின் நினக்கு இருள் வழியில் ஏதம்பல உண்டாகும் என்று யாங்கள் பெரிதும் அஞ்சாநிற்பேம்' என்று தோழி கூறுகின்றாள்.

கூகூ. கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

—கடுந்தோட் கரவீரனார்.

(இ - ள்.) கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென - கரிய கண்ணையும் தாவுந் தொழிலையும் உடைய ஆண்குரங்கு இறந்துபாடுற்றதாக, கைம்மை உய்யாக் காமர் மந்தி - கைம்மைத் துயர்கொண்டு வாழ்தலாற்றாத கணவன்பால் விருப்பமிக்க பெண்குரங்கு, கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி - தன் தொழிலைக் கற்றிலாத தன் வலிய குட்டியைச் சுற்றத்தினிடத்தே ஒம்படை செய்து, ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும் - உயர்ந்த மலைப்பக்கத்தே பாய்ந்து உயிரைப் போக்கிக் கொள்ளற்கிடனாகிய, சாரல் நாட - சாரல் பொருந்திய நாட்டையுடையோனே, நடுநாள் வாரல் - நீ இவ்வாறு இவ்விடையாமத்தே வருதலைத் தவிர்வாயாக, வருந்துதும் யாம் - இங்ஙனம் நீவிரின் நினக்கு ஏதம் வருங்கொல் எனறு எண்ணி யாங்கள் பெரிதும் வருந்தா நிற்பேம்.

விளக்கம்:—தாக்கலை - தாவுகின்ற ஆண்குரங்கு. தாக்கலை என்றதன்கண் தாவுதற் றொழில் பெரும்பிறிதுறற்குக் குறிப்பேதுவாய் நின்றது; கொம்பிழக்காது தாவுந்தொழில் வல்ல குரங்கும் தப்பி வீழ்ந்து பெரும்பிறிதுற்ற தென்றவாறு. எனவே, இருள செறிந்த நெறியின் ஏதம் எடுத்துக்காட்டினளாயிற்று. பெரும்பிறிது - சாவு. கைம்மை - கணவனையிழந்த நிலை; இஃதிலை மகளிர்க்குப் பெரிதும் இன்னுமையுடைய நிலையாகலின் மந்தி அதனைப் பொறுத்து உய்யாதாயிற்று என்க. "இன்புறு தங்கணவர் இடரொரி யகமூழ்கத், துன்புறுவன நோற்றுத் துயருறுமகளிர்," (சிலப். துன்பமாலை. நூசை-இ.) என்றார் கண்ணகியாரும் காமர் மந்தி - கணவன்பால் பெரிதும் விருப்பமுடைய மந்தி. இது கைம்மை யுய்யாமைக்கு ஏதுக்காட்டியவாறு. கல்லா வன்பறழ் - மரமேறுதல் தாவுதல் உணவுதேர்தல் முதலிய தொழில்களை இன்னும் கற்றிலாத இளங்குட்டி. வன்பறழ் என்றது ஆண்குட்டி என்றவாறு. இது மந்தி வரைபாய்தற்கு இயலாத தடையுடையதாயிருந்தும் அத்தடையைப் பொருட்படுத்தாது வரைபாய்ந்தது என அதன் தலையன்பினை எடுத்துக்காட்டியவாறு.

கல்லா வன்பறழ், என்பதற்குத் "தன் தொழிலை இனிக் கற்றல் வேண்டாத (முழுதுங் கற்ற) வலியகுட்டி" என்பாருமுளர் அங்ஙனம் வலிதாகிய குட்டியைக் கிளைமுதற் சேர்த்துதல் வேண்டாமையானும் அக்குட்டி வரைபாய்தற்குத் தடையாகாமையானும் அது சிறப்பன் றென்க. கின் மலையில் வாழ்குரங்கும் கைம்மை உய்யாதென்றது. கினக்கு ஏதம் வருங்கொல் என எண்ணும் எண்ணத்தையே இவள் உய்யாள் என்று குறிப்பாற் கூறியவாறு.

நடுநாள் - ஈண்டு நடு இரவு என்னும் பொருட்டு. வாரல் - வாராது பரிகரி. வருந்துதும் என்றது, நீ இவ்வாறு வருதற்கு வருந்தாநின்றேம் என்றவாறு.

பாட்டு - எ0 : தலைவன் கூற்று

துறை :—புணர்ந்து நீங்குந தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. அஃதாவது, இயற்கைப புணர்ச்சிபெற்ற தலை மகன், அவள தந்த ஐம்புல இன்பச சிறப்பால் ஆராமை எய்தி அவள் அருமையைப் புகழ்ந்து தன் நெஞ்சிற்குக் கூறியது.

இதன்கண், 'குறுமகள ஒடுங்கீரோதியையும் ஒண்ணுதலையும் உடையள் ; குளிர்ந்த நீர்மையள் ; பிரியுங்கால் அணங்கு செய்பவள் ; அணைதலேளுடையாள ; அவள நலம உணருமள வன்றிச் சொல்லும் தரமதன்று' என்று தலைவன் தன் நெஞ்சோடு கூறிக்கொள்கின்றான்.

எ0. ஒடுங்கீர் ஓதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந்தண் ணீரள் ஆரணங் கினளே
இனையள் என்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியலே கிளவி
அணைமெல் லியள்யான் முயங்குங் காலே.

—ஓரம்போகியார்.

(இ - ள்.) ஒடுங்கு ஈரா ஓதி ஒண்ணுதல் குறுமகள் - நெஞ்சமே ஒடுங்கிய நெய்ப்புடைய கூந்தலையுடையள் ஒள்ளிய நெற்றியை உடையள் இனையள், நறுந்தண் நீரள் - நறிய மணமும் குளிர்ச்சியும் உடைய நீர்மையினை உடையவள், ஆர் ஆணங்கினள் - பிரிந்தபொழுதோ பொறுத்தற்கரிய வருத்தத்தைச் செய்பவளும் ஆகின்றாள், இனையள் என்று அவள் புனையளவு அறியேன் - இத்தன்மையுடையாள் என்று அவள் நலத்தைப் புனைந்துரைக்கும் எல்லையும் யான் அறிகின்றிலேன், கிளவி சில மெல்லிய - நாம பேசும் கிளவிகள் சில செவ்விகளில் மெலிந்தனவாகின்றன, அணை மெல்லியள் யான் முயங்குங்கால் - யான்

அவளைத் தழுவும்போழ்து பஞ்சணைபோலும் மென்மைத் தன்மையுடையள் என்பேன், ஆயினும் அது நிரம்பாது.

விளக்கம் :—நெஞ்சே நாம் பேசும் மொழி சில செவ்வியில் நம் உணர்ச்சியை வெளியிடற்குரிய வன்மையிலாது மெலிவுடையவாகின்றன ; அதனால், அவள் இத்தன்மையள் என்று புனைந்து கூறும் எல்லையைச் சொல்லிடந்தாராமையால் அறிகின்றிலேன். அறியேனுயினும், சொல்லைக் கொண்டே ஒருவாறு கூறின் ஈரோதி ஒண்ணுதற் குறுமகள், நறுந்தண்ணீரள், முயங்குங்கால் அணைமெல்லியள் என்பேன், எனினும் அவளியல் முழுதும் கூறியபடியாகாது என்பதாம். எனவே, அவள் தன்மை சொல்லில் அடங்காது என்றவாறு. ஒடுங்கு ஈரோதி - இருபுறமும் ஒடுங்கிய நெய்ப்புடைய கூந்தலையுடையாள். ஈரோதி: அன்மொழித் தொகை. ஒண்ணுதல் - அன்மொழித் தொகை. குறுமகள் என்றது பன்னீராட்டைப் பருவத்திளஞ்ளை என்றவாறு. குறுமகளை எழுவாயாக்கினுமாம். இனையள் - இத்தன்மையள். புனையளவு - சொல்லால் புனைந்துகூறும் எல்லை. சொன்னலங் கடந்த சுவையுடையளாகலின் சொல்லாற் புனைதற்கு எல்லை காண்கிலேன் என்றான். என்றவன் சொல்லின் குறைபாடு கூறுவான் கிளவி சில மெல்லிய என்றான். மொழி சில செவ்விகளில் மெலிவுடையன என்றபடி. அணைமெல்லியள் யான் முயங்குங்கால் என்றே சொல்லக் கூடும் இச்சொற்கள் அம்முயக்கவின்பத்தை முற்ற வெளிப்படுத்தா மெல்லிய வாதல் காண் என்றான் என்க.

இனிச் சிலவாகிய மெல்லிய கிளவிகளையுடையாள் என்பதும் ஒன்று.

பாட்டு - எக : தலைவன் கூற்று

துறை :—பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது. அஃதாவது, இன்மையதினிவும் உடைமையதுயர்ச்சியுங் காட்டிப் பொருளீட்டற்கண் ஊக்கிய தன் நெஞ்சிற்குத் தலைவியைப் பிரிதலருமை காட்டித் தலைவன் செலவு அழுங்கியது.

இதன்கண், 'தலைவி நம் உயிர்க்கமிழ்தமாய் நுகர்தற்குச் செல்வமாய்த் திகழ்கின்றாள். இவளிற் சிறந்த செல்வமும் உண்டுகொல்! ஆதலின் இவளைப் பிரிந்து பொருளீட்ட யான் உடம்படேன்' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

எக. மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட் டிளமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

—கருவூர் ஓதஞானியார்.

(இ - ன்.) கல் கெழு கானவர் நல்குறும் - மலை பொருந்திய காட்டிடத்தே வாழும் குறவர் ஈன்றளித்த, அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை - தோன்றுகின்ற தேமலையும் அழகிய பெருமையையுமுடைய இளையவாகிய முலையினையும், பெருந் தோள் நுணுகிய நுசுப்பின் மகள்-பரிய தோள்களையும் நுண்ணி தாகிய இடையினையும் உடைய தலைவி, மருந்தெனின் மருந்தே - உறுதோறுயிர்தளிர்த்தலான் அமிழ்தம் எனின் அவ்வமிழ்தமே ஆகின்றாள், வைப்பெனின் வைப்பே - கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனின் பங்களையும் ஒருங்கேயுடைமை யின் நுகர்தற்குரிய எல்லாச் செல்வங்களின ஈட்டம் என நினையின் அச்செல்வ ஈட்டமுமாவாள்

விளக்கம் :—'நெஞ்சே! இவளே அமிழ்தமும் வைப்புமாகச் சிறத் தலின் இவளை நீத்தடையும் பொருள் வேறியாதுளது? இல்லை ஆகலின், இவளை நீத்து நின்வழிப் படரேன்காண்.'

இததகைய சிறந்த மகளை ஈனறளித்த நன்றியை நினைவான் கல் கெழுகானவர் நல்குறும் மகள் என்றான். நல்குறுதல் - கைம்மாறு கருதாது வழங்குதல். உறுதோறுயிர் தளிர்ப்பத் தீண்டலால் அமிழ்தினி யன்றனவோ என்னும் சிறப்புடைமை கருதிப் பெருந்தோள் என்றான். வனப்பும் பருமையும் ஒருங்கேயுடைய வென்பான் அம்பகட்டிளமுலை என்றான். அம்பகட்டிளமுலையின் மேற்படர்ந்து அழகுக் கழகு செய்யும் சுணங்கினை, அஃது உளதின்பஞ் செய்தல் கருதிக் கூறினான். நுசுப்பு - இடை. வைப்பு - ஈட்டிக் குவித்த செல்வத்திரட்சி. பிற் றைக்கு வேண்டுமென வைக்கப்படுதலின வைப்பு என்பது செல்வத் திற்கு ஏதுப்பெயராயிற்றென்க.

செல்வம் சேர்த்தல் இம்மை மறுமைகளிற் போக நுகர்தற்காயின், இவள் மறுமையின்பமாகிய அமிழ்தம் போல்பவளும் ஐம்புல இன்பமும் ஒருங்கேயுடையளுமாகலின் இவளிற் சிறந்த செல்வம் பிறிதில்லை இவளே அனைத்துச செல்வமும் என்பான், 'வைப்பெனின் வைப்பே' என்றான். அமிழ்தமும் செல்வமும் கைவரப் பெற்ற யாம் அவற்றைப் புறகணித்துப் பின்னைப் போய்ப் பெறுவதெவன் என்று பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைப் பேதைமை யூட்டியவாறும்.

மருந்து - காமநோய்க்குப் பரிகாரம் என்பாரும் உளர்.

பாட்டு - எஉ : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் தன் வேறுபாடு கண்டு வினைய பாங் கற்கு உரைத்தது; அஃதாவது, இயற்கைப்புணர்ச்சி எய்திப் பிரிந்த பின்னர்த் தலைமகளை எய்தப் பெறுமையால் மெலிவுற்ற தலைமகனை இவ்வேறுபாடு நினக்கு எற்றாலாயது என்று வினவிய பாங்கனுக்குத் தலைமகன் உரைத்தது.

இதன்கண், 'மலைப்புறத்தே தினைப்புனத்துக் குருவி ஒப்பு வாள் ஒருத்தியின் பூவும் ஏவும் ஒத்து அலமரும் பெருமழைக்

கண்கள் புறத்தாரெல்லாரும் அறியுமாறு என்னை நோய் செய்தனகாண்!' என்று தலைவன் பாங்கற்குக் கூறுகின்றான்.

எஉ. பூவோத் தலமருந் தகைய ஏவோத்து
எல்லாரும் அறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்தோள் மாமலைப்
பரீஇ வித்திய ஏனற்
குரீஇ ஓப்புவாள் பெருமழைக் கண்ணே.

—மள்ளனார்.

(இ - ள்.) தேமொழித் திரண்ட மென் தோள் - இனிய மொழியினையும் திரண்ட மெத்தென்ற தோளினையும் உடைய, மாமலைப் பரீஇ வித்திய ஏனல் குரீஇ ஓப்புவாள் - பெரியமலைப் பக்கத்தே பருத்தினைய இடையிடையே விதைத்த தினைப்புனத்தில் குருவி கடிவாளாகிய ஒருத்தியினுடைய, பெருமழைக்கண் - பெருமையுடைய குளிர்ந்த கண்கள், பூ ஒத்து அலமருந்தகைய - அழகான தாமரை மலரை ஒத்துச் சுழலுந் தன்மையுடையன வாய், ஏ ஒத்து - கொடுமை செய்தலில் அம்பினை ஒத்து, எல்லாரும் அறிய நோய் செய்தன - பிறர் எல்லாம் தெற்றென அறிந்து கொள்ளும்படி துன்பத்தை உண்டாக்கின.

விளக்கம்:—குருவி ஓப்புங்கால் 'ஆயோ' எனக் கூவிக் கடிந்தமை கேட்டான் ஆகலின், அதன் இனிமையை முற்படினைந்து தேமொழி என்றான். தான் முயங்குங்கால் தோளின் இனிமை அறிந்தாளாகலின் அதன் பருமையையும் மென்மையையும் நினைந்து 'திரண்டமென்றோள்' என்றான்.. "அணைமெல்லியள்யான் முயகுகுங் காலே" (எ0) எனப் பிறரும் இந்நூலகத்துக் கூறுதலறிக. மாமலை - பெரியமலை - மலையின் பக்கத்தே என்றவாறு. பரீஇ - பருவி - பருத்தி. தினைப்புனத்தில் பருத்தி விதைத்தலும் வழக்கம். இதனை, "பருவி வித்திய பைந்தாட் புனம்" (பெருங் - க - நு0 : கசு.) எனப் பிறர் ஓதுமாற்றானும் உணர்க. குருவி என்னும் பெயர்ச்சொல் குரீஇ எனவருதல் போன்று பருவி பரீஇ என வந்தது.

இனி, பரீஇ வித்திய ஏனல் என்றதற்கு "நல்லகாலம் அறிந்து வித்திய தினை" என்பாருமுளர். இதற்கு "நன்னட்கொண்டு தன்னையர் பரியப் பொன்னேர் சிறுதினை விளைந்த புலந்தொறும்" என வரும் பெருங்கதைப் பகுதியைக் காட்டுவர் அவர். இவ்வெடுத்துக் காட்டினுள் நாட்கொண்டு பரிய விளைந்தபுலம் என்புழிப் பரிய என்னும் சொல், நாட்கொண்டென்னும் பொருட்டாகாமை வெளிப்படை. இவ்வெடுத்துக் காட்டில், பரிய என்பது - பரவாநிற்ப என்னும் பொருட்டாதல் காணலாம். எனவே, பரீஇ வித்திய என்பதற்குப் பரப்பி விதைத்த எனப் பொருள் கோடலும் சிறப்பாகத் தோன்றுகின்றது.

ஏனல் - தினை. கண்கள் பெரியன வாதல் அழகு. மழை - கண்ணுக்குப் பணிபுவமை என்க. அழகால் தாமரை ஒப்பனவாயிருந்தும்

செயலால் அம்புபோன்ற கொடுமையுடையவாயிருந்தன என்றவாறு. அலமரும் நோய் என்பாரும் உளர். அலமருதல் - சுழலுதல். நின் போல் கேளிரேயன்றிப் பகையும் நொதுமலும் ஆவாரும் அறிந்து கொள்ளும்படி என்பான் எல்லாருமறிய என்றான்.

பாட்டு - எஉ : தோழி கூற்று

துறை :—பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்து அதுவும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி கூறியது. அஃதாவது, 'இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் வரைந்து கொள்ளுதலிற் கருத்தின்றிப் பகற்குறிக்கண் வந்தொழுகும் தலைமகனை அப் பகற்குறிக்கண் வாரற்க' எனவும், இரவுக் குறிக்கண் 'வருக' எனவும் தோழி கூறினாள்; இரவுக் குறியில் அடிக்கடி தலைவியைக் காணல் அரிதாம் ஆகலின், தலைவன் வரைந்து கொள்ள முயல்வன் என்று கருதியே தோழி அவ்வாறு செய்தாள். பின்னரும் தலைவன் வரைந்துகொள்ள முயலானாய் இரவுக்குறிக் கண் வந்தொழுகுவானாயினன். தோழி 'இரவினும் ஏதம் பலவுள; வாரற்க' என்றாள். இதுகேட்ட தலைவி என்னிது இரவினும் வாரல் என்றனை யான் உய்யுமாறியாது? என அவட்கு இச் சூழ்ச்சி இன்றியமையாது எனத் தோழி கூறுகின்றாள்.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "அன்னாய் நீ தலைவனை ஆற்றவும் விரும்புகின்றனை என்பது யானும் அறிவேன். அறிந்தே அவனை இரவின்கண் வாராதேகொள் என மறுத்தேன். இது வன்கண்மையுடைய செயல் என நினக்குத் தோன்றும்; ஆயினும் இவ்வன்கட் செயலையும் யாம் செய்ய வேண்டியது இன்றியமையாதாகின்றது. இங்ஙனம் நெருக்கினை லன்றித் தலைவன் வரைந்து கொள்ளற்கு முற்படான் என்று கூறுகின்றாள்.

எஉ. மகிழ்நன் மார்பே வெய்யை யாஅய்
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் தோசர் போல
வன்கட் சூழ்ச்சியம் வேண்டுமாற் சிறிதே.

—பரணர்.

(இ - ள்.) தோழி—, அழியல் நீ மகிழ்நன் மார்பே வெய்யை - யான் பகல் வருவானை இரவு வருகென்று பின்னர் இரவினும் வாரற்க என்றமை நினைந்து பின்னர் அவனை எய்துமா

றென்னே என்று உள்ளம் அழியாதேகொள் நீ தலைவன் மார்பினைப் பெரிதும் விரும்பும் இயல்பினை உன் விருப்பத்திற்கேற்ப அவன் மார்பினைப் பிரியாது நீ பெறவேண்டின், நன்னன் நறுமா கொன்று நாட்டிற்போக்கிய ஒன்றுமொழிக் கோசர்போல - நன்னன் என்பானுடைய நறிய மாமரத்தை அழித்து அதனை ஊரின்கட் செலுத்தும்பொருட்டு வஞ்சினத்தையுடைய கோசர் என்பார் செய்த சூழ்ச்சியைபபோல, வன்கட்சூழ்ச்சியும் சிறிது வேண்டும் - இத்தகைய வன்கண்மையுடைய சூழ்ச்சியும் சிறிது செய்தல் இன்றியமையாது வேண்டப்படும்.

பினக்கம் :— மகிழ்நன் - மகிழ்தற்குக் காரணமான தலைவன் வெய்யை - விருப்பமுடையாய். ஆல் - அசை. நீ தலைவன் மார்பினைப் பிரியாது நுகர்தல் வேண்டும் என்னும் விருப்பம் பெரிதும உடையாய். அங்ஙனம் பிரியாது நுகர்தற் பொருட்டே யான் இச்சூழ்ச்சி செய்தேன் ஆகலின், நீ இதனை வேறுக்க கருதி வருந்தற்க என்பாள், 'அழியல்' என்றாள் என்க. இருவகைக் குறியானும் அவன் மார்பைப் பிரியாது நுகர்தற்கு இடனில்லை; இவற்றிற்கு எதங்காட்டி மறுத்தவழி அவன் தினைனப் பெற வரைந்து கொள்ளலன்றி வேறு வழியின்மையால் விரைவில் வரைதற்கு முயல்வான். இருவகைக் குறியும் மறுத்தமை வன்கட்செயலாகத் தோன்றினும் இது செய்யாவழி அவன் வரையு மாறின்மையின் செய்தல் இன்றியமையாதென்பாள், வன்கட் சூழ்ச்சி யும் வேண்டும் என்றாள். இச்சூழ்சசி வரைந்துகொள்ளும் அளவுமே வேண்டும் என்பாள், சிறிதென்றாள்.

வன்கண் - தறுகண்; கருணையற்ற செயல் என்றபடி. இருவகைக் குறியும் மறுத்தல் ஒருவரை ஒருவர் காணப்பெறாது தலைவனும் தலைவியும் துன்புறுதற் கேதுவாமாகலின் வன்கட்செயலாயிற்று.

தலைவி ஈண்டுச் செய்த சூழ்ச்சிக்கு நன்னன் மாமரத்தை அழித்து நாட்டிற் போக்கற்குக் கோசர செய்த சூழ்ச்சி உவமை என்க. கோசர் மொழிதப்பாதவராகலின் ஒன்றுமொழிக் கோசர் என்றாள்.

கோசர் சூழ்ச்சி தப்பாது பயன்றருமாறுபோல என் சூழ்ச்சியும் விரைவிற் பயன்றரும் என்பது கருத்து.

கோசர் செய்த சூழ்ச்சியாவது :—

தன் கனியை உண்டாற்கு நீண்ட ஆயுள்தரும் எனக் கூறப்பட்ட மாமரம் ஒன்றினை நன்னன் என்பான் வளர்த்தானாக, அது நெடுநாட் சென்றீன்ற ஒரே கனி ஆற்றில் வீழ, அதனைக் கோசர்குடிப் பெண் ணொருத்தி எடுத்துண்டாள். அதுகேட்டுச் சினந்து நன்னன் அவளைக் கொன்றான். அப்பழிக்கு மாறுசெய்யக் கருதிய கோசர் அவன் ஊரி லில்லாத அமயத்தே அகுதை தந்தையிடம் யானைப் பரிசில் பெற்று வந்த பாடினிகளை அவ்வியானைகளை அம் மாமரத்திற் பிணிக்கச் செய்தனர். அவ்வியானைகள் அம்மரத்தைப் பிடுங்கிக் கொண்டு ஊரி னுட் புக்கன. இச்சூழ்ச்சியால் அம்மாமரம் ஊரினுட் போக்கப்பட்டது என்பது.

நாட்டிற் போகிய என்ற பாடத்தைக் கொண்டு அவனது நாட்டி னுட்புக்க என்பாருமுளர்.

அகுதை தந்தை பாடினிக்குப் பிடிப்பரிசில் நல்கியது சூழ்ச்சியே யாகும் என்பதனை, இந்நூலில் இப்புலவரே பாடிய,

"இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்ததவன் நெடும்புற நிலையே.

என்னும் செய்யுளானும் உணரலாம். (உகஅ)

பாட்டு - எசு : தோழி கூற்று

துறை :—தோழி, தலைமகன் குறைமறுத்தவாற்றுற் கூறியது. அஃதாவது : தோழியின்பால் தலைவன் குறையிரந்தானாக, அதற்கு உடம்பட்ட தோழி 'தலைவனை ஏற்றுக்கொள்க' என் பதுபடத் தலைவிக்குக் கூறியது.

இதன்கண், 'தலைவனை யாம பெரிதும் விரும்பாநின்றேம்; நாம் இத்தனை விருப்பமுடையோம என்பதனை அவன் அறி யாமல் நின்னைப் பெரிதும் விரும்பி மெலியாநின்றான்' எனத் தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

எசு. விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாம்தற் படர்ந்தமை அறியான் தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்பகம் மாணலம் நயந்தே.

—விட்டகுதிரையார்.

(இ - ள்.) விட்ட குதிரை விசைப்பின் அன்ன - நெடுநாட் கட்டியிருந்து அவிழ்த்துவிட்ட குதிரை துள்ளி எழுந்தாற் போன்று எழும் எழுச்சியுடைய, விசும்பு தோய் பசுங்கழை - வளைத்துவிடப்பட்ட வானத்தைத் தீண்டும் பசிய மூங்கிலை யுடைய, குன்றநாடன் - மலைநாட்டையுடைய நந்தலைவன், யாம் தன் படர்ந்தமை அறியான் - யாம் அவன் கூட்டத்தை விரும்பி மெலிந்தமையை அறியானாகி, தானும் வேனில் ஆனேறுபோல - தானும் வேனிலின்கட் பிணிக்கப்பட்ட காளைபோன்று, நம் மாண் நலம் நினைந்து சாயினன் - நமது மாட்சிமைப்பட்ட நலத்தை விரும்பி அது நுகரப்பெறுமையால் மெலிந்தான்.

விளக்கம் :—விட்டகுதிரை என்றது விடாது பிணிக்கப்பட்டிருந்து பிணியவிழ்த்து விடப்பட்ட குதிரை என்றவாறு. பிணித்துப் பின் விடப்பட்ட குதிரை என்றதற்கேற்ப வளைத்துவிடப்பட்ட கழை

என்க. விசைத்தல் - துள்ளியெழுதல். வளைத்துவிடப்பட்ட மூங்கில் விசும்பு தோயும் மலைநாடன் என்றது, நம்பாற் பணிவுடையன் ஆயினும், இயற்கையில் உயர்ச்சியுடையான் என்னும் குறிப்பிற்று. என்னை? "ஒன்று இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும் உலகம், புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்" (கலி - முல்.) என்றபடி, வளைப் புழித் தாழவளைதலும் நிமிர்வுழி விசும்புதோய நிமிர்தலும் உடைய மூங்கிலைத் தலைவன் எண்மைக்கும் உயர்வுக்கும் உள்ளுறை உவமை யாக்கிக் கூறினள் என்க.

யாம் அவனைப் பெறுதற்குப் பெரிதும் விருப்பமுற்றிருத்தல் அறியாதவனுய் நம்மைப் பெறற்கரியராகக் கருதிப் பெரிதும் மெலி கின்றான் என்பாள் 'யாந்தற்படர்ந்தமை அறியான்' என்றாள். எனவே யாம் விரும்பிப்பெற எண்ணுகின்ற தலைவனே வலிதில் நம்மைப் பெற முயல்கின்றான் ஆதலின், நன்றேயாயிற்று. அவன் பெரிதும் மெலி தற்கு முன்னரே யாம் அவனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்ற வாறாயிற்று.

வேனிற்காலத்தே ஆனேறு கட்டவிழ்த்து ஆன்கூட்டத்தில் விடப்படுதல் வழக்கம்; அக்காலத்தே அது பிணிதுவைக்கப்படின் ஆன்களை நினைந்த நினைவிற்றாய் இரைகொள்ளாது மெலிந்துபோகும் இயல்பிற்று. ஆதலின், தலைவியைக் காணப்பெறுத தலைவனை வேனிற் காலத்தே பிணிப்புண்ட ஆனேற்றோடு உவமித்தாள். வேனிற்காலத்து வெப்பந்தாங்காது மெலிந்த ஆனேறு என்பாருமுளர். வேனில் வெப் பத்தை ஆனேறுகள் தாங்கா என்பது பொருந்தாக் கூற்றென்க.

சாயினன் - மெலிந்தான். என்ப: அசை. மாண்நலம் - மாட்சி மைப்பட்ட நன்மை. ஆனேறு ஆனின் நலம் நயந்து மெலிந்தாற் போன்று நம் மாணலம் நயந்து மெலிந்தான் ஆதலின் அவற்கருளுதல் நுங்கடன் என்று இரந்தவாறு.

வளைத்துவிட்ட மூங்கிலின் விசைப்பிற்கு விட்டகுதிரையின் விசைப்பினை உவமைகூறிய அருமைகருதி இவர் விட்டகுதிரையார் எனப்பட்டார்; வேனிலானேற்றார் எனக் குறித்திருப்பின் இன்னும் அழகிதாம்.

பாட்டு - எடு: தலைவி கூற்று

துறை :—தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது. அஃதாவது தன்னைப் பிரிந்திருந்த தலைவன் மீண்டு வருதலை முன்னர் வந்து மொழிந்த பாணனைத் தலைவி தனது ஆர்வம் தோன்ற வாழ்த்தியது.

இதன்கண், 'தலைவர் வருகின்றனர் என யான் கேட்க விரும்பியிருந்த இன்பச் செய்தியை உரைத்த பாணனே! வாய் மையாக விருக்குமோ நின்சொல்; அவர் வருகையை நீயே கண்கூடாகக் கண்டாயோ? அல்லது பிறர் கூறக்கேட்டனையோ? நன்று! நன்று! இந்நற்செய்தி கொணர்ந்த நீ பொன்மலி பாடலி பெறுக. இச்செய்தியை நினக்கு யாரே கூறினர்.' என்கின்றாள்.

எடு. நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

—படுமரத்து மோசிகீரனர்.

(இ - ள்.) பாண—, காதலர் வரவு நீ கண்டனையோ - தலைவரின் வருகையை நீயே கண்கூடாகக் கண்டாயோ, கண்டார்க் கேட்டனையோ - அல்லது தலைவன் வருகையைக் கண்ட பிறர் கூறக் கேட்டாயோ, யார்வாய்க் கேட்டனை - அங்ஙனம் பிறர் கூறக் கேட்டிருப்பாய் எனின் யார் வாயிலாகக் கேட்டனை, ஒன்று தெளிய நசையினம - உண்மை தெளிந்துகொள்ளற்கு விரும்பினேம், வெண்கோட் டியானை சோணை படியும் பொன் மலி பாடலி பெறீஇயர் மொழிமோ - வெள்ளிய மருப்பினையுடைய யானைகள் சோணையாற்றில் நீராடற்கிடமான பொன் மிக்க பாடலி நகரத்தை நீ பெறக்கடவாய்; சொலவாயாக!

விளக்கம் :—தலைவன் வருகையை எதிர்நோக்கியிருக்கும அன்பு கெழுமிய தலைவியின் ஆர்வ மிகுதியை அவள் பாணனை வினவு மாற்றாலே நன்கு தெளியக்காட்டிய இப்பாடலின் அழகு நினைந்து நினைந்து இன்புறற்பாலது. இதன்கண் நிகழும் ஒவ்வொரு சொல்லினும் அவளுடைய கடல்போன்ற ஆர்வம் பொதியப்பட்டுள்ளதுணர்க.

தான் கேட்கப் பெறாதும் ஆர்வமுற்றிருந்த செய்தியை ஒருவர் கூறுகையால், அது மெய்யாகவேண்டுமே என்னும் விதிர்விதிர்ப்பால் இகழ்ணம் அடுத்தடுத்து வினவுதல் உலகியற்கையாகும். தேர்வில் வெற்றியடைந்தனை என நண்பன் அறிவுறுத்துங்கால் தேர்வுக்குரிய மாணவன்பால் இங்ஙிலையினைக காணலாம். செய்தித்தான்களில் வெளியாயிருப்பினும் அதனைப் பன்முறை ஓதிஓதித் தெளிவர் மாணவர்

ஒருவன் ஒருசெய்தி கூறுங்கால் அசசெய்தி தான் கண்டதாக வாதல், அல்லது கேட்டதாக வாதல் இருத்தல்வேண்டும். கண்டதாயின் ஐயுறற்கிடனில்லை. கேட்ட செய்தியெனின் அச்செய்தியைச சொல்வோர் பொய்யராயவிடத்துச செய்தியும் பொய்யாய் விடுமே. பொய்கூறுதல சான்றோர் கூறியதெனின், அது உண்மையென்று தெளியலாம். ஆதலின், கண்டார்க் கேட்டனையோ என்று வினைய பின்னரும் யார்வாய்க் கேட்டனை என்று அடுத்தும் வினவுகின்றாள்.

ஒன்று தெளிய என்றது உண்மையைத் தெளிந்துகொள்ளும் பொருட்டு என்றவாறு. ஒன்று - உண்மை. இனி ஒன்றென்பதற்கு இரண்டில்லாத ஒன்று என்பாரும் உளர். நசையினம் - தன்மைப் பன்மை. விருப்பமுடையோம் என்க. மோ - முன்னிலையசை. பெறீஇயர் - வியங்கோள்; வாழ்த்துப் பொருளில் வந்தது.

பாடலிநகர் பண்டு சிறந்திருந்தமை இதனால் உணரலாம். யானை சோணைபடியும் என்றது, பாடலி சோணையாற்றின் கரைக்கண் உள்ள

தலைநகரமாதலை உணர்த்துதல் அறிக. பாடலி நகரத்தே பொன் மிக்கிருந்தமை "பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்" (க. திரு: சூட.) எனவரும் பெருங்கதையானும் அந்நகர் புகழ்நிறைந்த நகரம் என்பதனைப்,

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ" (அகம்: உடுசு)

எனவரும் அகப்பாட்டானும் உணர்க. பாடலி பெறீஇயர் என்றது, பெருஞ்செல்வம் பெற்று வாழ்வாயாக என்று வாழ்த்திய படியாம். பாணர் சில செவ்விகளில் பொய்யும் கூறுவர் ஆகலின் இங்ஙனம் அடித் தடுத்து வினவினாள் என்க.

பாட்டு - எசு : தலைவி கூற்று

துறை :—பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது அஃதாவது, தலைவன் தன்னைப் பிரிவான் என்பதைக் குறிப்பாலுணர்ந்து வருந்திய தலைவிகருத் தோழி தலைவன் பிரிவை வந்து கூறினளாகச் செல வழுங்குவியாது செலவுணர்த்தும் தோழியோடு புலந்து தலைவி கூறியது.

இதன்கண், 'தோழி! கல்வரைமார்பர் தண்வரல் வாடை தூக்கும் கடும்பனி அச்சிரக் கொடுமையை யாம் நுகர்ந்து நடுங்கி வருந்தும்படி செல்வார் என்றே சொல்கின்றார்? செல்லிற் செல்லுக' எனத் தலைவி கூறுகின்றாள்.

எசு. காந்தள் வேலி ஓங்குமலை நல்நாட்டுச்
செல்ப என்பவோ கல்வரை மார்பர்
சிலம்பிற் சேம்பின் அலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அச்சிரம் நடுங்கஞர் உறவே.

—கிள்ளி மங்கலங்கிழார்.

(இ - ள்.) தோழீ, சிலம்பிற் சேம்பின் அலங்கல் வள்ளிலை - மலைக்கண் உள்ள சேம்பினது அசைகின்ற வளைய இலை, பெருங் களிற்றுச் செவியின் மான - பெரிய களிற்றியானை யின் செவியை ஒக்கும்படி, தைஇத் தண்வரல் வாடைதூக்கும் - தடவிக்குளிர்ந்த வரவினையுடைய வாடைக்காற்று அசைத்தற்குக் காரணமான, கடும்பனி அச்சிரம் நடுங்கு அஞர் உற - மிக்க பனியையுடைய அச்சிரக் காலத்தில் பிரிவாற்றுமையால் நடுங்கு

தற்குக் காரணமான வருத்தத்தை யான் எய்தும்படி, கல்வரை மார்பர் - கற்களையுடைய மலைபோன்ற மார்பையுடைய தலைவர், காந்தள் வேலி ஒங்குமலை நலநாட்டு - காந்தளே வேலியாக உடைய உயர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டிடத்தே, செல்ப என்பவோ - என்னைப் பிரிந்து போவார் எனறு கூறுகின்றனரோ?

விளக்கம் :—சிலம்பு - மலை. சேம்பு - ஒருவகைச் செடி. இதன் இலைக்குக் களிற்றுச்செவி உவமை. அலகுகல் - அசைதலையுடைய. வள்ளிலை - வளப்பமான இலை. மான - ஒக்கும்படி. தைஇ - தடவி. தண்வரல் - வாடை குளிர்ந்த வருகையினையுடைய வாடைக்காற்று. அசிரம் - முன்பனிக்காலம் : பிகுபனியையுடைய முன்பனிக்காலம் என்க. இகுகாலம் பிரிந்திருப்போர்க்குப் பெரிதும் வருத்தத்தைச் செய்யும் இயல்புடையது. இதனை,

> " அச்சிரம் வந்தன் றமைந்தன் றிதுவென
> எப்பொருள் பெறினும் பிரியன்மி னேவெனச்
> செப்புவல் வாழியோ தோணியுடை யீர்க்கே " (அகம்-உகஎ.)

எனவும்,

> " தண்பணி அச்சிரம் தமியோர்க்
> கரிதெனக் கனவினும் பிரிவறி யலனே " (அகம்-கஎஅ)

எனவும், பிறசான்றோர் கூறுமாற்றாலும் உணர்க.

தூக்கும் என்றது, உயர்த்தி அசைக்கும் என்றவாறு. தோழி பிரிவுணர்த்துதுகால் தலைவன் கூறினன் என்னாது செல்வார் என்ற பிறர் கூறக்கேட்டேன் என்றமையாற் செல்ப என்பவோ என்றாள். அவர் பிரிவார் என்பதை யான் முன்னரே குறிப்பான் உணர்ந்துள்ளேன் ; இப்பொழுது வெளிப்படையாகவும் பிரிந்து போவார் எனக் கூறப்படுகின்றனரோ என்றவாறு.

கல்வரை மார்பர் என்றது, கன்னெஞ்சர் என்றும் ஒரு பொருள் தோன்ற நின்றதுணர்க. அளர் - வருத்தம். பனியும் வாடையும் அச்சிரத்திற்குரியனவாய்ப் பிரிந்தாரை நடுகுளர் உறச்செய்தலின், 'தண் வரல் வாடைதூக்கும் கடும்பனியச்சிரம்' என்றாள்.

பாட்டு - எஎ: தலைவி கூற்று

துறை :—பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள், தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்தமையால் ஆற்றுமை மிக்க தலைவியை 'நீ இங்ஙனம் ஆற்றாயாகின்ற தென்?' என வினைய தோழிக்குத் தலைவி தன் ஆற்றுமைக்கு ஏதுக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நீ ஆற்றுமையால் தோள் மெலிந்து வருந்துதல் தவறுடைத்தென்கின்றனை ; கடத்

தற்கரிய பாலைநிலத்தில் தலைவர் சென்றார் என்று யான் எண்ணுங்கால், இத்தோள் மெலிந்து வருந்துதல் எங்ஙனம் தவறுடையதாகும்?' என்று கூறுகின்றாள்.

எஎ. அம்ம வாழி தோழி யாவதும்
தவறெனின் தவறே இலவே வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநிழ லாகும்
அரிய கானஞ் சென்றோர்க்கு
எளிய வாகிய தடமென் தோளே.

—மதுரை மருதன் இளநாகனார்.

(இ - ள்.) அம்ம வாழி தோழி - தோழியே கேட்பாயாக, வெம்சுரத்து உலந்த வம்பலர் - பாலைநில வழியேசென்று ஆறலை கள்வராலே கொல்லப்பட்டவருடைய உடலை மூடுதற்கு, உவல் இடுபதுக்கை - தழையை இட்ட கற்குவியல், நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும் - நெடிய நல்ல யானைகட்குச் செயற்கையாலிடப் பட்ட நிழலாகப் பயன்படாநின்ற, அரிய கானம் சென்றோர்க்கு - கடத்தற்கரிய பாலைநிலத்தே சென்ற தலைவர்ப்பொருட்டு, எளிய வாகிய தடமென் தோள் - ஆற்றுமையான் மெலிந்திளைத்த பெரிய மெத்தென்ற தோள்கள, தவறெனின் - தவறுடையன என்பாயாகில், யாவதும மதவு இல - அவைகள் சிறிதும் தவறுடையன ஆகமாட்டா.

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற்கண் வந்தது. "அம்ம கேட்பிக்கும்," (இடை - உஅ.) என்பது தொல்காப்பியம். வாழி - அசை.

யாவதும் - ஒருசிறிதும் என்றபடி "அஞ்சி லோதி அசையல் யாவதும், அஞ்ச லோம்புமதி" (குறிஞ்சிப் பாட்டு: கஎக.) என்புழியும் அஃதப்பொருட்டாதல் அறிக. எளியவாகிய தடமென்றோள் தவறெனின் தவறில என்க. உன் தோள்கள் ஆற்றுமையால் எளிய வாதல் தவறு என்றுட்கு, அவர் அரிய கானஞ்சென்றமையைக் கருதி அவை மெலிகின்றனவாகலின், தவறில என்றாள் என்க. எனவே பிரிந்தமைக்கன்று அரிய கானம் சென்றமைக்கே ஆற்றேனாயினேன் என்றபடியாம். இனி அவர் அரிய கானம் சென்றமை தவறு எனின் அவரைப் பிணித்துச் செலவழுங்குவிக்கும் வன்மையிலாத இத்தோள் களும் தவறு, ஓவில என்பாருமுளர். ஓவில - ஒழிவில என்று பொருள் கொள்வர் அவர். இதற்கு,

"சுரம்பல விறந்தோர்
தாம்பழி யுடைய ரல்லர் நாளும்
நயந்தோர்ப் பிணித்தல் தேற்ற வயங்குவினை

வாளே செல்வளை நெகிழ்த்த
தோளே தோழி தவறுடை யவ்வே" (உசுஎ.)

என்னும் அகப்பாட்டை எடுத்துக்காட்டுவார்; ஏற்புடையது கொள்க.

வம்பலர் - வழிச்செல்வோர். பதுக்கை - இறந்தோர் உடலிட்டு மூடிய கற்குவியல். கற்குவியலே யானைக்கு நிழலாகும் எனவே பிறி தொரு நிழலும் இல்லாத பாலை என்றவாறாயிற்று. வழிச் செல்வோரை ஆறலை கள்வர் கொன்று புதைக்கும் கொடுநெறியாதலோடு நீழலுமற்ற தாகலின், அரிய கானம் என்றாள்; அரிய - கடத்தற்கரிய என்க. அவரைப் பிணித்துச செலவழுங்குவியாமையால் தோள் தவறுஓவில என்பார்க்குக் கானத்தின் கொடுமை கூறல் சிறப்பின்றி நிற்றலும் உணர்க.

பாட்டு - எஅ : பாங்கன் கூற்று

துறை :—பாங்கன் தலைமகற்குச் சொல்லியது. அஃதாவது: காம நோயான் மெலிந்த தலைவனை, 'இது நின் தகைமைக்குத் தகுந்ததன்று' எனப் பாங்கன் கழறியது.

இதன்கண், காமத்தான் மெலிந்த தலைவனை நோக்கி, 'உயர் குடிப் பிறந்தோய்! இது நினக்குத் தகுவதன்று. தன்னை நன் றென உணரார் மாட்டும் சென்று இரந்து நிற்கச் செய்யும் பெரும் பேதைமைத்துக் காமம்; ஆதலால் அது நின்னால் வெறுக்கற் பாலது' எனப் பாங்கன் இடித்துரைக்கின்றான்.

எஅ. பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பிச்
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

—நக்கீரனார்.

(இ-ள்.) பெருவரை மிசையது நெடுவெள் அருவி-பெரிய மலையுச்சியிற் றோன்றியதாகிய நெடிய வெள்ளிய அருவி நீர், முது வாய்க் கோடியர் முழவில் ததும்பி - அறிவு வாய்த்தலையுடைய கூத்தரது முழவைப் போன்று ஒலித்து, சிலம்பின் இழிதரும் இலங்கு மலை வெற்ப - பக்கமலையின் கண்ணே வீழாநிற்கும் விளங்குகின்ற மலைகளையுடைய தலைவனே, காமம் நோதக்கன்று - காமநோய் வெறுக்கத்தக்க தொன்றும்; அஃது எற்றாலெனில், யாவதும் நன்றென உணரார் மாட்டும்-தன்னைச் சிறிதும் நன்று என உணராதவரிடத்தும், சென்று நிற்கும், பெரும் பேதை

மைத்து - வலிந்து சென்று குறையிரந்துநிற்கும் பெரிய மடமையை அஃதுடைத்தாகலான்.

விளக்கம்:—பெரிய மலையுச்சியிற் பிறந்த அருவி, தன் பிறப்புயர்வு நோக்காது தாழ்ந்த மலைகளிடத்தே வீழ்ந்து இழியுமாறு போல, நீயும் நின் உயர் குடிப்பிறப்பிற்கேற்ப ஒழுகாது காமநோயால் இழிந்து கலங்கா நின்றனை என, உள்ளுறை காண்க. வெற்ப என்றது குறிஞ்சித்தலைவன் என்னும் பொருட்டாய் நின்றது. நோதக்கன்று - வெறுக்கத்தக்கது. யாவதும் தன்னை உணரார் மாட்டும் என்க. காமம் நன்றென வுணரா தார் காமஞ்சாலா இளமையோள். சான்றோர் மூதலியோர். காமங் கொண்டோர் காமஞ்சாலா இளமையோளைப் பின்னிற்றலும், மடலூர்ந்து சான்றோர் அவைக்களம் ஏறுதலும் உடையராதல் அறிக. இனிக் காமம் கொண்டோர் மகவுடைமந்தி போலத் தங்குறையை அகனுறத் தழீஇக் கேட்கப் பெறுத தலைவி தோழி பாங்கன் முதலியோரிடத்தும் சென்று நிற்றலும் உடைய மடமையுடையர் ஆதலும் உணர்க.

தன்னை உணராரை மாட்டுச் சென்று நிற்றல் மடமை என்பதனை,

> "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அஃதிலேயே
> கெட்டான் எனப்படுதல் நன்று" (குறள் - ஈஈஎ)

என்றும்,

> "புகழின்றாற் புத்தேளுட் டுய்யாதா லென்மற்
> றிகழ்வார்பின் சென்று நிலை" (குறள் - ஈஈஈ)

என்றும் வரும் குறட்பாக்களானும் அறிக. இத்தகைய மானகுணம், காமநோயுற்றாரிடத்தின்றாதலை,

> "செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
> உற்றார் அறிவதொன் றன்று." (குறள் - ஈஈதிஇ)

எனவரும் குறட்பாவானும் உணர்க.

இத்தகைய பெருந்தகைமையைக் கைவிடலிற் பெரும் பேதை மைத்தே என்றான் என்க. பேதைமைத்து - அறியாமையை உடையது.

பாட்டு - எஈ : தலைவி கூற்று

துறை:—பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலை மகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்து நெடுநாள் தங்கிவிட்டமையால் ஆற்றாமை மிக்க தலைவி தோழிக் குத் தன் ஆற்றாமை தோன்றக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி "தலைவர் தாம் பிரி யுங் காலத்து அக்கருத்தை என்பாற் கூறின், யான் உடன் படேன் என்று நினைத்து, எனக்கு அறிவியாமலே பிரிந்தனர்; அத்தகைய வன்கண்ணர் நம்மை மறந்து மீண்டு வாராதே ஆண்டே தங்கிவிடுவரோ?" என்று கூறுகின்றாள்.

எக. கான யானை தோனயங் துண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல உலவை யேறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே.

—நுடவாயிற் கீரத்தனர்.

(இ. ள்.) யாம் தமக்கு ஒல்லேம் என்ற தப்பல் - யாம் பிரிவினைப் பொறுக்கமாட்டோம் என்று அவர்க்குக் கூறிய தவற்றால், சொல்லாது அகறல் வல்லுவோர் - அறிவியாமல் பிரிந்து போதலில் வன்மையுடையோர், கானயானை தோல் நயந்து உண்ட பொரிதாள் ஓமை-காட்டியானையாற் பட்டையை விரும்பி உண்ணப்பட்ட பொரிந்த அடியையுடைய ஓமை மரத்தினது, வளி பொரு நெடுஞ் சினை அலங்கல் உலவை ஏறி - காற்றால் புடைக்கப்பட்ட நெடிய கிளையின்கண் அசையாநின்ற உலர்ந்த கொம்பில் ஏறி, ஒய்யெனப் புலம்பு தரு குரல புறவுப் பெடை பயிரும் - ஒய் என்று தனிமையும் வருத்தமும் தோற்றுவிக்கும் குரல் உடையவாய் ஆண்புறாக்களைப் பெண்புறாக்கள் அழையாநின்ற, அத்தம நண்ணிய அங்குடிச் சீறூர்-சுரவழி பொருந்திய அழகிய குடிகளையுடைய சிறிய ஊரின்கண், சேந்தனர் கொல்-என்னை மறந்தனராய்த் தங்கி விட்டனரோ.

விளக்கம்:—சொல்லாது அகறல் வல்லுவோராகலான், சீறூர்ச் சேந்தனர் கொல்லோ என வதுவாக்குக. காட்டியானை ஓமைத் தோலையுண்ணும் என்பதை,

"கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை"

(நற்றிணை - கஉஎ)

எனப்பிறர் கூறுமாற்றாலும் உணர்க ஓமை - பாலைக் கருப்பொருள். தோல் - ஈண்டு ஓமை மரத்தின் பட்டை, அப்பட்டையும் கிடைப்பது அருமை என்பது தோன்ற 'நயந்துண்ட' என்றார். அலங்கல் உலவை-அசைகின்ற உலர்ந்த கொம்பு. மழை வறத்தலால் ஓமையின் கொம்புகள் உலர்ந்தன எனக. ஒய் - ஒலிக்குறிப்பு: விரைந்து எனினுமாம். புலம்பு தரு குரல - ஆண்புறாக்கள் பிரிந்தமையால் தனிமைத்துயர் தோன்றும் குரலை உடையன என்க. புறவு - ஈண்டு ஆண்புறா என்னும் பொருட்டு. பயிர்தல்-அழைத்தல். பெடை, தம் புறவினை அழைக்கும் புலம்பு தரு குரலை அவர் ஆண்டுக் கேட்டும் நம்மை நினையாது தங்கினர்

என்று இரங்கியபடியாம். அத்தம் - பாலை நிலவழி. சேந்தனர்-தங்கினர். தாம், எ. அசைகள். 'பிரிதற்கு உடன்படேம்' என, யாம் அவர்க்கு முன்னர் அறிவித்திருந்தது தாம் செய்த தவறு என்றும் அத்தவற்றாலேயே அவர் சொல்லா தகன்றனர் என்றும் இரங்கினள் என்க. அதுதவறு செய்திலேமேல் அவர் பிரிவுணர்த்துவர்; உணர்த்துங்கால் செலவழுங்குவித்தல் கூடும்; அது கழிந்தது என்றவாறு. ஒல்லுதல்-இயைதல்; பொறுத்தலுமாம்.

இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் "புலம்பு தரு குரல வாய்ப் புறவினைப் பெடை அழைக்கும் வருத்தங் கண்டு வினைமுடியாமல் வருவரோ என அஞ்சியவாறு காண்க" (தொல் - கற்பு - எ.) என்றோதுவர்.

பாட்டு - அ0 : பரத்தை கூற்று

துறை :—தலைமகட்குப் பாங்காயினர் கேட்பப் பரத்தை சொல்லியது. அஃதாவது, தலைவி தன்னைப் புறங்கூறினள் எனக்கேட்ட பரத்தை, அது பொறாது அத்தலைமகட்குப் பாங்காயினர் கேட்பத் தலைமகளைப் பழித்தது.

இதன்கண், 'யாம் தலைவனோடே ஆம்பற்றழையை உடுத்துக் கொண்டு வெள்ளமிக்க நீர்த்துறையில் விளையாடச் செல்வேம். யாம் தலைவனோடே விளையாடுதலைத் தலைவி அஞ்சுவாளாயின், தன் கணவனை விளையாட வாராமற் பாதுகாப்பாளாக' என்று கூறுகின்றாள்.

அ0. கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃ தயர்கம் சேறும் தானஃது
அஞ்சுவ துடையள் ஆயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கினையோடுங் காக்கதன் கொழுநன் மார்பே.

—ஔவையார்.

(இ - ள்.) கூந்தல் ஆம்பல் முழு நெறி அடைச்சி - ஆம்பலினுடைய கூந்தல் போன்ற நெறிப்பினையுடைய முழு நெறித் தழையை உடுத்து, பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி - மிக்க நீர் பெருகிவந்துள்ள பெரிய துறையின்கண் ஆடுதலை விரும்பி, யாம் அஃது அயர்கம் சேறும் - யாம் அவ் விளையாட்டைச் செய்வோமாகி ஆண்டுச் செல்வேம், தான் அஃது அஞ்சுவது உடையளாயின் - தலைவி யாம் ஆடும் அச் செயலைப் பழியென்று கொண்டு அஞ்சுவாளாயின், வெம்போர் நுகம்படக் கடக்கும் பல் வேல் எழினி - வெவ்விய போரின்கண் நடுநிலை

யுண்டாக வெல்லும் பலவாகிய வேற்படையை உடைய எழினி என்பானுடைய, முனை ஆன் பெருநிரை போல - போர்முனைக் கட்பட்ட ஆன்களின் பெரிய திரள் பாதுகாக்கப்படுமாறுபோல, கிளையொடு காக்க தன் கொழுநன் மார்பு - தன் பாங்காயினோரோடும் பாதுகாத்துக் கொள்வாளாகத் தன் கணவனுடைய மார்பினை.

விளக்கம்:—ஆம்பல் கூந்தல் முழுநெறி அடைச்சி என மாறுக. கூந்தல் போன்ற நெறிப்பினையுடைய முழுநெறித் தழை என்க. அடைச்சி - உடுத்து. பரத்தையர் ஆம்பற்றழை உடுத்தலை,

> ".....ஆம்பலம்பகை நெறித்தழை
> தித்திக் குறங்கின் மேழ்மா றலைப்ப
> வருமே சேயிழை" (குறுந்: உகஉ)

என்னுமிடத்தும் உணர்க. புதிதாகப் புனல் பெருகி வந்தமை தோன்றப் பெரும்புனல் வந்த இருந்துறை என்றாள். பலரும் சென்று ஆடுந் துறையிலேயே ஆடுவேம் வல்லளாயிற் காக்க என்பாள், இருந்துறை என்றாள் இருந்துறை - பெரிய துறை. விருந்திறை என்றும் பாடம். இதற்கு விருந்தாக வந்த தலைவனுக்கே எனப் பொருள் கூறுக. தான் என்றது ஈண்டுத் தலைவியை. தலைவனுக்கே யாம் எம் இல்லில் ஆதலையே பொருதாள் மேலும் யாம் நீராடவும் செல்வதைப் பொறாதும் வெறுப்பாளன்றே வெறுப்பதுண்டாயிற் காக்கக் கடவள் என்றபடி. தலைவனை யாமே பிணித்துக் கொள்வோமோ என்று தலைவி அஞ்சுவாள் என்பாள், 'அஞ்சுவ துடையளாயின்' என்றாள்.

மறவர்கள் எப்போது போர் வரும் என்று விரும்புவார்கள் ஆதலால், வெம்போர் எனப்பட்டது. கொடிய போர் எனினுமாம். நுகம்-நுகத்தடியிற் பகலாணி. ஈண்டு நுகம் என்றது, அதன்கண் ஆணிக்கு ஒருமடி ஆகுபெயராய் அது பின்னரும் நடுவுநிலைமையைக் குறித்து இருமடியாகுபெயராய் நின்றது. நுகம் படுதலாவது நடுநிலைமை உண்டாதல். அஃதாவது பகைவரை வஞ்சியாது எதிர்நின்று வெல்லல் முதலாய அறத்தை மேற்கோடல். எழினி - அதியமான் அஞ்சி என்னும் வேந்தன். இவன் தன்னாட்டுப் பசுக்களைப் பகைவர் கவரவந்தழி அவர்களை வென்று பசுக்களைப் பாதுகாத்தான் என்னும் வரலாற்றினை,

> "சில்பரிக் குதிரைப் பல்வே லெழினி
> கெடல்அருந் துப்பின் விடுதொழின் முடிமார்
> கனையெரி நடந்த கல்காய் கானத்து
> வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
> தேம்பிழி நறுங்கள் மகிழின் மூன்கடந்து
> வீங்குமென் சுரைய ஏற்றினந் தருஉம்" (அகம்: கo)

என்றும்,

> "நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
> கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்
> ஆகொள் பூசலின்" (அகம்: கஎஉ)

என்றும், வரும் அகப்பாடல்களானும் அறிக.

தலைவன் எம் விருப்பப்படியே ஒழுகுமாறு செய்யவல்லேம்; அவள் அழுக்காறு கொள்ளலாற் பயனில்லை என்றபடியாம்.

பாட்டு - அக : தோழி கூற்று

துறை :—தோழியிற் கூட்டங் கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது. அஃதாவது, தோழியின்பாற் குறை யிரந்து அவள் உதவியால் தலைவியைப் பெற்று அவளுடன் கூடிப் பிரியா நின்ற தலைவனுக்குத் தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'ஐய! உன்னுடைய சொல்லை வாய்மையாகக் கொண்ட என்னுடைய சொல்லைத் தெளிந்து தலைவி நினக்கு உறுதுணையாயினள்; அவள் நீ பிரிந்து போகின்றமையால் இப்பொழுதே தன் புதுநலனிழந்து புலம் புடையள் ஆயினள்; அவள நிலையை நீ நினைந்து அதோ தோன்றுகின்ற எமது சிற்றாரின்கண்ணும் அடிக்கடி வந்து அவளைக் காண்டல் வேண்டும்' என்று கூறுகின்றாள்.

அக. இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறிப்
பசுநனை ஞாழற் பல்சினை ஒருசிறைப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலுந் தோன்றும்
மடல்தாழ் பெண்ணையெம் சிறுநல் லூரே

—வடம வண்ணக்கனார்.

(இ - ள்.) தலைவனே-, இவளே - இத்தலைவிதானும், நின் சொல் கொண்ட என்சொல் தேறி - நீ குறையிரந்த சொற்களை நினக்கிரங்கி மேற்கொண்ட என்னுடைய சொற்களைத் தெளிந்து, பசு நனை ஞாழல் பல்சினை ஒருசிறை - பசிய அரும்புகளையுடைய ஞாழல் மரத்தினது பலவாகிய கொம்புகளின் கீழாகிய ஓரிடத்தே நின்னொடு கூடுதலானே, புதுநலன் இழந்த புலம்பு மார் உடையள் - புதுவதாகப் பெற்ற அழகினையும் நீ பிரித லானே இப்பொழுதே இழந்தமையாலுண்டான தனிமைத் துன் பத்தையும் உடையளாயினள், உள்ளல் வேண்டும் - நீ அவள் தன்மையை மறவாதே நினைத்தல் வேண்டும், உதுக்காண் - உதோ காண்பாயாக, நிலவும் இருளும் போலப் புலவுத் திரைக் கடலும் கானலும் தோன்றும் - நிலாவொளியும் இருளும் ஓரி டத்தே இணைந்து தோன்றுமாறு போலப் புலாஞற்றத்தையும்

அலைகளையுமுடைய கடலும் அதன் கரையும் தோன்ற நிற்கும், மடல்தாழ் பெண்ணை எம் சிறு நல்லூர் - அதுவே மடல்கள் தாழ்ந்துள்ள இளம் பனைகளையுடைய எம்முடைய சிறிய நல்ல ஊராகும்.

விளக்கம்:—இவள் இப்பொழுது நலனிழந்து புலம்புடையளாதற்குக் காரணம் நீயே பிறரில்லை என்பாள், இவள் நின் சொற்கொண்ட என் சொற்றேறிப் புது நலம் இழந்த புலம்பும் உடையள் என்றாள்.

நின்பாற் குறையிரந்தமைக்கு இரங்கி நின் குறை முடிக்கலானேன் என்பாள், நின் சொற்கொண்ட என்றாள். உன்னை யான் நம்பினேன்; என்னை அவள் நம்பினாள்; அவள்புலம்புடையளாயினள்; நீ அவளை நினைந்து அருளல் வேண்டும் என்று வேண்டியவாறும். பசுநனை-பசிய அரும்பு - புதிய அரும்புகள் முகிழ்த்துள்ள ஞாழல் நீழலிலே நீங்கள் கேணமை கொண்டீர்கள். அவ்வரும்பு இனி மலர்ந்து காய்த்துக் கனிந்து பயன்றருமாறு போல, நுங்கேண்மையும் தொடர்ந்து பயன் உடையதாக வேண்டும் என்பாள், பசுநனை ஞாழல் ஒருசிறை என்றாள். தலைவனைப் பெற்றுழித் தலைவிக்கு முன்னினும் அழகு மிக்கமையின் அதனைப் புதுநலன் என்றாள். அவன் பிரிந்தவுடன் அப்புதுநலமாறிப் பசப்பூர நின்றாளாகலின், புதுநலன் இழந்த புலம்பு என்றாள். நின்னைத் தலைவனைப் பெற்றமையால் உண்டாய மகிழ்ச்சி ஒருசார் நிற்பவே இப் பிரிவாற் புலம்புடையளாயினள் என்பாள், புலம்பும் என, உம்மை கொடுத்து ஓதினாள். நீ இப்பொழுதே பிரிந்து வருகின்றாயாகவும் அது பொறாது நலனிழந்து புலம்புடையளாயினள் நின் பிரிவை நீளப் பொறாள் அவ்வியல்பை நீ கருத்திற் கொள்ளல் வேண்டும் என்பாள், உள்ளல் வேண்டும் என்றாள். தெய்ய - அசை.

சேய்த்துமிணறி அணித்துமின்றி ஊர் தோன்றலின் உது என்று சுட்டினாள். உதுகாண் என்புழிச் சுட்டின்மூன் வல்லெழுத்து மிக்கதனை,

> "சுட்டுமுத லிறுதி யுருபிய னிலையும்
> ஒற்றிடை மிகா வல்லெழுத் தியற்கை" (உயிர் மயங்கு: சுக)

என வரும் தொல்காப்பிய விதியின்கண் வல்லெழுத்தியற்கை என்னும் விதப்பானே அமைத்துக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

நிலவு, கடற்கரை மணற்பரப்பிற்கும் இருள், கடலுக்கும் உவமைகள். புலவுத்திரை என்பதை புலவுக்கானல் திரைக்கடல் என எதிர் நிரனிறையாக்கினுமாம். மடல் தாழ் பெண்ணை என்றது, இளம்பனைகளை. இதனை விடலிப்பனை என்று வழங்குப. இப்பனை மடல்கள் அடிகாறும் அடர்ந்திருத்தலின் களவுப் புணர்ச்சிக் குரிய மறைவிடமுண்மை குறிப்பாற் கூறினாளாதலறிக. சிறியதாயினும் பயில்தற்கு இனிய ஊர் என்பாள், நல்லூர் என்றாள்.

> 'ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநாள்
> தம்பதி மறக்கும் எம்பதி'

என்றார் பிறரும். இதில், நல்லூர் ஆதலின், தம்பதியையும் மறக்கும் படியான தென்க. ஆங்கு நீ அடிக்கடி வந்து தலைவியை அருளுக என்பது கருத்தென்க.

பாட்டு - அஉ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டழிந்த தலைமகள் வருவர் என்று வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்து சென்றபொழுது, 'யான் இன்ன பருவத்தே மீண்டு வருவன், அதுகாறும் ஆற்றியிரு' என்று கூறிச் சென்றவன், அப் பருவம் வந்தபின்னரும் வாராமையால், ஆற்றுமை மிக்க தலைவியை, 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' என்று தோழி வற் புறுத்தினளாக ; அவட்குத தலைவி கூறியது.

இதன்கண், 'தோழி ! கேள் முன்னர் நம்முடைய கூந்தலைத் தம் கையாற் கோதி நாம் வருந்தும்போழ்து அழுத கண்ணீரைத் துடைக்கும் அன்புடையராயிருந்த தலைவர், இப்போது அவ் வன்புமாறி நம்மை மறந்தனர் என்றே தோன்றுகின்றது. எற்றுலெனின் ? பொறுத்தற்கரிய இவ் அச்சிரக் காலத்தும் நம்மையுள்ளி வந்திலர் அல்லரோ ?' என்று தலைவி கூறுகின்றாள்.

அஉ. வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்பு
அழாஅல் என்றுநம் அழுதகண் துடைப்பார்
யாரா குவர்கொல் தோழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அச்சிரம் வாரா தோரே.

—கடுவன் மள்ளனார்.

(இ - ள்.) தோழி—, புறம் சேர்பு வார் உறு வணர் கதுப்பு உளரி - முதுகினைச் சார்ந்து நின்று வார்தலுற்றுக் கடை குழன்ற கூந்தலை விரலாற் கோதி, அழாஅல் என்று நம் அழுத கண் துடைப்பார் - அழாதேகொள் என்று கூறி நம்முடைய அழுதகண்ணீரைத் துடையாநிற்பர் அதுபண்டு, சாரல் பெரும் புனக்குறவன் சிறுதினை மறுகால் கொழுங்கொடி அவரை பூக்கும்-மலைச்சாரலின்கண்ணே பெரிய தினைப்புனத்தையுடைய குறவன் சிறிய தினையை அரிந்த மறுகாலிடத்தே கொழுவிய கொடியையுடைய அவரை பூவாநிற்கும், அரும்பனி அச்சிரம் வாராதோர் - பொறுத்தற்கரிய பனியை உடைய அச்சிரக் காலத்தும் மீண்டு வருதலைச் செய்யாதோர், யாராகுவர் - எத் தன்மை யுடையரோ ?

விளக்கம் :—வார்தல் - கோதுதல். வாருறுதல் என்பதற்கு நீட் சியையுடைய என்பாருமுளர். வணர் - குழலுதல். கதுப்பு - கூந்தல். உளருதல் - விரலால் அலைத்துக் கோதுதல். உளர்தல் - வகிர்தல்

என்பாருமூளர். புறம் - முதுகு. சேர்பு - சேர்ந்து. அழாஅல் - அழாதிரு. யாராகுவர் - எத்தன்மையுடையர்? நாம் அழுதபோது அன்புடையராய்ப் புறஞ்சேர்ந்து அழாஅல் எனக் கண்துடைப்பார் இப்போது இவ்அச்சிரக்காலத்தும் நம்மை உளளாது தங்குவர். அவர் அன்புடையார் கொல்லோ அன்பிலார் கொல்லோ எத்தன்மையர்? என்று அறிகின்றிலேன் என்பாள், யாராகுவர் என்றாள். அவர் உடனிருக்குங்கால் பிரிவரோ என்று எண்ணிக் கண்ணீர் விட்டமை ஆற்றாது கண் துடைத்துத் தேற்றுபவர், ஆற்றற்கரிய அச்சிரக் காலத்து என்பதுவள் என்று எண்ணினர் என்பான், அரும்பனி அச்சிரம் வாராதோர் என்றாள் அச்சிரமும் எனற் பாலதாகிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. பெரும்புனம் சிறுதினை என்புழி முரண்தோன்றிச செய்யுள் இன்பம் மிகுதல் உணர்க. மறுகால் என்பது, ஒருமுறை ஒரு கூலத்தை விளைவித்துக் கொண்டு அக்கூலம் அறுத்த பின்னர் மீண்டும் அச்செய்யில் விதைப்பதை என்க. எனவே சிறுதினை மறுகால் என்றது, சிறுதினையை அரிந்து கொண்டு மறுகாலாக விதைத்த அவரை என்றவாறு. அவரை விதைக்கும் பருவமே அச்சிரத் தொடக்கமாக அது படர்ந்து பூக்கும் பருவத்தும் வந்திலர் என்பாள், கொழுங்கொடி அவரைபூக்கும் அச்சிரம் என்றாள். அரும்பனி என்றது அச்சிரக் கொடுமை கூறியவாறு.

அன்புடையரோ இலரோ யாராகியர் என்றவிஞ அவர்மேன் கண்துடைத்த அன்பு, பொய்யன்பு என்பதை வாராமையே காட்டிற்று. அன்பிலர் என்னும் குறிப்புடைத்து. அவர் வருவார் என்று நீ கூறுதல் எற்றுக்கு எனப் புலந்து கூறினள் என்க.

பாட்டு - அஉ : தோழி கூற்று

துறை :—தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திச் செவிலியைத் தோழி வாழ்த்தியது. அஃதாவது, தலைவன் தலைவியை வரைந்துகொள்ள வருகின்ற நற்செய்தியைச் செவிலி தோழிக்குக் கூறினளாக; அச்செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறிச் செவிலியை வாழ்த்தியது.

இதன்கண், மலைநாடன் வரைவொடு வருவன் என்ற செய்தியை அறிவுறுத்திய செவிலி, துறக்க வுலகத்தைப் பெறுவாளாக என வாழ்த்தும் வாயிலாய்த் தோழி தலைவிக்குத் தலைவன் வரைவு மலிந்தமை அறிவுறுத்துகின்றாள்.

அஉ. அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை
தம்மில் தமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வரும் என்றோளே.

—வெண்பூதனார்.

(இ - ள்.) தம் இல் தமது உண்டன்ன - தமக்குரிய இல்லிலிருந்து தாம் ஈட்டிய பொருளைத் தென்புலத்தார் முதலியவர்க்குப் பகுத்துண்ணைக் கொடுத்துத் தமக்குரிய கூற்றை உண்டாற்போன்ற இன்பமுடையதும், சினை தொறும் தீம்பழந் தூங்கும் பலவின் ஒங்குமலை நாடனை - கிளைகள்தோறும் இனிய பழங்கள் தூங்காநின்ற பலாமரங்களையுடைய உயர்ந்த மலைகளையுடையதுமாகிய நாட்டையுடைய தலைவனை, வருமென்றோள் அன்னை - வரைதல் முயற்சியோடே வருவான் என்று எனக்கு அறிவித்தவளாகிய அன்னை, அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆக - பெறுதற்கரிய அமிழ்தமே உண்ணும் உணவாக, பெரும் பெயர் உலகம் பெறீஇயர் - பெரும புகழையுடைய மேனிலையுலகம் பெறுவாளாக.

விளக்கம் :—தம் இல் - தமக்குரியவீடு. தமது - தாம் அற நெறியால் ஈட்டிய உடைமை. இல்வாழ்வோர் தாம்ஈட்டிய பொருளின்கண் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐந்திடத்திற்கும் பகுத்தவற்றுள் தமக்குரிய கூறு ஒன்றேயாகலான், தமதுண்டன்ன என்ற குறிப்பால் ஏனையோரை ஊட்டித் தங்கூற்றை மட்டுமே உண்டாற் போன்ற எனக் கூறினும். இங்ஙனங் கூறுக்கால் தம்மில் இருந்து தமதுண்டல் இன்பமாகாமை யுணர்க. இதனைப் பாடிய நல்லிசைப்புலவர்,

> “தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்,
> அம்மா அரிவை முயக்கு”

என்னும் அருமைத் திருக்குறளை நினைந்தே பாடுகின்றார் என்பதைச் சொற்பொருள் ஒற்றுமையானே உணர்க தம்மில் தமதுண்டன்ன நாடன்; தீம்பழந்தூங்கும் ஒங்குமலை நாடன் எனத் தனித்தனிக் கூட்டித் தம்மில் இருந்து தமதுண்டன்ன இன்பமுடைய நாடன் என்க. இவ்வின்பத்தைத் தீம்பழத்திற் கேற்றுவாருமுளர். தம்மில் இருந்து தமதுண்டன்ன நாடன் என்றது, இனித் தலைவன் நின்னை வரைந்துகொண்டு தன் இல்லிற் பிரிவற விருந்து நுகர்வான் என்னும் குறிப்பிற்று. சினைதொறும் தீம்பழந்தூங்கும் என்றது, வரைவு மலிந்து பயனுறுங்காலம் வந்தமை குறித்தது என்க. என்னை? தீம்பழம் இனிப் பறித்துண்ணும் தகுதி பெற்றுற்போன்று, களவுமணம், பலரறிமணமாம் பருவம் பெற்றது என்னும் கருத்திற் கூறுகின்றாளாகலின் என்க. அரும்பெறல் அமிழ்தம் - நல்வினை மிகவும் செய்தார்க்கன்றி ஏனையோர் பெறுதற்கரிய அமிழ்தம் என்க. செவிலி அறத்தொடு நிற்றல் முதலிய செயல்களால் வரைவு மலிதற்கு ஏதுவாகிய அறமுடைமையானும் இந்நற்செய்தியை அறிவித்து நம்மை மகிழ்வித்த அறமுடைமையானும் அறவோரே பெறற்குரிய அமிழ்தத்தையும் துறக்கத்தையும் பெறுக என வாழ்த்தினாள். நீ உனக்குரிய நாட்டை எய்தித் தலைவனை நுகர்ந்து இன்புறுவதுபோல அவளும் சுவர்க்கம் எய்தி அமிழ்தம் நுகர்க என்பாள் அமிழ்தம் ஆர்பதமாகப் பெரும்பெயர் உலகம் பெறுக என வாழ்த்தினாள்.

பாட்டு - அசை : செவிலி கூற்று

துறை :—மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது. அஃதாவது, தலைவி தமரிற் பிரிந்து தலைவனோடு சென்றுவிட்டாளாக, அதனை அறிந்த செவிலி இரங்கிக் கூறியது.

இதன்கண், செவிலி, "அந்தோ யான் நெருநல் இரவு அவனை என் மார்போடு அணைக்க முயலுங்கால் 'என் உடல் வியர்த்துளது' என்று கூறி அச்செயற்கு உடன்படாதொழிந்தாள். அவள் அங்ஙனம் கூறியது வாய்மை என்று அப்போது நினைந்து வாளாவிருந்துவிட்டேன். அவள் அங்ஙனம் கூறியது வெறுப்பினால் என்று இப்பொழுதுணர்கின்றேன். அவள் ஆம்பல் மலரினும் தண்ணியள் ஆவளே ! பாலைநிலத்து எங்ஙனம் நடப்பாள் !" என்று தனக்குள்ளே வருந்திக் கூறுகின்றாள்.

அசை. பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழல்தொடி ஆஅய் மழைதவழ் போதியில்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே.

—மோசிகீரனார்.

(இ - ள்.) கழல் தொடி ஆஅய் மழைதவழ் பொதியில் - உழலுந் தொடியினையுடைய ஆய்வள்ளலது முகில்கள் தவழாநின்ற பொதியமலை யிடத்தே உண்டான, வேங்கையும் காந்தளும் நாறி - வேங்கைப்பூ மணமும் காந்தட்பூமணமும் கமழ்ந்து, ஆம்பல் மலரினும் தண்ணியள் - ஆம்பற்பூவினுங்காட்டில் குளிர்ச்சியையுடைய மகள், யான் முயங்கப் பெயர்த்தனென் - என்னோடு ஒருபாயலிற் புறங்காட்டிக் கிடந்தாளைத் திரும்புதற் பொருட்டுப் பெயர்த்தேனாக, வியர்த்தனென் என்றனள் - அதற் குடம்படாளாய் யான் உடல் வெயர்த்துள்ளேன் என்றாள், இனி அறிந்தேன் அது தனியாகுதல் - அப்பொழுது அது வாய்மை என்று கொண்டு வாளாயிருந்த யான் இப்பொழுது அம்மறுப்பின் காரணம் வெறுப்பாதலை அறிகின்றேன் ; அறிந்தும் என் செய்வேன் !

விளக்கம் :—கழல் தொடி - உழலும்படி இட்ட தோளணி. இனி உம்மைத் தொகையாக்கி, வீரக்கழலையும், வீரவலயத்தையும் உடைய ஆய் எனினுமாம். ஆய் எழுவள்ளலுள் ஒருவன். வண்மையும் அறமும் உடையன் ஆகலின், அவன் மலையில் முகில் தவழ்வதாயிற்றென்க. பொதியில் - தமிழ்நாட்டுத் தென்றிசைக்கண்ணுள்ள தொருமலை. வேங்கையும் காந்தளும் குறிஞ்சி நிலப்பூவாகலின், தலைவி இடையறுதல்

சூடுதலில் அந்நறுநாற்றமே மிக்குக் கமழும் இயல்புடையாள் என்க. எப்போதும் தான் தலைவியை முயங்கிமுயங்கிப் பயின்றமையால் அவளுடைய திருமேனியின் மணமும் ஊறும் கூறினாள். தண்ணென்னும் ஊறுடைமையே இயல்பாகவுடையவன் வெயர்த்தனென் என்ற பொழுதே அதற்குக் காரணம் பிறிதாதல் வேண்டும் என ஆராயற்குரிய யான் வாளாவிருந்து கெட்டேன் என்பாள், தண்ணியள் வெயர்த்தெனென் என்றனள் என்றாள். அப்பொழுதே அறியின் அறத்தொடு நிற்றல் முதலியனசெய்து வரைவிற்கு வழிகண்டிருப்பேன்; காணுதொழிந்தேன் என்பாள், இனி அறிந்தேன் என இரங்கினாள். இனி என்பது இப்போது என்னும் பொருட்டு.

தனி - ஈண்டு வெறுப்பு. தலைவனே யணைந்த மார்பு தாயை அணைய விரும்பாமை என்க. இதனைப் பயில்வு என்னும் உணர்ச்சி என்பர் நச்சினார்க்கினியர். அவர் கூறுவதாவது, "இனிப் பயில்வாவது செவிலி முலையிடத்துத் துயில் வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல்" என்பதாம்.

ஆம்பல் மலரினும் தண்ணியள் அருஞ்சுரத்து வெவ்வழிக்கண் என்படுவளோ! என்றிரங்கியவாறு.

தலைவன் சூட்டிய மலர்கள் மணந்து அவ்வின்பத்தால் தண்ணியள் ஆகியும் வியர்த்தேன் என்றாள், என்பாருமுளர். செவிலியொடு பாயல் கொண்டுழிப் பிரிவுண்மையால் அப்போது தண்ணியள் என்பது பொருந்தாதென்க.

பாட்டு - அரு: தோழி கூற்று

துறை:—வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயில் மறுத்தது. அஃதாவது, தலைவன் பரத்தமை ஏதுவாகத் தலைவி ஊடியிருந்தாளாக, அவ்வூடல் தீர்க்கும் பொருட்டுத் தலைவன் பாணனைத் தலைவியின்பால் தூதுவிட்டான். தூதாகவந்து தலைவன்பால் ஏதமின்மை காட்டிய பாணனுகுத் தோழி தலைவனுடைய ஏதங்காட்டிக் கூறியது.

இதன்கண், பாணனுடைய வாய்ச் சொல்லாற் காணுங்கால், தலைவன் மிகச் சிறந்த அன்புடையனைக் காணப்படுகின்றான். அத்தலைவனுடைய செயலை ஆராயுங்கால் அவன்பால் அன்பின்மையே காணப்படுகின்றது" என்று தோழி கூறுகின்றாள்.

அரு. யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழையினர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாரு வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

—வடம வண்ணக்கன் தாமோதரனர்.

(இ - ள்.) உள் ஊர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்-ஊரின் அகத்தே வாழும் இயல்புடைய ஊர்க் குருவியின் துள்ளிய நடையையுடைய ஆண்பறவை, சூல் முதிர் பேடைக்கு ஈன் இல் இழைஇயர்-கருப்பம முதிர்ந்த தன்பேடை கருவுயிர்த் தற்குக் கூடியற்றும் பொருட்டு, தேம் பொதிக் கொண்ட தீங் கழைக் கரும்பின் - தேன் பொதிதலையுடைய இனிய கழை பாகிய கரும்பினது, நாறு வெண்பூக் கொழுதும் - மணமற்ற வெள்ளிய பூவை அலகாற் கோதாநின்ற, யாணர் ஊரன் பாணன் வாயே - புது வருவாயையுடைய ஊருக்குத் தலைவன் பாணனின் சொல் அளவானே, யாரினும் இனியன் பேரன் பினன் - எல்லாரினும் மிகக இனிமையுடையானும் பெரிய அன்பு உடையனும் ஆகின்றான்.

விளக்கம் :—யாணரூரன் தன்செயலளவானே தீயவனும் அன்பற்ற வனுமே ஆவன் என்று பழித்தபடியாம்

காட்டின்கண் வாழும் குருவியின் வேறாய் ஊரின்கண் வாழும் இயல்புடைமையின் ஊர்க்குருவி என்பது பெயராயிற்று. உள்ளூர்த் தரீஇ என்றது அவ்வேதப் பெயர்க்கேற்ற அடை கூட்டி ஓதியவாறு. தரீஇ - குருவி. ஊர்க்குருவி நடக்கும்போது அடியிட்டு நடவாது துள்ளித் துள்ளி நடக்கும் இயல்புடையதாகலின், 'துள்ளு நடைச் சேவல்' என்றார். ஈன் இல் - முட்டை யிடுதற்குரிய கூடு. இழைஇயர்-செய்யும் பொருட்டு. ஊர்க்குருவிச்சேவல் சூன்முதிர் பெடைக்குக் கூடியற்றும் அன்புடையனவாகும் இயல்பும் தலைவன்பால் இல்லை. அவன் தன் தலைவியை நீத்துப் பரத்தமையுடையன் ஆயினன் என்பது, தெறிப்பு.

இனித் தேம் பொதியும் இனிமையுமுடைய கரும்பின்கண் அவை பிற்றைக் கொள்ளாது சேவல் ஊற்றின்பம் ஒன்றே கருதி மணமற்ற வெண்பூவைக் கோதினாற் போன்று, அறமும் இன்பமு மூடைய தலைவி பின் பாலிராது இன்பம் ஒன்றே கருதிப் பரத்தமை யுடையனாயினன் என்றிகழ்ந்த குறிப்பும் கொள்க. தேம் - தேன். ஈண்டுக் கருப்பஞ்சாறென்க. கழை - கரும்பில் ஒருவகை. கழைக்கரும்பு இருபெயர் ஒட்டு கழை - கோலுமாம்.

கரும்பின் பூ, நாறுமை இயல்பு. கொழுதும் - அலகால் கோதும். பாணர் - புதுவருவாய். ஊரன் - மருதநிலத் தலைவன். வாய்-சொல். ஆகுபெயர்.

இது பாணன் கூற்றால் வெகுண்டு படர்க்கையில் அவன் கேட்பக் கூறியது.

பாட்டு - அகூ : தலைவி கூற்று

துறை :—ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்துறைதலைப் பொறாது பெரிதும் வருந்திய தலைவியின் நிலைமை கண்டு வருந்திய

தோழிக்குத் தலைவி தன் ஆற்றாமைக் காரணம் தோன்ற உரைத்தது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'பிரிவுத் துன்பத் தாலே பெரிதும் வருந்தும் இக் கூதிர்ப்பருவத்து இடையிரவின் கண் என்னென்று உசாவுவாரும் இன்றி ஆன் மணிக்குரலும் கேட்க நேரின், யாரே ஆற்றவல்லார்' எனக் கூறுகின்றாள்.

அ௯. சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறையரு நோயோடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குநர் உளர்கொல் உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆனுளம் புலம்புதொ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

—வெண்கொற்றனார்.

(இ-ள்.) சிறை பனி உடைந்த சே அரி மழைக்கண்-ஆற்றி யிருத்தல் கருதி என்னுல் தடுத்து நிறுத்தப்பட்ட துளிகள் உடைந்துதிர்கின்ற சிவந்த வரிகளையுடைய மழை போன்ற கண்கள், பொறை அரு நோயொடு - பொறுத்தற்கரிய காம நோயோடே, கலங்கிப் புலம்பலை - கலக்கமடைந்து தனிமை கூர்ந்து வருந்துதலை, சிறந்து ஊதை உறை தூற்றும் கூதிர் யாமத்து - வாடைக காற்று மிகுந்து மழைத்துளியைத் தூவா நின்ற இக் கூதிர் காலத்து இடையிரவின்கண், புலம்பு உலம்பு தொறும் ஆன் நாநவில் கொடுமணி நல்கூர் குரலே உளம்பும்-ஈக்கள ஒலிக்குந் தோறும் அவற்றைக் கடியும் பொருட்டுத் தலையசையாநின்ற ஆன்களின் கழுத்திலணிந்த நாவாலே நவிலப் பட்ட கொடிய மணியினது வறுங்குரல் ஒன்றே ஒலிப்பதன்றி, பிறரும் கேட்குநர் உளர்கொல் - என்னுற்றனையோ என்று உசாவுவார் பிறா யாரும் உளரோ.

விளக்கம்:—கூதிர்யாமத்துக் கண்கலங்கிப் புலம்பலைக் கண்டு நீ என்னுற்றனை எனக் கேட்குநர் குரலை யான் பெற்றிலேன். அப்போது யான் கேட்பது 'கொடுமணி நல்கூர் குரல் ஒன்றுமே என்று வருந் தினள் என்க.

என் நோயை மிகுவிக்கும் குரலேயன்றிக் தணிப்பார் குரலைக் கேட்டிலேன் என்றபடி. மணியின் குரல், அது பொழுது கேட்கப் படினும் அது பொருளற்ற வறுங்குரலாய் என்துன்பத்தை மிகச்செய் யும் என்பாள், 'கொடுமணி நல்கூர் குரல் உளம்பும்' என்றாள். உளம் புதல் - அசைதல். ஈண்டு ஒலித்தல் என்னும் பொருட்டு. சிறைபனி-தடைசெய்யப்பட்ட கண்ணீர்த்துளி. சிறைபனி என்பதை வினைத் தொகை என்பாருமுளர். சேயரி - சிவந்தகோடு. இடையுறுது துளித்

தலின் மழை போலும் கண் என்க. குளிர்ந்த கண்ணுமாம். கலங்கிப் புலம்பலே எனமாறுக. ஆன்மணியின் ஒலி காமநோய்க்கு உத்தீபன ஏது என்ப; இதனை, "செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோர் அறிவர்கொல் தோழி.....பல்லான் றொழுவத்து ஒருமணிக் குரலே" (க௦) என்றும், திரிமருப்பெருமை இருணிற மையான், வருபிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி, புலம்புகொள் யாமத்து இயங்குதோ றிசைக்கும், இது பொழுதாகவும் வாரார் கொல்லோ?," (உக) என்றும் இந்நூலிற் பிறண்டும் வருதலான் உணர்க. பிறரும் கேட்குநர் உளர் கொல் என்றது, கேட்டற்குரிய தலைவர் ஈண்டிலராதலோடு நீயும் துயின்றனை எனத் தோழியையும் சுட்டிப் புலந்தபடியாம். நுளம்பு-ஒரு வகை மாட்டு ஈ.

பாட்டு - அள : தலைவி கூற்று

துறை :—தலைமகள் தெய்வத்திற்குப் பராயது அஃதாவது, தலைவன் நின்னைப் பிரியேன் எனத் தெய்வங்காட்டிச் சூளுற்றவன், பிரிந்து காலம் நீட்டித்தமையாற் சூளுறவில் தப்பிணைகை, சூளுறவு தபபியோர் தெய்வத்தால் ஒறுக்கப்படுவர் என்பவாதலான், தலைவி தலைவனுக்குத் தீங்கு நேராமை கருதித் தெய்வத்தை வாழ்த்தியது.

இதன்கண், தலைவி. 'கடம்பின்கண் தங்கும் கடவுள் சூள் தப்பிய கொடியோரை ஒறுக்கும் என்று கூறுவர். என் தலைவரோ சூளில் தப்பினர் அல்லர் அவர் மிகவும் நல்லர். என் நுதல் பசந்தமைக்கும் தோள் மெலிந்தமைக்கும் என் மனநிலையே யன்றி அவர் காரணராகார்' என்று கூறித் தெய்வம் வாழ்த்துகின்றாள்.

அள. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடியர் அல்லரேம் குன்றுகெழு நாடர்
பசைஇய பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே.

—கபிலர்.

(இ - ன்.) மன்றம் மராஅத்த பேஎம் முதிர் கடவுள்-அம்பலத்தின்கண் உள்ள கடம்பிலுறைகின்ற பிறர்க்கு அச்சம் செய்தலிலே முதிர்ந்த முருகக்கடவுள், கொடியோர்த் தெறூஉம் என்ப - கொடுமை செய்தோரை ஒறுக்கும் என்று' அறிஞர் தோர் கூறுவர், எம் குன்று கெழு நாடர் - எம்முடைய மலைகள் பொருந்திய நாட்டையுடைய தலைவர், யாவதும் கொடியர் அல்லர்-சிறிதும் கொடுமைப்பாடுடையர் அல்லர், பின் நின்பால் இவ்

வேற்றுமை எற்றுளை தென்னின், துதல் பசைஇய பசந்தன்று-
எம் நெற்றி அவர் என்னை விழைதல் வேண்டிப் பசந்து காட்டுவ
தாயிற்று, ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோள்-அவர்
உள்ளம் எம்பால் ஞெகிழ்தலே வேண்டி ஞெகிழ்ந்து காட்டுவ
தாயிற்று எம்முடைய பெரிய மெத்தென்ற தோள்.

விளக்கம்:—மன்றம் - அம்பலம்; பொதுவிடம். ஊரம்பலத்துள்ள மராத்தில் உறையும் கடவுள் என்க. மரா ம் - செங்கடம்பு. செங் கடம்புறை கடவுள் என்றது, முருகக் கடவுளே. கொடியோர்த் தெறூஉம் என, அக்கடவுளின் அளியும் தெறலுமாகிய இரண்டு பண்புகளில் தெறலே கூறுதற் கேற்பப் 'பேஎம் முதிர்கடவுள்' என்றாள். பேஎம்-அச்சம். கொடியோரை அச்சுறுத்தற்கண் தொன்று தொட்டு முதிர்ந்த தெய்வம் என்க. எனவே அதன் தெறலினின்று யார்க்கும் தப்பவி யலாதென்றவாறு. கடம்பின்கண் முருகன் உறைதலே "நல்லரை மராஅத்த கடவுள்" (மலைபடு - நஎசு) என்பதனானும் முருகனைக் கடம்பன் என்பதனானும் உணர்க. கடவுள் கொடியோரைத் தெறல் போன்று நல்லோரை அருளுதலும் உண்மையின், தெறற் குரியர் அல்லர் அருளுதற்குரியரே என் தலைவர் என்பாள் கொடியோரல்லர் நாடர் என்றாள். ஆயின், நினக்கு இவ்வேறுபாடு எற்றாலாய தென்னும் வினாவிற்கு இரு வினைகூறித் தெளிப்பாள், அவர் எக்காலமும் பிரியா திருக்கத் தகுந்த விழைவுடையராதற் பொருட்டு எதிரதாகக் காத்தற்கு நுதல், சிறிது பிரிந்த துணையானே பசந்தும், தோள், சிறிது பிரிந்த துணையானே ஞெகிழ்ந்தும், அவர் நெடும் பிரிவினைத் தாம் ஆற்ற மாட் டாமையை அறிவித்தன. அத்துணையே என்பாள், 'பசைஇய பசந் தன்று நுதல்; ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தோள்' என்றாள். பசைஇய-விழைதற் பொருட்டு. ஞெகிழ - நெகிழ்தற் பொருட்டு. பசந்தன்று-பசந்தது. ஞெகிழ்ந்தன்று - நெகிழ்ந்தது.

மகளிர் சிறுபிரிவையும் பொறாது பசக்கும் இயல்பினர் என்பதை.

"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு" (குறள்: கஅஅ.)

எனவரும் திருக்குறளானும் உணர்க. எங்கணவர் கொடியரல்லர் அவரை அருளுக எனப் பராயவாறு.

பாட்டு - அஅ : தோழி கூற்று

துறை:—இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலை மகட்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் சிறைப்புறத் தானாக பகற்குறி மறுத்துத் தான் இரவுக்குறி நேர்வாள்போலத் தலைவிக்கு தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'இனித் தலைவர் துன்னருஞ் சாரலில் இடையாமத்தும் வந்து நின்னைக் காண்பர். அதனால் நமக்குண்டாம் பழிக்கு யாம் நாணுதிருப்பேமாக' என்று கூறுகின்றாள்.

அஅ. ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்
சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தோல்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வருஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

—மதுரைக் கதக்கண்ணனார்.

(இ - ள்.) ஒலிவெள் அருவி ஓங்குமலைநாடன் - முழங்கா நின்ற வெள்ளிய அருவியை உடைய உயர்ந்த மலைநாட்டை யுடைய தலைவன், சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித் தோல் முரண்சோரும் துன்னருஞ்சாரல் - சிறிய கண்ணையுடைய பெரிய களிற்றியானை வலியுடைய புலியோடு போர்செய்து தனது பழைய வலி கெடுதற்கு இடனாகிய கிட்டுதற்கரிய மலைச் சாரலின் வழியே, நடுநாள் வருதலும வருஉம் - இரவின் இடை யாமத்தேயும் வருவன் ஆதலால், தோழி நாம் வடு நாணலம் - தோழி நாம் அத தகாச்செயற்கு உடன்படுதலானே நமக்குண் டாம் பழிக்கு நாணுதிருக்கக் கடவேம்.

விளக்கம் :—எனவே இரவுக்குறிக்கண் வருதல் பெரும்பழி யுடைத்து. ஆகலான், வாரற்க எனக் குறிப்பானுணர்த்தி மறுத்த வாறும், சொல்லளவானே உடம்படுவாள் போலுதலும் உணர்க. இங் ஙனம் கூற வறியாது பிறரெல்லாம் தத்தமக்கு வேண்டியவாறு துறை யொடு பொருந்தாமல் கூறுவாராயினர்.

வெள்ளருவி ஒலிக்கும் மலைநாடன் என்றது, அறிவிலார் புறங் கூறுமாறு ஒழுகும் தலைவன் என்னும் குறிப்பிற்று. 'சிறுகண் பெருங் களிறு' என்புழிச செய்யுளின்பம் உணர்க.

பெருங்களிறாயினும் தன் ஆற்றற்கண் அமையாத வயப்புலியோடு பொருது பழைய வலியைக் கெடுத்துக்கொள்ளுமாறு போலப் பெருந் தகையாயினும் தன் பெருந்தகைமைக் கேலாத இரவுக்குறி விருமபி இன்னுமை செய்துகொள்வானுயினன் என, உளீரூறை காண்க. களிறு வயப்புலியோடு பொருதும் சாரல் என்றது, வருதற்கொண்ணாத வழி என்றற்குக் குறிப்பேதுவாதல் அறிக. துன்னற் கரிய அவ்வழியே வருங்கால் தலைவனுக்கு விலங்கு முதலியவற்றானே ஏதம் உண்டாயின் அப்பொழுதுண்டாகும் பழி பெரிதென்பாள் வடு என்றாள். தலைவன் ஙனம் பழிபடுமாற்றானே ஒழுக யாம் உடம்படுதல் நாணுத்தக யுடைத்தாயினும், கண்ணேட்டத்தால் யாம் அந் நாணத்தை மேற் கோடற் பாலம் அல்லேம் ஆயினேம் என்று பரிவாள், 'தோழி நாம் வடுநாணலம்' என்றாள். பிறராயின் இவ்வடுவிற்கு நாணுகிறார் என் பான், நாமே எனப் பிரிநிலை ஏகாரத்தால் கூறினாள். 'வருதலும் வருஉம்', என்றது வருதலைச் செய்யும் என்றவாறு.

பாட்டு - அகூ : தோழி கூற்று

துறை :—(க) தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது. அஃதாவது, ஊரிலுள்ளோர் அலர் தூற்றுவதனைத் தலைவனுக்கு அறிவிக்கக் கருதிய தோழி, அவன சிறைபுறத்தானாகியபொழுது அவன் வருகையை அறியாதாள் போன்று அவன் கேட்கும்படி தனக் குதானே சொல்லிக்கொண்டது.

(உ) தலைமகற்குப் பாங்காயினர் கேட்பச்சொல்லி வாயின் மறுத்ததுமாம். அஃதாவது தான் பரத்தையிற் பிரிந்தமை யால் ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்க்கச்சென்ற தலைமக னுடைய தூதர் கேட்குமபடி கூறி வாயில் மறுத்ததுமாம்.

இதன்கண், தலைவன் சிறைப்புறத்து வந்தானை அறியாதாள் போலத தோழி 'மெல்லியற் குறுமகள் தலைவன் புகழை வள் ளைப் பாட்டிற் பாடினள். பாடினுல் இவ்வூரார்க்கு அழிவுவந்தது ஒன்றுமில்லையே! அங்ஙனமாகவும் யாஞகணும் அலர் தூற்று கின்றனர் இவ்வூரார் அறிவில்லாதார்' என்று கூறி ஊரலர் தூற்றலைத் தலைவனுக்கு அறிவுறுததுகின்றுள்.

அகூ. பாவடி உரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவ தெனன்கோலிப் பேதை யூர்க்கே
பெரும்பூண் பொறையன் பேஎழு திர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை அன்னஇம்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

—பரணர்.

(இ-ள்.) பெரும்பூண் பொறையன் பேஎம் முதிர் கொல்லி-பெரிய அணிகலத்தையுடைய சேரனுக்குரிய அச்சம் மிகுதற் குக் காரணமான கொல்லிமலைக்கண் உறையும், கருங்கண் தெய் வம் குடவரை எழுதிய - கரிய கண்ணையுடைய தெய்வம் அம் மலையின் மேற்குப் பக்கத்தே வரைந்த, நல் இயல் பாவை அன்ன இம்மெல் இயல் குறுமகள் பாடினள் குறின் - நன்றுகிய இயலை யுடைய பாவையை ஒத்த இம்மென்மை மிக்க இயல்பையுடைய தலைவி தலைவன் பெயரேத்திப்பாடினளாய் இடிப்பாளாயின், இப்பேதை ஊர்க்கு அழிவது எவன் கொல் - இவ்வறிவில்லாத ஊரினாக்கு அதனுல் உண்டான அழிவுதான் யாது; ஒன்று மில்லையே அங்ஙனமாகவும், பாவடி உரல பகுவாய் வள்ளை - இத்

தலைவி பாடிய பரந்த அடியினையுடைய உரலிடத்தனவாகிய பகுத்து வாயாற்பாடும் உலக்கைப் பாட்டைக் குறித்து, ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப - அயலோராகிய அறிவிலிகள் குறை கூறுதலையும் செய்யாநின்றனர்.

விளக்கம்:—பொறையன் - சேரமன்னன். ஒரு சேரமன்னன் ஏழு மன்னரை ஒருசேர வென்று அவர்தம் முடிக்கலனுல் அணிகலன் இயற்றி அணிந்து கொண்டான் என்ப. இப்புகழுடைமை பற்றிப் பெரும்பூண் பொறையன் என்றார். கொல்லித் தெய்வம், தன்னைக் கண்டோர் உயிர் செகுக்குமாதலின், 'பேஎம் முதிர் தெய்வம்' என்றாள். கருங்கண் என்றது கொடுமை செய்யும் கண் என்றவாறு. "கருங்கை வினைஞர்" (பெரும்பாண்: உஉ.) என்புழிக் கருமை - வன்மையின் மேற்றாதல் அறிக. குடவரை - மேற்குப் பக்கம். கொல்லித்தெய்வம் அம்மலையின் மேற்குப்பக்கத்தே வரைந்த பாவை என்க. கொல்லி மலைக்கண் தெய்வத்தால் வரையப்பட்ட பாவை உண்டென்பதைப் "பொறையன் உரைசால் உயர்வரைக் கொல்லிக், குடவயின்.....நெடு வரைத் தெய்வம் எழுதிய, வினைமாண் பாவை" (நற்றிணை: கஅஇ) என்றும் "பயங்கெழு பலவின், கொல்லிக் குடவரைப் பூதம் புணர்த்த, புதியல் பாவை," (நற்றிணை: ககஉ.) என்றும் பிறசான்றோர் கூறு மாற்றானுமுணர்க. ஏதின்மாக்கள் - அயலோர். பிறர்பழி தூற்று பவர் ஆகலின், மாக்கள் என்றாள். இப்பேதையூர்க்கு அதனுல் அழி வது யாதுளது? என்க.

தலைவனுடு தலைவிக்குளதாய நட்பினை இவ்வூரார் அறிந்து யாண் டும் அலர் தூற்றுகின்றனர். ஆதலால் இனி வரைந்துகோடலே செயற்பாலது என்று உணர்த்தியவாறும். இத்துறை களவுக்காலத் தது. இனி இரண்டாவதாகக் கூறப்பட்ட துறை கற்புக்காலத்தது. அதற்குப் பரத்தையர்க்குப் பாங்காயினர் கேட்பத் தலைவன் பரத்தமை பற்றித் தலைவி வள்ளைப்பாட்டில் இழித்துப்பாடினுளாக, அது பொறுத பரத்தையர் பழி தூற்றுகின்றனர். அறிவில்லா அவர்கட்குத் தலைவி செயலாலெய்திய அழிவு யாது என்பது கருத்தாகக் கொள்க.

பாட்டு - கூ: தோழி கூற்று

துறை:—வரைவு கீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது. அஃதாவது, தலைவன் களவின்பத்தையே விரும்புவானுய் வரைந்து கொள்ளு தலிற் கருத்தின்றி ஒழுகுதலைப் பொறுத தலைவிக்குத் தலைவன் சிறைப்புறத்தே வந்தமை கண்டு அவன் கேட்கும்படி தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அன்னாய்! தலைவ னுடைய நட்பு உனக்குப் பெரிதும வருத்தத்தைத் விளைவித்து உன் மென்றோளை மெலிவித்தும் நினக்கு அமைதியே தருவ தாகின்றது. இது விடத்தற்குரித்தே,' என்கின்றாள்.

கூ0. எற்றே வாழி தோழி முற்றுபு
கறிவளர் அடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதோட இழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி அருவி உண்துறைத் தருஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்தோள் சாய்த்துஞ் சால்பின் றன்றே.

—மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதனர்.

(இ - ள்.) தோழி-, முற்றுபு கறிவளர் அடுக்கத்து இரவின் முழங்கிய மங்குல் மாமழை வீழ்ந்தென - சூல் முதிர்ந்து மிளகுக்கொடி வளராநின்ற மலைப்பக்கத்தே இராக்காலத்தே முழக்கத்தைச் செய்த முகிலினது பெரிய மழை கால் கொண்டதாக, பொங்கு மயிர்க் கலை தோட இழுக்கிய பூநாறு பலவுக் கனி - குளிராலே சிலிர்த்த மயிரையுடைய ஆண்குரங்கு தொட்டதனையாலே வீழ்ந்த பூப்போலத் தூரியவிடத்தும் சென்று கமழும் பலாக்கனியினை, வரையிழி அருவி உண் துறை தருஉம் - மலையினின்றும் வீழ்கின்ற அருவி கொணர்ந்து நீருண்கின்ற துறையிடத்தே தருதலைச் செய்யும், குன்றநாடன் கேண்மை - குறிஞ்சிநிலத் தலைவனுடைய நட்பு, மென்தோள் சாய்த்தும் - தினது மெல்லிய தோளினை மெலிவித்தும், சால்பு ஈன்றன்று - தின் உள்ளத்தே அமைதியை உண்டாக்குவதொன்றாயிருந்தது, எற்றே - அஃதெத்தன்மைத்தோ ?

விளக்கம் :—முற்றுபு - முற்றி, சூன் முதிர்ந்து என்க. இனி வளர்ந்துகொண்டு எனினுமாம். கறி - மிளகுக் கொடி. அடுக்கம் - பக்கமலை. மழை வீழ்தலாவது, மழை கால்கொண்டு பெய்தல். குளிராலே மயிர் சிலிர்த்த குரங்கென்பார், பொங்கு மயிர்க்கலை என்றார். பொங்குதல் - ஈண்டுச் சிலிர்த்தல். கலை - ஆண்குரங்கு. ஆண் குரங்கு சுளையைத் தோண்டியுண்ணக் கருதித் தொட்டதனையாலே வீழ்ந்த பலாக்கனி என்க. இதனால் அக்கனியினது முதிர்வு தெளித்துக் கூறப்பட்டது.

பூவாது காய்க்கும் இயல்புடையதாயிருந்தும் பலா அப்பூமணத்தைத் தன் கனியாலே செய்யும் என்பார், 'பூநாறு பலவுக்கனி' என்றார். பூப்போலச் சேய்மையினும் மணக்கும் கனி என்க.

இரவிற் கலை தொட வீழ்ந்த கனியை அருவி பலரும் நீராடும் துறைக்கண் தருஉம் என்றது, நின்னைக் களவில் தலைவன் மணந்த செய்தியை ஊரவர் அறிந்து அலர் தூற்று நின்றனர் என்னும் உள்ளுறைக்கு உவமமாகக் கொள்க. இதனை நச்சினார்க்கினியர் தலைவி கூற்றாகக் கொண்டு "கலை தீண்ட வழுக்கி வீழ்ந்த பழத்தை அருவி பின்னும் பயன் படுத்து நாடன் என்றதனானே, அவரால் நஞ்சுற்றத்திற்

பிரிந்தேமாயினும் அவன் நம்மை வரைந்து கொண்டு இல்லறஞ் செய்து பயன் படுத்துவன் என்பதாம்" (தொல்-பொருள் : கூ) என்று கூறியுள்ளார். அகத்தே தோன்றும் குணத்திற் கேற்பவே புறத்தே மெய்ப்பாடு தோன்றுதல் உலகியல்பாகவும், நின் அகத்தே தோன்றும் அமைதியை மூரணிய மெலிவினை நின் தோள்கள் உடையவாதல் வியப்பென்பாள், 'எற்றே!' என்றாள். இவ்விபரீதம் எத்தன்மைததோ என்றவாறு. எனவே தலைவி ஆற்றற்கரிய நோயுடையளாயிருந்தும் குலப்பிறப்புண்மையால் ஒருவாறு ஆற்றியிருக்கின்றாள். விரைவில் வரைந்துகோடல் வேண்டும் எனத் தலைவற் கறிவுறுத்தவாறுதல் அறிக.

பாட்டு – கூக : தலைவி கூற்று

துறை:—(க) பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்கவழித் தன் வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருக்கிச் சொல்லியது. அஃதாவது, தலைமகன் பரத்தையரோடு சென்று பயில்வதனால் ஊடல்கொண்டிருந்த தலைவி, அவன் வந்தால் ஊடல் வாயிலாய் அவனை ஒறுக்கக் கருதியிருந்தாளாக, ஒரு நாள் தலைவன் தன்பால் வந்தவுடன் தன் நெஞ்சம் நிறையழிந்து ஊடற்கண் செல்லாது அவனைக் கூடற்கண் விரைந்தது. அது கண்ட தலைவி அந் நெஞ்சிற்குக் கூறியது.

(உ) பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட நிழத்தியைத் தோழி கூறியதூஉமாம். அஃதாவது, தலைவன் பரத்தையரிற் பிரிந்தமையால் ஊடிய தலைவி, அவனைக் கண்ட துணையானே நெஞ்சு நெகிழ்ந்து கூடற்கட் சென்றமை கண்டு தோழி இடித்துரைத்ததுமாம்.

இதன்கண், 'நெஞ்சே தகாது செய்யும் தலைவரைக் கண்டவுடன் ஊடற்குரிய உறுதியிழந்து நீ இங்ஙனம் எளியை ஆயின், நினக்குப் பற்பல இடரே மேலும்மேலும் உண்டாகும். துயரத்தால் தூங்காத இரவுகள் பலவாகத் துயில்தற்குரிய நாள் அவர் நின்னை அருளும் ஒரு சில நாட்களே உளவாகப் பெறுவாய்' என்று கூறுகின்றாள். தோழி கூற்றைக் கொள்ளின் இங்ஙனம் தலைவியை இடித்துரைத்தாளாகக் கொளக.

கூக. அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விகாகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்டுறை ஊரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் நெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சி

கோன்முதி இரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

—ஔவையார்.

(இ - ள்.) நெஞ்சே, அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற விளை கனி - பிணங்குதலையுடைய கொடியாகிய பிரம்பினது வரியமைந்த புறத்தையுடைய முதிர்ந்த பழத்தை, குண்டு நீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம் தண் துறை ஊரன் - ஆழ்ந்த நீரையுடைய குளத்தின்கண் வாழும் கெண்டை மீன் கௌவித் தின்றற்கு இடனனை குளிர்ந்த துறைகளையுடைய ஊரையுடைய இத்தலைவனுக்கு, பெண்டு இனையாயின் - பெண்டாகிய நீ இத்தன்மையுடையை யானால், ஓவாது ஈயும் மாரி வண்கைக் கடும் பகட்டு யானை நெடுந் தேர் அஞ்சி - ஒழிவின்றி ஈதற்றொழிலைச் செய்யாநின்ற மழை போன்ற வண்மையுடைய கையினையும், கடிய களிற்று யானைகளையும் நெடிய தேரினையும் உடைய அஞ்சி என்பானுடைய, கொன் முதி இரவூர் போல - அச்சத்தைச் செய்யும் போர்க்களத்தின்கண் உளள இரவினையுடைய ஊரினுள்ளாரைப் போன்று, பலவாகுக நின் நெஞ்சிற் படர் - நின்னுடைய நெஞ்சின்கண் தன்பம் பற்பல வாகுக, நீ துஞ்சும் நாள் சிலவாகுக - படரொழிந்து நீ துயில்பெறும் நாள் சிற் சிலவே ஆவனவாக.

விளக்கம்:—அரில் - பிணக்கம். "ஐவன வெண்ணெலோடு அரில் கொள்பு நீடி" என வரும் மதுரைக்காஞ்சியின்கண் நச்சினார்க்கினியர் உரையானும் அஃதப் பொருட்டாதல் உணர்க. பவர்ப்பிரம்பு: இரு பெயரொட்டு. கொடியாகிய பிரம்பென்க. பிரப்பங்கனி புறத்தே வரியுடைத்தாதல் கண்டறிக. விளைகனி: வினைத்தொகை. குண்டு-ஆழம். இலஞ்சி - குளம்; ஓடை முதலிய நீர் நிலைகளுமாம். கதூஉம் - கதுவும் - கவ்வும். நீரில் தோன்றாது நிலத்தில் தோன்றிய பிரப்பங்கனியை நீரில் வாழும் கெண்டை தின்னும் என்றது, குடியிற் பிறந்த தலைவனைக் குடிப்பிறப்பில்லாப் பரத்தையர் நுகர்கின்றனர் என்றவாறு. தண்டுறை - குளிர்ந்த நீர்த்துறை. பரத்தையரோடாடுதற்குரிய நீர்த்துறை பலவும் உடைய ஊரன் என்றிகழ்ந்தவாறு. இத்தகைய பரத்தனுக்குப் பெண்டாகிய நீ என்பாள், ஊரன் பெண்டு என்றாள். இனை - இன்னை என்பதன் இடைக் குறைந்து நின்றது. இன்னை - இத்தன்மையுடையை. அத்தன்மையாவது காணுதபோது ஊடியிருந்து கண்ட உடனே நிறையழிந்து கூடுதற்கு விழையும் எண்ணைக் குணம் உடைமை. இவ் வெண்மைக் குணம் உடையையாயிருக்குந் தலைவியும் அவன் பரத்தமை விடான் ஆகலின், எப்பொழுதும் தனித்துக் கிடந்து எண்ணிறந்த தன்பத்தை நுகர்வாய் என்பாள், 'பலவாகுக நின் நெஞ்சிற் படர்' என்றாள். எப்போதாவது அவன் வலிந்து அருள் செய்யும் ஒருசில நாள் மட்டுமே நீ இன்புற்றுத் துயிலற்குரிய நாள். எஞ்சிய நாளெல்லாம் துயிலாத் துயர் நாளே என்பாள் 'சிலவாகுக நீ துஞ்சும் நாளே' என்றாள். நீ இங்ஙனம் எளியையாயின் நின் துயர் தவிர்தற்கு வழியில்லை என இடித்துரைத்தபடியாம்.

அஞ்சி - அதியமானஞ்சி என்னும் ஒரு வள்ளல். இவன் புகழைப் புறநானூறு முதலிய நூல்களானும் உணரலாம். இவன் போர்க்களத் தருகிலுள்ள ஊரின்கண் வாழ்வோர் பற்பல துன்பமுடையராய்த் துயில் பெறாது வருந்துவராகலின் ஈண்டு உவமையாக அவரைப் படர் உறுதற்கும் துயிலாமைக்கும் எடுத்தோதினள்.

பாட்டு - கூஉ : தலைவி கூற்று

துறை :—காமமிக்க கழிபடர் கிளவியால் பொழுது கண்டு சொல்லியது. அஃதாவது, வரைவு நீட்டித்தலாற் பெரிதும் வருந்தியிருந்த தலைவி, காம நோயை மிகுவிக்கும் இயல்புடைய மாலைப்பொழுதின் வரவுகண்டு கூறியது.

இதன்கண், 'ஞாயிறு மறைகின்ற இவ்வந்திப் பொழுதின் கண்ணே வளைந்த சிறகுகளையுடைய இப்பறவைகள் தாமும் தம் மன்புடைய பார்ப்புக்களின் வாயிலூட்டுதற் பொருட்டு இரை தேர்ந்து தம் வாயிற் கொண்டனவாய் விரைந்து தஞ் சேக்கை நோக்கிப் போகின்றன. இங்ஙனம ஒன்றுறக் கலந்து இலறஞ் செய்தற்கு நந் தலைவர் கருதிற்றிலரே ' என்று தலைவி இரங்குகின்றாள்.

கூஉ. ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் சேரீஇய
இரைகோண் டமையின் விரையுமாற் செலவே.

—நாமோதரனார்.

(இ - ள்.) ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து - ஞாயிற்று மண்டிலம் மறைந்த அகன்ற இடமமைந்த விசும்பின் கண், கொடுஞ்சிறைப் பறவை - வளைந்த சிறகுகளையுடைய பறவைகள், இறையுற ஓங்கிய நெறி அயல் மராஅத்த - தாம் தங்குதல் பொருந்த உயர்ந்த வழிக்கு அயலே உள்ள கடம்பின்கண் உறையும், பிள்ளை உள்வாய்ச் சேரீஇய - பார்ப்புக்களின் வாயினுள்ளே செருகும் பொருட்டு, இரை கொண்டமையின் - இரையைத் தம் வாயில் கவுளிடத்தே எடுத்துக் கொண்டமையால், செலவு விரையும் - செல்லுதற்கண்ணே விரையா நிற்கும், அளிய- அவை இரங்கத் தக்கன.

விளக்கம் :—ஞாயிறு படுதல் என்றது, ஈண்டுமறைதல் என்னும் பொருட்டு. இப்படுசொல், தோன்றுதல் என்னும் பொருள்பட வருதலும் உண்டு. அகல்வாய் வானம் - அகன்ற இடத்தையுடைய விசும்பு. வானத்தின்கண் செலவு விரையும் என்க. கொடுஞ்சிறை - வளைந்த

நிறகுகள். இறை - தங்குதல். இறையுற ஓங்கிய மராம், செறியயல் மராம் எனத் தனித்தனிக் கூட்டுக. செறி - நடைவழி. மராம் - கடப்ப மரம். பிள்ளை - ஈண்டுக் குஞ்சு. "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிலைமை" (மரபி : சு.) என்பது தொல்காப்பியம். அன்பின் வழியே இப்பறவைகள் இயங்குதலால் அவை இரங்கத்தக்கன என்னுமுகத்தால் அன்பின்றித் தன்னை மறந்துறையும் வன்கண்மையுடைய தலைவர், இவ்வன்புதானும் அறிகிலரே என்று கருதி இரங்கியவாறும்.

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்" (குறள் : கஉஉஎ)

என்னுந் திருக்குறளானும்,

....."தத்தம் துணையையுள்ளி வந்துசேரும் விலங்குகளையும், மக்களையும் கண்டு தான் அக்காலத்தில் நுகர்ந்த இன்பநினைந்து ஆற்றுமை மிகுதிபற்றி மாலை மலரும் என்றுங் கூறினள்" என்னும் பரிமேலழகர் உரையானும், மாலைக்காலம் காமநோய் மிகச்செய்தலும் விலங்கு பறவை முதலியன அந்நோய் மிகுதற்கு உத்தீபன ஏது வாதலும் உணர்க.

பாட்டு - கூகூ : தலைவி கூற்று

துறை :—வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது. அஃதாவது, பரத்தையரிற் பிரிந்தமையால் தலைவனோடு ஊடியிருந்த தலைமகளை ஊடல்தீர்த்துத் தலைவனொடு கூட்டுவிக்க முயன்ற தோழியைத் தலைவி மறுத்துரைத்தது.

இதன்கண், 'தோழி அவரே நமக்குத் தாயும் தந்தையுமாகுந் தகுதியுடையார். அதனையார் நம்பால் அன்பிலராயவழி அவரொடு யாம் ஊடினேம் என்று உரைத்தல் நாணுத்தகவுடைத்து. ஆகலான், நலமிகச சாஅய் இன்னுயிர் கழியினும் யாம் புலந்துள்ளேம் என்று நீ நாண்கெடக்கூறுதே கொள். அன்பிலாரிடத்து ஊடினேம் என்பதும் பயனின்று' என்று கூறுகின்றாள்.

கூகூ. நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரைய லவர்நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ன்.) தோழி—, நலமிகச் சாஅய் இன்னுயிர் கழியினும் - அவர் பரத்தமை காரணமாக நமது அழகு பெரிதும் கெட்டு இனிய உயிர் நீங்குவதாயினும், நன்னலம் தொலைய புலவி உரையல் - நமது நல்ல நாணங்கெடுமாறு யாம் புலந்துள்ளேம் என நீ கூறுதேகொள், அவர் நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ - அவர் நமக்குத் தாயும் தந்தையும் போலும்

சிறப்புடையவர் ஆவரே, அன்பிலங்கடை - அவர் நம்பாற் கொள்ளற்குரிய அன்பிலாத விடத்தே, அஃதெவனே - அப்புலவி யாது பயனைச் செய்யும் ?

விளக்கம் :—நீ புலந்துள்ளாய் கொழுநனேயெ இங்ஙனம் புலவி நீட்டித்தல் நினக்குத் தகுவதன்று என்று தோழி கூறினளாக, அவட்கு, யான் புலந்துளேனென்று நீ கூறுதல் நாணுத்தகவுடைத்து. ஆதலால் நீ அங்ஙனம் கூறுதொழிக; அவர் அன்னையும் அத்தனும்போல நம்மால் வழிப்படத்தக்கவரே ; யாம் வழிபாடு செய்வேமாக; ஊடத் தகுந்த அன்புடையாரல்லர் ஆகலின், யான் ஊடியிருக்கின்றேன் அல்லன்; அவர்பால் ஊடலால் யாதுபயன் என்று கூறினளாக உணர்க.

இங்ஙனமின்றி வேறுவகையாகப் பொருளியையின்றிக் கூறுவாரு மூளர். ஊடினேன் அல்லன் ஆகலின், அதுதீர்ந்து கூடவும் உரியேனல்லேன் என வாயில் மறுத்தமையும் அறிக.

அன்பிலாதாரிடத்து ஊடுதல் பயனில்லை என்பதனை,

> “நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியும்
> காதலர் இல்லா வழி” (குறள். கஉ0அ)

என்னும் அருமைத் திருக்குறளானும் உணர்க.

உயிரினும் சிறந்தது என்பவாகலின் நாணினை ‘நன்னலம்’ என்றான். நன்னலம் கெட என்றது, நாணுக்கெட என்றவாறு. நலம்மிகச் சாஅய் என்புழி, நலம் திருமேனி அழகென்க. அஃது - அப்புலவி. அன்பிலங் கடை - அன்பில்லாத விடத்து.

பாட்டு – கூஅ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பதுபடத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, தலைவன் கார்ப்பருவத் தொடக்கத்தே வருவன் ; அதுகாறும் ஆறறியிரு என்று பிரிந்து சென்றவன் அப்பருவம வந்த பின்னரும் வந்திலாமையால் தலைவி ஆற்றாது வருந்துவளே என்று தோழி கவன்றாள். அதுகண்ட தலைவி யான் ஆற்று வேன் என்பதுபடச் சொல்லியது.

இதன்கண், ‘இது கார்ப்பருவம் அன்றாகவும் பேதைப் பித்திகத் தரும்பு இவ்வம்பமாரியைக் காரெனமதித்துச் சிவந்தன. யானே இப்போது முழங்கும் இவ்விடிக்குரல் கேட்பின் விரைவயிற் சென்ற நந்தலைவர் இதனைக் கார்ப்பருவம் எனமதித்துத் தாம் குறித்தபடி மீள்வரோ இன்றெனத் தெளிந்து வினையின்கண் மூழ்வரோ என்னாகுவர் என்று மருளாநின்றேன். இம்மருட்சியே அல்லால் ஆற்றுமையுடையேன் அல்லேன்’ என்று தோழிக்குத் தலைவி கூறுகின்றாள்.

கூச. பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே
யானே மருள்வேன் தோழி பானள்
இன்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்தும்
என்னு குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலை தத்தக்
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

—கதக்கண்ணனார்.

(இ - ள்.) தோழி—, பேதைப் பித்திகத்து அரும்பே பெருந்தண் மாரிமுன்னும் மிகச் சிவந்தன - அறியாமையுடைய பிச்சியினது அரும்புகள் பெரிய குளிர்ந்த கார்ப்பருவவரவின் முன்னரே இவ்வம்பமாரியைக் காரெனமதித்து மிகவும் சிவந்தன, பிரிந்திசினோர் இன்னுந் தமியர் - நம்மைப் பிரிந்து சென்றோராகிய தலைவர் இன்னும் மீண்டிலாது தமியராயிருப்போர், பானள் - நடு இரவின்கண், அருவி மாமலை தத்தக் கருவி மாமழைச் சிலைதருங்குரல் கேட்பின் - அருவிநீர் பெரிய மலையிடததே தததி வீழுமபடி பெய்யாநின்ற தொகுதியையுடைய கரிய முகில் முழங்கும ஓசையைக் கேட்குமிடத்தே, பெயர்த்தும் என்னுகுவர்கொல் யானே மருள்வேன் - மீட்டும் யாதின்கண் ஆவரோ என்று யான் மயங்காநின்றேன்.

விளக்கம்:—மாரிக்காலத்தே மலரும் இயல்புடைய பித்திகம் மாரி வருமுன்னர் வம்பமாரியைக் காரென மதித்துச் சிவந்தன ஆதலின், அவை மடமையையுடையன என்றாள். பெருந்தண் மாரி முன்னும் எனக் கூட்டுக. பெருந்தண்மாரி என்றது கார்ப்பருவததை என்க. அவை பேதைமையாற் சிவந்தன; யான் அங்ஙனம் மயங்கி ஆற்றேனுகேன்; ஆற்றுவன் என்றவாறு. இன்னும் மீளாது தமியராய் வைகுவோர் என்க. முன்னர் என்வயினிராது வினைவயின் சென்றோர் இப்போது என்வயின் வருவரோ வினைவயிற்றங்குவரோ இவ்விரண்டினகண் யாது துணிவர் என்பாள், 'பெயர்த்தும் என்னுகுவர்கொல்' என்றாள். கொல் - அசைநிலை. முன்னும் வினையிடத்தாயினோர் பெயர்த்தும் அதனிடத்தாவரோ மீள்வரோ என்றவாறு. அருவி தத்தக் காரணமான மழை என்க. மழை, ஆகுபெயர். சிலை - இடி. குரல் கேட்பின் வினைமுடியாது மீள்வரோ தங்குவரோ என்று ஐயுற்று ஒன்றுந்தெளியாது மயங்குவேன் என்பாள், 'யானே மருள்வேன்' என்றாள். யான் மருள்வேனன்றி ஆற்றேனுகின்றேன் அல்லன் என்றவாறு. தமியராய் இருந்து கேட்பின் துயர் செய்யும் குரல் ஆகலின், தமியர் கேட்பின் என்றாள். பிரிந்திசினோர் - பிரிந்தவர். பானள் - பால் + நாள் - பாதிநாள்; நள்ளிரவு. தமியர் - நம்மைப் பிரிந்திருந்தும் தனித்து ஈங்கே வாராது, ஆங்கேயே தங்கியிருப்போர் என்றபடி. தலைவிதான் ஆற்றலாகா வருத்தத்தால் இவ்வாறு கூறி வருந்தினள் என்க.

பாட்டு - கூறி : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் பாங்கற்கு உரைத்தது. அஃதாவது, இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவியை எய்தப்பெறுமல் உடல் நிலை வேறுபட்ட தலைவனைப் பாங்கன், 'நினக்கு இவ் வேறுபாடு எற்றுளையது?' என்று வினவியாற்கு, 'இற்றுளைய' தெனத் தலைவன் கூறியது.

இதன்கண், 'ஒரு குறுமகளின் நீர்போன்ற சாயல் தீப் போன்ற என் உரனை அவித்தமையால் யான் இவ்வாறு ஆயி னேன்' என்று தலைவன் பாங்கற்குக் கூறுகின்றான்.

கூறி. மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் உரனவித் தன்றே.

—கபிலர்.

(இ - ள்.) தோழனே—, மால்வரை இழிதரும் தூவெள் அருவி - பெரிய மலையினின்றும் வீழாநின்ற தூயவெள்ளிய அருவி, கல் முகைத்ததும்பும் - மலை முழைஞ்சுகளிலே ஒலித் தற்குக் காரணமான, பல் மலர்ச் சாரல் சிறு குடிக் குறவன் பெருந்தோள் குறுமகள் - பலவாகிய மலர்களையுடைய மலைப் பக்கத்துள்ள சிறிய குடியின்கண் வாழும் குறவன் ஈன்ற பெரிய தோளையுடைய சிறுமியினது, நீர் ஓரன்ன சாயல் - நீர் போன்ற மென்மை, என் தீ ஓரன்ன உரன் அவித்தன்று - என்னுடைய நெருப்பை ஒத்த வலியை அழித்தது.

விளக்கம் :—மால் வரை - பெரிய மலை. இழிதருதல் - வீழ்தல். கல் முகை - மலை முழைஞ்சு. ததும்பும் - முழங்கும். "ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப" (புறம்: கஉச.) என்புழியும் அஃதப்பொருட் டாதல் அறிக. பன்மலர்ச் சாரல் என்றது, தலைவியை இயற்கைப் புணர்ச்சியின் எய்திய பொழிலை எனக. சிறுகுடி பெருந்தோள், தீ, நீர் என்பவற்றுள் முரண் அணி தோன்றிச் செய்யுளின்பம் மிகுதல் காண்க. நீர், சாயலுக்கு உவமை. சாயலாவது, மகளிர் உடம்பு முழுவதும் உள்ள மென்மை. இம்மென்மை காண்போர் நெஞ்சானே உணர்தற்கு இயல்வதல்லது எடுத்துக்காட்டவியலாப் பண்பென்க. குறுமகளின் சாயல் என் உரனை அழித்தது என்றான் என்க. ஞாட் பினுள் கண்ணாரும் உட்கும் பீடாகலின், எதிர்ப்பட்ட பொருளையெல் லாம் அழிக்கும் தீயை உவமை கூறினான். திருக்குறளினும்,

"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
கண்ணாரும் உட்கும்என் பீடு" (குறள்: கo அ அ.)

என்றோதுதல் அறிக.

பாட்டு - கூசு : தலைவி கூற்று

துறை :—தலைமகனை இயற்பழித்துத் தெருட்டும் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது. அஃதாவது, தலைமகனைக் குறை கூறிப் பழிக்கு முகத்தானே தலைவியைத் தேற்றிய தோழிக்குத் தலைவன் குறை கேட்கப்பொறுத தலைவி அவனுடைய இயல்பைப் புகழ்ந்து எதிர் கூறியது.

இதன்கண், 'ஒப்பாரு மிக்காருமில்லாத் தலைவனே தவறு செய்வானுயின் யான் என் செய்வேன் என்கின்றனை; நீ அங்ஙனம கூறுவது நகைத்தற்பொருட்டு என்று நான் கருதுகின்றேன். அங்ஙனம் இன்றி நின்மொழி வாய்மையே என யான் கருதியிருப்பனேல் நின்னிலை என்னும்' என்று தலைவி தோழியைச் சினந்து கூறுகின்றாள்.

கூசு. அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யானெவன் செய்கோ என்றி யானது
நகையென உணரேன் ஆயின்
என்னு குவைகொல் நன்னுதல் நீயே.

—அள்ளூர் நன்முல்லையார்

(இ-ள்.) நன்னுதல் நீ - நல்ல நுதலையுடைய தோழியே நீ, அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு யான் எவன் செய்கு எனறி - நீர அருவியினையும் வேங்கை மரங்களையுமுடைய பெரிய மலைகளையுடைய நாட்டையுடைய தலைவன்பாலுள்ள குறைக்கு யான் யாது பரிகாரஞ் செய்யவல்லேன் என்று கூறுகின்றனை, யான் அது நகை என உணரேனுயின் - நீ அவ்வாறு தலைவன் குறையுடையன் என்று கூறியதனை நகைத்தற்பொருட்டுக் கூறிய விளையாட்டு மொழி என்று நினையாது வாய்மை என்று கருதிவிடுவேனுயின், என்னுகுவைகொல் - நீ என்ன தன்மையுடையை ஆகுவை.

விளக்கம் :—அருவியும் வேங்கையும் உடைய மலைநாடன் என்றது, மலை தன் அருவியாலே வேங்கைப் பொழிலைப் புரந்து வருங்கால் மகிழ்ந்தும் அருவியின்றி மாறியவழி அவ்வேங்கை வருந்தியும் இருப்பதல்லால் வேங்கை அவ்வருவியைத் தான் விரும்பும்போதெல்லாம் தன் கண் எய்துவித்துக்கொள்ள இயலாதது போன்று, தலைவன் அருள் சுரந்து வந்து மகிழ்விக்கும்போதெல்லாம் மகிழ்ந்தும் வாராதபொழுது வருந்தியும் இருப்பதல்லால் அவன் வாராக்குறைக்கு யான் என் செய்வேன் என்னும் குறிப்பிற்று. இது தலைவன் நீர் அருவி போன்று ஒரு சமயம் வருவன்; ஒரு சமயம் வாராதொழிவன்; இடையறுத அன்புடையனல்லன் எனத் தோழி இயற்பழித்தவாறுயிற்று. இங்ஙனம் நீ தலைவனைப் பழித்ததனை யான் விளையாட்டாகக் கூறுகின்றனை

என்று கருதி அமைகின்றேன். உண்மையாகவே கூறியிருப்பையேல் நீ என் அன்புடைத் தோழி ஆதல் எங்ஙனம் என்பாள், 'என்னுகுவை' என்றாள் என்க. என்றி - என்கின்றாய். நகை - நகைச்சொல். அது - அங்ஙனம் கூறியது. நன்னுதல்: அன்மொழித்தொகை ; விளி.

இனி, தலைவி இயற்பட மொழிந்தமைக்கு ஏற்ப அருவி வேங்கைப் பெருமலை நாடன் என்றது, தன்பாலுள்ள வேங்கைப் பொழிலினை அருவியால் மலை ஊட்டுதல் போன்று, தலைவன் நம்மை அருளுவன் என்னும் குறிப்பிற்றாகவும் கொள்க.

பாட்டு - கூை : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவன் களவின்பமே விழைந்து வரைதற்குக் கருத்தின்றி ஒழுகுவதை, ஆற்றாளாகிய தலைவி தோழிக்குச் சொல்லியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் தலைவனைப் பெறுதற்கரிய சிறையிடத்திருக்கின்றேன் ; என் பெண்மை நலம், யான் தலைவனைக்கண்ட கடற்கரைச் சோலையிடத்தது ; தலைவனே தன் ஊரின்கண் தங்குவானுயினன்; மறையாகிய நங்களவுச் செய்தியோ பலரானும் அலர் தூற்றப்பட்டு அம்பலத்தின் கண்ணுயது' என்று வருந்திக் கூறுகின்றாள்.

கூை. யானே ஈண்டை யேனே யென்னலனே
ஆனு நோயொடு கான லஃதே
துறைவன் தம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே

—வெண்பூதியார்.

(இ - ள்.) தோழி, யானே ஈண்டையேன் - யான் இவ்விடத்தே தனித்திரா நின்றேன், என் நலன் ஆனு நோயொடு கானலஃது - எனது பெண்மை நலமோ பிரிந்தமையாத நோயோடே கடற்கரைச் சோலையிடத்தது, துறைவன் தம் ஊரான் - தலைவன் தன்னுடைய ஊரின்கண் உள்ளான், மறை அலராகி மன்றத்தஃது - நம் களவுச் செய்தியோ பலரும் அறிந்து தூற்றுதற்கு உரிய அலர்மொழியாகி ஊரம்பலத்திடத்தே பரவா நின்றது.

• விளக்கம் :—ஈண்டையேன் - இவ்விடத்தினேன். ஆனுநோய் - அமையாத துன்பம். ஆனுநோயொடு யான் ஈண்டையேன் எனப் பிரித்துக் கூட்டி நோயைத் தலைவிக்கேற்றுதல் சிறப்புடைத்து. துறைவன் - செய்தனிலத்தலைவன். தலைவன் தன் தமருடன் வாழும் ஊரானதின் தம்மூர் என்று பன்மை கூறினள். கானலஃதே, மன்றத்

தஃதே என்னும் ஈரிடத்தும் ஆய்தங்கள் விரிக்கும் வழி விரித்துப் பின் தோற்றிக்கொண்டவைகள். மறை - களவு மணம். பிறரறியாவாறு நிகழ்ந்தமையின் மறை எனப்பட்டது. அலர் - பலர் அறிந்து கூறும் பழிச்சொல். சிலர் அறிவது, அம்பல் என்பர்.

வரைந்து கொள்ளப்பட்டுத் தலைவனில்லத்து அவளுடனிருந்து இல்லறம் இயற்றற்குரிய யான், அஃதொழிந்து காவன் மிக்க இவ்வின் னலிருக்கையிற் றனியே இருப்பேனுயினேன் என்பாள், 'யானே ஈண்டையேன்' என்றும், என்னுடனிருக்கற்பாலதாகிய என் பெண்மை நலம் அழிந்ததென்பாள், அழிந்ததற்கிடனுகிய 'கானலஃ'தென்றும் வரைந்து கொள்ளற்குரிய தலைவன், அக்கருத்தின்றி வாளா தமரோ டுறைகின்றுன் என்பாள், 'துறைவன் தம் மூரான்' என்றும், மறைந் திருத்தற்குரிய நம் களவுமணச் செய்தி மறையாகாது பலரும் அறிந்து தூற்றப்பட்டது என்பாள், 'மறை அலராகி மன்றத்தஃது' என்றும் புலந்து கூறினுள் என்க. மன்றம் - ஊரம்பலம்.

இனி, இந்நிலை ஆற்றற்கரியது என்று வருந்தியவாறும்.

பாட்டு - கூஅ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. அஃதாவது 'இன்ன பருவத்தே மீண்டு வருவல் வருந்தாதே; அதுகாறும் ஆற்றியிரு' எனத்தேற்றிச் சென்ற தலைவன், அப்பருவம் வந்த பின்னரும் வந்திலாமையால் ஆற் றுமை மிக்க தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'தோழி! தலைவர் தாங்கூறிய பருவம் வந்தும் வாராராயினர்; யாரேனும் அவர்பாற் சென்று அவர் கூறிய பருவம் வந்துவிட்டமையையும் அதனுல் யான் உறும் வருத் தத்தையும் அறிவிப்பாராயின் நன்று' என்று தலைவி கூறு கின்றுள்.

கூஅ. இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

—கோக்குளமுற்றனர்.

(இ - ன்.) தோழி-, நம் படப்பை நீர் வார் பைம்புதல் கலித்த - நமது மணைப்படப்பையின்கண் நீர் ஒழுகாநின்ற பசிய புதலின் மேற்படர்ந்து தழைத்த, மாரிப் பீரத்து அலர்சில கொண்டு - இக் கார்ப்பருவத்தே மலர்ந்த பீர்க்கின் மலர்கள் சிலவற்றைக் கைக்கொண்டு, அவர்த் துன்னச்சென்று - தலை

வரை அணுகச்சென்று, நல் நுதல் இன்னளாயினள் என்று - நல்ல நெற்றியையுடைய நுந்தலேவி இம்மலரின் நிறமெய்தினள் என்று, செப்புநர்ப்பெறின் நன்றுமன் - கூறுவாரைப் பெற்றால் மிகவும் நன்றேயாம்; அவரைப் பெற்றிலேமன்றே.

விளக்கம்:—நன்னுதல் என்றது நின்னைக் காணுத முன்பெல்லாம் நன்னுதலாயிருந்தவள் என்று பழைமை நினைப்பித்து என்றவாறு. இன்னள் - இத்தன்மையள். மாரிப்பீரத்து அலரின் தன்மையள் என்றறிவித்தல் வேண்டும் என்பது கருத்து. இது களவுச்செய்தி பாகலின் அவர்க்கு அணுக்கராய்ச் சென்று கூறல் வேண்டும் என்பாள், 'துன்னச்சென்று' என்றாள். துன்னல் - நெருங்குதல். 'செப்புநர்ப் பெறின்' என்றது, அவரைப் பெறக்கூடாத களவுக்காலம் என்பதைக் குறிப்பானுணர்த்திற்று. இதனால் இப்பிரிவு வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்ததென்க. நன்றுமன் என்பதன்கண், மன்: ஒழியிசைப் பொருட்டாய் அது கைகூடப் பெற்றிலேம் என்பதுபட நின்றது. கார்ப்பருவம் வந்தமை புலப்படுத்தற்கும் அதனால் தலைவி பசந்தமை அறிவுறுத்தற்கும் பீர்க்கலர் எதுவாதல் அறிக. கார்ப்பருவ மாகலின், மழைநீர் வார்ந்து புதல்பசியதாயிற்று. பீர்க்கும் கலித்த தென்க. கலித்தல் - தழைத்தல். படப்பை - மனைக்கு அண்மையி லுள்ள தோட்டம்.

பாட்டு - கூகக: தலைவன் கூற்று

துறை:—பொருள் முற்றிப் புகுந்த தலைமகன் 'எம்மை நினைதலும் அறிதிரோ?' எனத் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, பொருள் ஈட்டச் சென்ற தலைவன் மீண்டு வந்ததற்பின், அவனோக்கி, 'யீயிர் பிரிந்திருந்த பொழுது எங்களை நினைத்த துண்டோ?' என்று வினவிய தோழிக்குத் தலைவன் கூறியது.

இதன்கண், 'யான் நும்மை உள்ளினேன்; நினைத்தேன்; நினைந்து மருண்டேன்; எதனிடத்தெனின்? பெரிய வெள்ளம் ஒழுக ஒழுக இறைத்துண்ணும்படி வற்றினாற் போன்று, என் காமவிருபபம் அறுகியடையும்படி எழுந்த விருப்பத்தின்கண்' என்று தலைவன் தோழிக்குக் கூறுகின்றான்.

கூகக. உள்ளினேன் அல்லனே யானே உள்ளி
நினைத்தனேன் அல்லனே பெரிதே நினைத்து
மருண்டனேன் அல்லனே உலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துணச் சென்றற றுஅங்கு
அனைப்பெருங் காமம் மீண்டுகடைக் கொளவே.

—ஒளவையார்.

(இ - ள்.) யான் உள்ளினென் அல்லனே - யான் நும்மை இடையறாது கருதினேன் அல்லனே, உள்ளி பெரிதே நினைத்தனென் அல்லனே-அங்ஙனம் உள்ளுங்கால் இவ்வுலக வின்பங்களிற் பெரிதாகிய காமவின்பத்தையே நினைத்தேன் அல்லனே, நினைத்து - அங்ஙனம் காமவின்பத்தையே நினைத்து, நீடிய மரத்த கோடு தோய் மலிர்நிறை இறைத்து உணச் சென்று அற்றுங்கு - நீண்ட மரங்களினுடைய கொம்புகளைத் தீண்டும்படி பெருகும் மிக்க வெள்ளம் இறைத்துண்ணுமாறு நெடுந்தூரம் ஒழுகி அற்றது போன்று, அனைப்பெருங் காமம்-அவ்வெள்ளம் போன்ற பெரிய காமம், மீண்டு கடை கொள - நும்பால் மீண்டு வருமாற்றானே முடிவடைய, உலகத்துப் பண்பு மருண்டனென் அல்லனே - உலகியலின்கண் யானும் மயங்கினேன் அல்லனே ?

விளக்கம்:—உள்ளுதல்-இடையறாது எண்ணுதல். தலைவியை இடையறாது எண்ணினேன். எண்ணுங்கால் அவளொடு நுகரும் அப்பெரின்பத்தையும் அவளை எண்ணுமபோதெல்லாம் எண்ணினேன் என்பான், 'நினைத்தனன் பெரிதே' என்றான். இவ்வுலக வின்பங்களுட் பெரிது காமவின்பமாகலின், அதனைப் பெரிதென்றான். அஃது அங்ஙனமாதலை "ஈண்டின்பமென்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இசசிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும் சுவைபல வென்று கூறுவார் கூறுக யாம் கூறுவதின்பச சுவை ஒன்றனையுமே என, இதனையே மிகுத்துக் கூறினான்" எனப் பரிமேலழகர் திருக்குறளின்கண் (காமத்துப்பால் முன்னுரை) கூறுதலானும், "உலகமும் புத்தேணாடும் ஈர்ஞாக்கின் ஈர்சாலாவே ..... தோள் மாறுபடும் வைகலோ டெமக்கே" (குறுந் - கoக") என்றும் "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணான் உலகு', (குறள் - ககoக) என்றும் பிற சான்றோர் கூறுமாற்றானும் உணர்க.

எத்தகையோரும் காமவின்பத்தே மயங்குதல் இயல்பாகலின், அவ்வியல்புக் கேற்பவே யானும் அதன்கண் மயங்கிக் காமம் கடைக்கொள நும்பால் மீண்டனன் என்பான், 'மருண்டனன் அல்லெனே உலகத்துப் பண்பே' என்றான். அப்பண்பு மருட்டியிரா தெனின், என் பொருளீட்டல் வினைக்கண் மேலும் முயன்று ஆற்றவும் ஈட்டியிருப்பேன். அப்பொருளினும் நீயிரும் காமவின்பமும் சிறந்தமையாலே நும்மை உள்ளி மீண்டேன் என்றவாறு. இக்கருத்தறியாது உலகத்துப் பண்பென்பதற்குப் பிறர் எல்லாம் பொருளுக்குப் பிரிந்தான் அது பெற்றே வரவேண்டும் மரபு என்பாரும் பிற கூறுவாரும் ஆயினர்.

மலிர் நிறை - மிக்கவெள்ளம். தலைவியைப் பிரிந்து சேணிடையிருந்தமையால் அளவிறந்து காமவிருப்பம் பெருகிற் றென்பான், மரத்தின் கோடுதோயப் பெருகிய வெள்ளத்தை உவமை எடுத்தோதினான். அவ்வவரப் பெருக்கு மீண்டு வருங்கால் மெல்ல மெல்லக் குறைந்து தலைவியை எய்தி நுகர்ச்சி பெற்றவுடன் முடிவுறுதலின், வெள்ளம் நெடுந்தூரம் ஒடி அறுதலை உவமை கூறினான். எனவே, எம்மை

னைத்து மறிதிரோ என்றுட்கு நினைத்து மருண்டமையானன்றே இத் தணை விரைவில் மீண்டு வருவேனுயினேன் என இறுத்தானுதலறிக.

பாட்டு - கoo : தலைவன் கூற்று

துறை :—(க) பாங்கற்கு உரைத்தது. அஃதாவது தலை யைப் பொழிலிற் கண்டு மணந்த தலைவன் அச்செய்தியைத் தன் தோழனுக்குக் கூறியது.

(உ) அல்ல குறிப்பட்டு மீள்கின்றுன் தன் நெஞ் சிற்குச் சொல்லியது. அஃதாவது, குறியல்லாதவற்றைக் குறியாகக் கருதிச் சென்ற தலைவன் ஆண்டுத் தலைவி வரப் பெரு மையால் வழிதே மீள்கின்றவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இதன்கண், 'பாங்கனே! யான் கண்டு காமுற்ற குறுமகள் ஒரி வள்ளலின் கொல்லிமலையின் மேற்குப்பக்கத்தே வரைந் துள்ள பாவை போன்று கண்டார்க்கு மடமைவரச் செய்பவள்; பெறுதற்கும் அரியள் காண்' எனத் தலைவன் கூறுகின்றுன்.

கoo. அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைக் குளவியோடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுநோடுத் துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

—கபிலர்.

(இ - ள்.) அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி - மலையரு கியினையுடைய பரந்த நிலத்தின்கண் மலைநெல்லினை விதைத்து, பருவிலைக் குளவியோடு பசுமரல் கட்கும் - அந்நிலத்திடையே முகிழ்த்த பரிய இலையினையுடைய மலைமல்லிகையும் பசிய மரலு மாகிய களையினைப் பறிக்கின்ற, காந்தள் வேலிச் சிறுகுடி - காந்தளாகிய வாழ்வேலியையுடைய சிறுகுடியின்கண் வாழ் வோர், பசிப்பின் கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண் ணும் - பசிப்பாராயின் தறுகண்மையுடைய யானையினது மருப் பினை விற்று அவ்வரிசிப் பொருளை யுண்ணு நின்ற, வல்வில் ஓரி கொல்லிக் குடவரை - வலிய வில்லையுடைய ஓரி வள்ளலினது கொல்லியாகிய மேற்குமலையின்கண் எழுதப்பட்ட, பாவையின் மடவந்தனள் - பாவை தன்னைக் கண்டார்க்கு மடமைவரச் செய்யுமாபோல மடமைவரச் செய்பவள் ஆவள், மணத்தற்

கரிய பனைப் பொருந்தோள் - அவளுடைய மூங்கில் போன்ற பெரிய தோள்கள் தழுவுதற்கு அரியனவாகும்.

விளக்கம் :—மலையின்கண் அருவிபாயும் நிலப்பரப்பின்கண் ஐவனம் வித்தி என்க. பருவிலை-பெரிய இலை. குளவி - மலைமல்லிகைமரல் - ஒரு வகைக் கொடி. குளவியும் மரலுமே களை என்க. கட்கும்-களைபறிக்கும். காந்தள்வேலி: பண்புத்தொகை. என்றும் மாறுது இயற்கையாக வுள்ளமையால் வாழ்வேலி என்றவாறு. சிறுகுடி - மலைவாணர் ஊர். சிறுகுடி - ஆகுபெயராய் ஆண்டு வாழ் வாரைக் குறிக்கும க டுங்கண் வேழம் என்றது, அச்சிறுகுடியின் வேட்டச் சிறப்பிற்குக் குறிப்பேது வாய் நின்றது. தம்பால் உள்ள மலை நெல் முழுதும் வித்திவிட்டமை யானும் வித்தும் தொழிலில் ஈடுபட்டு வேட்டம் போகாமையானும், பசித்தனர். என்க கோடு - மருப்பு. நொடுத்து - விற்று. கோடு நொடுத்து அதனுற் பெற்ற பொருளை உண்ணும் என்க.

வல்விலோரி - விற்றொழிலில் வன்மையுடைய ஓரி. ஓரியின் வில் வன்மையைப் புறநானூற்றின்கண் வன் பரணர் பாடிய

> "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
> பேழ்வாய் உழுவை பெரும்பிறி தழீஇப்
> புழற்றலைப் புகர்க்கலை உருட்டி உரற்றலைக்
> கேழற் பன்றி வீழ வயல
> தாழற் புற்றத் தடும்பிற் செற்றும்
> வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்." (புறம்: கடுஉ)

என்னும் செய்யுளானும் உணர்க.

கொல்லிப்பாவை, கண்டாரை மடமையுறுத்துவது போன்று மடமை யுறுத்துபவள், பெறுதற்கும் அரியள் என்றவாறு.

இனி இரண்டாவது கூறிய துறைக்கும், அல்லகுறிப்பட்டு வறிதே மீள்பவன் அங்ஙனம் நெஞ்சிற்குக் கூறினனாகக் கொள்க.

பாட்டு - கoக : தலைவன் கூற்று

துறை :—(க) தலைமகட்குப் பாங்காயினர் கேட்பச் சொல் லியது.

(உ) வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங் கியதூஉமாம்.

அவையாவன: தலைவியோடு இன்பம் நுகர்ந்த தலைவன் தலைவிக்குப் பாங்காயினர் கேட்கும்படி தலைவியைப் புகழ்ந்து கூறியது. அல்லது, பொருளீட்டத்துணிந்தும் தன் நெஞ்சிற்குத் தலைவியின் பெருமையைப் பிரிதற்கரியாள் .என்பதுபடச் சொல்லியது என்னும் இருதுறைக்கும் இது பொருந்தும்.

இதன்கண், 'கடல் சூழ்ந்த இவ்வுலகமும், பெறுதற்கரிய வானவர் உலகமும், ஆகிய இரண்டும் தரும் இன்பமெல்லாம்

சீர்தூக்கிக் காணுங்கால் யான் தலைவியோடு வைகும் இன் பத்திற்கு ஒப்பாகமாட்டா'எனத் தலைவன் கூறுகின்றான்.

கoக. விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குற் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.

—பரூஉ மோவாய்ப் பதுமனார்.

(இ - ள்.) விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்- விரிந்த அலைகளையுடைய பெரிய கடலாலே வளைக்கப்பட்ட இம் மண்ணுலகந் தரும் இன்பமும், அரிது பெறு சிறப்பின் புத் தேள் நாடும் - பெறுதற்கரிய தலைமையினையுடைய தேவர்கள் உலகந்தரும் இன்பமுமாகிய, இரண்டும் - இருவேறின்பங்களை யும், பூப்போல் உண்கண் பொன்போல் மேனி மாண்வரி அல்குல் குறுமகள் - தாமரைப்பூப்போன்ற மையுண்ட கண்களையும் பொன்போன்று திகழும் மேனியையும் மாட்சிமைப் பட்ட வரி களையுடைய அல்குலையும் உடைய தலைவியினது, தோள் மாறு படும் வைகலோடு தூக்கின் - தோள்கள் மாறுபட்டுத் தழுவு தலையுடைய நாள்தரும் இன்பத்தோடு வைத்துப் புலக்கோலாலே தூக்கிக் காணுமிடத்து, எமக்குச் சீர்சாலா - அவ்விரண்டின்பங் களும் யாம்பெறும் இவ்வின்பத்தின் நிறைக்கு ஒவ்வமாட்டா.

விளக்கம்:—இவ்வுலகமுழுதும் ஒருகுடை கீழலில் ஆளும் அரச இன்பம் என்பான், 'விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகம்' என் றான். உலகம் நாடு வைகல் என்பன அவைதரும் இன்பத்திற்கு ஆகு பெயராய் நின்றன. புத்தேள் நாடு ஆற்றவும் அறஞ் செய்தற்கன்றிப் பெறல் சாலாமையின், 'அரிது பெறு சிறப்பிற் புத்தேள் நாடு' என்றான். உலகாளும் இன்பம் பொருளாணும், புத்தேணாட்டிற் பெறும் இன்பம் அறத்தானும் எய்துவன வாகத், தலைவி தோள்மாறுபடுமின்பம் அன்பா லெய்துவதாகலின், அவை இதன் பொறைக்கு ஆற்றுவாயின என்க. எதுக்களான் உண்டாம் இன்பம், இயற்கையின்பத்தை ஒவ்வா என்றவாறு.

பூப்போல் உண்கண் பொன்போல் மேனி மாண்வரி அல்குல் முதலியன, இன்பவரவிற்கு ஏதுவாகிய உறுப்புக்கள். உலகத்திற்கும் புத்தேணாட்டிற்கும் உளவோ என்பான், இவையிற்றை விதந்தெடுத் தோதினான். 'தோள்மாறுபடும் வைகல்' எனப் பொழுது வரைந்தோதிய வாற்றான், உலகத்தினை ஆளுள்ளெல்லை காறும் ஆளும் இன்பமும் புத் தேள் நாட்டினை அறங்கடை கொள்ளும் காலங்காறும் நுகரும் இன் பமும் என்று விரித்தோதுக.

உலகமும் நாடும் ஆகிய இரண்டும் என்க. தூக்குதல் - நிறை காண்டல். இவையிற்றைத் தூக்கத் துலையின்மையின் புலக்கோலால் தூக்கின் என்க. 'தோள்மாறுபடும் வைகல்' என்றது, இடக்க ரடக்கல்.

இனிப் பாங்காயினூர் கேட்பச் சொல்லியதெனக் கொள்ளின், இத்தகைய குறுமகளைப் பிரியவல்லேன் அல்லன் என, அவர்கள் அறியக் கூறியதாகவும், பொருள்வலித்த நெஞ்சிற்குக் கூறியதாகக் கொள்ளின், இவள்தரும் இன்பத்திற்குச் சிறிதும் ஒவ்வாத பொரு ளுக்கோ இவளைப் பிரிந்து போகக் கருதுகின்றனை என நெஞ்சினை இகழ்ந்தாளுகவும் கொள்க.

பாட்டு - கஅஉ : தலைவி கூற்று

துறை :—ஆற்றுளெனைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யான் யாங்ஙனம் ஆற்றுவேன் என்றது. அஃதாவது, பிரிந்து சென்ற தலைவன் நெடிது காலந் தாழ்த்தானுக, இப் பிரிவுத் துன் பத்தை இனி இவள் ஆற்றுதல் இயலாது போலும் எனத் தலைவி நிலைக்கு இரங்கி வருந்திய தோழிக்குத் தலைவி அந்நோயின் கொடுமை கூறி, 'இதனை யான் எங்ஙனம் ஆற்றுவேன்?' என் பது படச் சொல்லியது.

இதனகண், 'தலைவரை எண்ணுமிடத்து நெஞ்சம் வேகா கின்றது; அவரை எண்ணுதமைவதும் இயலாததாக இருக் கின்றது; காம நோயோ விரிந்த விசும்பையும் சென்று தொடும் பெருக்கமுடைத்து; இங்ஙனம் என்னை வருந்தவிடுத்து வாராது அமைந்திருப்பாராகிய தலைவர், அறவோர் அல்லர்' எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றுள்.

கஅஉ. உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே.

—ஔவையார்.

(இ - ள்.) உள்ளின் உள்ளம் வேம் - நம்மை மறந்து விட்ட தலைவரை யாம் நினைப்பின் அவர் பிரிவாகிய தீச் சுடுத லானே எம் நெஞ்சம் வேகா கின்றது, உள்ளாது இருப்பின் எம் அளவைத்து அன்று - ஆயின் அவரை நினையாதமைவேம் எனினோ அங்ஙனம் இருத்தல் எம் ஆற்றலின் அளவிற் பட்ட தன்று, காமம் வருத்தி வான் தோய்வற்று - இவ்வாறு தப்பும் வழியின்றி இடையறுது இக் காமநோய் எம்மை வருத்தச் செய்து மேலும் மேலும் பெருகுதலாலே விசும்பை மூட்டுமாறு

போன்றதொரு பெருக்க முடைத்து, யாம் மரீஇயோர் சான் றோர் அல்லர் - இவ்வாறு யாம் வருந்தும்படி நம்மை மறந்தமை யும் நம் தலைவர் அருளாளர் ஆகார்.

விளக்கம் :—உள்ளுதல் - நினைத்தல். தலைவரை நினைக்கும் பொழுது அவரைப் பிரிந்திருக்கும் துன்ப நெருப்பு, அந்நினைக்கும் உள்ளத்தி லேயே தோன்றி அதனையே சுடுதலான் அந் நெஞ்சம் வேகின்ற தென் பாள், 'உள்ளின் உள்ளம் வேமே' என்றாள். துன்பத்திற்குக் காரணம் அவரை உள்ளுதலே என்பது நன்கு தெரிந்திருந்தும் அதனைச் செய் யாது ஆற்றியிருக்க எனின், நினையாதிருத்தல் எம் மாற்றலில் அமைந்த தன்று என்பாள், 'அஃது எம் மளவைத்தன்று' என்றாள். அவரை நினையாது பிறிதுபொருளில் நெஞ்சம்போக்கி ஆற்றுக என்று தேற்றிய தோழியின் உரையை "உள்ளாதிருப்பின்" எனக் கொண்டு கூறுகின்றாள் என்க. 'உள்ளாதிருப்பின் வருந்தாதிருக்கலாமே; அங்ஙனம் இருப்பிலை! என்று நீ கூறுவாயாகின் அஃது எம்மள வைத்தன்று' என்றாள் என்க.

"மறைப்பேன்மன் காமத்தை யாலை குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்." (குறள் : கஉருஉ.)

என்பாள், 'அஃது எம்மளவைத்தன்று' என்றாள். அந் நோய் எம் கருத்தின்வழி வாராது தானே தோன்றி நினைப்பித்து வருத்தும் என்றவாறு.

காமவின்பம் கடல் போன்ற பெருக்க முடைத்து; அதுதானே பிரிவால் துன்பஞ் செய்யுங்கால் அத்துன்பம் கடலினும் பெரிது என் பாள், 'வான்றோய் வற்றுக் காமம்' என்றாள்.

"இன்பங் கடன் மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது." (திருக்குறள் : ககசுசு.)

என்னும் திருக்குறளை ஈண்டுக் கருதுக. வானம் கடலிற் பெரிதாகலின், 'வான்தோய்வற்று' என்றாள். விரிந்த விசும்பெல்லாம் நிறைந்து தோய்வது போல்வதொரு பெருக்க முடைத் தென்க. வான்றோய்வற்று என்றதற்கு "இவ் வருத்தத்தால் யான் இறந்துபட்டு வான்புக்க விடத்தும் ஆண்டு வந்து தோய்தல் வல்லது" என்பாருமுளர்.

சான்றோர் - ஈண்டு அருளுடையோர் என்னும் பொருட்டு. தன் பொருட்டு இவ்வாறு ஒருயிர் வருந்தும் என்பதறிந்தும் அவர் வந்து அளிசெய்யாமையின் அருளாளர் ஆகார் என்றவாறு. சான்றோர் அல்லர் என்றது சாலார் ஆகலின் வாரார் கொல்லோ என்று வருந்திய படியாம். யாம் மரீஇயோர் என்றதும் நம்மால் மருவப்பட்டு நம்மைத் தாம் மருவாதவர் என்னும் குறிப்புடையது.

பாட்டு - கஙஉ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு அழிந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்த பொழுது, 'யான் இன்ன பருவத்தே நின்பால் மீள்வன் ஆற்றியிரு' என்று

தேற்றிச் சென்றவன், அப் பருவம் வந்தபின்னரும் வாராமையால் ஆற்றுமை மிக்க தலைவி, தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி, 'தூஉம் துவலைத் துயர்கூர் இவ்வாடைக் காலத்தும், எம்மை நினைந்து வந்திலர்; இப் பிரிவுத் துன்பத்தை இனி ஆற்றவுங்கில்லேன்; ஆதலின், இறந்துபடுவேன் போலும்,' என்று தோழிக்குக் கூறுகின்றாள்.

கoக. கடும்புனல் தொகுத்த நடுங்குளர் அள்ளல்
கவிரிதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் காரைக் கெவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வல் தோழி யானே.

—வாயிலான் தேவனார்.

(இ - ள்.) தோழி—, கடும் புனல் தொகுத்த நடுங்கு அளர் அள்ளல் - கடிதாய் ஓடும் நீரால் குவிக்கப்பட்ட நடுக்கத்தைச் செய்யும் வருத்தத்திற்குக் காரணமான சேற்றினிடத்தே, கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய் இரைதேர் காரைக்கு எவ்வமாக - முள்முருக்கம் பூவின் இதழ் போன்ற மென்மையுடைய இறகுகளையும் சிவந்த வாயினையும் உடையனவும் மீனுகிய இரையை ஆராய்வனவும் ஆகிய காரைகளுக்குத் துன்பமுண்டாகும்படி, தூஉம் துவலைத் துயர் கூர் வாடையும் - சிதறு நின்ற நீர்த்துளிகளையுடைய பிரிந்தோர் வருத்தம் மிகுதற்குக் காரணமான இவ்வாடைக் காற்றையுடைய கூதிர் காலத்தும், நம காதலர் வாரார் போல்வர் - நங்தலைவர் வரமாட்டாதார் போல இருந்தார், யான் வாழேன் போல்வல் - இனி யானும் இத்துயரத்தைப் பொறுத்து உயிர் வாழ்ந்திரேன் போலே இருந்தேன்.

விளக்கம் :—'வாடைக்காலத் தொடக்கத்தே வருவல்' எனக் கூறிச் சென்றவர், அப்பருவம் வந்துழியும் வாராமையால் இவ்வாடைக் காலம் முழுதுமே வாரார் போல இருந்தார் என்பாள், 'வாடையும் வாரார் போல்வர்' என்றாள். வாடையும் என்புழி, உம்மை சிறப்பும்மை. பிரிவாற்றுமை நாடோறும் மிக்கு நலிதலால், 'யான் கின்னலில் இறந்துபடுவல்' என்பாள், 'யான் வாழேன் போல்வல்' என்றாள்.

கடும்புனல் - கடிதாக ஓடும் நீர். நடுங்கு அயிர் எனப் பாடமோது வாருமுளர். இதற்கு, நடுங்கும் நுண்மணல் என்று பொருள் கூறுக. அளர் - வருத்தம். நடுங்குதற்குக் காரணமான வருத்தம் என்க. கவிர்-முள்முருங்கை. இதன் இதழ், காரைத் தூவிக்கு மென்மைப் பண்பு பற்றி வந்த உவமை என்க. தூவி - இறகு. எவ்வம் - துயரம். துயர்

கூர் வாடை - துன்பம் மிகுதற்குக் காரணமான வாடை. தூஉம் - தூவுகின்ற. இரைதேர் ஈரைக்கு எவ்வமாகத் தூஉந் துவலைத் துயர் கூர் வாடை என்றது, உயிர்களிடத்து இரக்கமின்றித் துன்ப மிகுதியையேசெய்யும் வாடை என, அதன் கொடுமையை விதந்தோதியவாறு.

பாட்டு - ஈ0ச : தலைவி கூற்று

துறை :—பிரிவின்கண் ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது. அஃதாவது, தலைவன் பிரிந்தமையால் உண்டாய வருத்தத்தை ஆற்றுளாய தலைவியை நோக்கி 'நீ இங்ஙனம் ஆற்றுயாகின்ற தென்?' என வினைய தோழிக்குத் தலைவி தன் ஆற்றுமைக்கு ஏதுக் கூறியது.

(2) 'சிறிய வுள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ?' என்ற தோழிக்குக் கிழத்தி கூறியதூஉமாம். அஃதாவது, 'சிறிய சிறிய பிற செய்திகளை நினைக்கும் உபாயத்தாலே பெரிதாகிய காமநோயை மறந்து ஆற்ற வேண்டாவோ?' என்ற தோழிக்கு, அங்ஙனம் ஆற்றமாட்டாமைக்குத் தலைவி ஏதுக் கூறியதூஉமாம.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர், பிரிவுத் துன்பத்தை ஆற்றவொண்ணுத பனிக்காலத்தும் பிரிந்துறைவாராயினர்; அங்ஙனம் உறையும் நாட்களும் பற்பலவாக நீள்கின்றன; யான் இனி எங்ஙனம் ஆற்றுவேன்?' என்று கூறுகின்றாள்.

ஈ0ச. அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்தின் தண்சிதர் உறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியும் நாளும் பலவா குவவே.

—காவன் முல்லைப்பூதனார்.

(இ - ள்) அம்ம வாழி தோழி - தோழி யான் கூறுவதனைக் கேட்பாயாக, காதலர் - நந்தலைவர், நூல் அறு முத்தின் தண் சிதர் உறைப்ப - கோத்த நூலற்றுழி முத்துக்கள் சிதறுமாறு போலக் குளிர்ந்த மழைத்துளிகள் சிதறுகின்ற, நாள் ஆ தாளித் தண்பவர் மேயும் - நாட்காலத்தே பசுக்கள் தாளியறுகின் குளிர்ந்த கொடியை மேய்கின்ற, பனிபடு நாள் பிரிந்தனர் - பனி மிக்கு வீழ்கின்ற இந்நாளினும் பிரிந்துறைவாராயினர், பிரியும் நாளும் பல ஆகுவ - மேலும் அவர் அங்ஙனம் பிரிந்துறையாகின்ற நாள்கள் தாமும் பற்பலவாக நீண்டன.

விளக்கம்:—அம்ம: கேட்பித்தற்கண் வந்தது. யான் கூறுவதனைக் கேட்க, என்றவாறு. வாழி: உரையசை. நீ வாழ்வாயாக என வாழ்த்து முகத்தானே இனி யான் வாழ்கல்லேன் எனக் குறித்தாள் எனினுமாம். காதன் மிக்கோர் பிரிந்திருந்து ஆற்றெணுக் காலமாகிய பனிபடு நாள் என்பாள், தலைவர் என்னுது காதலர் என அக்கிழமையைத் தெரித்தோதினாள். நூல் - முத்துமாலையின்கண் உள்ள கோக்கும் நூல். நூலற்ற போது யாண்டும் சிதறும் முத்துக்கள், மழைத்துளி சிதறி வீழ்தற்கு உவமை. இது வினை மெய் உருவென்னும் மூன்றும் பற்றி வந்த உவமை என்க. வாடையின் குளிர்க்கொடுமையை இது மிகுவிக்கும் எனபாள், 'தண் சிதர்', என்றாள். சிதர்-துளி. உறைத்தல்-துளித்தல். நாள் - விடியற்காலம். தாளிப்புல்லின் குளிர்ந்த கொடியினை ஆமேயும் என்றது, என் பெண்மை நலனெல்லாம் பசலையுண்ணுகிற்கும் என்னும் குறிப்புடையது.

பனிபடுநாள் - கூதிர்காலம். பிரியவெண்ணுத நாளினும் பிரிந்தனர்; மேலும் பிரிந்துறையும் நாளகளும் சில ஆயின் ஒருவாறு ஆற்றுவன்; அவைகளும் பலவாகின்றன, என்பாள், 'பிரியும் நாளும் பல வாகுவ' என்றாள்.

"ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு." (திருக்குறள் - கஉசுக)

என்பவாகலின், பருவம் வந்து சிலநாளே ஆகியும் அவை பலவாகுவ என்று ஏங்கினாள் என்க. இங்ஙனமாகலின் யான் ஆற்றுவதெவ்வாறு என்றவாறு.

இனிச் சிறிய உள்ளிப் பெரிய மறக்கவேண்டும் என்றது, 'தம் மனைக்கண் நிகழும் வேறு வேறு செய்திகளிலே மனம் போக்கி, அம் மனத்தின்கண், பெரிதாக உறையும் பிரிவினை உள்ளாது மறக்க வேண்டும்; அங்ஙனமின்றி நீ அதனையே உள்ளி ஆற்றுயாகின்றதென்?' என, விளைய தோழிக்கு அச் சிறியவற்றை யான் சிந்திப்பதெங்ஙனம்? இத்துன்பம் பிறிதொன்றனை நினைக்கவிடாமல் என் னெஞ்சைச் சிறை கொண்டது என்றாளாக, இரண்டாவது துறைக்குக் கூறிக்கொள்க.

இதற்கு இங்ஙனம் கூற அறியார், தலைவன் அவள்மாட்டுச் செய்த தலையளியைச் சிறிய என்றும், அதனை நினைந்து பெரிய கொடுமையை மறப்பாய் என்றாள் என்றும், இங்கு வாராமற் கழியும் நாள்களின் எண் சிறிய என்றும், அவர் வாராது முன்னர்க் கழிந்தநாள் பெரிய என்றும், இச் சிறுமையை எண்ணி அப் பெரியவற்றை மறந்திடுக என்றாள் என்றும், தத்தமக்குத் தோன்றிவாறே கூறுவாரும் உளர்.

பாட்டு - கஎநு : தலைவி கூற்று

துறை: வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரைபொருட்குப் பிரிந்தான் காலம் நீட்டித்திருந்தானாக, அப்பிரிவினைப் பொறாது கலங்கித் தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கித் 'தலைவருடைய கேண்மை வாய்மையாகாமல் என் நினைவின் மட்டுமே நின்று என்னைப் பெரிதும் வருத்துவ தொன்றுயிற்று' என்று கூறுகின்றாள்.

கஅடு. புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணெடு நினைப்பா கின்றே.

—நக்கீரர்.

(இ - ள்.) புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை - தோழி! குறவனுடைய தோட்டத்தின்கண்விளைந்த பொன்போற் போற்றப்பட்ட சிறிய தினையில், கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல் - புதிதுண்டற் காரணமாகத் தெய்வத்திற்கு அவிக் காட்ட இட்டுவைத்த செழிய கதிரினை, அறியாது உண்ட மஞ்ஞை - அறியாமல் தின்ற மயில், ஆடுமகள் வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும் - அரங்கின்கண் கூத்தாடுகின்ற விறலி வெறியுற்றுழாள் அவிநயம் காட்டும் வனப்பினை ஒத்துத் தன் புற்று நடுங்குதலைச் செய்தற்கிடமான, சூர்மலை நாடன் கேண்மை - தெய்வங்கள் உறைதற்குரிய மலைநாட்டையுடைய தலைவனது நட்பு, நீர்மலி கண்ணெடு நினைப்பு ஆகின்று - நீர் நிரம்பிய கண்களோடு வருந்தி நினைக்கும் நினைவுமாத்திரையே யாயிற்று.

விளக்கம்:—புனவன் - குறிஞ்சி நிலத்தில் வாழ்பவன்; புனத்தை உடையவன் என்க. துடவை-தோட்டம். தெய்வத்திற்கு அவிக்காட்ட விட்ட தினையாகலின் பொன்னைப் போற்றுமாறு போற்றப்பட்ட சிறு தினை என்றுழ் என்க. இனிப் பொன்போலும் நிறத்தையுடைய தினை எனினுமாம். கடியுண் - புத்துணவு. அஃதாவது, தினை நெல் முதலிய வற்றை விளைவிப்போர் ஒரு ஆண்டின் விளைவினை முதன் முதலாக உண்பதனைப் புதிதுண்ணல் என்ப. இப் புத்துணவினைத் தெய்வத் திற்கு நிவேதித்துண்ணல் வழக்கம். இதனை,

"புனத்தினைக் கிள்ளிப் புதுவவிக்காட்டி நின் பொன்னடிவாழ்கவென்
றினக்குறவர் புதியதுண்ணும் திருமாலிருஞ் சோலை"

எனவரும் பெரிய திருமொழியானும்,

"சிறுதினை முந்துவிளை யாணர் நாட்புதிதுண்மார்" (புறம்-கசுஅ)

எனவரும் புறப்பாட்டானும் உணர்க.

தமது புனத்தின்கண் செழுமையான கதிரைத் தெய்வத்திற்கிட்டனராதலின், செழுங்கதிர் என்றாள். தனக்கு இயல்பாகவுள்ள அறியாமையால் தெய்வத்திற்கிட்டவற்றை உண்ணலாகாது என்று அறியாமல் தின்ற மயில் என்க. மஞ்ஞை - மயில். ஆடுமகள் - விறலி. விறலி - தெய்வமுற்றோள். அவிநயம் காட்டுங்கால் தோன்றும் வனப்புத் தோன்ற மயில் வெய்துற்று நடுங்கும் என்க.

"தெய்வ முற்றோ னவிநயம் செப்பின்
கைவிட் டெறிந்த கலக்க முடைமையும்
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையும்
துடித்த புருவமும் துளங்கிய நிலையும்
செய்ய முகமும் சேர்ந்த செருக்கும்
எய்து மென்ப இயல்புணர்ந் தோரே"

எனவரும் (சிலப். அரங். அடியார்க்-உரை) கலையாகலின், வனப்பென்றார். ஆடுமகள் என்றதற்குத் தேவராட்டி எனினுமாம்.

கடவுட்கிட்ட கதிரை அறியாதுண்ட மயில் வெய்துற்று நடுங்கும் என்றது, தலைவன் அரியன் என்பது அறியாமற் கேண்மைகொண்டு யான் இப்போது அக்கேண்மை காரணமாக வருந்தி நடுங்காகின்றேன் என்னும் குறிப்புடையதென்க. சூர்மலைநாடன் என்றதும், தீண்டி வருத்தும் சூர் போன்று, நம்மைக் கேண்மைகொண்டு வருத்தும் இயல்புடையன் என்பது தோன்ற நினைத்துணர்க.

நீர்மலிகண் - துன்பத்தாலே நீர் பெருகிய கண். நினைப்பு வருத்தஞ் செய்தலை 'நீர்மலி கண' என்பதனால் உணர்த்தினாள். எனவே, தலைவன் கேண்மை கூடிமகிழ்வதற்கு எதுவாகாது தனித்திருந்து நினைத்து வருந்துதற்கே எதுவாயிற்றென இரங்கியவாறும்.

பாட்டு - 60ஆ : தலைவி கூற்று

துறை : தலைமகன் தூதுகண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது. அஃதாவது, பரத்தையிற் பிரிந்த தலைவன் அவ் வொழுக்கத்தை மறைத்துத் தான் தீதிலன் என்று அறிவிக்குமாறு தலைவியின்பால் தூது விட்டானாக, அத்தூதன் கூறியதுகேட்டுத் தலைவி, தான் வாயில்நோந்தமை தூதனுக்குத் தோன்றத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியைநோக்கி 'நாடன் தீதில் நெஞ்சன் என்னும் சொல்லொடு தூதன் நம்பால் வந்துள்ளான். யாமும், அத்தூதன் மொழியை ஏற்று அத்தலைவர் மணந்த நாளில் இருந்த தன்மையேமாகவே இப்பொழுதும் இருக்கின்றோம் என்னும் செய்தியைத் தூதுவாயிலாய் அவர்க்கு அறிவிப்போம்' என்று கூறுகின்றாள்.

கo சு. புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி அருவியின் தோன்றும் நாடன்
தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான்மணந் தனையமென விடுகந் தூதே.

—கபிலர்.

(இ - ள்.) தோழி—, புல்வீழ் இற்றிக் கல் இவர் வெள் வேர் - புல்லிய விழுதாகிய இற்றியினது மலையின்கண் படர்கின்ற வெள்ளிய வேர்கள், வரைஇழி அருவியில் தோன்றும் நாடன் - அம்மலையினின்றும் வீழாகின்ற அருவிபோலத் தோன்றுகின்ற மலைநாட்டையுடைய தலைவன், தீதில் நெஞ்சதுக் கிளவி - குற்ற மற்ற நெஞ்சத்துணடாகிய மொழி, நம்வயின் வந்தன்று - தூதன்வாயிலாய் நம்பால் எய்திற்று, நாமும் நெய்பெய் தீயின் எதிர்கொண்டு - இனி யாமும் நெய்பெய்யும் கால் அதனை விரைந் தேற்கும் தீயைப்போன்று அவன் மொழியை ஏற்றுக்கொண்டு, தான் மணந்தனையம் எனத் தூது விடுகம் - அவன் எம்மை மணந்த காலத்தே எத்தன்மையேமா யிருந்தோம்; அத்தன் மையேமாகவே இருக்கின்றேம என்று அவனுக்குக் கூறும்படி தூதுவிடுவேமாக.

விளக்கம்:—புல்வீழ் - புல்லுகின்ற வீழ் எனினுமாம். இற்றி - ஒருவகை மரம்; இதனை இச்சி என இக்காலத்தார் வழங்குப. இம் மரம் யாதானும் பிறிதோர் மரத்தைப்பற்றியே வளரும் இயல்பினது. இவர்தல் - படர்தல் - கல்லின்மேற் பற்றிப் படர்தலின், கல்லிவர் இற்றிவேர் என்றார். வெள்வேராகலின் அருவிபோற் றோன்றும் என்க. வரையிழி அருவி - மலையினின்றும் வீழ்கின்ற அருவிநீர் ஒழுக்கு. வெள்வேர் அருவிபோற் றோன்றும் என்றது தீதுள நெஞ்ச ஞகவும் தீதில் நெஞ்சினளாகத் தன்னைக் காட்டுகின்றார் என்றவாறு. தீதில் நெஞ்சன் எனத் தூதன் கூறினளாக, அதனைக் கொண்டு கூறு வாள், 'தீதில் நெஞ்சத்துக் கிளவி' என்றார். தீதுடைய நெஞ்சத்துக் கிளவி என்பது குறிப்பு. கிளவி: சாதியொருமை. அவன் பரத்தை வயிற்பட்டானாக அவனது கிளவி நம் வயின் வந்தது என்றார் என்க. வந்தன்று - வந்தது. குடிப்பிறப்பாட்டியேமாகிய யாமும் அதனை மெய்யென்றே ஏற்றேம்போல ஏற்றுக்கோடலன்றி வேறென் செய்தும் என்பாள், 'நாமும் நெய்பெய் தீயின் எதிர்கொண்டு தூது விடுகம்' என்றார். கணவன் குற்றத்தை ஒல்லும்வகை மறைத்து அவனை ஏற்றுக்கோடலே குடிப்பிறப்பாட்டியர்க் கியல்பாவதை—

"சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்
காக்கை கடிந்தொழுகல் கூடுமோ
கூடா தகவுடைய மங்கையர் சான்றாண்மை
சான்றார் இகழினுங் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்." (உo: அசு-அக)

என வரும் பரிபாடலானும் உணர்க. கரணக்காலே செய் பெய்தீ துள்ளி எழுந்தமை கண்டாள் ஆதலின், அதனையே தாம் எதிர்கொள் ளும் எழுச்சிக்கு உவமை கூறினள். தான் மணந்த ஞான்று "நின்னைப் பிரியேன் பிரியின் உயிர் வாழேன்" எனச் சூளுரைத்தமையை மறந்து அவன் பிரிந்து இன்ஞ செய்வானெயினும் யாம் அன்பிற் பிறழாது அன்றே போல்குதும் இன்றும் என அறிவுறுத்துவேம் என்பாள், 'தான் மணந்தனெயம்' என்றாள். 'அவன் மணந்த பொழுது எத்தகைய அன்பி னேம்; அத்தகைய அன்பினேமாய் இன்றுமுளேம்,' என்றபடி. தான் பிறிதோர் தூதுவிடுவாள் போன்று கூறினளேனும் தீதுடைய நெஞ் சம் உளராயினும் அவரை ஏற்றுக்கொள்ள இசைந்தேம் எனத் தலைவன் விட்ட தூதனுக்கு அறிவிப்பதே தலைவி கருத்தாகக் கொள்க.

பாட்டு - கoஎ : தலைவி கூற்று

துறை :—பொருள்முற்றி வந்த தலைமகனுடைய கிழத்தி காமமிக்க கழிபடர் கிளவியாற் கூறியது. அஃதாவது, தலைவ னுடைய பிரிவாற்றாது அவன் வருகையை,

"வருகமற் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதலெய் எல்லாங் கெட." (திருக்குறள் - கஉசுஉ)

என ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்த தலைவி, அவன் மீண்டு வந்துழி அவனெடு பாயல்கொண்ட, இரவு புலர்ந்தமையைக் கூவியறிவித்த சேவற்குக் கூறுவாளாய்த் தனது காமமிகுதி யைக் கூறியது.

இதன்கண், தலைவி, 'என் உயிர்த் தலைவனெடு பாயல் கொண் டிருந்த என்னை எழுப்பிய சேவலே! நீ பூணைக்கு இரையாகிக் கொடிய துயரை நுகர்வாயாக,' என வைகின்றாள்.

கoஎ. குவியிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படூஇயரோ நீயே நெடுநீர்
யாணர் ஊரன் தன்னெடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே.

—மதுரைக் கண்ணனார்.

(இ - ள்.) குவி இணர்த் தோன்றி ஒண் பூ அன்ன - குவிந்த கொத்துக்களையுடைய செங்காந்தளினது ஒள்ளிய பூவைப்போன்ற, தொகு செந் நெற்றிக் கணங் கொள் சேவல் - தொக்குச் சிவந்த கொண்டையையுடைய திரளையுடைய சேவலே,

நள் இருள் யாமத்து இல் எலி பார்க்கும் பிள்ளை வெருகிற்கு அல்கு இரையாகி - செறிந்த இருளையுடைய இடை இரவின்கண் இல்லத்திலுள்ள எலிகளைத் தனக்கு இரையாக ஆராய்கின்ற குட்டியாகிய காட்டுப் பூனைக்கு இட்டு வைத்துண்ணும் இரை யாக அகப்பட்டுக் கடிய துன்பத்தை எய்துவாயாக; அஃதெற் றுக்கெனின், நீ யாணர் நெடுநீர் ஊரன் தன்னெடு வதிந்த ஏம இன் துயில் எடுப்பியோய் - நீ புது வருவாயினையுடைய ஊரை யுடையவனும் உடனே செய்யவேண்டுவதனைக் காலந் தாழ்த்துச் செய்யும் தன்மையுடையவனுமாகிய தலைவனெனே தங்கிய என் னுடைய மிக இனிய துயிலினின்றும் எழுப்பினை யாகலான்.

விளக்கம்:—குவியிணர்: வினைத்தொகை. இணர் - கொத்து. தோன்றி - செங்காந்தள். தோன்றியின் குவிந்த இணரையுடைய ஒள்ளிய பூ என மாறினுமாம். தோன்றிப்பூ, சேவலின் கொண்டைக்கு நிறமும் உருவமும் பற்றிவந்த உவமை. நெற்றி - கொண்டை: ஆகு பெயர். பெடைக்கணங்களை வலிந்து கொள்ளும் சேவல் என்பாள், 'கணங்கொள் சேவல்,' என்றாள். கணம் - திரள். கணங் கொள் சேவல் என்றது. 'நின் சுற்றமாகிய பெடைகளின் கூட்டத்திற் பிரிந்து கடுநவைப் படுஇயர்' என்னும் பொருள்படநின்ற குறிப்புச் சொல். தன் கேளிரினின்றுந் தன்னைப் பிரித்தமையால் நீயும் நின் சுற்றத்தி னீங்கிக் கெடுக என்றவாறு. சேவல்: வினி. நள்ளிருள் - செறிந்த இருள். பிள்ளை வெருகு - குட்டியாகிய காட்டுப்பூனை.

"அவற்றுட், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை
தவழ்பவை தாமு மவற்றே ரன்ன." (தொல் - மரபு. சூ-சு-கு)

என்னும் விதியினில் தாமும் என்ற இலேசானே பிள்ளை நடப்பவைக்கு வந்தமையை அமைத்தனர் பேராசிரியர். இல் லெலி - வீட்டின்கண் வாழும் இயல்புடைய எலி. பார்த்தல் - ஆராய்தல். அல்கு இரை - ஒரே முறையில் விழுங்காது வைத்துப் பிய்த்துண்ணப்படும் இரை. எனவே சித்திர வதைக்கு ஆளாவாய் என்றவாறும். கடுநவை - பெருந் துன்பம். படுஇயர் - படுவாயாக.

"பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்." (திருக்குறள் - நுகக)

என்பவாகலின், 'எனக் கின்னுமை செய்த நீ இன்னுமை எய்துகி,' என்று கூறியவாறும்.

நெடுநீர் - உடனே செய்யவேண்டிய தொன்றனை அங்ஙனம் செய் யாது கால நீட்டித்திருத்தற் பண்பு. தலைவன் தன்னைப் பிரிந்து வருவல் என்ற பருவத்தே வாராமல் காலநீட்டித்திருந்து வந்தான் என்பது தோன்ற, 'நெடுநீர் ஊரன்,' என்றாள். துயில் இயல்பாளை உயிர்கட்கு இன்பமாவதாகலின், 'இன்துயில்,' என்றும், அவ் வின்பத்தின் மேலும் தான் தலைவனெனே பாயல் கொண்ட பேரின்பமும் உடைத்தாகலின், இன்பத்தின்மேலும் இன்பமுடைய துயில் என்பாள், 'ஏம இன்துயில்,' என்றும் கூறினாள். ஏமம் - இன்பம்.

இது தனக் கின்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றாண் மையின் ஒரீஇத் தன் காம மிகுதி காரணமாகப் பிறவுயிர்க் கின்னுமை கருதிக் கூறலின், 'காம மிக்க கழிபடர் கிளவி,' யாயிற் றென்க.

பாட்டு - கஅ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண் டழிந்த தலைமகள், தோழிக்குக் கூறியது. அஃதாவது, 'கார்ப்பருவந் தொடங்குங்கால் மீண்டு வருவேன்,' எனக் கூறிச் சென்ற தலைவன், அப் பருவம் வந்த பின்னரும் வாராமையானே பெரிதும் வருந்திய தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

இதன்கண், 'மலைகளிலே முகில்கள் தவழ்கின்றன ; மாலைப் போதில் ஆன்கள் தங் கன்றை நினைந்து அவற்றின்பால் செல்கின்றன ; முல்லைப்பூக்கள் மலருஞ்செவ்வி யடைந்தன ; இன்னும் தலைவரோ வந்திலர் ! இனி, யான் என் வருத்தத்தைத் தாங்கி உயிர்வாழ்ந்திருத்தற்கு இயலாதென் போல ஆய்விட் டேன் ; என் செய்வல் !' எனத், தலைவி தோழிக்குக் கூறு கின்றாள்.

கஅ. மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை ஆசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று
உய்யேன் போல்வல் தோழி யானே.

—வாயிலான் தேவனார்.

(இ - ள்.) தோழீ—, மழை விளையாடும் குன்று சேர் சிறு குடி - முகில்கள் தவழ்ந்து விளையாடாநின்ற மலையினைச் சார்ந் திருந்த இச் சிற்றூரின்கண், கறவை கன்றுவயின் படர - மேய் தற்குச் சென்றிருந்த பசுக்கள் தங் கன்றை நினைந்தனவாய் அவை யிருக்குமிடத்திற்குச் செல்லா நிற்ப, புறவில் பாசிலை முல்லை ஆசு இல் வான் பூ - முல்லைநிலத்தின்கண் பசிய இலையை யுடைய முல்லையினது குற்றமற்ற வெள்ளிய பூக்கள், செவ்வான் கொண்டன்று - செக்கர் வானத்தின் அழகினைக் கொண்டது, யான் உய்யேன் போல்வல் - இனி யான் உயிர் வாழ்ந்திரேன் போலும்.

விளக்கம் :—'கார்ப்பருவத் தொடக்கத்தில் தலைவர் வருவர் என்னும் எண்ணம் பற்றுக்கோடாக என் உயிர் இதுகாறும் நின்றது ; இப்பொழுதோ அவர் குறித்த பருவம் வந்தும் அவர் வந்திலர் ஆகலின், இனி என்னுயிர் அப் பற்றுக்கோடுமற்று என் உடலினின்றும் நீங்கும்' என்பாள், 'யான் உய்யேன் போல்வல்' என்றாள்.

மழை விளையாடுங் குன்றென்றது, கார்ப்பருவம் வந்தமையைக் குறிப்பாற் கூறியவாறும். அன்பின் றுண்டுதலாலே கறவைகள் கன்றை நினைந்து செல்லல், தன்னை நினைந்து மீளவேண்டிய தலைவன் வாராமையை நினைப்பித்து வருத்தும் என்பாள், 'கறவை கன்று வயிற் படர,' என்றாள். இனிக் கறவை கன்றுவயிற் படரும் கார்ப்பருவத்து முதலுள் மாலையே தலைவன் வருவன் எனக் குறித்துச் சென்ற கால மாதல்பற்றி அம் மாலைக்காலம் வந்தமையையும் அதனால் தெரி வித்தாள்.

புறவு - முல்லைநிலம். இது செம்புலமாகலின், இதனைச் செவ் வானத்தோடும் இதன்கண் மாலையில் மலரும் முல்லைப்பூவினை நாண் மீன்களோடும் ஒப்பித்தாள். தான் குறித்த பருவத்தே தவறாது பூக்கும் பூ வென்பாள், 'ஆகில் வான்பூ,' என்றாள். முல்லைப்பூவிற்கு ஆகின்மை காட்டுமுகத்தானே தலைவன் தன் சொல் பிறழ்ந்து ஆசுடையனாதல் குறிப்பா லுணர்த்தினாள். ஆசு - குற்றம் செவ்வான் - செக்கர் வானம். கொண்டன்று - கொண்டது. 'யானே உய்யேன் போல்வல்,' என்றதன்கண் ஏகாரம் அவர் உய்வர் எனத் தலைவனைப் பிரித்தலால், பிரிநிலை. உய்யேன் - உயிர் கொண்டிரேன். இனி யான் இறந்துபடுவல் என்றவாறு.

பாட்டு - கஅக : தோழி கூற்று

துறை : சிறைப்புறம், தலைவி வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்றத் தோழி தலைமகட்குக் கூறியது. அஃதாவது, வரைந்துகோடலிற் கருத்தின்றிக் களவின்பமே வெஃகி ஒழுகுந் தலைவன், ஒருநாள் மனையயலே வந்தமை கண்ட தோழி, அவன் வரவுணராதாள்போலே தலைவிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது ;

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அன்னாய்! நின் னைத் தலைவன் பிரியாது உடனுறையும் பொழுதும் நினது நுதல் அவன் பிரிந்துள்ள இப்பொழுது கவினழிந்திருப்பது போன்றே இருக்கின்றது, இஃதென்னை ?' என வியந்து கூறு கின்றாள்.

கஅக. முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கோ
புணரி இகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னே நன்னுதற் கவினே.

—நம்பி குட்டுவனார்.

(இ - ள்.) முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கோ - முளைபோன்ற கால்களையுடைய இறுமீனின் வளைந்த முதுகை யுடைய பெரிய இனத்தை, புணரி இகு திரை தரூஉம்

துறைவன் - கடலில் தாழும் அலைகள் கொணர்ந்ததவும் துறை யையுடைய தலைவன், புணரிய இருந்த ஞான்றும் - நின்னைப் புணருவான் உடனுறையும் பொழுதும், நன்னுதல் கவின் இன் னது மன் - நின்னுடைய நல்ல நுதலின் அழகு அவன் பிரிந் தள்ள இப்பொழுது அழிந்துள்ளது போல அழிந்தே யுளது ; இங்கிலை இரங்கற் குரியது.

விளக்கம் :—முடக்கால் என்று பாடமோதி வளைந்ததால் என்பாரு முளர். 'முடக்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை' என்புழிக் கேள் விக்கின்ஞாதாதல் உணர்ச்சி கருவியா யுணர்க. இருலின் கால்கள் முட் போறலும் கண்டறிக. இருல்மீன் விற்போல் வளைந்திருத்தலின், 'முடங்குபுறம்' என்றாள். கடலில் இருமீன் பெரிய பெரிய கூட்டங்க ளாகக் காணப்படும் இயல்பு பற்றிப் 'பெருங்கிளை' என்றாள்.

இகுதல் - தாழ்தல்: தாழ்ந்திரையே இருமீனை உந்திக் கொணர் தலின், 'இகு திரை தருஉம்' என்றாள். நாடா வளமுடைய துறைவன் என்றவாறு. கடலலைகள் தரும் இருலைத் தன் முயற்சியின்றிப் பெற் றமைகின்ற தலைவன் என்றது, ஊழால் தரப்பட்ட களவின்பமே நுகர்ந்து வரைதல் முயற்சியின்றி அமைபவன் என்றவாறு.

புணரிய: செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், புணரும் பொருட்டு நின்னோடு உடனுறையும் பொழுதும் என்க. புணரும் பொருட்டே வருதலன்றி, வரைந்துகொண்டு அறஞ்செய்யும் கருத் தினன் என்றிகழ்ந்தவாறு.

இன்னது என்றது, அவனின்னோடில்லாமற் பிரிந்த இப்பொழு திருந்தாற் போல்வது என்றவாறு. அவன் நின்னைப் பிரியாது உட னுறையும் பொழுதும் பிரிந்துறையும் இப்பொழுது போன்றே கவின் அழிந்துளது நின்னுதல் என்றது, இக்களவொழுக்கமாத்திரையானே இவள் வேறுபாடு நீங்காது வரைந்து கோடல் வேண்டும் எனத் தலைவ னுக்கு அறிவுறுத்தும் குறிப்பிற்றென்க. புணர்வுக் காலத்தும், பிரிவஞ் சும் புன்கண் உடைமையின், புணரிய விருந்த ஞான்றும் கவினழிவ தாயிற்றென்க. கவின் இன்னது என்றது, கவின் இப்பொழுது பசந் திருப்பது போன்றது என்றவாறு.

பாட்டு - ககஅ : தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு அழிந்த தலைமகள், தோழிக்கு உரைத்தது ; தலைமகனைக் கொடுமை கூறித் தலைமகளைத் தோழி வற்புறீஇயதுமாம். அவையாவன: தலைவன் குறித்த பருவம் வந்த பின்னரும் அவன் வாராமை கண்ட தலைவி, உளம் நொந்து தோழிக்குக் கூறியது. அல்லது, பிரிந்து காலம் நீட்டித்த தலைவ னுடைய கொடுமை கூறுமுகத்தானே தலைவியைத் தோழி ஆற்றுவித்ததாகுமாம்.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "பிரிவாற்றுமை யாலே வருந்தும் நம்மை, இவ்வாடை மேலும் இறந்துபாடு செய்

யும் இன்னமை செய்வதாக, இவ்வல்லற் காலத்தும், நீயிர் என்னையினீர்?' என, வினவவும் கருதாத தலைவர், இனி யாம் இறந்துபட்ட பின்னர் வருவாராயினும், வாராராயினும் நமக்கு என்ன உறவினையுடையர் ஆவர் '' என நொந்து கூறுகின்றாள்.

ககo. வாரா ராயினும் வரினும் அவர்நமக்கு
யாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பீலி ஒண்பொறிக் கருவிளை யாட்டி
நுண்முள் ஈங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மலர் உதிரத் தண்ணென்று
இன்ன தெறிதரும் வாடையொடு
என்ன யினள்கொல் என்ன தோரே.

—கிள்ளிமங்கலங்கிழார்.

(இ - ள்.) தோழி—, நீர நீலப் பைம்போது உளரி - நீரி லுள்ள நீலத்தினது பசிய போதுகளை அசைத்து, புதல பீலி ஒண் பொறிக் கருவிளை ஆட்டி - புதலிலுள்ள மயிற்பீலியின் ஒள்ளிய பொறிகளையுடைய கருவிளை மலரை அசைத்து, நுண் முள் ஈங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த வண்ணத் துய்ம்மலர் உதிர - நுண்ணிய முட்களையுடைய ஈங்கையினது செவ்விய அரும்புகள் மலர்ந்த நிறமும் தூய்மையும் உடைய பூக்கள் உதிரா நிற்ப, தண் என்று இன்னது எறிதரும் வாடையொடு - குளிர்ந்து இன்னதாக வீசாநின்ற வாடைக்காற்றினால், என்னையினள் என்னதோர் - எத்தன்மையள் ஆயினளோ என்று எண்ணுதலும் செய்யாதவராயினர் நந்தலைவர், வாராராயினும் வரினும் அவர் நமக்கு யாராகியர் - இனி நம்மை நினைந்து வாராதவராயினும் அன்றி வருவார் ஆயினும் அவர் நமக்கு எத்தகைய உறவினர் ஆவர்.

விளக்கம் :—இனி இன்ன தெறிதரும் இவ்வாடைக்காலத்தே யான் இறந்துபடுவேன்; இறந்துபட்டபின்னர் அவர் வாராதிருத்தலும் வருதலும் ஆகிய செயல்களால் யாது பயன் என்பாள், 'வாராராயினும் வரினும் அவர் நமக்கு யாராகியர்' என்றாள். எனவே, உற்றுழித் தாங்கும் கேளிராகார் ஏதிலர் என்றவாறு. செய்யுளாகலான் சுட்டுச் சொல் முதற்கண் வந்தது. என்னையினள் என்னதோர் தலைவர்; அவர் நமக்கு யாராகியர் என்றியைத்துக்கொள்க. நீரவும், புதலவும், முள்ளவு மாய்ப் பற்றுக்கோடும், பாதுகாவலும் உடையவற்றையும் நிரலே அசைத்து, ஆட்டி, உதிர்த்து, எறியும் கொடுமையுடைய வாடை, அப் பற்றுக்கோடும் பாதுகாவலும் அற்றுத் தனித்த என்னைக் கொல்ல இன்னதாக எறிதரும்; இனியான் இறப்பன் என்பது கருத்தாகக் கொள்க. நீலம் - கருங்குவளை. உளருதல் - அசைத்தல். பைம்போது-

பசிய பூ. புதல - புதலிலே படர்ந்தனவாகிய. கருவீளை மலரின்கண் உள்ள புள்ளிகட்குப், பீலிக்கண் உவமை. ஊழ்த்த-மலர்ந்த. வண்ணம்-நிறம். இன்னு தெறிதரும் - இன்னுதாதாக வீசுகின்ற. வாடையொடு என்புழி, ஒடு உருபு, ஆனுருபின் பொருட்டாய் நின்றது. என்னுயினள் என்னுதோர் என்பதற்கு "எத்தன்மையள் ஆயினள் என ஒரு தூதின் வாயிலாய் வினவுதலேயும் செய்யாதோர்," என்பாருமுளர்.

தலைவர் நம்மை நினையாது எதிலர் ஆயினர் யான் இனி, இறந்து படுவல் என்றவாறு.

பாட்டு - ககக : தோழி கூற்று

துறை :—வரைவுநீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது. அஃதாவது, வரைதற் கருத்தின்றிக் களவின்கண் வந்தொழுகுந் தலைவன் சிறைப்புறத்தே வருதல் கண்ட தோழி, அவன் வருகையை உணராது தலைவிக்குக் கூறுவாள் போன்று, தாய் தலைவியின் மெலிவுகண்டு வெறியாட்டெடுப்ப எண்ணியிருக்கும் நிலைமையைக் கூறுமுகத்தானே வரைவு கடாயது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'உனது மெல்லிய தோளே நெகிழ்த்த வருத்தம் பிறி தொன்றுக, அதனை அறியாது இது நெடுவேளானே நேர்ந்ததென்றுன் வேல் மகன்; நந்தாயும் அஃதுண்மை யென்றே கருதாநின்றுள்; நம் இல்லத்துள்ளோர் அச் செல்லல் தீர்த்தற்கு வெறியாட முயல்வதாகிய பெரிய நகைப்பிற் கிடனுகிய நிகழ்ச்சியைக் கண்டு நகைக்கும் பொருட்டு நந்தலைவர் ஈண்டு வரின் நன்று' என்று கூறுகின்றுள்.

ககக. மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்
அதுவென உணரும் ஆயின் ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுசற் [1]சேழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

தீன்மிதி நாகனார்.

(இ - ள்.) தோழி மென் தோள் நெகிழ்த்த செல்லல் - தோழீ நின் மெல்லிய தோளே மெலிவித்த வருத்தம், வேலன் வென்றி நெடுவேள் என்னும் - வேன்மகன் வெற்றியையுடைய நெடிய முருகக்கடவுளானே வந்தது என்று கூறுவன், அன்னை

(பாடம்) 1. செழுமலை.

யும் அது என உணருமாயின் - நந்தாயும் அஃதுண்மை என்றே நினைப்பாளாயின், ஆயிடை இல்லோர் பெருநகை காணிய - அப் பொழுது நம்மில்லத்துள்ளோர் செய்யும் பெரிய நகைப்பிற்கிட மான செயல்களைக் காணும் பொருட்டு, கூழை இரும்பிடி கை கரந்தன்ன - குறிய கரிய பிடியானை கை மறைந்து தோன்றினைப் போலத் தோன்றும், கேழ் இருந் தூறுகல் கெழுமலை நாடன் - நிறத்தானே கரிய குன்றுக்கல் பொருந்திய நாட்டையுடைய தலைவன், சிறிது வல்லே வருக - சிறிதுபொழுது விரைந்து ஈண்டு வருவானாக.

விளக்கம் :—இதனுல் தலைவியின் தோள் காமநோய் மிகுதியால் நெகிழ்ந்தமையும், தாய் இம் மெலிவிற்குக் காரணம் என்னென்று ஆராய்வாள் வேலனை வினவியமையும், வேலன் இது தெய்வத்தான் வந்ததென்றமையும், அக் கூற்றைத் தாய் உண்மை யென்று கொண்ட மையும், அச்செல்லல் தீர்ப்பான் வெறியாடக் கருதி யிருக்கின்றமையும், தலைவனுக் குணர்த்தி இங்ஙிலையடைந்த தலைவியை விரைந்து வரைந்து கோடலே செய்யற் பாற்றெனத் தோழி அறிவுறுத்தியது உணர்க.

தலைவனுல் நிகழ்ந்த செல்லல் என்பாள், 'மென்றோள் நெகிழ்த்த செல்லல்' என்றாள். செல்லல் - வருத்தம். வேலன் - வேல் மகன்; வெறியாடும் பூசாரி. இவன் முருகனுக்குரிய வேலைக் கைக்கொண்டு நின்று ஆடுதலின், வேலன் எனப்பட்டான். நெடுவேள் - நெடிய புகழை யுடைய முருகவேள் என்க. மதவேளும் உண்மையின் நெடு வேள் என்றாள். நெடுவேள் என்னும் என்றது, நெடுவேளானே நிகழ்ந்ததென்னும் என்றவாறு. வேலன் அறியாது கூறினுனும் அன்னை நம்போன்று இளையளாயிருந்து மூத்தவளாகலின், இச் செல்லற்குக் காரணம் காமநோய் என ஆராய்ந்து காணற்பாலள். அங்ஙனம் ஆராயாது அவ்வேலன் கூற்றையே மெய்யென்று கொண்ட னள் என்பாள், அன்னையும் அதுவென உணரும் என்றாள். உம்மை: சிறப்பு. அன்னை அங்ஙனம் உணருமிடத்து இனி வெறியாட்டெடுத்தல் ஒருதலை என்பாள், 'ஆயிடை இல்லோர் பெருநகை காணிய' என்றாள். பெரு நகைக்குக் காரணமான செயல் என்க.

நகைத்தற்குரிய செயல் நிகழ்வுழி ஒத்த உளமுடையோர் கூடி யிருந்து நகைத்தல் மேலும் சுவையுடைத்தாகலின், இல்லோர் பேதை மைக்கு நகும் நம்மோடு நகுதற்குத் தலைவனும் ஈண்டு வருக என்ற வாறு. சிறிதே என்றது, பெரிதும் தம்மோடிருத்தற்கு இக் களவுக் காலந் தகுதியில்லாமை காட்டியவாறு.

பாட்டு - ககஉ : தலைவி கூற்று

துறை: வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரைந்துகொள்ளாமற் காலநீட்டித்தலால் தனக்குற்ற இன்னுமையைத் தலைவி தோழிக் குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி 'ஊரார் பழிச் சொல்லுக்கு அஞ்சியவிடத்துக் காமம் கெடாநிற்கும்; காமத்தை விடினே கற்பும் போம்; நாண்மட்டுமே எஞ்சும். இங்ஙன மாகலின், என்னுடைய நலன் களிற்றியானையால் முரிக்கப்பட்ட நாருடைய கிளையைப் போன்றதாயிற்று' என்று கூறுகின்றாள்.

கசஉ. கௌவை யஞ்சிற் காமம் எய்க்கும்
எள்ளற விடினே உள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசின் தோழியவர் உண்டஎன் நலனே.
—ஆலத்தூர் கிழார்.

(இ - ள்.) தோழி—, கௌவை அஞ்சில் காமம் எய்க்கும்- இவ்வூரவர் எடுக்கும் அலரை அஞ்சுமிடத்துக் காமம் மெலிவடையும், எள் அற விடினே உள்ளது நாணே - ஊரவர் பழிச் சொல் அறும்பொருட்டு அதனை விட்டுவிடுக என்றாலோ அதனை விடின் என்பால் எஞ்சி உளதாவது நாணம் மட்டுமே; இங்ஙன மாகலின் காமம் விடமாட்டாமலும் நாண் விடமாட்டாமலும், அவருண்ட என் நலன் - தலைவரானே உண்டெஞ்சிய என்னுடைய நலம், பெருங்களிறு வாங்க முரிந்து நிலம் படாஅ நாருடை ஒசியல் அற்றே - பெரிய களிற்றியானை வலைத்தமையால் முரிந்து தூங்கி நிலத்தினும் வீழ்ந்துபடாத நார்மிக்குடைய ஒடிந்த கிளையைப்போன்றது, கண்டிசின் - காண்பாயாக.

விளக்கம்:—காமமும் விடற்பாலதன்று; நாணமும் விடற்பாலதன்று. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று மறுதலையாகலின், ஒன்றைப் பேணி ஒன்றை விடுதலும் இயலாது என் நலன் கெடாநின்றதென்பாள், யானை முரித்த நாருடை ஒசியல் துவர ஒடிபட்டு வீழாமலும் பழைய நிலையை எய்த இயலாமலும் வாடித் தூங்குமாறுபோல என் நலன் வாடுகின்றதென்றாள். காமமும் நாணமும் மறுதலைப் பண்புகள் என்பதைக்,

"காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
யாமே பொறேனிவ் விரண்டு." (குறள் - கஉசஎ)

என்பதனானும் அறிக. கௌவை - அலர். அலர் தூற்றற்கு அஞ்சுமிடத்துக் காமம் அடக்கப்படுதல் வேண்டுமாகலின், அது மெலியும் என்பாள், 'காமம் எய்க்கும்' என்றாள். எய்த்தல் - இளைத்தல். காமம், தலைவன்பால் நிகழும் விருப்பமே ஆகலின், அதனை விடுதல் கற்பழிவாதலும் அறிக. இது காமத்தை அடக்கி நாணைப் பேணுதி என்ற தோழிக்குத் தலைவி கூறியதாகக் கொள்க.

காமம் கௌவையாலேதான் வளர்ச்சியுறுகின்றது; காமத்தை வளர்க்கும் அதற்கு அஞ்சில் அது வளராது தேய்ந்தழியும் என்றவாறு.

நார் - மரங்களில் நார்த்தன்மையுடையனவும் அல்லனவும் என இரு வகையுள்ளன. நாரில்லாதவற்றை ஒடிக்குங்கால் முழுதும் ஒடிந்து வேறும்; நாருடையன சவண்டு ஒடிந்தும் ஒடியாதனவாம். நார் - பட்டை என்று கூறினுமாம். ஒசியல் - ஒடிந்த கிளை. கண்டிசின் - காண்பாயாக.

பாட்டு - ககஙூ : தோழி கூற்று

துறை : பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது. அஃதாவது, பகற்குறியில் தலைவியோடளவளாய் நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, பகற்குறியிடம் வேறு குறிப்பாலுணர்த்துவாள் கூறியது.

இதன்கண், 'எம்மூர்க்கு அணித்தாக ஓர் ஊருணியுளது; அதன் அருகே ஒருசிறு கான்யாறும் உளது; அக்கான்யாற்றங் கரையருகே மக்கள் வழக்கற்ற ஒரு பொழில் உளது; யான் கூந்தலுக்கு எருமண் கொணரும் பொருட்டு அங்கு வருவேன்; என்னோடு தலைவியும் வருவள் காண்' எனத் தோழி தலைவனுக்குக் கூறுகின்றாள்.

ககஙூ. ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதும்
துன்னல்போ கின்றுற் போழிலே யாமெம்
கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

—மாதிரத்தனார்.

(இ - ள்.) தலைவ! பொய்கை ஊர்க்கும் அணித்து - ஊங்கே ஒரு பொய்கையுளது, அஃது இவ்வூர்க்கும் அணித்தாக உள்ளது, பொய்கைக்குச் சிறுகான் யாறு சேய்த்தும் அன்று - அப்பொய்கைக்கு நின்னலறியப்பட்ட சிறிய காட்டாறும் தூரிய தன்றி அணித்தாகவே உளது, பொழில் - ஆண்டுளதோர் பொழில் அதுதானும், இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும் துன்னல் போகின்று - அப் பொய்கையினும் கான்யாற்றினும் இரையை ஆராய்தற்குவரும் வெள்ளிய குருகுகளேயன்றிப் பிறவுயிர்கள் வழங்குதலொழிந்ததாகும், யாம் எம் கூழைக்கு எருமண் கொணர்கம் சேறும் - யாம் எம்முடைய கூந்தலுக்கிடும் எருமண் கொண்டு வருதற்பொருட்டு அவ்விடத்திற்குச் செல்லும் வழக்கமுடையேம், பெரும்பேதை ஆண்டும் வருகுவள் - பெரிய பேதைமையுடைய தலைவி எம்மோடே அவ்விடத்திற்கும் வருதலுண்டு.

விளக்கம்:—ஊர்க்கும் அணித்தே பொய்கை என்றாள், ஆண்டு மகளிர் சேறலை ஊரவர் அயிரார் என்பதுணர்த்தற்கு. தலைவன் நாள் தோறும் சிறுகான் யாற்றைக் கடந்து வருதலின் நின்னால் அறியப் பட்ட சிறுகான் யாற்றிற்கு உவ்விடத்தினுங்காட்டில் அவ்விடம் அணித்தென்பாள், 'பொய்கைக்குச் சேய்த்துமன்று சிறுகான் யாறு' என்றாள்.

இனி, அவ்வியாற்றங்கரைக்கும் பொய்கைக்கு மிடையே உள்ள தொரு பொழில். ஆண்டு இவ்வூரவர் வருவதில்லை என்றுணர்த்துவாள், 'இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும் துன்னல் போகின்று' என்றாள். துன்னுதல் - நெருங்குதல். இரைதேர் வெண்குருகு மட்டுமே ஆண்டு துன்னும் என்றது, தலைவியைக் கூட எண்ணும் நீ அக்குருகு போன்று அங்கே வருக என்று குறிப்பால் உணர்த்தியவாறு.

கூழை - கூந்தல். எருமண் - வண்டற் பொருக்கு மண். நீரோடு கரைந்து பின்னர் உறைந்துலர்ந்த மண் என்க. இம்மண்ணைக் கூந்தலி லுள்ள அழுக்கு, நெய்ப்பு முதலியன போதற்பொருட்டு மகளிர் கூந் தலிலிட்டு மூழ்குதல் இன்றும் கண்டது. கூந்தலுக்கு எருமண் கொணர்தற் பொருட்டுப் பெருங்குடி மகளாகிய அவள் வருதல் வேண்டா எனினும், விளையாடற் பொருட்டு எம்மோடு அவள் ஆண்டும் வரும் வழக்கமுடையள் என்பாள், 'பெரும் பேதை' என்றாள். தலைவி எம்மோடு வருதலைத் தாயர் முதலியோரும் அயிர்ப்பாரல்லர் என்ப துணர்த்தியவாறு. அப் பகற்குறியிடத்தே தலைவியை நிறுத்தி, யானும் எருமண் மேலிட்டு நீங்குவன் என்பாள், எருமண் கொணர்தற்கு ஆண்டுச் செல்லும் வழக்கமுடையேம் என்றாள் என்க. யாமும் என்றது, ஆயத்து ஏனை மகளிரையும் உளப்படுத்தி.

பாட்டு - ககசு : தோழி கூற்று

துறை: இடத்துய்த்து நீங்குந் தோழி தலைமகற்குக் கூறி யது. அஃதாவது, தலைவியை ஒரு பொழிலிடத்தே நிறுத்தி ஒன்றன்மேலிட்டுப் பிரிந்துவந்த தோழி தலைவனைக் கண்டு அதனை அவனுக்குக் குறிப்பானுணர்த்தியது.

இதன்கண், 'இயல் தேர்க்கொண்க! நெய்த னிலத்தின் கண் பாவையைத் துயிலக் கிடத்தி நின்குறியிடத்தே வந்தேன்; நாரை என் மகள் நெற்றியை மிதிப்பினும் மிதிக்கும்; யாங்கள் போதல் வேண்டும்; ஆதலால் விடைதருக!' எனத் தோழி தலைவனுக்குக் கூறுகின்றாள்.

ககசு. நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க
செல்கம் செலவியங் கொண்மோ அல்கலும்
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே.

—பொன்னாகனார்.

(இ - ள்.) இயல் தேர்க் கொண்க - அழகிய தேரையுடைய தலைவனே, நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி நின்குறி வந்த னென் - நெய்தனிலப்பரப்பின்கண் எனது பாவையைத் துயிலப் போகட்டு நினது குறியிடத்தே வந்துள்ளேன், செல்கம் - ஆத லால் யாங்கள் ஆண்டுச் செல்வேம், அஃதெற்றுக்கெனின், அல் கலும் ஆரல் அருந்த வயிற்ற - இரவு வருதலும், ஆரல் மீனைத் தின்று நிறைந்த வயிற்றையுடையவாகிய, நாரை என் மகள் தூதல் மிதிக்கும் - நாரைகள் என் மகளாகிய அப்பாவையின் நெற்றியை மிதிக்கும் ஆதலான், செலவியங் கொண்மோ-செல்ல நீ விடுப்பாயாக.

விளக்கம் :—நெய்தற் பரப்பு - நெய்தற் பூவினைப் பரப்பிய படுக்கையு மாம். வினையாட்டின் மேலிட்டுத் தலைவியை அழைத்து வந்தேன் என்பாள், 'நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி' என்றாள். கிடப்பி - துயிலக் கிடப்பி எனறவாறு. பாவையை மகவாகக் கொண்டு வினை யாடுதல் மகளிர் வழக்கம். அதனால் பாவையை 'என் மகள்' என்றாள். இனிக் கொல்லிப்பாவை போல்வாளை நெய்தற் பொழிலிடத் துய்த்து வந்தேன் என ஒரு பொருள் தோன்றலும் காண்க. தலைவியும் உடன் வந்து குறியிடத்துள்ளாள் என்பதைச் செல்கம் என்னும் பன்மையா லுணர்த்தினாள். மகள் தூதல் அல்கலும் நாரை மிதிக்கும் என்றது, இரவு வரிற் பிறர் அறிந்து அலர் தூற்ற ஏதுவாம் என்று குறிப்பான் உணர்த்திய தென்க. ஆரல் அருந்த வயிற்ற என்றதும் பிறர் பழி நாடித்திரியும் அறிவிலிகள் என்றவாறும்.

செல - போகும்படி. வியங் கொள்ளுதல் - விடுத்தல். நீ அவளோ டளவளாவியிருந்து இரவு வருமுன் செல்லவிடு என்றவாறு.

பாட்டு - ககநி : தோழி கூற்று

துறை : உடன் போக்கு ஒருப்படுத்த மீளுந் தோழி தலை மகற்குக் கூறியது. அஃதாவது; காவன் மிகுதியால் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காணமாட்டாத நிலையினை எய்திய பொழுது தலைவியைத் தலைவனுடனே போகும்படி கடைக்கூட்டி விட்டு ஒம்படுத்தும் தோழி தலைவனுக்குச் சொல்லியது.

இதன்கண் 'தோழி, தலைவனை நோக்கி, தலைவ! இப் பெரு மகள்பால் நீ யாண்டும் அன்புடையையாய்ப் பாதுகாத்தல் வேண்டும்; ஏனெனில் இவள் நின்னையன்றிப் பற்றுக் கோடாவார் பிறரை யிலள் அல்லளோ!' என்று ஒம்படை கூறுகின்றாள்.

ககடு. பெருநன் றுற்றிற் பேணுரும் உளரே
ஒருநன் றுடையள் ஆயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி இலைகவர்
பாடமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்

மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே.

—கபிலர்.

(இ - ள்.) ஆடு அமை ஒழுகிய தண் நறுஞ் சாரல் - அசையா நின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்த தண்ணிய நறிய மலைச் சாரலின்கண், மெல் நடை மரையா இலை கவர்பு துஞ்சும் - மெத் தென்ற நடையையுடைய மரையா இலைகளை விரும்பியுண்டு துயிலா நிற்றற்கு இடமான, நன் மலை நாட - நல்லுகிய மலை நாட்டினையுடைய தலைவனே, பெருநன்று ஆற்றிற் பேணுரும் உளரே - உலகத்தில் பெரிய நன்மையை ஒருவர் தமக்குச் செய் தால் அங்ஙனம் செய்தாரைப் போற்றுதவரும் உளரோ? எல் லோரும் போற்றுவர் அல்லரோ? அது சிறப்பன்று, ஒரு நன்று உடையளாயினும் - இவள் நினக்குச் செய்த நன்றி ஒரு சிறிதே உடையளாக இருப்பினும், புரி மாண்டு புலவி தீர அளி மதி - நீ இவளை விரும்புதல் மாட்சிமைப்பட்டு இவள் நின்னொடு பிணங்கினளேனும் அப்பிணக்கம் தீரும்படி அருளுதலைச் செய் வாயாக, நின்னலது இலள் - இவள் நின்னையன்றி வேறு பற்றுக் கோடில்லாதவள்.

விளக்கம்:—பெருநன்று - செயற்கரிய நன்மை; செய்யாமற் செய்த உதவியுமாம். சிறந்த நன்மை செய்வோரை உலகத்தார் போற்றுவர்; அங்ஙனம் போற்றுதல் சிறப்பன்று. சிறு நன்மை செய்தவரையும் போற்றுதலே சிறப்பாம். இவள் நினக்குச் சிறிய நன்மையே செய்பவ ளாயினும் போற்றுக என்று ஓம்படுத்தவாறு. ஈண்டு ஒரு நன்று என்றது, குலமகளிர் தங்கணவர்க்குச் செய்யும் கடமையை என்க. புரி - புரிதல் - விரும்புதல். எனவே, அன்பு மாட்சிமைப்பட்டு என்ற வாறு. இனி இல்லறம் நிகழ்த்தற்குரிய நுமக்கு அதன் பண்பு அன்பே யாகலின் அதன்கட் சிறந்து எனலுமாம்.

புலவிதீர என்றது, இவள் அறியாமையானே நின்னொடு பிணங்கிய விடத்தும் அதனைப் பொருட்படுத்தாது அது தீரும்படி என்றவாறு. நின் பெருந்தகைமையானே அருளுக என்பாள் புலவி தீர அளிமதி என்றாள். மதி: முன்னிலையசை.

மரையா - ஒருவகைக் காட்டு விலங்கு. மரையா தமக்கு வேண்டிய இலையுணவினை வேண்டியாங்குப் பெற்று இன்துயில் கோடற்குரிய மலை நாடன் என்றது, இவளும் நின் அருள் நீழலிலே தனக்குரிய எல்லா நலங்களையும் எய்தி இன்புற்று அமரும்படி அருள்க என்னும் குறிப் புடைத் தென்க.

மூங்கில் காற்றாலே பெரிதும் அசையும் இயல்புடையதாகலின் ஆடமை எனப்பட்டது. அமை - மூங்கில்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்" (குறள் - கoச)

"கொன்றன்ன இன்ஞ செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்" (குறள் - க0க)

எனவரும் திருக்குறள்கள் ஈண்டு நினைவு கூரற் பாலன.

பாட்டு - ககசு : தலைவன் கூற்று

துறை; இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. அஃதாவது. "ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்" ஒரு பொழிலிடத்தே ஒத்த கிழவனும் கிழத்தியும் தமியராய்த் தம்முள் தலைப் பெய்து கூடிப் பிரியுங்கால் தலைவன், தலைவியின் பெருமையைத் தன் நெஞ்சினுள்ளே பாராட்டியது.

இதன்கண், 'தலைவன் தனக்குள்ளே, என்னால் விரும்பப் பட்டு என் நெஞ்சத்தே உறைகின்ற தலைவி, வளமிக்க சோழ மன்னருடைய உறந்தையின்கண் உள்ள காவிரிப்பெருந்துறை யினிடத்தே வார்ந்துள்ள அறல் போன்ற நறிய தண்ணிய கூந்தலை யுடையளாவாள்' எனத் தலைவியைப் பாராட்டுகின்றான்.

ககசு. யானயந் துறைவோள் தேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே.

—இளங்கீரனார்.

(இ - ள்.) யான் நயந்து உறைவோள் - நெஞ்சமே என்னால் விரும்பப் பெற்று என்னுள்ளே உறையாநின்ற இத் தலைமகளினது, தேம் பாய் கூந்தல் - வண்டுகள் பாய்தற்குக் காரணமான கூந்தல், வளம் கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை - வளம் பொருந்திய சோழமன்னருடைய தலைநகராகிய உறந்தையின் கண் உள்ள பெரிய நீர்த்துறையிடத்தே, நுண் மணல் அறல் வார்ந்தன்ன - நுண்ணிய கருமணல் நீண்டு படிந்தாற் போன்ற, நல் நெறிய - நன்றாகிய நெறிப்பை உடையன, நறுந் தண்ணிய - மேலும் நறியவும் குளிர்ந்தனவுமாம்.

விளக்கம்:—தலைவியின் கூந்தலே பாயலாகக் கிடந்தாளுகலின், அதன்கண், தனது கண் மெய் மூக்காகிய மூன்று பொறிகளும் பெற்ற காட்சி முதலிய மூன்றின் பங்கனையும் பாராட்டினன் என்க. இதன்கண், அழகிய நெறிப்புடைமை காட்சியின் பத்தையும், நறுமணம் உயிர்ப்பின் பத்தையும் தண்மை ஊற்றின் பத்தையும் தந்தமை உணர்க. நயந்து உறைவோள் என்றது, என்னால் விரும்பப்பட்டு என் உளத்தே உறைகின்றவள் என்றவாறு. மூன்று காட்டினும் சோணுடே நீர்வள மிக்க

மையின் 'வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை' என்ருன். உறந்தை - உறையூர். இது சோழமன்னர் தலைநகராகலின், அதன் கண் துறையைப் பெருந்துறை என்ருன். ஈண்டுப் பெருந்துறை என்றது காவிரித்துறையை என்க.

கூந்தற் குவமித்தலின், ஈண்டு நுண்மணல் என்றது, நுண்ணிய கருமணலை என்க. அறல் - நீரோடிய வழி மணலிலுண்டாகும் வரிகள். இது கூந்தலின்கண் நெறிப்புக்கு உவமை. நன்னெறியவ்வே என்புழி வகரம் விரித்தல் விகாரம்.

பாட்டு - ககள : தோழி கூற்று

துறை : வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது. அஃதாவது வரைந்து கோடற்கு முயலாது களவின்கண் வந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானுக, அவன் வருகையை அறியாதாள் போன்று தலைவியின் நிலைமை தலைவனுக்குப் புலப்படும்படி தோழி தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி 'நந்தலைவன் வாரா திருப்பினும் இருப்பானுக ; நின் தோள்கள் மெலிந்து வளைகள் நெகிழ்ந்து வீழ்கின்றன ; இம் மெலிவினை அயலார் அறியாவாறு மறைத்தற்கு வளையல் விற்போரிடத்துச் சிறிய வளையல்களும் உளவாதலால் அவற்றை வாங்கிச் செறிய இட்டுப் பிறர் அறியா வாறு இதனை மறைப்போம்' எனக் கூறுகின்ருள்.

ககள. மாரி ஆம்ப லன்ன கோக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்
வாரா தமையினும் அமைக
சிறியவும் உளவீண்டு விலைஞர்கை வளையே.

—குன்றியனுர்.

(இ - ள்.) மாரி ஆம்பல் அன்ன கொக்கின் - கார்காலத்து ஆம்பல்மலர் போன்ற தோற்றத்தையுடைய கொக்கினது, பார்வல் அஞ்சிய பருவரல் ஈர் ஞெண்டு - பார்வையை அஞ்சிய துன்பத்தையுடைய ஈரிய நண்டு, கண்டல் வேர் அளைச் செலீஇயர் - தாழையின் வேரிடத்துள்ள தனது வளையிற் புகுந்து கொள்ளும்பொருட்டு, அண்டர் கயிறு அரி எருத்தில் கதழும் துறைவன் - ஆயர்களாற் பிணிக்கப்பட்ட கயிற்றினை அறுத்துச் செல்லும் எருதைப்போன்று விரைந்து செல்லுதற்குக் காரணமான கடற்றுறையையுடைய தலைவன், வாராது அமையினும்

அமைக - இவண் வாராதிருப்பினும் இருந்திடுக, விலஞர் கைவளை ஈண்டு சிறியவும் உள - வளையல் விற்போரிடத்து இவ்வி டத்தே சிறிய வளைகளும் உள்ளன.

விளக்கம் :—களவொழுக்கத்தே ஈண்டுத் தலைவன் வருதல், பிறர் அறிந்து அலர் தூற்றவும், இற்செறிக்கவும ஏதுவாகி நமக்கு இன்னல் தரும், வாராதமையிலோ நின் தோள்கள் மெலிந்து வளை நெகிழுமாற் றூற் பிறர் அறிந்து பழிதூற்ற ஏதுவாகும்; இரண்டும் இன்னாதனவே ஆயினும், இவற்றுள் தலைவன் வாராவழி வளைகழலின் விலஞர் இடத் துச் சிறிய வளையினை வாங்கிச் செறிய இட்டுப் பிறர் அறியாமற் பரிகரிக் கக்கூடும். தலைவன் வருகையை அறியாமல் மறைத்தல் கூடாது ஆகலின், அவன் வாராதமைதலே நன்று என்றபடியாம்.

எனவே, இது இரவுக்குறி பகற்குறியாகிய இருவகைக்குறியும் மறுத்துத் தலைவனைக் குறிப்பால் வரைவுகடாயதாத லுணர்க.

கொக்கு பறக்கும்போது வெண்ணிற முடையதாகவும் இருக்கும் போது குவிந்த ஆம்பற்பூவின் நிறமுடையதாகவும் காணப்படும். ஈண்டு இரைதேர்ந்து கூம்பியிருக்கும் கொக்கிற்கு, கூம்பிய ஆம்பன்மலர் உவமை யென்க. "கயக்கணக் கூம்புமுகைக் கணைக்கா லாம்பல்," (நற்-உஉ0) என்றும் "கொக்கின் கூம்பு நிலையன்ன முகைய வாம்பல்" (நற்-உஅ0) என்றும் இருவழியும் கூம்பியிருக்கும் நிலைக்கே பிறரும் உவமை கூறுதல் காண்க.

பார்வல்-பார்வை. கொக்கு, தன் இரை தப்பாது பிடித்தற் பொருட்டுக் கூர்ந்து நோக்கும் இயல்புடையது ஆகலின், அக் கூர்த்த பார்வையையே அஞ்சி நண்டு விரைந்தோடும் என்க. பருவரல்-துன் பம், தன்னை இரையாகப் பற்றிக்கொள்ளுங்கொல் என்னும் அச்சத் தால் உண்டாகிய துன்பம் என்க. நண்டு, கொக்கின்பார்வையை அஞ்சி வளைபுக விரையும் என்றது, நாம் அலர் தூற்றுவார் பார்வையை அஞ்சி அவர் அறியுமுன் தலைவன் இல்லத்தே புக விழைகின்றோம் என்னும் குறிப்புடையது என்க. வேரை-வேரின் மருங்கே உளள வளை. அண்டர்-ஆயர். கதழும்-விரைந்தோடும்.

பாட்டு-ககஅ : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, வரைந்து கோட லிற் கருத்தின்றி ஒழுகுந் தலைவன் வருகையை ஆர்வத்தோடு எதிர்நோக்கியிருந்த தலைவி, அந்திமாலையில் வாயிலோர் கத வடைக்குந் துணையும் 'வருவன் வருவன்' என எதிர்பார்த்து, அப்பொழுதும் வாராமையானே வருந்தித் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'அந்திமாலையும் கழியாநின்றது; நம் மாளிகையின் வாயில்காப்போர் கத வடைக்கும் பொருட்டு உள்ளே வருவீர் உளீரோ என்று ஆராய்

வாராகவும், தலைவர் இன்னும் வந்திலர், யான் என் செய்கோ,' எனக் கூறி வருந்துகின்றாள்.

கக௮. புள்ளும் மாவும் புலம்போடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநங் காத லோரே.

—நன்னுகையார்.

(இ - ள்.) தோழி—, புள்ளும் மாவும் புலம்பொடு வதிய - பறவைகளும் விலங்குகளும் தனிமையோடே தத்தஞ் சேக்கைகளிலே உறையாநிற்ப, நள் என வந்த நாரின் மாலை - நள் என்னும் ஒசையோடே வந்த அன்பில்லாத இம் மாலைக் காலத்தே, கடவுநர் - விருந்தினரை வினவி யறிவோர், பலர் புகு வாயில் அடைப்ப - எத்தகைய விருந்தினரும் தடையின்றிப் புகுதற்குத் திறந்துகிடந்த வாயிலை அடைத்தற்பொருட்டு, வருவீர் உளீரோ எனவும்-இன்னும் விருந்தினர் யாரும் உள்ளே வரவேண்டுவீர் இருந்தனிரோ என்று ஆராயும்பொழுதும், நங் காதலர் வாரார் - நம் தலைவர் வந்திலர்.

விளக்கம்:—தலைவன் சில அமயங்களில் விருந்தினரோடு தானும் ஒரு விருந்தினன்போலத் தலைவியின் மாளிகையிற் புகுந்து தங்குதலுண்டு. இவ் வழக்க மூண்மையை,

"புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்." (தொல்-களவு. கசு)

என வரும் நூற்பாப் பகுதியானும் உணரலாம்.

ஈண்டுத் தலைவன் அவ் விருந்தினருள் ஒருவனுய் மனையகம் புகுதல் கூடும் என்று எதிர்பார்த்திருந்த தலைவி, வாயிலோர் கதவடைக்குந் துணையும் அவன் வாராமை யுணர்ந்து தேற்றமாக இன்று தலைவன் வந்திலன் என்று வருந்துகின்றாள் என்க.

மாலைக்காலத்தே துணையொடு வதியும் புள்ளும் மாவும் உளவாயினும், தனிமையாலே வருந்தும் தலைவி தனித்துறையும் இயல்புடைய புள்ளையும் விலங்கையுமே நினைந்து ஒதுகின்றாள் என்க. புலம்பு - தனிமை. நள் என்பது ஒலிக்குறிப்பு. துணையின்றித் தனித்துறையும் உயிர்கட்குக் கொன்றன்ன இன்ன செய்யும் இயல்புடையதாகலின், மாலையை 'நாரின்மாலை' என்றாள். நார் - அன்பு. மாலைக்காலம் தனித்துறைவோர்க்கு இன்னுதாதலை,

"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்." (குறள். கஉஉச)

என்றும்,

"மாலையோ வல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது." (குறள். கஉஉக)

என்றும் வரும் திருக்குறள்களானும் உணர்க.

பலர்புகு வாயில் என்றது, அந்தணர் அறவோர் விருந்தினர் முதலிய பலரும் தடையின்றிப் புகும்பொருட்டுத் திறந்துகிடக்கும் வாயில் என்றவாறு.

கதவடைக்கும்போதும் வெளியில் யாரும் விருந்தினர் தங்கியிருப்பரோ என்று ஆராய்ந்து வினவியே அடைக்கும் வழக்கமுடைமையை இதனால் உணரலாம். பலர்புகு வாயில் என்றதனாலும் விருந்தினர் உளரோ என வினவி அடைத்தலானும் தலைவியின் குடிச்சிறப்பு நன்கு தெரித்தோதப்பட்டமை உணர்க.

பாட்டு - ககக : தலைவன் கூற்று

துறை:—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் பாங்கற்கு உரைத்தது. அஃதாவது, பாலதாணையானே தலைவியை ஒரு பூம்பொழிலிடத்தே தலைப்பட்டுப் புணர்ந்து நீங்கிய தலைமகனின் வேறுபாடு கண்டு, 'இஃதெற்றினையது?' என்று வினைய பாங்கனுக்குத் தலைமகன் கூறியது.

இதன்கண், தலைவன் தோழனை நோக்கி, 'ஒரு சிறிய அராக் குருளை, காட்டியானையைத் தின்றி வருத்தினைற்போன்று, ஒரு குறுமகள் என்னை வருந்தச் செய்தனள் காண்,' என்று கூறுகின்றான்.

ககக. சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இலையள் முகிழாள் எயிற்றள்
வளையுடைக் கையள்எம் அணங்கி யோளே.

—சத்திநாதனார்.

(இ - ள்.) நண்பனே, சிறு வெள் அரவின் அவ் வரிக் குருளை - சிறிய வெள்ளிய பாம்பினது அழகிய வரிகளையுடைய குட்டி, கான யானை அணங்கி யாஅங்கு - காட்டிடத்தே வாழும் பெரிய களிற்றியானையை வருத்தினைற்போன்று, எம் அணங்கியோள் - எம்மை வருத்தியவள், இலையள் முகிழாள் எயிற்றள் வளையுடைக்கையள் - ஆண்டான் மிக இளமை யுடையோளும் புதுவதாக முகிழ்த்தெழும் ஒளியுடைய பற்களையுடையாளும் வளையல் அணிந்த கையினையுடையாளுமாகிய ஒருத்தி காண்.

விளக்கம்:—காட்டிலே கட்டின்றித் திரியும் களிற்றியானையைச் சிறிய பாம்புக்குட்டி தன் பல்லாலே வருத்தினைற்போல, ஒரு சிறுமி

ஆண்மை மிக்க என்னைத் தன் முறுவலாலே வருத்தினாள் என்றவாறு. இவ்வேயள் என்றது, பன்னீராண்டகவையள் என்றவாறு. தான் நோக்குழி அவள் நிலம் நோக்கி நக்கனள் ஆகலின் அங்ஙகை தன்னை வருத்தியது என்றான் என்க.

நகையும் கையும் கூறினான், முறுவற்குறிப்புணர்ந்து தான் அவளைத் தழுவியமை தோன்ற.

வெள்ளரவு - வெண்ணிற நாகம்; கருநிற நாகத்தினைக்குதற்கு 'வெள்ளரவு,' என்றான். வெள்ளரவு, உயர்ந்த இனத்தது. எனவே தலைவியின் குடிபிறப்புயர்வு குறித்தான் என்க.

அவ் வரி - அழகிய கோடுகள். குருளை - சிறுபான்மை ஊர்வன வற்றிற்கும் வந்தது. யார்க்கும் அடங்கா ஆண்மை யுடையேன் என்பான், கானயானையை உவமை எடுத்தோதினான். சிறு வெள்ளரவு என்றதற்கு ஏற்பப் பெருங் கானயானை என்க.

"அளதா ழரவும் அரியும்வெந் தீயும் அரசுமெங்ஙன்
இளதா யினும்கொல்லும்." (அம்பிகாபதிக்கோவை-கஉசு)

என்பதனால், பாம்புக்குட்டியும் அணங்கும் என்பதனையும்,

"குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பு." (திருச்சிற் - உக)

என்பதனால் பாம்பு யானையையும் அணங்கும் என்பதையும் உணர்க.

பாட்டு - கஉ0 : தலைவன் கூற்று

துறை :—(க) அல்ல குறிப்பட்டு மீளுந் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் தான் இரவுக் குறியின்கண் வரும்போது, 'இன்னவாறு ஓசையுண்டாக்கு வேன்' என்று குறிப்பிட்டிருந்தான். தலைவன் வருதற்கு முன் னரே பறவை முதலியவற்றால் அத்தகைய ஓசை எழுந்தது; அதுகேட்ட தலைவி குறியிடத்துச் சென்று தலைவனைக் காணு ளாய் வருந்தி மீண்டாள்; பின்னர்த் தலைவன் வந்து ஓசையுண் டாக்கியபோது தலைவி அதனையும் முன்னையதென்று கருதி வந்தாளில்லை. ஆதலால் வறிதே மீண்ட தலைவன் வருந்தித் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

(உ) இஃது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலை மகன் பிரிந்தவழிக் கலங்கியதுமாம். அஃதாவது, தலைவியை முதன்முதலாகப் பொழிலிடத்தே கண்டு கூடிய தலைவன் அவளைப் பிரிந்து செல்வுழி உளங்கலங்கி உரைத்ததூஉமாம்.

இதன்கண், 'நெஞ்சே நங்காதலி நல்லள் என்பதைமட்டுமே நீ அறிந்துள்ளாய்; அவள் பெறற்கரியள் என்பதை நீ அறிந்தா யில்லை; ஆதலால், நல்குரவாளன் இவ்வுலக இன்பங்களை

அவாவுமாறுபோலக் கிடைத்தற்கரிய இன்பத்தை நீ அவாவுகின்றனை, அளியைகாண்' எனத் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

கஉ0. இல்லோன் இன்பங் காமுற் றங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.

—பரணர்.

(இ - ள்.) நெஞ்சே—, காதலி நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு - நம்மாற் காதலிக்கப்பட்டவள் பெண்மைநலம் முழுதும் உடையள் என்பதை நீ தெரிந்திருக்கும் அளவு, அரியள் ஆகுதல் அறியாதோய் - அவள் நாம் விரும்பியாங்குப் பெறுதற்கு அரியளாவாள் என்பதை அறிந்தாயில்லை ஆகலான், இல்லோன் இன்பம் காமுற்றங்கு - வறியவன் ஒருவன் அரச இன்பங்களை நுகர விரும்பினாற் போன்று, அரிது வேட்டனை - நம்மாற் பெறுதற்கு அரியதாக இருக்கும் இன்பத்தைப் பெரிதும் விரும்பித் துன்புறுகின்றனை; அளியைகாண்.

விளக்கம்:—இல்லோன் - கைப்பொருள் சிறிதும் இல்லாத ஏழை. இல்லோன் என்பதற்கேற்ப இன்பத்தை அரச இன்பம் என்க. நல்குரவுடையோன் இவ்வுலகவின்பத்தை நுகர விரும்பினாலும் அவை கிடைக்கமாட்டாவாகலின் அவ்வவாவினால் உற்ற துன்பமே எஞ்சும். அதுபோல் நினக்கும் தலைவி கிடைக்கமாட்டாளாகலின் துன்பமே எஞ்சிற்று என்று இரங்கியவாறு. இல்லோர்க் கின்பம் இன்றென்பதை,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு." (குறள் - உசஎ)

எனவரும் திருக்குறளானும் உணர்க.

அறிந்தாங்கு அறியாதோய் என்ற உவமை மாறுபட வந்த உவமத் தோற்றம் என்க. அரிது - தலைவியை நுகரும் இன்பம். அறிந்தால் இங்ஙனம் அவாவுவாயல்லை என்றபடியாம்.

அரியளாகுதல் அறியாமையும், நல்லள் ஆகுதல் அறிந்தமையும், வேட்டற்குக் குறிப்பேதுக்களாய் நின்றன.

இரண்டு துறைக்கும் இது பொருந்துமாறுணர்க. பொருந்தினும் முன்னதற்கு நன்கு பொருந்திற்றுதலறிக.

பாட்டு - கஉக : தலைவி கூற்று

துறை:—இரவுக்குறி வரும் தலைமகன் செய்யுங்குறி பிறிதொன்றனால் நிகழ்ந்து, மற்று அவன் குறியை ஒத்தவழி அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக வுணர்ந்து சென்றாள்.

ஆண்டு அவனைக் காணுது தலைமகள் மயங்கியவழிப் பின்னர் அவன் வரவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

அஃதாவது தலைவன், 'இன்றிரவு யான் வந்து இன்ன ஓசையை உண்டாக்குவன்; அஃதுணர்ந்து வருக' என்று போயினன். அவ்விரவின்கண், அத்தகைய வோசை பறவை யால் உண்டாயிற்று; அதனைத் தலைவன் செய்ததாக எண்ணித் தலைவி ஆண்டுச் சென்று தலைவனைக் காணுது மயங்கி மீண்டாள்; பின்னொருநாள் அவ்வோசை யுண்டாயபோது தோழி 'தலைவன் வந்துள்ளான்' எனத் தலைவிக்குக்கூற அவள் தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'தோழீ முன்னரும் இப்படியே குறியாலே தலைவன் வந்ததாக எண்ணிச் சென்று ஏமாற்றமடைந்தேன்; அவன் வந்தானை நீ இப்பொழுது கருதலளவையாற் கூறுவது மெய்யோ பொய்யோ யான் அறிகிலேன்,' என்று தலைவி கூறு கின்றாள்.

கஉக. மெய்யோ வாழி தோழி சாரல்
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டோடு போகி யாங்கு நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனஎன் தடமென் தோளே.

—கபிலர்.

(இ - ள்.) தோழி மெய்யோ வாழி - தோழீ நீ தலைவர் வந்துளார் என்று கூறுவது உண்மையோ உண்மையாயின் நீ வாழ்வாயாக, சாரல் மைபட்டன்ன மாமுக முசுக்கலை - மலைச் சாரலில் வாழும் கரு மை தோய்ந்தாற்போன்ற கரிய முகத்தை யுடைய ஆண் குரங்கு, ஆற்றப் பாயாத் தப்பல் - தாங்குங் கொம்பறிந்து பாயாது தாங்காக் கொம்பிற் பாய்ந்தமையால் அதனை ஆற்றாது முறிந்த தவறு, ஏற்ற கோட்டொடு போகி யாங்கு - குரங்கினுடையதாகவும் அதன்மேற் செல்லாது அதனை ஏற்று முறிந்த கொம்பினிடத்தே சென்றாற்போன்று, நாடன் தான் குறி வாயாத் தப்பற்கு - தலைவன் தன் குறி வாய்ப்பச் செய்யாத தவற்றிற்கு, தடமென் தோள் பசந்தன - எனது பெரிய மெத்தென்ற தோள்கள் பசலை அடையாகின்றனகாண்.

விளக்கம்:—முன்னொரு நாள் எழுந்த ஓசையைத் தலைவன் செய்யும் குறியாகக் கருதிச் சென்று வறிதே மீண்டமையை எண்ணுவாளாய் அக்குறிபோன்று இதுவும் பொய்யோ மெய்யோ என்பாள், 'நீ தலைவன்.

வந்தானுக்குக் கூறுதற்குக் காரணமான குறி மெய்யாயிருக்குமோ?' என்று வினவினாள். மெய்யாயின் நீ இந் நற்செய்தியை அறிவித்தற்கு நீண்டகாலம் இனிதே வாழ்க என்பான், 'வாழி தோழி' என்றாள்.

இனித் தான் அல்லகுறிப்பட்டு வருந்தினமை கூறுகின்றாள் - மை. கருமை - கரிய மையைப் பூசினாற்போன்ற முகத்தையுடைய முசுக்கலை என்க. முசு - முகமட்டும் கரிதாயிருக்கும் ஒருவகைக் குரங்கு. கலை என்றது அதனில் ஆண் குரங்கை என்க.

'மைக்காலிருளாயினும் மந்தி கொம்பிழக்கப் பாயாது' என்பது ஒரு பழமொழி. இருளின்கண் தன்னை ஏற்றுத் தாங்கும் கொம்பென்று நினைத்து எலாக் கொம்பிற் பாய்ந்தமையால் அக்கொம்பு முறிந்ததாக அத்தவறு குரங்கினுடையதாகவும், கொம்பு முறிந்ததெனக் கொம்பின் மேலேற்றுமாறுபோல, குறியுணர்த்துங்கால் வாய்ப்பவுணர்த்தாத் தலைவன் தவற்றிற்கு, தவறிலவாகிய இத் தோள்கள் நோயுற்றன என்றவாறு. எனவே பண்டும் யான் இத்தகைய குறியை மெய்யென எண்ணிச் சென்று அது பொய்யாக வருந்தாநின்றேன், இப்பொழுது நீ கூறுவது மெய்யோ என்று வினவியவாறும்.

ஆற்ற - தாங்கும்படி. தப்பல் - தவறு.

பாட்டு - கஉ : தலைவி கூற்று

துறை :—தலைமகள் பொழுது கண்டழிந்தது. அஃதாவது, தலைவன் பிரிந்துறையும் நாளில் தலைவி அந்திமாலைப் பொழுதின் வரவுகண்டு ஆற்றுமையாற் கூறியது.

இதன்கண், தலைவி மாலையைக் கண்டு, 'அந்தோ! பிரிந்தாரை வருத்தும் மாலைப்பொழுது வந்துவிட்டது; இதுமட்டுமோ என்னைத் துன்புறுத்துவது! இதன் பின்னை ஆற்றுணைத் தயார் செய்யும் அவ்விராக் காலத்தையும இது உடைத்தாயிருந்தது! என்செய்வல்!' என வருந்துகின்றாள்.

கஉ. பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின இனியே
வந்தன்று வாழியோ மாலை
ஒருதான் அன்றே கங்குலும் உடைத்தே.

—ஓரம் போகியார்.

(இ - ள்.) பைங்கால் கொக்கின் புன் புறத்தன்ன - பசிய கால்களையுடைய கொக்கினது புல்லிய முதுகினை ஒத்த, குண்டு நீர் ஆம்பலும் கூம்பின - ஆழ்ந்த குளத்தின்கண்ணவாகிய ஆமபற் பூக்களும் குவியாநின்றன, இனி மாலை வந்தன்று - இப்பொழுது பிரிந்தாருயிருண்ணும் மாலைக்காலமும் வந்தது, வாழி - அது வாழ்க, ஒ - அந்தோ, ஒருதான் அன்றே - அம்மாலை தானும்

தான் ஒன்றுமட்டும் அன்று, கங்குலும் உடைத்தே - தன்னினும்
கொடிய இராப்பொழுதினையும் தன் பின்னுக உடையதாயிரா
நின்றதே யான் எவ்வாறு ஆற்றுவேன்!

விளக்கம் :—" மாரி ஆம்பல் அன்ன கொக்கின் " (கஎஎ) என இந்
நூலின்கண் முன்னர்க் கொக்கிற்கு ஆம்பல் உவமையாக வந்தமை
நினைக. புன்புறம் - புல்லிய முதுகு; ஒடுங்கிய கூன் முதுகாதலின்
'புன்புறம்' எனப்பட்டது. கொக்கின் புன்புறத்தன்ன ஆம்பல்,
குண்டு நீர் ஆம்பல் எனத் தனித்தனிக் கூட்டுக. ஆம்பல் - குமுதம்
என்னும் ஒரு நீர்க்கொடி. இது மாலையில் குவியும் இயல்புடையது
போலும். ஆம்பல் கூம்புவது மாலைக்கால வரவிற்கு அறிகுறியாக
லான், 'ஆம்பலும் கூம்பின' என்று அஞ்சுவாளாயினள். ஆம்பலும்
என்றதன்கண், உம்மை : உயர்வு சிறப்பு. இனி - இப்பொழுது. வந்
தன்று - வந்தது. 'மாலை வாழி' என்றது அது கெடுக என்னும்
பொருளில் வந்த குறிப்புமொழி, " செல்வலத்தை சிறக்க நின்னுளே "
(புறம் : ககசு) என்புழிப்போல.

காமநோய், 'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலைமலரு'
மாகலின், அதன் மிகுதிக்கு ஆற்றாது அஞ்சுபவள், 'அம்மாலை தனக்குப்
பின்னுக நெடிய இரவினையுடைத்தாதலையும் கருதிப் பெரிதும் வருந்து
கின்றாள் என்க. இம்மாலைப் பொழுதையும் இராப்பொழுதினையும்
எங்ஙனம் ஆற்றுவல் என்பது குறிப்பு.

பாட்டு - கஉங : தோழி கூற்று

துறை :—பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணுத
தோழி, அவன் சிறைப்புறத்தானுதலறிந்து தலைமகட்குச்
சொல்லியது. அஃதாவது, தலைவன் பகற்காலத்தே வந்தவன்,
தலைமகள் அல்லல் காணிய, அயலே ஒரு சிறை மறைந்து நின்றா
னுக, அவனைக் குறியிடத்தே காணுத தோழி அவன் அயலே
மறைந்து நிற்றல் அறிந்து அவன் அல்லல் காணிய தலைவியை
நோக்கிக் கூறியது.

இதன்கண், 'தோழி! நந்தலைவர் தாம் குறிப்பிட்டபடி
அப் புன்னை மரத்தின் நீழலாகிய பகற்குறியிடத்தே இன்னும்
வந்திலர்; அவர் இப்பொழுதே வருவாராயின், அவரோடு நாம்
அளவளாவுதல் எளிதாம்; அதோ கடலில் நம் தமையன்மார்
திமில் தோன்றுகின்றன; இன்னும் சிறிது காலந்தாழ்த்து வரு
வாராயின் அவர் நம்மைக் காண்டல் அரிதாம்' என்று, தோழி
தலைவிக்குக் கூறுகின்றாள்.

கஉங. இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப

இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.
—ஐயூர் முடவனார்.

(இ - ள்.) தோழி—, நிலவுக் குவித்தன்ன வெண்மணல் ஒரு சிறை - நிலவொளியைத் திரட்டிக் குவித்து வைத்தாற்போன்ற வெள்ளிய மணற்குவியலின் ஒரு பக்கத்தே, இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல் - இருள் செறிந்து கிடந்தாற் போன்ற ஈரிய குளிர்ச்சிமிக்க கொழுவிய நிழலையுடைய, கருங் கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப - கரிய கொம்புகளையுடைய புன்னை மரங்களையுடைய பூஞ்சோலையாகிய குறியிடம் தனித்துக் கிடக்கும்படி, இன்னும் வாரார் - நம் தலைவர் தாம் குறித்த பொழுது வந்தும் இன்னும் தாங் கூறியாங்கு வந்திலர், பன்மீன் வேட்டத்து என்னையர் திமில் வருஉம் - பலவாகிய மீன்களை வேட்டையாடுதற்குச் சென்றிருந்த நம் தமையன் மாருடைய படகுகள் அதோ வாராநின்றன.

விளக்கம் :—பகற்குறியிடத்தே தான் குறித்தபடி வந்த தலைமகன் தலைவி தன்னைக் காணுது அலமருதலைக் கண்டு மகிழ எண்ணி மறைந்து நின்றனன்; அவன் மறைந்தமையை அறிந்த தோழி, அவன் அலமரல் கண்டு நகைக்கும் பொருட்டு இங்ஙனம் படைத்து மொழிந்தாள்; 'என்னையர் திமில் உதோ வரும்' என்ற சொற் கேட்டதும், தலைவன், 'அந்தோ வந்ததோ! திமில் அறியாது கெட்டேன்!' என அலமந்து ஓடி வந்திருப்பன் என்பது ஒருதலை. தோழியின் கூர்மதிச் சூழ்ச்சி பன்முறையும் நினைந்து நினைந்து இன்புறற் குரியதாதல் அறிக.

கதிரவன் கதிர்புகாதிருண்ட சோலைக்கண் நிழற்கு இருட் செறிவும், மணற் குவியற்கு நிலவுக் குவியலும் உவமைகள். வெண் மணலுக்கு நிலவினை உவமை கூறல் பெருவழக்கு. நிழலின் சிறப்பினை விதந்தோதுவாள் 'ஈர்ந்தண் கொழுநிழல்' என்றாள். பகற்குறியிடத்தின் இயல்பு இச் செய்யுளின்கண் நன்கு கூறப்பட்டிருத்தல் உணர்க. தலைவனை அந் நிழலிடத்தே காணலாம் என வந்தேம்; அந் நிழல் அவ் வழகனை யின்றி வறிதே கிடப்பதாயிற்று என்பாள், 'பூம்பொழில் புலம்ப' எனறாள். புலம்ப - தனித்திருப்ப. திமில் - ஒருவகைப் படகு. அவர் வலியாதலைப் பன்மீன் வேட்டத்து என்னையர் என்பதனால் உணர்த்திறுள். என்னையர் - என் தமையன்மார் என்னும் பொருட்டு. தந்தையை, எந்தை என்பது போன்று தன்னையர் என்பது என்னையர் என வந்தது. என்னையர் இவண் வந்துவிட்ட பின்னர்த் தலைவன் வரின் அவனை வரவேற்று அளவளாவுதல் நமக்கு அரிதாம் என்பது குறிப்பெசசம்.

பாட்டு - களசு : தோழி கூற்று

துறை :—புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. அஃதாவது, தலைவி தலைவனுடன் போதலைப் பெரிதும் விரும்பினளாக, பகல்

நிலவழியில் இம்மெல்லியல் தன்னோடு வரின் இன்னல் எய்துவள் எனக்கருதிய தலைவன் அவள் தன்னோடு வருதலை உடன்படாது மறுத்தான். அப்பொழுது அத்தலைவனுக்குத் தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி 'ஐய பாலைநில வழியிற்போவது பெரிதும் இன்னல் தரும் என்கின்றீர்; தலைவரைப் பிரிந்து தமித்துறையும் மகளிர்க்கு மனைமட்டும் இனிமை தருமோ! இயம்புதிர்' என்கின்றாள்.

கஉச. உமணர் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு
இன்ஞ என்றி ராயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) பெரும - தலைவரே! உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்தலை - உப்பு வாணிகர் பலர் ஒன்றுகூடிக் கடந்துசென்ற பக்கத்தினையும அகன்ற இடத்தினையும் உடைய, ஊர் பாழ்த்தன்ன ஓமையம் பெருங்காடு - குடியிருந்த ஊர் பாழ்பட்டாற் போன்ற தோற்றத்தையுடைய ஓமை மரங்கள் மிக்க பெரிய காட்டு வழிகள், இன்ஞ என்றிர் ஆயின் - தங்கட் செல்வார்க்கு இன்ஞமையுடையன என்று கூறி உடன் போக்கினை மறுப்பீராயின், தமியோர்க்கு மனை இனியவோ - துணைவரைப் பிரிந்து தமியராய் இருக்கும் மகளிர்க்கு மனைகள் மட்டும் இன்பந் தருவனவாகுமோ கூறுதிர்?

விளக்கம்:—'உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை ஊர் பாழ்த்தன்ன ஓமையம் பெருங்காடு இன்ஞ' என்னுந் துணையும் உடன் போக்கு மறுத்த தலைவன் கூறியது. அதனைத் தோழி கொண்டு கூறினள் என்க. காடு இன்ஞ வுடைத்தாதற்கு உமணர் சேர்ந்து கழிதல் அகன்றலை, ஊர்பாழ்த்தன்ன ஓமையங்காடு என்பன குறிப்பேதுக்களாய் நின்றன. என்னை? அப் பாலைக் காட்டின்கண் ஆறலைகள்வர் உண்மையால் ஆறு செல்வோர் பெருந்திரளாகக் கூடியே செல்லல் வேண்டும் என்பதும், நடக்கத் தொலையாத அகலிடமுடைத்தென்பதும் ஓமையங்காடு களிந்து பாழூர் போன்று கிடக்கும்படி ஆண்டு வெப்பம் மிகுதியாக வுள்ளது என்பதும் இவையிற்றால் உணர்த்தப்படுதலின் என்க.

உமணர் - உப்பு வாணிகர். சேர்ந்து கழிதல் - கூட்டமாகக் கூடிக் கடத்தல். மருங்கு - பக்கம். அகன்தலை - அகன்ற இடம். வெயிலால் களிந்து கிடக்கும் ஓமைக்காட்டிற்கு, பாழ்பட்ட ஊர் உவமை. பெருங்காடென்றது, நீடிய வழியுடைத்து என்ப துணர்த்தற்கு. ஓமை, பாலைக் கருப்பொருள். காடுகள் தன்னூடே செல்வார்க்குத் துன்பந் தருவன என்க.

என்றிர் - என்று சொல்கின்றீர். பாலை நிலத்திலே தந்தலை வருடன் உடன் போகும் மகளிர்க்கு, அவ் வுடனுறை யின்பம் அப்பாலை தரும் துன்பங்களை இல்லையாக்கித் தானே மேலிட்டு நிற்கும். பிரிந்து மனையில் தனித்துறையும் மகளிர்க்கோ, அம் மனை தரும் இன்பம் அனைத்தும் இல்லையாய்ப் பிரிவுத் துன்பம் ஒன்றே எஞ்சி நிற்பதாம். இஃது அனுபவ உண்மையை உடன்கொண்டு செல்லுதலே நன்றுதல் அறிவீர் என்றுணர்த்தியபடியாம். 'காடு இன்னு என்றிர்' என்றது, உடன் போவார்க்கு இனியவாகவும் நீயிர் இன்னு என்கின்றீர் என்பது பட நின்றது. இனியவோ என்றது, இன்னுவுடையனவாதல் ஒருதலை என்பது படநின்றது.

இனி, இவ்வழகான உள்ளம் உருக்கும் சுவையுடைய செய்யுளை ஓதி மகிழ்ந்த கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர், இதன் கருத்தைத் தமது பெருங் காப்பியத்துள்ளே பெய்து வைத்தமை ஈண்டு நினையற் பாற்று. அதன்கண் இராமன்,

"உருக்கழல் காட்டும்
கல்லரக்கும் கடுமையவல்ல நின்
சில்லரக்குண்ட சேவடிப் போது"

என, உடன்போக்கு மறுத்தழிச, சீதை,

"ஊழியருக்கனும்
எரியும் என்பதி யாண்டையது ஈண்டுநின்
பிரிவி னும்சுடு மோபெருங் காடென்றாள்"

(கம்ப, நகர்நீங்கு : உஉஙி - சு)

என, அமைந்திருத்தல் உணர்க.

பாட்டு - கஉசு : தலைவி கூற்று

துறை :—வரைவு நீடித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சிறைப்புறமாகச் சொல்லியது. அஃதாவது, வரைந்து கோடற் கருத்தின்றிக் களவின்பமே காமுற்றுத் தலைவன் ஒழுகா நிற்ப, அவ்வொழுக்கம் தனக்கின்னுதாதலை உணர்ந்த தலைவி, ஒருநாள் தலைவன் தம் மனையயலே வருதல் கண்டு அவன் வரவறியாதாள் போன்று தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'மகளிர் பலருடைய நலத்தினுங் காட்டிற் சிறந்த என் பெண்மை நலம், தண்ணந் துறைவனையே சென்றொழிந்தது; யான்மட்டும் நலனிழந்து வளையல் நெகிழ ஈண்டு மெலிந்து கிடக்கின்றேன்; இந்நிலை நீடின் யான் இறந்துபடுவேன்' என்று கூறுகின்றாள்.

கஉசு. இலங்குவளை நெகிழச் சாஅ யானை
உளெனே வாழி தோழி சாரல்
தழையணி அல்குல் மகளி ருள்ளும்

விழவுமேம் பட்டவென் நலனே பழவிறற்
பறைவலந் தப்பிய பைதல் நாரை
திரைதோய் வாங்குசினை யிருக்கும்
தண்ணந் துறைவனெடு கண்மா றின்றே.

—அம்மூவனார்.

(இ - ள்.) தோழி—,சாரல் தழையணி அல்குல் மகளிருள்ளும் - மலைப்பக்கத்துள்ள தழையை உடுத்த அல்குலையுடைய மகளிர்கள் பலருள்ளும், விழவு மேம்பட்ட என்நலன் - திருவிழாவைப் போன்று மேன்மையுற்றுத் திகழ்ந்த எனது பெண்மை நலம், பழவிறல் பறைவலந் தப்பிய பைதல் நாரை - பழைய ஆற்றலாகிய சிறகரின் வன்மையை யிழந்ததனால் உண்டாகிய வருத்தத்தையுடைய நாரை, திரை தோய் வாங்கு சினை இருக்கும் தண்ணந்துறைவனெடு - கடல் அலை தோயாநின்ற வளைந்த கிளையின்கண் இராநின்ற குளிர்ந்த அழகிய துறையையுடைய தலைவனோடே, கண் மாறின்று - இடம் பெயர்ந்து சென்றது, யானே இலங்குவளை நெகிழச் சாஅய் உளென் - அந்நலம் என்னைப் பிரிந்தமையால் இப்போது யான் மட்டும் விளங்குகின்ற வளையல்கள் கழன்று வீழும்படி மெலிந்து வாளா உயிர்த்திருப்பேனாகின்றேன்.

விளக்கம்:—மகளிர் தழையை ஆடையாக உடுத்தல் பண்டைக்கால வழக்கம். ஆய மகளிர் பலருள்ளும் தனது பெண்மை நலம் தலை சிறந்த தென்பாள், 'மகளிருள்ளும் விழவு மேம்பட்ட என்னலன்' என்றாள். அந்நலன் கழிந்ததற் கிரங்குகின்றாளாகலின், தற்புகழ்ன்மை யுணர்க.

விழவு மேம்படுதலாவது - பல நாள்களுள்ளும் விழவு நாள் சிறந்து தோன்றுமாறு போலத் தோன்றுதல். விழவு போல மேம்பட்ட என்க. பழவிறல் வலம் என இயைத்து, பழைய ஆற்றலாகிய சிறகரின் வன்மை என்க. பறை - சிறகர். பழைதாகிய தனது விழவு மேம்பட்ட நலனுக்கு நாரையின் பழவிறல் வலம் உவமை. சிறகுவலியிழந்த நாரை, திரைதோய வளைந்த சினையில் இருக்கும் என்றது, நலன் இழந்த யான் ஊரலர் தூற்றக் கேட்டும் ஈண்டு உயிருடன் இருக்கின்றேன் என்று இரங்கிய குறிப்பிற்று. அலையுயருந் தோறும் அலைக்கப்படும் கிளை என்பாள், 'திரைதோய் வாங்குசினை' என்றாள். வாங்குசினை - வளைந்த கொம்பு. முறை முறையாக அலைகள் வந்து மோதுதலானே இன்னலுற்றும் அதனை விட்டு நீங்கற்குச் சிறைவலியின்மையால் வருந்தும் நாரை என்க. தான் அலர் முதலியவற்றால் அலைப்புண்டும் அவன் வரைந்து கொள்ளாமையால் அவனை எய்தவியலாது வருந்துகின்றேன் என்றவாறும்.

தண்ணந் துறைவன் என்றது, இகழ்ச்சிக் குறிப்பு. என்னை? அவன் துறை மட்டுமே தண்ணிது அவன் வெய்யன் ஆயினன் என்பது படநிற்றலான் என்க. கண்மாறுதல் - இடம் பெயர்தல் - கண்மாறின்று

என்புழித் துறைவன் கண்ணோட்டமிலன் ஆயினன் ; அவனோடு என் நலனும் கண்ணோட்டமிலதாய் என்னை நீத்தகன்றதென்று ஒரு பொருள் தோன்றுதலும் காண்க.

பாட்டு - கஉசு : தலைவி கூற்று

துறை :—பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, பிரிந்து செல்லுங்கால் 'இன்ன பருவத் தொடக்கத்தே மீண்டு வருவேன் ஆற்றியிரு' எனத் தேற்றிச் சென்ற தலைவன், அப் பருவம் வந்துழியும் வாராமை கண்ட தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'கார்ப்பருவம் நின் தலைவர் அரிதாகிய இளமையைப் பொருளாகக் கொள்ளாது, பொருளையே பொருளாகக் கொண்டு நின்னைப் பிரிந்தனரே ! பிரிந்தவர் தாம் குறித்த பருவத்தினும் வந்திலர், அவர் யாண்டுளர் என, என்னைப் பார்த்து நகைக்கின்றது' என்று கூறுகின்றாள்.

கஉசு. இளமை பாராார் வளநசை இச் சென்றோர்
இவணும் வாராார் எவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கோடி முல்லைத்
தோகுமுகை இலங்கெயி றுக
நகுமே தோழி நறுந்தண் காரே.

—ஒக்கூர் மாசாத்தியார்.

(இ - ள்.) தோழி—, நறுந் தண்கார் - நறிய மணமுடைய குளிர்ந்த கார்ப்பருவம் என்னை நோக்கி, இளமை பாராார் - நின்னுடைய தலைவர் பெறற்கரிய இளமையை ஒரு பொருளாகக் கருதிற்றிலர், வளம் நசைஇச் சென்றோர் - எளிய பொருளையே பொருளாகக் கருதி அதனை ஈட்டற்குச் சென்றவர், இவணும் வாராார் - தாம் கூறிச்சென்ற பருவமாகிய யான் வந்த பின்னரும் இவ்விடத்திற்கும் வந்திலர், எவணரோ - அந்தோ பொருளாசை பிடித்த அவர் அதனை ஈட்டற்கு எவ்விடத்திற் சென்றனரோ நீ அளியை காண், எனப் பெயல் புறந்தந்த பூங் கொடி முல்லைத் தோகு முகை இலங்கெயிறுக - தனது மழையானே பாதுகாக்கப்பட்ட பூவையுடைய கொடியாகிய முல்லையினது தொக்க அரும்புகளே விளங்குகின்ற பற்களாகத் தோன்ற நிற்ப, நகும் - நகைக்கின்றது.

விளக்கம்:—கார்ப்பருவம் தலைவியை நோக்கி 'இளமையுடையராய்க் கூடியிருப்போர்க்கு யான் பேரின்பம் கல்குவேனுகவும், என் அருமை

நோக்காது பொருளாசை பிடித்துச் சென்ற தலைவர், யான் வந்தும் வந்திலர்; இப்போது நின்னுடன் கூடி மகிழவேண்டிய அவர், அந்தோ பொருளாசை காரணமாக எங்காட்டிற் றனித்துக் கிடந்து வருந்துகின்ற னரோ அறியேன்?' என நகைத்ததென்க.

இதன்கண், பிறன்கட்டோன்றிய பேதைமை பொருளாக நகை பிறந்ததென்க. இங்ஙனம் கூறுது 'இளமை.....எவணரோ என' என்னுந்துணையுந் தலைவி கூற்றாக்கி என்று எண்ணியிருப்பக் கார் நகும் என முடிப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் அது நகுதற்கு ஏதுப் பெறுது பொருள் சிறவாமை யுணர்க.

இவணும் வந்திலர் என்றது, கார்ப்பருவத்தே இவண் வருவன் என்று கூறிச் சென்றவர், இவணும் வந்திலர் என்றவாறு. உம்மை உயர்வு சிறப்பு 'எவணரோ' என்றது. பொருளாசையானே இக் கார்ப் பருவத்தே எவ்விடத்தே தனித்துறைகின்றனரோ என்று இரங்கிய வாறும். இவணர் - இவ்விடத்தர். எவணர் - எவ்விடத்தர்.

கார், காலந் தப்பாது வந்து முல்லையைப் பெயலாற் புறந்தந்தமை யால் செருக்குற்று, நின் தலைவர் என்போன்று வந்து நின்னைப் புறந் தந்திலர்; பொருளாசை கொண்டார்; அருளுடையராதல் இலர் என்று நக்கதெனினுமாம். இளமை கழிந்தாற் பின் பெறமுடியாத தொன்று. வளமை எப்பொழுதும் பெறக்கூடும். எனவே, பெறற்கரிய இளமை யைப் பேணி அதனால் பெறும் இன்பத்தைப் பெறுது, ஈட்டுதல் போற்றுதல் முதலியவற்றால் துன்பமே தரும் பொருளை விரும்பிச் செல்வது பேதைமை என்பதுபட "இளமை பாரார் வளனசைஇச் சென்றோர்" என்றதென்க.

இது தலைவி தன் கருத்தைக் கார்ப்பருவத்தின் கருத்தாக வைத் துக் கூறியதாகலான், இளமை பாராது வளனசைஇச் சென்றோர் ஆக லான் மேலும் அவ் வளனசைஇ வாராது தங்கிவிடுவரோ என்று வருந்தியதாகக் கொள்க.

பாட்டு - கஉஎ : தோழி கூற்று

துறை :—பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது. அஃதாவது பரத்தையிற் பிரிந்து மீண்ட தலைவன் ஊடியிருந்த தலைவியை அஞ்சி, அவள் ஊடல் தீர்க்கப் பாணனை உய்த்து, அவன் பின் நின்ற பொழுது, அத் தலைவனை நோக்கித் தோழி கூறியது.

இதன்கண், 'தலைவ! நின்னுடைய பாணன் முழுப் பொய் யன்; அவன் அங்ஙன மாகலின், நின்னுற் பிரியப்பட்ட மக ளிர்க்கு உலகத்துள்ள பாணர் எல்லாம் களவர் போலவே காணப் படுவாராயினர்' என்று கூறுகின்றாள்.

கஉஎ. குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்

கழனியம் படப்பைக் காஞ்சி யூர
ஒருநின் பாணன் பொய்ய னாக
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர்நீ அகன்றிசி னோர்க்கே.

—ஓரம் போகியார்.

(இ - ள்.) குருகு கொளக் குளித்த கெண்டை - அன்னம் தன் அலகாற் கௌவ அதற்குத் தப்பி நீரினுள்ளே மூழ்கி உய்ந்த கெண்டை மீன் பின்னர், அயலது உருகெழு தாமரை வான் முகை வெரூஉம் - பக்கத்தே உளதாகிய அழகு பொருந்திய தாமரையினது வெள்ளிய அரும்பை அஞ்சா நிற்றற்கு இடமான, கழனி அம் படப்பைக் காஞ்சி ஊர - கழனிகளை யுடைய அழகிய பக்கங்களையுடையதும் காஞ்சி மரங்கள் மிக்கதுமாகிய ஊரை உடைய தலைவனே, நின் ஒரு பாணன் பொய்யனாக-நின்னுடைய தூதனாகிய ஒரு பாணன பொய் பேசுபவனாய்விட்ட காரணத்தால், நீ அகன்றிசினோர்க்கு - நின்னால் கைவிடப்பட்ட மகளிர்க்கு, உள்ள பாணர் எல்லாம-உலகிலுள்ள பாணச் சாதியினர் எல்லோரும், கள்வர் போல்வர் - பொய்யரே போலக் காணப்படுகின்றனர்.

விளக்கம்:—குருகு ஈண்டு அன்னம் என்க. வெண்டாமரை மலரோடு உவமித்தலான் நாரை என்றுதல் கொக்கென்றுதல் கூறுதல் பொருந்தாது. வான்முகை என்றதனால் வெண்டாமரை என்பது பெற்றும். அயலது - பக்கத்தில் உள்ளது. உரு - நிறம்; அழகுமாம். வெரூஉம் - அஞ்சும். கழனிகளையும் அழகிய தோட்டங்களையும் காஞ்சி மரங்களையும் உடைய ஊரன் எனினுமாம். நின் ஒரு பாணன் எனமாறுக. ஒரு நின் பாணன் பொய்யனாக எனவே, நின்னைப் பரத்தமையுடையனாக யாங்கள் தேற்றமாக அறிந்துள்ளே மாகவும், நின் பாணன் நின்னைத் தூயன் எனக் கூறுகின்றான் என்றவாறு. நீ அகன்றிசினோர் என்றது, நின்னைப் பல மகளிர்கள் வஞ்சிக்கப்பட்டுப் பிரிந்துறைகின்றனர் என, அவன் பரத்தமை மிகுதியைச் சுட்டிக் கூறியபடியாம். உள்ள பாணர் என்றது, உலகிலுள்ள பாண் சாதியினர் எல்லாம் என்றவாறு. எனவே நீ பாணரைப் பொய் கூறப் பயிற்றி அவர் சாதிக்கே இழுக்குண்டாக்குகின்றாய் என்றி கழ்ந்தாளாயிற்று.

குருகு கொளக் குளித்த கெண்டை என்றது, அன்னத்தாற் கௌவப்பட்டுழி அதற்கு அகப்படாது நீரினுட் புகுந்து உயிருய்ந்த கெண்டைமீன் என்றவாறு. எனவே, நின் பாணன் பொய்யில் மயங்காது தப்பினேம் என்றபடியாம். வேறு பாணர் பொய் கூறாராயினும் இவன் கூறிய பொய் கேட்டு உலகில் பாண் சாதியினரே பொய் பேசும் வழக்கமுடையர் போலும் என்று யாங்கள் கருத இடனுண்டாகின்றது என்பாள், கெண்டை பழைய அச்சத்தால் தீங்கு செய்யாத முகையை வெரூஉம் என்றாள். எனவே, இது வாயில் மறுத்ததாதல் அறிக.

பாட்டு - கஉஅ : தலைவன் கூற்று

துறை :—(க) அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் னெஞ்சினை நெருக்கிச் சொல்லியது. அஃதாவது, தலைவியைக் குறியிடத்தே காணுமல் வறிதே மீளும் தலைவன் அவளைப் பெரி தும் விரும்பும் தன்னெஞ்சைக் கடிந்து கூறியது.

(உ) இஃது உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் கூறியதூஉமாம். அஃதாவது தலைவன்பரத்தமை காரண மாக ஊடியிருந்த தலைவியை அணுகி, அவள் ஊடலைத்தீர்க்கப் பெரிதும் முயன்றும் கைகூடாவழித் தன் நெஞ்சை நோக்கிக் கூறியது எனினுமாம்.

இதன்கண், 'கீழ்த்திசைக் கடற்கண் உள்ள சிறகிழந்த நாரை ஒன்று, மேற்குக் கடல் துறையின் கண்ணதாகிய அயிரை மீனைக் கௌவக் கருதித் தலை எடுத்தாற் போல, நமக்குச் சேய் மைக்கண் உள்ளவளும், பெறற்கரியளுமாகிய ஒருத்தியை அவாவி வீணே இன்னலுறுகின்றாய்காண்' என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

கஉஅ. குணகடல் திரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆரிரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

—பரணர்.

(இ - ள்.) நெஞ்சே குணகடல் திரையது பறை தபு நாரை- நெஞ்சமே கீழ்கடலின் அலைவாயின்கண் உளதாகிய சிறகுகள் இழந்த நாரை, திண்தேர்ப் பொறையன் தொண்டி முன் துறை- திண்ணிய தேரையுடைய சேரமன்னனது தொண்டியென்னும் பட்டினத்தே உளதாகிய கடற்றுறையின்கண் உள்ள, அயிரை ஆர் இரைக்கு அணவந்தாங்கு - அயிரை மீனுகிய பெறற் கரிய இரையை அவாவி நிமிர்ந்து நோக்கினாற் போன்று, சேயள் அரியோள் படர்தி - நமக்குத் தலைவிடத்தில் உள்ளவளும் பெறுதற்கரியளுமாகிய தலைவியைப் பெறுதற்கு நினையாநின்றாய், நோயை - ஆகலின் நீவருத்தமுடையை காண், நோய்ப் பாலோய் - இத்தகைய வருத்தத்திற்குக் காரணமான ஊழினை யுடையை போலும்.

விளக்கம்:—குணகடல்-கீழ்த்திசைக்கண் உள்ள கடல். திரையது அலைமோதும் இடத்தில் உளது. திரை - ஆகுபெயர். பறை - சிறகு.

பறத்தல் தொழிலுமாம் - தபுதல்-இழத்தல் முதுமையாற் பறையிழந்த நாரை என்க. இந்நாரை நெஞ்சிற்கு உவமம். திண்டேர் - பகைவ ரானே அழிக்கப்படாத தேர். பொறையனுடைய மறத்திண்மையைத் தேரின் மேலேற்றிக் கூறியவாறு. பொறையன் - சேரமன்னன். தொண்டி - சேரநாட்டின் கண்ணதாகிய ஒரு துறைமுகப் பட்டினம். அயிரை - ஒருவகை மீன்: ஆர் இரை, உண்ணும் இரையுமாம். சேயள் என்றது, ஈண்டு தூரத்தைக் குறிக்காமல் தன்னால் செல்லமுடியாத இடம் என்னும் பொருளதாய் நின்றதென்க. பெறற்கரிய தொன்றினைத் தூரத்திலுளதென்பது உலகவழக்கு. கீழ்கடல் நாரை மேல் கடல் மீனுக்கு அணைவந்தாங்கு என்றது, பெறற்கருமை கூறியபடியாம்.

தலைவியைத் தனது முயற்சியால் எய்தவியலாமை கூறுவான், 'பறை தபு நாரை' என்றான். அவள் நாம் விரும்பியவாறு நம்மை எய்துதற் குரியளும் அல்லள் என்பான், 'அரியோள்' என்றான். 'கிட்டாதாயின் வெட்டென மற'த்தலே அறிவு. நீ அங்ஙனம் மறவாது அவளை இடை யறாது நினைந்து உருகாநின்றனை இது நின் தலைவிதிபோலும்' என்று இரங்கினன் என்க.

இரண்டாவதாகக் கூறியதுறைக்குக் கூறுங்கால் 'நெஞ்சே! இவள் நாம் எத்துணை நயந்தும் நம்பால் அன்புமாறிச் சேயளாயினள்; ஊடல் தீர்வாளுமல்லளாய் அரியளுமாகினள்; நீயோ இத்தகைய கைகூடாப் பொருளில் பெரிதும் விழைவுற்று இன்னலுறுகின்றாய். நின் தலைவிதி அப்படி இருந்ததுபோலும்!' என்று கொண்டு கூறினானாக கொள்க. இம்மொழிகள் தலைவியின் உளம் உருக்கும் பண்புடையனவாதலும் உணர்க.

பாட்டு - கஉகூ : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் பாங்கற்கு உரைத்தது. அஃதாவது, இயற்கைப் புணர்ச்சி எய்தித் தலைவியைப் பிரிந்து வந்த தலை வனது வேறுபாடுகண்ட பாங்கன், 'இவ்வேறுபாடு நினக்கு எற்றா லாயது?' என்று வினவியவழித் தலைவன் அவனுக்கு உரைத்தது.

இதன்கண், 'நண்பனே! ஒருத்தியினது கரிய கடலின் நடுவே தோன்றும் எட்டா நாள் திங்களை ஒத்த நுதல், புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப் பிணிக்குமாறுபோல என்னைப் பிணித்தது காண்' என்று தலைவன் பாங்கனுக்குக் கூறு கின்றான்.

கஉகூ. எலுவ சிறுஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கடல் நடுவண் எண்ணுட் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே.

—கோப்பெருஞ்சோழன்.

(இ - ள்.) எலுவ - என்தோழனே, சிறுஅர் ஏமுறு நண்ப- சிறுவர்கள் இன்புறுதற்குக் காரணமான நட்பையுடையோனே, புலவர் தோழ - அறிவுடையோர்க்கும் தோழனுவோனே, கேளாய்-கேட்பாயாக, மாக்கடல் நடுவண்-கரிய கடலினிடையே, எண் நாள் பக்கத்துப் பசுவெண் திங்கள் தோன்றி யாங்கு- உவாவின் எட்டாம் நாளாகிய திதிக்குரிய இளைதாகிய வெள்ளிய திங்கள் தோன்றினாற் போல, கதுப்பயல் விளங்கும் சிறுதுதல்- ஒருமகளின் கூந்தலின் பக்கத்தே விளங்காநின்ற சிறிய நெற்றி யானது, புதுக்கோள் யானையில் எம் பிணித்தற்று-புது வதாகக் காட்டினின்றும் பிடிக்கப்பட்ட யானையைப் பிணிக்குமாறுபோல எம்மைப் பிணித்து விட்டது.

விளக்கம்:—எலுவன் - நண்பன். சிறுவர் இன்புறுதற்குக் காரண மான நண்ப என்றது, எத்துணையும் பேதமுறாது எவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகும் அறவோனே என்றவாறு. இனிப் 'புலவர் தோழ' என்றது, பேரறிவுடைய புலவர்கட்கும் நண்பனுதற்குரிய அறிவுமேம்பாடுடையனே என்றவாறு இவ்விளிகளால் தன் நண்பனைப் பாராட்டினமை காண்க. ஏமம் - இன்பம். ஏம் எனக் குறைந்து நின்றது. அத்தை: அசை. மாக்கடல்-கரிய கடல். எண்ணுட்பக்கம்- உவாவினின்றும் எட்டா நாளாகிய திதி; அஃது அட்டமி என்க. பசுமை - ஈண்டு இளமைமேற்று; பசுங்குழவி என்புழிப்போல. எனவே, வளர்பக்கத்து எட்டாநாள் திங்கள் என்றவாறு. இத்திங்கள் நெற்றிக் கும், கடல் கதுப்புக்கும் உவமைகள். கதுப்பு - கூந்தல். 'புதுக் கோள் யானை' என்றது, யானை வேட்டுவர் காட்டினின்றும் புதிதாகப் பிடித்து வந்த யானை என்றவாறு. யானையைப் பிணிக்குமாறு போலப் பிணித்தது என்க. பிணித்தன்று என்பது பிணித்தற்று என வலித் தல் விகாரம் பெற்றது. பிணித்தது என்னும் பொருட்டு

இதன்கட் கூறப்பட்ட உவமையைப்பற்றித் தொல்காப்பிய உவம வியல் கo-ம் சூத்திர வுரையில் பேராசிரியர் கூறுவதாவது:

"கடல் போன்றது கூந்தல் எனவும் கடல் நடுவெழுந்த எண்ணுட் பக்கத்து மதிபோன்றது நுதல் எனவும் கூறினன். அதனுல் கடல்போ லும் மயிரென்றதும், பலகாவதப் பரப்புடைய மதிபோன்றது நுதல் என்றதும், கழியப் பெரியவாயினும், அது வழக்காறலிற் சிறப்பிற்றீ ராது மனங்கொளவந்த உவமம் எனவே படும்" என்பதாம்.

பாட்டு - கஙo : தோழி கூற்று

துறை :—(க) பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற் புறுத்தியது; 'நீ அவர் பிரிந்தாரென்று ஆற்றுயாகின்ற தென்னோ? யான் அவர் உள்வழி அறிந்து தூதுவிட்டுக் கொணர் வேன்; நின் ஆற்றுமை நீங்குக' எனத் தோழி தலைமகளை ஆற்று வித்தது. இதன்பொருள் வெளிப்படை.

(உ) தோழி தூதுவிடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றுமையாற் கூறியதுமாம். அஃதாவது பிரிந்த தலைவனைத்

தன்னோடு கூட்டற்குத் தூதுவிடுதல் முதலியன செய்து முயலும்படி தூண்டற்பொருட்டுத் தலைவி தன் ஆற்றுமையைப் புலப்படுத்தியது.

இதண்கண், 'நங்காதலர் பிரிந்துளார் ஆயினும், அவர் நிலத்தைத் தோண்டிக்கொண்டு அதனுட்புகுவார் அல்லர்; வானத்திற் பறந்து போவாருமல்லர்; கடல்கடந்து சென்றாரு மல்லர்; ஆதலான், அவரை நாடுகள் தோறும், ஊர்கள் தோறும், குடும்பங்கள் தோறும ஆராய்ந்து தேடினால் அவர் காணப்படுதல் ஒருதலை' என்று தோழி, அல்லது தலைவி கூறுகின்றாள்.

கஉ0. நிலந்தோட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரும் உளரோநம் காத லோரே.

—வெள்ளிவீதியார்.

(இ - ள்) நம் காதலோர்-தோழி நம் தலைவர் (நம்மைப் பிரிந்து போயினர் எனினும்,) நிலந்தொட்டுப் புகாஅர்-நிலத்தைத் தோண்டி அதனுட் புகுவாரல்லர், வானம் ஏறார்-வானின் கட் பறந்து உயரப் போவாருமலலர், விலங்கு இரு முந்நீர் காலிற் செல்லா-எதிரே குறுக்கிடும் கடலைக் காலாலே கடந்து செல் வாருமல்லர்; ஆதலின், அவர் யாண்டேனும் ஓரிடத்தே இருப் பாராதல் வேண்டும் எனவே, நாட்டின் நாட்டின்-நாடுகள் தோறும் நாடுகள் தோறும் சென்று சென்று, ஊரின் ஊரின்-அந்நாட்டகத்துள்ள ஊர்கள் தோறும் புகுந்து, குடிமுறை குடிமுறை - அவ்வூரகத்துள்ள குடிகள் தோறும் குடிகள் தோறும் உள்ளாரை வினவி, தேரில் கெடுநரும் உளரோ - ஆராய்ந்து காணுமிடத்துக் காணுமற் போவரோ, காணப்படுவது ஒருதலை

விளக்கம் :—தோழி கூற்றுயின், 'அங்ஙனம் ஆராய்ந்து தலைவனைத் தேடிக் கொணர்வன்; நீ ஆற்றியிரு' என்பது குறிப்பெச்சமாகக் கொள்க. தலைவி கூற்றுயின், 'நீ அங்ஙனம் முயன்று அவரைத்தேடித் தாராயாயின், யான் இறந்துபடுவல்' என்பது குறிப்பெச்சமாகக் கொள்க.

நிலத்திற் புகுதலும் வான மேறலும் நீர்மேல் நடத்தலும் உடை யோர் இருத்திசத்தி கைவரப்பெற்ற சாரணர்கள்; அத்தகைய சாரணர் அல்லர் நந்தலைவர் என்பாள், "நிலந்தொட்டுப் புகாஅர் வானமேறார் முந்நீர் காலினிற் செல்லார்" என்றாள். தொடுதல் - தோண்டுதல். புகுதல் - அதனுட் புகுந்து மறைதல். சாரணர் இத்தகைய சித்திகளை யுடையார் என்பதனை,

"நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன் தோன்ற." (உசா : சசு-எ.)

எனவரும் மணிமேகலையானும் உணர்க.

கடல் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் குறுக்கே கிடந்து தடுத்தலின், 'விலங்கிரு முந்நீர்' என்றாள். விலங்குதல் - குறுக்கிடுதல்; தடுத்தலுமாம். முந்நீர் - கடல்; யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீரும் ஆகிய மூன்று நீரையுடைமையின் முந்நீர் என்றுமாம்.

பிரிவினைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று நீர்மையுடைமையின் முந்நீர் எனப்பட்டதென்பாரும் இருவகை ஆசிரியர் உளர். முந்நீர் காலிற் செல்லார் என்றது, கடல்நீரின்மேற் காலால் நடந்து செல்வார் அல்லர் என்றவாறு. எனவே, அவர் நம் நாவலந்தீவினுள் யாண்டேனும் ஓரிடத்துறைபவராவார்; அவரை யாண்டும் ஆராயிற் காண்டல் ஒருதலை என்றவாறு.

ஊர்களிற் குடிகள், பால்வேறு தெரிந்த நால்வேறு வகுப்பும் இன்னின்ன இடங்களில் வீடுகட்டி வாழ்தல் வேண்டும் என்னும் முறைப்படி வாழ்வராகலின் 'குடிமுறை' என்றாள்.

இனி இச்செய்யுளைப்பாடிய வெள்ளிவீதியார் என்னும் நல்லிசைப் புலமையாட்டியார், தங்கணவனைக் காணுது தேடுவார் கூறியது என்று கூறுப. இதன்கட் சுட்டி ஒருவர் பெயர் கொளப்படாமையின் இஃது அகத்திற் கோத்தற்குரியதாயிற்று. வெள்ளிவீதியார் தங்கணவற் கெடுத்துத் தேடினர் என்பதனை,

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே." (கசஎ)

என்று வரும் அகநானூற்றுப் பாடலானும்,

இவரே அகநானூற்றில்,

"ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வேன் கொல்லோ." (அகம் : சஅ)

என்று கூறிய குறிப்பானும் உணரலாம்.

பாட்டு - ககூக : தலைவன் கூற்று

துறை :—வினைமுற்றிய தலைமகன் பருவ வரவின்கட் சொல்லியது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்ற தலைவன், அவ்வினை முடிந்தபின்னர், தான் மீண்டு வருவதாகத் தலைவிக்குக் குறித்துவந்த பருவம் வந்தமை கண்டு தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

இதன்கண், 'குறித்த பருவம் வந்துவிட்டது; தலைவியிருந்த ஊரோ நெடுந்தூரத்திலுளது; அவள் ஆற்றாது வருந்துவளே

என்று என் நெஞ்சு பெரிதும் விரையாநின்றது' என்று தலைவன் தன்னுட் கூறிக்கொள்கின்றான்.

ககூக. ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி யிருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே.

—ஓரேருழவர்.

(இ - ள்.) *ஆடு அமை புரையும் வனப்பில் பணைத்தோள் பேர் அமர்க்கண்ணி இருந்த ஊர் - அசைகின்ற மூங்கிலை ஒத்த அழகையுடைய பருத்த தோளினையும் பெரிய போரையுடைய கண்ணினையும் உடைய தலைவி இருந்த எம்மூரோ, நெடுஞ் சேண் ஆர் இடையது - நெடுந்தூரத்தின்கண் எய்துதற்கரிய இடை வழியையுடைத்து, நெஞ்சு - என் நெஞ்சமோ, ஈரம்பட்ட செவ் விப் பைம்புனத்து ஓர் ஏர் உழவன் போலப் பெரு விதுப்புற் றன்று - மழை பெய்தமையால் உழவிற்கேற்ற ஈரம் உண்டாகிய செவ்வியையுடைய பசிய புனத்தையும ஒற்றை ஏரையுமுடைய உழவனைப்போலப் பெரிதும் விரைவுடையதாகின்றது, யான் நோகு - அதனால் யான் வருந்துவேன்*

விளக்கம்:—*ஆடு அமை - அசைகின்ற மூங்கில். பணைத்தல் - பருத் தல். வனப்பு - அழகு. அமர்க்கண்ணி - போர் செய்யும் கண்ணி யுடையாள். அஃதாவது தம்மைக்கண்டார் நெஞ்சோடு போர்செய்யும் கண்களையுடையாள் என்றவாறு. இனிப் பேரமர்க்கண் என்பதற்குப் பெரிய விருப்பத்தைச் செய்யும் கண எனினுமாம். தலைவியை நினைந் தழித் தோள் கண் முதலிய உறுப்புக்கள், தன் நெஞ்சின்கண் தோன்று தலால் அவையிற்றின் வனப்பைப் பாராட்டி ஓதினன். தான் குறித்து வந்த பருவம் வந்துவிட்டமையால் அப் பேரமர்க் கண்கள் என் னுறுமோ என்பான், அந்நினைவால் 'பேரமர்க்கண்ணி' என்றான். தன்னெஞ்சம் விரைதற்கேற்ப அவளை விரைந்தடைதற்கியலாதவாறு இடைக்கிடந்த தூரத்தை எண்ணி இந்நெடுந்தூரத்தைக் கடந்து தொலைப்பது எப்போதென்பான், 'நெடுஞ் சேண் ஆர் இடையது' என்றான். ஆர் இடை - கடத்தற்கரிய இடைவழி என்க. ஓரேருழ வன் என்றதனால், அவன் ஏழை என்பதும், ஈரம்பட்ட செவ்வியை இழந்தால் அவனுக்குப் புனம் விளைவு குன்றி வறுமைமிகும் என்பதும், அதனால் தனது ஒற்றை ஏரைக்கொண்டே புனம் செவ்வி கெடாமல் உழுதற்கு விரைவன் என்பதும், அந்நிலை அவனுக்குப் பெரிதும் இன்னல் நிலையாம் என்பதும் தோன்ற, 'ஈரம்பட்ட செவ்விப் பைம் புனத்து ஓர் ஏருழவன்' என்றான். தலைவி பருவம் வந்துவிட்டமை யால் ஆற்றாது பெரிதும் வருந்துவள். அந்நிலை சிறிது நீளின் ஆற்ற மையால் அவட்கு இறந்துபாடு நிகழினும் நிகழும்; விரைந்து அவளை*

எய்துதற்கோ இடைவழி மிகமிக நீளிது என்செய்கோ? எனத் தன் நெஞ்சு விதுப்புறுகின்ற தென்றவாறு. இவ்வுவமையின் அருமையை உணர்ந்து இதனைப் பாடிய நல்லிசைப் புலவரை 'ஓரேருழவர்' என, நம் பண்டைச் சான்றோர் வழங்குவாராயினர். நோகு - நோவேன்: தன்மை ஒருமை.

பாட்டு - கஉ : தலைவன் கூற்று

துறை :—கழற்றெதிர்மறை; அஃதாவது, தலைவியை நினைந்து மெலிந்த தலைவனை நோக்கிப் பாங்கன், 'நின் பெருந் தகைமைக்கு இஃது ஏற்குமோ?' என்று இடித்துரைத்தானுகத், தலைவன், அவன் கூற்றை மறுத்துரைத்தது.

இதன்கண், 'அன்பாலே விரைந்து தழுவுபவளும், விருப்பத்தைச் செய்யும் அழகியும், குவிந்த மெல்லிய முலையையுடையாளும, நீண்ட கூந்தலையுடையாளும், நுணுகிய நோக்கினையுடையாளுமாகிய என் காதலியை யான் மறந்துறைதல் கூடுமோ?' என்று தலைவன் பாங்கனுக்குக் கூறுகின்றான்.

கஉ. கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந் தமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பி னன்ன
சாஅய்நோக் கினளே மாஅ யோளே.

—சிறைக்குடியாந்தையார்.

(இ - ள்.) மாஅயோள் - மாமையையுடைய தலைவி, கவவுக் கடுங்குரையள் - தழுவிக்கோடலில் மிக்க விரைவுடையாள், காமர் வனப்பினள் - விருப்பம் உண்டாக்கும் அழகினையுடையள், குவவு மென்முலையள் - குவிந்த மெல்லிய முலையினையுடையாள், கொடிக் கூந்தலள் - நீண்ட மயிரினையுடையாள், ஞாங்கர்க் கடுஞ்சுரை நல் ஆன் நடுங்கு தலைக்குழவி தாய்காண் விருப்பின் அன்ன - பக்கத்தே பிரிந்து சென்ற கடிய சுரப்பினையுடைய நல்ல ஆவினது நடுங்குகின்ற தலையையுடைய இளங்கன்று தனது தாயைக் காண்டற்குக் கொள்ளும் விருப்பத்தைப்போன்ற விருப்பத்தையுடைய, சாஅய் நோக்கினள் - மெலிந்த பார்வையினையுடையாள், யான் யாங்கு மறந்து அமைகு - இத்தகையாளை யான் எவ்வண்ணம் மறந்து அமைவேன்.

விளக்கம் :—கவவு - அகத்தீடு. அஃதாவது தழுவுதல் என்னும் பொருட்டு, "கவவுகத்திடுமே" (உரி - இக.) என்பது தொல்காப்பியம். கடுங்குரையள் என்பதன்கண் குரை என்பது அசைச்சொல். கடுமையை

புடையாள் என்பதாம். மிக்க அன்புடையளாகலின் விரைந்து தழுவிக் கொள்ளும் இயல்பினள் என, அவள் பேரன்பினை உணர்த்தியவாறு. இயற்கைப் புணர்ச்சிக்கண் தழுவப்பட்டின்புற்றமை கருதிக் கூறினன் என்க. அவள் அழகு நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் தன் னெஞ்சத்தை ஈர்த்தலின், 'காமர் வனப்பினள்' என்றான். காமர் - விருப்பம். விருப்பத்தை உண்டாக்கும் வனப்பென்க. எனவே, அவளைக் காணுதமையல என் கண் என்றுணர்த்தியவாறு. வனப்பு - அழகு. " வனப்பென்பது பெரும்பான்மையும் பலவுறுப்பும் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு " (தொல். செய். உகுஙு. உரை.) என்பர், பேராசிரியர். குவவு - திரட்சி. கொடி என்பது ஈண்டு நீடல் என் னும் பொருளில் வந்தது. நீண்ட கூந்தலையுடையள் என்க. இயற் கைப் புணர்ச்சிக்கண் அதுவே பாயலாகக் கிடந்தமைபற்றி அதன் நெடுமையையப் பாராட்டினான்.

ஞாங்கர் - பக்கம். பக்கத்தே சென்ற நல்லான், கடுஞ்சுரை நல்லான் எனத் தனித்தனிக் கூட்டுக. கடுஞ்சுரை - கடிதிற் சுரக்கும் சுரப்பு. அஃதாவது, கன்றை நினைந்தவுடன் சுரக்குமியல்புடைய நல்லான் என்றவாறு. அந்நல்லானை அதன் இளங்கன்று காண்டற்கு விரும்பிப் பார்க்குமாறு என்னைக் காண்டற்கு விரும்பி நோக்குபவள் என் னுமுகத்தானே அந்நல்லான் இளங் கன்றை விரும்புமாறு யான் அவளை விரும்பாநின்றேன் என்று குறிப்பாற் பெறவைத்தமையும் உணர்க.

சாஅய் - நுணுக்கம். அஃதாவது, பிரிவஞ்சும் மெலிவு தோன்றப் பார்க்கும் பார்வை என்க. தான் பிரிந்துழி அங்ஙனம் மெலிந்து நோக்கினள் ஆகலின், அப்பார்வையே என்னை வருத்தும் என்பான், 'சாஅய் நோக்கினள்' என்றான். எனவே, 'பேரன்பும் பேரழகு முடை யாளை யான் மறந்தமைதல் ஒல்லுமோ? நீயே கூறுக,' என்றவாறு. மாயோள் - கருமை நிறமுடையோள்.

பாட்டு - ககூக : தலைவி கூற்று

துறை:-வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, வரைந்து கோடலிற் கருத்தின்றித் தலைவன் காலம் நீட்டித்தானாக, அவ்வழி இன்னலுற்ற தலைவி தன்னிலைமையைத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி, தோழியை நோக்கித், 'தலைவர் என்ன லம் புதிதுண்டு போயினர்; அவர் அருளுவர் என்னும் நினைவே பற்றுக் கோடாக நலனும், வலியும இழந்தபின்னரும் யான் உயிர் வாழா நின்றேன்,' என்று கூறுகின்றாள்.

ககூக. புனவன் துடவைப் பொன்போற் சிறுதினை
கிளிகுறைத் துண்ட கூழை யிருவி
பெரும்பெய லுண்மையி னிலையோலித் தாங்கென்
உரஞ் செத்தும் உளனே தோழியென்
நலம்புதி துண்ட புலம்பி னனே.

—உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

(இ - ள்.) தோழி-, என் நலம் புதிது உண்ட புலம்பினால்- எனது பெண்மை நலத்தைப் புதுவதாகத் தலைவர் உண்டு பிரிந்தமையாலே உண்டாய தனிமையால், என் உரம் செத்து-எனது வலிமுழுதும்அழிந்தபின்னரும்,புனவன் தடவைப் பொன்போற் சிறுதினை- னத்தையுடைய குறவனுடைய தோட்டத்தின்கண் வளர்ந்த பொன்போன்ற சிறிய தினையினது கதிரை, கிளி குறைத்துண்ட கூழை இருவி - கிளியாலே ஒடித்துண்ணப்பட்ட கூழையாகிய தாள், பெரும்பெயல் உண்மையின் இலையொலித் தாங்கு- பெரிய மழை பெய்தமையாலே இலைவிட்டுத் தழைத்தாற் போன்று, உளென் - தலைவர் அருளுவார் என்னும் நினைவுண்மையானே யான் இன்னும் உயிர்த்துளன் ஆகின்றேன்.

விளக்கம்:—புனவன் - தினைப்புனத்தையுடைய குறவன். பொன் போற்சிறுதினை என்றதற்குப் புனவன் பொன்னைப் போற்றுமாறு போற்றப்பட்ட சிறுதினை எனினுமாம். 'புனவன் தடவைப் பொன் போற் சிறுதினை' என்னும் இவ்வடி கருத்து செய்யுளின்கண்ணும் முதலடியாக அமைந்திருத்தலறிக. தடவை - தோட்டம்.

சிறுதினை தலைவிற்கும், இருவி தலைவிக்கும், கிளி தலைவனுக்கும், மழை, அருளுவர் என்னும் நினைவிற்கும், இலை உயிர்ப்புக்கும் உவமைகளாகக் காண்க. குறைத்துண்ட - அலகாலே ஒடித்துண்ட என்க. கூழை - குறைக்கப்பட்டது. இருவி - கதிர் கொய்யப்பட்ட தாள். பயனுகுய கதிர் குறைக்கப்பட்ட பின்னர்த் தாள் பட்டொழிதலே இயல்பாகவும், மழையுண்மையாலே மேலும் இலைவிட்டுத் தளிர்த்தாற் போன்று, நலம் உண்ட புலம்பினாலே வலிகெட்ட பின்னரும், நினைவு பற்றுக் கோடாக உயிர்த்துள்ளேன் என்பதாம். உரம் - வலிமை. ஈண்டு வலிமை என்றது, நிறையுடைமையை. அஃது உளத்தின் மையேயாகலின், அந்நிறை முழுதும் அழிந்த தென்பாள், 'செத்தும்' என்றாள். 'உளெனே' என்றது, இறந்துபடாது உளனாகின்றேன் என்றவாறு.

பாட்டு - கக்கூசு : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளாய தலைமகள், ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, வரைதற்கு வேண்டிய பொருளீட்டும் பொருட்டுத் தலைவன் பிரிந்தமையால் வரைவு நீட்டித்ததாக ஆற்றுத தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்; அத்தோழியை நோக்கித் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நாடனுடைய நட்பு, பிரிவென்று ஒன்றில்லையாயின் நன்றேயாகும்; அது பிரிவுடையதுமாகலின் இன்னாதுமன்றே' என்று கூறுகின்றாள்.

கூடீ. அம்ம வாழி தோழி நம்மோடு
பிரிவின் ரூயின் நன்றுமற் றில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்கும் கதழ்வீழ் அருவி
நிலங்கொள் பாம்பின் இழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

—கோவேங்கைப் பெருங்கதவனார்.

(இ-ள்.) அம்ம வாழி தோழி-தோழி யான் கூறுவதனைக் கேட்பாயாக, குறும் பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கை-குறிய கற்களினிடையே வளர்ந்து பருத்த நெடிய தாளினையுடைய வேங்கை மரத்தினது, பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கி-பூக்களையுடைய அசைகின்ற கொம்பு பூக்களுதிர்ந்து தனிக்குமாறு மோதி, கலபொருது இரங்கும் கதழ்வீழ் அருவி-மலையினை அலைத்து ஒலியாநின்ற விரைந்த வீழ்ச்சியினையுடைய அருவி, நிலங்கொள் பாம்பின் இழிதரும் - மலையினின்றும் நிலததின்கண் செல்லாநின்ற பாம்பைப் போன்று செல்கின்ற தறகுக் காரணமான, விலங்குமலை நாடனொடு கலந்த நட்பு-ஒன்றினை ஒன்று குறுக்கிட்டுக் கிடக்கும் மலைகளையுடைய நாட்டையுடைய தலைவனேடே யாம் நெஞ்சு கலந்து நட்டகேண்மை, நம்மொடு பிரிவு இன்ரூயின் நன்று மன்றில்ல - நம்மிடத்தினின்றும் அவர் பிரிதல் என்னும் ஒரு செயல் மட்டும் இல்லையாயின் மிகவும் நன்மையுடையதாம்; அப்பிரிவின்மையைப் பெற்றிலேமே.

விளக்கம்:—அம்ம, கேட்பித்தற்கண் வந்தது. நம்மொடு, வேற்றுமை மயக்கம். நம்மிடதினின்றும் பிரியும் பிரிவு இன்ரூயின் என்க. 'இன்ரூயின் நன்றுமன்' என்றது, பிரிவின்மையை யாம் பெற்றிலேமே என்று இரங்கியபடியாம். பிரிவுண்டாயவழி நட்பு மிகத்தீதடைத் தென்பது குறிப்பு. றில்ல: அசை. விழைவின்கண் வந்தது எனக் கொண்டு, 'இது என் விருப்பம்' என்பாருமுளர். மன், ஒழியிசை. அப்பிரிவின்மையை யாம் பெற்றிலேமே என்னும் பொருட்டு. குறும் பொறை - சிறுமலை. தடைஇய - பருத்த. "அம்பணைத் தடைஇய மென்றோள்" (கசஉ.) எனவரும் நெடுநல்வாடையினும் அஃதப் பொருட்டாதல் அறிக. வேங்கையின் வளன் தெரித்தோதுவாள், 'நெடுந்தாள் வேங்கைப் பூவுடை அலங்குசினை' என்றாள். குறும் பொறையினிடையே வளர்ந்த பூவுடை அலங்குசினை வேங்கை, வலிய குடியிற் பிறந்த தலைவியாகவும், அருவி தலைவனாகவும், புலம்பத்தாக்குதல், தலைவியின் நலங்கெடத் தனித்துறையும்படி செய்தல் எனவும், பாம்புபோன்று இழிதருதல், தலைவன் அருளாளனே என்று அஞ்சும்படி ஒழுகுதலாகவும் உள்ளுறை காண்க. 'விலங்கு மலைநாடன்' என்றது,

நட்பிற்கு இடையூறுகள் பலவுளவாக வரைந்து கொள்ளாத தலைவன் என்னும் குறிப்புடையதென்க. நிலங்கொள் பாம்பென்றது, மலையுச்சியி னின்றும் நிலம் சேர இழிதரும் பாம்பு என்றவாறு. பாம்பின் இழி தரும் என்ற வுவமை உள்ளுறைக்கு ஆக்கமாகவந்த ஏனையுவமை.

பாட்டு - கசுரு : தோழி கூற்று

துறை :—தலைவன் பிரியும் என வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது. அஃதாவது, தலைவனுடைய ஒழுகலாற் றினின்றும் இவன் நம்மைப்பிரிவான்கொல் என்று ஐயுற்று மெலிந்த தலைவிக்கு அவன் நின்னைப் பிரியான் என்று கூறித் தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "அவர் நம்மைப் பிரிவர் என்று எண்ணி நீ கலங்கவேண்டா; அவர் நம்மைப் பிரிய மாட்டார் என்பது தேற்றம; அஃதெற்று லெனின்? அவர் ஒருநாள் 'ஆடவர்க்குயிர் வினை; மனையுறை மகளிர்க்கு அவர்தம் கொழுநரே உயிர் ஆவர்' என்று, நமக்குக் கூறினர் அல்லரோ" என்று தேற்றுகின்றாள்.

கசுரு. வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே.

—பாலைபாடிய பெருங் கடுங்கோ.

(இ - ள்.) தோழி அழாஅல் - தோழி நீ தலைவர் பிரிவர் என்று எண்ணி அழுதலை ஒழிவாயாக, அழுங்குவர் செலவே- நந் தலைவர் தாமே செல்லுதலைத் தவிராநிற்பர் அஃது எற்று லெனின், வினையே ஆடவர்க்கு உயிர் - தொழிலே ஆடவர்க்கு உயிராகும், வாணுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் - ஒளிபொருந்திய நுதலையுடைய இல்லிருந்து வாழும் மகளிர் களுக்கு அவர்தம் காதலரே உயிர் ஆவா என்று, நமக்குரைத் தோரும்தாமே - நமக்கு முன்னர் எடுத்துக் கூறியவரும் அவரே ஆகலான்.

விளக்கம்:—பிறவுயிர்க்கு இன்ன செய்யாமை மாசற்றார் கோள் ஆகலான், சான்றோராகிய நந்தலைவர் நம்மைப் பிரிந்து நம்முயிர்க்கு இறுதிசெய்யக் கருதார் ஆகலின், அவர் செலவழுங்குவர் நீ அழாதே கொள், என்றாள் என்க. "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்று உலகு." அஃதாவது வினையாகிய குறையைச் செய்யாது விட்டவரை உலகம் விட்டது என்றேதுபவாகலான், வினை செய்யாவழி உலகத் தால் விடப்பட்டுப் பெருமையின்றிச் செத்தாரொப்பர் என்பான்

வினையை உயிராக உருவகித்தான். வினை தமக்குயிர் போல்வது என் றுரைத்தவர், அப்பெருமை நோக்கி வினையின்மேற் செல்லற்கு நம்மைப் பிரியார் கொல் என்னின்? நின்னைப் பிரியாதிருந்தேயும் செயற்பால வினைகள் அவர்க்குள; அவற்றைச் செய்தமைவர். தமக்குயிராகிய வினை கருதி நினக் குயிராகிய அவர், பிரிந்த பொழுதே நீ இறந்துபடு வாய் என்பதை நன்குணர்வர். ஆகலின், நின்னைப் பிரியார் காண் என்றவாறு. வினையே என்புழி ஏகாரம் பிரிநிலை.

ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாமடங்காப் பேதைமை யுடையர் அல்லர், தாம் பிறர்க் கோதியவாறே ஒழுகுவர் ஆகலாற் பிரியார் என்பாள், 'உரைத்தோரும் தாம்' என உம்மை கொடுத் தோதினாள்.

அழாஅல் - அழாதேகொள். மகளிர்க்கு ஆடவர் உயிர் என் பதனை "இன்னுயிரன்ன பிரிவருங்காதலர்" (உகஎ.) எனவரும் நற் றிணையாலும் உணர்க.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்பதுபற்றி நம்முயிர் நீக்கும் வினையாகிய பிரிவினை நங்காதலர் செய் யார் என்றாளுமாம்.

பாட்டு - கஙசு : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் பாங்கற்குரைத்தது. அஃதாவது, "காமநோயாற் கலங்குதல் நின் பெருமைக்குத் தகவன்று" என் றிடித்துரைத்த பாங்கனுக்குத் தலைவன் அதன் இயல் எடுத்துக் கூறியது.

இதன்கண், காமம் என்பது பிறர் கருதுமாறு போலப் புதியதோர் வருத்தமும் அன்று; நோயும் அன்று; மிகுதலும் குறைதலும் உடையதுமன்று. அது, தனக்குரிய காலத்தே தானே மலர்வது என்று தலைவன் பாங்கனுக்குக் கூறு கின்றான்.

கஙசு. காமங் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலுந் தணிதலும் இன்றே யாயின்
குளகுமென் றுள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே.

—மிளைப்பெருங் கந்தனார்.

(இ - ள்.) காமம் காமம் என்ப - உலகிலுள்ளவர்கள் காமம் காமம் என்று தீயதொன்றிற்கு அஞ்சிக் கூறுவார் போலக் கூறு கிற்பர், காமம் அணங்கும் பிணியும் அன்று - அக்காமம் அங்

ஈனம் அஞ்சுதற்குக் காரணமான வருத்தமும் அன்று நோயும் அன்று, நுணங்கி - கூரிதாகி, கடுத்தலும் தணிதலும் இன்று - மிகுவதும் அன்றிக் குறைதலும் உடையதன்று, யானை குளகு மென்று ஆள் மதம் போல - யானை அதிங்கத்தின் கவளந் தின்றவழித் தோன்றி அதனை ஆளாகின்ற மதத்தைப்போல, காணுநர்ப்பெறின் - தான் தோன்றுதற்குக் காரணமாவாரைக் காணப் பெற்றால், பாணியும் உடைத்து - தான் தோன்றுமொரு செவ்வியையும் உடையதாகும்.

விளக்கம் :—பாம்பு பாம்பு, தீத்தீ, என்பன போன்று தீமை செய்வனவற்றைக் கண்டால் அடுக்கி மொழிதல் உலகினர் இயல்பு. அங்ஙனமே காமத்தையும் தீதாகக் கருதி உலகினர் காமம் காமம் என அதனை அஞ்சுகின்றனர் என்பான், 'காமம் காமம் என்ப' என்றான். என்ப என்னும் பயனிலைக்கு உலகினர் என்னும் வினைமுதல் வருவித்துக் கொள்க. அணங்கு - புறத்திருந்து தீண்டி வருத்துவது. அஃதாவது பேய் முதலியன. எனவே, காமம் பேய் முதலியன போல்வதன்று என்றவாறு. பிணி - உடலின்கண் உண்டாகும் குறையால் தோன்றி வருத்துவன. எனவே, காமம் உடலில் உண்டாகுமொரு நோய் அன்று என்றவாறு.

உடற்குறையற்ற யானை, குளகை மென்றவுடன் அதன் உள்ளுறையும் மதம் தான் வெளிப்படுதற்குரிய ஏதுப்பெற்றமையால், வெளிப்பட்டு, அவ்வியானையைத் தன்வயத்ததாக்கி ஆளுதல் போலக் காமமும், ஒவ்வொருவர் உளத்தும உறைவதாய்த் தான் தோன்றுதற்குரிய ஏதுத் தோன்றுழித் தோன்றியும், எஞ்சிய காலத்தே அடங்கியும் இருப்பதொன்று. அது தோன்றும் செவ்விபெற்று வெளிப்படுங்கால், அதன் வழிப்படுவதல்லது அதனை அடக்கவொண்ணாது என்பான், 'காமம் பாணியும் உடைத்து' என்றான். பாணி - காலம். அஃதாவது செவ்வி. பாணியும் உடைத்து என்பதன்கண் உம்மை எதிர்மறை. பாணி பெறுமையும் உடைத்து என்றவாறு. எனவே, இத்தகைய காமம் நின்னிடத்தும் பாணி பெறுமாயின், அதனியல்பை நீ உணர்வாய். அது பெறுமையால் காமம் தீது; அதனை மேற்கோடல் தகவன்று என்று கூறுகின்றனை எனக் கழறிய பாங்கனை மறுத்துரைத்தவாறுணர்க.

காணுநர் - தான் தோன்றுதற்கேதுவாய்க் காணப்படுபவர்; என்றது, தலைவியை என்க. குளகு, அதிங்கமாகிய யானையுணவு. அதனைத் தின்றுழி யானை மதங் கொள்ளும் இயல்பிற்று. இதனை "நாறு மும்மதத்திளுலே நாகத்தையிரிக்கும் நாகம்.....அதிங்கத்தின் கவளங் கொண்டால்...யாவர்க்கும் விடுக்கலாகா" (எரி0.) எனவரும் சீவகசிந்தாமணியானும் உணர்க. குளகு: தலைவிக்குவமை. மென்று ஆள் மதம் என்றது, மென்றவழித்தோன்றி அதனை ஆளும் மதம் என்றவாறு.

தோழி! நின்பாலுறையும் காமம் செவ்வி பெற்றதில்லை. பெறின், அதனியல்பு உணர்வாய். இப்பொழுது உணராமையின் இங்ஙனம் கழறுகின்றனை என்றாளுக்குக் கொள்க.

பாட்டு - கஉ : தலைவன் கூற்று

துறை :—இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிவச்சம் உணர்த்தியது. அஃதாவது, பால்வரை தெய்வத்தின் ஆணையால் தலைவியைக் கண்டு கூடிய தலைவன், பின்னர்த் தான் பிரிதல் இன்றியமையாமையின் புணர்ச்சிக் கினமாய்ப் பிரிவு என்பதும் ஒன்றுண்டு என்பதனைத் தலைவி யுணர்ந்து அஞ்சுமாறு கூறியது. பிரிவினை ஆற்றுமாறு தேற்றுதற்கு அவளைப் பிரிவென்று ஒன்றுண்டென உணர்த்தி அஞ்சுவித்தல் இன்றியமையாமையின், அங்ஙனம் அஞ்சுவிப்பன் என்க.

இதன்கண், தலைவன் தலைவியை நோக்கி "நீ பெரிதும் வருந்தும்படி யான் நின்னைப் பிரியேன். பிரிவேனாயின், என் பால் இரவலர் எய்தாத நாள்கள் பலவுண்டாவதாக" என்கின்றான்.

கஉ. மெல்லியல் அரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவே னாயின் எற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.

—பாலை பாடிய பெருங் கடுங்கோ

(இ - வி.) மெல் இயல் அரிவை நின் நல்லகம் புலம்ப - மென்மைத்தன்மையுடைய நங்காய் நின்னுடைய நன்றுகிய நெஞ்சம் தனிமையாயினே வருந்தும்படி, நின் துறந்து அமைகுவன் ஆயின் - நின்னைப் பிரிந்து நெடிது இரேன்காண் அங்ஙனமன்றிப் பிரிந்து நெடிது அமைந்திருப்பேனாயின், செலவுறு தகவு - யான் செலுத்தாநின்ற வாழ்க்கையாகிய தகுதியின்கண், இரவலர் வாரா வைகல் பலவாகுக - என்பால் இரப்போர் வருதல்லாத வறுநாட்கள் பல உளவாகுக.

விளக்கம் :—பிரிவுதனன்பத்தை ஆற்றும் வன்மையிலள் என்பான், 'மெல்லியல் அரிவை' என்றான். அரிவை என்றது, பருவங் குறித்ததாகாது நங்கை என்னும் பொருட்டாய் விளியேற்றது. அவளது ஆராவன்புமிகுதியைப் பாராட்டுவான், 'நின் நல்லகம்' என்றான். நல்லகம் - நன்னெஞ்சம; அஃதாவது அன்பானே நிறைந்த நெஞ்சம். தனிமையுணர்ந்து வருந்துவது நெஞ்சமே யாகலான், புலம்பினை அதற்கேற்றியுரைத்தான். புலம்புதல் - தனிமையாலே வருந்துதல், 'நிற்றுறந்து அமைகுவன் ஆயின்" என்றது, நிற்றுறந்தமைகலேன் இம் மொழி பிறழ்ந்து அமைகுவேனாயின் என்றவாறு. துறந்து மீண்டும் வருவேன் நெடிது தங்கியிரேன் என்பது தோன்ற 'அமைகுவனாயின்' என்றான். அமைதல் - நெடிது தங்குதல். அமையேன் எனவே நின்னை யான் இப்போது பிரிவேன்; உடனே மீண்டு வருவேன் என்று குறிப்பால்

உணர்த்தியவாறு. இதனுல் பிரிந்தமைதலும் உண்டென்று உணர்ந்து தலைவி அதற்கு அஞ்சுவள் என்பதும் உணர்க. அங்ஙனம் அச்சம் உணர்த்தியவன், இனி அஞ்சற்க எனத் தேற்றும்பொருட்டுச் சூள் மொழிகின்றான். செலவுறுதகவு என்றது, செலுத்தப் பொருந்திய வாழ்க்கை என்றவாறு. அறத்திற்குத்தக வாழ்வதே வாழ்க்கையாக லின், அதனைத் தகவென்றான். செலவுறுதகவு என்பதற்குச் செல்வதற் குற்ற தக்க வினை என்பாரும் உளர். வினையின்கண் இரவலர் வாரா வைகல் பெறுதல் இயல்பாகலின், அது கருத்தன்றென்க. 'ஈதலிசை பட வாழ்தலே' வாழ்க்கையின் ஊதியம் ஆகலின், அவ்வீகைக்கு யான் இரவலர்ப்பெறுது ஊதியம் இழந்தேனுகுக என்றவாறு. இதனுல் தெளிவகப்படித்து ஆற்றியவாறும் உணர்க.

பாட்டு - கஉ அ : தோழி கூற்று

துறை :—(க) குறிபிழைத்த தலைமகன், பிற்றை ஞான்று இரவுக்குறி வந்தழித் தோழி சிறைப்புறமாகக் கூறியது. அஃதாவது, முதல்நாள் இரவு வந்து அல்ல குறிப்பட்டமை யானே தலைவியைப் பெறுது வறிதே மீண்ட தலைவன், மறுநா ளிரவு மனைப்படப்பையருகே வந்துநின்றதனை உணர்ந்த தோழி, கூறியது.

(உ) இரவுக்குறி நேர்ந்ததுமாம். அஃதாவது, பகற்குறியின்கண் வந்தொழுகுந் தலைவனை 'இனிப் பகலிலே வாரற்க; இரவில் வருக' என்று குறிப்பால் உணர்த்தியதுமாம்.

இதன்கண், 'தோழி, இவ்வூரிலுள்ளோர் எல்லாரும் இரவின்கண் உறங்கி விடுகின்றனர்; நாம் மட்டுமே உறங்காது கிடக்கின்றோம்; மேலும் மனையகலே உள்ள நொச்சிப்பூ உதிர்ந்து வீழும் சிறிய ஒலியையும் ஓர்ந்து கேளாநின்றோம்', என்று கூறுகின்றாள்.

கஉ அ. கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னெய்ச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள பூவின் பாடுநனி கேட்டே.

—கொல்லன் அழிசி.

(இ - ள்.) எம் இல் அயலது ஏழில் உம்பர் மயில் அடி இலைய மா குரல் நொச்சி - எம்முடைய இல்லத்தின் பக்கத்துள்ள ஏழிலைப்பாலை மரத்திற்கும் அப்பால் மயிலினது அடியைப் போன்ற இலைகளையுடைய கரிய பூங்கொத்துக்களையுடைய நொச்சியினது, அணி மிகு மென்கொம்பு ஊழ்த்த - அழகு

மிக்க மெல்லிய கொம்புகளிடத்தே மலர்ந்த, மணிமருள் பூவின்-நீலமணிபோன்ற நிறமுடைய மலர்களின் உதிர்வாலுண்டாகும், பாடுநனி கேட்டு - ஓசையைத் தானும் மிகவும் கேட்டு, கொன் ஊர் துஞ்சினும் யாந் துஞ்சலம் - இப் பெரிய ஊரார் எல்லாரும் உறங்கும் நடுயாமத்தினும் யாங்கள் உறங்காதிராநின்றேம்.

விளக்கம் :—தலைவன் "உங்கள் இல்லின் அயலதாகிய ஏழிலைப் பாலைக்கு அப்பாலுள்ள நொச்சியிடத்தே இன்றிரவின்கண் வந்து ஓசையுண்டாக்குவேன், அது கேட்டவுடன் நீயிர் அவண் வருக" என்று கூறிச் சென்றவன், யாதாமொரு காரணத்தால் அவ்விடத்தே சென்று அக்குறிசெய்யத் தவறினன். அல்லது பிறிதோரிடத்தே சென்று குறிசெய்து தலைவியைப் பெறாது வறிதே மீண்டானாக, அன்றிரவு முழுதும் அவ்வோசையை எதிர்பார்த்து உறங்காது வருந்திய தோழியும், தலைவியும் வருந்தினராகக் குறிபிழைத்தமை தங்கள் பிழைப்பன்று என்பதைத் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டுத் தோழி இங்ஙனம் கூறினள் என்க. ஏழில் என்பதனை ஏழின் மலையின் உச்சி என்பாருமுளர். மலையுச்சியின்கண் நொச்சிப்பூ வுதிரும் ஒலியை இல்லில் இருப்போர் கேட்டல் இயலாதாகலானும், இரவுக்குறியிடம் மனைப்படப்பை அகத்ததாகலானும் ஏழிலைப்பாலை என்பதே பொருந்தும் என்க. உம்பர் - அப்பால். ஏழிலும்பர் நொச்சியிருக்கும் சூழலே இரவுக்குறியிடமாகத் துணிந்தமைபற்றி அவ்விடத்தைக் கூறினள். நொச்சிப்பூ வுதிரும் ஓசையையும் கேட்டேம் என்றது, மிக நுணுகிய ஓசையையும் விழிப்புடன் கேட்டிருந்தேம் எனத் தங்கள் பிழைப்பின்மை தெரித்தவாறென்க. மயிலின் அடியின்கண் அமைந்த விரல்களும், உள்ளங்காலும் போன்றமைந்த இலைகளையுடைய நொச்சி என்க நொச்சிப்பூங் கொத்தும் மலரும் கருநிறமுடைமையால் மாக்குரல் என்றும் மணிமருள் பூ என்றும் ஓதினள் மணி - நீலமணி. ஊழ்த்த - மலர்ந்த. பாடு - ஓசை. பூவின் பாடு - பூவுதிர்தலான் உண்டாகும் ஓசை.

நெருநல் இரவு, குறிபிழைத்தது நின் தவறன்றி எங்கள் தவறில்லை என்பது கருத்து. இரண்டாவது துறைக்கு, இப்பகற்குறி இடையூறு பலவுடைத்து, நினது பிரிவாலே யாங்களும் உறங்காது வருந்திக் கிடக்கின்றேம்; ஆதலின, இரவின்கண் மாக்குரல் நொச்சியின்பால் வந்து ஓசையுண்டாக்குக என்று குறிப்பாற் கூறியதாகக் கொள்க. கொன்னூர் - பெரிய ஊர். ஊர்துஞ்சினும் யாந்துஞ்சலமே என்றது, கள்ளியாமத்தினும் துஞ்சேம் என்றவாறு.

பாட்டு - கஉக : தோழி கூற்று

துறை :—வாயில்வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயில மறுத்தது. அஃதாவது, தனது பரத்தமையால் ஊடி பிருந்த தலைவியின் ஊடல் தீர்தது, அவளைக் கூடும்பொருட்டு அதற்குத் துணை செய்யுமாறு தோழியை வேண்டிய தலைவனுக்கு அவள் அதற்குடன்படாது கூறியது.

இதன்கண், 'தலைவ! நீ அடாது செய்கின்றனை; நின்னை இவ்வூரவர் பழிதூற்றுகின்றனர்; நின் வருகை எங்களை நாணும்படி செய்கின்றது; இப்பழியோடே நீ இவ்வில்லிற்கு வாராதொழி,' என்று தோழி கூறுகின்றாள்.

கஉகூ. மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வேருகின மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னு திசைக்கும் அம்பலோடு
வாரல் வாழிய ரையவேந் தெருவே.

—ஒக்கூர் மாசாத்தியார்.

(இ - ள்.) ஐய - பெருமானே! மனையுறை கோழிக் குறுங் காற் பேடை - வீட்டின்கண் தங்கும் இயல்புடைய கோழியினது குறிய காலையுடைய பெடை, மாலை வெருகு இனம் வேலி யுற்றென - மாலைப்பொழுதின்கண் காட்டுப்பூனைகளின் கூட்டம் தன்னையும் குஞ்சுகளையும் இரையாகப் பற்றும் பொருட்டு வேலி யின் அருகே வந்ததாக, புகுமிடன் அறியாது தொகுபு உடன் குழீஇய - அதற்கு அகப்படாது புகுந்து தப்புதற்குரிய இடத்தை அறியாமல் சேர்ந்து ஒருங்கே கூடிய பொருட்டு, பைதல் பிள்ளைக்கிளை பயிர்ந்தாங்கு - துன்பத்தையுடைய குஞ் சினத்தை அழைக்கும் ஓசைபோன்று, இன்னுது இசைக்கும் அம்பலொடு - செவிக்கின்னாதாகத் தூற்றப்படும் பழிச்சொல் லோடே, எம் தெரு வாரல் - எமது தெருவிடத்தே வாராதே கொள், வாழியர் - நீ வாழ்வாயாக.

விளக்கம்:—காட்டுக் கோழியும் உண்மையால், மனையுறை கோழி என்றாள். மனையுறை கோழி, காட்டுப் பூனையின் வருகையை அறிவித் தற்கு கூவும் ஓசை அக் குஞ்சுகட்கு இன்னாதாவது போன்று, இத் தெருவிலுள்ளோர் நின் வருகையை எமக்கு அறிவிக்கக் கூறுஞ்சொல், எமக்கு இன்னாதாகின்றது. ஆதலானே வாரல் என்றவாறும். குஞ்சுகளை வஞ்சனையாற் கொள்ள வேலியின் மறைந்துவரும் காட்டுப் பூனைபோல, நீயும் தலைவியை வஞ்சித்துக் கொள்ள நல்லன்போன்று நடித்து அந்நன்மையுள் மறைந்து வருகின்றாய் என்றாள் என்க.

வெருகு - காட்டுப்பூனை. தலைவன் பாணரும், இளைஞரும் சூழ வருகின்றாராகலின் வெருகினம் என்றாள். காட்டுப் பூனையின் வரவு கேட்டுக் குஞ்சு துன்புறுதல் போல, நின் வரவு கேட்டு நின்பழிக்கு யாங்கள் வருந்தாநின்றேம் ஆதலின் வாரற்க என்றாள் என்க.

அம்பல் - உதோ நின் தலைவர் வருகின்றார் என்று ஊரவர் தமக்குக் கூறுஞ் சொல். அவர் நின் தலைவர் என்புழி நின் தலைவரல்லாத பரத்தர் என்னும் பொருள்பட மொழிகின்றாராகலின், அதனை நாணு

ன்ரேம் என்ரள் என்க. இனிப் பரத்தையர் கூறும் பழிக்கு நாணு ன்ரேம் என்ரள் என்பாருமுளர். அங்ஙனம் கூறின் பரத்தையரை மனையுறை கோழி என்றல் முதலியன பொருந்தாமை யுணர்க. அம்ப லொடு வருதல் - பழிபட வருதல். புகழின்றித் தோன்றலிற் ரேன் றமை நன்றென்பாள், 'அம்பலொடு வாரல்' என்ரள். ஐய என்னும் ளி, எதிலான் என்பதுபட நின்றது. எந்தெரு என்றது, நின் தெரு பரத்தையர் தெரு ஆண்டுச்செல் என்பதுபட நின்றது.

பாட்டு - கசஅ : தலைவி கூற்று

துறை :—பொருள்வயிற் பிரிந்த விடத்து, 'நீ ஆற்று ன்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அஃ தாவது, தலைவன் பொருளீட்டப் பிரிந்தானாக, ஆற்றியிருக்க வேண்டிய தலைவி ஆற்றாளாயினமை கண்டு, 'நீ ஆற்றுதென்?' என வினவிய தோழிக்குத் தலைவி கூறியது

இதன்கண், 'இப்போது கொடிய பாலைநிலவழியே தலைவர் என்னைப் பிரிந்து சென்றனர் : யான் வலியழிந்து இவ்விடத்தே ஆற்றுணைத் துன்பத்தை அகத்தே அடக்கிக் கிடக்கின்றேன் ; என் துன்பத்தை இவ்வூர் எப்படியோ அறிந்துகொண்டது' என்று தலைவி தோழிக்குக் கூறுகின்ரள்.

கசஅ. வேதின வெரிநின் ஓதிமுது போத்து
ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர் உரனழிந்து
ஈங்கியான் தாங்கிய எவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) காதலர் - தலைவர், வேதினம் வெரிநின் - ஈர் வாள் போன்ற முதுகையுடைய, ஓதி முது போத்து - முதிய ஆண் ஓந்தி, ஆறு செல் மாக்கள் புள்கொளப் பொருந்தும் - வழிச் செல்லும் மனிதர்கள் நன்னிமித்தமாகக் கொள்ளும்படி அவ்வழிக்கண்ணே தங்காநின்ற, சுரனே சென்றனர் - பாலை நிலத்தே சென்றனர், ஈங்கு யான் உரன் அழிந்து தாங்கிய எவ்வம - இவ்விடத்தே யான் அவருடைய பிரிவானே வலி கெழிந்து மேற்கொண்டுள்ள துன்பத்தைமட்டும், இவ்வழுங்கல் ஊர் - இரக்கத்தையுடைய இவ்வூரிலுள்ளோர், யாங்கு அறிந் தன்று - எவ்வாறு அறிந்து கொண்டனரோ அறிகிலேன்.

விளக்கம் :—வேதினம் - ஈர்வாள். (பிங்கல-கடுகிக.) அஃதாவது ரம்பம்' என்று இக்காலத்தாரால் வழங்கப்படும் கருவி. ஈர்வாளின் வாய்போன்று முட்களமைந்த முதுகையுடைய ஓந்தி என்க. ஓந்தி,

ஒதி என இடைகுறைந்து நின்றது. முதுபோத்தோதி எனமாறுக. போத்தோந்தி - ஆண் ஒந்தி. ஆறுசெல்வோர்க்கு எதிரே ஒந்தி வலமாதல் நன்னிமித்தம் என்று நிமித்த நூலோர் கூறுப. அறிவுடையோர் வருவன வரும், வாராதன வாரா என்றுணர்ந்து நிமித்தம் பாராராகலின், 'மாக்கள் புட்கொளப் பொருந்தும்' என்றாள். ஆறுசெல் மாக்கள் - வழிப்போவார். புள் - நிமித்தம். ஒந்தி ஆறு செல்வோர்க்கு நன்னிமித்தம் கொள்ளுமாறு வழியிற் சென்று பொருந்தும் என்றது, தலைவர் பிரியுங்கால் செலவழுங்குவியாது அவர் பிரிதற்கு இயைந் தொழுகினை என உள்ளுறையானே தோழியை இடித்துரைத்தவாறு.

சுரன் - பாலைநிலம். உரன் - வலி. ஈங்கு என்றது, அவரையின்றித் தனித்துறைதற்குரிய இவ்வின்னலிருக்கையில் என்பதுபட நின்றது. யான் தாங்கிய - என்னால் மேற்கொள்ளப்பட்ட. எவ்வம் - துன்பம். அழுங்கலூர்-இரங்குதலையுடைய ஊர். தோழியை எதிரதாக் காவாது, இப்போது என்னிலைக்கு இரங்குதல் பேதைமை என்பாள், ஊர் மேலிட்டு 'அழுங்கல் ஊர்' என்றாள். 'தலைவர் சென்றால் இங்ஙனம் ஆகும் என்று முன்னமே அறிந்து ஆவன செய்யாத ஊர், இப்பொழுதும் அறியாதாயின் நன்று,' என்பாள், 'யாங்கு அறிந்தன்று,' என்றாள்.

எனவே, தலைவர் பிரியுங்கால் அறிந்து செலவழுங்குவியாது இப்போது என்னை ஆற்ற முயல்வதால் யாதுபயன் எனத் தலைவி தோழியைக் கடிந்தவாறுணர்க.

பாட்டு - கசுக : தலைவி கூற்று

துறை :— இற்செறிக்கப் பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சிப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் அது(வு) மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, தலைவியை வீட்டின் புறம் போகாது தமர் காவல்செய்கின்ற காலத்தே இரவுக்குறியிடத்தே தலைவன் வந்தொழுகுவானாக, அவன் இருளில் ஏதமிக்கவழியில் வரும்போது விலங்கு முதலியவற்றால் அவனுக்குத் தீங்கு நேரினும் நேரும் என்றஞ்சிய தலைவி, தலைவன் தன் மனையயலே இரவில் வந்துநிற்றலை அறிந்து, இரவுக்குறி மறுத்துப் பகலின்கண் வருமாறு குறிப்பாலே தோழிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நம் அன்னை திணைப்புனத்தே கிளிகடியும் பொருட்டுச் செல்லுதிர்' எனக் கட்டளை யிட்டுள்ளாள் என்றும், 'அஞ்சத்தகுந்த இவ்விடையாமத்தே இனி வாரற்க' என்றும், 'நீ தலைவர்க்குச் சொல்லின் அது குற்றமோ?' என்றும் கூறுகின்றாள்.

கசுக. வகாவாய்ச் சிறுகிளி விகாதினைக் கடீஇயர்
சேல்கென் றேளே அன்னை எனநீ

சோல்லின் எவனே தோழி கோல்லே
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி
சாரல் நாட வாரலோ எனவே.

—மதுரைப் பெருங்கொல்லனர்.

(இ - ள்.) தோழி—, வேலவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர் - வேலேந்த அலகினையுடைய சிறிய கிளிகள் விளைந்து முதிர்ந்த தினையின்கண் வீழாதபடி கடியும் பொருட்டு, அன்னை செல்க என்றேள் என - எம் மன்னை நீவிர் செல்வீராக என்று கூறியுள்ளாள் என்றும், கொல்லே - புனத்தின்கண் உள்ள, நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த - நெடிய கையையுடைய வல்விலங்காகிய யானையினது கடிய பகையினாலே வருந்திய, குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை - குறிய கையையுடைய கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலி, பைங்கண் செந்நாய் படுபதம் பார்க்கும் - பசிய கண்ணையுடைய செந்நாய் தனக்கு இரையாக அகப்படும் செவ்வியை ஆராயாநின்ற, ஆர் இருள் நடுநாள் வருதி - வருதற்கரிய ஏதமுடைய இருள்செறிந்த இடையிரவின்கண்ணே நீ வாராநின்றனை ஆகலின், நின் வருகையை யாங்கள் அஞ்சுகின்றேம், சாரல் நாட - மலைச்சாரலையுடைய நாட்டையுடையோனே, வாரல் என - இங்ஙனம் இரவின்கண் வருதலைத் தவிர்க எனவும், நீ சொல்லின் எவன் - நீ தலைவனுக்கு எடுத்துக் கூறினால் அதனால் வரும குற்றம் யாது.

விளக்கம்:—வேலவாய்: வினைத்தொகை. கதிர் விளைந்து முதிர்ந்த தினை என்பாள், விளைதினை என்றாள். கடீஇயர் - கடியும் பொருட்டு. அன்னை தம்மைத் தினையின்கட் படியும் கிளிகடியும் பொருட்டு நாளைச செல்க என்றாளன்றே, அச் செய்தியை நீ சொல்லின் எவன் என்க. இது தினையிற் கிளிகடிதற்குப் புனத்திற்கு யாங்கள் வருவேமாகலின், ஏதமற்ற பகற்குறியிடத்தும் காங்காணலாம். ஆதலிற் பகலில் வருக என்பதை உணர்த்துக என்றவாறு. இரவுக்குறி மறுக்க எண்ணியவள் முன்னர்ப் பகற்குறி நேர்ந்தாள் என்க.

நெடுங்கை வன்மான் - யானை. யானையைப் புலி எளிதில் வெல்ல மாட்டாமையும், ஒரோவழித் தோல்வியடைதலும் உண்மையின் நெடுங்கைவன்மான் கடும்பகை என்றாள். கடும்பகைக்கண் அகப்பட்டு வருந்திய புலி என்பாள், 'கடும்பகை யுழந்த புலி' என்றாள். இது புலி சினங்கொண்டிருத்தற்கு ஏதுக் கூறியவாறு. இனி எண் பகையாகிய செந்நாயைப் படுபதம் பார்க்கும் என்றது, அத்தகைய புலிக்கு அவ வழி வருவோர் தப்புதல் அரிதென்றவாறு.

ஆர் இருள் - வழிகண்டு செல்லற்கரிய பேரிருள். நடுநாள் வரு, என்றது, நினைக்குப் புலி மூதலியவற்றால் ஏதம் உண்டாதற்கு யாங்க அஞ்சுகின்றோம் என்று குறிப்பாற் கூறியபடியாம்.

வாரல் - வருதலைத் தவிர், எனவும், சொல்லின் எவனே எனவு என்க. ஈரிடத்தும் உம்மை விகாரத்தாற்றொக்கன.

'பொழுதும் ஆறும் புரைவதன்மையின் அழிவுதலைவந்த சிந்தை கண் தலைவி கூறியது' (தொல். களவு. உக.) என்பர், இளம்பூர அடிகள்.

பாட்டு - கசஉ : தலைவன் கூற்று

துறை :—(க) இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்கு தலைமகன் சொல்லியது. அஃதாவது பாலதாணையாற் றலை யைப் பூம்பொழிலிடத்தே கண்டு களவிற் புணர்ந்து நீங்கு தலைவன், 'என் உள்ளத்தின் தன்மையை அவள் உணர் தனளோ ? இலளோ ' எனத் தனக்குட் சொல்லியது,

(உ) தோழிக்குத் தலைமகன் தன்குறை கூறியதூஉமாம் அஃதாவது, தலைவியைப் பெறுதற்குத் தோழியின்பாற் குறை யிரக்கும் தலைவன் தன்னிலையை அவட்குக் கூறியது எனினு பொருந்தும்.

இதன்கண், தலைவன், தலைவி தன்பால் என் நெஞ்ச உறைவதனை உணர்ந்தனளோ இலளோ என்று கூறுகின்றான்.

கசஉ. சுணைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பாணட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே

—கபிலர்

(இ - ள்.) சுணைப்பூக்குற்றுத் தொடலை தைஇ - சுணையில கண் மலர்ந்த பூக்களைப் பறித்துத் தொடையல் புனைந்து, புன கிளி கடியும் பூங்கண்பேதை - தினைப்புனத்தின்கண்ணே பய யும் கிளிகளையும் கடியாநின்ற தாமரை மலர்போலும் கண்ணை யுடைய அத்தலைவி, பாணள் - நடு இரவின்கண்ணும், பள்ள யானையின் உயிர்த்து - படுக்கைகொண்ட யானை பெருமூச்செறி மாறு மூச்செறிந்து, என் உள்ளம் பின்னும் தன்னுழையது என் நெஞ்சம் மீண்டும் அவளிடத்தே நிற்குமதனை, தான் அறி தனளோ இலளோ-அவள் உணர்ந்துகொண்டாளோ அல்லளோ அறிகிலேன்.

விளக்கம்:— சுனைப்பூ - நீல முதலியன. குற்று - பறித்து. தொடலை ஒருவகை மாலை. இதனை இக்காலத்தே தொடைமாலை என்பர். தைஇ - புனைந்து. குற்றும் தைஇயும் என உம்மை விரிப்பினுமாம். புனக்கிளி - புனத்தின்கட்படியும் கிளி என்க. கடிதல் - தட்டை கவண் முதலிய கருவிகளால் ஓட்டுதல். பூ, ஈண்டுத் தாமரைப்பூ. இங்ஙனம் விளையாட்டுத் தன்மையுடைய சிறுமியாகலின், என்னிலையை ஊகித்துணர்வாளோ மாட்டாளோ? என்றவாறு.

பின்னும் என்றது, அவளை முன்னர்ப் பொழிலிடத்தே கண்ட பொழுது என்னெஞ்சம் என்வழி நில்லாது, அவளுழைச் சென்று நின்றது; அவளைக் கூடிப் பிரிந்த பின்னரும் அஃது என்னுழை நில்லாது என்று இரங்கியவாறு. ஊர்துஞ்சும நடு இரவினும் யான் துஞ்சுகின்றிலேன் என்பான், 'பாஞள்' என்றான். பள்ளியானை - படுக்கை கொண்டயானை. படுக்கை கொண்டயானை பேருயிர்ப்புடைத்தாதல் இயல்பு.

'பின்னுத் தன்னுழையதுவே' என்றும் பாடம்; இப்பாடத்திற்கு என்னெஞ்சம் அவளது பின்னிலிடத்தது என்று பொருள் கூறுக. என்னிலை யறிவாளாயின் எனக்கு இயைய நடந்து இன்புறுத்துவள். இன்றேல் யான் என் செய்வேன்! எனத் தன்னுள் இரங்கினன் என்க.

இனித் தோழிக்குக் கூறியதாகக் கொள்ளுமிடத்து, 'என்னிலை இன்னது; நீ தலைவியை என்பாற் சேர்த்து எனை அருளுக' என்று இரந்தானாகக் கொள்க.

பாட்டு - கசஙஞ : தோழி கூற்று

துறை:—வரைவிடைவைத்துப் பிரிந்த விடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது அஃதாவது, தலைவன் வரைந்து கோடற்கு வேண்டிய பொருளீட்டுதற்குப் பிரிந்தானாக, அப் பிரிவினைப பொறாது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் நம்மைப் போன்றே பெரிதும் ஆற்றுமையுடையர்; மேலும், பழியை அஞ்சும் இயல்புடையர்; ஆகலின், விரைவில் வந்துவிடுவர்; நீ அவர் வருந்துணையும் ஆற்றியிரு,' என்று கூறுகிறாள்.

கசஙஞ. அழிய லாயிழை அழிபு பேரிதுடையன்
பழியும் அஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் ருகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாய பசப்பே.

—மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

(இ - ள்.) நில்லாமையே நிலையிற்று ஆகலின் - எப்பொருளும் நிலையுதலின்றி அழிதலே இவ்வுலகத்தே நிலைபெற்றது ஆதலாலே, நல் இசை வேட்ட நயன் உடை நெஞ்சின் கடப்பாட்டாளன் - என்றும் பொன்றாது நின்று நிலவும் நன்றாகிய புகழையே விரும்பிய நன்மையுடைய நெஞ்சினையுடைய ஒப்புரவுமேற் கொண்ட ஒருவன் பெற்றுள்ள, உடைப் பொருள் போல-உரிமையுடைய செல்வத்தைப போன்று, தங்குதற்கு உரித்தன்று-தங்கும்உரிமையுடையதன்று, நின் அம்கலுழ் மேனிப்பாயபசப்பு-நின்னுடைய அழகு ஒழுகும் மேனியின்கண் பரவிய பசலை நோய் அஃதெற்றாலெனின்? பயமலை நாடன் அழிபு பெரிதுடையன்-பயன் கெழுமிய மலைநாட்டையுடைய நந்தலைவர் பிரிவானே நின்னினும காட்டில் பெரிதும் அழிகின்ற தன்மையர், பழியும் அஞ்சும் - மேலும் தனக்குப பழிவருதலைப் பெரிதும் அஞ்சுபவர் ஆகலான் விரைவின் மீள்வர், ஆயிழை ஆதலின்-ஆராய்ந்த அணிகலன்களையுடையோய் நீ, அழியல் - வருந்தாதேகொள.

விளக்கம்:—பிரிவினுல் நீ வருந்துவதினுங் காட்டில் நந்தலைவர் பெரிதும் வருந்தும் இயல்பினர் என்பாள், 'அழிபு பெரிதுடையன்' என்றாள். மேலும் தமது பிரிவாலே பெண்பாலாகிய நீ இறந்துபடுவாயோ, அங்ஙனம் ஆயின் தனக்கு வரும் பழி பெரிதென அஞ்சும் இயல்புடையர் என்பாள் 'பழியும் அஞ்சும்' என்றாள். இவ்விரு ஏதுக்களானும் 'தலைவர் காலநீட்டியாது வந்து விடுவா; நீ அழியற்க' என்று தேற்றினாள் என்க.

அழியல்-வருந்தாதே. ஆயிழை - ஆராய்ந்த அணிகலன்களையுடையாய். ஆயிழை: அன்மொழித் தொகை, விளியேற்று நின்றது. அழிபு-வருத்தம். பயம் - பயன். பயமலை நாடன் என்றது, அவன் நினக்கு அருள் செய்து பயன் படுவன் என்னும் குறிப்புடையது.

நல்லிசை, ஈகையால் உண்டாகும் புகழ். பற்பல துறையினும் புகழ் உண்டாயினும், ஈதலால எய்தும் புகழே சிறந்ததாகலின் அதனை நல்லிசை என்றாள்; திருவள்ளுவனாரும்,

"ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு" (குறள். உசக.)

என்று, புகழுண்டாக்கும் காரணங்கள் பலவற்றுள்ளும் ஈதலே சிறந்ததென்பதனை உணர்த்தினாராதலாலும், மேலும், அபபுகழ் ஒன்றே நிலையுதலில்லா வுலகத்தே நிலைத்து நிற்கும் பெருமையுடைய தென்பார்,

"ஒன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்" (குறள் உகூ.)

என ஓதுதலாலும் உணர்க.

பொன்றாது நிற்கும் புகழ்வேட்கும் உள்ளமாதலின், 'நயனுடை நெஞ்சின்' என்றாள். கடப்பாடு - ஒப்புரவு. இது கைம்மாறு கருதாது செய்யும் உதவி. "கைம்மாறு வேண்டா கடப்பாடு" என்றார் வள்ளுவ

ரும். கல்லிசை வேட்ட ரயனுடை நெஞ்சினன் எல்லோர்க்கும் ள்ளி உள்ளி உவந்தீயும் தொழிலுடையனுகலின், அவனுடைய பாருள் அவன்பாற் றங்குதல் இலதாயிற்று. கடப்பாட்டானன் கைப் பாருள் தங்காது போதல் போல உன்னுடைய பசலையும் தலைவர் ரைவில் வருவராகலின் தங்காதுபோம் என்று விரித்துக் கொள்க.

அங்கலுழ் மேனி - அழகொழுகும் மேனி. அங்கலுழ் மேனிப் ய பசப்புத் தங்காது எனவே, அவ்வங்கலுழ் மேனியை நீ விரைவில் ய்துவை என்று உணர்த்தியவாறுதலறிக.

தங்குதற்குரிய தன்றென்றது, போதற்குரியது என்னும் பொருள் பந்து நின்றது.

பாட்டு - கசசு : செவிலித்தாய் கூற்று

துறை :—மகட்போக்கிய செவிலித் தாய் சொல்லியது. அஃ ாவது களவு மணத்தாற் கற்புக் கடம்பூண்ட தலைவி, தமரறியா ற் றலைவனேடு சென்று விட்டாளாக, அவளை நினைந்து செவிலி ருநதிக் கூறியது.

இதன்கண், ' அந்தோ ! என்மகள் மலர் கொய்தும், டலாடியும், ஆயமகளிரோடே விளையாடுதலையும் வெறுத்து ரு தலைவனேடே வெம்பரல்கள் தன் மெல்லடிகளை வருத்தும் டி போயினளே !' என்று தன்னுட் செவிலித்தாய் நொந்துரைக் ன்றாள்.

கசசு. கழிய காவி குற்றும் கடல
வெண்டலைப் புணரி யாடியும் நன்றே
பிரிவி லாய முரியதோன் றயர
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
சென்மழை தவழும் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே.

—மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனர்.

(இ - ள்.) கழிய காவி குற்றும் - கழியின்கண் மலர்ந்த நங்குவளைமலர்களைப் பறித்தும், கடல வெண்தலைப் புணரி டியும்-கடலின்கண் எழும் வெள்ளிய தலையையுடைய அலை ன்கண் விளையாடியும், பிரிவு இல் ஆயம் உரியது நன்று ஒன்று பர - தன்னேடே என்றும் பிரிதலில்லாத ஆயமகளிர் தத் க்குரிய நன்றுகியதொரு விளையாட்டை அயரா நிற்ப, இவ் ழிப் படுதலும் ஒல்லாள் - இவ்விடத்தே பொருந்துதலும் டம்படாளாய், அவ்வழி - அக்கொடிய பாலைநில வழியிலே,

பரல் பாழ்படுப்பச் சென்றனள் - பருக்கைக்கற்கள் தன் அடியைச் சிதைக்கும்படி போயினள், செல் மழை தவழும் சென்னி விண் உயர் பிறங்கல் விலங்கு மலை நாட்டு-விசும்பின்கட் செல்லா நின்ற முகில்கள் தவழ்தற்கிடமான உச்சியையுடைய வானத்தை யளாவ வுயர்ந்த விளக்கமுடைய குறுக்கிட்டுக்கிடக்கும் மலைகள் பக்க நாட்டிடத்தே.

விளக்கம் :—கழி - கடலருகிலுள்ள நீரோடை. கழிய - கழியின் கண்ணுள்ள. காவி - கருங்குவளை; செங்கழுநீருமாம். குற்றம்-பறித்தும். கடல - கடலின் கண்ணவாகிய. அலைகள் உயருங்கால் அவற்றின் தலை துளிகளானே வெள்ளிதாய்த் தோன்றுதலின், 'வெண்டலை' எனப் பட்டது. புணரி - அலை. ஆயம் - விளையாட்டுமகளிர். இவர்கள் தலை வியைப் பிரியாது எப்பொழுதும் அவளோடே ஆட்டயாவாராகலின், 'பிரிவில் ஆயம்' என்றாள். பிரிவில் ஆயம் என்றது, பிரியவொண்ணுத ஆயத்தையும் அவள் பிரிந்து போயினமை குறித்து நின்றது. உரியது நன்று ஒன்று அயர என இயைத்துக் கொள்க. இவ்வழி, விளையாட்டு அயரும் இவ்வழி என்க. அவ்வழி என்றது, அக்கொடிய பாலைநில வழி என்பதுபட நின்றது. பரல் - பருக்கைக் கற்கள். பாழ்படுப்ப என்றது, அவள் மெல்லிய அடியின் அழகினை அழிக்க என்றவாறு. மழைதவழும் இம்மலைநாட்டின்கண் வேறு நல்ல வழியினும் செல்லாது பாலைவழிப் பரல் பாழபடுப்பச் சென்றாள் என்று இரங்கியவாறு.

பாட்டு - கசரு : தலைவி கூற்று

துறை :—வரைவிடை யாற்றாது தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, களவுமணம் நிகழ்ந்த பின்னர் வரைந்து கோடற்பொருட்டுப் பொருளீட்டச் சென்ற தலைவன் காலம் நீட்டித்தானாக, அப்பிரிவினை ஆற்றாது வருந்திய தலைவி தோழிக்குத் தன் ஆற்றாமையை உணர்த்தியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'இவ்வூர் இனியாம் இனிதிருந்து வாழ்தற்குத் தகுதியுடையதன்று. அஃதெற்றாலெனின், தலைவனுடைய பிரிவாலே பெரிதும் துன்புற்று வருந்தும் என்னை உசாவித் தேற்றுதற்கு நினையாது, உறங்குகின்ற மக்களும், நீண்ட இரவும் உடைத்தாகலான்' என்று கூறுகின்றாள.

கசரு. உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடி
கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சா துறைநரோ டுசாவாத்
துயிற்கண் மாக்களோடு நெட்டிரா வுடைத்தே

—கொல்லனழிசியார்.

(இ - ள்.) இத் துறை கெழு சிறுகுடி-கடற்றுறை பொருந்திய இச் சிற்றூர், உறைபதி அன்று - இனியாம் தங்கியிருத்தற்குத் தகுந்த ஊர் அன்று; அஃதெற்றலெனின், கானலம் சேர்ப்பன் கொடுமை எற்றி - கடற்கரைச் சோலையினையுடைய தலைவனது பிரிவுக்கொடுமையை நினைந்து, ஆனாத் துயரமொடு வருந்தி - அமையாத துன்பத்தோடே வருத்தமுற்று, பானாள் துஞ்சாது உறைநரொடு உசாவா - நடுஇரவினும் துயிலாது கிடப்பவரை நீயிர் என்னுற்றனிர் என்று வினவியறிதலும் செய்யாமல், துயில்கண் மாக்களொடு நெட்டிராவுடைத்து - உறங்குகின்ற கண்களையுடைய அறிவில்லாரோடு நெடிய இராக்காலத்தையும் இவ்வூர் உடையதாகலான்.

விளக்கம்:—உறைபதி-தன்கண் வாழ்வார் இன்புற்று வாழ்தற்குத் தகுந்த ஊர். கடல் அலையும், தன் காம நோயை மிகுதிப்படுத்தலின் துறை கெழு சிறுகுடி என்றமையானும் ஒரேதுக் கூறியவாறுணர்க. பிறர் வருத்தம் நோக்காது துயில்வோர் உறைகுடியாகலின் சிறுகுடி என்றது, பண்பற்றகுடி என்னும் ஒருபொருளும் தோன்ற நின்றது. கானலம் சேர்ப்பன் - நெய்தனிலத்தலைவன். கொடுமை-பிரிவு நீட்டித்தல். எற்று - நினைவு, உரிச்சொல். "எற்றம் நினைவும் துணிவுமாகும்" (உரி-கூ) என்பது தொல்காப்பியம். இனி, எற்றி என்பதை, எற்றல் என்னும் வினைச் சொல்லடியாகப் பிறந்த எச்சமாகவே கொண்டு, கொடுமை எற்ற எனச் செயவெனெச்சமாகத் திரித்து ஏது வாக்கலுமாம்.

ஆனா - அமையாத. பானாளும் - என்னற் பாலதாகிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. கழுதும் கண்ணுறங்கும் பானாளினும் உறங்காதுறைவோர் என்றவாறு. உசாவுதல் - வருத்தமுற்றோரை அண்மி அவ் வருத்தத்திற்குக் காரணம் வினவித் தேற்றுதல். பிறர் வருத்தம் நோக்காது இனிதே உறங்குவார் ஆகலின், கண்ணோட்டம் முதலிய மக்கட்பண்பிலாக் கயவர் என்பாள், 'துயிற்கண் மாக்கள்' என்றாள். ஈண்டு மாக்கள் என்றது, தோழியை அயலார் போன்று கூறிய குறிப்புச் சொல் என்க.

நான் தலைவன் பிரிவாலே வருந்தி இரவெல்லாம் துயிலாது கிடப்பவும் அதனை அறியாது நீ நன்கு துயிலாநின்றனை என்று, கடிந்தபடியாம். நெட்டிரா - நீண்ட இரவு. பிரிவாற்றாது வருந்துவார்க்கு இரவு நீளாதாய்த் தோன்றும் என்பதனை,

"கொடியார் கொடுமையிற் றூங்கொடிய விந்நாள்
நெடிய கழியு மிரா" (குறள்: ககசுக.)

என்னுந் திருக்குறளானும் அறிக.

பாட்டு - கசசு : தோழி கூற்று

துறை: தலைமகன் தமர் வரைவொடுவந்து சொல்லாடுகின்றுழி வரைவு மறுப்பவோ எனக் கவன்ற தலைமகட்குத் தோழி

சொல்லியது. அஃதாவது, தலைவனுடைய உறவினர் தலைவன் வேண்டுகோட் கிணங்கித் தலைவியின் பெற்றோரிடத்தே வந்து மகட் பேசும்பொழுது, 'தலைவி ஒருகால் தன் தமர் மகட் கொடை மறுப்பரோ?' என்று நினைந்து வருந்தினளாக, அவளைத் தோழி, தமர் வரைவுடன்பட்டமைகூறி மகிழ் வித்தது.

இதன்கண், 'இன்று நம் மில்லத்தின்கண் கூடிய அவை யிடத்தே பிரிந்தோரைக் கூட்டி மகிழும் சான்றோரும் உளரா யினர். அஃதெற்றாலறிந்தாய் எனின்? நந்தமர் கூற்றிற்கெல் லாம் நன்று நன்று என்று கூறிமகிழும் தலைவன் தமரோடு நும் வருகை இன்று எமக்குப் பெரும் பேறாயிற்று என்று முகமன் கூறும் நந்தமரையும் அவ்வவை யுடைத்தாகலான்' என்று, தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

கசசு. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னும் ஆங்கண தவையே.

—வெள்ளி வீதியார்.

(இ - ள்.) அம்ம வாழி தோழி - தோழி நீ வாழ்க, யான் கூறுவதனைக் கேட்பாயாக, ஆங்கணது அவை - அவ்விடத்தே உள்ளதாகிய நம்மவர் குழுவிய அவை, தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர் - தண்டினைப் பிடித்த கையினை யுடை யாரும் வெள்ளிய நரையினையுடைய தலையின்கண் துகிலை யுடை யாருமாகிய, நன்று நன்று என்னும் மாக்களோடு - நந்தமர் மொழிக்கெல்லாம் நன்று நன்று என்று கூறிமகிழும் தலைவன் தமரோடு, இன்று பெரிது என்னும் - இந்நாள் நும் வருகை யால் பெருமையுடையதாம் என்று முகமன் கூறுகிற்கும், நம் மூர்ப் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் - ஆதலால் நம் மூரின் கண்ணும் பிரிந்தோரைச் சேர்த்து வைக்கும் சான்றோர் உளர் என்று அறிகின்றேன்.

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற்கண் வந்தது. நற்செய்தியை அறிவிக்கின்றாளாகலின் நீ வாழ்க என வாழ்த்தினள் என்க.

ஆங்கணவை மாக்களோடு இன்று பெரிதென்னும், ஆதலால் நம் மூரினும் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் என இயைபு காண்க. கொல் - ஓ, அசைகள். மாக்கள், ஈண்டுத் தலைவன் தமராய முதி யோர். முதியோராகலின், 'தண்டுடைக்கையர் வெண்டலைச் சிதவலர்' என்றாள். வெண்டலை, நரைத்த மயிரையுடைய தலை. சிதவல் -

துகில். ஈண்டு தலைக் கட்டுக் கட்டிய துகில் என்க. இதனால் பண்டு மகட்பேசுதற்கு ஆண்டானும் அறிவானும் முதிர்ந்த சான்றோர் செல்லும் வழக்கம் உண்மையும் அறிக. நந்தமர் கூறுவனவற்றிற் கெல்லாம் தலையசைத்து நன்று நன்று என்று தலைவன் தமர் கூறலும், நந்தமர் இன்று பெரிது என முகமன் கூறலும் வரைவுடன் பட்டமைக்கு அறிகுறிகள் ஆகலின், இது வரைவுடன்பட்டமை தலைவிக்கு உணர்த்தியதாதல் அறிக.

முன்னர் இற்செறித்தல் முதலியவற்றாலே புணர்ந்தோர்ப் பிரிப் போராக இருந்த நந்தமர், இன்று வரைவுடன்பட்டுப் பிரிந்தோர்ப் புணர்ப்போராயினர் என்பாள், 'நம்மூர் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்' என்றாள். நம்மூரினும் எனவேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.

ஆங்கணது அவை என்றது, நம்மில்லிலே அவை கூடுதற்குரிய தலைவாயிற் புறத்தே கூடிய நம்சூழ் என்றவாறு. தலைவியும் தோழியும் மனையகத்தாராகலின், ஆங்கணவை என்று சுட்டினாள். இனி ஆங் கணவை என்பதற்கு ஊரம்பலம் எனினும் ஆம்.

பாட்டு - கசஎ : தலைவன் கூற்று

துறை —தலைமகன் பிரிந்தவிடத்துக் கனாக்கண்டு சொல் லியது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தான் சென்றவிடத்தே தயிலுங்கால் தலைவியைக் கனவிற் கண்டு விழித்து ஆற்றுமையாலே கூறியது.

இதன்கண், கனவுகண்டு விழித்த தலைவன் அக்கனவை நோக்கிக் 'கனவே நின்னை உலகத்துக் காதலர் இகழுமாட் டாரோ? நீ மடந்தையைத் தந்தாய் போல இனிய துயிலி னின்றும் எடுப்பி, ஏமாற்றுகின்றனையே', என்று கூறுகின்றான்.

கசஎ. வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரேர் பொழுகிய வங்கவுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்றுயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே.

—கோப்பெருஞ் சோழன்.

(இ - ள்.) கனவே—, வேனில் பாதிரிக் கூன்மலர் அன்ன - வனிற்காலத்தே மலரும் பாதிரியினுடைய வளைந்த மலரின் ன் துய்போன்ற, மயிர் ஏர்பு ஒழுகிய - மயிர் எழுச்சியுற்று ழுங்குபட்ட, அங்கவுழ்மாமை - அழகு ஒழுகும் மாமை பயும், நுண்பூண் மடந்தையை - நுணுகிய வினைத்திற மமைந்த

அணிகலன்களையும் உடைய தலைவியை, தந்தோய் போல இன்றுயில் எடுப்புதி - தரமாட்டாயா யிருந்தும் தருகின்றாயைப் போலக் காட்டி இனிய துயிலைக் கெடுத்து எழுப்பா நின்றாய், அம்ம - கேட்பாயாக, துணைப் பிரிந்தோர் எள்ளார் - இவ்வே மாற்றச் செயலாலே நின்னைத் துணையைப் பிரிந்துறைவோர் இகழமாட்டாரோ?

விளக்கம் :—துணைப்பிரிந்தோர் துயிலுதல் அரிதாகலான் அரிதிற் பெறுந்துயில் என்பான், இன்றுயில் என்றான். இனிய துயிலை எடுப்பி மீண்டும் பிரிவாற்றாது 'வருந்தச் செய்கின்றாய். அதனால் நீ எள்ளப் படுவை என்பான், 'எள்ளார்' என்றான். எள்ளார் : வினை. எள்ளுவர் என்றபடி. தரமாட்டாயா யிருந்தும் தந்தாய்போல எடுப்பிப் பொய்க்கின்றாய் என்பான், 'தந்தாய்ப்போல எடுப்புதி' என்றான். ஒன்றினைத் தரமாட்டாதார் தருவார் போல நடித்துப் பின் தாராதிருப் பின், அவரை உலகம் பொய்யர் என்றிகழ்தலின், அங்ஙனமே நீயும் இகழப்படுவை என்றவாறு.

"நனவினால் நல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது" (குறள் - கூஉக.)

என்னுந் திருக்குறளின்கண்ணும், கனவு வருத்துவதாதலுணர்த் தினமையறிக. "விழித்துழிக் கரத்தலின் அதனானும் துன்பமாகா நின்ற தென்பாள், பீழிப்பதென்றுங் கூறினாள்," என்பர் பரிமேலழகர்.

இனி இங்ஙனம் கூறுது கனவில் தலைவியைக் கொணர்ந்து காட்ட லால் நின்னைத் துணைப்பிரிந்தோர் எள்ளாது புகழ்வர் என்பது கருத் தாகக் கூறுவாருமுளர். தந்தோய்போல இன்றுயில் எடுப்புதி என்ற குறிப்பானும், புகழ்வார் என்பது கருத்தாயின் எள்ளார் என்பது அக் கருத்தை நன்கு விளக்காமையானும், துயிலெடுப்புதல் துன்பத்திற்கே காரணமாதலானும், அது கருத்தன்றென்க. இகனை தலைவன் தலை வியர் இருவர்க்கும் ஒத்தலான் பொதுவில் துணைப்பிரிந்தோர் என்றான்.

பாட்டு - கசஅ : தலைவி கூற்று

துறை :—பருவங் கண்டழிந்த தலைமகளைத் தோழி பருவ மன்றென்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்த பொழுது, 'யான் கார்ப்பருவம் தொடங்குங் கால் வருவன் ஆற்றியிரு' எனக் கூறிச் சென்றானாக, அப்பருவம் வந்தும் அவன் வந்திலாமையால், தலைவி ஆற்றாது வருந்தினள்; அவளை நோக்கித் தோழி இஃதவர் கூறிச்சென்ற பருவம் அன் றென்றாளாக அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், 'கார்ப் பருவத்திற்குரிய அறிகுறிகள் நன்கு காணப்படாநிற்பவும், இது கார்ப்பருவம் அன்றென்று கூறு

ன்றாய். அங்ஙனம் இது கார் அன்றாயின், இக்காட்சிகள் னவோ! கூறுக' என்று தலைவி தோழியைச் சினந்து கூறு ன்றாள்.

கசஅ. செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய போலஞ்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலையும்
காரன் றென்றி யாயிற்
கனவோ மற்றிது வினவுவல் யானே.

—இளங் கீரந்தையார்.

(இ - ள்) தோழீ—, செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த- செல்வமிக்க சிறுவர்களுடைய சிறிய அடியின்கண்ணே பாலிந்து விளங்காநின்ற, தவளை வாய பொலஞ்செய் கிண் ணிக் காசின் அன்ன - தவளையினது வாய்போன்ற வாயை டையவாய்ப் பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணியணியின் ாசுபோன்ற, போது ஈன் கொன்றைக் குருந்தோடு அலம் ரும் - அரும்பினைத் தோற்றுவிக்கும் கொன்றைமரங்கள் ருந்த மரங்களோடே சுழலாநின்ற, பெருந்தண் காலையும் - க்க குளிர்ச்சியையுடைய இப் பருவத்தையும், கார் அன்று ன்றியாயின் - கார்ப்பருவம அன்று என்று நீ துணிந்து றுவையாயின், யான் வினவுவல் - நின்னையான் கேட்பன்; து கனவோ - இக்காட்சி கனவுகொல்லோ கூறுக.

விளக்கம் :—செல்வக்குடியிற் றோன்றிய சிறுவரைச் 'செல்வச் றுஅர்' என்றாள் பொன் கிண்கிணி அணியும் தகுதியுடையார் அவர் கலின். "அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில் தேர் நடைபயிற் ம் தேமொழிப் புதல்வன்" (நற் - உஞ0.) எனப் பிறரும் ஓதுதல் ண்க. சீறடி - சிறிய அடி. பொலிந்த காசு, தவளைவாய காசு, பாலஞ்செய் காசு எனத் தனித்தனிக் கூட்டுக. கிண்கிணி - சதங்கை. வளைவாய் போன்ற வாயையுடைய காசு என்க. இது கொன்றைப் பாதிற்கு உவமை. கொன்றை கார்காலத்தே மலரும் இயல்புடை து, "கண்ணி கார்நறுங் கொன்றை" (புறம் - க.) எனப் பிறரும் றுதல் காண்க. குருந்து - ஒருவகை மரம். குருந்தமரம் கார்ப் நவத்தே தழைத்து மலரும். இதனை, "குரவுந்தளவும் குருந்தும் காடலும் அரவு கொண்டெரும்ப.....கார்வளம் பழுனிக் கவினிய னத்து" (க, சக: கூஅ. கo க.) எனவரும் பெருங்கதையினும் ண்க. பெருந்தண் காலை - மிக்க குளிர்ச்சியையுடைய பருவம். ர்ப்பருவத்திற்குரிய அடையாளங்களைக் கண்கூடாகக் கண்டு வத்தும் இது கார் அன்று என்பது அறிவுடைமையோ என்றிகழ்ந்த றென்க.

பாட்டு - கசகூ : தலைவி கூற்று

துறை : உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது. அஃதாவது, தோழி தலைவியை நீ தலைவனுடனே தமர் அறியாமற் செல்லவேண்டும் என்றுணர்த்திய தோழிக்குத் தலைவி நாணழிவிற் கிரங்கிக் கூறியது.

இதன்கண், 'அந்தோ! நமது நாண் இரங்கத்தக்க தொன்றாயிற்று; அது நம்மோடு நெடிதுநாள் தயருழந்து கிடந்தது; இப்போதோ காமநோய் மிகுதலாலே என்னை நீத்து அகலாகின்றது; யான் என் செய்வேன்!' என்று தலைவி இரங்கித் தோழிக்குக் கூறுகின்றாள்.

கசகூ. அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாவே.

—வெள்ளி வீதியார்.

(இ - ள்.) தோழி—, நாண் நம்மொடு நனி நீடு உழந்தன்று - நாணம் நம்மூடனே மிகவும் நீண்டகாலம் கிடந்து வருந்தாகின்றது, இனி வான் பூங்கரும்பின் ஓங்கு மணல் சிறுசிறை - இனிமேல் வெள்ளிய பூவையுடைய கரும்பினையுடைய உயர்ந்த மணலாகிய சிறியகரை, தீம்புனல் நெரிதர வீய்ந்து உக்காங்கு - இனிய நீர்பெருகி நெரித்தலைச் செய்யக் கரைந்து வீழ்ந்தாற் போன்று, தாங்கும் அளவைத் தாங்கி - பொறுக்குந துணையும் பொறுத்து, காமம் நெரிதர - காமநோய் மிக்குப் பெரிதும் நெருக்குதலானே, கை நில்லாது - நம்பால் நிற்றலாற்றாது நீத் தொழிந்தது, அளிது - அந்நாணம் இரங்கத்தக்கதாயிருந்தது.

விளக்கம் :—நாணம், மகளிர்க்கு இயல்பாகவுள்ள தொரு பண்பு.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த,
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

என்பது தொல்காப்பியம். இக்குணம் மகளிரோடு உடன்பிறந்து எஞ்ஞான்றும் நீங்காது வளர்தலின், 'நனிநீடுழந்தன்று' என்றாள். உழந்தென்றது இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த நாள் தொடங்கி இற்றைநாள் வரை நாணம் தன்னோடு பெரிதும் உழந்தமை கருதிக் கூறியதென்க. தன் னோடு அல்லற்காலையும் செல்வக்காலையும் உடனுறைந்த நாண், இன்று அழிவதாயிற்றே என்று வருந்துவாள், 'அளிது' என்றாள். கற்பைக் காக்கும் பொருட்டு நாணம் விடப்

படவேண்டும். நாண் காவல் கொண்டு கற்பும் காக்கப்படின் நன்று, காமநோய் மூடுக்கலால் இப்பொழுது கற்புக் கடம் பூணற்கு நாண் துறந்து உடன்போக் கிசைகின்றேன் என்பாள், 'காமம் நெரிதரக் கைந்நில்லாதே' என்றாள். கரும்புகளையுடைய மணற்கரை வெள்ளம் மிக்குழிக் கரைந்து அழியுமாறு போலக் காமம் மிக்குழி நாண் அழிவ தாயிற்று என, உவமையை விரித்துக் கொள்க. ஏனைப் பெண்மை நல னெல்லாவற்றிற்கும் நாணம் ஆக்கமாய் நின்று அவற்றை நிலை பெறுத்தலின் 'கரும்பு நின்ற மணற்சிறு சிறை' என்றாள். காம வெள்ளத்தைத் தாங்கலாற்றாது அழிதலின் 'சிறு சிறை' என்றாள். "சிறையும் உண்டோ செழும்புனல் மிக்குழி, நிறையும் உண்டோ காமம் காழ்க் கொளின்" (நி: ககூ- உ0) என்றார் மணிமேகலையினும். உயிரினும் நாண் சிறந்தது; நாணினும் கற்புச் சிறந்தது ஆகலின், கற்பின் பொருட்டு நாண் துறத்தல் அறக்கழிவன்றாயிற்று.

"என் கண்மணி போன்
றொருநாள்பிரியா துயிரிற் பழகி உடன் வளர்ந்த
அருநாண்" (திருக்கோவையார்: சசு)

என்னை அகன்றொழியலாயிற்றே என்றிரங்குவாள். 'அளிதோதானே நாண்' என்றாள்.

இதனால் உடன் போகவேண்டுமென்ற தோழிக்குத் தான் உடம் பட்டமை உணர்த்தப்பட்டமையும் உணர்க.

பாட்டு - கரு0: தலைவி கூற்று

துறை: இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறி யது. அஃதாவது, தலைவியின் உடம்பாடுணராமலே தலைவ னுக்கு இரவுக்குறியிடம கூறி, 'அவண் வருக' என்று குறி நேர்ந்த தோழி, அதனைத் தலைவிக்குணர்த்திய பொழுது தலைவி, 'நீ நேர்ந்தமை நன்றே' என்பதுபடத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'மலைநாடனுடைய மார்பினை யான் எண்ணுங்கால் என்னுள்ளத்தே நோய் பெருகா நின்றது; அம்மார்பினைப் புல்லுமிடத்து அந்நோய் இல்லையா கின்றது; இஃதொரு வியப்பிருந்தவாறு,' என்று கூறுகின்றாள்.

கரு0. சேணுறை மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுல ரகலம்
உள்ளின் உண்ணுநோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொல் அன்னாய்.

—மாடலூர் கிழார்.

(இ - ள்.) அன்னாய் சேணுறை மாட்டிய நறும்புகை ஞெகிழி - தோழீ பரண்மேலிருப்போன் கொளுத்திய நறு

மணங்கமழும் புகையையுடைய கொள்ளி, வான மீனின் வயின் வயின் இமைக்கும்-விண் மீனைப் போன்று இடந்தோறும் இடந்தோறும் ஒளி வீசாநின்ற, ஒங்குமலை நாடன் சாந்து புலர் அகலம் - உயர்ந்த மலைநாட்டையுடைய தலைவனது சந்தனம் பூசிப் புலர்ந்த மார்பினை, உள்ளின் உள்நோய் மல்கும் - யான் நினைத்தக்கால் எனது உள்ளத்தின்கண் காமநோய் மிகாநிற்கும், புல்லின் மாய்வது எவன் - அம்மார்பினைத் தழுவுங்கால் அந்நோய் இல்லையாகும்; இஃதென்ன வியப்பு?

விளக்கம்:—சேணோன் - உயரத்திலிருப்பவன். என்றது, பரண் மிசை இருப்பவன் என்றவாறு. குறவர்கள் புனங்காத்தற் பொருட்டு உயர்ந்த மரத்தின் உச்சியிற் பரண்கட்டி அதன்கண் தங்குவர் என்க. விலங்குகள் வாராதபடி ஆண்டுக் கொள்ளியை எரித்தல் வழக்கம். உயரத்தே எரியும் கொள்ளிகள் விண்ணின் விளங்கும் மீன்கள் போல் ஒளி வீசும் என்க. ஞெகிழி - கொள்ளி. மாட்டுதல் - கொளுத்துதல். வயின் வயின் - இடந்தோறும் இடந்தோறும். இமைத்தல் - ஒளி வீசுதல். சாந்து - சந்தனம். சந்தனம் பூசிப் புலர்ந்த மார்பு என்க. முன்னரும் அதனை அணைந்தவளாகலான், அதனியல்பை விதந்தோதினாள். அகலம் - மார்பு. நினைக்குங்கால் வருத்துவதும் நுகருங்கால் வருத்தந்தீர்ப்பதுமாகிய ஒரு பொருள் வேறு காண்டலின்மையின், இது வியப்பென்றாள். இது புதுமை பொருளாகப் பிறந்த மருட்கை என்க.

இதனால், யான், 'தலைவரைப் புல்லாது ஆற்றகிலேன்; ஆகலின் நீ இரவுக்குறி நேர்ந்தமை சாலவும் நன்றுயிற்று,' என்று உணர்த்தப்பட்டமை உணர்க.

பாட்டு - கருக : தலைவன் கூற்று

துறை :—பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது. அஃதாவது, இன்மையதினிலும் உடைமைய துயர்ச்சியும் எடுத்துக்காட்டித் தலைவியைப் பிரிந்து பொருளீட்டக் கடைக்கூட்டிய தன் னெஞ்சிற்குத் தலைவன் கூறியது.

இதன்கண், "நெஞ்சே! பாலைநிலவழி கடத்தற்கரிய தென்பதும் கருதாமல், பிரிதற்கரிய தலைவியையும் பிரிந்து, 'பொருளீட்டச் செல்வேன்' என்று நீ நினைப்பதை ஆராயின், இந்நினைவு நமது இளமைக்கு முடிவாக அமையும் என்று எனக்குத் தோன்றுகின்றது," எனத் தலைவன் கூறுகின்றான்.

கருக. வங்காக் கடந்த செங்காற் பேடை
எழாஅலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரல குறும்பல அகவும்

குன்றுகெழு சிறுநெறி அரிய என்னது
மறப்பருங் காதலி யோழிய
இறப்ப லென்பதீண் டிளமைக்கு முடிவே
—தூங்கலோரியார்.

(இ - ள்.) வங்காக் கடந்த செங்காற் பேடை - சேவலாகிய வங்காப் பறவையால் நீங்கப்பட்ட சிவந்த கால்களையுடைய பெடைவங்கா, எழாஅல் உற வீழ்ந்தென - புல்லூறென்னும் பறவை தம்மேல் நெருங்க வீழ்ந்ததாக, கணவற் காணாது - தம் சேவலைக் காணமையால், குழல் இசைக் குரல குறும்பல அகவும் - வேய்ங்குழலின் இசை போன்ற குரல் உடையன வாய்க் குறிய பலவாகிய ஓசைகளாலே கூப்பிடா நிற்கும், குன்று கெழு சிறு நெறி அரிய என்னது - மலைகள் பொருந்தின சிறிய வழிகள் கடத்தற்கு அரியன வாதலையும் கருதாமல், மறப்பருமை காதலி ஒழிய - மறத்தற்கரிய தலைவியும் ஈண்டுத் தனித்துத் தங்க, இறப்பல் என்பது ஈண்டு இளமைக்கு முடிவே- நான் செல்வேன் என்று துணிவது இவ்விடத்தே நம் இளமைக்கு இறுதியே யாகும்.

விளக்கம் :—வங்கா - ஒருவகைப் பறவை. "வங்கா வரிப்பறை" (சூசக) என நற்றிணையினும் வருதல் காண்க. இதனை இக்காலத்தார் வக்கா என்று வழங்குவர். எழாஅல் - புல்லூறு என்னும் ஒருவகை வன்பறவை. இது பறவைகளை அடித்துண்ணும் இயல்புடைய தென்ப. இக்காலத்தே வல்லூறு என்று வழங்கப்படும் பறவை இதுவே போலும். வீழ்ந்தென - இரையாகக் கொள்ளும் பொருட்டுத் தம்மேல் வீழ்ந்ததாக. தமக்கு இடையூறுற்றுழித் தங்கணவனை காணப் பெறுமையால் அகவும் என்க. அகவுதல் - அழைத்தற் பொருள்படக் கூவுதல். கோழிச் சேவல் குயில் முதலியன கூவுதல் போன்று நெடுங்குரலின்றிக் குறுகுரலாய்க் கூவு மென்பான், 'குறும்பல அகவும்' என்றான். பல என்றது பன்முறையும் என்ற வாறு. எழால் வீழ்ந்த பேடை கணவற்காணாது கூவும் என்றது, நம் பிரிவு வருத்துகையாலே நம்மை நினைந்து தலைவி அழுவாள் என்ப தனை நினைவுறுத்தும் செயல் ஆண்டளது என்றவாறு. குறிஞ்சி திரிந்தபாலை என்பான், 'குன்றுகெழு சிறு நெறி' என்றான். சிறுநெறி- ஒடுங்கிய வழி. குன்றுகளின் இடையே இட்டிதாகக் காணப்படும் நெறி, ஆறு செல்வோர்க்குத் துன்பந்தருதலின், 'அரிய' என்றான். அருமை ஊடுபோய்க் கடத்தற்கருமையைக் கருதியதாம்.

மேலும் காதலியின் நினைவு மறத்தற்கரிதாகலின், போதலும் அரிதென்பான், 'மறப்பருங் காதலி' என்றான். ஒழிய என்னுஞ்சொல், அவள் இறந்துபடுவாள் என்னும் பொருள்படவும் நின்றதுணர்க. கழிந்த இளமை மீண்டும் பெறவியலாதாகலின் அப்பொருளீட்டற்கண் நம்மிளமையும் கழிந்தொழியும் என்றிரங்குவான், இது நம் இளமைக்கு முடிவேயாகும் என்று தேற்றேகாரமிட்டுரைத்தான். ஆகலின் யான் உடம்படேன் எனச் செலவழுங்கினது இது.

பாட்டு - கருஉ : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழி ஆற்றுளாகிய தலைமகள் 'நீ ஆற்றுகின்றிலை' என்று நெருங்கிய தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரைதற் கருத்தின்றி ஒழுகியவழி ஆற்றுமை கொண்ட தலைவியை 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்; இங்ஙனம் ஆற்றுமை அழகன்று' என்று கழறிய தோழியை, 'நீ அதனியல்பறிந்திலை' எனத் தலைவி கடிந்துரைத்தது.

இதன்கண், தலைவி முன்னிலைப் புறமொழியாக, 'ஆற்றுமை நன்றனறு' என்று இடித்துரைப்போர், அக்காமத்தின் இயல் பறியாத மடவோரே ஆவர்; தலைவரைக் காணுங்கால் வளரும் இயல்புடைய காமம் அவர் கைவிட்ட காலத்தே மெலிவதன்றிப் பிறிதென்னும்!' என்று கூறுகின்றாள்.

கருஉ. யாவதும் அறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயின் அல்லது பிறிதேவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே.

—கிளிமங்கலங் கிழார்.[1]

(இ - ள்.) யாமைப் பார்ப்பின் அன்ன காமம் - தாய் யாமையின் முகம் நோக்கி வளரும் இயல்புடைய யாமையின் பார்ப்பினைப் போன்று தலைவர் அருணோக்கங்கண்டு வளரும் இயல்புடைய காமமானது, கையற விடின் - அவர் செயலறவு கொள்ளும்படி விட்டவிடத்தே, தாயில் முட்டைபோல உட் கிடந்து - தாய் இல்லாத முட்டை கிடந்து உள்ளே அழிவது போன்று, சாயின் அல்லது - உள்ளத்துள்ளே கிடந்து மெலிவ தல்லது, பிறிது எவன் உடைத்து - வேறு என்ன உறுதியை உடைத்தாகும், கழறுவோர் யாவதும் அறிகிலர் - நீ ஆற்றுயா கின்றுய் என என்னை இடித்துரைப்போர் காமத்தின் இயல்பை ஒரு சிறிதும் உணர்கின்றிலர்.

விளக்கம்:—யாமைப்பார்ப்புத் தாய்முகம் நோக்கி வளரும் இயல் புடையது; இதனை,

"தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னஅங்
கதுவே ஐயரின் மார்பே
அறிந்தனை ஒழுகுமதி அறனுமா ரதுவே. (ஐங்குறு: சச)

என்னும் ஐங்குறு நூற்றுப் பாடலானும் அறிக.

1. (பாடம்) கிழிமங்கலங்கிழார், கழிமங்கலங்கிழார், கிள்ளிமங் கலங்கிழார்.

தாய் இல் முட்டை - தாய்ப்பறவை இறந்துபடக்கிடந்த முட்டைகள் என்க. தாய்ப்பறவை அடிக்கடி அடைகிடந்து முதிர்விக்கற் பாலனவாகிய முட்டை, அஃதில்வழித் தம்முள்ளே அழுகிக் கெடுமாறு போல, இடையறுதுடனிருந்து தலைவர் அருளாது விட்டபொழுது காமம் கெடும் என்க.

உட்கிடந்து என்றது, நெஞ்சினுள்ளே கிடந்து என்றவாறு. எனவே களவுக்காலம் என்பது பெற்றும். என்னை? கற்புக்கால மாயின் தலைவனைத் தாது முதலியவற்றாற் பெறற்பொருட்டுக் காமத்தை வெளிப்படுத்தவும் கூடும்; களவுக்காலத்தே நெஞ்சினுள்ளே நினைந்தழிவதன்றிப் பிறிது செயலின்மையின் என்க. அவன் வரைவு நீட்டித்த வழி, 'யாம் செயற்பாலது யாதும் இல்லை' என்பாள், 'கையற விடின்' என்றாள். கையறவு - செயலற்றநிலை.

'தலைவர் கையற விடின், காமமுற்றோர் இங்ஙனம் அழிந்து ஆற்றாதலே இயல்பாம்; அதனியல்பை நீ அறியாது கழறுகின்றனை' எனக் கடிந்தவாறு.

பாட்டு - கருகூ : தலைவி கூற்று

துறை :—வரையாது நெடுங்காலம் வந்து ஒழுகுகின்றுழி "நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை?" என்ற தோழிக்கு "அவர் வரவு நமக்கு ஆற்றுமைக்குக் காரணமாம்" எனத் தலைமகள் கூறியது. அஃதாவது, தலைவன் வரைந்து கொள்ளக் கருதாது இரவின்கண் நீண்டகாலம் வந்தொழுகுதலை மாற்றக் கருதிய தோழி, மாற்றுதற்கு ஏதுவாக ஏதினைக் கூறுவது என்று தலைவியை வினவ, அவள் தலைவன் ஏதமிக்க நெறியில் இரவில்வருதலை யான் அஞ்சுகின்றேன் ஆகலின், அவ் வேதுவாலேயே அவ்வொழுக்கத்தை மாற்றி வரைவுகடாவுக என்று தோழிக்கு ஏதுவுண்மை கூறியது

இதன்கண், 'என் நெஞ்சம் முன்பெல்லாம் கூகை குழறினும், குரங்கு மரக்கிளையிலே பாய்ந்து ஓசையுண்டாக்கினும் அஞ்சும. இப்பொழுதோ சாரல் நீளிடையில் இரவில் செல்லாநின்றது' என்று தலைவி கூறுகின்றாள்.

கருகூ. குன்றக் கூகை குழறினும் முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்
அஞ்சுமன் அளித்தெ னெஞ்ச மினியே
ஆரிருட் கங்குல் அவர்வயிற்
சாரல் நீளிடைச் செலவா னுதே.

—கபிலர்.

(இ - ள்.) தோழீ—, குன்றக்கூகை குழறினும் - மலையின் கண்வாழும் பேராந்தை ஒலிசெய்யினும், முன்றிற் பலவின்

இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்-நம் முன்றிலிடத்தேயுள்ள பலாமரத்தினது பெரிய கிளையின் கண்ணே ஆண்குரங்கு தாவித்துள்ளினாலும், என் நெஞ்சம் அஞ்சுமன் - பண்டெல்லாம் என் நெஞ்சம் அஞ்சுவதொன்றுயிருந்தது; அது கழிந்தது, இனி - இப்பொழுதோ, அவர் வயின் ஆர்இருட் கங்குல் சாரல் நீள்இடைச் செலவு ஆனது-அவர் பக்கல் செல்வதாகிச் செல்லுதற்கரிய இருளையுடைய இரவின்கண் மலைப்பக்கத்தே கிடந்த நெடிய வழியின்கட் செல்லுதலைத் தவிர்ந்திலது, அளித்து - ஆதலின் அஃது இரங்கத் தக்கதாயிற்று.

விளக்கம்:—குன்றக்கூகை - மலையில் வாழுமியல்புடைய கூகை என்க. கூகை - பேராந்தை. கூகை கத்துவதைக் குழறுதல் என்பது மரபு. முன்றில்: இல்முன். வீட்டின் முற்றத்தே நிற்கும் பலாவின்கண் இரவில் குரங்கு பாயும் ஓசை கேட்பினும் என் நெஞ்சம், அஞ்சும் என்றபடி. அஞ்சவேண்டாதவற்றிற்கெல்லாம் அஞ்சிய நெஞ்சம், இப்பொழுது அஞ்ச வேண்டியவற்றிற்கும் அஞ்சிற்றிலே என்றவாறு. பண்டு இல்லத்துள் தமருடன் இருக்கும்போதே அஞ்சியது, இப்பொழுது வழிதெரிந்து செல்லவியலாத இருளில் சாரலின் ஊடே கிடந்த ஏதமிக்க வழியில் அவர் வரும்போதும் போம் போதும் தளரடி தாங்குதற்பொருட்டு அவர் பக்கலிலேயே செல்லத்துணிந்தது என்க. ஆனது - தவிராது.

'இதனுல் யான் தலைவர் இரவின்கண் வருதலை எண்ணி அவர்க்கு ஏதம் வருமோ என்று அஞ்சுகின்றேன்; ஆகலின், இதனைக் கூறியே நீ இரவின்கண் வாரற்க என்னுமுகத்தானே வரைவு கடாவுக' என்று உணர்த்தப்பட்டமை யுணர்க.

பாட்டு - கருசு : தலைவி கூற்று

துறை:—பொருள் வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது. அஃதாவது, பொருளீட்டற் பொருட்டுச் சென்ற தலைவன், காலம் நீட்டித்த வழி அவனது வன்கண்மையை நினைந்த தலைவி, அதனியல்பைத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'இங்ஙனம் நம்மைப் பிரிந்து தனித்துறைதலைத் தலைவர் எவ்வாறு கற்றனரோ? என்று கூறுகின்றாள்.

கருசு. யாங்கறிந் தனர்கொல் தோழி பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன உருப்பவி ரமையத்
திரைவேட் டெழுந்த சேவல் உள்ளிப்
பொறிமயிர் எருத்திற் குறுநடைப் பேடை
போரிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்

தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே.

—மதுரைச் சீத்தலைச் சாத்தனார்.

(இ - ள்.) தோழி-, பாம்பின் உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவிர் அமையத்து - பாம்புரித்த தோல் மேலே எழுந்தாற் போன்று கானல் விளங்குகின்ற நண்பகற் பொழுதின்கண், இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளி - இரையை விரும்பிப் பிரிந்துபோன தன் சேவலை நினைத்து, பொறிமயிர் எருத்தில் குறுநடைப் பேடை - புள்ளிகளையுடைய மயிர் பொருந்திய கழுத்தினையும குறியதாய் அடியிட்டு நடக்கும் நடையினையும் உடைய புறவுப்பேடை, பொரி கால் கள்ளி விரிகாய் அம் கவட்டு - பொரிந்த அரையினையுடைய கள்ளிமரத்தினது வெடித்த காயையுடைய அழகிய கிளையின்கண், தயங்க இருந்து- விளங்கும்படி இருந்து, புலம்பக் கூஉம - தன் தனிமை தோன்றும்படி கூவாகிற்குமு, அருஞ்சுர வைப்பில் கானம் - கடத்தற் கரிய பாலை நிலமாகிய இடத்தையுடைய காட்டின்கண், பிரிந்து சேண் உறைதல் வல்லுவோர் - நம்மைப் பிரிந்துசென்று தூரிய நாட்டிடத்தே தங்கும வன்மையையுடையர், யாங்கு அறிந்தனர் - அவ்வன்மையுடையராதற்கு எவ்வாறு அறிந்தனர்.

விளக்கம்:—தனித்து வருந்தாதுறையும் வன்மையை யான் அறிதற்கியலாது இங்ஙனம் வருந்துவேனுகவும், என்னொடு ஒத்த அன்புள்ள உள்ளமுடைய தலைவர் மட்டும் அதனை எவ்வாறு பயின்றனர் என்ற வாறு. யாங்கு - எவ்வாறு. பாம்பின் உரி, கானல் தோற்றத்திற்கு உவமை உருப்பு - பேய்த்தேர். அவிர்தல் - விளங்குதல். நண்பகலிலே பேய்த்தேர் கட்புலனுய் விளங்கித் தோன்றுதல் கண்டறிந்தது. உருப்பவிர் அமையம் - நண்பகல்.

வேட்டெழுந்த - விரும்பிப் பறந்து சென்ற. பேடை - பெண்புரு. 'பொறி மயிர் எருத்திற் குறுநடைப் பேடை' என்றதனுல், புரு என்பது பெற்றும் புரு - பாலைநிலக் கருப்பொருள். நண்பகற் போதிற் பிரிந்த சேவலை நினைந்து கள்ளிமரக் கிளையிலிருந்து பேடை தனிமை தோன்றக் கூஉம் என்றது, பண்டு தலைவன் தனக்குக் கூறியதாகும், அதனைக் கொண்டு கூறினள் என்க. தனிமைத் துயரைப் பறவைகளிடத்தும் கண்டிரங்கும் அருளுடையார், இப்பொழுதும் அக்காட்சியைக் காணுங்கால் நம்மை நினைந்து மீள்வரன்றே! அங்ஙனம் மீளாது தங்கும் வன்மை அவர்பால் பண்டு கண்டேமில்லை! புதுவதாக அதனை யாங் கறிந்தனரோ என்று இரங்கினள் என்க.

கள்ளியங் கவட்டிற் புறவிருத்தல் காண்பார்க்கு விளங்கித் தோன்று மாகலின், தயங்க இருந்து என்றுள். இதுவும் தலைவன் கூற்றைக் கொண்டு கூறியதேயாம். புலம்பக் கூவுதலாவது - தனிமையாலுற்ற

அவலந்தோன்றக் கூவுதல். வைப்பு - இடம். அருஞ்சுரவைப்பாகிய கானம் என்க. வல்லுவோர் - வன்மையுடையோர்.

பாட்டு - கருநிரை : தலைவி கூற்று

துறை :—தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது. அஃதாவது, தலைவன், 'யான் கார்ப்பருவத் தொடக்கத்தே நின்னை மீண்டுவந்து காண்பன்; அதுகாறும் ஆற்றியிரு' என்று சென்றவன், அப் பருவம் வந்தும் வாராமையாற் றலைவி வருந்திக் கூறியது.

இதன்கண், 'கார்ப்பருவம் விதைத்து மீளும் உழவர் வட்டில் பூவானே நிரம்பும்படி வந்துவிட்டது! தலைவருடைய தேர் வருகின்றது என்று கூறும் சொல்மட்டும் இன்னும் வந்திலது' என்று தலைவி கூறுகின்றாள்.

கருரு. முதைப்புனங் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த பசுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பி னர்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே.

—உரோடகத்துக் காரத்தனர்.

(இ - ள்) முதைப் புனங் கொன்ற ஆர்கலி உழவர் விதைக் குறுவட்டி - பழைய புனத்தை வெட்டிப் பண்படுத்திய ஆரவாரத்தையுடைய உழவர்களுடைய விதைத்தற் குரிய குறிய வட்டிகள், போதொடு பொதுள-முல்லைப்பூவானே நிறையும்படி, பொழுதோ வந்தன்று - அவர் கூறிச் சென்ற கார்ப்பருவத்து மாலைப் பொழுதோ இதோ வந்துவிட்டது, மெழுகு ஆன்று ஊதுலைப் பெய்த பசுவாய்த் தெண்மணி-மெழுகாலியற்றிய கருவின்கண் அமைத்து ஊதுகின்ற கொல்லுலைக் கண் வைத்து இயற்றிய பிளவுபட்ட வாயையும் தெளிந்த ஓசையினையும் உடைய மணி, மரம் பயில் இறும்பின் ஓர்ப்ப-மரங்கள் நெருங்கி வளராநின்ற காட்டின்கண்ணே ஆரவாரிப்ப, சுரன் இழிபு - அருவழியைக் கடந்து, மாலை நனி விருந்து அயர்மார்-இம்மாலைக்காலத்தே மிகவும் விருந்து அயர்தற்பொருட்டு, தேர் வரும் என்னும் உரை வாராதே - உதோ தலைவருடைய தேர் வாராநின்றது என்று கூறும் உரை இன்னும் வந்திலதே; யான் என்செய்வேன்.

விளக்கம்:—முதைப் புனம் - பழைதாகிய கொல்லை - கொல்லுதல்-வெட்டிப் பண்படுத்துதல். 'காடுகொன்று நாடாக்கி' என்புழிப் போலக் கொன்று என்பது வெட்டிப்பண்படுத்தி என்னும் பொருள் குறித்து நின்றது. ஆர்கலி - ஆரவாரம். உழவர், ஈண்டு மூல்லைநிலத்தே உழுதுண்ணும் இடையர் என்க. வட்டி - ஓலையாற் செய்த சிறு கொட்டம். விதைவிதைப்போர் சிறிய கொட்டங்களிலே விதையைப் பெய்து கையிலேந்தி விதைப்பர். விதைக் குறுவட்டி - விதைத்தற் குரிய குறிய வட்டி என்க. கார்ப்பருவத் தொடக்கத்தே முதைப்புனத்தில் விதைத்த உழவர்கள், அப் பருவத்தே புதிதாகமலர்ந்த முல்லைமலரைப் பறித்து வட்டிலே நிரப்பிக் கொண்டு வரும்படி, கார்ப்பருவம் வந்தது என்க. அவர் கூறிய பருவம் வந்ததென்பாள், 'பொழுதோ வந்தது' என்றாள். வந்தன்று - வந்தது. மெழுகு - ஈண்டு மணி வார்த்தற்கு அரக்காலியற்றிய கரு. ஆன்று - அமைத்து என்க. ஊதுலை-துருத்தியால் ஊதப்படும் கொல்லுலை. பகுவாய் - பிளவுபட்ட வாய். தெண்மணி - தெளிந்த ஓசையையுடைய மணி.

தலைவர் மீண்டு வந்தவுடன் தலைவியர் அவர்க்கு விருந்து செய்தல் வழக்கம். இதனை, "அரிவை விருந்தயர் விருப்பொடு வருந்திஞள் அசைஇய முறுவலின்னகை காண்கம்" (நற்-அக) என்றும "வீனை கலந்து வென்றீக வேந்தன் மனை கலந்து, மாலை யயர்கம் விருந்து" (குறள்-கஉசு அ.)என்றும் பிறர் கூறுமாற்றானும் உணர்க. இறும்பு குறுங்காடு. அயர்மார் - அயர்தற் பொருட்டு.

உரைவருதலாவது - தலைவன் தேர் வருதலைச் சேய்மையிற் கண்டோர் விரைந்து வந்து தலைவிக்குக் கூறுதல்.

பாட்டு - கருசு : தலைவன் கூற்று

துறை :—கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது. (ஃஃதாவது, 'நீ காமநோய்கொண்டு வருந்துதல் தகவன்று' என்று இடித்துரைத்த பாங்கனைத், தலைவன் 'நீ இடித்துரைத்தல் தகவன்' றென உள் அழிந்து கூறியது.

இதன்கண், தலைவன், 'பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே! நீ ஓதும் வேதத்திலேனும் என் நோய்க்கு மருந்துண்டாயிற் கூறுக; வீணே நீ இடித்துரை வழங்குவதாற் பயன் என்?' என்கின்றான்.

கருசு. பார்ப்பன மகனே பார்ப்பன மகனே'
செம்பூ முருக்கி னன்னர் கனிந்து
தண்டோடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பி னின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ விதுவே.

—பாண்டியன் எறிந நெடுங்கண்ணனார்.

(இ - ள்) பார்ப்பன மகனே பார்ப்பன மகனே—,செம்பூ முருக்கின் நன்னர் களைந்து தண்டொடு பிடித்த தாழ்கமண்ட லத்து - சிவந்த பூவினையுடைய முருக்க மரத்தினது நல்ல பட்டையை நீக்கி அதன் தண்டோடே பிடித்த தாழ்கின்ற கரகத்தையும், படிவ உண்டிப பார்ப்பன மகனே-விரதவுணவை யும் உடைய பார்ப்பன மகனே, எழுதாக்கற்பின் நின் சொல் லுள்ளும் - எழுதாதே கற்றலையுடைய நினக்குரிய மறையின் கண் உள்ள சொற்களி னகத்தேனும், பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின் மருந்தும உண்டோ - தம்முட் பிரிந்தோரைச் சேரத் தற்குரிய தன்மையுடைய மருந்தாம சொல் உளதோ உளதாயிற் கூறிக்காண், இது மயல் - அதனை ஒழிதது என்னை இடித் துரைக்கும் இச்சொல் நின் மயக்கததானே எழுநததாம்.

விளக்கம் :—பார்ப்பனன் ஆயினும் நீ பேதை என்பான், 'பார்ப்பன மகனே' என்னும விளியை மும்முறை அடுக்கினான். முருக்கந்தண்டு பார்ப்பனர்கள் பிடிப்பதொன்று. கரகமும் பார்ப்பனாக் குரியது, இதனை.

"நூலை கரகம் முக்கோல் மணையே
ஆயுங காலை அந்தணர்க் குரிய (மரபு-எ0.)

எனவரும் தொல்காப்பியத்தானும் அறிக. "உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்" (கலி-க) என்றார் பிறரும்.

நார் - பட்டை. படிவ உண்டி - விரதவுணவு. எழுதாக் கற்பு என்றது, வேதகுகளை. ஆரியததிற்கு எழுத்தில்லையாகலின 'எழுதாக் கற்பு' எனபபட்டது கற்பு - கல்வி வேதம் பார்ப்பனர்க்கே உரிய தாகலின், நின் சொல் என்றான். வேதம் மந்திரகளையுடைமையின் அதன்கண பிரிநதோரைப் புணரகரும மநதிரம் உண்டோ? உண்டாயின் அதனைக் கூறு என்றான். இஃது பாங்களை அசதியாடியது என்க. படிவ உண்டியை உடையை யாகலின் காமத்தின் இயல்பினை அறி யாது இடித்துரைத்தனை என்பான், 'படிவ உண்டிப்பார்ப்பன மகனே' என்றான். இது - நீ இடித்துரைகரும ஆசசொல். மயல் என்று காரி யததைக் காரணமாக உபசரித்தான். "வேதத்தை அறிந்த நின் சொல்" என்பாரும் உளர்.

தலைவியை யன்றி, யான் கொண்ட நோய்கரு நின் வேதத்துள்ளும் மருந்தில்லை என்றபடியாம்.

பாட்டு - கருவி : தலைவி கூற்று

துறை :—பூப் பெய்திய தலைமகள் உரைத்தது. அஃதா வது, பூப் பெய்திய தலைமகள அக்காலத்தே தலைவன் தன்னைப் பிரிந்துறைவன் என்பது கருதி, அச்சிறு பிரிவும் ஆற்றாது கவன்று கூறியது.

இதன்கண், 'குக்கூஉ' என்று கோழிகூவிற்று! அதைக் கேட்டதும் 'காதலரைப் பிரிக்கும் வாள்போன்ற அந்நாள் வந்ததே'! என்று என்னெஞ்சம் துட் கென்றது,' என்று தலைவி தன்னுட் கூறிக் கொள்கிறாள்.

கருஎ. குக்கூ வென்றது கோழி அதன்எதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.

—அம்மூவர் நன்முல்லையார்.

(இ - ள்.) கோழி குக்கூ என்றது - கோழிச்சேவல் குக்கூ என்று கூவா நின்றது, அதன் எதிர் என் தூய நெஞ்சம் துட்கு என்றது - அக் குரல் கேட்டவுடனே எனது தூய்மையுடைய நெஞ்சம் துட்கென அஞ்சா நின்றது; அஃதெற்றாலெனின்? தோள் தோய் காதலர்ப் பிரிக்கும் வாள் போல் வைகறை வந்தன்று என - எனது தோளே மணந்த தலைவரை என்னிடத்து நின்றும் பிரித்துவைக்கும் வாளைப்போலக் கொடிய வைகறைப் பொழுது வந்தது என்று நினைத்தலானே.

விளக்கம்:—பூப்பெய்திய மூன்றாளும் தலைவியோடு தலைவன் கூடுதல் கூடாதென்ப. இதனை, "மூன்றாளும் கூடி உறையப்படும் குற்றம் என்னை யெனின், பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்ற கரு வயிற்றில் அழியும்; இரண்டாநாள் நின்ற கரு வயிற்றிலே சாம்; மூன்றாநாள் நின்ற கரு குறைவாழ்க்கைத்தாம்; வாழினும் கிருவின்றும், அதனால் கூடப்படாதென்பது." (சூசூ.) எனவரும் இறையனார் களவியல் உரையானும் அறிக.

அதன் எதிர், அந்நிகழ்ச்சிக்கு முன்னே என்க. துட்கு - அச்சம். அன்பால் ஆதரவுபட்ட நெஞ்சமாகலின், 'தூய நெஞ்சம்' என்றாள். தோள் தோய் காதலர் என்றது, இடக்கரடக்கல். பிரிக்கும் செயல் பற்றி வைகறைக்கு வாள் உவமை என்க. கோழி கூவுதல் பொழுது விடிதற்கு அறிகுறியாகலின், அது கேட்டதும் நெஞ்சம் அஞ்சிற்றென்க. அச்சம் பிரிவதே என்னும் நினைவானே உண்டாயது. ஆல்: அசை. "உயிரீரும் வாள்" (குறள் - சூசூ.) என வள்ளுவனாரும் காலத்தை வாள் என்றோதுதல் அறிக.

பாட்டு - கருஅ : தலைவி கூற்று

துறை:—தலைமகன் இரவுக்குறி வந்தழி அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. அஃதாவது, தலைமகன் இரவுக்கண் வருகலை எதிர்பார்த்திருந்த தலைவி, அவன் வருகைக்கு முன் மழை வந்து விட்டமையால் இம் மழையாலே தலைவன் வருகை தடைப்படுங் கொல் என்று அஞ்சி

யிருந்தாள்; அம் மழையினூடேயும் தலைவன் வந்து தன் மனை யயல் நிற்றலை அறிந்தும் அறியாதாள் போல மழைக்குக் கூறியது.

இதன்கண், 'மழையே! நீ இமயம் தளக்கும் ஆற்ற லுடையை; நீ இரக்கமில்லாதாய் போலும்! நின் ஆறறற் கேற்ற நிடத்தே செல்கின்றிலையாய்த் துணையின்றி வதியும் பெண்டி ராகிய எம்பால் இடர் செய்ய வந்தனை! இஃதென கொலோ!!' என்று தலைவி கூறுகின்றாள்.

கருஉ. நெடுவரை மருங்கிற் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அஞ்சிக்
காலொடு வந்த கமழ்சூல் மாமழை
ஆரளி யிலையோ நீயே பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர் அளியர் பெண்டிர் இஃதெவனே?

—ஔவையார்.

(இ - ள்.) நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும் - நெடிய மலைப்பக்கத்தே உறையும் பாம்புகள் இறந்துபடுமபடி இடிக்கின்ற, கடுவிசை உருமின் கழறுகுரல் அஞ்இ - கடிய வேகத்தையுடைய உருமேற்றின் வன்குரலோடு கலந்து மேலும், கடுவிசைக் காலொடு வந்த - கடிய வேகதையுடைய காற் றோடே வந்த, கமம சூல் மா மழை - நிறைந்த சூலினை யுடைய பெரிய மழையே, நீ ஆர் அளியிலையோ - நீதான நின் பெரு மைக் கேற்ற பேரருளை உடையை அல்லையோ, பேர் இசை இமய மும் துளக்கும் பண்பினை - நீதான் பெரும்புகழையுடைய இமய மலையையும் அசைக்கும் ஆற்றலுடையை; அங்ஙனமிருந்தும், துணையிலர் அளியா பெண்டிர - யாங்களோ ஆற்றுந் துணையைப் பிரிந்திருப்போரும நின்னால் இரங்கத் தக்காரும எளிய பெண் பாலாரும் ஆவோம், இஃதெவன் - எமமேல் சினந்து எம்மை இடர் செய்ய வரும் நின்னுடைய இச் செயல் எத்தன்மைத்தாம்.

விளக்கம்:—ஔவை மூதாட்டியாரின் புகழ்போல இச் செய்யுள் சொல்லாலும் பொருளாலும் சிறந்து நிற்றல் உணர்ச்சி கருவியாக உணர்ந்தின்புறுக. அருமையுடைய அரண் சேர்ந்த பாம்பும் பட இடிக் கும் அதிர்ச்சியோடு வருகின்றனை என்பாள், 'நெடுவரை மருங்கிற் பாம்பு பட இடிக்கும்' என்றாள். "விரிநிற நாகம் விடருள தேனும் உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்" (கசுசா.) என்றார் நாலடியி னும். இடி, மிக்க வேகமுடையதாகலின் கடுவிசை உருமின் என்றாள். கழறுகுரல் - வன்குரல் என்பதுபட நின்றது. கடுவிசை என்பதனைக் காலொடும் கூட்டுக. நின்குரல் கேட்டே யாங்கள் நடுங்கா நின்றேம்

என்பது குறிப்பு. கமம் - நிறைவு. சூல், நீரானே நிறைதல். மாமழை - பெரிய மழை.மழை : விளி. நீ உலகெலாம் புரக்கும் தொழிலுடையை என்று கேட்டுள்ளோம்; அப் புரத்தற் றொழிற்கு இன்றியமையா அருள் நின்பால் இல்லையோ! என்று வியப்பாள், 'ஆரளி யிலையோ நீயே' என்றுள். ஆர் அளி - நின் பெருமைக்குப் பொருந்திய அருள் என்க. உலகிலுள்ள மலைகளில் தலைசிறந்த மலையாகலின், 'பேரிசை இமயம்' என்றுள். நடுக்கின்றி நிலையிய இமயத்தையும் நடுங்கச செய்யும் ஆற்றலுடையை என்பாள், 'பேரிசை இமயமும் துளக்கும் பண்பினை' என்றுள். இத்தகைய பேராண்மையுடைய நீ துணையிலாரும், இரங்கத் தக்காரும், பெண்டிருமாகிய எமக்கு இடர் செய்ய வருதல் தகவோ? என்பாள், 'இஃது எவன்?' என்றுள். இஃது என்றது, இச் செயல் என்றவாறு. துணையிலாதார் அளியர் பெண்டிர் என்னும் முத்திறத் தார்க்கும் வீரர்கள் இடர் செய்யக் கருதார். முத்திறப் பண்பும் எம்பாற் கண்டு வைத்தும் இச செயல் என்னும் என்று இகழ்ந்தவாறு.

பாட்டு - கருகூ : தோழி கூற்று

துறை :—(க) தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப் பறிவுறுத்தது. அஃதாவது, தலைவன் அணியனாக வந்த பொழுது தமர் தலைவியை வீட்டின் புறம்போகாது காவல்செய்யக் கருதி யிருப்பதை அவன் கேட்கும்படி அவன் வருகையை உணரா தாள் போலத் தலைவிக்குத் தோழி கூறியது.

(உ) உயிர் செல வேற்றுவரைவு வரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்ததூஉமாம்; அஃதாவது, கற்புக் கடம் பூண்ட தலைவிக்கு இறந்து பாடுறும்படி பிறர் மகட் பேசி வந்த காலததே அச் செய்தியை அதனை மாற்றற் பொருட்டுத் தலைவி தோழிக்குரைத்ததுமாம்.

கருகூ. தழையணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் ஆக நிறைய வீங்கிக்
கோம்மை வரிமுலை செப்புடன் எதிரின
யாங்கா குவள்கோல் பூங்குழை என்னும்
அவல நெஞ்சமோ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரே.

—வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்.

(இ - ள்.) இப் பேதையூர் - இப் பேதைமை யுடைய ஊர், அல்குல் தழை அணி தாங்கல் செல்லா - அல்குலிடத்தே அணி பாகின்ற தழை அணியையும் பொறுக்கலாற்றாத, நுழை சிறு நுசுப்பிற்கு எவ்வமாக - நுணுகிய சிறிய இடைக்குத் துன்ப மாகும்படி, அம்மெல் ஆகம் நிறைய வீங்கி - அழகிய மென்மை

யுடைய மார்பகம் நிறையும்படி பருத்து, கொம்மை வரி முலை செப்புடன் எதிரின - பெருமையையும் தேமலையும் உடைய முலைகள் செப்போடு மாறுபட்டன, பூங்குழை யாங்காகுவள் என்னும் அவல நெஞ்சமொடு - பூத்தொழிலையுடைய குண்டலத்தையுடைய இவள் எந்நிலையை எய்துவளோ என்னும் தன் பத்தையுடைய நெஞ்சத்தோடே, உசாவாக் கவலை மாக்கட்டு - ஆராயா நின்ற கவலையையுடைய அறிவிலிகளை யுடைத்தா யிருந்தது.

விளக்கம்:—தழையணி - தழையாலாய உடை. தழையுடையை அழகின் பொருட்டு மகளிர் அணிவது பண்டை வழக்கம். "சாரல் தழையணி யல்குன் மகளிர் குள்ளும்" (குறுந் - கஉடி.) என, முன்னும் வந்தமை காண்க. நுழை - அறிவு நுழைந்து நோக்குதற்குக் காரணமான சிறுமையையுடைய நுசுப் பென்க. நுணுகிய நுசுப்பு என்றவாறு. அல்குல் தழையணி என மாறுக. தழையை அணிந்த அலகுலை என் பாருமுளர். இடை அல்குலைத் தாங்குதலன்றுதல் அறிக. அல்குலிடத்தே அணியும் தழை இடையில் யாக்கப்படுதலின் அதனைப் பொறுக்க லாற்றுத என்க. எவ்வம் - துன்பம். அம் மெல் ஆகம் - அழகும் மென்மையும் உடைய மார்பு. கொம்மை - பெருமை; வட்டமுமாம். வரி - தேமல்; தொய்யிலுமாம். எதிரின - மாறுபட்டன. யாங்காகுவள் - இங்ஙனம் பருவம் வரப்பெற்றுள் எந்நிலையை எய்துவாளோ பூங்குழை: அன்மொழித் தொகை, அவலம் - துன்பம். உசாவா: செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம்; உசாவி என்னும் பொருட்டு. மாக்கள் என்றது, தாய் முதலிய தமரை. இவள் களவானே கற்புக் கடம் பூண்டமை யறியாத ஊர் என்பாள், 'பேதையூர்' என்றுள். கற்புக்கடம் பூண்டமையறியாது இவள் பருவநிலை நோக்கி என் ஞகுவள் என்று கவலைகொண்டு ஆராய்வார் என்றலின், இவளை இற் செறிக்க எண்ணுகின்றனர் என்று குறிப்பான் உணர்த்தியவாறு.

இனி, உசாவாக் கவலை மாக்கட்டு என்பதன்கண், உசாவா என்பதனை எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு, "உசாவாத (ஏனென்று கேளாத) கவலை மாக்கட்டு எனகூறி, கவலையில்லாத மாக்கட்டு என்பது குறிப்பு" என்பாருமுளர். உசாவாத வழியும் கவலை கொள்ளாத வழியும் இற்செறித்தற்கிடனின்மையால் இச் செய்யுட்கோதிய துறையொடு படாமையறிக.

உசாவுகின்றனர் கவல்கின்றனர் என்பனவே எதுவாதலும் உணர்க

இனி, இரண்டாவது துறைக்குத் தலைவி கூற்றாகக்கொண்டு, என்பருவம் நோக்கி உசாவிக் கவல்கின்றனர் ஆகலின், ஒருகால் வேற்றுவரைவு நேரின் நமர் உடன்படுவர் ஆகலின், அந்நிகழ்ச்சியையும் நாம் விழிப்புடனிருந்து நிகழாமற் பரிகரித்தல் வேண்டும் எனத் தலைவி தோழிக்குணர்த்தினளாகக் கொள்க.

இக்கருத்தறியாதார் "நொதுமலர் வரைவு நேரின் இவள் எந்நிலையினள் ஆவளெனச் சிறிதும் ஆராயாத மாக்களையுடையது என்று பொருள் கொள்க" எனத் துறையொடு சிறிதும் பொருந்தாது கூறினரும் உளர்.

பாட்டு – கசுo : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைமகளை நோக்கித் தோழி, வரைவர் என ஆறறுவிப்புழித் தலைமகள் சொல்லியது. அஃதாவது, வரைதற்கு வேண்டிய பொருளீட்டற் பொருட்டுச் சென்ற தலைவன், காலநீட்டித்தமையால் வருந்திய தலைவியை நோக்கி 'அவர் விரைவில் வந்து நின்னை வரைகுவர் வருந்தற்க !' எனத், தோழி ஆற்றுவித்தாளாகத் 'தலைவர் அங்ஙனம் வரைந்து கொள்வாரல்லர்' எனத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'தோழி நீ நங் காதலர் விரைவில் வந்து வரைந்து கொள்வர் என்கின்றாய்; அவரோ துன்பமிக்க இப் பெருந்தண் வாடைக்காலத்தும் வாராராயினர்! இதுதான் தலைவர் வரைந்து கோடலோ!' என்று கூறுகின்றாள்.

கசுo. நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பேடையொடு
தடவின் ஓங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநங் காதலர் வரைவே.

—மதுரை மருதனிள நாகனார்.

(இ - ள்) தோழி—, நெருப்பின் அன்ன செந்தலை அன்றில் - நெருப்பை ஒத்த சிவந்த தலையையுடைய அன்றிற்சேவல், இறவின் அன்ன கொடுவாய்ப் பேடையொடு - இறாமீனைப் போன்று வளைந்த வாயினையுடைய பெடையன்றிலோடே, தடவின் ஓங்குசினைக் கட்சியில் - தடாமரத்தினது உயர்ந்த கிளையின்கண்ணுள்ள சேக்கையிலிருந்து, பிரிந்தோர் கையற நரலும நள் என்னும யாமத்துப் பெருந் தண் வாடையும் வாரார் - தம்மைவரைப் பிரிந்துறைவோர் செயலற்று வருந்தும் படி ஒலியாநின்ற நள் என்னும் ஓசையையுடைய இக் கூதிர் காலத்து இடையிரவின்கண் மிக்க குளிர்ச்சியுடைய வாடைக் காற்று எறியும் அமையத்தும் வந்திலர், நம் காதலர் வரைவு இஃதோ - நம்முடைய காதலர் விரைந்துவந்து செய்த வரைவு இதுதானே ?

விளக்கம் :—நெருப்பு, அன்றிலின் தலையிலுள்ள சூட்டிற்கு உவமை. தலை - ஆகுபெயர். இறவு - இறுமீன். நெருப்பின், இறவின், என்ப வற்றுள் இன் சாரியை தவிர்வழி வந்தன. கொடுவாய் - வளைந்த அலகு. இறவு - அன்றிற் பெடையின் அலகிற்கு உவமை. தடவு -

யுடைய மார்பகம் நிறையும்படி பருத்து, கொம்மை வரி முலை செப்புடன் எதிரின - பெருமையையும் தேமலையும் உடைய முலைகள் செப்போடு மாறுபட்டன, பூங்குழை யாங்காகுவள் என்னும் அவல நெஞ்சமொடு - பூத்தொழிலையுடைய குண்டலத்தையுடைய இவள் எந்நிலையை எய்துவளோ என்னும் துன்பத்தையுடைய நெஞ்சத்தோடே, உசாவாக் கவலை மாக்கட்டு - ஆராயா நின்ற கவலையையுடைய அறிவிலிகளை யுடைத்தாயிருந்தது.

விளக்கம்:—தழையணி - தழையாலாய உடை. தழையுடையை அழகின் பொருட்டு மகளிர் அணிவது பண்டை வழக்கம். "சாரல் தழையணி யல்குன் மகளிர் ருள்ளும்" (குறுந் - கஉடு.) என, முன்னும் வந்தமை காண்க. நுழை - அறிவு நுழைந்து நோக்குதற்குக் காரணமான சிறுமையையுடைய நுசுப் பென்க. நுணுகிய நுசுப்பு என்றவாறு. அல்குல் தழையணி என மாறுக. தழையை அணிந்த அலகுலை என் பாருமுளர். இடை அல்குலைத் தாங்குதலன்றுதல் அறிக. அல்குலிடத்தே அணியும் தழை இடையில் யாக்கப்படுதலின் அதனைப் பொறுக்க லாற்றுத என்க. எவ்வம் - துன்பம். அம் மெல் ஆகம் - அழகும் மென்மையும் உடைய மார்பு. கொம்மை - பெருமை; வட்டமுமாம். வரி - தேமல்; தொய்யிலுமாம். எதிரின - மாறுபட்டன. யாங்காகுவள் - இங்ஙனம் பருவம் வரப்பெற்றுள் எந்நிலையை எய்துவளோ பூங்குழை: அன்மொழித்தொகை, அவலம் - துன்பம். உசாவா: செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம்; உசாவி என்னும் பொருட்டு. மாக்கள் என்றது, தாய் முதலிய தமரை. இவள் களவானே கற்புக் கடம் பூண்டமை யறியாத ஊர் என்பாள், 'பேதையூர்' என்றுள். கற்புக்கடம் பூண்டமையறியாது இவள் பருவநிலை நோக்கி என்னுகுவள் என்று கவலைகொண்டு ஆராய்வார் என்றலின், இவளை இற் செறிக்க எண்ணுகின்றனர் என்று குறிப்பான் உணர்த்தியவாறு.

இனி, உசாவாக் கவலை மாக்கட்டு என்பதன்கண், உசாவா என்பதனை எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு, "உசாவாத (ஏனென்று வினாவாத) கவலை மாக்கட்டு எனக்கூறி, கவலையில்லாத மாக்கட்டு என்பது குறிப்பு" என்பாருமுளர். உசாவாத வழியும் கவலை கொள்ளாத வழியும் இற்செறித்தற்கிடனின்மையால் இச் செய்யுட்கோதிய துறையொடு படாமையறிக.

உசாவுகின்றனர் கவல்கின்றனர் என்பனவே எதுவாதலும் உணர்க

இனி, இரண்டாவது துறைக்குத் தலைவி கூற்றாகக்கொண்டு, என்பருவம் நோகுகி உசாவிக் கவல்கின்றனர் ஆகலின், ஒருகால் வேற்றுவரைவு நேரின் நமர் உடன்படுவர் ஆகலின், அந்நிகழ்ச்சியையும் நாம் விழிப்புடனிருந்து நிகழாமற் பரிகரித்தல் வேண்டும் எனத் தலைவி தோழிக்குணர்த்தினளாகக் கொள்க.

இக்கருத்தறியாதார் "நொதுமலர் வரைவு நேரின் இவள் எந்நிலையினள் ஆவளெனச் சிறிதும் ஆராயாத மாக்களையுடையது என்று பொருள் கொள்க" எனத் துறையொடு சிறிதும் பொருந்தாது கூறினரும் உளர்.

பாட்டு – கசுo : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைமகளை நோக்கித் தோழி, வரைவர் என ஆற்றுவிப்புழித் தலைமகள் சொல்லியது. அஃதாவது, வரைதற்கு வேண்டிய பொருளீட்டற் பொருட்டுச் சென்ற தலைவன், காலநீட்டித்தமையால் வருந்திய தலைவியை நோக்கி 'அவர் விரைவில் வந்து நின்னை வரைகுவர் வருந்தற்க!' எனத், தோழி ஆற்றுவித்தாளாகத் 'தலைவர் அங்ஙனம் வரைந்து கொள்வாரல்லர்' எனத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'தோழி நீ நங் காதலர் விரைவில் வந்து வரைந்து கொள்வர் என்கின்றாய்; அவரோ துன்பமிக்க இப் பெருந்தண் வாடைக்காலத்தும் வாராராயினர்! இதுதான் தலைவர் வரைந்து கோடலோ!' என்று கூறுகின்றாள்.

கசுo. நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பேடையொடு
தடவின் ஓங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநங் காதலர் வரைவே.

—மதுரை மருதனிள நாகனார்.

(இ - ள்) தோழி—, நெருப்பின் அன்ன செந்தலை அன்றில் - நெருப்பை ஒத்த சிவந்த தலையையுடைய அன்றிற்சேவல், இறவின் அன்ன கொடுவாய்ப் பேடையொடு - இறாமீனைப் போன்று வளைந்த வாயினையுடைய பெடையன்றிலோடே, தடவின் ஓங்குசினைக் கட்சியில் - தடாமரத்தினது உயர்ந்த கிளையின்கண்ணுள்ள சேக்கையிலிருந்து, பிரிந்தோர் கையற நரலும நள் என்னும யாமத்துப் பெருந் தண் வாடையும் வாரார் - தம்மைவரைப் பிரிந்துறைவோர் செயலற்று வருந்தும்படி ஒலியாநின்ற நள் என்னும் ஓசையையுடைய இக் கூதிர் காலத்து இடையிரவின்கண் மிக்க குளிர்ச்சியுடைய வாடைக் காற்று எறியும் அமையத்தும் வந்திலர், நம் காதலர் வரைவு இஃதோ - நம்முடைய காதலர் விரைந்துவந்து செய்த வரைவு இதுதானே?

விளக்கம் :—நெருப்பு, அன்றிலின் தலையிலுள்ள சூட்டிற்கு உவமை. தலை - ஆகுபெயர். இறவு - இறுமீன். நெருப்பின், இறவின், என்ப வற்றுள் இன் சாரியை தவிர்வழி வந்தன. கொடுவாய் - வளைந்த அலகு. இறவு - அன்றிற் பெடையின் அலகிற்கு உவமை. தடவு -

தடாமரம் - குறியதன்கீழ் ஆக்குறுகி உகரமேற்றுத் தடவு என்றுயிற்று. மேலே: இறவும் அது. கட்சி - கூடு. அன்றிற் பறவைகள் இணை பிரியாது, வாழும் இயல்புடையன. இவற்றின் குரல் துணை பிரிந் தோர்க்குத் துணையை நினைவூட்டி வருத்தும் ஆகலின், பிரிந்தோர் கையற நரலும் என்றாள். நரலும் - ஒலிக்கும். "சேவலோடுறை செந் தலை அன்றிலின் நாவினுல் வலி எஞ்சநடுங்குவாள்." (கம்ப சூர்ப்ப-எசு) என்றார் பிறரும். பிரிந்தோர் கையற நரலும் என்று படர்க்கையிற் கூறினுளேனும் நான் அன்றிற் குரலாலே வருந்தாநிற்க என்றுணர்த்து தல் அவள் கருத்தென்க. நள்என் என்பது, ஒலிக்குறிப்பு. செறிந்த இருளையுடைய எனினுமாம். வாடைக்காற்று மிக்க குளிருடைத்தாய்ப் பிரிந்தாரை நலிதலின், பெருந்தண் வாடை என்றாள். வாடையெறியும் போதும் வந்து அருளாதார் வருவர் என்றெண்ணுதல் பேதைமை என்பாள், 'இதுவோ வரைவு' என்றாள். இங்ஙனம் அருளாமை தானே நின்னுற் கூறப்படும் வரைவு என்றிகழ்ந்தவாறும்.

பாட்டு - ககூக : தலைவி கூற்று

துறை :—இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்பு மிகுதி யான எதிர்ப்படப் பெறுத தலைமகள், பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறத்தானுக, தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, இரவின்கண் வந்த தலைவனைத் தலைவி சென்று காண வாய்ப்புப் பெறுமையால், தலைவன் வறிதே மீண்டான்; மறுநாள தலைவன் இரவின்கண் வந்து மனையயலே நிற்றலை அறிந்த தலைவி, முதனாள் தான் அவனைக காணவியலாமைக்குக் காரணங் கூறுவாளாய் அவன் வருகையறியாதாள் போன்று தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நெருநல் மிரா அந்தோ மழையின் நனைந்து நம்மனையயலே வந்துநின்ற தலைவர் என்பட்டனரோ; யான் அவரைச் சென்று காணற்கோ, பற்பல இடையூறுடையனுயினேன்' என்று இரங்கிக் கூறுகின்றாள்.

ககூக. பொழுதும் எல்லின்று பெயலும் ஓவாது
கழுதுகண் பனிப்ப வீசும் அதன்றலைப்
புலிப்பல் தாலிப் புதல்வர்ப் புல்லி
அன்னை வெண்ணும் அன்னையு மன்னை
என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

—நக்கீரனர்.

(இ - ள்.) தோழி—, பொழுதும் எல்லின்று பெயலும் ஓவாது கழுது கண்பனிப்ப வீசும் - பொழுதோ இருண்டுவிட் டது, மழையோ ஒழிவின்றிப் பேய்களும கண் சிம்புளித்து

நடுங்கும்படி வீசாநின்றது, அதன்தலைப் புலிப்பல் தாலி புதல்வன் புல்லி - அதற்குமேலும் புலிப்பல் கோத்த தாலியையுடைய மகனைத் தழுவிக்கொண்டு, அன்னை அன்னு என்னும் - நந்தாயும் என்னை அன்னையே என்று அடிக்கடி விளியா நின்றுள், தன் மலை ஆரம நாறும் மார்பினன் - தனது மலைக்கண் தோன்றிய சந்தனம் கமழும் மார்பையுடைய நந்தலைவன், மாரியானையின் வந்து நின்றனன் - அவ்வமயத்தே மழையில் நனைந்து வரும் யானைபோல வந்து நம்மனைப்புறத்தே நின்றிருந்தான், அன்னை என் மலைந்தனன்தான் - அந்தோ பின்னர் அவன்தான் என் செய்தனனை அறியேன்.

விளக்கம்:—பொழுது - ஈண்டுக் காலம் என்னுந் துணையாய் நின்றது. எல் என்னும் பெயரடியாய் எல்லின்று என்னும் வினைச சொல் பிறந்தது எல் - இரவு. இருளுக்கு ஆகுபெயராய் நின்று எல்லின்று என வினைசசொல்லாயிற்று. பொழுதும் எல் இன்று எனக் கண்ணழித்துச "சூரியனும் விளக்கம் இலனுயினனன்" என்பாரும் உளர். இரவின்கண சூரியன் விளக்கமிலனுயினன் என்பது சிறவாமை உணர்க. பெயல் - மழை. ஓவாது - ஒழிவின்றி. பேய்கள் அருவுடம் புடையன அவைகளும் கண்பனிப்ப வீசும் என்றது, மழையின் வேகம் குறித்து நின்றது. கண் பனிப்ப - கண் நிம்புளித்து நடுங்க என்க. மழைத தாரை முகத்திலறையுங்கால் கண் நிம்புளித்தல் இயல்பாதல் அறிக. அதன்றலை - அப்பெயல் வீசும் இடையூற்றின் மேலும் என்ற வாறு. பொழுது இருண்டதாயினும், பெயல் பனிப்ப வீசியதாயினும் இவற்றிற்கிடையாமல் யான் சென்று தலைவனைக் காண்பல். அந்தோ அதன்மேலும் செல்லற்கியலாத இடையூறளனுயினேன் என்பாள், 'அதன்றலை' என்றுள்.

புலிப்பல்தாலி - புலிப்பல் கோத்தியற்றிய ஒருவகையணி. இத் தாலியணி சிறுவர்க்கணியும் அணி யென்க. "புலிப்பல் தாலிப் புன் றலைச் சிறுஅர்" (புறம். ௬எச) எனப் பிறரும் கூறுதலறிக.

புதல்வன் - ஈண்டுத் தலைவியின் தம்பியாகிய சிறுவன் போலும். இருட்பொழுதில் மழை பெய்தலானே புதல்வனையும் புல்லியமையாது என்னையும் அடிக்கடி விளித்துக்கொண்டிருந்தாள் என்பாள், அன்னையும் அன்னு வென்னும் என்றுள். அன்னு - விளி.

இனிப் புதல்வனைப் புல்லி உறங்காதவளாய் அவனை அடிக்கடி அன்னு என விளிப்பள் எனினுமாம். ஆண்மகவினைப் பெண்மகவு போலவும் பெண்மகவினை ஆண்மகவுபோலவும் விளித்தல் தாயர் வழக்கமாதலை இன்றும் காணலாம்.

மலைதல் - செய்தல். 'இத்தகைய இடையூறுண்மையால் அவன் வந்து நின்றமையை உணர்ந்தும் யான் செல்ல வியலாது கிடந்தேன்; பின்னர் அவன் என் செய்தானோ?' என்று இரங்குவாள், 'அன்னை என் மலைந்தனனை' என்றுள். அன்னை: இரக்கக் குறிப்பிடைச் சொல்.

அவன் வருகையை நுண்ணிதின் உணர்ந்து கிடந்தேனுகலின் அவன் பூசிய சந்தன மணத்தாலே அவன் வரவினை உணர்ந்தேன்

என்பது தோன்ற, 'தன்மலை ஆரம் நாறுமார்பினன்' என்றாள். மாரி யானையின் என்றது, அவன் அப்பெயலின் கண்ணும் வந்தமைக்கு இரங்கியபடியாம்.

பாட்டு - ககூஉ : தலைவன் கூற்று

துறை :—வினைமுற்றி மீளுந் தலைமகன் முல்லைக்குரைப்பா னுய் உரைத்தது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து தான் மேற் கொண்டு சென்ற தொழில் முற்றிய பின்னர், மீண்டு வரும் தலைவன் வழியின்கண் மலர்ந்த முல்லையை நோக்கிக் கூறியது.

இதன்கண், 'முல்லாய்! முல்லாய்! நீ என்னைக் கண்டு எள்ளி நகைப்பாய் போலே இருந்தாய்; துணையிலாரை எள்ளி நகுதல் சால்புடைமையாமோ சாறறுதி!' என்று தலைவன் மலர்ந்த முல்லையை நோக்கி மொழிகின்றான்.

ககூஉ. கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தருஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

—கருவூர்ப் பவுத்திரனார்.

(இ - ள்) முல்லை வாழி ஒ முல்லை - முல்லாய் நீ வாழ்வாயாக ஒ முல்லாய், கார் புறந்தந்த நீர் உடை வியன் புலத்து - முகிலாலே காக்கப்பட்ட நீர்வளம் மிக்க அகன்ற இம்முல்லை நிலத்தே, பலர் புகுதரூஉம் புல்லென் மாலை - உலகிற் பலரும் தத்தம நாள்வினை முடிதற்குத் தம இல்லத்தே புகுதற்குக் காரண மான புற்கென்ற இம்மாலைப் பொழுதின்கண்ணே, நீ நின சிறு வெண்முகையின் முறுவல் கொண்டனை - நீ நினது சிறிய வெள் ளிய அரும்புகளாலே புன்னகை செய்வாயாய், தமியோர் மாட்டு நகுவைபோலக் காட்டல் - துணைவரைப் பிரிந்து தமியராயோரி டத்தே அவரை எள்ளி நகைத்தல் போன்று காட்டாதேகொள், இது தகுமோ - இங்ஙனம் பிறரை எள்ளி நகைத்தல் நின் பெரு மைக்குத் தகுதியாகுமோ?

விளக்கம் :—முல்லை நிலமாகலின் யாற்றுநீர் புறந்தாராமை தோன் றக் 'கார் புறந்தந்த நீர்' என்றான். புறந்தருதல் - பாதுகாத்தல். வியன்புலம் - அகன்ற நிலம். ஈண்டு முல்லை நிலத்தின் மேற்று. தானுந் தன் வினைமுடித்து வருகின்றானகலின், அந்நினைவால் பலர் புகு தரும் மாலை என்றான். மாலைக்காலத்தே எவ்வுயிரும் தத்தம் சேக்கை புகுதல் உண்மையின், பலர் என உயர்திணையின்மேல் வைத்தோதினும்

எவ்வுயிரும் எனக்கொள்க. தலைவியைக் காணப்பெறாது புற்கென்ற நெஞ்சம் உடையனாதலின் அதனை மாலைமேலேற்றிப் 'புல்லென் மாலை' என்றான் என்க. துணையுடன் இருப்பார்க்கு அம்மாலையே இன்மாலை யாதலும் உணர்க. முல்லை - விளி. முல்லையரும்பு பல்லிற் குவமை யாதலின், 'சிறுவெண்முகை முறுவல்' என்றான். முறுவல் - புன்னகை. கொண்டனையாய்க் காட்டல் என்க. காட்டல் - அல்லீற்று எதிர் மறை வியங்கோள். காட்டற்க என்றவாறு. இது என்றது, இங்ஙனம் காட்டுவது என்று அசைசெயலைச் சுட்டிநின்றது. இங்ஙனமன்றி, காட்டல் என்பதனை உடன்பாட்டு வினையாகக்கொண்டு காட்டலாகிய இது என்று கூறுவாருமுளர்.

முல்லை கற்புடைமைக்கு அடையாளப்பூ என்பதுபற்றி அத்தகைய சால்புடைய நினக்கு எள்ளிப் பிறரை இகழ்ந்து நகுதல் தகுமோ என்றான் என்க. எள்ளிப்பிறரை இகழாமை, சான்றாண்மையாதலும் அறிக.

முல்லை தலைவனை எள்ளுதற்கு ஏது, கார்த்தொடக்கத்தே மீண்டு வருவல் என்று கூறி அப்பருவம் கடந்தபிற் சேறல் என்க. தலைவிக்கு யான் கார்ப் பருவத் தொடக்கத்தே வருவன் என்ற வாய்மை தவறி அப்பருவம் நெடுநாள் நிகழ்ந்தபின் வருகின்றாலைகலின், தன்னைப் பிறர் எள்ளல்கூடும் என்னும் நினைவுடையளாய் முல்லை தன்னை எள்ளுவதாக எண்ணினன் என்று நுண்ணிதின் உணர்க.

பாட்டு - ககூக : தலைவி கூற்று

துறை :—தன்னுட் கையாறெய்திடு கிளவி. அஃதாவது, தலைவன் பிரிவாலே வருந்தி ஆற்றுமை கொண்ட தலைவி காம மிகுதியாற் செயலற்றுக் கூறியது.

இதன்கண், தலைவி நள்ளிரவின்கண் முழங்கும் கடலை நோக்கி 'அந்தோ! நீயும் என்போல நள்ளிரவின்கண்ணும் உறக்கமின்றிக் கதறுகின்றனை; நீ யாராலே இங்ஙனம் வருத்த மடைகின்றனை?' என, இரங்கிக் கூறுகின்றாள்.

ககூக. யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனர் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்கு நின்குரலே.

—அம்மூவனார்.

(இ - ள்.) கடலே பூழியர் சிறுதலை வெள்ளைத் தோடு பரந் தன்ன - கடலே கூறுக பூழி நாட்டினரது சிறிய தலையையுடைய வெள்ளாட்டின் தொகுதி பரவினாற் போன்ற, மீன் ஆர் குருகின் கானலம் பெருந்துறை - மீனைத் தின்னும் கொக்குகள் பரவிய

சோலைசூழ்ந்த அழகிய பெரிய துறையிடத்தே, வெள் வீத் தாழை திரையலை - வெள்ளிய பூவையுடைய தாழையை அலை கள் அலைக்கின்ற, நள் என் கங்குலும் நின் குரல் கேட்கும் - நள் ளென்னும் ஓசையையுடைய இடையிரவிலும் நின் ஆரவாரம் கேட்கப்படுகின்றது, யார் அணங்கு உற்றனை - நீ யாராலே வருத்தமுற்றனை?

விளக்கம் :—அணங்கு - வருத்தம். பூழியர் - பூழி நாட்டினர். பூழி - செந்தழிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினுள் ஒன்று. இதனை,

> "தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
> பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
> சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
> ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்னும் வெண்பாவானும் அறிக.

அந்நாடு வெள்ளாடு மிக்க நாடென்பதனை, "பூழியர் உருவத் துருவின் நாண்மேயலாரும்" எனவரும் நற்றிணையானறியலாம். வெள்ளை - வெள்ளாடு; "தகர்விரவு துருவை வெள்ளையொடு விரவி" (சகசை.) எனவரும் மலைபடு கடாத்தினும் அஃதப் பொருட்டாதலறிக. தோடு - தொகுதி வெள்ளையாட்டின் தொகுதி கொக்குத் தொகு திக்கு உவமை பரந்தன்ன - பரவினற்போல. குருகு - கொக்கு. கானலம் பெருந்துறை என்பதன்கண் அம் சாரியை எனலுமாம்

வெள்ளீ - வெள்ளைமலர். வெள்வீத் தாழையைத் திரையலைக்கும் என்றது, காதல் மலர்ந்த என் உள்ளத்தைத் துன்பம் அலைக்கும் என்னும் குறிப்பிற்று. 'உலகமெல்லாம் துஞ்சும் இந் நள்ளென் யாமத் தும், தலைவர் அணங்குற்று யான் துயிலாது அழிகின்றேன்; என்போல நீயும் இவ்வியாமத்தே அரற்றுகின்றாய் நீ யாராலே அணங்குற்ற னையோ?' என்று இரங்கியவாறு.

> "பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
> தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்றிறம்
> நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ எம்போலக்
> காதல்செய் தகன்றூரை யுடையையோ நீ" (கலி-கஉக.)

எனவரும் கலித்தொகைச் செய்யுள் ஈண்டு கருதற்பாலது.

பாட்டு - கசுச : காதற்பரத்தை கூற்று

துறை :—காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்ப உரைத்தது. அஃதாவது, தலைவி தன்னைப் புறங்கூறி னுள் எனக்கேட்ட காதற்பரத்தை, 'தலைமகட்குப் பாங்காயினர் உளராயவழி அவர் கேட்கும்படி யான் தலைவிக்குத் தீது புரிந்தி லேன்', எனத் தெரித்தோதியது.

இதன்கண், 'தலைவி தன் அறியாமையாலே புலந்து என்னைப் புறங்கூறுகின்றனள்; அவள் புறங்கூறுமளவு யான் ஏதம் உடையேனல்லேன்; உடையேனாயின் இப்பெருங்கடல் என்னை விழுங்குவதாக' என்று காதற்பரத்தை ஒதுகின்றனள.

கசுஅ. கணைக்கோட்டு வாளை கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றார்க் குணது
தண்பெரும் பவ்வம் அணங்குக தோழி
மனையோள் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயினம் எனினே.

—மாங்குடி மருதனர்.

(இ - ள்.) தோழி - தோழியே! மனையோள் மடமையில் புலக்கும் - தலைவி தன் அறியாமையாலே புலந்து கொளளற்குக் காரணமாகும், அனையேம் யாம் மகிழ்நற்கு ஆயினம் எனினே - அத்தன்மை யுடையேமாய் யாம் தலைவன்றிறத்து ஆயினேமாயின், கணைக்கோட்டு வாளை கமம் சூல் மடநாகு - திரண்ட கொம்பையுடைய வாளைமீனினது நிறைந்த கருவை யுடைய மடப்பமுடைய பெண்மீன், துணர்த்தேம் கொக்கின் தீம் பழம் கதூஉம் - கொத்துக்களையுடைய தேமாமரத்தினது இனிய பழத்தினைக் கௌவித் தின்றற்கிடமான, தொன்று முதிர் வேளிர் குன்றார்க்குணது - பழமை முதிர்ந்த வேளிருடைய குன்றாருக்குக் கிழக்கின்கண் கிடக்கின்ற, தண் பெரும் பவ்வம அணங்குக - தண்ணிய பெரிய கடல் என்னை வருத்துவதாக.

விளக்கம் :—கணை - திரட்சி. கோடு - கொம்பு. கமஞ்சூல் - நிறைந்த கரு. நாகு - இளமை. ஈண்டு மடநாகு என்றதனால் பெண்மை இளமை யிரண்டனையும் குறித்துப் பெண்மீனுக் காயிற்று. துணர் - கொத்து. இலை, பூ, காய், பழம் என்னும் இவற்றின் கொத்து கட்குத் துணர் பொதுவில் வரும். கொக்கு - மாமரம். புளிமாவின் நீக்குதற்குத் தேக்கொக்கு என்றாள். தேக்கொக்கு - தேமாமரம் என்க. தேமாவின் பழமாகலின் 'தீம்பழம்' என்றாள்.

குளத்தின்கண் வாழும் வாளைமீன், கனிந்து தான் வாழும் குளத்தின்கண் வீழ்ந்த கனியையமட்டும் உண்ணுவதல்லது, அம்மரத்திலேறிக் கனி பறித்துண்ணுதன்றே! அங்ஙனமே யாமும் எம்பால் வலிய வந்து முழித் தலைவனை நுகர்தல் அல்லது யாமே வலிந்து சென்று அவனை மடக்கிக்கொண்டு நுகர்கின்றேமில்லை! தன்னையல் வீழ்ந்த கனியை உண்ணும் அம்மீன், குற்றமுடைய தாகாமை போல், யாமும் குற்ற முடையேம் அல்லேம் என்பாள், 'வாளை மடநாகு கொக்கின் தீம்பழம் கதூஉம்' என உள்ளுறை உவமம் எடுத்தோதினள் என்க. பவ்வம் -

கடல். தன்பால் குற்றமில்லா திருக்கவும் தன்னைப் புறங்கூறல் அறியாமை என்பாள், 'மடமையிற் புலக்கும்' என்றாள். அனையேம் - அத்தகைய குற்றமுடையேம், குற்றமாவது, தலைவனை வலிந்து பற்றிக் கோடல்.

கடல் அணங்குதலாவது, மூழ்குவித்துக் கொல்லுதல். யாம் குற்றமிலேம் தலைவி அறியாமையாற் புறங்கூறுகின்றாள் என்பது கருத்து.

பாட்டு - ககூடு : தலைவன் கூற்று

துறை :—பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்த்துங் கூடலுறு நெஞ்சிற்குச் சொல்லியது. அஃதாவது, தலைவியைப் பெறுதற்குத் தோழியின்பால் ஆற்றவும் இரந்தும் அவளாற் குறைநேரப்படாத தலைவன், அரியளாய தலைவியைப் பெரிதும அவாவும் தன் நெஞ்சை நோக்கிச் சொல்லியது.

இதன்கண், தலைவன் நெஞ்சை நோக்கி 'நெஞ்சமே! கள்ளுண்டு களித்த பின்னரும், களுண்டாற் போன்று, நீ அரியளாய தலைவியை விரும்பியதன்மேலும், அவள் அழகு கண்டு கழிகாமம் கொள்ளா நின்றனை ; இது தகவன்று,' என்று கடிந்து கூறுகின்றான்.

ககூடு. மகிழ்ந்ததன் றலையும் நறவுண் டாங்கு
விழைந்ததன் றலையும் நீவேய் துற்றனை
அருங்கரை நின்ற உப்போய் சகடம்
பெரும்பெய றலையவீந் தாங்கிவள்
இரும்பல் கூந்தல் இயலணி கண்டே.

—பரணர்.

(இ - ள்.) நெஞ்சே! நீ அளியைகாண் அஃதெற்றால் எனின், இவள் இரும் பல் கூந்தல் இயல் அணி கண்டு - பெறற்கரியளாகிய இத் தலைவியினது கரிய பலவாகிய கூந்தலின் இயற்கையழகைக் கண்டு, அருங்கரை நின்ற உப்பு ஒய் சகடம் பெரும் பெயல் தலைய வீந்தாங்கு - செல்லுதற்கரிய மணற்கரையிடத்தே செல்லவியலாது நின்ற உப்பைச் செலுத்துகின்ற வண்டி பெரிய மழை பெய்தலாலே அழிந்தாற்போன்று இவள் மறுக்கப்பட்டமையானே அழிந்து மேலும், மகிழ்ந்ததன் தலையும் நறவு உண்டாங்கு - முன்னரே கள்ளுண்டு களிப்பேறிய பின்னரும் கள்ளை உண்டாற்போல, விழைந்ததன் தலையும் - அவளை முன்னரே விழைந்தமையாலே வெய்துற்ற பின்னரும், வெய்துற்றனை - மேலும் விரும்பா நின்றனை ஆகலான்.

விளக்கம் :—மகிழ்தல் - கள்ளுண்டு களித்தல். முன்னரே நிரம்பக் கள்ளுண்டு களித்தவன், அக் களிப்பாலே தூண்டப்பட்டு மேலும் கள்ளுண்டு உள்ள அறிவும் ஒழிந்தாற்போல என்று விரித்தோதுக. காமத்தாலே பெண் விழைந்து அப் பெண்மை நலம் தூண்டலாலே மேலும் கழிகாமம் கொண்டானே என்றான் என்க. கழிகாமம் கொண்ட வழியும் நங்கிலை யறியாது தோழி மறுக்கின்றாளாகலின், அக் காமத்தால் நாண், ஆண்மை முதலியன அழியப்பெற்றானே என்பான், கடத்தற்கரிய மணற்கரையிடத்தே நின்று அதனைக் கடத்த இயலாத உப்பு வண்டி மேலும் மழை பெய்யப் பெற்றமையால் தன் ஆக்கமாக வமைந்த உப்பெல்லாம் அழிந்து வறிதாஞற் போன்று, முன்னரே எய்தவியலாக் காமத்துறை நின்று மேலும் மறுக்கப்பட்டமையால் உள்ளழிந்து வெய்துற்றானே என்றிரங்கினான் என்க.

ஐந்து பகுதியவாகக் கை செய்யப்படும் கூந்தல் ஆகலின் பல்கூந்தல் என்றான். இயல் அணி - இயற்கை யழகு. அவையாவன, நெடுமை, அறல்படல், ஒளியுடைமை, அடர்வு, கடை குழலுதல், கருமை முதலியன என்க.

பெரும் பெயல் - பெரிய மழை. தலைய - பெய்யா நிற்ப; செய வெனைசசம். வீதல் - அழிதல்.

இன்னேயாகலின் நீ அளியை என்பது குறிப்பெசசம். "கடல் விளையமுதம் பெயற்கேற் றாஅங் குருகு யுகுதல்" (நற் அஅ) என்றும், "நெடுவெள்ளப்பின் நிரம்பாக் குப்பை பெரும்பெயற் குருகியாங்கு" (அகநா - உ0சு) என்றும் பிற சான்றோர் கூறுமாற்றானும் உப்பு பெயலாலே வீயும் என்பதறிக.

பாட்டு - ககூசு : தோழி கூற்று

துறை :—காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது அஃதாவது, தலைவி தாய் முதலியோரானே இற்செறித்துப் புறம் போகாதபடி காவல் செய்யப்பட்ட இன்னல் நிலையினை எய்தியபோது, தோழி அந் நிலையின் தன்மையைக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கிப் 'பண்டெல்லாம் நாம் வதிதற்கு இனிதாயமைந்த இவ்வூர், இப்பொழுதோ நாம வதிதற்கு இயலாத இன்னுதாயிற்று' என்று கூறுகின்றாள்.

ககூசு. தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வேண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மாந்தை
ஒருதனி வைகிற் புலம்பா கின்றே.

—கூடலூர் கிழார்.

(இ - ள்.) தோழீ—, தண்கடல் படுதிரை பெயர்த்தலின் - தண்ணிய கடலின்கண்ணே தோன்றிய அலைகள் மோதிப்

பெயர்த்தலானே, வெண்பறை நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும் - ஆண்டிருந்த வெள்ளிய சிறகுகளையுடைய நாரை வரிசை யாகப் பறந்து வேறிடத்திற்குப் போய் ஆண்டு அயிரைமீனை இரையாகப் பெற்றுண்ணு நின்ற, மாந்தை ஊரோ நன்று மன் - இம் மாந்தையூர் தன்கண் வாழ்வார்க்கு மிகவும் இனியது அத் தன்மை கழிந்தது, ஒருதனி வைகில் புலம்பாகின்று - இப் பொழுதோ தலைவரைப் பிரிந்து தனித்திருப்பார்க்கு வருத்தத் தைத் தருவதாயிருந்தது.

விளக்கம் :—திரை பெயர்த்தலின் என்றது, கடலருகே அமர்ந் திருக்கும் நாரையைக் கடலலை மோதி நிலை பெயர்த்தலால் என்றவாறு. அந் நாரையினம் பறந்து வேறிடம் சென்று அயிரையாரும் என்றது, இற்செறிப்பாலே நம்மிலை பெயர்த்த தமரின் நீங்கித் தலைவனோடே சென்று அவன் மனையில் இன்பம் நுகர்தலன்றி வேறு வழியிலேம் என்றவாறு. இனி, இவ்வூர் இருந்து வாழ்தல் அரிதென்பாள் 'மாந்தை தனிவைகிற் புலம்பாகின்று' என்றாள். ஊரோ நன்று மன் என்றது, தலைவனைக் காணுத பண்டைக் காலமெல்லாம் இவ்வூர் நமக்கு எத்துணை யின்பமா யிருந்தது; அத்தன்மை இன்றிலது என்று கழிந்ததற் கிரங் கியவாறு.

மாந்தை, ஒரு கடற்கரைப் பட்டினம். அஃது இக்காலத்தே மாதை என்று வழங்கப்படுகின்றது. "மல்லனீர் மாந்தையார் மாக் கடுங் கோதைக்கு" என வரும் மூத்தொள்ளாயிரச் செய்யுளடியானும் மாந்தை என்பதே பெயராதல் அறிக. மாந்தை என்று பாடமோது வாருமுளர். மாந்தை இந்நூல் நூசு-ம் செய்யுளினும் ஓதப்பட்டிருத்தல் அறிக. மேற்றிசை யாத்திரிகரால் இவ்வூர் மாதை எனப் பிற்காலத்தே வழங்கப்பட்ட தென்பர். ரா. இராகவ ஐயங்கார் அவர்கள், மாந்தை யென்னும் ஊர் பட்டினமன்ற அகநாட்டுள்ளது என்ப.

தனிமை - ஈண்டுத் தாய் முதலிய தமர் சூழ இருந்தும் தலைவ னின்மையால் காட்டினூடே தனித்துறைவாள் போல்வதொரு உணர்ச்சி உடையளாதல்.

பாட்டு - கசூஎ : செவிலித்தாய் கூற்று

துறை :—கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது. அஃதாவது, கற்புக் காலத்தே தலைவி தலைவனுடன் இல்லறம் நடத்தாழி ஆண்டுச் சென்று வந்த செவிலித்தாய், தலைவி தற்கொண்டாற் பேணும் சிறப்பை நற்றாய்க்கு எடுத்துக் கூறியது.

இதன்கண், 'பண்டு நம்மனையிலே ஆயத்தோடு ஆட்டயர்ந்து திரிந்த நம் மகள், இப்போது அவள் கணவனில்லத்தே ஊக்கத் துடன் அட்டில் புகுந்து, விழிப்புடன் சுவைபட அடிசில் இயற் றிப் பொழுதறிந்து தன் கணவற்கிட அவன் இனிதென

மகிழ்தல் கண்டு, அகமகிழா கின்றனள்,' என்று தாய்க்குச் செவிலி கூறுகின்றாள்.

ககூ௭. முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றெண்ணுதல் முகனே.

—கூடலூர்கிழார்.

(இ - ள்.) தோழி—, முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல் - முதிர்ந்த தயிரைப் பிசைந்த செங்காந்தள் மலரின் இதழ் போன்ற மெல்லிய விரல்களை, கழாது கழுவுறு கலிங்கம் உடீஇ - நீராலே கழுவாமலே தோய்த்துத் தூய்மையுற்ற ஆடையை உடுத்திக்கொண்டு, குவளை உண்கண் குய்ப்புகை கமழ - குவளை மலர்போன்ற மையுண்ட கண்களிலே தாளிப்பாலுண்டாய புகை கதுவாநிற்ப, தான் துழந்து அட்ட தீம் புளிப் பாகர் - தானே துழாவிச் சமைத்த இனிய புளிப்பையுடைய குழம்பை, இனி தெனக் கணவன் உண்டலின் - இது மிக இனிதாயிருப்ப தென்றன்று கூறித் தன் கணவன் உண்ணுதலாலே, எண்ணுதல் முகன் நுண்ணிதின் மகிழ்ந்தன்று - ஒள்ளிய நெற்றியையுடைய நம் மகளினது முகம் நுண்ணிதாக மகிழாநின்றது.

விளக்கம்:—முளி தயிர் - முதிர்ந்த தயிர். முளிதல் - உலர்தல். அஃதாவது, நீர்த்தன்மை அறுதல். ஈண்டு தயிர் முதிர்தலாவது, பாலை வற்றக் காய்ச்சி நீர்சுண்ட நன்கு தோய்ந்து இறுகுதல் என்க. இறுகிய தயிராகலின், பிசைதல் வேண்டிற்று. பண்டு தொழில் செய்து காழ்ப் பேறுத மெல்விரல் என்பாள், 'காந்தள் மெல்விரல்,' என்றாள். காந்தள்- இதழ்க்கு ஆகுபெயர். காந்தள் மலரின் இதழ்போன்ற மெல்விரல் என்க. தாளித்தற்கிட்ட நெய் முறுக வெந்தமையின் தயிர் பிசைந்தவள் தாளித்தற் கெழுந்தாளாக, அப்போது உடுத்திய ஆடை நெகிழ்ந்தது; நெகிழ்ந்த ஆடையை உடுத்தற்கு விரலை நீராற் கழுவச்செல்லின் நெய் முறுகிப் பதனழியும். ஆதலின், விரலைக் கழுவாமலே நெகிழ்ந்த ஆடையை உடுத்திக்கொண்டு தாளிப்பாளாயினள். கழுவுறு கலிங்கம் என்றது, அவள் அப்பொழுது உடுத்தியிருந்த ஆடை நன்கு தோய்த்துத் தூய்மை செய்யப்பட்டிருந்த ஆடை என்றவாறு. தூய்தாக உள்ள ஆடையைத் தயிர் தோய்ந்த விரலாலே உடுக்க இசையார் ஆகவும், அடிசில் பதன் கெடாமைப் பொருட்டு அதனைச் சிந்தியாது உடுத்தாள் என்றவாறு. இங்ஙனம் கூறவறியார் தயிர் பிசைந்த கையைத் துடைத்த ஆடையைத் துவையாது உடுத்து என்று உரை விரிப்பாராயினர். விரல் கழாஅது கழுவுறு கலிங்கத்தை உடுத்தென்க. கண்ணின் அழகும் மென்மையும் கூறுவாள், 'குவளையுண்கண்' என்றாள். புகை கதுவலைப் பொருத கண்கள் என்பது குறிப்பு. கமழ - அஃதாவது கண்

ணிற் புகை நிறைய என்றவாறு. கமழ என்று பாடமோதி கண்களில் புகை மணப்ப என்பாருமுளர். இதனினும் கமழ என்ற பாடமே சிறப்புடைத்தாதலுணர்க. 'தான் தழந்தட்ட' என்றது, எவற் சில தியர் இருப்பவும் தானே தழாவிஅட்ட என்றவாறு. புளிப்பாகர் - ஒருவகைக் குழம்பு. கணவற்கிட்டு அவன் உண்ணுங்கால் அதன் சுவையைப் பாராட்டுவாளுய், 'இனிது இனிது' என்று கூறி உண்ண என்க. கணவன் மகிழ்ந்துண்ணக் கண்டதால் உண்டாய உள்ள மகிழ்ச்சி, மெய்ப்பாடு மாத்திரையானே முகத்தே தோன்றலின் 'நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகன்' என்ருள்.

பாட்டு - கசூஅ : தலைவன் கூற்று

துறை :—பொருள் வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது 'இன்மையதினிலும் உடைமையதுயர்ச்சியும்' எடுத்துக்காட்டித் தலைவியைச் சிறிது பிரிந்துபோய்ப் பொருளீட்டல் இன்றியமையாதெனத் தூண்டா நின்ற தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறியது.

இதன்கண், 'நெஞ்சே! நறுமையும் தண்மையும் உடையாளும், நல்ல மேனியையுடையாளுமே, பணைத்தோளினளும் ஆகிய தலைவியின் தோள்களே யாம என்றும் தணத்தலின்மையால் புணர்தலும் இலமாயினேம்; அவளைப் பிரியின் வாழ்தலோ அதனினும் இலம்; ஆகலின், யாம் உடம்படேம்' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்ருன்.

கசூஅ. மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடை பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நன்மா மேனி
புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோள்
மணத்தலுந் தணத்தலு மிலமே
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.

—சிறைக்குடி யாந்தையார்.

(இ - ள்.) நன் மா மேனி - நெஞ்சே நந்தலைவி நல்ல மாமையை உடைய மேனி, மாரிப் பித்திகத்து நீர் வார் கொழுமுகை - கார்காலத்து மலரும் பிச்சியினது நீர் ஒழுகும் கொழுவிய அரும்புகளில், இரும்பனம் பசுங்குடை பலவுடன் பொதிந்து - கரிய பனையின் குருத்தாலே செய்த பசிய குடையில் பலவற்றையிட்டு மூடி, பெரும் பெயல் விடியல் விரித்து விட்டன்ன - பெரிய மழைபெய்தலையுடைய விடியற் காலத்திலே விரித்து விட்டாற்போன்ற, நறுந்தண்ணியள் - நறுமணமும் தண்மையும் உடையவள், புனற்புணை அன்ன சாயிறைப்

பணைத்தோள் - நீரில் விடும் தெப்பத்தை ஒத்த மெலிந்த சந்தினையுடைய பருத்த அவள் தோள்களை, மணத்தலும் தணத்தலும் இலம் - பொருந்துதலும் பிரிதலும் இலமாயினேம், பிரியின் வாழ்தல் அதனினும் இலம் - அவளைப் பிரிந்தாலோ உயிர் வாழ்தல் அதனினும் காட்டில் இலமாவேம்.

விளக்கம் :—மாரிப்பித்திகம் - கார்காலத்தே மலரும் இயல்புடைய பிச்சி. மழைக்காலத்தே முகை எடுத்தலின் நீரொழுகும் கொழுமுகை யாயிற்று. கொழுமுகை - கொழுத்த அரும்பு. பனம் பசுங்குடை என்றது, பனங்குருத்தாற் செய்த பூங்குடலையை. முதல்நாள் மாலைக் காலத்தே பிச்சிக் கொழுமுகைகளைப் பனங்குடையிலே யிட்டு மூடி வைத்து மறுநாள் மழை பெய்யா நின்ற காலையிலே அப்பூங்குடலையைத் திறந்து பரப்பிவிட்டால் அக்குடையும் அரும்பும் நறுமையும் தண்மை யும் உடையவாதல் போன்று நறுமையும் தண்மையும் உடைய மேனி யள் என்றவாறு.

புணை - தெப்பம். சாய் இறை - வளைந்த சந்துமாம். பணைத் தோள் - மூங்கில் போன்ற தோளுமாம். எப்பொழுதும் ஒருவா துறையா நின்றேம் என்பான், 'மணத்தலும் தணத்தலும் இலம்' என் றான். இங்ஙனமாக உடனுறைதலாலே யாம் இனிதே வாழா நின்றேம் என்பது குறிப்பு.

பிரிந்தால் வாழ்தல் இலம் என்றது, தணத்தலும் மணத்தலும் இலமாயினமன்றே அவ்வின்மையினும் பிரிந்தால் தேற்றமாக வாழ்தல் இலமாதல் உறுதி என்பான், 'அதனினும் இலம்' என்றான்.

பாட்டு - கசூக : தலைவி கூற்று

துறை :—(க) கற்புக் காலத்துத் தெளிவிடை விலங்கியது. அஃதாவது, பரத்தமை காரணமாகத் தலைவி ஊடியிருந்த காலத்து, தான் தீதிலன் ஆதல் கூறித் தலைவன் தெளிவிக்க முயன்றுழை; அதனையும் ஊடல் தீராத தலைவி புலந்து கூறியது.

(உ) இனி, தோழி வரைவு கேட்டித்தவழி வரைவு கடாயதூஉமாம். அஃதாவது, தலைவன் வரையாது ஒழுகுதல் கண்ட தோழி வரைந்து கோடற்பொருட்டுத் தலைவனுக்குக் கூறியது எனினுமாம்.

கசூக. சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென இறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎம் இறீஇயரேம் முயிரே.

—வெள்ளிவீதியார்.

(இ - ள்.) ஐய யாம் நும்மொடு நக்க வால் வெள் எயிறு - ஐயனே! யாம் பண்டு நும்மோடே சிரித்த தூய வெள்ளிய பற்கள், சுரம் செல் யானைக் கல்லுறு கோட்டில் தெற்றென இறீஇயர் - பாலைநிலத்தே செல்லுகின்ற யானையினது மலையைக் குத்திய கொம்பைப்போல விரைவாக முறிந்து கெடுவனவாக, பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல - பாணர் தாம் பிடித்த பச்சை மீனைப் பெய்துவைத்த மண்டையைப் போன்று, எமக்கும் பெரும்புலவு ஆகி - எமக்கும் பெரிய வெறுப்பைத் தருவதாகி, நும்மும் பெறேம் - நும்மையும் அடையப் பெறேமாகி, எம் முயிர் இறீஇயர் - நும்மொடு நட்ட எம்முயிர் கெடுக.

விளக்கம்:—தெளிவிடை விலங்கல் என்னும் இத்துறை களவுக் காலத்தும் உண்மையின் அதனின் விலக்குதற்குக் கற்புக்காலத்துத் தெளிவிடை விலங்கல் என்று துறைப்பெயர் கூறினார். இஃது 'இன்ன தல்லதிது வென மொழிதல்' என்னும் உத்தி என்க. கல் உறுகோடு - மலையிலே குத்தப்பட்ட கொம்பு. யானைகள் கோட்டானே மலைகளைக் குத்திப் பெயர்த்தல் இயல்பு. நீர் வறண்ட பாலைநில மலையாகலின் மலை பெயராது கோடு முறிந்தது என்பாள், 'சுரஞ் செல் யானை' என்றாள். சுரஞ்செல் யானை என்புழி, சுரஞ்செல் என்னும் அடை குறிப்பேது வென்க. தெற்றென - விரைவாக "தெற்றெனச செலவு கடைக் கூட்டுதிர்" (பொருநரா - களச) என்புழியும் அஃதப் பொருட்டாதல் அறிக.

பண்டு, தலைவி தன்னெடு நகைத்து விளையாடி வேற்றுமையின்றிக் கலந்த நட்புடையளாயிருந்தமையைத் தெளிவிக்குங்கால் தலைவன் கூறினானாக, அது கேட்ட தலைவி, 'பன்மாயக் கள்வனாகிய நும்மியல் உணராது நும்மொடு நக்க எயிறு கெடுக!' என்றும், 'நட்ட உயிர் கெடுக' என்றும் புலந்தாளாகக் கருதுக. 'நும்மொடு நக்க வால் வெள் எயிறு' என்ற குறிப்பால் நும்மொடு நட்ட எம்முயிர் என்றும் விரித்துக கொள்க. 'நம் பொய்மாயக் கூத்தை யாம் பண்டு உணாந்திலேம்' என்பது குறிப்பு.

பாணர் தாம் பிடித்த மீனையிட்ட மண்டை அப்பாணர்க்கே பிறி தொன்றற்கும் பயன்படாது புலவு நாறிக் கெட்டாற் போன்று, எமக்கும் வெறுக்கத் தக்கதாய் விட்ட வுயிர் மக்கும் ஆகாது கெடுக என்றாள் என்க.

இனி, இரண்டாவது துறைக்குத் தோழி கூற்றாகக்கொண்டு, 'நீயோ வரைந்து கொள்கின்றாயில்லை; தலைவி பெரிதும் இன்னற்கு ஆளாயினள்; பண்டு நும்மோடு நக்க அவள் எயிறும் நட்ட வுயிரும் அழிக' என்று தலைவனை வெறுத்துரைத்தாளாகக் கொள்க.

பாட்டு - களச: தலைவி கூற்று

துறை:—வரைவிடை ஆற்றுவளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. அஃதாவது, தலைவன் வரைபொருள் நிமித்

தம் பிரிந்து போனகாலத்தே, 'தலைவி ஆற்றாது இறந்து படுவாளோ?' எனறு கவலை கொண்ட தோழிக்குத் தலைவி 'யான் ஆற்றுவன் நீ கவலற்க' என்பதுபடச் சொல்லியது.

இதன்கண், 'தலைவனுடைய நட்பு, கெடாப் பெருநட்பு என்பதை யான் நன்கு அறிவேன்; அதனை சிறப்பறியா மாக்கள் பற்பல பேசிற் பேசுக; அந்நட்பை நினைந்தே யான் ஆற்றுவல்' என்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

களo. பலவும் கூறுகவஃ தறியா தோரே
அருவி தந்த நாட்குர லெருவை
கயனு டியானை கவள மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநற் கறிந்தனென் யானே.

—கருஞ்சிறுகாக்கைபாடினியார்.

(இ-ள்.) அருவி தந்த நாட் குரல் எருவை - மலையருவி யாலே கொணர்ந்து தரப்பட்ட புதிய கதிரையுடைய கொறுக் கைச்சியை, கயன் ஆடியானை கவளம்மாந்தும் - குளத்தின்கண் நீராடாநின்ற யானை உணவாக வுண்ணுநின்ற, மலைகெழு நாடன் கேண்மை - மலைகள் பொருந்திய நாட்டையுடைய தலை வனது நட்பு, தலை போகாமை யான் நற்கு அறிந்தனென் - கெடாமையை யான் நன்றாக அறிந்துள்ளேன், அஃது அறியா தோர் - அக் கேண்மையினியல்பறியாதோர், பலவும் கூறுக - தத் தமக்குத் தோன்றியவாறே பலவும் கூறுக அதனாலென்?

விளக்கம்:—அறியாதோர் என்றது, உண்டுத் தோழியை முன்னி லைப்புறமொழியாகக் கூறியதாம். தான் நாடன் கேண்மை தலை போகாமை நற்குணர்ந்து ஆற்றியிருப்பவும், ஆற்றாளாய்க் கருதி ஆற்றும் பொருட்டுத் தோழி பலப்பல கூறுகின்றாளாகலின், அஃதறியா தோர் பலவும் கூறுக என்றாள். அஃது என்றது யான் அறிந்ததனை என்றவாறு.

அருவி தந்த நாட்குரல் எருவை கயனடி யானை கவள மாந்தும் என்றது, 'யான் முயலாது வைத்தும் பால்வரை தெய்வம் கொணர்ந்து தந்த கேண்மையைச் சுவைக்கின்றேன்', என்னும் உள்ளுறை உடைய தென்க. எருவை - கொறுக்கைச்சி. புதிது பூத்தகேண்மையாகலின், நாட்குரல் எருவை என்றாள். நாட்குரல் - புதிய கதிர். கயநாடியானை என்றும் பாடம். தலை போகாமை - அழியாமை. தலை - அசைநிலை: தலை நின்றது என்புழிப்போல. மலைகெழுநாடன் கேண்மை என்ற தும் அம்மலை போன்று நின்று நிலவிய கேண்மையுடையான் என்னும் குறிப்பிற்று. பலரும் என்றும் பாடம்.

பாட்டு - களக : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் உரைத்தது. அஃதாவது, தலைவன் வரைபொருள் நிமித்தம் பிரிந்து சென்றுவிட்டபின்னர்ப் பிறர் மகட்பேசி வந்தாராக அவர் திறத்துத் தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், பிறர் வரையப்புக்கமை அறிந்த தலைவி, 'தோழீ! மீன்படுதற்குக் குளத்திலிட்ட வலையின்கண் விலங்குபட்டாற் போன்று இவ்வயலோர் வரைவுமேற்கோடல் என்ன பயனுடைத்து' என்று கூறுகின்றாள்.

களக. காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனே நோதுமலர் தலையே.

—பூங்கணுத்திரையார்.[1]

(இ - ள்.) தோழி இனிக் காண் - தோழியே இப்பொழுது நிகழ்வதனைக் காண்பாயாக, யாணர்க் கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட - புது வருவாயையுடைய கடிதாயொழுகும் புனல் நிரம்பிய நெடிய குளத்திலே போகட்ட, மீன்வலை மாப் பட்டாங்கு - மீன் பிடித்தற்குரிய வலையிலே வேண்டாத விலங்கு அகப்பட்டாற் போல, நொதுமலர் தலை - இவ்வயலாரிடத்து, இது எவன் - இவ்வரைவு முயற்சி யாது பயனுடைத்து.

விளக்கம் :—இனி - இப்பொழுது. காண் என்றது இப்பொழுது அயலார் மகட்பேசி வந்துள்ள நிகழ்ச்சியை நோக்கு என்றவாறு. தலை வனுக்கென இருக்கும் என்திறத்து நொதுமலர் அஃதறியாது வந்து வரைவு முயல்வது, மீன் வலையில் மாபட்டது போலும் என்றுள் என்க. எதிர்பாராததொன்று வாளா நேர்ந்தது என்று வருந்தியபடி. இது - இம்முயற்சி. எவன் - யாது பயன்உடைத்து. பயனில் முயற்சி என்றவாறு. யாணர்க் கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து என்றது, திருவும் ஒழுக்கமும் நிறைந்த உயர்குடி எனத் தன் குடிப் பெருமை கருதிக் கூறியது என்க. உயர்குடிப் பிறப்புடைய யாம் கற்புக் கடம்பூண்டமை யறியார் வீணே முயல்கின்றனர் என்றிரங்கிய வாறு. இதற்கு நமர் உடன்படாமைக்கு வேண்டிய அறத்தொடு நிற்றல் முதலியன செய்க என்பது குறிப்பு. நொதுமலர் - அயலார். நொதுமலர் தலை இது எவன் என்றியைத்துக் கொள்க.

பாட்டு - களஉ : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. அஃதாவது வரைபொருள் நிமித்தம்

(பாடம்) 1. பூங்கண்ணுத்திரையார்

தலைவன் பிரிந்தானாக ஆற்றுமை மிக்க தலைவி அவன் திறத்து இரங்கித் தோழிக்குக் கூறியது.

இதன்கண், 'துன்பமிக்க இம்மாலைக் காலத்தே யாம் துயருழந்து கிடக்கும்படி பிரிந்துசென்ற நந்தலைவர், அவர் போய விடத்துத் தனிமை வருத்தத்தாலே என்னுற்றனரோ!' என்று எண்ணி என் னெஞ்சம இடையறாது வருந்தா நின்றது, எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

களஉ. தாஅ வஞ்சிறை நோப்பறை வாவல்
பழமரம் படரும் பையுண் மாலை
எமிய மாக ஈங்குத் துறந்தோர்
தமிய ராக இனியர் கொல்லோ
ஏழூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே.

—கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(இ-ள்) தோழி—, தாஅ அஞ்சிறை நோப்பறை வாவல்—வலிமிக்க அழகிய சிறகினையும் நொய்தாகப் பறத்தலையும் உடைய வௌவால்கள், பழுமரம படரும் பையுள் மாலை - பழுத்த மரங்களைத் தேடிச் செல்லாநின்ற இடும்பையுடைய மாலைப் போழ்தினும், எமியம் ஆக ஈங்குத் துறந்தோர் - யாம் தமியே மாகும்படி இவ்விடததே நம்மை விட்டுப் பிரிந்துபோன நந்தலைவர், தமியராக இனியர் கொல்லோ - தாம் சென்று தங்கு மிடத்தே தனித்துறைவோராயிருப்பவும் இனிமையுடையராய் இருத்தலமையுமோ, என் நெஞ்சு - இதனை எண்ணு நின்ற என் நெஞ்சம், ஏழ் ஊர்ப் பொதுவினைக்கு ஓர் ஊர் யாத்த உலை வாங்கு மிதிதோல் போல - ஏழு ஊர்களில் உள்ள மக்கட்குச் செய்யவேண்டிய பொதுவாகிய கொற்றொழிலுக்கு இவற்றுள் ஒரே ஊரிடத்தே அமைக்கப்பட்ட கொல்லுலையிலே செறித்த துருத்தியைப் போன்று, தலை வரம்பு அறியாது வருந்தும - எல்லையறியாமல் வருந்தா நிற்கும்

விளக்கம்:—என் வருத்தத்திற் கன்று யான் ஆற்றேனுவது என்பது குறிப்பு. தா என்பதற்குத் தாவிப்பறத்தலையுடைய எனினுமாம். பிற பறவைகள் போலாது வௌவால் உயர்ந்தும் தாழ்ந்தும் தாவித்தாவிப் பறக்கும் இயல்புடைத்து. இறகுகளானன்றித் துதிலாற் செய்தது போன்று அழகிதாகலின் அஞ்சிறை என்றார். பிற பறவை போலாது மெத்தென மெத்தெனப் பறத்தலின் 'நோப்பறை', என்றார். நொ-நொய்வுடைமை. பழுமரம்-ஆலமரம் முதலியன. வாவல் இரவின் கண் இரைதேடியுண்ணும் இயல்பினவாகலின் மாலைப் போதின்கண்;

தத்தம் சேக்கையினின்று பழுமரங்களைத் தேடிப் பறந்து செல்வன; ஆதலால் வாவல் பழுமரம் படரும் மாலை என்றாள். 'குறுஞ்சினை வேம்பின் நறும்பழம் உணீஇய, வாவல் உகக்கும் மாலையும்" (ஐங்-கூகூடு) என்றார் பிறரும்.

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகிய காமநோய் மாலை மலரு"தலானே 'பையுண் மாலை' என்றாள். மாலையும் எனவேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. பையுள்-துன்பம். எமியம்-யாம்தமியம்; தன்மைப் பன்மை. யாம் பிரிவாலே தமியராய் வருந்துமாறு போல அவரும் வருந்துவர் அல்லரோ என்பாள், 'இனியர் கொல்லோ' என்றாள். இனியராதல் எங்ஙனம்? என்றவாறு.

கொல்லர்கள் ஊர்தொறும் உழவர் முதலியோர்க்கு வேண்டிய கருவிகளை அவ்வப்போது செய்துகொடுத்து ஆண்டு முடிவில் ஊதியம் பெறும் வழக்கமும் அவர்கள் ஊரவர்க்குப் பொதுத் தொழில் செய்வோர் ஆகிய வழக்கமும் இன்றும் காணப்படுகின்றன. ஏழூர்க்குத் தொழில் பொதுவிற் செய்யவேண்டிய கொல்லுலையிற் றருத்தி இடையறாது இரவு பகல் பரபரப்போடு இயங்கும் அன்றோ அவளாறு என் நெஞ்சம் ஓயாது துன்பம் உழக்கும் என்றபடி. தலை, அசைநிலை.

பாட்டு-களரு: தலைவன் கூற்று

துறை:—குறைமறுக்கப்பட்ட தலைமகன், தோழிக்கு உரைத்தது. தலைவியைப் பெறுதற்குத துணைசெய்யும்படி தோழியின்பால் இரந்துநின்ற தலைவனுக்குத் தோழி உடம்படாளாய் மறுத்தவழித் தலைவன் 'இனி எனக்கு மடலல்லதில்லை வலி,' என்று அறிவித்தது.

இதன்கண், தலைவன் தோழியை நோக்கி, 'நீ குறைமறுத்தொழிந்தனை; தலைவியை எய்துதற்கு எனக்கொரு வழி தோன்றுகின்றது; அஃதென்னையோ எனின், மடன்மா வேறி நாணுத் துறந்து, யாணுற்ற நோயை ஏதிலரும உணரத தெருவினின்று இன்னல் செய்தது இது என்று யான் தூற்றுகிற்ப, இவ்வூரினர் அவள் பழியை யாண்டும் கூறுகிற்பர்; அவ்வழி இவளை யான் எய்துதலேயாப; அது செய்ய யான் போகின்றேன்' என்று கூறுகின்றான்.

களரு. பொன்னோ ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணட்
டழிபடர் உண்ணெய் வழிவழி சிறப்ப
இன்னள் செய்த தீதுவென முன்னின்
றவள் பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீங் கேகுமா றுளனே.

—மதுரைக் காஞ்சிப்புலவன்.

(இ - ள்.) தோழீ —, பொன்னேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த - பொன்னே ஒத்த நிறமுடைய ஆவிரையினது புதிய பூக்களைச் செறித்துப் புனைந்த, பல் நூல மாலைப் பனைபடு கலி மாப பூண் மணி கறங்க ஏறி - பலவாகிய நூல்களையுடைய மாலை களாலே ஒப்பனை செய்யப்பட்ட பனைமடலாலே இயற்றிய குதி ரையை அதன் கழுத்திற் பூட்டிய மணி ஆரவாரிக்குமபடி ஏறி, அழிபடர் உள்நோய் நாண் அட்டு வழிவழி சிறப்ப - மிக்க நினை வாகி நெஞ்சினுள்ளே உள்ள காமநோய் தன் பகையாகிய நாணத் தைக் கொன்று மேலும மேலும் மிக்கு வளரா நிற்ப, இன்னள் செய்தது இது என - இக்கிழியின்கண எழுதபபட்ட இவள் என் னைச் செய்த தீங்கு இது என்று யான் எடுதததக் கூறுநிற்ப, இவ் வூர் முன்னினறு இவள் பழி நுவலும் - இவ்வூரில் வாழ்வோர் என் முன்னே நினறே இவள செய்த பழிச்செயலை யாவரும அறியக் கூறுநிற்பர், ஆங்கு உணர்ந்தமையின் - அவ்வாறு செய்து தலைவியை எய்தும் வழியை யான் இபபொழுது அறிந்தமை யாலே, ஈங்கு ஏகுமாறு உளன் - இவ்விடததினின்றும் அச் செயலைச் செய்யும் பொருட்டுப் போதற்கிருக்கின்றேன்; யான் செலவல்.

விளக்கம்:—பொன், ஆவிரை மலர்க்கு நிறத்தால் வந்த உவமை. நேர் - உவம உருபு. புதுமலர் - அன்றலர்ந்த மலர். மிடைதல் - மாலை யிற் செறியப் புனைதல். மடற்குதிரைக்கு ஆவிரம்பூமாலை சூட்டுதல் மரபு. "அணிப்பூவை ஆவிரை எருக்கொடு பிணித்தியாத்து" என்றும், "அணியலங காவிரைப் பூவோ டெருக்கின் பிணையலங் கண்ணி மிலைந்து" என்றும் வரும் கலித்தொகைப் பாக்களானும் உணர்க. பனைபடு கலிமா - பனைமடலால் இயற்றிய குதிரை. பூண்மணி : வினைத் தொகை. கறங்குதல் - ஒலித்தல்.

காமநோய்க்கு, நாணம் பகைப்பண்பாதலின், பகைவருள் ஒருவர் எளியரைக் கொன்று வழி வழிசை சிறத்தல் இயல்பாகலின், 'உண்ணேய் நாணட்டு வழிவழிச சிறப்ப' என்றான். சிறிது நாண் நின்ற வழியும் மடலேறல் கூடாமையின், அதனைத் துவர அழித்து என்பான், 'நாணட்டு' என்றான். அடுதல் - கொல்லுதல். காமத்திற்கு நாண் பகைக்குணமாதலை,

> "காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
> யாமே பொறேனிவ் விரண்டு" (குறள் - கஉசஎ.)

எனவரும் திருக்குறளானும், இதற்குப் பரிமேலழகர் எழுதிய "ஒன்றற் கொன்று மறுதலையாய இவ்விரண்டனையும்" என்னும் உரையானும் உணர்க. மடலேறுவார் நாணினைத் துவரத் துறந்தே ஏறல் வேண்டும் என்பதை,

> "நோனு வுடம்பும் உயிரு மடலேறும்
> நாணினை நீக்கி நிறுத்து" (குறள். ககஉ)

எனவரும் திருக்குறளானும் உணர்க.

அழிபடர் - மிக்க நினைவு. காமநோய் நினைவு மாத்திரையே யாக லின் அழிபடர் என்றான். அழிபடராகிய நோய், உண்ணேய் எனத் தனித்தனி கூட்டுக. உண்ணேய் அகத்தில் நெஞ்சினின்று வருத்தும் நோய். வழிவழி என்றது - மேலும் மேலும் என்றவாறு. சிறத்தல் - புறத்தார்க்கு விளங்கித் தோன்றல்.

மடலேறுவார் தலைவியின் உருவைக் கிழியிலெழுதி அதனைக் கைக் கொண்டு நின்று போவார் வருவார்க்கு அதனைச் சுட்டி 'இவள் இது செய்தவள்' என்று கூறுவராகலின், அக்கிழியைச் சுட்டுவான் போல 'இன்னள்' என்றான். இது - இக்காமநோய், இம்மடன்மா வேறுதலை எனினுமாம். ஊர் - ஆகுபெயர். ஆங்குணர்ந்தமையின் - அவ்வாறு செய்தலை உணர்ந்தமையாலே. ஈங்கு எகுவேன் என்றது, அம்மடன் மா ஏறற்கு இவ்விடத்தினின்றும் போவேன் என்றவாறு.

பாட்டு - களை : தலைவி கூற்று

துறை :—பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லி யது. அஃதாவது, பொருளீட்டல் நிமித்தம் தலைவன் பிரிந்து போன செய்தியைத் தோழி தலைவிக்கு கூறிய பொழுது தலைவி தன்னுட் புலந்து தோழிக்குக் கூறியது.

இதன்கண் 'சால்புடையராகிய தலைவர், நம்மைப் பிரிந்து கடத்தற்கரிய பாலைநில வழியிலே பொருளை நினைந்து செல்வாரா யின், இப்பொருளே பொருளாக மதிப்பவரல்லால் இவ்வுலகில் அருளைப் பொருளாக மதிப்பார் யாரும் இலர் போலும்' என்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

களை. பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநோடி
துதைமென் தூவித் துணைப்புற விரிக்கும்
அத்தம் அரிய என்னுர் நத்துறந்து
பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆருமில் லதுவே.

—வெண்பூதியார்.

(இ - ள்.) தோழி—, பெயல் மழை துறந்த புலம்பு உறு கடத்து-முகில் மழைபெய்தலைத் தவிர்ந்தமையாலே தனிமைத் தன்மை பொருந்திய பாலை நிலத்தே, கவை முள் கள்ளிக் காய் விடு கடுநொடி - கவர்த்த முள்ளையுடைய கள்ளியினது காய் பக்குவிடுதலால் உண்டாகும கடிய ஒலி, துதைமென் தூவித் துணைப் புறவு இரிக்கும் - நெருங்கிய மெல்லிய சிறகரையுடைய காதற்றுணைகளாகிய புறுக்களைப் பிரிந்தோடச் செய்யும், அத்

தம் அரிய என்னுர் - அருவழிகள் கடத்தற்கு அரியன என்று கருதாராய், நம் துறந்து - பிரிய வொண்ணுத நம்மையும் நீத்து, பொருள் வயின் பிரிவாராயின் - நந்தலைவர் பொருளீட்டற் பொருட்டுப் பிரிந்து போவாரெனின், இவ்வுலகத்து - இம்மண் ணுலகத்தின்கண்ணே, பொருளே மன்ற பொருள் - பொருள் ஒன்றே தேற்றமாக உறுதிப் பொருளாவது போலும், மன்ற ஆரும் இல்லது அருளே - தேற்றமாகத் தன்னே மேற்கொள்ளு வோர் யாரும் இல்லாத பயனில் பொருள் அருளே போலும்.

விளக்கம்:—பெயல் - முகில்: ஆகுபெயர். மழை துறத்தலாவது - பெய்யாது தவிர்தல். புலம்பு - தனிமை; அஃதாவது பசும்புற்றலை காணுது கருப்பொருள்கள் அழிந்து முதற்பொருளாகிய நிலமாத்திரை யாய்த் தனித்தல். கடம் - பாலை நிலம். கள்ளிமுள் கவர்த்திருத்தலின், 'கவைமுட்கள்ளி' என்றுள். விடுதல்-பக்குவிடுதல்; அஃதாவது வெடித் தல். வெடிக்கும் ஒலி கடியதாகலின், 'கடுநொடி' என்றுள். நொடி - ஒலி. துணைப்புறவு என்ற குறிப்பால் காதற்றுணையாகிய ஆண் பெண் புறவுகளே என்க. கூடிமகிழ்ந்திருந்த துணைப்புறவுகளைக் கடுநொடி இரிக் கும் என்றது, காதலன்பாலே கூடியிருந்த எம்மைத் தலைவரின் கொடிய பொருள் வேட்கை பிரித்தது என்பதாம். இனிய இவ்வுள்ளு றையைப் பிறர் காணுது வாளா போயினர்.

துணைப்புறவு இரிக்கும் என்ற குறிப்பால் துணைப்புறவுகளைப் பிரிந்து ஓடசெய்யும் என்று விரித்துக கொள்க. அத்தம் - அருவழி; அரிய - கடத்தற்கு அரியன என்க. நம் துறந்து என்றது, துறத்தற் கொண்ணுத நம்மைத் துறந்தும் என்னும் பொருள்பட நின்றது. நந் தலைவர் மிக சால்புடையர்; அவரே தாம் மேற்கொள்ளவேண்டிய அரு ளைத் துறந்து பொருளாசையாலே பிரிவாராயின், ஏனையோர் அப்பொ ருளாசை துறந்து அருளே மேற்கோடல் இயலாதென்பது ஒருதலை என்பாள், 'அருள் யாரும் இல்லது' என்றுள். தன்னே மேற்கொள்வார் யாரையும் இல்லாதது என்க. மன்ற, ஈரிடத்தும் தேற்றப் பொருளில் வந்தது.

பொருளாசையைத் துறத்தலும், அருளே மேற் கோடலும் வேண் டும் என்று அறநூலோர் கூறுப; அது கூற்றளவிலேயே உள்ளது; செய லளவில் எத்தகைய சான்றோரும் அருளைத் துறந்து பொருளையே அவாவி உழல்கின்றனர் என, ஈண்டுத் தலைவி கூறும் நுணுக்கம் உணர்ந்து இன்புறற்பாலது.

பாட்டு - களரி : தலைவி கூற்று

துறை :—பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்து வாட்குக் கிழத்தியுரைத்தது. அஃதாவது, தலைவனது பிரிவாற் றது பெரிதும் தலைவி வருந்தினளாக, 'நீ இங்ஙனம் வருந்துதல் ஊரார் அம்பலுக் கிடனுகலின் சால்பன்' றென்று தோழி கடிந் துரைக்க, அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி, தோழியை நோக்கி, 'யான் தலைவன் பிரிவு குறித்து வருந்துகின்றேனில்லை; நீ என்னைக் கடியாதே கொள்; ஊரார் அம்பல் கூறிற் கூறுக; அவரம்பலால் நமக்குறும் ஏதம் யாது?' என்று கூறுகின்றாள.

களரு. பருவத் தேனசைஇப் பல்பறைத் தொழுதி
உரவுத்திரை பொருத திணிமணல் அடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்
கிரங்கேன் தோழியிங் கென்கொ லென்று
பிறர்பிறர் அறியக் கூறல்
அமைந்தாங் கமைக அம்பலஃ தெவனே.

—உலோச்சனார்.

(இ - ள்.) தோழி—, பருவத் தேன் நசைஇப் பல் பறைத் தொழுதி-செவ்வியுற்ற தேனை விருமபிப் பலவாகிய வண்டினங்கள், உரவுத் திரை பொருத திணிமணல் அடைகரை - வலிய அலைகளாலே மோதப்பட்ட திணிந்த மணலையுடைய அடைகரையின்கண் நின்ற, நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம் - நீரான் நனைந்த புன்னையினது பெரிய கொம்புகளிடத்தே கூடாநிற்றற்குக் காரணமான, மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்பபற்கு - மலர்ந்த மலர்களையும் கரிய கடலையுமுடைய தலைவன்பொருட்டு, இரங்கேன் - யான் வருந்துகின்றேனில்லை; அங்ஙன மிருநதும், இங்கு என்கொல் என்று - இவ்விடத்தே நீ ஆற்றுயாகின்ற தென்னை என்று, பிறர் பிறர் அறியக்கூறல்-அயலோர் பலரும் அறியும்படி என்னை இடித்துரையாதே கொள், அம்பல் அஃது எவன்-இஃது அம்பற்குக் காரணமாம் என்கின்றனை; அவ் வம்பல் நம்மை யாது செய்யும், அமைந்தாங்கு அமைக - அஃது இருந்தவாறே இருப்பதாக.

விளக்கம்:—"நான் அருள் கெழுமிய தலைவர் விரைவில் வந்தருளுவர் என்னுந் துணிவானே ஆற்றியிருக்கின்றேன் ஆகவும், நீ அஃதுணராது ஆற்றேன் போலக் கருதி, 'ஆற்றுயாகின்றதென்? இங்ஙிலை அம்பற்கு ஏதுவாம் ஆற்றியிரு!' எனக் கடியாகின்றனை; நின்னுரையே பிறரை அறிவிப்பதாகின்றது; ஆகலின், அங்ஙனம் கூறுதே கொள்; நீ கூறுகிறபடி அம்பல் எழின் எழுக! அது நம்மை என் செய்யும்," என்றவாறு.

இக் கருத்தறியாது, இங்கென் கொலென்று என்பது முதல் எவனே என்னுந்துணையும பொருள் விளக்கமின்றி "இவ்விடதது இவள் என் இங்ஙனம் ஆயினளென்று பிறர் பிறர் அறியும்படி கூறுதல் அவர்கள் மனம் அமைந்தபடி அமைக அவர்கள் கூறும் அம்பல் என்ன

துன்பத்தைச் செய்யும்," என்று துறையொடு பொருந்தாதவாறு உரை விரித்தாரும் உளர்.

பருவத் தேன் - செவ்வித் தேன். நசைஇ - விரும்பி. தேனசை என்னும குறிப்பால் பறைத் தொழுதி வண்டினம் என்னும் பொருட்டாய் நின்றது. பறை - வண்டிற்கு ஏதுப் பெயர்; பறத்தலையுடையது என்பதாம். உரவுத்திரை - வலிய அலைகள், பேரலைகளுமாம். தொகுதல் - கூடுதல். செவ்வித் தேனை விரும்பிப் புன்னைக்கினையில் வண்டினங்கள் தொகூஉம் என்றது, அங்ஙனம் தொக்க வண்டுகள் தேனைப் பெற்றவுடன் தம் சேக்கையாகிய இறுலை நாடி வருதல் ஒருதலையாதல் போலப் பொருள்நசைஇச் சென்ற நந்தலைவரும் அஃதீட்டியவுடன் மீண்டு வந்து அருளுவர் என்னும் துணிவாலே யான் இரங்காதிருக்கின்றேன் என்பதற்கு உவமம் என்க.

யான் இரங்கேன் ஆகவும் என்கொல் என்று பிறர் பிறர் அறிய நீ கூறுகின்றாய்; அங்ஙனம் கூறுதே கொள் என்றாள் என்க. கூறல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; "மகனெனல்," என் புழிப்போல. நீ இங்ஙனம் ஆற்றுவாகின்றது அம்பலெழ ஏதுவாம் எனத் தோழி கூறினாள் ஆகலின். 'அது அமைந்தாங்கு அமைக; அம்பல் எழுந்தால் என்? நீ மட்டும் பிறர் பிறர் அறியக் கூறுதே,' என நயம்பட இடித்தமை யறிக.

'அம்பலுக்குக் காரணம் என் ஆற்றுமையன்று நீ கூறும் கடிந்துரையே,' என்பது குறிப்பு.

பாட்டு - களகூ : தோழி கூற்று

துறை :—தோழி கிழத்தியைக் குறைநயப்பக் கூறியது. அஃதாவது, தன்பாற் பன்முறையும் வந்து குறை யிரந்து செல்லும் தலைவனுக் கிரங்கித் தோழி தலைவியிடத்தே சென்று, 'நீ தலைவனை ஏற்றுக்கொளளல் வேண்டும்,' என்பதுபடக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அந்தோ தலைவன், ஒருநாள் வந்தானலன்; இருநாள் வந்தானலன்; எத்துணையோ பலநாட்கள் நம் பக்கல் வந்து வறிதே மீண்டான்; அவன் வருந்தோறும் என்னோடு பேசிய பணிமொழிகள் என் உள்ளத்தை உருக்கிவிட்டன. இப்பொழுதோ அவன் யாண்டோ போய் விட்டான்! எந் நாட்டிலே இருக்கின்றனனே அறியேன்! அவனை எண்ணி என் நெஞ்சம் கலங்காநின்றது!' என்று கூறுகின்றாள்.

களகூ. ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியேன்
நன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே

ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னுட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழும்என் னெஞ்சே.

—வருமுலையாரித்தியார்.

(இ - ள்.) தோழி—, ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன் - ஒருநாள் வந்தானலன் இரண்டுநாள் வந்தானலன், பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி - பற்பல நாளும் என்பால் வந்து பணிவுடைய மொழிகளைப் பலகாலும் சொல்லி, என் நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை - எனது நன்மையுடைய நெஞ்சத்தை இளகச்செய்த பின்னர், வரை முதிர் தேனிற் போகியோனே - மலையின்கண் முதிர்ந்த தேனிறுலைப் போன்று மனம் அழிந்து சென்றான், ஆசாகு எந்தை யாண்டுளன்கொல் - பலர்க்கும் பற்றுக்கோடாகும் தகுதியுடைய என் தந்தை போல்வான் இற்றைநாள் எந் நாட்டின்கண் இருந்தனனே அறிகின்றிலேன், என் நெஞ்சு - அவன் பணிமொழியாலே நெகிழ்ந்த என் நெஞ்சமோ, வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த ஏறுடை மழையில் கலிழும் - அயற்புலமாகிய நல்ல நாட்டின்கண் பெய்த இடியேற்றினையுடைய மழையினது நீர் கலங்கினாற்போன்று கலங்காநிற்கும்.

விளக்கம் :—'ஒருநாளா! இரண்டு நாளா! எத்தனையோ நாட்கள் முயன்றோம்,' என்பதோர் உலக வழக்குப்பற்றி, 'ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன் பன்னாள் வந்து,' என்றாள். ஓய்வின்றி வந்து என்றபடி.

"ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்,
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்" (புறம் - கoக)

என்றார் பிறரும். பணிமொழி - பணிவுடைமையைப் புலப்படுத்தும் மொழிகள்.

"இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி" (அகநா - கூஉ)

என்றார் பிறரும். என் நன்னர் நெஞ்சம் என்றது, வருந்தும் பிறர்க்கு ஆற்றவும் இரங்கும் இயல்புடைய நெஞ்சம் என்றவாறு. பயிற்றுதல் - பலகாலும் கூறுதல். 'இவ்வாறு இடையறாது வந்து பணிமொழி பயிற்றினான்; என் னெஞ்சமும் அவன் திறத்துப் பெரிதும் நெகிழ்ந்தது; அந்தோ யான் நெஞ்சம் நெகிழ்ந்தது தான் அறியாமையாற் போலும் வெறுத்துப் பின்னர் வாராதவனுய் யாண்டோ சென்று விட்டான்,' என்பாள், 'நெகிழ்த்த பின்றைப் போகியோன்,' என்றாள்.

இதுகாறும் கூறியது கவர்பொருள் நாட்டம் என்க. என்னை? தலைவி தான் ஒரு தலைவனைக் கூடிக் கற்புக்கடம் பூண்டமை தோழி அறியாள் எனக் கருதி மறைத்தொழுகு கின்றாளாகலின் ஈண்டுத் தோழி தான் ஒருவனைக் காதலித்து நெஞ்சம் நெகிழ்ந்தாள் போன்று

தோன்றக் கூறுகின்றனள் ஆகலான். ஆசாகு எந்தை என்றது - யாவர்க்கும் பற்றுக் கோடாகும் தலைமைத் தன்மையுடையான் என்று பொதுவாகக் கூறுவாள் போன்று தலைவனுடைய தலைமைத் தன்மையையானும் கண்டு மகிழ்கின்றேன் எனத் தன் உடம்பாடு குறிப்பானுணர்த்திய வாறும். எந்தை என்றது, என்னுல் காதலிக்கப்படுவான் செய்தியன்று யான் கூறுவது அவன் எனக்குத் தந்தை போல்வான் நின்னுற் காதலிக்கப்பட்ட தலைவனையே யான் கூறுகின்றேன் என்று குறிப்பானுணர்த்தியவாறு. யாண்டுளன் கொல்லோ என்றது, தலைவியின் மனநிலை அறியும்பொருட்டுப் படைத்துக்கொண்டு கூறியது. வேற்றுப் புலம் - அயல் நாடு - வேற்றுப் புலமாகிய நன்னுடு என்க. நெடுந் தொலைவிற் பெய்த மழைநீர் பெரிதும் கலங்கி வருதலின் அங்ஙனம் கூறினுள்.

நின்னை இவ்வாறு பெரிதும் விரும்பும் தலைவன் உள்ளம் செவ்வி கெட்டழியாமல் அவனை ஏற்றுக்கோடல் நன்றென்பது குறிப்பு. கலிழுதல் - கலங்குதல்.

பாட்டு - களை : தோழி கூற்று

துறை :—கிழவன் வரவுணர்ந்து தோழி கிழத்திக்கு உரைத்தது. அஃதாவது, இரவுக் குறிக்கண் மனையகலே தலைவன் வந்து நிற்றலை உணர்ந்த தோழி, தலைவன் வரவை எதிர்நோக்கி அலமரும் தலைவியின் நிலையை அவன் உணரும்பொருட்டு அவன் வரவுணராதாள் போன்று தலைவியை வருவர் ஆற்றுக என்று கூறியது.

இங்ஙனம் கூறுது, "தலைவன் மாலைக்காலத்தில் வருவானென்று தோழி தலைவிக்குக் கூறியது," என்று பொருட் சிறப்பின்றிக் கூறினுரும் உளர்.

இதன்கண், 'கடல் ஒலியவிந்தது ; கழிகள் புற்கென்றன ; அன்றிலும் ஒலிக்கின்றன ; நந்தலைவரோ தணப்பரும் காமம் தண்டியோர் ; ஆதலின் இன்று வருவர் என்பது தேற்றம் ; வருந்தேல்,' என்று தோழி தலைவியை ஆற்றுவிக்கின்றனள்.

களை. கடல்பா டவிந்து கானல் மயங்கித்
துறைநீர் இருங்கழி புல்லென் றன்றே
மன்றவம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும் இன்றவர்
வருவர்கொல் வாழி தோழி நாந்தப்
புலப்பினும் பிரிவாங் கஞ்சித்
தணப்பருங் காமம் தண்டி யோரே.

—உலோச்சனர்.

(இ - ள்.) தோழி —, கடல் பாடு அவிந்து கானல் மயங்கித் துறைநீர் இருங் கழி புல்லென்றன்று - கடல் ஓசையின்றி அடங்கக் கடற்கரைச் சோலே இருளானே மயங்கத் துறைகளேயும் நீரினேயும் உடைய கரிய கழி பொலிவழியா நின்றது, மன்ற அம் பெண்ணே மடல்சேர் வாழ்க்கை அன்றிலும் பையென நரலும் - அம்பலத்தின்கண் நின்ற அழகிய பூனைமரத்தினது மடலிலே பொருந்திய வாழ்க்கையையுடைய அன்றிற்பறவையும் மெல்லக் கூவாநிற்கும், இன்று அவர் வருவர் - இன்று நந்தலைவர் வருவர், எற்றலெனின், நாம் தம் புலப்பினும் - யாம் அவரைப் புலந்த பொழுதும், பிரிவு ஆங்கு அஞ்சி - அப்புலவி காரணமாகப் பிரிவுண்டாகுமே என்பதற்கு அஞ்சி, தணப்பரும் காமம் தண்டியோர் - நம்மைப் பிரிதற்கரிய மிக்க காமம் அமையப் பெற்றோர் ஆகலான்.

விளக்கம் :—கடல் பாடவிதலாவது, அலையொழிந்து முழக்கமின்றிக் கிடத்தல். கடல், இங்ஙனம் சிற்சில சமயம் பாடவிந்து கிடத்தல் இயல்பு. "கடல்பாடவிந்து தோணி நீங்கி நெடுநீர் இருங்கழி கடுமீன் கலிப்பினும்," (அகநா - ஙo) எனப் பிறரும் ஓதுதல் அறிக. துறையையும் நீரையும் உடைய கழி என்க. கானல் - கடற்கரைப் பரப்பு. கழி தன்பாலுள்ள பூக்கள் தோன்றுது இருளில் மறைதலின், பொலிவிழப்ப என்பாள், 'புல்லென்றன்று' என்றாள். புல்லென்றற்குப் பூக்கள் கூம்பலின் என ஏதுக்காட்டினாரும் உளர். இரவிடை மலரும் நீர்ப் பூவே பலவாகலின் அது பொருந்தாமை யறிக. மன்றம் - ஊரம்பலம். அம்பெண்ணே - அழகிய பனே. பனைமடலிலே அன்றிற் பறவை வாழும் என்ப. இதனே, "மன்றப் பெண்ணே வாங்கு மடற் குடம்பைத் துணைபுணர் அன்றில்" (நற் - நoந) எனப் பிறர் கூறுமாற்றானும் உணர்க. அன்றிற் பறவையின் ஒலி, காமநோயை மிகுவிக்கும் என்பர் ஆகலின், அது நின் நோயை மிகுவிக்க நீ வருந்துகின்றனே என்பது குறிப்பு. இவ்வாறே தலைவர் இருக்குமிடத்தும் அன்றில் நரலுமாகலின் அவர் நின்னே நினைந்து வருவர் என்றாள் எனினுமாம். இதனானும் அவர் இன்று வருதற்கு ஏதுக் காட்டியவாறுணர்க.

பிரிதற்கு எதுக் கண்டவிடத்தும் பிரிவஞ்சிப் பிரியாச் சிறந்த காமம் அமைந்தாராகலின், தனித்துறைதலே அவர் விரும்பமாட்டார்; இன்னே வருகுவர் வருந்தற்க என்பாள், 'நாம் தப்புலப்பினும் பிரிவஞ்சித் தணப்பரும் காமம் தண்டியோர்' என்றாள். தண்டியோர் - அமைந்தோர்; இஃதிப் பொருட்டாதல், - 'தண்டாக் காமம்' என்னும் அதன் எதிர்மறையானும் உணர்க.

இனித் தண்டுதல் என்னும் இத்தமிழ்ச் சொல்லைத் தண்டம் என்னும் வடமொழியடியாக வந்ததென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பிறழக்கருதி "பராஅரை வேவை பருகெனத் தண்டி" எனவரும் பொருநராற்றுப் படையின்கண் தண்டி என்பதற்குப் "பலகாலலைத்து" என்று பொருள் கூறினர். ஆண்டு அவர் கூறியதனால் இப்பாட்டிற் றண்டியோர் என்றதற்கு அலைத்தும் பெற்றோர் எனப் பொருள் கூறினர் உ. வே. சா. ஐயரவர்கள். அவர் கருதியபடி கருதினும் காமத்தை

அலைத்தோர் என்பதல்லால் அலைத்தும் பெற்றோர் என்பதற்கு இட
மின்மை யறிக. பொருநராற்றுப் படையினும் "பருகெனத்தண்டி"
ன்றவிடத்துப், பருகுக என்று கூற அதற்கமைந்து ஒற்றி முனிகுவ
மெனினே என்று பொருள் கூறலே சாலப் பொருந்துதல் அறிக.

பாட்டு - களவு : தோழி கூற்று

துறை :—கடிநகர் புக்க தோழி தலைமகன் புணர்ச்சி விதும்
பல் கண்டு முன்னர்க் களவுக்காலத்து ஒழுகலாற்றை நினைந்து
அழிந்து கூறியது.

அஃதாவது, தலைவன் தலைவியை வரைந்து கொண்டு
வாழ்க்கை நடத்துழி ஆண்டுச் சென்ற தோழி, தலைவன் தலைவி
பின்பாற் கொண்டுள்ள புணர்ச்சி வேட்கையின் ஆராமை கண்டு
இத்தகைய ஆராமையுடையோர் களவுக் காலத்தே எவ்வாறு
ஆற்றியிருந்தனரோ?' என்று இரங்கிக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'ஐய! நீயிர் இப்
போது தலைவியோடே இடையறாது உடனுறையும் வாய்ப்
புடையராயிருந்தும், நீர்நிலையினின்று ஆம்பல் கொய்வோர் நீர்
வேட்கை கொண்டாற் போன்று ஆராமையாலே விதுப்புறு
கின்றீர்; இத்தகையீர், களவுக்காலத்தே புணர்வுப்போதினும
பிரிதற்போதே பெரிதாயிருந்தபோது என் பட்டீரோ!' என்று
கூறுகின்றாள்.

களவு. அயிரை பரந்த அந்தண் பழனத்
தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாங்குமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.

—நெடும்பல்லியத்தையார்.

(இ - ள்.) ஐய—, அயிரை பரந்த அம் தண் பழனத்து -
அயிரை மீன்கள் பரவா நின்ற அழகிய தண்ணிய பொய்கை
யிடத்தே, ஏந்து எழில் மலர தூம்புடைத் திரள்கால் ஆம்பல்
குறுநர் - எடுத்த அழகையுடைய மலர்களையுடையனவாகிய
தாளையுள்ள திரட்சிபொருந்திய தண்டினையுடைய ஆம்பலைப்
பறிப்போர், நீர் வேட்டாங்கு - நீரினுள் நின்றேயும் நீர் வேட்கை
மாலை வருந்தினாற் போன்று, இவள் முலையிடைக் கிடந்தும் -
இவளுடைய முலைகளினிடையே ஓவாது துயிலப் பெற்றும்,

நடுங்கல் ஆனீர் - நடுங்குதலை ஒழிகின்றீரிலீர் இத்தகைய வேட்கைப் பெருக்கமுடையிர், யாம் தூமக்குத் தொழுதுகாண் பிறையில் தோன்றி அரியமாகிய காலை - யாங்கள் நீவிர் விரும்பியாங்குத தோன்றுது, தொழுது காண்டற்குரிய பிறை நாளிடையிட்டுத் தோன்றுமாறுபோலத் தோன்றி எய்துதற் கரியேமாய் இருந்த அக் களவுக்காலத்தே, பெரிய நோன்றனிர் - மிகப் பெரிதும் வருத்தத்தைப் பொறுத்தமைந்தனிர் போலும், யான் நோகு - அதனை எண்ணி யான் வருந்துகின்றேன்.

விளக்கம் :—பல்லாடை நல்லிசைப் புலவர்களின் கலையுள்ளம், எத்தனை நுணுகிய வழிகளிலே சென்று கலையின்பம் கண்டு காட்டுகின்றன என்பதற்கு இவ்வினிய செய்யுள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டெனலாம். இதன்கண் எடுத்துக்கூறும் உவமையும் அத்தகைய நுணுக்கமுடையதே. இதனைப் பொழுது மறுப்பாக்கம் என்னும் மெய்ப்பாடென்பர் பேராசிரியர் (தொல-மெய்ப் - கசு). அவா கூறுவதாவது.

"தொழுது காண்பிறையிற் றோன்றினை வென்பது, களவுக்காலத்து இடையீடு பெருகிற்றெனக் கூறி அங்ஙனம் வரைந்த பொழுதினை மறுத்த காலத்து நடுங்கலானீர் என்றமையின் இஃது அப்பொருட்டாயிற்று," என்பதாம்.

அயிரை - ஒருவகை மீன். பருகுதற்கினிய நீருடைய பொய்கை என்பாள், 'அந்தண் பழனம்' என்றாள். பழனம் - பொய்கை. மலர - மலர்களையுடையன. தூம்பு - தெளை. ஆம்பற்றண்டு உட்டுளையுடைதலால் கண்டது. கால் - தண்டு. குறுநர் - பறிப்போர். அயலே இருத்தலின் இவள் என்று தலைவியைச் சுட்டினாள். முலையிடை என்பது இடைமுலை என முன் பின்னாக மாறி நின்றது. ஆனீர் - அமைகின்றிலீர் ஆனுதல் என்பதன் எதிர்மறை. பிறையை மணமாகாத மகளிரும் சான்றோரும் அமரரும் தொழுதலுண்டாகலின், 'தொழுது காண் பிறை' எனறாள். பிறை காண்போர் அதோ இதோ என்று தடுமாறிக் காண்டலின், 'காண் பிறை' என்றாள். பிறை சில செவ்விகளில் முகிலில் மறைந்து காணப்படாமையானும் அரிதாதல் அறிக.

களவுக்காலத்தில் பல இடையூறுகள் உண்மையின், பிறை போன்று இடையீடுற்றுக் காணப்படுவேமாய எனைப்பொழுதிற் காணப்படேமாய் இருந்தேமன்றே, அக்காணப்படாத போதெலாம என் பட்டீரோ எனறிரங்கியவாறு. பெரிய நோன்றனிர் - பெரியவாகிய வருத்தங்களைப் பொறுத்தீர் என்றவாறு. நோகு - நோகின்றேன்: தன்மை யொருமை.

பாட்டு - களகு : தோழி கூற்று

துறை :—பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள் போன்று வரைவு கடாயது. அஃதாவது, களவின்கண் பகற்குறியிடத்தே வந்தொழுகும் தலைவனை நின்னைப் பிரிந்துறையும் பொழுது நீளிதாகலின், தலைவி ஆற்றளாகின்றாள் ; ஆதலின் வரைந்து

கொள் என்றுணர்த்துவாளாய் இரவினும் நண்டுத் தங்குக என்று தலைவனைத் தோழி வேண்டியது.

இதன்கண், 'ஐய! பொழுதும் இருண்டது; நின் நாய் களும் இளைத்தன; உதோ தோன்றுவதே எம்மூர்; ஆதலின், தங்கிச் செல்க!' என்று தோழி தலைவனை வேண்டுகின்றாள்.

களக. கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லும் எல்லின்று ஞமலியும் இளைத்தன
செல்லல் ஐய உதுவெம் மூரே
ஓங்குவரை யடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

—குட்டுவன் கண்ணனார்.

(இ - ள்.) ஐய—, கல் என் கானத்துக் கடமா ஆட்டி - ல்லென்னும் ஓசையையுடைய காட்டிடத்தே கடமாவை லையாநிற்ப, எல்லும் எல்லின்று - பொழுதும் இருளா நின் து, ஞமலியும் இளைத்தன - நின் நாய்களும் வேட்டமாடி ளைப்படைந்தன, ஓங்கு வரை அடுக்கத்துத் தீந்தேன் கிழித்த வையுடைப் பசுங்கழை தின்ற - உயர்ந்த மலைப்பக்கத்தே னிய தேனிறலைக் கிழித்த திரளையுடைய பசிய மூங்கிலைத் ன்ற, கயவாய்ப் பேதை யானை சுவைத்த - பெரிய வாயையும் தைமையையும் உடைய யானை தின்றமையாலே, கூழை ங்கில் குவட்டிடையது - கூழையாகிய மூங்கிலையுடைய உச்சி ன் இடையே உளதாகிய, உது எம் ஊர் - இவ்வூரே எமது ராகும், செல்லல் - நீ நின்னூர்க்குச் செல்லாமல் தங்கு யாக.

விளக்கம்:—கல்- ஒலிக்குறிப்பு. கடமா - ஒருவகை விலங்கு. ட்டுதல் - காட்டினூடே புகுந்து அலைத்துத் துன்புறுத்தல். எல் - ாழுது. எல்லின்று - இருண்டது. ஞமலி - நாய்; தலைவனோடு த வேட்டை நாய்கள்.

தலைவன் வேட்டை நாய்களுடன் வரும் வழக்கத்தை,

"முளைபாழ் படுக்கும் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரின்
உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளும்
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர" (கஉஅ - கூஉ.)

எனவரும் குறிஞ்சிப்பாட்டானும் அறிக. இலைத்தன - நின்னெடு வேட்டமாடி இலைத்தன என்றவாறு. வரையடுக்கம் - மலைப்பக்கம். மூங்கில் தன் வளர்சியாலே மலையடுக்கத்துள்ள தேனிறாலைக் கிழித்த தென்க.

உது - உதோ தோன்றும் ஊர் என்க. உது எம்மூர் செல்லல் என்றது, அணித்தே உள்ள எம்மூரின் கண்ணே இன்றிரவு தங்குக என்றவாறு.

பாட்டு - கசுஎ : தோழி கூற்று

துறை :—பிரிவிடை வேறுபட்டானைத் தோழி வற்புறுத்தியது அஃதாவது, பொருள்வயிற் றலைவன் பிரிந்தானாக, ஆற்றுமை மிக்க தலைவியை, 'அவன் வருந்துணையும் ஆற்றியிருத்தலே நின் கடன்' எனத் தோழி ஆற்றுவித்தது

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் பொருளிட்டச் சென்ற நாட்டின்கண் இன்னும் அவ்வினை முற்றப்பெற்றூர் இலர் போலும்; வினை முற்றியவுடன் மீண்டு வருவர்; அதுகாறும் நீ ஆற்றுக !' என்று கூறுகின்றாள்.

கசுஎ. பழஉப்பல் அன்ன பருவகிர் பாவடி
இருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்
தறைமடி கரும்பின் கண்ணிடை யன்ன
பைத லொருகழை நீடிய சுரனிறந்து
எய்தினர் கொல்லோ பொருளே யல்கு்ல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்ப ராகத்தாஞ் சென்ற நாட்டே.

—கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(இ - ள்.) அல்குல் அவ்வரி வாடத் துறந்தோர் - அல்குலிலே பரந்த அழகிய தேமல்நிறங் கெடும்படி பிரிந்து சென்ற நந்தலைவர், பழஉப்பல் அன்ன பரு உகிர்ப் பா அடி - பேயினது பல்லை ஒத்த பருத்த நகத்தினையும பரந்த அடியினையும் உடைய, இருங் களிற் றின நிரை ஏந்தல் வரின் - பெரிய களிற்றியானைத திரளின் வரிசையினது தலைவனுகிய களிறு வந்து புக்கவிடத்து, மாய்ந்து அறை மடி கரும்பின் கண் இடையன்ன - அதனால் தகைப்புண்டு அழிந்து பாத்தியின்கண் விழுந்த கரும்புகளின் இடையே மாயாது நின்ற ஒற்றைக் கரும்பு போன்ற, பைதல் ஒரு கழை நீடிய சுரன் இறந்து - தன்பத்தையுடைய ஒற்றை மூங்கில் வளர்ந்த பாலைநிலத்தைக் கடந்து, வன்பராகத தாம் சென்ற நாட்டு-வன் னெஞ்சினராகத்தாம் பொருளீட்டச் சென்ற

காட்டின் கணணே, பொருள் எய்தினர் கொல் - தாம் கருதிச் சென்ற பொருளே ஈட்டினரோ இலரோ? அவர் அளியர்!

விளக்கம்:—'பொருள் இன்றியமையாமை கருதி அன்பராயிருந்தும் வன்பராகத் தன்னெஞ்சை வலித்துக் கொண்டு வன்பாலையிற் சென்ற நங்காதலர், அப் பொருளே ஓரளவு ஈட்டியவுடன் விரைந்து மீள்வர்; அவர் இன்னும் பொருளீட்டப் பெருமையே வராமைக்கு ஏதுவாம். அவர் மேற்கொண்ட வினை முற்றி வருதலே நன்று; நீ ஆற்றியிருத்தலே கடன்' என்று வற்புறுத்திய வாறும்.

பழுஉ - பேய். "பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்" (உருகு) எனவரும் குறிஞ்சிப்பாட்டினும் அஃ தப்பொருட்டாதல் அறிக. பேயின் பல், யானை நகத்திற்கு உவமை. "பேய்மகள் நிணமுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணன் உதைத்துச் சிவந்த பேருகிர்..... யானை" (கக.எ-உ) எனச சிறுபாணாற்றுப் படையினும் வருதல் அறிக. பாவடி-பரந்த அடி. இருங்களிறு-கரிய களிறுமாம். களிற்றினிரை என்றது, களிறுகளையுடைய யானையின் வரிசை. ஒவ்வொரு யானைக் கூட்டத்திற்கும், தலைமையானை ஒவ்வொன்றிருக்கும் என்ப, இத்தலைமையானையை 'யூதநாதன்' என்ப. எண்டு எந்தல் என்றது அத்தலைமையானையை எந்தல் - தலைமைத்தன்மை என்னும் பொருட்டு.

கரும்பின் கண் இடை - கரும்புகளின் இடையே நிற்கும் ஒற்றைக் கரும்பு. இடை - ஆகுபெயர் கண் - விழாவதனருபு. இங்ஙனமன்றி கரும்பின்கண் இடையன்ன என்பதற்கு "கரும்புகளின் கணுக்களின் இடையேயுள்ள பகுதியைப் போன்ற" என்றும், அஃதாவது. "யானையால் முறிக்கப்பட்ட கரும்பின் ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் இடையிலுள்ள அளவே வளர்ந்த மூங்கில்" என்று கூறினருமுளர். இஃது சிறவாமை யுணாக. பாலைநிலத்தே வேனிலானே அழிந்த மூங்கிற் புதர்களின் இடையே ஆண்டாண்டு ஒற்றை மூங்கில்கள் சில வாடி நிற்றல், யானையாலே அழிக்கப்பட்ட கரும்பின்கண் இடையே மாயாது உய்ந்து மெலிந்து நிற்கும ஒற்றைக் கரும்புபோலும் என்பதே சிறத்தல் அறிக.

எய்தினர் கொல்லோ என்றது, இன்னும் எய்திற்றிலர் என்னும் குறிப்புடையது. வன்பராக என்றது, உண்மையில் அன்பராயிருந்தும், பிரிதற்பொருட்டு வன்பர்போல வலிந்து கொண்டு என்றவாறு. எனவே பொருள் நிரம்பியவுடன் மீள்வர் என்பது குறிப்பாக வுணர்த்தி ஞளாயிற்று.

பாட்டு - கஅக : தலைவி கூற்று

துறை :—தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி ஆற்றுளாகிய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது. அஃதாவது, தலைவன் பரத்தையிற் பிரிந்தமையாலே ஆற்றுமை மிக்க தலைவியின் நெஞ்சை மற்றொன்றில் ஈடுபடுதற்பொருட்டுத் தலைவனைத் தோழி பழித்

தூரைக்கத் தொடங்கினளாக அப் பழிச் சொல்லைப் பொறாத தலைவி அவளைக் கடிந்து கூறியது.

இதன்கண், தலைவி, இயற்பழித்த தோழியை நோக்கி, 'ஏடி, இஃதென்ன? தலைவர் சால்பிலர் என்னும் இன்னாக்கிளவியை இனிக் கிளவாதேகொள்; அவரது திருமனையின்கண்ணே யாம் செய்தற்குரிய பல கடமைகள் உள்ளன; அவற்றைச் செய்தலொழிந்து பிறர்பழி தூற்றல் எற்றுக்' கெனக் கடிந்து கூறுகின்றாள்.

கஉக. இதுமற் றெவனே தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப் பெருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியி னகலாது
பாஅற் பைம்பயிர் ஆரு மூரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே

—கிள்ளிமங்கலங் கிழார்.[1]

(இ-ள்) தோழி—, இரு மருப்பு எருமை ஈன்று அணிக் கார் ஆன்-பெரிய கொம்பினையுடைய எருமையாகிய ஈன்றணி மையுடைய கரிய ஆன், உழவன் யாத்த குழவியின் அகலாது-உழுதொழிலாளனாலே பிணிக்கப்பட்டுள்ள தன் கன்றைப் பிரிந்து சேய்மைக்கட் செல்லமாட்டாமல், பாஅல் பைம்பயிர் ஆரும ஊரன்-பக்கத்தேயுள்ள பசிய பயிர்களை மேயாநின்ற ஊரையுடைய நந்தலைவனது, திருமனைப் பலகடம் பூண்ட-செல்வ மிக்க இல்லதிருந்து இல்லறத்தார்க்குரிய பற்பல கடமைகளையும் மேற்கொண்டுள்ள, பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கு-பெரிய முதுமையினையுடைய பெண்டிராகிவிட்ட நமக்கு, தூனியிடை இன்னர் என்னும் இன்னாக் கிளவி-நாம் ஊடியிருக்கும் இப் புலவிக் காலத்தே இன்னின்ன தன்மையர் என்று கூறுகின்ற கேட்டற் கின்னாவாகிய சொற்களைக் கூறுதலாகிய, இது எவன்-இச்செயல் யாது பயன் உடைத்து.

விளக்கம்:—ஆதலால் இவ்வின்னாக் கிளவியை இனிக் கூறுதொழி என்பது குறிப்பெச்சம். செய்யுளாகலின் சுட்டுச சொல் முன்னர் வந்தது. தூனி-புலவி. புலவிக்காலத்தே தலைவர் இத்தகையர் எனத் தோழி அவனது குறைகளை எடுத்தோதினளாகலின், 'இன்னர் என்னும்...கிளவி' என்றாள். அங்ஙனம் அவரைப்பழிக்கும் சொல்லையான் பொறேன் என்பாள், 'இன்னாக்கிளவி' என்றாள். ஈன்றணி-ஈன்றணித்தாய காலத்தையுடைய என்க. ஆன் என்பது, பெற்றம்

(பாடம்) 1. கிள்ளிக்கிழார்.

எருமை மரை என்பனவற்றிற் பெண்மை சுட்டிய பெயராகலின்; எருமைக்காரான் என்றாள். இதனை, "பெற்றமும் எருமையும் மரையும் ஆவே" (தொல்-மரபியல் - கூ0) என்னும் ஒத்தானும் உணர்க. "சேற்று நிலைமுனை இய செங்கட் காரான்" (அகம் - சகூ.) எனப்பிறரும் கூறுதலுணர்க. எருமையாகிய காரான் என்க. உழவன் - அவ்வெருமையை உடைய உழவன் என்றவாறு. இளங்கன்றை உழவன் பிணித்து விட்டானாக, அதனைப் பிரியலாற்றாது அயலிலுள்ள பயிர்களை மேயும் என்க. கன்றை அகலாதே எருமை பக்கத்துள்ள பைம்பயிர் ஆரும் என்றது, இல்லறத்திற்குரிய நம்பாலும் அன்பு மிக்காராய் ஒரோவழிப்பரத்தமையொழுக்கமுடையராதல் அவர்க்குப் பழியன்று; அஃது ஆடவரியல்பே காண் என் மறுத்தோதியவாறு என்க.

பால் - பக்கம். பைம்பயிர் - தீஞ்சாலிப் பசும்பயிர் என்க. திருமனை - செல்வம் நிறைந்த இல்லம். எனவே, யாம் அப்பொருளாலே செய்தற்குரிய கடமைகளைச செய்யத் தடையின்று என்றவாறு.

கடம் - கடமை. அவை, அறவோர்க்களித்தல் முதலியன. பெருமுது பெண்டிர் என்றது, 'யாம் இப்போது மகப்பேறடைந்து தாய்மை எய்தினேம்; இனி யாம் இன்பத்தினும் காட்டிலும் அறத்தையே போற்றுதல் வேண்டும்' என்றுணர்த்தியவாறு.

தனக்கும் தோழிக்கும் வேற்றுமை காணலாகலின் நமக்கு என்றாள்.

பாட்டு - கஅஉ : தலைவன் கூற்று

துறை :—தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன் தன் னெஞ்சிற்கு உரைத்தது. அஃதாவது, தலைவியைப் பெறுதற்குத துணை புரியும்படி தோழியைத தலைவன் வேண்ட, அவள மறுத்த வழி இனி மடலேறுவல என்பது படத் தலைவன் கூறியது.

இதன்கண், 'நெஞ்சே! தலைவியும் நம் நிலை கண்டு இரங்கினாளல்லள்; தோழியோ நம்மைப் பழிமடற் கலிமாவேறி, நாணை நீக்கிப் பிறர் எள்ளத் தெருவிலே செல்லுமபடி தூண்டுகின்றாள்; பின்னர் யாம் மடலேறுதல் என் செய்கோம்!' என்று தோழி கேட்கக் கூறுகின்றான்.

கஅஉ. விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளோன் பணிந்துபிறர் எள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவின் இயலவும் தருவது கொல்லோ
கலிந்தவிர் அசைநடைப் பேதை
மெலிந்தில ணும்விடற் கமைந்த தூதே.

—மடல் பாடிய மாதங்கீரனார்.

(இ - ள்) கலிழ்ந்து அவிர் அசை நடைப் பேதை-நெஞ் சமே அழகு ஒழுகி விளங்கா நிற்ப அசைந்தியங்கும் நடையை யுடைய தலைவியோ, மெலிந்திலள்-நாநில கணடு நம்திறத்துச் சிறிதும உளம நெகிழ்ந்தாளில்லை, நாம் விடற் கமைந்த தூது-நம் குறைமுடிப்பான் அவள்பால் யாம செலுத்தற் கமைந்த தூதோ வெனில, விழுத்தலைப் பெண்ணை விளையல் மா மடல்-சிறந்த தலை யினையுடைய பனையின்கண்ணே தோன்றி முதிர்ந்த பெரிய மடலானே இயற்றிய குதிரைக்கு, மணி அணி பெருந்தார் மரபில் பூட்டி-ஒலிக்கின்ற மணியினையும அழகிய பெரிய மாலையினையும் முறைமையாலே பூட்டி, வெளளெனபு அணிந்து-யாம வெள் ளிய என்பு மாலையை அணிந்துகொண்டு, பிறர் எள்ளத் தோன்றி - நம்மைக் கண்ட ஏதிலர் எல்லாம இகழும்படி அவர் முன்னர் அம்மாவின்மேல் தோன்றி, ஒருநாள் மருங்கில பெரு நாண் நீககி - ஒரோ ஒரு நாள மடலில் நமது பெரிய நாலை நீகக நிறுத்தும், தெருவின் இயலவும தருவது - தெருவி னிடத்தே செல்லும செயலைத் தருவதொன்றுயிருந்தது

விளக்கம்:—ஆதலால் யாம் மடலேறுதல் அன்றி வேறென் செய் கோம் என்பது குறிப்பு. பனைமரம் தலையிலே சிறப்புடையதாகலின் விழுத்தலை என்றான். விழுத்தலை என்றது, கொழுத்ததலை என்னும் பொருள் படகின்றது. மடன் மாச செய்தற்குச் சிறந்த மடல்வேண்டும் ஆகலின், விழுத்தலைப் பெண்ணை எனல் வேண்டிற்று. விளையல்-நன்கு முதிர்ந்து விளைதலையுடைய. மாமடல் பெரிய மடல். மணி-மடன் மாவின் கழுதிற் பூட்டும் ஒலிமணி. "பூண்மணி கறங்கவேறி" (குறுந் - களகூ.) என முன்னும் வநதமை அறிக. மணியும் அணிபெருந்தாரும் என்க. பெருந்தார் என்றது, ஆவிரம்பூ எருக்கம்பூ முதலியவற்றாலாய மாலைகளை. "அணியலங் காவிரைப் பூவோடு எருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து" (கஉஅ.) என்றார் கலியினும்.

மடலேறுவார் என்புமாலையணிதல் மரபு. இதனை, "என்பணி வேன் மடல் மேல் வருவேன்" (கஅஉ) எனவரும் தஞ்சைவாணன் கோவையானும் அறிக. பிறர் எள்ளினும் தோன்றவே வேண்டும் என்பான், பிறர் எள்ளத் தோன்றி என்றான். நம்மலோர் புகழொடு தோன்றுதலே சால்பாகவும், இதன்கண் எள்ளத்தோன்ற நேர்ந்தது என்றிரங்கியவாறு. நீக்கலாகாமைபற்றிப் பெருநாண் என்றான், இம் மடன்மாவின் பொருட்டு ஒருநாள்மட்டும் நீக்கவே வேண்டும் என்பான், 'ஒருநாண் மருங்கில் நீக்கி' என்றான். நாணீக்கியல்லது மடலேறலா காமையை (களஉ) ஆம் செய்யுள் விளக்கத்தினும் காண்க. கொல்லை. அசைகள்; விளைவாக்குவாரு மூளர்.

'பேதை மெலிந்திலள்; தூது இயலவுந்தருவது; யாம் அது செய் யாது வேறென் செய்கோம்?' என்றவாறு.

*

பாட்டு - கஅஉ : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கண் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது அஃதாவது, பிரியும் பொழுது 'யான் கார்ப்பருவத் தொடக்கத்தே தேற்றமாக மீண்டு வருவேன்; நீ அதுகாறும் ஆற்றியிரு' எனக் கூறிச் சென்ற தலைவன், அப்பருவம் வந்த பின்னரும் வாராமை கண்ட தோழி, 'இவள் இனி ஆற்றுதல் அரி'தெனக் கவலை கொண்டாளாக, அதுகண்ட தலைவி, 'யான் ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது

இதன்கண், 'தோழி! தலைவர் நம்மைப் பிரிந்து சென்ற நாட்டினும் இக்கார்ப்பருவம உண்மையால், ஆங்குள்ள கொன்றை மலர்கள், நமது பசப்பினை அவர்க்கு நினைப்பூட்டும் என்றும, பெண் மானைப் பிரிந்த ஆண்மானையும் அவர் ஆண்டுக் காண்பாரல்லரோ? என்றும், ஆதலால் அவர நமமை நினைந்தனராய் விரைவில் மீண்டு வருவர் என்றும, யான் ஆற்றியிருக்கின்றேன்; நீ கவலற்க,' என்றும் தலைவி கூறுகின்றாள.

கஅஉ. சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
ம்போற் பசக்குங் காலைத் தம்போற்
சிறுதலைப் பிணையிற் றீராத நெறிகோட்
டிரலை மானையுங் காணபர்கொல் நமரே
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்
கான வைப்பிற் புன்புலத் தானே.

—ஓளவையார்.

(இ - ள்.) தோழி—, புல் என் காயாப் பூக்கெழு பெருஞ் சினை மென்மயில் எருத்தில் தோன்றும் - முதுவேனிலாலே பொலிவழிந்திருந்த காயாவினது பூக்கள் பொருந்திய பெரிய கொம்புகள் கார்பபருவ வருகையாலே மயிலினது கழுத்தைப் போன்று தோன்ற நின்ற, கான வைப்பின் புன்புலத்தான்- காட்டிடத்தையுடைய புல்லிய நிலத்தின்கண், நமர் சென்ற நாட்ட - நந்தலைவர் சென்று தங்கிய நாட்டிடத்தனவாகிய, கொன்றை அம் பசுவீ நம்போல் பசக்குங் காலை - கொன்றையினது அழகிய பசிய பூக்கள் நம்மைப் போல் பசலைநிறம் கொள்ளும் இக்கார்காலத்தே, தம் போல் சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறி கோட்டு இரலை மானையும் காண்பர் கொல்-தம்மைப் போலச் சிறிய தலையையுடைய பெண்மானைப் பிரிந்து தனித்திருக்கும் நெறிந்த கொம்பினையுடைய ஆண்மானையும் காண்பாரோ? காணமாட்டாரன்றே.

விளக்கம்:—'தோழி! நந்தலைவர் சென்ற நாட்டின்கண் இக்கார் கால வரவாலே கொன்றைகள் மலருங்கால், அம்மலரின் நிறம் நமது பசலையை அவர்க்கு நினைவூட்டுவதாகும்;மேலும், ஆண்டுப் பிணைமானெடு இரலை மான் இணைந்து விளையாடுதலையும் அவர் காண்பர்; அப்போது அவர் நம்மை நினைந்து வருவர் என்னும் நினைவாலே யான் ஆற்றியிருக்கின்றேன்.' என்றவாறு.

நாட்ட-நாட்டிலுள்ளனவாகிய. கொன்றை, கார்காலத்தே மலரும் இயல்புடைய வாகலின், கார்காலத்தைக் 'கொன்றைவீ பசக்கும் காலை' என்றார். அம்பசுவீ - அழகிய பசிய மலர். பசலை - பொன்னிற முடைத்தாகலின் கொன்றை மலர் தன்னிறத்தாலே தலைவர்க்கு நம் பசலையை நினைவூட்டும் என்பது குறிப்பு. நெறி கோடு: வினைத் தொகை. நெறிந்த கொம்பென்க. அஃதாவது, அறல்பட்ட கொம்பு.

தம்போல் என்றது, தாம் தம் காதலியைப் பிரிந்து தனித்துறையுமாபோல் என்றவாறு. பிணை - பெண்மான், இரலை - ஆண்மான். கார்காலத்தே புன்புலவைப்பிற் புல்லருந்தி ஆணும் பெண்ணுமாகத் துள்ளியாடும் இணைமானைக் காண்பரன்றிப் பிணை பிரிந்த மானைக் காணல் இயலாதாகலின், 'காண்பர் கொல்' என்பது, காணமாட்டார் என்னும் பொருள் பயந்து, இணைமானையே காண்பர், காணுங் கால்நம்மை நினைந்து மீள்வர் என்னும் குறிப்புப் பொருளையும் தந்து நின்றது.

கார்ப்பருவத்தின் முன்னர்ச சென்ற முதுவேனிலின் வெம்மையால் உலர்ந்த புற்கென்ற காயா, இப்போது மயிலெருத்துப் போல மலர்ந்தன என்பாள், 'புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை' என்றார். "கருநனைக் காயா கணமயில் அவிழ" (கசுஇ.) என்றார், சிறுபாணாற்றுப் படையினும்.

'கானவைப்பிற் புன்புலம்' என்றது, முல்லை நிலத்தை. கார்காலத்தே மான்கள் இணைபிரியாது துள்ளி விளையாடும் என்பதை,

> "வன்பரற் றெள்ளறல் பருகிய விரலே
> இன்புறு துணையொடு மறுவந் துகளத்
> தான்வந் தன்றே தளிதரு தண்கார்" (சுஉ.)

என இந்நூலில் முன்னர் வந்துள்ளமையானும் உணர்க.

பாட்டு - கஅசு : தலைவன் கூற்று

துறை :—கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது, 'காமநோயால் வருந்துதல் நினக்குத் தகவன்று' எனத் தன்னை இடித்துரைத்த நண்பனைத் தலைவன் மறுத்துக் கூறியது.

இதன்கண், 'தம்நெஞ்சம் அறிந்ததனைச் சான்றோர் பொய்யார்; யாவரும் அப்பரதவர் சிற்றாரின்கண் செல்லுதல் ஒழிமின்! ஏனெனில் யான் ஆண்டுச் சென்று என் நெஞ்சத்தை இழந்தேன்; நீயிரும் செல்விரேல் நும் நெஞ்சமும் ஆண்டுறையும்

பரதவர் மடமகள் கண்வலைப்படுதல் ஒருதலை' என்று தலைவன் பாங்கனுக்குக் கூறுகின்றான்.

கஉச. அறிகரி போய்த்தல் ஆன்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்னு ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே.
—ஆரிய வரசன் யாழ்ப்பிரமதத்தன்.

(இ - ள்.) மயில் கண் அன்ன மாண் முடிப் பாவை-மயிலினது பீலியின்கட் கண்ணை ஒத்த மாட்சிமையுடைய முடியையுடைய பாவை போல்வாளாகிய, நுண் வலைப் பரதவர் மடமகள் - நுண்ணிய வலையையுடைய நெய்தனில மாக்களின் மடப்பத்தையுடைய மகளினது, கண்வலைப்படூஉம் கானலானே - கண்ணுகிய வலையின்கண் ஆண்டுச் செல்வோர் நெஞ்சம் அகப்படுதற்கிடமான கடற்கரைச் சோலையிடத்துள்ள, சிறுகுடிச் செலவு குறுகல் ஓம்புமின் - சிற்றூரின்கண் சென்றடைதலைப் பரிகரியுங்கோள்; ஏனெனில், மாண் தகை நெஞ்சம் - எனது மாட்சிமைப்பட்ட தகுதியையுடைய நெஞ்சம், அதன் பட்டு இதற்கு இது மாண்டது என்னுது ஆண்டொழிந்தன்று - அக்கண் வலையின்கட் சிக்கி, இப்பொருளுக்கு இப்பொருள் தக்க மாட்சிமையுடையது என்னும் ஆராய்ச்சியின்றி அவ்விடத்திலேயே தங்காநின்றது, அறிகரி போய்த்தல் ஆன்றோர்க் கில்லை - தாம் நெஞ்சறிந்ததனை மறைத்துப் பொய்கூறுதல் சான்றோர்க் கியல்பில்லை யாகலான், அந்நெறி நின்று யான் உணர்ந்த தொன்றனை நுமக்குக் கூறுகின்றேன்.

விளக்கம்:—அறிகரி - அறியப்பட்ட உண்மை.

"கள்ளார் கள்ளுண்ணூர் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறூர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்," (நாலடி-கருஎ.)

என்ப வாகலான், "அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை," என்றான். எனவே யானும் அவ் வான்றோர் நெறிபற்றி என் னெஞ்சறிந்த தொன்றனைப் பிறர் நலங் கருதிக் கூறுகின்றேன் என்றானாயிற்று. சிறுகுடி - சிற்றூர். ஓம்புதல் - பரிகரித்தல். குறுகுதலைப் பரிகரிமின் என்க. இனக் கிது மாண்டது அன்று எனப் பாங்கன் இடித்துரைத்தானுகலின், அதனைக் கருத்துவகையானே கொண்டு கூறுவான் இதற்கிது மாண்ட

தென்னது அதற்பட்டதென்றான். இப் பொருட்கு இப் பொருள் ஏற்ற மாண்புடையது இதற்கிது பொருந்துவதன்று என்னும் ஆராய்ச்சி யறிவு அவளைக் காணுதற் பின் போல்வார்க்கே உளதாம். கண்டாலோ நெஞ்சம் அவள் கண்வலைப்பட்டு மயங்குதலன்றி ஆராயும் வன்மை யுடையதாகாது என்று பாங்கனே மறுத்தவாறும். அதற் பட்டு - அதன்கட் பட்டு. அது என்றது, கண்வலையை. ஆண்டு : அக் கண் வலையினிடத்தே. மயிற்கண் - மயிலினது பீலியின்கட் கண். இது மயிர்முடிக் குவமை.

'மாண்டகை நெஞ்சம்,' என்றான், அவளைக் காணுமுன்பெல்லாம் 'தக்க வின்ன தகாதன இன்ன,' என்று ஆராயும் மாண்புடைய நெஞ் சமே யானும் உடையேன், என்றுணாததற்கு. நுண்வலை - நுண்ணிய நூலானிய வலை. அவள் சூடித் தொழிலிலே அவள் மிகவும் வன்மை யுடையள் என்றவாறு.

'நண்பனே நீ அவ வழகியைக் கண்டிருப்பையாயின் என்னை இங்ங னம் இடித்துரையாய்,' என்பது குறிப்பு.

பாட்டு - கஅஅ : தலைவி கூற்று

துறை :—தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை "வேறுபட்டாயால்," என்றாட் குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, தலைவன் இரவின்கண் ஏதமிக்க இருள்நெறியில் வருதலை அஞ்சி, உடல் மெலிந்த தலைவி யைத் தோழி தலைவன் வருவானுகவும, 'நீ எற்றுக்கு மெலிகின் றனை ?' என்று வினவ, தன் மெலிவிற்குக் காரணங் கூறி, தலை வனை 'இங்ஙனம் வரல்வேண்டா,' என்று கூறுக எனத் தலைவி கூறியது.

இதன்கண், 'தோழி நீ எனது நன்மா மேனி அழிகின்ற தன்ப நிலையைத தலைவருக்கு எடுத்துக் கூறி, இம் மெலிவு நீயிர் இருள் நெறியில் வருதலானே அவட் கெய்தியது என்றுணர்த்தி, அங்ஙனம் வருதலை பரிகரித்தால் என்னும் ?' என்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

கஉடு. நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்
தின்ன ளாகுத னும்மி னுகுமெனச்
சொல்லி னெவனுந் தோழி பல்வரிப்
பாம்புபை அவிழ்ந்தது போலக் கூம்பிக்
கொணடலிற் றுலைந்த வொண்செங் காந்தள்
கன்மிசைக் கவியு நாடற்கென்
நன்மா மேனி யழிபடர் நிலையே.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

(இ - ள்.) தோழி—, பல் வரிப் பாம்பு பை அவிந்தது போலக் கூம்பி - பலவாகிய கோடுகளையுடைய பாம்பின்படம் குறைந்தாற்போன்று குவிந்து, கொண்டலில் தொலைந்த ஒண் செங்காந்தள் - கீழ்சாற்றிலே வீழ்த்தபபட்ட ஒள்ளிய செங் காந்தள மலர், கல் மிசைக் கவியும் நாட்டற்கு - பாறையின்மேலே கவியாநின்ற நாட்டையுடைய தலைவருக்கு, என் நல் மா மேனி அழி படர் நிலை - எனது நன்றாகிய மாமையுடையு மேனியினது மிக்க துன்பமுடைய நிலையினை, நுதல் பசப்பு இவர்ந்து திதலை வாடி நெடு மென் பணைத்தோள் சாஅய்த் தொடி நெகிழ்ந்து இன்னள் ஆகுதல் - நுதலின்கண்ணே பசப்பூரப்பட்டு சுணங்கு நிறங்குன்றி நெடிய மெல்லிய பருத்த தோள்கள் மெலிந்து வளையல் கழன்று இத்தன்மையை உடையள் ஆகுதல், நும் மின் ஆகும் என - நுமமுடையதொரு செயலாலே உண்டாயது என்று எடுத்துக் கூறி, சொல்லின் எவனும் - நீ அறிவுறுத்தி னால் அதனால் வரும் ஏதம் யாது?

விளக்கம் :—'தோழீ! நாடற்கு இன்னளாகுதல் நும்மின் ஆகும் எனச் சொல்லின் எவன்?' என இயைபு காண்க. இவர்ந்து வாடிச் சாஅய் நெகிழ்ந்து என்னும் சினைவினை எச்சங்கள் முதல் வினையாகிய ஆகுதல் என்னும் வினைகொண்டு முடிந்தன. இவர்தல் - ஊர்தல். திதலை தேமல். இது மெலிவின்கண் நிறங் குன்றித் தோன்றுதலை வாடி என்றாள். பணைதோள் - மூங்கில் போன்ற தோளுமாம். சாய்-மெலிந்து. தோள் சாய்தலின் தொடி நெகிழ்ந்ததென்க.

இன்னள் - இத்தன்மை யுடையள். இத் துன்ப ஆக்கத்திற்கு நும் செயல் எது என்றவாறு. அவன் செயல் எனறது, அசை மிக்க இருள் நெறியில் வருதலை. இருள் நெறியில் நீவிர் வருங்கால் விலங்கு முதலிய வற்றால் நுமக்கு ஏதம் விளையுங்கொல் என்று அஞ்சி அஞ்சி இவள் இந் நிலையினள் ஆகின்றாள் என உய்த்துணரக் கூறியதென்க.

பை - படம். பாம்புப் படம் சுருங்குதற் போன்று இதழ் சுருங்கிய செங்காந்தள் என்க. காந்தள் காற்றாலலைப்புண்டு கல்லிற் படியும் என்றது, தலைவி நினைக் கேதமுறுமே என்னும் அச்சத்தாற் குலைக்கப் பட்டுத் துன்பத்திலே வீழ்ந்தாள் என்றவாறு. அழிபடர்-மிக்க துன்பம். வினைத் தொகையாகக் கொள்ளினுமாம்.

காடோறும் வாராநிற்பவும் இவள் மெலிவிற்கு யான் எதுவென்றல் எங்ஙனம் என, ஆராய்ந்து தான் இருள்நெறி வருதலே இதற்குக் காரணம் எனத்தெளிவான்; தெளிந்துழி வரைந்துகொள்ள முன் வருவான்; வரவே நலமாம் என்பான், 'எவனும்' என்றாள். என்ன நீங்குடைத்தாம் என்று வினவுமுகத்தானே நீங்குண்டாகாது நலனே விளையும் என்றுணர்த்திய படியாம.

பாட்டு - கஅசு : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது. அஃதாவது, தலைவன் மீண்டு

வருவதாகக் குறித்துச் சென்ற பருவம் வந்தபின்னரும் வந்திலனாகத் தலைவி இனி ஆற்றாள் என்று கவலைகொண்டவழி, அவளுக்குத் தோழி கூறியது.

இதன்கண், 'தோழி! என் கண்கள் தலைவரைக் காணப் பெறாது துயில் துறந்தன,' என்று தலைவி கூறுகின்றாள்.

கஅசு. ஆர்கலி யேற்றொடு கார்தலை மணந்த
கோல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகைக்கு நாடற்குத்
துயிறுறந் தனவால் தோழியென் கண்ணே
—ஒக்கூர் மாசாத்தியார்.

(இ - ள்.) தோழி—, என் கண் - என்னுடைய கண்கள், ஆர்கலி ஏற்றொடு காதலை மணந்த - ஆரவாரத்தையுடைய இடியேற்றோடே முகில் மழைபெய்து கலந்த, கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி - முல்லை நிலத்தனவாகிய முல்லையினது மெல்லிய கொடி, எயிறு என முகைக்கும் நாடற்கு - பற்கள் போன்று அரும்பாகிற்கும் நாட்டையுடைய தலைவன் பொருட்டு, துயில் துறந்தன - உறங்குதலை யொழிந்தன.

விளக்கம் :—ஆர்கலி - ஆரவாரம். ஏறு - இடி. கார்தலை மணந்த என்றது, முகில்கள் மழை பெய்து கலந்த என்றவாறு. கொல்லை - புன்செய். கொல்லைகளாகிய புனம் என்க. கார்தலை மணந்த புனத்த முல்லை முகைக்கும் என்றது, அது கார்ப்பருவம் ஆதலை நினைந்து கூறியது. தான் கூறிய கார்ப்பருவ வரவினைக் கண்டும் வந்திலனாதானை நினைந்து இப்பதைக் கண்கள் துயில் துறந்தன என்றவாறு. என் கண் என்றது, என்னுடைய பேதைமையுடைய கண்கள் என்றவாறு. பேதைமையாவது தங்கண் அன்பிலாதாரைக் கருதி வருந்துதல். 'முகையும்,' என்றும் பாடம். அதற்கும் அரும்புதலைச் செய்யும் என்றே பொருள் கூறுக.

பாட்டு - கஅள : தலைவி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழி ஆற்றுளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது அஃதாவது, வரைதற்கு வேண்டிய பொருளீட்டச் சென்ற தலைவன், கால நீட்டித்தமையால் ஆற்றுமை மிக்க தலைவியின் நிலைமை வேறு வழியிலீர்த்து ஆற்றுவிக்க வெண்ணிய தோழி, தலைவனைக் குறைகூறிப் பழித்தாளாக அது பொறாத தலைவி அவள் கூற்றை மறுத்துத் தலைவனைப் புகழ்ந்தது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'மலைப்பக்கத்தே வருடைமான் கன்றுகள் தந் தாயின் பாலை நிரம்ப வுண்டு மலை

நீழலிலே துள்ளாநின்ற நாட்டையுடைய தலைவர், தாம் மேற் கொண்ட வினையிடத்தே வன்மையுடைய நெஞ்சினர்; அவர் வன்மை நினைந்து மகிழாமல் என் னெஞ்சம் தன் பேதைமை யாலே நெகிழாநின்றது,' என்று கூறுகின்றாள்.

கஅள. செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்
கல்லினும் வலியன் தோழி
வலிய னென்னது மெலியுமென் னெஞ்சே.

—கபிலர்.

(இ-ள்.) தோழி—, செவ்வரைச் சேக்கை வருடைமான் மறி - செவ்விய மலைச் சாரலிடத்தே உறைதலையுடைய வருடை மானினது குட்டி, சுரை பொழி தீம்பால் ஆர மாந்தி - தன் தாயின் மடியினின்றும் சுரந்து ஒழுகும் இனிய பாலை வயிறு நிரம்பப் பருகி, பெருவரை நீழல் உகளும் நாடன்-பெரிய மலைப் பக்கத்து நீழலிலே துள்ளியாடா நின்ற நாட்டையுடைய தலைவன், கல்லினும் வலியன் - ஆள்வினையின்கண் மலையைக் காட்டினும் திண்மையுடையன், வலிய என்னது - அவன் வலியன் என் பது கருதி மகிழாமல், என் நெஞ்சு மெலியும - எனது பேதை நெஞ்சம் அவன் திறத்து மெலியா நின்றது.

விளக்கம்:—செவ்வரை - செங்குத்தான மலை எனினுமாம். சேக்கை - தங்குமிடம். வரையின்கண் தங்குமிடத்தையுடைய வருடை மான் என்க. சுரை - சுரத்தல் ஆர - நிரம்பும்படி. மாந்துதல் - பருகுதல். செவ்வரையாகலின் நீழலுடைத்தாயிற்றென்க. உகளுதல் - துள்ளி விளையாடுதல்.

வருடைமான் மறி தீம்பாலுண்ணுங்கால் ஆரவுண்டு, பின்னர் மலை நீழலிலே உகளும் என்றது, தலைவன் இல்வாழ்க்கைக்கு இன்றியமை யாத பொருளீட்டுங்கால் நிறைய ஈட்டிக்கொண்டு, பின்னர் இல்லின் கண் இருந்து அறஞ்செய்யும் இயல்புடையான் என்றவாறு. "இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர், துன்பந் துடைத்தூன்றுந் தூண்" என ஆசிரியர் கூறுதற்கிணங்க, நந்தலைவர் இன்பம் விழை யாத் திண்மையராய்க குறித்த பருவம் வரினும் வினைக்குறைவுண்மை யால் மேலும் முயன்று பொருளீட்டுவாராயினா. வினையே ஆடவர்க் குயிர் அவ்வினைக்கண் வினை கெடலோம்பாவழி இல்லறம் இனிது நடவாமையின் அவர் சிறிது காலந் தாழ்த்தது தவறாகாது. இன்பம் விழையாது வினைவிழையும் திண்மையில் அவர் கல்லினும் வலியரா தற்கு அவர் வாழ்க்கைத் துணையாகிய யான் மகிழ்ந்து ஆற்றியிருத்தலே அறிவும் கடமையும் ஆகும். அங்ஙனமின்றி என்னெஞ்சம் மெலிவ தற்கு அதன் பேதைமையே ஏதுவாம் எனத் தலைவன் சான்றாண்மை யைப் புகழ்ந்தாள் என்க.

வலியன் என்னுது என்றது, வலியன் என்று மகிழாமல் என்ற வாறு. வலியனுதற்கு யான் மகிழவேண்டும் என்றபடி.

இனி, தலைவன் அன்பிலன் தான் குறித்த பருவத்தே வந்திலன் எனத் தோழி இயற்பழித்தாளாகக் கொள்க. "தலைவன் தான் நினைந்து சென்ற பொருளைப் பெற்றிலன்போலும். உரிய காலத்தே அதனைப் பெற்று வருதற்குரிய வன்மையிலன் போலும்" என்று தோழி இயற் பழித்தாள் என்பாருமுளர். அங்ஙனம் கூறுதல் அவன் தலைமைக்கு இழுக்காம் என்க. அன்பிலன் என்றே தோழி குறைகூறத் தலைவி அன்பிலாமையால் அவர் வாராராயினரல்லர் ஆளவினைக்கண் திண் ணிய ராதலிற் ருழ்த்தனர் என்ருள் என்பதே நன்கு சிறத்தலறிக.

பாட்டு - கஅஅ : தலைவி கூற்று

துறை :—பருவங் கண்டழிந்த கிழத்தி தோழிக்கு உரைத் தது. அஃதாவது, தலைவன் மீண்டு வருவதாகக் குறித்த கார்ப் பருவம் வந்தும் அவன் வந்திலாமையால் துன்புற்ற தலைவி, கார்காலத்து மாலை கண்டு அழிந்து தோழிக்குரைத்தது.

இதன்கண், 'தோழீ! முல்லைகள் மலர்ந்தன; முல்லை நிலம் கார்ப்பருவத்தாலே சிறந்து விளங்கிற்று; நந்தலைவரோ இன்னும் வந்திலர்; உதோ என் நலத்தை அழித்தற்கு மாலைக் காலம் வந்துவிட்டதே! யான் என்செய்கேன்?' என்று தலைவி கூறுகின்ருள்.

கஅஅ. முகைமுற் றினவே முல்லை முல்லையோடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றென் மாணலங் குறித்தே.

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.

(இ - ள்) தோழி—, முல்லை முகை முற்றின - முல்லைக் கொடிகளில் அரும்புகள் முதிர்ந்தன, தண்கார் வியன்புனம் முல்லையொடு தகை முற்றின - தண்ணிய கார்ப்பருவ வருகை யைப் பெற்ற அகன்ற முல்லைநிலங்கள் அம் முல்லைகளோடே ஏனை அழகுகளும் முதிரப்பெற்றன, வால் இழை நெகிழ்த்தோர் வாரார் - இன்னும் எனது தூய அணிகலன்களை நெகிழ்த்த தலைவர் வந்தாரிலர், என் மாண் நலம் குறித்து மாலை வந்தன்று- எனது மாட்சிமையுடைய பெண்மை நலத்தை அழிக்கக் குறிக் கொண்டு உதோ மாலைக்காலம் வந்துவிட்டது.

விளக்கம் :—முகை - அரும்பு. அரும்பு முற்றுதலாவது, அன்று மாலையிலே அலரும் செவ்வியை எய்துதல் என்க. முல்லையொடு - அம்முகை முற்றிய முல்லையோடே என்க. தகை - அழகு. முல்லை யோடே ஏனைய கார்காலத்திற்குரிய அழகெலாம் என்க. அவையாவன:-

"செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப" (முல்லைப் - கூக - எ)

இன்னோரன்ன பிறவும் நிகழ்தலால் உண்டாகும் அழகுகள் என்க. வாலிழை நெகிழ்த்தோர் என்றது, யான் இங்ஙனம் மெலியும்படி பிரிந்து சென்ற வன்கண்ணர் என்றவாறு வாரார் என்றது, அவர் குறித்துசசென்ற பருவம் இங்ஙனம் நிகழாநிற்பவும் வந்திலாதார் என்றவாறு. வால்இழை - தூய அணிகலன். மாலைக்காலம் பிரிந்துறைவார்க்குக் கொன்றன்ன இன்னு செய்யும் கொடுமைத்தாகலின், 'மாலை வந்தன்று' என்றாள். மாலையில எஞ்சிய நலனும் அழிபுமே என்றஞ்சுவாள், அதன் வரவினைத் தன் நலத்தை அழித்தல் கருதி வருவதாக உரைத்தாள். 'யான் இம்மாலையில் எங்ஙனம் ஆற்றுகேன்!' என்றிரங்கியவாறும்.

பாட்டு - கஅகூ : தலைவன் கூற்று

துறை :—வினைதலைவைக்கப்பட்ட விடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்தது. அஃதாவது, அரசனுல் வினையின்கண் ஏவப்பட்ட தலைவன், தன் தேர்ப்பாகனை நோக்கிக் கூறியது.

இதன்கண், தலைவன் பாகனை நோக்கி, 'பாகனே நின் செயற்கண் அமைதி! யாம் அரசன் ஏவிய வினைக்கண் இன்றே விரைந்து சென்று அதனைச் செய்து முற்றி, நாளை அந்தி மாலைப்போதின் முன்னரே சின்னிரை வால்வளைக் குறுமகளை எய்தி உவத்தல் வேண்டுமை,' என்று கூறுகின்றன்

கஉகூ. இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
காலியற் செலவின் மாலை எய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணுக மணந்துவக் கும்மே.

—மதுரை ஈழத்துப் பூதன்தேவனர்.

(இ - ள்.) வலவ—, இன்றே சென்று நாளை வருவது - யாம் வினையின்மேல் இன்றே சென்று நாளையே வரல்வேண்டும், குன்றிழி அருவியின் வெண் தேர் முடுக - மலையினின்று வீழும் அருவிபோல வெள்ளிய தேர் விரையா நிற்ப, இளம் பிறை அன்ன விளங்கு சுடர் நேமி - இளைதாகிய பிறையை ஒத்து விளங்குகின்ற உருள்கள், விசும்பு வீழ் கொள்ளியின்

பைம்பயிர் தழைப்ப - வானினின்றும் வீழ்கின்ற கொள்ளி அழிக்குமாறு போலப் பசிய பயிரினை அழியாகிற்ப, கால் இயல் செலவின் - காற்று இயங்கினைப் போல்வதொரு விரை வுடைய இயக்கத்தோடே வந்து, மாலை எய்தி - மாலைப்போதி லேயே நமமனையை அடைந்து, சில் நிரை வால் வளைக் குறு மகள் - சிலவாகிய வரிசையையுடைய வெள்ளிய வளையலை அணிந்த தலைவியினது, பன்மாண் ஆகம் மணந்து உவக்கும் - பலவாகிய மாட்சிமையுடைய மார்பத்தை அணைந்து உவப்போம்.

விளக்கம் :—இது தலைவி கேட்பப் பாகற்குக் கூறியது என்க. 'அரசன எலிய வினையை விரைவில் முடித்து நாளையே வருகுவன்; அது காறும் வருந்தாதிரு' எனக் குறிப்பானே உணர்த்தியவாறு. இன்றே சென்று என்பதன்கண் ஏகாரம் பிரிநிலை. நாளையே எனற்பாலதாகிய பிரிநிலை ஏகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. வருவது என்பது, வியகோள். ''இங்கு நாம் இயம்பும் தத்துவங்களின் வைத்து அறி வது'' (சிவஞான சித்தியார், சுப - உகூ) என்புழி அறிவது என்பது வியங்கோள் வியதுணர்க யானை மருப்பாலை சேராகலின், வெண் டோ என்றான். விரைவின் மிகுதிக்கு அருவிநீர் இழிதலை உவமை எடுத்துக்காட்டினான். முகிழ்தல் - விரைதல். இளமபிறை - உரு வின் விளிம்பு. மண்ணின் மறைந்த பகுதி போக எஞ்சிய பகுதிக் குவமை என்க. வெண்பொன்னாலாய உருளைபோலும் விசும்பினின் றும் வீழும் கொள்ளியால் பயிர்கள் அழிதல், அக்கொள்ளி சில சமயத் தில் நிலத்தில் வீழ்ந்த பின்னரும் எரிவதனால் நிகழ்வது போலும். விண் வீழ் கொள்ளி நிலத்தில் வீழ்தல் இன்றும அறியப்பட்டதே யாகும். அல்லது விண்வீழ் கொள்ளியின் ஒளியாலே பயிர்கள் அழி யும் என்னும் கருத்தாயினும் ஆகலாம். இக் கருத்தை ''நுண்கொடி மின்னிற் பைம்பயிர் துயிய'' (உருஎ) எனவரும் அகநானூற்றுப் பாடல் வலியுறுத்தல் உணர்க. சின்னிரை - சிலவாகிய வரிசை. மணமாகாத மகளிர் பன்னிரை வளையல் உடையராதலும் மணமான மகளிர் சின் னிரை வளையலே அணிதலும் மரபு 'சின்னிரை வால வளைக் குறு மகள்' என்றது, யாம் அங்ஙனம் பிரைந்து வாராக்கால் அச்சின்னிரை வளையலும் கழன்று வீழ்ந்தொழியும் என்னும் நினைவினைக் கூறப்பட்ட தென்க. ஆகம் - மார்பு. உவக்கும் - உவப்போம் : தன்மைப்பன்மை.

இன்று சென்று நாளை வருவது எற்றுக்கென்னின்? மணந்து உவக்குமாகற்கு என்னுமாம்.

பாட்டு - ககூ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றுளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே ஆற் றுமை மிக்க தலைவி, 'என் தன்பத்தைத் தலைவர் எண்ணியும் அறியாரோ?' எனத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி கள்ளிரவில் தோழியை விளித்து, 'நம்மை நீத்துச்சென்ற நந்தலைவர், பிரிந்துறைவார்க்குத்

தொழுவத்துள்ள ஆன்மணிக் குரல் எத்தகைய துன்பம் செய்ய வல்லதென்பதை அறியார் கொல்லோ?' என்று கூறுகின்றாள்.

கசுஅ. நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவஃ கெகிழச் செய்பொருட் ககன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்
நல்லே றியங்குதோ றியம்பும்
பல்லான் தொழுவத் தொருமணிக் குரலே.

—பூதம் புல்வனார்.[1]

(இ - ள்.) தோழி—, நெறி இருங் கதுப்பொடு பெருந் தோள் நீவி - எனது நெறிப்பினையுடைய கரிய கூந்தலோடே பெரிய தோளினையும் தமது கையாலே தடவித் தேற்றினராய், செறிவஃ கெகிழச் செய்பொருட்கு அகன்றோர் - செறிய இடப் பட்ட வஃகள நெகிழும்படி பிரிந்து சுட்டும் பொருள் நிமித்தம் போன நந்தலைவர், பொறி வரி வெஞ்சின அரவின் - புள்ளிகளையும் கோடுகளையும் வெவ்விய சினத்தையும் உடைய பாம்பு களின், பைந்தலை துமிய - பசிய தலைகள் துணிபடும்படி, உர உரும் உரறும் - வலிமிக்க இடியேறு முழங்காநின்ற, அரை யிருள் நடுநாள் - பாதியாகிய இருள்செறிந்த நள்ளிரவின்கண், நல் ஏறு இயங்குதொறு இயம்பும் - நல்ல ஆனேறு செல்லுந் தோறும ஒலியாநின்ற, பல் ஆன் தொழுவத்து ஒரு மணிக் குரல் - பலவாகிய ஆன்களையுடைய தொழுவத்தின்கண் ஒற்றை மணியினது ஓசையை, அறிவர் கொல் - கேட்டறிவரோ?

விளக்கம்:—ஆன்மணிக் குரல் பிரிந்துறைவோர்க்குத் துணையா வாரை நினைஊட்டி வருத்துமியல்புடைத்து,

"பிறரும் கேட்குநர் உளர்கொல்.....
ஊதை தூற்றும் கூதிர் யாமத்
தாஅளம் புலம்புதொ றுளம்பும்
நாகவில் கொடுமணி நல்கூர் குரலே" (அசு.)

என இந்நூலின்கண் முன்னரும் ஓதப்பட்டமை காண்க.

நெறி - நெறிப்பு. அஃதாவது அறல்பட்டிருத்தல். இருமை - கருமை. கதுப்பு - கூந்தல. தலைவியைப் பிரியக்கருதிய தலைவன் அவளைக் கதுப்புளரி நுதல்நீவித் தலையளி செய்தல் இயல்பு. அவனுட னுறையுங்கால் செறியக்கிடந்த வஃ நெகிழ என்பாள், 'செறிவஃ' என்றாள். செய்பொருள்: வினைத்தொகை. பொருட்கு - பொருளீட்

1. (பாடம்) பூதம்புல்லன்.

டற்கு. இடிமுழக்கத்தால் அரவம் இறக்குமாகலின், 'அரவின் பைந் தலை துமிய உரும் உரறும்' என்றாள். அரையாகிய நடு இரவு என்க. பாதியாகிய இருள் நடுவே உள்ள இரவு எனினுமாம்.

தலைவனைப் போன்று துணை பிரியாது ஆண்டே இயங்கும் எறு என்பாள், 'நல்லேறு' என்றாள். இயங்கும் என்றது, இடக்கரடக்கல். ஆன் தொழுவத்தே ஒற்றை மணியே கட்டியிருத்தல் வழக்கம்போலும். ஆன்மணிக் குரல் எற்றுடன் இணைந்தின்புறும் பசுவினை நினைப்பூட்டு முகத்தானே தன் துணைவனினமையை எண்ணி வருந்தச் செய்தலின், இன்னுதாயிற்று. இத்தகைய ஆன்மணிக்குரலைத் தலைவர் நடுநாள் அறிவராயின் நம்மை நினைந்து மீள்வர் அவர் அறிந்திலர் போலும் என்றிரங்கியபடியாம். தலைவர் என்னை நினையாது மறந்தனர் என்பது கருத்து.

பாட்டு - ககூக : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிவினாலே பெரி தும் வருந்திய தலைவியின் நிலை கருதிக் கவலைகொண்ட தோழிக் குத் தலைவி, 'யான் ஆற்றுவன்' என்பதுபடக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "நந்தலைவர் ஈண் டுத் துணையோடு உறைபுல பறவைகள் தமமில் மகிழ்ந்து இன் குரலால் அகவாகிற்பதைக் கேட்டிருந்தேயும, 'நாம் பிரியின் இவள் நிலை என்னும' என்று கருதாது பிரிந்தனர் அல்லரோ! 'அவர் வருகமன்; வந்தால் எம்மோதியும் புனையேல்! எம்மைத் தொடுதலும் ஒழிக!' என்று புலந்து மறுப்பேம்" என்று கூறுகின்றாள்.

ககூக. உதுக்கா ணதுவே யிதுவென் மொழிகோ
நோன்சினை யிருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குரல் அகவக் கேட்டு நீங்கிய
ஏதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனையல்
எம்முந் தொடாஅ லென்குவே மன்னே.

—.....[1]

(இ - ள்.) தோழி—, இது என் மொழிகோ - தலைவரின் இச்செயலை எத்தன்மைத்தென்று சொல்லுவேன், நோன் சினை யிருந்த இருந்தோட்டுப் புள் இனம் - வலிய கிளையின்கண் சேக்கை கொண்டிருந்த பெரிய கூட்டத்தையுடைய பறவை

1. ஆசிரியர் பெயர் காணப்பட்டிலது.

யினங்கள், தாம் புணர்ந்தமையின் பிரிந்தோர் உள்ளா - தாம் தந்துணைகளோடு கூடியிருத்தலாலே துணை பிரிந்தார் நிலை என்னும் என்று நினையாதனவாய், தீங்குரல் அகவக் கேட்டும் - இனிய குரலாலே அழைத்தலைத் தாமே கேட்ட பின்னரும், நீங்கிய ஏதிலாளர் இவண் வரின் - எம்நிலை கருதாது பிரிந்து சென்ற அயன்மையுடையோர் இவ்விடத்திற்கு மீண்டு வந்தழி, போதின் பொம்மல் ஓதியும் புனையல் - ஐய பூவாலே எம்முடைய பொங்குதலுடைய கூந்தலையும் கைசெய்யா தொழி, எம்மும் தொடாஅல் - எம்மையும் தீண்டாதேகொள், என்குவம் - என்று யாம் கூறு நிற்பேம், உதுக் காண்அது - அப்புலவி நிலையே, இது என்பதை நீ காண்பாயாக.

விளக்கம்:—அவன் பிரிந்தமை எண்ணி வருந்தி ஆற்றேன் ஆகின்றேன் அல்லேன்; அவன் செய்தமை எண்ணிப் புலந்தமைகின்றேன்; ஆகலின், 'ஆற்றேன் என்று நீ கவலற்க' என்றவாறு.

உது - என்றது, இந்த நிலை என்றவாறு. தான் ஆற்றுநிலை எய்தி விட்டதாகத் தோழி கருதுகின்றனள் ஆகலின், உது நீ கருதும் ஆற்று நிலையன்று; ஊடல்நிலை என்பாள், அது உது என்றாள். அப் புலவி நிலையே உது என்றவாறு. உது என்பதனை உவவிடத்தே என்று இடம் சுட்டியதாகக் கொள்வாருமுளர்.

அது உது என்றாளாக, அது என்றது எதனை என அறிய அவாவிய தோழியை நோக்கி, இது என் மொழிகோ, அதனை என்னென்று கூறுகேன் எனத் தொடங்கி, அஃதாவது நீங்கிய ஏதிலாண்மை என்றுணர்த்துகின்றாள். அத்தகைய ஏதிலாண்மையுடையோர் வரின், யாம், புனையல் தொடாஅல் என்குவம் என்கின்றாள். அவ்வேதிலாண்மையை நினைந்தவுடன் செற்றம் எழுந்தமையால் ஏதிலாளர் எனப் பன்மையாற் கூறினவள் புனையல் தொடாஅல் என ஒருமையாற் கூறினள் என்க. 'என் மொழிகோ' என்றது, அவரது புன்செயலை யாம் எங்ஙனம் கூறுவோம் என்றவாறு. கூறற்குமொல்லாத புன்செயல் அஃது என்பது கருத்து. நோன் சிலை-வலிய கொடிபு. தான் நோலாத் தலைவனைப் பற்றியிருந்தமை போலாது பறவையினங்கள் தம்மைத் தாங்கும் சினையறிந்திருந்தன என்று பறவையைப் பாராட்டி முகத்தாற் றன்னை இழிதகக் கூறிய நுணுக்கம் உணர்க.

தாம் தத்தம் துணையோடுறைதலின் பிரிந்தோர்க்குத் தங்குரல் இன்னு செய்யும் என்பதை அறிவு குறைந்த அஃறிணையவாகலான் அவைகள் உள்ளாமல் அகவுகின்றன. ஆராயும் அறிவுமிக்க நந்தலைவர் யாம் பிரிந்த பின்னரும் இப்பேதைப் பறவைகள் இங்ஙனமே தீங்குரல் அகவுமாயின் அப்போது இவள் நிலை என்னும் என்றுள்ள வேண்டிய வர் உள்ளிற்றிலர் என்பான், உள்ளற் றொழிலைப் பறவைகட்கேற்றி, உள்ளா அகவும்' என்றாள். கேட்டும் என்றதன்கண், உம்மை சிறப்பு. ஏதிலாளர் - அயன்மையுடையோர். பொம்மல் - பொங்குதல். ஓதி - கூந்தல். புனையல், தொடாஅல் - முன்னிலை ஒருமைகள். எம்மும் - தம்மையும். என்குவம் - என்போம்.

தலைவன் பிரியுங்கால் கதுப்புளரி நுதல் நீவித் தலையளி செய்து பிரிவன் என்பதை (ககஅ.) முற்செய்யுளாலறிந்தாம். தலைவன் மீண்டு வந்தபுடன் ஆராமையாலே ஓதி புனைந்து மெய்தொட்டுப் பயிலுவன் என்பதை இச செய்யுளான் உணரலாம். மேலும்,

"பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
....
மென்மூரல் பெறனசைஇச சென்றவென் னெஞ்சே" (அகம்-க)

எனவரும் அகநானூற்றுச செய்யுளானும் உணர்க

பாட்டு – ககூஉ. : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிரழிந்து கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்த காலத்தே ஆற்றுமை எய்திய தலைவியைத தோழி, 'நீ ஆறறுதல் வேண்டும்' என வற்புறுத்தியபொழுது அதைதோழி கூற்றிற் குத் தலைவி உளளம் அழிந்தவளாய் 'யான் எங்ஙனம் ஆற்று வேன் ?' என்று கூறியது.

இதன்கண், 'தோழீ ! நீ, என்னை வருந்தாதிரு' என்று வற்புறுத்துகின்றனை ; குயில்கள் மாம்பூவின்கண் தாது குடைந்து திர்க்கும் இவ் விளவேனிலின்கண்ணும வறுங கூந்தல் தைவரு வேன் எங்ஙனம் ஆற்றுகேன் !' என்று தலைவி கூறுகின்றாள்.

ககூஉ. ஈங்கே வருவர் இனையல் அவர்என
அழாஅற்கோ இனியே நோய்நோந் துறைவி
மின்னின் றூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே.

—கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(இ - ள்.) நோய் நொந்து உறைவி - என் நோயின் பொருட்டு உளம் நொந்து என்னைவிட தங்குகின்றவளாகிய தோழியே !, இனி அவர் ஈங்கே வருவர் இனையல் என - நீ இப்போது தலைவர் இவ்விடத்தே வந்துவிடுவர் வருந்தாதே கொள் என்று அடிக்கடி வற்புறுத்து மாத்திரையானே, மின் இன் தூவி இருங்குயில் - மின்னுகின்ற இனிய தூவியையுடைய கரிய குயில், பொன்னின் உரை திகழ் கட்டளை கடுப்ப - பொன் னினை உரைத்த பொடி விளங்குகின்ற உரைகல்லை ஒக்கும்படி, மாச் சினை நறுந் தாது கொழுதும் - மாவினது கிளையின்

கண்ணே நறிய பூந்தாதைக் கோதாகின்ற, பொழுதும் - இவ் விளவேனிற் பருவத்தேயும், வறுங் குரல் கூந்தல் தைவருவேன் - வறிய கொத்தாகிய கூந்தலைத் தடவாநிற்கின்ற யான், அழாஅற்கு - அழாமலமைவேனே?

விளக்கம்:—'இளவேனிற் பொழுதினும் தலைவனைக் காணப்பெறாது வறுங் கூந்தல் தடவும் யான், நீ இனையல் என்றமைக்காக அழாதிருத்தல் இயலுமோ?' என்றவாறு.

"இனி, ஈங்கே வருவர் இனையல் என்பது, தோழி ஆற்றற்பொருட்டுக் கூறியதைத் தலைவி கொண்டு கூறியது. நோய் கொந்துறைவி என்றது, தலைவி தோழியின் இயல் கூறி விளித்தது. என் நோயின் பொருட்டு நீ உளம் நொந்து என்னோடே உறைகின்றாய் எனப் பாராட்டியவாறு உறைவி - விளி. நோய் கொந்துறைவி அவர் ஈங்கே வருவர் இனையல் எனக் கூட்டித் தோழி தலைவியை விளித்ததாகக் கொள்ளினுமாம்.

குயிலின் தூவி உரைகல் போன்று மின்னும் என்றது, பூந்தாது படியும் பொழுது குயில் பொன்னிறம் பெறினும் அந் நிறம் அதன் நிற மன்று; அது பறக்கும்போது உதிர்ந்துவிட எப்பொழுதும் அது கருங் குயிலாதலே இயல்பு. அதுபோல நினது வன்புறைச சொற்கள் கேட்கும்பொழுது யான் சிறிது ஆற்றவேன் போலக் காணப்படுகின்றேன். பின்னர் உன் உரை மறைந்துவிட என் னெஞ்சின்கண் இயல்பாயுள்ள தன்பமே வெளிப்படுகின்றது யான் அழாது என் செய்வேன் என்னும் குறிப்புடையது.

இனையல் - வருந்தாதே. அவர் - தலைவர். அழாஅற்கு - அழேனே. தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று. குயில் நறுந்தாது கொழுதும் பொழுது என்றது, இளவேனிற் பொழுது என்றபடி. உம்மை: சிறப்பு.

இளவேனிற் றொடக்கத்தே வருவேன் என்று சென்றவர், அப் பருவம் வந்து மாச்சினை அரும்பெடித்து மலர்ந்து குயில் குடையும் இப்பொழுதும் வந்திலர் என்பாள், 'குயில் கொழுதும் பொழுதும்,' என்றாள். தலைவன் தோளைத் தைவந்தின்புற வேண்டிய இப் பொழுதிலே வறிய கூந்தலையே தைவருகின்றேன் என்பாள், 'வறுங்குரற் கூந்தல் தைவருவேன்' என்றாள். வறுங் கூந்தல், குரற்கூந்தல் எனத் தனித்தனிக் கூட்டுக. தலைவனின்மையால் நெய்யிட்டு மலரிட்டுப் பேணாது வறிதாகிய கூந்தல் என்பாள், 'வறுங் கூந்தல்,' என்றாள். குரல் - கொத்து. நெய்யிடாமையால் கொத்தாகத் திரண்ட கூந்தல் என்க.

பாட்டு - ககூ : தலைவி கூற்று

துறை:—தோழி, 'கடிநகர் புக்கு நலந் தொலையாமே நன் காற்றினாய்,' என்றாட்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவியை வரைந்துகொண்டு தலைவன் இல்லறம் இனிது நடத்தும் மனைக்குச் சென்ற தோழி ஆண்டுத் தலைவனைப் பிரிந்தும்

ஆற்றியிராநின்ற தலைவியை நோக்கி, 'நீ நினது நலம் கெடாத வாறு இங்ஙனம் ஆற்றியிருந்தது நன்றே' என்று கூறத் தலைவி தான் ஆற்றியிருந்தமைக்குக் காரணம் உணர்த்தியது.

இதன்கண், 'தோழி! பண்டு தலைவன் செய்த தண்ணளி யானே இன்றும் இனிதே இன்புற்று இருக்கின்றேன்,' என்று தலைவி கூறுகிறாள்.

ககஙூ. மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெடுந் தோளே
இன்று முல்லை முகைநா றும்மே.

—அரிசில் கிழார்.[1]

(இ - ள்.) தோழி, மட்டம் பெய்த மணிக் கலத்து அன்ன - தேறலைப் பெய்துவைத்த நீலக்குப்பிகளைப் போன்ற, இட்டு வாய்ச் சுனைய பகுவாய்த் தேரை - இட்டிதாகிய வாயையுடைய சுனையின்கண்ணவாகிய பிளந்த வாயையுடைய தேரைகள், தட்டைப் பறையிற் கறங்கும நாடன் - தட்டையாகிய பறை யைப்போல ஒலிக்கின்ற நாட்டையுடைய தலைவன், தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின் - மூத்திய திங்களின்கண் வளர் பிறைக் காலத்தே, நெடுந் தோள் மணந்தனன் - எனது நெடிய தோளைத் தழுவினன், இன்றும் முல்லை முகைநாறும் - அதனால் இற்றைநாளினும் அவனது மேனியின் இயற்கைமணமாகிய முல்லைப்பூவின் மணம் என் தோள்கள் கமழாநிற்கும்.

விளக்கம்:—மட்டம் - தேறல். மட்டு என்பது, அம்முச் சாரியை பெற்றது. மட்டம் பெய்த மணிக்கலம் என்றது, நீலக் குப்பியை. பண்டைக்காலத்தில் கள்ளைக் குப்பியிற் பெய்துவைத்தல் வழக்கம். இதனை,

"சோலைக் கமுகின் சுல்வயிற் றன்ன
நீலப் பைங்குடம்." (பெரும்பாண் - நஅக-உ)

என்றும்,

"கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு." (மதுரைக் - உஉஅ)

என்றும் பிற சான்றோர் கூறுமாற்றாலும் உணர்க.

மணிக்கலம் - நீலமணிபோன்ற நிறமுடைய கலம் என்க. இட்டு வாய் - ஒடுங்கிய வாய். தெளிந்த நீர் நிரம்பிய சுனைக்கு, தேறல் நிறைந்த

1. (பாடம்) அரிசிற் கிழார்; அழிசிற் கிழார்.

மணிக்கலம் உவமை. பகுவாய் - பிளந்த வாய். தவழியின் வாய் பிளவுபட்ட வாயாதலறிக. தேரை - தவளை. தட்டைப் பறை என்றது, கிளிகடி கருவிகளுள் ஒன்றாகிய தட்டை என்னும் கருவியை. தட்டி ஒலிப்பித்தலின் தட்டைப்பறை எனப்பட்டது.

நீர் நிரம்பிய சுனையின்கண் தவளை மகிழ்ந் தொலிக்குமாறு போன்று செல்வம் நிறைந்த தலைவனில்லத்தின்கண் இப்போது யான் மகிழ்ந்து உறையாநின்றேன் என்பதாம். கறங்குதல் - ஒலித்தல். ஈண்டுக காரணத்தைக் காரியமாக உபசரித்தாள். 'தொல்லைத் திங்கள்,' என்றது, சென்ற மாதம என்றவாறு. வளர்பிறைப் பக்கம் என்பாள், 'நெடுவெண் ணிலவின்,' என்றாள். சிறந்த ஆடவன்மேனி, முல்லைப்பூ மணமுடைத்து ஆகலின், அவன் அன்று தழுவியதனால் என் மேனியிற் றோய்ந்த அவன் திருமேனி நறுமணம் இன்றும் கமழ் கின்றது என்றவாறு. தலைவனாற் றழுவப்பட்டுத் தழைககும் தோள் என்பாள், 'நெடுந்தோள்,' என்றாள்.

யான் இற்றைநாள் பண்டு தலைவன் செய்த தண்ணளியை எண்ணி இனிதுறைகின்றேன் என்பது கருத்து.

பாட்டு - ககூச : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் 'கார்ப் பருவத்தே மீண்டு வருவேன்,' எனக் கூறிச் சென்றவன், அப் பருவம் வந்தபின்னரும வாராமையானே தலைவி ஆற்றாளாயி னள். அவள் நிலை கண்டு தோழி கவன்றாளாக, அவட்குத தலைவி தன் ஆற்றுமைக்குக் காரணங் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'வானத்தே முகில் கள் குழுமி ஒலியாநிறகும ; கானத்தே மயில்கள் களித்து அகவா நிற்கும ; இவ் விரண்டற்கும் என் பேதை நெஞ்சம பெரிதும் கலங்கா நின்றது ; இஃதென் கொலோ!' என்று கூறுகின்றாள்.

ககூச. என்னெனப் படுங்கொல் தோழி மின்னுபு
வானோ பிரங்கும் ஒன்றோ அதனெதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக குறுமே.

—கோவத்தனர்.[1]

(இ - ள்.) தோழி—, வான் மின்னுபு ஏர்பு இரங்கும் - முகில்கள் மின்னி எழுந்து முழங்கா நிற்கும், ஒன்றோ - அஃ தொன்றுமட்டுமோ, அதன் எதிர் கான மஞ்ஞை கடிய ஏங்கும் -

1. (பாடம்) கோவதத்தன்.

அம் முழக்கத்திற்கு எதிராகக் காட்டகத்து மயில்கள் விரைவன வாகி அகவாநிற்கும், ஏதில கலந்த இரண்டற்கும் - தம்முள் அயன்மை யுடையனவாகிக் கலந்த இவ் விரண்டு ஒலிகளாலும், என் பேதை நெஞ்சம் பெருமலக்கு உறும் - என்னுடைய பேதைமையுடைய நெஞ்சம் பெரிய கலக்கத்தை எய்தாநிற்கும், என் எனப் படும் - இந் நெஞ்சின்றன்மை எத்தகையதென்று சொல்லப்படும்?

விளக்கம்:—மின்னுபு - மின்னி. வான் - முகில்; ஆகுபெயர். ஏர்பு - எழுந்து. இரங்கும் - முழங்காநிற்கும். என்துயர்க்குக் காரணம் இம்முகில் முழக்கம் ஒன்று மட்டுமோ என்றுள் என்க. அதன் எதிர் - அம்முழக்கத்திற் கெதிராக. என்றது, முகில் முழங்கிய வுடனே மயில் அகவும் என்றவாறு. ஒன்று, அறிவில் பொருளாகிய முகிலின் முழக்கம்; மற்றொன்று, உயிர்ப்பொருளாகிய மயில் ஆரவாரம். ஆகலின் இவ்விரண்டும் தம்முள் தொடர்பிலாத அயன்மையுடையன என்பாள், 'ஏதில' என்றுள். ஏதில - அயன்மையுடையன; தொடர் பில்லாதன. மயிலின் குரல் கேட்டற்கு இன்னுவாகலின், 'கடிய' என்றுள் எனினுமாம். எங்குதல் - ஆரவாரித்தல். இவ விரண்டற்கும் எனச சுட்டுவருவித்து உம்மை விரித்தோதுக. இருவகை முழக்கத் திற்கும் என்க. இனி, ஏதில என்றதற்கு, எனக்கு அயன்மையுடையன எனினுமாம். தன்னோடே தொடர் பொன்றுமிலாத ஒலிகட்கு இந் நெஞ்சம் கலங்குதல் பேதைமை என்பாள், 'என் பேதை நெஞ்சம்' என்றுள். பெருமலக்கு - பெருந்துன்பம். இவை பருவ வரவின் அறிகுறியாய்த் தலைவன் கூறிப்போனதை நினைஊட்டுதலானே என் நெஞ்சம் பெரிதும் துன்புறுகின்றது என்பது கருத்து. இங்ஙனம் கலங்க வேண்டாதவற்றிற் கெல்லாம் கலங்கும் எண்மையுடைய என் நெஞ்சம் வியத்தற்குரியதொன்றுயிருந்தது என்பாள், 'என் னெனப் படும்' என்றுள்.

பாட்டு - ககூடு : தலைவி கூற்று

துறை:—பிரிவிடைப் பருவ வரவின்கண் கிழத்தி மெலிந்து கூறியது. அஃதாவது, 'மீண்டு வருவன்' எனத் தலைவன் குறித்த பருவம் வந்ததாகத் தலைவன் வாராமை கண்ட தலைவி, ஆற்றுமை மிக்கு உள்ளழிந்துரைத்தது.

. இதன்கண், " அந்தோ! ஞாயிறு மேற்றிசையில் மறையா நின்றது; துன்பஞ் செய்யும் இப் பொல்லாத மாலையோ புக்கது; 'இன்று வருவன்' எனக் கூறிச் சென்ற தலைவரோ வந்திலர்; அவர் இருக்குமிடமும் அறிகிலேன். 'யான் துன்புறுவேன்' என்று அவர் நினையாதொழிந்தனர்; யான் என் செய்வேன்!" எனத் தலைவி இரங்குகின்றுள்.

ககூடு. சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுள் மாலை

யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்
இன்னு திரங்கும் என்னுர் அன்னே
தைவரல் அசைவளி மெய்பாய்ந் துறுதரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுதல் அறியா தோரே.

—நோதரனர்.[1]

(இ - ள்.) தோழீ, தைவரல் அசைவளி மெய்பாய்ந்து உறு தர - தடவுதலையுடைய அசைந்தியங்கும் வாடைக்காற்று உடலே மோதித் துன்பம் செய்யா நிற்ப, செய்வுறு பாவை அன்ன என் மெய் - அரக்காலே செய்த பாவை வெப்பத்திற்கு உருகுமாறு போல உருகும் எனது உடல், பிறிது ஆகுதல் அறியாதோர் - வேறுபாடடைதலே அறியாத தலைவர், சுடர் சினந் தணிந்து குன்றம் சேர - ஞாயிறு வெப்பந் தணிந்து மலையினை எய்தா நிற்ப, படர் சுமந்து எழுந்த பையுள் மாலை - துன்பத்தை மேற்கொண்டு தோன்றிய துன்பத்தையுடைய இம் மாலைப் பொழுதிலே, வேண்டுவினை முடிநர் - தாம் வேண்டும் வினை முடித்தற்பொருட்டு, அன்னே இன்னுதிரங்கும் என்னுர் - அந்தோ இம்மாலைப்பொழுது பெரிதும துன்பந்தருவதாம் அவள் பெரிதும் வருந்துவள் என்று நினையாதார், யாண்டுளர் கொல்லோ - எவ்விடத்தே உள்ளனரோ? யான் அறிகின்றிலேன்.

விளக்கம் :—சுடர் - ஞாயிறு சினம் என்றது, அதன் வெப்பத்தை. குன்றம் - மேற்றிசையின்பாலுள்ள தொருமலை. இம்மலையின்கட் சென்று ஞாயிறு மறையும் என்பது பாடல் சான்ற புலனெறி வழக்கு; இதனை,

"விடர்கால் அருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கால் மாறிய செவ்வி" (கஎ0 - க)

எனவரும் சிறுபாணாற்றுப் படையானும்,

"ஒண்சுடர் உருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நண்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேர" (திசெடு - எ)

எனவரும் மதுரைக் காஞ்சியானும் அறிக.

படர் - துணைபிரிந்துறைவோர் நினைந்து படும் துன்பம். அஃதாவது தங்கேளிரை, இடையருது நினைத்து வருந்துதல். காலை, நண்பகல், மாலையாகிய பகற்கூறு மூன்றனுள்ளும், மாலைப்பொழுதே நினைவினை மிகுதியும் தூண்டவல்லதாகலின், அத்துன்பத்தை அது சுமந்து வந்ததாகக் கூறினள். பையுள் - துன்பம். தாம் கூறிச் சென்ற சொல்லை நிறைவேற்றக் கருதாது மேற்கொண்ட வினைமுடித்

(பாடம்) 1. தோதரன், தாமோதரன்.

தலையே கருதுவார் என்பாள், 'வேண்டுவினை முடிநர்' என்றாள். முடிநர் - முடிப்பாராய் என்க.

தைவரல் - தடவுதல். வளி என்றது, ஈண்டு வாடையை. மெய் - உடல். பாய்தல் - மோதுதல். உறு - ஊறு. தன் புலனுகிய ஊற்றாலே தன்புறுத்த என்றவாறு. வளி - ஊற்றுப்புலன் உடையது.

பிரிவுத்தியாலே உடல் உருகுதற்கு, அரக்குப்பாவை உவமை. செய்வுறு பாவை - அரக்கானியறிய பாவை என்க. பிறிதாகுதல் - அழிந்து உருமாறுதல். அழிந்து உருமாறுதலே அறிவாயின் மிகல்வர். மீண்டு வாராமையினால் அஃதறிகிலர் வன்கண்ணர் என்றவாறு.

அன்னை: இரக்கக் குறிப்பு. இன்னுது இம்மாலை இதன்கண் இரங்கா நிற்பள் என்று கருதுபவராயின், அவர் குறித்த இப்பருவத்தே ஈண்டுளராதல் வேண்டும். அங்ஙனம் கருதாமையானே இப்பொழுது யாண்டுளரோ என்றாள் என்க.

தலைவர் அன்பிலராய்த் தம் வாய்மையினிற் பிறழ்ந்தார் என்பது கருத்து.

பாட்டு – ககூ : தோழி கூற்று

துறை :—வாயில்வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது. அஃதாவது, தனது பரத்தமையாலே ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்த்து உடம்படச் செய்யும்படி தோழியை வேண்டிய தலைவனுக்கு அவள் கூறியது

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, "ஐய! நும்மன்பு பண்டிருந்தபடிதானன்றி வேறுபட்டது. பண்டு, தலைவி வேம்பின் பசிய காயைத் தரினும், அதனைத் 'தேம்பூங்கட்டி' எனப் பாராட்டிச் சுவைத்தீர்; இன்றோ, பாரி பறம்பின் சுனைநீர் தரினும், இவை, 'வெய்ய உவர்க்கும்' என்பீராயினீர்! நுமமன் பிருந்தவாறிது" எனக் கூறுகின்றாள்.

ககூ. வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே.

—மிளைக் கந்தனார்.

(இ - ள்.) ஐய - ஐயனே, என் தோழி வேம்பின் பைங்காய்தரின் - யாம் அரியமாயிருந்த களவுக்காலத்தே தலைவி வேம்பினது பசிய காயை நுமக்கு உண்ணக் கொடுப்பினும்,

தேம்பூங் கட்டி என்றனிர் - இனிய அழகிய கருப்புக் கட்டி என்று பாராட்டிக் கூறினிர், இனியே - எண்மையமாகிய இக்கற்புக்காலத்திலோ, பாரி பறம்பின் பனிச் சுனைத் தெண்ணீர் தைத் திங்கள் தண்ணிய தரினும் - என் தோழி பாரிவள்ளலின் பறம்புமலைக்கண்ணதாகிய குளிர்ந்த சுனையின்கண் உள்ள தெளிந்த நீரைத் தைத்திங்களிலே தண்ணியவாம் பொழுது நமக்குக் கொடுத்தாலும், வெய்ய உவர்க்கும் - இவை வெப்ப முடையன மேலும் உவர்ப்பன என்று கூறுகின்றனிர், அன்பின் பால் அற்று - நமது அன்பின்பகுதி அத்தன் மைத்து.

விளக்கம்:—வேம்பின் கனி சிறிது இனிப்புச் சுவையுடைத்தா கலின், அதனை விலக்கற்குப் 'பைங்காய்' என்றாள். வேப்பங்காய் மிகவும் கைப்புச சுவையுடைய தென்பது உலகறிந்தது. தரினும் என்றதன்கண் சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. தலைவிக் கும் அவனுக்கும் உள்ள அயன்மை தோன்ற என் தோழி என்றாள். தேம்பூங்கட்டி - இனிய அழகிய கருப்புக் கட்டி; அஃதாவது, கற்கண்டு என்க.

இனியே - இப்பொழுது. இப்பொழுது என்றதனால் அது பண் டென்பது போந்தது. யாம் அரிபரையிருந்த களவுக் காலத்தே என்ற வாறு.

பாரி - தமிழ்நாட்டு வள்ளல் எழுவருள் ஒருவன். இவன் மலை, பறம்பு மலை என்ப. இதனை,

> "கடந்தடு தானை மூவிருங்கூடி
> உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே" (கக0)

எனவரும் புறநானூற்றுப் பாடலானும் உணர்க.

பாரி பறம்பின்கண் இனிய தண்ணிய சுனைகள் உள்ளன என்பதும், அச்சுனைநீர் புலவராற் பாராட்டப் பட்டதென்பதும்,

> "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
> ஓரூர் உண்மையின் இகந்தோர் போல" (கஎசு)

எனவரும் புறநானூற்றுப் பாடலானும் அறிக.

பாரி பறம்பின் சுனை வேனிலினும் தண்ணிது என்பாள், 'பனிச சுனை' என்றாள். இயற்கையிலேயே தண்ணிதாகிய நீர், தண்ணிய திங்களில் மிகவும் தண்ணிதாம் என்பாள், 'தைஇத் திங்கள் தண்ணிய' என்றாள். சுனையின் பன்மையை நீர்க்கேற்றித தண்ணிய வெய்ய எனப்பட்டன. வெய்ய - வெப்பமுடையன.

பண்டு அரியமாகியபோது கைப்பனவும் யாம் தரின் நமக்கு இனியவாயின. எளியமாகிய இப்பொழுதோ இனியனவும் தண்ணி யனவும், உவர்ப்பனவும் வெய்யனவுமாயின. இதற்கு நம் அன்புத் திரிபே காரணமன்றிப் பொருட்டிரிபன்று. ஆதலால் நீயிர் நல்லர் அல்லீர் என வாயில் மறுத்தனள் என்க.

பாட்டு - ககூஎ : தலைவி கூற்று

துறை —பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, தலைவன் கூறிச்சென்ற பருவம் வந்தபின்னரும் தலைவன் வாராமையால் ஆற்றுமை எய்திய தலைவியைத் தோழி ஆற்றியிருக்கத் தேற்றுரை கூறிய பொழுது அவளே நோக்கித் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி, 'ஆற்றுக' என்ற தோழியை நோக்கி, 'என் உயிரைக் கவர்தற் பொருட்டுக் கூற்றம், மழையும் வாடையும் மலிந்த இக் கூதிர் உருக்கொண்டு, காதலர் இல்வழி நோக்கி வந்ததுகாண். யான் எங்ஙனம் ஆற்றுகேன்!' என்றிரங்குகின்றாள்.

ககூஎ. யாதுசெய் வாங்கோல் தோழி நோதக
நீரேதிர் கருவிய காரேதிர் கிளமழை
ஊதையங் குளிரோடு போதுற்று மயங்கிய
கூதிர் உருவிற் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே.

—கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(இ - ள்.) தோழி—, நோதக நீர் எதிர் கருவிய கார் எதிர் கிளை மழை - துன்பம் தக்கிருக்கும்படி நீரை ஏற்றுக் கொண்ட மின் முதலிய தொகுதியை உடையதாகிய கார்ப்பருவத்தை ஏற்றுக்கொண்ட கிளை த்த மழை, ஊதையங்குளிரொடு போதுற்று மயங்கிய - வாடைக்காற்றினது குளிரோடே வருதலுற்றுக் கலந்த, கூதிர் உருவிற் கூற்றம்-கூதிர்ப்பருவம் என்னும் உருவத்தையுடைய கூற்றம், காதலர்ப் பிரிந்த எற்குறித்து வரும் - காதலரைப் பிரிந்துறையும் அற்றம் நோக்கி என் உயிர் கவர்தலைக் குறிக்கொண்டு வாராநின்றது, யாது செய்வாம்- அதற்கு அகபபடாது தப்பற்கு யாம் என்ன உபாயம் செய்ய மாட்டுவேம்.

விளக்கம் :—நோ - துன்பம். தக என்றது, அதற்குப் பொருந்த என்றவாறு. நீர் எதிர் கருவிய கார் என்றது, கடலின்கண் நீரை ஏற்று மின் இடி முதலிய தொகுதிகளோடே வந்த கார்காலம். கார்ப் பருவத்தே யாண்டும் மழை ஞெரேலெனத் தோன்றுதலுண்மையின் கிளைமழை என்றாள். கிளைமழை - மேலும் மேலும் மிக்குத் தோன்றும் மழையுமாம்; கிளைத்தல் - தோன்றுதல். கார்காலத்திற் குரிய மழையைத் தனக் குரிய ஊதையங் குளிரோடே கலந்து கூதிர் வந்தது என்பாள், 'கார் எதிர்கிளை மழை ஊதையங் குளிரொடு போதுற்று மயங்கிய' என்றாள். போதுற்று என்று பாடமோதுவாருமுளர். அது பொருள் பொருந்தாமை யுணர்க. ஊதை - வாடைக் காற்று - அம்,

சாரியை. மயங்கிய - கலந்த. கூற்றம் - உயிர்களின் வாழ்நாளைக் கூறுபடுத்தும் ஒரு கடவுள். என் உயிரைக் கவர்தற்கெண்ணிய கூற்றமே இக் கூதிர் உருக்கொண்டு அற்றம் பார்த்து வந்தது. அதற்குச் சிற்றுயிராகிய யாம் தப்பல் இயலாது யான் இறந்துபடுதல் ஒருதலை என்றவாறு.

பாட்டு - ககூஅ : தோழி கூற்று

துறை :—தோழி குறியிடம் பெயர்த்தது. அஃதாவது, களவின்கண் மனையயல் வந்தொழுகும் தலைவனை, 'நீ இவண் வரின் இடையூறுளது; ஆகலான், இவண் வருதலொழித்து இன்ன இடத்திற்கு வருக' எனத் தோழி இடம்பெயர்த்துக் கூறியது.

இதன்கண், 'சந்தன மணங் கமழும் மார்பினையுடைய தலைவனே! இனி நீ இவ்விடம் வருதலைத் தவிர்க; ஏனெனின், ஈண்டு எந்தாய் அடிக்கடி வரும் வழக்க முடையள்; யாங்களும் இனித் தினைப்புனத்தே கிளிகடிதற் பொருட்டு இவண்விட்டுச் செல்வோம்காண்,' என்று கூறுகின்றாள்.

ககூஅ. யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் சேந்தினை
மடப்பிடித் தடக்கை யன்னபால் வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோட் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறும் அடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே.

—கபிலர்.

(இ - ள்.) ஐய, யாஅம் கொன்ற மரஞ் சுட்ட இயவில்-யாமரத்தை வெட்டிய மரங்களைச் சுட்ட வழியின்கண், கரும்பு மருள் முதல பைந்தாள் செந்தினை-கரும்பை ஒத்த அடியையுடையனவாகிய பசிய தாளையுடைய சிவந்த தினைகளினது, மடப்பிடித் தடக்கை அன்ன - மடப்பமுடைய பிடியானையினது வளைந்த கையை ஒத்தனவாகி, பால் வார்பு-பால்நிறைந்து, கரிக் குறட்டு இறைஞ்சிய - உலக்கரியை எடுக்கும் குறடுபோல வளைந்த, செறிகோள் பைங்குரல் - செறிந்த குலைகளையுடைய பசிய கதிரின்கண், படுகிளி கடிகம் சேறும்-வீழ்கின்ற கிளிகளை ஓட்டுவேமாய் ஆண்டுச் செல்வேம், அடுபோர் எஃகுவிளங்கு தடக்கை மலையன கானத்து ஆரம் நாறு மார்பினை-பகைவரைக் கொல்லும் போர்க்குரிய வேல் திகழாநின்ற பெரிய கையையுடைய

மலையனது காட்டின் கண்ணை தாகிய சந்தனங் கமழும் மார்பினை யாகிய நீ, வாரற்க தில்ல - ஈண்டினி வாராதேகொள்; இஃது எங் கட்கு விருப்பம், யாய் வருகுவள் - மேலும் ஈண்டு அடிக்கடி. எம்மன்னையும் வாராநிற்பள.

விளக்கம் :—'யாம் கிளிகடிகத்து சேறும்; ஆரகாறும் மார்பினை; யாய் வருகுவள்; ஆதலால் வாரற்க!' என்று இயைத்துக் கொள்க.

யாஅம் - ஒருவகை மரம். தினைவிதைக்கு முன்னர் ஆண்டுள்ள மரங்களை வெட்டிச சுட்டெரித்துப் பின்னர் அவவிடத்தைப் பண் படுத்தி விதைத்தல் வழக்கம். இதனை, "தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம், கரிபுறங் கழீஇய பெரும்பாட் டிரத்துத் தோடுவளர் பைந்தினை நீடு குரல்." (அகம்-க கூஅ) என்றும் "கானவர் கரிபுன மயக்கியஅகன்கட் கொல்லை" (புறம்-கஙிக.) என்றும் பிறசான்றோர் கூறுமாற்றலும் அறிக.

சுட்ட இயவு-சுட்டியவெனப் பெயரெச்சத்தின் அகரம் கெட்டது. இயவு - வழி. கரும்பு என்று கண்டோர் மருளுதற்குக் காரண மான முதல என்க. முதல் - அடி. பைந்தாட் செந்தினை என்றுந் தொட ரில் முரண் தோன்றிச் செய்யுளின்பம் மிகுதலுணர்க.

தினைக் கதிர்க்கு யானையின் வளைந் தகை உவமை. "உறங்கு பிடித் தடக்கை ஒருங்கு நிரைத்தவைபோல் இறங்கு குரல் இறடி" (பெருங்-க. ஙக. கOக-ஙு.) என்றார் பிறரும். பால் - கதிரின்கட்பால். கரிக் குறடு - கொல்லுலைக்கண் கரி எடுக்கும் ஒருகருவி. இது தினைக் கதிர் வளைந்து கிடந்தமைக்கு உவமை. கோள்-குலை. படுகிளி-கதிரின் கண் வீழ்ந்து படியும் கிளிகூட்டம் கடிகம் - ஓட்டுவேமாய். சேறும்-செல்வேம். 'யாம் கிளிகடிகம் சேறும்' என்றது, 'இனி நீ ஆண்டு வரக்கடவை' என்று குறிப்பானுணர்த்தியவாறு. மலையன்-மலைய மான் திருமுடிக்காரி என்னும் வள்ளல். ஆரம் - சந்தனம். ஆரம் நாறும் மாபினை என்றது, அந்நாற்றமே நின் வரவினை அன்னை முதலி யோர்க்கு அறிவிக்கும் என்றுணர்த்தியவாறு. 'யாய் வருகுவள்' என்றது, ஈண்டாயின் யாய் வருகுவள். ஆண்டுக் கிளிகடியும் இடத் திற்கு அவள் வரமாட்டாள் என்றவாறு. இதனால் இது குறியிடம் பெயர்த்தலாதல் அறிக.

பாட்டு - ககஙக : தலைவன் கூற்று

துறை :—தோழி செறிப்பறி வுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது, 'தலைவியை இல்லத்தின் புறம் போகாது காத்தல் வேண்டும்' எனத் தாய் முதலியோர் கருதியிருப்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்தினளாகத் தலைவன் தன் நெஞ்சிற் குக் கூறுவானாய் இரங்கியது.

இதன்கண், 'நெஞ்சே! இனித் தலைவியைப் பெறுதல் நமக்கு இயையாது. எனினும் இந்நட்பானுண்டாய நோயோ இம்மையுலகத்தும் தீர்வதன்று; இம்மை தீர்ந்த மறுமையினும்

இது நம்பால் நிலையும்; ஆகலின், அவளை மறுமையிலேனும் பெறுதல் ஒருதலை' என்று தலைவன் தன்னுட் கூறுகிறான்.

கசூசு. பேறுவ தியையா தாயினும் உறுவதோன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்
கைவள் ளோரி கானந் தீண்டி
எறிவளி கமழு நெறிபடு கூந்தல்
மையீ ரோதி மாஅ யோள்வயின்
இன்றை யன்ன நட்பி னிந்நோய்
இறுமுறை எனவோன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே. —பரணர்.

(இ - ள்.) நெஞ்சே—, திண் தேர் கைவள் ஓரி-திண்ணிய தேரையுடைய கைவண்மையினையுடைய ஓரிவள்ளலினது, கானந் தீண்டி - காட்டினைத் தோய்ந்து, எறி வளி கமழும் நெறிபடு கூந்தல் - வீசாநின்ற காற்றுப்போலக் கமழாநின்ற நெறிப் பினையுடைய கூந்தலாகிய, மை ஈர் ஓதி மாயோள் வயினை-மையை ஒத்த கருமையினையும் நெய்ப்பினையும் உடைய மயிரையுடைய மாமைநிற முடைய தலைவியிடத்தே, இன்றை அன்ன நட்பின் இந்நோய் - இற்றைக்குளது போன்று என்றும் பிறழாது நிலை பெறும் காதலையுடைய இக் காமநோய், இறுமுறை என ஒன்று இன்றி - அழியும் முறைமை என்னும் ஒன்று தனக்கில்லாமல், மறுமை உலகத்தும் மன்னுதல் பெறும் - இம்மை மாறிப் பிறந்து வாழும் மறுமை யுலகத்தும் நிலைபெற்றிருப்பதொன்றும் ஆகலின். பெறுவது இயையாதாயினும் - இம்மையுலகத்தே இவளை யாம் பெறுதல் கூடாதாயினும், உறுவது ஒன்று உண்டு-மறுமையில் பெறுதல் ஒருதலை என்னும் உறுதி ஒன்றும் இதன்கண் உளது காண்.

விளக்கம் :—திண்டேர் கைவள் ஓரி என்பதற்குத், திண்ணிய தேரையும் வீசும் கைவண்மையையுமுடைய ஓரி எனினுமாம். ஓரியின் கொல்லியைச் சூழ்ந்த கானம், மழைவளம் பெற்றுப் பல்வேறு மலர்களும் மலர்ந்திருக்கப் பெறுதலாலே அக் கானத்தை அளாவி வருங் காற்று மணக்குமாறு போல மணக்கும் கூந்தல் என்றான்.

இயற்கைப்புணர்ச்சிக்கண், அக் கூந்தலே பாயலாகக் கிடந்து நுகர்ந்தானாகலின், அதன் மணம் நிறம் நெறிப்பு நெய்ப்பு முதலிய வற்றையே விதந்து பாராட்டினான். நெறி - நெறிப்பு. எறிவளி : வினைத்தொகை. மாயோள் - மாமை நிறமுடையோள். ஓதி - மயிர். இன்றை யன்ன நட்பு - இன்றிருப்பதுபோன்று என்றும் நின்று நிலவும் காதல்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்,
திண்ணிய ராகப் பெறின்." (குறள் - சுசுசு)

என்னும் முறைபற்றியும், அவாவழிப் பிறப்பு என்பது பற்றியும் இம்மை யிற் பெறுமாயினும் மறுமையிற் பெறுதல் உறுதிஎன்றூன் என்க.

இந் நோய் - இக்காமநோய். அழியாது நிலைபெறும் காதல் போன்று, இக்காமமும் அதனுடன் நிலையுமாகலின் இதற்கு இறுமுறை இல்லை என்றூன். தோன்றிய வெல்லாம் இறும் என்னும் உலகியல் இதற்கு இல்லை என்றவாறு.

மறுமை யுலகம் என்றது, மறுபிறப்பின் வாழுதற் கிடமான உலகம் என்றவாறு.

பாட்டு - உ00 : தலைவி கூற்று

துறை.—பருவ வரவின்கண் ஆறறிவாகிய தலைமகட்குத் தோழி 'பருவமன்று வமபு' என்றவழித் தலைமகள் சொலலி யது. அஃதாவது, 'மீண்டு வருவேன' எனத தலைவன் குறித் துச்சென்ற பருவம் வந்த பின்னரும தலைவன் வந்திலாமையால் ஆற்றுமைகொணட தலைவியைத தேறறுமபொருட்டு, 'இது பருவ மழையன்று; முதுவேனிலினகட் புதிது தோன்றிய மழை ஆகலின, நீ ஆற்றுக' என்று தோழி ஆறறுவித்தாளாக, அவட்குத தலைவி கூறியது.

இதன்கண், இது வம்பென்ற தோழியைத் தலைவி நோக்கி, 'இதுவம்பன்று; காலமாரியே காண்! முகில்கள் முழங்காநின் றன; நீர் பெருக்கெடுத திழிதருகின்றது; அவர் கூறிய பருவமே இது; அவர் நமமை மறந்தனர போலும்; நாமே அவரை மறவாது வருந்துகின்றோம' எனகினைறள்.

உ00. பெயத குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
மீமிசைத் தாஅய வீஇ சுமந்துவந்
திழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவா நாமே
கால மாரி மாலை மாமழை
இன்னிசை யுருமின முரலும்
முன்வரல் ஏமம் செய்தகன் றேரே. —ஔவையார்.

(இ - ள்.) தோழி -, கால மாரி மாலை மாமழை இன் இசை உருமின முரலும் - கார்ப்பருவத்துக்குரிய மழையையுடைய மாலைப்பொழுதின்கண் வரும் இக் கரிய முகில்கள் இனிய இசையையுடைய இடிகளையுடையனவாய் முழங்காநிற்கும், பெயத குன்றத்துப் பூ நாறு தண்கலுழ் மீமிசைத் தாஅய வீ சுமந்து புனலும் இழிதரும் - அம்முகில்கள் பெய்த மலையின் கண்ணவாகிய பலர் மணங்கமழும் தண்ணிய கலங்களின் மேலே

பரந்த மலர்களைச் சுமந்து கொண்டு வந்து வெள்ளமும் வீழா நிற்கும், முன் வரல் ஏமம செய்து அகன்றோர் - தாம இக் கார்ப் பருவம தொடங்குமுன்னரே மீண்டு வருவேம் எனறதொரு காவலை நமக்குச் செய்து பிரிந்து சென்ற நந்தலைவர், வாரார் - வந்திலர், மன்ற மறந்தோர் - தேற்றமாக அவர் நம்மை மறந்த வரே ஆவர், நாமே மறவாம் - நாம் மட்டுமே அவரை மறவாதே மாய்த் துன்புறுகின்றோம.

விளக்கம் :—தோழி வம்பமாரி என்றாளாகலின், அற்றன்றென் பாள், காலமாரி என்றாள். வம்பமாரி - கார்ப்பருவ மல்லாத ஏனைப் பருவங்களில் அவவப்போது பெய்து மறையும் மழை கார்ப்பருவத்து முதல்நாள மாலைப்பொழுதிலே வருவன் என்றான் ஆகலின், 'மாலை மாமழை' என்றாள். புணர்ந்தோாக்கு முகில் முழக்கம் இனிதாய் இன்பத்தை மிகுவிக்கும் இயல்பு பற்றி, 'இன்னிசை உருமின' என்றாள். எம்மளவில அது மாறுபட்டது என்னும் கருத்தாமே இங்ஙனம கூறினாள். உருமின - இடியை உடையன. முரலும் - முழங்கும்.

ஏமம் - பாதுகாப்பு. தலைவன் பிரியும் பொழுதே ஆற்றுமை கொண்ட தலைவியை யான் பருவந்தொடங்குமுன் வருவன் எனக் கூறி ஆற்றியிருக்கக் கற்பித்தது செவ்வனே ஆயிற்று, அசைசொல்லையே உயிர் காவலாகக் கொண்டு ஆற்றியிருந்தேன் என்பாள், 'முன் வரல் ஏமம் செய்தகன்றார்' என்றாள். முன் வரல் ஆகிய ஏமம் என்க. இப்போது அவ் வேமமும் இன்றாய் வருந்தாகின்றேன் என்பது கருத்து

முகிலும் முழங்கும்; அவை மலையிடைப் பெய்த நீரும் மலர் சுமந்து மணமேற்ற இழிதரும் என்றமையால், இது காலமாரியே காண் என்று அறிவுறுத்தினளாயிற்று. குன்றத்தே மழைத்தாரை வீழுங் கால் ஆண்டு மலர்ந்துள்ள புதுமலரிற் றேய்ந்து வீழ்தலின் பூநாறு கலுழ் என்றும், புனல் பெருகியவழி உதிர்ந்த மலர்களைச சுமந்து வருதலின் 'மீமிசைத் தாஅய வீ சுமந்து இழிதரும் புனல்' என்றும் கூறினாள் வாராமைக்குக் காரணம் கூறுவாள், 'மன்ற மறந்தோர்' என்றாள் அவர் மறந்தவழி யாமும் மறக்க வல்லோம் எனின் துன்பமின்றும்; அதுவும் மாட்டேம் அளியமே? அளியம்!! என்பாள், 'மறவாம் நாமே' என்றாள். ஏகாரம், பிரிநிலை.

நமது துன்ப நீக்கத்திற்கு ஒன்று, அவர் நினைந்து மீளுதல் வேண்டும்; அல்லது, யாம் மறந்தமைதல் வேண்டும்; இரண்டுமின்றித் துன்பத்திற்கே ஆளாயினேம், என்றிரங்கியவாறு.

பாட்டு - உ0க : தலைவி கூற்று

துறை :—கடி நகர் வேறுபடாது நன்கு ஆற்றினை யென்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது. அஃதாவது, தலைவன் தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடத்தும் மணைக்குச் சென்ற தோழி தலைவியை நோக்கி, 'நீ வரைந்து கொள்ளுந்துணைம்பு நன்கு ஆற்றியிருந்தாயல்லையோ?' என்று வினவ, அங்ஙனம் ஆற்றினமைக்குத் தலைவி காரணங் கூறியது.

இதன்கண், 'தோழி! தலைவர் வரைவொடு வருவார் என்று எனக்கு அயல் மனைக்கிழத்தி அறிவுறுத்தினள்; அவ்வறிவுரை பற்றுக் கோடாக யான் வரையுந் தன்மையும ஆற்றியிருந்தேன்; அந்நற்செய்தி கூறிய அயன் மனைக்கிழத்தி அமிழ்தண்டு வாழ்வாளாக!' எனத் தலைவி வாழ்த்துகின்றாள்

உ0க. அமிழ்த முண்கநம் அயலி லாட்டி
பால்கலப் பன்ன தேக்கோக் கருந்துபு
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி யயலது
முள்ளி லம்பணை மூங்கிற் றூங்கும்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே.

.....[1]

(இ-ள்) தோழி! நம் அயல் இல்லாட்டி அமிழ்தம் உண்க-நம்முடைய அயன்மனைக் கிழத்தி அமிழ்தம் உண்பாளாக! அஃதெற்றுக் கெனின், பால் கலப்பு அன்ன தேக் கொக்கு அருந்துபு - பாலைக் கலந்தாலொத்த இனிமையுடைய தேமாங் கனியினை உண்டு, நீல மென் சிறை வள் உகிர்ப் பறவை - நீல நிறமுடைய மெல்லிய சிறகினையும் வளைந்த உகிரினையும் உடைய வௌவால்கள், நெல்லியம் புளி மாந்தி - நெல்லியினது புளித்த கனியினையும் உண்டு, அயலது முள் இல் அம்பணை மூங்கில் தூங்கும் - அதனயலே உள்ள முள்ளில்லாத அழகிய பருத்த மூங்கிலின் கிளையிலே தூங்கா நின்ற, கழை நிவந்து ஓங்கிய சோலை - மூங்கிற் கோல்கள் உயர்ந்து வளர்ந்த சோலைகளையுடைய, மலை கெழு நாடனை வரும என்றோள் - மலைபொருந்திய நாட்டையுடைய தலைவனை வரைவொடு வருவான் என்று எனக்கு அறிவுறுத்தினளாகலான்.

விளக்கம்:—"அமிழ்தம் உண்க" என்று வாழ்த்துவது அக்காலத்து வழக்கம் போலும், இந்நூலின் அகஃ-ஆம் செய்யுளினும் "அரும் பெறலமிழ்தம் ஆர்பத மாகப், பெரும்பெய ருலகம் பெறீஇயரோ அன்னை" என வந்தமை காண்க.

அயலிலாட்டி - அடுத்த வீட்டிற்குரியவள்; அயல் வீட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளுதலும் தாம் அறிந்த செய்திகளை அயல் வீட்டினர்க்கு அறிவித்தலும் மகளிர்க் கியல்பாவதை இக்காலத்தும் காணலாம். தேக்கொக்கு - தேமாமரம், கனிக்கு ஆகு பெயர். பழமாத்திரையாய் இனிதாத தலன்றியும் அதனோடே பாலுங் கலந்தது போலும் இனிய தென்பாள், 'பால் கலப்பன்ன' என்றாள். அருந்துபு-

(பாடம்) 1. ஆசிரியர் பெயர் காணப்பட்டிலது.

அருந்தி. 'நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை' என்றது, வௌவாற் பறவையை. நெல்லியம்புளி - நெல்லிக்கனி. புளி: ஆகுபெயர். நெல்லிக்கனி புளிப்புச சுவையுடையதாகலின் புளி எனப்பட்டது. அம்சாரியை. இனிப்பும் புளிப்பும் கலந்துண்டென்றது, தலைவன் களவொழுக்க நிகழ்ச்சியைக் குறித் தோதிய தென்க. 'முள்ளில் அம்பணை மூங்கிலிற் றூங்கும்' என்றது, இப்பொழுது வரைந்து கொண்டு துன்பமில்லாத தன் மனையிலே இன்புற்றுறைகின்றான் என்றவாறு. தூங்கும்-தொங்கும். வௌவால் தலைகீழாய்த் தூங்கும் இயல்பினதாகலான், 'தூங்கும்' என்றாள். கழை-மூங்கில். நிவந்தோங்கிய-உயர்ந்து வளர்ந்த என்க.

அயலிலாட்டி, தலைவன் வரைவொடு வருவான் என்ற செய்தியை அறிவுறுத்தலானே யான் ஆற்றியிருப்பேனையினேன் என்றவாறு.

பாட்டு - உ0உ : தலைவி கூற்று

துறை :—வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது. அஃதாவது, 'பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனை ஏற்றுக் கொள்ளல்வேண்டும்' என்று, தன்பால் வேண்டிய தோழிக்குத் தலைவி மறுத்துக் கூறியது.

இதன்கண், வாயில் வேண்டிய தோழியை நோக்கித் தலைவி, 'கண்ணுக்கு இனிதாகிய நெருஞ்சிப்பூ துன்புறுத்தும் முள்ளை ஈன்றற் போன்று, பண்டு நமக்கு இன்பஞ் செய்த காதலர் இன்று பெரிதும் இன்னா செய்வாராயினர்; ஆகலின் என் நெஞ்சம் மிகவும் நோகாநின்றது; நின் வேண்டுகோட் கிணங்கேன்' என்கின்றாள்.

உ0உ. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
இன்ன செய்தல் நோமென் னெஞ்சே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) தோழீ! என் நெஞ்சு நோம் என் நெஞ்சு நோம் - என்னுடைய நெஞ்சம் வருந்தாநிற்கும்; என்னுடைய நெஞ்சம் வருந்தாநிற்கும்; அஃதெற்றுக் கெனின், புன் புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சி - முல்லைநிலத்தில் அடர்ந்து படர்ந்த சிறிய இலையையுடைய நெருஞ்சியினது, கட்கு இன் புது மலர் முள் பயந்தாங்கு - முன்னர்க் கண்ணுக்கு இனிமையைச் செய்த புதிய மலர் பின்னர் உடலுக்கு இன்னாசெய்யும் முள்ளை ஈன்றற் போன்று, இனிய செய்த நம் காதலர் - முன்னர்

இனியவே செய்த நந்தலைவர், இன்னு செய்தல் - இப்பொழுது இன்னுதன வற்றைச் செய்தலானே, என் நெஞ்சு நோம் - என் நெஞ்சம் பெரிதும் வருந்தா நிற்கும்.

விளக்கம் :—வருத்த மிகுதியைத் தெரியக் கூறுவாள் நோமென் னெஞ்சே என்பதனை மும்முறை யடுக்கினுள். 'இனிய செய்யுங் காத லரை ஏற்றுக் கோடலே நின் மாண்பிற்குத் தகுதியாம்' என்ற தோழிக் குக் கூறுகின்றுளாகலின், அவள் கூற்றை வழிமொழிந்து, 'இனிய செய்த நங்காதலர்' என்றுள். 'பண்டு இனியவே செய்தார்; இப் பொழுதோ பெரிதும் இன்னு செய்பவராயினர்; அசசெயலே என் னெஞ் சம் பொறுது மிகவும் வருந்தா நின்றது. ஆதலின், அவரை நெஞ்சார ஏற்றுக் கோடல் எங்ஙனம்?' என்று மறுத்தவாறுதலுணர்க.

நெருஞ்சி மலர் கட்கினிதாயிருந்தே பின்னர் முட்பயத்தல் போல, இவர் பண்டு இனியராயிருந்தே பின்னர் இங்ஙனமாயினர் இவ்வியல் பினை யாம் பண்டறியே மாயினேம் என்றிரங்கியவாறும். இன்னு-தன் னைப் பிரிந்து பரத்தைமை செய்தொழுகுதல்.

புன்புலம் - முல்லை நிலம். புன்செய் என்றவாறு. நெருஞ்சி புன் செய் நிலத்திலே படர்ந்து அடரும் இயல்பிற்றுகலின் 'புன்புலத் தமன்ற நெருஞ்சி' என்றுள். அமலுதல்-அடர்தல். சிறுகுலை, சிறியிலை என விகாரப்பட்டது

பாட்டு : உஎக. : தலைவி கூற்று

துறை :—வாயிலாகப புக்க தோழிக்குத கிழமைகள் சொல்லியது; இதறகும் முன் செய்யுள் துறைக்குக் கூறிய விளக்கமே கொள்க.

இதன்கண், தலைவி வாயில் வேண்டிய தோழியை நோக்கி, 'தோழி! நந்தலைவர் சேணுட்டுறைவாருமலர; சேய்தாகிய ஊரினுறைவாரு மல்லர்; அண்மையிலே உறைபவராயிருந்தும். கடவுளே செய்தமை பகுதியுடைய துறவியர் போன்று நமமைப புறக்கணிக தொழுகாகின்றனர். இததகையர் என்றறியாமை யாலே யான் பண்டு இவாக்கு இரங்கி வாயில் சேர்ந்தமைக்கு வருந்துகின்றேன்' என்று கூறுகின்றுள்.

உஎக. மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்று ஊரரு மல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ ஒழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.

—நெடும் பல்லியத்தனார்.[1]

(பாடம்) 1. நெடும்பல்லியததை.

(இ - ள்.) தோழி! மலை இடை இட்ட நாட்டரும் அல்லர்-மலைகள் இடைக் கிடத்தலானே செய்த்தாகிய நாட்டிடத்தே உறைபவரும் அல்லர், மரந்தலை தோன்ற ஊரரும் அல்லர்-மரங்கள் தோன்றுது மறைதற்குக் காரணமான சேய்மையையுடைய வேற்றாரின்கண் உறைபவருமல்லர், கண்ணிற் காணநண்ணுவழி இருந்தும் - கண்ணுலே காணும் அளவிற்றாய் வருதற்குரிய அண்மையிடத்தே இருப்பவரே ஆகியும், கடவுள் நண்ணிய பாலோர் போல-கடவுளை உளத்தாலே அணுகிய துறவிப்பகுதியினர் போன்று, ஓரீஇ ஒழுகும் என்னைக்கு - நம்மைப் புறக்கணித்து ஒழுகாநின்ற தலைவனுக்கு, யான் பண்டொருகால் பரியலென் - யான் பண்டொரு காலதேக இரங்குபவல்புடையளாயிருந்தேன், மன் - அது இப்பொழுது கழிந்தது.

விளக்கம்:—ஊரிடையிட்டும், நாடிடையிட்டும் பிரிந்துறைவாரு மல்லர் என்பாள், 'மலையிடையிட்ட நாட்டருமல்லர்; மரந்தலை தோன்ற ஊரரும் அல்லர்' என்றாள். கண்ணிற்காண நண்ணுவழி என்றது, அவரிருக்குமிடம் இங்கிருந்தே காணத்தகுவதாகிய அணைமையிடத்தது என்றவாறு. கடவுள் நண்ணிய பால் என்றது, இறையடி நீழலைக் கருதிய பகுதி என்றவாறு. அஃதாவது துறவறம். துறவறத்தார் மனைவி முதலாயினுரை ஓரீஇ ஒழுகுதல் மரபாகலின், அவரை உவமை எடுத்தோதினாள். பால எனறாள், அறத்தினும் அஃதொரு பகுதியாதலேக்கி. இனி, அருளொடு புணர்ந்த அகற்சியும், காமந்தீர்த்தலும், எனப புறத்தே ஒதிய கடவுள் நண்ணிய பகுதி எனினுமாம. என்னை - தலைவன். ஓரீஇ யொழுகுதல் - புறக்கணித்து நடத்தல். இங்ஙனம் ஓரீஇ ஒழுகும் தலைவனுக்குப் பண்டலலாம் நி வாயிலாக வந்து வேண்டிய வழிப் பரிவு கூர்ந்து யானும் நோவேனுயினேன்; அவன் ஒழுகுகம் மேலும் மேலும தீயதாகக் காண்டலின் யான் இப்போது பரிவேனல்லேன்; அப்பரிவு நலை கழிந்தது என்பாள், 'பரியலென்மன்' என்றாள் பரியலென் - பரியலை உடையேன். மன் - அது கழிந்தது என்றும் பொருட்டு. கடவுள என்றதனை மூனிவா என்பாரு மூளர்.

பாட்டு - ஊஅச : பாங்கன் கூற்று

துறை :—தலைமகற்குப் பாங்கன் உரைத்தது. அஃதாவது, காமநோயானே வேறுபட்டு மெலிந்த தலைவனைப் பாங்கன் இடித்துரைத்தது.

இதன்கண், பாங்கன் தலைவனை நோக்கி, 'காமநோய் காம நோய் என்று அதனுல் வேறுபட்டு மெலிவர் உலகினர்; அதன் இயல்பை ஆராயின், காமம் அணங்குமன்று; பிணியும் அன்று; அஃதொரு புத்தின்பம் என்பது விளங்கும; அதற்கு நீ மெலிவானேன்!' என்று கூறுகின்றன்.

உ0ச. காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்ற இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே.

—மிளைப்பெருங் கந்தனர்.

(இ - ள்) பெருந்தோளோய் - பெரிய தோளையுடைய தலைவனே, காமம் காமம என்ப - காமநோய் காமநோய் என அதனியல்பறியார் அதற்கு அஞ்சி மெலியாநிற்பர்; காமம் அணங்கும் பிணியும் அன்று - அது புறத்திருந்து வந்து தீண்டி வருத்து மொரு தெய்வமுமன்று; அகத்தே தோன்றி வருத்து மொரு நோயுமன்று, நினைப்பின் - அதனியல்பை ஆராயின், முதைச் சுவல் கலிதத முற்ற இளமபுல் - பழைதாகிய மேட்டு நிலத்தே தழைத்த முதிராத இளம புல்லை, மூதா தைவந்தாங்கு - முதிய ஆ நாவானக்கினூற் போன்றதொரு, விருந்தே காமம - புதுமையுடையதே காமம என்பது புலனும்.

விளக்கம்:—காமம் நம் நினைப்பளவானே இன்ப துன்பங்கட்குக் காரணமாவதொரு புதுப்பண்பன்றி, புறத்தினின்றுதல் அகத்திலுதல் நின்று வருத்துமொரு பொருளன்று; அந்நினைப்பை மாற்றினுல் ஆறுதல் பெறலாம் என்றவாறு.

அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம். நோய் - உடலின் குறையாற் ரேன்றும் பிணி. உடலின்கண் வளி முதலிய மூன்றனது மிகை குறைகளாலே தோன்றி வருத்தும் நோயன்று காமம்; அணங்கு போலப் புறத்திருந்து தீண்டி வருத்துவதும் அன்று; அது கணிக மாத்திரையாய் உள்ளதொரு பண்பென்றன் என்க.

முதைச்சுவல் - பழைதாகிய மேட்டு நிலம். ஈண்டு மேட்டுநிலம் என்றது, பண்படுத்தப்படாத நெஞ்சத்திற்கு உவமை. காமம் பற்பல பிறவிகளினும் அடிப்பட்ட பயிற்சியாலே மனத்தின்கண் நினைவுரு வாய்க் கிடந்து, தான் தோன்றுதற்குரிய பிற ஏதுக்கள் நேர்ந்த வழி அவ்வேதுக்களைப் பற்றி வளர்வதாகலின், பண்படுத்தப்படாத மேட்டு நிலத்தே தொன்றுதொட்டுக்கிடந்த விதை, மழை முதலிய ஏதுக்கள் உண்டாயவழி முளைத்துத் தழைத்த இளம் புல்லை உவமை கூறினன். காமம் பிறவிகடோறும் நெஞ்சத்தின்கண் கிடந்து செவ்வி பெற்ற போது எண்ணமாகத் தழைகின்றது. அவ்வெண்ண முதிர்ச்சியாலே யாம் இன்பதுன்பமுறுவதல்லால் அதற்கேதுவாம் பொருளிடத்தே அவ்வின்பதுன்பம் கிடந்திலை என்றவாறு. எனவே, அவவெண்ணங்களை மாற்றக் காமநோய் போம்; நீ அது செய்கின்றிலை; மேலும் மூதா அப் புல்லை நாவால் நக்கு மாத்திரையானே இன்புறுமாறு, அவ்வெண்ணங் களைத் தழுவு மாத்திரையானே இன்பம் அல்லது துன்பம் எய்து கின்றனை என்றன் என்க. மூதா என்றது, பண்டும் பண்டும் புல் மேய்ந்து பயின்றமை தோன்ற நின்றது. அறிந்தோர் அதனுல் எய்தும்

இன்பத்தை நுகர்வர்; எய்தாதவழித் துன்ப முறுதலிலர். ஆகலின், அஃது அவர்க்கு விருந்தாம்; ஏனையோர்க்கு அணங்கும் பிணியுமாம் என்பது கருத்து. 'பெருந் தோளோய்' என்றது அவன் ஆண்மையை நினைஊட்டி நின் ஆண்மைக்குத் தக மனவடக்கம் உடையையல்லை என்றிகழ்ந்தவாறென்க.

மேட்டு நிலத்துப் புல்லென்றது, காமம் யாண்டும் நிலைத்து நின்று இன்பம் பயக்கும் நற்பண்பு மன்று என்றும், ஏதோ ஒருசில செவ்வியிற் றோன்றி அழிவது என்றும் உணர்த்தற்கு. என்னை, மேட்டு நிலத்தே நீர் நிற்கப் பெறுமையின் மழைபெய்தக்காற் றோன்றி மறுத்தக்கால் அழிவது அப்புல்லுக்கு இயல்பாகலின் என்க.

பாட்டு - உ0நு : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, வரைவிற்குப் பொருளீட்டற் பொருட்டுத் தலைவன் பிரிந்தானுகத் தலைவியின் ஆற்றுமை கண்டு 'இச்சிறு பிரிவையும ஆற்றுகின்றிலளே' எனக் கவலையுற்ற தோழிக்கு, ஆற்றுமைகருக் காரணம் காட்டித் தலைவி கூறியது.

இதன்கண், 'தோழி! இதோ பார்! இப்பொழுதுதான் நந்தலைவர் நம்மைப் பிரிந்து சென்றனர்; அவர் பிரிவானுற்ற வருத்தத்தை என் நெஞ்சங்கூட இன்னும் அறிந்திலது; இப் பசலைநோய் மட்டும் எங்ஙனம் அறிந்ததோ அறிகிலேன்; அது என் நெற்றி முழுதும் விரைவில் பரவிவிட்டது; யான் எங்ஙனம் ஆற்ற வல்லேன்' என்கின்றாள்.

உ0நு. மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டேர் ஏறிக்
கலங்குகடல் துவலை ஆழி நனைப்ப
இனிச்சென் றனனே இடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொல் தோழியென்
தெங்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே.

—உலோச்சனார்

(இ- ள்.) தோழி—, மின்னுச் செய் கருவிய பெயல் மழை தூங்க - மினனுதலைச் செய்யும் தொகுதிகளையுடைய பெய்தலையுடைய மழை பெய்யா நிற்ப, விசும்பு ஆடு அன்னம் பறை நிவந்தாங்கு - வானத்தின்கண்ணே அசைதலையுடைய அன்னப் பறவை பறத்தலில் உயர்ந்தாற் போன்று, பொலம் படைப்

பொலிந்த வெண்தேர் ஏறி - பொற்றட்டாலே பொலிவுடைய வெள்ளிய தேரின்கண் ஏறி, கலங்கு கடல் துவலை ஆழி நணைப்ப - அலையாற் கலங்கிய கடலினது நீர்த்துளி தேருருள்களை நணையா நிறப, இனிச் சென்றனன் இடுமணல் சேர்ப்பன - இப் பொழுதுதான் நம்மைப்பிரிந்து செல்லாகின்றான் அலை கொணர்ந்து குவித்த மணலையுடைய கடற்கரைத் தலைவன், பசப்பு யாங்கு அறிந்தன்று - இப்பசலை அவர் பிரிவினை எங்ஙனம் இத்துணை விரைவில் அறிந்து கொண்டதோ, என் தேங்கமழ் திருநுதல் வௌ்ளாம் - அறிந்தமையாலன்றே எனது தேன் மணங் கமழும் அழகிய நுதலிடத்தே பரவா நின்றது.

விளக்கம் :—பசப்பு - மகளிர்க்குக் கணவர் பிரிவானுண்டாகும் நிற வேறுபாடு. தலைவர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றகின்றிலை என்று தோழி கூறினளாகலின், பசலை நோயின் கொடுமை கூறி அங்ஙனமாக யான் எங்ஙனம ஆற்றுவல் என்பது படத் தலைவி கூறினள் என்க.

> "உவக்காண் எங்காதலர் செல்வார் இவக்காண் என்
> மேனி பசப்பூர வது" (குறள். ஙஅ)

> "விளக்கற்றம் பார்க்கும் இருளேபோற் கொண்கன்
> முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (குறள் - ஙஙஅக)

என்னுந் திருக்குறட்பாக்கள் ஈண்டு நினைக்கற் பாலன.

பறை - பறத்தல். பறத்தலில் உயர்ந்த என்க. விண்ணிடத்தே அசைந்து செலலும் அன்னம் என்பாள், 'விசும்பாடன்னம்' என்றாள். அன்னம் மழைத்துளியூடே விண்ணிற் பறத்தல், தலைவனுடைய வெண் புரவிபூட்டிய வெண்டேர் கடறறுவலையினூடு செலலற்கு உவமை என்க.

பொலம்படை - பொன்னாலாய தேர்த்தட்டு ; படுத்து வைத்தலிற் படை எனப்பட்டது இதனால் தலைவனுடைய திருநலம் கூறப்பட்டது வெண்டேர் - யானை மருப்பானியற்றிய தேர் என்க கலங்கு கடல் - அலையாலே கலங்கா நின்ற கடல் என்றவாறு. அவன் பிரியுங் கால் தன்னெஞ்சம் கலங்குமாறு போலக கலங்கும் கடல் என்னும் நினைவினளாய அங்ஙனம் கூறினள் என்க. இனி - இப்பொழுது இடுமணல் - அலை கொணர்ந்திட்ட மணல் சேர்ப்பன்- நெய்தனிலத் தலைவன். தலைவன் தன் தேரினை அலைவாய் வழியே செலுத்திச செல்வன் என்பதை,

> "நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
> ஊர்ந்த வழிநிதைய வூர்ந்தாய் வாழி கடலோதம்"
>
> (கானல்வரி : ஙகூ)

என்னும் சிலப்பதிகாரத்தானும் உணர்க. தேங்கமழ் திருநுதல் என்றது, அதன் பண்டைநிலை கருதி இரங்கியவாறு.

பாட்டு – உ0கூ : தலைவன் கூற்று

துறை :—கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது, 'காம நோயானே வருந்துதல் நிற்கழகன்று,' என்று, இடித்துரைத்த நண்பனுக்குத் தலைவன் கூறியது.

இதன்கண், 'அமிழ்தம் போன்ற அழகும் இனிமையும் உடைய சொல்லாளாகிய தலைவியினது குணமும், இன்ன செய்யுமியல்பிற்றாயின், காமம் உடனுறைவும அரிதாயின், கின் போலும் அறிஞர் அதனை அடைதலைப பரிகரித்தல் நன்று!' என்று தலைவன் பாங்கனுக்குக் கூறுகின்றான்.

உ0கூ. அமிழ்தத் தன்ன அந்தீங் கிளவி
அன்ன இனியோள் குணனும் இன்ன
இன்ன அரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்
குறுக லோம்புமின் அறிவுடை யீரே.

—ஐயூர் முடவனார்.

(இ - ள்) அறிவுடையீரே - அறிஞரே, இனியோள் அந்தீங் கிளவி அமிழ்தத்தன்ன - இனிமையுடையாளது அழகிய தீஞ்சொல் அமிழ்தத்தை ஒப்பன, குணனும அன்ன - அவளின் குணங்களும் அமிழ்தமே போல்வன, இன்ன இன்ன அருமபடர் செய்யுமாயின் - இவைகளே இத்தகைய இன்னுதன வாகிய பொறுத்தற்கரிய தன்பங்களைச் செய்யுமது ஆயின், காமம் உடனுறைவு அரிது - ஆராயிற் காமந்தானும் தன்னையுடையோர் பிரிவினறி உடனுறையப் பெறுதலும அரியதாகும் ஆகலான், குறுகல் ஓம்புமின் - அதனை அணுகுதலைப பாதுகாமின்.

விளக்கம் :—காமமுடையோர் பிரிவின்றி உடனுறைதலே எஞ்ஞான்றும் பெறுவராயின் இனிதாம். காமமுடையோர் அங்ஙனம் உடனுறைதல் இவ்வுலகததே அரிதாகின்றது. பிரிந்த வழித தமக்கு முன்னோர்ப் பெரின்பமளித்த மொழிகளும், குணங்களுமே இன்னுவரும் படர் செய்வனவாகின்றன. ஆதலால் அறிவுடையோர் காமநெறிப் படராமையே நன்று என்றவாறு.

இனியோள் என்றது, கண்டுகேட்டுண்டுயிர்த்து உற்றறியும் ஐவகையின்பமும் ஒருங்கே உடையோள் என்று தலைவியைத் தான் பொழிலிடத்தே நுகர்ந்தமையைக் கருதிக் கூறியவாறு.

அவளுடைய சொற்களும் குணனும் பிரிந்துறைவழி நினைவிற் றோன்றி அருமபடர் செய்தலின், 'இன்ன அரும்படர் செய்யும்' என்றான். படர் - நினைவுணற்றன்புறுதல். அதனால் மெலிவுற்ற தன்னிலையைச சுட்டிக் காட்டுவான், 'இன்ன அரும்படர்' என்றான். உலகியலில்

காமுற்றோர் உடனுறைதற்கு இடையூறுகள் பல வுளவாகலின், காமம் உடனுறைவும் அரிதென்றான். உடனுறைவும் என்புழிச் சிறப் பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. குறுகியபின் வீடில்லே யாகலின் குறுகலோம்புதலே அறிவென்பான், 'குறுகலோம்புமின் அறிவுடையீரே' என்றான். யான் அத்தகைய காமத்தைத் தலைப் பட்டுவிட்டேன்; இனி எனக்கு அத் தலைவியைப் பெறுதலின்றி வீடில்லை ஆகலான், நீ கழறுதல் பயனில் செயலாம் என்று பாங்கனைக் கடிந்தான் என்க. அறிவுடையீர் என்றது, இகழ்ச்சிக் குறிப்பு.

காமம் உடனுறைவு அரிதென்றது - காமங் கொண்டோர் இவ் வுலகத்தே பிரிவின்றிக் கூடியுறைதலும் அரியர் என்றவாறு.

பாட்டு - உ0எ : தலைவி கூற்று

துறை :—செலவுக் குறிப்பறிந்து அவர் செல்வார் என்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்து செல்வான் என்பதை குறிப்பானறிந்த தோழி, 'அவர் பிரிவர் போலும்' எனத் தலைவிக்கு அறிவுறுத்தாளாக, அவளைத் தலைவி புலந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நீ மட்டும் அல்லை; தலைவர் சென்றார் என்று என்னிடம் கூறிய ஊர்வலர் பலராவர்.' என்று புலந்து கூறுகின்றாள்.

உ0எ. செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை அங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
சுரஞ்செல் மாக்கட் குயவுத்துணை யாகும்.
கல்வரை யயலது தொல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டனம் ஆர்வலர் பலரே.

—உறையூர்.

(இ - ள்.) தோழி—, செப்பினம் செலினே செலவு அரிதா கும் என்று-யாம் பிரிந்து செல்வதைத் தலைவியினிடத்தே கூறிச் செல்வோமாயின் செல்லுதல் இயலாதாம் என்று கருதி, அத்த ஓமை அம் கவட்டிருந்த இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள் விளி - பாலைநிலத்திலுள்ள ஓமைமரத்தினது அழகிய கிளையின் கண்ணே இருந்த தன் கூட்டத்தினின்றும் பிரிந்து வந்த பருந் தினது தனிமைத்தன்மையைத் தன்னிடத்தே கொண்டமை தெளிதற்குக் காரணமான ஓசை, சுரஞ் செல் மாக்கட்கு உயவுத் துணையாகும் - அப் பாலை நிலத்தினூடே செல்லும் மனிதர்கட்கு

அளவளாவும் துணையாக அமையாநின்ற, கல்வரை அயலது தொல் வழங்கு சிறு நெறி - கற்களையுடைய மலையின் பக்கத்திற் கிடந்ததாகிய பழைதாய் நடத்தலையுடைய சிறு வழியின்கண், நல் அடி பொறிப்பத் தாஅய்ச் சென்று என - நன்றாகிய அடிச் சுவடுபட விரைந்து சென்றார் நின்தலைவர் என்று கூற, கேட்டனம் - யாம் முன்னரே கேட்டுள்ளேம், ஆர்வலர் பலர் - இச் செய்தியை அறிவித்தற்குரிய அன்புடையோர் பலராவார்.

விளக்கம் :—தலைவன் கூறுது பிரிந்து சென்றமையை அறிந்த தோழி, அவன் சென்றான் எனக் கூறின், தலைவி ஆற்றாள் எனக் கருதியவளாய், 'இனிச் செல்வான் போலும்' எனக் கூறினள் ஆகலின், அவரைச் செலவழுங்குவியாது வாளா வந்து எதிலார் போலக் கூறினை என்று கடிவாள், 'செல்வார் என்று நீ கூறுவதென்?' 'சென்றார் என்றே நினக்கு முன்பலா என்பால் வந்து கூறியதை யான் கேட்டுள்ளேன்' என்று கூறினள் என்க.

தோழி தனக்குத் துணையாய் நின்று செலவழுங்குவியாது, செலவுணர்த்தியவழித் தான் உசாத்துணையும் இன்றித் தனித்தவளானேன் என்று குறிப்பானுணர்த்துவாள், நம்மைப் பிரிந்து சென்ற தலைவர்க் கேனும் ஆண்டொரு துணையுண்டு எனக் கதவுமின்றென்பது தோன்ற 'அத்த வேனில் அங்கவட்டிருந்த இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி, சுரஞ் சென் மாக்கட்கு உயவுத் துணையாகும்' என்றாள். இது பண்டு தலைவன் கூறியதைக் கொண்டு கூறியதென்க. உயவுத் துணை - அளவளாவிச செல்லும் துணை. இனந்தீர் பருந்து தன் தனிமை தோன்றக் கூவுதல் கேட்டலும் அவ்வொலிபற்றி ஆறு செல் மாக்கள் நெஞ்சத்தே பற்பல எண்ணங்கள் தோன்றுதல் இயல்பாகலின் 'விளி உயவுத் துணையாகும்' என்றாள்.

'தோல் வழங்கு சிறு நெறி' என்றும் பாடம். இதற்கு யானைகள் வழங்கும் சிறு நெறி என்று பொருள் கூறுக.

ஆர்வலர் என்றது குறிப்புமொழி; எதிலர் என்னும் பொருட்டு. செல்வார் என்று அறிவிப்போர் எதிலர் ஆதல் தகும். நீ அதனை அறிவித்தலாகாது என்பதாம். உசாத்துணைத் தோழியாகிய நீயும் எதிலர் கூறியதே கூறினை செலவழுங்குவித்து இனிச செல்லார் என்று உணர்த்தினை அல்லை எனப் புலந்தவாறு. 'கேட்டனம்' என்று பாடமோதி அதற்கியையக் கூறுவாருமுளர்.

பாட்டு - உ0அ : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, தலைவன் வரைதற்கு வேண்டிய பொருளீட்டனிமித்தம் பிரிந்த வழி, ஆற்றுமை மிக்க தலைவியைத் 'தோழி! நீ இங்ஙனம் ஆற்றுயாகின்றது அறிவன்று; ஆற்றுக!' என்றாளாகத் தலைவி, 'யான் ஆற்றேனாவது பிரிவிற்கன்று மற்றொன்றற்கென்று' கூறியது.

இதன்கண், 'வரைபொருள் நிமித்தம் பிரிந்த தலைவன் செயற்குப் பொருந்தியிராதே, ஆற்றுமை கொள்வதென்?' என்ற தோழிக்கு, 'யான் பொருந்தி ஆற்றியிருப்பேன்! ஆற்றேனாகேன்! யான் நாடன் செயற்குப் பொருந்தேனாய் வருந்துவது, அவன் பிரிவிற்கன்று; அவன் காலந்தாழ்த்தின் நொதுமலர் வரைவு நேரும்மே என்பதற்கே ஆற்றுமை யுடையேனாயினேன்' எனறு கூறுகின்றாள

உ0ச. ஒன்றே னல்லேன் ஒன்றுவேன் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகோய மலரும் நாடனை
டொன்றேன் றோழி ஒன்ற னானே.

—கபிலர்

(இ - ள்.) தோழி—, ஒன்றேன் அல்லேன் ஒன்றுவேன் - யான் தலைவன் செயலுக்குப் பொருந்தி ஒழுகாதேன் அல்லன், பொருந்தி ஒழுகும் இயலபுடையேமேனை ஆவன், குன்றத்துப் பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை - மலையிடைகண்ணே தம்முட் போர் செய்த களிற்றியானைகளாலே மிதிக்கப்பட்ட நெரிந்த அடியினையுடைய வேங்கைமரம், குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்-குறவருடைய மகளிர்கள் தங் கூந்தலிலே சூடும் பொருட்டாக, நின்று கோய மலரும் நாடனை டொன்றேன் - ஏற வேண்டா மல் நிலத்தே நின்றபடியே பறித்துக்கொள்ளும்படி தாழ்ந்து மலராகின்றும் நாட்டையுடைய தலைவன் செயலோடே, ஒன்ற னானே ஒன்றேனா - அவன் வரைவுநீட்டித்தவிடத்து நொது மலர் வரைவுநேரு மாயின் என் செய்வதென்னும் அவ்வோ நிடையூற்றிற்கே யான் பொருந்தி ஆற்றேனாவது.

விளக்கம்:—ஒன்றுதல், தலைவன் செயலுக்குப் பொருந்த ஒழுகுதல். வரைபொருட்குப் பிரிந்தான் வருந்துணையும் அஃதவன் கடமை யாதல் கருதி ஆற்றியிருத்தல் தலைவி கடனாகவும், அவள் ஆற்றாளாதல், பொருந்த ஒழுகாமை என்க.

'தலைவன் பிரிந்தமைக்குப் பொருந்தியே இருக்கின்றேன்; அவன் காலம் நீட்டித்தவழி ஏதிலார் வரைவிற்குத் தாய் முதலியோர் உடம்படின் என்னும்' என்று எண்ணுங்கால், 'ஆற்றுமை கொள்கின்றேன்' என்றாள் என்க.

இதனால், தலைவன் தமர் வரைவுடன் வந்தபொழுது தலைவியின் தமர் வரைவிற்கு உடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்டனர் என்பது புலனும். தலைவியின் தமர் இவள் களவின்கண் கற்புக்கடம் பூண்டமை அறியாராகலின், தலைவன் தமர் வரைவொடு வந்தமையை நொதுமலர் வந்தாங்குக் கொண்டு உடன்படுவாரும் மறுப்பாருமாயினர்

என்க. தலைவி கற்புக் கடம்பூண்டாள் என்னுந் துணிவானே தலைவன் வரைபொருட்குப் பிரிந்தான்; பிரிந்தவன் விரைந்துவந்து ஏனையோரையும் உடம்படுவித்து வரைந்துகோடல் நன்றும்; தாழ்ப்பின் நொதுமலர்க்குத் தமர் வரைவுடம்படின் யாம் என் செய்கேம் என அஞ்சுகின்றேன என்றாள் என்க.

தமர் கற்புக்கடம் பூண்டமை அறியாதாராய்த் தன் பருவநலம் ஒன்றே கருதி, இனி இவட்கு மணவினை நிகழ்த்தல் வேண்டும் என்று கருதியிருகின்றாராகலின், தகுதி கண்டவிடத்து நொதுமலர்க்கும் வரைவுடன்படுதல் கூடும்; இவ்வாற்றால் யான் வரைவொடு வருவார்க்கு எளியளாயிருந்தேன் என்பாள், களிற்றால் பிடிக்கப்பட்ட நெரிதாள் வேங்கை குறவர் மகளிர் நின்று கொய மலரும் எண்மையுடைத்தாஞற் போன்று, யான் இருந்தேன் என்றாள் என்க.

இச செய்யுட்குத் தொல்லாசிரியரும் பிற ஆசிரியரும் தத்தம் கருத்திற் கேற்கப் பற்பலவாறு உள்ளுறைப் பொருள் கண்டோதியுள்ளனர். துறையும் வேறு வேறு கூறுப.

தலைவன் பிரிவால் வேறுபட்டமை யறியாது பருவத்தானே வேறுபட்டனர் என்று தமர் கருதுகின்றனராகலின், களிற்றால் பிடிக்கப்பட்டுத் தாள் நெரிந்த வேங்கையைத் தனக்கு உவமை கூறித் தன் மெலிவே நொதுமலர் வரைவிற்கு ஏதுவென்பாள், 'நின்று கொய மலரும்' என்றாள்.

பாட்டு – ௩0௬ : தலைவன் கூற்று

துறை :—பொருள்முற்றி மடுத்தருளும் தலைமகன் தோழிக்கு உரைப்பானாக கிழத்தியைத தெருட்டியது. அஃதாவது, பொருளீட்டப பிரிந்த தலைவன், நன்கு பொருளீட்டிக் கொண்டு தன மனைக்கு மீண்டுவந்த பின்னர்த் தோழியை நோக்கித தான் பிரிந்துறைந்த காலததே இருந்த நிலையினைக் கூறுவான் போலத தலைவிகுத தன் அன பின்னிலைமையை உணர்தியது.

இதனகண், தலைவன் தலைவி கேட்கும்படி தோழியை நோக்கி, 'யாம் பொருளீட்டுமெ பொருட்டு இறப்பரும் குன்றம் கடந்தவிடததும், ஆண்டு நினைதற்குரியன பற்பல இருந்தும், அவையிற்றை நினையேமாய்த் தலைவியின் நட்பொனறையே இடையறாது நினைந்திருப்பே மாயினேம்,' என்று கூறுகின்றான்.

௩0௬. அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கறங்கும்
இறப்பருங் குன்ற மிறந்த யாமே
குறுநடை பலவுள் ளலமே நெறிமுதற்
கடற்றிற் கலித்த முடச்சினை வேட்சி

தகாயவிழ் பல்போது கமழும்
மையிருங் கூந்தன் மடந்தை நட்பே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) குறுநடை - குறிய நடையினையுடைய தோழி கேள், அறந்தலைபபட்ட நெல்லி அம் பசுங்காய் - அறச்செய லிலே தலைப்பட்ட நெல்லியினது அழகிய பசிய காய்கள், மறப் புலிக் குருளை கோள் இடம் சறஙகும் - வலியையுடைய புலிக் குட்டிகள் கொள்ளற்குரிய இடத்தின்கண்ணே வீழ்ந்து உருளா நிற்கும், இறப்பு அரும் குன்றம் இறந்த யாம் - கடத்தற்கரிய மலைகளைக் கடந்துசென்ற யாம், பலவுள்ளலம் - ஆண்டிருந்து நினைத்தற்குரிய பலவற்றையும் நினைந்தோமில்லை, பின்னர் எதனை நினைந்தோமெனின், நெறிமுதல் கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி - வழியினகண்ணே காட்டிடத்தே தழைத்த வளைந்த கொம்புகளையுடைய வெட்சியினது, தளை அவிழ் பல் போது கமழும் மைஇருங் கூந்தல் மடந்தை நட்பே - கட்டவிழ்ந்து மலர்ந்த பலவாகிய மலர்கள் மணங்கமழ்தற்கிடமான மை போன்று கறுத்த கூந்தலையுடைய தலைவியினது நட்பொன்ற னையே இடையறாது நினைந்திருந்தேம்.

விளக்கம்:—நெல்லிக்கனி நீர் வேட்கை தணிக்கும் இயல்புடையது; ஆகலின், பாலைநிலத்தே ஆறுசெல்வோர் தம் நீர்வேட்கை தணிக்கும் நெல்லியினது காய் என்பான், 'அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்' என்றான்; ஆறுசெல்வோர்க்கு நீர் வழங்குதல் சிறந்த அறமாதலும் அறிக. நெல்லிக்காய் கட்கினிமை பயத்தலான், 'அம்பசுங்காய்' என்றான்.

நெல்லி, பாலைநிலத்தே செல்வோர் நீர்வேட்கையைத் தணித்துப் புரக்கும் என்பதனைக்,

"குறும்பொறை மருங்கிற் கோட்சுரம் நீந்தி
நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி,"

எனவரும் அகநானூற்றுச் செய்யுளானும் அறிக. நெல்லிமரம் பாலைக் கருப் பொருளாதலை,

"பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்" (அகம் கூ.)

எனவரும் செய்யுளானறிக.

மறப்புலிக் குருளை என்றது இளம்புலியை. நெல்லி அறந்தலைப் படுமிடமே அக்கனியை உண்ணவரும் நீர்நசை வம்பலரைப் புலி

பாய்ந்து கொல்லும் இடமுமாம் என்பான், 'மறப்புலிக் குருளை கோள் இடம் கறங்கும்' என்றான்; கறங்குதல் உருளுதல் என்க. இதனால் ஆற்றினது நீங்குணர்த்தியவாறுணர்க. குறிஞ்சி திரிந்தபாலை என்பது பட, 'இறப்பரும் குன்றம்' என்றான். இறப்பருங்குன்றம் - கடத்தற் கரிய மலை அரிதிற் கடந்தேம் என்றவாறு. குறுநடை - அன்மொழித் தொகையாய் விளியேற்று நின்றது. பொருளீட்டற்குச் சென்றோர் அதுபற்றி நினைதற்குரியன பற்பல உளவாகலின் பலவுள் எலம் என்றான். நெறி - வழி. முதல்: ஏழாவதன் செயல்லுருபு. முட்டினை என்றும் பாடம். முள்போன்ற கூர்த்த கொம்பெனப் பொருள் கூறுக.

மீண்டு வந்த காலம் கார்கால மாதலின், தலைவி கூற்றிலே அக காலத்தே மலர்ந்த வெட்சி மலர் கமழ்தலை நுகர்ந்தாளாகலின் அந்நினை வான் வெட்சி தலையவிழ் பல்போது கமழும் கூந்தல் என்றான் என்க.

இஃது, எம்மை நினைத்துமறிதிரோ என்று விளைய தோழிக்குத் தலைவி அண்மையளாயகாலைத் தலைவன் கூறியதாகக் கொள்க.

பாட்டு - உகo : தோழி கூற்று

துறை :—பிரிந்து வந்த தலைமகன் நன்கு ஆற்றுவித்தாய் என்றற்குத் தோழி உரைத்தது. அஃதாவது, பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வந்த பின்னாத் தோழியை நோக்கி, 'யான் வருந்துணையும் தலைவியைப் பெரிதும் முயன்று ஆற்றுவித்தனை' என்று பாராட்டினனாக தோழி அத் தலைவனுக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கித, 'தலைவி, ஆற்றி யிருக்குமாறு விருந்து வருதலைக் கரையுமுகத்தானே முனைர் அறிவித்த காக்கைக்கு நள்ளி கானத்து ஆயின் ஆன்கள நெய் முழுதையும, தொண்டியில் விளைந்த வெண்ணெல் அரிசி முழுதையும ஆக்கிய சோற்றோடே கலந்த பல கலத்திலே ஊட்டினும் தகுந்த கைமமாறாகாது,' என்கின்றாள்

உகo. திண்டேர் நள்ளி கானத் தண்டார்
பல்லாப் பயந்த நெய்யிற் றுண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

—காக்கை பாடினியார் நச்செள்ளையார்.

(இ - ள்.) தலைவ! திண் தேர் நள்ளி கானத்து அண் டர் - திண்ணிய தேரையுடைய நள்ளி என்னும் வள்ளலுடைய

முல்லை நிலத்திலே வாழும் இடையர்களினது, பல் ஆ பயந்த நெய்யில் - பலவாகிய ஆக்கள உதவிய நெய் முழுதுடன், தொண்டி முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு - தொண்டி என்னும பேரூர் முழுவதும் ஒருசேர விளைந்த வெள்ளிய நெல்லரிசியாலாய விரும்புதற்குக காரணமான சோறும முழுவதையும கலந்து, எழுகலத்து ஏந்தினும - நாடோறும ஏழெழு உண்கலங்களிலே ஏந்தி ஊட்டினும, என் தோழி பெருந்தோள் நெகிழுதத செல்லறகு - தலைவியினது பெரிய தோள்கள மெலிவிதத துன்பதிற்கு உய்தியாக, விருந்து வரக் கறைந்த காக்கையது பலி - விருந்தினர வருமாறு கறைந்த அக்காக்கைக் கிடும் அப்பலி, சிறிது - சிற்றளவினதுவே ஆகும.

விளக்கம:—'நும் வருகையைக் காக்கை கரைந்த நன்னிமித்தத் தாலே உணர்ந்து தலைவி ஆற்றியிருந்தனள்; என்னுடைய தேற்றுரையானன்று,' என்று தோழி தலைவனுக்குக் கூறினள் என்க.

நள்ளி - தமிழ வள்ளல எழுவருள் ஒருவன். இவன் வண்மையிற் சிறந்தவாறே வீரத்திலும்மேம்பாடுறறிருநதமை தோன்றத 'திணை தேர் நள்ளி,' என்றாள்.

".....ஆர்வமுற்று,
உள்ளி வருநர் உலவுநனி தீர்த
தள்ளா தீயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி." (புறம் - கநிஅ)

என்றும்,

".....கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த மூனைவிளக்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்." (சிறுபாண் - கoச-எ)

என்றும், பிறசான்றோரும் இவன் வள்ளன்மையோடு மறச் சிறப்பையும் சேர்த்தே புகழ்தலறிக

கானம் - காடு; முல்லைநிலம். நள்ளியின் காட்டில் வளமிக்கு ஆயரும் ஆனும் சிறந்தமையானே அவ் விடையர் ஆனின் நெய் மிகுதி என்பாள், 'நள்ளி கானத்து அண்டர் பல்லா பயந்த நெய்,' என்றாள். நெய்யில்: வேற்றுமை மயக்கம். நெய்யோடு என்க. தொண்டி முழுதுடன் விளைந்த நெல் என்ற குறிப்பானே பல்லா முழுதுடன் பயந்த நெய்யென்றும் ஓதுக. சோற்றினும், வெண்ணெல் வெஞ்சோறு சிறந்ததாகலின் அதனனம் கூறினாள். காக்கையைத் தெய்வமாகக் கருதியிடுதலின் பலி என்றாள். தொண்டி - ஒரு சிறந்த பூதூர். ஒரு மூதூர் முழுதும் விளைந்த நெற் சோற்றையும், நெய்யையும் எழுகலத் தேந்தல் இயலாதாகலின் நாடோறும் எவ் வேழு கலங்களிலே ஏந்தினும் என்றும். தெய்வத்திற்கு மடை கொடுப்போர் ஒன்று மூன்று

ஐந்து ஏழு என்னும் ஒற்றை எண்பட்ட கலங்களில் இடுதல் மரபாகலின் அக் கலங்களின் பேரெல்லையாகிய ஏழு கலம் கூறினள்.

செல்லல் - துன்பம் - செல்லற்குக் கரைந்த என்றது நோய்க்கு மருந்தென்றூற்போல வந்தது. செல்லற்குத் தீர்வாகக் கரைந்த என்க. தீர்வு - விருந்து வருதல். காக்கை இல்லத்திருந்து கரையின் விருந்து வரும் என்பது ஒரு நம்பிக்கை.

தலைவ! தலைவியை ஆற்றுவித்தாரைப் பாராட்டவேண்டிற் காக்கையே பாராட்டற்பாலது என்றவாறு.

"காலத்தி னூற்செய்த நன்றி," யாகலின் காக்கைக்கு இத்துணைப் பெரிய பலியும் சிறிதாயிற் றென்க

பாட்டு - உகக : தோழி கூற்று

துறை —இடைச் சுரத்துக் கவலுவன கண்டு, 'நம்மை ஆற்றூர்,' என நினைந்து, 'மீள்வர் கொல்?' எனக் கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லியது. அஃதாவது, தலைவன் பொருள் வயிற் பிரிந்து சென்றபின்னர், அவன செல்லுகின்ற வழியின் கண்ணே துணை பிரிந்து வருந்தும பறவை விலங்கு முதலியன கண்டு, 'யாமும் அங்ஙனம் வருந்துவோம்,' என்று கருதி, 'மீள்வனே?' என்று கவன்ற தலைவிக்கு, 'அவன் அங்ஙனம் மீள்வானல்லன்,' என்று தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நீரில் வைப்பிற் சுரன் இறந்த நந்தலைவா, நம்மை ஆற்றூர் எனக் கருதி மீள்வரோ என்று நீ அஞ்சவேண்டா, நம்மைப் பிரிந்து செல்லத் துணிந்து போனவர், அங்ஙனம் மீள்வர் என்று நினைத்தல் எங்ஙனம்?' என்று கூறுகின்றாள்.

உகக. அஞ்சி லோதி யாய்வளை நெகிழ
நேர்ந்துநம் அருளார் நீத்தோர்க் கஞ்சல்
எஞ்சினம் வாழி தோழி யெஞ்சாத்
தீய்ந்த மராஅத் தோங்கல் வெஞ்சினை
வேனி லோரிணர் தேனை மேஇ
ஆராது பெயருந் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே.

—காவன்முல்லைப் பூதனார்.

(இ - ள்.) தோழி—, எஞ்சாத் தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை வேனில் ஓர் இணர் - எஞ்சி நின்ற வேனிலால் வெம்பிய மராமரத்தினது உயர்தலையுடைய வெவ்விய கிளையின்கண்

வேனிற்காலத்தே மலர்ந்த ஒற்றைப் பூங்கொத்திற் றேனை, தும்பி தேனூடு ஊதி ஆராது பெயரும் - தும்பி என்னும் வண்டு தேன் என்னும் வண்டுடனே ஊதி அதன்கண் தேனின் மையின் உண்டு நிரம்பாது வறிதே மீளாநின்ற, நீர் இல் வைப் பில் - நீரில்லாத இடங்களையுடைய, சுரனிறந்தோர் - பாலை நிலத்தைக் கடந்து சென்றவரும, அஞ்சில் ஓதி ஆய் இழை நெகிழ - அழகிய சிலவாகிய கூந்தலையுடைய நின்னுடைய அழகிய வளைகள் நெகிழும்படி, நோகது நம் அருளார் நீத் தோர்க்கு - உடம்பட்டு நமமை அருளாது பிரிந்தோருமாகிய தலைவர் பொருட்டு, அஞ்சல் எஞ்சினம் - அஞ்சுதலைத் தவிர்ந் தோம்.

விளக்கம்:—அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தல். கூந்தல் ஐந்து பகுதியாக ஒப்பனை செய்யப்படுதலால் சில் லோதி என்றாள். தாம் பிரிந்தவுடன் நின் வளை நெகிழும் என்பது அறிந்து வைத்தும் அருளின்றிப் பிரிந்த வன்கண்ணா இடைசுர மருங்கில் நம்மை நினைந்து மீள்வர் என்று நினைதலும் வருந்துதலும், 'பேதைமை,' என்பாள், 'அஞ்சல் எஞ்சினம்,' என்றாள். எஞ்சினம் - தவிர்ந்தேம்.

எஞ்சாச சினை, தீய்ந்த மராத்துச சினை எனத் தனித்தனிக் கூட்டுக. எஞ்சா, செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினை யெசசம்; தீய்ந்த மராதது சினையில் மலர்ந்த ஒற்றை இணர் என்க. தேன் - ஒருவகை வண்டு, தும்பி - ஒருவகை வண்டு, இருவகை வண்டும் பசி மிகுதியால் தம்முட் போர் செய்யாமல் ஒத்து ஊதின என்க. ஊதியும் பசி தீராது வறிதே மீளும் என்பாள், 'ஆராது பெயரும்,' என்றாள். ஆராது - வயிறு நிரம்பப் பெறாது. பசியோடே என்றவாறு.

ஒரு தும்பிக்கும் தேன் கிடைக்கப்பெறாத வறிய பாலை நிலத்தே செல்லத் துணிதல் பொருளீட்டற்கண் உள்ள ஊக்கத்தானே யாக லின், அத்துணை ஊகமுடையோர் இடைசுரத்தே மீளமாட்டார் என்னும் எதுவானும், நம்மியல் தெரிந்தும் நமக் கருளாது பிரிய வல்லுநர் இடைசுரத்தே கவல்வன கண்டு மீளார் என்னும் எது வானும், 'யாம் அவர் இடைசுர மருங்கில் பிள்வமோ,' என்று கவல வேண்டா என்பாள், இரண்டு ஏதுகளும் கூறி, 'அஞ்சல் எஞ்சினம்,' என்றாள் என்க.

தலைவி அங்ஙனம் அஞ்சுதலைக் குறிப்பானறிந்த தோழி அஃதறியா தாள்போல, அதற்கு அஞ்சவேண்டாமை உணர்த்தியவாறு.

பாட்டு - உகஉ : தோழி கூற்று

துறை:—குறை நேர்ந்த தோழி, குறை நயப்பக் கூறியது. அஃதாவது, தலைவியைக் கூட்டுவித்தற்பொருட்டுத் தோழியி னிடம் தலைவன் வேண்டிக்கொண்டாளுக, அதற்கிணங்கிய தோழி தலைவியின்பால் வந்து தலைவனை ஏற்றுக்கொள்ளும்படி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'கொண்கனுடைய நெடுந்தேர் மணி யொலிக்கும்படி காண வந்து நாணப் பெயரும், காமம் இரங்கத்தக்கது; அஃது அழியக் கடவது; யான் தலைவன் நிலை கண்டு இரங்குகின்றேன்,' என்று கூறுகின்றாள்.

உ௯உ. கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தெண்கட லடைகரைத் தெளிமணி யொலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே.

—நெய்தற் கார்க்கியன்.

(இ - ள்.) தோழி—, கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர் - தலைவன் ஊராகின்ற கொடுஞ்சியையுடைய நெடிய தேர், தெண் கடல் அடை கரைத் தெளிமணி ஒலிப்ப - தெள்ளிய நீரையுடைய கடலை யடைந்த கரையின்கண்ணே, காண வந்து நாணப் பெயரும் - யாம் காணும்படி வந்து பின்னர் யாம் நாணும்படி மீளாநிற்கும், காமம் அளிது - இங்ஙனம் தலைவனை அலைக்கும் காமநோய் இரங்கத்தக்கது, மன்ற விளிவது - அது தேற்றமாக அழியற்பாலதன்றாம, யான் நோகு - யான் அவனிலையை எண்ணி வருந்தாநின்றேன்.

விளக்கம்.—கொண்கன் - தலைவன்; நெய்தனிலத் தலைவன். கொடுஞ்சி - தாமரைமுகை வடிவிற் செய்து தேர் முகப்பே நடப் படுவதோர் உறுப்பு. இதனைத் தேரூருந தலைவர் கையாற் பற்றிக் கொள்வர் என்பது, "மணித்தேர்க் கொடுஞ்சி கையாற பற்றி," (சு-சஅ) என வரும் மணிமேகலையானும் உணரலாம். தம்பால் குறையிரந்து வந்தோர் அது பெறாமல் வறிதே மீள்வது சான்றோர்க்கு நாணுத் தருவ தென்றாகலின், 'காண வந்து நாணப் பெயரும்,' என்றாள். பன்னாளும் இங்ஙனமே வந்து வறிதே மீள்பவன் மீண்டும் வருதலை எண்ணின், அவன் மனத்துறையும் காமநோய் எத்தகைய கொடுமை யுடையதோ என்று இரங்குகின்றேன் என்பாள், 'காமம் அளிது,' என்றாள் "செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை," காமத்திற் கின்றாகலான், அது அளித்தென்றவாறு.

"செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
எற்றென்னை யுற்ற துயர்." (குறள் - கஉ௩சு)

என்னும் திருக்குறளையும் நினைவு கூர்க.

இங்ஙனம் அவன் நிலை நீடுமாயின் அவன் இறந்து படுவன் என் பாள், இறந்துபாட்டைக் காமத்திற்கேற்றி, 'மன்ற விளிவது,' என்றாள். மன்ற - தேற்றப் பொருளது. இங்ஙனமாகலின், 'யான் பெரிதும் வருந்துகின்றேன்' என்பாள், 'யான் நோகு' என்றாள். நோகு: தன்மை ஒருமை வினைமுற்று. ஆகலின் தலைவனை இந்நிலைக்கண் நீடிக்கவிடாது நீ ஏற்றுக் கோடல் வேண்டும் என்பது குறிப்பு.

பாட்டு - உகஙூ : தோழி கூற்று

துறை :—'நம்பெருமான் நம் பொருட்டு இடைநின்று மீள்வர்' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது. அஃதாவது, வினைவயிற் பிரிந்து சென்ற தலைவர், நம்நிலை யுணர்வராகலின், தாம் மேற்கொண்ட வினையின்கட் செல்லாது இடையில் மீண்டு விடுவரோ என்று கவலை கொண்ட தலைவிக்கு அவர் அங்ஙனம் மீளார் எனத் தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் சென்ற பாலைநில வழியின்கண், ஆண்மான் தன் குட்டிக்குத் தன் கடமையை வழுவாது செய்வதைக் காண்பர் ஆகலின், அக்காட்சியே அவரைக் கடமையின்கண் ஊக்க, அவர் தம வினை முற்றியே மீளுவர்; நீ கவலற்க!' என்று தேற்றுகின்றாள்.

உகஙூ. நசைநன் குடையர் தோழி ஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉப்பெருந் ததரல்
ஒழியின் உண்டு வழுவி னெஞ்சிற்
றெறித்து நடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி
நின்று வெயில் கழிக்கு மென்பநம்
இன்றுயின் முனிநர் சென்ற வாறே.

—கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்.

(இ - ள்) தோழி—, நசை நன்கு உடையர் - தலைவர் நின்பால் விருப்பம் மிகவும் உடையராயினும், நம இன்றுயில் முனிநர்-நின் தோளின்கண் துயிலும் இனிய துயிலையும் கடமை நினைந்து வெறுத்தனராய், சென்ற ஆறு - நம்மைப் பிரிந்து சென்ற பாலைநில வழியின்கண், ஞெரேரெனக் கவைதலை முதுகலை காலின் ஒற்றி - விரைந்து கவைத்த கொம்புகளையும் தலையையுமுடைய முதிய ஆண்மான் தனது காலாலே உதைத்து, பசிப்பிணிக்கு இறைஞ்சிய பரூஉப் பெருந்ததரல்-பசிநோயைத் தீர்க்கும் பொருட்டு வளைத்த பரிய பெரிய மரப்பட்டையினை, ஒழியின் உண்டு - தன் குட்டி உண்டெஞ்சியதனைப் பின்னர்த் தான் உண்டு, வழு இல் நெஞ்சின் - குற்றமற்ற நெஞ்சினையுடே, தன் தெறித்த நடைமரபின் மறிக்கு நிழலாகி நின்று வெயில் கழிக்கும் என்ப - தன்னுடைய துள்ளிய நடையினையுடைய இயல் பிற்றாகிய குட்டிக்கு நிழல் உண்டாகுமாறு நின்று அதன் மேற்படுமை வெயிலைப் போக்கும் என்று கூறுவர்.

வினக்கம்:—'தலைவர் நின்பாற் கொண்ட விருப்பம் ஒன்றனையே கருதி, நீ, இடையின் மீள்வரோ? என்று கவல்கின்றனை; அவர் அத்தகைய நசையுடையரே' என்பாள், 'நசைநன்குடையர்' என்றாள். நசையினும் கடமை பேணல் பெரிதும் உடையர் என்பாள், 'நம் இன்றுயில் முனிகர்' என்றாள். என்னை? ஒப்பற்ற பேரின்பமாகிய நின் றோட்டுயிலையும் முனியச செய்தது, 'வினையே ஆடவர்க் குயி'ரென்னும் தங கடமை உணர்ச்சியின் தூண்டுதலேயாம் என்றவாறென்க மேலும் இடைசுரதலைவியும் இக்கடமையை வலியுறுத்தும் காட்சியையும் பெறுவராகலின், ஊக்கந்தளராது வினைமேற் செல்வர் என்பாள், 'ஆற்றின் கண் கலைமான் தன்மறிக்குப் பட்டையுரித்துண்ணக் கொடுத்து வெயிற் குத் தன்னிழலையே கொடுத்தளிக்கும் என்ப' என்றாள். இக்காட்சியும் பண்டு தலைவரே சொல்ல யாம் கேட்டிருந்தே மல்லமோ என்பாள், 'என்ப' என்றாள்.

நும்மிருவர்க்கும் பொதுவினின்ற நசையினும் தமக்கே சிறந்துரிமையுடைய கடமையுணர்ச்சியிற் குறைந்தவரல்லர் நந்தலைவர் ஆகலின், அவர் இடைநின்று மீள்வர் எனக் கவலவேண்டா என்று ஆற்றுவித்த வாறும்.

நசை - விருப்பம். ஞேரென - விரைவுக குறிப்பு. கவைத்தலை - கவர்த்த கொம்புகளையுடைய தலை முதுகலை - அகவை முதிர்ந்த ஆண்மான் ஒற்றி - உதைத்து. இறைஞ்சிய - வளைத்த. ததர்ந்திதைந்த மரப்பட்டை. தன்குட்டியை முன்னா ஊட்டி ஒழிந்த துணணல் அறமாகலின், 'வழுவில் நெஞ்சின்' என்றாள். மறி - குட்டி. நிழலாகி நின்று - தன் உடல் நிழல் குட்டிகு ஆகும் படி வெயிலை மறைத்து நின்றென்க. தான வருந்தியும கடமை பேணற்கு இது நல்ல எடுத்துக் காட்டாதல் அறிக. தலைவர் நசையால் வருந்தியும தங்கடமையை வழுவாது செய்வர் என்றுணர்த்தியவாறு.

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிது கொல்
தாமரைக கண்ணு னுலகு" (குறள்: - ககஎ)

என்பவாகலான், ஈண்டுத் தலைவி தோட்டுயிலை நம் இன்றுயில் என்றாள் தலைவியோடு தனகு வேற்றுமை கருதாது 'நம் இன்றுயில்' என்றாள் என்க.

பாட்டு - உகச: தோழி கூற்று

துறை:—தோழி வெறியாட்டெடுத்துக் கொண்ட விடத்து அறத்தொடு நின்றது. அஃதாவது, தலைவி இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் இடையூறுகளால் தலைவனைக் காணப்பெறாமெலிந்தமையைச் செவிலி தெய்வத்தான் வருதலெனக கருதி, வேலற்கு வெறியாட்டெடுத்த பொழுது, 'தலைவியின மெலிவு தெய்வத்தான் ஆயதன்று; ஒருதலைவனுல் ஆய' தெனத் தோழி செவிலிக்கு அறிவித்தது

இதன்கண், 'தலைவியின் மெலிவிற்குக் காரணமான தழையுடையைத் தலைவிக்கு ஈந்த செயலை மரம் வாளா நிற்க, அவள்

நோயோடு யாதும் தொடர்பிலாத பிறிதொன்றற்கு மாலை சூட்டி இவ்வூர் மயங்கா நின்றது' என்று, தோழி செவிலி கேட்பக் கூறுகின்றாள்.

உகச. மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும் புறந்தாழ்
அஞ்சி லோதி அசையியற் கொடிச்சி
திருந்திழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய அயல
தரலை மாலை சூட்டி
ஏமுற் றன்றிவ் வழுங்க லூரே.

—கூடலூர்கிழார்.

(இ - ள்.) மரங்கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய-மரங்களை வெட்டி அழித்த குறவன் கொல்லையைக் கொத்தி விதைக்கப்பட்ட, பிறங்கு குரல் இறடி காக்கும் - விளங்குகின்ற கதிரையுடைய தினையைக் காவல் செய்யாநின்ற, புறம் தாழ் அம் சில் ஓதி அசை இயல் கொடிச்சி - முதுகிலே சரிந்துகிடக்கும் அழகிய சிலவாகிய கூந்தலையும் கட்புலனுகியியங்கும சாயலினையும உடைய தலைவியினது, திருந்து இழை அல்குற்குப் பெருந்தழை உதவி-திருந்திய அணிகலனையுடைய அல்குலுக்கு இயையப் பெரிய தழையுடையை அளித்து, செயலை முழுமுதல் ஒழிய - அசோக மரமாகிய பெரிய மரம் தன்கட்குப் புலனாகாது ஒழியாநிற்ப, இவ்வழுங்கல் ஊர் - இவ்வாரவாரத்தையுடைய ஊர், அயலது அரலை மாலை சூட்டி - தலைவியோடு அயன்மை யுடைய மறவரது மரத்திற்கு அரலை மலர் மாலையை அணிந்து, ஏமுற்றன்று - மயங்கா நின்றது

விளக்கம் :—தலைவியின் மெலிவிற்குக் காரணம் இன்னதென்று அறியாது இவ்வூர் மயங்கி வெறியாடா நின்றது, என்றவாறும்.

மரங் கொல்லுதல் - மரங்களை வேரோடு களைந்தழித்தல். குறிஞ் சிக்கண் தினைப்புனம் பண்படுத்தும் குறவர் ஆண்டுள்ள மரங்களை வெட்டி அழித்துப் பின்னர்க் கொத்திப் பண்படுத்தி விதைப்பது மர பாகலின், 'மரங்கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய இறடி' என்றாள். இறடி - தினை. தினை, கதிரீன்ற பின்னரே கிளிகடிதல் இயல் பாகலின், 'பிறங்கு குரல் இறடி காக்கும் கொடிச்சி' என்றாள். கொடிச்சி - குறிஞ்சிநிலப் பெண். ஈண்டுத் தலைவி என்னும் பொருட்டு. தலைவி, தினைப்புனம் காக்குமிடத்தே ஒருதலைவனை மணந் தாள் என்பதுணர்த்தற்கு 'இறடி காக்கும் கொடிச்சி அல்குற்குப் பெருந்தழை யுதவி' என்றாள். தலைவன் அசோகத் தழையுடை அளித் தமையை அசோகின் செயலாக்கி, 'செயலை தழை உதவி ஒழிய' என் றாள். தழையுதவியதே தலைவி மெலிவிற்குக் காரணமாதலை ஊரவர்

அறிந்திலார் என்பாள், 'உதவி ஒழிய' என்றாள்; ஒழிய என்றது, காணப் படாது மறைய என்றவாறு. செயலே பெரிய மரமாயிருந்தும், அது உதவிய உடை பெருந்தழையாயிருந்தும், காணப் படாமையின் 'முழு முதல் ஒழிய' என்றாள். முழுமுதல் என்பதற்கு முழுமரமும் என்க. உணர்வாரேல் தழையுதவிய தலைவர்க்குத் தலையை மாலை சூட்டுவிக்க முயல்வார் மன்' உணராமையாலே தொடர்பிலாத பிறிதோர் மரத் திற்கு மாலை சூட்டலாயினர் என்பாள், 'அயலது அரலை மாலை சூட்டி' என்றாள். அயலது என்றது, ஈண்டுக் கடப்பமரத்தை. வெறியாடு வார் அதற்கே மாலை சூட்டுதல் மரபாகலின் என்க.

அயலது என்றற்கு "முருகனுக்கு" என்பாரு முளர். அரலை-அரளி. எமமுற்றன்று என்பது எழுற்றன்று என்று விகாரப்பட்டு நின்றது. எமம் - மயக்கம்; "எழுற்றவரினும் எழை" (திருக்குறள்-அஎக) என் புழிப் பரிமேலழகர், எழுற்றார் - பித்துற்றவர் என்று உரை கூறுதல் அறிக. ஊர் என்றது, செவிலியை.

இதனால் தலைவிக்குத் தழைபுடை நல்கிய தலைவன் ஒருவனுளன்; அவனுலாயது இம்மெலிவு; தெய்வத்தாலையதன்று, எனக் குறிப்பா னுணர்த்தப்பட்டமை உணர்க.

பாட்டு - உ கரு : தோழி கூற்று

துறை :—பிரிவிடைத் தோழி வற்புறுகதியது அஃதா வது, தலைவன் பிரிந்திருந்த காலக்கே ஆற்றுமை எய்திய தலைவி யைத் தோழி ஆற்றுவித்தது.

இதனகண், தோழி தலைவியை நோக்கி, 'நீ வருந்தாதே கொள்! இனறே தலைவர் மீண்டுவருவதாகக் கூறிச்சென்ற நாளாகும்; ஞாயிற்று மண்டிலமும் மறையா நின்றது; பிரிந்த தலைவர் இப்பொழுதே வந்தினிவர்,' என்று கூறுகின்றாள்.

உகரு படரும் பைப்பயப் பெயரும் சுடரும்
என்றாழ் மாமலை மறையும் இன்றவர்
வருவர்கொல் வாழி தோழி நிரில்
வறுகயங் துழை யிய விலங்குமருப் பியானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கிற் சுரனிறந் தோரே.

—மதுரை அளக்கர்நாஞர் மகஞர் மள்ளஞர்

(இ - ள்.) தோழி -, வாழி-, படரும் பைப்பயப் பெயரும்-தினது பிரிவாற்றுத் தன்பமும் நின்னைவிட்டு மெல்லமெல்லக் கழியா நிற்கும், சுடரும் என்றாழ் மாமலை மறையும்-ஒளிர்கின்ற ஞாயிறும் பெரிய மலையிடத்தே சென்றுமறையா நிற்கும் ஆகலின்,

நீர் இல் வறு கயந் தழைஇய இலங்கு மருப்பு யானை-நீர் இல்லாத வறிய குளத்தைத் தழாவிய விளங்குகின்ற கொம்புகளையுடைய யானை, குறும்பொறை மருங்கின் அமர் துணை தழீஇ - சிறிய மலையின் பக்கத்தே தன்னால் விரும்பப்பட்ட பெண் யானையைத் தழுவிக்கொண்டு, கொடுவரி இரும்புலி காக்கும் - வளைந்த கோடுகளையுடைய பெரிய புலி காக்காமல் பாதுகாவாநின்ற, நெடுவரை மருங்கில் சுரன் இறந்தோர் - நெடிய மலைப்பக்கத்தாகிய பாலையைக் கடந்து சென்றவராகிய, அவர் இன்று வருவர் - நந்தலைவர் இன்றே வருவர்.

விளக்கம்:—படர் - பிரிந்தோர் துணைவரை இடையறாது நினைந்து வருந்தும் துயர். பைப்பய - மெல்லமெல்ல. பெயர்தல் - நீங்குதல். சுடரும் - ஒளிர்கின்ற. என்றூழ் - ஞாயிறு மாமலை - ஞாயிறு மறைதற்கிடமான பெரிய மலை என்க. தலைவர் மீண்டு வருதற்குக் குறித்துச் சென்ற நாள் இன்றேயாகலின், 'இன்று வருவர்' என்றாள் என்க. கொல் - அசை. நீரில் வறுங் கயத்தைத் தழுவிய களிற்று யானை சூறும் பொறை மருங்கில் பிடியைப் புலி காக்காமல் காக்கும் என்றது, பொருள்நிமித்தம் வறிய பாலைநிலத்தே சென்ற தலைவர் விரைவில் மீண்டுவந்து நின்னைப் பிரிவுத்துன்பம் வருத்தாமல் அருளுவர் என்னும் குறிப்பிற்று. குறும்பொறை - சிறுமலை; குண்டுக்கல்லுமாம். அமர்துணை - விரும்புதற்குக் காரணமான பிடியானை. தழீஇ - தழுவி. பிரிவுத் துன்பத்திற்குக் கொடுவரி இரும்புலி உவமை. நெடுவரை மருங்கிற் சுரன் என்றது, குறிஞ்சி திரிந்த பாலையை. தலைவர் இன்று வருவர் என்று ஆற்றுவித்தபடியாம்.

பாட்டு - உகசு : தலைவி கூற்று

துறை:—பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் மீண்டு வருவன் எனக் குறித்த காப்பருவம் வந்த பின்னரும் தலைவன் வாராமையால் ஆற்றாளாய தலைவியைக் கண்டு தோழி வருந்தினளாக, அவளை நோக்கித் தலைவி கூறியது.

இதன்கண், தன்னிலை கண்டு கவன்ற தோழியை நோக்கித் 'தலைவி, நந்தலைவரோ சிறந்த பொருளீட்டலைக் கருதிப் பிரிந்து போயினர்; அவரை நினைந்து நினைந்து நாண் வருந்தாநின்றேன்; இவ்வமயத்தே, மழையோ எனக்கு இரங்காது என் உயிர் குறித்து மின்னி நின்றது; யான் எங்ஙனம் ஆற்றுகேன்?' என்று கூறுகின்றாள்.

உகசு. அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடார் எல்வளை நெகிழ ஏங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே

அன்னள் அளியள் என்னது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் இன்னுயிர் குறித்தே.

—கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்.

(இ - ள்.) தோழி—, அவரே கேடு இல் விழுப்பொருள் தருமார் - நந்தலிவரோ கேடில்லாத சிறந்த பொருளைக் கொணரும்பொருட்டு, பாசிலை வாடா வள்ளியங் காடு இறந்தோர் - பசிய இலைகளையுடைய வாடாத வள்ளிக்கொடி படர்ந்த காட்டைக் கடந்து சென்றார், யானே தோடு ஓர் எல்வளை நெகிழ ஏங்கிப் பாடு அமை சேக்கையில் படர்கூர்ந்திரின் - யானே தொகுதிபொருந்திய ஒளியையுடைய வளையல்கள் நெகிழும்படி கவலையுற்றுப் படுத்தலமைந்த படுக்கையின்கண்ணே கிடந்து அவரை நினைந்து வருத்தம் மிகாநின்றேன், மாமழை - கரிய முகில், அன்னள் அளியள் என்னது - அத்தகைய தனபகிலையினை இரங்காதாள் என்று கருதாது, என் இன் உயிர் குறித்து - எனது இனிய உயிரைக் கொள்ள எண்ணி, பெய்ய முழங்கி மின்னும் - மழைபெய்தற்கு முழங்கி மின்னுதலைச் செய்யா நிற்கும்; யான் என்செய்கேன்.

விளக்கம்:—அவர்: நெஞ்சறிசுட்டு. கேடில் விழுப்பொருள் என்றது, குறிப்பு மொழி. நிலையுதலற்ற பொய்ப்பொருள என்பது கருத்து. தருமார் - கொணர்தற் பொருட்டு வள்ளியங்காடு - வள்ளிக்கொடி படர்ந்த காடு; அம் - சாரியை; அழகிய காடுமாம் தோடு - தொகுதி. வளை நெகிழ்தல், உடன்மெலிவா னிகழ்ந்ததென்க. பாடு அமை சேக்கை - ஐந்துவகைப்படப் படுத்தலமைந்த படுக்கை; அவையாவன—"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி சேக்கையோ டைந்து" என்பன. படர் கூர்தல் - நினைவுத்துன்பம் மிகுதல். இரின் - அசைநிலை. அன்னள் என்னது என்றது, தினையிலள் பெண் துன்புறுநிலையினள் என்று இரங்காமல் என்றவாறு. பகைவரும் இதற்கையோர்க்கு அருளுதல் இயல்பாகவும் அருட்டொழிலே உடைய மழை இரங்காதாயிற்று என்றிரங்கியவாறு. மாமழை - சிறந்த மழையுமாம். முன்னர்ப் பெய்ததோ டமையாது பின்னரும் பெய்யும் என்பாள், 'இன்னும் பெய்யும்' என்றாள் 'பெய்ய முழங்கி மின்னும்' என்றது, என் உயிர் கோடற்குத் தன்னலாய எல்லா உபாயங்களானும் முயலாநின்றது என்றவாறு. பெய்ய முழங்கி மின்னுதலால், 'என்னுயிர் கவர முயலும்' என்றாள் என்க.

பாட்டு - உகள : தோழி கூற்று

துறை:—உடன்போக்கு நயப்பத தோழி தலைமகட்குக் கூறியது அஃதாவது, இற்செறிப்பு முதலிய காவன்மிகுதியானே இடையூறு மிக்கவழித், தோழி தலைவியைத தலைவனோடு

போக்குதலன்றி வேறு வழியின்மைகண்டு, 'தலைவனுடைய நீ செல்லக் கடவை' என்று குறிப்பாற் றலைவிக்குக் கூறியது.

இதன்கண், தலைவியை நோக்கி, "யான் பகற்குறி, இரவுக் குறிகட்கு நேரும் இடையூறு எடுத்தோதி, 'இனி யாம் செய்வ தென்?' எனத் தலைவனை வினவினேன்; அப்பொழுது அவன் உடன்போக்கினை உட்கொண்டவனுய்க் கூறமாட்டாது நெட்டுயிர்ப்பெய்தினன்; அக்குறிப்பறிந்த யான். அங்ஙனம் செய்தல் பழிக்கிடனுயினும, அறிவுக்குப் பொருந்துவதேயாம் என்று என் உடம்பாட்டையும் உணர்த்தினேன்" என்று தோழி கூறுகின்றுள்.

உகள. தினைகிளி கடிகெனிற் பகலும் ஒல்லும்
இரவுநீ வருதலி னூறு மஞ்சுவல்
யாங்குச் செய்வாமெம் இடும்பை நோய்க்கென
ஆங்கியான் கூறிய அனைத்திற்குப் பிறிதுசெத்
தோங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற
ஐதே காமம் யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

—நங்கால் முடங்கொல்லனர்.[1]

(இ - ள்.) தோழி—, தினை கிளி கடிக எனில் பகலும் ஒல்லும் - தினையின்கட் படியும் கிளிகளை ஓட்டுக என்று அன்னை ஏவுவாளாயின் பகற்பொழுதினும நின்னை யாங்கள் காண்டல் கூடும், இரவு நீ வருதலின் ஊறும் அஞ்சுவல் - அஃதின்மையின் நீ இராக்காலத்தே வருதலால் நினக்கு வழியிடையூறுகள் உண்டாம் என்று யான் அஞ்சுகின்றேன், யாங்குச் செய்வாம் எம இடுமையை நோய்க்கு எனை - இங்ஙனமாதலின் எவ்வாறு பரிகாரம செய்வோம் யாமுற்ற துன்பமாகிய காமநோய்க்கு என்று, ஆங்குயான் கூறிய அனைத்திற்கு - அங்ஙனம் யான் சொன்ன அதற்கு, ஓங்கு மலை நாடன் பிறிது செதது உயிர்த்தோன் - உயர்ந்த மலை நாட்டையுடைய தலைவன் இந்நிலைக்குப் பரிகாரமாகும் வேறொன்றினைக் கருதி அது கைகூடுங்கால் கூடாது கொல் என்று அயிர்த்து வெய்துயிர்த்தான், மன்ற காமம ஐதே- தேற்றமாகக் காமம் துண்ணிதாம் ஆதலின் அந்தணுக்க நினைவை துண்ணிதின் அறிந்து, யான் கழி முதுக்குறைமையும் பழியும் என்றிசின்-அச்செயல் மிக்க அறிவுடைமையும் பழியும் ஆவதாம் என்று கூறினேன்.

(பாடம்) 1. முடிக் கோவலனர்; முடக் கோவலனர்.

விளக்கம்:—தினை கிளி கடிகெனிற் பகலும் ஒல்லும் என்றது, அன்னை அங்ஙனம் எம்மை எவுவாளுமல்லள் ஆகலின், பகலும் ஒல்லா தாயிற்று என்பதுபட நின்றது. பகலும் ஒல்லும்-பகற் பொழுதும் யாம் அளவளாவப் பொருந்தும்; அஃதொல்லாமையினால் நீ இரவில் வரல் வேண்டிற்று; அதற்கும் அஞ்சுவல் என்பாள், 'இரவு நீ வருதலின் ஊறும் அஞ்சுவல்' என்றாள். ஊறு - விலங்கு முதலியவற்றானே வழி யில் நேரும இடையூறு. இடும்பை நோய - இடையறாது தன்பஞ் செய்யும் காமநோய் என்க. யாங்கு - எவ்வாறு. செய்தல் - பரிகாரந் தேடுதல். இதற்குப் பரிகாரங் காணுது அவனை வினவினேன் என் பாள், 'யாங்குச் செய்வாம் எம் இடும்பை நோய்க்கென வினவ' என்றாள். எனவே, உடன்போக்குதல் என் கருத்தன்று; தலைவன் கருததே என்றுணர்த்தினளாயிற்று. அனைத்திற்கு - அவ்வளவிற்கு எனினு மாம். அவனுடைய கருத்து உயர்ந்ததே என்பாள், 'ஓங்குமலை நாடன்' என, உயர்ச்சியை அவன் மலைக்கேற்றிப் பாராட்டினாள். செத்து - கருதி. கருதியவன் சொல்லமாட்டானாய் வருந்தினான் என்பாள், 'உயிர்த்தோன்' என்றாள். உயிர்த்தல் - பெருமூச்செறிதல். இக கருத்திற்கு யாம் உடம்படுவேமா கொல்? படேம கொல்? என அயிர்த்து வெய்துயிர்த்தான் என்றவாறு.

ஒருவர் உளக்கருத்தை மற்றொருவர் கூறுமலே குறிப்பான் உணர வேண்டுவன பல, காமத்தின்கண்ணே வகிதலின், 'மன்ற ஐதே காமம்' என்று காமவியல்பு கூறினாள் யான் அவன் கருதியதனை யுண்ணிதின் அறிந்து கொண்டேன் என்பது கருத்து.

தலைவன் கருதிய உடனபோகினை யல்லால இப்போது உய்தி பிறிதில்லை என்பாள், அக்கருத்தைத் தோன்ற, 'நின் செயல் கழிமுதுக் குறைபை' என்று பாராட்டினேன் என்றாள் எனவே, அறிவொடு பொருந்திய இச செயற்கு நீ உடமபடல் வேண்டும் என்பது குறிப்பு. அச செயலால் உண்டாகும் திமை அறிவிலிகளின் பழிச சொல் மட்டுமே என்றுணர்த்துவாள், 'பழியும் என்றேன்' என்றாள். 'அறிவிலார் இழிப்பும் எடுத்தேத்தும் பொருளல; நீ தலைவனுடன போதலை அறிவு டைமை' என்று உணாத்தினள் என்க.

பாட்டு - உகஅ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழதகி உரைததது. அஃதாவது தலைவன் பிரிந்துறைதலை ஆற்றுக தலைவிக்கு இரங்கிச் தெய்வம் பராவுதல் முதலியவற்றால் அவளை துயர் தணிக்கக் கருதிய தோழிக்கு அச்செயல்களால் யாது பயன் எனத் தலைவி மறுதகுக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி 'நம் உயிர்க்குயிரா யமைந்த தலைவர், ஓர் இமைப்பொழுதும் தம்மைப் பிரிந்து யாம் ஆற்றேமாதலை அறிந்து வைத்தும, அன்பொரீஇ ஆண்டே தங்கவல்ல வன்கண்ணராயின பின்னை, யாம் கொற்றவையைப் பராவுதல் முதலிய செயல்களைச் செய்வதனால் யாது பயன் உண் டாம்!' எனக் கூறுகின்றாள்.

உகஉ. விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணுங் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியு நில்லாம்
உள்ளலு முள்ளா மன்றே தோழி
உயிர்க்குயிர் அன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே.

—கொற்றனார்.

(இ - ள்.) தோழி—, உயிராக்கு உயிர் அன்னர் ஆகலின் - நம் உயிருக்கும உயிர்போன்றவர ஆகலின், தம் இன்று இமைபபுவரை அமையா நம் வயின் - தமமை இன்றி ஓர் இமைப் பொழுதளவேனும் பிரிந்திருத்தலைப் பொருந்தாத நம்மை, மறந்து ஆண்டு அமைதல் வலலியோர் மாட்டு - மறந்துவிட்டு அவ்விடதிலேயே தங்குதல் வன்மையுடைய தலைவர் திறத்தே, விடர் முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்கு - வெடிப்பையும் முழைஞ்சினபுமுடைய மலைப்பக்கதிலுள்ள வெற்றிபொருந்திய கொற்றவைக்கு, கடனும பூணும் - பலிக்கடன் நேருதலும் செய்யோம், கைநநூல் யாவாம - காப்புநூலும் கட்டிக் கொள்ளோம், புள்ளும ஓராம் - நிமித்தமும் ஆராயேம், விரிச்சியும் நில்லாம - வாயப்புள் கேட்டற்கும் எதிர்பார்த்து நிற்றலைச் செய்யேம, உளளலும் உள்ளாம் - இவையிற்றை நினைதலும் செய்யேம

விளக்கம் :—விடர் - பிளப்பு ; வெடிப்பு முகை - மலைமுழைஞ்சு. சூலி - சூலப்படையேந்திய கொற்றவை. மாமயிடற் செற்றாளாகலின், விறல் கெழு சூலி' என்றார். விறல் - வெற்றி. படைத்தன் முதலிய ஐந்தொழிலினும் வெற்றி பொருந்திய சூலி எனினுமாம். கடன் - பலிக் கடன் : தலைவன் தீதின்றி வருதல் வேண்டும் எனப் பிரிந்த மகளிர் கொற்றவை முதலிய தெய்வங்களுக்குப் பலியிட்டுப் பராவுதல் வழக்கம்.

கைந்நூல் யாத்தல் - நோன்பு மேற்கொண்டு காப்புநூல் கையிற் கட்டிக் கோடல்: தலைவனைப் பிரிந்துறையும் மகளிர், நோன்புமேற் கொண்டு கைந்நூல் யாத்தல் மரபு. இதனை,

"பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து" (கசக - உ.)

எனவரும் நெடுநல் வாடையானும் அறிக.

புள் - நன்னிமித்தம். விரிச்சி - நற்சொல். அஃதாவது, ஒன்று நன்றுமோ தீதாமோ என அறிய விரும்புவார் ஊர்ப்புறத்தே சென்று நெல்லும் மலரும் தூவித் தெய்வம் பரவி அயலிலே உண்டாகும் எதிரார் சொல்லை ஓர்ந்து நிற்பர்; அங்ஙனம் நின்றுழி அயலில் எழும் சொல்

தங்கருத்திற்கு இயைபுடையதாய வழி நன்றும் என்றும், முரணிய வழிதீதாம் என்றங் கொள்வர் இதனை,

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமர னேக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயா என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்," (எ - கஅ.)

எனவரும் முல்லைப்பாட்டுப் பகுதியானே நன்குணரலாம்.

குலமகளிர்க்குக் கணவனே கடவுளாகலின், இறைவன் எவ்வுயிர்க்கும் உயிராதல் போன்று, அவர் உயிர்க்குக் கணவன் உயிர் ஆயினன் என்க. இமைப்புவரை - இமைக்குமளவுப் பொழுது. வல்லியோர் - வன்மையுடையோர்.

பாட்டு - உகசு : தலைவி கூற்று

துறை :—சிறைப்புறம். அஃதாவது தலைவன் சிறைப் புறத்தே வந்து நிற்றலை அறிந்த தலைவி, அவன் வருகையறியாதாள் போன்று தனது துன்பமிகுதியை அவன் உணரும் பொருட்டுத் தோழிக்குக் கூறுவாளாய்க் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'என்மேனி முழுதும் பசலை பாய்ந்தது ; என் உள்ளம் நம்மை நயவாத தலைவரின் பாலது ; அடக்கமும் நில்லாது அழிந்தது ; அறிவோ தலைவர் பாற் செலக எனத் தூண்டாநின்றது; தலைவர் நம்மை அருளும் கருத்தினராயின் அருளுதற்கேற்ற செவ்வி இதுவேயாம்' என்று கூறுகின்றாள்.

உகசு. பயப்பென் மேனி யதுவே நயப்பவர்
நாரில் நெஞ்சத் தாரிடை யதுவே
செறிவுஞ் சேணிகந் தன்றே யறிவே
ஆங்கட் செல்கம் எழுகென வீங்கே
வல்லா கூழியிருக்கு முள்ளிலைத்

தடவரிலைத் தாழைச் சேர்ப்பர்க்
கிடமற் றோழியெந் நீரிரோ வெனினே.
—வெள்ளர்கிழார் மகனர் வெண்பூதியார்.

(இ - ள்) தோழி-, பயப்பு என் மேனியது - பசலைநோய் என் மேனியின்கண்ணது, நயப்பு அவர் நார்இல் நெஞ்சத்து ஆர் இடையது - விருப்பமோ தலைவருடைய அன்பில்லாத நெஞ்சமாகிய செல்லற்கரிய இடத்தின் கண்ணது, செறிவும் சேண இகந்தன்று - என் அடக்கமுடைமையோ என்னை விட்டு நெடுந்தொலையில் நீங்கிற்று, அறிவு ஆங்கண் செல்கம் எழுகென - என் அறிவுதானும் தலைவர் இருக்குமிடத்திற்கே செல்வேம் இன்னே எழுக எனாது, சங்கே வல்லா கூறி இருக்கும் - இவண் நம்மாற் செய்யவியலாத தொன்றனைச் சொல்லி என்னைதேடி இராநின்றது, முள் இலை தடவரிலைத் தாழைச் சேர்ப்பர்க்கு - முள்போலுடைய இலை பொருந்திய முடங்கிய நிலையினையுடைய தாழைகளையுடைய நெய்தனிலத் தலைவருக்கு, எந் நீரிரோ எனின் இடம் - என்னிலை இங்ஙனமாகலின் நீயிர் எத்தன்மையிர் என்று நம்மை உசாவி நங்குறைதீர்க்க நினையின் அதற்குத் தகுந்த செவ்வி இஃதேயாம்

விளக்கம் :—இங்நிலை நீரின் யான் அற்றேன் என்பது குறிப்பு. பயப்பு - பசலை; துணைவனைப் பிரிந்த மகளிர் மேனியிற் றோன்றும் நிற வேறுபாடு. இத்தகையதோர் வேறுபாடு அவர்கண் இல்லையாகலின் ஆவன செய்ய முயன்றிலர் என்பது குறிப்பு. நயப்பு - விருப்பம். யாம் நயத்தல் பயனின்று அவர் நயப்பே வலியுடைத்து. அவர் நெஞ்சத்தே அன்பில்லையாதலான், அந்நயப்பும் பயனின்றுயிற்றென்றவாறு நார் - அன்பு. ஆரிடை - செல்லுதற்கரிய இடம். நயப்புத்தான் சேறலாகாத விடத்தேயுளது என்க. நயப்புச செல்லுதற்குரிய இடம் அன்புடை நெஞ்சம் என்க. அன்பின்மையால் அவர் நம்மைப் புறக்கணித்த விடத்தும் யாம் அடக்கமுடையம் எனின், வருந்தாதிருக்க வல்லேம் அவ்வடக்கமும் நம்மைக் கைவிட்டதென்பாள், 'செறிவும் சேணிகந்தன்று' என்றாள். முற்றும் அழிந்தொழிந்தது என்று இரங்கியவாறு. அறிவு - செற்றார் பின் சேறல் பெருமையன்று என்னுது அவர் இருக்குமிடத்திற்கேனும் யாம் சென்றுய்வேம் எழுதி! எழுதி! என இடையறாது என்னைத் தூண்டி வருத்தா நிற்கும் என்பாள், 'ஆங்கட் செல்கம் எழுகென வல்லா கூறியிருக்கும்' என்றாள்.

அன்பற்ற ஆடவனிருக்கைக்குப் பெண்டிர் வலிந்து சேறல் பீடன்றாகலின், அது நம்மாற் செய்யமாட்டாத தொன்றென்பாள், 'வல்லா கூறி' என்றாள். வல்லா - மாட்டாத. 'முள்ளிலைத் தடவரிலைத் தாழைச் சேர்ப்பர்' என்றது, வருத்துமியல்பும் மனக்கோட்டமும் உடையன் என்னும் குறிப்பிற்று.

எந்நீரிர் - எத்தன்மையிர். ஒருவரைப் பாதுகாப்போர் முன்னர் அவர் நிலைதெரிந்தே பாதுகாத்தல் வேண்டுமாகலின், தலைவர் நம்மைப் பாதுகாக்கும் கருத்துடையரா யின் என்பாள், எந்நீரிர் என்று வினவுவாராயின் என்றாள்.

பாட்டு - உஉ0 : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கட் கிழத்தி தோழிக்கு உரைத்தது. அஃதாவது, 'கார்ப்பருவத்தே மீண்டு வருவேன்; அது காறும் ஆற்றியிரு' என்று கூறிச் சென்ற தலைவன் அப்பருவம் வந்த பினனரும் வாராமையால் ஆற்றுமை மிக்க தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர் தாம் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்ததாகவும் இன்னும் வந்தாரிலர் யான் எங்ஙனம் ஆற்றுகேன?' என்று கூறுகின்றாள்.

உஉ0. பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணி
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே.

—ஒக்கூர் மாசாத்தியார்.

(இ - ள்.) தோழி—, பொருள் பிரிந்தோர் - பொருளீட்டனிமித்தம் நமமைப் பிரிந்து சென்ற தலைவர், பழமழைக் கலித்த புதுப்புன வரகின் - பண்டு பெய்த மழையாலே தழைத்த புதிய புனத்தின்கண் ணுள்ள வரகினது, இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை இருவிசேர் மருங்கில் - ஆண்மான் மேய்ந்தமையாலே குறைந்த நுனியையுடைய கதிர் அரிந்த தாள் சேர்ந்த பக்கத்தில், பூத்த முல்லை - மலர்ந்த முல்லைக் கொடியினது, வெருகு சிரித்தன்ன பசுவீ - காட்டுப்பூனை சிரித்தாற்போன்ற தோற்றமுடைய பசிய பூவினது, மென் பிணிக் குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின் - மெல்லிய பிணிப்பையுடைய குறிய அரும்புகள் மலராநின்ற நறிய மலர்களையுடைய முல்லை நிலத்தில், வண்டு சூழ் மாலையும் வாரார் - அம்மலரூதும் பொருட்டு வண்டுகள் சுற்றுகின்ற இம்மாலைப் பொழுதினும் வாராராயினர், கண்டிசின் - இக்கொடுமையை நீ அறிவாயாக.

விளக்கம் :—பழமழை - பண்டு பெய்த மழை என்க. மழை பெய்தமையால் கதிர் அரியப்பட்ட புனம் மீண்டும் தழைத்த தென்றவாறு. புதுப்புனம் — அவ்வாண்டிலே புதிதாகப் பண்படுத்தப்பட்ட புனம். குறைத்தலை, கதிர் அரிந்தமையாலே குறைந்த நுனி. பாவைமான் மேய்ந்தொழிந்த தாள். பாவையாகிய இருவி என்க. இருவி - கதிர் கொய்தெஞ்சிய தட்டை. வேனிற் பருவத்தே கதிர் கொய்யும்

பட்ட வரகிருவியின் பக்கத்தே படர்ந்து முல்லைக்கொடிகள் மலர்ந்தன என்க. முல்லைக்கொடி மலர்ந்தன என்றது, தலைவர் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்தமையை உணர்த்தியபடியாம். வெருகு - காட்டுப் பூனை. காட்டுப்பூனை கத்துதலைச் சிரிக்கின்றது என்று கூறுதல் மரபு. காட்டுப்பூனை வாய் திறந்து சிரிக்கும்போது தோன்றும் பற்கள் முல்லை அரும்புகளுக்கு உவமை என்க. "வெருகு வேட்பச் சிரிப்பனபோன் முகைத்த முல்லை" (சீவக - ககஙுக.) என்று பிறரும் கூறுதல் உணர்க. மாலையாந்தனையும் வருவர் வருவர் என வழிமேல் விழிவைத்து எதிர் பார்த்திருந்தாளாதலின், 'மாலையும் வாரார்' என்றாள். இனி வருவா ரல்லர் எனறவாறு பொருட் பிரிந்தோர், பொருளீட்டற்பொருட்டு நம்மைப் பிரிந்தோர் என்க.

பழமழையாலே குறைத்தலைப் பாவை யிருவி தழைத்ததென்றது: "பண்டு அவர 'கார்ப்பருவத் தொடக்கத்தே வருவன்' என்று ஆற்றிச் சென்றமையாலே பிரிவுதுன்பதையும் ஒருவாறு ஆற்றி உயிர்த்திருப் பேன் ஆயினேன்" என்னும் குறிப்பிற்று.

பாட்டு - உஉக : தலைவி கூற்று

துறை :—பிரிவிடைப் பருவ வரவின்கண் வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, 'தலைவன் கூறிச்சென்ற பருவம் வந்தும், அவன் வாராமை கண்ட தோழி ஆற்றுளாய தலைவியை ஆற்றுவித்தல் வேண்டும்' என வற் புறுதல அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கிக் 'காட்டில் முல்லை கள் மலர்ந்தன ; பால் கொணர்ந்து வந்து, கூழோடே செல் லும் இடைமகன், தன் தலையிற் சூடியவெல்லாம் முல்லை அரும்பு களே யாதல்காண் ; இன்னும தலைவர் வந்திலரே ! யான் எங்ங னம் ஆற்றுகேன் ?' என்று வருந்திக் கூறுகின்றாள்.

உஉக. அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தோழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறுபசு முகையே.

—உறையூர் முதுகொற்றனார்.

(இ - ள்) தோழி—, முல்லையும் பூத்தன - நங்காட் டிடையே முல்லைக்கொடிகள் எல்லாம் பூத்தனபோலும் அஃ தெற்றாலறிந்தாயெனின், பறியுடைக்கையர் மறியினத்து ஒழிய- பறியோலையை உடைய கையினையுடைய இடையர்கள் குட்டிகளை யுடைய ஆட்டுத்திரளோடே சென்று தங்காகிற்ப, பாலொடு வந்து கூழொடு பெயரும் - நிரையினின்றும் பாலைக்கொணர்ந்து

இல்லத்திற்கு வந்து மீளும்போது பாற்சோற்றோடே மீண்டு போகின்ற, யாடுடை இடைமகன் - ஆடுகளையுடைய இடையன், சென்னிச் சூடிய எல்லாம் சிறுபசு முகை - தன் தலையின்கட் சூடியிருப்பன எல்லாம அம்முல்லையின் சிறிய பசிய அரும்பு களே ஆதல் காண்பாயாக.

விளக்கம் :—அவரோ என்றதன்கண் ஓகாரம் பிரிநிலை; அவர் குறித்த பருவம்மட்டும் வந்துவிட்டது அவர் வந்திலர் என்பதுபட நின்றமையான் என்க. பறி - பனையோலையாற் செய்த தடுக்கு. இது மழைக்குக் குடையாகவும், படுக்கைக்குப் பாயாகவும் உதவுமொரு கருவி என்க. "பாய், பறிகள்" என்னும் வழக்குண்மை இன்றுங் காண் கின்றோம். "பறிப்புறத்திட்ட இடையன்" (நற் - கசஉ.) என்றும், "பறிப்புற இடையன்" (அகம் - கூச.) என்றும், பிறரும் ஓதுதல் அறிக. மறியினம் - குட்டிகளையுடைய ஆட்டினம். ஆட்டினத்தே ஆயர் சிலர் இருப்ப அவர்க்குக் கூழ்கொடு போகும் இடையன் என்ற வாறு. ஆட்டினத்தினின்றும் வரும்பொழுது பாலொடு வந்து வீட்டி னின்று போகும் பொழுது கூழொடு பெயரும் இடையன் என்க.

இடைமகன் தலையில் வழியில் மலர்ந்துள்ள முல்லை அரும்புகளைப் பறித்துச் சூடி வந்தானைக் கண்ட தலைவி, 'இது கார்ப்பருவம் போலும்' என்று கவன்றாள் என்க. முல்லை கார்காலத்தே மலரும் இயல்புடை யது ஆதலின், 'முல்லையும் பூத்தன' என்றது, 'கார்ப் பருவமும் வந்தது' என்னும் குறிப்பிற்று.

பாட்டு - உஉஉ : தலைவன் கூற்று

துறை :—பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தல். அஃதாவது, இயற்கைப்புணர்ச்சி எய்திய தலைவன், மீண்டும் அவளை எய்துதற்கு வாயில் நாடுவான் குறிப்பானே இன்னள் தோழி என்றுணர்ந்து அவளைக் குறையிரப்ப நினைந்தது.

இதன்கண், தலைவி நீராடுமிடத்து உடனாடும் ஆயமகளிர் பலருள்ளும் அவட்கு உசாத்துணைத் தோழியாவாள் இவள் எனக்கண்ட தலைவன் அங்ஙனம் கண்டமைக்கு ஏதுக்கூறுவான், 'தளிரன்னாள் தோழி தலைப்புணைக் கொள்ளின் தானும் தலைப் புணைக் கொள்ளும்; கடைப்புணைக் கொள்ளின், தானும் கடைப் புணைக் கொள்ளும்; ஒருகால் புணை நழுவித் தோழி நீரோடு ஒழு கின், இவளும் நீரோடு ஒழுகுவள் போலும். இன்னளாகலின், இவளே நந்தலைவிக்கு உயிர்த்தோழியாதல் ஒருதலை,' எனத் தன் னெஞ்சிற்குத் தலைவன் கூறுகின்றான்.

உஉஉ. தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்

ஆண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நறமும் கொழுங்கடை மழைக்கட
டுளிதலைத் தலைஇய தளிரன் னேளே.

—சிறைக்குடி யாந்தையார்.

(இ - ள்.) மாண்ட மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை - மாட்சிமைப்பட்ட மழைக்காலத்தே மலரும் பிச்சியினது நீர் ஒழுகும கொழுவிய அரும்பினது, செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண் - செவ்விய புறத்தை ஒத்த கொழுவிய கடையையும் குளிர்ச்சியையும் உடைய கண்களையும், துளி தலைத் தலைஇய தளிர் அன்னேள் - மழைத்துளி தன்னிடத்தே பெய்யப்பெற்ற மாந்தளிரை ஒத்த மேனியையும் உடைய நந்தலைவி, தலைப்புணை கொள்ளின் தலைப்புணை கொள்ளும் - நீர் விளையாடுங்கால் தெப்பத்தின் தலைப்பை அத் தோழி கைக்கொண்டால் தானும் அத்தலைப்பைக் கைக் கொள்ளா நின்றாள், கடைப் புணை கொள்ளின் கடைப் புணை கொள்ளும் - இத்தோழி தெப்பத்தின் கடைப்பகுதியைப் பற்றின் தலைவியும அப்பகுதியையே பற்றுகின்றாள், புணை கை விட்டுப் புனலோடு ஒழுகின் - ஒருகால தெப்பத்தைத் தப்பவிட்டு இத்தோழி நீரோடு செல்வாளாயின், ஆண்டும் வருகுவள் போலும் - தலைவியும அவள் சென்ற இடத்திற்கே செல்வாள் போலே இருந்தாள.

விளக்கம்:—செயல் மனத்தின் வழித்தாகலின் செயலொப்புண்மை தேர்ந்து நெஞ்சு ஒத்தல் தெளிந்தவாறு. புணைத்தலை புணைக்கடை என்பன முன்பின்னாக மாறி நின்றன. புணை - தெப்பம், தெப்பத்தின் முன்பகுதி, பின்பகுதி என்க. இத்துணை மகளிரில் இவளொருத்தியையே பின்பற்றி நீராடுகின்றாளாகலின், 'இவளே நந்தலைவிக்கு உயிர்த்தோழி யாவள்' என நெஞ்சிற்குக் கூறுகின்றான் என்க. புணை கைவிட்டுப் புனலோடு ஒழுகின் என்றது, 'இத்தோழி தவறி நீரோட்டத்தாலீர்க்கப்பட்டு மூழகி இறப்பாள் எனின் இவளும் அங்ஙனமே சென்று இறப்பாள் போலும்' என அவர் ஒற்றுமை கண்டு வியந்தவாறு.

மாரியால் மாண்ட பித்திகம் என்க. பித்திகம் - பிச்சி. பிச்சி, மாரிக் காலத்தே தழைத்து மலரும் இயலபுடையதாகலின், 'மாரி மாண்ட பித்திகம்' என்றான். மழைக் காலமாகலின், 'நீர்வார் கொழுமுகை' என்றான். கொழுத்த கடைக் கண்ணிற்குப் பிசிக் கொழுமுகையின் புறம் உவமை. வெரிந் - புறம்.

தளிர் - மாந்தளிர். தளிரின் மேல் மழைத்துளிபட்டு ஒழுகுங்கால் அதன் நிறம் மேலும் பொலிவுடையதாதல் பற்றி வாளா தளிரென்னாது 'மழைத்துளி தலைஇய தளிர்' என்றான். இனித் தலைவியின் மேனி

நீராட்டினால் நனைந்திருந்தபோது கண்டமைக்கு நீரானனைந்த தளிரை உவமையாகக் கண்டோதினன் எனினுமாம்.

துளி - மழைத்துளி. தலைஇய - பெய்த; பெய்யப்பெற்ற. தளிரன்னாள் - தளிர் போன்ற மேனியை உடையோள் என்க. தளிர், நிறம், மென்மை, தண்மைகளால் மேனிக்குவமையாயிற்று.

பாட்டு - உஉக : தலைவி கூற்று

துறை :—வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு, வற்புறுத்தம்தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, வரை பொருள் நிமித்தம பிரிந்த தலைவன் கால நீட்டிப்ப, ஆற்றாளாகிய தலைவியைத் தோழி ஆற்றுவித்தாளாக அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், ஆற்றாளாய தலைவியை ஆற்றுதனிமித்தம் பேரூர் கொண்ட ஆர்கலி விழவிற்குச் செல்வாம் புறப்படுக என்று கூறும் தோழியை நோக்கித் தலைவி, 'நீ விழவிற்குப் போவோம் புறப்படுதி! புறப்படுதி! என்று என்னைவற்புறுத்து, கின்றாய்! யானோ, பலர் குழுஉம் விழவினுக்குச் செல்லும் தகுதியை இழந்துவிட்டேன்; யாயாற் பேணப்பட்ட என் பெண்மை நலனெல்லாம், தலைவன் கவர்ந்து போயினன்; ஆகலின் வேறுபாடு மிக்க யான் எங்ஙனம் விழவிற்கு வருவேன்?' என்று கூறுகின்றாள்.

உஉக. பேரூர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம் என்றி அன்றிவண்
நல்லோம் நல்ல பலவாற் றில்ல
தழலும் தட்டையும் முழியுந் தந்திவை
ஒத்தன நினக்கெனப் போய்த்தன கூறி
அன்னை யோம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான்யாம் இன்னமா லினியே.
—மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார்.

(இ - ள்.) தோழி—, பேரூர் கொண்ட ஆர்கலி விழவில்-நமது இப்பெரிய ஊரினர் மேற்கொண்டு நிகழ்த்துகின்ற திருவிழாவிற்கு, செல்வாம் செல்வாம் என்றி-போவோம் போவோமென்று வற்புறுத்தா நின்றனை, அன்று இவண் நல்லோம் நல்ல பல தில்ல - பண்டு யாம் விழாக்காணச் சென்ற காலத்தே வேறுபடுதலின்றி நன்மையுடையேமா யிருந்தோம்; பிற பல நலங்களும் நம்பாலிருந்தன; அந்நன்மைகள் இப்போதிலே மாயி

னேம், தழலும் தட்டையும் முறியும் தந்து இவை ஒத்தன நினைக் கென - கிளிகடி கருவிகளாகிய தழலும் தட்டையுமாகியவற் றோடே தழையையும் நமக்குத் தந்து இப்பொருள்கள் நுமக்குப் பொருந்துவன என்று, பொய்த்தன கூறி - பொய்யாயவற்றை மெய்போல நமக்குச் சொல்லி, அன்னே ஒம்பிய ஆய்நலம் - நம் மன்னையாலே பாதுகாக்கப்பட்ட நமது ஆராய்தற்குக் காரண மான பெண்மை நலத்தை, என்னே கொண்டான் - நந்தலைவர் முழுதும் கவர்ந்து கொண்டனராகலான், யாம் இனி இன்னம்- யாமோ இப்பொழுது இந்நிலைமையினேம் ஆயினேம்.

விளக்கம் :—'ஆற்றுமையாலே பெரிதும் மெலிந்துள்ள யான், வம்ப மாக்கள் சூழுமிய விழாக்களத்திற்கு எவ்வாறு செல்வேன்! யான் ஆண்டு வருவேனல்லேன்; நீ வாளா வற்புறுத்தா தொழிக.' என்று தோழியை மறுத்தவாறும்.

பேரூர் என்றது, பல்வேறு மக்களும், வம்பமாக்களும் கூடுதற் குரிய பெருங்களம் என்றவாறு. மாக்கள் சூழுமி தம்மோடு தொடர் பில்லாதவறறையும் பாரித்துப் பேசுமிடம் என்பாள், 'ஆர்கலி விழ வென்றாள். ஆர்கலி - ஆரவாரம், ஈண்டு வம்பலா பேசசையே குறித்து நின்றது. எனனே? தன்னைக் கண்டு தன் வேறுபாடுபற்றிப் பலரும் பலவும் பேசுதற் கிடனும் என்பதே ஈண்டுத் தலைவி கருத்தாகலான் என்க.

நீ இடையறாது வற்புறுத்துகின்றனை என்பாள், ''செல்வாம் செல் வாம் என்றி'' என அடுக்கிக் கூறினாள். என்றி - என்று கூறுகின்றனை. அன்று என்றது பண்டு தோழியுடன் பேரூர்ப் பெருவிழவிற் சென்று மகிழ்ந்த காலத்தைச சுட்டியதாம் பண்டு யாம் விழாக்காணச சென்ற நிலையில் இன்றில்லை என்றிரங்குவாள், 'அன்று இவண் நல்லோம் நல்ல பல தில்ல' என்றாள். நல்லோம் என்றது, 'பெண்மை நலம் முழுதும் உடையமாயிருந்தேம்' என்றவாறு. நல்லபல என்றது, பிற எதுக்களும் அன்று நன்மையாயிருந்தன என்றவாறு. தில்ல-ஒழியிசைப்பொருட்டு. 'அந்நன்மைகள் இன்றிலமாயினேம்' என்னும் பொருள் குறித்து நின்ற தென்க.

நெஞ்சம் மகிழ்ச்சியுறுதல் நலம்வளர்தற்கு எதுவாகலான், நம் மன்னை தழல் தட்டை முதலியவற்றைத் தந்து நம் மனமகிழச செய்து நமது நலத்தை ஒம்பினாள் என்பாள், 'தழலுந் தட்டையும் முறியுந் தந்து, அன்னை ஒம்பிய ஆய்நலம்' என்றாள். தழல் தட்டை என்பன, கிளிகடிகருவிகள். முறி-தழை. தழல் தட்டை முதலியனவும் பிற விளை யாட்டுக் கருவிகளும் பண்டு நம் மனத்துக்கொத்தனவாய்ப் பேரின் பம் நல்கின; இன்று அவைகள் நம்பாலிருந்தும் நமக்கு ஒத்தன வாகா வறும் பொருளாயின; பண்டு நம் பேதைமைக் கேற்ப நம் அன்னையும் நினைக் கொத்தன இவை எனக் கூறினது இன்று பொய்யாதல் அறிந் தனம் என்பாள், 'அன்னை பொய்த்தன கூறி' என்றாள். இன்று தலை வனையன்றி இவ்வுலகப் பொருளனைத்துமே நமக்கு ஒவ்வாதன வாயின என்பது கருத்து. ஆய்நலம் - பலரும் ஆராய்ந்து நன்றென்றற்குக் காரணமான பெண்மை நலம். என்னை-தலைவன். தலைவனை என்னை என்று கூறும் வழக்க முண்மையை,

"அன்னே என்னே என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினு மெழுத்தினும்
தோன்ற மரபின என்மனார் புலவர்."

(தொல் பொருளியல் - இஉ)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவானும் உணர்க. தலைவன் தன் பிரிவானே நம்நலங்கெடச செய்தான் என்பாள், "நலம் என்னை கொண்டான்" என்றாள். இன்னம் இத்தகையேம், தன்மைப்பன்மை. இனி- இப்பொழுது. ஆல் - அசை.

பாட்டு - உஉச : தலைவி கூற்று

துறை:—'பிரிவிடை இறந்துபடும' எனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்த காலததே ஆறறுமை மிக்க தலைவியை, 'இறந்துபடுவாளோ?' எனக் கருதித் தோழி பெரிதும வருந்தினளாகத் தலைவி அவள் வருத்தங்கண்டு கூறியது.

இதன்கண், தோழியின் வருததத்தைக் கண்ட தலைவி அவள் கேட்ப, 'யான் நீளிடைச் சென்ற தலைவர் செய்த கொடுமையை எண்ணி எண்ணி நோகின்றதுமல்லாமல், என்னிலைக்குப் பெரிதும வருந்தாநின்ற இததோழியின் நிலைக்கும் வருந்த வேண்டியவளாய் விட்டேன்; பிரிவு நோயை ஒருவாறு ஆற்றுவேன் ஆயினும, இவள நிலையே எனக்கு ஆற்றொணாத் துன்பம் தருகின்றது' என்று கூறுகின்றாள.

உஉச. கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யேற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே கூவற்
குராலான் படுதுயர் இராவிற் கண்ட
உயாதிணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.

—கூவன் மைந்தர்.

(இ - ள்.) கூவல் குரால் ஆன் படுதுயர் இராவில்கண்டு- கிணற்றினுள் வீழ்ந்துவிட்ட குரால நிறமுடைய ஆன் படுகின்ற துன்பத்தை இரவின்கண்ணே கண்ட, உயர்திணை ஊமன் போலமக்களினதது ஊமன் அத துனபத்தை வெளியிடமுடியாமல் வருந்துமாறுபோல, தோழி நோய்க்கு - என் பொருட்டுத் தோழி படுந் துயர் கண்டு, துயர் பொறுக்கல்லேன் - எனக் குண்டாகும் துன்பத்தை யான் ஆற்றுதேன் ஆகின்றேன்; கவலை யாத்த அவல நீள் இடை - (அத்துன்பமோ) கவர்த்த வழி

களிலே யாமரங்களை உடையனவாகிய துன்பமிக்க நீண்ட பாலை நிலத்திலே, சென்றோர் கொடுமை எற்றி - என்னைப் பிரிந்து சென்ற தலைவருடைய கொடுமையை நினைந்து, துஞ்சா நோயினும் நோய் ஆகின்று - உறங்காது வருந்தும் துன்பத்தினும் காட்டில் மிக்க துன்பமாக இராநின்றது.

விளக்கம்:—கவலை - கவர்த்த வழி யாத்த-யாமரங்களையுடையனவாகிய. நீளிடை - நீண்ட இடமாகிய பாலை நிலம் என்க. கொடுமை-தன்பிரிவினைத் தலைவி ஆற்றுளாவது அறிந்தும், ஆற்றுமை எய்தவிட்டுச் சென்ற கொடுஞ்செயல் என்க. எற்றி - நினைந்து. எற்றம் என்னும் உரிசசொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்.

"எற்றம் நினைவும் துணிவும் ஆகும்." (உரி - ஙக)

என்பது தொல்காப்பியம்.

"கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி." (கசஙு)

என, இந்நூலில் இச்சொல் இப்பொருட்டாகவே முன்னரும் வந்தமை அறிக.

துஞ்சாநோய் - துஞ்சாமைக்குக் காரணமான நோய், என்றது பிரிவுத்துன்பத்தை. துஞ்சாநோய் ஆயினும் ஒரோவழி ஆற்றியிருப்பேன், என்பொருட்டு இவள்படுந்துன்பங்கண்டே பெரிதும் வருந்தாநின்றேன் என்பாள், 'துஞ்சாநோயினும் நோயாகின்று,' என்றாள். 'யான் பிரிவுத்துன்பதத்தை ஆற்றுவேன் நீ கவலாதிரு' என்று தோழியை ஆற்றியவாறு.

கூவல் - கிணறு. குரால் - ஒருவகை நிறம். "பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற்று அணிபோல, இரும்பிணர் எருத்தின் எந்திமிற் குராலும்," (கலி - கo஧.) என்றார் கலியினும்.

உயர்திணை ஊமன் - மக்கட்பண்புடைய ஊமன் என்க. மாவும் மாக்களும் ஐயறிவுயிர் என்பவாகலான், மாக்களினத்து ஊமன் அல்லன் என்பா, 'உயர்திணை ஊமன்' என்றார். என்னை? பிறவுயிர்களின் துன்பங்கண்டு இரங்குதல் மக்கட்பண்புடையோர்க்கே இயல்பாகலின். ஈண்டு ஆன் கூவலின்கண் வீழ்ந்து துன்புறுதல் கண்டதற்தே பெரிதும் துன்புறுதற்கு ஏதுக் கூறுவார், 'உயர்திணை ஊமன்' என்றார் என்க. இனி ஊமன் என்பது, கோட்டானுக்கும் பெயராகலின் அதனின் நீக்குதற்கு வெளிப்படைகூறினர் எனலும் ஒன்று.

பாட்டு - ஙஙரு : தோழி கூற்று

துறை :—வரைவிடை வைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது. அஃதாவது—வரைவிடைவைத்துப பொருள்வீட்டப் பிரியுந் தலைவனுக்குத் தோழி விரைவின் மீண்டு வருதல் வேண்டும் எனக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, "ஐய! உற்றுழி நண்பன் செய்த உதவியை அரசுகட்டில் பெற்ற பின்னர்

மறந்து விட்ட நன்றி தேரா நயனில் மன்னன் போலாது, நீ நன்றி யறியும் நல்லோன் ஆயின், காலம் நீட்டியாது விரைவின் மீண்டு வருதல் வேண்டும், இவள் கூந்தல் நினக்கே உரிமை யுடையனவாம்'' என்று கூறுகின்றாள்

உடு. கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே.

—கபிலர்.

(இ - ள்.) கன்று தன் பயமுலை மாந்த - தனது கன்று தனது பாற்பயன் உடைய முலை குடியா நிற்பவே, பிடி முன்றில் தினை உண்ணும் பெருங்கல் நாட - பெண் யானை முற்றத்தின் கண்ணுள்ள தினையை உண்ணுதற்குக் காரணமான பெரிய மலை களையுடைய நாட்டையுடைய தலைவனே, கெட்டிடத்து வந்த உதவி கட்டில் வீறுபெற்று மறந்த மன்னன் போல - தனக்குக் கேடுவந்தபொழுது தாமே வலிந்து வந்து பிறர் செய்த உதவி யினை, அவ்வுதவியின் பயனைத் தான் அரசு கட்டில் ஏறிச் சிறப் புற்றபின்னர் மறந்துவிட்ட அரசனைப் போன்று, நன்றி மறந்து அமையாய் ஆயின் - யாம் நினக்குச் செய்த உதவியை மறந்து விடாதிருப்பையாயின், இவள் மென் சீர்க் கலிமயில் கலாவத்து அன்ன ஒலி மென் கூந்தல் - இத்தலைவியினுடைய மென்மை யானே சிறப்புடைய ஆரவாரமுடைய மயிலினது தோகை போன்ற தழைத்த மென்மைமிக்க கூந்தல், நினக்கே உரிய ஆம் - நினக்கே உரிமையுடையன வாகும்.

விளக்கம்:—பய முலை - பயன் உடைய முலை; என்றது, பாலுடைய முலை. என்னை? அதன் பயன் அஃதாகலான். கன்றும் பசியாலே வருந்தாதபடி ஊட்டிக் கொண்டே, தனக்கு வேண்டிய தினையையும் பிடி உண்ணும் என்றது, 'தலைவியும், பிரிவுத்துன்பம் உழவாதவாறு அருள் செய்தவாறே, வரைவிற்கு வேண்டிய பொருளும் ஈட்டிக் கொள் வாயாக' எனனும் குறிப்புடையது. 'எனவே, காலம் நீளிதாகத் தங்கிவிடாமல் விரைந்துவந்து வரைந்து கொள்ளுக' என்பது குறிப்பாலுணர்த்தியவாறுயிற்று. முன்றிற் தினை என்றதும், வரை பொருள்நிமித்தம் சேய்மைக்கட் சேறற்க என்று குறித்தவாறென்க.

கெட்ட இடம் என்பது, பெயரெச்சத் தகரம் கெட்டுக் கெட்டிடம் என்று ஆயிற்று. வந்த உதவி - தாமே வலிந்து வந்து செய்த உதவி. எனவே, 'செய்யாமற் செய்த உதவி' என்று அதன்

சிறப்பைத் தெரித்தோதியவாரும். பல்வேறு வகை உதவிகளினும் வைத்துச் செய்யாமற் செய்த உதவி மிகவும் சிறந்தது என்பதைச்,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது." (குறள். கo௯)

என்னுந் திருக்குறளானும் உணர்க.

உவந்த உதவி எனக் கண்ணழித்து "மகிழ்ந்த உதவி" என்று கூறுவாருமுளர். கட்டில் - அரசு கட்டில்; என்றது அரசவுரிமை. கட்டில் வீறுபெற்றுயர்தற்கும் அவ்வுதவியே காரணம் என்பாள், 'கெட்டிடதது வந்த உதவி' என்றும, 'கட்டில் வீறு பெற்று' என்றும் கூறினள். எனவே, ஒரு மன்னன் தனது அரசு கட்டிலை இழந்து விடும்படி கேடுற்ற பொழுது, பிறர் தாமே வலிய வந்து உதவி செய்து அவ்வரசு கட்டிலை அவனுக்கு உரியதாக்கினராக, அவ்வுதவியாலே அரச உரிமை பெற்றுச சிறந்த பின்னர், அவ உதவியை மறந்து விட்டான். அங்ஙனம் மறந்த அம் மன்னனைப் போல நீயும் யாஞ் செய்த உதவியை மறந்துவிடாயாயின், என உவமையை விரித்துக் கொள்க.

நன்றி மறந்தமையாயாயின், என்பது, நன்றியை மறந்து ஆண்டே தங்கிவிடாது மீண்டு வந்து வரைந்து கொள்வாயாயின் என்றவாறு. மறந்தமையாயாயின் இவள கூந்தல் நினைகு உரிய எனவே, மறந்தமை வாயெனின் இவள் இறந்து படுவள் காண் என்று குறிப்பானுணர்த்திய வாறு. கலிமயில் - அகவும் மயில். ஒலி - தழைத்தல். கூந்தலை ஐம் பால் என்பவாதலின் உரிய எனப் பனமை கூறினள் தலைவி உரியள் ஆவள் என்பதனைக் கூந்தல் உரிய என்றது சிறப்பு நோக்கி என்க. என்னை ? தலைவியின் உறுப்புக்களுள் தலைவன் முதன் முதலாக உரிமை பாராட்டுவது கூந்தலே யாகலான். இதனை வண்டோச்சி மருங்கணைதல், பின்னலிதழ் தீண்டல் முதலிய செயல்களானும் உணர்க. "யாரிவன் எங கூந்தல் கொளவான்," "ஒருஉநீ எங் கூந்தல் கொள்ளல்," (கலி அகo - அ௯.) எனவரும் கலியானும உணர்க.

பாட்டு - உகூ : தலைவி கூற்று

துறை :—வரைவிலடைவைதது ஆற்றுளெனக் கவன்ற தோழிகுக் கிழதகி யுரைத்தது, அஃதாவது, தலைவன் வரை பொருளீட்டற்குப பிரிந்த காலததே, மிகவும துன்பமுற்ற தலைவியை நோககி, 'இவள இறந்துபடுவாளோ ?' எனக் கவலை யுற்ற தோழிக்குத தலைவி தன துனபத்தைதத தெரித்தோதியது.

இதன்கண், 'தோழீ! யான் விரிநீர்ச் சேர்ப்பனைக் காண்ப தற்கு முன்பெலலாம, தாமரை போன்ற கண்களும், வேய்த் தோளும, பிறைமதி மயக்குறும் நுதலும் உடையளாய்த் திகழ்ந்தேன் ; இப்பொழுதோ, அவ்வுறுப்புகளன் முழுதும் ஒழிந்து வறியளானேன்,' என்று தலைவி தோழிக்குக் கூறு கின்றாள்

உஉசு. பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனெடு நகா அ வூங்கே.

—மதுரை எழுத்தாளர் சேந்தம்பூதனர்.

(இ - ள்.) தோழி—, அல்கலும் தயங்கு திரை பொருத தாழை வெண்பூ - இரவுதோறும் விளங்கிய அலைகளாலே மோதப்பட்ட தாழையினது வெள்ளிய பூ, குருகு என மலரும்- அன்னம் போல மலரா நிற்கும், பெருந துறை விரிநீர்ச் சேர்ப்பனெடு - பெரிய துறையினையுடைய அகன்ற நீர்ப்பரப்பினையுடைய நந் தலைவனேடே, நகா ஊங்கே - யாம் நகுதற்கு முன்னர், பூவொடு புரையும் கண்ணும - தாமரைப் பூவை ஒத்த இக் கண்களும், வேய் என விறல் வனப்பு எய்திய தோளும் - மூங்கிலைப் போல வெற்றிபிக்க அழகு பொருந்திய இத்தோள்களும், பிறை என மதி மயக்குறு நுதலும் - கண்டோர் இது பிறையோ என்று அறிவு மயக்குறுதற்குக் காரணமான நுதலும், நன்றும் நல்ல மன் - பெரிதும நன்மையுடையனவாயிருந்தன; அந்நன்மை இப்பொழுது இலவாயின.

விளக்கம்:—பூ - சிறப்பால் தாமரைப் பூவிற்காயிற்று; புரையும் - ஒக்கும் வேய் - மூங்கில். விறல் - வெற்றி. வனப்பு - அழகு; வேறொன்றற்கில்லாத அழகென்பார், விறல் வனப்பென்றார். பிறை - வளர்பக்கத்து இளந்திங்கள். மதி மயக்குறூஉம் - கண்டார் மதியை மயக்குறுத்தும் என்க. மயக்குறூஉம்; உறூஉம்: பகுதிப் பொருள் விகுதி. இயற்கைப புணர்ச்சிக்குப் பின்னர், 'பூவொடு புரையும் கண்' என்றும், 'வேயென விறல்வனப் பெய்திய தோளும்' என்றும், 'பிறையென மதி மயக்குறூஉம் நுதலும்' என்றும், தலைவன் இவள் நலம் பாராட்டியவற்றையே ஈண்டுக் கொண்டு கூறினள் எனக் கருதுக. இங்ஙனம் தலைவன் நலம் பாராட்டுதலை,

"நில்லென நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையும் அன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று

சொல்லத் தளருங் கிளியு மன்று
னெவாங்கு, அனையன பல பாராட்டி." (கலி. ஙஙி)

எனவரும் குறிஞ்சிக் கலியானும் உணர்க.

நன்றும் - பெரிதும்; மிகவும் என்றவாறு. "நன்று பெரிதாகும்," (உரி - சஙி) என்பது தொல்காப்பியம். மன் - ஒழியிசைப் பொருள் குறித்து நின்றது. இப்பொழுது அந் நன்மை யெல்லாம் இழந்தேன் என்றவாறு. அல்கல் - இரவு. குருகு - அன்னம்; நாரை என்பாரு முளர். விரி நீர் - கடல். அன்மொழித்தொகை.

தாழையினது முள்ளுடைய மலர், தூய அன்னம்போல் மலரும் துறைவன் என்றது, இங்ஙனம் பிரிந்துறைவானுகவும் 'நின்னைப் பிரி யேன், பிரியின் வாழேன்' எனத் தூயன்போன்று கூறினன் என்னும் குறிப்பிற்று.

நகுதலே தனது உடம்பாட்டை முதன் முதலாகத் தலைவனுக்கு அறிவித்ததாகலின், இயற்கைப் புணர்ச்சியை அதன்மேலிட்டு 'நகாஅ ஊங்கே' என்றாள். ஊங்கு என்னும் சுட்டு - காலங்குறித்தது. பூவொடு - இரண்டாவது மூன்றுவதனுருபாய் வந்த மயக்கம்.

பாட்டு - உஉஎ : தோழி கூற்று

துறை :—சிறைப்புறம். அஃதாவது, முதலுள் வந்து அல்ல குறிப்பட்டுத் தலைவியைப் பெறுமல் வறிதே மீண்ட தலை வன், மறுநாள் மனையகலே வந்தமை கண்ட தோழி, தலைவிக்கு உரைப்பாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், "தலைவன் நெருநல் இரவு இவண் வந்து மீண் டான் என்பது உண்மை; அஃதற்றாலறிநதனை யெனின் அவ னது தேர் உருள்கள் துணித்தமையானே கானலிடத்தே கூழை யாய்விட்ட நெய்தல்கள் காணப்படுகின்றன ஆதலான்" எனத் தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

உஉஎ. பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த
கூழை நெய்தலு முடைத்திவண்
தேரோன் போகிய கான லானே.

—ஓத ஞாலியார்.

(இ - ன்.) தேரோன் போகிய கானலான் - தேரேறி வந்த நந்தலைவன் மீண்டு சென்ற கடற்கரையின்கண், இவண் - இவ் விடம், பூண் வனைந்தன்ன பொலம் சூட்டு நேமி - பூண் கட்டி னற் போன்ற பொன்னலியன்ற விளிம்பையுடைய உருளின், வாள் முகம் துமிப்ப - வாள் போன்ற வாய் துணித்தலானே,

மூலமும் உரையும் ஙஙங

அணியர் தண் கடல் நாட்டே - நம் நெஞ்சிற்கு மிகவும் அணி மையிடத்துள்ளாராகிய அவருடைய குளிர்ந்த கடலையுடைய நாட்டிடத்தே, வீழ் தாழ் தாழை ஊழுறு கொழுமுகை - விழுது கள் தூங்கும் தாழையினது மலர்தலையுடைய கொழுவிய அரும்பு, குருகு உளர் இறகின் விரிபு தோடு அவிழும் - அன் னங்கள் தஞ்சிறகைக் கோதுமிடத்தே விரியாநின்ற இறகுகள் போன்று மடலவிழாநிற்கும், கானல் நுண்ணிய சிறுகுடி முன் றில் - கடற்கரைச் சோலையிடத்தே பொருந்திய நமது சிற்றூ ரின் முன்றிலிலே, திரை வந்து பெயரும் - அலைகள் வந்து மீளா நிற்கும்.

விளக்கம் :—வீழ் - விழுது. ஊழுறு - மலர்தலுறுகின்ற. குருகு - அன்னம். உளர்தல் - அலகானே சிறகினைக் கோதுதல். குருகுளர் இடத்தின் என்றும் பாடம். விரிபு: செய்புஎன் வாய்பாட்டு வினை யெசசம்; விரிந்தென்க. கானல் - கடல் சார்ந்த சோலை. சிறுகுடி - சிற்றூர்.

தலைவன்நாட்டுத்திரை நம் சிறுகுடி முன்றிலில் வந்து பெயரும் என்றியைபு காண்க. என்ப: அசைநிலை. தலைவனது உடைமை அவன் நாட்டுப்பொருள் முதலியவறறைக் கண்டுழித் தலைவனையே கண்டாற்போன்று மகிழ்வது அன்புமிக்க குலமகளிரின் பண்பு ஆக லான், அவர் நாட்டுக் கடற்றிரை நமமுன்றிலிலே வரும்போதெல்லாம் அவர் வந்தாற்போன்றே மகிழவேஞய் ஆற்றியிருநதேன் என்பாள், 'அவர்தண் கடற்றிரை நம் சிறுகுடி முன்றிலில் வந்து பெயரும்' என்ருள்.

அன்பர்களுடைய பொருளைக் கண்டவுடன் அவரைக் கண்டாற் போன்றதொரு மகிழ்ச்சி உண்டாதலை அநுபவத்தானும் உணரலாம்.

மெய்யுறுபுணர்ச்சி ஒன்றே அவர் பிரிந்துறையும்பொழுது இல்லை யானதன்றி உள்ளப்புணர்ச்சி தவிர்ந்திலேன் என்பாள், 'சேணுட்டா ராயினும் நெஞ்சிற் கணியர்' என்ருள். இதனனும் தான் ஆற்றியிருந் தமைக்கோர் எதுக் கூறியவாறுணர்க.

காதலர், உடன் மாத்திரையே ஒருவரை ஒருவர் பிரிவரன்றி உளத் தானே யாண்டும் பிரிவுடையாராகாமை ஈண்டு நன்கு விளக்கப்பட் டமை யுணர்க. தலைவனது தண்ணளியைக் கருதுவாள் அத்தண்மை யைக் கடற்கேற்றித், 'தண்கடல் நாடு' என்ருள்.

காதலன் நெஞ்சிற் கணியனதலை,

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து" (குறள்-கசஉ.)

என்றும்,

"உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர்." (குறள்-கசநo.)

என்றும் வரும் அருமைத் திருக்குறட் பாக்களானும் உணர்க.

பாட்டு - உஉகூ : கண்டோர் கூற்று

துறை :—இடைச்சுரத்துக் கண்டோர் தம்முள்ளே சொல்லியது. அஃதாவது தலைவன் தலைவியைத தமர் அறியாதே உடன்கொண்டு பாலைநிலத்தே சென்றபொழுது, இவரைப் பண்டறிந்தோர் இடைச்சுரத்தே கண்டு தம்முட் கூறியது.

இதன்கண், 'இவன் இளமையிலே இவளுடைய கூந்தலைப் பிடித்திழுப்பான்; இவளும் இவன்றலைமயிரைப பிடித்திழுத்து விட்டு ஓடிவிடுவாள்; இருவர் செவிலியரும் எத்துணை தடுத்தும் இருவரும அடிகடி சிறு கலகங்கள் புரிந்த வண்ணமே இருப்பர். இததகையோரை இணைபிரியாக் காதலராக்கி வைத்த ஊழ் மிகவும இனிய தொன்றுயிருந்தது' என்று இடைச்சுரதது கண்டோர் தம்முட் கூறிக் கொள்கின்றனர்.

உஉகூ. இவனிவ ளாம்பால் பற்றவும் இவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னே
நல்லமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.

—மோதாசாலர்.

(இ - ள்.) இவன் இவள் ஐம்பால் பற்றவும் - பண்டு இந்தம்பி இந்நங்கையினது கூந்தலைப் பிடித்து இழுப்பவும், இவள் இவன் புன்றலை ஓரி வாங்குநள் பரியவும் - இவளும் இவனது புல்லிய தலையின்கண் மயிரைப்பற்றி வளைப்பாளாய் ஓடா நிற்பவும், காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது - இவ்விருவருடைய அன்புமிக்க செவிலித்தாயர் இடைமறித்து விலக்கா நிற்பவும் விலகாமல், ஏதில் சிறு செரு வுறுப - அயன்மையுடைய சிறிய போரினைச் செய்வர், பாலே மன்ற நல்லை அம்ம - ஊழே தேற்றமாக நீ மிகவும் நன்மையுடையை; அஃதெற்றுலெனிற் கேட்பாயாக, மெல் இயல் துணைமலர்ப் பிணையல் அன்ன இவர் - இப்பொழுதோ மென்மையுடைய இயல்பு பொருந்திய பொருத்தப்பட்ட இரட்டை மலர்மாலை போன்ற இவர்கள், மணம் மகிழ் இயற்கை காட்டியோய் - தம்முள் இயற்கை மணம் புரிந்துகொண்டு மகிழா நிற்கும் இயல்பினை எமக்குக் கண்கூடாகக் காட்டாநின்றனை ஆகலான்.

இலக்கம்:—அண்மையிலே எதிர்செலக் கண்டனராகலின் 'இவன்' என்றும், 'இவள்' என்றும் சுட்டினர். ஐம்பால் - ஐந்து பகுதியாக ஒப்பனை செய்யப்படும் கூந்தல். சிறார்கள் ஒருவரை ஒருவர் மயிர் பிடித்தீர்த்துச் சிறு போர் செய்தல் யாவரும் கண்டது. சிறுநெய் விருக்குங் காலத்தே என்பது படப் புன்றலை ஓரி என்றார். என்னை? நெய் முதலியன இட்டுச் சிறார்கள் தம் தலைபேணுதல் இலராகலான் என்க. ஓரி - ஆண்பால் மயிர். வாங்குநள் - வளைப்பாளாய். இவன் அவள் கூந்தலைப் பிடித்து இழுத்துவிட்டு ஓடினனாக, இவளும் அவன் தலை மயிரைப் பற்றி வளைத்தற்குத் துரத்திச் செல்வாள் என்றவாறு.

காதற் செவிலியர் - இருவருடைய அன்புகெழுமிய செவிலியரும் என்றவாறு. இதனால் இருகுடியின் ஒப்புமையும் தோன்றுதல் அறிக. இத்தலைவனும் தலைவியும் ஒரூரினுட் பிறந்தோர் என்க. இஃதறியார் "ஐவகையினராகலின் செவிலியர் எனப் பன்மையாற் கூறினார்" என்றார். கலாம் செய்யன்மின் எனச் செவிலியர் தடுத்தபொழுதும் தவிராராய்ச் சிறுசெரு வுறுப என்க.

சிறுசெரு - தகுந்த காரணமில்லாத சிறிய போர். மன்ற அம்ம என்பன, 'மன்றம்ம' என, அகரங் கெட்டுப்புணர்ந்தன; விகாரம். மன்ற - தேற்றமாக; ஒருதலையாக. அம்ம, கேட்பித்தற் பொருட்டு. பால் - ஊழ். தூணைமலர் - வினைத்தொகை; தூணைத்த மலரையுடைய மாலையாகக் கொள்ளினுமாம் என்க. எதின்மை - அயன்மை. தூணை மலர்ப் பிணையல் இருவரும் ஆதரவுபட்டு ஒன்றிச் செல்லற்கு உவமை யாகலின் பண்புத்தொகையாகக் கோடலே சிறப்பு, இரட்டைமாலை என்னும் பொருட்டு.

மணம், ஈண்டுக் களவு மணம். சிறு பருவத்தே மனமொன்றுது இடையறுது சிறு செருவுற்றவர் மனத்தை ஒன்றுபடச செய்து தம் முட்டாமே மணம் புரியும்படி செய்த ஊழ் பெருவலியுடைத் தென்பார், 'நல்லை மன்ற' என்றார். பகைக்குணத்தை அன்புடைமையாகத் திருத்தும் செயல் பெரிதும் சிறப்புடையதாகலின் நின் செயல் ஆற்றவும் நன்றென்பார், 'நல்லை' என்றார். இயற்கை - இயல்பு.

பாட்டு - உஉ0 : தோழி கூற்று

துறை:—வலிதாகக் கூறிக் குறை நயப்பித்தது. அஃதாவது தன் பாற் குறையிரந்த தலைவனை ஏற்றுக்கொள்ளும்படி தலைவியை வேண்டக்கருதிய தோழி, தலைவியின் நெஞ்சந் துட்கென்னும் படி வல்லிதாய்க் கூறி உடம்படுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'தலைவன் நம்பால் ஊர்வதுதுடன் வந்துகொண்டிருந்தவன், சில நாட்களாக வாரா தொழிந்தான்; அங்ஙனம் வாராதிருத்தற்கு அவன் அன்பின்மை முதலிய ஏதுக்கள உடையனும் அல்லன்; ஒருகால் யான் அவனுடைய பெருந்தகையுள்ளத்திற்கு ஏலாத செயல்களைச் செய்திருப்பேன் போலும்; அதனற்றான் அவன் இனி உங்கே வருதல் கூடாதென மனமாறி அமைந்து விட்டான் என்று கருதுகின்றேன்' என்று தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

உகூ அம்ம வாழி தோழி கொண்கன்
தானது துணிகுவ னல்லன் யானேன்
பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததோன் றுடையேன் கொல்லோ
வயச்சுரு வழங்குநீர் அத்தம்
சின்னுள் அன்ன வரவறி யானே.

—அறிவுடை நம்பியார்.

(இ - ள்.) அம்ம தோழி-தோழீ யான் கூறுவதொன்றனைக் கேட்பாயாக, கொண்கன் வயச் சுரு வழங்கும் நீர் அத்தம் - நந் தலைவன் வலியுடைய சுரமீன் திரிகின்ற நீர்நிலைகளையுடைய அருவழியின் கண்ணே, சின்னுள் அன்ன வரவு அறியான் - பண்டு சில நாட்கள் வந்தாற் போன்ற வரவினை இற்றைநாள் அறிகின்றிலன், தான் அது துணிகுவன் அலலன் - அவன் தன்னியல்பானே அங்ஙனம வராதிருத்தலைத் துணிந்து அமை யும் தன்மையுடையானும் அல்லன், யான் என் பேதைமையால் பெருந்தகை கெழுமி - ஒருகால் யானேதான் எனக்கியல்பா யுள்ள அறியாமையாலே எனக்கொவ்வாத பெருந்தகைமை யோடே பொருந்தி, நோதகச் செய்தது ஒன்று உடையேன் கொல்-அவன் நெஞ்சம வருந்தும்படி செய்த செயல் யாதேனும் ஒன்றை உடையேனே அல்லனே அறிகின்றிலன்.

விளக்கம் :—அம்ம: இடைசசொல்; கேட்பித்ததற்கண்வந்தது. வாழி அசைநிலை. தலைவன் தவறிலன் ஆகலின் அவன் வாழ்க என வாழ்த் தினுள் எனக் கோடலுமாம். கொண்கன் - நெய்தனிலத்தலைவன். பெருங்குடிச செம்மலாகலின் நட்டாரைக் கைவிடுங் கீழ்மை அவன் பாலுளதாகாது என்பாள், 'தான் அது துணிகுவன் அல்லன்' என்றாள். அது என்றது வரவறியாமையைச சுட்டி நின்றது. செய்யுளாகலின் சுட்டு முன் வந்தது அவன் வாராமைக்குக் காரணம் அவன் சிறுமைக் குணமன்று என்றவாறு. பேதைமை மகளிர்க்கியல்பாக உள்ளமையின் என் பேதைமை எனக் கிழமைப்பொருளிற் கூறினாள். பேதைமை யால் பெருந்தகை கெழுமி என்று ஏதுக்காட்டியமையால் எனக்கொவ் வாத பெருந்தகைமையை மேற்கொண்டு என்றாளாயிற்று. பெருந் தகைமையாவது ஈண்டுத் தலைமைப்பண்பு. இஃதென் சொல்லிய வாறோ எனின், யான் தலைவனோடு ஊடாடிச் செயல் புரியுங்கால் என் தகுதிக்கேற்ற சொற்செயல்களை மேற்கொள்ளாமல், தலைமையாளர்க் குரிய சொற்செயல்களை மேற்கொண்டு ஒழுகிவிட்டேனோ என்றவாறும். எனவே எனது பிழைச செயல் அவன் உளத்தைப் புண்படுத்தினமை யால் இக்கீழ்மகள் கேண்மை நமக்கொவ்வாதென நம் நட்பைத் தன் பெருந்தன்மையால் சொல்லாதே சோரவிட்டனன் போலும் என்று தன் பிழைக்கு இரங்கியவாறுமாம், இதனைக கேட்ட தலைவியின் உளத்தே ஞாரேலென இவள் நங்கணவனே இனி ஈண்டு வாராதபடி ஏதோ தவறுசெய்து கெடுத்தொழிந்தாள் போலும் என அசசந்

தோன்ற, அவள விரைந்து அங்ஙணமாயின் அப்பெருமகனே இனி யாம் எங்ஙனம் காண்பாம் என்று ஆராய்வாளாயத் தோழியை உபாயம் வினவ முற்படுவாளாதலும் அங்ஙனம் தலைவனைப் பெறத் தலைவி முற்பட்டவழி, குறைநயப்பித்தல் தோழிக்கு எளிதாம் என்பதும் நுண்ணிதின் உணர்க.

இங்ஙனம் நுண்ணிதாய்ச் செய்யுளமைத்த அருமை நோக்கியே இதனை யாத்த நல்லிசைப் புலவரை அறிவுடை நம்பி என நம்முன்னோர் ஏதுப் பெயராலே வழங்கினர் போலும்.

தலைவன் நின்பால் பேரன்புடையன் என்பதனைக் குறிப்பான் உணர்த்துவாள், 'வயசசுரு வழங்கு நீர் அத்தம் வருவோன்' என்றாள். சின்னாள் அன்ன வரவு - முன்னர்ச சில நாட்கள் வந்தது போலும் வரவென்க. வரவறியான் - வாராதவன் ஆயினான் என்றபடி. வயச் சுரு - வலிய சுரமீன். தலைவன் வருவழியில் நீர்நிலைகளில் இறங்கி வருதல் வேண்டும் என்பாள், 'நீர் அத்தம்' என்றாள். நின்பாற் கழி பெருங்காதலன் என்பாள், 'வயசசுரு வழங்கும் நீரத்தம் சின்னாள் வரலானும்' என்றாள். பெருந்தகைமையை உரிமை என்றாரு முளர். உரிமையாற் றகாத செய்தவழி அதனைப் பொறுத்தலே தலைவற்குச் சிறப்பாகலின் அது கருத்தன் றென்க.

பாட்டு - உகக : தலைவி கூற்று

துறை.—வாயிலாகப்புக்க தோழிச்குத் தலைமகள் சொல் லியது. அஃதாவது, பரதத்மை மேற்கொண்ட தலைவனபால் ஊடியிருந்த தலைவியைத் தன்பால் குறை யிரந்த தலைவற்கிரங்கிக் குறை நயப்பிக்கப்புக்க தோழிக்குத தலைவி மறுதலுக் கூறியது.

இதன்கண், 'தலைவா நல்லர்' என்ற தோழியை நோக்கி, 'ஏடி, அவர் இவ்வூரின்கண்ணே உறைபவராயிருந்தும், நம் முடைய தெருவிற்கு வருவாரல்லர்; எப்போதாவது வந்தால் நமமொடு அளவளாவுதலும இலர்; ஆகலின் என் நாணத்தைக் கொன்று நலனறிவினை இழப்பித்த அப்பொல்லாக் காமமும் சேட்சென்று கழிந்தது; இங்ஙனம் ஒழுகுவோர் நல்லராதல் எங்ஙனம்?' என்று தலைவி கடிந்து கூறுகின்றாள்.

உகக. ஓரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
ஏதி லாளர் சுடலை போலக்
காணைக் கழிப மன்னே நாணட்டு
நல்லறி விழந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) தோழி ஓர் ஊர் வாழினும் சேரி வாரார் - தோழி! நந்தலைவர் நாம் இருக்கும் இவ்வூரிலேயே வாழ்பவராயிருந்தும் நம தெருவிடத்தே வருவாரல்லர், சேரி வரினும் ஆர முயங்கார் - எப்பொழுதாவது அவர் இத்தெருவிடத்தே வருதலுண்டெனினும் அப்பொழுதும் தம நெஞ்சு பொருந்த நம்மைத் தழுவுவாருமல்லர், ஏதிலாளர் சுடலை போலக் காணுக் கழிப - அவர சேரியிடத்தே வருமபொழுதும் அயலாருடைய சுடுகாட்டைக் கண்டு செல்லுவார போல நம்மைக் காணுமாத் திரையானே வாளா செலலாநிற்பர், நாண் அட்டு நல்லறிவு இழந்த காமம் - பண்டு அவரைக் கண்டதனையானே எனது நாணத்தைக் கொன்று நல்லறிவை இழப்பித்த என் காமம், வில் உமிழ் கணையிற் சென்று சேண் பட - வில்லால் எய்யப்பட்ட அம்புபோன்று போய் நெடுந்தூரத்தே வீழ்ந்ததொழியும்படி.

விளக்கம் :—'தலைவர் இங்ஙனம் ஒழுகலின், அவர் நம்பால் அன்புடையாரல்லர்; அவர் பொருட்டு நீ பரிவது நன்றன்று!' என்று வாயில் மறுத்தாள் தலைவி என்க. சேரி-தெரு. 'சேரிக்கு வருதலிலர்; எப்பொழுதேனும் வந்தவிடத்தும் முயங்கார்' என்க. ஆர முயங்குதல் - வேட்கை தீரத்தழுவுதல்.

கண்டவழி வெறுத்து ஒதுங்கிச் செல்லாநின்றனர் என்பாள், ஏதிலாளருடைய சுடலை காண்பாரை உவமை எடுத்தோதினள். ஏதிலாளர் - அயலோர். காணுக் கழிப - கண்டு செல்வார். காணு : செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். காணுமளவானே செல்வர் பிறிதொன்றும் செய்யார் என்று புலந்தபடியாம். நம்பால் அன்பிலாரைப் பண்டு கண்ட பொழுது நம் உயிரினும் சிறந்த நாணத்தையும், நல்லறிவினையும் அழித்து வளர்ந்தது இக்காமம்; அஃது இப்பொழுது கையற்று அழிகின்ற தென்பாள், 'நாணட்டு நல்லறி வழிந்த காமம் சென்று சேட்பட' என்றாள். நாணமும் நல்லறிவும இழந்தவர் கையறவு கொள்வது இயற்கையாதலுணர்க.

தொடக்கத்தே மிகவும் விசையுடன் எழுந்து செல்லச் செல்ல விசையவிந்து இறுதியில் இயக்கமற்று வீழ்ந்து கிடக்கும் அம்பினைத் தலைவன்பால் தொடக்கததே வேணவாவுடன் தோன்றி, நாட்கள் கழியக் கழிய அவவிழைவு குன்றி, இறுதியில்செயலற்றுப் போன தன் காமத்திற்கு உவமை எடுத்தோதிய அழகு பெரிதும் பாராட்டத் தக்கதாதல் அறிக.

இக் காமம் இந்நிலையை எய்தியது எனக்கும் மகிழ்ச்சியே என்பாள் போல, அதன் கொடுஞ்செயலை விதந்து கூறினள் என்க. இங்ஙனமே திருக்குறளினும்,

> "ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
> டாஅ மிதற்பட் டது." (குறள் - ஈஈஎசு)

என வள்ளுவனரும் ஓதுதலுணர்க.

இது தலைவி தலைவனே விரும்புகிலாள் போன்று கூறியது.

பாட்டு - உகூ : தோழி கூற்று

துறை —பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது அஃதாவது தலைவன் வினைவயிற் பிரிந்த காலத்தே ஆற்றுளாய தலைவிக்கு, 'நீ ஆற்றல் வேண்டும்' என்பதுபடத் தோழி கூறியது

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் நின்னை மறப்பாரல்லர்; இடையறாது நின்னை நினைந்தே இருப்பர்; ஆடவர்க்கு வினையே உயிரன்றே! தாம் மேற்கொண்ட வினை முற்றுமையாலே அவர் இன்னும் வந்திலர்; நீ ஆற்றியிருத்தலே அறிவாம்' என்று கூறித் தேற்றுகின்றாள்.

உகூ. உள்ளா கோல்லோ தோழி உள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கோல்லோ
மரற்புகா வருந்திய மாவேருத் திரலை
உரற்கா லியானை யோடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

—ஊண் பித்தையார்.

(இ - ள.) தோழி—, மரல புகா அருந்திய மாளருத்து இரலை - மரலாகிய உணவை உண்ட பெரிய பிடரையுடைய ஆண் மான், உரல கால் யானை ஓடித்து உண்டு எஞ்சிய - உரல் போன்ற கால்களையுடைய யானையால் முறித்து உண்ணப்பட்டு எஞ்சி நின்ற, யாஅ வரிநிழல் துஞ்சும் - யாமரத்தினது வரிவரியான நிழலிலே துயிலாநின்ற, மா இருஞ சோலை மலை இறந் தோர் - மிகப பெரிய சோலைகளையுடைய மலைகளைக் கடந்து சென்ற நந்தலைவர், உளளார் கொல் - நமமை நினையாரோ; நினைந்தே இருப்பர், உள்ளியும் - நமமை நினைத்தமை, வாய்ப்பு உணர்வு இனமையின - தாம மேற் கொண்ட வினைமுற்றற்கு வாய்ப்பு உணரப்படாமையானே, வாரார் - இன்னும வந்திலர்; அதனாலே காண்.

விளக்கம்:—தலைவர் தாம் மேற்கொண்ட வினைமுற்றியவுடனே வருதல் ஒருதலை; அதுகாறும் ஆற்றுக என்பது குறிப்பு.

உள்ளுதல் - நினைதல். கொல்: வினாவின்கண் வந்தது. தலைவி 'நம்மைத்தலைவர் உள்ளார் கொல்?' என்று ஐயுற்றுக் கூறத் தோழி உள்ளாதிரார் என்பது பட அவள் வினாவையே கொண்டு கூறுகின்றாள் என்க. 'உள்ளார் கொல்' என்ற வினா, உள்ளுவர் என்னும் பொருள் பட நின்றது.

வாய்ப்புணர்வு - வினைமுற்றுமிடனறிதல். 'வினையே ஆடவர்க் குயிர்' ஆகலின், நம்மை எண்ணி வினைமுற்றாது மீளலும் அவர்க்குத்

தகவன் றென்பாள், 'உள்ளியும் வாரார்' என்றாள். வாய்ப்புணர் வின்மையின் வாரார் எனவே, 'வாய்த்தவுடன் வருதல் ஒருதலை' என்று குறிப்பாலுணர்த்தினளாயிற்று.

மரல் - ஒருவகைக் கொடி. இதனை மான்கள் தின்னும். இதனை "மடமா னசாவினத் திரங்குமரற் சுவைக்கும்," (அகம்-சகூ.) என்றும், "வரிமரல் கறிக்கும் மடப்பிணை (அகம் - கஉக.) என்றும் பிறர் கூறு மாற்றாலும் உணர்க.

வாரார் கொல்லோ என்பதிற்'கொல்,' - அசைநிலை என்க. புகா-உணவு. மரற்புகா: பண்புதொகை. இரலை - ஆண்மான்.

உண்டு என்னும் எச்சத்தை உண்ண என்று திரித்துக் கொள்க. எஞ்சிய என்பதை எஞ்சுவித்த எனப் பிறவினை ஆக்கினும் அமையும். உண்டு எஞ்சுவித்த யாகிழல் என்க. யா - ஒரு வகைமரம். வரிநிழல் - நிரம்பா நிழல். இரலை புகாவுண்டு நிழலிலே துஞ்சும் சோலை என்றது, அதனைக் காணுந் தலைவர் யாமும் இவளிரலை போன்று வினைமுடித்து மீண்டும் மனையிற் சென்றின்புறுவேம் எனகருதுவர் என்றவாறு.

பாட்டு - உகக: தலைவன் கூற்று

துறை:—பட்டபின்றை வரையாது சென்று வினைமுற்றி மீளுந் தலைமகன் தோப்பாகற்குச் சொல்லியது. அஃதாவது, களவு வெளிப்பட்டபின்னர் வரைந்து கொள்ளாதே வினைமேற் சென்ற தலைவன் வினைமுற்றி மீண்டு வரும் பொழுது தலைவியின் ஊரைப் பாகற்குக் காட்டிக் கூறியது.

இதன்கண், தலைவன் பாகனை நோக்கி, 'அதோ கவலைக் கிழங்ககழ்ந்த சிறுகுழிகணிறையக் கொன்றைப் பொன்மலர் உதிர்ந்து பொற்பேழை திறந்தாற்போல் தோன்றுகின்ற முல்லை நிலத்தின் கண்ணே தோன்றுவதுதான் நந்தலைவியின் வண்மை மிக்க தந்தையின் ஊராகும்' என்று அறிவிக்கின்றான்.

உகக. கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே!

—பேயனார்.

(இ - ள்.) பாகனே!, உயர்ந்தோர்க்கு நீரொடு சொரிந்த மிச்சில் - அந்தணர்க்கு நீரோடே வழங்கி எஞ்சிய பொருளையும்,

யாவர்க்கும் வரைகோ ளறியாச் சொன்றி - எத்தகையோர்க்கும் தடைசெய்தலை அறியாத சோற்றையும் உடைய, கிரை கோல் குறுந்தொடி தந்தை ஊர் - கிரல்பட்ட திரண்ட குறிய வளையலை யுடைய நந்தலைவியினுடைய தந்தையினது ஊர், கவலை கெண்டிய அகல் வாய்ச் சிறுகுழி - கவலைக் கிழங்கைக் கல்லி எடுத்தமையா லுண்டான அகன்ற வாயையுடைய சிறிய குழிகள், கொன்றை ஒள் வீ தாஅய் - கொன்றையினது ஒளிளிய மலர்கள் உதிர்ந்து பரக்கப்பட்டு, செல்வர் பொன் பெய் பேழை மூய் திறந்தன்ன - செல்வர்கள் பொன் பெய்துவைத்த பேழையினது மூடியைத் திறந்தாற் போன்ற தோற்றத்தையுடைய, கார் எதிர் புறவினது - கார்காலத்தை ஏற்றுக் கொண்டுள்ள இம் முல்லைநிலத்தின் கண்ணதாம்.

விளக்கம் :—வரைந்துகோடலுக்கு முன்னர்க் களவுக்காலத்தே யும் வினைமேற் பிரிந்துசேறல் உண்டென்பதனை,

> "வெளிப்படை தானே கற்பிலை டொப்பினும்
> ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
> வரையாது பிரிதல் கிழவோற் கில்லை" (களவு - ஙo)

என்னும் தொல்காப்பியக் களவியற் சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர்,' "மூன்றுமென முற்றும்மை கொடாது கூறினமை யின், ஏனைப்பிரிவுகளின் வரையாது பிரியப் பெறும் என்ற வாறுயிற்று; அவை வரைதற்குப் பொருள்வயிற் பிரிதலும், வேந்தற்குற்றுழியும், காவற்குப் பிரிதலும் என மூன்றுமாம்." என்று கூறியதனாலும் அறியலாம்.

இச் செய்யுளைக் கற்பின்கட் பிரிவாகக் கருதுவாரும் உளர்.

கவலை - ஒருவகைக் கிழங்கு. கெண்டுதல் - கல்லுதல். கொன் றைப்பூ உதிர்ந்து கிழங்ககழ்ந்த குழிகளின் நிறைந்திருத்தல் பொற் பேழை திறந்தாற் போன்று தோன்றும் என்க. மூய் - மூடி. கொன்றை கார்ப்பருவத்தே மலர்தலின், 'காரெதிர் புறவு' என்றான். புறவு - முல்லை நிலம். உயர்ந்தோர் என்றது அந்தணரை. மிசில் - எஞ்சிய பொருள். தனக்குத் தலைவியைத் தந்த நன்றி கருதி, அவள் தந்தை யைப் பாராட்டினனென்க. வரைகோள் - தடுத்தல். சொன்றி - சோறு. எத்தகையோர்க்கும் வரையாது சோறுவழங்கும் வள்ளல் என்று பாராட்டியவாறும். குறுந்தொடி : அன்மொழித்தொகை. வினைமுற்றி மீண்டு வரும் தலைவன், தலைவியின் ஊராகாண்டலும் மகிழ்ந்து பாகனுக்குக் கூறினன் என்க.

பாட்டு - உசஉ : தலைவி கூற்று

துறை :— பருவ வரவின்கண் தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, 'கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருவேன்' எனக் கூறிப் பிரிந்த தலைவன், அப்பருவம் வந்த

பின்னும் வாராமை, ஆற்றுமைமிக்க தலைவி தோழிக்குத் தன்னிலைமை தெரித்துக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'மயக்கமுடையோர் வானம் சிவந்து ஞாயிறுபட்டு முல்லை மலரும் காலமே அந்திக் காலம் என்று கூறுகின்றனர்; பிரிந்துறைவோர்க்கோ, கோழி கூவும் விடியலும், நண்பகலும், எல்லாம் மாலைக்காலமே ஆகின்றன' என்று கூறுகின்றாள்.

உஉச. சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனோ மயங்கி யோரே
குடுமிக கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை
பகலும் மாலை துணைபி லோர்க்கே.

—மிளைப்பெருங் கந்தனார்.

(இ - ள்.) தோழி!, மயங்கியோர் - அறிவு மயக்க முடைய மாந்தர்கள், சுடர் செல வானம் சேப்பப் படர்கூர்ந்து - ஞாயிறு மறைந்து போன வானம் சிவப்பத் துன்பமிக்கு, எல அறு பொழுதின் - ஒளி அற்ற பொழுதினையே, முல்லை மலரும மாலை என்மனோர் - முல்லைபபூ மலருகின்ற மாலைக்காலம என்று கூறு நிற்பர், துணை இலோர்க்கு - காதலரைப் பிரிந்து தமியராயி னோர்க்கோ, குடுமிக் கோழி நெடுநகர இயம்பும-சூட்டினையுடைய சேவற்கோழி நெடிய நகரததின்கண்ணே கூவா நின்ற, பெரும் புலர் விடியலும் மாலை-பெரிய இருள் புலர்கின்ற விடியற் காலமும் மாலைக்காலமேயாகும், பகலும மாலை - அஃதான்று நண்பகற் பொழுதும மாலைக்காலமே யாகும்.

விளக்கம்:—'மாலைக்காலத்தில் மட்டுமே காமநோய் மிக்கு வருத்தும்' என்பர் அறிவு மயக்கமுடையோர்; 'காதலர்ப் பிரிந்து தமியராயினோர்க்கு எல்லாச சிறுபொழுதுகளும் அம்மாலைக்காலம் போன்றே நோயை மிகுவிகின்றன' எனபது கருத்து. மாலைப்பொழுதின்கண் காமநோய் மிகுமென்பதை,

"மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலோ வாழி பொழுது." (குறள் - கஉஉக)

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்." (குறள் - கஉஉஎ)

என்றற் றொடக்கத்துத் திருக்குறட் பாக்களான் உணர்க.

சுடர் - ஞாயிறு. ஞாயிறு மறைந்து போன வானம் என்க. ஞாயிறு மறைந்தவுடன் மேலைவானம் சிவத்தல் இயல்பு. எல் - ஒளி. ஞாயிறு

மறைந்து செக்கர்வானந் தோன்றி ஒளி மங்கும் ஒரு சிறு பொழுதை மட்டுமே காமநோய் மிகும் மாலை என்பர் அறியார். பிரிந்தோர்க்கு எல்லாப் பொழுதும் மாலைப்பொழுதே என்றுள் என்க. குமிழ் - சூட்டு, கொண்டை; கோழிச் சேவல் என்றவாறு. இயம்பும்-கூவும். நெடுநகர்-நெடிய வீடுமாம்.

என்மனூர் - என்று கூறுவார்கள். மன் : அசைநிலை. பிரிந்தோர்க்கு எல்லாப் பொழுதுமே பெருந்துன்பம் செய்வனவாக மாலை ஒன்றுமே துன்பஞ் செய்வது என்று கூறுகின்றனர். அவர் உண்மை உணராதார் என்பாள், 'மயங்கியோர்' என்றாள்.

பாட்டு - உருபு : தலைவன் கூற்று

துறை :—வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு உரைப் பானைப்ப் பாகற்கு உரைத்தது அஃதாவது, களவுக் காலத்தே வினைமேற் பிரிந்து செல்கின்ற தலைவன், 'தன் பிரிவாலே தலைவி வருந்துவள் விரைவில் மீளுதல் வேண்டும்' என்று பாகனுக்குக் குறிப்பானே உணர்த்தும் பொருட்டு அவன் கேட்ப வாடையை விளித்துக் கூறியது.

இதன்கண், தலைவன் வாடையை விளித்து 'காற்றே அதோ அருவி தாழ்கின்ற மலையின் உச்சியிலே இருப்பதுதான் தலைவியின் ஊர்; ஆண்டு அவள் தனித்துறைகின்றாள்; ஆகலின், அவளை நீ வருத்தாதே பாதுகாப்பாயாக' என்று கூறுகின்றான்.

ஊடு. ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

—மாயெண்டனார்.

(இ - ள்.) ஓ வாடை - ஓ வாடைக்காற்றே!, மரையினம் நெல்லி ஆரும் முன்றில் - மரையின் கூட்டம் நெல்லிக்காயைத் தின்ன நின்ற முற்றத்தையுடைய, புல்வேய் குரமபை ஊர் - புல்லால் வேயப்பட்ட குடில்களையுடைய தலைவியினது ஊர், பாம்பின் தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவி - பாம்பினது தூங்காநின்ற உரியினை ஒக்கும தூய வெள்ளிய அருவிகளை உடைய, கல் உயர் நண்ணியது - மலையின் உச்சியிலே பொருந்தியது, ஓம்பு மதி வாழி - ஆண்டுத் தனித்துறையும் தலைவியை நீ வருத்தாமற் பாதுகாப்பாயாக; நீ வாழ்க.

விளக்கம் :—இதனை, "தலைவன் நெட்டாறு சேறலின்றி அணிமைக் கட் பிரிந்தவழிக் கூறியது" (தொல் - களவு - கள. உரை.) என்பர்

இளம்பூரண அடிகளார். இதன்கண் வாடைக்குக் கூறு முகத்தான், தானெஞ்ரு தலைவியைக் களவுமணம் புணர்ந்துள்ளதனையும், அவள் தனது பிரிவாலே பெரிதும் வருந்தியிருப்பள் என்பதையும், அவள் ஊர் இவ்விடத்தது என்பதையும், பிரிந்துறைவார் ஆற்ரெணுதை கூதிர்காலம் இஃது என்பதையும், ஆதலால் நாம் விரைந்து மீளல் வேண்டும் என் பதையும் தலைவன் பாகனுக்கு உணர்த்தியவா றுணர்க.

ஓம்புமதி 'மதி' முன்னிலை யசை. வாடை ஓம்புதலாவது, தான் வருத்தாதே ஒழிதல். பிரிந்தாரை வாடை பெரிதும் வருத்தும் என்ப தனை "இன்ஞெதறிதரும் வாடையொடு, என்ஞ யினள்கொல் என்ஞ தோமே." (குறுந் - ககo.) எனப் பிறர் கூறுமாற்ரானும் உணர்க.

ஞங்கு தோல் - நாலுகின்ற உரி. இது அருவிக்குவமை. உயர்- உச்சி. நண்ணியது - பொருந்தியது. ஏகாரம் : பிரிநிலை.

மரை - ஒருவகை விலங்கு. நெல்லி-ஆகுபெயர்; நெல்லிக்காய். நல்லாரை நலிதல் பெரும்பாவ மென்பான், 'நல்லோள்' என்ரான். நலியாமைக்கு எதுக்காட்டியவாறு குரம்பை - குடில்.

பாட்டு - உகசூ : தோழி கூற்று

துறை :—வரைவிடைவைத்துப் பிரிவான், 'இவள் வேறு படாமை ஆற்றுவி' என்ரற்குத் தோழி நகையாடி உரைத்தது. அஃதாவது, வரைவிடைவைததுத் தலைவியைப் பிரிந்து செல் லக் கருதிய தலைவன், தோழியை நோக்கி, 'யான் வருந்துணையும் இவளை மேனி நலனழியாமல் ஆற்றுவாயாக' என, தோழி நகைத்து அஃதியலா தென்பதுபடக் கூறியது.

இதன்கண், 'இவளை ஆற்றுவித்திடுக' என்ற தலைவனைத் தோழி 'ஐய இவளை வேறுபடாது ஆற்றுவிக்கவெனில், பிரிகின்ற நீ இவள்பாலுண்ட பெண்மைநலனை எல்லாம் தந்து போதல் வேண்டும்; இன்றேல் ஆற்றுவித்தல் அரிது' என்று கூறு கின்ரனள்

உகசூ. விட்டென விடுக்குநாள் வருக அதுநீ
நேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ உண்டவென் னலனே.

—நரிவெரூஉத் தலையார்.

(இ - ள்.) குன்றத்து அன்ன குவவுமணல் அடைகரை- மலையைப் போன்ற குவிந்த மணலையுடைய நீரடை கரையின்

கண்ணே, நின்ற புன்னை நிலந்தோய் படுசினை - வளர்ந்து நின்ற புன்னைமரத்தினது நிலத்தைத் தொடுமாறு தாழ்ந்த கிளையின் மேல், வம்ப நாரை சேக்கும் - புதிதாக வந்த நாரை தங்கா நின்ற, தண் கடல் சேர்ப்ப - தண்ணிய கடலையுடைய தலைவனே, விட்டென விடுக்கும் நாள் வருக - இவளை நீ கைவிட்டாய் என்று அறியும்படி நீ பிரிந்து போகும நாள் வருவதாயின் வருக, அது நீ நேர்ந்தனையாயின் - அந்நாள் வருதலை நீ உடம்படுவாயாயின், நீ உண்ட என் நலன் தந்தனை சென்மோ - நீ நுகர்ந்த எனது பெண்மை நலத்தை முழுதும் தந்து செல்வாயாக.

விளக்கம்:—"மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்" (கற்பு-கூ.) எனவரும் தொல்காப்பிய விதி கற்பின்கண் ஓதப்பட்டதாயினும் அது களவிற்கும் உரித்தென்பார், துறை வரைந்தவர் "வரைவிடை வைத்துப் பிரிவான்" என்று விதந்து கூறினர்.

விட்டென விடுக்கும் நாள் என்றது, முழுதும் கைவிட்டாய் என, யாங்கள் அறிந்து கொள்ளும்படி நீ எம்மை விட்டகலும் நாள் என்ற வாறு அந்நாளே தலைவி இறந்துபாடுறுநாள் ஆகும் என்பாள், 'விட்டென விடுக்கும் நாள்' என்றாள். அத்தகைய தொரு கொடிய நாள் எமக்கு வருதலை நீயும் உடம்படுவாயாயின் என்பாள், 'அது நீ நேர்ந்தனை யாயின்' என்றாள். நேர்ந்தனையாயின் என்றது, நேராமையே நினக்குத் தகவாம்; அத் தகவின்றி நேர்வாயெனின் என்பதுபட நின்றது. "இங்ஙனமொரு கேடு எங்கட்குச செய்யத்துணிந்த நீ, 'அவளை ஆற்றுக' என்கின்றனை. நின் கட்டளைப் படி யான் ஆற்றுவித்தற்கு உறுதுணையாக நீ நுகர்ந்த அவள் நலனை மீண்டுங் கொடுத்துச் செல்க" என்பாள், 'நலன் தந்தனை சென்மோ' என்றாள். நலன் தந்து சேறல் நினக்கியலாதாற் போன்று, நின் பிரிவின்கண் அவளை ஆற்றுவித்தலும் எனக்கியலாதாம் என்பது குறிப்பு.

வம்பநாரை - வேற்று நிலத்திருந்து புதிதாக வந்த நாரை. அஃது அந்நிலத்தியல்பறியாது தனக்கு இரைகிடைக்கப் பெறுத புன்னைப் படுசினையி லிருந்தாற் போன்று, புதுவதுகிய நீயும் அவளியல்பறியாது பிரிந்துபோய் ஈட்டும் பொருளின்கண் மனம்வைத்ததனை என்பது குறிப்பு. நின்னைப் பிரிந்து தலைவி உயிர்வாழ்வாள் அல்லள் என்றுணர்த்தியவாறும். நின்கடலே தண்ணிது! நீ வெய்யை என்பாள், 'தண்கடற் சோப்ப' என்றாள். தலைவிக்கும் தனக்கும் வேற்றுமை கருதாது 'நீ உண்ட என் நலன்' என்றாள்.

பாட்டு - உஉஎ : தலைவன் கூற்று

துறை :—பொருள்முற்றி மீள்வான் தேர்ப்பாகனுக்கு உரைத்தது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன், அதனை ஈட்டிக்கொண்டு மீண்டு வரும்போது, 'தன் நெஞ்சிற் கியையத் தேர் விரைந்திலது; விரைந்து

செலுத்துக!' என்று பாகனுக்குக் கூறுவான், தன் நெஞ்சு விதுப்புறுதலைக் கூறியது.

இதன்கண், 'பாகனே கேள்! இடையே அஞ்சத் தகுவன உளவாதலை ஆராயாது என் நெஞ்சமோ தான் விரும்பிய தலைவியைத் தழுவும் பொருட்டு என்னைப் பிரிந்து அவள்பாற் சென்றுவிட்டது; ஈண்டு எஞ்சிநின்ற கைகளானே பிணித்துத் தழுவுதலை அஃது விடுமாயின் அத் தழுவுதலால் யாது பயன்; பயனுறக் கைபிணி நெகிழாது தழுவிக்கொள்ள அவள் இருக்கு மிடத்திற்கும் எமக்கும் இடையே கிடந்த இடையூறுகள் தாம் எத்தனையுள்ளனகாண்' என்று தலைவன் கூறுகின்றான்.

உங.எ. அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇய
நெஞ்சுநப் பிரிந்தன் றாயினும் எஞ்சிய
கைபிணி நெகிழின் அஃ தெவனே நன்றும்
சேய வம்ம இருவா மிடையே
மாக்கடல் திரையின் முழங்கி வலனேர்பு
கோட்புலி வழங்குஞ் சோலை
எனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை மலைவே.

—அள்ளூர் நன்முல்லையார்.

(இ - ள்.) பாகனே!, அஞ்சுவது அறியாது அமர்துணை தழீஇய - அஞ்சுதலை அறியாமல் தான் விரும்பிய தலைவியைத் தழுவிக்கொள்ளும் பொருட்டு, நெஞ்சு நம் பிரிந்தன்று - நெஞ்சம் நம்மைப் பிரிந்து அவள்பாற் சென்றுவிட்டது, ஆயினும - அஃது அவ்வாறு சென்றதாயினும், எஞ்சிய கை பிணி நெகிழின் அஃது எவன் - ஈண்டு நம்மோடு எஞ்சிநின்ற கைகள் அது தழுவுங்கால் தம் பிணித்தற்றொழிலை விட்டுவிடு மாயின் அத்தழுவுகையால் யாது பயன், இருவாம் இடை நன்றும் சேய - நெஞ்சின் தழுவுதல் பயன்படுமாறு கையாற் பிணித்துக்கோடற்கோ யாம் இருவரும் உறையும் இடங்கள் ஒன்றற்கொன்று பெரிதும் சேய்மைக்கண் உள்ளன. முயக் கிடை மலைவு - மேலும் எங்கள் தழுவுகைக்கு இடையே அமைந்த இடையூறுகளாகிய, மாக் கடல் திரையின் முழங்கி வலன் ஏர்பு கோள புலி வழங்கும் சோலை - பெரிய கடலினது அலை முழங்குமாறு முழங்கி வலமாக எழுந்து கொலைத் தொழிலையுடைய புலிகள் திரியாநின்ற சோலைகள் தாமும், எனைத்தென்று எண்ணுகோ - எத்துணை உள்ளன என்று எண்ணுவேன்.

விளக்கம் :—நெஞ்சம் யாதானும் ஒரு பொருளைச் சென்று பற்று தற்கு அஞ்சவேண்டியதின்றுகலின், அச்சம் அறியாது நெஞ்சு பிரிந்தது என்றான். அமர்துணை - விரும்புதற்குக் காரணமான துணை என்க. தழீஇய - தழுவும் பொருட்டு. பிரிந்தன்று - பிரிந்தது. எஞ்சிய நம்மோடு தங்கிவிட்ட என்க. நெஞ்சம் போனவழி உடல் போகமாட்டாமையின் கை எஞ்சியதென்றான். நெஞ்சம் நம்மைப் பிரிந்து போய வழியும் ஆண்டு அவளைத் தழுவுதற்குரிய கைகள் இன்மையின் அதன் தழுவுதல் பயனின்றென்பான், 'கை பிணி நெகிழின் அஃது எவன்' என்றான். கைபிணி - கையாற்றழுவும் தழுவுகை என்க. நெகிழ்தல் - இல்லையாதல் நெஞ்சம் தழுவுதல், தலைவியையும் அவள் உறுப்புக்களையும் ஊன்றி நினைத்தலே யாகலின், அந்நினைவு மாத்திரையால் துன்பமே உண்டாம். இன்பமுண்டாக வேண்டுமாயின், நெஞ்சு பொருந்துதலோடே உடலானும் பொருந்தித் தழுவுதல் வேண்டும். அதற்கு யாம் இவண மாகலின் நெஞ்சு பிரிந் தமையால் துன்பமே உண்டாயிற்று என்றிரங்கியவாறு.

நம் நெஞ்சு விரைந்து சென்றதற் கேற்ப யாமும் விரைந்து செல்லற்கோ, யாங்கள் இருவரும் இருக்கும் இடங்கள் சேயவாயின; வழியும் கொடிய புலிகளையுடைய சோலைகள் பலவுடைத்தென்பான், 'மூயக்கிடைமலவு எனைத் தென் றெண்ணுகோ' என்றான், மலவு - இடையூறு. கூட்டத்திற்கிடையே கிடந்த இடையூறுகள் என்க. இடையூறுகள் - சேயவாதல், புலி வழங்கும் சோலைகள் இடையில் உளவாதல், நெஞ்சம் பிரிதல், தேர்விரையாமை முதலியனவாம்.

'இதனால் யான் தலைவியைக் கண்டு அளவளாவப் பெரிதும் அவாவி அலமருகின்றேன். ஒல்லும்வகை தேரை விரைந்து செலுத்துக' என்று பாகற்குக் குறிப்பால் உணர்த்தப்பட்டமை உணர்க.

பாட்டு - உகஅ : தோழி கூற்று

துறை :—தலைமகன் பரத்தையின் மறுத்தந்து வாயில் வேண்டித், தோழியிடைச் சென்று தெளிப்பான், புக்காற்குச் சொல்லியது. அஃதாவது, பரத்தையினிடமிருந்து தலைவியின் பால் மீண்டுவந்த தலைவன், தலைவியின் ஊடல் போக்கித் தன்னை நயப்பிக்கும் பொருட்டுத் தோழியின்பாற் சூண்மொழிந்து, தன் தீதின்மைமையைத் தெளியக் கூறியபொழுது அத்தோழி வாயில் மறுத்தது.

இதன்கண், சூண்மொழிந்து தேற்றிய தலைவனை நோக்கித் தோழி, 'ஐய! நின் சூண்மொழியை யான் தேறேன் காண்! அவலிடித்த உலக்கைகளை வயல் வரம்பிற் கிடத்திவிட்டு மகளிர் வண்டலயருதற்கு இடமான தொண்டிப் பட்டினம் போன்ற என் நலத்தை என்பாற் கொடுத்துவிட்டு நின் பொய்ச் சூளும் நீயும் புறத்தே ஒழிக' என்று கூறி வாயின் மறுக்கின்றாள்.

உஉ. பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
தொண்டி யன்னவென் நலந்தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.

—தன்றியனர்.

(இ - ள்.) மகிழ்ந - தலைவ!, பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை - பசிய அவலை இடித்த கரிய வயிரம் பொருந்திய உலக்கைகளை, ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி - பலரும் நன்றென்று ஆராய்கின்ற கதிரையுடைய நெற்கழனியின் வரம்பாகிய அணையின் கண்ணே வாளாகிடத்தி, ஒள் தொடி மகளிர் வண்டல் அயரும் - ஒள்ளிய வளையலை அணிந்த மகளிர்கள் விளையாடுதற்கிடமான, தொண்டி அன்ன என் நலம் தந்து - தொண்டிப் பட்டினத்தை ஒத்த என்னுடைய பெண்மை நலத்தை என்பால் தந்துவிட்டு, நின் சூள்கொண்டனை சென்மோ - நினது சூண்மொழியை நீயே பெற்றுக்கொண்டு செல்வாயாக.

விளக்கம் :—பாசவல் - நெல்லை வறுத்திடியாதே பசசையாக இடித்தியற்றிய அவல். பாசவல் கருங காழுலக்கை என்பனவற்றில் முரண் தோன்றிச செய்யுளின்பம் மிக்கமை உணர்க. காழ் - வயிரம். ஆய்கதிர் - அழகிய கதிருமாம். நெல், கழனிக்கு ஆகுபெயர். வரம்பணை - பண்புத் தொகை. துயிற்றி என்றது, வாளாகிடத்தி என்ற வாறு. வண்டல் - விளையாட்டு, "தகைமிகக், கோதை யாயமொடு குவவு மணலேறி, வீதலை கானல் வண்டல் அயர" (அகம் - கஅ0.) என்றார் பிறரும்.

தொண்டி - மேல் கடற்கரையிலுள்ளதொரு சிறந்த துறைமுகப் பட்டினம். தொண்டி சிறந்த பட்டினத்திற்குரிய மாண்புகளெல்லாம் உடைத்தாதல் போலத் தலைவியும் மகளிர்க்குரிய பெண்மை நலத்திற் குரிய எல்லா மாண்புகளும் உடையாள் என்பாள், 'தொண்டியன்ன என்னலம்' என்றார். "வளங்கெழு தொண்டியன்ன இவணலனே" (அகம் - கo) எனப் பிற சான்றோரும் ஓதுதலுணர்க. நலம் - பெண்மை நலம். தோழி தனக்குந் தலைவிக்கும் வேற்றுமை கருதாளாகலின் தலைவியின் நலத்தை என்னலம் என்றே கூறினாள் என்க.

'தலைவியின் நலங் கெடுமாறு நீ பரத்தமை மேற்கொண்டொழுகா நின்றனை; நின் சூளை யாங்கள் நம்பகிலோம்; ஆகலின் வந்த வழியே மீண்டுச் செல்' என்று வாயில் மறுத்தாள் என்க.

பாட்டு - உஉக : தலைவி கூற்று

துறை :—சிறைப்புறம்; அஃதாவது, களவின்பமே விரும்பி வரைந்து கோடற் கருத்தின்றி ஒழுகும் தலைவன், ஒருநாள் தம்

மனையயலே வந்து நின்றமை கண்ட தலைவி, அவன் வருகையை அறியாதாள் போன்று தோழிக்குக் கூறுவாளாய்த் தன்னிலை யைத் தலைவனுக்குணர்த்தி வரைவு கடாயது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர் பொருட்டு என் வளையல்கள் நெகிழ்ந்தன ; தோள்கள் மெலிந்தன ; என் நாணமும் அழிந்தொழிந்தது ; இனி யான் என் செய்வேன்' என்று கூறுகின்றாள்.

உகூ. தோடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடுநாண் உண்டோ தோழி விடர்முகைச்
சிலம்புடன் கமழு மலங்குகுலைக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியின் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

—ஆசிரியர் பெருங்கண்ணனார்.

(இ - ள்.) தோழி—, விடர் முகைச் சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள் - பிளப்பையும் முழைஞ்சுகளையும் உடைய மலை முழுதும் மணக்கும் அசைகின்ற பூங்கொத்துக் களில் உள்ள காந்தள் மலரின்கண், நறுந்தாது ஊதும் குறுஞ் சிறைத் தும்பி - நறிய தாதினை ஊதாநின்ற குறிய சிறகினையுடைய வண்டு, பாம்பு உமிழ் மணியின் தோன்றும் - பாம்பு உமிழ்கின்ற மணிபோலத் தோன்றாநின்ற, முந்தூழ் வேலிய மலை கிழவோற்கு - மூங்கில் வேலியை உடைய மலைகளை யுடைய நந்தலைவன் பொருட்டு, தோடி நெகிழ்ந்தன - என் வளை யல்கள் கழன்று வீழ்ந்தன, தோள் சாயின - தோள்கள் மெலிந் தொளித்தன, விடு நாண் உண்டோ - இனி யான் விடுதற்கு என் பால் எஞ்சிய நாணம் ஒரு சிறிதும் உளதேயோ; இல்லையே.

விளக்கம் :—'என்னிலை இங்ஙனமாகலின் விரைவில் தலைவன் வரைந்து கொள்ளுதல் வேண்டும்; இன்றேல் யான் இறந்துபடுவன்' என்பது குறிப்பு.

தோடி - வளையல். சாயின - மெலிந்தன. தோடி நெகிழ்ச்சி, தோள் மெலிவையும் உடல் வேறுபட்டமையையும், நாணழிவு உள்ளத்தின் வேறுபாட்டையும் விளக்கின.

'விடு நாணுண்டோ?' என்னும் வினா, என் நாணம் முழுதும் அழிந்தொழிந்தது; இனி விடுதற்கு நாண் இல்லை என்றிரங்கியவாறு. நாணம் மகளிர்க்குச் சிறந்ததாகலின், அதன் அழிவினை விதந்தோ தினாள். "உயிரினும் சிறந்தன்று நாணே" (தொல் - களவு - உஉ.) எனத் தொல்காப்பியனாரும் ஓதுதல் காண்க.

தலைவி இங்ஙனம் தன்னிலை கிளத்தல் நாணழிவாகலின், நாண் முற்றும் நீத்தே இதனைக் கூறுகின்றேன் என்பாள், 'விடுநாண் உண்டோ' என்றாள். 'நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்த' தாகலின், இங்ஙனம் நாண் விடுத்துரைத்தலும், அன்பொடு மரீஇய அகத்திணைக்குப் பொருந்துவதாயிற் றென்ப.

விடர் - பிளப்பு. முகை - முழைஞ்சு; விடரையும் முகையையும் உடைய சிலம்பு என்க. காந்தண் மலரைத் தும்பி ஊதுங்கால், அதன் மணம் மலைமுழுதும் கமழும் என்றது, நங்களவு மணம் ஊரெங்கும் அலராய்ப் பரவுகின்றது என்றுணர்த்தியவாறும். காந்தள் மலரில் தும்பி யிருக்கும் தோற்றம், பாம்பும் அஃதுமிழ்ந்த மணியும் போற் றோன்றும் என்றது, நம் மணம் ஆயதாகவும் வம்பமாக்களால் ஊற்றப் படுவதொன்றாயிருந்தது என்றுணர்த்தியவாறு.

பாட்டு - உசo : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது அஃதாவது, வரைந்து கொள்ளற்குப் பொருளீட்டும்பொ ருட்டுத் தலைவன் பிரிந்தானாக, அப்பிரிவினையும் ஆற்றாத தலைவியின் பொருட்டுத் தோழி வருந்தினாள். அவள வருத்தங்கண்ட தலைவி அவட்குத் தன் ஆற்றுமைக்குக் காரணம் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் பகற்பொழு தெல்லாம நந்தலைவருடைய மணிநெடுங்குன்றத்தைக் காண்ப தன் வாயிலாய் ஆறறியிருக்கின்றேன்; இம்மாலைப் பொழுதிலே கொடிய வாடைக்காற்று வீசாநிற்கும்; மேலும் யான் ஆற்றுதற் கேதுவாயிருந்த குன்றமும மறைந்து விடுகின்றது; ஆகலின், ஆறறேனாகின்றேன்; நீ கவலற்க!' என்று கூறுகின்றாள்.

உசo. பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யோப்பின் ஒளிவிடு பன்மலர்
வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு கஞல
வாடை வந்ததன் றலையும் நோய்போரக்
கண்டிசின் வாழி தோழி தொண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோன்றி
மாலை, மறையுமவர் மணிநெடுங் குன்றே.

—கொல்லனழிசியார்.

(இ - ள்.) தோழி—, பனிப் புதல் இவர்ந்த பைங்கொடி அவரை - குளிர்ந்த புதலின்கட் படர்ந்த பசிய கொடியாகிய அவரையினது, கிளி வாய் ஒப்பின் ஒளி விடு பல் மலர் - கிளியினது அலகை ஒத்த ஒளியைக் காலுகின்ற பலவாகிய மலர்கள்,

வெருக்குப் பல் உருவின் முல்லையொடு களை - காட்டுப்பூனை யினது பல்போன்ற உருவத்தையுடைய முல்லை மலர்களோடே செறியும்படி, வாடை வந்ததன் தலையும் - வாடைக்காற்று வீசுங் காலம் வந்ததன் மேலும், நோய்பொர - காமநோய் என்னை வருத்தும்படி, தெண் திரைக் கடல் ஆழ் கலத்தின் தோன்றி - தெளிந்த அலைகளையுடைய கடலின்கண்ணே மூழ்கா நின்ற மரக்கலம் போலே காணப்பட்டு, அவர் மணி நெடுங் குன்று மாலை மறையும் - நந்தலைவருடைய நீலமணிபோன்ற நிறமுடைய நெடிய மலைதானும் மாலைப் பொழுதிலே மறையா நிற்கும், கண்டிசின் - இதனை நீ காண்பாயாக.

விளக்கம் :—பனிப் புதல் - குளிர்ந்த புதல் - கொடியாகிய அவரை என்க அவரை மலருக்குக் கிளி அலகு உவமை. வெருகு - காட்டுப் பூனை. வெருக்குப்பல், முல்லைமுகைக்கு உவமை என்க. அவரை மலரும் முல்லை மலரும் புறவின்கட் செறிந்து மலரும் என்றது, இது கார்காலத்து இறுதி என்றுணர்த்தியவாறு. கார்காலத்திறுதியில் வாடை வீசுதல் இயல்பு. கார்ப்பருவமும், அப் பருவத்து மாலைப் பொழுதும், வாடைக்காற்றும் பிரிந்துறைவாரைப் பெரிதும வருத்தும் இயல்பின; இவ்வருத்தத்தைத் தலைவருடைய மணி நெடுங்குன்றக் காட்சியில் மனம் போக்கி ஆற்றியிருந்தேன்; இப்பொல்லாத மாலை, அவ்வொரு பற்றுக் கோட்டையும் கெடுத்ததென்பாள், 'மாலை மறையும் அவர் குன்று' என்றாள். குணம் எனச் சிறப்பும்மை விரித்தோதுக.

இருளிலே மலை மெல்லமெல்ல மறைதற்குக் கடலிலே மெல்ல மெல்ல மூழ்கும் மரக்கலம் உவமை. தலையன்புடைய மகளிர்கள் தலைவனுடைய பொருளைக் காண்புழித் தலைவனையே கண்டாற் போன்று மகிழும் இயல்புடையர்; இதனை இந்நூலின்கண் ''அவர் நாட்டுக் குன்றம் நோக்கினென் சிறுபி பண்டையற்றே கண்டிகின் றுதலே'' (உசகூ) என்று ஓதப்படுதலானும், இராமன் கொடுத்த மணி யாழியை மாருதி சீதைக்குக் காட்டிய பொழுது அவள் உற்ற நிலையைக் கம்பர் ஓதும் ''இறந்தனர் பிறந்த பயன் எதினர்கொல் என்கோ'' (கம்ப - உருக்காட்டு - சுசு.) என்றற் றொடக்கத்துச செய்யுள்களானும் உணர்க.

பாட்டு - உசக : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே தலைவியின் ஆற்றாமை கண்டு வருந்திய தோழிக்குத், தலைவி, தன் ஆற்றாமைக்குக் காரணம் தெரிதலேதாதியது.

இதன்கண், 'யான் என் நோயைப் பொறுத்து ஒருவாறு ஆற்றுவேனாயினும், குன்றநாடனைக் கண்ட என் கண்களோ, என் வசை நிற்றலின்றித் தலைவன்பால் தமக்குரிய உரிமையாலே தாமாகவே அழாநின்றன; யான் என்செய்வேன்!' என்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

உசக. யாமெங் காமந் தாங்கவும் தாந்தம்
கெழுதகை மையி னழுதன தோழி
கன்றுறப் படுத்த புன்றலைச் சிறுஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
ஏறு திட்ட ஏமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே.

—கபிலர்.

(இ - ள்.) தோழி—, யாம் எம் காமம் தாங்கவும் - யாமோ எமக்குற்ற காமநோயை வல்லிதிற் பொறுத்திருக்கவும், கன்று ஆற்றுபடுத்த புன்றலைச் சிறுர்-கன்றுகளே மேய்த்தற்குரிய வழி களிலே செலுத்திவிட்ட பொலிவிழந்த தலையையுடைய சிறுவர் கள், மன்ற வேங்கை மலர் பதம் நோக்கி - ஊரம்பலத்தின்கண் உள்ள வேங்கைமரம் அரும்பெடுத்து மலரும் செவ்வியுடைத் தாதலைக கண்டு, ஏறுது இட்ட ஏமப் பூசல் - அம்மரத்தின்கண் ஏறுமலே நின்று மகிழ்ச்சியாலே எடுத்த ஆரவாரம், விண் தோய் விடரகத்து இயமபும - வானத்தே தோய்ந்துள்ள மலைமுழைஞ்சு களிலே எதிரொலி செய்யாநின்ற, குன்றநாடன் கண்ட எம் கண் - குன்றங்களையுடைய நாட்டுக்குத் தலைவனைக் கண்ட எம் கண்கள், தங்கெழுதகைமையின் - தமக்கு உண்டான சிறப்புரிமை யானே, தாம் அழுதன - தாமே அழாநின்றன.

விளக்கம்:—"யாமே காமந்தாங்கவும்" என்றும் பாடம். கெழு தகைமை - உரிமை "விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகை யாற், கேளாது நட்டார் செயின்" என்னுந்திருக்குறளினும் அஃது அப்பொருட்டாதல் அறிக. கண்களே தலைவனை முதன்முதலாகக் கண்டனவாதலின், அவைகட்குத் தலைவன் சிறந்துரிமையுடையன்; ஆதலால் அவ்வுரிமைபற்றி அவ்வுரிமையில்லாத என்வழி நில்லாது கண்கள் தாமே அழுகின்றன என்றவாறு.

யான் ஆற்றுதற்கு எத்துணை முயன்றும், அவனைக்காணவேண்டும் என்னும அவாப பெரிதும் மீதூர்ந்து என்னை அலைக்கின்றது என்பது குறிப்பு. 'அங்ஙனம் அலைப்பினும் ஒருவாறு யான் ஆற்றுவல் நீ கவ லற்க' என்று தேற்றினளாயிறறு.

கன்று மேய்க்கும் இடைச்சிறுவர் அக்கன்றுகளை மேயும்வழிச் செலுத்தி மன்றத்தின்கண் வேங்கைநீழலிலே வந்து குழுமினர், அவ்வேங்கை புதிதாக அரும்பியிருந்தமை கண்டு மகிழ்ச்சியால் ஆர வாரித்தனர் என்க. மன்றமரத்தில் தெய்வ முறைதலின் ஏறுராயினர் என்க. பூசலைப் புலிபுலி என்னும் பூசல் எனினுமாம். வேங்கை மலர் பறிப்போர், 'புலிபுலி' என்று பூசலிடுதல் வழக்கம்; மகிழ்ந்து எடுத்த பூசல் என்பான், 'ஏமப் பூசல்' என்றாள். ஏமம் - இன்பம்.

"கண்டாங் கழுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது." (குறள் - ககஎக)

என்ற திருக்குறள் ஈண்டு நினைக்கற்பாலது.

பாட்டு - உசஉ : செவிலித்தாய் கூற்று

துறை :—கற்புக்காலத்துக் கடிநகர்ச்சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொலலியது. அஃதாவது, தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச்சென்று மீண்ட செவிலித்தாய் அவர்கள் வாழ்க்கைச் சிறப்பை நற்றாய்க்குக் கூறியது.

இதன்கண், 'நம் மகள் மலர்மணங்கமழும் முல்லை நிலத்தே அமைந்த ஒரு அழகிய சிற்றாரின்கண்ணே, தன் தலைவனோடே இனிது உறைகின்றாள். மற்று அச்செம்மலோ, அரசன் ஏவல் பெற்று வினைமேற்சென்றுழியும் ஆண்டுத் தங்குதலின்றி விரைந்து மீண்டுவந்து தலைவியோடே உறையும் பேரன்புடைய னாகத் திகழ்கின்றான்' என்று செவிலி நற்றாய்க்கு அறிவிக் கின்றாள்.

உசஉ. கானங் கோழி கவர்குரற் சேவல்
ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறா ரோளே மடந்தை வேறார்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.

—குழற்றத்தனார்.

(இ - ள்.) மடந்தை - நம் மகள், கானம் கோழி கவர் குரற் சேவல் - காட்டுக்கோழியினது தன் பெடைகளைக் கவர்கின்ற இனிய குரலையுடைய சேவலினுடைய, ஒண்பொறி எருத்தில் தண் சிதர் உறைப்ப - ஒள்ளிய புள்ளிகளையுடைய பிடரில் தண் ணிய துளிகள் துளிக்குமாறு, புதல் நீர் வாரும் பூ நாறு புற வில் - புதலின்கண் நீர் ஒழுகாநின்ற மலர் மணங்கமழும் முல்லை நிலத்தின்கண் உள்ள, சீறாரோள் - சிறிய ஊரிடத்தே உள் ளாள், செம்மல் தேர் - தலைவனுடைய தேரோ, வேறார் வேந்து விடு தொழிலொடு செலினும் சேந்து வர லறியாது - வேற்றாரி னிடத்தே மன்னன் ஏவிய வினையை மேற்கொண்டு சென்றவிடத் தும் ஆண்டும் தங்கிப் பின்னர் வருதலை அறியாது; உடனே மீண்டு வந்துவிடும்.

விளக்கம் :—தலைவி மழைவள மிக்க உறைதற்கினியதொரு முல்லை நிலத்தூரின்கண்ணே தலைவனோடே பிரிவின்றி இனிதே வாழ்கின்

ருள். தலைவனை இன்றியமையாத செயலின் பொருட்டும் அவளைப் பிரியவெண்ணுத பேரன்பினன் ஆவான் என்று, நற்றாய்க்குத் தலைவியின் நல்வாழ்க்கை நிலையினைச் செவிலி உணர்த்தினுள் என்க.

கானங்கோழி - காட்டுக்கோழி. கலர் குரல் - கலர்த்த குரல் எனினுமாம். புதல் கானங்கோழியின் எருத்தில் தண் நிதர் உறைக்கும் என்றது, தன்பால் அடைக்கலம் புக்க தலைவியின்பால் தலைவன் பெரிதும் தண்ணளியுடையன் என்னும் குறிப்பிற்று.

வேந்து விடுதொழில் அவ்வேந்தன் கட்டளையிட்டபடியே செய்யற் பாலதாம். அவன் கட்டளை ஆண்டுத் தங்கியிருந்து செய்க என்ப தாயின் வினைமேற் சென்றோர் தங்கியே இருத்தல்வேண்டும். அத் தகைய நிலையினும்கூட அவன் தலைவியைப் பிரிந்து தகுதல் இல்லை என்பாள், 'வேந்துவிடு தொழிலொடு செலினும்' என்றாள். உம்மை: சிறப்பின்கண் வந்தது. ஏனைப்பிரிவிற் றங்கான் என்பது கூறுமலை அமையும என்றுணர்த்தியவாறு. சேந்து - தங்கி. உடனே மீளும் என்பதை வலியுறுத்தும் பொருட்டுச் 'சேந்து வரலறியாது' என எதிர் மறை முகத்தாற் கூறினுள்.

இதனால், பண்டை நாளில் தலைவன் தலைவியை அவள் தமரறி யாதபடி உடனழைத்துச் சென்று, தன் மனைக்கண்ணே அத் தமர் அறியாதபடி வரைந்துகொண்டு வாழ்தலுண்டென்பதும் பின்னர்த் தலைவியின் தமர், அவன் மனைக்குச் சென்று கேண்மைகொளலுதல் உண்டென்பதும் அறியப்படும்.

பாட்டு - உரை : தலைவி கூற்று

துணை :—வன்புறை எதிரழிந்து சொல்லியது. அஃதா வது, தலைவன் பிரிந்தமையாலே பெரிதும் வருந்திய தலைவியை 'ஆற்றியிருத்தலே நின் கடன்' என்று வற்புறுத்தோதிய தோழியை நோக்கி, 'இனி யான் ஆற்றியிருக்க முயல்வேன்' என்று தலைவி நெஞ்சழிந்து கூறியது.

இதன்கண், 'தோழி! இனி யான் பெருங்கடற்சேர்ப்பனை நினையாதிருக்க முயல்வேன்! என் கண்கள் இனித் துயில்வன வாக,' என்று தலைவி கூறுகின்றாள்.

உரை. மானடி யன்ன கவட்டிலை அடும்பின்
தார்மணி யன்ன ஒண்பூக் கொழுதி
ஒண்தொடி மகளிர் வண்டல யரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் தோழி பாடியர்என் கண்ணே.

—நம்பி குட்டுவனார்.

(இ - ள்.) தோழி—, மான் அடி அன்ன கவட்டிலை அடும்பின் - மானினது அடியையொத்த பிளவுபட்ட இலைகளையுடைய

அடும்பினது, தார் மணி அன்ன ஒண்பூக் கொழுதி - மாலையின் கண் உள்ள மணியைப்போன்ற ஒள்ளிய பூவை வலிந்து அலர்த்தி, ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும் - ஒள்ளிய வளையலை அணிந்த மகளிர்கள் விளையாடாநின்ற, புள்ளிமிழ் பெருங்கடல் சேர்ப்பனை - பறவைகள் ஆரவாரிக்கும் பெரிய கடற்கரையையுடைய தலைவனை, உள்ளேன் - நீ வற்புறுத்தபடி இனி யான் நினையாதமைவேன், என் கண் படீஇயர் - என் கண்களும் இனி உறங்குக.

விளக்கம்:—'தலைவனை நினைத்தலழித் துன்பம் உண்டாகின்றது; அவனை மறந்தமைதலும் என்னால் இயல்வதன்று; நீ வற்புறுத்துவதனால் யான் அவரை மறக்கவியலுமோ' என்று வருந்தியவாறும். அடும்பின்மலர் கொடியின்கண் நிரல்பட மலர்வன வாகலின், இலைகளின் இடையிடையே தோன்றும் அம் மலர்கட்குத் தாரின் இடையிடையே பதித்த மணி உவமை கூறப்பட்டது. தார் - மாலை. 'குதிரைக் கழுதிலிடும் மாலை' எனவே, வேண்டாது விரித்தாரும் உளர். கொழுதி - மலர்த்தி; அஃதாவது அவற்றைத் தம் கையாலே வலிந்து அலர்த்தி என்றவாறு. 'தானே அலராத மலரை மகளிர் விளையாடற் பொருட்டு அலர்த்தின் அது கசங்கிப் போதல்போல, நீயும் தானே மறந்தறியாத என் மனத்தை மறக்கும்படி வற்புறுத்தாயின்றனை; அங்ஙனம் வற்புறுத்தல் நினகெளிதாயினும் என் மனமோ மேலும் நலிவதாகின்றது; நீ வற்புறுத்துமாறு போலயானும் என் கண்களை வற்புறுத்துவேன்; அவை துயில்வனவாயின் துயில்க' என்பாள், "படீஇயர் என் கண்ணே" என்றாள். படீஇயர் - படுக: துயில்க என்றவாறு.

பாட்டு - உசாவு : தோழி கூற்று

துறை :—இரவுக்குறி வந்தொழுகாநின்ற தலைமகற்குத் தங் காவன்மிகுதியாற் புறப்பட்டு எதிர்கொளப் பெறுதவழி, 'பிற்றை ஞான்று வரைந்து கொளினலது, இவ்வொழுகலாற்றின் இனிக்கூடல் அரிது' எனத் தோழி வரைவு கடாயது.

அஃதாவது, தலைவன் தலைவியின்பால் இரவின்கண் வந்தொழுகுங்கால், ஒருநாள் காவன்மிகுதியாலே தலைவி மனையினின்றும் புறம்போந்து அவனைக் காணவியலாது தாழ்த்தமையால் தலைவன் வறிதே மீண்டு போனான்; மறுநாள் தலைவனைத் தோழி கண்டாள்; கண்டபொழுது 'இனி இக்களவொழுக்கத்தால் நீ தலைவியைக் கண்டு அளவளாவுதல் இயலாது; ஆகலின் நீ அவளை விரைந்து வரைந்து கோடலே நன்றென்று' வரைவு கடாயது.

இதன்கண், 'நெருநல் இரவு வந்தேனை நீயிர் அறிந்திலீரோ?' என்று வினைய தலைவனை நோக்கித் தோழி, 'பெருமானே! நீர் நெருநல் இரவு வந்து கதவுத் தாழ் திறக்க முயன்

முமையால் உண்டாய ஒலியை, யாங்கள் கேளேமல்லேம்; கேட்டே கிடந்தனம்; கேட்டும் என்செய்வேம்! அவ்வொலி கேட்டு யாங்கள் வருந்துந்தோறும் எங்கொடிய அன்னை எம்மை இறுகத் தழுவிக்கொண்டனள்; ஆகலான் யாங்கள் நும்மை எதிர்கொள்ள இயலாதவராயினேம்' என்கின்றாள்.

உசசு. பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவக்கதவ முயறல்
கேளே மல்லேங் கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலிப்பட் டாங்கியாம்
உயங்குதொறு முயங்கும் அறனில் யாயே.

—கண்ணனார்.

(இ - ள்.) பெரும - பெருமானே!, பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து - பலரும துயிலாநின்ற நள்ளென்னும் ஓசையையுடைய நடு இரவின்கண்ணே, உரவுக் களிறுபோல் வந்து இரவுக் கதவு முயறல் - வலியையுடைய களிற்றியானை போலே வந்து இரவின் பொருட்டுத் தாழிடப்பட்ட கதவைத் திறக்க முயன்றதனால் உண்டாகிய ஒலியை, கேளேம் அல்லேம் கேட்டனம் - யாங்கள் கேளாதொழிந்தேமல்லேம்; நன்கு கேட்டேம், ஓரி முருங்கப் பீலி சாய நன் மயில் வலிப்பட்டாங்கு - உச்சிச் சூடி சிதையும்படியும் தோகை மெலியுமபடியும் நன்றாகிய மயில் வலியகத்தே அகப்பட்டாற்போன்று, யாம் உயங்குதொறு முயங்கும் அறனில் யாய் - யாம் வருந்தி அசையுந் தோறும் எம்மைத் தழுவிக்கொள்வாளாயினள் அறப்பண்பு இல்லாத எம அன்னை; யாம் என் செய்வேம்.

விளக்கம்:—பல்லோரும் துஞ்சும் எனற்பால முற்றும்மை விகாரத் தாற் றொக்கது. நள்ளென்: ஒலிகுறிப்பு. இருள் செறிந்த எனினு மாம். உரவு - வலிமை. இரவுக்கதவு என்றது, இரவின் பொருட்டு அடைத்த கதவு என்றவாறு. கதவு முயறல் - கதவைத்திறக்க முயலு தலால் உண்டாம் ஒலி என்க. நன்கு கேட்டனம் என்பாள், எதிர்மறை யானும் உடன்பாட்டானும் ஓதினாள். பல்லோர் துஞ்சும் யாமத்து வந்து கதவு திறக்கச செய்த சிறுமெலியையும் யாங்கள் கேட்டனம் என்றதனால், நள்ளிரவினும் யாங்கள் உறங்காது கிடந்தேம் என்று தலைவியின் நிலையையும் உணர்த்தினாளாதலறிக. கதவு முயறல் - தனது வருகையை அறிவித்துக் கதவைத்திறக்கச செய்தற்கு எதேனும் ஒரு சிறிய ஓசையை உண்டாக்குதல். அவ்வோசை கேட்டுத் தோழி வந்து தாழ்நீக்கிக் கதவுதிறப்பள் எனக் கருதுக. 'இன்ன வோசை செய்வல்' என, முன்னரே தோழிக்குத் தலைவன் கூறியிருப் பன் என்க. ஓரி - ஆண்தலைமயிர்; ஈண்டு ஆண்மயிலின் சூட்டிற்கு ஆயிற்று. முருங்குதல் - சிதைதல்.

பிறர்க்குறும் இன்பத்தைத் தடை செய்து துன்புறுத்தும் செயலாகலின் மூயங்கிய தாயை, 'அறனில் யாய்' என்றாள். கொடியள் என்று வைதபடியாம். 'தாயும் அறனிலளாயினள்; நீயும் வரைந்துகோடலாகிய அறத்தைச் செய்யாது அறனிலானே ஆயினை' என்று குறிப்பால் உணர்த்தியவாறு.

உயங்குதல் - வருந்துதல். ஈண்டு யாய் என்றது, செவிலியை. இதனால், இனி இக்களவொழுக்கத்தானே நீ தலைவியை எய்துதல் அரிதென்று உணர்த்தப்பட்டமை அறிக. விரைந்து வரைந்து கொள்க என்பது குறிப்பு.

பாட்டு - உசாநி : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, வரைவிடைவைத்துத் தலைவன் பிரிந்த காலத்தே ஆற்றுமை மிக்க தலைவியைக் கண்டு தோழி வருந்தினளாக, அது தோழிக்குத் தலைவி 'யான் ஆற்றுவன்' என்பதுபடச் சொல்லியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் என் பெண்மைநலத்தை யிழந்ததனினுங்காட்டில் தலைவன் செய்த கொடுமையைப் பலரும் அறிந்து அவனைப் பழிதூற்றுதலையே பெரிதும பொறேன்; ஆகலின், அவன் கொடுமையை மறைக்கும் பொருட்டேனும் யான் ஆற்றியிருப்பேன்; நீ கவலற்க,' என்று கூறுகின்றாள்.

உசாநி. கடலங் கான லாய மாய்ந்தவென்
நலமிழந் ததனினு நனியின் னுதே
வாள்போல் வாய கொடுமடல் தாழை
மாலைவேல் நாட்டு வேலி யாகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே.

—மாலைபாறனார்.

(இ - ள்.) தோழி—, வாள் போல் வாய கொடுமடல் தாழை - ஈர்வாள் போன்ற விளிம்பையுடைய கொழுவிய மடலையுடைய தாழைகள், மாலை வேல் நாட்டு வேலி யாகும் - நிரலாக வேல்களை நட்ட வேலிபோன்று காவலாகின்ற, மெல்லம் புலம்பன் கொடுமை - மெல்லிய நெய்தனிலத்தையுடைய நந்தலைவனுடைய கொடுஞ்செயல், பல்லோர் அறியப் பரந்து வெளிப்படின் - ஊரார் பலரும் அறியும்படி பரவி வெளிப்படுமாயின் அவ்வெளிப்பாடு, கடல் அம் கானல் ஆயம் ஆய்ந்த - கடல் மருங்குள்ள அழகிய சோலையின்கண்ணே பண்டு ஆயமகளிர் பலரும்

ஆராய்ந்து நன்றென்று பாராட்டியதற்குக் காரணமான, என் நலம் இழந்ததனினும் - என் பெண்மை நலத்தை யான் இழந்ததனினுங்காட்டில், நனி இன்னாது - மிகவும் துன்பந்தருவ தொன்றும்.

பினக்கம்:— 'ஆகலின், அவன் கொடுமை வெளிப்படாமைப் பொருட்டேனும் யான் ஆற்றியிருப்பன்; நீ கவலற்க!' என்பது குறிப் பெச்சம். தலைவனைக் காணுமுன்னர் என் பெண்மைநலம், அத்தகைய மாண்புடையதாயிருந்தது. இன்று அதனை இழந்தேன் என்றிரங்கு வாள், 'ஆய்ந்த என் நலம்' என்றிறந்த காலத்தாற் கூறினாள்.

கடல் அங்கானல் - கடல் மருங்குள்ள அழகிய கானல் என்க. ஆயம் - விளையாட்டுமகளிர். பண்டு ஆய மகளிர் என் பெண்மை நலத்தை ஆராய்ந்து பாராட்டுவர் என்றது, கழிந்ததற் கிரங்கலின் தற்புகழ்ச்சியாகாமை யுணர்க. நனி - மிகுதிப் பொருட்டு. இன்னாது - இன்னல் தருவது. வாள் - ஈர்வாள். தாழைமடல் விளிம்பின்கண் மூள்ளுடைத்தாதலின், வாள் உவமை கூறப்பட்டது. மாலை - நிரல். போவீரர்கள் வேல்களை நிரலாக நட்டு நடுகல்லிற்கு அரண் செய்தல் வழக்கம். அவ்வேலரணையே ஈண்டு, 'மாலை வேல்நாட்டு வேலி' என்றார். இதனை,

> "கிடுகுநிரைத் தெஃகூன்றி
> நடுகல்லின் அரண்போல." (பட்டின - எஅ-கூ)

எனவரும் பட்டினப் பாலையானும் உணர்க.

கொடுமை என்றது, கொடிப்பொழுதும் பிரிவாற்றாத தன்னைப் பிரிந்து சென்றதனை என்க.

"யான் ஆற்றேனையிடத்துப் பலரும், 'இவள் ஆற்றுமைக்குக் காரணம் என்?' என ஆராய்வர்; ஆராய்ந்தவழித் தலைவன் பிரிந்தமை வெளிப்பட்டுப் பழியாம்; அப்பழி யாண்டும் தூற்றப்படும். அங்ஙனம் அவன்பழி தூற்றல் எனக்குப் பெரிதும் துன்பமாம்," என்பது கருத்து.

பாட்டு : உசாவு : தலைவி கூற்று

துறை:—சிறைப்புறம். அஃதாவது, வரைந்து கோடற் கருத்தின்றிக் களவின்பமே விரும்பி இரவுக்குறி வந்தொழுகுந் தலைவன், ஒரு நாள் இரவு மனைப்படப்பையி னருகே வந்துநின்ற பொழுது, தலைவி அவன் வருகையை அறியாதாள் போன்று தோழிக்குக் கூறுவாளாய்க் காவன்மிகுதி கூறித் தலைவனை வரைவுகடாயது.

இதன்கண், தலைவி தோழிக்குக் கூறுவாளாய், "நங் கடற் கரையிலே நெருநல் இரவு ஒரு தேர்வந்து மீண்டுளது என்று, இவ்வூரினர் பலரும் கூறுகின்றனர்; இச் செய்திகேட்டு அன்னை என்னைப் பெரிதும் கடிந்து வருத்துகின்றாள்; இவ்வூரில் ஏனை

இளமகளிரின் தாயர் அம்மகளிரை அலைக்கின்றிலர்; அவர்கள் கல்வினையுடையோர் போலும்!" என்று கூறுகின்றாள்.

உசசு பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பாஅள் தனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னே பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரு மடவரும் உளரே
அலையாத் தாயரோடு நற்பா லோரே.

—கபிலர்.

(இ-ள்) தோழி—. பெருங்கடல் கரையது சிறு வெண் காக்கை - பெரிய கடற்கரையின்கண் உளவாகிய சிறிதே வெள்ளிதாகிய காக்கைகள, களிற்றுச் செவியனன பாசடை மயக்கி - யானையின் செவியைப் போன்ற பசிய இலைகளைக் கலக்கி, பனிக் கழி துழவும் - குளிராநத கழிநீரை இரையின் பொருட்டுத் துழாவாகின்ற, பாஅள் தனித்து ஓர் தேர் வந்து பெயர்ந்தது எனப - இடை இரவின்கண்ணே தனியாக ஒரு தேர் வந்து மீண்டுளது என்று பிறர் கூறுகின்றனர், அதன் கொண்டு - அச்செய்தியை ஏதுவாகக்கொண்டு, அன்னே அலைக்கும் - என் அன்னே என்னைத் துன்புறுத்தாநின்றாள், பின்னுவிடு கதுப்பின் மின் இழை மகளிர் இளையரும மடவரும் பிறரும் உளர் - பின்னலை நாலவிட்ட கூநதலையும் மின்னுகின்ற அணிகலன்களையும் உடைய மகளிர்கள் என்போன்ற இளமை யுடையோரும் மடப்பமுடையோருமாய் இவ்வூரின்கண் வேறு பல மகளிரும் இராநின்றனர், அலையாத்தாயரோடு நற்பாலோர் - அவரெல்லாம் தம்மை வருத்தாத தாயரோடு பொருந்திய நலவினையை உடையர் ஆவர்.

விளக்கம்:—பெருங்கடல் சிறுவெண் காககை என்றதன்கண் செய்யுளின்பம் உணர்க. சிறு வெண் காககை என்றதன்கண், சிறுமை வெண்மைக்கு அடையாய் நின்றது. எனவே, சிறிதே வெண்மை நிற முடைய காக்கை என்றவாறு. அது காக்கையின் கழுத்திலே சிறிது வெண்ணிற மிருத்தலைக் குறித்தபடியாம் காக்கை கரிதென்பதே பெருவழக்காக, அதன்கண் சிறிதே யுள்ள வெண்ணிறத்தை விதந் தெடுத்துக் கூறியது, 'தலைவனே! நின்பால் பெரிதும் நற்குண மிருப் பினும், ஆராயுங்கால் பேதைமையும் சிறிதுடையை; அதனாலன்றே வரைந்து கோடல் அறமாகவும், அவ்வறங்கருதாது இங்ஙனம் பிறர் பழிதூற்ற ஏதுவாக இரவின்கண் வந்து இடர்விளைக்கின்றனை.' என்று குறிப்பான் உணர்த்தற் பொருட் டென்க.

களிற்றுச் செவி ஆம்பலிலைக்கு உவமை என்க. பாசடை - பசிய இலை. பனிக்கழி - குளிர்ந்த கழி. பானள் - நடு இரவு. என்ப - என்று அயலோர் கூறுகின்றனர் என்க. தேர் வந்து மீண்டமையை அதன் சுவட்டாலே கண்டு கூறுகின்றனர் என்றவாறு. அதற்கொண்டு - அதனை எதுவாகக் கொண்டு. எனவே, அன்னை இரவின்கண் ஈண்டொரு தலைவன் வருவான்உளன் போலும், என்று ஐயுற்று என்னைப் புறம்போகாமல் அடிக்கடி தடைசெய்யாநின்றாள் என்ற வாறும். அங்ஙனம் அலைத்தலுண்மையின் இனி இரவுக்குறியிடத்தும் யான் தலைவனைக் காணவியலாதென்று இரவுக்குறி மறுத்தவாறும் உணர்க. பின்னு - பின்னல்; சடை - கதுப்பு, கூந்தல். பின்னுதல் செய்து விட்ட கூந்தல் எனினுமாம் இளைஞர் என்றது, தன்போன்று பன்னீராட்டை அகவையுடையோர் என்றவாறு இவ்வூரிலுள்ள என் போன்ற இளமகளிர்களை அவ்வவர் தாயர் அலைத்திலர் என்றது, தன் தாய் தலைவன் வருகையை நன்கு அறிந்து கொண்டனள் என்பதைக் குறிப்பான் உணர்த்தியவாறு தலைவனை எய்தப் பெற்றும் அவனோடே பிரியாது வாழும்பேறும் பெறுத யான் தீவினையாட்டி என்பாள், 'எனமகளிர் நல்வினைப் பாலார்' என்று கூறி அருத்தாபத்தியாற் கொள்ளவைத்தாள்.

பாட்டு - உசாவ : தோழி கூற்று

துறை :—(க) கடிநகர்த் தெளிவு விலங்கினமையறியத்' தோழி கூறியது. அஃதாவது, 'காவற்பட்ட மனையின்கண்ணை தோழி, தலைவியின் வாயிலாய்த் தலைவன் தெளித்துக் கூறிய சொல் தவறிவிட்டானோ? இலனோ?' என்பதை அறிந்து கொள்ளுமபொருட்டுத் தலைவன் வரைவுமலிந்தமை கூறியது.

(உ) வரைவுடன்படுதத தோழி தலைவிக்குக் கூறியதூஉமாம். அஃதாவது, தலைவனை வரைந்துகொள்ளும்படி தூண்டி உடம்படுதததோழி, 'அவன் விரைவின் வரைந்து கொள்வன்' என்பது படக் கூறியது எனினும் பொருந்தும்.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அன்னாய்! நாடன் மார்பு உரிததாகிய நட்புப் பெரிதும அழகுடையதாயிற்று; எற்றாலெனின், அண்மையில் இவ்விடத்தே நிகழும் செயலகள் அறத்தொடு பட்டனவாகும் என்றும, சுற்றத்தையுடைய நம் மாந்தர்க்கு அவை பற்றுக் கோடாகும் என்றும் யான் நன்கு அறிகின்றேன்' என்று கூறுகின்றாள்.

உசாவ. எழின்மிக வுடைய தீங்கணிப் பதூம்
திறவோர் செய்வினை அறவ தாகும்
கிளையுடை மாந்தர்க்குப் புணையுமா மிவ்வென
ஆங்கறிந் திசினே தோழி வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை

ஆர்துயில் இயம்பு நாடன்
மார்புரித் தாகிய மறுவில் நட்பே.

—சேந்தம் பூதனர்.

(இ - ள்.) தோழி—, வேங்கை வீயா மென்சினை வீ உக-வேங்கை மரத்தினது கெடாத மெல்லிய கிளையின்கண்ணுள்ள மலர்கள் உதிரும்படி, யானை ஆர்துயில் இயம்பும் நாடன்-யானை அரிய தன் உறக்கங்காரணமாக உயிர்ப்பெறிந்து ஒலிசெய்யும் நாட்டையுடைய தலைவனது, மார்பு உரித்தாகிய மறு இல் நட்பு-மார்பம் நமக்கு உரியதாதற்குக் காரணமாகிய குற்றமில்லாத நட்பு, எழின் மிக உடையது-மிகவும் அழகுடையதும் ஆயிற்று; அஃதெற்றாலறிந்தாயெனின், ஈங்கு அணிப்படூஉம திறவோர் செய்வினை அறவது ஆகும் - இவ்விடத்தே அணிமைக்காலத்தே நிகழும் திறமையுடையோர் செயல அறத்தொடு பொருந்துவதாம என்றும், இக்கிளையுடை மாந்தர்க்குப் புனையுமாம எனஇந்நட்பும் செயல்களும் சுற்றத்தையுடைய மக்களுக்குப் பற்றுக்கோடுமாம் என்றும், ஆங்கு அறிந்தநின் - அங்ஙனம் யான் அறிந்துள்ளேன் ஆகலான்.

விளக்கம் :—இச்செய்யுள் பூட்டுவிற்பொருள்கோள் உடைத்து. இதுகாறு மார்புரித்தாக்கியதும் மறுவில்லாததுமாகிய நட்பு, இனி எழின் மிக உடையதும் ஆகும் என்பாள், 'மார்புரித்தாகிய மறுவில் நட்பு எழின் மிக உடையது' என்றாள். நட்பு எழிலுடையதாம் என்றது, இதுகாறும் புறத்தார்க்குத தோன்றாமல் ஒழுகி வந்த நட்பு, இனிப் பலரறிமணம் செய்யப்பட்டுச சான்றோர்க்கு அழகுடைக் காட்சியாக வெளிப்படும் என்றவாறு. மறைந்தொழுகுந் துணையும் அந்நட்பின் அழகு புறந்தோன்றாதிருந்து வரைவின்கண் விளங்கித்தோன்றுதலறிக.

'அஃது எங்ஙனம்?' என்று வினைய தலைவிக்குக் கூறுவாளாய், அங்ஙனம் அழகுடைத்தாதற்கு எதுக் கூறுகின்றாள். அஃதாவது, 'இவ்விடத்தே அணிமைக்காலத்தே சான்றோர்கள் வரைவிற்குரிய காரணங்களை நிகழ்த்துவார்கள் என்பாள், 'ஈங்கணிப்படூஉம் திறவோர் செய்வினை அறவது ஆகும்' என்றாள். அறவது - அறத்தொடு பொருந்தியது.

நட்பும் செய்வினையும் ஆகிய இரண்டையும் புனையாயின என்றாளாகலின், இவ் எனப் பன்மையாற் சுட்டினாள். கிளையுடைமாந்தா என்றது, தலைவியை என்க.

காரணஞ் செய்யும் முறைகளைத் திறம்படக் கற்றோர் என்பாள், 'திறவோர்' என்றாள். செய்வினை என்றது, மணத்தின்கண் நிகழும் காரணத்தை. காரணம் நிகழ்ந்த பின்னரே இல்லறம் நிகழ்த்தலின் அறவதாயிற்று என்க.

துயில் இயம்பும் என்றது, துயிலாலே உயிர்த்து ஒலிக்கும் என்றவாறு. வேங்கை நீழலிலே துயிலும் யானை ஒலிக்கும்படி வேங்கை

மலரை அவ்வியானேயின்மேல் உதிர்க்க மேலும் அஃதினிதே தயிலும் நாடன் என்றது, வரைந்து கொண்டு இல்லின் கண் இன்புற்றமர்ந்து வாழ அவ்வாழ்க்கை காரணமாகத் தலைவனுக்குப் புகழ் பெருகும் என்றவாறு.

இங்ஙனம் கூறியவழித் தலைவன் வேறுபட்டமையைத் தலைவி உணர்ந்திருந்தாளாயின், நீ கூறுவது தவறு. அவன் தன் சொற் பிறழ்ந்து ஒழுகுகின்றான். அவன் வரைந்து கோட எண்ணிலன் எனத் தலைவி தோழியை மறுத்துரைப்பாள். மறுத்தவழித் தலைவன் தெளிவு விலங்கினமையைத் தோழி அறிந்தாளாவள் ஆகலின், முதற்றுறை யொடு பொருந்திற்றென்க. இனி, இச்செய்யுள் தலைவனை வரைந்து கொள்ளும்படி செய்த தோழி, தலைவிக்கு அந் நற் செய்தியை அறிவுறுத்தற்கும் பொருந்துதலறிக.

பாட்டு - உசஅ : தோழி கூற்று

துறை :—வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது. அஃதாவது, வரைந்து கொள்ளற் குரிய நிகழ்ச்சிகள் காணப்படாமையான், ஆற்றாமை கொண்ட தலைவியை அண்மையில் வரைவு நிகழ்தற்குரிய ஏதுக்கள் உளவா தலை உணர்ந்திந்த தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "அன்னாய்! 'வரைவு நேராதோ?' என்று நீ கவலற்க; வரைதற்குரிய நாள அண்மை யில் வருகின்றது; நந்தாய் நந்தலைவனை அறிந்து கொண்டாள்; இனி அணிததே மணவினை நிகழ்தல் ஒருதலை" என்று தேற்று கின்றாள.

உசஅ. அதுவர லன்மையோ அரிதே அவன்மார்
புறுக வென்ற நாளே குறுகி
ஈங்கா கின்றே தோழி கானல்
ஆடரை புதையக் கோடை யிட்ட
அடும்பிவர் மணற்கோ ரே நெடும்பனைக்
குறிய வாகுந் துறைவனைப்
பெரிய கூறி யாயறிந் தனளே.

—உலோச்சனர்.

(இ - ள்.) தோழி—, கானல் ஆடு அரை புதையக் கோடை இட்ட - கடற்கரைச் சோலையிடத்தே அசைகின்ற அடிப்பகுதி புதைந்துபோம்படி மேல்காற்றுக் கொணர்ந்து குவித்த, அடும்பு இவர் மணற் கோடு உளர - அடும்பங் கொடி படராநின்ற மணற்குவியல் பரவுதலாலே, நெடும் பனை குறிய ஆகும்-நெடிய பனைகள் குறிய பனைகளாகத் தோன்றுகின்ற, துறைவனை-கடற்

முறையையுடைய நந்தலைவனை, பெரிய கூறி யாய் அறிந்தனள் - பெரியதாகிய கற்புக்கடம்பூண்டமையை யான் கூறுதலானே நம்மன்னை அறிந்து கொண்டாள், அது வரல் அன்மையோ அரிது - நீ கூறும் அந்நாள் இனி வாராதிருத்தலோ அரிதாம், அவன் மார்பு உறுக என்ற நாளே குறுகி ஈங்கு ஆகின்று - நந்தலைவனுடைய மார்பினை நீ பொருந்துக என்று வரையறுத்த நாள் அணித்தாகலான் நம்மனைக்கண் இவ்வாறு நிகழ்கின்றது காண்.

விளக்கம் :—'வரைந்து கொள்ளும் நாள்தான் இனி வாராது போலும்' என்று இரங்கிய தலைவியை நோக்கிக் கூறுகின்றாளாகலின், 'அது வரலன்மை அரி'தென்றாள். அது என்றது, வரைவு நாளைச சுட்டி நின்றது. 'அது இனி வந்தே தீரும்' என்று உறுதி கூறுவாள், 'அது வரலன்மை அரி'தென எதிர்மறையை மறுத்தோதினாள். 'அரிது' என்பது, ஈண்டு இன்மை குறித்து நின்றது, "மனக்கவலை மாற்றலரிது" என்னும் திருக்குறளிற் போல. குறுகி என்னும் எச்சத்தைக் குறுக எனச் செயவென்னெச்சமாகத் திரித்து எதுப் பொருட்டு ஆக்குக. 'அவன் மார்பு உறுக' என்ற நாள் என்றது, வரைவு நிகழ்த்தற்குச சான்றோர்கள் வரையறுத்த நாளை என்க. இதனால் 'நின்மண நாள் சான்றோரான் வரையறுக்கப்பட்டது; அதுவும் அணித்து' என்று உணர்த்தினளாதலும் உணர்க. ஈங்கு - இவ்வாறு. இல்லத்துள்ளார் இவ்வாறு முயல்வதெல்லாம் நின் வரைவின் பொருட்டேகாண் என்பாள், 'ஈங்காகின்று' என்றாள். ஆகின்று - நடைபெறுகின்றது. "இவ்வண்ணம் நின்பால் ஆற்றுமை உண்டாகின்றது" என்று கூறி, "இஃதென்கொல்" எனவினவினள் என்பாரும் உளர். நெடிய பனையின் அடியைக் கோடைக் காற்றுப் புதைத்துக் குறியதாக்கும் என்றது, வரைவுக்கு நெடிதாயிருந்த காலத்தை ஊழ் அணித்தே கொண்டு வந்தது என்னும் குறிப்பிற்று.

பெரிய கூற என, இதனையும் செயவென்னெச்சமாக்கி 'யான் பெரியவற்றை அறிவித்தலானே' என எழுவாக்குக. பெரிய என்றது, கற்புக்கடம் பூண்டமையை. அதனைக் கூற என்றது, யான் அறத்தொடு நிற்க என்றவாறு. இதற்கு வேறு கூறுவாரும் உளர். யாய்-ஈண்டுச் செவிலி.

'யான் அறத்தொடு நின்று அறிவித்தலானே நந்தலைவனைத் தாய் அறிந்தனள். பின்னர் வரைவுடன்பட்டு அதற்காவன செய்கின்றனர் ஆகலின், திருமணம் அணித்தே நிகழ்தல் தேற்றம். நீ வருந்தாதிரு!' என்று தலைவியைத் தோழி தேற்றினள் என்க.

பாட்டு - உசாக : தலைவி கூற்று

துறை :—'வரைவிடை நிற்ப ஆற்றகிற்றியோ?' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, 'வரைபொருட் பிரிவு இன்றியமையாதாதல் பற்றி நந்தலைவர் நம்மைப் பிரியக் கருதியுள்ளார்; அப்பிரிவினை நீ ஆற்றுதல் இன்றியமையா

தாகலின், ஆற்றியிருக்க வல்லியோ?' என்று வினைய தோழிக்குத் தலைவி தான் ஆற்றியிருத்தற்கு ஏதுக்காட்டியது

இதன்கண், 'தோழி இதோ என்றுதலைப் பார்; யான் நந் தலைவர் நாட்டுக் குன்றத்தை இப்பொழுது நோக்கினேன்; அங்ஙனம் நோக்கினமையால் என்னுதல் பசப்பொழிந்து பழைய தன்மையுடையதாயிற்றன்றே! யான் தலைவன் பிரிவினை அவர் குன்றம் நோக்குதலானே ஆற்றவல்லேன்' என்று தலைவி கூறுகின்றாள்.

உசகூ. இனமயில் அகவு மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்
குன்ற நோக்கினேன் தோழி
பண்டை யற்றே கண்டிசின் நுதலே.

—கபிலர்.

(இ - ள்.) தோழி—, இனம் மயில் அகவும் மரம் பயில் கானதது - திரளாகக் கூடிய மயில்கள ஆரவாரியாநின்ற மரங்கள் நெருங்கிய காட்டின்கண்ணே, நரை முக ஊகம பார்ப்பொடு பனிபப - வெள்ளிய முகதததையுடைய கருங்குரங்குகள் தங்குட்டியோடே குளிராநே நடுங்குமாறு, படுமழை பொழிந்த சாரல் - ஒலிக்கின்ற மழை பொழிந்த மலைப்பக்கங்களையுடைய, அவர் நாட்டுக் குன்றம் நோக்கினென் - நந்தலைவர் நாட்டிலுள்ளதொரு மலையை யான் இப்பொழுது கண்டேன் ஆதலின், கண்டிசின் - நீ உற்றுப்பா, நுதல் பண்டை அற்றே - என் நுதல் பசபபூராத பண்டை நாளில் இருந்தாற் போன்று இருக்கின்றதோ? கூறுக.

விளக்கம்:—வளமிக்குக் காண்டற்கினிதாயிருக்கும் சாரல் என்பாள், 'இனமயில் அகவும் மரம்பயில் கானத்துச சாரல்' என்றாள். இனமயில் என்றது, மயிலின் மிகுதி குறித்து நின்றது.

பயிலுதல் என்றது, நெருங்கிய, அல்லது அடர்ந்த என்னும் பொருளில் வந்தது. நரை - வெண்ணிறம். ஊகம் - கருங்குரங்கு. குரங்குகள் மழையானே மிகவும் வருந்து மியல்புடையன; மயில்கள் மழை கண்டு உவக்குமியல்பின; இவ்வியல்பினைக் கம்பநாடர் நிரலே கார்காலப் படலத்தில்,

"மந்திதுயில் உற்றமுழை வன்கடுவ னங்கத்
திந்திய மவித்ததனி யோகரி னிருந்த." (கார்கா - எசு)

என்றும்,

"தேன வாமலர்த் திசைமுகன் முதலினம் தெளிந்தோர்
ஞான நாயகன் நவ்வுறு நோக்கின நல்கக்

கானம் யாவையும் பரப்பிய கண்ணெனச் சனகன்
மானே நாடினின் றழைப்பன போன்றன மஞ்ஞை.”

(கார்—சசு.)

என்றும் ஒதுதலானே உணர்க.

தலைவி தலைவன் நாட்டு மலைகண்டு ஆற்றியிருப்பாள் என்பதனை முன்னர் (கசo) இந்நூலின்கண்ணே “மாலையில் அவர் மலை மறைந்ததனால் யான் ஆற்றுகிலேன்” என்று தலைவி தோழிக்குக் கூறியதனானும் உணர்க.

அவர் நாட்டுக் குன்றத்தைக் கண்டவுடன் அவரையே கண்டாங்கு என் னெஞ்சின்கண் உவகை நிரம்புதலானே அவரைக் கண்டவுடனே என் றுதல் பசப்பு மறைந்து ஒளிகாலுமாறு போல இப்பொழுதும் பசப்பகன்று ஒளியுடைத்தாதல் தப்பாது என்பாள், என்றுதல் பண்டையற்றே பார் என்றாள். பண்டையற்றே என்றது, யான் அது பண்டையற்றாயிற்று எனக் கருதலளவையானே உணர்கின் றேன். நீ காண்டல் அளவையானும் அதனை யறிந்து எனக்குக் கூறுக என்றவாறு எனவே, ‘அவர் பிரிவினை ஆற்றியிருத்தற்கு ஈண்டோர் சிறந்த உபாயம் பெற்றேன்; யான் அவர் வருந்துணையும் ஆற்றி யிருப்பன்; நீ கவலற்க!’ என்று தோழியைத் தேற்றினளாதலறிக.

கண்டிசின், இசின் - அசை; முன்னிலை ஏவலொருமை.

பாட்டு - உரை : தலைவன் கூற்று

துறை :—தலைமகன் பாகற் குரைத்தது. அஃதாவது, வினை மேற் சென்ற தலைவன் வினைமுற்றி மீண்டு வருவான் தலைவியை விரைந்து காணும் அவாவினைப் பாகனுக்குக் கூறியது.

இதன்கண், தலைவன் தேர்ப்பாகனை நோக்கி, ‘பாகனே! கயல் முரணிய கண்ணுடைய தலைவி மிகவும் துன்புறுவாள் காண்! துன்புறுதற் கேதுவாகிய மாலைப் பொழுது வருமுன் னரே யாம அவளைக் காண்டல் வேண்டும்; ஆகலான், விரைந்து செல்லும் நம் புரவிகளை மேலும் விரையுமாறு தூண்டி நடத்துக!’ என்று கூறுகின்றான்.

உரை. பரலவல் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மா னெறிமுத லுகளும்
மாலை வாரா வளவைக காலியற்
கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயன் முரணிய உண்கண்
தெரிதீங் கிளவி தெருமர லுயவே.

—நாமலர் மகனார் இளங்கண்ணனார்.

(இ - ள்.) நெடுநீர்ப் பொருகயல் முரணிய உண்கண் தெரி தீம்கிளவி - நெடிய நீரினகத்தே ஒன்றனேடொன்று போரிடு கின்ற கயன்மீன்களே மாறுபட்ட மையுண்ட கண்களேயும் ஆராய்ந்த இனிய சொற்களேயும் உடைய நந் தலேவி, தெருமரல் உய - துன்புற்றுச் சுழலுதலினின்றும் தப்பற் பொருட்டு, பாக - தேர்ப்பாகனே! பரல் அவல் படு நீர் மாநதி - பருக்கைக் கற்களே யுடைய பள்ள நிலத்திலே தங்கிய நீரைப பருகி, நெறிமுதல் இரலே நன்மான் துணேயோடு உகளும் - வழியின்கண்ணே ஆணேகிய நல்ல மான்கள் தத்தம் பெண்மானேடே துள்ளி விளேயாடாநிற்றற்குக் காரணமான, மாலே வாரா அளவை - மாலேப பொழுது வருதற்கு முன்னரே, கால் இயல் கடுமாக் கடவுமதி - காற்றின் இயல்பினேயுடைய கடிய புரவிகளேச் செலுத்துவாயாக.

விளக்கம்:—பரல் - பருக்கைக் கல். அவல் - பள்ளநிலம். "காடா கொன்றே காடாகொன்றே - அவலா கொன்றே மிசையா கொன்றே" (புறநா—கஅஎ) என்புழியும் அஃதப் பொருட்டாதல் காணக. பரலவல் படும் நீர்மாந்தி என்றது, கார்காலம் என்பதனேக் குறிப்பான் உணர்த்தியது. படிநீர் - அகப்பட்டுத் தங்கிய நீர் என்க. மாந்தி - பருகி நெறிமுதல் - வழியில்; முதல் ஏழாவதன் சொல் லுருபு. துணே - பெண்மான். இரலே - ஆண்மான்:

"வன்பரற் றெள்ளறல் பருகிய இரலேதன்
இன்புறு துணேயொடு மறுவந்துகள." (குறுந்—சுஙி)

என முன்னர் இந்நூலிற் போந்தமை யுணர்க. இரலேயாகிய நன்மான் என்க. துணேயோடிரலேமான் உகளக் கண்டவழித் தானும் தெருமர லுறுவானுகலின் அம் மாலே வருமுன்னர் என்றுன். 'கார்ப் பருவத் தொடக்கநாள் மாலேப் போதில் யான் மீண்டு வருவேன்; அதுகாறும் ஆற்றுக' என்று பிரிந்தானுகலின், அம் மாலேக்காலத்தே நம் வருகையை எதிர்பார்ப்பாள். காணுளாயின் பெரிதும் துன்புறுவள்; அங்ஙனம் அவள் துன்புறுவண்ணம யாம் ஆண்டுச் சேறல் வேண்டும் என்பான், 'மாலே வாராவளவைக் கடவுமதி' என்றுன். மதி - அசை. அங்ஙனம் சேறற்கும் நம் புரவிகள் ஏற்றனவே என்பான், "காலியற் கடுமா" என்றுன். காலியல் - விரைதற் றொழிலிலே காற்றின் இயல் பினேயுடைய என்க. கால் - காற்று - காற்றைப் போன்று இயங்கும் கடுமா எனினுமாம். பொருகயல் - போரிடும் பொருட்டு ஒன்றை ஒன்று எதிர்ந்து இணேந்த கயல்மீன்கள் என்க. இவை, கண் ணிணேக்கு உவமை. உண்கண் - மையுண்ட கண். தெருமரலுறின் அக் கண்ணழகு கெடுமே என்றிரங்குவான், அவையிற்றை நினேந்தான். தெரி கிளவி, தீங்கிளவி எனத் தனித்தனிக் கூட்டுக. தெரி கிளவி - ஆராய்ந்துரைக்கும் சொல். தீங்கிளவி - கேள்விக்கினிய சொல். தெருமரல் - துன்பத்தாற் சுழலும் சுழற்சி. உய - தப்பற்கு.

பாட்டு : உருக : தோழி கூற்று

துறை :—பிரிவிடைத் தோழி 'பருவமன்று பட்டது வம்பு' என்று வற்புறுத்தியது. அஃதாவது, 'கார்ப்பருவத் தொடக்கத்தே வருவன்' எனக் கூறிப் பிரிந்த தலைவன் வாராஞுக, அப்பருவம் வந்தமை கண்டு வருந்திய தலைவிக்கு, 'இது கார்ப் பருவமழையன்று ; வம்பமழை' என்று தோழி கூறி ஆற்றுவித்தது.

இதன்கண், "அன்னாய் இப்பொழுது பெய்யும் மழை, கார்ப்பருவ மழையன்று. எதிரே வரும் கார்ப்பருவத்தே புதிய மழை பொழிதற் பொருட்டு முகில்கள் புதிய நீரைக் கொள்ளக் கருதித் தம்பாலுள்ள பழைய நீரைப் பெய்யா நின்றன ; அத்துணையேகாண். இது கார்ப்பருவமன்று தமது மடமையாலே இதனைக் கார்ப்பருவம் என்று கருதி மயில்கள் ஆடுகின்றன ; பிடவம் மலர்ந்தன ; நீ கவலாதிரு!" என்று தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

உருக. மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலு மாலின பிடவும் பூத்தன
காரன் றிகூஉ தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

—இடைக்காடனார்.

(இ - ள்.) இகூஉ - தோழி!, கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர் புது நீர் கொளீஇய உகுத்தரும - சென்ற காகாலத்திற் குப் பெய்து எஞ்சிய பழைதாகிய நீரை இனி வரும் கார்காலத் திற்கு வேண்டிய புதிய நீரை முகந்து கொள்ளும்பொருட்டுப் பெய்யாநின்ற, நொதுமல் வானத்து முழங்கு குரல் கேட்டு - அயன்மையுடைய முகில்களினது முழங்கா நின்ற ஒலியைக் கேட்டு, மஞ்ஞைமாயினம - மயில்களாகிய பெரிய கூட்டங்கள், கால மாரி பெய்தென - கார்ப்பருவ மழை பெய்தது என்று தவறுகக் கருதி, அதன் எதிர் ஆலவும் ஆலின - அம் மழையின் எதிரே ஆடாநின்றன, பிடவும பூத்தன - அவைகளேயன்றிப் பிடாவும் அங்ஙனமே கருதி மலரா நின்றன, மடவ - அவை அறியாமை உடையன, கார் அன்று - இது உண்மையான கார் காலமன்றுகாண், நின் படர் தீர்க-நினது துன்பம் ஒழிவாயாக.

விளக்கம் :—இகுளை - தோழி. மடவ - அறியாமையுடையன. பிடவம் ஒன்றறியுயிரும், மயில் ஐந்தறிவுயிரும் ஆகலின், அவை ஆராய்ச்சி அறிவின்றி வம்பமாரியைக் காலமாரியாகக் கருதின. நீயோ மனனுணர்ச்சியாகிய ஆறுவதறிவும் உடையை. சான்றோராகிய நந்தலைவர் சொற்பிறழ நடவார்; அவர் வாராமையே இது காலமாரி அன்றென்றற்குச சான்றும்; ஆகலின், நீ படர் ஒழிக என்பாள், 'காரன்று நின்படர்தீர்க' என்றாள். மாயினம் - மாயிருஞாலம் என்புழிப்போல யகரவுடம்படுமெய் பெற்று வந்தது. மா - பெருமை குறிய இனமுமாம். மஞ்ஞை - மயில். பெய்தென - பெய்ததாகக் கருதி என்க. அதனெதிர் - அப்பெயலின் முன்னர். காலமாரி - கார்காலத்து மழை என்க ஆலலும் ஆலின என்பது, ஆலின என்னும் ஒரு சொன்னீர்மைத்து, `அணியலு மணிந்தன்று'' என்புழிப்போல. தோழி தலைவியைத் தேற்றும் பொருட்டு ஈண்டுப் பொய்யே கூறப்புக்காளாகலின், தன் பொய்யைத் தலைவி நம்பும் பொருட்டுக் காரன்று என்றவள், அது காரல்லாமைக்கு மேலும் விளக்கம் கூறப்புகுவாள், கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர் புது நீரை முகக்கும பொருட்டு முகில்கள் பெய்தொழிகின்றன என்று நுண்ணிதிற் படைத்து மொழியும் அழகுணர்க. இங்ஙனமே பொய் கூறப்புகுவார் தமது பொய்யைக் கேட்போர் வாய்மையாகக் கருதும் பொருட்டு அப்பொய்க்கு மேலும் பல பொய்களையே விளக்கமாகக் கூறமுற்படுதலை உலகியலிற் காணலாம். கழிந்த மாரிக்குப் பெய்தஞ்சிய பழநீர் என்க. கழிந்த மாரிக்கு என்றமையால் புதிய மாரிக்குப் புது நீர் கொளீஇய என வருவித்துக் கூறுக.

நீ காலமாரியோ என்று வருந்துவாய் என்று கருதாமல் பெய்தலான், அம்முகில்கள் நமக்கு அன்புடையன அல்ல என்பாள், 'கொதுமல் வானம்' என்றாள். கொதுமல் - அயன்மை. வானம் - முகிலுக்கு ஆகுபெயர் ''புரைதீர்ந்த நன்மை'' பயத்தலின் ஈண்டுத் தோழி கூறிய பொய்ம்மையும் வாய்மையே என்க.

பாட்டு - உரை : தலைவி கூற்று

துறை :—தலைவன் வரவறிந்த தோழி, 'அவர் நம்மை வலிந்து போயினர்க்கு எமபெருமாட்டி தீயன கடிந்து நன்காற்றினாய்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

அஃதாவது, பரத்தையிற் பிரிந்தமையானே தனக்குக் கொடுமை செய்த தலைவன் மீண்டு வந்தழித் தலைவி அவனுடன் ஊடலுமின்றிக குறைகூறலும் இன்றி அவனை ஏற்றாளாகத் தோழி, 'இங்ஙனம ஏற்றுக்கோடல் அறிவோ?' என வினையிட்டுத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, ''நின் தோள்வீழ நெகிழும்படி நினக்குக் கொடுமை செய்து பிரிந்த தலைவன் வந்தவுடனே முகந்திரியாது ஏற்றனை ஆதலின், நீ அறியாமையுடையை' என்று என்னைக் கடிகின்றாய். சான்றோர் தம்மைப் புகழும்போதும் நாணும் இயல்பினர்; அத்தகையோர்முன்

அவர் பழியெடுத்துக் கூறின், அவர் அதனைப் பொறுக்கவல் லரோ? ஆதலாற்றான் யான் அங்ஙனம் ஏற்றுக் கொள்வேனையி னேன்'' என்று கூறுகின்றாள்.

உருஉ. நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடிய னெகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை யின்முகந் திரியாது
கடவுட் கற்பி னவனெதிர் பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே.

—கிடங்கிற் கூலபதி நக்கண்ணாவார்.

(இ - ள்.) தோழி - தோழியே!, வாழி - வாழ்வாயாக, நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த - நீண்டனவாய்த் திரண்ட தோள்களை மெலிவித்து அவறறிற் செறித்த வளையல் களைக் கழல்வித்த, கொடியன் ஆகிய குன்று கெழுநாடன் - கொடுமையுடையவனாகிய மலைபொருந்திய நாட்டையுடைய தலைவன், வருவதோர் காலை பரதத்தையர் சேரியினின்றும் எப் பொழுதேனும் நின் மனைக்கு வாராகின்ற காலத்தே, இன் முகம் திரியாது - இனிய முகம் மாறுபடாமல், கடவுட் கற்பின் அவன் எதிர் பேணி - தெய்வத்தன்மையுடைய நின் கற்பினாலே அவனை மகிழ்ந்து எதிர்கொண்டு அழைத்துப் போற்றுதல் செய்து, மன்ற மடவை நீ எனக கடவுபு - தேற்றமாக அறிவிலி யாயினை நீ ஏன் அங்ஙனம் செய்கின்றனை என்று வினவி, துனியல்- வருந்தாதே, சான்றோர் முன்னர்ப் புகழும் நாணுப - அறிவா னிறைந்த பெரியோர் தம் முன்னே பிறர் தம்மைப் புகழ்தலையும் நாணுகிற்பர், காணுங்கால் பழி யாங்கு ஒல்ப - அத்தகையோர் முன்னின்று யாம் எடுத்துக்கூறும் பழியை யாம் கூறுமிடத்தே எங்ஙனம் பொறுப்பர்.

விளக்கம் :—நின்னைப் பிரிந்து பரத்தையர் சேரியிலே தங்குவதன் வாயிலாய் நின் தோள்களை மெலிவித்து, வளைகள் கழலும்படி செய்த கொடியவன் என்க தோள்கள் பண்டிருந்த நிலையை நினைப் பிப்பாள் 'நெடிய திரண்ட தோள்' என்றாள்.

அவன் உள்ளமும் கல் போன்றது என்பாள், 'குன்று கெழு நாடன்' என்றாள். 'அவன் கொடுமையை நினைப்பாயேல், நின் முகந் திரிந்து ஊடவேண்டாவோ! அதனை மறந்துவிடுகின்றனை' என்று கடிவாள், 'இன்முகந் திரியாது' என்றாள். இச்செயல் மானிடக் கற்பிற்கு உரியதன்றென்பாள், 'கடவுள் கற்பின்' என்றாள். மானி

டர்க்கு ஊடுமாற்றுற் கணவனைத்திருத்துஞ் செயலும் கற்பழிவன்று என்று குறிப்பான் உணர்த்தியபடியாம்.

இன்முகம் - அன்புடையோர் வருகையால் அகத்தே தோன்றும் மகிழ்ச்சி மெய்ப்பட்டுத் திகழும் முகம் என்க. இம் மெய்ப்பாடு கண்டார்க்குப் பேரின்பம் நல்கலின் இன்முகம் எனப்பட்டது. பேணுதல்-தலைவனைக் கண்டபொழுது செய்யக்கடவவெல்லாம் குறைவின்றிச் செய்தல்.

பிழை செய்யும் கணவனைநோடி அவன் பிழையை எடுத்துக்காட்டி அவனைத் திருத்திக்கோடலே அறிவுடைய மகளிர்க்கு அழகாம். நீ அங்ஙனம் செய்யாது பேணுமாற்றால் அவனை மேலும் தவறு செய்ய விட்டனை. ஆதலால் அறிவிலி என்பாள், 'பேணி மன்ற மடவை' என்றாள்; மடவையாயினை என்று ஆக்கம் வருவித்துரைக்க. எனக் கடவுபு என்ற குறிப்பால் என் அங்ஙனம் ஒழுகுகின்றனை என்று வினவி என விரித்துரைத்துக் கொள்க. இதுகாறும் தோழி கூற்றைத் தலைவி கொண்டு கூறினள். இனித் தன் நெஞ்சுக்குத்திறகுக் காரணம் கூறுகின்றாள்.

சான்றோர் புகழும் முன்னர் நாணுப என்றது, தங்கண் முன்னர்ப் பிறர் தமமைப் புகழும் புகழையும் கல்லோர் நாணுப என்றவாறு. இங்ஙனம் கூறுது 'புகழ்தற்கு முன்னரும் நாணுப' என்பாருமுளர். சான்றோர் புகழும் நாணுவராதலை,

"தம் புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரந்துஞ்ச (கலி-ககக.) எனவும், "பரந்தோர் எல்லாம் புகழத் தலைப்பணிந்து இறைஞ்சியோனே குருசில்" (புறம்-கஙூ.) எனவும் பிறர் கூறுமாற்றானும் உணர்க.

"கணமலை நன்னுட கண்ணின் றொருவர்
குணனேயும் கூறற் கரிதால் - குணனழுங்கக்
குற்றம் உழைநின்று கூறும் சிறியவாகட்
கெற்று லியன்றதோ நா" (நாலடி-கூஙிக.)

எனவரும் நாலடியானே பிறர் குற்றங் கூறல் சால்புடையோர்க்கு ஒல்லாமையறிக. இதனால் இங்ஙனம் கூறிய தலைவியின் சான்றாண்மையே பெரிதும் விளக்கமுறுதலுணர்க.

பாட்டு - உருபு : தோழி கூற்று

துறை—பிரிவிடைத் தோழி வற்புறுத்தது. அஃதாவது தலைவன பிரிவை ஆற்றாளாகிய தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நீ இங்ஙனம் துயருறுதலை நந்தலைவர் கேட்டிலர்; கேட்டிருப்பரேல் தாம் சென்ற வினை முற்றுவழியும விரைந்து மீள்வர்,' என்னுமாற்றால் அவர் வினை முறறியவுடன் வந்துவிடுவர்', என்று தேற்றுகின்றாள்.

உருக. கேளா ராகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவ தாயினு நெகிழ்நூற்
பூச்சே ரணியிற் பெருங்கவின் றொலைந்தநின்
நாட்டுயர் கெடப்பி னீடலர் மாதோ
ஒலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லூ
ஆறுசென் மாக்கள் சேக்கும்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே

—பூங்கண்ணனார்.

(இ-ள்.) தோழி—, ஒலி கழை நிவந்த ஓங்குமலைச் சாரல்-ஒலிக்கின்ற மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ள உயர்ந்த மலைப் பக்கத்தினகண், புலி புகா வுறுத்த புலவு நாறு கல்அளை - புலி தனது இரையைச் செறித்துவைத்தமையாலே புலால்நாற்றம் வீசுகின்ற மலைமுழைகளிலே, ஆறு செல் மாக்கள் சேக்கும் - வழிச் செல்லும் மாந்தர்கள் தங்குதற்குக் காரணமான, கோடு உயர் பிறங்கல் மலையிறந்தோர் - குவடுகள் உயர்ந்த விளக்கமுடைய மலைகளைக் கடந்து சென்ற நமதலைவர், கேளார் ஆகுவர் - நின் னிலையை உணராததற்குயான விடுத்த தூதர் செய்தியை இன்னும் கேட்டிலர் ஆதல்வேண்டும், கேட்பின் - அவர் அச்செய்தியைக் கேட்பாராயின், விழுமிது கழிவது ஆயினும - தாம மேற்கொண்ட சிறந்த பொருள் கைகூடாதொழியினும், நெகிழ் நூல் பூச்சேர் அணியில் - நெகிழ்தலையுடைய நூலினின்றும் மலர்களை செறிந்துள்ள அணியின்கண், பெருங்கவின் தொலைத்த நின் நாள் தயர் - பெரிய அழகினைக் கெடுத்த நின்னுடைய நாடோறும் உழக்கும் துன்பம், கெடப் பின் நீடலர் - கெட்டொழியும்படி பின்னர் ஆண்டுத் தங்காது வருகுவர்

விளக்கம் :—கேளாராகுவர் என்றதனால் 'யான் நின்னிலை உணர்த்த அவர்பால் தூது விடுத்துள்ளேன்; அத்தூதர் அச்செய்தியை இன்னும் தலைவர்க்குக் கூறவில்லை போலும,' என்று குறிப்பாலுணர்த்தப் பட்டது. கேட்பின் என்றது, அத்தூதர் தேற்றமாக அவர்க்குக் கூறுவர் ஆகலின், அவர் இன்று, நாளை, கேட்பர்; அங்ஙனம் கேட்பாராயின் என்றவாறு இது தோழி தலைவன்பால் தூது போக்கியுள்ளமையைக் குறிப்பாலுணர்த்தி ஆற்றுவித்ததாகக் கருதுக. தூது போக்கும் வழக்கத்தை, இந்தூல் கக-ஆம் செய்யுட்டுறையாலும் உணாக.

ஈண்டு விழுமியது என்றது, பொருளை; என்னை? இல்லறம் நடத்தற்குச் சிறந்தது பொருளே ஆகலான் என்க. விழுமியது - சிறந்தது. தாம் மேற்கொண்டு சென்ற ஈட்டற்றொழில் முற்றுப் பெறுது பொருள் கிடையாதொழியினும் வருவர் என்று தேற்றியவாறு கழியினும் என்றதனால், உம்மை சிறப்பு. நின்னினும் பொருளைச் சிறப்பாகக் கருதுவாரல்லர் என்பது குறிப்பு.

கெகிழ்நூற் பூச்சேர் அணையென்றது, பண்டு தலைவன் உடனுறைந் தழி மலர்மாலை முதலியன தூக்கி ஒப்பனை செய்யப்பட்டதன்றி இப் பொழுது ஒப்பனை செய்யப்படா அணை என்பதைக் குறிப்பானுணர்த் திற்று. என்னை? பண்டு நாற்றிய மாலையின்கண் மலர்கள் வாடிச சுருங்குதலானே கட்டிய நூலின் முடிச்சுகள் கெகிழ்வனவாயின என்றும், கெகிழ்ந்தமையால் அவ் வாடல் மலர்கள் அணையின் கண்ணே நழுவி வீழ்ந்தன என்றும் அத்தொடர் குறிப்பானே உணர்த்தலான் என்க.

அப்பழமலர் சேர்ந்து கிடப்பதன்றிப் புதிதாக மலர் பரப்பப் படாத அணையின்கண் என்றவாறு.

நாட்டுயர்: நாள் + துயர், நாடோறும் வருத்தும் துயர் என்க. நீடாமை துயர் கெட ஏதுவாகலான், 'துயர் கெட நீடலர்' என்றாள். செயவெனசசம் ஏதுப்பொருட்டு. விரைந்து வருவா என்று வற் புறுத்தற் பொருட்டு நீடலர் என எதிர்மறை முகத்தாற் கூறினாள்.

புகா - உணவு. உறுத்த - செறித்துவைத்த. கல்லளை - மலை முழைஞ்சு. புலியுறையும் கல்லளையன்றிப் பிற உறைவிடம் பெறுமை கூறித் தலைவர் சென்ற ஆற்றினது தீமை தெரித்தாள் என்க. அத்தகைய கொடிய ஆறு சென்றும் விழுமிய பொருளீட்டல் அவர் கடனுகலின் அவர் பின்னைப் பிரிந்தார் அன்றி அன்பின்மையானன்று என்றுணர்த்தியவாறு.

பிறங்கல் மலை - விளக்கமுடைய மலை என்க.

பாட்டு - உருசு: தலைவி கூற்று

துறை :—பருவங்கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, 'தலைவர் தாம் கூறிய பருவம் வரு முனனா வருவர்' எனறு தன்னை ஆற்றுவித்த தோழியை நோக்கி, அப்பருவவரவு கண்ட தலைவி கூறியது.

(கண்டு உரைத்த தென்று கூட்டுக) இது பழைய குறிப்பு.

இதன்கண், 'அவர் சொன்ன பருவத்தே வருவர்' என்று அது காறும் ஆற்றுவித்த தோழியை நோக்கி, "ஏடி உதோ பார் வேங்கைமரத்தின முதன்மலர் தோன்றிவிட்டன; நம் இன் துயில் இன்பத்தினையும் கூந்தற்பாயலின் இன்பத்தையும் சேர மறந்து சென்ற நந்தலைவர், 'உதோ வருகின்றனர்,' என்று நமக்கு அறிவிக்கும் தூதரே இன்னும் வந்திலாமை காண்" என் கின்றாள்.

உருசு. இலையி லஞ்சினை யினவண் டார்ப்ப
முலையோர் மென்முகை அவிழ்ந்த கோங்கின்
தலையலர் வந்தன வாரா தோழி

துயிலின் கங்குல் துயிலவர் மறந்தனர்
பயினறுங் கதுப்பிற் பாயலு முள்ளார்
செய்பொருள் தரனசைஇச் சென்றோர்
எய்தின ராலென வருஉங் தூதே.

—பார்காப்பார்.

(இ - ள்.) தோழி—, இலேஇல் அம்சிலே இன வண்டு ஆர்ப்ப - இலேயில்லாத அழகிய கொம்புகளிலே திரளாகிய வண்டுகள் ஆரவாரிப்ப, முலே ஏர் மென் முகை அவிழ்ந்த கோங்கின் - முலேயினது அழகைக்கொண்ட மெல்லிய அரும்புகள் விரிந்த கோங்கமரத்தினது, தலே அலர் வந்தன - முதல் மலர்கள் தோன்றுகின்றன, செய்பொருள் தரல் நசைஇச் சென்றோர் - ஈட்டுதற்குரிய பொருளே விரும்பி நம்மைப் பிரிந்துசென்ற தலேவர், எய்தினர் என வருஉம் தூது வாரா - இதோ வந்தனர் என்று அறிவித்தற்கு வரும் தூதுகளோ இனனும வந்தில. அவர் துயில் இன் கங்குல் துயில் மறந்தனர் - அதனலேவர் துயிலுதற்கு இனிய இரவின்கண நம்மோடு துயிலும் துயிலே மறந்துவிட்டனர், பயில் நறுங் கதுப்பில் பாயலும் உள்ளார் - தாம் பயின்றறிந்த நறிய கூந்தலாகிய படுக்கையினிமையையும் நினேயாராயினர்.

விளக்கம் :—கோங்கமரம் மலரும் பருவத்தே இலேகள் முழுதையும் உதிர்த்து நிற்றலால் 'இலேயில் அஞ்சினே' என்றாள். இலேயின்றி முழுதும் மலராகவே அழகிதாய்த் தோன்றலின் அஞ்சினே என்றாள். வண்டுகள் புதிதாக மலரும் மலரிடைத் தேனுதற்கு ஆரவாரித்தன என்க. முலேயோர் மென்முகை என்புழி, பொருள் உவமமாக வந்தது என்னே ?, "பொருளே உமவஞ் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பினஃ துவமமாகும்" (தொல் - உவம - கூ.) என்பதோத்தாகலான். "வருமுலே யன்ன வண்முகை உடைந்து, திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை." (சிறுபாண் - எஉ - கூ) எனப் பிறரும் ஓதுதல் காண்க. முலே ஏர் - முலேயினது அழகைக்கொண்ட என்க. ஏர் உவமவுருபு எனினுமாம்.

மென் முகை - மெல்லிய அரும்பு. அவிழ்ந்த - மலர்ந்த. தலேயலர் - முதற்கண் மலரும் மலர். 'கோங்கமரம் மலரும் முன்னர் யான் மீள்வன்' என்று கூறிசென்ற தலேவர், 'அது மலர்ந்த பின்னரும் வந்திலரே' என்றவாறு. வந்தன வாரா என்றதன்கண் முரண் தோன்றிச் செய்யுளின்பம் மிகுதல் உணர்க. துயிலுதற்கு இனிய கங்குற்றுயில் என்றது, தன்னேடு ஒரு பாயலிற்றுயிலும் இரவின்கண் துயிலே. தலேவியுடனே துயிலும் துயில், ஆற்றவும் இனி தென்பதை,

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணுன் உலகு." (குறள் - ககஉ)

எனனும் அருமைத் திருக்குறளானும் உணர்க.

(பாடம்) 1. பாரகாபரன், பாரகரபரன், பாரகாபான்.

எனைக் கங்குற் றுயிலின் நீக்குதற்குத், 'துயிலின் கங்குற்றுயில்' எனப்பட்டது. உம்மை: உயர்வுசிறப்பு. மறந்தனர் என்றது, மறத்தற்கியலாததொன்றனையும் மறந்தார் என்பதுபட நின்றது.

பயில் நறுங்கதுப்பு என்றது, தாம் அடிக்கடி கோதியும், மலர் சூட்டியும், மோந்தும், படுக்கை கொண்டும், பயின்ற நறிய கூந்தல் என்றவாறு. நறுங்கதுப்பெனப் பண்டு தலைவனுற் பாராட்டப்பட்டமை நினைவாள், அங்ஙனம் கூறினாள். தலைவன் கதுப்பினைப் பாராட்டுதலை,

"யானையந் துறைவோள் தேம்பாய் கூந்தல்
... ...
நுண்மணல் அறல்வார்ந் தன்ன
நன்னெறி யவவே நறுந்தண் ணியவே." (ககசு)

என, இந்நூலின்கண் முன்னர்ப்போந்த செய்யுளானும் உணர்க.

பாயல் - படுக்கை. தன் கூந்தலே பாயலாகக் கிடந்தமை பற்றிக் 'கதுப்பிற் பாயல்' என்றாள். கதுப்பாகிய பாயல் என்க. இன் சாரியை தவிர்வழி வந்தது.

செய்பொருள்: வினைத்தொகை. அறஞ்செய்தற்குரிய பொருள் எனினுமாம் நசைஇ - விரும்பி.

இசைசெய்யுட்டுறையின்கண் பருவங்கண்டு வற்புறுத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது என்றதனை, ஆற்றுவித்த தோழிக்குத்தலைவி பருவம் கண்டுரைத்தது என்று மாற்றிக் கோடல் வேண்டும். பருவம் வருமுன்னர்த தலைவர் வருகுவர் என்று கூறி ஆற்றுவித்த தோழிக்கு அப் பருவங்கண்டு அவர் வாராமையைத தலைவி தோழிக்குக் கூறியது என்று பொருள் கொள்ளவேண்டும் என்றற்கே, "கண்டுரைத்தது என்று கூட்டுக," என்னும் குறிப்பும் பண்டையோரால் தரப்பட்டது. இஃதறியார் "பருவம் கண்டு வருந்திய தலைவியை ஆற்றுவித்த தோழிக்குக் கூறியது" எனவிரிப்பர்.

பாட்டு - உருபு: தோழி கூற்று

துறை :—'இடைகினறு மீள்வ'ரெனக் கவனற கிழத்தியைத் தோழி வற்புறுதியது. அஃதாவது, 'வினைமேற் சென்ற தலைவன், தன்பாற் கொண்டுள்ள பேரன்பு காரணமாக இடைவழியிலேயே மீண்டுவிடுவனோ?' என்று ஐயுற்றுக் கவலை கொண்ட தலைவிக்கு, 'அவன் வினைமுற்றியே மீள்வன்,' என்பதற்குத் தோழி காரணங் கூறித் தெளிவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் செல்லும் வழியின்கண்ணே களிற்றியானைகள் யாமரத்தினைக் கோட்டாற் குத்திச் சிதைத்துப் பட்டைகளைப் பிடியானைகட்கு ஊட்டுதலைக் காண்பாராகலின், தாம் மேற்கொண்ட வினையின்கண்ணும் தங் கடமையை எண்ணி வினைமுற்றியே மீள்வர்காண்; இடைகின்று மீளார்,' என்று தேற்றுகின்றாள்.

உருரு. பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுதல் உருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்
சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை சண்டனர் தோழி
தங்கட னிறீஇய ரெண்ணி யிடநதோறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே.

—கடுகு பெருந்தேவனர்.

(இ - ள்.) தோழி—, தம கடன் இறீஇயர் எண்ணி - தமது கடமையைச் செய்யுபபொருட்டு நினைந்து, இடந்தொறுமம காமர் பொருட் பிணி போகிய - ஈட்டற்குரிய இடங்கள் தோறும் தாம் விருமபிய பொருணசையாலே சென்ற, நாம் வெங் காதலர் - யாம் விரும்பாநின்ற காதலையுடைய தலைவர், சென்ற ஆறு - நம்மைப் பிரிந்துசென்ற வழியின்கண, பொதுதில காழ அத்த யாஅத்து - புரையற்ற காழ்ப்பினையுடைய யாமரத்தினது, பொரி அரை முழுமுதல் உருவக் குத்தி - பொரிந்த அரையினையுடைய திரண்ட அடிப்பகுதியினை உருவிப்போம்படி கோட்டாலே குத்தி, மறங்கெழு தடக்கையின வாங்கி - வலிபொருந்திய பெரிய கையாலே வளைத்து, உயங்கு நடை சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும் - வருநதாநின்ற நடையையும் சிறிய கண்களையுமுடைய பெரிய திரளாகிய யானைகளின் மிகுந்த பசியினைப் போக்குகின்ற, தடமருப்பு யானை கண்டனர் - பெரிய கொம்பினையுடைய களிற்றியானையைக் கண்டனர்.

விளக்கம்:—பொத்து - பொந்து; உட்டுளை. காழ - காழ்ப்புடையன. அத்த - அருவழியின்கண் உள்ளன. யாஅத்து - யாமரத்தினது. பொரியரை - பொரிந்த அடிமரம். குத்தி என்றதனால் கோட்டால் என வருவித்துரைக்க. வாங்கி - வளைத்து. உயங்கு நடை - பசியால் வருந்துகின்ற நடை. சிறுகண் பெருநிரை என்ற தொடரின்கண் செய்யுளின்பம் உணர்க. பெரு நிரை - பெரிய கூட்டம் என்க. ஈண்டுப் பிடிகளும் கன்றுகளுமாகிய கூட்டம். மறங்கெழு தடக்கை என்றது, யா மரத்தினை வளைக்கும் வலிமையுடைமை கருதி என்க. தடக்கை - பெரிய கை. தடமருப்பியானை என்றது, களிற்றினை.

தலைவர் தாம் செல்லும் நெறியின்கண் களிற்றியானை தாம் வருந்தியும் தம் சுற்றம் ஓம்பக் கண்டனர் என்றது, அக் களிற்றின் ஆள்வினைத் திறத்தை எண்ணினராய்த் தாமும் இன்பம் விழையாது வினை விழைந்து தங் கேளிர் துன்பந் துடைத்தற்கு முயல்வார் இடையின்கண் மீளார் என்று கூறியவாறு.

தங்கடன் இறீஇயர் - தமது கடமையை இறுக்கும்பொருட்டு. தங்கடன் இறீஇயர் எண்ணிப் பொருள் தேடச சென்றோர் என்றதும் யானையின் செயலால் அக் கடமை மேலும் வலியுறுத்தப்பட்டு வினை மேற் செல்வர் என்றற்குக் குறிப்பேதுவாத லுணர்க.

கண்டனர் என்று துணிவு பற்றி இறந்த காலத்தாற் கூறினள். இனி, பண்டு நந்தலைவர் இங்ஙனம் கண்டனர் அன்றே? இப்பொழுதும் காண்பர் என்றலுமாம். என்னை? இந் நிகழ்ச்சியைத் தலைவன் கூறவே இவள் அறிந்தாளாகலின் என்க. எனவே, பண்டு கண்டதனை அவர் கூறக் கேட்டனம்; இப்பொழுதும் அவர் காண்பர் என்று குறிப்பான் உணர்த்தினளாயிற்று.

ஆகலான் இடைநின்று மீளாது வினைமேற் செல்வர் என்பது குறிப்பெச்சம். காமர் - விருப்பம்; விரும்புதற்குக காரணமான பொருள் என்க. பிணி அதன்கட் பற்று. அப்பற்றின் நீண்டதலாலே போகிய தலைவர் என்க.

நாம் வெங் காதலர் - நாம் விரும்பும் காதலர்.

பாட்டு - உரிசு : தலைவன் கூற்று

துறை .—பொருள விலக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது. அஃதாவது, பொருள்வயிற்பிரிதலை விலக்கப்பட்ட தலைவன், செலவொழிந்தவழிக் கூறியது.

இதன்கண், தலைவன் தன்னெஞ்சிற்குக் கூறுவானாய், 'பூங் குழையோய், யாம் வினைமேற் சென்று வருவேம்; யாம் வருந் தினையும் ஆற்றியிருத்தல் வல்லியோ?' எனத் தலைவியை யாம வினவுமுன்னரே அவள் நிலைகலங்கி அழலாயினள். அவள் அழுத கண்கள் வினைமேற் சேறற்குரிய நந் தேரின் செலவைத் தடுத்து நிறுத்தின. இனி யாம் செல்வேமல்லேம,' என்று கூறுகின்றான்.

உரிசு. மணிவார்ந் தன்ன மாக்கோடி யறுகை
பிணிகான் மென்கோம்பு பிணையோடு மார்ந்த
மானே றுகளுங் கானம் பிற்பட
வினைநலம் பாடி வருது மவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங்குழை யோயெனச்
சொல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழுத லானு
தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே.

—.....[1]

1. ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

(இ - ள்.) கெஞ்சே—, பூங்குழையோய் - பூத் தொழிலை யுடைய குழையை அணிந்த நங்கையே! மணி வார்ந்தன்ன மாக் கொடி அறுகை பிணி கால் மென்கொம்பு பிணையொடும் ஆர்ந்த-நீலமணியின் கதிர்கள் ஒழுகினாற்போன்ற கரிய கொடிகள் படர்ந்த அறுகம்புல்லினது பிணித்த வேர்களையுடைய மெல்லிய கிளையைத் தம் பெண்மான்களோடே வயிறு நிரம்ப மேய்ந்த, மான் ஏறு உகளும் கானம் - ஆண்மான்கள் துள்ளித் திரியா நின்ற காடுகள், பிற்பட - பின்னே கிடக்கும்படி சென்று, வினை நலம் படீஇ வருதும் - யாம் தொழிலால் உண்டாகும் நலத்தைப் பெற்று மீண்டு வருவேம், அவ் வரை தாங்கல் ஒல்லுமோ - அங்ஙனம் யாம் வருமளவும் நின்னால் பொறுத்திருத்தல் கூடுமோ எனச் சொல்லா முன்னர் - என்று நங் கருத்தை அவட்கு யாம் கூறுதற்கு முன்பே, தெரிவை கண் - நந் தலைவி யுடைய கண்கள், நில்லாவாகி நீர் விலங்கு அழுதல் ஆனா - அவள் வரைத்தாய் நில்லாதனவாகி நீர்த்துளிகள் புறப்பட்டொழுகுதற் குக் காரணமான அழுதலை ஒழியாதனவாகி, தேர் விலங்கின - நந் தேரினது செலவைத் தடுத்தன காண்.

விளக்கம் :—ஆதலான் இனி யாம் செல்வேமல்லேம் என்பது குறிப் பெச்சம்.

பூங்குழையோய் வினைநலம் படீஇ வருதும் அவ்வரைத் தாங்கல் ஒல்லுமோ எனச் சொல்லா முன்னர்த் தெரிவை கண் அழுதல் ஆனா தேர் விலங்கின என இயைத்துக் கொள்க.

மணி - நீலமணி. மணிவார்ந்தன்ன என்றது, நீலமணிகளின் ஒளிக் கதிர்கள் ஒழுகினாற்போல என்றவாறு. இக் கதிர்கள் அறுகங் கொடி கட்கு உவமை என்க. மா - கருமை. பிணி கால் மென் கொம்பு - பிணித்த வேர்களையுடைய மெல்லிய கொம்பு என்க. அறுகம்புல் கிளைகடோறும் வேருடையதாய் நிலத்தோடே பிணிக்கப்பட்டிருக்கும் இயல்புடையது.

பிணை - பெண்மான். பிணையொடும் ஆர்ந்த என்பதன்கண் உம்மை உயர்வுசிறப்பு. ஆர்தல் - வயிறுநிரம்ப மேய்தல். ஆண்மான்கள் நிரம்பவுண்டு பிணையோடே துள்ளித்திரியும் காட்சியே நம் தேர்ச் செலவை விலக்குதற்குப் போதியதாம் எனச செலவழுங்குதற்குப் பிறிதுமோர் எது குறிப்பாற் கூறியவாறும்.

வினை நலம் - தொழிலால் ஏற்படும் நன்மைகள். அவை பொரு ளீட்டலும் அறஞ் செய்தலும் துய்த்தலும் முதலாயின என்க. அவ் வரை - அக் காலவரை என்க தாங்கல் - பிரிவானுளதாய துன்பத் தைப் பொறுத்திருத்தல். தனது பிரிவினைச் சிறிதும அவள் பொரு ளென்பதனை அவள் தன்னைப் புல்லிக்கிடந்து புடைபெயர்ந்த மாத் திரையின், அள்ளிக் கொள்வற்றாய்ப் பசப்பூர்தல் கண்கூடாக் கண்டா னாகலின், 'அவ்வரைத் தாங்கல் ஒல்லுமோ?' என வினாயினன் என்க. நில்லாவாகி நீர் புறப்படும் அழுதல் என்க. அவள வரைத்தாய் நில்லா வாகி என்றவாறு.

பாட்டு - உருள : தலைவி கூற்று

துறை :—வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, தலைவியின் தமர் வரைவுடன்பட்டாராகத், 'தலைவிக்குப் பலரறிமணம் நிகழும்' என்ற செய்தியைத் தோழி, தலைவிக்கு அறிவுறுத்தியபொழுது தலைவி மகிழ்ச்சியாலே கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'ஆர்கலி வெற்பன் வருந்தோறும் வந்து இன்பஞ் செய்து, அவன் பிரிந்துழிப் பிரியாது நம்மைப் பீழிக்கும் காமப்பகை இனி எப்போதும் இன்பமே செய்யும் நண்புடைத்தாம்,' எனறு மகிழ்ந்து கூறுகின்றாள்.

உருள. வேரு முதலும் கோடு மோராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதோறும் வருஉம்
அகலினும் அகலா தாகி
இகலுங் தோழிநங் காமத்துப் பகையே.

—உறையூர்ச் சிறுகந்தனார்.

(இ - ள்.) தோழி—, நம் காமத்துப் பகை - நமது காம மாகிய பகை, வேரும் முதலும் கோடும் ஓராங்குத் தொடுத்த போல - வேர் அடிமரம கிளைகள் என்னும் மூன்றுபகுதிகளிடத்தும் ஒருபடியாகத தொடுத்து வைக்கப்பட்டன போன்று, தூங்குபு தொடரி - தொங்குதலைச் செய்து தொடர்ந்து, கீழ் தாழ்வு அன்ன வீழ்கோள் பலவின் - கீழே விழுந்துவிடுதல் போன்று வீழ்ச்சியையுடைய குலைகள் மிக்க பலாமரங்களையும், ஆர்கலி வெற்பன் - ஆரவாரத்தையுடைய மலைகளையுமுடைய நந்தலைவன், வருதொறும் வருஉம் - நம்பால் வருந்தோறும் வாராநிற்கும், அகலினும் அகலாதாகி இயலும் - அவன் பிரியும் போதும் தான் பிரியாதாகி மாறுபடும்; இஃதொரு வியப்பு!

விளக்கம் :—வெற்பன் வருந்தோறும் வருவது அவன் அகலும் போது அகல்வதே முறையாம்; அவ்வாறன்றி அகலாது இகலுகின்றது. மேலும் அவன் உடனுறையும் போது நமக்கின்பம் நல்கி, அவன் பிரிந்து விட்டாலோ அதுவே துன்பஞ் செய்யாநின்றது. இக்காமத் தின் செயல் வியப்புடைத்து என்றவாறு.

வரைவிற்குப் பின்னர்த் தலைவன் பிரியாமைகளின், இக் காமப்பகை இனி நம்மை கலியாது என்று மகிழ்ந்தவாறும்.

களவிற் போன்று பிரிதலும் புணர்தலுமின்றி யாண்டும் ஒருபடியாய் இனித்தலைவன் நம்மோடு உடனுறைந்து இன்பம் செய்வன் என்பாள், 'வேரும் முதலும்கோடும் ஓராங்குத், தொடரிய கோட்பலாவுடைய வெற்பன்' என்றாள். யாண்டும் இடையறவின்றிப் பயன்தரும் பலாப் போல யாண்டும் பிரிவின்றி இன்பஞ் செய்வன் என்பது கருத்து.

ஓராங்கு - ஒன்றுபோல; ஒருதன்மையாக. முதல் - அடிமரம். தூங்குபு - தொங்கி. தொடரி - தொடர்ந்து. கீழதாழ்வன்ன - கீழே விழுதல் போன்ற என்றது, காய்கள் தம் பருமையாலே வீழ்ந்து விடுமோ என்று நினைக்கும்படி, என்றவாறு.

ஆர்கலி - ஆரவாரம். மலைகளிடத்தே பல்வேறு ஆரவாரங்கள் உண்டாதலை மலைபடு கடாத்தான் உணரலாம்.

வரும்போது வருவது அகலுங்கால் அகலாதாகலின், இகலும் என்றாள். இகலும் - மாறுபடும். அவன் அகன்றுழித் தன்னைத்துன் புறுத்தலின் பகை என்றாள். இப்பகைக்கினி உய்திபெற்றேன் என்பது கருத்து.

பாட்டு - உரு அ : தோழி கூற்று

துறை :—(க) தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது. அஃதாவது, பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்த தன்பால் வாயில் இரக்கும தலைவனை மறுத்துத் தோழி கூறியது.

(உ) வாயில் நேர்ந்தாரூஉமாம. அஃதாவது, தலைவனுக்குத் தோழி வாயிலுடம்பட்டது எனினுமமை பொருந்தும்.

இதன்கண், குறையிரந்து நின்ற தலைவனை நோக்கித் தோழி, 'பெருமை! நீ எஞ்சேரிக்கு இனி வாராதேகொள்! மாலை தருதலையும் இனி ஒழிக! பெருமகன் அழிசி என்பானுடைய ஆர்க்காடு போன்ற சிறந்த இவளின் மாண்புடைய நலங்கெட்டதைப் பற்றி இப்போது யாண்டும் அலர் தூற்றப் படுகின்றது. அவள நலனிழந்தாள. நினைக்காகாள் காண்,' என மறுத்துரைக்கின்றாள.

உரு அ. வாரலெஞ் சேரி தாரனின் றூரே
அலரா கின்றுற் பெருமை காவிரிப்
பலராடு பெருந்துறை மகிழ்தோடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவி னங்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளைஞர் பெருமகன்
அழிசி ஆர்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே.

—பரணர்.

(இ - ள்.) காவிரிப் பலர் ஆடு பெருந்துறை-காவிரியாற்றினது பலரும் நீராடாகின்ற பெரிய நீர்த்துறையின் கண்ணே, மருதொடு பிணித்த ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை - மருதமரத்திலே கட்டப்பட்ட ஏந்திய மருப்பினையுடைய யானைகளையுடைய சேந்தன் என்பானுடைய தந்தையும், அரியல் அம் புகவின் அம் தோட்டு வேட்டை - தேறலாகிய இனிய உணவினையும், அழகிய தொகுதிகளாகிய விலங்கினங்களை வேட்டையாடுந் தொழிலையும், நிரை ஒள்வாள் இளைஞர் பெருமகன் - நிரல் பட்ட வாள்களையும் உடைய வீரர்களுக்குத் தலைவனும் ஆகிய, அழிசி ஆர்க்காடு அன்ன இவள் பழிதீர் மாண் நலம் - அழிசியினது ஆர்க்காடென்னும் நகரத்தை ஒத்த இவளுடைய குறை மற்ற மாட்சிமையுடைய பெண்மை நலன் முழுதும, தொலைதல் கண்டு அலராகின்று - அழிதலைக் கண்டு ஊர் முழுதும அலர் தூற்றப்படுகின்றமையான், பெரும - பெருமானே, வாரல் எம சேரி - இனி எம் சேரிக்கு வாராதேகொள்,! நின் தார் தாரல் - நின் மாலையையும் இனி எமகுத் தருதல வேண்டா!

விளக்கம்:—'இவள் தன் பெண்மை நலம் முழுதும் இழந்தாள்; இனி நினக்கு ஏற்றவள் ஆகாள்: நீ மீண்டும் பரத்தையர் சேரிக்கே போகக் கடவை,' என்று, தோழி தலைவனைக் கடிந்துரைத்தவாறும்.

'நினக்குப் பரத்தையர் சேரியே சாலப் பொருந்துவதாம்; ஆண்டுச் செல்' என்பாள், 'எம் சேரி வாரல்' என்றாள் 'நின்கையுறையாகிய மாலை பரத்தையர்க்கே கொடுக்கத் தகும்' என்பாள், 'தாரல் நின் ஊர்' என்றாள். வாரல் - வாராதொழி. தாரல் - தருதலைத் தவிர். அலர் - இவள் கணவன் இவளைக் கைவிட்டமையான் இவள் நலனிழந்தான் என்று ஊரவர் கூறும் பழிச்சொல். இனி, பரத்தையர் தலைவி தலைவனை அகப்படுத்திஞள் என்று கூறும் பழிசசொல் என்பாருமுளர். அது பழியன்மை உணர்க. ஊர் முழுதும் பழிதூற்றல் கண்டும் பரத்தமை கைவிடாய் என்பது கருத்து.

மருதமரம், மருதக் கருப்பொருள். மருதத்தில் யானை பிணிக்கப்பட்டன என்பது திணைமயக்கம். தலைக்குரிய நீ பரத்தையராற் பிணிக்கப்பட்டனை என்பது குறிப்பு.

இச் செய்யுளிற் கூறப்படும் சேந்தன் தந்தை அழிசி என்பானைப் பற்றி,

"நோவினி வாழிய நெஞ்சே மேவார்
ஆரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை எஃகிற் சேந்தன் றந்தை
தேங்கமழ் விரிதார் இயறேர் அழிசி
வண்டுமூசு நெய்த னெல்லிடை மலரும்
அரியலங் கழனி ஆர்க்கா டன்ன

காமர் பணைத்தோ ணலம்வீ றெய்திய
வலைமான் மழைக்கட் குறுமகள்
சின்மொழித் துவர்வாய் நகைக்குமகிழ்ந்தோயே.” (நற். ககூ0)

எனவரும் நற்றிணைப் பாட்டினும் கூறப்படுதல் அறிக.

யானையின் மருப்பு முன்பக்கம் உயர்ந்திருத்தலான் ‘ஏந்து கோட்டி யானை’ எனப்பட்டது.

அரியல் - தேனாற் சமைத்த கள். தோடு - தொகுதி, ஈண்டு விலங்குத் தொகுதி என்க. நிரைய - வரிசையுடையவாகிய. நிரையம் எனக் கண்ணழித்து, நரகத்துன்பத்தைத் தருகின்ற எனினுமாம். ஆர்க்காடு-சோணட்டொரு மூஉர்.

பரத்தையர் நலம் பழியுடைய நலம். அதனை விரும்பித் தாய இவள் நலத்தைக் கெடுத்தொழிந்தனை என்பாள், ‘பழிதீர் மாணலம்’ என்றாள்.

இனி இரண்டாவது துறைக்கு, ‘இவள் நலம் தொலைதல் கண்டு அலராகின்று; நீ வருதலும தார்தருதலும் எமக்கு உடம்பாடல்ல; அலர்க்கஞ்சினேம் ஆகலின், உடம்பட்டேம்’ என்பது கருத்தாகக் கொள்க.

பாட்டு - உருகூ : தோழி கூற்று

துறை :—காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தோழி, அறத்தொடு நின்று அவனை பரிகரிப்பனென்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கருதியது அஃதாவது, இற்செறித்தன் முதலிய காவல் மிக்கவிடத்துப் பெரிதும் மெலிந்த தலைவியின் நிலைக்குத் தோழி கவன்று களவொழுக்கத்தை வெளிப்படுத்தினள். அங்ஙனம் வெளிப்படுத்தினுல் தலைவன் பின்னர் வரைந்து கோடற்கு முன்வந்து தம் வருத்தத்தைப் போக்குவன் என்னும கருத்தாலே தான் வெளிப்படுத்தின செய்தியை அறிந்து தலைவியும் தன்னை வெறுதே நயக்கும் பொருட்டு அந் நிகழ்ச்சியைத் தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தலைவியின் உடம்பாடின்றித் தானே அறத்தொடு நின்ற தோழி தலைவியை நோக்கி, ‘நின் புரைமை நீயறிவை; மெய்போலப் பொய் கூறுதலிற் பயனில்லை’ என்று கருதி, ‘யான் பொய்கூற இசையாது மெய்யை வெளிப்படுத்தினேன்; இதன் வாயிலாய் நன்மையே விளையும் என்று எண்ணுகின்றேன்.’ என்று கூறுகின்றாள்.

உருகூ. மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தாஅ நாறு நறுநுதல்

பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே
ஒல்வை யாயினுங் கொல்வை யாயினும்
நீயளக் தறிவைநின் புரைமை வாய்போற்
போய்ம்மொழி கூறலஃ தேவனே
நெஞ்ச நன்றே நின்வயி னானே.

—பரணர்.

(இ - ள்) மழை சேர்ந்து எழுதரும் மாரிக் குன்றத்து அருவி ஆர்ந்த தண் நறுங்காந்தள்-முகில்கள் தங்கி எழாநின்ற கார்காலத்து மலையினின்றும் வீழும அருவிநீரைப் பருகிய தண்ணிய நறிய காந்தளினது, முகை அவிழ்ந்து ஆனு நாறும் நறுதுதல் - அரும்புகள மலர்ந்து அமையாதனவாய் மணங்கமழாநின்ற நறிய நுதலினையும், பல் இதழ் மழைக்கண் மாஅயோய்-பலவாகிய இதழ்களையுடைய தாமரைப் பூப்போன்ற குளிர்ந்த கண்களையும மாமை நிறத்தையும உடையவளே, ஒல்வை ஆயினும் கொல்வை ஆயினும - நீ யான் செய்தசெயலை நன்றென்று கருதி உடமபடுவாய் ஆயினும் அல்லது பிழையாகக் கொண்டு ஒறுபபாயாயினும், நீ நின் புரைமை அளந்தறிவை-நீயே நினது உயர்வினை அளவிட்டறியும தகுதியுடையை ஆகலின, நீவிரும் பியதனைச் செய்வாயாக, நின் வயின் நெஞ்சம் நன்றே-இச்செயலுக்குக் காரணமான என் நெஞ்சம நின்பால் நன்மையே உடைத்து, வாய்போல் பொய் மொழி கூறல் அஃது எவன்-மேலும் யான் இங்ஙனம் செய்யாவழிப் பொய்கூறவே நேருமாகலின் அப பொய்ம்மொழியை மெய்மமொழிபோலக் கூறுதலால் யாது பயன் உளதாம.

விளக்கம்:—மழை-முகிலுக்கு ஆகுபெயர். சேர்ந் தெழுதல்-ஆண்டுத் தங்கிக் கிடந்து, பின்னர்த திசைதொறும் போதல். மாரிக் குன்றம்-கார்காலத்து மலை. கார்ப்பருவததே குளிர்ந்த மலையினது அருவியைப் பருகிக் காந்தள் முகை அவிழ்ந்து ஆனு நாறும் என்றது, 'யான் அறத்தொடு நின்றதனால் நம்மிலையைச செவிலி உட்கொண்டு நற்றாய் முதலியோர்க்கு உணர்த்துவள்; அதனால் தமா வரைவு மலிந்து திருமணம் நிகழும்' என்று குறிப்பான் உணர்த்தியவாறு. இங்ஙனம் இதன்கண் உள்ளுறை காணுது பிறரெல்லாம் வாளா போயினர். மழை சேர்ந்து எழுதரும் மாரிக்குன்றம் தோழியாலே உண்மையறிந்து கொண்ட செவிலி, அக்குன்றத்து அருவி செவிலி அறத்தொடு நிற்றல்; அவ்வருவியைப் பருகிய காந்தள் தலைவியின் தமர், அக்காந்தள் முகையவிழ்ந்து ஆனு நாறுதல் - தமர் காவல் கைவிட்டு வரைவுடம்பட்டுக் கரணம் நிகழ்த்துதல். இங்ஙனம் நுண்ணிதில் உள்ளுறை காணு வழிக் காந்தள் மூகையவிழ்ந்து நாறும் நுதல் என்றற்கு இரண்டடிகள் விரித்தல் வெற்றெனத் தொடுத்தலாமாறுணர்க.

பல் இதழ் - தாமரை: அன்மொழித்தொகை. ஆனு - அமைவின்றி.

மாயோய் - மாமை நிறமுடையவளே. ஒல்வை என்றது, என் செயல் நன்றென்று கருதி உடம்படுவாய் என்றவாறு. கொல்வை என்றது, ஈண்டு ஒறுப்பாயினும் என்றவாறு: நடுநிலைமை திறம்பாத உயர்வுடையை யாகலின் 'நீ உன்தருதிக் கேற்பச் செய்வதைச் செய்க. அச்செயல் நன்மையினும் தீதாயினும் யான் ஏற்றுக் கொள்வேன்' என்ற வாறு.

நின் மெலிவு கண்டு கவன்ற செவிலிக்குக் குறிப்பாகக் கள வொழுக்கத்தை வெளிப்படுத்தினேன் என்பாள், அதன் இன்றியமை யாமை தோன்ற எதிர்மறையானே, 'பொய் கூறல் எவனோ?' என்றாள். 'யாம் இன்னும் மறைப்பேமெனின், நம் நிலை இனி ஆற்றுணைதாய் விடும்; ஆதலால், இத்தூயர்க்கு உய்திகாணும் நன்னெஞ்சத் தோடே தான் மறை வெளிப்படுத்தேன் என்பாள், 'நெஞ்சம் நன்றே நின்வயின்' என்றாள். என் செயலால் நலமே விளையும் என்பது கருத்து.

பாட்டு - உசுo : தோழி கூற்று

துறை :—அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு ஆற்றாளாய தலைமகட்குத் தோழி சொல்லியது. அஃதாவது, ஆற்றாளாய தலைமகட்கு அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு தோழி சொல்லியது என மாறுக; இதுபிரிவின்கண் ஆற்றாளாகிய தலை வியைத் தலைவன் வருதற்குரிய நிமித்தங்கள் உளவாதல் கண்ட தோழி, அவற்றைக் கூறி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'உதாபார்! குருகு கள் உயர்ந்து பறவாநின்றன; புதற்கண் மலர்களில் வண்டுகள் ஊதா நிற்ப அவை மலராநின்றன; நின் வளைப்பொலிந்த தோள் களும் சிறிது தடிக்கின்றன; இந்நிமித்தங்கள் உண்மையான் சுரனீறந்த நந்தலைவர் இன்னே வருகுவர்; நீ கவலற்க!' என்று கூறித் தேற்றுகின்றாள்.

உசுo குருகும் இருவிசும் பிவரும் புதலும்
வரிவண் டூத வாய்நெகிழ்ந் தனவே
சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை
வண்தேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்துக்
கன்றி லோரா விலங்கிய
புன்றா ளோமைய சுரனிறந் தோரே.

—கல்லாடனார்.

(இ - ள்) தோழி வாழி - தோழி நீ வாழ்வாயாக!; குரு கும் இரு விசும்பு இவரும் - நாரைகளும் பெரிய வானத்தின்

கண்ணே உயர்ந்தெறிப் பறவாநின்றன, புதலும் வரி வண்டு ஊத வாய் நெகிழ்ந்தன - புதலின்கண் உள்ள அரும்புகளும் வரிகளையுடைய வண்டுகள் ஊதாநிற்ப மலராநின்றன, சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும் - சுரிந்த சங்காலியன்ற வளைகளானே பொலிவுபெற்ற நின் தோள்களும் அவ்வளையலோடே பூரித்துச் செறிவனவாயின, இக்ஙன்னிமித்தங்கள் தோன்றுதலானே, பொருவார் மண் எடுத்து உண்ணும் அண்ணல் யானை வண் தேர்த் தொண்டையர் - பகைவரது நிலத்தை வென்று கொண்டு அதன்கட் பயன் விளைத்துண்ணுகின்ற தலைமையையுடைய யானையையும் வளைய தேரையும் உடைய தொண்டைமான்களுக்குரிய, வழை அமல் அடுக்கத்து - சுரபுன்னைகள் செறிந்த மலைப்பக்கத்தே, கன்று இல் ஓர் ஆ விலங்கிய-கன்றில்லாத ஒற்றை ஆனிரை போகாது தடுத்துக் கொண்ட, புன்தாள் ஓமைய சுரன் இறந்தோர் - புற்கென்ற அடிப்புகுதியையுடைய ஓமைமரங்களையுடைய பாலைநிலங்களைக் கடந்து சென்றநந்தலைவர், வருவர்-இன்னே மீண்டு வருகுவர்; நீ வருந்தாதெகொள்.

விளக்கம்:—தம் மனையயலே காரை வானத்தே உயர்ந்து பறத்தல் நன்னிமித்தம் என்னும் கொள்கை உண்டுபோலும். காரை உயர்ந்து பறத்தால் மழை உண்டாகும் என்பது இக்காலத்தும் பலருடைய நம்பிக்கையாகவுளது வண்டுதா ஙிற்பப் புதல் மலர்தல் தலைவர் வருகையை அறிவிக்கும் தூது பெறுவாம் என்னும் குறிப்புடைத்து. தோள்வளை இறுகுதல் நன்னிமித்தமாதலை, "மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம் .. ..பெருங்கடல் ஞெடன் வருங்கொல் அன்னை" (ஐங்-உகஅ.) எனப் பிறர் கூறுமாற்றானும் உணரலாம்.

சுரிவளை: வினைத்தொகை. சுரிந்த சங்கவளையல் பொலிந்த என்னும் எசசததைப் பொலிய எனத் திரிப்பின் நன்கு பொருந்தும். செற்றும் - செறியும். ஆதலால் வருவர் என வருவித்துரைக்க.

பொருவார் - பகைவர். மண் எடுத்து உண்ணலாவது, பகைவர் நிலத்தை வென்று கைக்கொண்டு அதன் பயனை நுகர்தல். மண் ணெடுத்துண்ணும் தொண்டையர், அண்ணல் யானை வண்டேர்த் தொண்டையர் எனத்தனித்தனிக் கூட்டுக. தொண்டையர்-தொண்டை நாட்டரசர். வழை - சுரபுன்னை. அமலுதல் - அடர்தல். அடுக்கம்-பக்கமலை. தொண்டையர் அடுக்கம் என்றது, வடவேங்கடத்தை, வேங்கடத்தின் அப்பாலான சுரம் என்க.

பாலைநிலத்தின்கண் நிழல்பெறல் அரிதாகலின், அதன்கட் சென்ற ஆன், ஓமைநிழலை அரிதிற் பெற்று அந்நிழலிலேயே தங்கும் என்பாள், 'ஓமை ஆனே விலங்கிய சுரன்' என்றாள். விலங்குதல்-வேறிடம் செல்லாது தடுத்துக்கோடல். இதனால் பாலையின் வெப்பம் உணர்த்தப்பட்டது இனிக் கன்றில்லா மலட்டாவே தங்கும் என்றமையாலே, நின்பாற் பேரன்புடைய தலைவர் நின்னை நினைந்து மீள்வர் என்று குறிப்பான் உணர்த்தினமையும் உணர்க. கன்றில் ஆ—மலட்

டுப்பசு. ஓரா - நிரையுடன் உறையாத தனிப் பசு. தலைவர் அன்பு செலுத்தற்குரிய நம்மையும் மேலும் சுற்றத்தாரையும் உடையராகலின் அவ் ஆப்போன்று தங்கமாட்டார் என்றவாறு.

பாட்டு - உசுக : தலைவி கூற்று

துறை :—இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொலலுவாளாய்ச் சொல்லியது அஃதாவது, 'வரைந்து கொள்ளும் கருத்தின்றிக் களவொழுக்கமே விழைந்து ஒழுகும் தலைவன், ஒருநாள் மணையயலே இரவின்கண் வந்தமை யுணர்ந்த தலைவி, அவன் வருகையை உணராதாள் போன்று தன்னிலையினைத் தலைவனுக்குணர்த்தி வரைவுகடாவுவாள் தோழிகருக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி 'என்னுடைய கண்கள் இருள் செறிந்த நடுயாமத்திலும் நாழிகைக் கணக்கர் கண் போன்று பெரிதும் வருந்தித் துயிலாவாகின்றன,' என்று கூறுகின்றாள்.

உசுக. பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் சில்பெயற் சுடைநாள்
சேற்றுநிலை முணைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னெனை மென்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே.

—கழார்க் கீரனெயிற்றியார்.

(இ - ள்.) தோழி—, காவலர் கணக்கு ஆய் வகையின் - நாழிகைக்கணக்கர் இரவின்கண் வானேக்கிக் காலக்கணக்கை ஆராய்கின்ற முறையானே நாழிகையை ஆராய்ந்து, வருந்தி என் நெஞ்சு புண்ணுற்ற விழுமத்தான் - வருத்தமெய்தி என் நெஞ்சப் புண்பட்ட துன்பத்தாலே, பழமழை பொழிந்தெனப் பதன் அழிந்து உருகிய சிதட்டுக் காய் எண்ணின - பழைய மழை பெயததாகச் செவ்வியழிந்து உள்ளுருகிப்போன குருட்டுக் காயையுடைய எட் செடிகளையுடைய, சில் பெயல் கடை நாள்-சிறிய மழையையுடைய இக் கார்காலக் கடைநாட்களிலே, சேற்று நிலை முணைஇய செங்கண் காரான் - சேற்றின்கண் நிற்றலே வெறுத்த சிவந்த கண்ணையுடைய எருமை, நள் என் யாமத்து ஐ எனக் கரையும - நள் என்னும் ஓசையையுடைய

கடியாமத்தின்கண்ணே ஐ என்று ஒலிக்கும், அஞ்சுவரு பொழுதினுனும் - அச்சம் உண்டாதற்குக் காரணமான பொழுதின்கண்ணும், என் கண் துஞ்சா - என்னுடைய கண்கள் துயிலாவாயினகாண்.

விளக்கம் :—'தலைவன் வருகின்ற நாளினும் வாரா நாளினும் இரவின்கண் வான் நோக்கி நாழிகை ஆராய்ந்தும், வாராமையால் வருத்த மெய்தியும, என் நெஞ்சம் புண்ணுகிவிட்டது; கண்களும் உறங்கிற்றில' என்றுணர்த்தியவாறும். இசனுல் தலைவி களவொழுக்கத்தின்கண் தன்னிலை இற்றெனத் தலைவனுக்குணர்த்தினமை காண்க. தலைவன் விரைவில் வரைந்து கொள்ளவேண்டும் என்பது தலைவி கருத்து எட் செடிக்கு மிகையான மழை கூடாது. பெய்யின் காய்கள் கெட்டுப் பயனழியும்; மழையிற்பட்ட காயின் அகத்தேயுள்ள எள் பதனழிந்து உருவின்றி உருகிவிடும்; வெளித்தோற்றத்தில் மட்டும் காய் உருவத்திற் காணப்படும்; இக்காயையே 'சிதட்டுக் காய்' என்றுள் என்க. இக்காலத்தே இதனைப் பொய்க்காய் (பொக்கு) என்று வழங்குகின்றனர். சிதட்டுக்காய் என்பதற்குக் குருட்டுக்காய் எனலே செம்பொருளாகும். ஊமைக்காய் என்பாருமுளர். (சிதடு - குருடு.) எண் - எள். தனக் கொவ்வாத மழை பெய்தமையாலே உருகிச சிதடாய்ப்போன எள்ளை யுடைய காலம் என்றது, தனக்கொவ்வாத துன்பங்களாலே நெஞ் சுருகி யான் அழியாநின்றேன் என்னும் குறிப்பிற்றென்க

இற்செறிக்கப்பட்ட தன்னிலைக்கு உள்ளுறை உவமமாகச் சேற்று நிலை முனைஇய செங்கட்காரான் கரைதலைக் கூறினுள். ஐ என - ஒலிக் குறிப்பு

காவலர் - அரண்மனை காக்கும் காவலர். இவர்கள் இரவில் விண் மீன்களை ஆராய்ந்து நாழிகை காணும் வழக்கமுடையராகலின், அவர் போல இரவில் நாழிகை என்னுயிற்று என்று இடையருது வினவுகின் யானும் வருந்தாநின்றேன் என்பாள், 'காவலர் கணக்காய் வகையின் வருந்தி' என்றுள். வகை - முறை, விதம்; விழுமம் - துன்பம்.

பாட்டு - உசுஉ : தோழி கூற்று

துறை :—உடன்போக்கு நேர்ந்த தோழி, கிழத்திக்கு உடன்போக்குணர்த்தியது. அஃதாவது, தலைவனேடே அவன் விரும்பியபடி தலைவியை உடன்போக்க உடம்பட்ட தோழி அச் செய்தியைத தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'ஊரின்கண் அல லெழவும, சேரி ஆரவாரிப்பவும், ஒழிவின்றி நம்மை அலைக் கின்ற அறனில்லா அன்னை, தமியளாகத் தன்மனையே உறை வாளாக யானை, நீ இனித்தலைவனேடே இவா அறியாவாறு சென்று, மலையயலே யானைச்சுவட்டின்கண் உள்ள 'நீரைப்பருகு தல் நன்றென்று ஆராய்ந்து முடிவு செய்துள்ளேன்,' எனறு அறிவுறுத்துகின்றுள்.

உகூஉ. ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆஞ தலைக்கும் அறனி லன்னை
தானே இருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணலாய்ந் திசினு லவரோடு சேய்நாட்டு
விண்தோட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) தோழி—, ஊர் அலர் எழச் சேரி கல் என - ஊரின்கண்ணே பழிமொழி உண்டாகாநிற்பத் தெருவின்கண் உள்ளார் கல்லென ஆரவாரியாநிற்ப, ஆஞ அலைக்கும அறனில் அன்னை - அமையாதே நம்மை வருகதுகின்ற அறப்பண்பில் லாத நம்மன்னை, தன்மனை தானே இருக்க - தனக்குரிய இவ் வில்லத்தின்கண்ணே தான் ஒருத்தியே தனித்து உறைவாளாக, யான் - யாதெனை, சேய்நாட்டு விண்தொட நிவந்த விலங்கு மலைக் கவான் - தொலைவின்கண் உளள நாட்டகத்தே வானத்தைத் தீண்டுமாறு உயாநத ஒன்றனுக்கு ஒன்று குறுக்கிட்டுக் கிடந்த மலைகளின் தாழ்வரையில் உள்ள, கரும்பு நடு பாத்தி அன்ன - கரும்பு நடுகின்ற பாத்தியை ஒத்த, பெருங்களிற்று அடி வழி நிலைஇய நீர் - பெரிய களிற்றியானையினது அடிச்சுவட்டின்கண் நிலைபெற்ற நீரினை, அவரொடு - நந்தலைவரோடே, நெல்லி தின்ற முள் எயிறு தயங்க - நெல்லிக்காயைத் தின்ற முட்போன்ற எயிறுகள் விளங்கும்படி, உணல் ஆய்ந்திசின் - நீ பருகுதல் நன் றென்று ஆராய்ந்து கூறினேன்

விளக்கம்:—தலைவனுடன் தலைவி சென்றவுடன் ஊரினர் பழி தூற்றுதலும், சேரியினர் ஆரவாரித்தலும நிகழ்தல் இயல்பு. அங்ஙனம் நிகழினும், கற்புக் கடம்பூண்ட நினக்குத் தலைவனோடே செல்லலே அறமாம் என்பாள், 'ஊர் அலரெழச் சேரிகல்லென' என்றாள். ஊரினர் பொதுமலர் ஆகலின், பழிதூற்று மாத்திரையே அமைவர். சேரியினர் உறவினர் ஆகலின், சினந்து ஆரவாரிப்பர் என்பது தோன்ற, ஊரினையும் சேரியினையும் வேறு வேறு ஓதினள். தலைவி தலைவனோடே சென்ற பின்னர்த் தலைவியின் தமர் சினங்கொள்வர் என்பதனை, தாய் தன்னையர்க்கு அறத்தொடு நிற்கும்பொழுதும் தன்னையர் சினத்தல் கூறலான் உணரலாம்.

"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;
அவரும், தெரிகணை நோக்கிச் சிலநோக்கிக் கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி

இருவர்கட் குற்றமும் இல்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை." (கலி: ஈக.)

எனவரும் கலித்தொகையானும் அறிக.

தலைவியின் நிலையை ஊகத்தாலறிந்து அவள் விரும்பிய தலைவற்கு அவளை மணஞ் செய்வித்தற்கு முயறல் போக்கி, இற்செறித்தல் முதலிய வற்றானே அலைத்துக் கொடுமை செய்தலின், 'அறனில் அன்னை' என்றாள். ஈண்டு அறம் என்றது, தலைவியைத் தலைவனோடே கூட்டுவிக்கும் செயலை. அறனிலாரோடு உடனுறைதலுந் தகாதென்பாள், 'தன்மனை தானே இருக்க' என்று வெறுத்தோதினாள்.

நெல்லி - கனிக்கு ஆகுபெயர். பாலை நிலத்தே செல்வோர் நீர் வேட்கை தணியும் பொருட்டு அந்நிலத்துள்ள நெல்லிக்கனியைத் தின்பர். நெல்லிகாயின் துவர்தலை பல் மாசுபடுதலின் அது தீரவும், நெல்லிக்காயைத் தின்ற பின்னர் நீர் பருகின் அஃதினிதாதலினும் 'முள்ளெயிறு தயங்க நீருண்' என்றாள். தலைவனோடே இருந்து உண்ணப்படுவது வறிய நீரேயாயினும், அமிழ்தினும் இனிதென்பதுபட 'அவரொடு உணல்' என்றாள். இதுதான் நீ இப்பொழுது செய்யக்கிடந்த அறம் என்பாள், 'ஆய்ந்திசின்' என்றாள். இசின் - அசை. ஆராய்ந்து தெளிந்துள்ளேன் என்றவாறு.

கரும்பு ஈடு பாத்தி, களிற்றடிச் சுவட்டிற்கு உவமை. பாலைநிலத் தின்கண் நீர் அருமை கூறுவாள், 'களிற்றடி வழி நிலையிய நீர்' என்றாள்.

நீ தலைவனோடே போதலே இப்போது செய்யற்பாலது என்பது கருத்து.

பாட்டு - உஈக : தோழி கூற்று

துறை —'அன்னை வெறியாட் டெடுக்கக் கருதாநின்றாள்; இனி யாம் இதற்கு என்கொலோ செயற்பாலது?' எனத் தோழி, தலைமகட்குத தலைமகன் சிறைப்புறமாகச் கூறியது.

அஃதாவது, செவிலி, தலைவியின் மெலிவு தெய்வத்தான் வந்ததாகக் கருதி வெறியாட்டெடுக்கக் கருதியிருப்பதனைத் தோழி தலைவனுக்கு உணர்த்தும பொருட்டு, அவன் மனையயலே வந்து நின்றபொழுது அவன் வரவறியாள் போன்று தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "நாம் தலைவனோடே கொண்டுள்ள தொடர்பறியாத செவிலி முதலியோர், ஆட்டினை அறுத்துத் தினைப் பிரப்புப் பரப்பி, ஆற்றிடைக் குறையின்கண் இசைக்கருவி முழங்க நம் நோய்க்கு மருந்தாக மாட்டாத பிற தெய்வங்களை வாழ்த்தி 'இவள் பேய்க் கோட்பட்டாள்' என்று கூறுகிற்றல், நமக்குப் பெரிதும் இன்னல் தருவதாம்" என்று கூறுகின்றாள்.

உகூஉ. மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவளெனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவீ யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே.

—பெருஞ்சாந்தனார்.

(இ - ள்.) தோழி—, மால் வரை மழை வீளையாடும் நாடனை - பெரிய மலையினிடத்தே முகில்கள விளையாடாநின்ற நாட்டிற்குத் தலைவன்பால், பிழையேம் ஆகிய நாம் இதன் பட - தவறில்லாதேமாகிய யாம் இவ்வியற்கை மணத்திலே ஒழுகா நிற்ப இவ்வுண்மையறியமாட்டாதாரானே, மறிக் குரல் அறுத்துத் தினைப பிரப்பு இரீஇ - ஆட்டினது கழுத்தை அறுத்துத் தினையையுடைய பிரப்பை வைத்து, செல் ஆற்றுக் கவலைப் பல்லியம் கறங்க - ஒழுகாநின்ற யாற்றினது இடைக் குறையின் கண்ணே பல்வேறு இசைக்கருவிகள் முழங்காநிற்ப, தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி - வேலன்மேல் வந்து தோன்றும் மாத்திரையன்றி நமது காமநோய்க்கு மருந்தாக மாட்டாத பிற பெரிய தெய்வங்கள் பலவற்றையும் ஒருசேர வாழ்த்தி, இவள் பேய்க் கொளீஇயள் எனப்படுதல் - இவள் பேயாற் பற்றப்பட்டாள் என்று கூறுப்படுதல், நோதக்கன்று - வருந்துதற்கு உரியதாம்.

விளக்கம் :—மறி - ஆடு. குரல் - கழுத்திற்கு ஆகுபெயர். தினைப் பிரப்பு - தினையாகிய பலி. இரீஇ - இருக்கச் செய்து; வைத்தென்ற படி. செல்லாறு - நீரோடும் யாறு. கவலை - ஆற்றிடைக்குறை. ஆற்றிடைக்குறையில் தெய்வம் உறையும் என்பதை, "கவின்பெறு துருத்தியும்" (முருகு - உஉக.) என்றும், "நல்யாற்று நடுவும்" (பரி - சா: கூஎ.) என்றும் பிறர் கூறுமாற்றானும் உணர்க. இனி, செல்லாற்றுக் கவலை என்றதற்கு மக்கள் வழங்கும் வழிகள் கவர்க்குமிடத்து என்னினுமாம். தோற்றம் - வேலன்மேல் ஏறித்தோன்றுதல். காமநோய்க்குத் தலைவன் மார்பையன்றி மருந்து பிறிதில்லை என்பது தேற்றமாகலின், 'நோய்க்கு மருந்தாகாத் தெய்வம்' என்றாள். செவிலி முதலியோர் தலைவியின் நோய்க்கு மருந்தாம் என்றே வாழ்த்துகின்றார் ஆகலின், அவர் கருத்தும் நிரம்புமாறில்லை என்றவாறு.

குலமகளிர்க்குத் தெய்வம் கொழுநனே ஆகலின், 'வேற்றுப்பெருந் தெய்வம்' என்றாள். ஈண்டுப் பெருந்தெய்வம் என்றது, முழுமுதற்

கடவுளாகிய முருகன் கொற்றவை முதலிய கடவுளரை என்க. தெய்வம் வாழ்த்தும் வேன்மகன், பல தெய்வங்களையும் அழைத்து வாழ்த்தலின், 'பல உடன் வாழ்த்தி' என்றாள்.

பேய் கொளப்பட்டாள் என்பதே வெறியாடுவார் கருத்தாகலின், அங்ஙனம் கருதுதல் நாணுத்தகவுடைத் தென்பாள், 'நோதக்கன்று,' என்றாள். நோ தக்கன்று - நோகும் தகுதியையுடைத்து.

பாட்டு - உஉச : தலைவி கூற்று

துறை :—'ஆற்று'எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள், 'ஆற்றுவல்' என்றது. அஃதாவது, தலைவன் பிரிந்துறையுங் காலத்தே பெரிதும் வருந்தி மெலிந்த தலைவியின் நிலை கருதிக் கவன்ற தோழிக்குத் தலைவி, 'யான் ஆற்றுவன்; நீ கவலற்க!' என்றது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'என் உடல் பிரிவாற்றுமையாலே மெலிந்து பசப்பூர்ந்திருப்பினும், என் உள்ளம் அவர் கேண்மையில் பற்றுடைத்தாகலின், அஃது அபபசப்புடனே பொருந்தாது; ஆகலின், யான் ஆற்றுவன்; நீ வருந்தேல்'! என்று கூறுகின்றாள்.

உஉச. கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயி லகவும் நாடன் நம்மோடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக காலும் பயப்போல் லாதே.[1]

—கபிலர்.

(இ - ள்) தோழி, கலிமழை கெழீஇய கான்யாற்று இகு கரை - ஆரவாரத்தையுடைய மழை பொருந்திய கான் யாற்றினது தாழ்ந்த கரையிடத்தே, ஒலி நெடும் பீலி துயல்வர இயலி - தழைத்த நெடிய தோகை அசையா நிற்ப நடந்து, ஆடும் மயில் அகவும் நாடன் - கூத்தாடாநின்ற மயில்கள் மேலும் களிப்பாலே அகவுகின்ற நாட்டையுடைய தலைவன், நயந்தனன் நமமொடு கொண்ட கேண்மை - பெரிதும் விரும்பியவனுய் நமமோடே கொண்டுள்ள நட்பு, பயந்தக்காலும் பயப்பு ஒல்லாது - பிரிவாலே என் மேனி பயப்பூர்ந்து ஒளி மழுங்கிய விடத்தும் தான் ஒளிமழுங்குதலைப் பொருந்தாது காண்.

விளக்கம் :—அவர் பிரிவானே என் மேனி வேறுபட்டாலும் உளம் அவர் கேண்மைக்கண் திண்ணிதாகலின், 'யான் ஆற்றுவல், நீ கவலற்க!'

(பாடம்) 1. பசந்தக்காலும் பசப்பொல்லாதே.

என்றவாறு. கலிமழை, இரண்டாவதன் உருபு விரித்துரைக்க. வினைத் தொகையாக்கினுமாம் கெழீஇய - பொருந்திய. கான்யாறு - காட்டாறு. காட்டாற்றின் கரைகள் காலந்தோறும் மழையாலே கரைந்து தாழ்தலின், 'இருகரை' என்றாள்.

மயிலினது ஆட்டத்திற்கு அணிசெய்வது அதன் தோகையேயாகலின், அதனை, 'ஒலி நெடும்பீலி' என்றாள். ஒலித்தல் - தழைத்தல், நீண்டு அடர்வுடைத்தாதல் என்க. பீலி - தோகை. துயல்வருதல் - அசைதல்; மயில் அடியிட்டாடுந்தோறும் பீலி துயல் வரும் என்க.

மழையின் ஆரவாரத்தையுடைய காட்டாற்றின் கரைக்கண் உள்ள மயில், இனி முகில் மழை பொழிதல் உறுதியென எண்ணிக் களித்து ஆடுதலே அன்றி அகவிஞற் போன்று, என் உள்ளம் அவனது கேண்மையை நினையுந்தோறும் களித்து மகிழாநின்றது என்பது குறிப்பு.

பாட்டு - உகூடு : தோழி கூற்று

துறை :—வரையாது பிரிந்தவிடத்து, 'அவர் பிரிந்தது நின்னை வரைந்து கோடல காரணமாகுதல' னெனத் தோழி தலைமகட்குக் கூறியது. அஃதாவது, வரைந்து கோடற்கு இன்றியமையாத பொருளீட்டற்பொருட்டுத் தலைவன் பிரிந்துழி ஆற்றுமைகொண்ட தலைவியை, 'நின்னை மணந்துகொண்டு நின்னோடு எபபொழுதும் உடனுறைதற்பொருட்டன்றே அவன் பிரிந்ததூஉம், அந்நயமையை யெண்ணி நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' எனததோழி வற்புறுதியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'இக்களவொழுக்கத்தின்கண்ணே நின்னிலை இன்னுகாதலை யாளனே தலைவற் குரைக்கின்றேன்; அவன் நாணி, இங்கிலையினின்றும நன்னிலையில் நின்னை வைக்கும நன்மையுடைய நெஞ்சகதோடே பிரிந்தான்; விரைவில் வருகுவரைவன்; நீ வருந்தற்க' என்று கூறுகின்றாள்.

உகூடு. காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதிற் பண்டும்
தாமறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடனறி மாக்கள் போல இடன்விட்
டிதழ்தகூ யவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் தோழி நின்னிலை
யான்றனக் குரைத்தனென் னுகத்
தானு ணினனிஃ தாகா வாறே.

—கருவூர்க்கதப் பின்னை.

(இ - ள்.) தோழி—, காந்தள் அம் கொழு மூகை - காந்தளினது அழகிய கொழுவிய அரும்பு, காவல் செல்லாது வண்டு வாய்திறக்கும் பொழுதில் - தாமே மலருந்துணையும் காத்திருத்தலைச் செய்யாமல் வண்டுகள் அவற்றினைக் கிண்டித் திறக்கும பொழுதில், பண்டும் தாம் அறி செம்மைச் சான்றோர்க் கண்ட கடன் அறி மாக்கள்போல - முன்னரும் தாம் அறிந்துள்ள நடுவுநிலையுடைய பெரியோரைக் கண்ட தமது கடமைகளை அறிந்த நன்மக்களைப் போல, இடன்விட்டு தலை அழிந்த ஏகல் வெற்பன் - அவ்வண்டுகட்கு இடனளித்துத் தம் இசைகளின் கட்டழிந்து மலராநின்ற உயரிய பக்கங்களையுடைய நந்தலைவன், நின்னிலையான் தனக்கு உரைத்தனென் ஆக - களவொழுக்கத்தை நின்கண்ணே நினது இன்னல்நிலையை யானே அவனுக்குவலிந்து கூறினேனாக அதுகேட்டு, தான் இஃது ஆகாவாறு நாணினன் - அவன் இவ்வொழுக்கம் நன்றாகாமையை நினைந்து பெரிதும் நாணமுற்றனன், நன்னர் நெஞ்சத்தன் - இவ்வின்னல்நிலையை விரைவில் மாற்றவேண்டும் என்னும் நல்ல நெஞ்சத்தையுடையன் காண்.

விளக்கம்:—அந்நன்னர் நெஞ்சமுண்மையானே விரைவில் வரைதற்குப் பொருளீட்டச சென்றனன்; நீ ஆற்றவேண்டும் என்பது குறிப்பெசசம்.

காவல் செல்லாது - காத்திராது. காந்தள் அரும்பு தாமே மலராத பொழுதும் வாய் திறக்கும வண்டுகட்கு இடந்தந்து தலையவிழும் என்றது, தலைவன் தானே வரையக் கருதாதலையாம் அவனே வலிந்து வரைவ கடாவியபொழுது அதனை மதிக்காமல் உடம்பட்டு வரைதற்கு முயல்கின்றான் என்னும் குறிப்பிற்று. 'தானே மலரும் பருவத்துக்கு முன் வண்டு மலரைத் திறக்கும்' என்றது, 'களவு வெளிப்பட்டு அலராதற்குமுன் வரைந்துகொள்ளும் எண்ணமுடையான் தலைவன் என்ற குறிப்பினது,' என்பாருமுளர்.

செம்மைச சான்றோர் - நடுவு நிலைமையுடைய பெரியோர். பெரியோரைக் கண்டவழி உவந்து வரவேற்று உபசரித்தல் நல்லோர் கடனாகலின், 'கடனறி மாக்கள்,' என்றார். இவ வுவமை உள்ளுறைக்கு ஆக்கமாக வந்த ஏனையுவமை என்க.

ஏகல் - உயர்ச்சி. நின்னிலை என்றது, 'இக்களவொழுக்கத்தின்கண் நினகருள்ள இன்னல் நிலைமையை,' என்றவாறு எனவே 'தலைவன் நின்னைப் பிரிந்து செல்லத் தானுக எண்ணிலன்; யான் வரைவு கடாயதனாலே சென்றனன்,' என்றாளாயிற்று.

'நீ இன்னலுறுகின்றனை,' எனக் கேட்டவுடன், 'நின் இன்னலுக்குத் தான் ஏதுவாதலை எண்ணி நாணினன்,' என்பாள், 'தான் நாணினன்,' என்றாள். இஃது ஆகாவாறுதற்குத் தான் நாணினன் என ஆக்கம் வருவித்துரைக்க. இங்ஙனம் கூறுது, இஃது ஆகாவாறு தான் நாணினன் என்றதற்கு இக் களவொழுக்கம் மேலும் நீட்டித்து நிகழாதபடி நாணத்தை யடைந்தான் என்பாருமுளர்.

பாட்டு - உசுசு : தலைவி கூற்று

துறை :—வரையாது பிரிந்தவிடத்துத் தோழிக்குக் கிழத்தியுரைத்தது அஃதாவது, வரைந்து கொள்ளாமல் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வருந்திய தலைவி தன் வருத்தத்தைத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர் நமக்கோர் தூதுவிடாராயினும் ஆகுக; தமக்கு இன்னு இரவின்கண் நற்றுணையாய் நின்ற இவ்வேங்கை மரத்திற்கேனும, பறவைகள் வாயிலாய் விடும் தூது மொழியைவிட மறந்தனர் போலும்; வன்கண்ணர்,' என்று புலந்து கூறுகின்றாள்.

உசுசு. நமக்கோன் றுரையா ராயினுந் தமக்கோன்
றின்னு இரவின் இன்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

—நக்கீரனார்.

(இ - ள்.) தோழி, துறத்தல் வல்லியோர் - அன்புடையாரைப் பிரிந்து செலலுதற்குரிய வன்கண்மையுடைய நந்தலைவர், புள் வாய்த்த தூது - பறவைகள் வாயிலாய் விடுகின்ற தூது மொழி, நமக்கு ஒன்று உரையாராயினும் - நம்மைப் பொருளாகக் கருதி நமக்கு ஒன்றைக் கூறி விடாராயினும், தமக்கு ஒன்று இன்னு இரவின் - தமக்குப் பொருந்திய இன்னுமையுடைய இராக்காலங்களிலே, இன் துணை ஆகிய படப்பை வேங்கைக்கு - இனிய துணையாகவிருந்த நம்மனைப்படப்பைக்கண் உள்ள வேங்கை மரத்திற்கேனும, மறந்தனர் கொல்லோ - ஒரு தூதுவிடுதற்கு மறந்துவிட்டனரோ?

விளக்கம்:—நமக்கு ஒன்று உரையாராயினும் என்றது, அவரைப் பிரிந்திருத்தலாற்றுத நம்மியல்பறிந்த தலைவர், நாம் இறந்துபடுவோம் என்பது கருதி நமக்கோர் ஆறுதலேனும் கூறுதொழிந்தார் நம்மை ஓர் பொருளாகக் கருதிக் கூறுராயினும் வேங்கைக்கு மறந்தனர் கொல் என முடிக்க. 'தன்னைப் பிறர் காண்பரோ? தலைவி வாராளோ.' என்ற ஐயங்களாலே நெஞ்சம் அலைப்புண்டற்குக் காரணமான இரவென் பாள், 'இன்னு இர'வென்றாள். அவ் வின்னு இரவின்கண், பிறர் காணு வாறு மறைந்து வதிதற்கு ஏதுவாய்த் தன்னைத் தலைப்பட்டிழி இன்பம் நுகரும் பள்ளியறையாயிருந்து இன்னு வகற்றி இன்பம் நல்கியது வேங்கை என்பாள், 'இன்றுணை வேங்கை,' என்றாள்.

"எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு." (குறள்-கoஎ)

என்னும் அறம்பற்றி, தங்கண் விழுமந்துடைத்த வேங்கை எம்மை இகழ்ந்து மறந்தார்போன்று மறக்கற்பாலதன்று என்பாள், 'மறந்தனர் கொல்லோ!' என்றாள். அன்பிலராய் எம்மை மறந்தார்; அறனில ராய் வேங்கையையும் மறந்தனர் என்று இகழ்ந்தவாறு.

இங்ஙனம் அன்பும் அறனும் ஒரீஇத் துறந்ததற்குரிய வன்கண்மை சாலப் பெரிதென்பாள், 'துறத்தல் வல்லியோர்,' எனப் பெயர்போலக் கூறினாள். வல்லியோர் - வன்மையுடையோர், ஈண்டு வன்மை. அன் பின்மை குறித்து நின்றது.

புள் வாய்த்தூது - பறவை வாயிலாய் விடும் தூது. பறவைகளைத் தூது விடுதல் பாடல் சான்ற புலனெறி வழக்கமாம்.

இரவுக்குறிக்கண் வேங்கைமரத்தின்கீழ் தன்னோடே அளவளா வியதையும் மறந்தனரே என்று வியப்பாள், அந் நிகழ்ச்சிக் கிடனாகிய வேங்கையின் மேலேற்றி இங்ஙனம் கூறினாள் என்க.

பாட்டு - உகூஎ : தலைவன் கூற்று

துறை :— பண்டைக்காலத்தும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின், நாமும் பொருட்குப பிரிதும் என்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செலவழுங்கியது.

அஃதாவது, பண்டு தொட்டு அன்பு மிக்க சான்றோரும் தந்தலைவியரைப் பிரிந்து பொருள்வயிற் பிரிதல் உண்டாகலின், 'யாமும் அவர் நெறிபற்றிப் பொருளீட்டி வருதும்' என்று தன் னைக் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைவன், வாழ்நாளின் சிறு மையும், இளமையின் அருமையும் எடுத்துகாட்டிச் செலவு தவிர்ந்தது.

இதன்கண், தலைவன் தன்நெஞ்சை நோக்கி, 'இவ்வுலக நிலை யாமையை நன்குணர்ந்த சான்றோர், அன்புசான்ற தங்காதலியை நீத்து மிகப் பெருஞ்செல்வம் எய்துவதாயினும் ஆள்வினைமேற் செல்வாரல்லர்; ஆகலின், யாமும அவ்வழிச் செல்லவேண்டா!' என்று அறிவுறுதுகின்றான்.

உகூஎ. இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குடன் இயைவ தாயினுங் கரும்பின்
காலெறி கடிகைக் கண்ணியின் றன்ன
வாலெயி றூறிய வசையில் தீநீர்க்
கோலமை குறுந்தொடிக் குறுமக ளோழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார் நாளும்
உறன்முறை மரபிற் கூற்றத்
தறனில் கோணற் கழிந்திசி னோரே.

—காலெறி கடிகையார்.

(இ - ள்.) நெஞ்சே!, நாளும் உறன்முறை மரபில் கூற்றத்து அறன் இல் கோள் நற்கு அறிந்திசினோர் - ஒவ்வொரு நாளும் நிகழ்தலாகிய முறையினையுடைய வழக்கத்தையுடைய கூற்றுவனது கண்ணோட்டமில்லாத கொலைத்தொழிலை நன்றாக அறிந்தவர்கள், இருங்கண் ஞாலத்து ஈண்டு பயப் பெருவளம் - பெரிய இடத்தையுடைய உலகின்கண்ணே தொக்க பயன் மிக்க வளன் முழுவதும், ஒருங்கு உடன் இயைவதாயினும் - ஒருங்கே ஒருபொழுதிலே தமக்குக் கிடைப்பதாகவிருந்தாலும், கரும்பின் கால் எறி கடிகைக்கண் அயின்றன்ன - கரும்பினது அடிப்பகுதியிலே வெட்டிய துண்டத்தை உண்டாற்போன்ற, வால் எயிறு ஊறிய வசை இல் தீநீர் - வெள்ளிய பல்லிடத்தே ஊறிய குற்றமற்ற இனிய நீரையும், கோல் அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய - திரட்சியமைந்த குறிய வளையலையும் உடைய இளையளாகிய தலைவி நீங்கியிருப்ப, ஆள்வினை மருங்கிற் பிரியார்-மேற் கோடற்குரிய பொருளீட்டற் பொழிலினிமித்தம் தாம் பிரிந்து போதலைச் செய்வாரல்லர்.

விளக்கம்.— அறிந்திசினோர் ஞாலத்தீண்டு வளம் ஒருங்குடன் இயைவதாயினும் குறுமகள் ஒழிய ஆளவினை மருங்கிற் பிரியார் என இயைத்துக் கொள்க. இருங்கண் ஞாலம் முழுதும் திரளும் பயனுடைய வளம் முழுதும் ஒருங்கே கூடியவழியும் காதலின்பத்திற்கு இணையாகா தென்பான், 'இருங்கண் ஞாலத்து ஈண்டு பயப் பெருவளம்,' என விதந்து கூறினன்.

கரும்பின் அடிப்பகுதியே மிகவும் இனிதாதல்பற்றிக் 'கரும்பின் கால் எறி கடிகை' என்றான். கடிகை - துண்டம். காலிடத்தே வெட்டப்பட்ட கடிகை என்க. கடிகைக் கண் - இரண்டாவதன்கண் ஏழனுருபு மயங்கிற்று. வால் எயிறு - தூய எயிறுமாம். வசை-குற்றம். தீநீர் - இனிய நீர்.

> "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயி றூறிய நீர்." (குறள்-ககஉக)

என்னுந் திருக்குறள் ஈண்டு நினைவு கூரற்பாற்று.

கோல் - திரட்சி. குறுந்தொடி - சிறிய வளையல். குறுமகள் என்றது, ஆண்டிளமை யுடையாள் என்பதுபட நின்றது. ஆள்வினை என்றது, ஈண்டுப பொருளீட்டற் பொழிலை என்க. நாடோறும் கூற்றுவனின் கொலைத்தொழில் நிகழ்தல் காட்சியளவையானே காணப்படுதலின், நாளும் உறல்முறை மரபு என்றான். உறன் முறையையுடைய மரபில்லாத கூற்றம் எனினுமாம். என்னை? மூன்தோன்றினரை முன்னர்க் கொல்லலும் பிறரோன்றினரைப் பின்னர்க் கொல்லலுமாகிய மரபின்றிக் கொல்லுதல் அவன் தொழிலாகலான். இளையார் மாதர் அறிஞர் எனச் சிறிதும் கண்ணோட்டமின்றிக் கொல்லலின், 'அறனில் கோள்,' என்றார். அறம் ஈண்டுக் கண்ணோட்டம் என்னும்

பொருட்டாய் நின்றது. நன்கறிந்தோர் என்பது நற்கென வலித்தல் விகாரம் பெற்றது. இசின் - அசை.

இதனால் இளமையதருமையும், நாளது சின்மையும் நினைக்கப்பட்டமை உணர்க.

பாட்டு - உகூஅ : தோழி கூற்று

துறை :—தலைமகன் சிறைப்புறத்தானெனத் தலைமகட்குத் தோழி சொல்லியது. அஃதாவது, வரைந்துகோடற் கருத்தின்றி இரவுக்குறிக்கண் நாளும் வருந் தலைவன், சிறைப்புறத்தே வந்து நின்றமையறிந்த தோழி, அவனை வரைவு கடாவற்பொருட்டு அவன் வரவறியாள் போன்று தலைவிக்குக் கூறுவாளாய், அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "யாம் நந் தலைவர் நம்பால் வருமபோது, 'செல்கின்றீரோ?' எனச் செப்புதலும், பிரியும்பொழுது, 'வருவீரோ?' என வினவுதலும் செய்யும் வன்மையிலேம் ஆயினம்; ஆகலின், அவர் திறத்து யாம வேறு என் செய்யக கடவேம்" என்று கூறுகின்றாள்.

உகூஅ. சேறிரோ எனச் செப்பலு மாற்றும்
வருவி ரோஎன வினவலும் வினவாம்
யாங்குச் செய்வாங்கோல் தோழி பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னுர் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே.

—கருஞர்ச் சேரமான் சாத்தனர்.

(இ - ள்) தோழி—, பாம்பின் பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு - பாம்புகளின் படத்தையுடைய கரிய தலையைத் துணிக்கின்ற இடியேற்றின் முழக்கத்தோடு கூடிய, நடுநாள் என்னுர் - நடியாமம் என்றும் கருதாதவராய், வந்து நெடுமென் பணைத்தோள் அடைந்திசினோர் - நம்பால் வந்து நின் நெடிய மெல்லிய மூங்கில் போன்ற தோள்களை எய்தா நின்றனர், சேறிரோ எனச் செப்பலும் ஆற்றும் - அவர் நம்மைப் பிரிந்து செல்லுங்கால் செல்கின்றீரோ என்று செப்பும் வன்மையும் இல்லோம, வருவீரோ என வினவலுமம வினவாம் - செல்வாரை நீயிர் மீண்டும வருவீரோ என்று வினவுதலையும் செய்யாம்; இங்ஙனமாகலின், யாங்குச் செய்வாம் - யாம் எவ்வாறு செய்யவல்லேம்.

விளக்கம் :—இது களவொழுக்கமாதலின், நம்பால் வந்த தலைவரை மீண்டு போங்கால் போகவேண்டா எனத்தடுத்து ஈண்டு இருத்திக் கொள்ளவும் இயலாமையின், ஏதமிக்க நள்ளிரவிற் செல்வாரைச் செல்வீரோ என வினவித் தடுக்கவும் மாட்டேமாயினேம் என்பாள், 'சேறிரோ எனச் செப்பலும் ஆற்றும்' என்றாள். இனித் தலைவனது பிரிவினை ஆற்றமாட்டாமையானே செல்வாரை வருக என வரவேற்பின், இருள் நெறியில் வருங்கால் உண்டாம் ஏதம் மிகப் பெரிதாம் எனறு அஞ்சுதலானே, 'வருவிரோ' என வினவும் துணிவும் இலமாயினேம்; இங்ஙனமாகலின் இவ்வின்னல் நிலையை மாற்றுதற்கு யாம் என் செய்வது என்று மயங்கியவாறும்.

இதனால், இந்நிலையினின்றும் உய்தற்கு யாம் வரைந்து கோடலே வழியாம் என்று தலைவனுக்குச் சூழ்ச்சி பிறக்கும் என்பது உணர்க.

இருள் நெறியின் ஏதத்திற்கே யாம் அஞ்சா நின்றேம் என்று குறிப்பானுணர்த்துவாள், 'பாம்பின் பையுடை இருந்தலை துமிக்கும் எற்றெறு நடுநாள் என்னீர்' என்றாள். பாம்புகள் இரைதேடி இரவில் ஊர்ந்து கொண்டிருக்கும் வழி என்பதையும் நினைப்பித்தாள், தப்புதற்கியலாத பாமபையும் இடியேற்றையும் கூறும் வாயிலாய்ப் பிற இடையூறுகளையும் கொள்ளவைத்தாள. யாங்குச் செய்வாம் என்பதனால் நின் வருகையால் யாங்கள் கையாறெய்துகின்றேம் என்பதையும் உணர்த்தினாள்.

எற்றெறு நடுநாள் - எற்றேறு கூடிய நடுநாள் என்க. இடிமுழங்கும் நடுநாளிலே ஆறுசெல்லல் கூடாதென்று கருதாராய் என்பாள், 'நடுநாள் என்னீர்' என்றாள்.

பாட்டு - உகூக : தலைவி கூற்று

துறை :—தலைமகன் சிறைப்புறத்தானெனத், தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. அஃதாவது, தலைவன் தலைவியைக் கண்டு அளவளாவுதற்கு உரிய செவ்வி பெறுஞைப் பன்னாளும் வந்து வந்து வறிதே மீண்டவன், ஒரு நாள் வந்து தம் மனையயலே நின்றமை கண்ட தலைவி, இன்று அளவளாதற்கு இடையூறுகள் இல்லை என்பதை அவனுக்குக் குறிபபான் உணர்த்தற் பொருட்டு அவன் வரவறியாதாள் போன்று, தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'இன்று சுறாமீன் எறிந்த புண் ஆறப் பெற்றமையானே, நந்தந்தை மீன் வேட்டம்புக்கனர்; நம்மன்னையும் உப்பை மாறி நெல் கோடற் பொருட்டு, உப்பளத்திற்குச் சென்றுவிட்டாள்; தலைவன் நம்மோடளவளாவுதற்கு இது ஏற்ற செவ்வி என்பதை அவனுக்கு யாரேனும் அறிவுறுத்தின் மிகவும் நன்றும்' என்று கூறுகின்றாள்.

உசுக. சேயாறு சென்று துணைபரி யசாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமற் றில்ல
வயச்சுரு எறிந்த புண்தணிந் தெந்தையும்
நீணிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வேண்ணெல் தரீஇய
உப்புவிலை கழனிச் சென்றனள் அதனுல்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளியள் என்னும் தூதே

—கல்லாடனர்.

(இ - ள்.) தோழி—, எந்தையும் வயச் சுரு எறிந்த புண் தணிந்து - நந்தந்தையும் வலிய சுரு மீனுல் எறியப்பட்ட புண் ஆறப் பெற்று, நீல் நிறப் பெருங்கடல் புக்கனன் - நீலநிற முடைய பெரிய கடலிடத்தே மீன்படுத்தற்பொருட்டுச் சென்று விட்டனன், யாயும் உப்பை மாறி வெண்ணெல் தரீஇய-நம்மன்னையும் உப்பைவிற்று வெளிய நெல்லைக்கொணரும் பொருட்டு, உப்புவிலை கழனிச் சென்றனள் - அவ்வுப்புப் படுகின்ற அளத்திற்குப் போய்விட்டாள், அதனுல் - இங்ஙனமாகலின், பனி இரும் பரப்பிற் சேர்ப்பற்கு - குளிர்ந்த பெரிய நிலப் பரப்பினையுடைய நங்கடற்கரைத்தலைவனுக்கு, இனிவரின் எளியள் என்னும் தூது - இப்பொழுது நீ வரின் தலைவி அளவளாவுதற்கு எளியளாயிருப்பாள் என்னும் தூதுமொழியைக் கூறி, சேய் ஆறு சென்று துணை பரி அசாவாது - நெடிய வழியைக் கடந்து விரைகின்ற புரவிகள் தளர வேண்டாமலே, உசாவுநர்ப்பெறின் - நின் கருத்தென்னும் என வினவுவாரைப் பெற்றால், நன்றுமன் றில்ல - நிகநன்றும; இஃது என் விருப்பம்.

விளக்கம் :—சுரு எறிந்த புண் தணிந்து எந்தையும் கடல்புக்கனன் என்றமையால், நின்னுள் தலைவியின் தந்தை புண்பட்டு வீட்டில் தங்க நேர்ந்தமையே அவள் தலைவனை எதிர்கொள்ளாமைக்கு ஏதுவாம் என்பதும போந்தமையுணர்க. தந்தையைப் பேணும்பொருட்டு இல்லத்திலே தங்கிய தாயும் இன்று வீட்டிலில்லை என்பாள், 'யாயும் உப்புவிலைகழனிக்குப் போயினள்' என்றாள். தந்தை உடனே மீண்டு வருவானல்லன் என்பாள், 'நீணிறப் பெருங்கடல் புக்கனன்' என்றும், தாயும் உடனே மீள்வாளல்லள் என்பாள், 'உப்பைமாறி...தரீஇய சென்றனள்' என்றும் கூறி நுண்ணிதின் உணர்த்தியவாறு காண்க.

தலைவன் சேயனல்லன் நஞ் சிறைப்புறத்தானே என்று தோழிக்கு உணர்த்துவாள், 'சேயாறு சென்று துணைபரி அசாவாது உசாவுநர்ப் பெறின்' என்றாள். என்னை? தூது செல்வார் அங்ஙனம் வருந்தியும் சேறல் உண்டாகலின் என்க. நீயே சென்று உசாவுக என்பது கருத்து.

வயச்சுறு-வலிமிக்கதொரு கடன் மீன் ; மகரமீன் என்றும் கூறுப. ஞது கூறி உசாவுநர்ப் பெறின் என்க. தில்ல - விழைவின்கண் வந்தது. இஂது என் விருப்பம் என்னும் பொருட்டு.

உப்புவிளை கழனி என்றது, அளத்தை. இனி - இப்பொழுது. எளியள் - கண்டு அளவளாவுதற்கு எளியளாயிருப்பாள் என்றவாறு.

சேர்ப்பன்—நெய்தனிலத் தலைவன். பனியிரும்பரப் பென்றது, துன்பத்தாலே நடுங்குதற்குரிய நிலப்பரப்பென ஒரு பொருளும் தோன்ற நின்றது. என்னை? தன்னைக் காணுது தலைவனும் தலைவனைக் காணமாட்டாது தானும் துன்புற்றிருத்தற்கு இடமாகலின் என்க.

நெய்தனிலமாக்கள் உப்பைமாறி நெற்கொண்டுண்பர் என்பதனை,

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோஎனச் சேரிதொறும் நுவலும்."

(அகம் - நகஂ)

என்றும்,

"நெல்லி னேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின்.", (அகம் - கசஂ)

என்றும், பிற சான்றோர் ஒதுமாற்றானுமுணர்க.

பாட்டு - உஎஂ : தலைவன் கூற்று

துறை :—வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்து கூறியது. அஂதாவது, தலைவியைப் பிரிந்து வினை மேற் சென்ற தலைவன், வினைமுற்றிய பின்னர் மீண்டு வந்து தலைவியோடு இன்புற்றிருந்த பொழுது மழை பெய்ததாக ; அம் மழையை நோக்கி உவகையாற் கூறியது.

இதன்கண், தலைவன் மழையை நோக்கி 'பெரு வானே ! நீ மின்னிச் சிதறி முழங்கிப் பெய்து இனி வாழ்வாயாக, யாமோ செய்வினை முடித்த தலைமையுடைய உள்ளத் தோடே எந் தலைவியை எய்திக் குறுந்தாள் நாண்மலர் நாறும் நறுமென் கூந்தலாகிய, பாயலிடத்தேதம்.' என்று உவகையாற் கூறு கின்றான்.

உஎஂ. தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி ஊழிற்
கடிப்பிடு[1] முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெறுவான் யாமே

1. (பாடம்) கடிப்பிகு முரசம்.

செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல மெல்லணை யேமே.

—பாண்டியன் பன்னாடுதந்தான்.

(இ - ள்.) பெருவான் - பெருமையுடைய முகிலே, யாம் செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு - யாமோ மேற் கொண்டு சென்று செய்தற்குரிய வினையைச் செவ்வனே முடித் தமையானே தலைமைத்தனமை பெற்றுச் சிறந்த உளளத் தோடே, இவளின் மேவினமாகி - இவள்வயிற் பொருந்தினே மாகி, குவளைக் குறுந்தாள் நாள்மலர் நாறும் - குவளையினது குறிய தாளையுடைய புதிய மலர்மணங்கமழும், நறு மென் கூந்தல் மெல் அணையேம் - நறிய மெல்லிய கூந்தலாகிய மெத் தென்ற படுக்கையின்கண்ணே கிடப்பேமாயினேம ஆகலின், இனி - இனிமேல் நீ, தாழ் இருள் துமிய மின்னி - ஈண்டுத் தங்கிய இருள் கிழியும்படி மின்னி, தண்ணென வீழ் உறை இனிய சிதறி - குளிரும்படி வீழாநின்ற துளிகளை இனியனவாம்படி வீசி, ஊழில் கடிப்பிடு முரசின் முழங்கி - முறைமையாலே குறுந்தடியால் அடிக்கப்படும் முரசம் முழங்குமாறு போலே இனிதின் முழங்கி, இடித்து இடித்து - இடையிடையே இடித் தலையும செய்து, பெய்து வாழி - மழை பெய்து வாழவாயாக!

விளக்கம்:—தாழிருள் - வினைத்தொகை. துமிய - துணிபட. மின்னுங்கால் இருள் கிழிவது போறலின், 'துமிய' என்றான். தண்ணென் - தண்ணியவாக. இனிய சிதறி - இனியவாம்படி சிதறி என்க. மழை பெய்யுங்கால் காட்சிக் கினிதாதலும், செவிக்கினிதாதலும் பற்றி 'இனிய சிதறி' என்றான். வீழுறை - வினைத்தொகை. உறை - மழைத்துளி. வானின் முழக்கம் முரசமுழக்கம் போன்று கேட் டற்கு இனிதாகலின், 'முரசின் முழங்கி' என்றான். கடிப்பு-குறுந்தடி. முரசம், குறுந்தடியாலே முழக்கப்படுவது ஊழ் - முறை ஈண்டு முழக்கும் முறை என்க இடையிடையே இடித்து என்பது தோன்ற 'இடித்திடித்து' என அடுக்கிக் கூறினான்.

தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்றிருந்தபொழுது பெய் திருப்பையாயின் வினைமுடியாமையானும், தனிமையானும் யாம் பெரிதும் துன்புற்றிருப்பேம்; அங்ஙனம் பெய்யாது, யாம் அணையிடத் தமாகிய இப்பொழுது நீ மின்னுதலும் பெய்தலும் முழங்குதலும் இடித்தலும் எல்லாம் எமக்கு இன்பத்தின் மேலும் இன்பமாக உள்ளன; இங்ஙனம் செவ்வியறிந்து பெய்யும் நீ, இனி நன்கு பெய்து வாழ்க என்று வாழ்த்தியவாறும். வானத்தை வாழ்த்துதல் கடவுள் வாழ்த்து வகையினுள் ஒன்றாதல், "வாழ்த்தப்படும் பொருளாவன - கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன" (தொல். செய் - கo) எனவரும் பேராசிரியர் உரையானுமுணர்க.

இனி, இத்தீஞ்சுவைப் பாடல் மழையின் அழகைக் கேட்போர் உணர்ந்தின்புறுமாறு நன்கு வெளிப்படுத்துதல் உணர்க. இதனைப் பாடிய நல்லிசைப்புலவர் பாண்டியன் பன்னூறு தந்தான் எனப்படுதலின் இவரே நாடுதரற்பொருட்டுத் தம் தலைவியைப் பிரிந்து சென்று வினை முற்றி மீண்டு தலைவியோடு இருந்தபொழுது பெய்த மழையாலே உவகையுற்றுச் சுட்டியொருவர் பெயர் கூறுது அகப்பொருட்டிறையில் இப்பாடலை யாத்தனர் என்று கருதுவது மிகையாகாது. குறுந் தொகைப்பாட்டினுள் தலைசிறந்தவற்றுள் இதுவும் ஒன்று.

பாட்டு - உஎக : தலைவி கூற்று

துறை :—தலைமகற்கு வாயில் நேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன், தலைவியை ஊடல் போக்கி உடம்படுவிக்குமாறு தோழியை இரந்தானுக, அதற்கு உடம்பட்டுவந்து தலைவியைக் கண்டு, 'அவனை ஏற்கவேண்டும்,' எனக் கூறிய தோழிக்குத் தான் உடம்பட்டமை தோன்றத் தலைவி உரைத்தது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் தலைவனோடு கேண்மை கொண்டு பொருந்தியது ஒருநாளேயாம் அவ்வொருநாட் கேண்மையே எனக்கு எந்த நாளும் துன்பம் தருவதொன்றையிற்று', என்று புலந்து கூறுகின்றாள்.

உஎக. அருவி யன்ன பருவுறை சிதறி
யாறுநிறை பகரு நாடனைத் தேறி
உற்றது மன்னு மொருநாள் மற்றது
தவப்பன் னுள்தோள் மயங்கி
வௌவும் பண்பின் நோயா கின்றே.

—அழிசி நச்சாத்தனர்

(இ - ள்.) தோழி—, அருவி அன்ன பருவுறை சிதறி மலையருவி போன்ற பரிய துளிகளைச் சிதறி, யாறு நிறை பகரும் நாடனைத் தேறி - யாறுகள் தம் வெள்ளத்தை ஊர்களோறும் கொடுத்தற்குக் காரணமான நாட்டையுடைய தலைவனை நல்லன் எனத் தெளிந்து, உற்றது ஒருநாள் - அவனோடு கேண்மை கொண்டது ஒருநாளேயாகும், மற்றது - அவ்வொருநாட் கேண்மை கொண்ட செயல், தவப்பல் நாள் தோள் மயங்கி வௌவும் பண்பின் நோயாகின்று - சாலப் பலவாகிய நாட்கள் எல்லாம் நந்தோளோடே கலந்து நமது நலத்தையெல்லாம் கவர்ந்து கொள்ளுமொரு தன்மையையுடைய நோயாக விளைந்தது காண். யாம் என்செய்கேம்!

விளக்கம் :—" நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு" (குறள்-உகக) என்ற அறம் பற்றியேனும் யாம் வாயில் நேர்கின்றேம் என்றவாறு.

பருவுறை - பரியதுளி; அருவி வீழுங்கால் அஃதெறியுந் துளி போன்ற பரிய துளி எனக்கோடல் பொருந்தும். யாறு: எழுவாய், நிறை: செயப்படு பொருள், பகரும், பயனிலை. யாறு தனது நிறையைக் கொடுக்கும் என்க. நிறை - வெள்ளம். யாறு நிறையாலே ஆரவாரிக்கும் என்பாருமுளர். யாறு வெள்ளத்தை பகரும் என்றது, தலைவன் தன்னலத்தைப் பரத்தையர்க்கு ஈகின்றவன் என்னும் குறிப்புடையது. நாடனைத் தேறி என்றது, நாடன் கொடியன் ஆதலை அறியாது, நல்லன் எனத் தெளிந்து என்று வருந்தியவாறு. எனவே, நாடாது நட்டுக் கேடுற்றேன் என்றிரங்கியவாறு. தவ: மிகுதி குறித்த உரிச்சொல்

தலைவன் பலநாளாக இங்ஙனம் கொடுமை செய் தொழுகலின், என் தோள்கள் நோயாற் பற்றப்பட்டு மெலிந்தன என்பாள், 'பன்னாள் தோள் மயங்கி வௌவும் நோய்' என்றாள். வௌவுதல் - நலத்தைக் கவர்ந்து கொள்ளல். பண்பின் நோய் - தன்மையையுடைய நோய்; நற்குணமற்ற நோய் எனினுமாம்.

'நாடனை உற்றது நோய் ஆயிற்று இனி என் செய்தும்!' எனத் தான் ஏற்றுக்கொண்டமையைக் குறிப்பானுணர்த்தியபடியாம். மன், உம் இரண்டும், அசைகள். "கண்டது மன்னும் ஒருநாள்" (குறள் - கசசசு.) என்புழிப் போல.

பாட்டு - உஎஉ : தலைவன் கூற்று

துணிறை:—கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது, தன் செயல் தகாதெனத் தன்னை இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவன் தலைவியின் அருமையைக் கூறியது.

இதன்கண், தலைவன் பாங்கனை நோக்கிக், 'கலையினது மார்பிலே அழுத்திய அம்பைப் பறித்த பொழுது, அதனை ஒப்பான சிவந்த கண்களையுடைய கொடிச்சியின் தோள்களை இன்னும் ஒருகால் யான் தழுவப் பெறுவேனே?' என்று கூறுகின்றான்.

உஎஉ. தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்கண்
ஈறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

—ஒருசிறைப் பெரியனார்.

(இ - ள்) மாண்ட வில்லுடை வீரியர் - மாட்சிமையுடைய வில்லினையும் சீழ்க்கையினையும் உடையோராய், கல் இடுபு எடுத்த நனந்தலைக் கானத்து - கற்களை வீசி எழுப்பிய அகன்ற இடத்தையுடைய காட்டிடத்தே, இனந்தலைப் பிரிந்த புன்கண் மடமான் நேர்பட - தனது கூட்டத்தினின்றும் பிரிந்த துன்பத்தையுடைய மடப்பம் பொருந்திய பெண்மான் நேரே இருப்ப, தன்னையர் - தன் தமையன்மார், சிலைமாண் கடுவிசைக் கலிமுறத்து அழுத்திக் குருதியொடு பறித்த செங்கோல் வாளி - ஆரவாரித்தல் மாட்சிமைப்பட்ட கடிய வேகத்தையுடைய ஆண்மானினது மார்பிலே குத்திப் பறிக்கப்பட்ட சிவந்த திரட்சியையுடைய அம்புகள், மாறுகொண்டன்ன உண்கண் - ஒன்றை யொன்று மாறுபட்டாற் போன்ற மையுண்ட கண்களையும், நாறு இருங் கூந்தல் - மணங் கமழ்கின்ற கரிய கூந்தலையும் உடைய, கொடிச்சி தோள் தீண்டலும் இயைவது கொல்லோ - தலைவியின் தோள்களை மீண்டும் தழுவுதல் என்பாற் பொருந்துவதோ?

விளக்கம்:—வில்லிற்குரிய நல்லிலக்கணமமைந்த வில் என்பான் 'மாண்டவில்' என்றான். வீரியர் - உதட்டைமடித்து எழுப்புவதோர் ஒலி; சீழ்க்கை; இக்காலத்தார் சீட்டி என்ப சீழ்க்கையடித்துக் கொண்டு கற்களை எறிந்து அலைத்து எழுப்பலானே மடமான் இனம் பிரிந்ததாயிற றென்க. மடமான் நேரே மாளும்படி எனினுமாம். இது தலைவியின் தன்னையரின் கொடுமைகூறி அவளை எய்த வியலாமைக்கு ஏது, குறிப்பான் உணர்த்தியவாறு. புன்கண் - துன்பம். இனந்தலைப் பிரிந்தமையால் உண்டான துன்பம் என்க. தன்னையர் - தன் தமையன்மார். சிலை - ஆரவாரம். அஃதாவது, வில்லினின்று எழுங்கால் சிவவென்றொலித்தல். கடுவிசை வாளி, அழுத்திப் பறித்த வாளி, செங்கோல் வாளி எனத் தனித்தனி வாளிக்கே அடையாக்குக. இவ்வடை மொழிகளால் அக்கண்கள் தன் நெஞ்சின்கண் விரைந்து அழுந்தித் துயர் செய்தமை கொள்ளவைத்தான் என்க. நிறம் - உயிர் நிலையுமாம். உண்கண் அவளைக் கண்டுழித் தன்னை நோய் செய்தமை நினைந்தும், பின்னர் அவளோடு கூடுங்கால் அவளது கூந்தலே பாயலாகக் கிடந்தமை கருதியும், கண்ணின் கொடுமையையும் கூந்தலின் நன்மையையும் எடுத்தோதினான் என்க.

கொடிச்சி தோள் பெறற் கரியது, அதுபெறமாட்டாது வருந்தும் என்னை இடித்துரைக்கும் நீ அறிவிலி என, நண்பனைக் கடிந்தவாறெனக.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இசசெய்யுளை "கழறிய பாங்கற்குக் கூறுந்தலைவன், இவனுன், இக்குறை முடியாது; நெருநல் இடந்தலைப் பாட்டில் கூடியாங்குக கூடுவல்; அது கூடுங்கால் என்று கூறுவான், அற்றை ஞான்று மெய்தொட்டுப் பயின்றதே கூறியது" (தொல்-களவு கக-உரை.) என்பர்.

பாட்டு - உளகூ : தோழி கூற்று

துறை :—பிரிவரெனக கவன்ற தலைமகளைத் தோழி வற் புறுத்தியது. அஃதாவது, 'ஒருகால் தலைவன் நம்மைப் பிரிந்து

செல்வானே?' என ஐயுற்றுக் கலங்கிய தலைவிக்கு, 'அவன் அங்ஙனம பிரியான்,' எனத் தெளித்து ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி "ஒண்ணுதலோய்! 'அவன் பிரிவன்' என்று நீகவல்வாயாயின், யான் உணர்ந்துள தொன்றனைக் கூறக்கேள்; உயரிய மலையுச்சியிற் றூங்கும் தேனிறலைக் கொள்ளக் கருதிப் பழைதாகிய கண்ணேணியில் ஏறி, முழுதும் ஏறுதே இறங்கிய மடவோன் போல, இவ்வுலகம் இன்று ஏமாந்துளது! நாம் உயிரோடிருக்கும் பொருட்டுத் தலைவன் பிரிவானல்லன்; நீ இதனைத் தெளிந்து கவலாதிரு," என்று கூறுகின்றாள்.

உளகூ. அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்
பெருங்காட் டுளரும் அசைவளி போலத்
தண்ணிய கமழும் ஒண்ணுத லோயே
நோந்தனை யாயிற் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
ஏமாந் தன்றிவ் வுலகம்
நாமுளே மாகப் பிரியலன் தெளிமே.

—சிறைக்குடி யாந்தையார்.

(இ - ள்.) அல்குறு பொழுதில் தாது முகை தயங்க- இரவின்கண் தாதையுடைய முகைகள் மலர்ந்து திகழும்படி, பெருங்காட்டு உளரும் அசைவளி போல - பெரிய காட்டை வருடி இயங்குகின்ற காற்றைப் போன்று, தண்ணிய கமழும் ஒண்ணுதலோயே - குளிர்ந்தனவாகிய நறுமணங்கமழாநின்ற ஒள்ளிய நுதலையுடைய தோழியே!, நொந்தனையாயின் கண்டது மொழிவல் - நீ தலைவன் பிரிவான் என்று கண்டு வருந்துவாயாயின் நான் ஆராய்ந்து கண்டதனைக் கூறுவன் கேட்பாயாக, பெருந்தேன் கண்படு வரையின் - பெரிய தேனிறல் தூங்குகின்ற மலையுச்சியின்கண் ஏறக்கருதி, முது மால்பு அறியாது ஏறிய மடவோன் போல - ஏறுதற்குரிய கண்ணேணி பழைதாதலை அறியாது ஏறிய அறிவில்லாதானைப் போன்று, இவ்வுலகம் ஏமாந்தன்று-இந்த வுலகம் இன்று ஏமாந்துளதுகாண், நாம் உளமாகப் பிரியலன் தெளிமே - யாம் உயிரோடிருத்தற்பொருட்டு நந்தலைவன் செலவழுங்கினன்; இவ்வுண்மையை நீயும் உணர்ந்து கொள்க.

விளக்கம் :—அல்கு-இராக்காலம். முகை-அரும்பு. முகை தயங்க வென்றது, மலர்ந்து திகழ என்றவாறு. இரவில் காற்று வருடலாதே

முகைகள் மலர்ந்து தயங்கின என்க. இது வளி மணமூடைத்தாதற்குக் குறிப்பேதுவாய் நின்றமையுணர்க. காட்டின்கண் முகைதயங்க உளரும் வளி, அசைவளி என்று தனித்தனிக் கூட்டுக. அசைவளி என்றது, மெல்லென இயங்கும் தென்றலை. இதனை "மந்தமாருதம்" என வடவர் கூறலும் உணர்க. காட்டின்கண் பல்வேறு மலர்களையும் அளவிவரும் காற்று, அம்மலரின் பல்வேறு மணமும் விரவிக் கமழுமாறு போன்று, பல்வேறு மணமும் கமழும் நுதல் என்றவாறு. இது தலைவனைக் உடனுறையின்பம் பெற்றிருத்தலைக் கருதிக் கூறியதென்க. வெச் சென்ற மணமும் உண்மையின், 'தண்ணிய கமழும்' என்றாள். தண் ணிய - குளிர்ச்சியுடையன.

தலைவனது ஒழுகலாற்றினை ஆராய்ந்து, இங்ஙனம் ஒழுகுகின்றா னாகலின், இவன் பிரிவன் போலும் என்று கருதி, 'நீ வருந்துவாயாஞல், அவன் செலவமுங்கினான்' என்று யான் அறிந்துள்ளேன்; அதனைக் கூறுவன் என்பாள், 'நொந்தனையாயிற் கண்டது மொழிவல்' என்றாள்.

வரை என்றது, உச்சியை. உச்சியில் தூங்கும் தேனிறாலைக் கொள்ளக்கருதித் தான் ஏறிச் செல்லும் கண்ணேணி பழைதாதலை அறியாது ஏறி, அது முரியும் என்று கண்டு மீண்டும் இறங்கிய அறிவிலி போல, நந்தலைவனும் நம்மைப் பிரிந்து பொருளீட்டச செல்வான் கருதி அதற்காவன செய்தவன், அவன் பிரிந்தவுடன்யாம் இறந்துபடுவேம் என்பதையும் குறிப்பான் உணர்ந்து, நாம் உயிருடன் வாழும் பொருட் டுச செலவமுங்கினான் என வுவமையை நுண்ணிதின் விரித்தோதுக. உலகம் என்றது, ஈண்டுத்தலைவனை. நாமுளமாக என்றது, நாம் உயிர் வாழும் பொருட்டு என்றவாறு. இங்ஙனம் கூற அறியார், நாம் உயி ரோடிருக்கும் துணையும் பிரியான் எனப் பொருட்சிறப்பின்றிக் கூறி னருமுளர். தான் பிரிந்துழி யாம் உயிர்வாழேம் என அவன் தெளிந்து செலவமுங்கினான் ஆகலின், இனிப் பிரியக் கருதான் என்பது ஒருதலை என்பாள் 'பிரியான் தெளி' என்றாள். முதுமால்பு - பழைதான கண்ணேணி மலையேறுவோர் நெடிய மூங்கிலின் கணுக்களைப் படி போல வைத்து ஏறுதற் கியற்றியதொரு ஒற்றைமூங்கில் ஏணியை மால்பு என்ப. இதனை,

> "கலைகை யற்ற காண்பி னெடுவரை
> நிலைபெய் திட்ட மால்பு நெறியாகப்
> பெரும்பயன் தொகுத்த தேன்கொள் கொள்ளை." (நகநி-எ.)

எனவரும் மலைபடு கடாத்தானும் உணர்க.

பாட்டு - உசை : தலைவன் கூற்று

துறை :—பொருள் வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத் தது அஃதாவது, பொருளீட்டற்குத் தூண்டிய நெஞ்சிற்கு உடம்பட்டுப் பிரியுங்கால் வருந்தாதேக உபாயம் கண்டு தலைவன் அந்நெஞ்சிற்குணர்த்தியது.

இதன்கண், தலைவன் தன்நெஞ்சை நோக்கி, 'நெஞ்சமே! யாம் செல்லக்கருதிய இன்னுக் கானமும், பொன்னெடு மணி

மிடை யல்குல் மடந்தை அணிமுலை யாகம் உள்கினம் செலின் இனியவாம். யாம் பொருள்வயிற் பிரிவோமாக,' என்றுணர்த்து கின்றான்.

உஎச. புறவுப் புறத்தன்ன புன்கா லுகாஅய்க்
காசினை யன்ன நளிகனி யுதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கோடிவர்பு
வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்
நீர்நசை வேட்கையி னார்மென்று தணியும்
இன்னைக் கானமும் இனிய போன்னெடு
மணிமிடை யல்குல் மடந்தை
அணிமுலை யாக முள்கினஞ் செலினே.

—உருத்திரஞர்.

(இ - ள்) நெஞ்சமே!, பொன்னெடு மணி மிடை அல்குல் மடந்தை - பொன்னும் மணியாலும் இயற்றப்பட்ட அணி கலன்களையுடைய அல்குலையுடைய நந்தலிலியினது, அணி முலை ஆகம் உள்கினம் செலின் - அழகிய முலைகளையுடைய மார் பினை நினைந்தேமாய் யாம் செல்வோமெனின், புறவுப் புறத்து அன்ன புன்கால் உகாஅய் - புறவினது முதுகை ஒத்த புல்லிய அடியையுடைய உகாய் மரத்தினது, காசினை அன்ன நளிகனி உதிர - மணியினை ஒத்த செறிந்த கனிகள் உதிரும்படி, விடுகணை வில்லொடு பற்றிக் கோடு இவர்பு - எய்தற்குரிய அம்புகளை வில்லோடே பிடித்துக் கிளையின்கண்ணே ஏறி நின்று, வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர் - ஆறுசெல்வோர் உளரோ என்று ஆராய்கின்ற வன்கண்மையுடைய ஆறலைகள்வர், நீர் நசை வேட் கையின் நார் மென்று தணியும் - தமக்குண்டாகிய நீரை விரும் பும் விருப்பத்தாலே அம்மரத்தினது நாரை மென்று அவ் வேட் கையைத் தணித்துக் கொள்ளற்குக் காரணமான, இன்னைக் கானமும் இனிய - துன்பமுடைய காடும் நமக்கு இனியவே யாகும்.

விளக்கம்:—புறவு-புறு, குறியதன் கீழ் 'ஆ'க்குறுகி உகர மேற்றது. புறு பாலைக்கருப் பொருளாதல் பற்றி அதனையே உவமை கூறினான். புறம் - முதுகு. உகாய் மரத்தின் அடிப்பகுதிக்குப் புறவின் முதுகு உவமை என்க. உகாய்-ஒருவகை மரம்: இதன் கனி நீலமணி போன்றி ருக்கும் என்பதனை,

"மணிக்கா சன்ன மானிற விருங்கனி
உகாஅய் மென்சினை உதிர்வன கழியும்." (அகம்: உகக.)

என வரும் நெடுந்தொகையானும் உணர்க.

காசினை அன்ன என்பதன்கண் ஐகாரம் அசைநிலை. வன்கண் ஆடவர் கணையும் வில்லுங்கொண்டு உகாய்மரத்தின் கோடுபற்றி ஏறுங் கால், அதன்கட் செறிந்த கனியுதிரும் என்க. "கனி உதிரும்படி அம்பைவிடுவர்" என வேண்டாத விளக்கங் கூறினருமுளர். வருநர்-ஆறு செல்வோர். ஆறுசெல்வோர் வருவாருளரோ என்று ஆராயும் வன்கண் ஆடவர் என்க. வன்கண் ஆடவர் என்றது, ஆறலை கள்வரை.

அங்ஙனம் ஆராயும் கள்வர், நீர்வேட்டுழி அக்காட்டின்கண்யாண்டும் நீரின்மையின் மராஅ மெல்லை மென்று அவவேட்கை தணிவர் என்றது, பாலையின் கொடுமை கூறியவாறு. இதனால் நீரின்மையும் ஆறலைகள்வர் உண்மையும் ஒருசேர உணர்த்திய நுணுக்கமுணர்க.

உடல் உள்ளத்தின் வயத்தது என்பது பற்றித் தலைவியை எண்ணுங் கால் உளத்தே இன்பந்தோன்றலின், புறத்தேயுள்ள இன்னுமை தோன்றாது மறையும் என்பான், 'உள்கினஞ் செலின் இன்னுக்கானமும் இனிய' என்றான். என்னை? இன்பதுன்பங்கட்கு நெஞ்சமே காரண மாகலின் என்க.

யாம் தலைவியைப் பிரிந்த வழியும் அவளே உள்ளுமுபாயத்தானே ஆற்றவேமாகலின் இனிப் பொருள் வயிற்செல்வாம் எனத் தலைவன் தனக்குள் தேறியது இஃதென்க.

பாட்டு - உஎநு : தோழி கூற்று

துறை :—பருவ வரவின்கண் வரவு நிமித்தம் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது; அஃதாவது, 'தலைவன் மீண்டு வருவேன்' எனக் கூறிச் சென்ற பருவம் வந்ததாக, அப்பொழுது தலைவனது வருகையை உணர்த்தும் நன்னிமித்தம தோன்றத் தோழி தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'ஆண்டோர் மணி ஒலி கேட்கின்றது; இன்றே தலைவர் வருவதாகக குறித்த நாளாகலின், அம்மணி ஒலி ஊர் நோக்கி வரும் ஆனிரைக்கண் நல்லானுக்குப் பூட்டப்பட்ட மணியின் ஒலியோ? அல்லது, நந்தலைவர் ஊர்ந்து வரும் தேர்பூண்ட மணியொலியோ? அறி கிலேன்; யாம் சென்று அக்கல்லின் உச்சியிலேறி நின்று பார்த்து வருகம் வருக,' எனவு அழைக்கின்றாள்.

உஎநு. முல்லை யூர்ந்த கல்லய ரேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை யினத்துப்
புல்லார் நல்லான் பூண்மணி கொல்லோ
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற

ஈர்மணற் காட்டாறு வழூஉம்
தேர்மணி கொல்லாண் டியம்பிய வுளவே.

—ஒக்கூர் மாசாத்தியார்.

(இ - ள்.) தோழி—, ஆண்டு இயம்பிய உள - அங்கே ஒலிப்பனவாக உள்ள மணிகள், எல்லார்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப் புல் ஆர் நல்லான் பூண்மணி கொல் - மாலைப்பொழுதின்கண் ஊர்புகுதும் காளையையுடைய ஆனிரைக்கண் உள்ள புல்லை உண்ட நல்ல ஆன்கள் கழுத்திற்பூட்டப்பட்ட மணிகளோ அல்லது, செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு - தாம் மேற்கொண்டு சென்று செய்த வினையை முடித்தமையாலே உண்டான தலைமை பொருந்திய நெஞ்சத்தோடே, வல்வில் இளைஞர் பக்கம் போற்ற - வலிய வில்லையுடைய மறவர்கள் அருகே பாதுகாவல் செய்ய, ஈர்மணல் காட்டாற்று வரும் - ஈரிய மணலையுடைய காட்டுவழியிலே வாராநின்ற, தேர்மணி கொல் - தேரிலே கட்டப்பட்ட மணிகளோ, இவையிற்றுள் யாவை என, முல்லை ஊர்ந்த கல் உயர் ஏறிக் கண்டனம் வருகம் சென்மோ - முல்லைக் கொடிபடர்ந்த கல்லின் உச்சியிலே ஏறிக்கண்டு வருவேம்; வருவாயாக

விளக்கம்:—எல் - பகல்; ஈண்டு மாலைப் பொழுதினைக் குறித்து நின்றது. எல் - இரவுமாம், இப்பொருட்கு இரவுவருதல் குறித்து ஊர் சேர்தரும் என்க. ஏறு - காளை. இனத்த - திரட்சியை உடையன; என்றது, நிரையை. படுபுல்லார்ந்து பாற்பயன் தரும் ஆனிரை, 'புல் ஆர் நல்லான்' என்றாள்.

பூண்மணி: வினைத்தொகை. கொல் - வினாவின்கண் வந்தது. செய்வினை: வினைத்தொகை. செம்மல் உள்ளம் - தலைமைத்தனமை பெற்ற நெஞ்சம். அது வினைமுடித்தமையால் உண்டாவதாகலான், 'செய்வினைமுடித்த செம்மல் உள்ளம்' என்றாள். முடித்தமையாலுண்டாய செம்மல் என்க. ஒற்றுமை கருதித்தலைவன் உள்ளத்தைத் தேர்க் கேற்றி யுரைத்தாள். வல்வில் இளைஞர் என்றமையால் போர்மேற் சென்றோன் என்பது பெற்றாம் வல்வில் இளைஞர் என்றது, வென்று வருகின்ற மறவர் என்பது தோன்ற நின்றது.

ஈர்மணல் என்றது, கார்ப்பருவத்தொடக்கம் என்பதைக் குறிப் பாலுணர்த்திற்று. காட்டாறு - காட்டுவழி.

ஊர்ந்த - படர்ந்த. செய்மைக்கண் வருவதைக் காணற்பொருட்டு கல்லுயா ஏறி என்றாள். உயர் - உச்சி கண்டனம் - முற்றெச்சம். கண்டு வருகம் என்க. மோ: முன்னிலை அசை.

பாட்டு - உஎசு : தலைவன் கூற்று

துறை:—தோழிக்குக் குறைமறுமல் தலைமகன் கூறியது. அஃதாவது, தோழியின்பால் தலைவியைக்காணும் பொருட்டுக்

குறையிரந்த தலைவன், அவள் அதனை மறுத்துரையாது ஏற்றுக் கொள்ளும் வகை சூழ்ந்து சொல்லியது.

இதன்கண், தன்னைச் சேட்படுத்திய தோழி கேட்ப முன்னிலைப் புறமொழியாகத் தலைவன், 'இனி, யான் மடலேறிச் சென்று சான்றோர் அறியத் தலைவியால் யான் உற்றதை அறிவிப்பன்; அப்பொழுது அவட்குக் காவலாக அமைந்த அறியாமையுடைய இவ்வூர், யாங்காவதாம்! இவ் வாரவார மூடைய ஊர் இரங்கத்தக்க தொன்றாயிருந்தது,' என்று கூறுகின்றான்.

உஎசு. பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தோய்யில காப்போர் அறிதலும் அறியார்
முறையுடை யரசன் செங்கோல் அவையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்கல் ஊரே.

—கூடலூர்க் கோற்றனார்.

(இ - ள்.) பணைத் தோள் குறுமகள் பாவை தைஇயும் - மூங்கிலை ஒத்த தோளையுடைய தலைவியினது பாவையைப் பண்ணிக் கொடுத்தும், பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும் - அதனைப் பண்ணற் பொருட்டுப் பஞ்சாய்க் கோரை வளர்ந்த நீர்நிலைகளைச் சுற்றித்திரிந்தும, உருத்து எழு வனமுலை ஒளிபெற எழுதிய தோய்யில் - சினந்து வளராநின்ற அழகிய முலைமேலும மிறம் பெறும்படி யான் எழுதிய தோய்யிலை, காப்போர் அறிதலும் அறியார் - அவளைப் பாதுகாத்து நிற்போர் அறிதலும் செய்யார், முறையுடை அரசன் செங்கோல் அவையத்து - நீதியை உடைய மன்னனது செங்கோன்மையையுடைய அறங்கூறவையத்தின்கண் சென்று, யான் தன் கடவின் - யான் அதனலீவியைக் கேட்குங் கால், இவ் அழுங்கல் ஊர் பெரிதும் பேதைமன்ற யாங்காவது அளிது - இவ்வாரவாரத்தையுடைய ஊர் பெரிதும் பேதைமையுடைத்தாயிருந்தது; தேற்றமாக அது எவ்வாறுவது ஆதலின் இரங்கத்தக்கது.

விளக்கம்:—பணை - மூங்கில்; பணைத்தோள் - பருத்ததோள் எனினுமாம். குறுமகள் என்றது, இளையள் என்பதுபடநின்றது. தைஇ - பண்ணி, தலைவி விளையாடற் பொருட்டுப் பாவை செய்து கொடுத்தும் என்றபடி. பஞ்சாய் - ஒருவகைக் கோரை. பஞ்சாய்பறித்தற்கு அவள்

பொருட்டு, நீர்நிலைகளைச் சூழ்ந்தும் என்றவாறு. உருத்தெழு என் பதற்கு - வடிவமுற்று எழுகின்ற எனினுமாம். வனமுலை - அழகிய முலை. ஒளி - நிறம். வனமுலை மேலும் ஒளிபெறும்படி என்க. தொய் யில் - மகளிர்முலையில் எழுதப்படும் ஓவியம்.

இங்ஙனமெல்லாம் அவளோடாடியதை நீ அறிந்திலை என்று தோழிக்குக் கூறுவான் முன்னிலைப் புறமொழியாகக் காப்போர் அறிதலும் அறியார் என்றான். காப்போர் என்றது, தோழியை. மட லேறுவோன், அவையத்திலேறிச் சான்றோரை விளித்து இன்னள் என்னைச் செய்தனள் இவையெனக் கூறி, அவளை எனக்குத் தம்மின் என்பன் ஆகலின் 'யான் தற் கடலின்' என்றான். தன் என்றது, தலைவியை. யாங்காவது என்றது, அதனால் வரும் பழியை எங்ஙனம் தாங்கவியலும் என்றவாறு.

இங்ஙனம் மடலேறுமலை தலைவியை என்னோடு கூட்டுதலை நலமாம். இஃதறியாமையின் நீ பேதையாயினை என்பான், 'இவ்வழுங் கலூர் பேதைமன்ற' என்றான். மன்ற, தேற்றப்பொருளது. அழுங்கல் - ஆரவாரம். ஓ., தான், ஏ, அசைகளாம்.

இதனைக் கேட்ட தோழி பழிக்கஞ்சி அவன் குறைமுடிக்க முன் வருதல் இதன் பயனும் என்க.

நம்மூர் அரசன் முறையுடையன்; செங்கோலன்; ஆகலின், யான் மடலேறியவழித் தலைவியைப் பெறுதல் ஒருதலை என்பான், முறை யுடையரசன் செங்கோல் அவையம் என, அறங்கூறவையத்தைப் புகழ்ந் தான். அறங்கூறவையத்தார் எனக்கு அவளை அளிப்பர். நீ குறை மறுத்ததற்கு யான் கவலேன காண் என்பது குறிப்பு.

பாட்டு - உஎஎ : தோழி கூற்று

துறை :—தலைமகன் பிரிந்தவழி அவன் குறித்த பருவவரவு எப்பொழுது வருமெனத் தோழி அறிவரைக் கண்டு வினையது. அஃதாவது, தலைமகன பிரிந்து செலலுங்கால், 'யான் வாடைக் காற்று வரும் பருவத்தொடக்கத்தே மீண்டு வருவன்' என்று குறித்துச் சென்றனனத தோழி 'அப்பருவம் எப்பொழுது வரும்' என்று அறிவனைக் கண்டு வினவியது.

இதன்கண், தோழி, அறிவனை நோக்கிப் 'பெரியீர்! குற்றமற்ற தெருவின்கண்ணே நாய் இல்லாத முன்றிலில், செந்நெல்லாலாகிய சோற்றை வெண்ணெயோடே ஓரில்லத்தே பிச்சையாகப் பெற்றுச் சேமச் செப்பில் தண்ணீரும் பெற்று மகிழ்வீராக! நீயிர், எப்பொழுது கடைப்பெயல் வாடைவரும் எனறு எமக்குக் கூறுமின்; அஃதெற்றுக்கெனின், அப்பொழுது தான் எந்தலைவர் எம்பால் மீண்டுவருங்காலம் ஆகலான்,' என்று கூறுகின்றாள்.

உஎஎ. ஆசில் தெருவில் நாயில் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்ணை வெள்ளிழுது

ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே.

—ஓரிற் பிச்சையார்.

(இ - ள்.) அறிவ!, மின் இடை நடுங்கும் கடைப் பெயல் வாடை - மின்னல் போன்ற இடையையுடைய தலைவி நடுங்குதற்குக் காரணமான இறுகியிற் பெய்யும் மழைக்குப் பின்னர்த் தாய் வரும் வாடையையுடைய காலம், எக்கால வருவது என்றி - எப்பொழுதுவரும் என்று கூறுவையோ, அக்கால் வருவர் எங் காதலோர் - அப்பொழுது எங்காதலரும் வருவர்; ஆதலான் அதனை எமக்கு உணாத்துவாயாக, நீ ஆசில் தெருவில் நாய் இல்லியன் கடை செங்நெல் அமலை வெண்மை வெள் இழுது ஓர் இல் பிச்சை ஆர மாந்தி - நீ குற்றமற்ற தெருவிடத்தே நாய் இல்லாத அகன்ற முன்றிலின் கண சிவந்த நெல்லாணிய சோற்றுக் கிரளும் வெள்ளிய வெண்ணெயும ஆகியவற்றை ஓரில்லிலேயே பெற்ற பிச்சையினை வயிறு நிரம்பவுண்டு, அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர் - அற்சிரக்காலத்தே விரும்பத்தக்கதாகிய வெப்பத்தையுடைய நீரை, சேமச்செப்பில் பெறீஇயர் - நீர் சேமித்து வைத்தற்குரிய செப்பின்கண்ணே பெறுவாயாக.

விளக்கம் :—நீ தெருவில் முன்றிலில் ஓரில்லிலேயே அமலையும் நெய்யும் பிசையாகப் பெற்று ஆரமாந்திச செப்பில் நீரும் பெறுக, என்னுந்துணையும் தோழி அறிவனே வாழ்த்தியதென்க. அறிவர் என்போர் துறவுள்ளமும் எதிர்கால அறிவும் உடைய மேலோர். அவர் இவ்வுலகத்தே வேண்டுவன சோறும் நீருமே ஆகலின், அவற்றை நன்கு பெறுக என்றது, வாழ்த்தாயிற்று.

இச் செய்யுளிலே கூறப்பட்ட அறிவர், பண்டைக்காலத்தே தமிழ் நாட்டின்கண் உலகத்தை நீத்து இறைவனுகிய பொருள் ஒன்றனையே பற்றி நின்று வீடுபெறும் சான்றோர் என்பதுணர்க. இவர்கள் மூக்காலமும் உணரும் தன்மையையுடையோராதலை,

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்" (தொல். புறத். உ0)

எனவரும் தொல்காப்பியத்தானும் அறிக. இவ்வறிவர் இல்லறத்தாருள்ளும் கொல்லாமை முதலிய அறங்களைக் கடைப்பிடித்தொழுகும் அந்தணர் முதலியோர் இல்லங்களிலே சென்று ஏற்றுண்ணும் வழக்கமுடையர் என்பது இச்செய்யுளாற் புலனும். இவர்கள் இல்லறத்தார்க்கு ஆக்கமாகும் அறம் பொருள் இன்பங்களின் இயல்பைச் செவ்வி நேர்ந்துழி அவர்க்கு அறிவுறுத்துவர் என்பது,

"சொல்லிய கிளவி அறிவர்க்கு மூரிய"

"இடித்துவரை நிறுத்தலு மவர தாகும்
கிழவனுங் கிழத்தியு மவர்வரை நிற்றலின்"

(தொல்-கற்பு-கங, கச)

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்களானும் அவற்றின் உரைகளானும் நன்குணரலாம்.

ஆகில் தெருவில் நாயில் வியன்கடை என்றது அந்தணர் சேரியை; என்னை?

"பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலிதுன் ஞது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறை காப்பாளர் உறைபதி" (பெரும்பாண், உகூ அ-கூ0க)

எனப் பெரும்பாணற்றுப் படையினும் ஓதப்படுதலான் என்க.

ஆசு - புலாலுண்ணல் முதலியன. நாயின்மை: அருளுண்மை குறித்து நின்றது.

அமலை - சோற்றுத்திரள். வெள்ளிழுது, தண்ணீர் என்பன, வாளா இழுது, நீர், என்னுமாத்திரையாய் நின்றன.

வாடை, கார்ப்பருவக் கடைநாளில் வருதல் பற்றிக் 'கடைப் பெயல் வாடை' என்றாள். இது கடைப்பெயல் வாடை தொடங்குங் கால், 'வருவல்' என்ற தலைவன் கூற்றைக்கொண்டு கூறியபடியாம். 'அவ்வாடை வருதற்கு இன்னும் எத்துணை நாட்கள் உள?' என்று வினவியவாறும்.

பிசசை ஏற்போர்க்கு ஓரில்லிலேயே வயிறு நிரம்பக்கிடைத்தல் இன்பமாதலின், 'ஓரிற் பிசசை' என்றாள். இவவழகிய தொடரை யாத்த அருமை நோக்கி இதனை இயற்றிய நல்லிசைப்புலவர் 'ஓரிற் பிச்சையார்' என்று வழங்கப்பட்டனர் என்க.

பாட்டு - உஎஅ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் உரைத்தது. தலைவன் பிரிந்திருந்த ஞான்று ஆற்றாது வருந்திய தலைவியை 'நீ ஆற்றியிருத்தல வேண்டு'மென்ற தோழிக்கு அவள் தன் ஆற்றாமைக் காரணம் கூறியது.

இதன்கண், 'தோழீ! மலையிறந்துசென்ற நந்தலைவர் நமது சிறு பசும்பாவையையும், என்னையும் நினையாது மறந்து கொடியராயினர். யான் எங்ஙனம் ஆற்றவல்லேன்?' என்று தலைவி கூறுகின்றாள்.

உஎஅ. உறுவளி உளரிய அந்தளிர் மாஅத்து
முறிகண டன்ன மெல்லென் சீறடிச்

சிறுபசும் பாவையும் எம்மும் உள்ளார்
கோடியர் வாழி தோழி கடுவன்
ஊழுறு தீங்கனி உதிர்ப்பக் கீழிருந்
தேற்பன ஏற்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.

—பேரி சாத்தனார்.

(இ - ள்.) தோழி—, கடுவன் ஊழுறு தீங்கனி உதிர்ப்ப. ஆண்குரங்கு முதிர்ச்சியுற்ற இனிய பழங்களை மரத்தின் மேலிருந்து உதிர்த்ததனிட, கீழிருந்து ஏற்பன ஏற்பன உண்ணும பார்ப்புடை மந்திய மலை இறந்தோர் - அம்மரத்தின் கீழிருந்து தங் கையானே ஏற்பனவற்றை ஏற்பனவற்றைத் தின்ஞு நின்ற குட்டிகளையுடைய பெண் குரங்குகளுள்ளனவாகிய மலைகளைக் கடந்துசென்ற நந்தலைவர், உறுவளி உளரிய அந்தளிர் மா அத்து - மிக்க காற்றுக்கோதிய அழகிய தளிரையுடைய மாமரத்தினது, முறி கண்டன்ன மெல்லென் சீறடி - தளிரைக் கண்டாற்போன்ற மெத்தென்ற சிறிய அடியையுடைய, சிறுபசும் பாவையும் எம்மும் உள்ளார் - சிறிய பசிய விளையாட்டுப் பாவையினையும எம்மையும் நினையாராயினர், கொடியர் - அவர் கொடுமையுடையோர்காண்.

விளக்கம்:—அவர் கொடுமையுடையராயவழி யான் எவ்வாறு ஆற்றியிருத்தல் கூடும் என்பது குறிப்பு.

உறுவளி - மிகுதியான காற்று. மா - மாமரம். முறி - தளிர். மாந்தளிர் பாவையின் மெல்லடிக்கு உவமை. பாவையைத் தலைவன் தன்னெடிருந்துழி பிள்ளைமை முறைகொண்டு பாராட்டி மகிழ்ந்தான் ஆகலின், அம் மகவன்பையும் மறந்தான் என்பாள், 'சிறுபசும் பாவையும் உள்ளார்' என்றாள். எம்மும் என்றது, 'அவர் பிரிவினைச் சிறிதும் பொறுக்கலாற்றாத இயல்புடைய எம்மையும்' என்பதுபட நின்றது.

ஊழ் - ஈண்டு முதிர்வு என்னும் பொருட்டாய் நின்றது. ஆண் குரங்கு மரத்தின் மேலேறியிருந்து தன் குட்டிகட்கும், பெண் குரங்குக்கும் கனியுதிர்த்து இனிமை செய்தலை அவர் சென்ற நெறியிலே காண்பவராயிருந்தும், தம் பாவையையும் எம்மையும் உள்ளார்; பெரிதும் வன்கண்ணர் என்பாள், 'கடுவன் கனியுதிர்ப்ப ஏற்பன ஏற்பன உண்ணும் பார்ப்புடை மந்திய மலையிறந்தோர்' என்றாள்.

"கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப"

"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு
மவையு மன்ன வப்பா லான" (தொல்-மரபு-கஉ, கச)

என்னும் விதியானே குரங்குக் குட்டியைப் பார்ப்பெனல் மரபாதலறிக.

பாட்டு - உஎகூ : தலைவி கூற்று

துறை :—வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிவை ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி, 'ஆற்றுக' என்று வற்புறுத்தினளாக, அவட்குத் தலைவி தன் ஆற்றுமைக் காரணந் தெரித்தோதியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவன் வருகற்குரிய பொழுது இதுவேயாகவும் வந்திலர்; யானைபோலத் தோன்றும் குறுகல்மிக்க குன்றங்களைக் கடந்து சென்றோர் எமது தோளை மறந்துவிட்டனர்; யான் எங்ஙனம் ஆற்றவல் லேன்?' என்கின்றாள்.

உஎகூ. திரிமருப் பெருமை யிருணிற மையான்
வரிமிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியங்குதோ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ
மழைகழுஉ மறந்த மாயிருங் குறுகல்
துகள்சூழ் யானையிற் போலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போகித்
திருந்திறைப் பணைத்தோள் உள்ளா தோரே.

—மதுரை மருதனிளநாகனார்.

(இ - ள்) தோழி!, மழை கழுஉ மறந்த மா இருங் குறுகல் - மழை கழுவுதலை மறந்துவிட்ட பெரிய கரிய பொற்றைக் கல், துகள் சூழ் யானையில் பொலியத் தோன்றும் - புழுதி படிந்த யானை போன்று விளக்கமாகத் தோன்றுகின்ற, இரும் பல் குன்றம் போகி - பெரிய பலவாகிய மலைகளைக் கடந்து சென்று, திருந்து இறைப் பணைத்தோள் உள்ளாதார் - நமது திருந்திய இலக்கணமமைந்த முன்கையையுடைய பருத்த தோள்களையும் நினையாதுவிட்டவராகிய நந்தலைவர், திரிமருப்பு எருமை இருள் நிற மை ஆன் - முறுக்குடைய மருப்புக்களையும் இருள் போன்ற நிறத்தினையும் உடைய காரெருமையாகிய ஆனினது, வரி மிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி - வரியமைந்த கழுத்தின்கண்ணே கட்டப்பட்ட பிளந்த வாயினையும் தெளிந்த ஓசையினையுமுடைய மணி, புலம்பு கொள் யாமத்து இயங்கு தொறு இசைக்கும் - தனிமைத் துன்பம் உறுதற்குக் காரணமான நடு இரவின்கண்ணே அது நடக்குந் தோறும் ஒலியாநின்ற, இது பொழுது ஆகவும் - இத்தினைப் பொழுது ஆகாநிற்பவும், வாரார் - வந்திலர்.

விளக்கம்:—திரி மருப்பு - முறுக்கேறிய கொம்பு. எருமையி கொம்பு முறுக்குடையவாதல் இயல்பு. மையான் என்றது காரெருமை என்னும் பெயர் மாத்திரையாய் நின்றது. ஆன், எருமை பசு இர டற்கும் பொதுவாய்ப் பெண்பாலை உணர்த்துவதாகலின் 'எருமை காரான்' என்றாள். எருமையாகிய கரிய ஆன் என்க. வரிமிடறெ பதே சிறந்த பாடம். எருமையின் கழுத்தில் வரிகள் உளவாத காண்க. வரு மிடறு என்று பாடமோதுவாரும் உளர், பகுவாய் பிளந்தவாய். தெண்மணி என்றது தெளிந்த ஓசையுடைய ம என்றவாறு.

தனிமைத்துன்பம் மிக்குத் தோன்றும் பொழுதென்பாள், 'புலம் கொள் யாமம்' என்றாள். என்னை? உலகத்துயிர்கள் எல்ல உறங்காநிற்பத் தனித்துறைவோர் மட்டுமே உறங்காது கிடந் வருந்தும் பொழுதாதலே யாகலின். இதனை,

> "மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா
> என்னல்ல தில்லை துணை." (குறள்-கசு

என்னுந் திருக்குறளானும் உணர்க.

மழையினால் தூறுகற்கள் கழுவப்பட்டுத் தூய்மையுடையனவாக தோன்றுதல் இயல்பு. தலைவன் சென்ற நிலம் பாலை யாகலின், ஆண் மழையின்மை கூறுவாள், 'மழை கழுஉ மறந்த தூறுகல்' என்றா தூறுகல் - பொற்றைக்கல். இது கழுவப்படாமையின் தூகள்படிந் யானை உவமையாக எடுத்துக் கூறப்பட்டது.

பாட்டு - உஅ : தலைவன் கூற்று

துறை :—கழற்றெதிர்மறை. அஃதாவது, தலைவன் தன்னை இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவியின் அருமையை கூறியது.

இதன்கண், 'நண்பரே! என் நெஞ்சைப் பிணித்து கொண்ட அஞ்சிலோதிப் பெருந்தோட் குறுமகளினுடை சிறுமெல் ஆகம் ஒரு பொழுதைக்கு யான் எய்தப் பெறினு இப்பிறப்பானுறுபயன் பெற்றவன் ஆவேன். அங்ஙனம் எய்தி பின்னர், அரைநாளேனும் வாழப் பெறேனாயினும் ஆகு என்று தலைவன் பாங்கனுக்குக் கூறுகின்றான்.

உஅ. கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட அஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே.

—நக்கீரனார்

(இ - ள்) கேளிர் வாழியோ கேளிர் - நண்பரே! நீயிர் வாழ்வீராக நண்பரே! நாளும் என் நெஞ்சு பிணிக் கொண்ட - எப்பொழுதும் என் உளத்தைத் தன்பாற் பிணித்துக் கொண்ட, அம் சில் ஓதிப் பெருந்தோள் குறுமகள் - அழகிய சிலவாகிய கூந்தலையும் பருத்த தோளையும் இளமையையு முடைய தலைவியினது, சிறு மெல் ஆகம் ஒருநாள் புணரப் புணரின் - சிறிய மெல்லிய மேனியை ஒரோ ஒருபொழுது கூடக் கூடுமாயின் பின்னர், யான் அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் - யான் அரைநாள் வாழுமளவு வாழ்க்கையை யேனும் வாழவிரும்புகிலேன் காண்.

விளக்கம்:—கேளிர் - அண்மை விளி. தக்கது மொழிந்திலை என்னும் செறலானே இருமுறை விளித்தான். கேளிர்-கேண்மையுடையீர். தலைவியைக் கண்டநாள் தொடங்கி இற்றை நாள் வரை என்னெஞ்சம் அவளையன்றிப் பிறிதென்றனை நினைந்திலதென்பான், 'என்நெஞ்சு பிணிக் கொண்ட அஞ்சில் ஓதி' என்றான். இயற்கைப் புணர்ச்சிக்கண் அவள் கூந்தலே பாயலாகக் கிடந்து முயங்கினமை தோன்ற 'அஞ்சி லோதிப் பெருந்தோட் குறுமகள்' என்றான். குறுமகள் என்றது, இளையள் என்பதுபட நின்றது. ஆகம் - மேனி; மார்புமாம் புணரப் புணரின் - கூடக் கூடுமெனின் என்க. ஒருநாள் என்றது, ஒருபொழுது என்பதுபட நின்றது. ஒருமுறை அவளைக் கூடுதலே இப்பிறப்பிற் குரிய முழுப்பயனுக அமையும். அக் கூட்டங்காரணமாகப் பின்னர் உயிர் நீக்க நேரினும் யான் உடம்படுகின்றேன் என்பான், 'அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென்' என்றான்.

இடித்துரைத்த பாங்கனுக்கு 'என் வாழ்வினும் அவள் சிறந்தவள்; அவளை மறந்து யான் வாழ்வதெங்ஙனம்?' எனத் தலைவன் மறுத் துரைத்தான் என்க

பாட்டு - உஅக: தலைவி கூற்று

துறை:—பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு தோழி வற்புறுப்பாட்குக் கிழத்தியுரைத்தது. அஃதாவது, தலைவன் பிரிவன் என ஆற்றாது பெரிதும வருந்திய தலைவியை 'ஆற்றி யிருத்தலே நினக்குக் கடமையாம்' என்று வற்புறுத்திய தோழிக்குத் தலைவி, 'தலைவர் என்னைப் பிரிந்து போய்விட்ட னரோ,' என்று ஏங்கிக் கூறியது.

இதன்கண், தன்னை வற்புறுத்திய தோழியை நோக்கிச் 'சேயிழை! நமர் கொடிய பாலைநிலத்தே சென்றனரோ!' என்று வினவுகின்றாள்.

உஅக. வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கோம்மைப் போந்தைக் குடுமி வெண்தோட்
டத்த வேம்பி னமலை வான்பூச்

சுரியா ருளைத்தலை போலியச் சூடிக்
குன்றுதலை மணந்த கானம்
சென்றனர் கொல்லோ சேயிழை நமரே.

—குடவாயிற் கீரத்தனர்.

(இ - ள்.) சேயிழை - சிவந்த அணிகலன்களையுடைய தோழியே! வெண் மணல் பொதுளிய பைங் கால் கருக்கின் கொழுமைமைப் போந்தை - வெள்ளிய மணற்பரப்பின்கண்ணே தழைத்த பசிய அடியையும் கருக்கினையும் உடைய திரண்ட பனையினது, குடுமி வெண் தோட்டு - உச்சியின்கண் உள்ள வெள்ளிய மடலிலே வைத்த, அத்த வேம்பின் அமலை வான்பூ - பாலைநிலத்திலே நின்ற வேம்பினது நெருங்கிய வெள்ளிய பூவினை, சுரி ஆர் உளைத்தலை பொலியச் சூடி - சுரிதல் பொருந்திய மயிரையுடைய தலையின்கண் விளங்கும்படி அணிந்து கொண்டு, குன்று தலைமணந்த கானம் சென்றனர் கொல் நமரே - மலைகள் பொருந்திய காட்டிடத்தே நந்தலைவர் சென்று விட்டனரோ! கூறுக.

விளக்கம்:—தலைவன் பிரிவான் கொல் என, அவன் ஒழுகலாற்றிலே உணர்ந்த தலைவி, அங்ஙனமாயினே பெரிதும் வருந்தியிருந்த பொழுது அவளறியாதபடி தலைவன் போய்விட்டான். அவன் சென்ற பின்னர்த் தலைவியை உற்ற தோழி, இவள் அவன் பிரிந்தமைக்கு ஆற்றாளாயினள் என்று கருதி, 'நீ ஆற்றுதலே கடன்' என வற்புறுத்தினள். அவள் வற்புறுத்தியமையாலே தலைவன் பிரிந்து போயினன் போலும் என்று எண்ணிய தலைவி, தோழியை இங்ஙனம் வினவினள் என இச் செய்யுளைக் கருதவேண்டும்.

வெண்மணல் பைங்கால் என்பவற்றிற் செய்யுளின்பம் உணர்க. பொதுளுதல் - ஈண்டுத்தழைத்தல் என்னும் பொருட்டு. பைங்காற் கருக்கு என்றதற்குப் பசிய காம்பின்கட் கருக்கு எனினுமாம். கொழுமை - திரட்சி. குடுமி - உச்சி. வெண்தோடு என்றது, வெள்ளிய பனங்குருத்தினை என்க. பனங்குருத்திற் பூக்களைக் கட்டி யணியும் வழக்கத்தை,

"ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்து."

(புறம் - உசுடு)

எனப் பிறர் கூறுமாற்றானும் உணர்க. வான்பூ - தூய மலருமாம். வேம்பின் வான்பூக் கூறியதனால், அஃது இளவேனிற்காலம் என்பது பெற்றாம். தலைவன் பனங்குருத்தில் வேம்பின் ஒண்பூவைப் புனையுங் கால் தலைவி கண்டாளாகலின், வான்பூச சூடிச் சென்றனரோ என்று எங்ஙினள் என்க குன்றுதலை மணந்த கானம் என்றது, குறிஞ்சி திரிந்த பாலை என்பது பட நின்றது. 'இனி யான் எங்ஙனம் ஆற்றுகேன்?' என்பது குறிப்பு.

பாட்டு - உஅஉ : தோழி கூற்று

துறை:—தலைவன் வினைவயிற் பிரிந்த விடத்துத் தோழி கிழத்திக்கு உரைத்தது. அஃதாவது, தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற பின்னர், அவன் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்தமைகண்ட தோழி, இனித் தலைவர் வருவர் எனத் தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி, தலைவியை நோக்கி, 'இதோ தலைவர் கூறிச்சென்ற கார்காலம் வந்தது; இக்காலத்தே ஒருங்கே மலர்ந்து உதிராநின்ற வெண் கூதாள மலரைத் தலைவர் காண்பா; காணுங்கால் நின் கைவளையல்களும் இங்ஙனம் கழன்று வீழும்' என்று கருதி விரைவின் மீள்வர் என்று கூறுகின்றாள்.

உஅஉ. செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கௌவை நாற்றின் காரிரு ளோரிலை
நவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பின் ஓராங் கவிழ்ந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவ போலச்
சோர்குவ வல்ல என்பர்கொல் நமரே.

—நாகம் போத்தனார்.

(இ - ள்) நமர் - நம்மைப் பிரிந்துறையும் நந்தலைவர், செஞ்சுவல் கலித்த செவ்விகொள் வரகின் - செவ்விய மேட்டு நிலத்தே தழைத்த பருவம் வாய்ந்த வரகினது, கௌவை நாற்றின் கார் இருள் ஓர இலை - ஒலிக்கின்ற நாற்றினுடைய மிக்க கருநிறமுடைய ஒற்றையிலையை, நவ்வி மறி கவ்வி நாட் கடன் கழிக்கும் - மானின து குட்டி தின்று காலை உணவுண்ணுங் கடனைக் கழித்தற்குக் காரணமான, கார் எதிர் தண் புனம் காணில் - கார்ப்பருவத்தை ஏற்றமையாலே தண்ணிதாகிய புனத்தைக் காணுங்கால், நீர்திகழ் சிலம்பின் ஓராங்கு அவிழ்ந்த - நீராலே விளங்குகின்ற மலைப்பக்கத்தே ஒருபடித்தாக மலர்ந்த, வெண் கூதாளத்து அம்தூம்பு புதுமலர் - வெள்ளிய கூதாளத்தினது அழகிய உட்டுளையையுடைய புதிய மலர்கள், ஆர்கழல்பு உகுப போல - தங் காம்பினின்றும் கழன்று உதிர்தலைப் போன்று, கைவளை சோர்குவ அல்ல என்பர் கொல் - நின்கை வளைகள் கழன்று வீழ்வன வல்ல என்றே கருதுவர்?

விளக்கம்:—கார்ப்பருவம் வந்தமையின் நந்தலைவர் தண்புனத்தைக் காணுங்கால், ஆண்டு வெண் கூதாளமலர் யாண்டும் ஒருபடித்தாய் மலர்ந்து உதிர்ந்து கொண்டிருப்பதையும் காண்பர். அங்ஙனம் கண்டுழித் தம் பிரிவானே நின் கைவளைகள் இங்ஙனமே சோர்ந்து வீழ்வன என்று எண்ணினராய் விரைந்து மீள்வர் என்று ஆற்றுவித்த படியாம்.

செஞ்சுவற் கலித்த செவ்விகொள் வரகின் என்றும், நவ்விமறி கவ்வி நாட் கடன் கழிக்கும் என்றும் ஏற்ற பெற்றி மாற்றிக் கொள்க.

செவ்வி - பருவம்; ஈண்டு வரகு கதிரீனும் பருவம் என்க. கதிரீனும் பருவத்தே அக்கதிர்க்கு முன்னே வளமுடைய மடல் ஒன்று தோன்றுவது இயல்பு. அம்மடலையே ஈண்டுக் கார் இருள் ஓர்இலை என்றாள். கார் இருள் - கரிய இருள் எனினுமாம். அவ்வோர் இலையே நவ்விமறியின் காலைப் பசியைப் போக்கப் போதியதென்பாள், 'நவ்விமறி ஓர் இலை கவ்வி நாட்கடன் கழிக்கும் கார்' என்றாள். இது கார்ப்பருவத்தின் வளமிகுதி கூறியபடியாம். இனித் தலைவர் இப் பருவத்தே மீண்டு வருவேன் என்று குறித்த ஒரு சொல்லையே பற்றி யாம் இப் போது உயிர் வாழா நின்றோம் என்னும் உள்ளுறைக்கும் 'ஓரிலை கவவி நவ்விமறி நாட்கடன் கழிக்கும்' என்றதனை உவமையாகக் கொள்க.

கௌவை: ஒலி; ஈண்டுக் காற்றானே வரகுப்பயிர் சலசலக்கும் ஒலி என்க. நவ்வி - மான். மறி - குட்டி. தண்புனம் என்றதற்குக் காரெதிர் என்றது குறிப்பேதுவாய் நின்றது.

தண்புனங் காணில் புதுமலர் ஆர் கழல்பு உகுவனவும் காண்பர். அங்ஙனம் காணுங்கால் என விரித்துரைத்துக் கொள்க. என்பர் - என்று கருதுவர். 'சோராகுவ அல்ல என்பர் கொல்?' என்னும் வினை, 'என்னர் சோர்குவ என்பர்' என, உடன்பாட்டுப் பொருளே வலியுறுத்தி நின்றது. ஆர் - காம்பு.

ஆகலின், விரைந்து மீள்வர் நீ ஆற்றுக என்பது குறிப்பெச்சம்.

பாட்டு - உஅஉ : தலைவி கூற்று

துறை:—தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி ஆற்ற ளெனக் கவன்ற தோழிக்கு, 'அவர் பிரிய ஆற்றேனையினேன் அல்லேன்; அவர் போயின கானத்துத் தன்மையை நினைந்து வேறுபட்டேன்' என்று கிழத்தி சொல்லியது இதன் பொருள் வெளிப்படை.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர் பொருள்வயிற் பிரியுங்கால், தந் தாயப்பொருளைச் செலவு செய்து வாழ்வோர் வாழ்பவராகார். நல்குரவாளர் வாழ்க்கை இரவினும் இனிவாம்; ஆகலின் யாம் பொருளீட்டி வருந்துணையும் நீ ஆற்றுக எனக் கற்பித்துச் சென்றமையானே, யான் பிரிவினை ஆற்றியிருக்கின்றேன்; ஆனால், அவர் சென்ற நெறியின் தீமையை எண்ணும் போதோ ஆற்றேனைத் தன்பம் உண்டாகின்றது; யான் என் செய்கோ?' என்று இரங்குகின்றாள்.

உஅந. உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி யென்றும்
கூற்றத் தன்ன கோலவேல் மறவர்
ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடை பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீரில் ஆறே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) தோழி—, உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார் - தாமே தந் தாளான் ஈட்டிச் செலவழியாது தமக்குத் தாயத்தானே உளதாகிய பொருளைச் செலவழிப்பவர்கள் செல்வ முடையோர் என்று அறிஞர்களாற் பாராட்டப்படுவாரல்லர், இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு என - தாமே ஈட்டும் பொருளில்லாதோர் வாழும் வாழ்க்கை இரந்து வாழ்தலினும் காட்டில் இழிவுடையதாம் என்று, சொல்லிய வன்மை தெளியக் காட்டி - நூலோர்களானே கூறப்பட்ட ஆண்மைத் தன்மையை யாம் நன்கு தெளியுமபடி எடுத்துக கூறி, என்றும் கூற்றத் தன்ன கொலவேல் மறவர் - எக்காலத்தும கூற்றுவனைப போன்ற கொலதொழிலின் மிக்க வேலையுடைய மறவர்கள், ஆற்றிருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த படுமுடை - வழியின்கண்ணே தங்கியிருந்து ஆறுசெல்வோரைக் கொன்றமையானே உண்டான புலாலினை, பருந்து பார்த்திருக்கும் - பருந்துகள் தமக்கு இரை யாக எதிர்பார்த்திருக்கின்ற, நெடு மூதிடைய நீர் இல் ஆறு சென்றனர் - நெடிய பழைதாகிய நீர் அற்ற வழிகளில் செல்லா நின்றனரே, வாழி - அவர் வாழ்வாராக.

விளக்கம்:—அவர் பொருள் வயிற் பிரிந்தமையை அவர் தம் தேற்ற வுரை கொண்டு ஆற்றியிருப்பேனுயினும், அவர் நீரில் ஆறு சென் றமையை உள்ளுந்தோறும் துயரம் ஆற்றொணாது மிகுகின்றது காண்.

இச் செய்யுளின் முதலிரண்டடிகள் சிறந்த செவியறிவுறூஉவாக அமைந்துள்ள அருமையுணர்ந்து இன்புறுக. உள்ளது என்றது, முன்னோர் ஈட்டிய செல்வத்தை. அச்செல்வத்தை முதலாகக் கொண்டு வினை செய்து ஊதியத்தைச செலவு செய்வோரே உளர் எனப்படுவர் என்பது கருத்து. உளா - செல்வம் உளவாகப் பெற்றோர். இல்லோர் என்றது, ஈண்டுத தாளாற்றித் தந்த பொருளில்லோரை என்க. இது பற்றி இறையனர் களவியலுரையாசிரியர் கூறுங் கருத்தும் ஈண்டு வினைந்தின்புறற்பாலது. அது வருமாறு.

"இனிப் பொருட் பிரிவென்பது பொருளிலனுய்ப் பிரியும் என்ப தன்று; தன் மூதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட

பொருளெல்லாங் கிடந்தது மன்; அதுகொடு துய்ப்பது ஆண்மைத்தன் மையன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது. அல்லதூஉம், தேவர் காரியமும் பிதிரர்காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற் செய்தன, தனக்குப் பயன் படுவன; என்னே? தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறூர் ஆதலான், அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியும் என்பது" எனவரும்.

இரத்தற்கண் இல்லங்கடோறும் செல்லலும், தக்காரைக் கண்டவிடத்தே இரப்புரை கூறலும் முதலிய சிறு முயற்சிகள் உளவாதலான், இல்லோர் வாழ்க்கை இரத்தலினும் இளிவு எனப்பட்டது. தலைவன், உடைமையதுயர்ச்சியும், இன்மையதிளிவும் இங்ஙனம் நூலோர் கூறுப என எடுத்துக் காட்டினளுகலின், 'சொல்லிய வன்மை தெளியக் காட்டி' என்றாள். ஆன்றோரானே சொல்லப்பட்ட வன்மை என்க. வன்மை - ஆண்மைத் தன்மை. எண்பொருளவாகச் செலச் சொல்லினன் என்பாள், 'தெளியக்காட்டி' என்றாள். தெளியக் காட்டினமையின் யான் அவர் பிரிந்தமைபற்றி வருந்தேன் என்பது குறிப்பெசசம்.

தனிமையாலே தான்படுந்துயரத்தையும் மறந்து, 'ஆறலை கள்வர் மிக்க, நீரற்ற பாலைநிலத்தே எம்பெருமான் எங்ஙனம் செல்வரோ? அவர்க்கு ஏதம் என்னுறுமோ?" என்று கையற்றுக் கலங்குமிது தலையன் பின் மெய்ப்பாடென்க.

தப்பாது கொல்வோர் என்பாள், கூற்றத்தை உவமை எடுத்தோதினாள். மறவர் ஈண்டுப்பாலைநிலமாக்களாகிய ஆறலைகள்வர். அல்கியிருந்து எனமாறுக நெடுமையும், முதுமையும், நீரின்மையும் ஆறலைகள்வர் உண்மையும், ஏதந்தரும் ஏதுக்களாம்.

பாட்டு - உஅசு : தோழி கூற்று

துறை :—வரைவிடைத் தோழி கிழத்திக் குரைப்பாளாய் உரைத்தது அஃதாவது, வரைவிடைவைதுத் தலைவன் பொருள் வயிற்பிரிந்தபொழுது, ஊரலர் அஞ்சி வருந்திய தலைவியைத் தேற்றும் பொருட்டுத் தோழி ஊரினா மேலிட்டுரைத்தது.

இதன்கண், 'இணையைதரும் இச்சிற்றூரில் வாழும் மாக்கள் தமக்கு எனச் சிறிதும அறிவில்லாதார் போலும்! தந்தலைவன் அறவோனையினும், அல்லனையினும், அவற்றால் வரும் நலந்தீங்குகள நமக்கே உரியன; இவர்க்கு வரும் ஏதம் யாது? நம்மை எற்றுக்குப் பழிக்கின்றனர். இவ்வறிவிலிகளின் செயலை யாம் பொருளாகக் கொள்ளல் வேண்டா ?' என்று கூறுகின்றாள்.

உஅசு. பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகல் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்

அறவ னுயினும் அல்ல னுயினும்
நம்மே சுவரோ தம்மிலர் கோல்லோ
வரையிற் ருழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையி னிழிதரும்
இன்ன திருந்தவிச சிறுகுடி யோரே.

—மிளாவேள் தித்தனர்.

(இ - ள்.) பொருத யானைப் புகர்முகம் கடுப்ப - போர் செயத யானையினது புள்ளிகளையுடைய முகத்தைப் போல, மன்றத் தூறுகல் மீமிசை - அம்பலதின்கண்ணதாகிய பொற் றைக் கல்லின் மேலே, ஒண் செங் காந்தள் அவிழும் நாடன் - ஒள்ளிய செங்காந்தளின் பூக்கள் மலரும் நாட்டையுடைய தலைவன், அறவன் ஆயினும் அல்லன் ஆயினும் - வாய்மையுடை யோன் ஆயினும் அல்லன் ஆயினும், வரையில் தாழ்ந்த வால் வெள் அருவி - மலையினின்றும் தாழ்ந்து வீழுகின்ற தூய வெள்ளிய அருவிநீர், கொன் இலைக் குரம்பையின் இழிதரும் - வீணே இலைவேய்ந்த குடிலின்கண்ணே இறங்காநின்ற, இன்னது இருந்த - நமக்கின்னமையுளதாகிய, இச்சிறுகுடியோர் - இச் சிற்றூரின்கண் வாழ்பவர், தம்மிலர் கொல் - தம்மைத்தாங் கொண்டொழுகும் வன்மையிலர் போலும், நம்மேசுவர்-தொடர் பற்ற நம்மைப் பழியாகிற்பர்.

விளக்கம்:—'ஏ, ஏ, இவளொருத்தி; அறமிலியைக் காதலித்துப் பட்டது பார்மின்!' என வம்பலர் அலர் தூற்றலின், அவன் அற வோன் ஆயினும், அல்லன் ஆயினும் இவர்க்குற்ற தென்? என்பாள், 'அறவோனுயினும் அல்லனுயினும் நம்மேசுவர்' என்ருள்.

மலையிடத்தே வீழும் வெள்ளருவி பயன்மிக்க பொழிலிடத்தே வீழாது கொன்னே இலைக்குரம்பையின் வீழ்ந்தாங்கு இவர்களும் பயனில்லாது நம்பழி தூற்ருநின்றனர் என்பது குறிப்பு. கொன்-பயனில்லாதே என்னும் பொருளில் வந்தது;

"அச்சம் பயமிலி காலம் பெருமை என்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே."

(தொல்-இடை-சூ)

எனவரும் தொல்காப்பியத்தானே அதற்கப் பொருளுண்மை யுணர்க. இங்ஙனம் கூறுவழி உள்ளுறைக் கேலாமையுணர்க. அசசப் பொருட் டாக்கி உரைப்பாருமுளர்.

'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தோன் அறவனுயி னும் அல்லன் ஆயினும் ஆகுக; அதனால் இவர்க்குற்ற தென்னே?' வாளா பிறர்பழி கூறும் மடவோர் தமக்கென்றறிவிலர் என்று அலர் தூற்றுவோரின் அறியாமை காட்டி, அவர் அலர்க்கு யாம் அஞ்ச வேண்டா' என்று தலைவியைத் தேற்றியவாருகக் கொள்க.

இனி, நாடன் அறவன் ஆயின் நம்மைப் போற்றுதல் வேண்டுமே! அதுசெய்யாது அவ்வழியும் நம்மேசுவர், அல்லனாயின் அவனையே எசுதல் வேண்டுமே! அது செய்யாது, அப்பொழுதும் நம்மேசுவர், இவர் தம்மிலர் என்று கொள்ளின் சாலச் சிறக்கும்.

தம்மிலர் - தம்மைத் தாம் கொண்டொழுகும் ஆற்றலிலர் என்க. "பெருமையும் தன்னைத் தான் கொண்டொழுகின் உண்டு" (கூளச) எனவரும் குறளானும் இக்கருத்துணர்க.

துறுகன் மிசைச் செங்காந்தள் மலர்ந்திருத்தல், பொருது புண் பட்ட யானை முகத்திற்கு உவமை. பொருதற்றொழில் இல்லாத துறு கல்லைப் புண்ணுடைய முகம்போலச் செங்காந்தள் தோன்றச்செய்தது போலப் பழியற்ற நம்மைப் பழியுடையராகக் கூறுவர் என்பது குறிப் பாகக் கொள்க.

பாட்டு - உஅரு : தலைவி கூற்று

துறை :—பருவங் கணடு வேறுபட்ட விடத்து வற்புறுத் துந் தோழிக்கு வன்புறை எதிரழிந்து தலைமகள சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே குறித்துச்சென்ற பருவம் வந்தும, அவன் வாராமையானே வருந்திய தலைவியை நீ ஆற்றியிருத்தல் வேண்டும் என வற்புறுத்திய தோழியோடு பிணங்கித் தலைவி கூறியது.

இதன்கண், தோழியைநோக்கி, 'நீ ஆற்றுக என்கின்றனை; தலைவர் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற பருவமோ வந்து விட்டது. அப்பருவத்திற்குரிய நாட்களும் பலப்பல கழிந்தன. மலையிறந்தோர் வந்தாரிலர் அவர், எவ்விடத்திருக்கின்றனரோ அறிகின்றிலேன்; இனி யாங்ஙனம் யான் ஆற்றுவன்' என்பது படக் கூறுகின்றாள.

உஅரு. வைகல் வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லையுந் தோன்றார்
யாண்டுளர் கொல்லோ தோழி ஈண்டிவர்
சொல்லிய பருவமோ இதுவே பல்லாழ்
புன்புறப் பெடையோடு பயிரி யின்புற
இமைக்கண் ஏதா கின்றே ஞெமைத்தலை
ஊனசை இ யொருபருந் திருக்கும்
வானுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

—பூதத் தேவனார்.

(இ - ள்.) தோழி, பல் ஊழ் புன் புறப் பெடையொடு பயிரி-பல முறையும் புல்லிய முதுகினையுடைய பெண் புறவை

அழைத்து, இமைக்கண் - இமைப்பொழுதளவினுள், இன்புறவு ஏதாகின்று-இனிய ஆண்புறு எவ்வளவு இன்பத்தை யுடையதா கின்றது காண், ஞெமைத்தலை ஊன் நசைஇ ஒரு பருந்து இருக் கும்-ஞெமைமரத்தின் உச்சியில் இறந்தோரது தசையைத் தின்ன விரும்பி ஒற்றைப்பருந்து இருக்கின்ற, வான் உயர் பிறங் கல் மலை இறந்தோர்-விசும்பைத் தீண்டும்படி உயர்ந்த விளக்க முடைய மலைகளைக் கடந்துசென்ற நந்தலைவர், யாண்டுளர் கொல் - எவ்விடத்தே உறைகின்றனரோ அறிகிலேன், ஈண்டு இவர் சொல்லிய பருவமும் இதுவே-இவ்விடத்தே தாம் மீண்டு வருவம் எனக் குறித்துக் கூறிய பருவமும் இதுவே பிறிதன்றே, வைகல் வைகல் வைகவும் வாரார் - இப்பருவத்தின்கண் நாள் தோறும் விடியற்காலம் போய்ப் பகல் வரா நிற்பவும் அவர் வந் திலர், எல்லா எல்லையும் தோன்றூர்-எல்லாப் பகலின் எல்லையா கிய மாலைப்பொழுதுகளினும் அவர் காணப்பட்டிலர், யான் எங்ஙனம் ஆற்றுகேன்.

விளக்கம்:—பருவம் வந்தபின்னர் ஒவ்வொருநாளும் காலையிலிருந்து இரவுவருந்துணையும் அவன் வரும் வழிமேல் விழிவைத்து எதிர்பார்த் திருப்பது தோன்ற, வைகல்வைகல் வைகவும் வாரார்; எல்லா எல்லையும் தோன்றூர்,' என்றாள்.

வைகல் - விடியற் காலம், நாள், நாட்கழிவு என்னும் பலபொருள் ஒருசொல். வைகலும் என உம்மை விரித்தோதுக. நாள்தோறும் விடியற்காலம் போய்ப் பகல் வரவும் என்க. தலைவன் வருகின்ற நாள் எந்நாளாயினும் அந்நாளின் மாலைப்போதிற்குள் வருதல் மரபா கலின், 'எல்லா எல்லை எல்லையும் தோன்றூர்' என்றாள். எல்லை-பகல். எல்லையின் எல்லை என்க. பகலின் முடிவாகிய மாலைப்பொழுது என்பது கருத்து.

இங்ஙனம் நாள்நாளாக அவர் குறித்த பருவமும் பெரும்பாலும் கழியாகின்றதே என்பாள், 'அவர் சொல்லிய பருவமும் இதுவே' என்றாள். ஞெமைத்தலை ஊனசை ஒருபருந்திருக்கும் என்றது, சென்றோர் முகப்பக் கிடவாப் பொருணசையாலே தலைவர் நம்மை மறந்து தனித்துறைவாராயினர் என்னும் குறிப்புடையதாம். யாண்டுளர் கொல்லோ, என்றது, ஒரு தூதானும் அவர் இருக்கு மிடத்தை எமக்கு அறிவித்திலரே என்று வருந்தியபடியாம். ஒரு பருந்து - ஒற்றைப் பருந்து. துணையினீங்கித் தனித்துறையும் பருந்து என்றவாறு. ஆகலின், யான் ஆற்றுவதெங்ஙனம் எனத் தோழியைக் கடிந்தனள் என்க.

ஆண்புறு பெண்புறவைப் பயிரி இன்புறுதல், காமவிழைவினைத் தூண்டும் நிகழ்ச்சியாதல் உணர்க.

பாட்டு - உஅசு : தலைவன் கூற்று

துறை —(க) இரந்து பின்னின்ற கிழவன் குறைமறுமற் கூறியது. அஃதாவது, தலைவியைத் தோழி வாயிலாகப் பெறு

தற்கு முயலுந் தலைவன், அவள் குறைமறுக்காது இயையும் பொருட்டுத் தனக்கும் தலைவிக்கும் கூட்டமுண்மை குறிப்பாற் றோன்றுமாறு கூறியது.

(உ) பாங்கற்குச் சொல்லியதூஉமாம்.

இதன்கண், 'முள்ளெயிற்றையும், அமிழ்தமூறும் செவ்வாயையும், ஆரநாறும் அறல்போற் கூந்தலையும், பேரமர் மழைக் கண்ணையும் உடைய தலைவியின் மூரல்முறுவலோடு, செருக்கின நோக்கை இப்போது யான் நினைவு மாத்திரையானே நுகர்வேனு கின்றேன்' என்று தலைவன் தோழிக்குக் கூறுகின்றான்.

உ அசு. உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறும்அஞ் செவ்வாய்க் கமழகில
ஆர நாறும் அறல்போற் கூந்தல்
பேரமர் மழைக்கட் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே.

—எயிற்றியனார்.

(இ - ள்.) முள் எயிற்று அமிழ்தம் ஊறும் அம் செவ்வாய் - முட்கள் போன்ற கூரிய எயிற்றின்கண்ணே அமிழ்தம் ஊறுகின்ற அழகிய சிவந்த வாயினையும், கமழ் அகில் ஆரம் நாறும் அறல் போல கூந்தல் - பரவாகின்ற அகிற்புகையும் சந்தனப்புகையும் மணக்கின்ற கருமணல் போன்ற கூந்தலையும், பேர் அமர் மழைக்கண் - பெரிய விருப்பத்தைச்செய்யும் குளிர்ந்த கண்களையும் உடைய, கொடிச்சி மூரல் முறுவலொடு மதைஇய நோக்கு - தலைவியினது புன்னகையோடு செருக்கிய பார்வையை, உள்ளிக்காண்பென் போல்வன் - நினைத்தே காணுவன் போலும்.

விளக்கம்:—அமிழ்தம் என்றது, வாயூறலை. கமழ்தல் - பரவுதல். அகில் ஆரம் என்பன அவற்றாலாய புகைக்கு ஆகுபெயர். அமர் - விருப்பம். மழை - குளிர்ச்சிக்கு உவமை. மூரல் முறுவல் - புன்சிரிப்பு. மதைஇய - செருக்குற்ற.

அமிழ்தமூறும் செவ்வாய் என்றதும், ஆரநாறும் அறல் போல் கூந்தல் என்றதும் அவையிற்றைத் தான் நுகர்ந்தமையைக் குறிப்பாலுணர்த்திற்று. இது, முன்னுறு புணர்ச்சி முறையுற மொழிந்தமையாதல் காண்க.

பண்டு நுகர்ந்து கண்டயான், இன்று நினைவு மாத்திரையானே காண்பவனுகின்றேன் என்பான். 'உள்ளிக் காண்பென் போல்வன்' என்றான்.

மூரல் முறுவலொடு மதைஇய நோக்கென்றதும், அவளும் என் பாற் பேரன்புடையள் எனக் குறிப்பான் உணர்த்தியவாறும். என்னே? இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியின் உடன்பாட்டுக் குறிப்புக்கள் இவைகளே ஆகலின், அவள் குறிப்பினைத் தான் அறிந்தமையையும், அறிந்தவழி அவளது மூள்ளெயிற் றமிழ்தம் பருகினமையும், அவள் கூந்தலே பாயலாகக் கிடந்தமையும் இச்செய்யுள் குறிப்பான் உணர்த்தலான் என்க. இங்ஙனம் ஒன்றுபட்ட எம்மைக் கூட்டுதலன்றிச் சேட்படுத்தல் தினைக்குத் தகவன்றென்று, இது குறைமறுமற் கூறியதாதல் அறிக.

பாட்டு - உஅள : தோழி கூற்று

துறை :—பிரிவிடை வேறுபட்ட தலைவி நம்மைத் துறந்து, வாராளென்று கவன்றுட்குப் பருவங காட்டித் தோழி வருவர் எனச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்துழி, 'இனி நம்பால் அவர் வருவார அல்லர்', என்று பெரிதும் வருந்திய தலைவிக்குத தோழி, தலைவர் மீண்டு வருதற்குரிய கார்ப்பருவம வந்தமை காட்டி, 'விரைவில் வருவர்' என ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'உதோ வானத்தின் கண்ணே ஏறிச் செல்லமாட்டாதனவாய்ச் சூல் கொண்ட மகளிர் போல, நீர் கொண்டு குன்றநோக்கி முகிலகள் செல்கின்றன; இக் கார்ப்பருவத்தைக் கண்டு வைததும், நந்தலைவர் இனி ஆண்டுத் தங்குவாரல்லர்; விரைவில் வருவர்' என ஆற்றுவிக்கின்றுள்.

உஅள. அம்ம வாழி தோழி காதலர்
இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ
மூந்நாற் றிங்க ணிறைபொறுத் தசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போலநீர் கொண்டு
விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்றம் நோக்கிப்
பெருங்கலி வான மேர்தரும் பொழுதே.

—கச்சிப்பேட்டு நன்னகையார்.

(இ - ள்.) அம்ம வாழி தோழி - தோழியே கேட்பாயாக, மூந்நால் திங்கள் நிறை பொறுத்து அசைஇ - பன்னிரண்டு திங்கள் நிரம்பிய கருவினைத் தாங்கித் தளர்வெய்தி, ஒதுங்கல் செல்லா - நடக்கவியலாத, பசும் புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர் போல - பசிய புளிச்சுவையின்கண் விருப்பத்தையுடைய தலைச்சூலினையுடைய மகளிர்களைப் போன்று, நீர் கொண்டு -

நீராகிய சூலினைக் கொண்டு, விசும்பு இவர்கல்லாது - வானத்தின் கண்ணே ஏறமாட்டாது, தாங்குபு புணரி - அச்சூலினைத் தாங்கி ஒன்றனோடு ஒன்று சேர்ந்து, செழும் பல் குன்றம் நோக்கி - செழித்துள்ள பலவாகிய மலைகளே நோக்கி, பெருங்கலிவானம் ஏர்தரும் பொழுது - பெரிய ஆரவாரமுடைய முகில்கள் எழாநின்ற இக் கார்ப்பருவத்தினே, இன்னே கண்டும் - இப்பொழுதே கண்டுவைத்தும், காதலர் துறக்குவர்கொல் - நின்பாற் காதல் மிக்குடைய தலைவர் நின்னைத் துறந்தமைவரோ ? (அமையார், விரைவில் மீண்டு வருகுவர்.)

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற்கண் வந்தது. காதலர் என்றது நின்பாற் காதல் மிக்குடைய தலைவர் என்னும் பொருட்டாய்த் துறவாமைக்குக் குறிப்பேதுவாயிற்று. இன்னே - இப்பொழுதே. கண்டும் என்றது, கண்டபின்னரும் என்றவாறு. அவர் கூறிச் சென்ற பருவமிஃதாகலின், இதனைக் கண்டபின்னர் ஆண்டுத் தங்குவாரல்லர். இதுகாறும் அவர் வாராமைக்குக் காரணம் இப்பருவ வரவு காணுமையே என்றவாறு.

மூன்நாற் றிங்கள் - பன்னிருதிங்கள். தலைசிறந்த கரு, பன்னிருதிங்கள் வயிற்றின்கண் இருந்து முதிரும் என்பதொரு கொள்கையும் உண்டு. இதனை,

> ‘‘பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட அப்பாங்கிஞல்
> என்னிளங் கொங்கை அமுத மூட்டி எடுத்துயான்
> பொன்னடி நோவப் புலரியே காளிற் கன்றின் பின்
> என்னிளஞ் சிங்கத்தைப் போக்கினேன் எல்லே பாவமே.’

எனவரும் பெரியாழ்வார் பாசுரத்தானும் உணர்க. (நூ. உ : அ)

நிறை : கருவிற்கு ஆகுபெயர். அசைஇ - தளர்ந்து - நிறைந்த சூலுடைய மகளிர் நடைதளர்தல் இயல்பு. ஒதுங்கல் - நடத்தல்.

சூல்மகளிர் புளிச்சுவையை விரும்புவர் என்பதனை,

> ‘‘நீர் உறை கோழி, நீலச சேவல்
> கூருகிர்ப் பேடை வயாஅ மூர
> புளிங்காய் வேட்கைத் தன்று நின்
> மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே.’ (ஐங். நிக)

எனவரும் ஐங்குறுநூற்றானும் அறிக.

கடுஞ்சூல் - தலைச்சூல். மேகங்கள் சூலின் பொறையாலே விசும்பில் வர மாட்டாது குன்றம் நோக்கிச் சென்றன என்க. தலைவன் நெடிது நாள் நின்னைப் பிரிந்துறைதலானே தன் உளத்தே முதிர்ந்த காமத்தின் பொறையாலே ஆண்டுறைதலாற்றாது நின்னை நோக்கி விரைந்து வருவன் என்னும் குறிப்பும் கொள்க. வானம் - ஆகுபெயர்.

பெருங்கலி வானம் ஏர்தரும் பொழுது என்றது, அவர் கூறிச் சென்ற பருவமும் இப்போது தான் தொடங்குகின்றது, வானம்

பெருங்கலியும் உடைமையின் அவர் இன்னே இதனைக் காண்பர் என்பதுபட நின்றது.

பாட்டு - உஅஅ : தலைவி கூற்று

துறை :—தலைமகனது வரவுணர்ந்து, நம்பெருமான் நமக்கு அன்பிலன் என்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அஃதாவது பிரிந்த தலைவன் வரவினை அறிந்த தோழி, அவன் வரவறியாதாள் போன்று தலைவனை இயற்பழித்துரைக்க, அது பொறாதாளாய்த் தலைவி இயற்படமொழிந்தது.

இனி, இங்ஙனம் கொள்ளாது, 'நம்பெருமான் நமக்கு அன்பிலன்' என்ற தோழிக்குத் தலைவன் வரவுணர்ந்த தலைவி இயற்படமொழிந்தது என்று மாறிக்கூட்டி வரவுணர்தலைத் தலைவிக் காக்குவாருமுளர் வரவுணர்ந்து இயற்படமொழிந்தா ளெனல் தலையன்பாகாமை உணர்க.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நமக் கினியராகிய தலைவர் செய்யும் இன்னுமையும், முடிவில் நமக்கு இனிமையே ஆகுங் காண். கேண்மையுடையோர் இயற்றும் இன்னுமை தரும இன்பத்திற்குத் துறக்க வின்பமும நிகராகமாட்டாது,' எனத் தலைவனைப் பாராட்டுகின்றாள.

உஅஉ. கறிவளர் அடுக்கத் தாங்சண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்க டைடன்
இனிய னுகலி னினத்தி னியன்ற
இன்னு மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ணுடே.

—காரிலர்.

(இ - ள்.) தோழி, கறிவளர் அடுக்கத்து ஆங்கண் - மிளகுக்கொடி வளராநின்ற பக்கமலையாகிய அவ்விடத்தே, முறி அருந்து குரங்கு ஒருங்கு இருக்கும் - தளிரைத் தின்னுகின்ற குரங்கு ஒருங்கே கூடியிராநின்ற, பெருங்கல் நாடன் இனியன் ஆகலின் - பெரிய மலைநாட்டையுடைய தலைவன் நம்மைப் பிரிந்த விடத்தும் நமக்கு இனிய அன்புடையன் ஆதலானே, இனத்தின் இயன்ற இன்னுமையினும் - உறவுடையாராலே தோன்றிய இன்னுமையைக் காட்டினும், இனிதெனப்படும் புத்தேள் நாடு இனிதோ - இனியதென்று நூல்களாலே கூறப்படும் கடவுள் உலகம் இனிதாகுமோ ?

விளக்கம் :—அன்புடையாராலே செய்யப்படும் நன்மையே அன்றித் தீமையும் அன்பு செய்யப்பட்டார்க்குப் பேரின்பமே நல்குவதாம்.

நம் தலைவரோ நம்பாற் பேரன்புடையர். அவர் செய்வன எல்லாம் நமக்கு இனியவேயாம் என்று இயற்பட மொழிந்தவாறு.

இது, 'தலைவன் அன்பிலன்; கொடியன்,' என இயற்பழித்த தோழியை மறுத்துரைத்தது என்க.

செயல்கள் இனியன வாதலும் இன்னவாதலும் செய்வோரின் நெஞ்சத்தின் பண்பாலேயாகும்; ஆதலின், நந் தலைவன் செயல் யாதாயினும் நம்பால் அன்புடைமையாலேயே அச் செயல் நிகழ்தலின் அஃதினிதேயாம். அன்புடையார் செயல் ஒரோவழித் துன்பம் பயப்ப தாயினும் அத் துன்பமே மிகச சிறந்த இன்பமாகும். இவ் வின்பத் திற்குப் புத்தேளுடு தரும் இன்பமும் ஈடாகாது என, ஈண்டுத் தலைவி கூறும் நுணுக்கம் பெரிதும் இன்பந் தருவதாம்.

இனத்தோர் ஒரோவழி இன்னுமை செய்வதூஉம் மேலும் இன்பம் உண்டாக்குதல் கருதியே ஆகும். ஆகவே, அவ் வின்னுமையே இன்பத் திற்குக் காரணமாகும். அவ் வின்பத்திற்குப் புத்தேளுமை ஒவ்வாது என்றாள். அஃதாவது, தலைவன் பொருளீட்டற்பொருட்டு நமக் கின்னுமை செய்து பிரிந்து போயினர். அவர் நமக்கு இப்பொழுது இன்னுமை செய்தாராயினும் அவர் பொருளீட்டியவழி அப் பொருள் இல்லறம் இனிதே நடத்தற்குக் காரணமாகும். அறத்தானீட்டிய பொருளானே யாம் செய்யும் அறத்தான் வரும் இன்பமே மெய்யின்ப மாம். அறத்தின் பயனைத் தாமே நுகர்தலாகிய புத்தேளுட்டின்பத் தினும் ஈத்துவக்கும் இவ் வின்பம் ஆற்றவும் பெரிதாயிற்று என்றாளாயிற்று. இதனால் இனத்தினியன்ற இன்னுமை புத்தேளுட்டின்பத் தினும் பெரிய இன்பமாதலை நுணுக்கினாள் உணர்க. தளிர் அருந்தும் குரங்கு மிளகுத் தளிரையும் தின்னுதலும், அத் தளிர் உறைப்புச சுவை யுடையதாயினும் ஏனைத் தளிரினும் உடலாக்கந் தருவதும்போல, யாமும் தலைவன் செயல்களிற் சில துன்பந் தருவதாயினும் அதுவே ஆக்கந் தருவதாம் என்று அமைதல்வேண்டும் எனபாள், 'கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறியருந்து குரங்கு ஒருங்கு இருக்கும்,' என்றாள்.

பாட்டு - உ அகு : தலைவி கூற்று

துறை :—காலங் கண்டு வேறுபட்டாளெனக் கவன்ற தோழிக்கு, 'காலத்து வந்திலர் என்று வேறுபட்டேனல்லேன்; அவரைப புறத்தார் கொடியர் என்று கூறக்கேட்டு வேறுபட் டேன்,' என்று தலைமகள் சொல்லியது. அஃதாவது, தலைவன் குறித்துச் சென்ற பருவம் வந்தும், அவன் வந்திலன் என்று தலைவி ஆற்றாளாகின்றாள் என்று கருதிக் கவலையுற்ற தோழிக் குத், தலைவி, 'யான் வருந்துவது பருவம் வந்தும் அவர் வந்திலா மைக்கன்று; அவரை ஊரினர் கொடியர் என்று பழிதூற்று தல் கேட்டு வருந்துகின்றேன்,' என்று கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'வளர்பிறைபோல நாடோறும் வளர்ந்து என்னை நலியாநின்ற காமநோயோடே

பொருந்தி, நந் தலைவரின்மையானே யான் பெரிதும் வருந்துவது மல்லாது, அவர் திறத்து இரங்குகின்ற என்னைக் காட்டினும், என் திறத்து இவ்வூர் பெரிதும இரங்கி அவரைப் பழி தூற்று கின்றது, அதற்கே யான் ஆற்றேனாகின்றேன்,' என்கின்றாள்.

உஅக. வளர்பிறை போல வழிவழிப் பெருகி
இறைவளை நெகிழ்த்த எவ்வ நோயோடு
குழைபிசைந் தனையே மாகிச் சாஅய்
உழையர் அன்மையின் உழப்ப தன்றியும்
மழையுந் தோழி மான்றுபட் டன்றே
பட்ட மாரி படாஅக் கண்ணும்
அவர்திறத் திரங்கு நம்மினும்
நந்திறத் திரங்குமிவ் வழுங்கல் ஊரே.

—பெருங்கண்ணனார்.

(இ - ள்.) தோழி—, உழையர் அன்மையின் வளர் பிறை போல வழி வழிப் பெருகி - நங் காதலர் நம் பக்கத்தில்லாமை யானே ஒளிப்பக்கத்தே நாடோறும் வளராநின்ற பிறையைப் போன்று மேலும மேலும் பெருகி, இறை வளை நெகிழ்த்த எவ்வ நோயொடு - முன்கையின்கட் செறித்த வளையலை நெகிழச் செய்த துன்பமாகிய காம நோயோடே, குழை பிசைந்து அனை யேம் ஆகிச் சாஅய் - தளிரைப் பிசைந்தாற்போன்ற நிலையினை யுடையேமாகி மெலிந்து, உழப்பது அன்றியும் - யாம் துயருழப் பதல்லாமலும், மழையும மான்று பட்டன்று - இம் மழையும் மயங்கிப் பெய்யாநின்றது, பட்டமாரி படாஅக் கண்ணும் - இங்ஙனம பெய்யும மழை தோன்றுமுன்பே, அவர் திறத்து இரங்கும் நம்மினும் - அவர் பொருட்டு வருந்துகின்ற நம்மைக் காட்டிலும், இவ் அழுங்கல் ஊர் நம் திறதது இரங்கும் - கலக் கத்தையுடைய இவ் வூரினர் நம் பொருட்டு இரங்காநின்றனர்.

விளக்கம்:—தனது வருத்தங் கண்டு கவல்கின்ற தோழியையே ஈண்டு அழுங்கல் ஊர் என்றாள். ஊர் என்பது ஊரிலுள்ளார்க்கு ஆகுபெயராய் நின்று குறிப்பானே தோழியை உணர்த்திற்று.

தலைவியின் நிலைக்கு இரங்குந் தோழி, இவள் இவ்வாறு ஆற்றுமை யுடையளாம்படி பருவம் வந்தும் வாராதாராயினர் தலைவர். அவர் கொடியர் எனக் கூறிக் கவன்றமையின், அவர்பொருட் டிரங்கும் என்னினும் என் திறத்து நீ பெரிதும் இரங்குகின்றாய் என்பாள், 'அவர் திறத்திரங்கு நம்மினும் நந்திறத்து இரங்கும் இவ்வூர்' என்றாள். அழுங் குதல் - மிகவும் கலக்கமெய்தல்.

"அவலக் கவலை கையாறு அழுங்கல்." (மணி-ச: கஉ)
என்புழியும் இஃதப் பொருட்டாத லுணர்க.

இறை - முன்கை. எவ்வம் - துன்பம். நோயொடு குழைபு இசைத்து அனையமாகி எனக் கண்ணழித்து காமநோயாற் குழைந்தருகி அதனோடு ஒன்றுபட்டாற் போன்றனமாகி எனினுமாம். சாஅய்-மெலிந்து. உழையர் - பக்கத்திலிருப்போர். தோழி மழை பொழிந்தமை கண்டு இது கார்ப்பருவம் என்றும், அவர் வந்திலர் என்றும் கவன்றாளாகலின், இது பருவ மழையன்று வம்பமாரி என்பாள், 'மழையும் மான்று பட்டன்று' என்றாள். மான்று - மயங்கி. பட்டன்று - பட்டது; பெய்தது என்றபடி.

எனவே, அவர் திறத்து யான் வருந்துவதினும் பார்க்க எந் திறத்துப் பெரிதும் வருந்தி வம்பமாரியைக் காரென மதித்து அவரைப் பழி தூற்றும் நின் செயலைக் கருதியே யான் இப்பொழுது ஆற்றே னாகின்றேன் என்பது குறிப்பு.

பாட்டு - ஒஅ0 : தலைவி கூற்று

துறை :—வற்புறுதலாக தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்து சென்ற பின்னர் வருந்திய தலைவியை, 'நீ ஆற்றுதலை அறிவுடைமை,' எனத் தோழி வற்புறுத்தினாள், 'நீ காமத்தின் இயல்பறியாது கழறுகின்றனை,' எனத் தலைவி கடிந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழி கேட்ப முன்னிலைப் புறமொழியாக, "காம நோயைப் பொறுத்திரு,' என்று என்னைச் சிலர் வற்புறுத்துகின்றனர். அவர் அந் நோயின் இயல்பை உணர்ந்திலரோ! அல்லது அதனைத் தாங்குமளவு வலிமிக்காரோ அறிகிலேன்; யானோ என் காதலரைக் காணுதலிடத்து, தயரம் மிக்க நெஞ்சத்தோடு நீரின்கண் நுரை மெல்ல மெல்ல அழிந்து இல்லையாவதுபோல அழிந்து இல்லை யாகின்றேன்," என்று கூறுகின்றாள்.

ஒஅ0. காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமோடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே.

—கல்பொரு சிறுநுரையார்.

(இ - ள்.) காமம் தாங்குமதி என்போர் அஃது அறியலர் கொல் அனை மதுகையர் கொல் - நீ காம நோயைப் பொறுத்திரு என்று எம்மை வற்புறுத்துவோர், அந் நோயின் இயல்பை அறியாதவரோ அன்றி அத்துணை வலிமை யுடையவரோ யாம்

அறிகின்றிலேம், யாம் எம் காதலர்க் காணேம் ஆயின் - யாமோ எம்முடைய காதலரைக் காணுதேமாய பொழுது, செறி துனி பெருகிய நெஞ்சமொடு - செறிந்த வருத்தந் தேங்கிய உளத் தோடே, பெருநீர்க் கல் பொரு சிறு நுரை போல - பெரிய வெள்ளம் கல்லே மோதுழி உண்டாகும் சிறிய நுரை மெல்லத் தேய்ந்து அழியுமாறுபோல, மெல்ல மெல்ல இல்லாகுதும் - பையப் பையத தேய்ந்து இல்லையாகினேமெம்

விளக்கம்:—காமநோயைப் பொறுத்து இருத்தல்வேண்டும் என்று தோழி ஆற்றுவித்தாள் ஆகலின், 'காமந் தாங்குமதி என்போர்,' என்றாள். மதி: முன்னிலையசைச் சொல். அது - அக் காமத்தை, அவர் அவ்வாறு அறிவுறுத்தற் காரணம் அதனியல்பறியாதவர் ஆதல்; அல்லது அதனைத் தாங்கும் வன்மையுடையர் ஆதல் வேண்டும். இவ விரண்டினில் எதன்பாற் பட்டவர் என்று யானறிகிலேன் என்பாள், 'அஃதறியலர் கொல்; அனேமதுகையர் கொல்' என்றாள். கொல்: ஐயத்தின் வண்பட்ட வினுப்பொருள்.

செறிதுனி - செறிந்த துன்பம். பெருநீர் - வெள்ளம், பெரியநீர் நிலை எனினுமாம். நீர் கல்லிடத்தே மோதுங்கால் நுரை தோன்று தலும், பின்னர் மெல்ல மெல்லக் காணப்படாது மறைதலும் இயல்பு. நுரை இல்லையாதல் துன்பத்தாற் றன்னை மறத்தற்கு உவமை. இல்லை யாதல் சாக்காடென்னும் மெய்ப்பாடெனினுமாம்.

கல்பொரு சிறு நுரையை அரிதின் உவமைகண்ட அருமை நோக்கி இதனை இயற்றியவர் 'கல்பொரு சிறுநுரையார்' எனப் பட்டார்.

பாட்டு - உகூக: தலைவன் கூற்று

துறை.—பாங்கற்கு உரைத்தது அஃதாவது, இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னாப் பாங்கற் கூட்டம் விரும்பும் தலைவன் பாங்கற்குத் தலைவியின் நிலைமை கூறியது.

இதன்கண், 'தினைபபுனத்தே கிளிகடியும் தலைவியின் கையின்கண்ணதாகிய குளிர், இசையோ டியைந்த இனிய தாளத்தை உடையது; அவ்விசைகேட்டு அவள் பாட்டென்று கருதிக் கிளிகள் அகலமாட்டா. அதற்குப புலந்தழும் அவளுடைய கணைகளோ, மழைத்துளியை ஏற்றுக்கொண்ட குவளை நாண்மலர் போன்றன' என்று தலைவன் பாங்கற்கு அறிவுறுத்துகின்றான்.

உகூக. சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே
கிளியவள் விளியெனெ ழலொல் லாவே
அதுபுலந் தழுத கண்ணே சாரற்

குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலுஇத்
தண்துளிக் கேற்ற மலர்போன் றனவே.

—கபிலர்.

(இ - ள்.) தோழ—, சுடுபுனம் மருங்கிற் கலித்த ஏனல் - மரங்களை வெட்டிச் சுட்டெரித்துப் பண்படுத்திய புனத்தின் கண்ணே தழைத்த தினையில், படுகிளி கடியும் கொடிச்சி கைக் குளிர் - வீழா நின்ற கிளிகளை ஓட்டும் தலைவியினது கையின் கண்ணதாகிய குளிர் என்னும் கருவி, இசையின் இசையா இன் பாணித்து - இசை பாடுங்கால் இசைக்கப்படும் இனிய தாளத்தை யுடையதாம், கிளி அவள் விளியென எழல் ஒல்லா - அக்கருவி யானே அவள் கடியுங்கால் கிளிகள் அக்குளிரின் ஓசையை அவள் பாட்டின் தாளம் என்று கருதித் தினையினின்றும் அகலாதனவாம, அது புலந்து அழுதகண் - அதற்கு வருந்தி அழுத அவளுடைய கண்களைப் போல, சாரல் குண்டு நீர்ப் பைஞ்சுனை பூத்த குவளை - மலைச்சாரலின்கண் அமைந்த ஆழமான இடத்தி லுள்ள நீரையுடைய பசிய சுனையிலே மலர்ந்த குவளையினது, வண்டு பயில் பல இதழ் கலுஇத் தண் துளிக்கு ஏற்ற மலர்போன் றன - வண்டுகள் பழகாநின்ற பலவாகிய இதழ்கள் கலைந்து தண் ணிய மழைத்துளியை ஏற்றுக்கொண்ட மலர்களை ஒப்பனவாகும்.

விளக்கம் :— சுடுபுனம் - மரங்களை வெட்டிச சுட்டெரித்துசசீர் திருத்தப்பட்ட புனம் என்க. மரங்களை எரிததமையால் மண்சுடப் பட்டு பயிர்களுக்குச் செழிப்பு நல்குமாகலின், சுடுபுனம் என்றது, வளமிக்க புனம் என்பது குறித்து நின்றது. கலித்தல் - தழைத்தல். ஏனல் - தினை. கொடிச்சி - குறிஞ்சிநிலத தலைவி. குளிர் - கிளிகடி கருவி. குளிரைப் புடைதது க் கொண்டு கொடிசசி "ஆயோ" எனக் கூவிக் கூவிக் கிளி கடியுங்கால், குளிரின் புடைப்பொலி இசை பாடுங் கால் ஒலிகசப்படும் இனிய தாளத்தின் தன்மையை உடையதாயிருக் கும்; எனவே, கிளிகள் தலைவியின் கிளிகடிதற் றொழிலை பாடற்றொழி லாகக் கருதி அவ்விசையின்பத்தின் மயங்கி அகலமாட்டாவாயின. எத்துணைக் கடிந்தும் கிளிகள் அகலாமை கண்டு அவள் அழுதாள் என்க. அழுதலானே கண்ணீர்த் துளிகளையுடைய தலைவி கண்களுக்கு இதழ் கலைந்து மழைத்துளி ஏறற குவளை நாண் மலர்கள் உவமை.

அது என்றது, அக்கிளிகள் ஏழாமையை. புலந்து - வருந்தி. இது தலைவி இருக்குமிடமும், அவளியற்றும் தொழிலும், அவள் குரலின் றன்மையும், அவள் எழிலும் பாங்கனுக்குத தலைவன் தெரித்தோதிய வாறுதல் உணர்க.

பாட்டு - உகூஉ : தோழி கூற்று

துறை :—தோழி இரவுக் குறிக்கட் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி சொல்லியது. அஃதாவது, வரைந்து கோடற்கண்

கருத்தின்றிக் களவொழுக்கமே நிகழ்த்துந் தலைவன், இரவுக் குறிக்கண் மனைப்படப்பை யருகே வந்து நிற்றலை அறிந்த தோழி, தலைவி தமராற் பெரிதும் பாதுகாக்கப் படுதலையும், வரைந்து கோடல் இன்றியமையா தாதலையும், அவனுக்கு உணர்த்தும் பொருட்டு அவன் வரவறியாதாள் போன்று தலைவிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், 'நீராடச் சென்ற ஒருத்தி, நிரிலே மிதந்து வந்த பசுங்காயைத் தின்ற தவற்றிற்காக, அவர் தமர் யானை பொன் முதலிய கொடுப்பவுங் கொள்ளாதுய் அவளைக் கொலை செய்த நன்னன் போல, நம்மன்னை வரையா நிரயம் புகுவாளாக; அஃதெற்றுக் கெனின், ஒருநாள் அன்னை நந்தலைவன் வந்ததனைக் கண்டனளாக, அன்று தொடங்கி இரவெல்லாம் துயிலாதிருந்து நம்மைப் பாதுகாக்கின்றனளாகலான்.' என்று தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

உகூ. மண்ணிய சென்ற ஒண்ணுதலரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொடவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே.

—பரணர்.

(இ - ள்.) அன்னை - தோழியே! கேட்பாயாக, ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தென - நம்மன்னை ஒருநாள் முறுவல் பூத்த முகத்தையுடைய விருந்தினனாக நந்தலைவன் நம்மில்லத்தே வந்தானாக, பகைமுக ஊரின் துஞ்சல் இலள் - அவனைக் கண்டு ஐயுற்றனளாய் அன்று தொடங்கி போர்க்களத்தின் கண்ண தாகிய ஊரிலுள்ளார் போன்று இரவெல்லாம் உறங்குதல் இலளாயினள், மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை - நீராடற் பொருட்டு யாற்றிற்குச் சென்ற ஒள்ளிய நுதலையுடைய மகளொருத்தி, புனல் தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு - அவ்வியாற்றுநீர் கொணர்ந்த பசிய காயைத்தின்றதனால் உண்டாகிய தவற்றிற்காக, ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள் நிறை பொன் செய்பாவை கொடுப்பவும் கொள்ளான் - அவள் தமர் அவளை மீட்கும் பொருட்டு எண்பத்தொரு களிற்றி யானைகளோடே அவளது நிறையையுடைய பொன்னாற் செய்த

பாவையினையும் தண்டாக இறப்பாராகவும், அவையிற்றை ஏற்றுக் கொள்ளாதவனுய், பெண் கொலை புரிந்த நன்னன் போல - அப்பெண்ணைக் கொலைசெய்த நன்னன் என்னுங் குறுநிலமன்னனைப் போன்று, வரையா நிரையத்துச் செலீஇயர் - இவனும் கால வரையறையில்லாத நரகத்தின்கண் வீழ்வானாக.

விளக்கம்:—நந்தலைவனை ஒருநாள் கண்ட நம்மன்னை அன்று தொடங்கி இரவெல்லாம் துயிலாதிருந்து நம்மைப் புறம்போகாது காவல்செய்து நமக்கு இன்னுமை செய்பவளாயினள். அவள் மீளாத் தீநரகம் புகுவாளாக என்ன, இதுகேட்ட தலைவன் தலைவி காப்புமிகுதியால் இனி இரவுக்குறிக்கண்ணும் நம்மைக் காண வியலாதவளாயினள்; ஆதலின் இனி வரைந்து கோடலே செயற்பால தெனத் தெளிதல் இதன் பயன் என்க.

நீராடுவோர் நீரில் மிதந்து வரும் கனியை அருந்துதல் குற்ற மன்றாகவும், அருந்தியவனும் பெண் ஆகவும், நன்னன் சிறிதும் அருளின்றி அவளைக் கொலைசெய்து இறப்பப் பெரும்பாவம் ஈட்டினான்; அதனால் அவன் என்றென்றும் மீளா எரிவாய் நரகம் புக்கான்; அவன் எய்திய நரகத்தையே கற்புக்கடம் பூண்ட நின் செயல் அறத்தொடு பட்டதென்று கருதி, இனிய செய்யாது, துயிலா திருந்து நினக்குப் பெரிதும் இன்னுமையே செய்கின்றாள் ஆகலின் நம்மன்னையும் அந்நரகினை எய்துக கடவள் எனத் தாயின் கொடுமை யைத் தகுதிதோர் உவமை கொண்டு தெரித்தோதினாள்.

இதன்கட் கூறப்படும் நன்னன் ஒரு குறுநிலமன்னன் என்று தெரிகின்றது. மலைபடுகடாம் கொண்ட நன்னன் அல்லன் மலைபடு கடாங் கொண்ட நன்னன் என்பான், செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் எனப்படுவான் ஈண்டுப் பெண்கொலை செய்த நன்னன் கொண்கானவேள் நன்னன் எனப்படுவான். இவனைப் பற்றிய செய்தி இக்குறுந்தொகையின்கண் எங - ஆம் செய்யுளினும் கூறப்பட்டது. அசசெய்யுளும் பரணராலேயே பாடப்பட்டுள்ளது. இவன் வரலாற்றை அச செய்யுள் விளக்கத்தும் கூறியுள்ளாம்; ஆண்டுக் காண்க

இந்நன்னன் தனது பூம் பொழிலில் ஒரு சிறந்த தேமாமரம் வைத் திருந்தான்; அதிற் பழுத்த கனி ஆற்றில் விழுந்தது. அக்கனியை நீராட வந்த ஒரு பெண் எடுத்தருந்தினள்; அச் செய்தி கேட்ட நன்னன், அப் பெண்ணின் தமர் யானை, பொற்பாவை முதலியவற்றைத் தண்ட மாகத் தரவும் இசையாது அவளைக் கொன்றான், என்பது வரலாறு.

தலைவன் விருந்தினரோடு விருந்தினராய்த் தலைவியின் மனை புகு தல் வழக்கம். இங்ஙனம் புகும் வழக்கத்தை இந்நூல் கஙஅ-ஆம் செய்யுளானும், அதன் விளக்கத்தானும் உணர்க.

பாட்டு - உஙங : தலைவி கூற்று

துறை :—பரத்தையிற் பிரிந்து வந்த கிழவற்கு வாயிலாகப் புக்க தோழிக்குக் கிழவன் உரைத்தது. அஃதாவது, பரத்தை யர் சேரிக்குத் தலைவன் தன்னைப் பிரிந்து சென்றமையால் ஊடி

யிருந்த தலைவியின் ஊடல் போக்கத் தலைவன், தோழியை விட்டவழி அதைதோழியின் கூற்றை மறுத்துத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "'நீ தலைவனை ஏற்றுக் கொள்க', என்று என்னை வேண்டுகின்றனை; நின் வேண்டுகோட்கிணங்கி இவனை யான் ஏற்றுக் கொண்டது பரத்தை அறிவாளாயின், அவளே நம் மிலலிற்கு வந்து அவனைப் பற்றிச் செல்வள காண்," என்று கூறுகின்றாள்.

உகந. கள்ளிற் கேளிர் ஆத்திரை யுள்ளூர்ப்
பாலை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஒங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன
அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கின் ஊழ்மா றுலப்ப
வருமே சேயிழை யந்திற்
கொழுநற் காணிய அளியேன் மன்னே.

—கள்ளில் ஆத்திரையனார்.

(இ - ள்.) தோழி, கள் இல் கேளிர் ஆத்திரை - கள்விற்கும் கடைக்கு உரியராகிய களியரின் செலவு, உள்ளூர் ஒங்கு இரும் பெண்ணை பாலை தந்த பஞ்சியம் குறுங்காய் நுங்கொடு பெயரும் - அக் கள் கிடைக்கப் பெறுமையால் ஊரினகத்தே யுள்ள உயர்ந்த கரிய பனையினது பாலையினப்பட்ட நாருடைய அழகிய குமிய காயாகிய நுங்கோடே பெயர்தற்குக் காரண மான, ஆதி அருமன் மூதூர் அன்ன - ஆதியருமன் என்பா னுடைய பழைய ஊரைப் போன்ற, அயம் வெள் ஆம்பல் அம் பகை நெறித்தழை-நீரில் தோன்றிய வெள்ளாம்பலினது அழகிய மாறுபட்ட நெறிப்பினையுடைய தழை ஆடை, தித்திக் குறங்கின் ஊழ் மாறு அலைப்ப - சுணங்கினையுடைய துடையின்கண் முறையே மாறிமாறி அசையா நிற்ப, சேயிழை கொழுநற் காணிய வரும் - சிவந்த அணிகலன்களையுடைய பரத்தை ஈண்டு அவளுடைய கொழுநனைக் காணும் பொருட்டு வருதல் ஒருதலை யான் அளியேன் - அங்ஙனம் வருமிடத்து யான் இரங்கத் தக்கவள் ஆவேன்.

விளக்கம்:—கள்இல் - கள்விற்கும் கடை. கேளிர் - கள்ளோடு உறவுபூண்ட களிமாக்கள். விடாது செல்வர் என்பது தோன்ற ஆத் திரை என்றாள். ஆத்திரை - யாத்திரை; செலவு

கள்ளுக்கடைக்குச் செல்வோர், ஆண்டுச் செவ்வி பெறுவிடத்து, உள்ளூரின்கண் உள்ள தம் பனை நுங்கையுண்டேனும் அவ்வேட்கை

யைத் தணிக்கக் கருதிப் பனை நுங்கோடே மீண்டாற் போலே, தலைவன் பரத்தையரில்லிற் செவ்வி பெறுமையால், நுங்கனையேனுகிய என்பால் மீண்டனன் போலும் என்பாள், 'கள்ளிற் கேளிர் ஆத்திரை பெண்ணை நுங்கொடு பெயரும் மூதூர்' என்றாள். தலைவன் வாய்மையாக நம்பால் அன்பாலே மீண்டானல்லன் என்பது குறிப்பு. பாலையை அரிந்து கொள்ளும் கள்ளைப் பரத்தைக்கும், கிழங்கு முதலிய தருதற்குக் காரணமான நுங்கை மகப் பேற்றிறகும் அறதிற்கும் உரிய தனக்கும் உவமித்த நயமுணர்க.

கள்ளிற் கேளிர் ஆத்திரை என்ற தொடர் கருதி இதனை யியற்றிய நல்லிசைப்புலவர் கள்ளி லாத்திரையார் எனப்பட்டார்.

பஞ்சி - நுங்கின்கண்ணுள்ள நார். குறுங்காய் - ஈண்டு இளநுங்கு என்பது படநின்றது. பெண்ணை - பனை.

இவ்வருமனைப்பற்றி நக்கீரனர் நற்றிணையில் (நூஎ) குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு,

"கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கட் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்காற்
கூழுடை நன்மனை குழுவின விருக்கும்
மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி"

என்பதாம். இச செய்யுளானே அருமன் புலவராற் பாராட்டப்படு மொரு வள்ளலாய்த் திகழ்ந்தான் என்பதுணரலாம்:

பாட்டு - உகூச : தோழி கூற்று

துறை :—பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப்பறிவுறீஇயது. அஃதாவது, தலைவியைப் பகற்குறியிடத்தே காண்டற்கு வந்த தலைவன, சிறைப்புறமாக வந்து நின்றனனாக, அவன வரவுணர்ந்த தோழி, அவன் வரவுணராதாள் போன்று தலைவிக்குக் கூறுவாளாய்த் தாய் அவளை இல்லின்கண் வைத்துப் பாதுகாக்க எண்ணியிருத்தலை அவன் அறிந்து கொள்ளும்படி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவன் நாம் கடலாடுமிடத்தும், கடற்கரைச்சோலையிலே தங்குமிடத்தும், ஆயமோடாடுமிடத்தும், ஏதிலான் போல வந்து ஞெரேலென நம்மைத தழுவி நீங்கின் அலராகும். அங்ஙனமன்றியும் நின் அல்குலிற் பொருந்திய தழையுடையினும் நம்மருங்கின் நீங்காளாய்ப் பயின்று நேரிற்காண அலர்தந்து, நம்மன்னை நம்மை இற்செறிக்கும்படி செய்து விட்டனன்; யாம் இனி என் செய்வேம்!' என்று கூறுகின்றாள்.

உகூச. கடலுட ஞடியும் கான லல்கியும்
தொடலே யாயமொடு தழுவணி யணிந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன். செலினே யலர்ந்தன்று மன்னே
தித்தி பரந்த பைத்தக லல்குல்
திருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்குழைத்
தழையினும் உழையிற் போகான்
தான்தந் தனன்யாய் காத்தோம் பல்லே.

—அஞ்சியாந்தையார்.

(இ - ள்.) கடல் உடனுடியும் கானல் அல்கியும் - கடலின் கண்ணே நீராடியும் கடற்கரைச் சோலையிலே வதிந்தும், தொடலே ஆயமொடு தழுவணி அயர்ந்தும் - மாலையை யுடைய மகளிர் கூட்டத்தோடே குரவைக்கூத்தாடியும் யாம் விளை யாடுங்கால், நொதுமலர் போலக் கதும் என வந்து முயங்கினன் செலின் - அயலார் போலே ஞெரெலென நம்பால் வந்து தழுவிச் சென்றிருப்பனேல், அலர்தன்று - அலராயிற்று. அன்றி யும், தித்தி பரந்த பைத்த அகல் அல்குல் திருந்து இழை துயல்வுக் கோட்டு அசைத்த - சுணங்குபடர்ந்த விரிந்தகன்ற திருத்தமுறசெய்த அணிகலனகள் அசைதலையுடைய அல்கு லினது பகுதத்தே யாத்த, பசுங்குழைத் தழையினும் உழையின் போகான் - பசிய தளிராகிய தழையுடையைக் காட்டினும நம் மருங்கிருந்து அகலாதவனுகி, யாய் காத்தோம்பல் தான தந்த னன் - நம் அன்னை நமமை இற்செறித்துப் பாதுகாத்தலைத் தானே உண்டாக்கினன்.

விளக்கம் :—நெய்தனிலத்தலைவியாதலால் கடலும் கானலும் கூறி னள். தொடலே - மாலே. ஆயம் - விளையாட்டுமகளிர் கூட்டம். தழு வணி - குரவைக் கூத்து. மகளிர் தம்முட் கைகோத்துத் தழுவி ஆடு தலின் தழுவணி எனப்பட்டது. "சீர்மிகு நெடுவேட் பேணித் தழுஉப் பிணையூஉ சேரிதொறும் நின்ற குரவை" (சுகச-இ.) என்றார் மதுரைக் காஞ்சியினும.

ஆடியும் அல்கியும் அயர்ந்தும் யாமிருப்புழி என்க. யாமிருப்புழி என வருவித்துரைக்க. கதுமென : விரைவுக்குறிப்பு. தித்தி-சுணங்கு. பைத்தல் - விரிதல். கோடு - பக்கம். குழைத்தழை - குழைவையுடைய தழை எனினுமாம். தம்மருங்கினின்றும் அகலாத தலைவனுக்கு, தம்மிடையினின்றும் நீங்காத தழையுடை உவமை. இங்ஙனம் நம்மை நீங்காதுகியபோது அலர் உண்டாகித் தாய் அறிந்து நம்மைக் காத்தோம்பல் தலைப்பட்டாள் என்பாள், 'தாய் ஓம்பல் தான் தந்தனன்' என்றாள். தாயோம்பற்குத் தானே காரணமாயினன் என்ற வாறு.

ஆதலால் இனிப் பகற்குறி வாரற்க என்று, குறிப்பால் தலைவனை மறுத்தவாறு.

பாட்டு - உகூடு : தோழி கூற்று

துறை :—வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது அஃதாவது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தோழியை வாயில் வேண்டியபொழுது, 'நீ தகாத ஒழுக்க முடையை,' என்று தோழி வாயில் மறுத்தது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, "ஐய! நீயோ உடுத்தும், தொடுத்தமை, பூண்டமை, செரீஇயும், ஆயத்தோடே கூடி விழாச்சிறப்போடே வருகின்றனை ; இவ்வூரார் 'பண்டு இவன் வாழ்க்கை ஓர் ஆன் வல்சி வாழ்க்கை; இத்தலைவியை மணந்த பின்னரே அவ் வாழ்க்கை இவ் விழாச் சிறப்புடைய தாயிற்று' என்று கூறுகின்றார்" என்று கூறுகின்றாள்.

உகூடு. உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமோடு துவன்றி
விழவோடு வருதி நீயே யிஃதோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.

—தூங்கலோரியார்.

(இ - ள்.) ஐய!, உடுத்துந் தொடுத்தும் பூண்டும் செரீஇயும் - ஆடையாக உடுத்தும் மாலையாகத் தொடுத்தணிந்தும் அணிகலன்களாக அணிந்தும் செவிகளினும் கூந்தலிடத்தும் பூக்களாகச் செருகியும், தழையணிப் பொலிந்த ஆயமோடு துவன்றி - தழையாடை ஒப்பனைசெய்யப்பட்ட அழகாலே பொலிவுபெற்ற பரத்தையர் குழாத்தோடே நெருங்கி, நீ விழவொடு வருதி-நீ விழாகொண்டாட்டத்தோடே வாராநின்றனை, இவ் ஊர் இஃதோ ஓர் ஆன் வல்சிச் சீரில் வாழ்க்கை-இதுகண்ட இவ்வூர் வாழ்மாந்தர்கள இதோ காண்மின் பண்டு ஒரோவோர் ஆன்தரும் பயனைக்கொண்டு உண்ணும் உணவையுடைத்தாயிருந்த சிறப்பற்ற எளிய வாழ்க்கை, பெருநலக் குறுமகள் வந்தென - பெரிய நன்மையையுடைய சிறுமி ஒருத்தி வாழ்க்கைத் துணைவியாக வந்து வாய்த்தாளாக, இனி விழவு ஆயிற்று என்னும் - இப்பொது விழாவெடுத்தற்குரியதாயிற்று என்று தமக்குள் ஒருவர்க் கொருவர் கூறுகிற்பர்.

விளக்கம்:—இது, மணந்துகோடற்கு முன்னர் நல்குரவுடைய னாயிருந்த தலைவன் ஒருவன், ஒருதலைவியை மணந்து கொண்ட பின் னர்ச் சிறந்த செல்வமுடையன் ஆயினன்; அந்நன்மையெல்லாம் திரு மகள் போன்ற தலைவி தன்னில்லம் புக்க சிறப்பாலே பெருகின; அங் ஙன மிருந்தும், தன் வாழ்க்கைத் துணைவியின் சிறப்பினைக் கருதாமல் தலைவன் பரத்தமை பூண்டொழுகினான்; அவன் பரத்தையர் சூழ விழாக்கொண்டாடி யிருந்து ஒருநாள் தலைவியின் மனைக்கு வந்து தோழியை வாயில் வேண்டினானாக, அவற்குத் தோழி தலைவியாலுற்ற நன்மையைக் குறிப்பாற் சுட்டிக்காட்டி, அந்நன்றியை நீ மறந்தனை எனக் கடிந்துரைக்கின்றதாகக் கொள்க.

உடுத்தன் முதலிய நான்கிற்கும் ஆடை முதலியன பெய்து கூறுக. இஃதோ - என்றது காண்போர் ஒருவர்க்கொருவர் சுட்டிய தென்க. இஃதோ காண்மின். சீரில் வாழ்க்கை விழுவாயிற்று; இவ்வுலகியலிருந்த வாறிது என்பர் என்க. பெருநலக்குறுமகள் - பெரிய நலந்தோன்று தற்குக் காரணமான குறுமகள் என்க.

ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை என்றது, ஒரு ஆனினது பயனை விற்று அதுகொண்டுண்ணற் குரிய நல்குரவு வாழ்க்கை என்றவாறு.

> "சிறப்புஞ் சீரு மின்றிச் சீறூர்
> நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
> ஓரான் யாத்த ஒருஞாண் முன்றில்
> எதில் வறுமனை." (அகம்-உசக)

எனவரும் அகநானூற்றுச செய்யுட்பகுதியை ஈண்டு நினைக.

பாட்டு - உகூ : தலைவி கூற்று

துறை:—காணும் பொழுதிற காணப் பொழுது பெரிதாக லான், அஃதாற்றாளாய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தாளைத் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, களவுக்காலத்தே தலை வன் தலைவியைக் கண்டு அளவளாவும் காலத்தைப்பார்க்கினும் காணப்பொழுதே மிகுதியாகலான், அப்பிரிவாற்றாது தலைவி நாடோறும வருந்துவாள் ஒருநாள், தலைவன் சிறைபபுறத்தே வந்து நிற்றலை அறிந்தும் அறியாதாள் போன்று தோழிக்குக் கூறுவாளாய்த் தன்னிலையைத் தலைவற்கு உணர்த்தியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "தண்ணந் துறை வனை நீ காணும் பொழுது கடுஞ்சொற்கள் கூறி 'இவள் இங்ங னம் வருந்தும்படி நீ துறந்து போதல் நினக்குத் தகுமோ?' என்று இடித்துரையாதேகொள்" என்று கூறுகின்றாள்.

உகூ. அம்ம வாழி தோழி புன்னை
அலங்குசினை யிருந்த அஞ்சிறை நாரை
உறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்

கள்நாறு நெய்தல் கதிரோடு நயக்கும்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழறல் ஓம்புமதி தோடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மின் தகுமோ என்றனை துணிந்தே.

—பெரும்பாக்கனர்.

(இ - ள்.) அம்ம வாழி தோழி - தோழி ஒன்று கூறுவன் கேட்பாயாக, புன்னை அலங்கு சினை இருந்த அம் சிறை நாரை - புன்னை மரத்தினது அசைகின்ற கொம்பின்கண் இருந்த அழகிய சிறகையுடைய நாரை, உறுகழிச் சிறுமீன் முனையின்-மிக்க கழியிடத்தே சிறிய மீன்களைத் தின்று வெறுத்ததாயின், செறுவில் கள் நாறு நெய்தல் கதிரொடு நயக்கும் - கழனிகளிடத்தே தேன் மணக்கும் நெய்தற்பூவை நெற்கதிரோடே தின்ன விரும்புதற்குக் காரணமான, தண்ணந் துறைவன் காணின்-குளிர்ந்த துறையையுடைய தலைவனை இனி நீ காணுங்கால், முன்னின்று துணிந்து-அவன் கண்முன்னே நின்று துணிந்து, தோடியோள் இன்னள் ஆகத் துறத்தல் நும்மின் தகுமோ என்றனை - வளையலையுடைய தலைவி இவ்வாறு ஆற்றாளாகும்படி அவளைப் பிரிந்து போதல் நுமக்குத் தகுதியாகுமோ என்று இன்னாரென்ன, கடிய கழறல் ஓம்பு மதி-கடிய சொற்களைக்கூறி இடித்துரைத்தலைப் பாது காப்பாயாக.

விளக்கம்:—அம்ம - கேட்பித்தற்கண் வந்தது. வாழி-அசைநிலை. அலங்குசினை - அசைகின்ற கொம்பு. உறு - மிகுதிப்பொருள் குறித்த உரிச்சொல். செறு - கழனி. முனையின் - தின்று வெறுத்த விடத்தே முன்னின்று அவளுலுண்டாகிய இன்னலை எடுத்துக்கூறின் அவன் துன்புறுவான் ஆகலின், அங்ஙனம் கூறல் என்றாள். இதனால் தன் ஒழுக்கம் இடித்துரைத்தற் கேற்ற தாதலைத் தலைவன் உணர்ந்து கொள்வானுதல் உணர்க.

'நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.'' (நாலடி-உஉ)

என்னும் அறம்பற்றிக் கூறுவாள் போன்று கடிய கழறல் ஓம்பென்றாள். தோடியோள் என்ற குறிப்பானே அத்தொடிகள் கழன்று இங்ஙனம் மெலிந்தாளாக என்க.

நும்மின் என்றது, பெருந்தன்மைகட் கெல்லாம் உறைவிட மாய்த் திகழும் சான்றோராகிய நுமக்கு என்பதுபட நின்றது.

இங்ஙனம் எதிர்நின் றிடித்துரைத்தல் நம்மனோர்க்கு ஏலாதென்பாள், 'துணிந்து' என்றாள்.

தோழியைக் கழறற்க என்னும் வாயிலாய்த் தானே தலைவனைக் கழறினமை உணர்ந்தின்புறுக.

இனி, புன்னை அலங்குசினை யிருந்த நாரை, கழிச் சிறுமீனை வெறுத் துழிச செறவில் நெய்தல் கதிரொடு நயக்கும் என்றது, இடையூறுமிக்க இக்களவு நிலையில் எய்தும் இன்பத்தினும் துன்பமே பெரிதாகலின் இது வெறுக்கத் தக்கதாயிற்று. இனி நாம் வரைந்து கொண்டு நம் மனையிலிருந்து இன்புறுதலே தகுவதாம் என்னும் உள்ளுறை தோற்றி நின்றது காண்க.

பாட்டு - உகூள : தோழி கூற்று

துறை:—தோழி வரைவு மலிந்தது. அஃதாவது, கள வின்கண் தலைவனைக் காண்டற்கு இடையூறுகள் பல வுண்மை யானும, தலைவி அவனைக் காணுதலைமிகலள் ஆதலானும், இனித் தலைவனேடே தமர் அறியாது சென்று அவனை மணந்து கோடலே தகுதி எனத் தோழி தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கிக், 'கொடுஞ்சிலை மறவர்கள் ஆறுசெல்வோரைக் கொன்று அவருடலிற் றழையை இட்டு வைத்த பதுக்கைகள், ஊர்போலத் தோன்றுகின்ற மலை களையுடைய பாலையின்வழியே நம்தலைவனேடு நீ போதலே இப்பொழுது செய்யத்தகுந்த செயலாம்' என்று உடன்போமாறு உணர்த்துகின்றாள்.

உகூள. அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணுர்
மாறுநின் றிறந்த ஆறுசெல் வம்பலர்
உவலிடு பதுக்கை ஊரின் தோன்றும்
கல்லுயா நனந்தலை நல்ல கூறிப்
புணாந்துடன் போதல் பொருளென
உணர்ந்தேன் மன்றவர் உணரா வூங்கே.
—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர்.

(இ - ள்) அவ் விளிம்பு உரீஇய கொடுஞ்சிலைமறவர் - அழகிய விளிம்பைக் கையானே உருவிவிட்ட கொடிய வில்லை யுடைய மறவருடைய, வைவார் வாளி விறல் பகை பேணுர் - கூர்மையையும நீட்சியையுமுடைய அம்புகளின் வெற்றியுடைய பகைமையினின்றும் தம்மைப் பாதுகாவாராகி, மாறு நின்று இறந்த ஆறுசெல் வம்பலர்-அவற்றை எதிர்த்து நின்றமையானே இறந்துபட்ட வழிச்செல்வோர் உடலின் மிசை, உவல் இடு பதுக்கை ஊரின் தோன்றும்-தழையிட்டு மூடப்பட்ட குவியல்கள்

ஊரின்கண் குடில்கள்போல் தோன்றுகின்ற, கல் உயர் நனந் தலை - மலைகள உயர்ந்த அகன்ற இடத்தின் வழியே, நல்ல கூறி- நன்மையுடைய செய்திகளைக் கூறிக்கொண்டு, புணர்ந்து உடன் போதல் - தலைவனோடு சேர்ந்து ஒருங்கே செல்லுதல் ஒன்றே, பொருள் என - செயத்தகும் செயலாகும் என்று, அவர் உணரா ஊங்கே உணர்ந்தேன் - நம்தலைவர் உணர்தற்கு முன்னரே யான் உணர்வேனையினேன்.

விளக்கம் :—'தோழி! கல்லுயர் நனந்தலை நல்ல கூறித் தலை வருடன் நீ இப்போது போதலே செய்யத்தக்கதென அவர் கருதுவ தற்கு முன்னர் யான் கருதுகின்றேன்' என்பதாம்.

தலைவனது வரைவிற்குத் தமர் உடம்படார் எனக் கண்டதோழி, தலைவியைத் தலைவனோடு செல்ல உடம்படுவித்த தென்றுணர்க.

அவ்விளிம்பென்றது வில்லின் மேல் விளிம்பினை என்பாருமுளர். மறவர் வில்லினை உருவும் வழக்கமுடையராதலை, "வீங்கு விளிம்பு உரீஇய விசையமை நோன்சிலை, வாங்குதொடை பிழையா வன்கண் ஆடவர்" (அகநா-களிறு) என்றும், "அவ்விளிம் புரீஇய விசையமை நோன் சிலைச், செவ்வாய்ப் பகழிசெயிரோக் காடவர்" (அகநா-நூஎக) என்றும் பிற சான்றோர் கூறுமாற்றானும் உணர்க. கொலைக்கருவியா தலான் கொடுஞ்சிலை எனப்பட்டது. வை - கூர்மை; வார் - நீட்சி; தவறுது கொல்லும் அம்பாகலின் விறற்பகை எனப்பட்டது.

வாளிப்பகை பேணர் ஆறுசெல் வம்பலர் பதுக்கை ஊர்போல் தோன்றும் வழியைப் போதல்பொருளென உணர்ந்தேன் என்றது, அம்மறவர் செய்யும் கொடுமையினுங் காட்டில் நந்தமர் செய்யும் கொடுமை பெரிது எனத் தலைவிக்குக் குறிப்பான் உணர்த்தியவாறு. "சான்றோர் இல்லாத் தொல்பதியிருத்தலின், தேன்றேர் குறவர் தேயம் நன்றே" என்ற வெற்றிவேற்கைச செய்யுள் ஈண்டு நினைக்கற்பாலது. பொருள் என்றது, பொருளாகக்கருதிச செய்யத்தக்கது என்றவாறு. மன்ற - தேற்றத்தின்கண் வந்தது. இதனைத் தலைவனும் உணர்தல் வேண்டும்; அவன் உணருமுன் யான் உணர்ந்தேன் என்பாள், 'அவர் உணராவூங்கே' என்றாள். தலைவனும் இதற்கு உடன்படல் ஒருதலை என்பது குறிப்பு இது வரைந்துகோடற்கு உபாய முணர்த்தலான் வரைவுமலிந்த தாயிற்றென்க.

பாட்டு - உகூஅ : தோழி கூற்று

துறை :—கிழத்திக்குத் தோழி குறைமறுமற் கூறியது. அஃதாவது, தன்பாற் குறையிரந்துநின்ற தலைமகன் பொருட்டுத் தலைவியைக் குறைநயப்பிக்குந் தோழி அவள் மறுக்காதபடி சூழ்ந்துரைத்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவன் நாடோறும் நம் சேரிக்கு வந்து வந்து என்பாற் குறையிரந்து செல்லாநின்றனன்; அவன் நோக்கம் அவனது துன்பத்தை

விளக்குகின்றது; இங்ஙிலே நீளின் அவன் மடலேற எண்ணியுளன் என்று யான் உணர்கின்றேன்,' என்று கூறி அவனை ஏற்றுக்கோடலே நன்றென்பதுபடக் கூறுகின்ருள்.

உகூஎ. சேரி சேர மெல்ல வந்துவந்
தரிது வாய்விட் டினிய கூறி
வைகல் தோறும் நிறம்பெயர்ந் துறையுமவன்
பைதல் நோக்கம் நினையாய் தோழி
இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதோன்று குறித்ததவ னெடும்புற நிலையே.

—பரணர்.

(இ - ள்) தோழி—, சேரி சேர மெல்ல வந்து வந்து - நமது தெருவினை அடைய மெல்ல வந்து வந்து, அரிது வாய் விட்டு இனிய கூறி - எப்போதாவது அரிதாகத் தன் வாய் மலர்ந்து நமக்கு இனியமொழிகளையே கூறி, வைகல் தோறும் நிறம் பெயர்ந்து உறையும் - நாள் தோறும் தனது மேனியின் நிறம் வேறுபட்டுத் தங்குகின்ற அத்தலைவனது, பைதல் நோக்கம் நினையாய் - வருத்தந் தெங்கிய பார்வையினை நீ நினைதலைக் காண் பாயாக, இன் கடுங் கள்ளின் அகுதை தந்தை - இனிமையும் கடுமையையுமுடைய கள்ளையுடைய அகுதை தந்தையாகிய வள்ளலின் பின்னின்ற, வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர் - வெள்ளிய மூனையினையுடைய சிறிய கோலைக் கொண்ட பாடல்மகளிர் பெறுகின்ற, மடப்பிடிப்பரிசில் மான - மடப்ப முடைய பிடியானையாகிய பரிசிலைப் போல, அவன் நெடும்புற நிலை பிறிது ஒன்று குறித்தது - அவன் நம்பால் பின்னிற்கின்ற நிலை நம்மைக் குறையிரத்தலை யன்றியும் வேறொன்றனைக் கருதிய தாக இராகின்றது

விளக்கம் :—அவன் பைதலெனக்கம் நினையாய்! அவன் புறநிலை பிறி தொன்று குறித்தது என்க.

நஞ்சேரிக்கு அவன் வரலாகாமையின், செவ்வி நோக்கிச சேரி யண்மையின் வந்தென்பாள், 'சேரி சேர' வந்தென்ருள். பிறர் காணுத வாறு வரவேண்டுதலின், 'மெல்ல வந்'தென்ருள். அவன் குறையை நம்பாற் கூறுந்துணிவிலன் ஆகலின் கூறத்துணியாஞய் நமக்கினியவே கூறும் பொருட்டு எப்போதாவது சிறிது பேசுவன் என்பாள், 'அரிது வாய் விட்டு இனிய கூறி' என்ருள். முன்னத்திற் கூறுவதல்லது வாய் விட்டுரையான் என்றவாறு. வாய்விட்டுக் கூறுதலும் தானுற்ற நோய் அன்றென்பாள், 'இனிய கூறி' என்ருள். இங்ஙனம் நாடோறும்

வருவன் என்பாள், 'வந்து வந்து' என்றாள். "நெய்ணற் கண்ட திருமேனி இன்று பிறிதாய் நிலைதளர்வான்" என்பாள், 'வைகறோறும் நிறம் பெயர்ந்துறையும்' என்றாள். அவன் கண்பார்வையிலே அவனகத் துறையும் பைதல் மெய்ப்பட்டு நன்கு தோன்றுமென்பாள், 'அவன் பைதல் நோக்கம் நினையாய்' என்றாள். யான் அப்பார்வையினின்றும் அவன் இனி மடலேறத் துணிவன் என்று அறிந்தேன்; நீயும் அப் பார்வையினை நினைத்துப் பார்ப்பாயாயின் அங்ஙனமே நினைப்பாய் என் பாள், 'நோக்கம் நினையாய்' என்றாள்.

இங்ஙனமாக அவன் பின்னின்றும் அவனை யாம் எலோமாயினேம்; ஆகவே, இனி அவற்கு மடலல்லதில்லை வலி; இனி மடலேறவே எண்ணு கின்றனன் என்பாள், 'அவன் நெடும்புறநிலை பிறிதொன்று குறித்தது' என்றாள்.

இனி, அவன் புறநிலை பிறிதொன்று குறித்ததாதற்கு அகுதை தந்தையினிடம் அகவன்மகளிர் பெறும் பரிசு உவமை என்க. இவ் வுவமை கூறியதன் கருத்தென்னையோவெனிற் கூறுதும்:

மண்ணிய சென்ற பெண் ஒருத்தி, புனல் தரு பசுங்காய் தின்ற தப்பற்கு அவளை நன்னன் என்பான் கொலை செய்தானாக (உகூஉ) குறுந்தொகைச் செய்யுளையும் அதன் விளக்கத்தையும் பார்க்க. அப் பெண் கோசர்குடிப் பெண்ணாவாள்; அவளை மீட்டற்கு அவள் தமர், யானை முதலியன கொடுத்தும் கொள்ளாது கொன்ற நன்னனின் நறு மாவை வேரோடு அழிக்கமுனைந்த கோசர், ஒரு சூழ்ச்சி தொடங்கினர்; பாடல்வல்ல மகளிர்க்குப் பிடிப்பரிசில் மிகுத்து நல்கும் அகுதை தந்தையினிடம் அகவன் மகளிரைச் செலுத்தி, அவன்பால் அவர்கள் பெற்ற பரிசிலாகிய பிடிகள் பலவற்றையும், நன்னன ஊரில் இல்லாத செவ்வியில் அவன் நறுமாமரத்திற் பிணிக்கச் செய்தனர். அப்பிடிகள் அம்மாவினை வேரோடு பிடுங்கி அழித்துவிட்டன என்பதாம். எண்டு அகவன் மகளிர் அகுதையிடம்பெற்ற பிடிப்பரிசில் பரிசிற் பொருட்டா காமல், நன்னன் நறுமா கொல்லலாகிய பிறிதொன்று குறித்த தாஞற் போன்று, நந்தலைவன் நீளப் பின்னிற்றல் மடலேறுங் கருத்தாலேயாம் என உவமை கூறிய படியாம்; இங்ஙனம் கோசர் சூழ்ச்சி செய்ததனையே, "நன்னன் நறுமாகொன்று நாட்டிற் போக்கிய ஒன்று மொழிக் கோசர் சூழ்ச்சி போல" என இந்நூல் எகூஆம் செய்யுளிற் கூறப்பட்டுள்ள தென்க. எகூஆம் செய்யுளையும் இச் செய்யுளைப்பாடிய பரணரே பாடினமையும் நினைவு கூர்க. இந்நன்னன் வரலாற்றை "மண்ணிய சென்ற" என்ற இந்நூல் உகூஉ-ஆம் செய்யுளிற் கூறியவரும் பரணரே ஆவர்.

பாட்டு - உகூகூ : தலைவி கூற்று

துறை :—சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத் தது. அஃதாவது, தலைவன் சிறைப்புறதே வந்துநிற்றலை அறிந்த தலைவி, அவன் கேட்கும்பொருட்டு அவன் வரவுணராதாள் போன்று தோழிக்குக் கூறுவாளாய்த் தன்னிலையைத் தலைவற் குணர்த்தி வரைவு கடாயது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவனைக் கண்டன என் கண்களாக, அவன் கூறிய இன்னுரையைக்

கேட்டன என் செவிகளாக, இங்ஙனம் கண்டும் கேட்டும் அறியாத இத்தோள்கள் எற்றுக்கு அவன் மணந்தநாள் நலம் எய்தியும தணந்த நாள் நெகிழ்ந்தும் விடுகின்றன ; இஃதொரு வியப்பு' என்கின்றாள்.

உகூக. இதுமற் றெவனே தோழி முதுநீர்ப்
புணரி திரூக்கும் புள்ளிமிழ் கானல்
இணரவிழ் புன்னை யெக்கர் நீழற்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்னெங் கண்ணே யவன்சொற்
கேட்டன மன்னெஞ் செவியே மற்றவன்
மணப்பின் மாணல மெய்தித்
தணப்பின் ஞெகிழ்பவெந் தடமென் றோளே.

—வெண்மணிப்பூதியார்.

(இ - ள்.) தோழி—, முதுநீர்ப் புணரி திரூக்கும் புள் இமிழ் கானல் - பழையதாகிய நீரையுடைய கடலின் அலைகள் தவழாநின்ற பறவைகள் ஆரவாரிக்கும் கடற்கரைச் சோலையின் கண்ணே, இணர் அவிழ் புன்னை எக்கர் நீழல் - பூங்கொத்துகள் மலர் சலியுடைய புன்னைமரத்தின் கீழ் இடுமணல்மேற் பரவிய நீழலின்கண், புணர் குறி வாய்த்த ஞான்றை - தலைவனோடு கூடும் குறிப்பு எமக்கு வாய்த்த பொழுது, எம்கண் கொண்கற் கண்டன - அத்தலைவனைப் பார்த்தன எமமுடைய இக்கண்களேயாம், எம் செவி அவன் சொற்கேட்டன - எம்முடைய இச் செவிகளே அவன் கூறிய சொற்களைக் கேட்டன, அவன் மணப்பின் மாண் நலம் எய்தி-அவன் நம்மை அணையுங்கால் மாட்சிமையுடைய அழகை அடைந்து, தணபபின் - அவன் பிரிந்தால், எம் தடமென் தோள் - அவனை என்றும் கண்டும் கேட்டும் அறியாத இப் பெரிய தோள்களே, ஞெகிழ்ப - சோர்வனவாயின, இஃது எவன் - இஃதென்ன வியப்பு!

விளக்கம்:—செய்யுளாகலான் சுட்டுச் சொல் முன்வந்தது. எவன் என்வினை இஃதோர் வியப்பு என்னும் பொருள்பட நின்றது. முதுநீர் : அன்மொழித்தொகை. முதிய நீரையுடைய கடல் என்க. நிலந் தோன்றுதற்கு முன்பே கடல் தோன்றிற் றென்பவாகலான், அது முதுநீர் எனப்பட்டது. புணரி - அலை. திரூத்தல் - மோதித் தழுவுதல். இமிழ் - ஆரவாரம். இணர் - பூங்கொத்து. எக்கர் - இடுமணல். அலை கொணர்ந்திட்ட மணல் என்க. எக்காமேனின்ற புன்னைநீழலில் என்றவாறு; இஃது இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடம் கூறியவாறும்.

புணர்குறி வாய்த்தலாவது - புணர்தற்குரிய குறிப்புகளைத் தலைவி உடையளாதல். தலைவனைக் கண்டும் கேட்டுமிராத இத்தோள்கள்

அவன் பொருட்டு இங்ஙனம் மாணலம் எய்துதலும் நெகிழ்தலும் வியப் பாகும் என்றாள் என்க.

இதனால் தலைவன் பிரியுங்கால் தோள் நெகிழ்ந்து தான் மெலிவாளாதலை அவனுக்கு உணர்த்தப் பட்டமை உணர்க.

பாட்டு - ஈ.oo : தலைவன் கூற்று

துறை :—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச் சமும், வன்புறையும் கூறியது. அஃதாவது, பாலதாணையால் தலைவியை ஒரு பூம்பொழிலிடத்தே தலைப்பட்டுப் புணர்ந்த தலைவன், தான் அவளைப் பிரியும் நிமித்தம், பிரிவுளதென்பதை உணர்த்திப் பின்னர் 'அவளைப பிரியேன்' என வற்புறுத்தியது.

இதன்கண், தலைவன் தலைவியை நோக்கி, "கூந்தலையும் வாயையும் தித்தியையும் உடைய மாயோயே! 'நீ அஞ்சற்க' என்று யான் கூறிய சொல்லை அயிராதே கொள்; கடல் சூழ்ந்த நிலவலயம் முழுதும் நின்னைப் பிரிந்தழிக் கிடைப்பதாயினும் நின்னை யான் பிரியேன் காண்," எனக் கூறுகின்றான்.

ஈ.oo. குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கோங்கின் அன்ன
நுண்பல் தித்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலியே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழலனுன் நின்னுடை நட்பே.

—பிறைகுடி ஆந்தையார்.

(இ - ள்) குவளை நாறும் குவை இருங் கூந்தல் - குவளை மலரின் மணங்கமழாநின்ற கற்றையாகிய கரிய கூந்தலையும், ஆம்பல் நாறும் தேம பொதி துவர்வாய் - ஆம்பல்மலரின் மணங்கமழாநின்ற தேன் பொதிந்த சிவந்த வாயையும், குண்டு நீர்த் தாமரைக் கொங்கின் அன்ன - ஆழமான நீர்நிலையிற் றோன்றிய தாமரைமலரினது தாதை ஒத்த, நுண் பல் தித்தி மாயோயே - நுண்ணிய பலவாகிய சுணங்கினையும் மாமையையும் உடையவளே!, நீ அஞ்சல் என்ற என் சொல் அஞ்சலை - நீ அஞ்சாதே கொள் என்று யான் கூறிய சொல்லைக்கேட்டு அஞ்ச வருவதும் உளதோ என்று கருதி அஞ்சாதேகொள், யான் குறுங்கால் அன்னம் குவவு மணல் சேக்கும் கடல் சூழ் மண்டிலம் பெறினும் - யான் நின்னைத் துறந்தழிக் குறிய காலை யுடைய அன்னம் குவிந்த மணலிடத்தே தங்காநின்ற கடலாற்

சூழப்பட்ட நிலவுலயம் முழுதும் பெறக்கிடப்பினும், நின்னுடை நட்பு விடல் சூழலன் - நினது நட்பினை விடுதலைக் கருதேன் காண்!

விளக்கம்:—குவளை, ஆம்பல், தாமரை என்பன அவற்றின் மலர் களுக்கு ஆகுபெயர்கள். குவை - குவியல்; ஈண்டுத் கற்றை என்க. இருமை, நிறத்தின் மேற்று. தேம் - தேன். ஈண்டுத் தலைவியின் வாலெயிறூறிய நீரைக் கருதிக் கூறினன் என்க. இயற்கைப் புணர்ச்சிக் கண் தலைவியினது கூந்தற் பாயலிலே கிடந்து வாலெயிறு ஊறிய தேன் பருகினவுகலின் அந்நுகர்ச்சி தோன்றக் கூந்தல் வாய் திந்தி மாமை முதலியவற்றை விதந்தோதினன என்க. இதனுல் தலைவியைத் தலைவன் நயந்தமை விளக்கினன். அஞ்சல் என்ற சொல் அஞ்சாதே என்பதாம். இயற்கைப்புணர்ச்சி எய்திய தலைவன் இனி ஆயத்தார் அறியாமைப் பொருட்டுத் தான் பிரியக் கருதுவான், புணர்ச்சிக் இன மாகிய பிரிவென்பதும் ஒன்று உளது என அவள் அறியும் பொருட்டு, 'யான் சென்று வருவன், நீ அஞ்சற்க' என்ற வழித் தலைவி கடுங்கிப் பிரி வென்பதும் ஒன்றுளது போலும் என அஞ்சிய வழிக் கூறிய தென்க. அங்ஙனம் அஞ்சியவளை, யான் இங்ஙனம் பிரியினும் நின்னட்பை விடுவேனல்லேன் எனத் தலைவி மனக கொளத்தேற்றித் தெளிவகப் படுத்துதற்குச் 'கடல் சூழ்மண்டிலம் பெறினும் விடல் சூழலன் யான் நின்னுடை நட்பே', என்றன். நின்னைப் பிரிந்து பெறும சிறப்புடைப் பொருள் யாண்டுமில்லை என்பான், கடல் சூழ் நிலவுலயத்தையே எடுத்துக் காட்டினன். இதனுல் காதலின்பத்தினும் உயர்ந்த இன்ப மில்லை என்பது அவன் கருத்தாதலும் அறிக.

கொங்கு - தாது. திந்தி - சுணகரு. மாயோள் - மாமைநிற முடையவள். மாயோயே: விளி. அஞ்சல் - அஞ்சாதேகொள். அஞ்சலை - அஞ்சற்க. உலகம் முழுதும் என்பான், - 'கடல் சூழ் மண்டிலம்' என்றன். விடல் சூழ்தல் - விடக் கருதுதல்.

குறுங்காலன்னம் குவவு மணற் சேக்கும் என்றது, அன்னப்பறவை தனகருத் தகுந்த வெண்மணற் குன்றை விரும்பி ஆண்டே உறைந்தாற் போன்று யானும் நின்னிடத்தேயே உறைவன் என்னும் குறிப்பிற்று.

பாட்டு - நுஅக : தலைவி கூற்று

துறை:—'வரைவிடை வைப்ப ஆற்றகிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் வரை விடைவைத்துப் பொருளீட்டச் சென்ற பொழுது, 'நீ அவனைப் பிரிந்துறையவல்லையாயிருந்தனையோ?' என்று வினய தோழிக் குத் தலைவி அப்பொழுதற்ற தன்னிலையைத் தெரித்தோதியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கித், தலைவன் பிரிந் துறைந்த ஒவ்வோரிரவும், நள்ளிரவின்கண்ணே அவன் மணி யுடை நெடுந்தேர் வாராத பொழுதும் சேய்மைக்கண் வருவது போன்று என் செவிகளிலே மணியொலி ஒலியா நிற்கும். செவிகள் அவ் வொலியை இடையறாது ஓர்ப்பனவாகக் கண்களோ துயில் துறந்தன' என்கின்றாள்.

நூ0க. முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கோழுமட லிழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பாணுட் கங்குல்
மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமோடு
துயில்துறந் தனவால் தோழியென் கண்ணே.

—குன்றியனார்.

(இ - ள்.) தோழி—, முழவு முதல் அரைய தடவு நிலைப் பெண்ணை - முழவை ஒத்த அடிமரத்தினையுடைய வளர்ந்து நிற்றலையுடைய பனையின, கொழு மடல் இழைத்த சிறு கோல் குடம்பை - கொழுவிய மடலின்கண்ணே இயற்றிய சிறிய கூள்ளிகளாலை கூட்டிகண் இருந்து, கருங்கால் அன்றில் காமர் கடுஞ்சூல் வயவுப் பெடை அகவும் - கரிய காலையுடைய ஆண் அன்றிலை அதற்கு விருப்பத்தையுடைய முதற சூல் கொண்டுள்ள வயாநோயையுடைய பெண்ணன்றில் அழையாநிற்கும், பாணுள் கங்குல் - நடுநாளாகிய இரவின்கண்ணே, மன்றம் போழும் இனமணி நெடுந்தேர் - தனது உருளாலே அம்பலத்தைப் பிளந்து கொண்டு வருதற்குக் காரணமான திரளாகிய மணிகளை யுடைய தலைவனது நெடிய தேர், வாரா தாயினும் வருவது போலச் செவிமுதல் இசைக்கும் அரவமொடு - வாராதாக இருப்பினும் வருவது போன்று செவியினிடத்தே ஒலியாநின்ற தேர் ஓசையாலே, என்கண் துயில் துறந்தன - எனது கண்கள் அந்நாள்களெல்லாம் உறங்கா திருந்தன காண்.

விளக்கம்:—வரைவிடைக் கிடந்த நாள் எல்லாம் அவர் வருவர் வருவர் என்று எதிர்பார்க்கும் எண்ணம பற்றுக் கோடாக ஆற்றியிருந் தேன் என்றவாறு. இதனை "இரவுக்குறி பிழைத்த விடத்துத் தலைவி கூறியது" என்பர் நச்சினார்க்கினியர். தலைவன் வருகையை மன மொருங்கி ஆராய்கின்றுளாகலின், செய்மைக்கண் மணி யொலிப்பது போன்று தலைவிக்குத் தோன்றிற்று. இங்ஙனம் தோன்றுதலை நமது அனுபவத்தினும் சிற்சில செவ்விகளிற் காணல் கூடும். முழவு - குட முழா. இஃது பனையின் அடிப்பகுதிக்கு உவமை. தடவு - வளவு. "தடவென் கிளவி கோட்டமும் செய்யும்" (உரி - உக.) என்பது தொல்காப்பியம்.

இதனை 'எதிர் பெய்து பரிதல்' என்னும் மெய்ப்பாட்டிற்குப் பேராசிரியர் எடுத்துக் காட்டுவர். அஃதாவது, "உருவு வெளிப்பாடு; அது தலைமகனையும் அவன் தேர் முதலாயினவற்றையும் தன்னெதிர் பெய்துகொண்டு பரிந்து கையறுதல்" (தொல். மெய்ப் - உஉ.) என்பதாம்.

சிறு கோல் - சிறிய சுள்ளிகள். முட்டையினும் பருவமாகலின் அன்றில் சிறு கோல்களாற் குடம்பைசெய்து அதன்கணிருந்த தென்க. குடம்பை - கூடு.

அன்றிற் பெடை யகவுதல் தன் காமநோயை மிகுவித்தமையின் அதனை நினைந்து கூறினள். மன்றம் - ஊரம்பலம். இனமணி-திரளான மணிகள். இனமணி என்றது, இசைக்கும் அரவம் மணியரவம் என் றற்குக் குறிப்பேதுவாயிற்று.

பாட்டு : ஈ0உ : தலைவி கூற்று

துறை :—வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது. அஃதாவது, வரைபொரு ளீட்டற்குத் தலைவன் பிரிந்தமையை ஆறறுக தலைவியின் நிலைகண்டு வருந்திய தோழிக் குத் தலைவி, தன் ஆற்றுமைக் காரணம் தெரித்தோதியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'அன்னை நந் தலை வன் இவ்வூர் அலர் தூற்றுதலை அஞ்சி வாரானுயினனே! அவன் வாராமையானே உண்டாகும் துன்பத்திற்கு யான் அஞ்சுகின் றேன்! இறந்துபடவும் பெரிதும் அச்சம் உண்டாகின்றது; ஊர் துஞ்சு யாமத்தேனும் என் நெஞ்சில் வருதலன்றி அவன் நேரே வருதலின், யான் எங்ஙனம் ஆற்றுகேன்?' என்கின்றாள்.

ஈ0உ. உரைத்திசின் தோழியது புரைத்தோ அன்றே
அருந்துயர் உழத்தலும் ஆற்றும் இதன்றலைப்
பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்
அன்னை இன்னும் நன்மலை நாடன்
பிரியா நண்பினர் இருவரும் என்னும்
அலரதற் கஞ்சினன் கொல்லோ பலருடன்
துஞ்சூர் யாமத் தானுமென்
நெஞ்சத் தல்லது வரவறி யானே.

—மாங்குடிகிழார்.

(இ - ள்) தோழி —, அருந்துயர் உழத்தலும் ஆற்றும் - பொறுத்தற்கரிய துயரானே வருந்துதலைப் பொறுத்தற்கும் ஆற்றல் இலேம், அதன்றலை பெரும்பிறிது ஆகல் அதனினும் அஞ்சுதும்—அதற்குமேல், இறந்துபடுதலையோ அவ் வருத் தத்தை அஞ்சுதலினுங் காட்டிற் பெரிதும் அஞ்சாநின்றேம், அன்னை—ஐயகோ, இன்னும் நல் மலை நாடன் - யான் இந்நிலை எய்திய பின்னரும் நலல மலைநாட்டையுடைய தலைவன், இரு வரும் பிரியா நண்பினர் என்னும் அலரதற்கு அஞ்சினன் கொல்- இவ் விருவரும் பிரியாத நண்பர்களாயினர் என்று இவ் வூரினர்

கூறும் பழியை அஞ்சுகின்றான் போலும், ஊர் பலருடன் துஞ்சு யாமத்தானும் - ஊரிலுள்ளோர் பலரும துயிலாகின்ற நடு இரவின்கண்ணும், என் நெஞ்சத்து அல்லது வரவு அறியான் - என் நெஞ்சின்கண்ணே நினைவுருவாய் வருவதல்லது என்பால் வருதலை அறிந்திலன், அது புரைத்தோ அன்றே - அச் செயல் உயர்ந்ததாகுமோ? ஆகாதே!

விளக்கம் :—உரைத்திசின் : இசின் - அசைநிலை. அது என்னும் சுட்டு வரவறியாமையைச சுட்டிச் செய்யுளாகலின் முன் வந்தது. புரைத்து - உயர்வுடையது. புரைத்தோ என்பதில், ஓகாரம் வினா. அன்றென்றது - புரைத்தன்று என்றவாறு. "புரை உயர்வாகும்" (உரி.) என்பது தொல்காப்பியம் அருந்துயர் - பொறுத்தற்கரிய காமத் துன்பம். ஆற்றுதவழி - இறந்துபாடு. அத் துன்பதற்கு உய்தியாக வும், அதனைப் பெரிதும் அஞ்சுகின்றேன் அளியேன் என்பாள், 'பெரும் பிறிதாகல் அதனினும் அஞ்சுதும்,' என்றாள். இங்ஙனம் கூறும் பொழுதே ஆற்றுமை எய்தினமையின், 'அன்னை,' என்று ஏங்கினாள். 'அன்னை,' இரக்கக் குறிப்பிடைச் சொல். இன்னும் என்றது யாணிற் நிலை எய்திய பின்னரும் என்றவாறு.

நன்மலை நாடனையிருந்தும் தகாது செய்தனன் என்பாள், 'நன்மலை நாடன்,' என்றாள் ஊர் பலருடன் துஞ்சும் யாமம் என மாறுக. ஏனைப் பகலில் வருதற்கு இடையூறு உளவாயினும் நள்ளிரவில் நம்மைக் காணவருதல் அவற்கு எளிதாகவும் அதுவும் செய்திலன் என்பாள், 'யாமத்தானும் வர வறியான்,' என்றாள். கண்கூடாக எதிர்வந்து அருளாதான் என்கொலோ நெஞ்சத்தின்கண் வந்து என்னைப் பீழிப் பது என்பாள், 'நெஞ்சத் தல்லது வரவறியான்,' என்றாள. வரவறியான் நெஞ்சத்தும் வாராஞையின் ஆற்றுவேன் மன் என்றபடி.

எனவே, அவனை மறக்க வியலாமையின் ஆற்றேனுகின்றேன்; மறத்தல் என் வரைத்தன்றே என்று கூறியவாறாயிற்று.

பாட்டு - ௩௦௩ : தோழி கூற்று

துறை :—செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது. அஃதாவது, தலைவியின் வேறுபாடறிந்த தாய், அவளை இற்செறித்தற்குக் கருதியிருத்தலைத் தோழி தலைவனுக்கு அறிவுறுத்தி வரைந்து கொள்ளத் தூண்டியது.

இதன்கண், தலைவனை நோக்கித் தோழி, 'துறைவனே! தலைவி இனிய நிழலையுடைய புன்னைநிழலிலே பொன்னிற அலவன் ஆட்டிப பிரிந்தபொழுதே புறத்தார் அறியும்படி பசந்தாள்,' என்று உணர்த்துகின்றாள்.

௩௦௩. கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குரு
கடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை ஒலியில் துஞ்சுந் துறைவ

தோன்னிலை நெகிழ்ந்த வளைய ளீங்குப்
பசந்தனள் மன்னென் தோழி யென்னெடும்
இன்னிணர்ப் புன்னையம் புகர்நிழற்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே.

—அம்முவனார்.

(இ - ள்.) கழி தேர்ந்து அசைஇய கருங் கால் வெண் குருகு - கடற்கழியின்கண் இரை தேர்ந்துண்டு இளைப்புற்ற கரிய காலையுடைய வெள்ளிய நாரைகள், அடை கரைத் தாழைக் குழீஇ - நீரடை கரையின்கண் தாழையின்மேல் கூடி, பெருங் கடல் உடைதிரை ஒலியில் துஞ்சும் துறைவ - பெரிய கடலினது உடைகின்ற அலையின் ஆரவாரத்தாலே உறங்காநின்ற கடற் றுறையையுடைய தலைவனே! இன் இணர்ப் புன்னை அம் புகர் நிழல்-கண் ணுக்கினிய பூங்கொத்துக்களையுடைய அழகிய புள்ளி களையுடைய நிழலிலே, என்னெடு பொன் வரி அலவன் ஆட்டிய ஞான்றை - என்னோடே பொன்னிறமான வரிகளையுடைய நண்டு களை அலைத்து விளையாடியபொழுதே, தொல் நிலை நெகிழ்ந்த வளையள் - தம் பழைய நிலையாகிய செறிவினின்றும் நெகிழ்ந்த வளையல்களை உடையளாய், என் தோழி ஈங்கு மன் பசந்தனள்- என் தோழியாகிய தலைவி இவ்விடத்தே மிகவும் பசந்தாள்.

விளக்கம் :—பண்டு புன்னையம் புகர்நிழலிலே தலைவியும் தோழியும் நண்டினை அலைத்து விளையாடியபொழுது தலைவன் தலைவியைக் கூடிப் பிரிந்தான்; பிரிந்தபின்னர் உடனே தலைவி மேனி, பசலை பாய்ந்தது. எனவே, நின் கூட்ட நாளிலேயே இவள் பசந்தாள் என்றற்கு, 'என் னெடு அலவனாட்டிய ஞான்'றென அந்நாளைக் குறிப்பான் உணர்த் தினாள். அந்நாளன்றே பசந்தவள் மேலும் மேலும் மெலிந்து புறத் தார்க்குப் புலப்படும்படி வேறுபட்டாள். இனி அன்னையால் இற்செறிக் கப்படுவாள் என்பது குறிப்பு. வளை நெகிழ்வு உடல் மெலிவையும், பசப்பு நிற வேறுபாட்டையும் விளக்கின. தொன்னிலை என்றது நின் னைக் காணுமுன்னர் இருந்த நிலை என்றவாறு.

கழியில் இரை தேர்ந்து இளைத்த குருகு, தாழையிற் குழீஇத் திரை யொலியில் துஞ்சும் என்றது, களவொழுக்கத்தின்கண் குறியிடம் பெற்று அளவளாவி இன்புற்றும் நிரம்பாது இளைத்த நீவிர், இனி வரைந்துகொண்டு ஓரில்லத்தே யிருந்து அறஞ் செய்யுமாற்றால் உலகம் புகழும் இசையிலே இன்புற்றுறையக் கடவீர் என்னும் உள்ளுறை தோற்றி நின்றது.

பாட்டு - ௩௦௪ : தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தெளித்து உரைத்தது. அஃதாவது, களவுக் காலத்தே தலைவன்

வரையாது வைத்துத் தலைவியைப் பிரிந்தானாக, அப் பிரிவாற்றாது வருந்தும் தலைவியைக் கண்டு தோழி வருந்தினாள்; அத் தோழிக்குத் தலைவி தன் ஆற்றுமைக்குக் காரணம் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'பூக்கள் நெருங்கிய கடற்கரைச் சோலையையும் குளிர்ந்த கடலையுமுடைய தலைவனேடே இனிதென்று கருதி நட்புச் செய்ததன் வாயிலாய் நாம் நமக்கு இன்னாமையே தேடிக்கொண்டோம்,' என்று வருந்துகின்றாள்.

கூஅச. கோல்விளைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய
நெடுங்கரை யிருந்த குறுங்கா லன்னத்து
வெண்டோ டிரியும் வீததை கானற்
கைதையந் தண்புனற் சேர்ப்பனெடு
செய்தனே மன்றவோர் பகைதரு நட்பே.

—கணக்காயர் தத்தனார்.

(இ - ள்.) தோழி, கொல் விளைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி முகம்பட மடுத்த - கொற் றொழிலாலே பொலிவு பெற்ற கூரிய வாயையுடைய எறியுளி என்னுங் கருவியினது முகத்திலே பொருந்தும்படி கட்டப்பட்ட, முளி வெதிர் நோன் காழ் - உலர்ந்த மூங்கிலினது வலியுடைய கழியை, தாங்கரு நீர்ச் சுரத்து எறிந்து - தாங்குதற்கரிய நீரையுடைய வழியிலே வீசி, விசைவாங்கு கொடுந்திமில பரதவர்-விசைத்து இழுக்கின்ற வளைந்த திமிலையுடைய பரதவர், கோட்டு மீன் எறிய - கொம்புடைய சுறாமீனை அங்ஙனம் எறியாநிற்ப, நெடுங் கரை இருந்த குறுங்கால் அன்னத்து வெண் தோடு இரியும் - அவ்வாரவாரத்தாலே நெடிய கடற்கரைக்கண் இருந்த குறிய காலையுடைய அன்னப்பறவைகளின் வெள்ளிய கூட்டம் கெட்டோடுகின்ற, வீததை கானல் - பூக்கள் செறிந்த கடற் கரைச் சோலையினையும், கைதையம் தண் புனல் - தாழைகளையும் அழகிய குளிர்ந்த நீர்நிலைகளையுமுடைய, சேர்ப்பனெடு - நெய்தனிலத் தலைவனேடே, மன்ற ஓர் பகைதரு நட்புச் செய்தனெம் - யாம் தேற்றமாக நமக்குப் பகையைத் தருகின்றதொரு கேண்மையையே செய்துகொண்டேம்.

விளக்கம் :—கொல்வினை - கொல்லர்கள் செய்யும் தொழில்; கொல்லத் தொழிலிலே பொலிவு பெற்ற எனினுமாம். எறியுளி - படகிலிருந்து மீனின்மேல் எறிதற்குரியதொரு கருவி என்க.

இவ்வுளி உலர்ந்த மூங்கிற் கழியின்றலையிலே கயிற்றாலே யாக்கப் பட்டிருத்தலின், முகம்பட மடுத்த முளிவெதிர் நோன் காழ் எனப் பட்டது. முகம் என்றது அம்மூங்கிலின் நுனியை. முளிவெதிர் - உலர்ந்த மூங்கில். வலிய மீன்களையும் எறிய வேண்டுதலின் நோன்காழ் என்றார். நோன்காழ் - வலிய கழி. பரதவர் - நெய்தனில மாக்கள். கோட்டுமீன் - சுறாமீன். இம்மீன்முகத்தே கொம்புடையதாகலின் கோட்டுமீன் எனப்பட்டது.

எறிய என்றது, எறிந்தவழி அம்மீன் செய்யும் ஆரவாரத்தால் என்றவாறு. செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. நெடுங் கரையிருந்த குறுங்காலன்னம் என்புழி முரண்தொடை இன்பம் தோன்றுதலுணர்க. அன்னம் தூய வெண்ணிற முடைத்தாகலின் அதன் குழாம் வெண்டோடு எனப்பட்டது. தோடு - கூட்டம் வெண் ணிறக் கூட்டம் என்க. இரிதல் - கெட்டோடுதல். பரதவர் மீனெறியக் கரையிருந்த அன்னக்குழாம் இரியும் என்றது, யாம் தலைவனோடே நட்புச் செய்ய நம் பெண்மை நலம் முழுதும் இரிந்தது என்னும் உள் ளுறை தோற்றி நின்றது. பகை என்றது, காரியத்தைக் காரணமாக உபசரித்தபடியாம். துன்பந்தரும் நட்பென்க. மன்ற: தேற்றத்தின் கண் வந்தது. பகை தருதலாவது - வாளை கழலலும் தோள் மெலி தலும் இன்னோரன்ன பிறவும் செய்தல் என்க.

பாட்டு - ஈரெ. தலைவி கூற்று

துறை :—காப்பு மிகுதிக்கண் தோழி அறத்தொடு நிற்பா ளாக, தனது ஆற்றுமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே கூறியது. அஃதாவது, தமராலே காவற்பட்டு ஆற்றுளாய தலைமகள், தன் களவு ஒழுக்கத்தைத் தோழி யாய் முதலி யோர்க்கு, வெளிப்படுத்தற்பொருட்டுத் தன் ஆறாற்றுமை தோன்றத் தனக்குள்ளே கூறியது. எனவே, தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.

இதன்கண், தலைவி தோழி கேட்பத் தனக்குள்ளே, 'எனது கண் தேடித்தந்த காம நெருப்பு என் என்புதீயச் சுடினும், அவரை முயங்கற்கோ அவரைக் காண்கின்றிலேன்; மற்று, அவரும் என்னிலை யுணர்ந்து தாமே வந்து அருள் செய் வாருமல்லர் ஆயினர்; ஈண்டு யான் உற்ற நோயை நீக்குமாற் றாலே எனக்குத் துணையாவார் பிறரையும் உடையேனல்லேன்; இனி அழிந்தவாறே முழுதும் அழியவேண்டியவளாயினேன்' என்று கூறுகின்றாள்.

ஈரெ. கண்தர வந்த காம ஒள்ளெரி
என்புற நலியினும் அவரோடு பேணிச்

சென்றுநாம் முயங்கற் கருங்காட் சியமே
வந்தஞர் கூதலை அவராற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை கூயார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
கூவோர் இலையா முற்ற நோயே.

—குப்பைக்கோழியார்.

(இ - ள்.) கண் தர வந்த காம ஒள் எரி - இக்கண்கள் கண்டு தந்தமையாலே உண்டாகிய காமமாகிய ஒள்ளிய நெருப்பு, என்புற நலியினும்-எம்முடைய எலும்பினைப் பொருந்திச் சுட்டு வருத்துவதாகும பொழுதும், அவரொடு பேணிச் சென்று நாம் முயங்கற்கு - நந்தலைவர்பால் விரும்பிச் சென்று யாமே அவரைத் தழுவிக் கொள்ளுதற்கோ எனின், அருங்காட்சியம் - அவரைக் காண்டல் அரியமாயினேம், அவர் வந்து அஞர் கூதல் ஆறறலர்-இனி அவருந்தாம் எளிவந்து நமது துன்பத்தை அகற்றுதல் செய்யார், உய்த்தனர் விடாஅர் பிரித்து இடை கூயார் - இங் நிலையினேமாகிய எம்பால் பிறர் அவரைச் செலுத்தி விடுவாருமிலர்; அல்லது இவ் விடத்தினின்றும் எம்மைப் பிரித்து அவர்பால் சேர்த்து எம்மின்னலைக் கூவாரும் இலர், யாம் உற்ற நோய் குப்பைக் கோழித் தனிப் போர் போல - இங்ஙனமாகலின் யாம் கொண்டுளள காம நோய் குப்பையின்கண் கோழிகள் இடும் தனிமையுடைய போர் போன்று, விளிவாங்கு விளியின் அல்லது—தானே அழியுங் காலத்தே அழிவதன்றி, கூவோர் இலை - அதனை இடையே நீக்கித் துணை செய்வோர் யாருமிலர்.

விளக்கம்:—பாலதாணையால் தலைவி தலைவனை ஒரு பூம்பொழிலிடத்தே தலைப்பட்டவிடத்து முதன்முதலாக அவனைத் தன் கண்ணாலே கண்டு காமுற்றுளளாகலின், கண்ட வந்த காமம் என்றுள். "கண் வழி நுழையுமோர் கள்வனை கொலாம்" (கம்பரா-மிதிலைக் காட்சி-நிநி.) என்னும் கம்ப நாடர் செய்யுள் தொடர் ஈண்டு நினைந்தின்புறற் பாலது. உலக நெருப்பின் இது வேறென்பாள், 'காம வொள்ளெரி' என்றுள்:

"ஊரு ளெழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகும்—நீருட்
குளிப்பினும் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமஞ் சுடும்." (நாலடி-கூ0)

எனவும்,

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ." (குறள்-ககஙக)

எனவும் பிற சான்றோரும் ஓதுதல் உணர்க. என்புற என்றதற்கு மெலிந்து என்புந் தோன்றும்படி எனினுமாம்.

அருங் காட்சியம் - காட்சி யரியம் என்றவாறு. யாரும் சென்று காணவல்லேம் அல்லம்; அவரும் வந்து அளிசெய்வாருமிலர். இவ் வழி அவரை எம்பால் உய்த்து விட்டேனும் எம்மை இடைப்பிரித்து அவரிடைச் சேர்த்தேனும் உதவுவார் பிறரும் இலர் என்பாள், 'உய்த் தனர் விடாஅர், பிரித்து இடைகழையார்' என்றாள். இடைப்பிரித்துக் கழையார் என மாறுக. இடை - இடம். அஃதாவது இற்செறிப்புண்ட இடம் என்க. இரண்டிலொன்றைச செய்து இடர் கழைவது தோழியின் கடமையாகவும், அவள் ஒன்றுஞ் செய்யாது வாளாஇடக்கின்றாள் என்று வைதபடியாம். குப்பையிடத்துக் கோழி போரிடுங்கால் ஆற்றுந்துணையும் பொருது ஆற்றுவழித் தாமே நிறுத்துதல் போன்று எந் நோய் நலியுந்துணையும் நலிந்து யான் இறந்து பட்டுழி நிற்கும் போலும் என்றவாறு. போர்ப்பொருட்டு வளர்த்த கோழிகள் போரிடுங்கால் காண்போர் கூட்டமும் விலக்குவாருமுளராகலான், காண்போரும் விலக்குவோருமில்லாத குப்பைக் கோழிப் போரினை உவமை கூறினாள்.

எனவே யான் அவரை எய்தும்படி அறத்தொடு நின்று மறை வெளிப்படுத்து, அவவழித் தலைவரை எம்பால் உய்த்து என்னை உயக் கொள்ளுதி என்பது குறிப்பு.

"யான் உற்ற நோய்" எனப் பாடமோதுவாருமுளர். அவர் காமுயங்கற்கு, அருங்காட்சியம் எனவரும் பன்மை நோக்கிலர்.

பாட்டு - ஙoசு : தலைவி கூற்று

துறை.—காப்பு மிகுதியால் நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து கிழதகி உரைத்தது அஃதாவது, காவன் மிகுதியால் பெரிதும் வருந்திய தலைவி, தலைவனைக் காணுங்கால் அவனோடு ஒறிது மாறுபட வேண்டும் என்று கருதியிருந்தவள் அவனைக் கண்டுழி, அவன்பால் விருப்பமே மீதூரப்பெற்றுத் தான் கருதியவாறு வேறுபாடுகாட்டி ஒழுகாது பட்டாங்கொழுகி அவன் போய பின்னர்த் தன் னெஞ்சத்தைக் கடிந்து கூறியது.

இதன்கண், தலைவி தன் நெஞ்சினை விளித்து, 'நெஞ்சே நீ மடவைகாண்! அவன் வாராத பொழுது யான் நினக்கு அவனோடு இனியன பேசேல் என எத்துணைக் கூறியும், அவனைக் கண்டவுடனே அவற்றை மறந்து அவனோடு இனியவே கூறி அளவளாவுகின்றனை; இஃதென்கொலோ!' என்று கடிந்துரைக்கின்றாள்.

கூ0சு. மெல்லிய இனிய மேவரு தகுந
இவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ
மறத்தியோ வாழியென் னெஞ்சே பலவுடன்
காமர் மாஅத்துத் தாதமர் பூவின்
வண்டுவீழ் பயருங் கானல்
தண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

—அம்மூவனார்.

(இ - ள்.) என் நெஞ்சே - எனது நெஞ்சமே! மெல்லிய இனிய மேவரு தகுந இவை மொழியாம் எனச் சொல்லினும்—மென்மையுடையனவும் இன்பம் பயப்பனவும் விரும்பத் தகுவனவும் ஆகிய இத்தகைய மொழிகளை அவரைக் கண்டபொழுது கூறமாட்டேம் என்று பன்முறை உனக்கு யாம் அறிவுறுத்திருந்தும், காமர் மாஅத்துத் தாதமர் பூவின் வண்டு பலவுடன் வீழ்பு அயரும்-அழகிய மாமரத்தினது தாதுக்கள் பொருந்திய மலரின்கண்ணே வண்டுகள் பலவும் ஒருங்கே வீழ்ந்து மயங்கா நின்ற, கானல தண்கடல் சேர்ப்பனைக் கண்டபின - கடற்கரைச் சோலையினையும் குளிர்ந்த கடலையும் உடைய தலைவனைக்கண்ட போது, அவை நீ மறத்தியோ-அவ்வறிவுரைகளை நீ மறந்து விடுகின்றனையோ? நீ அளியை காண்.

விளக்கம்:—மெல்லிய - ஓசையாலே மெல்லியவாகிய மொழி. இனிய - கேட்டார்க்கு இன்பம் பயப்பன. மேவரு தகுந - விரும்பத் தகுவன; ஆகியபண்புடைய இவைகளை என்க. தன்னெஞ்சு நெஞ்சிற்கு வேற்றுமையின்மையின் மொழியாம் என்றாள். எனச சொல்லுதல் - என்று திண்ணமாக நினைத்தல். அவை-அவ்வறிவுரைகளை. பன்முறையும் கருதினமை தோன்ற அவை எனப் பன்மை கூறினாள். தலைவனைக் காணுத போதெல்லாம் அவனது தவற்றையே கருதியிருந்து, கண்டவுடனே அவற்றை மறந்து அவனை வரவேற்பவளாகின்றனளே என்று இரங்கியபடியாம். இங்ஙனம் ஊடக்கருதுதல் வரைவுகடாதற் பொருட்டாகலின், ஊடாமை வரைவு நீட்டித்தற்கேதுவாய் நமக்கு இன்னாவாகின்றது என்பது கருத்து.

"புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு." (குறள்-கஉஙக)

"நினைந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புனைந்தூடி நிற்பே மெனல்." (குறள்-கஉசு0)

எனவரும் அருமைத் திருக்குறட்பாக்கள் ஈண்டு நினையற் பாலன.

மாஅத்துத் தாதமர் பூவின் வண்டு வீழ்ந்து ஆண்டுப்படும் கள்ளுண்டு மயங்கினுற் போன்று நீயும் தலைவனைக் கண்டுழி மயங்காநின்றனை என்பது குறிப்பாகக் கொள்க.

பாட்டு - ஈ0எ : தலைவி கூற்று

துறை:—பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லிய தோழிக்குக் கிழத்தி சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்த காலத்தில் ஆற்றுமைமிக்க தலைவியை, 'நீ ஆற்றியிருத்தலே நன்று; இங்ஙனம் ஆற்றுயாதல் நினக்குப் பீடன்'றென இடித் துரைத்த தோழிக்குத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி கடிந்துரைத்த தோழியை நோக்கி, 'களிற்றியானை தன் பிடியானையினது பசித்துன்பங் கண்டு அது பொறுது யாமரத்தின் பட்டையை உரித்துக் கையிற்கொண்டு அதன்கட் பசைகாணுது அண்ணாந்து வருத்தத்தோடே முழங்கா நின்ற பாலை நிலத்தே, யாம் அழும்படி நம்மைப் பிரிந்து சென்ற நந்தலைவர் நமமை மறந்தனா போலும், உதோ வானத்தின்கண் ஐயென வெண்பிறை தோன்றி நம்மை நலியாநின்றது; யாம் எங்ஙனம் ஆற்றியிருக்க வல்லேம்' என்கின்றாள்.

ஈ0எ. வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே அன்னே
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது
நிலையுயர் யாஅந் தோலையக் குத்தி
வெண்ணீர் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை அழப்பிரிந் தோரே.

—கடம்பனூர்ச் சாண்டிலியனர்.

(இ - ள்.) தோழி—, வளை உடைத்து அனையது ஆகி-சங்கினை உடைத்தாற் போன்றதாக, பலர் தொழ செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி-உலகினர் பலரும தொழாநிற்பச் சிவந்த இடத்தையுடைய மேலைவானத்தின்கண் விரைந்து தோன்றி, பிறை இன்னம் பிறந்தன்று-பிறைத்திங்கள் இன்னும் பிறந்தது, களிறு தன் உயங்கு நடை மடப் பிடி வருத்தம் நோனாது - ஆண் யானை தனது வருந்திய நடையினையும் மடப் பத்தையும் உடைய பிடியானையினது பசிவருத்தத்தைக் கண்டு பொறுக்கலாற்றாது, உயர்நிலை யாஅம் தொலையக் குத்தி-உயர்ந்து நிற்றலையுடைய யாமரம் அழியும்படி தன் மருப்பாலே குத்தி, வெள் நார் கொண்டு - உலர்ந்து வெள்ளிதாகிய பட்டையை உரித்துக் கையிற்கொண்டு, கைசுவைத்து - தனது வறுங்கை

யினே நாவானே சுவைத்துப்பார்த்துச் சுவையின்மையாலே, அண்ணாந்து அழுங்கல் நெஞ்சமொடு - அம்மரத்தின் உச்சியை நோக்கி வருத்தமுடைய நெஞ்சத்தோடே, முழங்கும் அத்தம் நீள் இடை-முழங்குதற்குக் காரணமான வழிநெடிதாகிய பாலை யிடத்தே, அழப்பிரிந்தோர் அன்னை மறந்தனர் கொல் – யாம் அழும்படி நம்மைப் பிரிந்துசென்ற தலைவர் அந்தோ நம்மை மறந்தேவிட்டனரோ?

விளக்கம்:—வானே - சங்கு. சங்கையுடைத்தாண்டு பிறைக்குவமை. பிறையைப் பல்வேறு சமயத்தினரும், கன்னியரும் தொழுதலுண்மை யின் பலர் தொழத் தோன்றி என்றாள். பிறை தொழப்படுதலை,

> "பிறைநுதல் வண்ண மாகின்று அப்பிறை
> பதினெண் கணனும் ஏத்தவும் படுமே." (புறம்-க)

எனவும்,

> "தொன்று தொழு பிறை." (மதுரைக்கா-கஙஙூ)

எனவும் பிறசான்றோர் கூறுமாற்றானும் உணர்க. செவ்வாய் வானம்-செக்கர் வானம். பிரிவானே யான் நலியாநிற்பவும், மேலும் பிறையும் பிறந்து வருத்தும் என்பாள், இன்னம் பிறை பிறந்தன்று என்றாள். பிரிந்துறைவோரைப் பிறைநலிவது இயல்பு. இதனை,

> "அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
> திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்." (வேனில்-இஅ-ஙூ)

எனவரும் சிலப்பதிகாரத்தானும் உணர்க.

ஐ-விரைவுக்குறிப்பு. வருத்தம் - ஈண்டுப் பசிவருத்தம் என்க. நோனாது - பொறுக்கமாட்டாமல். உலர்ந்த பட்டை என்பாள், வெண் ணீர் என்றாள். அழப் பிரிந்த வன்கண்ணர் மறத்தலும் இயல்பு என்பாள், அழப் பிரிந்தோர் என்றாள்.

யாமரத்துச்சியிலே சிறிது தழை காணப்படுதலால் அதனை அண் ணாந்து நோக்கி முழங்கிற் றென்க.

களிற்று யானை தன் பிடிவருத்தம் நோனாது இங்ஙனம் முழங்கு தலைக் கண்டும், எம்மை யினையாது மறந்தனர் என்பது குறிப்பு. அத்தம்-வழி. நீளத்தம் எனமாறினுமாம்.

பாட்டு – ஙo அ: தோழி கூற்று

துறை:—வரைவிடைக் கிழத்தி வன்சொற்சொல்லி வற் புறுத்தியது. அஃதாவது, வரைந்துகோடற்குப் பொருளீட்டத் தலைவன் பிரிந்தமையை ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி இடித்துரைத்து ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவன் கேண்மை நமது காமவின்பத்தை மிகுவிப்பதோர் செயலிலே யன்றே இப்பொழுது தங்கிற்று. நீ இதற்கு மகிழாது வருந்து தல் என்னையோ?' என்று கழறுகின்றாள்.

கூ0அ. சோலை வாழைச் சுரிநுகும் பினைய
அணங்குடை அருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்குயிர் மடப்பிடி யுலபுறந் தைவர
ஆமிழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

—பெருந்தோட் குறுஞ்சாத்தனார்.

(இ - ள்) தோழி—, சோலை வாழை சுரி நுகுப்பு இனைய-சோலையின்கண்ணுள்ள வாழையினது சுருண்ட குருத்து வருந் தும்படி, அணங்குடை அருந்தலை நீவலின் - தெய்வமுறையும் பிறர் ஏறுதற்கரிய தனது தலையை வருடலானே, மதன் அழிந்து மயங்கு துயர் உற்ற மையல் வேழம்-தனது வலி கெட்டு மயங்குதற்குக் காரணமான துன்பத்தை எய்திய மயக் கத்தையுடைய களிற்றுயானை, உயங்கு உயிர் மடப்பிடி உலபுறம் தைவர-வருந்திய உயிர்ப்பினையுடைய மடப்பமுடைய பிடியானை தனது வருந்திய முதுகினை வருடா நிற்ப, ஆம் இழி சிலம்பின் அரிது கண்படுக்கும் - நீர் வீழ்கின்ற பக்கமலையின்கண்ணே அரிதில் துயிலாநின்ற, மாமலை நாடன் கேண்மை - பெரிய மலை நாட்டையுடைய நந்தலைவனது நட்பு, காமம் தருவது ஓர்கை தாழ்ந்தது - நாம் விருமபியவற்றை நமக்கு அளிபபதா கிய தொரு நற்செயலிலே தங்காநின்றது.

விளக்கம்—'நாடன் நட்பு, விருப்பமானவற்றை நமக்கு அளிப்ப தொரு செயலிலே தங்கிற்று. அதற்கு நீ உவவாது வருந்துதல் பேதைமை' என இடித்துரைத்தவாறு.

வாழைச் சாற்றை யானை மத்தகத்தில் தேய்த்தால், அதன் மதங் கெட்டு மயங்கும். இப்போதும் மதவெறியாற் கட்டுக்கடங்காது திரி யும் யானைக்கு யானைப்பாகர் வாழைத் தண்டை உணவாக இடுதலும், வாழையின் சாற்றை மத்தகத்தில் தேய்த்தலும் உண்டு.

களிற்றியானை வாழையை ஒடித்து அதன் குருத்தாலே தன் மத்த கத்தைப்புடைத்தமையால் அக்குருத்து இனைந்து சாறுபட்டு யானை மயக்கமுற்றது என்க.

களிற்றியானை மயங்கு துயர் உற்றமை பொருது பிடி வருந்தி பெருமூச் செறிந்த தென்பாள், 'உயங்குயிர் மடப்பிடி' என்றாள். ஆம்-நீர்.

காமம் - விரும்பிய பொருள். தலைவன் வரைதற்குப் பொருளீட்டப் பிரிந்தானுகலின் அப்பொருளீட்டுஞ் செயல் தலைவனோடு எப்போதும் பிரியாது உறையவேண்டும், என்னும் நமது விருப்பம் நிறைவேற எதுவாம் என்பாள், 'நாடன் கேண்மை காமந் தருவதோர் கை தாழ்ந்தன்று' என்றாள். கை-செயல். அதற்கு யாம் உவத்தல் வேண்டும்; அதுபோக்கி நீ வருந்துதல் அடாது என்பது குறிப்பு.

பாட்டு - ஈஅஙு : தோழி கூற்று

துறை :—பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்குத் தோழி வாயில் நேர்ந்தது. தலைவன் பரத்தையிற் பிரிந்து சென்றவன் மீண்டு வந்து தோழியை வாயில் வேண்டிய வழி, தோழி அவன் தீமையை எடுத்துக் காட்டி அவனை ஏற்றுக்கொண்டது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'நீ எமக்கு இன்னனை பல செய்கின்றாயினும், நின்னை இன்றியமையாதேமாகலின் நின்னை யாங்கள் ஏற்றுக் கொள்கின்றேம்; பின் என் செய்வாம்!' எனப் புலந்து கூறுகின்றாள்.

ஈஅஙு. கைவினை மாக்கடம் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னாது
பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்த லனையேம் பெரும
நீயெமக், கின்ன னனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

—உறையூர்ச் சல்லியன் குமாரனார்.

(இ - ள்.) பெரும - பெருமானே!, கைவினை மாக்கள் தம் செய்வினை முடிமார் - கையாலே தொழில் செய்யும் உழவர்கள் தமது களைதல்தொழிலை முடிப்பாராய், சுரும்புண மலர்ந்த - வண்டுகள் உண்ணும்படி மலர்ந்த, வாசம் கீழ்ப்பட - மலரின் மணம் நிலத்தே படும்படி, நீடின வரம்பின் வாடிய இடினும் - நெடிய கழனி வரம்பிலே வாடும்படி இட்டுவைத்தாலும், கொடியர் நிலம் பெயர்ந்து உறைவேம் என்னாது - இம் மாக்கள் அருளில்லாதார் ஆகலின் இவர் நிலத்தினைவிட்டு வேறு நிலஞ் சேர்ந்து வாழ்வேம் என்று கருதாமல், கடிந்த செறுவிற்

பெயர்த்தும் பூக்கும் - அவர் களையாகத் தம்மைக் களைந்த கழனி யிலேயே மீண்டும் மலராநின்ற, நின் ஊர் நெய்தல் அணையேம் - நினது ஊரின்கண்ணுள்ள நெய்தலையே ஒத்த தன்மையே மாயினம்; அஃதெற்றுலெனின், நீ எமக்கு இன்னுதன பல செய் யினும் - நீதான் எமக்குத் துன்பமாவன பல செயல்களைச் செய்தாயெனினும், நின் இன்று அமைதல் வல்லாம் மாறு - நின்னை இன்றிப் பொருந்தும் வன்மையிலேம் ஆகலின்.

விளக்கம்:—நின்னை யின்றி எமக்குப் பற்றுக்கோடின்மையினால் நீ எமக்கு எத்துணை இன்னல் செய்யினும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு நின் விருப்பப்படி ஒழுகாநின்றனம்; வேறு யாம் என் செய் வாம் என்றவாறு.

நெய்தற்கு நிலத்தையின்றிப் புகலிடம் இன்மையால் அந்நிலத்திற் குரிய உழவர் கொன்றன்ன இன்னு செயினும் பொறுத்துக் கொண்டு மீண்டும் அந்நிலத்திலேயே மலர்தல் போன்று, யாமும் நின்னின்றி யமையாமாகலின் நீ செய்த இன்னல்களைப் பொறுத்துக்கொள்ளா நின்றனம என உவமையை விரிதலோதுக.

கைவினை மாக்கள் - ஈண்டு உழவர். செய்வினை - களைகட்டலாகிய தாம் மேற்கொண்ட தொழில். வாசம் கீழ்ப்பட என்றது, தலைவி நலம் கெட்டமைக்கு உவமை.

என்னுது - என்று கருதாமல். செறு - வயல். ஓ - அசை. பரத்தை யரோடு தலைவன் நீராடல், பொழிலாடல் முதலிய செய்தலின், இன்னு தன பல என்றாள். வல்லாமாறு என்புழி மாறு எதுப்பொருள் தருவ தோர் இடைச்சொல், "அனையை ஆகன்மாறே தாயில் லாவாக் குழவி போல, ஓவாது கூஉநின் உடற்றியோர் நாடே" (சு) எனவரும் புறநானூற்றின் கண்ணும் இஃது அப் பொருட்டாதல் காண்க.

பாட்டு - நகo : தலைவி கூற்று

துறை :—வரைவிடைமுனிந்து கிழத்தி தோழிக்கு உரைத் தது. அஃதாவது, வரைவிடைவைத்துத் தலைவன் பிரிந்தமை யால் ஆற்றுது வருந்திய தலைவியைத் தோழி 'ஆற்றுக' என இடித் துரைத்தாளாக, அத் தோழியைச் சினந்து தலைவி கூறியது.

இதன்கண், 'தோழி! பறவைகளும் வாயடங்கின; பூக் களும் கூம்பின; கானலும் புலம்புடைத்து; வானமும் நம்மைப் போன்று மயங்கிப் புற்கென்றது; யான் என்னிலையைத் தலை வனுக்குக் கூறுவாரைப் பெறின் இன்னும் உயிர் வாழ்வேன்; இன்றேல் இறந்துபடுவேன்' என்கின்றாள்.

நகo. புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலம்புநனி யுடைத்தே வானமும்
நம்மே போலும் மம்மர்த் தாகி

எல்லே கழியப் புல்லென் றன்றே
இன்னும் உளனே தோழி இந்நிலை
தண்ணிய கமழு ஞாழல்
தண்ணந் துறைவர்க் குரைக்குநர்ப் பெறினே.

—பெருங்கண்ணனார்.

(இ - ள்.) தோழி—, புள்ளும் புலம்பின - பறவைகளும் தத்தம் குடம்பையிலே தனித்தன, பூவும் கூம்பின - நீர்ப்பூக்களும் முகிழ்த்தன, கானலும் புலம்பு நனி உடைத்து - கடற்கரைச் சோலையும் தனிமையை மிக உடையதாயிற்று, வானமும் நம்மேபோலும் மம்மர்த்தாகி - விசும்புமம நம்மைப்போன்று மயக்கமுடையதாகி, எல்லேகழியப் புல்லென்றன்று - பகற்பொழுது கழியாநிற்பப் பொலிவழிந்தது, தண்ணிய கமழும் ஞாழல் - குளிர்ந்தனவாகிய மலர்கள் மணங்கமழாநின்ற ஞாழல்களையுடைய, தண்ணந் துறைவர்கு - குளிர்ந்த கடற்றுறையையுடைய தலைவர்க்கு, இந்நிலை உரைக்குநர்ப்பெறின் - என் இந்த நிலையினைக் கூறுவாரைப் பெற்றால், இன்னும் உளென் - மேலும் யான் உயிர் வாழ்வேனுவன்.

விளக்கம் :—புள்ளும் புலம்பின என்றதற்குப் பறவைகளும் தம் மினத்திற் பிரிந்து தத்தம் குடம்பைகளிலே சென்று தனிமை கொண்டன என்பதே சிறப்பாம் என்னே? "பறவைபாட்டடங்கினவே பகல் செய்வான் மறைந்தனனே" (சிலப், கானல்.) எனப் பிறரும் அந்தி மாலைப் போதில் பறவைகள் பாட்டடங்கினமையே கூறுதல் காண்க. மேலும் பூவும் கூம்பின கானலும் புலம்புடைத்து வானமும் புல்லென்றது என வருவனவற்றோடும் இயைபுடையதாதலும் காண்க.

தன்னிலையை அறிந்து ஆவன செய்யாது, தோழி வாளா இடித்துரைப்பாளாதல் பயனின்றென்பாள், 'இந்நிலை துறைவர்க்கு உரைக்குநர்ப் பெறின் உளென்' என்றாள். அங்ஙனம் கூறுவாரைப் பெறுமையானே யான் இறந்துபடுதல் ஒருதலை என்றவாறு.

முதலும் கருவுமாயமைந்த உலகப் பொருள்கள் எல்லாம் எனது தனிமைத்தன்மையை மிகுவிப்பனவாகி ஆற்றுமை செய்கின்றன வாகிய பினைரும் இறந்துபடேனுய் இருப்பேன் என்பாள், 'இன்னும் உளென்' என்றாள். மாலைப் பொழுது பகலுமின்றி இரவுமின்றி ஒளியுமின்றி இருளுமின்றி மயங்குதலின் இங்ஙனம் மயங்கும் மயக்கத்திற்குத் தனது நெஞ்சத்தின் மயக்கத்தையே உவமை கண்டாள். இச்செய்யுளானே, முதல் கரு உரி என்ற மூப்பொருட்கும் உள்ள இயைபு புலனுதல் உணரலாம்.

இந்நிலை என்றது, துயரம் கைம்மிக்குயான் ஆற்றுறைநிருக்கின்ற இந்த நிலைமையினை என்றவாறு. எல்லை - ஞாயிறுமாம். அவன் இந்நிலை அறிந்தால் உடனே வந்து அளிசெய்வன். அறிவிப்பார் இன்மையே குறை என்பாள், 'தண்ணிய கமழும் தண்ணந்துறைவன்' என்றாள்.

பாட்டு – நகக : தலைவி கூற்று

துறை :—அலர் அஞ்சிய தலைமகள், தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. அஃதாவது, ஊரவர் தூற்றும் பழியை அஞ்சிய தலைவி, இங்ஙனம் பழிதூற்றப்படுதலைத் தலைவனுக்கு அறிவிக்கக் கருதித், தலைவன் சிறைப்புறத்தே வந்து நிற்கின்றமை கண்டு அவன் வரவறியாதாள் போன்று அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நம்தலைவனுடைய தேர், வலவன் பையச் செலுத்தமுயன்றும் அடங்காமல் ஆரவாரத் தோடே நம் பெருங்கட லகன்றுறையிலே நள்ளிரவிலே சென்ற தன்றே? அத்தேர்ச் செலவினை நன்கு கண்டிலாதாள் யான் ஒருத்தியே, மற்று நம் ஆய மகளிர் அனைவரும் நன்கு கண்டனர்; இங்ஙனமாகலின், இனி இந்நிகழ்ச்சி அலராகாது ஒழிதல் எங்ஙனம்?' என்று கூறுகின்றாள்.

நகக. அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனே இலனே பானாள்
ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆயம் எல்லாம் உடன்கண் டன்றே.

—சேந்தன் கீரனர்.

(இ – ள்.) தோழி—, பெருங் கடல் புலவு நாறு அகன் துறை – பெரிய கடலினது புலாலுற்றத்தையுடைய அகன்ற துறையிடத்தே, வலவன் தாங்கவும் நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர் – பாகன் குதிரைகளைத் தடுக்கவும் நில்லாமல் சென்ற கல்லென்னும் ஆரவாரத்தையும் கடிய செலவினையும் உடைய நந்தலைவனுடைய தேரினை, யான் கண்டனனே இலனே – யான் கண்டேனே அல்லது கண்டிலேனே, பால் நாள் – நடு இரவின் கண்ணே, ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னை – உயர்ச்சி பொருந்திய வெள்ளிய மணலிடத்தே தாழ்ந்து வளர்ந்த புன்னை மரத்தில், தாது சேர் நிகர் மலர் கொய்யும் – பூந்தாதுக்கள் சேர்ந்த ஒளிபொருந்திய மலர்களைக் கொய்து கொண்டிருந்த, ஆயம் எல்லாம் உடன் கண்டன்று – மகளிர் கூட்டம் எல்லாம் ஒருங்கே கண்டது, அலர் யாங்கு ஒழிவ – இங்ஙனம் கண்டமை யானே இனிப் பழிமொழி எவ்வாறு ஒழிவனவாகும்.

விளக்கம்:—மக்கள் வழக்கம் மிக்க இடம் என்பாள், 'பெருங் கடல் அகன்றுறை' என்றாள். ஆண்டுச் சென்ற தேர்ச் சுவட்டினை வேறு பலரும் கண்டிருப்பர் எனை, இதனையும் ஓர் ஏதுக் காட்டியவாறும். வலவன் - தேர்ப்பாகன். வலவன் ஆரவாரம் எழாமல் மெல்லச் செலுத்தும் பொருட்டு எத்துணை முயன்றும் பயனில்லை என்பாள், 'வலவன் தாங்கவும் நில்லாது கழிந்த தேர்' என்றாள். கல்லென் என்பது, ஒலிக் குறிப்பு. விரைந்தோடுதலாலே பேராரவாரஞ் செய்து கழிந்ததென் பாள், 'கல்லென் கடுந்தேர்' என்றாள். கடுந்தேர் - கடிதாயோடும் தேர்; விரைந்தோடும் தேர் என்க. கடுந்தேர் என்றதும், கல்லென் தேர் என்றதும், ஆயம் எல்லாம் அறிதற்குக் குறிப்பேதுக்கள் என்க.

தலைவன் தேரில்ஏறி மீண்டு போயபொழுது யான் எத்துணைப் பொழுது கூர்ந்து நோக்கினும் என்கண்கள் கண்டது போதும் என அமைதியுற்றில; பின்னும் காண்டல் வேட்கையையுடையன ஆகலின், அவன் தேரினைக் கண்டுங் காணுதவளாக இருப்பவள் யான் ஒருத்தியே என்பாள், 'யான் கண்டனனே இலனே' என்றாள். இதனால் தலைவி தன் கண் விதுப்புறுதலைத் தலைவனுக்குக் குறிப்பாலுணர்த்தினள் என்க. ஆயமகளிர் மலர் கொய்ததனைத் தலைவன் கண்டிலன் என்றற்கு ஏதுக் கூறுவாள், 'பானாள்' என்றும், 'தாழ்ந்த புன்னை' என்றும் கூறினாள். ஆயமகளிர் காண்டற்குப் பிறிதுமோரேதுக் கூறுவாள், ஓங்கல் வெண்மணலின் மேனின்று தாழ்ந்த புன்னை மலர் கொய்யும் ஆயம் என்றாள். ஓங்கல் - உயர்ச்சி, தாழ்தல் - தழையடர்ந்து வளைந்து தாழ்தல். நிகர் மலர் - ஒளிமலர். "அரும்பவிழ் முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்" (சிலப் - கூ - உ.) என்புழி அடியார்க்கு நல்லார், "ஒளி மலர்" என்றே பொருள் கூறியிருத்தலறிக. ஆயம் - மகளிர் கூட்டம். எல்லாம் என்பது எஞ்சாப் பொருட்டாய் "வெயிலெல்லாம் மறைந்தது," என்புழிப் போல ஒருமை முடிவு கொண்டது. கண்டன்று- கண்டது. எனவே, இனி இஃது அலராவது தேற்றம் என்று வலியுறுத்தற் பொருட்டு அலர் யாங்கொழிவ என வினவினாள். இவ்வல ரானே யாய் முதலியோர் அறிந்து இற்செறிப்பர்; ஆகலான், இனித் தலைவனை யாம் வரவேற்று அளவளாவும் செவ்வியுடையேம் ஆகேம் என்பது குறிப்பெச்சம். ஆகலான் வரைந்து கோடலே நன்றென்று குறிப்பானே வரைவு கடாவியபடியாம்.

பாட்டு - நகஉ : தலைவன் கூற்று

துறை:—இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன், தன் னெஞ்சிறகு வரைவுடைமை வேட்பக கூறியது. அஃதாவது, இரவின்கண் வந்து தலைவியோ டளவளாவிச் செல்கின்ற தலைவன், இக் களவுக் காலத்தே அவள் தனக்கேற்பவும் தமர்க் கேற்பவும் ஒன்றை ஒன்று முரணிய இருவேறு நெறியில் ஒழுக வேண்டியவளா தலை எண்ணி, இங்ஙனே அவட்குத் துன்பந்தரும் ஆகலான், இனி யான் வரைந்து கோடலே நன்றென்று கருது வான் தன்னெஞ்சிற்குக் கூறியது.

இதன்கண், தலைவன் தன்னெஞ்சைவினித்து, 'நங்காதற் றலைவி, இருவேறு ஒழுகலாற்றைத் திறம்பட ஒழுகும் ஒரு

கள்வியாயிருந்தனள்! நள்ளென் யாமத்து நம்மை ஏற்று அள வளாவுங்கால் நம்மோடு ஒத்துத் தமரோடு மாறுபட்டாளாக இருக்கின்றாள்; மற்றுப் பகற்காலத்திலோ, தமரோடொத் தியங்கி நமக்கு முழுதும் எதிலாட்டியாக இருக்கின்றாள்; இங்ஙிலை மிகவும் இரங்கத் தக்கதுகாண்' என்கின்றான்.

கூகஉ. இரண்டறி கள்விநங் காத லோளே
முரண்கொள் துப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே.

—கபிலர்.

(இ - ள்.) நெஞ்சே!, நள்ளென் கங்குல் - நள்ளென்னும் ஓசையையுடைய இடையிரவிலே, முரண் கொள் துப்பின் செவ் வேல் மலையன் - மாறுபாடு கொண்ட வலியினையும் சிவந்த வேலினையும் உடைய மலையமான் திருமுடிக்காரியினது, முள்ளூர்க் கானம் நாற வந்து - முள்ளூர் மலைக்காட்டின் மணத் தைப்போலத் தன் பால் மணங் கமழுமபடி எம்பால் வந்து, நம் ஓர் அன்னள் - நமமோடு ஒத்தவளாக ஒழுகா நின்றனள், வைகறையான் - மற்று விடியற் காலத்திலோ, கூந்தல் வேய்ந்த விரவு மலர் உதிர்த்து - கூந்தலின்கண்ணே நம்மாற் சூட்டப் பட்ட பலவாகக் கலந்த மலர்களை யெல்லாம உதிர்த்து விட்டு, சாந்து உளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி - மயிர்ச்சந்தன மிட்டுக் கோதிய நறிய கூந்தலிடத்தே எண்ணெய் தடவி, அமரா முகத்தள் ஆகி - நம்மோடே பொருந்தாத முகத்தை உடை யவளாகி, தமர் ஓர் அன்னள் - தன் தாய் முதலியோரோடே ஒத்து ஒழுகா நின்றனள் ஆதலால், நங் காதலோள் - நம் தலைவி, இரண்டு அறி கள்வி - ஒன்றற் கொன்று மாறுபட்ட இரண் டொழுக்கத்தை நன்கு அறிந்தவளாக விருந்தாள்.

விளக்கம்:—இரண்டு - ஆகு பெயராய் ஒழுக்கத்தைக் குறித்து நின்றது. ஒன்றோடொன்றெவ்வா இருவேறொழுக்கம் என்க. தலைவி யினது ஆழ்ந்த அன்பினைப் பாராட்டுவான், 'நங்காதலோள்' என்றான். துப்பு - வலிமை. முரண் - மாறுபாடு, மாறுபடுதற்குக் காரணமாகலின் முரண் கொள் துப்பு எனப்பட்டது. மலையனின் படைச்சிறப் போது வான், துப்பினை வேலின் மேலேற்றிக் கூறினான். மலையன் - மலைய மான் திருமுடிக்காரி என்னும் வள்ளற்பெருமான். இவ்வள்ளல் வீரத்

திணும் பெருஞ்சிறப்புற்று விளங்கின செய்தியைப் புறநானூற்றுச் (கஉஉ, கஉங.) செய்யுள்களான் உணரலாம். முள்ளூர் இம் மலையனுக் குரியது என்பதை, "பேரிசை முள்ளூர் பலருடன் கழித்த வெள்வாண் மலையன்" (நற் - கஎ0.) என்றும் "செவ்வேல், முள்ளூர் மன்னன் கழுமுடிக் காரி," (அகநா - உ0கூ) என்றும், "மலையன்...முள்ளூர்" (புறம் - கஉங.) என்றும், பிறாண்டும் பிறசான்றோர் கூறுமாற்றானும் உணரலாம்.

மலையனது முள்ளூர்க் கானம் வளம் பொலிந்து பல்வேறு மலர் களும் மலர்ந்து நறுமண மிக்கதாகலின், பல்வேறு மலர்மணம் கமழும் தலைவிக்கு உவமை கூறினன். அகத்தது, முகத்தே தோன்றுமல் மறைத்தல் பெரிதும் அருஞ்செயல் ஆகலின், அதனையை அருஞ்செய லுடையாள் என்பான், 'அமரா முகத்தளாகி' என்றான்; தன்னெஞ்சே பயிலுங்கால் முகத்தானமாந்தினிது நோக்குவாள் தமரோடு பயிலுங் கால் தன்னேக காண்புழி முழுதும் எதிலாள் போன்று நோக்குதல் வியத்தகு செயல் என்பான், 'அறி கள்வி' என்றான். அகத்தது கரந் தொழுகும் அருமையைப் பாராட்டுவான், 'கள்வி' என்றான்.

கூந்தல் வேய்ந்த நறுமலர் என்றது, கூட்டக் காலத்தே தன்னால் வேயப்பட்ட மலரை என்க. சாந்து - மயிர்சந்தனம் தன்பால் வந்த பொழுது சாந்துளர்ந்து வந்த மணம் தமரறியாவாறு மறைப்பாள் எண்ணெய் நீவினள் என்பான், 'சாந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி' என்றான். அக்கதுப்புத் தன்னால் இனிதின் நுகரப்பட்டமை தோன்ற 'சாந்துளர் நறுங்கதுப்' பென்றான். வைகறை என்றது வைகறையை முதலாகவுடைய பகற் பொழுதினை என்க.

தாய் முதலியோரை அஞ்சி இங்ஙனம் ஒழுகுதல் அவட்கு இன்னல் நிலையாம் ஆதலின், யாம் அவளை விரைந்து வரைந்து கோடலே நன்றென்று நெஞ்சினை உடம்படுவித்தது இஃதென்க.

பாட்டு - கூகஙு : தலைவி கூற்று

துறை :—இரவுக்குறி வந்து ஒழுகுங் காலத்துத் தலைமகனது வரவுணர்ந்து, 'பண்பிலர்' என, இயற்பழித்த தோழிக்கு, அவரொடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றே வென்று, சிறைப் புறமாகத் தலைமகள் இயற்பட மொழிந்தது. அஃதாவது, இரவின்கண் மணையயலே தலைவன் வந்து நிற்றலை அறிந்த தோழி, அவன் வரவறியாதாள போன்று, அவனைக் குறை கூறக் கேட்ட தலைவி, அது பொருளாய்த் தலைவனைப் புகழ்ந்தது.

இதன்கண், 'தலைவன் அன்பிலான்,' எனப் பழித்த தோழியை நோக்கி, தலைவி, 'அவனது நட்பு என்றென்றும் அழியாத சிறந்த நட்பாகும்' என்று புகழ்ந்துரைக்கின்றாள்.

கூகஙு. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந் துண்டு

பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனெடு
யாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே.

.....[1]

(இ - ள்.) தோழி—, பெருங் கடல் கரையது சிறு வெண் காக்கை - பெரிய கடற்கரையினகண்ணே உளதாகிய சிறிய வெண்மையுடைய காக்கை, நீதது நீர் இருங் கழி இரை தேர்ந்து உண்டு-நீந்துதற்குக் காரணமான நீர்ப் பெருக்கையுடைய பெரிய கழியினிடத்தே இரையை ஆராய்ந்து தின்று, பூக் கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனெடு - மலர் மணக்கும் சோலையினூடே உறையாகின்ற கடற்கரையையுடைய நந் தலைவனெடே, யாத்தேம் நட்பு யாத்தன்று - நம்மை யாம கட்டினேம் அங்ஙனம் கட்டப்பட்டமையாலே உண்டாய நட் பும் நன்கு பொருந்துவதாயிற்று, அவிழ்த்தற்கு அரிது அது முடிந்தமைந்தன்று - அது யாராலும் பிரித்தற்கு அரியதொன்றாய் நிறைமுடிவுடையது.

விளக்கம்:—பெருங்கடல், சிறுவெண்காகை என்புழிச் செய்யுளின்பம் உணர்க. இக்களவொழுகம் நிகழ்த்தும் தலைவன் இனி வரைந்துகொண்டு இனிதே இல்லறம் நிகழ்த்துவன் என்பாள், 'சிறு வெண் காக்கை கழியில் இரை தேர்ந்துண்டு பூக்கமழ் பொதும்பிற் சேக்கும்' என்றாள். இருங்கழியில் இரைதேர்தல், குறியிடங்களில் களவின்பம் நுகர்தலாகவும், பூக்கமழ் பொதும்பிற் சேக்குதல், வரைந்து கொண்டு புகழ்படத் தம்மனைக்கண் இல்லறம் நடத்துதலாகவும் கருதுக.

நீத்துநீர் - நீந்துதற்குக் காரணமான பெருக்குடைய நீர் என்க. இருங்கழி - கரிய கழியுமாம். யாத்தேமாகிய நம்முடைய நட்புயாத்தன்று எனமாறுக. யாத்தன்று - பொருந்தியது. அவிழ்த்தல் எனப் பிறவினையாற் கூறினமையின் பிறரால் அவிழ்த்தற்கு என்க. அவிழ்த்தல் - ஈண்டுப் பிரித்தல் என்னும் பொருட்டு. அவிழ்க்கலாகாமைக்கு ஏதுக் கூறுவாள், அது முடிந்தமைந்தன்று என்றாள். முடிக்கப்பட்டு அமைந்ததென்க. முடிந்ததற்கு வினைமுதல் பாலதாயினாகலான் அது வருவித்துரைக்க.

பாலதாயினான் முடிக்கப்பட்டதென்றனை மாந்தர் தவிர்க்கலாகாமையும் உணர்க. இது தலைவன் தலைவியைப் பூம்பொழிலிற் கண்டு முதன்முதல் கூடியபொழுது, தலைவன் அன்பின் சிறப்பெடுத் தோதினமையைத் தலைவி கொண்டு கூறினாள் என்று கருதுக.

இதனால் தலைவனெடு யாங் கொண்ட கேண்மை பண்டும் பண்டும் பலப்பல பிறப்புக்களிலே பயின்று ஒருகாலைக் கொருகாற் சிறந்துயர்ந்த கேண்மை ஆகலின், அஃது அழியாத உழுவலன்பாம் என அவனது கேண்மைப் பண்பினைத் தலைவி புகழ்ந்தாளாதல் உணர்க.

---

1. ஆசிரியர் பெயர் காணப்பட வில்லை.

பாட்டு - நகசை : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குப் பருவம்காட்டி அழிந்து கூறியது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்த காலததே ஆற்றுமை எய்திய தலைவியைத் தோழி, நீ 'ஆற்றுதலே அறிவுடைமையாம்' என வற்புறுத்தினளாக, அவட்குத் தலைவி, 'தலைவன் வருவன்' எனக் கூறிச் சென்ற பருவம் வந்தமையைச் சுட்டிக் காட்டி, 'யான் எங்ஙனம் ஆற்றுவல்' என்பதுபடக் கூறியது.

இதன்கண், தன்னை ஆற்றுவித்த தோழியை நோக்கி, 'உதோபார், விசும்பின்கண்ணே சூல் கெழு முகில்கள் தோன்றி முழங்கி மின்னி மழை பெய்கின்றன; காமநோயை மிகுவிக்கும இம் மாலைப் பொழுதினும் நம் தலைவர் வந்திலர்; இனி யான் எங்ஙனம் ஆற்றியிருப்பன் ?' என்று கூறுகின்றாள்.

நகசை. சேயுயர் விசும்பி னீருறு கமஞ்சூல்
தண்குரல் எழிலி ஒண்சுடர் இமைப்பப்
பெயல்தாழ் பிருளிய புலம்புகொள் மாலையும்
வாரார் வாழி தோழி வருஉம்
இன்னுறழ் இளமுலை ஞெமுங்க
இன்னு வைப்பின் சுரனிறந் தோரே.

—பேரி சாத்தனர்.[1]

(இ - ள்.) தோழி—, இன்னு வைப்பின் சுரன் இறந்தோர் - இன்னல் மிக்க இடங்களையுடைய பாலைநிலத்தைக் கடந்து சென்ற நந்தலைவர், சேய் உயர் விசும்பின் நீர் உறு கமம் சூல் தண்குரல் எழிலி - தூரிதாய் உயர்ந்த வானத்தின் கண்ணே நீர்மிக்க நிறைந்த சூலினையும் குளிர்ச்சியையும் முழக்கத்தையும் உடைய முகில்கள், ஒண் சுடர் இமைப்பப் பெயல் தாழ்பு இருளிய - ஒள்ளிய மின்னல்கள் விளங்க மழை பெய்து இருண்ட, புலமபு கொள் மாலையும் - தனிமையைத் தன்னிடத்தே கொண்ட இம்மாலைப் பொழுதினும், வருஉம் இன் உறழ் இளமுலை ஞெமுங்க வாரார் - தோன்றுகின்ற இனிமை பொருந்திய இளைய முலைகள் அழுந்துமாறு தழுவிக் கோடற்கு வந்தாரிலர்; யான் எங்ஙனம் ஆற்றுவன் ?

விளக்கம் :—எல்லையின்றி உயர்ந்துளதாகலின் 'சேயுயர் விசும்பு' எனப்பட்டது. நீர்உறு - நீர் மிக்க. கமம் - நிறைவு. தண் எழிலி. குரல் எழிலி எனத் தனித்தனிக் கூட்டுக. எழிலி - முகில். குரல்,

(பாடம்) 1. பேரிச்சாத்தன், பெருஞ்சாத்தன்.

ஈண்டு இடிமுழக்கம் என்க. ஒண்சுடர் என்றது, மின்னலை. இமைத்தல் - விளங்குதல். பெயல் - மழை. தாழ்பு - தாழ்ந்து; பெய்து என்றவாறு. இதுகாறும் கார்ப்பருவ வரவு கூறப்பட்டது. புலம்பு - தனிமைத்துன்பம். காலை நண்பகல் மாலை என்ற மூப்பொழுதுகளினும் மாலைப்பொழுதே தனிமைத் துன்பத்தை மிகுவிப்பதாகலின் புலம்பைத் தன்னிடத்தே கொண்ட மாலை என்றாள். மாலையும் என்ப தன்கண் உம்மை சிறப்பின்கண் வந்தது.

வாரார் என்றது வாராராயவிடத்து யான் எங்ஙனம் ஆற்றுவல் என்பதுபட நின்றது. இன் உறழ் - இனிமை பொருந்திய. ஞெமுங்க - அழுந்தும்படி, தழுவிக்கோடற்கென வருவித்துக் கூறுக.

இன்னவைப்பிற் சென்றோர் இனிய ஊற்றின்பமுடைய இளமுலை ஞெமுங்க வாரார் என்புழிச செய்யுளின்பமுணர்க.

பாட்டு - நகரு : தலைவி கூற்று

துறை :—'வரைவிடை யாற்ற கிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது. அஃதாவது, - 'தலைவன் வரைபொருளீட்டற்குப் பிரியக் கருதுகின்றனன்; அப்பிரிவினை நீ ஆற்றியிருக்க வல்லையோ?' என்று வினவிய தோழிக்கு, ஆற்றுவன் என்பதுபடத் தலைவி கூறியது

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'கடலிலே பிறை தோன்றினுற் போன்று, மலையின்கண் அருவி தோன்றும் மலைநாட்டையுடைய தலைவன், ஞாயிற்றுமண்டிலத்தை ஒப்பாவான்; எனது தோள்களோ அஞ்ஞாயிற்று மண்டிலத்தையே இடையறாது நோக்கும் நெருஞ்சி மலர்களை ஒப்பனவாம்' என்று கூறுகின்றாள்.

நகரு. எழுதரு மதியங் கடற்கண்டாங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே.

—மதுரை வேள்ஆதத்தனார்.

(இ - ள்) தோழி—, எழுதரு மதியம் கடல் கண்டாங்கு - தோன்றி நின்ற திங்கள் கடலிடத்தே காணப்பட்டாற் போன்று, ஒழுகுவெள் அருவி ஓங்கு மலைநாடன் - காணப்பட்டு வீழ்கின்ற வெள்ளிய அருவியையுடைய உயர்ந்த மலைகள் பொருந்திய நாட்டினையுடைய நந்தலைவன், ஞாயிறு அனையன் - ஞாயிற்று மண்டிலத்தை ஒப்பாவான், என் பெரும்பணைத் தோள் - என்னுடைய பெரிய மூங்கில் போன்ற தோள்களோ, நெருஞ்சியனைய - நெருஞ்சிமலர்களை ஒப்பனவாம்.

விளக்கம் :—மதியம் - திங்கள். இது வீழ்கின்ற வெள்ளருவியின் தோற்றத்திற்கு உவமை; கடல் மலைகட்குவமை. இச்சிறு செய்யுளின் கண் மதியம், ஞாயிறு, கடல், அருவி முதலிய அழகிய மங்கலப் பொருள்கள் பயின்று வந்தமை உணர்க.

ஞாயிற்றுமண்டிலத்தின் ஒளியி லியைந்து அதன் இயக்கத் தோடொத்து நெருஞ்சிமலர் திரும்பும் இயல்புடையது. இதனை, "சுடரொடு திரிதரு நெருஞ்சி போல," (அகம் - கூகூசு) என்றும், "பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ, ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்கு" (புறநா - கஙுஙி) என்றும், 'நீள்சுடர் நெறியை நோக்கும் நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்," (சீவக - சசுக) என்றும், பிறசான் றோர் கூறுமாற்றாலும் உணர்க.

நெருஞ்சிமலர் ஞாயிற்றின் ஒளியி லீடுபட்டு அதன் இயக்கத் தோடொத்துத் திரும்புதல் போன்று, யானும் தலைவனது அன்பி லீடுபட்டு அவன் செயலோ டொத்தியங்குவன் ஆகலின், ஆற்றியிருப் பன் என்றவாறு. தனது கருத்தினைத் தோண்மேல் ஏற்றிக்கூறிய வாறென்க.

பாட்டு - நகசூ : தலைவி கூற்று

துறை :—'வரைவிடை வேறுபடுகின்றாய்' என்ற தோழிக் குக் கிழத்தி உரைத்தது. தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த பொழுது ஆற்றாளாய தலைவியை, 'நீ ஆற்றுயாகின்றதென்?' என வினைய தோழிக்குத் தலைவி தன் ஆற்றுமைக்குக் காரணம் கூறியது.

இதன்கண், 'பொருள்வயிற் பிரிந்த தலைவனை தன் சொற் பிறழ்ந்து காலம் நீட்டிப் பானையினன்; அதனால் தோள மெலிந்து உடல் நலிவுடையேன் ஆய்விட்டேன்; இவ் வேறுபாட்டை அன்னை அறியின் யான் உயிர் வாழகில்லேன்; யான் எங்ஙனம் ஆற்றுவேன்?' என்று தலைவி, தோழிக்குக் கூறுகின்றாள்.

நகசூ. ஆய்வளை நெகிழவு மயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை யறியின்
உளனெனை வாழி தோழி விளியா
துரவுக்கடல் பொருத விரவுமண லடைகரை
ஓரை மகளிர் ரோராங் காட்ட
வாய்ந்த வலவன் துன்புறு துனைபரி
ஓங்குவரல் விரிதிரை களையும்
துறைவன் சொல்லோ பிறவா யினவே

—தும்பிசேர் கீரனார்.[1]

(பாடம்) 1. தும்பிசோ கீரனார்.

(இ - ள்.) தோழி—, விளியாது உரவுக் கடல் பொருத விரவு மணல் அடைகரை - இடைவிடாமல் வலிய கடலால் மோதப்பட்ட மணல் விரவிய அடைகரையின்கண், ஒரை மகளிர் ஓரங்கு ஆட்ட - விளையாட்டுமகளிர் ஒருதண்மையாக அலைக்க, வாய்ந்த அலவன் துண்புறு தினை பரி - பொருந்திய நண்டினது துன்பமிக்க விரைந்த செலவினை, ஓங்கு வரல் விரி திரை களையும் - உயர்ந்து வருதலையுடைய விரிந்த அலைகள் தவிர்க்கின்ற, துறைவன் சொல் பிற ஆயின - துறையையுடைய நந்தலைவன் சொற்களோ வேறுபட்டன வாயின, ஆய் வளை நெகிதலும் அயர்வு மெய் நிறுப்பவும் - அதனால் உண்டாகிய அழகிய வளையல்கள் நெகிழா நிற்பவும், அயர்ச்சியை உடலிலே நிலைக்கச் செய்யவும் காரணமான, நோய் மலி வருத்தம் - துன்பமிக்க எனது வருத்தத்தை, அன்னை அறியின் உளெனே - நம்மன்னை அறிவாளாயின் அவளறிந்தபின்னருமை யான் உயிரோடு இருப்பேனே?

விளக்கம்:—ஆய்-அழகு. ஆராய்தற்குக் காரணமான வளை எனினுமாம். நெகிழ, ஞெகிழ என்ன நகரத்திற்கு ஞகரம் போலியாக வந்தது. அயர்வு - இளைப்பு. நிறுப்ப - நிலைக்கச் செய்ய. ஞெகிழவும் நிறுப்பவும் காரணமான நோய் மலிந்த வருத்தம் என்க. நோய்-பிரிவுத்துன்பம்; காமநோயுமாம்.

உளெனே என்னும் ஏனை, உளனுகேன் என்பது படநின்றது. விளியாது - இடைவிடாமல். உரவு - வலிமை. ஒரை - விளையாட்டு. ஒரை மகளிர் நண்டினை அலைக்க அது துன்புற்று ஓடுங்கால் கடல் அலை பெருகி அதனை எடுத்து அதன் செலவு தவிர்த்து உய்யக் கொண்டாற்போல, நண்டு யாயின் கொடுமையை அஞ்சுவேனைத் தலைவன் விரைந்து வந்து வரைந்து உய்யக் கொள்ளினல்லால் எனக்கு உய்தி இல்லை என்பது குறிப்பு. வாய்ந்த என்றது, அவர்கள் அலைத்தற்குப் பொருந்திய என்றவாறு. தலைவன் விரைந்து வரல் வேண்டும் என்பாள் 'ஓங்குவரல் விரிதிரை' என்றாள்.

'நின்னிற் பிரியேன்; பிரியின் ஆற்றேன்; விரைவில் மீள்வேன்' என்று பற்பல சொல்லிப்பிரிந்தமை தோன்றச் 'சொல் பிற ஆயின' என்று பன்மையாற் கூறினாள். சொல் பிறவாயின என்றது, அவை தறித்த பொருளுடையன வாகாமல், வேறு பொருளுடையன ஆயின என்றவாறு. பொய்பட்டன என்பது கருத்து.

பாட்டு - உகஎ : தோழி கூற்று

துறை:—பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்தகாலத்தே ஆற்றுமைமிக்க தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'மரையானினேறு நல்லிக்கனியைத் தின்று, மலைப் பைஞ்சுனையில் நீர் பருகுதற்

கிடமான நாட்டையுடைய நந்தலைவன், முகில்கள் தென்புலம் படரும் வாடைமிக்க இத்தண்பனி நாளிலே நம்மை நீத்துறை வானல்லன்; விரைவில் வருவன்' என்று தேற்றுகின்றாள்.

நூகஎ. புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி யயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்குமலைப் பைஞ்சுனை பருகு நாடன்
நம்மைவிட் டமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே.

—மதுரைக் கண்டரதத்தனார்.

(இ-ள்.) தோழி—, புரி மடம் மரையான் கரு நரை நல் ஏறு - விரும்புதற்குக் காரணமான மடப்பத்தையுடைய மரையானினது கரிய பெரிய நன்றாகிய ஏறு, தீம் புளி நெல்லி மாந்தி-இனிய புளிச்சுவையுடைய நெல்லிக்காயைத் தின்று, அயலது தேம்பாய் மாமலர் நடுங்க வெய்து உயிர்த்து-பக்கத்தே உளதாகிய தேன பரவிய பெரிய மலர்கள் நடுங்கும்படி வெய்தாக மூச்செறிந்து, ஓங்கு மலைப் பைஞ்சுனை பருகும் நாடன் - உயர்ந்த மலையின்கண் உள்ள பசிய சுனையின்கண் நீர் பருகுதற்கிடமான நாட்டையுடைய நந்தலைவர், கைம்மிக வடபுல வாடைக்கு அழி மழை-மிகும்படி வடதிசையினின்றும வரும் வாடைக் காற்றுக்கு அழிந்த முகில்கள், தென்புலம் படரும் தண்பனி நாள் - தென்திசை நோக்கிச் செல்லாநின்ற குளிர்ந்த பனியையுடைய பருவத்தில், நம்மை விட்டு அமையுமோ-நம்மை பிரிந்துறைவரோ? உறையார் காண்.

விளக்கம்:—தலைவர் குறித்துச் சென்ற பருவமாகிய தண்பனி நாள் இன்னும் வந்திலது. அது வருமுன் வருவர் அதுகாறும் ஆற்றுக என்பது குறிப்பு நெல்லி என்ற குறிப்பால் பாலைநிலம் என்பதும், ஓங்குமலைப் பைஞ்சுனை என்ற குறிப்பால் குறிஞ்சிநிலம் என்பதும் பெற்றாம். பெறவே, பாலைநிலத்தே நெல்லிதின்ற மரையான் ஏறு, குறிஞ்சிநிலப் பைஞ்சுனையில் அக்காய் தின்ற இனிமை தோன்ற வெய்துயிர்த்து நீருண்ணும் என்றது, நின்னைப் பிரிந்து சென்ற தலைவர் ஆண்டு நிரம்பப் பொருளீட்டிக் கொண்டு அப்பொருளால் வரும் இன்பத்தை நின்பால் வந்து பெறுவர் என்னும் குறிப்புடையதாகக் கருதுக. நெல்லிக்காயைத் தின்றபின்னர் நீர்பருகின் அந் நீர் இனிப் புடையதாதல் இயல்பு.

மாந்தி - தின்று. பாலையில் நின்று நெல்லி மாந்தியதனால் வெய்துயிர்த்து என்றாள். நம்மை என்றது, இன்றியமையாத நம்மை என்

பதுபட நின்றது. கைம்மிக என்றது, மிகுதிப்பொருள் குறித்து நின்ற ஒருசொல் என்க.

வாடைக்காற்று முகில்களைத் தென்புலத்திற்கு மோதித் தள்ளுதலால் 'வாடைக்கு அழிந்த மழை' என்றாள். மழை - முகில்.

பாட்டு - நகஅ : தலைவி கூற்று

துறை:—கிழவன், அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது அஃதாவது, களவொழுக்கமே காமுற்று வரைதல் முயற்சியின்றி ஒழுகுந்தலைவன், ஒருநாள் சிறைப்புறத்தே வந்து நின்ற பொழுது அவன் வரவுணராள் போன்று அவன் கேட்பத் தோழி தலைவிக்குக் கூறுமாற்றானே வரைவு கடாஅயது.

இதன்கண் தலைவன் வரவுணர்ந்த தோழி தலைவியை நோக்கி 'நந்தலைவன் வரையக்கருதினும் கருதானாயினும், நாம் என் செய்வாம்? அவனே பிழையா வஞ்சினம் செய்தவனும், கடமையுடையோனும், நமக்குப் புணையாவோனும், கள்வனும் ஆவன். அவன், தானே அறியாதவிடத்து யான் அவற்கொன்றும் அறிவிக்க மாட்டேன்' என்று கூறுகின்றாள்.

நகஅ. எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினில் தோன்றுந் துறைவன்
குறியா னாயினும் குறிப்பினும் பிறிதோன்
றறியாற் குரைப்பலோ யானே யெய்த்தவிப்
பணையெழின் மென்றோ ளணைஇய வந்நாட்
பிழையா வஞ்சினஞ் செய்த
கள்வனும் கடவனும் புணைவனுந் தானே.

—அம்மூவனார்.

(இ - ள்.) தோழி—, எறி சுறாக் கலித்த இலங்கு நீர்ப்பரப்பின்-எறிந்து கொல்லுகின்ற சுறாமீன்கள் மிக்க விளங்குகின்ற நீரையுடைய கடற்பரப்பினிடத்தே, ஞாழலொடு புன்னை நறுவீ தாஅய்-ஞாழலோடே புன்னையினுடைய நறிய மலர்கள் பரந்து, வெறியயர் களத்தினில் தோன்றுந் துறைவன் - வெறியாடுமிடத்தைப்போன்று தோன்றுகின்றகடற்றுறையையுடையநந்தலைவன், குறியான் ஆயினும் குறிப்பினும்-என்னை வரைந்து கோடலைத் தன் நெஞ்சிற் குறிக்கொள்ளான் ஆயினும் அல்லது குறிக்கொண்டாலும், பிறிது ஒன்று அறியாற்கு யான் உரைப்பலோ-இக்களவொழுக்கத்தையன்றி வேறொன்றனையும் தானே உணராத அவ

னுக்கு யானே வலிந்து உணர்த்துவேனே உணர்த்த இசையேன் காண், எய்த்த இப் பணை எழின் மென்றோள் அணை இய அந்நாள்- இன்று மெலிந்துள்ள இந்த மூங்கில் போன்ற அழகுடைய மெல்லிய தோள்களை அணைந்த அந்த நாளிலே, பிழையா வஞ்சினம் செய்த - தவறாத வஞ்சினங் கூறிய, கள்வனும் கடவனும் புணை வனுந் தானே - வஞ்ச நெஞ்சுடையவனும் அதனை நிறைவேற் றும் கடப்பாட்டாளனும், நமக்குப் புகலிடமாம் புணை போன்ற வனும் அவனல்லனே?

விளக்கம்:—அந்நாள் வஞ்சினஞ்செய்தவனும், அவ்வஞ்சினத்திற் குச் சான்றாவானும், அதனை நிறைவேற்றும் கடமையுடையானும், நமக்குப் புணை போன்றவனும் அவனே ஆகலான், அவன் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்தலைக் குறிக்கொள்ளாதவிடத்து யான் கூறுதல் முறையன்று ஆகலின், யான் கூறேன் காண்.

தானே அறியும் இயல்பிலானுக்கு யான் கூறிப் பயந்த தென் னென்பாள், 'பிறிதொன்றறியாற் குரைப்பலோ' என்றாள். உரைப் பலோ என்னும் வினை உரையேன் என்பதுபடநின்றது.

பிறிது என்றது களவின் வேறாகிய கற்பினை. களவொழுக்கத்தை யேயன்றி, வரைந்து கொண்டு இல்லறம் நடத்தலை குறிக்கொள்ளான் என்று இகழ்ந்தவாறு. இக் களவொழுக்கத்தானுற்ற இன்னல் நிலை தெரிப்பாள், 'எய்த்த இத்தோள்' என்றாள். 'பணையெழின் மென்றோள்' என்றது, பண்டு அவை யிருந்தவண்ணம் இயம்பி இரங்கியபடியாம். அந்நாள் என்றது, பாலதாணையால் தான் தலைவனைத் தலைப்பட்டு இயற்கைப்புணர்ச்சி எய்திய நாளினை எனக. அந்நாள் என்றமையால் இந்நாள் எய்த்த இத்தோள் என்க. கள்வன் - வஞ்சகன். வஞ்சினம் செய்தவனும் கள்வனும் அவனே என்றவாறு. வஞ்சினமுரைத்த பொழுது அவனையன்றிச் சான்றாவார் பிறரின்மையின் கள்வனும் அவனே என்றாள். கடவன் - கடமையுடையோன். புணைவன் - புணைபோன்று பற்றுகி உய்ப்போன்.

வஞ்சினம், நின்னிற் பிரியேன் என்றசொல். அது நிறைவேற வேண்டுமாயின் வரைந்துகோடல் வேண்டும். அதனைக் குறிக்கொள் ளாமையின் பிழையா வஞ்சினம் பிழைத்தான் என்று பழித்தாள். வஞ்சினம் பிழைக்கப்படாததொன் றென்பாள், 'பிழையா வஞ்சினம்,' என்றாள்.

நீர்ப்பரப்பு மலரான் மறைக்கப்பட்டு ஆடுதற்குரிய இடம்போன்று தோன்றும் என்றது, பிரியும் தலைவன் வஞ்சனத்தாலே தன்னை மறைத் துப் பிரியாதான் போன்று தோன்றினன் என்னும் குறிப்புடைத் தென்க.

பாட்டு - ஈகக : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கண் வேறுபட்ட கிழத்தி வன் புறை எதிரழிந்து சொற்றது அஃதாவது, தலைவன் 'மீண்டு வருவேன்,' எனக் குறித்துச் சென்ற கார்ப்பருவம் வந்தும் வாராமைக, ஆற்றுமைகொண்ட தலைவியை, 'நீ ஆற்றியிருத்தல்

ண்டும்,' எனத் தோழி வற்புறுத்தினகாலை அவட்குத் தலைவி ஞ்சழிந்து கூறியது.

இதன்கண், வற்புறுத்திய தோழியை நோக்கித் தலைவி, ூண் மான்கள் பிணைகளைத் தழுவிக்கொண்டு கானப்புதலில் ங்கின ; களிற்றியானைகள் பிடிதழுவி மலையிடத்தை எய்தின ; லைப்பொழுதும் கொலைக்களத் தேதிலார்போல வந்தது : ழையும் பொழியாநின்றது ; இங்ஙனமாகவும் என் மேனி ஞ் சிதைத்தோர் இன்னும் வந்திலர் ; என் உயிர்நிலை இனி ன்னும்,' என்று கூறுகின்றாள்.

கசு. மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்
கையுடை நன்மாப் பிடியோடு பொருந்தி
மையணி மருங்கின் மலையகஞ் சேரவும்
மாலைவந் தன்று மாரி மாமழை
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்
என்னுந் தோழிநம் இன்னுயிர் நிலையே.

—நாயங் கண்ணனார்.

(இ - ள்.) தோழி—, மான் ஏறு மடப் பிணை தழீஇ - ண் மான்கள் தம் மடப்பம் பொருந்திய பிணை மான்களைத் ழுவிக்கொண்டு, மருள் கூர்ந்து - மயக்கம் மிக்கு, கானம் நண் ிய புதல் மறைந்து ஒடுங்கவும் - காட்டின்கட் பொருந்திய நல்களிடத்தே சென்று ஒடுங்கி யிருக்கும்படியும், கை உடை ன்மாப் பிடியொடு பொருந்தி - துதிக்கையையுடைய நல்ல ரிற்று யானைகள் தம் பெண்யானைகளோடு கூடி, மை அணி நங்கின் மலை யகம் சேரவும் - முகில்களை அணிந்த பக்கத்தை டைய மலையின்கண் சேரும்படியும, மாரி மா மழை மாலை ந்தன்று - கார்காலத்துப் பெரிய மழை இம்மாலைப் பொழுதின் ன் வந்தது, பொன் நேர் மேனி நல்நலம் சிதைத்தோர் இன்னும் ாரார் ஆயின் - நமது பொன்போன்ற மேனியின் அழகைக் டுத்த நந் தலைவர் இம் மழைக்காலம் வந்தும் இன்னும் வந்தில யின், நம் இன் உயிர் நிலை என்னும் - நம்முடைய இனிய உயிர் ல எத்தகையதாகும்?

விளக்கம் :—மானேறு மடப்பிணை தழீஇப் போதலும், களிறு பிடி ீஇச் சேர்தலும், தலைவி தலைவனை நினைத்தற் கேதுவாகி அவள் ிவுத் துன்பத்தை மிகுவிப்பனவாம்.

மருள் - மயக்கம். திசையிருண்டு மழை பொழிதலின், மருள் கூர்ந்து ஒடுங்கின என்க. கையுடை நன்மா - யானை. பிடி தழீஇ என்றமையாற் களிற்று யானை என்க. பிடியொடு பொருந்திப் போதல் கண்டமையால் நன்மா என்றாள். மை - முகில். மருங்கு - பக்கம். மாலைக்காலந் தனிமைத் துன்பத்தை மிகுவித்தல் கருதி மாலை வந் தன்று என்றாள். இது தலைவன் குறித்துச் சென்ற கால மாரியே என் பாள், 'மாரி மாமழை.' என்றாள். கார்ப்பருவந் தொடங்கு முன்னரே வருவன் என்று கூறிச் சென்றவர், கார்ப்பருவந் தொடங்கி மழை பொழிந்தும் வாராராயினர் என்பாள், 'இன்னும் வாராராயின்,' என்றாள்.

இதுகாறும் அவர் கூறிச்சென்ற பருவத்தே வருவர் என்னும் எண் ணம் பற்றுக்கோடாக உயிர் நிலைப்பதாயிற்று. இனி அப்பற்றுக்கோடும் இல்லையாயபின் உயிர்போதல் ஒருதலை என்பாள், 'நம் இன் உயிர் நிலை என்னும்?' என்றாள். பிரிந்தபின்னும் வாழ்வுகந்த உயிர் என்பாள், 'இன்னுயிர்,' என்றாள். 'துன்பம் உழத்தொறும் காதற்றுயிர்,' எனப் பிற சான்றோரும் கூறுதலறிக.

பொன்னிறமுடைய மேனி முழுதும் பசலை பாய்ந்து மெலிந்து போம்படி செய்த வன்கண்ணர் என்பாள், 'பொன்னேர் மேனி நன் னலம் சிதைத்தோர்,' என்றாள். வேனில் மகளிரைப் பார்க்கினும் பண்டு சிறந்த நலமுடையேனை யிருந்தேன் என்றிரங்குவாள், 'நன்னலம்,' என்றாள்.

இனி யான் உயிர் வாழகில்லேன் என்பது கருத்து.

பாட்டு - உஉ : தலைவி கூற்று

துறை :—அலரஞ்சி ஆற்றாளாகிய தலைமகள், தலைவன் கேட்பானெனத் தோழிக்குக் கூறியது. அஃதாவது, ஊர் மாக்கள் தூற்றும் பழிச்சொல் பொறாது வருந்திய தலைவி, ஒருநாள் தலை வன் தன் மனையகல் வந்து நிற்றலை அறிந்து, அவன் வரவுணரா தாள் போன்று தோழிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "மீனும் இறவும் மணல் புலாறுறப் பரக்கும் துறையையுடைய நந் தலைவனோடு யாம் ஒரு நாளேனும் இன்புற்றமர்ந்து மகிழ்ந்தேம்," என்னும் பழியிலேமாகவும், புட்கள் ஆரவாரிக்கும் புன்னைச் சோலையை யுடைய இச் சேரியோர் தம் கொடுமை காரணமாக யாண்டும் வீணே பழிதூற்று நின்றனர் காண்," என்று கூறுகின்றாள்.

உஉ. பெருங்கடற் பரதவர் கொணமீன் உணங்கல்
அருங்கழிக் கொண்ட இறவின் வாடலோடு
நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர்தொறும் பரக்குந் துறைவனெ டொருநாள்

நக்கதோர் பழியு மிலமே போதவிழ்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுந்தன் கொடுமை யானே.

—தும்பிசேர் கீரனர்.[1]

(இ - ள்.) தோழி!, பெருங் கடல் பரதவர் கொள் மீன் ணங்கல் - பெரிய கடலின்கண்ணே பரதவர் வேட்டத்தாற் காண்ட மீன்களினது உலர்ந்த வற்றல், அருங் கழிக் கொண்ட றவின் வாடலொடு - நிலத்தற்கரிய கழிகளிடத்தே கொண்ட ரவினது வற்றலோடே, நிலவு நிற வெண்மணல் புலவப் லவுடன் எக்கர்தோறும் பரக்கும் துறைவனொடு - நிலவொளி பான்ற வெள்ளிய மணற்பரப்புப் புலனுறும்படி பலவும் நங்கே இடுமணல்தோறும் பரவிக் கிடவாகின்ற கடற்றுறையை டைய நந் தலைவனோடு, ஒருநாள் நகைத்த ஓர் பழியும் இலம் - ம் ஒரு நாளேனும் மகிழ்ந்த விளையாடிய பழி இல்லாதேமா நப்பவும், போது அவிழ் பொன் இணர் மரீஇய புள் இமிழ் - லர்கள் விரிந்த பொன்னிறமுடைய பூங் கொத்துக்களிடத்து ப்திய பறவைகள் ஆரவாரிக்கின்ற, பொங்கர்ப் புன்னை அம் ரி இவ்வூர் - கிளைகளையுடைய புன்னை மரங்கள் சூழ்ந்த ழகிய சேரிகளை யுடைத்தாகிய இந்த ஊரின்கண் உள்ளோர், ன் கொடுமையான் கொன அலர் தூற்றும் - தமக்கியல்பாக ர்ள கொடிய தன்மையாலே வீணே பழி தூற்றுகின்றனர்.

விளக்கம்:—பரதவர் - நெய்தனில மாக்கள். பரதவர் கொண்ட ன் உணங்கலும் இரை வற்றலும் தமக் கியல்பாகிய புலனுற்றத்தை ொவளி போலும் தூய மணலிலேற்றி நாறும்படி செய்தற்பொன்று ப்வூர் வம்பமாக்கள் தமக் கியல்பாகிய புன்மையால் கற்புக்கடம் பூண் ாழுகும் நம் தூய வொழுக்கத்தை யாண்டும் பழி தூற்றுகின்றனர் ன்பது உள்ளுறையாகக் கருதுக.

இக் களவுக் காலத்தே தலைவனை யாம் பன்முறை கூடப்பெற்றேம் ரினும், நெஞ்சம் நிறைவுறக் கூடினேமல்லேம் என்பாள், 'ஒருநாள் க பழியுமிலம்' என்றாள். எனவே, இக் களவொழுக்கம் நிறையின்பம் கர்தற்கு இடனுகாமையோடு வீண்பழி எற்க இடனுகவும் உளதென னர்த்தியவாறு. இனி வளர்ந்து கொண்டாலோ அங்ஙனே நிறை ன்பமும் புகழும் தரும் என்பதும் அருத்தாபத்தியாற் கொள்ள பத்தமையும் உணர்க.

உணங்கல் - உலர்ந்த மீன். இரை - இறவு என ஆக்குறுகி உகர ற்றது. இரை - ஒருவகை மீன். வாடல் - வற்றல் அஃதாவது லர்ந்த இறவு. நிலவு நிறம்போன்ற வெண்மையுடைய மணல் என்க. கை: இடக்கரடக்கல். இவ்வூர் - ஆகுபெயர். கொன் - வீண்.

(பாடம்) 1. தும்பிசேர் தீரன்; தும்பி மோசிகீரன்.

இங்ஙனம் மனம் விரும்பியவாறு இன்பநுகர்தற்கு இடனுகாது வீண்பழிக்கே இடனுகிய இக்களவொழுக்கத்தை விட்டு விரைவின் வரைந்துகொண்டு வேண்டியாங்கின்புற்றுப் புகழ்பட வாழ்தலே சிறப்புடைத்தெனக் குறிப்பானுணர்த்தி இது வரைவு கடாயதாதலறிக.

பாட்டு - உஉக : தோழி கூற்று

துறை :—தோழி கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து அறத்தொடு நிற்பேன் என்றது. அஃதாவது, நொதுமலர் வரைவுவேண்டிப் புக்கபொழுது தோழி 'இனி யான் மறை வெளிப்படுத்துவன்' என்று தலைவிக்குணர்த்தியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அன்னாய் நான் கூறுவதனை விரும்பிக்கேள் ; நின் துணைவனுகிய ஆரநாறு மார்பினன் கண்ணிசூடி ஈண்டு வந்து பெயரும்பொழுது புலியேறு முழங்கினும் முழங்கும் ஆகலால், இது மறைத்தொழுகும் பொழுதன்று; நான் அறத்தொடு நிற்பேன் காண்' என்கின்றுள்.

உஉக மலைச்செஞ் சாந்தின் ஆர மார்பினன்
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன்
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்
மடவர லரிவைநின் மார்பமர் இன்றுணை
மன்ற மரையா இரிய ஏறட்டுச்
செங்கண் இரும்புலி குழுமும் அதனுல்
மறைத்தற் காலையோ அன்றே
திறப்பல் வாழிவேண் டன்னைநம் கதவே.

.....[1]

(இ - ள்) அன்னை வாழி வேண்டு - அன்னாய் நீ வாழ்வாயாக; யான் கூறுவதொன்றனை விரும்பிக்கேள், மடவரல் அரிவை - மடப்பம் வருதலையுடைய அரிவையே! நின் மார்பு அமர் இன்துணை - நினது மார்பினைப் பொருந்தும் இனிய தலைவன், மலைச் செஞ் சாந்தின் ஆர மார்பினன் - மலையின்கண் பிறந்த சிவந்த சந்தனத்தையும் முத்தமாலையையும் உடைய மார்பினனுய், சுனைப் பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன் - சுனையின்கண் பிறந்த அழகிய குவளை மலரானுய வண்டுகள் பொருந்திய தலைமாலையுடையனுய்; நம் மனை நடுநாள் வந்து பெயரும் - நமது மனைக்கு இடையிரவிலே வந்து மீளாநின்றுன், மன்றம்

1. ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

மரையா இரிய - அப்பொழுது அம்பலத்தின்கண் உள்ள மரையா ஓடும்படி, ஏறு அட்டுச் செங்கண் இரும்புலி குழுமும்- அதன் ஏற்றினைக் கொன்று சிவந்த கண்ணையுடைய பெரிய புலி முழங்கும், அதனால் மறைத்தற் காலை அன்று - ஆதலால் நம் களவொழுக்கம் மறைத்தற்குத் தகுந்த காலம் இஃதன்று, நம் கதவு திறப்பல் - யான் நமது மறையினை வெளிப்படுப்பேன்.

விளக்கம் :—இச்செய்யுட்குத் துறை வகுத்தோர் தொதுமலர் மகட் பேசி வந்தமையை அறிந்த தோழி, அச்செய்தியைத் தலைவி அறியின் வருந்துவள் எனக்கருதித் தான் அறத்தொடு நிற்றற்குப் பிறிதோர் காரணம் காட்டித் தலைவியின் உடம்பாடு பெறக் கூறியதென்று கருதினா போலும்.

ஈண்டுத் தான் அறத்தொடு நிற்றற்குக் காரணம் இரவுக்குறியின் கண் வந்து மீளும் தலைவற்குப் புலியானே ஏதம் உறுங்கொல் என அஞ்சும் அச்சமாகும் என்று தோழி கூறினள் என்க.

சாந்தினையும் ஆரத்தினையும் உடைய மார்பினன் என்க. சாந்து - சந்தனம் ஆரம் - முத்துமாலை. சாந்தும் கண்ணியும் அணிந்து வருவன் என்றது, அவற்றின் மணத்தாலே அவன் வரவு பிறரானறியப் படும் எனப் பிறிதுமோர் ஏது குறிப்பானுணர்த்திய படியாம். நடு நாள் - நடு இரவு. நம்மனை நடுநாள் வந்து பெயரும் என மாறுக. அவன் வந்து பெயர்ந்த பின்னர் யான் புலி முழக்கத்தைக் கேட்டுளேன் என்பாள், 'செங்கண் இரும்புலி குழுமும்' என்றாள். ஊரம் பலத்தின் கண்ணே புலி குழுமும் என்றது தலைவன் அதற்குத் தப்புதல் அரிதென்பதுபட நின்றது.

இங்ஙனம் ஏதமிக்க இருள் நெறியில் அவன் வந்து பெயர்தலை யாம் தவிர்க்கவேண்டும் ஆகலின், நமது மறையை வெளிப்படுத்து அவன் வரைந்து கோடற்கு வழிசெய்தல் இன்றியமையா தென்பாள், 'இது மறைத்தற் காலை' அன்றெண்ணினாள்.

நம் கதவு திறப்பல் என்றது, குறிப்புமொழி. அஃதாவது நமது மறைச் செய்தியை வெளிப்படுப்பன் என்றவாறு. மறை வெளிப்படுத்தல் வரைவிற்கு வழிசெய்தலே ஆகலின் கதவு திறப்பல் என்றது நன்கு சிறத்தலறிக.

பாட்டு - உஉ : தலைவி கூற்று

துறை :—தலைமகன் வரவுணர்ந்து தலைமகள் இயற்பட மொழிந்தது. அஃதாவது, இரவுக்குறிக்கண் தலைவன் குறித்த பொழுதில் வாராமையானே அவனை தோழி பழித்தாள். அப் பொழுது தலைவன் வருதலைத் தலைவி அறிந்துகொண்டு அவன் வரவறியாதாள் போன்று தோழிக்குத் 'தலைவன் பழியிலன்' என்பதுபடத் தலைவி கூறியது.

இதன்கண், தோழிக்குத் தலைவி, 'ஆமாவினது கன்று, கானவருடைய ஆரவாரத்தாலே அஞ்சித் தன் இனத்தைப்

பிரிந்து காட்டின்கண் உள்ளதோர் சிற்றூரிலே புகுந்து, ஆண் டுள்ள மகளிராற் பேணப்பட்டு வீட்டு வாழ்க்கையில் வன்மை பெற்றது போன்று, அவன் வாராவிடினும் நாமே வலிந்து அவன்பாற் சென்று இன்புறுவேமாக' என்று கூறுகின்றாள்.

நஉஉ. அமர்க்க ணுமான் அஞ்செவிக் குழவி
கானவ ரேடுப்ப வோரீ இனங்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளைய ரோம்ப மரீஇயவ ணயர்ந்து
மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவின் இனியவு முளவோ
செல்வாங் தோழி யொல்வாங்கு நடந்தே.

—ஐயூர் முடவனார்.

(இ - ள்) தோழி—, அமர்க்கண் ஆமான் அஞ்செவிக் குழவி - விரும்புதற்குக் காரணமான கணைகளையுடைய ஆமா னினது அழகிய செவிகளையுடைய கன்று, கானவர் எடுப்ப வெரீஇ இனம் தீர்ந்து - வேடர்கள அலைத்து எழுப்புதலானே அஞ்சித் தனது இனத்தினின்றும் பிரிந்து போய், கானம் நண் ணிய சிறுகுடிப் பட்டென - காட்டின்கண் பொருந்திய சிறிய குறவர் குடியிலே அகப்பட்டதாக, இளையர் ஓம்ப மரீஇ அவண் நயந்து - அக்குடிக்கண் உள்ள இளமகளிராகள பேணுநிற்ப அவ ரோடு கலந்து அவ்விடத்தை விரும்பி, மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு - வீட்டின்கண் வாழும் வாழ்க்கையின்கண் வன்மையுற்றாற் போன்று, மருவின் இனியவும் உளவோ - பழகுதலானே வரும் இனிமையினும் இனிமையுடையன வேறு பொருள்களும் உள்ளனவோ? ஆதலின் யாமும் நந்தலைவ னுடன் மருவி இன்புறும் பொருட்டு, ஒல்வாங்கு நடந்து செல் வாம் - நம்மால் இயன்ற அளவின் நடந்து அவன் இருக்கைக் குச் செலவோம்.

விளக்கம்:—'அவன் ஈண்டு வந்திலன்; அன்பிலன்,' எனத் தோழி இயற்பழித்தாளாக, 'அவன் வாராமையானே அன்பிலன்' என்று கூறுதே கொள்; 'அவன் அன்புடையனே; நமக்கு இன்பம் வேண்டின் அவன் இருக்கைக்கு யாமும் செல்வோம' என்று தலைவி இயற்பட மொழிந்தது.

காட்டில் வாழும் இயல்புடைய ஆமான் கன்று, அக்காட்டில் வாழ் வாரானே அலைபபுண்டு, தன் இனத்திற் பிரிந்து சிறுகுடியிற்பட்டு ஆண்டுறையும் மகளிரோடு பழகி அவ்வின்பத்தே பழகிஞற்போன்று, நம்மூராரானே அலர்தூற்றி அலைக்கப்பட்ட யாமும் நம் தமரின் நீங் கித் தலைவன்பால் வலிந்து சென்று உய்வேம் என உவமையை விரித்

துக் கொள்க. இவ்வுவமையானே தலைவி தனக்குற்ற இன்ஞ நிலையினைத் தலைவற்குக் குறிப்பானுணர்த்தி வரைவு கடாவினள் ஆதலும் உணர்க.

மகளிர் தலைவன் மனைக்குத் தாமே சேறல் வழக்கமன்றெனினும், நமக்குற்ற இன்னலினின்று தப்பற்கு வேறு வழியின்மையான், அவ் வழகைக மாற்றிப் புதுவதாக யாமே செல்லும் வழக்கத்தை உண்டாக்குவேம்; அங்ஙனம் செய்தேனும் உய்வம் என வருந்திக் கூறியது என்க.

அவனிருக்கைக்குச செல்லல் தனது மென்மையால் இயலாது என்பதுபட, 'ஒல்வாஙகு நடந்து செல்வாம்' என்றாள்.

கானவர் - குறிஞ்சிநில மாக்கள். எடுப்ப என்றது கவண் எறிந்தும் ஆரவாரித்தும் எழுப்ப என்றவாறு.

பாட்டு - ஙஉஙு : தலைவன் கூற்று

துறை :—வினைமுற்றினன் பாகற்கு உரைத்தது; அஃதாவது, தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்ற தலைவன் அவ் வினை முற்றியவுடன் தேர்வலவனுக்குக் கூறியது.

இதன்கண், தலைவன் பாகனை நோக்கி, 'வலவனே! இங்ஙனம் வினை முதலியன செய்து கழிக்கும் நாள்கள் எல்லாம் பயனற்ற வீணாட்களேயாம்; இவ்வுலகதனே பயன்பட வாழும் நாட்களாவன, நறுநுதல் அரிவை தோளினைத் துஞ்சிக் கழிந்த நாட்களேயாகும்' என்று கூறுகின்றான்.

ஙஉஙு. எல்லாம் எவனே பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்
அரிவை தோளினைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே.

—பதடி வைகலார்.

(இ - ள்) வலவ—, பாணர் படுமலை பண்ணிய எழாலின் - பாணர்கள் படுமலைப் பாலை என்னும் பண்ணை இசைத்த இசையினது, வானத்து எழும் சுவர் நல் இசை வீழ - விசும்பிலே எழாநின்ற மேலான ஒலிபோன்ற நல்ல இசையுண்டாகும்படி, பெய்த புலத்துப் பூத்தமுல்லை - மழைபெய்த கொல்லியின் கண்ணே மலர்ந்த முல்லையினது, பசு முகைத் தாது நாறும் நறுநுதல் - பசிய அரும்பினது தாது மணக்கும் நறிய

நெற்றியையுடைய, அரிவை தோள் இணைத் துஞ்சிக் கழிந்த நாள்-தலைவியினது தோளிணைகளிலே துயின்று கழிந்த நாள்கள் மட்டுமே, இவண் வாழும் நாள் - இவ்வுலகத்தின்கண் யாம் வாழ்ந்த நாட்களாகும, எல்லாம் எவனை - அங்ஙனமின்றி பிற நெறியில் கழிந்த நாட்கள் எல்லாம் என்ன பயனுடையன, பதடி வைகல் - அவையிணைத்தும் உள்ளீடற்ற பதர்போன்றனவே யாம்.

விளக்கம் :—பதடி - பதர். பதர்போன்று இன்பமாகிய உள்ளீடற்ற நாள்கள் என்க. படுமலை - படுமலைப் பாலை என்னும் ஒரு பண். இதனை "செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப் பாலை, விளரிப்பாலை, மேற் செம்பாலை எனப் பட்ட ஏழுபாலையினையும்," எனவரும் (சிலப் - நூ. எ0 - எக உரை) அடியார்க்கு நல்லார் உரையானும் அறிக. எழால் - இசை. எழாலினது இசைபோலும் நல்லிசை என்க. சுவல் - சுவர் என லகரத்திற்கு ரகரம் போலியாக வந்தது. சுவல் - மேலிடம். இசையில், கீழ்ஓசை நடுவண்ஓசை மேலோசை (மந்தம் உச்சம் சமம்) என மூன்றிடம் வருப்புண்மையின் மேலோசையைச் சுவல் நல்லிசை என்றான் என்க. மழை பெய்யும் ஒலி படுமலைப்பாலைப் பண்ணெலியை ஒக்கும் என்பதனை,

> "பலவயின் நிலைஇய குன்றிற் கோடுதோ
> றேயினை யுரைஇயரோ பெருங்கலி யெழிலி
> படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்
> பெழீஇ யன்ன உறையினே." (நற் - கஉக)

எனவரும் நற்றினைச் செய்யுளானும் உணர்க.

வீழ என்றது, உவமவுருபு.

> "எள்ள விழையப் புல்லப் பொருவக்
> கள்ள மதிப்ப வெல்ல வீழ
> என்றூங் கெட்டே பயனிலை யுவமம்." (உவம-கச)

எனவரும் தொல்காப்பியத்தானும் அஃதுவமவுருபாதல் அறிக.

'அரிவை தோளிணைத் துஞ்சிக் கழியா நாள் எல்லாம் பதடி நாள் எனவே, இந்நாளையும் பதடி நாளாக்காது விரைந்து தலைவியின் பாற் சேறல் வேண்டும்; தேரினை விரைந்து செலுத்துக' என்று குறிப்பான் உணர்த்தினனையிற்று.

தலைவியோடு துயிலா நாள் எல்லாம் பதடிவைகல் என்ற அருமை கருதி இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் 'பதடி வைகலார்' என வழங்கப்பட்டனர்.

பாட்டு - நூஉச : தோழி கூற்று

துறை :—செறிப்பறிவுறுக்கப்பட்டு "இரா வாரா வரைவல்' என்றற்குத் தோழி அதுமறுத்து வரைவு கடாயது. அஃதாவது

தலைவி இற்செறிக்கப்பட்டமையைத் தோழியால் உணர்த்தப் பட்ட தலைவன், 'யான் இரவுக்குறியில் வந்து தலைவியைக் கண்டு செல்வேன்; பின்னர் வரைந்துகொள்வேன்' என அத் தோழியை இரந்தானாக, அவள் அவன் குறை மறுத்து வரைந்து கொள்ளும் படி தூண்டியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'ஐய! நீ தலைவியின் பாற் கொண்டுள்ள அன்புடைமையானே கொடிய முதலைகள் திரிகின்ற கழியினை நீந்தி நள்ளிரவின்கண் வருகின்றனை; அவளோ தனது மடமையாலே நீ அங்ஙனம் வருதலை அஞ்சிப் பெரிதும் வருந்தாகின்றனள்; உங்களிருவருடைய வருத்தத்தை யும் காண்கின்றயானோ தன் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்ணக் கண்ட தாய் போல நும் இருவீர்க்கும் இரங்கி அஞ்சா நின்றேன்' என்கின்றாள்.

நூஉசை. கொடுங்கால் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையின் உயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே.

—கவை மகனார்.

(இ - ள்.) பெரும - பெருமானே! நீ நின் நயன் உடைமை யின் - நீ நினது அன்புடைமையானே, கொடுங்கால் முதலைக் கோள் வல் ஏற்றை - கொல்லுதலில் வல்ல வளைந்த கால்களை யுடைய ஆண் முதலையானது, வழி வழக்கு அறுக்கும் கானல் அம் பெருந்துறை - வழியினிடத்தே மக்கள் செல்லுவதை விலக்காகின்ற கானலையுடைய அழகிய பெரிய கடற்றுறையின் கண், இனமீன் இருங்கழி நீந்தி - திரளாகிய மீன்களையுடைய கரிய கழியை நீந்தி, வருதி - வாராநின்றனை, இவள் தன் மடன் உடைமையின் உயங்கும் - இவளோ தன் அறியாமையை உடைமையாலே நின் வருகைபற்றி வருந்தாகின்றனள், யான் கவை மக நஞ்சு உண்டாங்கு - யாளே தன்னுடைய இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டபொழுது தாய் அவ்விருவர்திறத்தும் வருந்துவதுபோல, என் நெஞ்சத்தான் அஞ்சுவல் - எனது உள்ளத்தானே அஞ்சாநிற்பேன்.

விளக்கம்:—கோள் வல் முதலை ஏற்றை என்க. முதலை ஏற்றை - ஆண் முதலை. தப்பாது கொல்லும் வன்மையுடைய முதலை என்பாள்,

'கோள்வல் ஏற்றை' என்றாள். இம்முதலே உண்மை அறிந்தோர் அவ் வழிச் செல்லாமையின் 'வழி வழக்கறுக்கும்' என்றாள். வழிவழக்கு - வழிப்போதல். அறுத்தல் - இல்லையாக்குதல். இதனால் இரவுக்குறி வருதற்குள்ளதாம் ஏதம் கூறினாள். அவள்பால் அன்பு பெரிதுடையை யாகலின் இவ்வேதமிருந்தும் நீ அஞ்சாது வருகின்றனை என்பாள், 'நீ நின் நயனுடைமையின் வருதி' என்றாள்.

தலைவி நின்பால் பேரன்புடையளாகலின் நினது ஆற்றல் அறி யாது, நினக்கு 'ஏதம் வருமே' என்று வருந்துகின்றாள் என்பாள், 'இவள் தன் மடன் உடைமையின் உயங்கும்' என்றாள். மகளிர்க்கு மடன் உரியதே என்பாள், 'தன்மடன்' என்றாள்.

'இங்ஙனம் இருவர்திறத்தும் பரிதற்குரிய அவ்விரவுக் குறியினை யான் பெரிதும் அஞ்சுவேன்' என்பாள், தனது இரட்டைமகவு நஞ்சுணக் கண்ட தாயின் வருத்தத்தை உவமை எடுத்தோதினாள். 'இருவர்க்கும் இன்பமேயான வரைவே இனி நிகழ்த்தற் பாலது; இரவுக்குறிக்கண் வாரற்க' என இது வரைவுகடாவியபடியாம்.

கவைமக - ஒரே கருவில் இரண்டுருவமாகத் தோன்றிய மகவுகள். இவ் இருவர் துயர்க்கும் ஒருங்கே வருந்துதற்குக் கவைமகவு நஞ் சுண்டமையை உவமை கண்டதிறப்பானே, இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் 'கவைமகனார்' எனப்பட்டார் என்க. நஞ்சுணக்கண்ட தாய் போன்று என வருவித்துக்கூறுக.

பாட்டு - உரை : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது. அஃதாவது, 'தலைவன் பிரிந்த காலத்து ஆற்றுகின்றிலள்' எனக் கவலையுற்ற தோழிக்குத் தலைவி, 'எனது இன்னலுக்கு யானே காரணமாயினேனே,' என்று நெஞ்சழிந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "அந்தோ! நம் தலைவர் 'யான் பொருளீட்டச் செல்வேன்! செல்வேன்!' என்று எனக்குப் பன்முறையும் கூறினர். அவர் கூறுவது பொய் என்று கருதி, யானும 'செல்வீர் ஆயிற் செல்லுதிர்' என்றேன். அவர் மெய்யாகவே சென்றுவிட்டார். இப்பொழுது எவ்விடத்தினரோ? என் கண்ணீர் நிறைந்து என் மார்பு குளமாயிற்றே!" என்று வருந்துகின்றாள்.

உரை. சேறுஞ் சேறு மென்றலின் பண்டைத்தன்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே அன்னே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்றென் இடைமுலை நிறைந்தே.

—நன்னாகையார்.

(இ - ள்.) தோழி—, சேறும் சேறும் என்றலின் - யாம் இனிப் பொருள் சுட்டற்குச் செல்வேம் செல்வேம்என்று நந்தலை வர்பலகாலும் கூறினமையாலே, பண்டைத் தன் மாயச்செலவாச் செத்து - முன்பு அவர் கூறிய பொய்ச் செலவாகக் கருதி, மருங்கற்று மன்னிக் கழிக என்றேன் - என் பக்கலின் நீங்கி நிலையாகப் பிரிந்து போமின் என்று கூறினேன், அன்னை ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ - அந்தோ நமக்குப் பற்றுக்கோடாகிய நந்தலைவர் இப்பொழுது எவ்விடத்தே உள்ள னரோ அறிகின்றிலேன், என் முலை இடை - என் முலைகளின் இடைப்பகுதி, நிறைந்து கருங் கால வெண்குருகு மேயும் பெருங்குளம் ஆயிற்று - கண்ணீராலே நிறைந்து கரிய கால்களை யுடைய வெள்ளிய நாரைகள் மேயாநின்ற பெரிய குளம் போல ஆயிற்று.

விளக்கம் :—சேறும் - செல்வேம். பொருளீட்டப் பிரிந்து செல் வேம் என்றவாறு. அடிக்குப் பலகாலும் கூறினமை தோற்றி வந்தது. பண்டு அசதியாடற் பொருட்டு இங்ஙனம் அவர் கூறுவர் ஆகலான் இப்பொழுதும் அப்படியே கூறுகின்றார் என யான் தவறுதல கருதி னேன் என்பாள், 'பண்டைத்தன் மாயச செலவாச செத்து' என்றாள். செலவாக என்பதன்கண் ககரம் தொக்கது. மாயம் - பொய். செத்து - கருதி. யானும் அசதியாடுவேன் அவர் செலவைப் பொருட்டாகக் கருதாதேன் போன்று செல்வீரேற் சென்மின் என்று பொய்யே கூறினேன் என்பாள், 'மருங்கற்று மன்னிக் கழிகென்றேனே' என்றாள். மருங்கு - பக்கம், மருங்கற்று - பக்கத்தினீங்கி என்க. மன்னிக் கழிக என்றது, நிலையாகக் கழிக என்றவாறு. அஃதாவது, என்பால் இனி வாராது பிரிந்துறைதலையே நிலையாகக் கொண்மின் என்றவாறு.

கழிக என்னுந்துணையே யன்றி மன்னிக் கழிக என்றேனே; அவர் ஒருகால் அங்ஙனமே நிலையாகத் தங்கிவிடுவரோ என்றேங்குவாள், 'அன்னை' என்றாள். அன்னை - அந்தோ: இரக்கக் குறிப்பு.

எனது தவற்றிற்கு யானே வருந்தி அவர் இருக்குமிடத்தை அடைவேன் எனினோ, அவ்விடமும் அறிந்திலேன் என்பாள், 'எந்தை யாண்டுளன் கொல்லோ' என்றாள் அவனை இன்றி வாழகில்லேன் என்பாள், 'ஆசாகு எந்தை' என்றாள். ஆசு - பற்றுக் கோடு. எந்தை என்றது முறை குறியாது தலைமைத் தன்மை குறித்து எம்பெருமான் என்பதுபட நின்றது.

அவன் கூறியது மாயமெனக் கருதாது மெய்யென்றே கருதி இருப்பனேல், ஆவன செய்து செலவழுங்குவிப்பேன் ; அறியாமையான் அது செய்யா தொழிந்தேன் என்றிரங்கியவாறு.

இடையறாது நீர் தேங்கி நிற்றலின் முலையிடையைப் பெருங்குள மாயிற்று என்றாள். குளத்தின் பெருமையை விளங்கக் கூறுவாள், 'குருகு மேயும் பெருங்குளம்' என்றாள். கருங்கால் வெண்குருகு என் பதன்கண செய்யுளின்ப முணர்க. முலையிடை - முலைகளின் இடைப் பகுதி. இடைமுலை - முன்பின் மாறி நின்றது. முன்றில் என்பது போன்று.

பாட்டு - கூஉசு : தலைவி கூற்று

துறை :—சிறைப்புறம். அஃதாவது, களவுக் காலத்தே தலைவன் ஒருநாள் மனையருகே வந்து நின்றமை கண்ட தலைவி, அவன் வரவுணராதாள் போன்று, 'இவ்வொழுக்கத்தே காணும் பொழுதினும் காணப் பொழுதே பெரிதாகலான், இப்பிரிவினையான் ஆற்றுகிலேன்; விரைவில் வரைந்து கோடலே நன்'றெனத் தலைவற்குணர்த்தும் பொருட்டுத் தோழியை நோக்கிக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நம் தலைவர் ஒருநாள் என்னைப் பிரிந்துறைந்த வழியும், அப்பிரிவுத் துன்பம் பல நாட்களில் நுகரும பெருந்துன்பம் போன்று மிகவும் நீளிதாக என்னை வருத்தா நின்றது?' என்று கூறுகின்றாள்.

கூஉசு. துணைத்த கோதைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான விழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி
ஒருநாள் துறைவன் துறப்பின்
பன்னாள் வருஉம் இன்னை மைத்தே.

.....[1]

(இ - ள்.) தோழி—, துணைத்த கோதைப் பணைப் பெருந் தோளினர் - கட்டப் பெற்ற மாலையை அணிந்த மூங்கிலை யொத்த பெரிய தோள்களையுடையராகிய, கடல் ஆடுமகளிர் கானல் இழைத்த - கடலின்கண் நீர்விளையாட்டயர்ந்த மகளிர்கள் பின்னர்க் கடற்கரைச் சோலையின்கண்ணே இயற்றிய, சிறுமனைப் புணர்ந்த நட்பு - சிற்றிலிடத்தே முதன்முதலாக யாம் தலைவனோடு உளம் பொருந்திய இந்நட்பு, துறைவன் ஒருநாள் துறப்பின் - நம் தலைவர் ஒரோ ஒருநாள் நம்மைப் பிரிந்துறை வராயினும், பன்னாள் வருஉம் இன்னைமைத்து - அவ்வொரு நாளும், பலநாட்களிலே வருகின்ற துன்பத்தைத் தன்பாலுடைய தாயிருந்ததுகாண்.

விளக்கம் :—துணைத்த - சேர்த்துக் கட்டப்பட்ட என்க. கோதை - மலர்மாலை. பணை - மூங்கில். மகளிர் என்றது, ஆயமகளிரை.

தலைவி கற் கானலிலே ஆயமகளிரோடு சிற்றில் இழைத்து விளையாடிய பொழுது ஆண்டு வந்த தலைவனை முதன் முதலாகக் காதலித்தாளாகலின், 'மகளிர் கானலிழைத்த சிறுமனைப் புணர்ந்த நட்பு' என்றாள். ஈண்டுப் புணர்ந்த என்றது, உள்ளப் புணர்ச்சியை. இங்ஙனம் விளையாட்டிடத்துக் காதல் நிகழும் வழக்கமுண்மையை,

---

1. ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை.

"தொடலை யாயமொடு கடலுட ஞடியும்
சிற்றி லிழைத்துஞ் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தந் தீர யாஞ்சிறி
திருந்தன மாக எய்த வந்து
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லு மெல்லின் றசைவுமிக வுடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனே
எனமொழிந் தனனே ஒருவ னவற்கண்
டிறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய வல்ல விழிந்த
கொழுமீன் வல்சி என்றன மிழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ
காணுமோ வெனக் காலிற் சிதையா
நில்லா தெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர் கென்ன நோக்கித் தான்றன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றுமென் கட்கே. (அகம் - ககo)

என்பது போலப் பிறண்டும் தொகைநூல்களுள் வருவனவற்று ளுணர்க.

துறப்பினும் என வரற்பாலதாகிய உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. ஒருநாள் துறப்பினும் அவவொருநாள் பலநாள் போல் நீளிதாய்த் துன்புறுத்தும் என்பாள், 'ஒருநாள் பன்னாள் வருஉம் இன்ன மைத்து' என்றாள். பிரிந்துறைவார்க்குக் காலம் நீளிதாதலை,

"ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (குறள் - கஉசுக.)

எனவரும் திருக்குறளானும் உணர்க. ஈண்டு எழுநாள் என்றதும் பன்னாள் என்னும் பொருட்டாதலும் உணர்க.

இங்ஙனம் இக்கள வொழுக்கத்தே பிரிந்துறையும் பொழுதெல் லாம் என்னைப் பெரிதும் வருத்துதலான் விரைவில் வரைந்து கோடல் வேண்டும் என்பது தலைவனுக்குக் குறிப்பானுணர்த்திய பொருளாம்.

பாட்டு - நஉஎ : தலைவி கூற்று

துறை :—கிழவன் கேட்கும் அண்மையனாக, அவன் மனையி னின்று வரும் யாற்றிற்கு உரைப்பாளாய் உரைத்தது. அஃதாவது, தலைவன் சிறைப்புறத்தே வந்து நின்றமை கண்ட தலைவி, அவன் வரவுணராதாள் போன்று அவன் மனையினின்று வரும் யாற்றினை நோக்கித் தலைவன் செய்த கொடுமையைக் கூறியது.

இதன்கண், தலைவி யாற்றை விளித்து, 'நம்மருகேயுள்ள மடமகள் போன்று இவ் வாழை மெல்லிய சாயலுடையதென்று கருதி அதனை அளி செய்யாது, மலையினின்றும் பெயர்த்துக் கொணர்ந்தனை ஆகலான், நீ தன்னை நயந்தோர்க்கு உதவாமையே நன்றென்றுணராத குன்ற நாடனினும் பெரிதும் தீமையுடையை' என்று கூறுகின்றாள்.

நூஉள. நல்கின் வாழும் நல்கூர்ந் தோர்வயின்
நயனில ராகுதல் நன்றென உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும் நன்றும்
நின்னிலை கொடிதால் தீய கலுழி
நம்மனை மடமகள் இன்ன மென்மைச்
சாயலள் அளியள் என்னாய்
வாழைதந் தனையாற் சிலம்புபுல் லெனவே.

—அம்முவனார்.

(இ - ள்.) தீய கலுழி - தீமையுடைய யாறே!, நம் மனை மடமகள் - நம்மருகேயுள்ள மனையின்கண் வாழும் மடப்பத்தையுடையவள், இன்ன மென்மைச் சாயலள் அளியள் என்னாய் - இதனை போன்ற மெல்லிய சாயலையுடையாள் அளிக்கத் தக்கவள் என்று கருதாயாய், சிலம்பு புல் என வாழை தந்தனை - அது பிறந்த மலைப்பக்கம பொலிவழியும்படி இவ் வாழையைப் பெயர்த்துக் கொணர்ந்தனை ஆதலின், நல்கின் வாழும் நல்கூர்ந்தோர் வயின் - தான் அருள் செய்த வழியே வாழ்கின்ற எளியோரிடத்தே, நயனிலர் ஆகுதல் நன்று என உணர்ந்த - அன்பிலர் ஆகுதல் நன்மையாம என்று உணர்ந்துள்ள, குன்றநாடன் தன்னினும்-மலைநாட்டையுடைய தலைவன் நிலையினது கொடுமையினும், நின்னிலை கொடிது - நினது தன்மை கொடியதாம்.

விளக்கம்:—நல்கின் வாழும் நல்கூர்ந்தார் என்றது, நல்கா வழி வாழ்தல் இயலாத எளியவர் என்றவாறு. இது தலைவன் தன்னைப் பிரிந்தவழி ஆற்றுமை மிக்கு வருந்தாநின்ற தன்னிலையைத் தலைவனுக்குக் குறிப்பான் உணர்த்திய தென்க. நயன் - அன்பு.

"ஓரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ"

எனவரும் கலியடிகளை ஈண்டு நினைவு கூர்க. குன்றநாடன் என்றது நீ பிறத்தற்கிடமாகிய மலைநாட்டிற்குத் தலைவன் எனத் தலைவனுக்கும் யாற்றிற்குமுரிய தொடர்புண்மை குறித்தவாறு. தனக்கும் யாற்றிற்கு முரிய தொடர்பு கூறுவாள், 'நம்மனை மடமகள்' என்றாள்.

யாற்றின் அருகேயுள்ள மனையாகலின் நம்மனை எனக் கிழமைப் பொருள் தோன்றக் கூறினாள். நயனிலர் ஆகுதல் யாவர்க்கும் நன்

றென உணர்ந்தான் என்பது பொருளாகலான், நயனிலர் எனப் பன்மை கூறப்பட்டது. நன்று - பெரிது. நிலை - தன்மை. நாடன் றன்மை யினும் நின்றன்மை கொடிதென்க.

இவ் வாழையைக் காண்டலும் இது நாம் நல்கினன்றி வாழாத நல் குரவுடைத்து. மேலும் நம் மடமகளை ஒத்திருக்கின்றது, ஆதலால் இது நம்மால் அளிக்கத்தக்கது என்று எண்ணுது அதன் வாழ்வை அழித்தனையாகலின், நீ என் வாழ்வை இன்னும் அழித்திலாத குன்ற நாடனினும் கொடியை என்றவாறு.

நம் மனை மடமகள் இன்ன மென்மைச் சாயலள் என்னுய் என்ற ளேனும், இவ் வாழை நம் மடமகளன்ன மென்மைச் சாயலுடைத்து என்னுய் எனபது கருத்தாகக் கொள்க.

கலுழி - யாற்றிற்கு ஆகுபெயர். கலுழி-வெள்ளம், கலுழியையே நோக்கிக் கூறினுள் எனினுமாம்.

பாட்டு - உஉ: தோழி கூற்று

துறை:—வரைவிடை வேறுபடும் கிழத்தியை அவர் வரை யும் நாள் அணித்தெனவும், அலரஞ்சலெனவும் கூறியது. அஃதா வது, வரைவிடைவைத்துத் தலைவன் பொருள்வயிற் பிரிந்தா னாக, ஆற்றாது வேறுபட்ட தலைவியை நோக்கித் தோழி, வரை தற்கே தலைவன் பொருள் ஈட்டப் பிரிந்தனன்; ஆதலால், அண் மையில் அவனும் வரைவொடு புகுவன்; மேலும் ஊரின்கண் அலரும் பெரிதாயிற்று; அதுவும நந்தமர் தலைவனை அறிந்து வரைவுடம்படுதற்கு ஏதுவாம; ஆதலான், 'வருந்தற்க' என, ஆற்றுவித்தது.

இதன்கண், 'தலைவன் நல்கிய நாள் சிலவே உள்ளன; அல ரும் நமக்கு நன்மையே தரும்; நீ அலர்க்கஞ்சி வேறுபடாதே கொள்' என்று தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்.

உஉ. சிறுவீ ஞாழல் வேரலைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசின் இயங்குந் துறைவன்
நல்கிய நாள்தவச் சிலவே அலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரோடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே.

—பரணர்.

(இ - ள்.) சிறுவீ ஞாழல் வேர் அலைப் பள்ளி - சிறிய பூக்களையுடைய ஞாழலினது வேரிடத்தேயுள்ள வலையாகிய

பள்ளியையுடைய, அலவன் சிறுமனை சிதைய-நண்டினது சிறிய இல்லம் அழியும்படி, புணரி குணில் வாய் முரசின் இரங்குந் துறை வன் - அலைகள் குறுந்தொடி வாய்ந்த மூரசம் போல மோதி முழங்கும் கடற் றுறையையுடைய தலைவன், நல்கிய நாள் தவச் சில - அளிசெய்த நாட்களோ மிகவும் சிலவேயாம், அலரே-அங்ஙனமாகவும் அதுபற்றி ஊரில் எழுந்த பழிமொழியோ, வில் கெழு தானை விச்சியர் பெருமகன் வேந்தரொடு பொருத ஞான்றை - விற்படை பொருந்திய படைகளையுடைய விச்சியர் களுக்குத் தலைவன் தன் பகைவேந்தரொடு போர்செய்த பொழுது, பாணர் புலிநோக்கு உறழ்நிலை கண்ட - பாணர் கள் புலிப்பார்வை ஒத்த பார்வையுடையராகிய நிலைமையினைக் கண்ட, கலி கெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிது - ஆரவாரம் பொருந்திய குறும்பர்கள் உறையும் ஊரின்கண் எழுந்த முழக் கத்தினும் பெரிய முழக்கத்தையுடையதாயிற்று.

விளக்கம்:—வீ-மலர். ஞாழல்-நெய்தனிலத்துள்ள ஒருவகை மரம். அதன் மலர்கள் சிறியனவாகலாற் 'சிறுவீ ஞாழல்' எனப்பட்டது. அலைப்பள்ளி: பண்புத்தொகை. பள்ளி - துயிலுமிடம். அலவன்-நண்டு. புணரி - அலை. சிதைய இரங்கும் என்றமையால் சிதைய மோதி இரங்கும் எனத் தகுதியால் ஒருசொல் வருவித்தோதுக.

வில்கெழு தானை விச்சியர் பெருமகன் என்றது, விச்சிமலையைச் சூழ்ந்துள்ள நாட்டையுடைய ஒரு குறுநிலமன்னனை என்க.

பாரி இறந்த பின்னர் அவன் மகளிரைக் கபிலர் விச்சிக்கோனு ழைக் கொண்டு சென்று அம் மகளிரை மணந்து கொள்ளும்படி வேண் டினர் என்னும் வரலாறு புறநானூற்று உ00-ஆம் செய்யுளாலே அறியப் பட்டது. கபிலராற் பாடப்பட்ட விச்சிக்கோவே ஈண்டுப் பரணரா னும் பாடப்பட்டவன் என்றுதல் அல்லது அம்மரபிற் றோன்றிய மற் றொருவன் என்றுதல் கொள்க.

வேந்தர் - பகைமன்னர். விச்சியர் பெருமகன் வேந்தரொடு பொருதமைகண்ட குறும்பர்கள் அவ்வேந்தர்க்கு அழிவு வந்தமையான் அகமகிழ்ந்து ஆரவாரஞ் செய்தனர் என்க. அரசர்கள் அழிவதில் குறும்பர்கட்கு மகிழ்ச்சியுண்டாதல் இயல்பென்க. குறும்பர் - அரசிய லின் உட்பகைவர்;

> "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு."

என்னும் திருக்குறளானும் குறும்பர் இயல்புணர்க.

இனி, விச்சிக்கோ வேந்தரைப் பொருதகாலை அவ்வேந்தர் நாட்டி லிருந்த குறும்பர்கள் அஞ்சிமுழங்கினா எனக் கொள்ளினுமாம். குறும்பூர் - ஆகுபெயர். குறும்பூர் என்பது ஓர் ஊர் எனக் கருது வாரும் உளர்.

விச்சிக்கோ - வேந்தரொடு பொருதுங்கால் பாணர், யார் வெல்வர் யார் தோற்பர் என்ற ஐயத்தால் பகைவர் இருவர் திறத்தும் நோக்

கலின், 'பாணர் புலிநோக்கு உறழ்கிலே' எனப்பட்டது. சிங்கநோக் கென்றே வழங்குதல் பெரும்பான்மை. இருபுறமும் நோக்குதல் என் பது கருத்து. புலியும் அங்ஙனம் நோக்கும் போலும்.

'தலைவனும் வரை பொருளீட்டப் போயினன்; ஊரினரும் அலர் தூற்று கின்றனர்; அலராலே நந்தமர் தலைவனை அறிந்து வரைவுடம் படுவர்; தலைவனும் விரைவில் வருவன்; ஆதலால், வரையும் நாள் அணித்தாம்; நன்மைக்கே எதுவாகிய அலர்க்கு நீ அஞ்சி வருந்தற்க' எனத் தோழி தலைவியை ஆற்றினள் என்க.

அலவனுடைய சிறுமனையைச் சிதைத்துப் புணரி அதனை வெளிப் படுத்தாற் போன்று, இவ்வலர் நம் மறைவெளிப்படுத்து வரைவிற்கு எதுவாம் என்று உள்ளுறை காண்க.

பாட்டு - சுஉசு: தலைவி கூற்று

துறை:—பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிக்கு, 'யான் ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது. அஃ தாவது, தலைவன் பிரிந்த ஞான்று ஆற்றுமை கொண்ட தலை வியை 'நீ ஆற்றுதல் வேண்டும்' என வற்புறுத்திய தோழிக்கு, 'ஒருவாறு ஆற்றுவல்' என்பதுபடத் தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் ஆற்றியிருக் கவே முயல்கின்றேன்; என் கண்களோ அவரை மறக்க வியலா தனவாகி நினைந்து நினைந்து நீர் பெருக்குகின்றன; ஆயினும் ஒருவாறு ஆற்றுவல்' என்று கூறுகின்றாள்.

சுஉசு. கான விருப்பை வேனல் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை உகுத்தலி னுர்கழல்பு
களிறு வழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை அருஞ்சுரம் இறந்தவர்ப் படர்ந்து
பயிலிருள் நடுநாள் துயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே.

—ஒதலாந்தையார்.

(இ - ள்.) தோழி!, கான இருப்பை வேனல் வெண்பூ- காட்டிலே உள்ள இருப்பை மரத்தினது வேனிற்காலததே மலர்ந்த வெள்ளியமலர்கள், வளிபொரு நெடுஞ்சினை உகுத் தலின் - காற்றாலே அலைப்புண்ட நெடிய கொம்புகள் உதிர்த்த மையானே, ஆர் கழல் களிறு வழங்கு சிறு நெறி புதையத் தாஅம் - காம்புகள் கழலப் பெற்று களிற்றுயானைகள் வழங்கா கின்ற சிறிய வழி மறையும்படி பரக்கும், பிறங்கு மலை அருஞ்

சுரம் இறந்தவர்ப் படர்ந்து - விளங்குகின்ற மலைகளையுடைய கடத்தற்கரிய அருவழியைக் கடந்து சென்ற நந்தலைவரை நினைந்து, பயில் இருள் நடுநாள் துயில் அரிது ஆகி - மிக்க இருளையுடைய நடு இரவினும் உறங்குதல் இல்லையாகி, தெண் ணீர் நிகர் மலர் புரையும் - தெளிந்த நீரின்கண் உள்ள ஒளி மலரை ஒப்பாகின்ற, நன்மலர் மழைக்கண்ணிற்கு - நன்றாகிய விழிப்பினையுடைய குளிர்ந்த என்னுடைய கண்களுக்கு, பனி எளிய - நீர்த்துளிகள் எளியவாகப் பெருகுவன காண்.

விளக்கம்:—கானம் என்றது, ஈண்டுப் பாலையை என்க. மலை கூற லிற் குறிஞ்சி திரிந்த பாலையெனக் கொள்க. வளி-ஈண்டுக் கோடைக் காற்றென்க. இருப்பை பாலைக் கருப்பொருளாதல் உணர்க. ஆர்-காம்பு. கழல்பு - கழன்று. செய்புஎன் வாய்பாட்டுவினையெச்சம். பிறங்குமலை - விளக்கமுடைய மலை. பாலையாகலின் மரங்கள் தீய்ந்து பசும்புல் தலைகாண் பரிதாகி மலை மட்டும் பிறங்கின என்க. தாஅம்-பரக்கும். படர்ந்து - இடையுறாது நினைந்து. இருள்பயில் நடுநாள் எனமாறி, இருள் பரவுகின்ற நடுஇரவு எனினுமாம். அரிது - இன்மை குறித்து நின்றது.

"மனக்கவலை மாற்றலரி."

தென்னும் திருக்குறளிற் போல.

தெண்ணீர்க்கண் மலர் என்றது, இரவின்கண் துயிலாது மலர்ந்த குவளைமலரை என்க. நள்ளிரவில் துயிலாமைக்கு, தெண்ணீர் நிகர் மலர் உவமை என்க. நிகர் மலர்-ஒளி மலர்; மலர் மழைக்கண்-மலர்ந்த மழைக்கண். அஃதாவது விழிப்புடைய கண் என்றவாறு. மழைக் கண் என்றது, அதன் பண்டைநிலை கருதிக் கூறியதாம். அக் கண் களுக்குப் பனி எளியவாம் என்ற குறிப்பால், அவை என்வரைத் தன்றிக் கலுழ்கின்றன என்பது கருத்து என்க.

'யான் அவர்பிரிந்தமைக்கு ஆற்றியிருப்பவும், களிறு வழங்கு சிறு நெறி அருஞ்சுரத்தை எவ்வாறு கடந்தனரோ?' என்று நினையுங்கால் ஆற்றுமை யுண்டாகின்றது; ஆயினும் யான் அவர் பிரிவினை ஆற்றுகின் றேன்' என்று கூறினள்.

பாட்டு - ந�நo : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே வருந்திய தலைவி, 'தோழிக்குத் தலைவர் வன்கண்ணர்' என்பதுபடக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'என்னைப் பெரி தும் வருத்தாநின்ற மாலையும் புலம்பும் தலைவர் உறையு நாட்டில் இலவோ?' என்று வினவுகின்றாள்.

நூநo. நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணமில கமழும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே.

—கழார்க் கீரனெயிற்றியனார்.[1]

(இ - ள்.) தோழி—, நலத்தகைப் புலத்தி - நன்மையையும் அழகையுமுடைய வண்ணாத்தி, பசை தோய்த்து எடுத்துத் தலைப்புடைப் போக்கி - கஞ்சியிலே தோய்த்து எடுத்து முதல் ஒலிப்பினை ஒலித்த பின்னர், தண் கயத்து இட்ட நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும் - குளிர்ந்த குளத்திலே போகடப்பட்ட அந்நீரின்கண்ணே பிரிதலைச்செய்யாத பருத்த ஆடையின் மூறுக்கினை ஒக்கும், பெரு இலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ - பெரிய இலைகளையுடைய பகன்றையினது கூம்பு விரிந்த வெள்ளிய பூக்கள், இன்கடுங் கள்ளின் மணமில கமழும் - இனிய கடுப்பையுடைய கள்ளைப்போன்று நறுமணமின்றிக் கமழா நின்ற, புன்கண் மாலையும் புலம்பும் - துன்பத்தையுடைய இம்மாலைப் பொழுதும் அதன்கண் மிகும் தனிமைத் துன்பமும், அவர் சென்ற நாட்டு இன்றுகொல் - நந்தலைவர் சென்றுள்ள நாட்டின்கண்ணே இல்லையோ ?

விளக்கம்:—நலம் - பெண்மை நலம் தகை - அழகு; நலமாகிய தகுதியையுடைய எனினுமாம் புலத்தி என்றது, பின்வரும் வினையால் வண்ணாத்தியை உணர்த்திற்று பசை - கஞ்சி. ஆடைக்குக் கஞ்சியூட்டுதல் இன்றும் கண்டது. தலைப்புடை - முதல் ஒலிப்பு. மீண்டும் கழுவி ஒலித்தல் உண்மையின் தலைப்புடை என்றாள். போக்குதல் - முடித்தல் முறுக்கேறும்படி சுழற்றிச் சுழற்றி ஒலித்துப் பின்னர் நீரிலே போகட்ட ஆடை, முறுகவிழாமற் கிடத்தல் முறுக்குடைய வெள்ளிய பகன்றை மலர்க்கு உவமை என்க. இங்ஙனமே "பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல், கழுவுறு கலிங்கங் கடுப்பச் சூடி" (பதிற் - எசு.) என்றும், "போதுவிரி பகன்றைப் புது மலர் அன்ன அகன்று மடி கலிங்கம் உடீஇ" (புறநா - நூகநூ.) என்றும், பிறசான்றோரும் கூறுதலுணர்க.

"தேட் கடுப்பன்ன நாட்படுதேறல்" எனப் பிறரும் கள்ளுக்குக் கடுப்புண்மை கூறல் அறிக. இன்று - பன்மை ஒருமை மயக்கம்.

அவர் உறையும் நாட்டினும் இவையுளவாயிருந்தும் நம்மை நினைந்து மீள்கிலா வன்கண்ணர் ஆயினர் என்பது கருத்து.

---

1. கிழார்க் கீரனெயிற்றியன் ; கிழார்க்கீரன்.

பாட்டு - நூஉக : தோழி கூற்று

துறை :—செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது அஃதாவது, 'தலைவன் தன்னைப் பிரிவான் கொல்' என்று குறிப்பான் உணர்ந்து வருந்திய தலைவிக்கு, அவன் பிரியான் என்பதுபடத் தோழி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கித் 'தலைவர், கொடுஞ் சிலை மறவர் கொள்ளைப் பொருளையுண்ணும் யானைக்கானம் கடந்து நம்மினும் சிறந்ததாகப் பொருளைக் கருதினராய்ப் பிரிவர் என்றே எண்ணுகின்றனை! அங்ஙனம் பிரியார்காண்' என்று கூறுகின்றாள்.

நூஉக. நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெல் வம்பலர் தோலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கான நீந்தி
இறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கால் மாஅத் தந்தளி ரன்ன
கன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த அரும்பொருள் தரற்கே.

—வாடாப் பிரபந்தனர்.[1]

(இ - ள்.) தோழி—, நறுவடிப் பைங்கால் மாஅத்து அந்தளிர் அன்ன நன்மாமேனி பசப்ப - நறிய வடுக்களையும் பசிய அடியினையும் உடைய மாமரத்தினது அழகிய தளிரை ஒத்த நன்றாகிய மாமையுடைய நிறம் பசலை பாயும்படி, நம்மினும் சிறந்த அரும்பொருள் தரற்கு - நம்மைக்காட்டிலும் தலைவருக்குச் சிறந்ததாகத் தோன்றுகின்ற தேடுதற்கரிய பொருளைத் தேடிக் கொணர்தற்கு, நெடுங்கழை திரங்கிய நீர் இல் ஆர் இடை - நெடிய மூங்கில்கள் உலர்ந்து வற்றுதற்குக் காரணமான நீரற்ற கடத்தற்கரிய பாலை நிலத்தின்கண்ணே, ஆறுசெல் வம்பலர் தொலைய மாறு நின்று - வழியைப்போகும் மாந்தர்கள் அழியும்படி எதிர்த்து நின்று, கொடுஞ்சிலை மறவர் கடறு கூட்டு உண்ணும் - கொடிய வில்லையுடைய ஆறலை கள்வர் காட்டைக் கொள்ளையிடாநின்ற, கடுங்கண் யானைக்கானம் நீந்தி - தறுகண்மையுடைய யானைகளையுடைய காட்டைக் கடந்து, இறப்பர் கொல் - போவாரோ? போகார்காண்.

விளக்கம் :—திரங்குதல் - வற்றி உலர்தல். வெப்பத்தைப் பெரிதுந் தாங்கும் வன்மையுடையது மூங்கில். அது வற்றும் பாலை எனவே

(பாடம்) 1. வாடாப் பிரமந்தனர்; பிரமாந்தனர்.

வேறு மரங்கள் தீய்ந்து போனமை கூறவேண்டாவாயிற்று. ஆர் - அரிய, கடத்தற்கரிய என்க. கடறு - காடு கூட்டுண்ணும் என்றது, கொள்ளையிடும் என்னும் பொருட்டாய் நின்றது. கடுங்கண் - தறுகண். நீரில்லாததும், மறவர் கூட்டுண்பதும் யானையுடையதுமான காடு என்க. நின் மென்றோள் துயில்மருவுந்தலைவர் அவயின்பத்தை விட்டு இத்தகைய பாலையைச் செல்லவோ எண்ணுவர்; எண்ணார்காண் என்னும் நினைவால் அங்ஙனம் பாலையின் கொடுமையை விதந்தாள் என்க.

இறப்பர்கொல் என்னும் வினை, இறவார் என்பதனை வற்புறுத்தி நின்றது நம்மினும் சிறந்த அருமபொருள் என்றதும் பொருள் நம்மினும் அவர்க்குச் சிறந்ததாகாமையும் அவர் அறிவர் என்பதுபட நின்றது. சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது என்பாள், 'அரும் பொருள்' என்றாள்.

நின் மேனி பசக்கும்படி விட்டுக் கொடிய பாலைவழியில் அரும் பொருள்தரச செல்லார் என்றபடியாம்.

பாட்டு - ஈஈ : தோழி கூற்று

துறை .—வரையாது வந்தொழுகாநின்ற காலத்துக் கிழவன் கேட்பக கிழத்திக்குத் தோழி கூறியது. அஃதாவது, களவின்பமே காமுற்று வரைந்துகோடற் கருத்தின்றி ஒழுகுந் தலைவனைத் தோழி வரைவுகடாவுவாள் ஒருநாள் தலைவன் சிறைப் புறமாக நிற்றலுணர்ந்து அவன் கேட்குமபடி தலைவியை நோக்கிக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவருக்கு, மழையையுடையதும் வாடை வீசுவதுமாகிய இக்காலத்து இரவின் கடையாமத்தே நீ உழக்குமதன்பு தீர்தற்பொருட்டு நின்னிலையை நீயே எடுத்துக்கூறின் அதனால் ஏதம் என்னை?' என்று கூறுகின்றாள்.

ஈஈ. வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீர் தரும்படர் தீரநீ நயந்து
கூறின் எவனை தோழி நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி யிழிதரு
மன்ற நண்ணிய மலைகிழ வோற்கே.

—மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனார்.

(இ - ள்.) தோழி—, நாறு உயிர் மடப்பிடி தழீஇ - மணங் கமழ்கின்ற உயிர்ப்பினையும் மடப்பத்தையும் உடைய பெண்யானையைத் தழுவிக்கொண்டு, தடக்கை யானை - பெரிய

கையினையுடைய களிற்றியானை, குன்றச் சிறுகுடி இழிதரும் மன்றம் நண்ணிய - மலையிடத்தேயுள்ள சிற்றாரின்கண் இறங்கி வருதற்கிடமான அம்பலம்பொருந்திய, மலை கிழவோற்கு - மலைகளையுடைய தலைவனுக்கு, வாடை வந்த இல் பெயல் கடை நாள் - வாடைக்காற்று வருகின்ற சிலவாகிய பெயலையுடைய கடையாமத்தே, நோய் நீந்து அரும்படர் தீர - வருத்தத்திலே உழல்கின்ற பொறுத்தற்கரிய துன்பம் நீங்கும்பொருட்டு, நீ நயந்து கூறின் எவன - நீயே விரும்பிக் கூறவேண்டியதனை எடுத்துக்கூறின் அதனால் வருங் குற்றம் யாது?

விளக்கம் :—வாடை வந்த என மாறுக. இல் பெயற் கடைநாள் என்பதற்குச் சிலவாகிய பெயலையுடைய இக் கூதிர்காலத்து இறுதி நாட்களிலே எனினுமாம். என்னோ? வரைவுகடாதற்குரிய காலம் அதுவேயாகலான் என்க. கூதிர்கால மாகலின் வாடையும் சில்பெயலும் கூறப்பட்டன. காணும்பொழுதினும் காணப்பொழுதே பெரிதாகித் துன்பந்தருதலின், 'நோய் நீந்து அரும்படர்' என்றாள். இதனால் இகளவுக காலத்தே தலைவி நோய் நீந்துவளாதலைத் தலைவற்குக் குறிப்பான் உணர்த்தப் பட்டமையுணர்க.

யான் கூறற் கிடம்பெற்றிலேன் என்பாள், 'நீ கூறின் எவன்' என்றாள். எவன் என்றது, அசதால் வரும் குற்றம் யாது என்று வினாய்க் குற்றமின்மை தெளித்தவாறு. இதனால் தன்னிலை கூறத் தலைவி நாணுகின்றாள் என்று தலைவனுக்கு உணர்த்தப்பட்டமை யறிக.

நாறுயிர்ப் பிடி தழீஇ யானை ஊர்மன்றத்தே வரும் என்றது, தலைவியைப் பலரறிமணஞ்செய்துகொண்டு நீ இன்னில்லதிற் புகுதல் வேண்டும் என்னும் உள்ளுறைபயந்து நின்றது.

நாறுயிர் - தோன்றுகின்ற உயிர்ப்பெனினுமாம்.

பாட்டு - ஙஙஙு : தோழி கூற்று

துறை :—அறத்தொடு நிற்பலனைக் கிழத்திக்கு உரைத்தது. அஃதாவது, களவுக்காலத்தே பிரிவாற்றுமையானே வருந்துந் தலைவிக்கு, 'இனி யான் யாய்க்கு நம்மறை வெளிப்படுத்து வரைவுகிழவ வழிசெய்வேன்' என்று கூறியது.

இதன்கண், தலைவியை நோக்கி, 'நீயோ ஆற்றுயாகின்றாய்; நம் மறையினை வெளிப்படுத்தினலன்றி நமர் வரைவுகருதார் ஆகலான், நம் களவுமணமை பலரறிமணமாதற் பொருட்டு இப் பொழுது நம் மறையினை வெளிப்படுப்பின் நன்று,' எனத் தோழி கூறுகின்றாள்.

ஙஙஙு. குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஓப்புங் கிள்ளையோடு

குறும்பொறைக் கணவுங் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனே தோழிநம் மறையே.

—உழுந்தினம்புலவர்.

(இ - ள்.) தோழி—, குறும்படைப் பகழிக் கொடுவில் கானவன் - குறிய படையாகிய அம்பினையும் கொடிய வில்லையுமுடைய குறவனது, புனம் உண்டு கடிந்த பைங்கண் யானை - தினைப்புனத்தை உண்டமையானே கடியப்பட்ட பசிய கண்ணையுடைய யானை, நறுந தழை மகளிர் ஒப்பும் கிள்ளையொடு - நறிய தழையுடையினையுடைய மகளிர் கடிந்த கிளிகளோடே, குறும் பொறைநகு அணவும் குன்ற நாடன் - குறிய பொறைமைக் கல்லினது உச்சியைச் சேரவருமபி நிமிர்ந்து நோக்காதினற மலைநாட்டையுடைய தலைவனது, பணிக்குறை வருத்தம் வீட - வினையின் குறையாலுண்டாகிய நினது துன்பம் கெடும் பொருட்டு, நம மறைதுணியின் எவன் - நமது மறைச் செய்தியை யாய் அறியும்படி தெளிவித்தால் என்னும் ?

விளக்கம் :—இப்பொழுது மறைவெளிப்பாடு இன்றியமையாதகலின் யான் அறதெதாடு நிற்பல் எனக் கூறி அவள் கருத்தை அறிய முயன்ற வாறும்.

படைப் பகழி : பண்புத்தொகை. கொடுவில் - வளைந்தவில் லெனினுமாம். கானவன் - குறிஞ்சிநிலத்தில் வாழ்பவன்.

கானவனாற் கடியப் பட்ட யானை மகளிராற் கடியப்பட்ட கிள்ளையோடே குறும்பொறையில் ஏற அணவும் என்றது, காவலர் முதலியோராற் கடியப்பட்ட தலைவன் தாய் முதலியோராற் கடியப்பட்ட நின்னோடே கூடி இல்லறஞ் செயற்கு விரும்புகின்றான் என்னும் உள்ளுறை தோற்றி, ஆதலால் யான் அறத்தொடு நிற்பன் என்பதற்கு ஏதுவாயிற் றென்க.

குறும் பொறை - குறிய பொற்றைமலை. அணவுதல் - நிமிர்ந்து நோக்குதல். துணியின் என்னும் தன் வினை துணிவிப்பின் என்னும் பிறவினைப் பொருள் தந்துநின்றது. எவனே என்னும் வினா, நன்றும் என்பது படநின்றது.

உன் கருத்தைக் கூறுக என்பது குறிப்பெச்சம். மறை - பிறர் அறியாவாறு ஓம்பப்பட்ட களவுமண நிகழ்ச்சி. துணிவித்தலாவது, தலைவி கற்புக்கடம் பூண்டமையைச் செவிலிமுதலியோர் தெளியும்படி செய்தல்.

பாட்டு - சுசு : தலைவி கூற்று

துறை :—'வரைவிடை ஆற்றகிற்றியோ ?' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் வரைந்து கொள்ளாமல வைத்துப் பிரிந்துசெல்லுங் கருத்துடையனதலை

அறிந்த தோழி, 'அவன் அங்ஙனம் பிரியின், 'நீ ஆற்றியிருக்க வல்லையோ' என்று தலைவியை வினவினளாக, அவட்குத் தலைவி கூறியது.

இதன்கண், 'தலைவன் பிரியின் நீ ஆற்றவல்லையோ?' என்று வினவிய தோழியை நோக்கித் தலைவி 'விரிநீர்ச் சேர்ப்பன் நீப்பின் என்னுடைய இன்னுயிரும் உடனே நீங்கும்' என்று கூறுகின்றாள்.

நூநூச. சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
விரிநீர்ச் சேர்ப்பன் நீப்பி னெருநம்
இன்னுயி ரல்லது பிறிதோன்
றெவனே தோழி நாமிழப் பதுவே.

—இளம்பூதனார்.

(இ - ள்.) தோழி—, சிறு வெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந் தோடு - சிறிய வெள்ளிய காக்கையினது சிவந்த வாயையுடைய பெரிய தொகுதி, எறிதிரைத் திவலை ஈர்ம் புறம் நனைப்ப - வீசாநின்ற அலைகளினது துளி தம ஈரிய முதுகினை நனைத்தலானே, பனி புலந்து உறையும் பல்பூங் கானல் - உண்டாகிய குளிரை வெறுத்துவந்து தங்குதற்கிடமான பல வாகிய பூக்களையுடைய சோலையையுடைய, விரி நீர்ச் சேர்ப்பன் - அகன்ற கடலினது கரையையுடைய நந்தலைவன், நீப்பின் - நம்மைப் பிரிந்துசெல்லின், நாம இழப்பது நம் இன் உயிர் அல்லது பிறிது ஒன்று எவன் - நாம இழத்தற்குரிய பொருள் நமது இனிய உயிரேயன்றி வேறு யாதுளது?

விளக்கம்:—சிறுவெண் காகைச் செவ்வாய் என்று இச்செய்யுளினும், சிறுவெண்காக்கை என்று இந்நூலின்கட் பிறண்டும் பற்பல இடங்களினும் பயின்று வருவதை நோக்குமிடத்து, சிவந்த அலகும் வெண்ணிறமும் உடையதொரு கடற்பறவையையே கடற்காக்கை என்று பண்டையோர் வழங்கினர் என்று எண்ண இடந்தருகின்றது. காக்கைக்கு வெண்மை கூறிய இடந்தொறும் உ. வே. சா. ஐயர் அவர்கள் காக்கையின் கழுத்தின்கண் உள்ள சாம்பனிறத்தைக் கருதியதாக விளக்கம் கூறியுள்ளார்கள். ஈண்டுச் செவ்வாயும் உடன் வருதலால் காக்கையின் உள்வாய்ச் சிவப்பைக் குறிக்கும் என்று கருதிக் கூறியுள்ளார்கள்.

இக்காலத்தார் "கடல் ஆலா" என்று வழங்கும் கடற்பறவை சிறியதாகவும் வெண்ணிறமும் சிவந்த அலகும் உடையதாகவும் காணப்படுதலின், இதே கடற்காக்கை போலும். வேறுளதாயினும் கொள்க.

பெருந்தோடு - பெரிய தொகுதி. கடலிலே நீந்தி இரைதேருங் கால் அலை சிறுவெண்காக்கைகளின் புறத்தை நனைக்கும் என்க. 'அவன் பிரியின் என் உயிர் போய்விடும்; இதனை நீ கேட்டோ அறிதல் வேண்டும்?' என்று கடிவாள், 'சேர்ப்பன் நீப்பின் இன்னுயிர் அல்லது இழப்பது பிறிதெவன்' என்று வினவினாள்.

ஆற்றுமை மிகுமிடத்து உயிரொன்றும் நிற்க எனை நலனெல்லாம் தாமே ஒழியும்; நாம் இழக்க எஞ்சுவது உயிரொன்றே அதனையும் இழப்பது ஒருதலை என்பாள், 'இன்னுயிர் அல்லது பிறிதொன்றெவன் நாமிழப்பது' என்றாள். உயிர்நிற்க எனை நலனெல்லாம் அழிதலுண்மையை,

"பயிரொன்று கலையுந் சங்கும் பழிப்பரு நலனும் பண்பும்
செயிரொன்றி யலர்ந்த பொற்புஞ் சிந்தையும் உணர்வுந் தேசும்
வயிரஞ்செய் பூணு நாணு மடனுந்தன் னிறையு மற்றும்
உயிரோன்றும் ஒழிய எல்லாம் உருத்தொரு தெரிவை நின்றாள்."
(கம்ப, உலாவியல் : அ)

எனவரும கம்பநாடர் செய்யுளானறிக.

எறிதிரை : வினைத்தொகை. திவலை - நீர்த்துளி. ஈர்ம் புறம் - நெய்ப்புடைய முதுகு. நீர்ப்பறவைகளின் சிறகுகள் நெய்ப்புடையன வாதலியல்பு

பாட்டு - நகுறு : தோழி கூற்று

துறை —இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப்பறி வுறீஇயது. அஃதாவது, 'தலைவி இற்செறிக்கப்படுவாள்' என்று தலைவனுக்குக் கூற எண்ணிய தோழி, அவன் இற்செறிக்கப் பட்ட பின்னர்த் தலைவியை இரவின்கண் கண்டு அளவளாவக் கருதாதவாறு சூழ்ந்து கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'ஐய வல்விற் கானவர் தங்கையாகிய நந்தலைவி இருக்கின்ற ஊர், அடைதற்கரிய மலையின்கண்ணே உளது காண்' என்று கூறுகின்றாள்.

நகுறு. நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் சேந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வேற்பிடை நண்ணி யதுவே வாகோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி யிருந்த வூரே

—**இருந்தையூர்க் கொற்றன் புலவனார்.**

(இ - ள்.) பெருமானே !, வார் கோல் வல் வில் கானவர் தங்கை - நீண்ட அம்பினையும் வலிய வில்லையும் உடைய வேட்டு

வருடைய தங்கையாகிய, பெருந் தோள் கொடிச்சி இருந்த ஊர்- பெரிய தோள்களையுடைய நந்தலிவி இராகின்ற ஊர், நிரைவளை முன் கை நேர் இழை மகளிர் - நிரல்பட்ட வளையலையணிந்த நேரிய அணிகலன்களையுடைய மகளிர்கள், இருங்கல் வியல் அறைச் செந்தினை பரப்பி - கரிய மலையின்கண்ணதாகிய அகலிய பாறையின்மேல் சிவந்த தினையைப் பரப்பி, சுனை பாய் சோர்வு இடைநோக்கி - சுனையின்கண் பாய்ந்து ஆடுகின்ற சோர்வினையுடைய செவ்விசண்டு, பைங்கண் பந்தி பார்ப்பொடு கினையிழுந்து கவரும் - பசிய கண்களையுடைய பெண்குரங்குகள் தங்குட்டியோடே மரக்கொம்புகளினின்று இறங்கி வந்து அத் தினையைக் கைக்கொளளாநிற்குமி, வெற்பிடை நண்ணியது - மலையினிடத்தே பொருந்தியது

விளக்கம் :—நிரை - நிரல்; வரிசை. நேர் இழை என்பதன்கண் நேர்மை - நுண்மை குறித்து நின்றது. "நேரியலுயப் பரியனுமாய்," என்புழியும் அஃதப் பொருள் தந்தமை யுணர்க. இழை - அணிகலன். இருங்கல் - பெரிய மலையுமாம். வியல் - அகலம், "வியலென் கிளவி அகலப் பொருட்டே." (உரி-சூசு) என்பர் தொல்காப்பியனார். சுனை பாய்தலானுண்டான சோர்வினை என்க. சோர்வு - அதனை மறந்திருத்தல். கினை - கொம்பு.

வார்கோல் வல்வில் கானவர் தங்கை என்றமையான், இரவுக்குறிக் கண் தலைவியை எய்தலாகாமைக்கோ சேதுக் குறிப்பான் உணர்த்தினளாதல் அறிக. ஊர் வெற்பிடை நண்ணியது; ஆண்டு நீ வருதல் சாலாது என்று, குறிப்பான் உணர்த்தியவா றென்க.

மகளிர் சோர்வினை நோக்கி மந்தி தினைகவரும் வெற்ப என்றது, 'கானவர் சோர்வாலே நீ தலைவியை எய்தினாய்: அத் தவறினையே காண், ஈண்டு இரவினும் வரல் கருதற்க,' என்னும் குறிப்பிற்றென்க.

கானவர் தங்கை என்றது, 'கானவர் குடிப் பிறந்தாள்,' என்னும் பொருட்டு. இங்ஙனம் கூறும் வழக்குண்மையை,

"சிறுதினைத் துளரெறி மண்டுகட் களைஞர் தங்கை" (குறுந்-சுகூ)

என்றும்'

"உழவர் தங்கை." (சிறுபாண் - ககூ0)

என்றும்,

"கொலைவி லெயினர் தங்கை." (ஐங் - சுசுசு)

என்றும்,

"கானவர் தங்கை." (அகம் - கசுஉ)

என்றும், பிற சான்றோர் கூறுமாற்றானு முணர்க.

ஆதலின் வரைந்து கோடலே நன்று என்பது குறிப்பெச்சம்

பாட்டு - சுசுசு : தோழி கூற்று

துறை :—தலைமகன் இரவுக்குறி நயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது. அஃதாவது, இரவின்கண் தலைவியைக் கண்டு அளவளாவ விரும்பிய தலைவன் தோழியின்பாற் குறை யிரந்தானாக, அவள் இரவுக்குறிக்கண் வரின் உளதாம் ஏதங் காட்டி மறுத்தற்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'நீ இரவுக்குறிக்கண் வருவன் என்கின்றாய்; அங்ஙனம் வருதல் நின் பகைவர்க்கு உவகையும எமக்குத் துன்பமுந தருவதொன்றும்; இரவின்கண் நீ வருதல்கண்ட தலைவி பெரிதும் வருந்தாகின்றனள்,' என்று கூறுகின்றாள்.

சுசுசு செறுவர்க் குவகை யாகத் தெறுவர
ஈங்கனம் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
இருங்கழி நெய்தல் போல
வருந்தின ளளியணீ பிரிந்திசி னோளே.

—குன்றியனார்.

(இ - ள்) தேம பாய் துறைவ - தேன் பரவுகின்ற துறை யையுடைய பெருமானே!, செறுவர்க்கு உவகை ஆக - பகை வர்க்கு மகிழ்ச்சி உண்டாகும்படியும், தெறு வர - கேளிர்க்குத் துன்பம் உண்டாகும்படியும், ஈங்கனம் வருபவோ - இவ்வாறு சான்றோர் வருவாரு முளரோ, நீ பிரிந்திசினோள் - நின்னைப் பிரியப்பட்ட தலைவி, சிறு நா ஒண் மணி விளரி ஆர்ப்பக் கடுமா நெடுந்தேர் நேமி போகிய - சிறிய நாவினையுடைய ஒள்ளிய மணிகள் விளரிப் பண்போல ஒலிப்பக் கடிய செலவினையுடைய குதிரைகளையுடைய நின்னுடைய நெடிய தேரினது உருள்கள் ஏறிச் சென்றமையானே நலிந்த, இருங்கழி நெய்தல் போல - கரிய கழியருகேயுள்ள நெய்தன் மலர்போன்று, வருந்தினள் அளியள் - வருந்தா நின்றனள்காண், ஆதலால் இரங்கத்தக்காள்!

விளக்கம் :—செறுவர் - பகைவர். இரவுக்குறி வருங்கால் தலைவ னுக்கு ஆற்றிடைப் புலி முதலியவற்றானே இடையூறுண்டாயவழி அவன் பகைவர்க்கு மகிழ்ச்சி யுண்டாகுமாகலின், 'செறுவர்க் குவகை யாக,' என்றாள். நினக்கு ஏதம் உண்டாகும்படி என்பது குறிப்பு. செறுவர் என்னும் குறிப்பாலே தெறுவர என்றதற்குக் கேளிர்க் கென வருவித்துக் கூறுக. ஈங்கனம் என்றது, இவ்வாறு இரவின்கண்

என்றவாறு. அறிவுடையோர் தம் பகைவர்க்கு உவகையாகவும் தங் கேளிர்க்குத் தெறுவரவும் இவ்வாறு வருபவோ எனப் பொதுவகையிற் கூறினளேனும் சான்றோனாகிய நீ இங்ஙனம் வரல் தகுதியன்றென்பது கருத்தாகக் கொள்க. வருபவோ என்னும் வினா வாரார் என்பது பட நின்றது.

தேம்பாய் துறைவ என்றது, நட்டார்க்கு இனியவே செய்யும் இயல் புடையோனே என்னும் குறிப்பிற்று. தேம் - தேன்.

தலைவன் வந்து மீண்ட தேர் உருளாலே நலிந்த நெய்தலை, அவள் கண்கூடாகக் கண்டமையான் அதனையே மனம் நைந்த தலைவிக்கு உவமையாக்கினாள். கடுமா - கடிதாகச செல்லும் குதிரை. தேரின் மணியொலிக்கு விளரிப் பண்ணிசை உவமை களவுக் காலத்துப் புணர்வினும் பிரிவே நீளிதாகலின் 'பிரிந்திசினாள்' என்றாள். இனின், அசைநிலை நீ வருதலும் தகவன்று, அவளும் நலிந்தனள் எனவே நீ வரைந்து கோடலே நன்றென்று வரைவுகடாவினளாத லுணர்க.

பாட்டு - கூகை : தலைவன் கூற்று

துறை :—தோழியை இரந்து பின்னின்ற கிழவன், தனது குறையறியக் கூறியது. அஃதாவது, தலைவியைப் பெறத் தோழியின்பால் குறை யிரந்த தலைவன், அவள பருவம் வாய்த்த மையும தன்னை வருத்தினமையும் தோழி நன்குணரத் தெளித் தோதியது என்றவாறு.

இதனகண், தலைவன் தோழியை நோக்கி, 'தலைவிக்கு, முலை முகிழ்த்தன, கூந்தல் நீண்டு தாழ்ந்தன; பற்களும் நிரம்பின; சுணங்கு பரந்தன; யான் அவளை நன்கு உணர்கின்றேன்; அவளோ என்னிலை தோகிலள் யாங்காகுவளோ?' என்கின்றான்.

கூகை. முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்ற னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ லுனே
பெருமுது செல்வ ரொருமட மகளே.

—பொதுக்கயத்துக் கீரந்தையார்.

(இ - ள்.) முலை முகிழ் முகிழ்த்தன - தலைவிக்கு முலைகள் அரும்பின, தலை கிளைஇய மென் குரல் - தலையின் கிளைத்த மெல் லிய கூந்தற் கொத்துக்கள், கிழக்கு வீழ்ந்தன - வளர்ந்து கீழே

வீழ்ந்து தூங்காநின்றன, செறி நிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின - நெருங்கி நிரல்பட்ட வெள்ளிய பற்களும் விழுந் தெழும்முறை நிரம்பப் பெற்றன, சுணங்குஞ் சில தோன்றின - தேமலும் சிற்சில உண்டாயின, அணங்குதற்கு யான் அறிவல் - அவள் என்னை வருத்தும பொருட்டு யான் அவளை அறிந்த னன், தான் அறியலள் - அவளோ அதனை அறிந்தாளிலள், பெருமுது செல்வர் ஒரு மடமகள் யாங்கு ஆகுவள் கொல்லோ- பெரிய பழைய செல்வத்தையுடையோரின ஒப்பற்ற மடப்பத்தை யுடைய மகளாகிய தலைவி எத்தன்மையுடையள் ஆவாளோ அறிகிலேன்.

விளக்கம் :—முகிழ முகிழ்த்தன என்றது, முகிழ்த்தலைச செய்தன என்றவாறு. கிளைஇய - கிளைத்த, முளைத்தெழுந்த என்றவாறு குரல்- கொத்து, கூந்தற்கொத்து என்க. கிழக்கு - கீழ். "செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை, காணிற் கிழக்காந் தலை," (சஅஅ) என்னும் திருக் குறளினும் கீழ், கிழக்கென வந்தமை காண்க.

முலை முகிழ்த்தல் முதலாக எண்டுக் கூறப்பட்டவை பேதைப் பருவம் கடந்து மகளிர் பெதும்பைப் பருவ மெய்தியதற்குரிய அறிகுறி கள் என்க.

"முலைமுகம் செய்தன, முள்ளெயிறு இலங்கின,
தலைமுடி சான்ற,... .....பேதை யல்லை மேதையங்
குறுமகள், பெதும்பைப் பருவத் தொதுங்கினை."

என வரும் அகநானூற்றுச் செய்யுளை எண்டு நினைவுகூர்க. செறி வெண்பல், நிரை வெண்பல் எனத் தனித் தனிக் கூட்டுக. செறிதல்- இடையீடின்றி ஒன்றனோடு ஒன்று நெருங்கியிருத்தல். நிரை - வரிசை. பறிமுறை - விழுந்தெழுந்தின்ற முறைமை. பறிதல் - முளைத்தல்; தோன் றுதல். கதிர் பறிந்தது என்னும் உலக வழக்கும் உணர்க. பற்கள் விழுந்தெழும் முறை நிரம்பின என்றது, எல்லாப் பற்களும் விழுந்து முளைத்து ஒத்தன என்றவாறு. பெதும்பைப் பருவத் தொடக்கமாக வின் சுணங்கும் சில தோன்றின என்றுரை அணங்குதற்கு யான் அறி வல் என்றது, அவளை யான் அறிந்தமையே அவள் என்னை வருத்தக் காரணமாம்; இதனையறியின் அவளை யான் அறிந்திரேன் என்றவாறும். தன் என்றது, தனது இப் பருவத்தின் தன்மையை. பெருமுது செல் வர் ஒரு மடமகள் என்றது, அவளை அறிவிப்பாரு மிலர் என்னும் குறிப் புடைய தென்க. என்னை? செல்வர் மக்கட்கு அறிவுரைக்கப் பிறர் அஞ்சுவராகலான் என்க.

இது, தலைவி பருவம்வாரா இளையள்என்று குறைமறுத்த தோழிக் குத் தலைவன் கூறியதாகக் கருதுக.

"கட்டுரை யின்மையின் வரைவு கடாயது," என்பர் பேராசிரியர். (தொல். மெய்ப் - உசு).

பாட்டு : நகஅ : தோழி கூற்று

துறை :—பிரிவிடைத் தோழி வற்புறுத்தது. அஃதாவது, தலைவன் பிரிந்திருந்த காலத்தே ஆற்றுமைமிக்க தலைவியைத் தோழி, 'இதோ தலைவன் வந்தான்' என்னும் வாய்பாட்டால் ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி ஆற்றுமை மிக்க தலைவியை நோக்கி, 'கலைமான் பிணைமானோடே, நிழலிலே கிடந்து தூற்றின்கண் தூங்கி, பயற்றங்கொடியைக் கறிக்கும் புன்கண் மாலைப்பொழுதிலே, பனியையும் உடைய அச்சிரப் பொழுதிலே நந் தலைவன் தேர் நினது துயர்கெடுமபடி வந்ததுகாண்!' என்று கூறுகின்றாள்.

நகஅ. திரிமருப் பிரலை யண்ணல் நல்லேறு
அரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலரில் துஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாள் தண்பனி அச்சிரம்
வந்தன்று பெருவிறல் தேரே பணைத்தோள்
விளங்குநக ரடங்கிய கற்பின்
நலங்கே ழரிவை புலம்பசா விடவே

—பெருங்குன்றூர்கிழார்.

(தி - ள்.) பணைத்தோள் விளங்கு நகரடங்கிய கற்பின் - மூங்கிலை ஒத்த தோள்களையும் விளங்குகின்ற இல்லத்தினகத்தே அடங்கிய கற்பையும் உடைய, நலங் கேழ் அரிவை - பெண்மை நலம் பொருந்திய தலைவி, புலம்பு அசாவிட - தனிமைத்துன்பம் நீங்கும்படி, பெருவிறல் தேர் - பெரிய வெற்றியையுடைய தலைவனது தேர், திரி மருப்பு இரலை அண்ணல் நல் ஏறு - முறுக் கேறிய கொம்பகளையுடைய இரலையாகிய தலைமைத்தன்மை பொருந்திய நன்றாகிய ஆண்மான், அரி மடப் பிணையோடு அல்கு நிழல் அசைஇ - மென்மையையும் மடப்பத்தையும் உடைய பெண்மானோடே தங்குதற்குரிய நிழலிடத்தே தங்கி, வீ தகை வியல் அரில் துஞ்சி - பூக்கள் நெருங்கிய அகன்ற பிணக்கத்தை யுடைய தூற்றின்கண்ணே துயின்று, பொழுது செலச் செழும் பயறு கறிக்கும்-ஞாயிறு மறையாநிற்பச் செழுமிய பயற்றினைக் கறித்துத் தின்னற்குக் காரணமான, புன்கண் மாலைப் பின்பனிக் கடைநாள் தண்பனி அச்சிரம் வந்தன்று - துன்பமுடைய

மாலைப்பொழுதினையும், பின்பனியையுடைய கடையாமத்தை யும், குளிர்ந்த பனியையும் உடைய அச்சிரக்காலத்தே வந்தது காண்.

விளக்கம்:—திரி மருப்பு - முறுக்குடைய கொம்பு. இரலை - ஆண் மான். இரலையாகிய ஏறு என்க. அண்ணல் - தலைமைத்தன்மை. அரி - மென்மை, "அரியே ஐமை," (உரி - நிகண்) என்பது தொல்காப் பியம். ஐமை - மென்மை. அரியையும் மடப்பத்தையும் உடைய பிணை என்க. அல்குதல் - தங்குதல். அசைஇ - தங்கி; இளைப்பாறி எனினு மாம். வீ - மலர். தகைதல் - நெருங்குதல். அரில் - பிணக்கமுடைய சுரை. பனிப்பருவத்தே காய்த்து முதிரும் இயல்புடையதாகலின், பயறு கறிக்கும் எனப்பட்டது. அசிரம் - பனிப்பருவம். மாலைப் பொழுது தனித்துறைவாரை நலியுமியல்பிற்றாகலின், 'புன்கண் மாலை' என்றாள். பெருவிறல்: அன்மொழித்தொகை. பெரிய வெற்றியை யுடைய தலைவன் என்க. வினைமுற்றி வந்தான் என்பாள், 'பெரு விறல்' என்றாள். நின்னை நினைந்தே வந்தான் என்பாள், 'புலம்பு அசாவிட வந்தன்று' என்றாள்.

இது நந்தலைவன் அச்சிரக்காலத் தொடக்கத்தே வருவன்; அது காறும் ஆற்றியிருந்திடுக என்பாள், துணிவுபற்றி வந்தன்று என்று இறந்தகாலத்தாற் கூறியவாறென்க.

தலைவன் கூறிச சென்ற அச்சிரக்காலத் தொடக்கத்தே வருதல் ஒருதலை என்பது கருத்து.

அடங்கிய கற்பென்றது அடங்குதற்குக் காரணமான கற்பு என்ற வாறு. ஆதிய கற்பென்பாருமுளர். மனைக்கு விளக்கம் கற்புடை மடவாரே யாகலின், விளங்கு நகர் அடங்கிய கற்பின் அரிவை என்றாள். தன்னுலை விளக்கம் பெற்ற இல்லத்தின்கண்ணே அடங்கிய வதியும் கற்புடைய நங்கை என்றவாறு.

இரலை ஏறு பிணையோடே அசைஇத் துஞ்சிக் கறிக்கும் அசிரம் என்றது. அக்காலத்தே தலைவன் நின்னோடே உடனுறைந்தின் பஞ்செய்வன் என்னும் குறிப்புடைய தென்க.

பாட்டு - நுகுகூ: தோழி கூற்று

துறை:—வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்தியது. அஃதாவது, தலைவன் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்தே பெரிதும் வருந்திய தலைவியைத் தோழி நீ வருந்துதல் தகவன் றென்பது பட இடித்துரைத்து ஆற்றுவித்தது.

இதன்கண், தோழியை நோக்கி, 'தலைவன் நினது குவளை யுண்கண் கலுழப் பிரியாது நின்னோடு உடனுறைந்த பொழு தெல்லாம் உனக்கு இனிதாயிருந்தது; உடனுறைவியல்பாதல்

போன்று உடனுறைந்தோர் பிரிதலும், உலகியலேகாண்; இதற்கு நீ வருந்துதல் பேதைமை' என்கின்றாள்.

நூநூகூ. நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறையறு மையிற் போகிச் சாரற்
குறவர் பாக்கத் திழிதரு நாடன்
மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி தோழி மாயிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

—பேயார்.

(இ - ள்.) தோழி—, நறை அகில் வயங்கிய நளிபுன நறும் புகை - மணமுடைய அகிலினது விளங்கிய செறிந்த புனத்தின்கண் எழுந்த நறிய புகை, உறை அறுமையின் போகி-துளித்தலொழிந்த முகிலகளைப்போன்று சென்று, சாரல் குறவர் பாக்கத்து இழிதரும் நாடன் - மலைப்பக்கத்தேயுள்ள குறவருடைய ஊரின்கண்ணே இறங்குகின்ற நாட்டையுடைய நந்தலைவன், மயங்கு மலர்க்கோதை நன்மார்பு முயங்கல் - பன்னிற மலர்களும் விரவிய மாலையையுடைய தினது நல்ல மார்பைப் பொருந்துதல், மா இதழ்க் குவளை உண்கண் கலுழ - கரிய இதழையுடைய குவளைப்பூப் போன்ற தினது மையுண்ட கண்கள் அழும்படி, பசலை ஆகா ஊங்கலங்கடை-பசலை உண்டாகாததன் முன்னர், மன் இனிது - மிகவும் இனிதாயிருந்தது.

விளக்கம்:—நறை - மணம். வயங்கிய - விளங்கிய. நளி - செறிவு. புனத்தின்கண் குறவர் அகில்மரங்கொன்று சுடுதலானே உண்டாகிய நறும்புகை என்றவாறு. உறை - மழைத்துளி. துளியாது செல்லும் மேகம் அகிற்புகைக்கு உவமை. உறையறு மை என்றதற்கு, பெய்து ஒழிந்த வெண்மேகம எனினுமாம். மை - மேகம். பாக்கம் - ஊர். தலைவன் மார்போடே மயங்கும் மலர்க்கோதை எனினுமாம். புணர்ச்சி உண்டாயின் அதற்கினமாகிய பிரிவும் பின்னர் உண்டாதல் ஒருதலை. தின் பொருட்டே தலைவன் பிரிந்துளான்; நீ ஆற்றியிருத்தலே தகவாம்; பிரிவினைப் பொருது வருந்துதல் பேதைமை என்றாள என்க.

நன்மார்பு முயங்கல் இனிதுமன் என்றது, அங்ஙனம் முயங்கியிருத்தல் ஒன்றுமே இயல்பன்று; பிரிதலும் இயல்பாகலின் அதனையும் இனிதாக் கோடலே சிறப்பென்பதுபட நின்றது.

ஊங்குக் கடை என்பதனிடையே அல் அம் என்னும் சாரியை புணர்ந்து ஊங்கலங்கடை என்றாயிற்று. பாக்கம் என்பது - பக்கத்தே உள்ள ஊர் என்னும் பொருட்டு.

பாட்டு - சுசஅ : தலைவி கூற்று

துறை :—இரவுக்குறி உணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது அஃதாவது, தலைவனுக்கு இரவுக்குறியுடம்பட்ட தோழி, தலைவிக்கு அதனை அறிவுறுத்தியவழி அவள் இரவுக் குறியின் ஏதங்காட்டி அதனை மறுத்தது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நம்மனம் நந்தலைவ னில்லாத பொழுது அவரோடாகி அவரையே நினைந்து வருந்தி யும், அவர் இரவுக்குறி வருமிடத்து அவர் நம்மோடுளுறையும் பொழுதும் ஆற்றினது ஏதங்குறித்து நம்மோடாகி அவர் வரவிறகுப பெரிதும் வருந்தியும், இருவழியும் வருத்தமே எய்து கின்றது ஆதலின், அவர் வருதலினும் வாராமையையே யான் விரும்புகின்றேன்' என்கின்றாள்.

சுசஅ. காமங் கடையிற் காதலர்ப் படர்ந்து
நாமவர்ப் புலம்பி னம்மோ டாகி
ஒருபாற் படுதல் செல்லா தாயிடை
அழுவ நின்ற அலர்வேய் கண்டல்
கழிபெயர் மருங்கி னெல்கி யோதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்துந் தோழிய ரிருந்தவென் நெஞ்சே.

—அம்மூவனார்.

(ஓ - ள்) தோழி—, அவர் இருந்த என் நெஞ்சு நந்தலைவர் ஒரு பொழுதும் ஒருவாது வீற்றிருந்த என் நெஞ்சம், காமம் கடையின் காதலரப படர்ந்தும் - அவரிங்கிலராய பொழுது நம்மைக் காமநோய் வருத்துமிடத்தே நம்மைவிட்டுக் காதலர் பாற் சென்றும், நாமவர்ப் புலம்பின் - அவர் நம்மோடிருக்கும் பொழுது நாம் அவர்க்கு வழி யேதம் கருதி வருத்துமிடத்தே, நம்மோடாகி - நம்மோடு சேர்ந்தும், ஒருபாற்படுதல் செல்லா தா- யாதானுமோர் கூற்றிலே அமையாது, ஆயிடை - அவற்றிடையே, அழுவம் நின்ற அலர்வேய் கண்டல் - கடற்கரையிலே நின்ற மலர்கள் நிறைந்த தாழை, கழி பெயர் மருங்கின் ஓங்கி - கழிநீர் ஓடிய பக்கத்தே வளர்ந்தும், ஓதம் பெயர்தரப் பெயர்தந்தாங்கு- அக் கழியின்கட் புக்க வெள்ளம் மீண்டவழித் தானும் மீண்டாற் போன்று, வருந்தும் - இருவழியும் தன்புறுகிற்கும்.

விளக்கம் :—கடைதல் - மிகுதல். காமம் மிக்கு வருத்தின் நெஞ்சு காதலர்ப் படர்ந்து வருந்தியும், நாம் அவர்தம் வழியிடையூறு கருதி வருந்தின் நம்மோடு கூடி வருந்தியும் ஒருபாற்படாதாகி என்க. எனவே

காதலர் வாராதபோதும வந்த போதும் வருந்துகின்றது என்றவாறு. வந்தபோது, இரவுக்குறிக்கண் வழியிடையூறு எணணி வருந்திற் றென்க. இவ்விரண்டு வருத்தத்தினும் காதலாப்படர்ந்து வருந்துதலே யேனும யான் ஆற்றுவன். வழியிடையூறு கருதி வருந்துதல் ஆற்றாமையது என்று குறிப்பாற் கொள்ளவைத்தாள். என்னை? தலைவன் வாராமைக்கேனும் பின்னர் வருவன் எனனும் எண்ணம் ஆறுதல் அளிக்கும். இடையூறுண்டாம் என்று எண்ணி வருந்தும் வருத்தத்திற்கு ஆறுதல் எவ்வாற்றானும் இன்மையின் என்க. படர்ந்தும், ஆகியும் எனஉம்மை விரித்தோதுக.

அவர்ப் புலம்பி - அவர் திறத்து வருந்தி என்க. இதனால் இரவுக் குறி உடம்படாது மறுத்தாளாதல் அறிக. அவ்விடை - ஆயிடை என நின்றது; அவற்றின் இடையே என்க. மலர்கள் மிக்க தாழையானது நீரோடிய வழி ஒல்குவதல்லது நிமிர்ந்து நில்லாமையின் கடலோதம் கழியிற்புகுங்கால் கழிநோக்கி ஒல்கியும் கடற்கு மீளுங்கால், கடலைநோக்கித் திரும்பியும் இருவழியும் அலைப்புண்ணல் ஈண்டு இருவழி யும் வருந்தும் நெஞ்சிற்குவமை. காதலர் இருந்த நெஞ்சம் என்றது, அவர் வாராவழியும் என்னெஞ்சத்திருத்தலால் ஒருவாறு ஆற்றுவன் என்னும் குறிப்பிற்கு ஏதுவாதலறிக.

பாட்டு - நுசாக : தலைவி கூற்று

துறை :—பருவ வரவின்கண் வேறுபடுமெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. அஃதாவது, தலைவன் கூறிச் சென்ற பருவம வந்தும் அவன் வாராமைகண்ட தோழி, 'இப் பருவங்கண்டு தலைவி பெரிதும் வருந்துவாளே' எனக் கவன் றுட்கு, 'யான் வருந்துகிலேன்' என்று தலைவி கூறியது

இதன்கண, தலைவி, தோழியை நோக்கி, 'தலைவர் கூறிய பருவதமே அவர் வந்திலரேனும, அவர் மேற்கொண்ட வினை முற்றியவுடனே வருதல் ஒருதலை என்னும் எண்ணம் என் நெஞ்சை வலித்தலானே ஆற்றியிருக்கின்றேன்' என்று கூறுகின்றாள்.

நுசாக. பல்வீ பட்ட பசுநனைக் குரவம்
போரிப்பூம் புன்கொடு பொழிலணிக் கொளாஅச்
சினையினி தாகிய காலையுங் காதலர்
பேணு ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவ தன்றென
வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழியென் வன்க ணனே.

—மிளைகிழார் நல்வேட்டனார்.

(இ - ள்.) தோழி—, பல் வீ பட்ட பசுநனைக் குரவம் - பலவாகிய பூக்கள் தோன்றிய பசிய அரும்புகளையுடைய குரா

மரம், பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக் கொளாஅ - நெற் பொரி போலும் பூக்களையுடைய புன்கமரத்தோடே சோலையினிடத்தே அழகைக்கொண்டு, சினை இனிது ஆகிய காலையும் - கொம்புகள் காண்டற்கு இன்பமுடையனவாகிய இப் பருவத்திலும், காதலர் பேணார் ஆயினும - காதல்மிக்க நந்தலைவர் தாம் கூறிய சொற்பிறழாது காவாராயினும், பெரியோர் நெஞ்சதுக் கணைய ஆண்மை கடவது அன்றென - பெரியோர்கள் தமது நெஞ்சத்தின் கண்ணே கருதியவற்றை வழுவாது ஆளுந்தன்மையும் சில செவ்விகளில் கடைபோகச் செலுத்தப்படுவதான்றன்று என எண்ணி, வலியா நெஞ்சம வலிப்ப - முன்னர்த் துணிந்திலாத நெஞ்சம பின்னர்த் துணியாநிற்றலானே உண்டாகிய, என்வன கண்ணன - எனது தழுகண்மையாலே, வாழ்வேன்-யான் உயிர்கொண்டு இப்பொழுது வாழ்பவளாயினேன்.

விளக்கம் —பல்வீ - பலவாகிய பூக்கள். படுதல் தோன்றுதல். நனை - அரும்பு. குரவம் - ஒரு மரம். புன்கின் மலர்க்கு நெற்பொரி உவமை.

> "பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கினைக்
> திங்கள்வாழ் சடை யாள்திரு முன்றிலே"
> (சிலப்-வேட்டுவ-முன்றிற் சிறப்பு-கூ)

என்றார் இளங்கோவடிகளாரும். குரவமும் புன்கும் அரும்புகின்ற இளவேனிற் பெருடக்கத்தே மீண்டு வருவன் என்று கூறிச சென்றவர், அவை பலவாகிய மலர்களை தோற்றிப் பொழிலணிக்கொண்ட இக்காலத்தும் வந்தாரிலர் என்பாள், 'குரவம் புன்கொடு அணி கொளாச சினையினி தாகிய காலையும்' என்றாள். சினை காண்டற்கினிதாகிய காலம் என்க. இனிது: சாதியொருமை. காதலர் என்றது, காதலர் அல்லர் என்ற இகழ்ச்சிக்குறிப்பு. பேணுதல் - தம் சொற்பிழையாது ஒம்புதல். பேணாராயினும் என்றது பேணற் பாலார் பேணுது ஒழிந்த விடத்தும் என்பதுபட நின்றது. பெரியோர்கள் தங் கொள்கைகளுட் சிலவற்றைச சில செவ்விகளில் தளரவிடும் இயல்புடையோர் ஆவர். 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்னும் பழமொழி அருத்தாபத்தியாற் பெரியோர் கொண்டது விடுதலும் உண்டென்பதை விளக்குதல் காணலாம். தாம் மேற்கொண்ட கொள்கைகள், ஒன்றனை ஒன்று முரணியவிடத்து, அவற்றின் மென்மை வன்மைகளைச் சீர்தூக்கி இன்றியமையாதொன்றனை மேற்கொண்டு ஏனையதை விடுதலும் பெரியோர் இயல்பு என்பது கருத்து. எனவே, 'வினையே ஆடவர்க்குயிர்' என்னும் சிறப்புப்பற்றி, தாம் மேற்கொண்ட வினையை முற்ற முடிக்கும்பொருட்டுத் தாம் கூறிசசென்றபடி வருதலைத் தவிர்ந்து தங்கினர் என்றவாறு. வினைமுற்றியவுடன் மீள்வது ஒருதலை என்பது குறிப்பு. இக்குறிப்பானே என் நெஞ்சம் துணிந்து வல்லி தாயிற்றென்பாள், 'வலியா நெஞ்சம வலிப்ப என் வன்கணனே' என்றாள். வலித்தமையாலுண்டான வன்கண் என்க.

கண்ணிய-கருதப்பட்டவை. ஆண்மை-வழுவாது ஆளுந்தன்மை. கடவது - செய்து முற்றுவது.

பாட்டு - நசஉ : தோழி கூற்று

துறை :—செறிப்பறிவுறுக்கப்பட்டான் வரைவின்கட் செல்லாது, பின்னும வரவுவேண்டிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவுகடாயது. அஃதாவது, 'தலைவி தமராலே நன்கு பாதுகாக்கப படுகின்றனள்' என்று தலைவனுக்குத் தோழி அறிவித்த பின்னரும் வரைந்துகோடற் கருத்தின்றிக் களவொழுக்கமே விரும்பித் தோழியைக் குறையிரந்த தலைவனை, அவள் கடிந்து 'இனி வரைந்து கொளலே நன்' றெனக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'குன்றநாட! இவள் வருந்துதற்கு ஏதுவாகியதொரு செயலை நீ செய்தல நினக்குப் பொருந்துவதன்றுகாண்' என்று கடிந்துகூறுகின்றாள.

நசஉ. கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்
குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்
குவளைத் தண்தழை யிவளீண்டு வருந்த
நயந்தோர் புன்கண் தீர்க்கும்
பயந்தலைப் படாஅப் பண்பினை எனினே.

—காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்.

(இ - ள்.) கலை கை தொட்ட கமழ் சுளைப் பெரும் பழம் - ஆண்குரங்கு கையால் தோண்டிய மணங்கமழ்கின்ற சுளையையுடைய பெரிய பலாப்பழத்தை, காவல மறந்த கானவன் - அங்ஙனம குரங்கு தோண்டுமபடியாகத் தனது காதலற் றொழிலை மறந்திருந்த வேடன், ஞாங்கர்க் கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும் - அதன் பின்னர் மணமுடைய பலாமரங்கள் தோறும் குரங்குகள் படுவதற்குரிய வலையை மாட்டிவைத்தற்கு இடமான, குன்ற நாட - மலைநாட்டை யுடையோனே!, பைஞ்சுனைக் குவளைத் தண் தழை இவள் ஈண்டு வருந்த - பசிய சுனையிற்றோன்றிய குவளைபபூக்களை யிடையிட்டுப புனைந்த தண்ணிய தழையுடையை உடைய இத்தலைவி இவண் வருந்தாநிற்ப, நயந்தோர் புன்கண் தீர்க்கும் பயந்தலைப்படாப் பண்பினை எனின் - நின்னை விரும்பியவர்களது துன்பத்தைத் தீர்ப்பதாகிய பயனை எய்துதற்கெண்ணுத வன்கண்மையுடையை நீ என்னின, தகுமோ - அப்பழிமொழி நினக்குத் தகுமோ காண்.

விளக்கம்:—கலை - ஆண்குரங்கு. கைதொட்ட - கையாற்றீண்டப் பட்ட என்க. கலைதொட்ட என்றது, கமழ் சுனையாதற்குக் குறிப்பேது வாம் என்க. இனிக் கலை தொடும்படி கமழ்சுனை எனக் கமழ்தலைத் தொடுதற்கு ஏதுவாகக் கருதினுமாம். பெரும்பழம் காவன் மறந்தமை யால் கலை கை தொட்டமை கண்டபின்னர், கானவன் மரந்தொறும் படுவலை மாட்டும் என்க.

கலைதொட்டமையைக் கமழ்தலானே அறிந்த கானவன், மீண்டும் தொடாவாறு படுவலைமாட்டும் என்றது, நினது களவொழுக்கத்தை அலரானறிந்த தமர், தலைவியை நீ மீட்டும் எய்த வொண்ணுதபடி இற் செறித்துவிட்டனர் ஆகலான், நீ அவளை இனி இக்களவொழுக்கத் தானே எய்தொணுதகாண் என்னும உள்ளுறை தோற்றிநின்றது.

இங்ஙனம் இற்செறிக்கப்பட்டமையால் தலைவி ஆற்றுமை மிக்கு வருந்தாநின்றனள்: நிற்பவும் நீ வரையாது களவின்பமே காமுறுதல் நின் பெருமைக்கு இழுக்கன்றே என்பாள், 'நயந்தோர் புன்கண் தீர்க்கும் பயந்தலைப் படாப் பண்பினை எனிற் றகுமோ' என்றாள். நயந்தோர் என்றது, ஈண்டுத் தலைவியைக் குறிப்பானுணர்த்திற்று. புன் கண்-இச்செறிக்கப்பட்டதனாலாகிய தலைவனைக் காணமல் வருந்துதல். அதனைத் தீர்க்கும்பண்பு வரையக்கருதுதல், தீர்க்கும் பயம் தலைப்படாப் பண்பு என்றது, களவொழுக்கமே காமுறுதலை என்க. பிறர் வருத் தம் நோக்காது தன்னலமே நாடுதல் சான்றாண்மை யன்றென்பாள், நினக்குத் தகுமோ' என்றாள். பயம் - பயன்: அஃதாவது தலைவ னோடே இடையறாது கூடியிருத்தலாகிய பயனெனக் கொள்க.

இதனால் இரவுக்குறி மறுத்துக் கடிந்துரையானே வரைவுகடாவப் பட்டமை யுணர்க.

பாட்டு - நகாந : தோழி கூற்று

துறை:—தோழி, கிழத்தியை உடன்போக்கு நயப்பக் கூறியது. அஃதாவது, தலைவி தமரறியாது தலைவனோடு உடன் சேறலன்றிப் பிறிது நெறிகாணாத் தோழி தலைவியைத் தலைவ னுடன் செல்லும்படி அறிவுறுத்தியது.

இதன்கண், தோழி, தலைவியை நோக்கி, 'நீ இப்பொழுது நம் தலைவனோடு நமர் அறியாது செல்லுதலே நன்மையாம்; ஆகலான், அங்ஙனம் செல்லுதலையே நீ கருதுக' என்கின்றாள்.

நகாந. நினையாய் வாழி தோழி நினைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇ விடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரும் ஆறே.

—சமத்துப் பூதன்றேவனார்.

(இ - ள்.) தோழி—, மிகு வலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை - மிக்க வலியையும் பெரிய பிளந்த வாயையுமுடைய ஆண் புலியானது, நனைகவுள் அண்ணல் யானை அணி முகம் பாய்ந்தென - மதத்தால் நனைந்த கவுளையுடைய தலைமையையுடைய யானையினது அழகிய முகத்தின்கண்ணே பாய்ந்ததாக, வெண் கோடு செம் மறுக் கொளீஇ - அவ்வியானையினது வெள்ளிய மருப்பினைத் தனது குருதியானே சிவந்த கறையைக் கொள்ளச் செய்து, விடர் முகை கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை - பிளந்த மலைமுழைஞ்சிலுள்ள மேல்காற்றானே வீழ்த்தப்பட்ட கரிய அடியினையுடைய வேங்கைமரத்தினது, வாடு பூஞ் சினையிற் கிடக்கும் - வாடிய பூவையுடைய கொம்புபோன்று இறந்து கிடக்கும், உயர்வரை நாடனொடு பெயரும் ஆறு - உயர்ந்த மலைகளையுடைய நாட்டையுடைய தலைவனோடு செல்லும் திறத்தை, நினையாய் - நீ கருதிக் காண்பாயாக

விளக்கம் :—இச்செய்யுள் பூட்டுவிற்பொருள்கோள் உடைத்து. நாடனொடு பெயருமாறே நினையாய் என்று இயைத்துகொள்க. ஆறே என்பதன்கண் ஏகாரத்தைப் பிரிநிலைப் பொருட்டாகக்கி, பிறவாற்றானே நம் கற்புக்கடமையை நிறைவேற்றல் இயலுவதன்று அஃதொன்றே உளது, அதனை நீயும் ஆராய்ந்து துணிக என அறிவுறுத்தாளாகக் கருதினுமாம். யானையினது முகத்திற்றானே பாய்ந்து புலி இறந்து கிடக்கும் வரைநாடன் என்றது, நீ உடன் போகும் பொழுது நம் தலைவனை எதிர்ப்பாருளராயின், அவர் தோற்கும்படி செய்யும் ஆண்மையுடையன் அவன் தலைவன் என்னும் குறிப்புடைத்தென்க. அண்ணல்-தலைமைத்தன்மை. தலைவனுக்கு உவமமாகலின் அவன்றலைமையை யானைக்கேற்றினுள். வெண்கோடு செம்மறுக் கொளீஇ என்றது, தலைவனுக்கு வெற்றிப்புகழை யுண்டாக்கி என்னும் உள்ளுறை தோற்றியதென்க.

புலியினது குருதி தோய்தலானே உண்டாகிய செம்மறு என்க. மறு - கறை. கோடை - மேல்காற்று இறந்து கிடக்கும் புலிக்குக் காற்றானே முறித்துப் போகட்டு வாடிய வேங்கையின் பூவையுடைய இவை உவமை என்க. ''உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை'' (கலி - ஈஅ) எனப் பிறரும் ஓதுதலறிக.

பாட்டு - ஈசஎ : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் கூறியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே ஆற்றுளாகிய தலைவியை நீ ஆற்றுதல் வேண்டும் என நெருக்கிய தோழிக்குத் தலைவி நெஞ்சழிந்து கூறியது.

இதன்கண், வற்புறுத்த தோழியைத் தலைவி நோக்கி, ''இப் புன்கண் மாலைப்பொழுதின்கண் பிரிந்துசென்ற தம் தலைவர் மீண்டு வருதலைக் காணும் மகளிர், தவம் பெரிதும் முயன்

றோர் ஆவர்; யான் அது செய்திலேன் போலும்,' என்று வருந்து கின்றாள்.

நூசசு. நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கட்
புலம்பயி ரருந்த அண்ண லேற்றோடு
நிலந்தூங் கணல வீங்குமூலைச் செருத்தல்
பால்வார்பு குழவி யுள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.

—குறுங்குடி மருதனார்.

(இ - ள்.) தோழி—, தண் எனத் தூற்றும் துவலைப் பனிக் கடுந் திங்கள் - குளிருமபடி வீசாநின்ற துளிகளாகிய பனியை உடைய கடியவாகிய திங்கள்களிலே, புலம் பயிர் அருந்த அண் ணல் ஏற்றோடு-மேய்புலங்களிலே பயிரை அருந்துதலையுடையன வாகிய தலைமையுடைய ஏறுகளோடே, நிலம் தூங்கு அணல வீங்குமூலைச் செருத்தல் - நிலத்திற் றோயும்படி நான்ற தாடியை யுடையனவாகிய பருத்த மூலைக்காம்புகளையும் மடியையுமுடைய ஆன்கள், குழவி உள்ளி - தங்கன்றுகளை நினைந்து, பால்வார்பு நிரையிறந்து-பாலொழுகவிட்டு நிரையினின்று நீங்கி, ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை - ஊரினுள்ளே புகுதற்குக் காரணமான துன்பமுடைய இம்மாலைப்பொழுதினக்கண்ணே, அரும் பெறல் பொருள் பிணிப் போகி - அரிதிற் பெறுகின்ற பொருளின்கட் பற்றுடைமையாலே சென்று, பிரிந்து உறை காதலர் வரக் காண் போர் - தம்மைப்பிரிந்து தங்கிய தந்தலைவர்கள் மீண்டு வரு தலைக் காண்கின்ற மகளிர், மன்ற நோற்றோர் - தேற்றமாகத் தவம் செய்தோரேயாவர்.

விளக்கம்:—நோற்றோர் - தவம்செய்தவர். மன்ற - தேற்றப் பொரு ளில் வந்தது. துவலையாகிய பனி என்க. கடுந்திங்கள் - குளிர்க் கொடுமை மிக்க திங்கள் என்றவாறு. புலம் - மேய்கின்ற நிலப்பகுதி. அருந்த - அருந்தலையுடையன. அணல - அலைதாடியையுடையன செருத்தல் - மடி; ஆனுக்கு ஆகுபெயர். அன்புக்குரிய கன்றை நினைந்தனவாய் ஆன்கள் பாலொழுகும்படி ஊர்புகுதும் என்றது, அவை அங்ஙனமாகவும் நந் தலைவர் நம்மை நினைந்து மீள்கிலாரே என்னும் நினைவிற்று என்க. வளர்ந்து தூங்கும் பெரிய தாடி என்பாள், 'நிலந் தூங்கு அணல' என்றாள். நிரையிறந்து - ஆனிரையினின்று நீங்கிச் சென்று. வார்பு - வார்ந்து, ஒழுகி என்க. தனித்துறைவோர்க்குப் பெரிதும் துன்பந்தரும் மாலை என்பாள், 'புன்கண் மாலை' என்றாள். சென்றார் கருதியபடி ஈட்டற்கரிய பொருள் என்பான், 'அரும் பெறற்

பொருள்' என்றாள். நமது அன்புப் பிணியொரீஇ என்பாள், 'பொருட் பிணிப் போகி' என்றாள்.

வரக்காண்போ தவம் செய்தோர் என்றது அவர்வரக் காணுமை, யான் செய்த பாவமே என்னும் குறிப்புடைத்து.

பாட்டு - நசரு : தோழி கூற்று

துறை :—பகல் வந்து ஒழுகுவானைத் தோழி இரா வரவென் றது. பகற்குறியின்மட்டுமே வந்து மீளுந்தலைவனைத் தோழி, காணப்பொழுது நீளிதாகலின் தலைவி பெரிதும் வருந்தாநின்ற னள் என்பதுபட, 'இரவு வருக' என்று கூறியது.

இதன்கண், தோழி தலைவனைத் தனியிடத்தே கண்டு, 'நந் தலைவியின் தனிமைததுன்பம் நீங்கும்பொருட்டு நீயிர் நுந் தேரினை மணற்குன்றின் மறைவிலே நிறுத்திவிட்டு இரவினும் ஈண்டுத் தங்குதல் வேண்டும்,' என்று வேண்டுகின்றாள்.

நசரு. இழையணிந் தியல்வருங் கொடுஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணல் தவிர்த்துநின் றசைஇத்
தங்கினி ராயின் தவறோ தெய்ய
தழைதாழ் அல்குல் இவள்புலம் பகலத்
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென ஒலிக்கும் ஆங்கண்
பெருநீர் வேலியெம் சிறுநல் லூரே.

—அண்டர்மகன் குறுவழுதியார்.

(இ - ள்.) தாழை தைஇய தயங்கு திரைக் கொடுங்கழி-தாழை பொருந்திய விளங்குகின்ற அலைகளையுடைய வளைந்த கழி, இழும் என ஒலிக்கும்-இழும் என ஆரவாரியாநிற்கும், ஆங் கண்-அவ்விடத்ததாகிய, பெருநீர் வேலி எம சிறு நல்லூர்-கடலே வேலியாகவுடைய எமது சிறிய நல்ல ஊரின்கண்ணே, இழை அணிந்து இயல்வரும் கொடுஞ்சி நெடுந்தேர்-பொற்படை களால் ஒப்பனை செய்யப்பட்டு இயங்குதலைச் செய்யும் கொடுஞ் சியையுடைய நெடிய தேரினை, வரை மருள் நெடுமணல் தவிர்த்து-மலையை யொத்த நெடிய மணற்குவியலின் மறைவிலே விட்டு வைத்து, நின்று அசைஇ-தங்கி இளைப்பாறி, தழைதாழ் அல் குல் இவள் புலம்பு அகல - தழையுடை தாழ்ந்த அல்குலை யுடைய தலைவியினது தனிமைத்துன்பமும் நீங்கும்படி, தங் கினிர் ஆயின் தவறோ-தங்குவீராயின் அச்செயல் பிழையுடைய தாமோ? கூறுதிர்.

விளக்கம்:—இழை என்றது, தேரின் பொற்படை முதலிய ஒப்பனைப் பொருள்களை. இயல்வருதல் - இயங்குதல். கொடுஞ்சி-தாமரை முகை வடிவிற்றாய்ப் பொன்னாற் செய்து தேர்முகப்பே நடப்படுவதோர் உறுப்பு. வரைமருள் நெடுமணல் என்றது, நெடிய தேரினைப் பிறர் அறியாவாறு மறைத்து நிறுத்திவைத்தற்குரிய இடமுண்மையைக் குறிப்பானுணர்த்தியவாறு. நின்று என்றது, அம் மணற்பரப்பிலே பகல் கழியுந்துணையும் இருந்து என்றவாறு. அசைஇ - இளைப்பாறி. நின்றசைஇ என்றது, தலைவன் தங்குதற்குப் பிறிதுமோர் நலங்காட்டிய வாறு. தெய்ய: அசைநிலை. தவறே என்னும் விளி தவறின்மையை வற்புறுத்துணர்த்தி நின்றது. அப் பகற் குறியிடத்தே தலைவன் தந்த தழையுடையுடுத்துத் தலைவி விளங்கினமை கண்டமையானே, 'தழை தாழலகுல் இவள்' என்றாள். தலைவி அயலில் இலளாயிருந்தும் இருவர் நெஞ்சிற்கும் அணியளாதல் பற்றி, 'இவள்' என, அண்மை நிலையாற் சுட்டினாள். இவள் புலம்பகல என்றது, நீ பிரிந்துறையும் பொழுதெல்லாம் இவள் பெரிதும் வருந்துகின்றாள் என்பதையும் தலைவனுணரக் கூறியவாறும். புலம்பு - தனிமைத்துன்பம்.

நீயும் நின்றசைஇ இருத்தற்கும் இவளும் புலம்பகல்தற்கும் நீ தங்குதல் இன்றியமையாதது என்றவாறும்.

தைஇய - பொருந்திய. பெருநீர் - கடல். பெருநீர் சிறுநல்லூரே என்புழி மூரண் தோன்றிச் செய்யுளின்பம் மிகுதல் உணர்க.

பாட்டு - நுசசு : தோழி கூற்று

துறை :—தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது. அஃதாவது, பகற்குறி வந்தொழுகுந் தலைவன், இரவுக்குறியினும் வரவிரும்புதலை யுணர்ந்த தோழி, அதனைத் தலைவிக் குணர்த்தி அவனை இரவினும் ஏற்கும்படி கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவன் பகற் குறியிடத்தே வந்து குவளைத்தொடலை தந்தும், படுகிளியோப் பியும் உடனுறைவானாகியும், மாலைப்பொழுதிலே ஏதோ ஒரு உடம்பாட்டை நம்பால் விரும்பினவனாய் அதனை நமக்குக் கூறவும் இயலாது வருந்துகின்றான்' என்று கூறுகின்றாள்.

நுசசு. நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்றம் நண்ணிக் குறவர் ஆர்ப்ப
மன்றம் போழு நாடன் தோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்
தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியும்
காலை வந்து மாலைப் பொழுதில்
நல்லக நயந்துதான் உயங்கிச்
சொல்லவும் ஆகா தஃகி யோனே.

—வாயிலிளங் கண்ணனார்.

(இ - ள்.) தோழி !, நாகு பிடி நயந்த முளைக் கோட்டு இளங்களிறு - இளமையுடைய பிடியானையை விரும்பி மூங்கின் முளைபோன்ற கொம்பினையுடைய இளங்களிற்றியானை, குன்றம் நண்ணி குறவர் ஆர்ப்ப மன்றம் போழும் நாடன் - மலையின் கண் பொருந்தி ஏறி ஆண்டுள்ள குறவர் ஆரவாரித்தலாலே ஊரம்பலத்தை ஊடறுத்துப் போகாநிற்கும் நாட்டையுடைய நந்தலைவன், காலை வந்து - காலைப்பொழுதிலே நம்பால் வந்து, சுணைப்பூங குவளைத் தொடலை தந்தும் - சுணையின்கண் மலர்ந்த அழகிய குவளைமலர்மாலையைப் புனைந்து தினைக்களித்தமை, தினைப்புனம் மருங்கில் படுகிளி ஓப்பியும் - நமது தினைப்புனத்தின் கண்ணே வீழாநின்ற கிளிகளை நின்னோடு சேர்ந்து ஓட்டியும், மாலைப்பொழுதில் - மாலைப்பொழுது வந்தவிடத்தே, நல் அகம் நயந்து உயங்கி - நமது நன்றாகிய நெஞ்சதனை விரும்பி வருந்தி, சொல்லவும் ஆகாது - அவ்விருப்பத்தை நமக்குக் கூறவுமியலாது, அஃகியோன் - குறைவுற்றனகாண்.

விளக்கம் :—நாகு - இளமை. முளை - மூங்கில்முளை. இனி முளைக்கோடு என்பதனை வினைத்தொகையாக்கி, முளைக்கின்ற கொம்பெனலுமாம்; முளைக்கும் பருவத்தையுடைய கோடு என்றபடி. மன்றம் போழ்தலாவது - ஊரம்பலத்தின் ஊடே போதல். இளம்பிடியை இளங்களிறு மலையின்கண் மருவுதல் கண்டு குறவர் ஆரவாரிப்ப அக்களிறு மன்றத்தூடே செல்லும் என்க. பிடி நயந்த களிறு மன்றம் போழும் என்றது, 'நின்னை நயந்த தலைவன் இரவுக்குறிக்கண் நமமனைப் படப்பையகத்தேயும் வருவன்' என்னும் உள்ளுறை தோற்றியதென்க.

மாலைப்பொழுதில் நல்லகம் விரும்பி என்றது, அவன் குறைநயத்தலையுடைய நல்ல நமது நெஞ்சத்தை விரும்பி என்றவாறு. அஃதாவது நமது இரவுக்குறி உடம்பாட்டை நயந்து என்க. நம்பால் அதனைச சொல்லமாட்டாமையால் தன்னுள்ளே வருந்தி என்பாள், 'தான் உயங்கி' என்றாள். உயங்குதல் - வருந்துதல். நாம் உடம்படேம் என்று கருதிச் சொல்லவும் ஆகாது அஃகினன் என்க. அஃகுதல் - குறைதல். ஈண்டு உளம் வருத்தத்தாலே ஊக்கமின்றிச சுருங்குதல் என்க.

இதனுள் யாம் அவனை இரவினும் ஏற்றுக்கோடல் வேண்டும் என்று குறிப்பான் உணர்த்தப்பட்டது. அஃகியோன் என்றது, விரைந்தேலாவழி அவற்கேதமுறுதல் ஒருதலை என வற்புறுத்தற் பொருட்டென்க.

பாட்டு - உசாவ : தலைவன் கூற்று

துறை :—பொருள்வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது. அஃதாவது, தலைவன் உடைமையயர்ச்சியும் இன்மையதிளிவும் காட்டித் தன்னை பொருளீட்டத் தூண்டிய தன் நெஞ்சிற்குத் தலைவியைப் பிரியவொண்ணுமை காட்டிச் செலவொழிந்தது.

இதன்கண், தலைவன் தன்னெஞ்சை விளித்து, 'நெஞ்சமே! நம் தலைவியும் நாம் செல்லும் பாலைநிலத்தின் நீண்ட வழியிடத்தே நம்மோடு வருவாளாயின் நினது கருத்து நன்றே யாம்!' என்று கூறுகின்றான்.

நூசள. மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதற்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றும்
கான நீளிடைத் தானு நம்மோடு
ஒன்று மணஞ்செய்தனள் இவளெனின்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே.

—காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங் கண்ணனார்.

(இ - ள்.) நெஞ்சம் - என நெஞ்சமே!, இவள் - நந்தலைவி, மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல் - நீர் பெருகும் இயல்பினை யுடைய சுனைகள் நீர் அற்றமையானே உண்டாகிய வறுமை யுடைய பாலைநிலத்தே, குமரி வாகைக் கோல் உடை நறு வீ - இள வாகைமரத்தினது காமபிணையுடைய நறிய பூக்கள், மட மாத் தோகைக் குடுமியின் தோன்றும் - மடப்பத்தையுடைய கரிய மயிலினது உச்சிச்சூட்டினைப் போன்று தோன்றுதற்கிட மா ஈ, கானம் நீள் இடை நம்மொடு ஒன்று மணம் செய்தனள் எனின் - காடாகிய நீண்ட வழியிடத்தே நம்மோடு மூயங்குவ தாகிய மணத்தைச் செய்வாளாயின், நயந்த நின் துணிவு நன்று - விரும்பிய நினது துணிவு நன்மையே ஆகும.

விளக்கம்:—மல்கு சுனை என்றது, பொருட்கேற்ற அடைபுணர்ந்து நின்றது. மல்குதல் - நிறைதல். பண்டு நிறைந்திருந்த சுனை என்க. நல்குரவு - ஈண்டு நீரின்மை குறித்து நின்றது. சுனை கூறப்பட்டமை யாற் குறிஞ்சிதிரிந்த பாலை என்க. குமரி வாகை - இளமையுடைய வாகைமரம்.

வாகை மலர்க்குக் காம்புகள் நீளியவாகலான் 'கோலுடை வாகை' எனப்பட்டது. தோகை - மயில். குடுமி - உச்சிக்கொண்டை. வாகைப்பூ மயிலினது உச்சிக்கொண்டைபோல் தோன்றும் என்க. ஒன்று மணம் என்றது, புணர்தலை.

'இவள்' என்றான், நெஞ்சிற் கணியளாதல் பற்றி. தனக்குடம்பா டின்மை தோன்ற 'நின் துணிவு' என்றான்.

செய்தனள் அவளெனின் என்றது, அங்ஙனம் செய்யாளே என் பதுபட நின்றது. நெஞ்சம்: அண்மை விளி.

அங்ஙனம் அவள் வாராளாகலின், நின் துணிவு நன்றன்று என்பது குறிப்பு.

பாட்டு - 40 : தோழி கூற்று

துறை:—செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட நிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. அஃதாவது, தலைவனது ஒழுகலாற்றினே 'இவன் நமமைப் பிரிவன் போலும்' என்று அஞ்சி வருந்திய தலைவிகருத தோழி, 'அவன் பிரியான்' என்றற்குக் காரணங் காட்டி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'அவர் பிரிவர் என்று கருதிய துணையானே நின் கண்கள சொரியும் நீரினை நந்தலைவர் காண்பரல்லரோ! அங்ஙனம் கண்டுவைத்தும் நின்னை யவர் பிரியக் கருதுவரோ; கருதார்காண்', என்று தேற்றுகின்றாள.

40. தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் றுஅய்
இதழுழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வனமுலை நனைத்தலும்
காணுர் கொல்லோ மாணிழை நமரே.

—மாவளத்தனர்.

(இ - ள்.) மாண் இழை நமர் - மாட்சிமையுடைய அணிகலன்களையுடைய நந்தலைவர், தாமே செல்ப ஆயின் - நம்மை விட்டுத் தாமட்டுமே செல்வாராயின், கானத்துப் புலம் தேர் யானைக் கோட்டிடை ஒழிந்த - காட்டின்கண் மேய்புலத்தை ஆராய்ந்து திரியும் யானையினது மருப்பிடத்தே சிக்கி முறிந்து தன் முதலினின்று நீங்கிய, சிறு வீ முல்லைக் கொம்பின் - சிறிய பூக்களையுடைய முல்லையினது கொம்பைப்போன்று, தாஅய் இதழுழிந்து ஊறும் கண்பனி - பரவி இமையின் விளிம்பைக் கடந்து ஊறுகின்ற கண்ணீர்த்துளி, மதர் எழில் பூண் அக வன முலை நனைத்தலும் - மதர்த்த அழகினையுடைய அணிகலன்களைத் தன்பாற்கொண்ட அழகிய முலையினை நனைக்கின்றதனையும், காணுர்கொல் - அவர் காணமாட்டாரோ?

விளக்கம் :—தாமே செல்ப ஆயின் என்றது, நின்னோடன்றித் தாம் மட்டுமே செல்வார் என நீ கருதுவாய் ஆயின் என்றவாறு. புலம் - மேய்புலம், யானை மேய்புலத்தை ஆராய்ந்து காட்டினூடே திரியும் பொழுது அதன் கொம்பிடைச் சிக்கிய முல்லைக்கொடியின் பூக்கள் சிதறுமாறுபோலச் சிதறி என உவமையை விரித்துக்கொள்க.

கொம்பு: ஆகுபெயராய்ப் பூவைக் குறித்தது. இனி முல்லைக் கொம்பின் சிறுவீயிற் றுஅய் என மாறி யுரைப்பினுமாம்.

இதழ் அழிந்து ஊறும் என்றது, இதழினது விளிம்பைக் கடந்து ஊறும், என்றவாறு. பனி - துளி.

"யானைக் கோட்டிடைக்கொண்ட முல்லை எத்தக் கணத்தில் அதன் வாயினுட்புகுமோ என அறியா நிலையிலிருத்தலைப்போல இவள் எப்பொழுது உயிர் நீப்பாளோ" என்று உவமை விரிப்பாரு மூளர்.

அவர் பிரிவாரோ என்று ஐயுற்ற தோழியானே நின் கண்பனி மூலை நனைத்தலை அவர் இப்பொழுது கண்டிருப்பர். நீத்துச்சென்றால் நீ இறந்துபடுவை என்பதும் அவர் உணர்வர்; ஆதலிற் செலவழுங்குவர் என்று தேற்றியபடியாம். 'பொலந்தேர்' என்றும் பாடம்.

காணர் கொல்லோ என்னும் வினா கண்டிருப்பர் என்பதுபட நின்றது. மாணிழை என்றதனை அன்மொழித்தொகையாகக் கொண்டு தலைவிக்கேற்றி விளியாக்கினுமாம்.

பாட்டு - நூசுகூ : தலைவி கூற்று

துறை :—பரத்தைமாட்டுப் பிரிந்துவந்த தலைமகன் கேட்கும் அண்மையனுகத் தோழிக்குக் கிழத்தி கூறியது. அஃதாவது, தலைவன் பரத்தையில்லினின்றும் மீண்டு தலைவியிருக்குமிடத்திற்கு வந்தபொழுது அவன் கேட்கும்பொருட்டு அவன் வரவுணராதாள் போன்று தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "நீ 'தலைவனை வலைத்துக்கொண்டு நம் நலத்தைக் கைக் கொள்வோம்' என்கின்றாய்; ஒருவர்க்களித்த தொன்றனை மீண்டும் தருக என்று கேட்டலினும் சாதலே நன்றும்" என்று கூறுகின்றாள்.

நூசுகூ. அடும்பவிழ் அணிமலர் சிதைஇமீன் அருந்தும்
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நங்நலம்
கொள்வாம் என்றி தோழி கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவென் சொல்லினும்
இன்னு தோநம் இன்னுயிர் இழப்பே.

—சாத்தனார்.

(இ - ள்.) தோழி—, அடும்பு அவிழ் அணிமலர் சிதைஇ மீன் அருந்தும் - அடும்பங்கொடியின்கண் மலர்ந்த அழகிய பூக்களைச் சிதைத்து மீனை உண்ணுகின்ற, தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்-வளைந்த கால்களையுடைய நாரைகள் இராநின்ற இடமணலையுடைய, தண்ணந் துறைவன் தொடுத்து - குளிர்ந்த

கடற்றுறையையுடைய நந்தலைவனை வளைத்துக்கொண்டு, நம் நலம் கொள்வாம் என்றி - நாம் இழந்த நமது பெண்மை நலத்தைக் கைக்கொள்வோம் என்கின்றனை, கொள்வாம் - அங்ஙனமே கொள்வோம்; ஆயினும், இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய கொடுத்து - தமக்குற்ற துன்பத்தை அஞ்சி ஏற்பவர் விரும்பியவற்றைக் கொடுத்து, அவை தா என் சொல்லினும் - பின்னர் யாந் தந்தவற்றை எமக்குத் தருவாய் என்று இரக்கும் சொல்லைக்காட்டினும், நம் இன் உயிர் இழப்பு இன்னுதோ - நம் இனிய உயிரினை இழந்துவிடுதல் துன்பந் தருமோ?

விளக்கம்:— அடும்பு-ஒருவகைக் கொடி. அவிழ்தல் - மலர்தல். சிதைஇ - சிதைத்து. தடந்தாள் - வளைந்தகால். எக்கர் - இடுமணல். மீன் அருந்தும் தடந்தாள் நாரை எக்கர் மேற்படர்ந்த அடும்ப மலர் சிதையும்படி அவற்றினை மிதித்து இருக்கும் என்றவாறு. எனவே, பரத்தையரை நுகருந் தலைவன் நம் பெண்மை நலம் சிதைய ஒழுகாநின்றான் என்னும் உள்ளுறை தோன்றுதலுணர்க.

அடும்பவிழ் என்பது தொடங்கி...கொள்வாம் என்னுந் துணையும் தலைவி தோழி கூற்றைக் கொண்டு கூறினள் என்க.

கொள்வாம் என்றது, நீ கூறியவாறே நந்நலம் கொள்வாம் என உடம்பட்டுப் பின்னர்க் கொள்ளுதலின் இழிவுகூறி மறுக்கின்றாள் என்க.

என்றி - என்று கூறுகின்றாய். இடுக்கண் அஞ்சி என்பதனை, இரந்தோர் வேண்டிய கொடுத்தது இடுக்கண அஞ்சி அவை தா என் சொல் எனப் பிரித்துக் கூட்டி இடுக்கண் அஞ்சுதலைக் கொடுத்தோர்க் கேற்றுக. ஒருவன் ஒருகால் இரந்தோர்க் கீந்த வொன்றனைப் பின்னர்த் தனக்குற்ற இடுக்கண் காரணமாகக் கொடு என்று கேட்டலினும் அவ்விடுக்கணுல் இறந்துபடுதல் இனிதாகும் என்றவாறு. எனவே, அவன் பரத்தைமையால் யாம் இடுக்கண் உறினும் அவன்பால் நலங் கேட்டல் இழிவாம் எனத் தோழியை மறுத்தவாறுதல் அறிக.

நலஞ் சிதைத் தொழுகுந் தலைவன்பால் எம் நலந்தா எனக்கேட்கும் வழக்கத்தை, 'மாணலந் தா என வகுத்தற் கண்ணும்" (தொ-கற்பு-சூ கூ.) என வரும் தொல்காப்பியச சூத்திரப் பகுதியானும் உணர்க.

தலைவன் தவறு செய்தானுயினும் யாம் அவனைக் கடிதல் தகுதியன்று என்பது கருத்து.

பாட்டு-கூடுo: தோழி கூற்று

துறை:—பிரிவு கோர்ந்த தலைமகள், அவனது நீக்கத்துக் கண் வேறுபட்டாளைத் தோழி வற்புறீஇயது. அஃதாவது, தலைவன் பிரியும்பொழுது அவன் பிரிதலை உடம்பட்டிருந்து அவன் சென்றபின்னர் ஆற்றுமை எய்திய தலைவியைத் தோழி கடிந்து ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "மலையுடைக் கானம் நீந்தி நிலையாப் பொருட்பொருட்டுத் தலைவர் பிரிந்த பொழுதே யாம் அவர் முன்னின்று, 'இப் பனிக்காலத்தே யாம் தனித்துறைதலைப் பொறேம்; ஆகலின், நீயிர் போகன்மின்' என்று தடுத்திருந்தால் அவர் செல்லார்; அப்பொழுது உடம் பட்டிருந்து இப்பொழுது வருந்துதல் பேதைமை" என்று இடித்துரைக்கின்றாள்.

ஙூறo. அம்ம வாழி தோழி முன்னின்று
பனிக்கடுங் குரையஞ் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்வர் கொல்லோ
ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

—ஆலத்தூர் கிழார்.

(இ - ள்.) அம்ம வாழி தோழி - தோழி யான் கூறுவ தனைக் கேட்பாயாக, ஆறு அயல் இருந்த இருந் தோடு அஞ் சிறை நெடுங்கால் கணந்துள் - வழியின்பக்கத்தே இருந்த பெரிய தொகுதியாகிய அழகிய சிறகினையும் நெடிய கால்களையும் உடைய கணந்துட்பறவை, ஆள் அறிவுறீஇ - ஆறலைகள்வர் வருகையை அறிவுறுத்தி, ஆறுசெல் வம்பலர் படை தலைப் பெயர்க்கும் - வழிப் போகின்றவர்களின் படைத்திரளை இடத் தினின்றும் நீங்கச் செய்யும், மலையுடைக் கானம் நீந்தி - மலை களையுடைய காட்டைக்கடந்து, நிலையாப் பொருள் பிணிப் பிரிந்திசினோர் - நிலையுதலில்லாத பொருளின்கண் நசையாலே நம்மைப்பிரிந்த நந்தலைவர், முன்னின்று பனிக் கடுங்குரையம் செல்லாதீம் என - பிரியத்தொடங்கிய பொழுது அவர் முன்னே நின்று, யாம் இப்பொழுது பனியினது கடுமையினை யுடையே மாகலின் நீயிர் போகாதே கொண்மின் என்று, சொல்லினம் ஆயின் - கூறியிருப்பேமாயின், செல்வர்கொல் - அவர் நம்மைப் பிரிந்து போவரோ?

விளக்கம்:— ஆற்றயல் - வழியின் மருங்கு. இருந்தோடு - பெரிய கூட்டம்; கணந்துட் புள்ளின் கூட்டம். கணந்துள் - ஒருவகைப் பறவை. இதனைக் "கானக் கோழியும் நீர் நிறக் காக்கையும், உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்," (கo-ககசு-எ.) என வரும் சிலப்பதிகார அடிகட்கு அடியார்க்கு நல்லார் வகுத்த உரையின்கட் "புள்ளு-கணந்துட்

புள் என" வரைந்தமையானும் அறிக. இதனால் இஃது அக்காலத்தே புள் என்றும் வழங்கப்பட்டமை உணரலாம். இதனை இக்காலத்தார் "ஆட்காட்டி" என வழங்குகின்றனர். இப்பறவை கூட்டமாய் வாழுமியல்புடையதாகலின் 'இருந்தோட்டுக் கணந்துள்' எனப்பட்டது. இப்பறவை ஆள் வழக்கற்ற இடங்களிலே இருக்கும்; ஒரோவழி யாரேனும் அப்பறவை இருக்குமிடத்திற்கு அண்மையில் வரக்கண்டால் பறந்து கத்தும்; பெரும்பாலும் அங்கு வந்தவர் மறையுங்காறும் விடாது கத்தும்; ஆதலால் கணந்துட் பறவை ஒலித்தால் யாரோ வருகின்றனர் என்று அறிந்து கொள்ளலாம். இச் செய்யுளில் "ஆளறிவுறீஇ" என்றதற்கும் இக் காலத்தார் ஆட்காட்டி என்பதற்கும் உள்ள பொருட் பொருத்தம் உணர்க.

வம்பலர் - ஆறு செல்வோர். வம்பலர் என்றதற்குப் புதியவர் என்னும் பொருளும் உண்மையால் ஆறுசெல் வம்பலர் எனப் பட்டது. ஆறு செல்வோராகிய வழிப்போக்கர் என்றபடி.

பாலைநிலத்தே வழிப்போவாரும் ஆறலைகள்வர்க்கஞ்சிப் படை கொடு போதலுண்மையின் வம்பலர் படை என்றாள்.

நிலையாப் பொருட்பிணி என்றது, யாம் செல்லற்க என்னின் செல்லார் என்பதற்கோர் குறிப்பேதுவாதல் அறிக.

யாம் அப்போது செலவழுங்குவியாது உடம்பட்டிருந்து இப் போது வருந்துதல் பேதைமை ஆகலின், வருந்தற்க என்பது குறிப் பெச்சம்.

கணந்துள் ஆள் அறிவுறீஇ வம்பலர் படை பெயர்க்கும் என்றதும், யாம் நம் ஆற்றுமை அறிவுறீஇ அவர் பிரிவைத் தடுக்கற்பாலேம்; அஃது செயதிலேம் என்று உள்ளுறை யாகுமாறும் உய்த்துணர்க.

கடுங்குரையம் என்பதன்கண், குரை: அசைநிலை; கடியம் என்னும் பொருட்டு. பனியாகிய கடுமையை யுடையேம் என்றவாறு. செல்லாதீம் - செல்லன்மின். மலையுடைக் கானம் என்றது, குறிஞ்சிதிரிந்த பாலை என்பது படுகின்றது.

பாட்டு - ஈருக . தோழி கூற்று

துறை :—தலைமகன் தமர் வரைவொடு வந்தவழி 'நமர் அவர்க்கு வரைவு நேரார் கொல்லோ?' என்று அஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது. அஃதாவது, தலைவன் தலைவியை வரைந்து கோடற் பொருட்டு அவன தமரை மணம்பேச ஏவினன்; அவர் மணம்பேச வந்தனர்; அப்பொழுது தலைவி, 'தமர் மறுப்பரோ?' என்று அஞ்சி வருந்திளளாக, அவட்குத் தோழி தமர் வரைவுடம்பட்டமையை அறிவுறீஇயது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'பெருமாட்டீ, நமர் தலைவன்தமர்க்கு வரைவுடமபட்டனர்; யான் மகிழ்ந்தேன்! இவ்வூர் இனி அலர் தூற்றுதடங்குங்காண்' என ஓகை விளம்புகின்றாள்.

நூறுக. வளையோய் உவந்திசின் விரைவுறு கொடுந்தாள்
அளைவாழ் அலவன் கூருகிர் வரித்த
ஈர்மணல் மலிர்நெறி சிதைய இழுமென
உருமிசைப் புணரி உடைதரும் துறைவர்க்கு
உரிமை செப்பினர் நமரே விரியலர்ப்
புன்னை ஓங்கிய புலாலஞ் சேரி
இன்னகை ஆயத் தாரோடு
இன்னும் அற்றோ இவ் வழுங்க லூரே.

—அம்மூவனார்.

(இ - ள்.) வளையோய் உவந்திசின் - வளையலை அணிந்தோய் யான் மகிழ்ந்தேன்; அஃதெற்றுக்கெனின், விரைவு உறு கொடுந்தாள அளைவாழ் அலவன் - விரைதலையுடைய வளைந்த கால்களையுடைய வளையின்கண் வாழ்கின்ற நண்டு, கூர் உகிர் வரித்த ஈர் மணல் மலிர் நெறி - தன் கூரிய நகத்தினாலே கீறிய ஈரிய மணலையுடைய நீரொழுகும வழி, சிதைய இழும் என உரும் இசைப் புணரி உடைதரும துறைவர்க்கு-சிதைந்தழியும்படி இழும் என்னும் ஓசையுண்டாக இடியோசை போன்ற முழக்கத்தையுடைய அலைகள உடையாநின்ற கடற்றுறையையுடைய நந்தலைவர்க்கு, நமர் உரிமை செப்பினர்-நம் சுற்றத்தார் நீ உரியையாந் தன்மையை உடம்பட்டுக் கூறினர் ஆகலான், விரி அலர்ப் புன்னை ஓங்கிய-மேலும், மலர்ந்த பூக்களையுடைய புன்னை மரங்கள வளர்ந்துயர்ந்த, புலால் அம்சேரி இன்னகை ஆயத்தாரோடு - புலாலுற்றத்தையுடைய சேரியினிடத்தேயுள்ள இனிய சிரிப்பையுடைய மகளிர் குழுக்களோடே, இவ் அழுங்கல் ஊர் இன்னும் அற்றோ - இவ் வாரவாரமுடைய ஊர் இனியும் அலர் கூறும் பழைய தன்மையை உடையதாமோ ?

விளக்கம் :—வளையோய்: விளி. இசின் - அசைநிலை. கூறத்தொடங்கியவுடன் யான் மகிழ்கின்றேன் என்றது, தலைவி தான் கூறப்போவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாதலை உணர்ந்து விரைந்து கேட்டற் பொருட்டென்க. விரைதற்கு ஏதுவான கொடுந்தாள் என்க. கொடுமை - ஈண்டு வளைவின்மேற்று. அளை - வளை. அலவன் - நண்டு.

நண்டு கீறிய நெறியினைப் புணரி அழிக்கும் என்றது, ஊரினர் தூற்றும் பழித்துயரதனைத் தலைவன் வரைந்து கொண்டு போக்குவன் என்னும் உள்ளுறையுடைத்தென்க. இழுமென உடைதரும் என்று ஒழியாது உரும் இசைப் புணரி என்றது, தலைவன் இசைக்கருவிகளின் ஆரவாரத்தோடே வந்து வரைவன் என்னும் குறிப்பிற் றென்க.

வரித்தல் - வரிபடக் கீறுதல். அலர்மொழி புண்படுத்தும் தன்மைத்தென்பது தோன்ற அலவன் கூருகிரால் வரித்த நெறி என்றாள்.

உரிமை - தலைவனுக்குக் கிழத்தியாகும் உரிமை உடைமை. செப்புதல் - ஈண்டு உடம்பட்டோதுதல் என்பதுபட நின்றது. இச் சேரியினர் மட்டுமே யன்றி இவ்வூர்ப் புன்னையும் அலர் தூற்றும் என்பதுபட 'வினையலர்ப் புன்னை யோங்கிய சேரி', என்றமை கண்டின்புறுக. அலர் தூற்றுவோர் தூற்றுங்கால் இகழ்ந்து நகைத்தலும் உடையராதல் பற்றி, அலர் தூற்றும் அறிவின் மகளிர் என்பாள் 'இன்னகையாயம்' என்றாள்; எள்ளல், நகைபிறத்தற் கிடனுதல்பற்றி என்க.

அற்றே - அத்தன்மைத்தோ; ஈண்டுச சுட்டு நெஞ்சறிசுட்டென்க. பண்டு அலர் கூறிய தன்மைத்தோ என்றவாறு.

அற்றே என்னும் வினா அற்றன்று என்பது படநின்றது. இனி இவ்வூரவரும் வாயடங்குவா என்பது குறிப்பு.

பாட்டு - உரை : தலைவி கூற்று

துறை :—பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது. அஃதாவது, தலைவன் பிரிந்துறைநத காலத்தே ஆற்றாளாகிய தலைவி தோழிக்குத தன் ஆற்றுமைக் காரணம் தெரித்தோதியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'இச்சிறுபுன்மாலை இத்துணைப் பொல்லாங்குடையதாகும் உண்மையை நம் தலைவரைக் காணப் பெறுத இக்காலத்திலேதான் யான் உணர்கின்றேன்.' என்று கூறுகின்றாள்.

நெடுநீர் ராம்பல் அடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
அகலிலைப் பலவின் சாரல் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் தோழியவர்க் காணு ஊங்கே.

—கடியலூர் உருத்திரங்கண்ணனார்.[1]

(இ - ள்.) தோழி—, நெடுநீர் ஆம்பல் அடைபுறத்து அன்ன - ஆழ்ந்த நீரின்கண் உள்ள ஆம்பல் இலையின் பின்புறத்தை ஒத்த, கொடுமென் சிறைய கூர் உகிர்ப் பறவை - வளைந்த மெல்லிய சிறகினையுடையவாகிய கூரிய நகங்களை உடைய வௌவால்கள், அகல் இலைப் பலவின் சாரல் முன்னி - அகன்ற இலைகளையுடைய பலாமரங்களையுடைய மலைச்சாரலை நினைந்து, பகல் உறை முது மரம் புலம்பப்போகும் - தாம் பகற்பொழுதிலே உறைதற்கிடமான பழைய மரம் தனிமையுறும்படி செல்லாநிற்கும், சிறுபுன்

(பாடம்) 1. 'கடியலூர் உருத்திரனங்கண்ணன்'

மாலை உண்மை - சிறிய புல்லிய மாலைக்காலம் என்றென்றுள தாதலை, அவர்க் காணு ஊங்கு - நந்தலைவரைக் காணப்பெறுத இக் காலத்தேதான், அறிவேன் - உணர்கின்றேன்.

விளக்கம் :—நெடுமை ஈண்டு ஆழங்குறித்து நின்றது. அடை - இலை. புறம் - முதுகு. ஈண்டு இலையின் அடிப்பகுதி என்க. ஆம்பலிலை யின் புறம், வெளவாலின் சிறகிற்கு உவமை. கொடுமை - வளைவு. சாரல் - மலைப்பக்கம். முன்னுதல் - நினைத்தல். வெளவால் ஏனைப் பறவை போலாது பகலின்கண் உறைந்து இரவில் இரைமேடும் இயல்புடைய தாகலின், பகலுறை முதுமரத்தைவிட்டுப் பலாமரத்தை நினைந்து மாலைப்பொழுதிலே போயின என்க.

பறவை, பலாவின்பழத்தை நினைந்து தம் உறைபதி தனிப்பப் போகும் என்றது, தன்னைப் புலம்பவிடுத்துப் பொருள் உன்னித் தலை வன் போயினமை கருதிக் கூறியதென்க.

மாலைக்காலம் அவர் உடனுறையும் காலமெல்லாம் இனிதாயிருந் தமையின் அப்பொழுது அதனை அறியாள் ஆயினள் என்க. அம்மாலைப் பொழுது தனித்துறைவார்க்குப் பெரிதும் துன்பந்தரும் என்பதை,

> "பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்
> துன்பம் வளர வரும்." (குறள்-கஉஉ)

எனவும்,

> "காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
> தேதிலர் போல வரும்" (குறள்-கஉஉ)

எனவும் வரும் திருக்குறள்களானறிக. இச் செய்யுளின் கருத்தை,

> "மாலைநோய் செய்தல் மணந்தா ரகலாத
> காலை யறிந்த திலேன்." (குறள்-கஉஉ)

எனவரும் திருக்குறளினும் காண்க.

பாட்டு - நுஙு : தோழி கூற்று

துறை :—பகற்குறி வந்து ஒழுகும் தலைமகன் வெளிப்பா டஞ்சி இரவுக்குறி நயந்தானது குறிப்பறிந்த தோழி, இரவின் கண் அன்னியது காவலறிந்து பின்னும் பகற்குறியே நன்று அவ் விரவுக் குறியினென்று, பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவுகடாயது.

அஃதாவது, பகற்குறி வந்தொழுகுந் தலைவன் அவ் வொழுக்கம் புறத்தார்க்குப் புலனும்என்று தானே அஞ்சிய வழித் தோழியை இரவுக்குறி நயக்கும் குறிப்புடையன் ஆயதைத் தோழி அறிந்தனள்; ஒருநாள் தலைவன சிறைப்புறத்தே வந்து நின்றது கண்டு அவன் வரவுணராதாள் போன்று இரவுக்குறி

யின் இடையூறு தலைவற்குணர்த்துவாள் தலைவியை நோக்கிக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'யாம் பகற் பொழுதிலே சிமையம் உயர்ந்த மலைச்சாரலிலே பாடின் அருவி யாடுதல் இனிது; இரவிலோ நம் அன்னையின் முயக்கத்தூடே துயிலுதல் மிகவும் இன்னாது காண்' என்று கூறுகின்றாள்.

நூருஉ. ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் அருவி ஆடுதல் இனிதே
நிரையிதழ் பொருந்தாக் கண்ணே டிரவிற்
பஞ்சி வெண்திரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் னாதே.

—உறையூர் முதுகூற்றனார்.

(இ - ள்.) தோழி—, ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக் கோடு உயர்நெடுவரைக் கவாஅன் - நிறைந்த ஆரவாரத்தை யுடைய மலைநாட்டையுடைய தலைவனது மார்பமே தெப்பமாகக் கொண்டு, குவடுகள் உயர்ந்த நெடிய மலையினது தாழ்வரையிலே, பகல் பாடு இன் அருவி ஆடுதல் இனிது - பகற்பொழுதிலே முழங்குகின்ற ஊன்றின்பமுடைய அருவியிலே ஆடுதல் இனி தாகும், இரவில் - இனி இரவிலோ, பஞ்சி வெண்திரிச் செஞ் சுடர் நல்இல் - பஞ்சாலே திரித்த வெள்ளிய திரியையுடைய செவ்விய விளக்கையுடைய நன்றாகிய இவ் வில்லின்கண், பின்னு வீழ் சிறுபுறம் தழீஇ - பின்னல் வீழ்ந்து கிடக்கின்ற முதுகினைத் தழுவிக்கொண்டு, அன்னை முயங்க-நம் அன்னை அணையா நிற்ப, நிரை இதழ் பொருந்தாக் கண்ணே டு - நிரல்பட்ட இமைகள் பொருந்தாத விழிகளோடே, துயில் இன்னாது-யாம் துயில்வது மிகவும் துன்பமாம்.

விளக்கம்:—ஆர் கலி - முழக்கம். வெற்பன் - குறிஞ்சித் தலைவன். புணை - தெப்பம். நிலையாவிடத்தினும் அவன் மார்பு பற்றுக்கோடாகச் சென்றுடலின், 'மார்பு புணையாக' என்றாள். கோடு - மலைக்குவடு. கவான் - தாழ்வரை. அருவி வீழுங்கால் இசையுண்டாகலான், 'பாடு இன் அருவி' என்றாள். இன்னருவி என்றது, ஊற்றின்பமுடைமை குறித்து என்க.

நிரை - நிரல். இதழ் - கண்ணிமை. இமைபொருந்தாத் துயில் என்றது, உறங்காமையை உணர்த்தியபடியாம். அன்னை பெரிதும் ஐயுற்றுக் காவல் செய்கின்றாள் என்பது தோன்றப் 'பஞ்சி வெண்திரிச்

செஞ்சுடர் நல்லில்' என்றாள். இரவுமுழுதும் விளக்கேற்றி வைத்துப் பாதுகாக்கின்றாள் என்பது கருத்து. ஒளிமிக்க பெரிய விளக்கென் பாள், 'பஞ்சி வெண்திரிச் செஞ்சுடர்' என்றாள். இனி வீடும் வலிய கதவுகளும் தாழக்கோலும் சுற்றுச் சுவர்களும் உடையதென்பாள், 'நல்லில்' என்றாள். அன்னையறியாவகை தலைவி புறஞ் செல்ல லாகாமை தோன்றச் 'சிறுபுறந் தழீஇ அன்னை மூயங்க' என்றாள். அன்னை துஞ்சாமை தோன்ற மூயங்கவென் றெழுதிந்தாள். இந்த நிலை இன்னைக் குறித்து வருந்தும் வருத்தத்தினும் தலைவிக்குப் பெரிதும் இன்ன நிலை என்பாள், 'துயில் இன்னாது' என்றாள். ஆதலால் வரைந்து கோடலே நன்று என்பது குறிப்பு.

பாட்டு - கூருசை : தோழி கூற்று

துறை :—பரத்தையிற் பிரிந்து வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில்மறுத்தது. பரத்தையர் கேண்மை கொண்டொழுகிய தலைவன் தலைவியை விரும்பி வந்த பொழுது தோழியைத் தலைவியின் ஊடல் போக்குமாறு இரந்தானை அவள் குறையேலாது மறுத்துக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனைநோக்கி, 'பண்டு பாம்புகள் வழங்குந் தெருவிலே இரவின்கண் அஞ்சாது வந்து நீ தலைவிக் குத் தண்ணளிசெய்தனை; நீரின்கண் நீண்டபொழுது ஆடிற் கண்கள் சிவந்துவிடும்; தேனையே பருகுவார்க்கு அத்தேனும், புளிப்பதாகிவிடும்; அங்ஙனமே நீ தலைவியை இப்போது வெறுப்ப வனாகி விட்டனை; ஆயின், அவளை அவள் தந்தையில்லிற் சேர்த்து விடுதி' என்று கடிந்து கூறுகின்றாள்.

கூருசை. நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை யாயினேம் இல்லுய்த்துக் கொடுமோ
அந்தண் போய்கை எந்தை எம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்களுர் எவ்வம் களைந்த எம்மே.

—கயத்தூர்கிழார்.

(இ - ள்.) ஐய!, நீர் நீடு ஆடில் கண்ணும் சிவக்கும்-நீரின் கண்ணே நீண்டபொழுது விளையாடில் கண்களும் சிவந்துவிடும், தேனும் நீடு ஆர்ந்தோர் வாயில் புளிக்கும் - இனிப்புடைய தேனை யினும் நெடுநாள் பருகுவோர் வாயின்கண் புளிப்புடையதாகும் ஆதலின் உலகியற்கை இங்ஙனமிருத்தலின், தணந்தனை யாயின்-நீ தலைவியோடே நெடிது உடனுறைந்தமையானே வெறுப்புற்று

அவளைப் பிரிந்தனையாயின், அம் தண் பொய்கை எந்தை எம் ஊர் - அழகுந் தண்மையுமுடைய நீர்நிலைகள் மிக்க எம் தந்தை யினது எம்மூரினிடத்தே, கடும்பாமபு வழங்கும் தெருவில்-கடிய நஞ்சுடைய பாம்புகள் வழங்காநின்ற எம் தெருவின்கண் இரவில் வந்து, நடுங்கு அஞர் எவ்வம் களைந்த எம்- நின்னால் நடுங்கு தற்குக் காரணமான மிக்க துன்பம் களையப்பட்ட எம்மை, எம் இல் உய்த்துக் கொடுமோ - எமது வீட்டிலே செலுத்தித் தரு வாயாக.

விளக்கம்:—தலைவன் தணந்தமைக்கு எது உலகியலில் வைத்துக் காட்டுவாள், 'நீர் நீடு ஆடிற் கண்ணும் சிவக்கும், தேனும் ஆர்ந்தோர் வாயிற்புளிக்கும்' என்றாள். நீடு ஆடின் என்றமையால் நீடு ஆர்ந்தோர் என்றும் கூறுக. இவ்வியல்புக் கேற்பவே நீதலைவியை நெடிது நுகர்ந்து வெறுப்புற்றுத் தணந்தனை என்று விரித்தோதுக. இதனால் ஒருகாலைக் கொருகால் வளரும் மெய்யன்புடையையல்லை; வறிய காமமட்டுமே உடையை; நினது காமம் குறைந்தமையாற் கைவிட்டகலாநின்றனை எனக் குறிப்பான் இகழ்ந்தமை காண்க. "வேண்டாத பெண் தாயோடே" என்னும் வழக்குப்பற்றித் 'தணந்தனையாயின் எம்மில் லுய்த்துக் கொடுமோ' என்றாள். தலைவி தனிவழியே தாய்வீடேகுதல் மரபன்றாகலின், 'அழைத்து வந்த நீயே கொண்டுபோய் விடுக' என்பாள், 'உய்த்துக கொடுமோ' என்றாள்.

நீ அன்புதிரிந்து வறியையினை என்பாள், பண்டு அவன் தலைவிபாற் கொண்டிருந்த அன்பை விளக்கும் பொருட்டு; 'எம்மூர்க் கடும்பாம்பு வழங்கும் தெருவில் எவ்வம் களைந்த எம்மை' என்றாள். மிகச்சிறந்த ஊரையும் தமரையும் நீதது நின்னையே புகல்புக்கவள் தலைவியென்பாள், 'அந்தண் பொய்கை எந்தை எம்மூர' என்றாள். களைந்த - களையப் பட்ட என்க. கடும்பாம்பு வழங்குந் தெருவில் என்னும் குறிப்பால் இரவின்கண்வந்து என வருவித்தோதுக. கொடுமோ என்பதன் கண் மோ: முன்னிலையசை.

பாட்டு - நெருடு : தோழி கூற்று

துறை :—இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது. அஃதாவது, ஏதமிக்க இரவின்கண் தலைவன் வந்தமை கண்ட தோழி, அவன் அங்ஙனம் வந்தமைக்குப் பரிந்து கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'முகில்கள் பரந்து கிடத்தலால் வானமும் காணப்பட்டிலது; யாண்டும் நீர் பரவி ஒழுகலான் நிலமும் தோன்றிற்றில்லை; யாண்டும் பேரிருள் கதுவி யுளது; யாவரும் உறங்கும் இத்தகைய இடையிரவின்கண் நீ எவ்வாறு வந்தனையோ! எம்முடைய சிற்றூர் இருக்குமிடத்தைத் தான் இவ்விருளில் எங்ஙனம் அறிந்தனையோ! நீ இங்ஙனம் வரு தற்கு யான் வருந்துகின்றேன்' என்று கூறுகின்றாள்.

டுடுடு. பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலையே
எல்லே சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பாஞட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வேற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே.

—கபிலர்.

(இ - ள்.) ஓங்கல் வெற்ப-உயர்ச்சியையுடைய மலைநாட்டை டைய பெருமானே, பெயல் கண் மறைத்தலின் விசும்பு ணலை - மழை இடத்தை மறைத்தலானே வானத்தையும் காண் ர்றிலே, நீர் பரந்து ஒழுகலின் நிலம் காணலை - மழைநீர் யாண்) பரவி ஓடுதலானே நிலத்தையும் காண்கின்றிலே, எல்லே றலின் இருள் பெரிது பட்டன்று - ஞாயிற்றுமண்டிலம் ற்றிசையிற் சென்று மறைந்தமையானே இருள் மிகவும் றிந்தது, பல்லோர் துஞ்சும் பாஞள் கங்குல் - உலகிற் பலரும் றிலுதற்குக் காரணமான இந்நடு நாளாகிய இரவின்கண், யாங்கு தனையோ - எவ்வாறு தான் வந்தாயோ!, வேங்கை கமழும் சிறுகுடி - வேங்கைப்பூ மணம் கமழாநின்ற எமது சிற் ரை; யாங்கு அறிந்தனையோ - எவ்வாறு தெரிந்துகொண் யோ! யான் நோகு - யான் உன் வரவுகண்டு வருந்து றேன்.

விளக்கம்:—பெயல் - முகிலுமாம். கண் - இடம்; கண்ணே மறைத் ன் எனினுமாம். இரவின்கண் ஆறு செல்வோர் விண்மீன் நிலைகண்டு யறிந்து சேறலுண்மையின், அவ்விசும்பும் காணப்பட்டிலதே று வியப்பாள், 'விசும்பு காணலை,' என்றாள். இது நிசைகாணல் மை கூறியவாறும்.

பரந்தொழுகல் அப்பொழுதே மழைபெய்து கொண்டிருத்தலால் ந்ததென்க. யாண்டும் நீர்பரவி ஓடுதல் என்றது, ஆறு காண்ட மை கூறிற்று. எல்லே - ஞாயிறு. சென்று மறைதலின் என்க. ன்று - பட்டது; உண்டாயது. தலைவியும் தானும் தம்போல்வார் ற் சிலரும் துஞ்சாமையின் சில்லோரன்றிப் பல்லோர் துஞ்சும் துபடப் பல்லோர் துஞ்சும் என்றாள்; துஞ்சுதல் - துயிலுதல். ாள் என்றது, இரவின் நடுயாமத்தை. யாங்கு வந்தனையோ தனையோ என்பவற்றின்கண் ஓகாரங்கள் அசைநிலை. நோகோ தன்கண் ஓகாரம் இரக்கம் குறித்து நின்றது. எகாரங்கள்: அசை

நாகோ யானே என்றது, இங்ஙனம் வாரற்க எனக் குறிப்பான் குறி மறுத்து வரைவுகடாயவாறும்.

பாட்டு - கூருசு : செவிலி கூற்று

துறை :—மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது. அஃதாவது, தலைவி தலைவனுடன் போனமை அறிந்த செவிலி, அவள் நிலைக்கு வருந்திக் கூறியது.

இதன்கண், செவிலி, 'அந்தோ! பொற்கலத் தேந்திய பொரிகலந்த பாலையும் மிக்குளதென்று உண்ண மறுப்பாளே! அத்தகையாள் நீரும் நிழலும் அற்ற பாலைநில வழியிலே தலைவனோடே விரைந்து சென்று வெம்பிய கலங்கற் சின்னீரைப் பருகுவதற்கு வல்லள் ஆதல் எங்ஙனம்?' எனத் தனக்குள்ளே வருந்துகின்றாள்.

கூருசு நிழலான் றவிந்த நீரில் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்கு வல்லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென உண்ணுள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னாளே.

—கயமனார்.

(இ - ள்.) கோல் அமை குறுந்தொடித் தளிர் அன்னாள் - திரட்சி அமைந்த குறிய வளையலையுடைய மாந்தளிர்போன்ற நிறமும் மென்மையுமுடைய என்மகள், ஏந்திய செம்பொன் புனை கலத்து அம் பொரிக் கலந்த பாலும்-கையிலேந்திய சிவந்த பொன்னாற் செய்த கலத்தின்கண் உள்ள அழகிய பொரியைக் கலந்த பாலையும், பலவென உண்ணுள் - மிக்கன என்று கூறி உண்ண மறுப்பாளே! அத்தகையவள், கழலோன் காப்ப - வீரக் கழலணிந்த தன் தலைவன் காத்துச் செல்லாநிற்ப, நிழல் ஆன்று அவிந்த நீர் இல் ஆர் இடை - நிழல் அடங்கி அற்றுப்போன நீர் அற்ற கடத்தற்கரிய பாலையிடத்தே, கடுகுபு போகி - விரைந்து சென்று, அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய - நீர் அற்ற சுனையின்பக்கத்தே மூறுகி வெந்தமையானே மிக்க வெப்பமுடைய நீரைத் தவ்வென்னும் ஓசையுண்டாகும்படி பருகுதற்கு, யாங்கு வல்லுநள் - எவ்வாறு வன்மையுடையளாயினள்.

விளக்கம்:—நிழல் ஆன்றவிந்த என்புழி ஆன்று என்னும் எச்சம், குறைந்து என்னும் பொருளினின்றது. ஆன்று என்பதற்கு இல்லை

யாகி என்ற பொருளும் உண்டு. "அருவி ஆன்ற அணியில் மாமலை" எனவரும் மதுரைக்காஞ்சி(நூ0சு.)யில் அஃதப் பொருட்டாதல் உணர்க.

கழலோன் என்றது, போர் அணிகளுடன் செல்லும் தலைவன் என்பதைக் குறிப்பானுணர்த்தியது. தலைவியை உடன்கொண்டு போங்கால் எதிர்ப்பாருளராயின் அவரை வெல்லற்கு வில் முதலியன கொண்டு சேறல் மரபாகலின் என்க. "வில்லோன் காலன கழலே" என முன்னும் வந்தமையுணர்க. கடுகுபு - கடுகி; விரைந்தென்றபடி.

அறுசுனை - நீர் வறந்த சுனை என்க. வறந்த சுனையினகத்தே ஒருமருங்கென்பாள், 'அறுசுனை மருங்கின்' என்றாள். மருங்கு-பக்கம். மறுகுபு - மறுகி. என்றது வெப்பத்தாற் கொதித்து முறுகி என்றவாறு. வெந்தமையானே மிக்க வெப்பமுடைத்தாகிய கலுழி. வெவ்வெங் கலுழி என்றது வெம்மைமிகுதி குறித்து இரட்டித்து வந்தது. தவ் வென, ஒலிக்குறிப்பு.

கலுழி-கலங்கனீர். குடிக்கிய-குடிக்க. செய்யிய என்னும் வாய் பாட்டு வினையெச்சம். கொல், தான், ஏ - அசைநிலைகள்.

ஏந்திய என்றது செவிலித் தாயர் தங்கையின் ஏந்தி நின்று இரந்து ஊட்டும் பொழுதும் என்பதுபட நின்றது.

செம்பொற்கலமென்றாள், அவள் பிறந்த குடியின் திருவுடைமை தோன்ற. புனை கலம் -வினைத்தொகை. அம்பொரி என்றது, பொரி யின் நிறச் சிறப்போதியவாறு. பாலும் என்றதன்கண் உம்மை உயர்வு சிறப்பு. பலவென்பது ஈண்டு எண்ணளவு குறியாது மிகுதிப் பொருள் குறித்து நின்றது. கோல் - திரட்சி. தளிரன்னாள் என்றது, பாலை வழிச் செல்ல வொண்ணுதை அவள் மென்மையையும் மேனியையும் குறித்து நின்றது.

பாட்டு - நூஎ : தோழி கூற்று

துறை :—தோழி, கிழவன் கேட்கும் அண்மையனைக் கிழத் திக்குச் சொல்லியது. அஃதாவது, களவின்பமே விரும்பி வரை தற் கருத்தின்றி ஒழுகுந் தலைவன், மணப்படப்பையின் மருங்கே ஒருநாள் வந்து நிற்றலை அறிந்த தோழி, அவன் வரவறியாள் போன்று, அவன் தலைவியின் நிலையினை உணர்ந்து வரைந்து கோடற்பொருட்டுத் தலைவிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "இற்றைநாள் மெலிந்து கிடக்கும் நின் தோள்கள் பிறரால் நீ நந்தலைவனைக் காண்டற்கு முன்பெல்லாம் 'இவை மேவரத்திரண்டு நல்லன வாயின' என்று பாராட்டப்படும் சொல்லைப் பெறுகின்றன." என்று கூறுகின்றாள்.

நூஎ. முனிபடர் உழந்த பாடில் உண்கண்
பனிகால் போழ்ந்து பணையெழில் ஞெகிழ்தோள்

மெல்லிய ஆகலின் மேவரத் திரண்டு
நல்ல என்னுஞ் சொல்லே மன்னிய
ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்தோய் வெற்பன் மணவா ஊங்கே.

—கபிலர்.

(தி - ள்.) தோழி—, முனிபடா உழந்த பாடு இல் உண் கண்-வெறுத்தற்குரிய துன்பத்தை நுகர்கின்றமையானே துயில் இல்லையான மையுண்ட கண்களில் உண்டாகிய, பனி கால் போழ்ந்து - துளிகளானே கால் பிளக்கப்பட்டு, பசுமை யெழில் ஞெகிழ்தோள் மெல்லிய ஆகலின் - தமக்கியல்பாகிய மூங்கில் போன்ற அழகு குறைந்துபோன நின் தோள்கள் இப்பொழுது மெலிந்தனவாய் விட்டமையானே, ஏனல் அம் சிறுதினை காக்கும் சேணோன் - தினைவகையினுள் வைத்து அழகிய சிறுதினையை விளைதலைக் காவல் செய்யும் பரண்மேலிருந்த குறவனுடைய, ஞெகிழியில் பெயர்ந்த நெடு நல் யானை - கொள்ளியினுலே அஞ்சிச் சென்ற நெடிய நல்ல யானை, மீன்படு சுடர் ஒளி வெரூஉம் - பின்னர் விண்மீன் வீழ்தலானே உண்டாகிய மிக்க ஒளியை அஞ்சா நிற்றற்கிடமான, வான் தோய் வெற்பன் - வானத்தைத் தீண்டவுயர்ந்த மலையையுடைய நற்றலைவன், மணவா ஊங்கு - நின்னை மணத்தற்கு முன்பெல்லாம், மேவரத் திரண்டு நல்ல என்னும் சொல்லே மன்னிய - கண்டார்க்கு விருப்பம் வரும்படி பருத்து நல்லனவாயிருந்தன என்னும் பிறர் கூறும் சொற்களே அடையா நின்றன.

விளக்கம்:—நின் தோள்கள் மிகவும் மெலிந்தமையானே அவையிற்றைக் கண்டோர், இவை இவள் தலைவனை மணக்குமுன்பெல்லாம் மேவரத்திரண்டு நல்ல வாயின என்று இரங்கிப் பாராட்டும் சொல்லைப் பெறுகின்றன என்றாள் என்க. இஃதென் சொல்லியவாறே எனின், பண்டு செல்வனுயிருந்த ஒருவன் அதனை யிழந்து நல்கூர்ந்தவழி அவனைக் கண்டோர், 'ஆ! இவன் பண்டு பெருஞ்செல்வன் கண்டீர்' என்று இரங்கிப் பாராட்டப்படுமாறு போல, இவள் தோள்மெலிவு பிறர் அவற்றின் பழைமை நினைந்து பாராட்ட ஏதுவாயிற்று என்றவாறு. இதனால் அவள் மெலிவுகண்டு ஊரவர் அலர்தூற்றுதலும் அவள் பெரிதும் மெலிந்து போனமையும் தலைவற்குக் குறிப்பான் உணர்த்தப் பட்டமை அறிக.

களவொழுக்கத்தால் இவள் வேறுபாடு தீராது ஆகலின், விரைவின் வரைந்து கொள்ளலே நன்றென்று தலைவனுக்குக் குறிப்பானுணர்த்தல் இதன் பயன் எனக.

முனிபடர்-வாழ்வினை வெறுத்தற்குக் காரணமான துன்பம். பாடு-துயில். கால் போழ்தல் - கால் கொண்டொழுகுதல். நீர்த்துளிகள் தோள்களில் வீழ்ந்து கால் கொண்டு ஓடின என்க. கால்-வாய்க்கால். கால் போறலிற் கால் என்றாள். கால் என்றதற் கேற்பப் போழ்தென்னும் வினை பெய்துரைக்கப்பட்டது. போழ்தல் - பிளத்தல்.

பணை எழில்-மூங்கிலை ஒத்த அழகு. எழிலை நெகிழவிட்ட தோள்கள் என்க. மேவருதல் - விருப்பம் வருதல். கண்டார்க்கென ஒரு சொல் வருவித்துக் கொள்க. தினை பலவகைப் படுதலின் அவையிற்றுள் மிகச் சிறிய தினை என்பாள், 'ஏனலஞ் சிறுதினை' என்றாள்; ஏனலுள் வைத்து அழகிய சிறியதினை என்க. ஏனல் - தினை.

தினைகாக்குங் குறவன் பரண்மேலிருத்தலாற் சேணோன் எனப்பட்டான். பரண்மேலிருந்து யானை கடியும் பொருட்டுச் சேணோனைக் கொளுத்தப்பட்ட வெகுளியென்க. விண்-விண்மீன். மிக்க ஒளி என்பாள், 'சுடரொளி' என்றாள்.

வெகுளிக்கு அஞ்சிய யானை மீன்படு சுடரை வெரூஉம் என்றது, களவினைகண்ணே நடத்தமாக்கஞ்சிய தலைவன் அவர்பால வரைவுடன் சேறற்கும் அஞ்சி வரைவு நீட்டிப்பான் ஆயினன் என்னும் உள்ளுறை தோற்றி நின்றது காண்க

பாட்டு - நெடுஅ : தோழி கூற்று

துறை —தலைமகன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே பெரிதும் வருந்திய தலைவிக்குத் தோழி பருவவரவு காட்டித் 'தலைவன் விரைவில் மீண்டுவருவன் வருந்தற்க!' என வற்புறுத்துக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நங்காய் பேதுறல்! கின்படர் சேணீங்க யாம வருவேம்' என்று நந் தலைவர் குறித்துச் சென்ற பருவமும் இதுவே என்று, பல்லான் கோவலர் கண்ணி முல்லை முகையும் நமக்குக் கூறுகின்றன காண்' என்று கூறுகின்றாள்.

நெடுஅ. வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகண் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்சே ணீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்
தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப்
பல்லான் கோவலர் கண்ணிச்
சொல்லுப அன்ன முல்லைமென் முகையே.

—கொற்றனார்.

(இ-ள்.) தோழி—, வீங்கு இழை நெகிழ விம்மி ஈங்கே எறிகண் பேதுறல்-செறிந்த அணிகலன்கள் நெகிழும்படி அழுது இவ்வாறு நீர்த்துளியுதிர்க்கும் கண்களோடே மயங்காதேகொள், ஆய் கோடிட்டுச் சுவர் வாய் பற்றும் நின்படர்-ஆராய்ந்து காண்டற்குரிய கோடுகளைக் கீறிச் சுவரிடத்தே பற்றிநிற்றற்குக் காரணமான நினது துன்பம், சேண் நீங்க வருவேம்-தூரியவிடத்தே நீங்கி யொழியும்படி யாம் மீண்டு வருவேம், என்ற பருவம் உதுக்காண்-என்று நமக்குத் தலைவர் பண்டு குறிப்பிட்ட கார்ப் பருவமும் இதுவே காண், முல்லை மென் முகை-இப்பருவத்தே தோன்றுதற்குரிய முல்லையினது மெல்லிய அரும்புகள், தனியோர் இரங்கும் பனிகூர் மாலை-தலைவரைப் பிரிந்து தனித்துறையும் மகளிர் இரங்குதற்குக் காரணமான குளிர் மிகுதியையுடைய மாலைப்பொழுதில், பல் ஆன் கோவலர் கண்ணி-பலவாகிய ஆன்களையுடைய இடையர்களது தலையிற் சூடப்பட்ட கண்ணியின் கண் இருந்து, சொல்லுப அன்ன-நமக்கு இப்பருவ வரவினைக் கூறுவ போன்றன.

விளக்கம்:—விம்முதல்-அழுகை குறித்து நின்றது. அழுகை உடல் மெலிவிற்குக் காரணமாதல் பற்றி, 'இழை நெகிழ விம்மி' என்றாள். ஈங்கு என்றது, இடமுணர்த்தாது பண்புணர்த்தி நின்றது. எறிகண்-வினைத்தொகை. துளி எறியும் கண் என்க. பேதுறல்-அல்லீற்று வியங்கோள் எதிர் மறைவினைமுற்று; "மகனெனல்" என்புழிப்போல. கணவனைப் பிரிந்துறையும் மகளிர், கணவன் வருவல் எனக் கூறிச் சென்ற நாட்களைச் சுவரிற் கோடிட்டு நாடோறும் இன்னும் எத்துணை நாள்கள் உள என, ஒற்றி, ஆராய்தல் மரபு; இதனை,

> "வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
> நாள்ஒற்றித் தேய்ந்த விரல்." (குறள். கஉசுக)

எனவருந் திருக்குறளானும் அறிக.

ஆய்கோடு-ஆராயப்படும் கோடென்க. வருநாள் அறிதற் பொருட்டு இடையறாது சுவர் ஒற்றி நிற்றலால், 'சுவர்வாய் பற்றும் நின்படர்' என்றாள். வீங்கிழை என்பது தொடங்கி உதுக்காண் என்னுந்துணையும் முல்லை சொல்லுவன வாகக்கொள்ளினும் அமையும். இங்ஙனம் கோடற்கு, நெகிழ வீங்கி ஈங்கே பேதுறல் நின் படர் நீங்க வருவேம் என்ற பருவம் உதுக்காண் எனக் கண்ணிமுல்லை முகை சொல்லுப அன்ன என இயையு காண்க.

தலைவர் வருவேம் என்ற பருவம் என வருவித்தோதுக. கண்ணியின்கண் இருந்து சொல்லுப அன்ன என்க.

ஆதலால் தலைவர் விரைந்து மீள்வர் என்பது குறிப்பெச்சம்.

கண்ணி-தலையிற் சூடும் மாலை. ஆயர்கள் கார்காலத்தே முல்லைக் கண்ணி சூடுதல் வழக்கம். இதனை "முல்லைக்கண்ணிப் பல்லான் கோவலர்" (பதிற்-உக. உ0) எனப் பிறசான்றோர் கூறுமாற்றையும் உணர்க.

பாட்டு - நகுகை : தோழி கூற்று

துறை :—பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டிப்பெறுது தானே புக்குக் கூடியதுகண்டு தோழி பாணற்குச் சொல்லியது. அஃதாவது, பரத்தையர் இல்லிற்குச் சென்றுவந்த தலைவன் வாயில் வேண்டாது தானே சென்று தலைவியை அளவளாவிய பொழுது தலைவி ஊடல் தீர்ந்தமைக்குக் காரணம் இஃதெனத் தோழி பாணனுக்குக் கூறியது.

இதன்கண், தோழி பாணனை நோக்கி, 'பாணனே கேட்பாயாக, நம்தலைவன் தலைவியின் படுக்கையாகிய நறும்பூஞ் சேக்கைக்கு ஆற்றுமையே வாயிலாகச் சென்று நெட்டுயிர்ப் பெறிந்து ஆண்டுத் துயின்ற தன் மகனை நசையாலே தழுவிக் கொண்டனன்; நந்தலைவியோ தலைவனைப் பின்னர் வாய்வாளாது தழுவிக்கொள்வாளாயினள்; இச்செயல் அவளது சிறந்த பண்புடைமையை விளக்குகின்றது' என்று கூறுகின்றாள்.

நகுகை. கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்கால் கட்டில் நறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையின் உயிர்த்தனன் நசையிற்
புதல்வற் றழீஇயினன் விறலவன்
புதல்வன் தாயவன் புறங்கவைஇ யினளே.

—பேயனார்.

(இ - ள்.) பாண—, விறலவன் - வெற்றியையுடைய நம் தலைவன், மாலை விரிந்த பசு வெண்ணிலவில் - மாலைப்பொழுதின்கண்ணே பரந்த பசிய வெள்ளிய நிலவொளியில், குறுங்கால் கட்டில் நறும்பூஞ் சேக்கை குறிய கால்களையுடைய கட்டிலின்கண் பரப்பப்பட்ட நறிய பூக்களாலாகிய படுக்கையிற் படுத்து, பள்ளி யானையின் உயிர்த்தனன் - தனது ஆற்றுமையானே படுக்கைகொண்ட யானையைப்போல நெட்டுயிர்ப்பெறிந்தவனாய், நசையில் புதல்வன் தழீஇயினன் - தனது விருப்பத்தானே தன் மகனைத்தழுவிக் கிடந்தானாக, புதல்வன் தாய் அவன் புறங்கவைஇயினள் - அம் மகவின் தாயாகிய நம்தலைவியோ அத் தலைவனுடைய புறத்தைத் தழுவிக்கொண்டனள், கண்டிசின் - இந்நிகழ்ச்சியை நீயும் காண்பாயாக, பண்புடைத்து - இந்நிகழ்ச்சி சால அழகிதாம்.

விளக்கம்:—கண்டிசின் - காண்பாயாக. இசின் - அசைநிலை. அம்ம : வியப்பின்கண் வந்தது. பண்பு - இல்வாழ்க்கையின் உயர்ந்த பண்

பாகிய பேரன்புடைமை. என்னே? அன்பும் அறனும் இல்வாழ்க்கை யின் பண்பும் பயனும் எனச் சான்றோர் கூறுதலான் என்க.

தோழியும் பாணனும் அகம்புகன் மரபின் வாயில்களாவார். பரத்தையிற் பிரிந்த தலைவன்பால் தலைவி பெரிதும் ஊடியிருந்தமை அவர்கள் நன்கறிவராகலான், அவள் ஊடல் பேர்த்தற்குத் தம்மை இரப்பன் என்று எண்ணியிருந்தனர். தலைவன் மீண்டு வந்தவுடன் தலைவியைக் காண்டல்வேட்கை மிக்கு ஆற்றுமையே வாயிலாய்ச் சென்று உயிர்ப்பெறிந்து புதல்வனைத் தழுவியபொழுது அன்புமிக்க தலைவியும் தன்னகத்தே அடங்கியிருந்த அன்பு பொங்கி எழுதலானே ஆற்றுமையே வாயிலாய் வாய்வாளாது புக்குத் தலைவனைத் தழுவிக் கொண்டனள். சிறியன சிந்தியாத தலையின் அன்புப் பெருக்கத்தைப் பாராட்டி வாயில்கள் தம்முட் கூறியது இஃதென்க.

அன்புப்பெருக்கத்தானே இல்லத்தின்கண் நிகழும் இக் காட்சியை இவ்வுலகம் பெறும் என இந்நல்லிசைப் புலவர் இந்நூலில் மற்றொரு செய்யுளிற் பாராட்டியுள்ளனர்.

அன்பினது வெற்றியைப் பெற்றமை தோன்ற விறலவன் என்றாள். பள்ளியானை - படுக்கைகொண்டயானை என்க. யானை படுத்தவுடன் கெட்டுயிர்ப்பெறியும் இயல்புடையது. உயிர்த்தனனாய்ப் புதல்வற் றழீஇயினன் என்க. தலைவன் புதல்வற் றழீஇயிருத்தலால், தலைவி புறந்தழீஇயினள். புறந்தழுவுதல் முதுகு, தன் மார்போடே பொருந்த அணைத்தல்.

பாட்டு - நூஅ : தலைவி கூற்று

துறை :—தலைமகன் சிறைப்புறத்தானை வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவி சொல்லியது. அஃதாவது, தலைவன் கேட்கும் அண்மையனாய் வந்து நின்றமை கண்ட தலைவி, தமர் வெறியாடுதற் கெண்ணியிருப்பதனையும், அதற்குத் தான் அஞ்சுதலையும் அவனுக்குணர்த்தக் கருதித தோழிக்குக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, "இன்று வெறி யாட்டெடுக்கக் கருதியிருக்கின்ற நம் அன்னை, எனக்குற்ற வேறுபாடு 'தெய்வத்தால் தீரும்' என்று வேலன் கூறியது பொய்யாதலை அறிந்துகொள்ளும் பொருட்டுத் தலைவன் வாராமையானே யாம பெரிதும தன்பமுழப்பே மாயினும் இன்றிரவுமட்டும் அவன் ஈண்டு வாராதிருப்பின் நன்று" என்று கூறுகின்றாள்.

நூஅ. வெறியென உணர்ந்த வேல னேய்மருங்
தறியா னுகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்

பிடிக்கை அன்ன பெருங்குரல் ஏனல்
உண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
இலங்குமலை நாடன் இரவி னானே.

—மதுரை ஈழத்துப் பூதன்றேவனார்.

(இ-ள்.) தோழி-, அரும் படர் எவ்வம் இன்று நாம் உழப்பினும்-பொறுத்தற்கரிய நினைவானுண்டாகிய துன்பத்தை இன்று யாம் நுகர்ந்தாலும், சாரல் பிடிக்கை அன்ன பெருங் குரல் ஏனல்-மலைப்பக்கத்தேயுள்ள பெண்யானையினது கையை யொத்த பெரிய கதிரையுடைய தினையை, உண் கிளி கடியும் கொடிச்சி கைக்குளிர்-தின்னுகின்ற கிளிகளை ஓட்டுகின்ற குற மகளின் கையின்கண்ணதாகிய குளிர், சிலம்பில் சிலம்பும்சோலை-பக்கமலைகளிலே எதிரொலி செய்யும் சோலைகளையுடைய, இலங்கு மலை நாடன்-விளங்குகின்ற மலைநாட்டையுடைய நம்தலைவன், வெறி எனஉணர்ந்த வேலனை-என் நோய்க்கு மருந்தாவது வெறி யாட்டெடுத்தலே என்று கருதிய வேலன், நோய் மருந்து அறி யான் ஆகுதல்-எனக்குற்ற நோயின் காரணத்தையும் அது தீரும் மருந்தையும் அறியானாவதனை, அன்னை காணிய-நம அன்னை உணர்ந்து கொள்ளும் பொருட்டு, இரவினான் வாரற்க தில்-இரவுக்குறியின்கண் இவண் வாராதொழிக, இஃது என் விருப்பம்

விளக்கம்:—ஏண்டு அன்னை என்றது, செவிலித்தாயை. தலைவி யுற்ற நோய்க்கு வெறியாடல் மருந்தாம் என்று தனது மடமையாலே கருதிய வேலன் என்றவாறு. கொடிச்சி கைக்குளிரினின்றும் எழும் ஒலி சிலம்பினின்று எழும் ஒலிபோலதோன்றும் நாடன் என்றது, தனது மார்பு தர வந்த நோய் தெய்வந்தர வந்ததெனப் பிறர் கருது தற்குக் காரணமான தலைவன் என்னும் உள்ளுறை தோற்றிற்று என்க.

இற்றையிரவில் அன்னை வெறியாட்டெடுப்பாள்; நம்பாற் றலைவன் வந்தால் நம் வேறுபாடு சிறிது அகலும்; நாளை நம் வேறுபாடகன் றமை காணுங் தாய் வெறியாட்டே என் நோய்க்கு மருந்தென உணர்ந்து வேலனைப் பாராட்டுவாள்; ஆகலின், நம்தலைவன் இன்று வாராஞயின் நாம் துன்பமுழுத்தலானே இன்னும் வேறுபாடுமிக்குத் தோன்றும். நம்மைக்காணுந் தாய் வேலன் இந்நோய்க்கு மருந்தறி யான் என்று அறிவாள். அங்ஙனம் அறிதற்பொருட்டு இரவில் தலைவன் வாராதிருத்தல் நன்றென்றுள் என விரித்தோதுக.

நோய்தீர்ப்பதெல்லாம் மருந்தேயாகலின் வெறியும் மருந்து எனப்பட்டது. இதனால் களவொழுக்கத்தானே தன் வேறுபாடு நீங்காமையும், தாய் முதலியோர் வெறியாட்டெடுக்க எண்ணியுளதனை யும், தலைவி தலைவற்குக் குறிப்பான் உணர்த்தினமை உணர்க. இதனைத் தலைவற்குச் சூழ்ச்சி பிறந்து வரையமுயலுதல் பயன் என்க.

படர் - நினைந்து துன்புறுதல். எவ்வம் எனப் பின்வருதலின், படர் என்றது நினைவு என்னும் தற்பொருட்டு மாத்திரையாய் நின்றது. குளிர் - கிளிகடி கருவி. இரவிஞன்: வேற்றுமைமயக்கம்.

பாட்டு - நகூக : தலைவி கூற்று

துறை :—வரைவுமலிந்தவழித் தோழி 'நன்காற்றினுய்' என்றுட்குக் கிழத்தி சொல்லியது. அஃதாவது, வரைவுக் குரியன நிகழாநிற்பத் தோழி தலைவியை நோக்கி 'நீ இதுகாறும் தலைவன் பிரிவினை நன்றுக ஆற்றியிருந்தனை' என்று பாராட்டி னுட்குத் தலைவி, தான் ஆற்றியிருந்தமைக்கு ஏதுக்கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'யான் அவர் பிரிந்திருந்த காலமெல்லாம் அவருடைய மலையினின்று வந்த காந்தளை மனையயலே நட்டு வளர்த்து, அதனை மெல்லிலை குழைய முயங்குமாற்றுனே ஆற்றவல்லேன் ஆயினேன்; இச் செயலைக் கடிந்திலாத நம்மன்னை வாழ்க!' என்கின்றுள்.

நகூக. அம்ம வாழி தோழி அன்னைக்
குயர்நிலை உலகமுஞ் சிறிதால் அவர்மலை
மாலைப் பெய்த மணங்கமழ் உந்தியோடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்லுய்த்து நடுதலுங் கடியா தோளே.

—கபிலர்.

(இ - ள்.) அமம வாழி தோழி-தோழி யான் கூறுவதனைக் கேட்பாயாக, அவர்மலை மாலைப் பெய்த மணம் கமழ் உந்தியோடு - நம்தலைவருடைய மலையின்கண்ணே மாலைப்பொழுதிலே பெய்த மழையானே உண்டாகிய மணம் கமழாநின்ற வெள்ளத்தோடே, காலைவந்த காந்தள் முழுமுதல் - மறுநாட்காலைப் பொழுதிலே நம்மனையருகே யாற்றில் மிதந்து வந்த காந்தளாகிய முழுச் செடியினை, மெல்லிலை குழைய முயங்கலும் - அதன் மெல்லிய இலைகள் குழையும்படி யான் தழுவுதலையும், இல் உய்த்து நடு தலும் கடியாதோள் அன்னைக்கு - நமது வீட்டிற்கொணர்ந்து அதனை யான் நட்டு வளர்த்தலையும் விலக்காதிருந்தவளாகிய நம் அன்னையின் நன்றிக்குக் கைமாறு கருதுங்கால், உயர்நிலை உலக மும் சிறிது - உயர்ந்த நிலையினையுடைய வானவர் உலகமும் சிறி தாகும்.

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற்கண் வந்தது. வாழி, அசை நிலை. அவர் என்னும் சுட்டு, நெஞ்சறி சுட்டு. உயர்நிலை யுலகம் - வானுலகம்.

உலகமும் என்றதன்கண் உம்மை உயர்வுசிறப்பு. மலையிடத்தே பல் வேறு மலர்களும் உண்மையின் அதன்கட் பெய்த மழையினுற் பெருகிய நீர் மணங் கமழ்வதாயிற் றென்க. உந்தி - வெள்ளம். எதிர்ப்பட்ட பொருள்களை உந்திச் சேறலான் இஃதேதுப் பெயர் போலும். இஃதிப் பொருட்டாதலை, பிங்கலந்தையினும் (உகஉஉ) காண்க.

மணங்கமழ் உந்தி என்றது, அதன்கண் தோன்தாடிய தலைவியின் விருப்பந் தோன்ற நின்றது. என்னை? அதுவும் அவர்மலைநீர் ஆகலான் என்க. எனவே ஆற்றியிருந்தமைக்கு இதனினும் ஒரேதுக் கூறியவா றாயிற்று. அவ்வெள்ளம் அவர் மலைக்காந்தளை இல்லுய்த்து நடுதற்குத் தகுதியாக வேரோடும் கிழங்கோடும் இலைகளோடும் கெடாது கொணர்ந்ததென்பது தோன்றக் 'காந்தள் முழுமுதல்' என்றாள்.

அன்னை இச் செயலைக் கடிந்திருப்பளேல் யான் ஆற்றுமையானே இறந்துபடுவேன். தான் கடியாமை வாயிலாய் அவள் என் உயிர்தந்த உதவி செய்தவளாயினாள். காலத்தாற் செய்த இந்நன்றிக்கு இவ்வைய கமே யன்றி வானகமும் கைம்மாறுதல் செல்லாதென்பாள், 'உயர்நிலை உலகமும் சிறி'தென்றாள்.

அவர் மலையினது காந்தளானே யான் ஆற்றினேன் காண் என்பது குறிப்பெச்சம்.

பாட்டு - உகஉ : தோழி கூற்று

துறை :—வெறிவிலக்கித் தோழி அறத்தொடு நின்றது. அஃதாவது, இற்செறித்தலானே தலைவனைக் காணப் பெறாது மெலிந்த தலைவியின் வேறுபாடுகண்டு வருந்திய செவிலி, வேலனை விளையிடத்து அவன் 'இது தெய்வத்தனை' தென்றான், அந்நோய்க்குத் தீர்வாகச் செவிலி வெறியாட்டெடுத்த பொழுது தோழி குறிப்பாக வெறியாடலை விலக்கித் தலைவி கற்புக் கடம் பூண்டமையைச் செவிலிக்குணர்த்தியது.

இதன்கண், தோழி வெறியாடும் வேலனை நோக்கி, 'முதுவாய் வேல! யான் நின்னை ஒன்று வினவுவேன்; சினவாதே கொள்! தலைவியின் நோய்க்குத் தீர்வாக நீ இவண் மடை கொடுத்து மறிகொன்று வணங்காநின்றனை! நந் தலைவியை அணங்கிய மாமலைச்சிலம்பன் அகலமும் நீ கொடுக்கும் பலியுண்ணுமோ? கூறுதி?' என்கின்றாள்.

உகஉ. முருகயர்ந் துவந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவண் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய

விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே.

—வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார்.

(இ - ள்.) முருகு அயர்ந்து உவந்த முதுவாய் வேல - முருகனை வழிபட்டு மகிழ்ந்த அறிவு வாய்த்தலையுடைய வேலனே. வினவுவது உடையேன் - நின்னைக் கேட்பது ஒன்றுடையேன், சினவல் ஓம்புமதி - அதனைக் கேட்டதற்காக என்னைச் சினத்தலைப் பரிகரிப்பாயாக, பல்வேறு உருவின் சில் அவிழ் மடையொடு - பலவாக வேறுபட்ட நிறத்தையுடைய சில சோற்றையுடைய பலியோடே, சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீவி - இவளை ஆட்டினைக்கொன்று அதன் குருதி தோய்ந்த மண்ணை இத் தலைவியினுடைய நறிய நுதலிலே தடவி, வணங்கினை கொடுத்தியாயின் - தெய்வம் பராவினையாய்ப் பலியாகக் கொடுப்பாயாயின், அணங்கிய விண்தோய் மாமலைச் சிலம்பன் - இவளை வருத்திய வானத்தை அளாவிய பெரிய மலைகளையுடைய தலைவனது, ஒண் தார் அகலமும் பலி உண்ணுமோ - ஒள்ளிய மாலையை அணிந்த மார்பமும் அப்பலியை ஏற்று உண்ணுமோ கூறுக.

விளக்கம் :—முருகு - முருகக்கடவுள் அயர்தல் - வழிபடுதல். முருகயர்ந்து வந்த எனக் கண்ணழித்து வழிமுறை வழிமுறை முருகனை வழிபட்டு வந்தமையானே என முது வாய்த்தற்கு ஏதுவாக்கினுமாம். ஈண்டு முதுவாய் வேலன் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. முதுவாய் - அறிவு வாய்த்தலையுடைய; முது - அறிவு. இஃதிப் பொருட்டாதலை. "முனிவிகந்திருந்த முதுவாய் இரவல." (சிறு) எனவரும் சிறுபாணாற்றுப் படையில் நச்சினார்க்கினியர் உரையாணும் உணர்க. சினவல் - சினத்தல். ஓம்புதல் - வாராமற் காத்தல் என்க. ஓம்புமதி : மதி, முன்னிலை அசை. வினவுவது - வினவற்பாலதொன்று. மடை-தெய்வத்திற்கிடும் சோற்றுப்பலி. அது பன்னிறமுடைத்தாகலின் 'பல்வேறு உருவின் மடை' என்றுள். சில்அவிழ் - சிலவாகிய சோறு. சிறுமறி எனறது, அருளின்றித் தகாது செய்தனை என்பதுபட நின்றது. வெறியாடுங்கால் மறிக் குருதி தோய்ந்த மண்ணை நோயுற்ற மகளிர் நுதலினீவுதல் வழக்கம். இதனை,

"வாணுதலின், மன்றி லரிந்த மறியின் குருதியின் மண்ணும்அள்ளிச்
சென்றொரு வேலர்கை தீண்ட என் செய்தது தீவினையே."

(அம்பிகா-உசுஎ)

எனப் பிறர் கூறுமாற்றானும் உணர்க.

சிலம்பன் என்றது, குறிஞ்சிநிலத் தலைவன் என்னுந்துணையாய் நின்றது.

இதனால், தலைவி நோய்க்குக் காரணம் ஒரு தலைவன் மார்பேயாம்; தெய்வமன்று என்பதைச் செவிலிக்குக் குறிப்பான் உணர்த்தப்பட்டமை உணர்க.

பாட்டு - ஊசூஉ : தோழி கூற்று

துறை :—பிரிவுணர்த்தப்பட்ட தோழி கிழவற்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் பிரிந்து செல்லக்கருதிய தன் கருத்தைத் தோழிக்குணர்த்த, அவள் 'நீ பிரிதல் மிகவும் இன்னாமையைத் தருவது' என்று செலவழுங்குவித்தது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'பெருமானே! இன்னாதாகிய அரிய பாலைநிலத்திலே இனிய துணையைப் பிரிந்து செல்லுதல் நினக்கு இனியதாமோ?' என்று கூறுகின்றாள்.

ஊசூஉ. கண்ணி மருப்பின் அண்ணல்நல் லேறு
செங்கோற் பதலின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் வரையா நோக்கிவெய் துற்றுப்
புல்லரை உகாஅய் வரிநிழல் வதியும்
இன்ன அருஞ்சுரம் இறத்தல்
இனிதோ பெரும இன்றுணைப் பிரிந்தே.

—செல்லூர்க் கொற்றனார்.

(இ - ள்.) பெரும - பெருமானே, இன் துணைப் பிரிந்து - இனிய காதலியைப பிரிந்து, கண்ணி மருப்பின் அண்ணல் நல் ஏறு - கண்ணி போன்று வளைந்த கொம்பினையுடைய தலைமையையுடைய நல்ல எருது, செங்கோல் பதலின் வார் குரல் கறிக்கும் - சிவந்த தண்டையுடைய அறுகம்புல்லின் நீண்ட கதிரை மேயா நின்ற, மடக்கண் வரை ஆ நோக்கி - மடப்பமுடைய மலை ஆவினைக்கண்டு, வெய்துற்று - பெருமூச்சுவிட்டு, புல்அரை உகாஅய் வரிநிழல் வதியும் - புற்கென்ற அடியினையுடைய உகாய் மரத்தினது நிரம்பா நிழலிலே தங்குதற்குக் காரணமான, இன்ன அருஞ்சுரம் இறத்தல் - துன்பமுடைய கடத்தற்கரிய சுரத்தைக் கடந்து போதல், இனிதோ - நினக்கு இனியதாகுமோ?

விளக்கம். —கண்ணி - எற்றின் வளைந்த கொம்பிற்கு உவமை. கண்ணி - குறவர்கள் விலங்குபடுக்கும் ஒருவகைக் கருவி. பதவு-அறுகம் புல். செங்கோல் - சிவந்த தண்டு. வார் குரல் - நீண்ட கதிர். கறித்தல்-கடித்துத்தின்னல். உகாய் - ஒருவகை மரம். நீரின்மையால் திரங்கிய அடியை உடைமையின் 'புல்அரை' என்றாள்.

இனிக் கண்ணி மருப்பின் அண்ணல் நல்லேறு என்றது, முல்லை நிலத்துக் கோவலரானே மாலை சூட்டிவிடப்பட்ட நல்ல காளை பாலை நிலத்தே சென்றதாக, ஆண்டு யாண்டும் புல்காணப் பெறாது ஓரிடத்தே மரையாவானே மேயப்படும் அறுகம்புல்லைக்கண்டு அவ்வாவிற்கஞ்சி ஆண்டுச் செல்லாது உகாய் நிழலிலே வதியும் எனினுமாம். ஏற்றையும் மலையெருதென்பாருமுளர். மலையெருது மரையானைக்கண்டு வெய்

துற்றகன்றதென்றல் பொருந்தாமை உணர்க. இதனுல் இன்றுணை யோடு வதிந்த நீ யினர் இருக்கையாகிய பாலையிற் சேறல் இன்னுதாம் என்று உள்ளுறை தோற்றியுணர்த்தப்பட்டமை நினைக.

வரிநிழல், இலையின்மையானே கொம்புகளின் உருவம் படிந்த கோடுகோடான நிரம்பாநிழல் என்க. இதனுனும் பாலைச் செலவின் இன்னுமைக்கோரேதுணர்த்தியவாருயிற்று.

பாட்டு – நகூசு : இற்பரத்தை கூற்று

துறை :—வேறொரு பரத்தையானவள் தன்னைப் புறங் கூறினளெனக் கேட்ட இற்பரத்தை, அவட்குப் பாங்காயினர் கேட்பக் கூறியது. அஃதாவது, சேரிப்பரத்தை தன்னைப் புறங் கூறினுள் எனத் தனக்குப் பாங்காயினர் கூறக்கேட்ட இற் பரத்தை, அச் சேரிப் பரத்தைக்குப் பாங்காயினர் உளராய வழி, அவர் கேட்பத், 'தலைவன் தன்பாற் கழிபெருங் காமமுடையான்' என்று கூறியது.

இதன்கண், சேரிப்பரத்தையின் பாங்காயினர் கேட்ப இற் பரத்தை, 'ஊரன் தகுவி புறங் கூறுமென்ப; தலைவன் என்னை விரும்புதற்குரிய நாளும் வந்தன; இனித் தலைவன் என்னையே பெரிதும் விரும்புவான்' என்கின்றுள்.

நகூசு. அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊரன்
பொற்கோல் அவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறும் என்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன அவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே.

—ஔவையார்.

(இ - ள்.) அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய் - பிணங்கிய கொடியையுடைய பிரம்பினை யொத்த வரிகள் பொருந்திய முதுகையுடைய நீர்நாய், நாள் இரை வாளை பெறூஉம் ஊரன் - நாட்காலையுணவாக வாளைமீனைப் பெறுதற்கு இடமான ஊரினையுடைய தலைவனுடைய, பொன் கோல் அவிர் தொடி தன்கெழு தகுவி - பொன்னுற் செயயப்பட்ட திரட்சியையும் விளக்கத்தையும் உடைய தனக்குத்தானே பொருந்திய தகுதியையுடைய பரத்தை, என் புறங்கூறும் என்ப - என்னைப்

புறங் கூறுகின்றாள் என்று கூறுகின்றனர், தெற்றென - அவள் கூற்றுப் பொய்யாதல் யாவர்க்கும் விளங்கும்படி, வணங்கு இறைப் பணைத்தோள் எல்வளை மகளிர் - வளைந்த முன் கை யினையும் மூங்கில் ஒத்த தோள்களையும் ஒளியுடைய வளையல் யும் உடைய மகளிர்களுக்குரிய, துணங்கை நாளும் வந்தன - துணங்கைக் கூத்தாடுதற்குரிய விழாநாட்களும் வாராகின்றன, அவ்வரைக் கண்பொர-அப்பொழுது ஒருவர் கண்ணோடு ஒருவர் கண் மாறுபடும்படி, மற்றதன்கண் அவர் மணங்கொளற்கு இவரும் மள்ளர் போர் - அக்கூத்தினிடத்தே அம்மகளிரினது மணத்தை விரும்பிக் கொள்ளற்பொருட்டு மறவருடைய விளை யாட்டுப் போரும் வருவதாம்.

விளக்கம் :—அரில் - பிணக்கம். பிரம்பங்கொடிகள் ஒன்றோ டொன்று பின்னிக்கிடக்கும் இயல்புடையனவாதல் பற்றி 'அரிற்பவர்ப் பிரம்பு' என்றாள். பவர் - கொடி. பிரம்பங்கொடியின் மேற்புறம் நீர் நாயின் முதுகிற்கு உவமை என்க. இனிப் பிரப்பங்கூற்றிலுறையும் நீர்நாய் எனினுமாம். "நீர்நாய், முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறி யும்" (அகம் - கூ.) என்பவாகலான். வரிப்புறம் - கோடுகளையுடைய முதுகு.

நீர்நாய் - நீரின்கண் வாழும் ஒருவகை நாய். வாளை - ஒருவகை மீன் நீர்நாய் தன் விருப்பப்படியே சென்று வாளையை நாளிரையாகப் பெறுதல் போன்று தலைவன் தன் விருப்ப மிகுதியாலேயே என்பால் உறைகின்றனன்றி யான் அவனை மடக்கிக்கொண்டேன் அல்லேன் என்பது இதன்கண் உள்ளுறையாகக் காண்க. வாளை, மீன்களிற் சிறந்தது போன்று யான் பரத்தையரில் மிக்கேன் என்பது குறிப்பு. சேரிப்பரத்தை, இற்பரத்தை தலைவனைப் புறம்போகாது மடக்கித் தன் வயத்தில் வைத்துக்கொண்டனள் என்றே புறங்கூறினள் ஆகலின், யான் மடக்கிக்கொண்டேன் அல்லேன், அவனே என்னைப் பரதத்தையரி னும் என்னையே பெரிதும் விரும்புகின்றான் என்னும் வாயிலாய்த் தன் னைப் புறங்கூறியவள் சிறப்பிலாள் என்று இகழ்ந்தவாறிது என்க.

இனி, தலைவன் என்னைப் பரத்தையரினும் என்னையே விரும்பு வானுதலை அண்மையில் நிகழவிருக்கும் விழாவில் ஆடும் துணங்கைக் கூத்தின்கண் அவன் விரும்பி எனக்கே தலைக்கை தருவானுதலையும் அவள் கண்கூடாகக்கண்டு தெளியலாம் என்பாள், 'தெற்றென மகளிர் துணங்கை நாளும் வந்தன' என்றாள்.

தெற்றென - இவ்வுண்மை தெளியும்படி. அவ்வரை - அப் பொழுது. மகளிர் துணங்கையாடுங்கால் மள்ளர் விளையாட்டுப் போர் நிகழ்த்துதல் மரபு. இதனை "மள்ளர் குழீஇய விழவி னானும், மகளிர் தழீஇய துணங்கை யானும், யாண்டுங் காணேன் மாண்டக் கோனை" என இந்நூல் (நக) ஆம் செய்யுளிற் கூறப்படுதலானும்,

"தையிய மகளிர்தம் ஆயமோடமர்த் தாடும்
வையைவார் உயரெக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்"

(கலி - உஎ.)

எனவரும் கலியானும் உணர்க.

பாட்டு - நகூறு : தோழி கூற்று

துறை :—'யான் வரையுந் துணையும் ஆற்றவல்லளோ?' என்று வினைய கிழவற்குத் தோழி சொல்லியது. அஃதாவது, வரைவிடை வைததைப் பிரியக் கருதுமதலைவன், 'யான் வந்து வரையுமளவும் ஆற்றுவளோ ?' என்று தோழியை வினவினஞக அவள், தலைவி ஆற்றுள் என்பதுபடச் சொல்லி வரைவு கடாயது. (இப்பிரிவு பொருள்வயிற் பிரிவன்று)

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'தலைவியினது வளைகள் நெகிழ்ந்தன ; கண்கள் துளி வீழ்த்தமாநின்றன ; ஆதலால் இனி நீ வரைவுநீட்டித்தலை அவள் பொறுள் காண்' என்று அறிவுறுத்துகின்றுள்.

நகூறு. கோடீர் இலங்குவளை நெகிழ நாளும்
பாடில கலிழ்ந்து பனியா னுவே
துன்னரும் நெடுவரைத் ததும்பிய அருவி
தண்ணென் முரசின் இமிழிசை காட்டும்
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்கல் நாடநீ நயந்தோள் கண்ணே.

—மதுரை நல்வெள்ளியார்.

(இ - ள்.) தன் அருமை நெடு வரைத் ததும்பிய அருவி - கிட்டுதற்கரிய நெடிய மலைப்பக்கத்திலே ஒலித்த அருவி, தண் என் முரசின் இமிழ் இசை காட்டும் - தண்ணென்ற ஒலியையுடைய முரசினைப்போன்று ஒலிக்கின்ற இசையினைத் தோற்றுவிக்கின்ற, மருங்கின் கொண்ட பலவின் - பக்கத்திற் கொண்டுள்ள பலாமரங்களையுடைய, பெருங்கல் நாட - பெரிய மலைகளையுடைய நாட்டிற்குத் தலைவனே, நீ நயந்தோள் கண் - நின்னால் விரும்பப்பட்ட தலைவியினது கண்கள், கோடு ஈர் இலங்கு வளை நெகிழ - சங்கை அரிந்தியற்றிய விளங்குகின்ற வளையல்கள் கழலும்படி, நாளும் பாடு இல கலிழ்ந்து பனி ஆனை - நாள் தோறும் துயிலுதலிலவாய் அழுத நீர்த்துளிகள் நீங்காவாயின காண்.

விளக்கம் :—கோடு - சங்கு. ஈர்தல் - அரிதல். துன்புற்று அழுதல் உடல் மெலிந்து வளை நெகிழ ஏதுவாகலான் வளைநெகிழக் கண் பனி யானை என்றுள். ஆனை - அமையமாட்டா. நாளும் நின்னைக் காணும்பொழுதினும் காணுப்பொழுதே பெரிதாகலான், 'நாளும் பாடில' என்றுள். ஒருநாளும் துயிலுதலின்றி என்றவாறு. களவுக் காலத்தே தலைவன் வந்த காலையும், வாராக்காலையும் ஆகிய எப்பொழுதும் தலைவியின் கண்கள் துயிலாவாதலை,

"வாராக்கால் துஞ்சா வரில்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்" (குறள் - ககஎக.)

எனவரும் திருக்குறளானும் உணர்க.

கலிழ்ந்து - அழுது. ததும்புதல் - ஒலித்தல். "ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப" (ககக.) எனவரும் புறநானூற்றினும் அஃதிப் பொருட்டாதலுணர்க. தண்ணென் என்பது ஒலிக்குறிப்பு. அஃதாவது, மந்தவிசை என்க. என்னை? "தாழ்குரற் றண்ணுமை" எனவரும் சிலப்பதிகார அடிக்கு அடியார்க்கு நல்லார் "மந்த சுரத்தினையுடைய தண்ணுமை" என உரை கூறலானும், தண்ணென்னும் ஓசையுடைமை பற்றியே அவ்விசைக் கருவி தண்ணுமை எனப்படுதலானும் என்க.

அருவி இயிழிசை காட்டும் தன்மருங்கே பலவினையுடைய பெருங் கல் என்றது, நின் தண்ணளி காட்டி இனிய தலைவியை நின் மருங்கே வரைவினற் கொள்க என்னும் உள்ளுறை தோன்ற நின்றதென்க.

நீ இடையிடையே உடனுறையப் பெறும் இப்பொழுதே இங்கிலை யினள் பிரியின் ஆற்றுள் காண் என்பது குறிப்பெசசம்.

பாட்டு - ஈசுசு : தோழி கூற்று

துறை :—காவல் மிகுதிக்கண்வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு 'இவ்வேறுபாடு எற்றினையது?' என்று செவிலி வினவத் தோழி கூறியது. அஃதாவது, இற்செறிக்கப் பட்ட வழி வேறுபட்ட தலைவியைக்கண்ட செவிலி, 'இவள் இங் ஙனம் மெலிவானேன்?' என்று தோழியை வினவ, அவள் அறத் தொடு நின்றது.

இதன்கண், தோழி செவிலியை நோக்கி, 'இவள் பண் டொருநாள் ஆழ்ந்த சுனையின்கண் மலர்ந்திருந்த நீலப்பூவை நோக்கி அதனைப் பெறமாட்டாமையானே அழுவாள் ஆயினள்; ஆண்டுவந்தான் ஒருவன், அப்பூவைப் பறித்துநல்கினன்; அவன் சால்புடைமை நம்மால் அளந்தறியற்பாலதன்று; இங் ஙிகழ்ச்சி பாலின்பாற் பட்டதாகல் வேண்டும்', என்று கூறு கின்றாள்.

ஈசுசு. பால்வரைந் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வேறியாள் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீலம்நோக்கி உள்ளகை
பழுத கண்ண ளாகிப்
பழுதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

—பேரிசாத்தனார்.

(இ - ள்.) இ ஆய் இழை - இவ் வாராய்ந்த அணிகலன் களையுடைய தலைவி, பைங்கண் மாச் சுனைப் பல் பிணி அவிழ்ந்த வள் இதழ் நீலம் நோக்கி - பசிய இடத்தையுடைய பெரிய சுனை யினகத்தே பலவாகிய கட்டுகள் அவிழப் பெற்ற பெரிய இதழ் களையுடைய நீல மலரையே பார்த்து, உள் அகைபு அழுத கண் ணள் ஆகி - நெஞ்சினுள்ளே வருத்தங் கொண்டு அழாநின்ற கண்ணையுடையளாகி, வெறியாள் கூறவும் அமையாள் - வெறி யாடும் மகள இந்நோய் முருகனலாயது என்று கூறவும் அக் கூற்றிலே பொருந்தாதவளாய், அதன் தலைத் துணிவு பழுதன்று - அம்மலரிடத்தே துணிந்ததும் குற்றம் அன்று, பால்வரைந்து அமைத்தல் அல்லது - ஊழாலே வரையறை செய்து இங்ஙனம் பொருத்தப் படுவதல்லது, அவர் வயின் - அப்பூவைத் தந்த அத்தலைவரிடத்தமைந்த, சால்பு அளந்து அறிதற்கு யாம் யார் - தகுதியை அளந்து அறிதற்கு யாம் எத்தகுதியையுடையேம்.

விளக்கம் :— அப்பூத் தரும்படி தகுதியுடைய தலைவன் ஒருவனை ஊழே கூட்டிற்று என்பாள், 'இது பால்வரைந்து அமைகுது' என் றாள். தலைவனும் அளக்கலாகாச் சால்புடையான் என்பாள், 'அளந்தறி தற்கு யாம்யார்' என்றாள்.

அதன் தலை - அம் மலர்பெறுதலின் கண்ணே, துணிவு என்றது ஏதிலான்பால் அதனைக் கொள்ளத் துணிந்ததனை; அத்துணிவும் பால் தந்தது என்றபடி. பால் இவட்குத் தக்கான் ஒருவனையே கூட்டிற்று என்பாள், துணிவும் பழுதின்று என்றாள். துணிவும் என்பதன்கண் உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.

பாட்டு - ஈகூஎ : தோழி கூற்று

துறை :—(க) வரைவுணர்த்திய தோழி தலைமகட்குக் கழி யுவகை மீதூராமை உணர்த்தியது. அஃதாவது, தலைவன் வரைந்துகொள்வன் என்ற செய்தியைத் தலைவிக்குணர்த்திய தோழி, அச்செய்தியால் ஆற்றொணாப் பேருவகை கொள்ளா மைப் பொருட்டுப் பின்னும் அத் தலைவி ஐயுறும் வண்ணம் கூறி யது. (கழிபேருவகையும் அறிவினை மயக்குதலான் அஃதெய் தாவாறு கூறினள் என்க.)

(உ) வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றும் வகையால் ஆற்றுவித்ததூஉமாம்.

இதன்கண், தோழி தலைவியைநோக்கி, 'ஒருகால் யான் நினக்குக் கூறியவாறு, கொடியோர் நினக்கு அளிசெய்யாராய பொழுதும், நின் தோள்கள் அழகுறும் பொருட்டு அவரது மண்ணுறு மணியில் தோன்றும் மலையை நோக்கியேனும் ஆற்றி யிருப்பாயாக' என்கின்றாள்.

நூசுஎ. கொடியோர் நல்கா ராயினும் யாழநின்
தொடிவிளங் கிறைய தோள்கவின் பெறீஇயர்
உவக்காண் தோழி அவ்வந் திசினே
தோய்யல் மாமழை தோடங்கலின் அவர்நாட்டுப்
பூச லாயம் புகன்றிழி அருவியின்
மண்ணுறு மணியின் தோன்றும்
தண்ணறுந் துறுகல் ஓங்கிய மலையே.

—மதுரை மருதனிள நாகனர்,

(இ - ள்.) தோழி—, கொடியோர் நல்காராயினும்-கொடியோராகலின் ஒருகால் யான் உணர்த்தியபடி நின்னை வரைந்து கொண்டு தண்ணளி செய்யாதாராய விடத்தும், நின் தொடி விளங்கு இறைய தோள் கவின் பெறீஇயர் - நின்னுடைய வளை பல்கள் விளங்காநின்ற முன்கையை உடையவாகிய தோள்கள் அழகு பெறும் பொருட்டு, உவக்காண் அவ்வந்திசின் - உங்கே அவண் வருவாயாக, அஃதெற்றுக் கெனின், தோய்யல் மாமழை தொடங்கலின் - நெகிழ்ச்சியையுடைய பெரிய மழை பெய்யத் தொடங்கினமையானே, அவர் நாட்டுப் பூசல் ஆயம் புகன்று இழி அருவியின் - நம் தலைவருடைய நாட்டிலுள்ள ஆரவாரத்தையுடைய மகளிர்குழு விரும்பி இறங்குதற்குக் காரணமான அருவியினாலே, தண் நறுந் துறுகல் ஓங்கிய மலை - குளிர்ந்த நறிய குண்டுக்கற்கள் உயர்ந்துள்ள மலை, மண்ணுறு மணியின் தோன்றும் - கழுவப்பட்ட நீலமணிபோலே தோன்றுநிற்கும்.

விளக்கம்:—இதுகாறும் வரைந்து கொள்ளாது கொடுமை செய்தவரே யாகலின் அக் கொடுமையானே இன்னும் வரைவு நீட்டிப்பினும் தான்பாள், 'கொடியோர் நல்காராயினும்,' என்றாள். முன்னர்த் தலைவர் வரைந்து கொள்வர்க்காண் என வரைவுணர்த்தினமை தோன்ற 'நல்காராயினும்' என்றாள். அங்ஙனம் நல்காராயவிடத்தும் என்க. ஐயடம்மையால், நல்குவர்; ஒரோவழி நல்காதவிடத்தும் என்பது பெற்றாம்; நல்குவர் என்று தேற்றமாகத் தலைவி உணர்ந்த வழிக் கழிபேருவகையாற் செயலறவு எய்துவளென்றஞ்சி இங்ஙனம் ஐயுறுமாறு சூழ்ந்தாதும் நுணுக்கம் நினைந்து நினைந்து இன்புறற் பாற்று. கழிபேருவகையாற் கையறவு கொள்ளல் இராமனுடைய வெற்றியை அநுமான் உறக்கேட்ட சீதைநிலையினைக் கம்பர் கூறுமாற்றான் உணர்க; (இராமா-யுத்த.)

உவக்காண் - உங்கே. உவக்காண் ஒட்டிநின்ற இடைச்சொல்; உங்கே என்பது பொருள்.

தோழி தலைவிக்கு ஓரிடத்தைச் சுட்டிப் பின்னர் அவ்வந்திசின் என அழைக்கின்றாள் ஆகலின், உவக்காண் தோழி அவ்வந்திசின்

அங்கே வருவாயாக. அவ்விடத்தினின்று நோக்கின் மலை தோன்றும் என இடம் சுட்டிக் கூறியவாறு.

அருவி பாய்தலானே மண்ணுறு மணிபோற் றோன்றும் என்க. அவர் நாட்டு மகளிர் இழிதரும் அருவி மலை என்றலின் அவர்நாட்டு மலை என்பது பெற்றாம். மலையைக் காண்டல் ஆற்றியிருத்தற்கு ஏது வாய்த் தோள் கவினழியாமைப் பொருட்டென்க.

இனி இரண்டாவது துறைக்கு இது பொருந்துமாறும் உய்த்துணர்க.

பாட்டு - நகூஅ : தலைவி கூற்று

துறை :—வரைவுமலிந்த தோழிக்குக் கிழத்தி உரைத்தது; அஃதாவது, அண்மையில் வரைவுகடாமை என்று தலைவிக்குத் தோழி கூறியபொழுது, அவள் பேருவகையால், 'இனி, யான் இடையறாது இனிது வாழ்வேன்,' எனபது படக்கூறியது.

இதன்கண் தலைவி தோழியை நோக்கி, 'இதுகாறும் நாம் நம் மாமைநிற மழுங்கி வெய்துற்ற விடத்தும், அந் நிலையைப் பிறர்க்குக் கூறவும வகையினறிப் பெரிதும் வருந்தினேம்; இனி நீர்நிறைந்த நீர்நிலையின் மருங்குள்ள மரம்போன்று தலைவ னுடே இடையீடின்றி உடனுறைந்து இன்புறு நிற்பேம்' என்று கூறுகின்றாள்.

நகூஅ. மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்னுண் நீத்த பழிதீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது செப்பிற்
சொல்ல கிற்ற மெல்லிய லோயே
சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போலத்
தீதில் நிலைமை முயங்குகம் பலவே.

—நக்கீரனார்.

(இ - ள்.) மெல் இயலோயே - மெல்லிய தன்மையுடைய தோழியே ! மெல் இயலோயே—, நல்நாள் நீத்த பழி தீர் மாமை- நன்றாகிய தொருநாளிலே நம்மை அகன்று போன குற்றமற்ற மாமையினது இழப்பினை,வன்பின் ஆற்றுதல் அல்லது - நமது வன்மையானே பொறுத்திருத்தல் அல்லாமல், மெல் இயலோயே—, செப்பில் சொல்ல கிற்றும் - அத்துன்பத்தை மொழிகளானே இதுகாறும் பிறர்க்கு எடுத்துக் கூறும் வன்மை இலேமாயினேம், சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே-

சிற்றினமாக்களும் சான்றோரும் விரவி வாழாகின்ற இந்த ஊரினிடத்தே, நாள் இடைப்படாஅ நளி நீர் நீத்தத் திண் கரைப் பெருமரம் போல - ஒரு நாளேனும் இடையீடுபடாத செறிந்த நீரையுடைய வெள்ளத்தினது திண்ணிய கரையின்கண் உள்ள பெரிய மரம் போன்று, தீது இல் நிலைமை பல முயங்குகம் - இனி நம் தலைவனைத் தீதற்ற நன்னிலையையுடையேமாய்ப் பல காலும் தழுவி மகிழ்வோமாக.

விளக்கம் :—நற்செய்தியை உணர்த்திய தோழியின்பாலுண்டாய மகிழ்ச்சியாலே மும்முறையும் விளித்தாள். அவள் கூறிய சொற்கள் மிக இனிமையாயிருந்தமை பற்றி, 'மெல்லியலோய்' என்றாள். நன்னாள் என்றது பால்வரை தெய்வம் தன்னைத் தலைவனோடே கூட்டுவித்த இயற்கைமணம் நிகழ்ந்த நாளை என்க. அன்றே தலைவன் பிரிந்த வுடன் தன் மாமையும் கெடலின், 'நன்னாள் நீத்த மாமை' என்றாள். தோழியர் பலரானும் பாராட்டப்பட்ட நல்ல மாமை என்பாள், 'பழிதீர் மாமை' என்றாள். மாமை - கரிய நிறம், அழகெனினுமாம்; மாமையின் இழப்பை என ஒருசொல் வருவித்துக் கூறுக. நிறங்கெட்டு வருந்திய காலத்தும் பிறர்க்குக் கூறவொண்ணாது அகத்தேவைத்து வருந்தினேம் என்றது, நெஞ்சின் துயரை அயலார்க்குக் கூறி அவராலே ஆறுதல் எய்தும் இயல்புபற்றி என்க.

அக் காமநோய் ஆற்றொணாக் கொடுமையுடைத்தாதலை நினைந்து வன்பின் ஆற்றினேம்' என்றாள். வன்பு - வலியுடைமை. பிறர் இங்ஙனம் வருந்துதற் கிரங்காமல் பழிதூற்றுமியல்புடைய மாக்களும் வாழும் ஊர் என்பாள், 'சிறியரும் வாழும் ஊர்' என்றும், தலைவனுக்குத் தன்னை வரைவுநேர்ந்தாரும் உண்மையின், பெரியரும்வாழும் ஊர்'என்றும் கூறினாள். இனி அசிறியோர் சிறுமை புறவும் பெரியோர் மனமகிழவும் யாம் பலமுயங்குவம் என்றவாறு. காளிடைப்படாமல் வந்து நிறையும வெள்ளம் என்றது தலைவனோடே பிரிவின்றி உடனுறைதலானே இடையறாத இன்பத்தை நினைந்து கூறியது என்க. நீத்தம் - வெள்ளம்; இது தலைவன் கண்ணளியைக் கருதிற் றென்க. நிலம்பக வோர் வீழ்த்து நிற்கும் பெருமரத்தைத் தான் தலைவன் பாற் கொண்ட கேண்மை கருதித் தனக்கு உவமித்தாள். தீது இல் நிலைமை என்றது, களவொழுக்கத்தே தலைவன் எதமிக்க இருள்நெறிக் கண் வந்தமை போன்ற தீதில்லாத நிலைமை என்றவாறு. முயக்கத் திற்கு ஏக்கறவுடைமை தோன்றப் 'பல முயங்குகம்' என்றாள்.

பாட்டு - நகூஉ : தோழி கூற்று

துறை :—தோழி கிழத்திக்கு உடன்போக்குணர்த்தியது. அஃதாவது, தலைவனை வரைந்து கொள்ளற்கு வேறு நெறிகாண மையானே தலைவனோடு தலைவியைத் தமர் அறியாது போக்கு

விக்கக் கருதிய தோழி அவ்வுடன்போக்கினைத் தலைவிக்குணர்த்தியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி,'நம்தலைவர் நின்னைத் தம்முடன் அழைத்துச் செல்லுதற்குடம் பட்டார்; இனி யாம் அவரோடே வாகை நெற்றைக் கோடைக்காற்று அலைத்து ஒலிக்கும் பாலைநிலத்தின் கண்ணே செல்வேமாக' என்கின்றாள்.

நகூ. அத்த வாகை அமலை வானேற்
றரியார் சிலம்பி னரிசி யார்ப்பக்
கோடை தூக்குங் கானம்
செல்வாந் தோழி நல்கினர் நமரே.

—குடவாயிற் கீரத்தனார்.

(இ - ள்.) தோழி—, நமர் நல்கினர் - நந்தலைவர் கண்ணளி செய்தனர், அத்த வாகை அமலை வால் நெற்று - அருவழியின் கண் உள்ள வாகையினது ஒலியையுடைய வெள்ளிய வற்றல்களை, அரி ஆர் சிலம்பின் அரிசி யார்ப்ப-உள்ளிடு பரலையுடைய சிலம்பு போன்று அவற்றின் உள்ளீடாகிய விதைகள் ஆரவாரிக்கும்படி, கோடைதூக்கும் கானம்-மேல்காற்றுத் தூக்கி அலைக்கின்ற பாலை நிலத்தின் கண்ணே,செல்வாம்-யாம் தலைவனோடே செல்வேமாக.

விளக்கம்:—நமர் நல்கினர் ஆகலின், யாம் அவரோடே பாலைநிலத்தின்கட் செல்வேமாக என்றாள் என்க. அத்தம் - அருவழி. வாகை நெற்றைக் கோடை தூக்குங் கானம் என்றமையாற் பாலைநிலம் என்பது பெற்றாம். தூக்கும் என்றது அலைக்கும் என்றவாறு. அரி - சிலம்பின் உள்ளீடாகிய பரல். அரிசி என்றது விதையை. தலைவன் தலைவியை அவள் தமர் அறியாவாறு அழைத்துக்கொடு போய்த் தன் மனையின்கண், வரைந்து கோடற்கு உடம்பட்டான் என்பாள், 'நமர் நல்கினர்' என்றாள். இதனால் தலைவியின் தமர் நல்காமையும் குறிப்பாற் பெறப்பட்டது.

நெற்றைக் கோடைதூக்கும் என்றது, யாமும் அவன் கருத்திற்கியைய உடன் செல்ல வேண்டும் என்னும் குறிப்புடைய தென்க.

பாட்டு - நஎ o : பரத்தை கூற்று

துறை :—கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது. அஃதாவது, தலைவனைப் பரத்தை தன்பால் மடக்கிக் கொண்டாள் எனத் தலைவி புறங் கூறுவதாகக் கேள்வியுற்ற பரத்தை, தலைவியின் பாங்காயினர் கேட்கும்படி தலைவி என்னைப் புறங்கூறல் தவறென்பதுபடக் கூறியது.

இதன்கண், 'யாம் தலைவனோடு இருப்பின் இரண்டடலை உடையேமாவேம்; அவனோடே கிடப்பின் வில்லக விரல் போல் ஒன்றிக்கிடப்பேம்; அவன் இல்லிற் கேகினோ ஒருடலே உடையேமாயிருப்பேம்' என்று பரத்தை கூறுகின்றாள்.

நூஎ. பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்குந் தண்டுறை யூரனொடு
இருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவன்
நல்லகஞ் சேரி னொருமருங் கினமே.

—வில்லகவிரலினர்.

(இ - ள்.) பொய்கை ஆம்பல் அணி நிறக் கொழு முகை-பொய்கையின்கண் உள்ள ஆம்பலினது அழகிய நிறத்தையுடைய கொழுவிய அரும்புகளிலே, வண்டு வாய்திறக்கும் - வண்டுகள் இதழைத்திறக்கின்ற, தண் துறை ஊரனொடு - குளிர்ந்த நீர்த் துறைகளையுடைய தலைவனோடே, இருப்பின் இருமருங்கினம்-யாம் இருப்பேமாயின் இரண்டு உடலே உடையேமாவேம், கிடப்பின் - அவனோடே பாயல் கொள்ளுங்கால், வில் அக விரலிற் பொருந்தி-வில்லே அகப்படுத்திய விரல்களைப் போன்று பொருந்திக் கிடந்து, அவன் நல் அகம் சேரின் - அத்தலைவன் தனது நல்ல இல்லத்திற்குப் போய்விடின், ஒருமருங்கினம் - ஒருடலே உடையேமாவேம்.

விளக்கம்:—பொய்கை - இயற்கைநீர்நிலை. அணிநிறக் கொழு முகை - அழகிய நிறத்தையுடைய கொழுத்த அரும்பென்க. பொய்கையின்கண் தோன்றிய அரும்பினது நிறத்தானும் செழிப்பானும் கவர்ச்சியுற்ற வண்டு வலிந்து சென்று அதன் வாயினைக் கிண்டித் திறத்தல் போன்று, தலைவன் எமது அணிநிறமிக்க பருவக் கவர்ச்சியானே எம்பால் வலிந்து வந்து உறைகின்றான். ஆதலானே யாம் குற்றமுடையேம் அல்லேம் என்று உள்ளுறைகாண்க. பொய்கை என்றது தங்குடிக்கோர் உயர்வு கற்பித்தபடியாம். என்னை? கரை முதலியன மாந்தரானே இடப்பட்ட குளம் போலாது இயற்கையானே அமைந்த பொய்கை என்றது, வரைதன் முதலிய செயற்கையின்றி இயற்கையானே மனம் விரும்பியபடி ஒழுகும் குடியினேம் என்னும் உள்ளுறைக்கு உவமமாக நிற்றலின் என்க.

இனி அணிநிறக் கொழுமுகை என்றதும், முகை தனது நிறப் பெருமையானும் செழிப்பானும் வண்டைத் தன் வயமாக்குமாறு போல, யாமும் தலைவியினுங் காட்டில் அணிநிறமும் உருவச் செழிப்பும் உடையேமாகலின் அவன் 'எம்பால் உறைபவனாகின்றான் எனத் தலைவிக்கோர் இழுக்குக் கூறல் உள்ளுறையாகல் உணர்க.

மருங்கு: ஈண்டு உடல் என்னும் பொருட்டாய் நின்றது "மருங்குடையார்" என்னும் திருக்குறளில், பக்கத்தாராகிய சுற்றத்தாரை

உணர்த்தினாற் போன்று. உயிரை நோக்க உடலும் அயலதாகலான் ஆகுபெயரால் உடலைக் குறித்ததென்க. இனி இடையின் பெயர் உடலுக்கு ஆயிற்றெனினுமாம்.

கிடப்பின் என்றது, இடக்கரடக்கல். வில் அகப்படப் பற்றிய விரல்கள் இடையீடின்றிச் செறிந்திருத்தலின், இடையீடில்லாப் புணர்ச்சியையுடைய உடல்கட்கு உவமையாயின.

அவன் நல்லகம் சேரின் ஒருமருங்கினம் என்றது, அவனை எம்பால் வலைத்துக் கொள்ளவும் யாம் முயலாது தனித்திருக்கவும் வல்லேம் எனச் செருக்கிக் கூறியவாறு. இது, தலைவன் எம்மகம் சேரினே தலைவி வீணை எம்மைப் புறங் கூறுவள் யாம் அவள் போலலேம் என்றவாறு.

முயக்கத்திற்கு வில்லக விரலினை உவமை கண்டு கூறிய அருமை கருதி இச்செய்யுள்பாடிய புலவர் 'வில்லக விரலினர்' என வழங்கப் பட்டனர்.

பாட்டு - நுவல : தலைவி கூற்று

துறை :—வரைவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரையாமலே பிரிந்தானை ஆற்றாது வருந்திய தலைவிக்கு,'நீ ஆற்றுதலே அறிவுடைமையாம்' எனத், தோழி வற்புறுத்தியபொழுது, தலைவி அவட்குக் காம நோயின் கொடுமை கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி,'தலைவன் பிரிந்தமையானே வளைநெகிழ்தலையும் பசப்பூர்தலையும் யானும் விரும்புகின்றிலேன்; அக் காமநோயோ என்வரைத்தன்றி என்னை நலிகின்றது; யான் என் செய்வேன்' என்று கூறுகின்றாள்.

நுவல. கைவளை நெகிழ்தலும் மெய்பசப் பூர்தலும்
மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கு நாடனொடு
மருவேன் தோழியது காமமோ பெரிதே.

—உறையூர் முதுகூற்றனார்.

(இ - ள்.) மை படு சிலம்பின் ஐவனம் வித்தி அருவியின் விளைக்கும் நாடனொடு - முகில்கள் படிகின்ற மலைச்சாரலின் கண்ணே மலைநெல்லை விதைத்து மலையருவியானே விளைவிக்கும் நாட்டையுடைய தலைவனுல, கைவளை நெகிழ்தலும் மெய் பசப்பு ஊர்தலும் மருவேன் - எனது கையின்கண் வளைகள் கழலுதலையும் உடலின்கட் பசப்பூர்தலையும்பெறேன், அது காமம் - அங்ஙனம் மருவச் செய்தது காமநோய், ஒ பெரிது அது-என் வரைத்தன்றிச் சாலவும் பெரிதே காண்.

விளக்கம்:—மை - முகில். சிலம்பு - மலைப்பக்கம். ஐவனம் - மலை நெல். இங்ஙனம் புறத்தார் அறிந்து அலர்தூற்ற ஏதுவாக வேளொகிழ்தலும் பசப்பூர்தலும் எனக்கும் உடம்பாடன் றென்பாள், 'நெகிழ்தலும் ஊர்தலும் மருவேன்' என்றாள். 'பின் இவ்வேறுபாடு எற்றாலையது?' என்ற வினாவிற்கு விடையாக, 'அது காமம்' என்றாள். 'அக்காமநோய் நின்னால் ஆற்றப்படாதோ?' என்னும் வினாவிற்கு விடையாக, 'ஒ பெரிது' என்றாள். ஓ: வியப்பிடைச் சொல். பெரிது என்றது, என் வரைத் தன்றி மிக்கது என்றவாறு.

"மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்." (குறள் - கஉடுகூ.)

"நிறையுடையேன் என்பேன்மன் யாரே என்காமம்
மறையிறந்து மன்று படும்." (குறள் - கஉடுகூ.)

எனவரும் திருக்குறள்கள் ஈண்டு நினையற்பாலன.

சிலம்பில் ஐவனம் வித்தி அருவியின் வீழ்க்கு நாடன் என்றது, நம்பாற் காதல்வித்தி அதனை வீளவிக்கப் பொருள்நீர் கொணரப் பிரிந்த தலைவனும் நல்லனே என்பதுபட நின்றது.

பாட்டு - கஎஉ : தோழி கூற்று

துறை :—இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. அஃதாவது, வரைதற் கருத்தின்றி இரவுக்குறிக்கண் வந்து சிறைப்புறத்தே நின்ற தலைவனுக்கு ஊரலர் மிகுதி உணர்த்தி வரைவுகடாவ எண்ணிய தோழி, அவன் வரவறியாதாள் போன்று அவன் கேட்பத தலைவிக்குக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'தலைவன் நம்பால் வந்து மீண்ட சுவடு மறைதற்கு முன்னரே இவ்வூரில் அலர் எழுவதாயிற்று' என்கின்றாள்.

கஎஉ. பனைத்தலைக், கருக்குடை நெடுமடல் குருத்தோடு மாயக்
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய வணங்குங் கானல்
ஆழிதலை வீசிய வயிர்ச்சேற் றருவிக்
கூழைபெய் எக்கர்க் குழீஇய பதுக்கை
புலர்பதங் கொள்ளா வளவை
அலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

—விற்றூற்று மூதெயினனார்.

(இ - ள்.) பனைத் தலைக் கருக்குடை நெடுமடல் குருத் தொடு மாய - பனைமரத்தினது உச்சியிலுள்ள கருக்கினையுடைய

நெடிய மடல்கள் குருத்தோடே மறைந்து போம்படி, கடு வளி தொகுத்த நெடு வெண் குப்பை - கடிய காற்றுத் தொகுத்து வைத்த நெடிய வெள்ளிய மணற்குவியல்களாகிய, கணங் கொள் சிமைய அணங்குங் கானல் - கூட்டமான குவடுகளையுடைய வருத்தத்தைச் செய்யும் கடற்கரையிலே, ஆழி தலை வீசிய அயிர் சேற்று அருவி - கடல் எறிந்த கருமணலாகிய சேற்றை யுடைய அருவியால், கூழை பெய் எக்கர்க் குழீஇய பதுக்கை - கூந்தலிடத்தே பெய்தற்குரிய எக்கராகக் குவியப்பெற்ற குவியல் கள், புலர்பதம் கொள்ளா அளவை - உலர்ந்த செவ்வியை எய்துதற்கு முன்னரே, இவ் அழுங்கல் ஊர் அலர் எழுந்தன்று - இந்த ஆரவாரத்தையுடைய ஊரின்கண் பழிமொழி எழுந்தது.

விளக்கம் :—கடற்கரையிலே காற்றாலே குவிக்கப்பட்ட மணல் மேடுகள் பூமரங்களை மூடி மறைத்துவிடுவதனை இன்றுங் காணலாம். மாய்தல் - மறைதல். பூமரங்கள் எஞ்சாது முழுவதும் மறைந்தன என்பாள், 'குருத்தோடு மாய' என்றாள். கடுவளி - விரைவு மிக்க காற்று. குப்பையாகிய சிமையம் என்க. தனித்துறைவோர்க்கு நோய் செய்தலின், 'அணங்குங் கானல்' என்க. தலைவனைப் பெறாமல் தலைவி வருந்தியிருக்கும் இடமாதல் நினைந்து 'அணங்கும் கானல்' என்றாள்.

அயிர் - கருமணல், எக்கரின் சேற்றை மகளிர் கூந்தற்கிடுதல் மரபாகலின், 'கூழை பெய் எக்கர்' என்றாள். எக்கர் - இடுமணல். ஆழி - கடல். பதுக்கை - குவியல். எக்கர்க்குவியல் புலர்வதன் முன் பென்றது தலைவன் வந்து போன அடிச்சுவடுடைய ஈர்மணல் உலர்ந்து மாறுதற்கு முன்னரே என்றவாறு. எனவே, அச் சுவடுண்மையே அலர்க்கு எதுவாதல் உணர்த்தினளாயிற்று.

ஈர்மணலில் அடிச்சுவடு நன்கு விளங்கித்தோன்றலும் உலர்ந்த மணலில் அங்ஙனம் விளங்காமையும் இயல்பாதலுணர்க.

புலர்பதம் - உலர்ந்த செவ்வி. எழுந்தன்று - எழுந்தது. ஆதலாற் றலைவியை வரைந்து கோடலே நன்றென்பது குறிப்பெச்சம்.

பாட்டு - ௩எ௩ : தோழி கூற்று

துறை :—அலர் மிக்கவழித் தலைமகட்குத் தோழி சொல் லியது; அஃதாவது, ஊரவர் அலர் தூற்றியவழி ஆற்றாளாய தலைவியைத் தோழி தலைவன் நட்பின் பெருமையை எடுத்துக் காட்டி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நாம் தலைவனோடே கொண்ட தொடர்பு நிலம் புடைபெயரினும், நீருந் தீயும் தத்தம் இயல்பு திரியினும், கடற்கெல்லை தோன்றினும், பிறழாத தொன்றும். அங்ஙனமாக வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை

யானே அதற்குக் கேடு யாதுண்டாம்? நீ கவலாதேகொள்,' என்று ஆற்றுவிக்கின்றாள்.

நெடுநல. நிலம்புடை பெயரினு நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லே தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடெவன் உடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றை
புடைத்தோடு புடைஇப் பூநாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனெ டமைந்தநந் தொடர்பே.

—மதுரைக் கொல்லம் புல்லனார்.

(இ - ள்.) தோழி—, நீடு மயிர்க் கடும் பல் ஊகக் கறை விரல் ஏற்றை - நெடிய மயிரினையும் கடிய பற்களையும் உடைய கருங்குரங்கில கறுப்புநிறம் வாய்ந்த விரல்களையுடைய ஆண் குரங்கு, புடைத் தொடுபு உடைஇப் பூநாறு பலவுக் கனி - பக்கத்திலே தோண்டியமையானே உடைந்து மலர் மணக்கு மாறு போலே மணக்கும் பலாப்பழம், காந்தள் அம் சிறுகுடிக் கமழும் - காந்தளையுடைய அழகிய சிறிய ஊரின்கண்ணே மணங் கமழாநிற்கும், ஓங்கு மலை நாடனெடு அமைந்த நம் தொடர்பு - உயர்ந்த மலைநாட்டையுடைய நந்தலைவனேடே யாம் கொண் டுள்ள நட்பு, வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சி - வெவ்விய வாயையுடைய பெண்டிர் தூற்றும் பழிமொழிக்கு அஞ்சி, நிலம்புடை பெயரினும் - இந்நானிலம் இடமாறினாலும், நீர்தீ பிறழினும் - நீரும் தீயும் தத்தம் இயல்பினின்று திரியினும், இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லே தோன்றினும் - விளங்கு கின்ற அலைகளையுடைய பெரிய கடல் சுருங்கி எல்லே காணப் பட்டாலும், கேடு எவன் உடைத்து - என்ன கெடுதலை உடைத் தாம்.

விளக்கம்:—கௌவை யஞ்சிப் பெயரினும் பிறழினும் எல்லே தோன்றினும் நம்தொடர்பு என்ன கேடுடைத்தென வினைமுடிவு செய்க.

இனி, பெயரினும் பிறழினும் தோன்றினும் கெடாத நம்தொடர்பு கௌவை அஞ்சி என்ன கேடுடைத்தாம் எனக்'கெடாத' என்னும் ஒரு சொல்வருவித்து முடிப்பினும் ஆம்.

ஐம் பெரும்பூதங்களுள் மூன்றுபூதங்கள் கூறப்பட்டமையானே எடுத்தமொழியின் இனஞ் செப்பி ஏனை யிருபூதமும் கொள்க. கொள்ளவே, ஐம் பெரும்பூதக்கூட்டமாகிய உலகமே தன்னிலை கலங் கினும் கலங்காத நட்பு என்றவாறாயிற்று.

புடை பெயர்தல் - இடமாறுதல்; அஃதாவது, நெய்தல் மருதமாய் மருதம் குறிஞ்சியாய் இவ்வாறு தத்தம் நிலைமாறுதல் என்க. நீர் தீ முதலியன என ஏனைப்பூதங்களையும் கொள்க. நீர் முதலியன தண்மை நெகிழ்ச்சி முதலிய தத்தம் இயல்பிற் பிறழினும், பெருங்கடற்கு எல்லை தோன்றினும் என்றது, நீர்வற்றி எல்லை காணப்படும் அளவிற்றாயினும் என்றவாறு.

"ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். (குறள்-கூஅக)

எனவரும் திருக்குறள் ஈண்டு நினைக்கற் பாற்று.

மெய்யன்பு, "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே" என்றோதுப வாகலான் பூதங்கள் திரியுமிடத்தும் திரியாதென அதன் மாண்பு தெரித்தோதப் பட்டது. இத்தகைய நட்பினை எளிய அலர் என்செய்யும்; நீ கவலற்க என்பது குறிப்பு.

குரங்கு தோண்டிய பலாக்கனி சிறுகுடியிண்கண் சென்று கமழும் என்றதன்கண், தலைவனோடே கொண்ட நட்பு ஊரவர் அறிய வெளிப்படுதல் வரைதற் கேதுவாய்ச் சிறக்கும் என உள்ளுறை காண்க.

பாட்டு - நூஎசு : தோழி கூற்று

துறை :—அறத்தொடு நின்றமை தோழி கிழத்திக் குரைத்தது. அஃதாவது, தலைவியின் தமர் வரைவு நேர்ந்தமை உணர்ந்த தலைவி, இஃதெற்றினையது? என்று வியப்பாட்குத் தோழி முன்னர்த் தான் அறத்தொடு நின்றமை கூறியது.

இதன்கண், தமர் வரைவுமலிந்தமை கேட்டுவந்த தலைவிக்குத் தோழி, 'நாம ஒளித்த செய்தியை நம்தந்தையும் தாயும் உணருமாறு வெளிப்படுத்தினேனாகப் பின்னர்த் தலைவன் வரைவு வேண்டி வந்து தமரை இரந்தவழி, அவரும் உடம்பட்டு இது நிகழ்வதாயிற்று' என்று கூறுகின்றாள்.

நூஎசு. எந்தையும் யாயும்உணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வேற்பன் தலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே
முடங்கல்இறைய தூங்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணைத் தொடுத்த
கூடினும் மயங்கிய மையல் லூரே.

—உறையூர்ப் பல்காயனர்

(இ - ள்.) தோழி—, எந்தையும் யாயும் உணரக் காட்டி - நம்தந்தையும் தாயும் உணரும்படி அறிவித்து, ஒளித்த செய்தி

வெளிப்படக் கிளந்தபின் - நம்முள் நாம் மறைத்துப் போற்றிய செய்தியை யான் வெளிப்படுத்துக் கூறியபின்னர், மலைகெழு வெற்பன் தலை வந்துஇரப்ப - மலைகள் பொருந்திய நிலத்தை யுடைய நம்தலைவன் தம்பால் வந்து வரைவுவேண்டாநிற்ப, நன்றுபுரி கொள்கையின் - நமரும் நன்மையையே விரும்பிய கோட்பாட்டினாலே, முடங்கல் இறைய தூங்கணங்குரீஇ - வளை வினையுடைய சிறகுடையனவாகிய தூக்கணங்குருவிகள், நீடு இரும் பெண்ணைத் தொடுத்த - நீண்ட கரிய பனைமரத்தின் கண்ணே புனைந்த, கூடினும் மயங்கிய மையல் ஊர் - கூட்டினைப் பார்க்கினும் மயங்கிய அறியாமையையுடைய இவ்வூர், ஒன்றுகின்று - நம்மோடு ஒன்றுவதாயிற்று.

விளக்கம்:—மறைவெளிப்படுத்துங்கால் குறிப்பாகவே கூறவேண்டு தலின் குறிப்பாற் கூறியவிடத்தும் ஐயந்திரிபுகட்கு இடமில்லாதே அறிவித்தேன் என்பாள், 'உணரக் காட்டி' என்றாள். ஒளித்த செய்தி யாவது, தலைவனோடு கற்புக் கடம்பூண்ட களவொழுக்கம். இது தலைவற் கும் உடம்பாடு என்பது தோன்றக், 'கிளந்தபின் வெற்பன் தலைவந் திரப்ப' என்றாள். கிளத்தல் - கூறுதல். வெற்பன் என்றது, தலைவன் என்னும் தன்மையாய் நின்றது. வரைவினை இரப்ப என்க. இரந்ததனால் உண்டாகிய நன்றுபுரி கொள்கை என்க. நன்றுபுரிதல் - வரைவுடம் படுதல். அது சான்றோர் மேற்கோளாகலின் கொள்கை என்றாள்.

இறை - இறகு (சூ. நிகண்டு. கக. றகரவெ-ககை) தூக்கணங் குருவி யின் கூடு ஒருவழிப்படாது பல்லாற்றானும் பின்னப்பட்டிருத்தலானே பல்லாற்றானும் மயங்கி அலர் தூற்றும் ஊர்க்கு உவமையாயிற்று. கூட் டினும்எனற்பாலது, எதுகை நோக்கிக் கூடினும்என நின்றது. மையல்- அறியாமை. மயங்குதற்குக் காரணமான மையல் என்க.

பாட்டு - நகரு: தோழி கூற்று

துறை :—இரவுக் குறிக்கண் சிறைப்புறமாகத் தோழி தலை மகட்குச் சொல்லுவாளாய் இருபொழுதும் மறுத்து வரைவு கடாயது. அஃதாவது, வரைதற்கு முயலாது களவின்பமே விழைந்து இரவுக் குறிக்கண் வந்தொழுகுந் தலைவனுக்குத் தலைவி, புறம்போகாதவாறு தமராலே நன்கு காக்கப்படுதலானே இரு வகைக் குறியிடத்தும் அவளை இனிக் காண்டல் இயலா தென்பதனை உணர்த்தக் கருதிய தோழி அவன் சிறைப்புறத் தாளைத் தலைவிக்குக் கூறுவாள் போன்று அவன் கேட்பக் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை 'நோக்கி, நள்ளிரவினும் காவலர் உறங்காதவராய்த் தொண்டகச் சிறுபறையை முழக்கா நின்றனர்; ஆதலால், இன்று இரவுக்குறிக்கண் தலைவர் வாரா ராயின் நன்றும்' என்று கூறுகின்றாள்.

ஈஎடு. அம்ம வாழி தோழி இன்றவர்
வாரா ராயினே நன்றே சாரற்
சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்
திரவரி வாரின் தொண்டகச் சிறுபறை
பாஅள் யாமத்துங் கறங்கும்
யாமங் காவலர் அவியா மாறே.

.....[1]

(இ - ள்.) அம்ம தோழி - தோழி கேட்பாயாக!, சாரல் சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து - மலைப்பக்கத்தே சிறிய தினை விளைந்துள்ள அகன்ற இடத்தையுடைய கொல்லையின் கண்ணே, இரவு அரிவாரின்-இராவினும் கதிர் அரிவாரைப் போன்று, தொண்டகம சிறுபறை - தொண்டகமென்னும் சிறிய பறை, யாமம் காவலர் அவியாமாறு - இரவின்கட் காவல் செய்யுந் தொழிலையுடையோர் உறங்காமையானே, பால் நாள் யாமத்தும் கறங்கும் - பாதியாகிய இரவினும் ஒலியா நிற்கும் ஆதலால், இன்று அவர் வாரார் ஆயின் நன்று - இன்றிரவு நம் தலைவர் வாராராயின் நலமாகும்.

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற் பொருட்டு. வாழி - அசைநிலை. வாராராயின் நன்றென்றது வந்தாற் காவலராற் காணப்பட்டு மறைவெளிப்படற்கேதுவாம் என்பதுபட நின்றது. ஓ, ஏ, அசைகள். வியன்கண் இரும்புனம் என்றது, தினை அரிதற்குப் பலநாள் ஆகும் என்பதுணர்த்தி என்றும் இரவுக்குறி வாராதிருப்பின் நன்றென்று குறிப்பானுணர்த்தியவாறு. தினையரியும் காலம் எனவே பகற்குறியினும் வருதற்கு இடமின்மை கூறி இருவகைக் குறியும் மறுத்தவாறுணர்க.

தொண்டகம் - குறிஞ்சிப்பறை. தொண்டகம் யானைமுதலியன தினையை அழியாமைப் பொருட்டு முழக்கப்படும் என்க.

பாஅள் - ஈண்டு நடு இரவைக் குறித்துநின்றது. கறங்கும் - முழங்கும். யாமங் காவலர், இராப்பொழுதிலே ஊர்காவல் செய்வோர். காவலர் விழிப்புடையராய் யாண்டும் ஆராயுமியல்புடையராகலின் தலைவன் வரில் காணப்படுதல் ஒருதலை என்பாள், 'யாமங்காவலர் அவியாமாறு' என்றாள். அவிதல் - உறங்குதல். மாறு - ஏதுப்பொருள் தருவதோரிடைச் சொல்.

இருபொழுதும் இங்ஙனம் மறுக்கப்பட்டமையின் இனித் தலைவியை வரைந்து கோடலானன்றிக் காண்டலியலாதென வரைவுகடாவிய வாறுதலுணர்க.

---

1. ஆசிரியர் பெயர்காணப்படவில்லை.

பாட்டு - கூஎசு : தலைவன் கூற்று

துறை :—பொருள்வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவுழுங்கியது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து போயப் பொருளீட்டத் தூண்டிய தன்னெஞ்சிற்குத் தலைவன் தலைவியைப் பிரிய மாட்டாமை கூறிச் செலவு தவிர்ந்தது.

இதன்கண், தலைவன் நெஞ்சினை விளித்து, 'நெஞ்சே நந் தலைவி வேனிற்காலத்தே பொதியமலையில் தோன்றிய சந்தனத் தினும் தண்மை மிககாள்; மற்றுப் பனிபடு பருவத்திலோ ஞாயிற்றின் வெம்மையைத் தன்னகத்தே ஏற்றுக் கூம்பிய தாமரைமலரினது உள்ளகம்போன்று சிறிய வெம்மையும் உடையள் காண்; அத்தகையோளை எவ்வாறு பிரியவல்லேம்,' என்கின்றனை.

கூஎசு. மன்னுயிர் அறியாத் துன்னரும் பொதியிற்
சூருடை அடுக்கத் தாரங் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி ஐயென
அலங்குவெயிற் பொதிந்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

—படுமாத்து மோசிகொற்றனர்.

(இ - ள்) நெஞ்சமே!, மன் உயிர் அறியாத் துன்னரும் பொதியில் - நிலைபெற்ற உயிர்களாலே அறியப்படாத கிட்டுதற் கரிய பொதியமலையிலுள்ள, சூர்உடை அடுக்கத்து ஆரம் கடுப்ப - தெய்வங்களையுடைய பக்கங்களிலே தோன்றிய சந்தனத்தைப் போன்று, வேனிலான தண்ணியள் - வேனிற் பொழுதிலே நம் தலைவி குளிர்ச்சியை உடையவளாவாள், பனியே-இனிப் பனிப் பருவத்திலோ, வாங்கு கதிர் தொகுப்ப - தன்னிலே கவரப்பட்ட கதிர்களை ஞாயிறு தன்பாற் சேர்த்துக் கொண்டமையானே, கூம்பி - குவிந்து, ஐ என அலங்கு வெயில் பொதிந்த தாமரை - அழகிதாக அசைகின்ற வெயிலைத் தன்னகத்தே வைத்து மூடிக் கொண்ட தாமரை மலரினது, உள் அகத்து அன்ன சிறு வெம்மையள் - உள்ளிடத்தைப் போன்ற சிறிய வெம்மையை உடையள்.

விளக்கம்:—வழிவழியாக உலகில் நிலைபெற்று வருதலின் மன்னுயிர் எனப்பட்டது. உயிர் ஈண்டு அறிதற்சிறப்புடைய மக்கள் உயிர் குறித்து நின்றது. துன்னுதற்கருமை தெய்வமுடைமையானும் உயர்ச்சி யுடைமையானும் காடுகள் உடைமையானும் ஆம் என்க.

சூர் - தீண்டிவருத்தும் தெய்வம். அடுக்கம்-பக்கமலை. பொதியில்-பொதியமலை. ஆரம்-சந்தனம். பொதியமலை சிறந்த சந்தனந் தோன்று மிடமாதலான் அம்மலைச சந்தனம் என்றான். இது தலைவியின் மேனி தண்ணிதாதற்கு உவமை. வேனிற்காலத்தே குளிர்ச்சியையும் குளிர் காலத்தே வெம்மையையும் நல்கி இன்பம் செய்பவள் என்க. தண்ணீ யள் - தண்ணென்ற ஊற்றின்பம் உடையள். தாமரையாலே கவரப் படும் கதிர் என்பாள், 'வாங்கு கதிர் தொகுப்ப' என்றாள். தொகுத்தல்-ஒருவழிச சேர்த்தல்; என்றது, ஞாயிறு கதிர் சுருங்கி மறையாநிற்ப என்றவாறு. வெப்பம் அசைந்து காணப்படுதல் கோடை வெயிலிற் காண்க. நீரின் அசைவுபோல அழகிதாய் அசைதலின் 'ஐயென அலங்கு வெயில்' என்றாள். வெயில் வெம்மைக்கு ஆகுபெயர். தாமரை பகற் பொழுதெல்லாம் மலர்ந்திருந்து வெயில் வெம்மையை ஈட்டித் தன் னுள்ளே பொதிந்துகொண்டு கூம்பும் என்றதன் நுணுக்கமும், அருமையும் உணர்ந்தின்புறுக. கூம்பிய தாமரைமலரின் உள்ளகம் சிறிது வெம்மையாயிருத்தல் பனிப்பருவத்தே தலைவியின் உடல் வெம்மைக்குவமை என்க.

வேனிற் காலத்தே தண்மையையும் பனிக்காலத்தே வெம்மையை யும் விரும்புவது மக்களியல்பு. தலைவி அவ்வக் காலத்திற் கேற்ற இன்ப முடையள் எனவே, வேனிற்பொழுதிலே ஆற்றொணு வெம்மையே நல்கும் பாலைநிலத்தே அவளைப் பிரிந்துபோதல் அமையுமோ என்று செலவழுங்கியபடியாம்.

பாட்டு - உளை: தலைவி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளைனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது. அஃதாவது, 'வரைவிடைவைத்துத் தலைவன் பிரிந்தமை தலைவி ஆற்றுகின்றிலள்' எனத் தோழி கவன்றுட்குத் தலைவி, 'யான் ஆற்றியிருப்பவும், ஆற்றுகிலேன்' என வருந்துதல் என்னை,' என்று கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'நந்தலைவர் பிரி வானே என் கண்கள் நலங்கெடினும், தோள்கள் நெகிழினும், யான் அவரது நல்ல நட்பினை நினைந்து நெஞ்சின்கண் ஆற்றியே இருக்கின்றேன், அங்ஙனம் யான் ஆற்றவும் நீ என்பொருட்டு ஆற்றுயாகின்ற தென்கொலோ ?' என்று வினவுகின்றாள்.

உளை. மலரோர் உண்கண் மாணலந் தொலைய
வளையோர் மென்றோள் ளெகிழ்ந்ததன் தலையும்
மாற்ற கின்றே தோழியாற் றலையே
அறிதற் கமையா நாடனெடு
செய்து கொண்டதோர் சிறுநன் னட்பே.

— மோசிகொற்றனர்.

(இ - ள்.) தோழி—, அறிதற்கு அமையா நாடனொடு - தனது தன்மையை அளந்தறிதற்குப் பொருந்தாத நந்தலைவனோடே, செய்து கொண்டதோர் சிறு நல் நட்பு - யாம் செய்து கொண்ட ஒரு சிறிய நன்றாகிய நட்பு, மலர் ஏர் உண்கண் மாண் நலந்தொலைய - தாமரை மலர்போன்ற மையுண்ட கண்களினது மாட்சிமையுடைய அழகு யெல்லாம் நிற்ப, வளை ஏர் மெல் தோள் நெகிழ்ந்ததன்தலையும - வளையல்கள் அழகிய மென்மையுடைய தோள்களினின்று கழன்றவிடத்தும், மாற்று ஆகின்று - என் நோய்க்கு மருந்தாகின்றது, ஆற்றலை - அங்ஙனமாகவும் நீயோ என்திறத்தாக கவன்று ஆற்றுகின்றாயல்லைகாண்.

விளக்கம் :—மலர் - ஈண்டுச் சிறப்பாற் றாமரை மலர் குறித்து நின்றது. உண்கண் - மையுண்ட கண். வளையையுடைய தோள் எனினுமாம். நெகிழ்ந்த என்பதன்கண் நகரத்திற்கு ஞகரம் போலி. மலரேர் என்பதன்கண், ஏர்: உவமவுருபு. நெகிழ்ந்ததன்தலையும் - நெகிழ்ந்தவிடத்தும். 'அவன் பிரிவானே என்னுடலும் கண்களும் நிறமே நெகிழ்ந்தும் அழகழிந்தும் காணப்படினும் அவனது நட்பு நலத்தைக் கருதுபிடத்து என்னெஞ்சம் ஆறுதலே கொள்கின்றது. ஆதலால், என் புறத்தோற்றமே கண்டு நீ வருந்துதலை இனி விடு' என்றவாறு.

சிறுநன் னட்பு என்றதன்கண், சிறுமை, காலத்தின் மேற்று, நன்மை, தூய்மையின் மேற்று என்க.

நிலத்தினும் பெரிதாய், நீரினும் ஆரளவின்றாய், எல்லையின்றிக் காணப்படுதலின் தன்னறிவானே அளந்து காணற்கியலாப் பேரன்புடையான் என்பாள், 'அறிதற்கமையா நாடன்' என்றாள். "அன்பெனும் ஒன்றின்றன்மை அமரரும் அறிந்ததன்றால்" என்பர், கம்ப நாடரும்.

பாட்டு - உளவு : செவிலி கூற்று

துறை :—மகட்போக்கிய செவிலி, தெய்வத்திற்குப் பராயது. அஃதாவது, தமர் அறியாவாறு தலைவி தலைவனோடே சென்றமையறிந்த செவிலி, 'என் மகள் சென்ற வழி அவட்கு இன்பமே நல்கும்படி அருள்க' எனத் தெய்வத்தை வாழ்த்தியது.

இதன்கண், செவிலி தெய்வத்தைக் கருதி, 'எம்மை விட்டுச் சுடர்வேற் காளையோடே என் மகள் சென்ற பாலை நிலவழி, ஞாயிற்றாலே காயப்படாமல் மாரிமழையுடைத்தாய், மணல் பரந்து மழையும் பெய்யப்படுவதாக!' என்று வேண்டுகின்றாள்.

நூஎஅ. ஞாயிறு காயாது மரநிழற் பட்டு
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் றாக நங்நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே.

—கயமனார்.

(இ - ள்.) நம் நீத்துச் சுடர்வாய் நெடு வேல் காளையொடு-நம்மைப் பிரிந்து ஒளிபொருந்திய நெடிய வேலையுடைய தலைவனோடே, மடமா அரிவை போகிய சுரன் - மடப்பத்தையும் மாமைநிறத்தையும் உடைய என் மகள் சென்ற பாலைநிலம், ஞாயிறு காயாது - ஞாயிற்றாலே வெயில் வீசப்படாமல், மர நிழல் பட்டு - மரங்களின் நிழலுண்டாகப்பெற்று, மலைமுதல் சிறுநெறி-மலையிடத்ததாகிய சிறிய வழி, மணல் மிகத் தாஅய் - மணல் மிகுதியாகப் பரவப்பெறாது, தண்மழை தலையின்று ஆக-தண்ணிய மழை பெய்யப்பட்டது ஆகுக.

விளக்கம் :—'தெய்வமே! என்மகள் சென்ற பாலைப்பெருவழி வெயிலின்றித் தண்ணிழல் உடைத்தாய் மணன்மிகப் பரவி மழை பெய்யப்பெற்று அவள் செல்லற்கு இனிதாம்படி செய்தருள்க' என்று பராயவாறும்.

பாலைநிலத்தின் வெம்மையை அவள் மலரடி பொரூ வென்பாள், ஞாயிறு காயாமை வேண்டினள். இனிதே தங்கி விளையாடற்கு மர நிழல் வேண்டினள். பரற்கற்கள் ஆயின் அவள் சிறடி நோம என் பாள், மணல் பரந்த நெறி வேண்டினள். பிறந்தநாள் தொட்டுப் பாராட்டி ஊட்டி வளர்த்த எம்மையும் வெறுத்தகன்றுள் என்பாள், 'நம் நீத்து' என்றுள். எம்மினும் சிறந்த கேளவனைப் பெற்றமையானே எம்மை நீத்தனள் என்பாள், 'சுடர்வேற் காளையொடு போயினள்' என் றுள். சுடாவேற் காளை என்றது, அவனது ஆண்மைச சிறப்பும் அழ குந் தோன்றநின்றது. சுடர்வேற் காளையொடு போயினள் என்றது, தோழி கூற்றைக்கொண்டு கூறியபடியாம்.

பாட்டு - நூஎகூ : தோழி கூற்று

துறை :—நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது. அஃதாவது, தலைவியை அயலார் வரைவுவேண்டி வந்த காலத்தே தலைவி கற்புக்கடம்பூண்டமை செவிலிக்குக் குறிப்பால தோன்றும்படி அவள் கேட்பத் தலைவிக்குக் கூறு வாளாய்த் தோழி கூறியது.

இதன்கண், செவிலி கேட்கும் அண்மையளாகத் தோழி தலைவியை நோக்கி, "நினது அறிவு காழ்க்கொள்ளும் பொழுது, 'நங்காய்! நீ எம்மில்லிற்கு வரக்கடவை' என்று நினது கூந்

தலைத் தடவிய நாடன், இன்று எவ்விடத்துள்ளானென அறிகிலேன்?", என்கின்றாள்.

நூஎகூ. இன்றியாண் டையனெ தோழி குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினெடு
கண்ணகன் தூமணி பெறூஉம் நாடன்
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்மில் வருகுவை நீயெனப்
போம்மல் ஓதி நீவி யோனே.

.....[1]

(இ - ள்.) தோழி—, குன்றத்துப் பழங்குழி அகழ்ந்த கானவன் - மலையின்கண்ணே பழைய குழியைத் தோண்டிய குறவன், கிழங்கினெடு கண்அகல் தூ மணி பெறூஉம் நாடன் - கிழங்கோடே இடம் அகன்ற தூய மணியையும் பெறுதற்குக் காரணமான நாட்டையுடையோனும், செறி தொடி அறிவு காழ்க் கொள்ளும் அளவை - செறிந்த வளையலை உடையோய் நினது அறிவு முதிர்ந்தவுடனே, எம்இல் வருகுவை நீ என - எமது இல்லத்திற்கு வரக்கடவை நீ என்று கூறி, பொம்மல் ஓதி நீவியோன் - நிமிர்ந்த நினது கூந்தலைத் தடவியவனுமாகிய தலைவன், இன்று யாண்டையன் - இன்று எவ்விடத்துள்ளானென அறிகிலேன்?

விளக்கம்:—யாண்டையனெ - எவ்விடத்துள்ளானெ. ஓகாரம் இரக்கப்பொருளது. பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கோடே தூ மணியையும் பெறும் என்றது, தனக்கு வழக்கமாகவுள்ள வேட்ட மேற்புக்கான் ஒரு தலைவன் வேட்டத்தோடே தூயமணிநிகர் தலைவியையும் பெற்றனன் என்னும் உள்ளுறை உடைத்து. பழங்குழி என்றது - பழைதாகிய ஊழ் தலைப்படுத்தப் பட்டமை குறித்து நின்றது.

தூமணி என்றாள், கற்புக் கடம்பூண்டமையின் நொதுமலர் வரை வுடம்படாமை தோன்ற.

அறிவுகாழ்க் கொள்ளுதல் - ஈண்டுக் காமம் சால்புடைத்தாகும் பருவத்தைக் குறிப்பான் உணர்த்தியது.

செறிதொடி: அன்மொழித்தொகை; விளியேற்று நின்றது. இயற்கைப் புணர்ச்சியின்கண் ணிகழும் மெய்ப்பாடு பன்னிரண்டனுள் கூழை விரித்தல் மெய்யுறு புணர்ச்சிககு ஏதுவாமாகலின், 'பொம்ம லோதி' என்றது உணர்ச்சிவயப்பட்டு நிமிர்ந்த கூந்தல் என்றவாறு. பொம்மல் ஈண்டு எழுச்சி என்னும் பொருளதாய் நின்றது. இக்கருத் தறியார் வளா 'செறிந்த' என்று பொருள் கூறினர். ஓதி நீவுதல் ஈண்டுக் குறிப்பாய் மெய்யுறு புணர்ச்சியை விளக்கி நின்றது.

---

1. ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை.

'அவன் யாண்டையனே?' என்றது, ஈண்டு வரைவு வேண்டி வருதற்குரிய அத்தலைவன் வாராமல் நொதுமலர் வரைவு வேண்டுகின்றனர் என்பதுபட நின்றது.

இதனால் தலைவி பண்டோர் தலைவனோடே நட்புக்கொண்டு கற்புக் கடம்பூண்டனள் என்பது குறிப்பாற் செவிலிக்குணர்த்தப் பட்டமை அறிக.

பாட்டு - நஅo : தோழி கூற்று

துறை :—பனிப் பருவம் குறித்துப் பிரிந்தான் தலைமகன்; பிரிதலால் பருவ வரவின்கண் வேறுபடுவாளாயினும் கதுமென ஆற்றுவிப்பது அரிதென்னும் கருத்தினளாய்க் கூதிர்ப்பருவத் துத் தலைமகள் கேட்பத் தனது ஆற்றுமை விளங்கத் தோழி சொல்லியது.

அஃதாவது, முன்பனிப்பருவத்தே வருவல் எனத் தலைவன் கூறிச்சென்றான்; ஒருகால் அவன் குறித்த பருவத்தே வாராணையின் அப்பொழுது இவள் வருத்தத்தை ஆற்றுதல் அரிதாம் என்று தோழி கருதினள்; அவள் ஆற்றுளாதற்கு முன்னரே இதனைத் தலைவி உணர்ந்து ஆற்றிக்கோடற்பொருட்டுத் தலைவனைக் குறைகூறியது.

இதன்கண், தோழி, தலைவியை நோக்கி, 'நந்தலைவர் மழை ஒழியாதே பொழிகின்ற இக் காலத்தே நம்மை நினையாது சேய் நாட்டிலுறைகின்றார்; அவர் குறித்த பனிப்பருவமோ அணித்தே வருகின்றது; அவர் வாராராயின் யாம் என் செய்கோம்?' என்று வினவுகின்றாள்.

நஅo. விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றெறி முரசின் நன்பல முழங்கிப்
பெயலா னுதே வானம் காதலர்
நனிசேய் நாட்டர் நம்முன் னலரே
யாங்குச்செய் வாங்கோல் தோழி யீங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர
முன்னர்த் தோன்றும் பனிக்கடு நாளே.

—கருவூர்க் கதப்பிள்ளை.

(இ - ள்.) தோழி—, விசும்பு கண் புதையப் பாஅய் - வானிடம் மறையும்படி யாண்டும் பரந்து, வேந்தர் வென்று எறி முரசின் நன்பல முழங்கி - அரசர்கள் தம் பகையை வென்ற பின்னர் முழக்கும் வெற்றிமுரசினைப்போன்று நன்மையாகப்

பலகாலும் முழங்கி, வானம் பெயல் ஆனது - முகில் மழை பொழிதலே ஒழிந்திலது, காதலர் நனி சேய் நாட்டார் நம் உன்னலர் - நம் காதலரோ மிகவும் தொலைவின்கண் உள்ள நாட்டின்கண் உளர்; மேலும் நம்மை நினைந்ததுமிலர், ஈங்கை வண்ணத் துய்மலர் உதிரப் பனிக்கடு நாள் முன்னர்த் தோன்றும் - ஈங்கையின்கண் மலர்ந்தனவாகிய நிறத்தையும் தூய்மையும் உடைய மலர்கள் உதிரும்படி பனிபடுங் கடிய நாள்களோ அண்மையின் நம்மெதிரே வாராநிற்கும், யாங்குச் செய்வாம - அப் பருவ வரவின்கண் யாம் என்ன செய்வேம்.

விளக்கம்:—பனிப்பருவத் தொடக்கத்தே வருவர் வருவர் என்னும் கருத்தானே தலைவி ஆற்றியிருந்தாள். அப் பருவம் வந்தவுடன் அவன் வாராஞையின் ஞெரேலென ஏங்கி இறந்துபடினும் படுவள் என்று அஞ்சிய தோழி, பருவவரவின் முன்னரே எதிரதாக் காப்பாள் ஒருகால் அப் பருவ வரவின் தொடக்கததே அவன் வரவியலாமையும் கூடும் என்பதுபடக் கூறி அவள் மனநிலைபை அங்ஙனம் நிகழினும் ஆற்றியிருத்தற்கு வல்லிதாம்படி செய்வாள் இங்ஙனம் கூறுகின்றுள் என்க. தோழி செய்யும் இச சூழ்ச்சி மனத்தியல்பறிந்த சான்றோராலே உணரி உன்னி இன்புறற் பால தொன்றும் என்னே? எதிர்காலத்தே யாதானுமொரு கேடு வாராதென்றிருப்போர்க்கு அக் கேடு கதுமென நேரின் ஆற்றவியலாமையும் எதிர்காலத்தே இன்ன கேடு நேரினும் நேரலாம் என்று எதிர்பார்த்திருப்போர் அக்கேடு நிகழுங்கால் அதனைத்தாங்கும் வண்ணம் தம் மனததைத் தகுதியாக்கிக் கோடலும் இயல்பாகலான் என்க.

ஈண்டு பனிப்பருவம் அணித்தே வருகின்றது. நம் காதலரோ நனிசேய் நாட்டு நம்மை நினையாது தாம் மேற்கொண்ட வினையே நினைந்திருக்கின்றனர் என்றது, அப்பருவத் தொடக்கத்தே அவர் குறித்தபடி வாராதிருத்தலும் இயல்பேயாம். அங்ஙனமாயின் என் செய்வாம் என்று வினவியபடியாம். இதனால், தலைவிக்குப பருவ வரவின்கண் தலைவர் வாராராயினும் சிறிது சாழ்த்து வருதல் ஒருதலை; யான் இப்போது ஆற்றுமாப்போலே அப்பொழுதும் ஆற்றுதல் வேண்டும் என்னும் சூழ்சசி பிறந்து அப்பொழுதும் ஆற்றுதற்கு மனம் வல்லிதாகப் பெறும் என்க.

> "எதிரதாக் காக்கும் அறிவினுக் கில்லை
> அதிர வருவதோர் நோய்" (குறள் - ச2க.)

எனவரும் அருமைத் திருக்குறள் ஈண்டு நினையற் பாலது.

பாஅய் - பரந்து. வென்றெறி முரசம் - வெற்றி முரசம். நம் முன்னலர் என்றது, தாம் மேற்கொண்ட வினையை முன்னுவர் என்ற வாறு. நனிசேய் நாட்டில் வினையே முன்னியிருப்போர் அவ்வினை முற்றுங்காறும் நம்முன்னுதிருத்தலே இயல்பு எனத தேறுதற்கு வழி கூறியவாறு. வினைமுற்றியவுடன் வருதல் ஒருதலை என்பது குறிப்பு.

பனிக்கடு நாள் முன்னர்தோன்றும் என்றது, இது கூதிர்ப் பருவத்தின் இறுதிப் பகுதியாகலான் அப்பருவம் அண்மையிற் றோன்றும

என்றறிவுறுத்து அப் பருவ வரவின்கண் தலைவன் வாராமைக்கும் ஏதுக்காட்டினுள் என்க. யாங்குச் செய்வாம் என்றது, இப்போது ஆற்றுமாறு போன்றே அவர் வினைமுற்றி வருந்துணையும் ஆற்றுதல் வேண்டும் என்னும் சூழ்ச்சி தோன்றற் பொருட்டென்க. தாய் - மலரின்கண் பஞ்சு நுனி போன்றதோர் உறுப்பு.

'ஈங்கை மலர் உதிர் பருவத்தே வருவன்' எனத் தலைவன் கூறிப் போயினமையின் அதனை எடுத்தோதினுள் என்க.

பாட்டு - நுஅக : தோழி கூற்று

துறை —வரைவிடை ஆற்றுளாகிய தலைமகளை ஆற்று வித்தலுறும் தோழி தலைமகனை இயற்பழித்தது அஃதாவது, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைவனை நினைந்து பெரிதும் வருந்திய தலைவியின் நெஞ்சைப் பிறிதொரு வழியிலீர்த்து ஆற்றுவிக்க எண்ணிய தோழி தலைவனைப் பழித்துக் கூறியது

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'யாம் தலைவனைடே இலங்கெயிறு தோன்ற நக்கதன் பயன் நமது தொல் கவின் தொலைந்து தோள் நலம அழிந்து அல்லல் நெஞ்சமொடு நாடோறும் இரவில் துயிலாது மேனி பசலை பாய அழியும் இதுதானே? என்கின்றாள்.

நுஅக. தொல்கவின் தொலைந்து தோணலஞ் சாஅய்
அல்லல் நெஞ்சமோ டல்கலும் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானற்
பூமலி பொதும்பர் நாண்மலர் மயக்கி
விலங்குதிரை உடைதருந் துறைவனை
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

.....[1]

(இ - ள்.) தோழி—, வெண் குருகு நரலும் தண் கமழ் கானல - வெள்ளிய நாரைகள ஆரவாரியாநின்ற குளிர்ந்த மணங் கமழ்கின்ற கடற்கரையிலே, பூமலி பொதும்பர் நாண்மலர் மயக்கி-பூக்கள மிக்க சோலையிடததே பூத்த புதியமலர்களைக் கலங்கச் செய்து, விலங்கு திரை உடைதரும் துறைவனெடு-குறுக்கிடும் அலைகள் உடையாநின்ற கடற்றுறையையுடைய நந்தலைவனைடே, இலங்கு எயிறு தோன்ற நக்கதன் பயன்-விளங்குகின்ற பற்கள் தோன்றும்படி நகைத்ததனால் உண்டாகிய பயன், தொல்கவின்தொலைந்து தோள் நலம் சாஅய்-பழைய

1. ஆசிரியர் பெயர் காணப் பெறவில்லை.

அழகுகெட்டுத் தோள்களின் நலமும் மெலியாநிற்ப, அல்லல் நெஞ்சமொடு அல்கலும் துஞ்சாது-வருந்துதலையுடைய நெஞ்சத் தோடே இராப்பொழுதுகளினும் துயிலாமல், பசலை ஆகி விளி வது கொல் - மேனியிற் பசலை உண்டாகும்படி அழிந்து படுவது தானே?

விளக்கம்—:கடற்றிரைப் பொதும்பரிலுள்ள நாண்மலரைக் கலங்கச் செய்து உடைதரும் என்றது, தலைவன் நம்மைக் கேண்மைகொண்டு பின்னர்க் கலங்கும்படி நீத்தான் என்னும் உள்ளுறை தோற்றி நின்றது.

வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் கொடு போயிற்று என் னும் பழமொழிப்படி, கேண்மையால் உண்டாக வேண்டிய நலம் இல்லையானதோடன்றி நமக்கியல்பாகவுள்ள நலத்தையும் அழித்த தென்பாள், 'தொல் கவின் தொலையத் தோள் நலம் சாஅய்' என்றாள். தொல்கவின் என்றது, தலைவனைக் காணுமுன்னர் இருந்த அழகு என்றவாறு. சாஅய்-மெலிந்து. இடையறாது நினைந்து வருந்தும் நெஞ்சத்தோடே என்பாள், 'அல்லல் நெஞ்சமோடு' என்றாள். அல்கல்-இரவு. எயிறு தோன்ற நகைத்தது என்றது, இயற்கைப்புணர்ச்சி யுடம்பாட்டை. நக்கதன் பயன் வாழ்வுபெறுதலாக இருக்க, அழிவ தாயிற்றே; இங்ஙனம் நட்டாரை நீத்தவன் சான்றோன் அல்லன் என்று தலைவனைக் குறிப்பான் இயற்பழித்த வாறுதல் காண்க.

இதனால் தலைவிக்குச் சூழ்ச்சி பிறந்து தலைவனது கட்புச் சிறப்பினை ஆராயுமாற்றால் ஆற்றுமை நீங்குதல் பயன் என்க.

பாட்டு : உஅஉ : தோழி கூற்று

துறை:—பருவ வரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி, 'பருவ மன்று, வம்பென்று' வற்புறீஇயது. அஃதாவது, தலைவன குறித்துச் சென்ற பருவம் வந்தும் அவன் வாரா மையானே பெரிதும் வருந்திய தலைவிக்குத் தோழி, 'இஃதவன் குறித்துச் சென்ற கார்ப்பருவமன்று; இப்போது பெய்வது வம்ப மாரி' எனக்கூறி ஆற்றுவித்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'மழை பெய்கின் றமையானே இது கார்ப்பருவம் போலும் என்று நீ கருது கின்றனை; இது கார்ப்பருவம் அன்று; இம்மழை வம்பமழை; கார்ப்பருவமாயின் நங்காதலர் வந்துவிடுவரல்லரோ?' என்று தோழி கூறுகின்றாள்.

உஅஉ. தண்துளிக் கேற்ற பைங்கோடி முல்லை
முகைதலைத் திறந்த நாற்றம் புதல்மிசை
பூமலி தளவமொடு தேங்கமழ்பு களைல
வம்புப் பெய்யுமால் மழையே வம்பன்று

காரிது பருவம் ஆயின்
வாரா ரோகம் காத லோரே

—குறுங்கீரனார்.

(இ - ள்.) தோழி—, தண் தளிக்கு ஏற்ற பைங்கொடி முல்லை - தண்ணிய மழைத்துளிகளே ஏற்றுக்கொண்ட பசிய கொடியாகிய முல்லையினது, முகைதலை திறந்த நாற்றம்-அரும்பு கள் மலர்ந்தமையானே உண்டாய மணம், புதல் மிசைப் பூமலி தளவமொடு தேம் கமழ்பு கஞல-புதலின் மேல் பூக்கள் மிக்க செம் முல்லையோடே தேன் மணக்குமாறு நெருங்காநிற்ப, மழை வம்பு பெய்யும் - முகில்கள மழையைக் காலமல்லாத காலத்தே பெய்யும், வம்பன்று இது கார்ப்பருவம் ஆயின்-வம்பமாரி யன்று இது கார்ப்பருவமாரியே என்பாயாயின், நம் காதலர் வாராரோ-நங் காதலர் வரமாட்டாரோ?

விளக்கம்:—'நம் காதலர் வாராமையானே இது கார்ப்பருவ மழை யன்று; வம்ப மழையே என்பது தேற்றம். ஆதலால், அவர் அப்பரு வம் வருமுன் வருவர்; நீ ஆற்றுக' என்பது குறிப்பு.

தளிக்கு - வேற்றுமை மயக்கம். முகை-அரும்பு. தலைதிறத்தல்-மலர்தல். புதன்மிசைப் படர்ந்த தளவம் என்க. தளவம் - செம் முல்லை. தேம் - தேன். கமழ்பு - கமழ்ந்து. கஞலுதல் - செறிதல்.

வம்பு - புதுமை. மழைபெய்யாத பருவங்களிலே ஞெரேலென முகில்கள் தோன்றிப் பெய்யும் மழையை வம்பமழை என்ப.

இது கார்ப்பருவ வரவென்றே நீ கருதினையாயின் என்பாள்,'வம் பன்று காரிது பருவமாயின்' என்றாள். இது கார்ப்பருவமாயின் என மாறுக. கார்ப்பருவமல்லாமைக்கு அளவை கூறுவாள், 'காதலர் வாராரோ' என்றாள் இது கார்ப்பருவமாயின் அவர் வந்திருப்பர் அவர் வாராமையானே இது வம்பென்பது தேற்றம் என்றவாறு. உண் மையில் கார்ப்பருவமே யாகவும் தலைவியை மருட்டி ஆற்றுவிக்கும் பொருட்டு இங்ஙனம் தோழி கூறினாள் என்க.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" (குறள்-உகூஉ)

எனச சான்றோர் கூறுமாற்றான் இங்ஙனம் கூறுவன வெல்லாம் பொய்ம்மையாகாமையும் உணர்க.

பாட்டு - ஈஅஈ : தோழி கூற்று

துறை:—உடன்போக வருந்தக் தலைமகளை நாணுக் கெடச் சொல்லியது. அஃதாவது, தலைவனுடன் போக முன்னர் உடம்பட்டு அவன் வந்த பின்னர் நாணமீதூர்தலானே உடன் போக ஒருப்படாதுநின்ற தலைவியின் நாணம் நீக்கி உடன்போக் கும் பொருட்டுத் தோழி கடிந்துரைத்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, "நீ உடம்பட்டமை யானே யான் தலைவனை நங்குக் கொணர்ந்தேன்; அவனும் நின் வரவினை எதிர்நோக்கி நிற்கின்றனன்; நீயோ 'நாளைப் போகுவல்' என்கின்றனை; யான் நின் செயலாலே கைகால்கள் ஓயப்பெற்று நடுங்காகின்றேன்; பின் யான் என்செய்வேன்!" என்று கடிந்து கூறுகின்றாள்.

நூஅநூ. நீயுடம் படுதலின் யான்தர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்
இன்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலும் ஓய்வன அழுங்கத்
தீயுறு தளிரின் நடுங்கி
யாவதும் இலையான் செயற்குரி யதுவே.

—படுமரத்து மோசிகீரனார்.

(இ - ள்.) நீ உடம்படுதலின்-தோழி நீ தலைவனுடன் போதற்கு இயைந்தமையானே, குன்ற நாடன் யான் தர வந்து குறி நின்றனன்-மலைநாட்டையுடைய நந்தலைவன் யான் அழைக்க வந்து குறியிடத்தே நிற்கின்றான், இன்றை அளவை சென்றைக்க என்றி-நீயோ இன்றையாகிய ஒருநாள் அளவேனும் கழிவதாக நாளைச்செல்வல் என்கின்றாய், கையும் காலும் ஓய்வன அழுங்க - யானோ என் கைகளும கால்களும் செயலற்று வருந்தாநிற்ப, தீ உறு தளிரின் நடுங்கி-தீயில் இடப்பட்ட தளிரைப் போல நடுங்குவதல்லது, யான் செயற்குரியது யாவதும் இலை-யான் செய்யத்தக்கது யாதும் இல்லை.

விளக்கம்:—யானே தலைவனை அழைத்தேனும் அல்லன் என்பாள், 'நீ உடம்படுதலின் யான் தர' என்றாள். யான் தர-யான் அழைத்துக் கொணர. குறி - நீ இவ்விடத்தே நில், யான் தலைவியை அழைத்து வருவல் எனச் சுட்டிய இடம்.

இன்றை யளவை - இற்றை நாளாகிய காலவரை இன்று மட்டும் கழிக என்றி என்றவாறு. நாளைச் செல்வல் என்பது குறிப்பு. இது தலைவனை வாளா அலைத்ததாகுமாதலின் யான் நடுங்குகின்றேன் என்பாள், 'தீயுறு தளிரின் நடுங்கி' என்றாள்.

அஞ்சி நடுங்குவார்க்கு கைகால்கள் செயலற்றுப் போதல் இயல்பு. நடுங்கி நிற்றல் அல்லது என வருவித்துரைக்க.

தனக்குற்ற துன்பமிகுதி கூறுவாள், 'தீயுறு தளிரின் நடுங்கி' என்றாள். யாவதும் மிலையான் செயற்குரியது என்றது, நீ இன்று உடன் போகாது தாழ்த்திருப்பை எனின், இனி, இங்ஙகழ்ச்சியில் யான் உனக்கு யாதோர் உதவியும் செய்யும் தகுதியில்லாதேன் ஆகிவிடுவன் எனக் குறிப்பான் அச்சுறுத்தியவாறும். தலைவன் இனி நின்னை

அழைத்துப் போக மறுப்பினும் மறுப்பன் என்பது குறிப்பு, 'ஆதலால் நாணீக்கிக் கற்புக் கடம்பூணலே நீ இப்போது செயற்பாலது' என்று வற்புறுத்தியபடி யாயிற்று.

பாட்டு - நஅசை : தோழி கூற்று

துறை :—'நின் பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்று யிருந்தது!' என்று நகையாடித் தோழி வாயின்மறுத்தது. அஃதாவது, பரத்தையரிடத்திலிருந்து வந்து தன்பால் குறை இரந்து வாயில் வேண்டிய தலைவனை, "நீ பரத்தையர்க்கு 'நும்மிற் பிரியேன்' எனச் சூள் உரைத்திருப்பாயன்றே; அங்ஙனம் உரைத்த சூள் என்னும்?" என நகைத்து வாயில்மறுத்தது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, "மகிழ்ந, நீ கரும் பெழுதிய தோளையும், நெடிய கூந்தலையும், குறுந்தொடியையும் உடைய பரத்தையர்க்கு 'நும்மிற் பிரியேன்' எனச் சூளுரைத்து மருட்டி அவர் நலனுகர்ந்த பின்னர் இங்ஙனம் வருவாய் எனின் நின்சூள என்னுமே!" என்று நகைக்கின்றாள்.

நஅசை. உழுந்துடைக் கழுந்திற் கரும்புடைப் பணைத்தோள்
நெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர்
நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்நநின் சூளே.

—ஓரம்போகியார்.

(இ - ள்.) மகிழ்ந - தலைவ, உழுந்து உடை கழுந்தின் - உழுத்த நெற்றினை உடைத்தற்குரிய கழுந்துடைய தடிபோன்ற, கரும்புஉடைப் பணைத்தோள் - கரும்பெழுதிய தொய்யிலை யுடைய பருத்த தோள்களையும், நெடும்பல் கூந்தல் - நெடிய பலவாகிய கூந்தலினையும, குறுந்தொடி மகளிர் - குறிய வளையல் களையும உடைய பரத்தையரது, நலன் உண்டு துறத்தி ஆயின் - பெண்மைநலத்தை நுகர்ந்து பின்னர் அவரைக் கைவிடுவா யாயின், நின்சூள் மிக நன்று - நீ அவர்க்கு மொழிந்த சூள் மொழி மிகவும் நன்றாக இருந்தது!

விளக்கம் :— "நீ தலைவிக்கு முன்னர்க் களவுக்காலத்தே 'நின் னிற் பிரியேன்' எனச் சூள்மொழிந்து, இப்பொழுது அச்சூள் மொழி போற்றாது பரத்தையர்பால் தலைவியை நீத்துச் சென்றனை; ஆண்டும் அவர்க்கு இங்ஙனம் சூள் மொழிந்தே மருட்டி அவர் நலனுண்டிருப் பாய்; நலனுகர்ந்த பின்னர் அவர்க்குரைத்த சூள்மொழியும் தப்பி இங்குவந்தனை; இவ்வாற்றானே நின் சூள்மொழி மிகமிக நன்றாயிருந் தது?" என்று நகைத்தவாறும்.

கழுந்து-தேய்ந்து மழுங்கிய தழும்பு; உழுந்தடிக்கும் தடி, அங்ஙனம் தழும்புடைத்தாகலின் கழுந்து என்றாள். கழுந்து - ஆகுபெயர். கரும்பு - கரும்பு போன்று எழுதப்பட்ட தொய்யில் என்க. நெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர் என்புழி முரண்தோன்றிச் செய்யுளின் பம்மிகுதல் உணர்க. குறுந்தொடி-குறிய வளையல். மகளிர் எனப் பொதுவிற் கூறினாள், தலைவிக்கு மொழிந்த சூள்மொழியையும் கருதி. நல னுண்டு துறந்தலே நின் தொழில் என்பது பட மகளிர் நலனுண்டு துறத்தியாயின் என்றாள். மிகநன்று என்றது இகழ்ச்சி. மிகவும் தீது என்றவாறு. நின்போலும் சான்றோர்பால் இங்ஙனம் தீது காணப்படுதல், வியப்புக்குரியதென்பாள் 'மிக நன்றம்ம' என்றாள். அம்ம : வியப்பின்கண் வந்தது.

எனவே, நின் மொழியை இனியாம் மெய்யென்று கருதி மயங்கேம்; "நீ வந்தாங்கேமாறு" என்று வாயில்மறுத்துவாராதல் அறிக.

பாட்டு - நூஅறு : தலைவி கூற்று

துறை:—வேற்றுவரவு மாற்றியது. அஃதாவது, நொதுமலர் வரைவொடு புகுந்தமை அறிந்த தலைவி, தோழியை அறத்தொடு நிற்பித்தது மறைவெளிப்படுத்துமாற்றாலே அவ்வரைவினை மாற்றியது.

இதன்கண், தலைவி தோழி கேட்ப 'பெருவரை அடுக்கத்துக் கிழவன் அன்னையன்ன நட்பினனாக இருப்பவும், இவ் வழுங்கலூர் புதுவோரை உடைத்து' என்று கூறுகின்றாள்.

நூஅறு. பலவிற் சேர்ந்த பழமார் இனக்கலை
சிலவிற் கானவன் சென்தொடை வௌவிச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை அடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்னை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவிவ் வழுங்க லூரே.

—கபிலர்.

(இ - ள்) பலவில் சேர்ந்த பழம் ஆர் இனக் கலை-பலாமரத்தில் பொருந்திய பழத்தைத் தின்னுகின்ற திரளாகிய ஆண் குரங்குகள், சிலவில கானவன் சென்தொடை வௌவி - ஆரவாரிக்கின்ற வில்லையுடைய வேட்டுவனது செவ்விய அம்பை அஞ்சி, செருவுறு குதிரையின் பொங்கி - போர்க்களத்தே எய்திய குதிரைகளைப் போலத் தாவி, சாரல் இரு வெதிர் நீடு அமை தயங்கப் பாயும் - மலைபக்கத்தேயுள்ள பெரிய மூங்கிலினது நீண்ட கோல் அசையும்படி பாயாநிற்கும், பெருவரை அடுக்கத

துக் கிழவன் - பெரிய மலைப்பக்கத்தையுடைய நம் தலைவன், என்றும் அன்றையன்ன நட்பினன் - எப்பொழுதும் அன்றிருந்ததைப் போன்று மாறுபாடின்றி இருக்கும் நட்பை உடையனாகவும், இவ் அழுங்கல் ஊர் புதுவோர்த்து அம்ம - இவ்வாரவாரத்தையுடைய ஊரோ என் வரைவு குறித்து வந்த புதியவர்களையுடையது; இஃதொரு வியப்பு.

விளக்கம்:— பலா - பலவு என ஆக்குறுகி உகரமேற்றது. பலா மரத்தை எய்திய கலை எனினுமாம். இனக்கலை - திரளாகிய கலை என்க. கலை - ஆண்குரங்கு. சிலைவில் - ஒலிக்கும் வில், வினைத் தொகை.

செந்தொடை - செவ்விய அம்பு. தொடுக்கப்படுதலால், அம்பு தொடை எனப்பட்டது வெரீஇ - வெருவி, அஞ்சி. செரு, களத்திற்கு ஆகுபெயர். போர்க்களத்திலே குதிரை தாவுமாறு போலத் தாவி என்க. பொங்குதல் - மேலெழுதல், ஈண்டுத் தாவுதல் என்னும் பொருட்டு. வெதிர் - மூங்கில் அமை - ஆகுபெயராய்க் கோல் என்னும் பொருட்டாயது. அமை - மூங்கில். தயங்க - அசைய. பெருவரையடுக்கத்துக் கிழவன் என்றது, உருவானும் திருவானும் பிறப்பானும் உயர்ந்தவன் என்பதுபட நின்றது. அவன் நமது மாறுபடாக் காதலனாக இருப்பவும் வேற்றூர் வரைவு வேண்டி வந்திருத்தல் வியப்பென்றாள். தோழி அவர் வருமுன்பே மறை வெளிப்படுத்து அவர் வருகையை மாற்றாளாயினள் என்னும் செறல் பற்றி, 'இப்போதேனும் அறத்தொடு நிற்பாயாக' என்று தோழிக்குக் குறிப்பானுணர்த்திய வாறும்.

அன்றை என்றது, இயற்கைப்புணர்ச்சி எய்திய நாளை. அம்ம : வியப்பின்கண் வந்தது. புதுவோர்த்து - புதியோரை உடையது.

பலாமரத்திலுள்ள கலை, வேடன் தொடைவெரீஇ மூங்கில் கோலிற் பாயும் என்றது, நீ அறத்தொடுநிற்பின் இப் புதுவோர் விரைந்து தத்தமில்லம் புகுதுவர் என்னும் உள்ளுறை தோற்றி நின்றது.

பாட்டு - உ அசை : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது. அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே பெரிதும் வருந்திய தலைவியை, 'நீ ஆற்றுதலே நன்' றெனத் தோழி வற்புறுத்து ஒதினளாக, அவள் கூற்றிற்கு நெஞ்சழிந்து தலைவி கூறியது.

இதன்கண், தலைவி தோழியைநோக்கி, 'துறைவன் பிரியாத காலத்தே மாலைக்காலத்தை மட்டுமே அறிவேன்; அம் மாலைக்காலம் நிலப்பரப்பன்ன துன்பத்தோடே தனிமையும் உடைத்தாதலை அறிந்திலேன்' என்கிறாள்.

கூஅசு. வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் தணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணி கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணுெடு
புலம்புடைத் தாகுதல் அறியேன் யானே.

—வெள்ளிவீதியார்.

(இ - ள்.) தோழி, வெண்மணல் விரிந்த வீததை கானல் - வெள்ளிய மணல் பரவிய மலாகள் செறிந்த கடற்கரைச் சோலையையும், தண்ணந் துறைவன் - குளிர்ந்த கடற்றுறையையும் உடைய நம் தலைவன, தணவா வூங்கே - நம்மைப் பிரியாத முன்காலத்தே, வால் இழை மகளிர் விழவு அணி கூட்டும் - தூய அணிகலன்களையுடைய மகளிர்கள விழவின் பொருட்டு அணிகளைத் தொகுக்கின்ற, மாலையோ அறிவேன் மன் - மாலைக்காலத்தையே அறிவேனுயினேன் அஃதிப்பொழுது கழிந்தது, மாலை நிலம் பரந்தன்ன புன்கணெடு - மாலைக்காலம் நிலம் பரந்தது போலப் பரந்த துன்பத்தோடே, புலம்புடைத்து ஆகுதல் யான் அறியேன் - தனிமையும் உடைத்தாகுதலை யான் அப் பொழுது அறிந்திலேன்.

விளக்கம் :— வீ - மலர். ததைதல் - செறிதல். கானல் - கடற் கரைச் சோலை. தண்ணந் துறைவன் என்றது, அவன் அளியுடைமை நினைந்து கூறியவாறு. தணத்தல் - பிரிதல். ஊங்கென்னும் சுட்டு காலத்தைச் சுட்டி நின்றது. பிரியாது உடனுறைந்த காலத்தே என்றவாறு. அக்காலத்தே மாலைப்பொழுது அணிகூட்டி மகிழ்தற் குரியதொரு நற்பொழுதாகவே இருந்ததென்பாள், மகளிர் விழவணி கூட்டும் மாலையோ அறிவேன், என்றாள். ஓ காரம்: பிரிநிலை. விழவணி என்றதற்குச் சிறந்த அணி யெனக் கொள்க. மகளிர் மாலைப் பொழுதிலே ஒப்பனைக் குரியவெல்லாம் கூட்டி ஒப்பனை செய்துகோடலை,

"பகலுரு வுற்ற இரவுவர நயந்தோர்,
காத லின்றுணை புணர்மார் ஆயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்பஇழை புனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்ப.....
கல்லென் மாலை நீங்க." (மதுரைக்-நிசுக-நிநிஅ.)

என வரும் மதுரைக் காஞ்சியானும் உணர்க. வால் இழை - தூய அணிகலன். மன் - கழிவிரக்கப் பொருட்டு. அவ் வினிய மாலையை இப்போது யான் அறிகின்றிலேனே என்று இரங்கியபடியாம்.

நிலம் எத்துணைப் பரப்புடைத்து, அத்துணைப் பரப்புடைய துன்பம் என்பாள், 'நிலம் பரந்தன்ன புன்கண்,' என்றாள். நிலம் பெருமைப் பண்பிற்கு உவமை என்க. "நிலத்தினும் பெரிதே," "ஞாலத்தின் மாணப் பெரிது," எனப் பிற சான்றோரும் கூறுதல் காண்க. அக் காலத்தே அறிந்திலேன் என்றது இப்பொழுது அறிகின்றேன் என்பது படுகின்றது.

'இத்தகைய புன்கணும் புலம்புமுடைய மாலைப் பொழுதினை யான் எங்ஙனம் ஆற்றவல்லேன்?' என்பது குறிப்பு.

பாட்டு - 4 : தலைவி கூற்று

துறை :—பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது. 'அஃதாவது, தலைவன் பிரிந்த காலத்தே பெரிதும வருந்திய தலைவி ஆற்றியிருத்தலே நினக்கு அழகாம்,' என்று தன்னை வற்புறுத்திய தோழியின் கூற்றிற்கு நெஞ்சழிந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'பகல் கழிந்து ஞாயிறு சினந் தணிந்த செயலறவுடைய இம் மாலைப் போதினை மெல்ல நீந்தினேமாயினும் என்னும்! இம் மாலையின் பின்னர் வருமை இரவென்னும் வெள்ளமோ கடலினும் பெரிதாகுமே அதனை எவ்வாறு நீந்தவல்லேம்,' என்று கூறுகின்றாள்.

4. எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்
இரவரம் பாக நீந்தின மாயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே.

—கங்குல்வெள்ளத்தார்.

(இ - ள்.) தோழி—, எல்லை கழிய முல்லை மலர - பகற் பொழுது நீங்க முல்லையரும்புகள் மலர, கதிர் சினம் தணிந்த கையறு மாலையும் - ஞாயிறதினது வெப்பந் தணிந்த செயலறவினையுடைய இம் மாலைக் காலத்தையும், இரவரம்பு ஆக நீந்தினம் ஆயின் - இராப்பொழுதினை அதன் எல்லையாக எண்ணிக் கடந்தேம் ஆயின், கங்குல வெளளம் கடலினும் பெரிது - அதன் பின்னரே வரும் இரவாகிய வெள்ளமோ கடலைக் காட்டிலும பெரிதாகுமே! எவன் - இம் மாலையை நீந்தியதால் உறும் பயன் என்னை?

விளக்கம் :—எல்லை - பகல். மாலைப் பொழுதில் முல்லை மலர்தல் இயல்பாதலின், 'முல்லை மலர,' என்றாள். கதிர் - ஆகுபெயர். சினம்

என்றது, வெப்பத்தை. மாலைக்காலம் பிரிந்துறைவார்க்குச் செயலறுதற்குரிய பெருந்துயர் விளைத்தலின், 'கையறு மாலை,' என்றாள். மாலையும் என்புழி உம்மை உயர்வுசிறப்பு. நீந்தற்கரிய இம் மாலைக்காலத்தையும் ஒருவாறு நீந்துவேமாயினும் என்றவாறு.

நீந்தினம் என்னும் வினையால் மாலையாகிய இவ் வெள்ளத்தை என்க. மாலைப் பொழுதிற்கு எல்லை இரவாகலின், வெள்ளம் என்றதற்கியைய, 'வரம்பு,' என்றாள். இரவு வரம்பாகக் கருதி நீந்துவோமெனின், அவ் விரவு வரம்பாகாது கடலினும் பெரிய வெள்ளமாயிருக்கும் ஆதலின், யாம் நீந்திக் கரை காண வல்லுநமோ என்பாள், 'எவன்,' என்றாள். கொல் - அசைநிலை. எவன், என், யாது பயன் என்றவாறு. எனவே, 'இக் கொடிய மாலைப்பொழுதினையும் அதன் பின் வரும் நெடிய இரவினையும் யான் எங்ஙனம் கழிப்பேன்?' என்று அழிந்து கூறியவாறுதல் காண்க.

பாட்டு - ௩அஅ : தோழி கூற்று

துறை :—தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன் சுரத்து வெம்மையும், தலைமகள் மென்மையும் குறித்துச் செலவழுங்குவிப்பவானைத தோழி அழுங்காமற் கூறியது. அஃதாவது, 'தலைவி தன்னெடு வருதற்கு உடம்பட்டாள்,' என, அறிந்த தலைவன், 'அவள் கொடிய பாலைநிலத்தில் நடக்க வல்லுநள் அல்லளே,' எனக் கருதி, அழைத்துப் போக மயங்குவானைத் தோழி தலைவி வல்லுநள் ஆதல் கூறித் தெளிவித்தது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'நீரின்கண் நின்ற குவளை வெப்பமிக்க மேற்காற்று மோதிய விடத்தும் வாடாதாகும்; அங்ஙனமே நின்னெடு வரின் தலைவிக்குக் கொடிய பாலைநிலவழியும் இனியவாம்,' என்கின்றாள்.

௩அ. நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்
கவணை அன்ன பூட்டுப்பொரு தசாஅ
உமணைருத் தோழுகைத் தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைமடித் துயவும்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே.

—ஔவையார்.

(இ - ள்.) தலைவ! நீர் கால் யாத்த நிரை இதழ்க் குவளை - நீரை அடியிலே கட்டப்பெற்ற நிரல்பட்ட இதழ்களை உடைய குவளைமலர், கோடை ஒற்றினும் வாடாது ஆகும் - மேல்காற்று மோதியவிடத்தும் வாடாததாகும், கவணை அன்ன பூட்டுப்

பொருது அசா-கவணை ஒத்த பூட்டுங் கயிறு பொருதமையானே வருந்துதலையுடைய, உமண் எருத்து ஒழுகைத் தோடுநிரைத்து அன்ன - உமணர்களின் எருதுகளையுடைய வண்டிகளின் தொகுதியை வரிசையாக நிறுத்தினாற்போன்ற, முளி சினை பிளக்கும் முன்பு இன்மையின் - உலர்ந்த கிளையைப் பிளத்தற்குரிய வலியில்லாமையாலே, யானை கைமடித்து உயவும் - யானை கையை வளைத்துக்கொண்டு வருந்துதற்குக் காரணமான, கானமும் நும் மொடு வரின் இனிய - பாலை நிலங்களும் நும்மோடே வருமிடத்துத் தலைவிக்கு இனியனவே ஆகும்.

விளக்கம் :—கால் யாத்த - அடியிற் கட்டப்பட்ட என்க. நீர் கால் யாத்தமையானே வளமுடைத்தாகிய குவளை என்பாள், 'நிரை யிதழ்க் குவளை,' என்றாள். கோடை - மேல்காற்று; மேல்காற்று வெப்ப முடைத்து; வெப்பமுடைய காற்று மோதியவழியும் நீரின் நின்ற குவளை வாடாது. அதுபோல, வெப்பமுடைய பாலைவழியும் தலைவிக்கு நின்னோடு வருங்கால் இனிதாம் என்க. இது, எடுத்துக் காட்டுவமையணி.

பூட்டு - பூட்டுங் கயிறு. இன்றும் அக்கயிறு பூட்டென்றே வழங்கப் படுகின்றது. பூட்டுங் கயிறு பொருத எருது என்றது, வண்டியிற் பூட்டப்பட்ட எருது என்றவாறு.

தோடு - தொகுதி. உமணர் வண்டியின்கண் உளள குத்துக் கோல்கள், உலர்ந்த மூங்கிற் கிளைக்கு உவமை. பகிய கினையின்மையின் முளி கினையைப் பற்றிப் பிளக்க முயன்ற யானை, அது பிளக்கலாகாமையின் கை மடிதது உயங்கிய தென்க. முளிகினை கையின்கண் நோவுண்டாக்கலின், யானை உயவும் என்க. முளிகினை - உலர்ந்த கிளை. முன்பின்மை - பாலைநிலத்தே யானைக்கு உணவினமையைக் குறிப்பாலுணர்த்திற்று.

நும் மொடுவரிற் கானமும் இனியவாம் என்றது நும்மைப் பிரிந்திருப்பின் இல்லமும் இன்னாதாம் என்பதனையும் குறிப்பாலுணர்த்துதல் உணர்க.

'மெல்லிய னேனும் நின்னோடு வரின் பாலைநில வெப்பத்தை ஆற்றுவள் ஆகலான், அழைத்துப் போகக் கடவை,' என்று தெளித்த வாறுதலறிக.

பாட்டு - நஅசு : தோழி கூற்று

துறை :—தலைமகன் குற்றேவல் மகளை வரைவுமலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது. அஃதாவது, தலைவனுடைய குற்றேவல் மகளை தலைவன் வரைதற்கு முயல்வதனை அறிந்த தோழி அவ் வேவலமகனை வாழ்த்துமுகத்தானே தலைவிக்கு அச் செய்தியை உணர்த்தியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'யான் தலைவன் ஏவலனைக் கண்டு, வரைவுபற்றி உசாவினேன்; அவனும் எல்லாம்

நலமே என்றன்; அவன் இனிய உணவு பெற்று மகிழ்வானாக,' என்று கூறுகின்றாள்.

நூஅகூ. நெய்கனி குறும்பூழ் காய மாக
ஆர்பதம் பெறுக தோழி அத்தை
பெருங்கல் நாடன் வரைந்தென அவனெதிர்
நன்றே மகனே யென்றனென்
நன்றே போலும் என்றுரைத் தோனே.

—வேட்டகண்ணனார்.

(இ - ள்.) தோழி, பெருங்கல் நாடன் வரைந்தென-பெரிய மலைநாட்டையுடைய தலைவன் வரைவுக்குரிய செயல்களைத் தொடங்கினனாக, அவன் எதிர் நன்றே மகனே என்றனென் - அத் தலைவனை எதிரே அவன் குற்றேவல் மகனை நோக்கி நலமோ மகனே என யான் உசாவினேன், நன்றே போலும் என்று உரைத்தோன் - அதற்கு நலமே என்று கூறிய அக் குற்றேவன் மகன், நெய்கனி குறும்பூழ் காயம் ஆக - நெய் ஊறுகின்ற குறும்பூழ் சம்பாரதோடு கூடிய கறியாக, ஆர் பதம் பெறுக - உண்ணும் சோற்றினைப் பெறுவானாக.

விளக்கம்:—நெய்யில் அடப்பட்ட குறும்பூழ் என்பாள், 'நெய்கனி குறும்பூழ்' என்றாள். குறும்பூழ் - காடை. காயம் - குழம்பு. ஆர்பதம்- உண்ணும் சோறு. எவன் மகனுக்கு ஏற்ற உணவு கூறுவாள் குறும் பூழ்க் காயங் கூறினாள்.

வரைந்தென - வரைவுக்குரியன செய்தானாக. தலைவன் எதிரே வினவலின் குறிப்பாக வினவினேன் என்பாள் நன்றே என்றனென் என்றாள்; வரைவுக்குரிய செய்திகள் நிகழ்கின்றனவா என்று குறிப் பான் வினவினேன் என்றவாறு. அவனும் குறிப்பாகவே விடுத்தான் என்பாள் நன்றே என்றுரைத்தனன் என்றாள்.

இங்ஙற் செய்தியை அறிவித்த அக்குற்றேவன் மகன் நல்லுணவு பெற்று வாழ்வானாக என வாழ்த்தினாள் என்க.

அத்தை - அசைநிலை. ஏ - தேற்றம். போலும் - அசைநிலை.

பாட்டு - நூகூ : கண்டோர் கூற்று

துறை:—புணர்ந்துடன் போயினரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது செலவும் பகையுங்காட்டிச் செலவுவிலக் கியது. அஃதாவது, தலைவியைத் தமர் அறியாதே உடன் அழைத்துக்கொண்டு பாலைவழியிற் போகுந் தலைவனை எதிரே கண்டோர் பொழுது போயினமையும், ஆற்றினது தீமையுங் காட்டி, 'இனிப்போகாது தங்குமின்' எனக் கூறியது.

' இதன்கண், கண்டோர் தலைவனை நோக்கி, 'பிடியானை போலும் இவட்குத் துணையாயவனே ஞாயிறும் பட்டது; ஆறலை கள்வருடைய ஆரவாரமும் கேட்கப் படுகின்றது; ஆதலால், இனி இந்நெறியே நீ இவளோடே செல்லுதலைத் தவிர்வாயாக' என்கின்றனர்.

கூகo. எல்லும் எல்லின்று பாடுங் கேளாய்
செல்லா தீமோ சிறுபிடி துணையே
வேற்றுமுனை வெம்மையிற் சாத்துவந் திறுத்தென
வலையணி நெடுவேல் எந்தி
மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே.

—உறையூர் முதுகொற்றனார்.

(இ - ள்.) சிறுபிடி துணையே— சிறிய பிடியானை போன்ற இவட்குத் துணைவனே! எல்லும் எல்லின்று - ஞாயிறும் விளக்க மிலதாயிற்று, சாதது வந்து இறுத்தென - வணிகர் கூட்டம் வந்து சேர்ந்ததாக, வேற்றுமுனை வெம்மையின் - பகைப்புலத்தே மேற் கொள்ளும் சினத்தைப் போலச் சினந்து, வலை அணி நெடுவேல் ஏந்தி - வலையை அணிந்த நெடிய வேலை ஏந்தி, மிளை வந்து பெயரும் - காவற காட்டிடதமே வந்து மீள்கின்ற, தண்ணுமைக்குரல் பாடுங் கேளாய் - தண்ணுமை என்னும் முரசின் ஒலியாகிய முழக்கத்தையும கேள, செல்லாதீம் - ஆதலால் நீயிர் இனி மேலே செல்லுதலைத் தவிர்வீராக.

விளக்கம்:—சிறுபிடி - சிறிய பிடிபோல்வாள். என்றது, தலைவியை. மகளோடு செல்வோய் எனக் குறிப்பாலுணர்த்துவார் 'சிறுபிடி துணையே' என்று விளித்தார்.

எல் - ஞாயிறு. எல்லின்று - விளக்கம் இலதாயிற்று. இருவரும் செல்லாதீர் என்பார், 'செல்லாதீம்' என்றார். 'செல்லாதீம்': முன்னிலைப் பன்மை வியங்கோள் வினைமுற்று.

வேற்றுமுனை - பகைப்புலம். பகைப்புலத்தே சினப்பதுபோலச் சினந்து என்க. சாத்து - வணிகர் கூட்டம் இறுத்தது - தங்கியது. மிளை - காவற்காடு. தண்ணுமைக்குரல் - ஆறலைகள்வர் முழக்கியது என்க. ஆறலை கள்வர் சாத்துவந்தமை அறிந்து கொள்ளையிடுதற்குத் தம்மினத்தாரை அழைத்தற்பொருட்டுத் தண்ணுமை முழக்கும் ஒலி செவிப்படுதல் காட்டுவார், தண்ணுமைக குரற்பாடும் கேளென்றார். உம்மை: இறந்தது தழீஇயது.

பாட்டு - கூகக : தலைவி கூற்று

துறை:—பிரிவிடைப் பருவவரவின்கண் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து சொல்லியது. அஃதா

வது, 'தலைவன் மீண்டு வருவல்' எனக் குறித்த பருவம் வந்தும், அவன் வாராமையானே வருந்திய தலைவியைக் கண்டு வருந்திய தோழிக்குத் தலைவி நெஞ்சழிந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, முல்லை நிலத்திலே முகில்கள் இடித்து முழங்கி மழை பொழிந்தன; அம்மழையைத் தொடர்ந்து பிரிந்தோர் கையற்று வருந்தும்படி வந்த மாலைப் பொழுதிலே மயில்களும் அகவா நின்றன; அவை பெரும் பேதைமையுடையன; அவர் குறித்த பருவம் வந்தும் அவரோ வந்திலர் யான் எங்ஙனம் ஆறுமாகேன்?' என்கின்றாள்.

நகூக. உவரி யொருத்தல் உழாது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்
கடிதிடி உருமிற் பாம்புபை அவிய
இடியொடு மயங்கி இனிதுவீழ்ந் தன்றே
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலைப்
பூஞ்சினை யிருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉந் தோழி பெரும்பே தையவே.

—பொன்மணியார்.

(இ - ள்.) தோழி, ஒருத்தல் உவரி உழாது மடிய - பன்றிகள் வெறுத்து நிலத்தைக கிளைக்காமல் சோம்பிக்கிடப்ப, புகரி புழுங்கிய புயல் நீங்கு புறவில் - மான்கள் வெம்மையுற்ற மழைவறந்த முல்லைநிலத்தில், கடிது இடி உருமின் பாம்பு பை அவிய - விரைந்து இடிக்கின்ற இடியானே பாம்புகளின் படம் அழியும்படி, இடியொடு மயங்கி இனிது வீழ்ந்தன்று - இடியோடே கலந்து மழை இனிதாகப் பெய்யாநின்றது, வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர் கையற வந்த பையுள் மாலை - அங்ஙனம் பெய்த பெரிய மழையைப் பொருந்தித் தந்தலைவரைப் பிரிந்துறையும மகளிர் செயலறவு கொளளும்படி வந்த துன்பத்தையுடைய இம்மாலைப்பொழுதிலே, பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை - பூக்களையுடைய கொம்புகளிலே இருந்த பிளவுபட்ட கண்களையுடைய மயில்கள், தாநீர் நனந்தலை புலம்பக் கூஉம் - பாய்கின்ற நீரினையுடைய அகன்ற இடத்தின்கண் தனிமைத்துன்பம் தோன்றும்படி கூவா நிற்கும், பெரும் பேதைய - அவை மிக்க அறியாமையுடைய.

விளக்கம்:—ஒருத்தல் ஈண்டு ஆண்பன்றி என்னும் பொருட்டு. உழுதல் - நிலத்தை உழுதல். மழைவறந்து நிலம் கடிதாய்க் கிழங்குகள்

படாமையின், பன்றிகள் நிலம் நிலையாது மடிந்து கிடந்தன என்க. உழுது உழுது நிழங்கு காணப் படாமையின வெறுத்து மடிய என் பாள், 'உவரி மடிய' என்றாள். உவரி - உவர்த்து.

மடிதல் - சோம்பிக் கிடத்தல். புகரி - புகரையுடையது என்றது மான் என்றவாறு. வெப்பமிகுதியானே மான்கள் புழுங்கிய புறவு, என்க. புயல்-மழை. புறவு-முல்லை நிலம் முதுவேனிற் பருவத்தாலே மழை வறந்து வெம்பிக்கிடந்த முல்லை நிலத்தே என்றவாறு.

இடி விரைந்து வீழ்தலுண்மையின் 'கடிதிடி உரும்' என்றாள். இடிக் கும் இடி என்க. பை - பாம்புப்படம்.

வீழ்ந்தன்று - வீழ்ந்தது; பெய்த தென்றபடி. இவ்வினைக் கேற்ற மழை என்னும் வினைமுதல் வருவித்துக் கூறுக. மழை பெய்யாநிற்ப மாலையும் வந்த தென்பாள், 'மழை தழீஇவந்த மாலை' என்றாள். மழை பெய்தலே என்னைப் பெரிதும் வருத்துவதாக மேலும் பிரிந்தோரைக் கையறச் செய்யும் மாலையும் வந்து நலிகின்றது என்றவாறு.

மயிலின்கண் நெடிதாய்ப்பிளந்து விட்டாற்போன்ற இமைகளை உடைத்தாதலால், 'போழ்கண் மஞ்ஞை' என்றாள். மஞ்ஞை-மயில். மழைவரவானும் மாலைவரவானும் துன்புறும் என்னைத் தமது ஆரவாரத் தானும் துன்புறுத்துவன ஆகலான் 'அவை பேதைய' என்றாள்.

'தலைவர் குறித்த பருவம் வந்தது, அவரோ வந்திலர்! மழையும் மாலையும் மயிலின் குரலும் என் தனிமைத் துன்பத்தை மிகுவிக்கின் றன. யான் எங்ஙனம் ஆற்றுகேன்!' என நெஞ்சழிந்து கூறிய வாறும்.

பாட்டு - உஉஉ : தோழி கூற்று

துறை:—வரைவிடைக் கிழத்தியதுநிலைமை தும்பிக்குச் சொலலுவாளாய்ச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. அஃதாவது, வரைவுநீட்டித்த தலைவன் சிறைப்புறததே வந்து நிற்றலறிந்த தோழி, அவன் வரவறியாள் போன்று தலைவியின் நிலையை அவனுகுணாதத ஒருவணடினை விளிதது வேண்டி யது.

இதன்கண், தோழி வண்டினை நோக்கி, "ஓ வண்டே ஒருவரிடத்தே நனமொழி கூற அஞசவேண்டியதிலலை; நீ தலை வனுடைய மலைக்குப போவாயாயின், 'நின தலைவி இன்னும் தன் தமரோடேயே இருகின்றாள்' என்று அவனுக்கு நினைவூட்டு வாயாக," என்கின்றாள்.

உஉஉ. அம்ம வாழியோ அணிச்சிறைத் தும்பி
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டண்ணல் நெடுவரைச் சேறி யாயிற்
கடமை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்

துளரேறி நுண்டுகட் கூளஞர் தங்கை
தமரின் தீராள் என்மோ அரசர்
நிரைசெல னுண்டோல் போலப்
பிரசந் தூங்கு மலிகிழ வோர்க்கே.

தும்பிசேர் கீரனர்.

(இ - ள்.) அணிச் சிறைத் தும்பி அம்ம - அழகிய சிறகை யுடைய வண்டே யான் கூறுவதனைக் கேட்பாயாக, நல் மொழிக்கு அச்சம் இல்லை - ஒருவரிடத்து நல்ல மொழியைக் கூறுவதற்கு யாதொரு அச்சமும் இல்லையாகும், அவர் நாட்டு அண்ணல் நெடுவரை சேறி ஆயின் - நீ அத்தலைவருடைய நாட் டின்கண்ணதாகிய தலைமையையுடைய நெடிய மலைகளுக்குச் செல்லு வாயாயின், அரசர் நிரை செலல் நுண் தோல போல - அரசர் களுடைய நிரலாகச் செல்லுதலையுடைய கேடகங்களைப்போல, பிரசம் தூங்கும் மலி கிழவோர்க்கு - தேத்திரல்கள் தூங்கா நின்ற அமமலையையுடைய தலைவரிடத்தே, கடமை மிடைந்த தடவை அம சிறுதினை - கடமை மானகள் நெருங்கிய தோட் டத்திலுள்ள அழகிய சிறிய தினையினிடத்தே, துளர் எறி நுண் துகள் கூளஞர் தங்கை - கூளக்கொட்டினை எறிவதாலே எழுந்த நுண்ணிய புழுதியையுடைய கூளை எடுப்பாருடைய தங்கையாகிய தலைவி, தமரின் தீராள் என்மோ - தன சுற்றத்தாரிடத்தினின் றும நீங்காளாயினள எனறு கூறுவாயாக.

விளக்கம் :—அம்ம - கேட்பித்தற் பொருட்டு. வாழி, ஓ - அசை நிலைகள். நன்மொழிக்கு அச்சமில்லை என்றது 'யான் நன்மையே கூறுகின்றேன்' எனத் தலைவனுக்குணர்த்தும் குறிப்புடையதாம். தலைவனின் தலைமைத் தன்மையை மலைக்கேற்றி அண்ணல் நெடுவரை என்றாள்.

சேறி - செல்லுதி. கடமை - ஒருவகைமான். தடவை - தோட் டம். துளர் - கூளைக்கொட்டு. கூளைகொட்டானே கூளைகோறலில் நுண்டுகள் படிந்த என்க. துகள் - புழுதி. கூளஞர் - கூளைகட்போர். தமர் கொடுமையைத் தாங்கி அவரினீங்காதவளாய் வருந்தியிருப்பாள் என்பாள் தமரிற் றீராள் என்றாள். தோல் - கிடுகு; கேடகம். இது தேனடைக்கு உவமை. அவன் நெடுவரைக்குச சேறியாயின் ஆண்டு நீ நுகர்தற்குத் தேன் மிக்குளது என்பாள், 'பிரசந் தூங்கும் மலை கிழ வோன்' என்றாள். பிரசம் - தேன்; ஆகுபெயராய்த் தேனடையைக் குறித்தது. 'மணிச்சிறைத்தும்பி' என்றும் பாடம். இதற்கு நீலமணி போலும் சிறகையுடைய தும்பி என்க.

தமரிற்றீர்ந்து தலைவனெடிருந்து இல்லறஞ் செய்தின்புறற்குரிய காலத்தே தமரோடிருந்து தன்புறுகின்றாள் என அறிவிப்பாய் என்னு முகத்தால் தலைவனே வரைவு கடாயவாறுதலறிக. இனித்தமரிற் றீராள் என்பதனைக் குறிப்பு மொழியாகக்கொண்டு இற்செறித்தக்

கொடுமை செய்யும் தமரின்றும் இறந்து தீராது இன்னும் உளள் என்று கூறுக என வேண்டினளாகக் கொள்ளினுமாம்.

பாட்டு - ருகூஉ : தோழி கூற்று

துறை :—தலைமகன் சிறைப்புறமாகத் தோழி அலர் மலி வுரைத்து வரைவுகடாயது. அஃதாவது, வரைதற் கருத்தின் றிக் களவின்கணின்றொழுகுந்தலைவன் சிறைப்புறத்தே வந்து நின்றமை கண்ட தோழி அவன் வரவறியாள போன்று அவன் கேட்பத தலைவிக்குக் கூறுவாளாய்க் கூறியது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நின்னேத்தலைவன் முயங்கிய நாள் மிகச் சிலவே ஆகவும், அதிகன் போர்க்களத்தே இறந்த பொழுதுண்டான ஆரவாரத்தினும் அலர் பெரிதாயிற்று' என்று கூறுகின்றாள்.

ருகூஉ. மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலவே அலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினவ லதிகன்
களிறெடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கோங்கர் ஆர்ப்பினும் பெரிதே.

—பரணர்.

(இ - ள்.) தோழி—, மகிழ்நன மயங்கு மலர்க்கோதை குழைய முயங்கிய நாள் தவச்சிலவே - நம தலைவன் நின்னே விராவிய மலரையுடைய மாலை குழையுமாறுபடி கழுவிய நாட்கள் மிகச் சிலவே ஆகவும், அலர் - அதுபற்றி ஊரவர் தூற்றும் பழி மொழியோ, கூகைக் கோழி வாகைப் பறந்தலை - கோட்டா னகிய கோழிகளையுடைய வாகை என்னுமிடத்துள்ள போர்க் களத்தின்கண்ணே, பசும் பூண் பாண்டியன் வினவல் அதிகன் - பசிய பூணை அணிந்த பாண்டியனது ஏவலிலே வல்ல அதிகன் என்பான், களிறெடு பட்ட ஞான்றை - தனது யானையோடே இறந்துபட்ட காலத்தே, ஒளிறுவாள கொங்கர் ஆர்ப்பினும் பெரிது - விளங்குகின்ற வாட்படையையுடைய கொங்கர் எடுத்த ஆரவாரத்தினும் பெரிதாயிற்று.

விளக்கம் :—மயங்குமலர் - விராவிய மலர். குழைய முயங்குதல் என்றது, மூயக்கத்தின் செறிவைப் புலப்படுத்தியபடியாம். கோதை-மாலை. தவ - மிகுதி. முயங்கிய நாள் சிலவே ஆகவும் அலர் பெரிதா யிற்று என்க. கூகைக்கோழி - இருபெயரொட்டு. கூகை - காட்டுக் கோழி எனினுமாம்.

வாகை - ஓர் ஊர். "சூடாவாகைப் பறந்தலை" (கஉகி.) என இவ் வாசிரியரே அகநானூற்றினும் கூறியுள்ளார். பாண்டியனின் தண்டத் தலைவருள் ஒருவன் அதியன் என்பான் இவனைப் பற்றி இவ்வாசிரியர்,

"நல்லிசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப் பறியாக் கழல்தொடி யதிகன்" (அகம்-ககஉ.)

எனப் பாராட்டியுள்ளார்.

பசும்பூண் பாண்டியனுக்கும் கொங்கர்க்கும் பகையுண்மையையும் இறுதியிற் பாண்டியன் கொங்கரை வென்றமையையும்,

"வாடாப்பூவிற் கொங்க ரோட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்" (உஙிஉ.)

எனவரும் அகப்பாட்டான் அறியலாம்.

களிறெறி பட்ட ஞான்றை என்றது, "களிற்றுடனிலை" என்னும் புறத்துறை கூறி அதிகன் மறத்தினைப் பாராட்டியபடியாம்.

பாட்டு - நகூசு : தோழி கூற்று

துறை :—வரைவிடை ஆற்றுளாகிய கிழத்தியை ஆற்றுவிக் குந் தோழி, தலைமகளை இயற்பழித்தக கூறியது. அஃதாவது, வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தே ஆற்றுளாகிய தலைவியை ஆற்றுவிக்கப் புக்க தோழி, அவள் நெஞ்சினை வேறு நெறியிற்றிருபபுவாள் தலைவனைப பழித்துரைத்தது.

இதன்கண், தோழி தலைவியை நோக்கி, 'நந்தலைவர் நமமோ டாடிய நகைவினையாட்டு முன்னுள் நமக்கு இனியதாகி இப் பொழுது பகையாக முடிந்தது' என்று கூறுகின்றாள்.

நகூசு. முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரோடு மறுவந் தோடி
முன்னுள் இனிய தாகிப் பின்னுள்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவினை யாட்டே.

—குறியிறையார்.

(இ - ள்.) தோழி, முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி - முழந்தாளையுடைய கரிய பெண் யானையினது மெல்லிய தலையையுடைய கன்று, நறவு மலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற குறி இறைப புதலவரொடு - கள்மிக்க மலைப்பக்கத்து ஊரின் கண்ணே குறத்தி பெற்ற குறிய முன் கையையுடைய பிள்ளை

களோடே, மறுவந்து ஓடி - சுற்றிச்சுற்றி ஓடி, முன் நாள் இனியது ஆகி - முற்காலத்திலே இனிமை தருவதாயிருந்து, பின்னுள் அவர் தினை மேய்ந்தாங்கு - பிற்காலத்தே அவருடையதினையைத் தின்று துன்பந்தந்தாற்போன்று, அவர் நகை விளையாட்டு - நந்தலைவர் நம்மோடு முன்பு நகைத்து விளையாடிய இன்ப விளையாட்டு, பகையாகின்று - இப்போது நமக்குத் துன்பந்தரும் பகையாக முடிந்தது.

விளக்கம்:—கய - மென்மை - "கயவென் கிளவி மென்மையும் செய்யும்" (உரி -உசா.) என்பது தொல்காப்பியம் இனிப் பரிய தலையையுடைக்கன்று எனினுமாம். குழவி - கன்று. நறவு - கள். பாக்கம்- பக்கத்தே உள்ள ஊர். குறிய இறை எனற்பாலது, யகரம் கெட்டது.

மறுவருதல் - சுற்றிச்சுற்றி வருதல். யானைக்கன்று குறவர் மக்களோடு இளமைப் பருவத்தே மறுவந்தோடி விளையாடி இன்புறுத்தியது என்க.

முன்னுள் என்றது, அதன் இளம்பருவத்தை. பின்னுள் என்றது, அது பெரிதாகிய பருவத்தை. யானைக்கன்று முன்னுள் விளையாடி இன்புறுத்திப் பின்னுள அவருடைய தினையை அழித்துத் துன்புறுத்தினாற்போன்று தலைவன் தொடக்கத்தே நம்மோடு விளையாடி இப்போது பிரிந்து நமது நலத்தை அழித்துத் துன்புறுத்துவானாயினன் என்க. விளையாட்டுத் துன்புறுதற்கு ஏதுவாதல் பற்றி விளையாட்டுப் பகையாயிற்று என்றாள் "விளையாட்டே வினையாயிற்று" என்னும் பழமொழியுண்மையும் நினைக. குறியிறைப் புதல்வர் என்ற தொடர் நினைந்து இதனை இயற்றியவர் குறியிறையார் என வழங்கப்பட்டனர்.

இப்பழி பொருது தலைவிக்குச் சூழ்சசி பிறந்து அவன் நன்மையை ஆராய்ந்து இயற்பட மொழியுமாற்றால். இது தலைவியை ஆற்றுவிக்க ஏதுவாதல் உணர்க.

பாட்டு - நகூறு : தலைவி கூற்று

துறை;—வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளாகிய கிழத்தி நாம் ஆண்டுச் சேறுமெனத் தோழிக்கு உரைத்தது. அஃதாவது, தலைவன் வரையாது பிரிந்து காலம் நீட்டிப்ப ஆற்றாளாகிய தலைவி, 'தலைவன் இருக்குமிடத்திற்கே யாம் போகுதும்' எனத் தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழி கேட்ப முன்னிலைப் புறமொழியாக, 'என் நெஞ்சமோ அவர் பிரிவை ஆற்றுகின்றிலது; அவரோ அன்பின்மையானே நமக்குத் தண்ணளி செய்யக் கருதிற்றிலர்; வாளா சொல்மாத்திரையானே தேற்றுவாரும் இங்கு யாருமில்லை; நாணம் கெடினும் யாம் அவர் உறைவிடம் சேறலே நன்று,' எனக் கூறுகின்றாள்.

நகூடு. நெஞ்சே நிறையோல் லாதே யவரே
அன்பின் மையின் அருள்பொருள் என்னார்
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே
அரவுநுங்கு மதியினுக் கிவணேர் போலக்
களையார் ஆயினுங் கண்ணினிது படீஇயர்
அஞ்ச லென்மரும் மில்லை அந்தில்
அளிதோ தானே நாணே
ஆங்கவர் வதிவயின் நீங்கப் படினே.
.....[1]

(இ - ள்.) நெஞ்சு நிறை ஒல்லாது - என் நெஞ்சமோ என்வழி நிற்றலைப் பொருந்தாது, அவரே அன்பு இன்மையின் அருள் பொருள் என்னார் - நந தலைவரோ தம்மகத்தே அன்பில் லாமை காரணமாக அருளை ஒரு பொருளாகக் கருதிற்றிலர், வன்கண் கொண்டு வலித்து வல்லுநர் - வன்கண்மையை மேற் கொண்டு வற்புறுத்தி வற்புறுத்தி அச் செயலில் வன்மை பெற்றோராகிய சிலரும், அரவுதுங்கு மதியினுக்கு இவணேர் போல - பாம்பாலே விழுங்கப்படும் திங்களின் திறத்தில் இவ் வுலகில் வாழும் மாந்தர் செயல்போல, களையாராயினும் - என் துன்பத்தை நீக்க வல்லுகர் அல்லராயினும் என்னோடு விழித் திருந்து உசாத் துணையாதலும் செய்யாது, இனிது கண் படீ இயர் - இனிதே துயிலா நின்றனர், அஞ்சல் என்மரும் இல்லை - ஆதலால் நீ அஞ்சற்க என்று என்னை ஆற்றுவிப்பாரும் இல ராயினர், ஆங்கு அவர் வதிவயின் நீங்கபடின் - இனி யான் உய்யுமாறெண்ணி அத தலைவர் உறையுமிடதிற்கு இவணின் நீங்கிச் சென்றாலோ, நாண் அளிது - எனது நாணம் இரங்கத் தக்கதொன்று யிருந்தது.

விளக்கம் :—நெஞ்சு அவர்வழிப் படர்தலன்றி என்வரை நில்லாது என்பாள், 'நெஞ்சு நிறை ஒல்லாது,' என்றாள். ஒல்லுதல் - இயலுதல். அவர் - நெஞ்சறிசுட்டு. அன்பே அருட்கு முதலாகலின் அஃதின்மை யின் தண்ணளி செய்தலே பொருளாவது என்று கருதி என்னைப் பிரியாது உடனுறைவாருமல்லர் என்றவாறு. பொருள் - நன்மையுண் டாக்கும் பொருள். வன்கண் கொண்டு வலித்து வல்லுநர் என்றது தோழியை. தன்னைப் பகற்பொழுதிலே ஆற்றுக ஆற்றுக என்று கண் ணோட்டமின்றிக் கடிவாள்; பின்னர் இரவில் எனக்கு உசாத்துணை யாகாது உறங்குவாள் என்று குறை கூறியவாறும்.

வலித்து வலித்து அதன்கண் வன்மைபெற்றோர் என்க. மதியை அரவு நுங்குங் காலத்தே உலகினர் அவ் விடர் களைய வல்லுநர் அல்லாத விடத்தும் அதற்கிரங்கி அது வீடு பெறுங்காறும் உறங்காதேனும் இராமல் இனிதே உறங்குதல்போலத் தோழி இடர் களையாவிடினும்

1. ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை.

உறங்காது உசாத்துணை யாவாருமல்லளாய் இனிதே உறங்குகின்றாள் என்றாள் என்று உவமையை விரித்துக் கொள்க.

அந்தில்-அசைநிலை. அவர் இருக்குமிடத்திற்குப் போதலே இனி நன்று எனினும் எனது நாணம் இறந்துபடுமே என்று இரங்கியவாறு, 'நாணம் கெடினும் போவேன்,' என்பதே தலைவியின் குறிப்பென்க. படீஇயர் - படுகின்றனர்.

கவலையின்றி உறங்குவாள் என்பாள் இனிது படீஇயர் என்றாள். தோழியே இன்னளாயின் என்னைத் தேற்றுவார் யாருளர் என்பாள், 'அஞ்சல் என்மரு மில்லை,' என்றாள்.

உயிர்ப் பொருட்டு நாணந் துறக்க வேண்டுதலின், 'அளிதோ தானே நாண்,' என்றாள். ஓ, தான், ஏ, அசைகள். வதிவயின் - உறைவிடத்திற்கு. நீங்கப்படின் நாண் அளிது என்க. ஏ, ஈற்றசை.

பாட்டு - ஈகூகூ : செவிலி கூற்று

துறை :—மகட் போக்கிய தாய் உரைத்தது. அஃதாவது, தலைவி தலைவனுடன் தமரறியாதே சென்றமை அறிந்த செவிலித் தாய் அவட்கு இரங்கிக கூறியது.

இதன்கண், "பாலும் உண்ணுள் பந்தையும் விரும்பாள் விளையாடும மகளிரோடே இடைவிடாது ஆடும் இயல்புடைய என் மகள், வெப்பமிக்க பாலைநிலத்தே அவனொடு செல்லுதலை எங்ஙனம் துணிந்தாளோ!" என்று செவிலி இரங்குகின்றாள்.

ஈகூகூ. பாலும் உண்ணுள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோ ளினியே
எளிதென உணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய உயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
கழைதிரங் காரிடை அவனொடு செலவே.

—கயமனார்.

(இ - ள.) பாலும் உண்ணுள் - யான் பலகாலும் வேண்டவும் பாலையும பருகமாட்டாளாய, பந்துடன் மேவாள் - பந்தினையும் விரும்பாளாய், விளையாடு ஆயமொடு அயர்வோள் - விளையாடுகின்ற தோழியர் குழாதத்தோடே இடையறாது விளையாடும் இயல்புடைய என் மகள், முளிசினை ஓமை குத்திய உயர்கோட்டு ஒருத்தல் - உலர்ந்த கொம்புகளையுடைய ஓமை மரத்தை மருப்பாலே குத்திய ஏந்திய மருப்பையுடைய களிற்றியானை, வேனில் குன்றத்து வெவ் அரைக் கவான் - வேனிற் பருவத்தையுடைய

வெப்பமிக்க மலையினது தாழ்வரையிலே நின்று, மழை முயங்கு கடுங்குரல் ஓர்க்கும் - முகில்கள் முழங்காநின்ற கடிய ஒலியைச் செவி கொடுத்துக் கேட்டற்கிடமான, கழை திரங்கு ஆரிடை - மூங்கில்கள் உலர்கின்ற செலற்கரிய பாலை நிலத்தின்கண்ணே, இனி அவனொடு செலவு எளிது என உணர்ந்தனள் கொல்லோ - இப்பொழுது அத் தலைவனோடே செல்லுதல் எளிமை யுடைத் தென்று அறிந்தனளோ!

விளக்கம் :—பால் உண்ணுதலினும் பந்தாடுதலினும் விருப்பமின்றி நெருநல் காறும் ஆயத்தோடு இடையறாது ஆட்டயர்ந்த சிறுமியாகிய வள் கொடிய பாலைநிலத்தே போதற்கு எவ்வாறு துணிந்தாளோ?

பாலும் உண்ணுள் என்புழி, உம்மை உயர்வு சிறப்பு. ஆய மொடயர் வோள் என்றது, அவ வாயமகளிரையும் நீத்து என்பதுபட நின்றது. அயர்வோள் - விளையாடுபவள். இஃது அவளது இளமை குறித்து இரங்கியவாறும். இனி - இப்பொழுது.

உலர்ந்த ஓமையைக் குத்தி அதன்கண் நீர் காணாது எக்கற்ற களிறு ஒருபால் இடி முழக்கங் கேட்டலும் மழை பெய்யும்போலும் என விரும்பி அவ் வொலியைக் கூர்ந்து கேட்கும் என்க. கழை-மூங்கில். வெவ்வரை - வெப்பமுடைய மலை இது குறிஞ்சி திரிந்த பாலை என்க. 'வெவ்வறை,' என்றும் பாடம். இதற்கு வெவ்விய பாறைக்கற்கள் எனப் பொருள் காண்க.

அவன் என்றது நெஞ்சறி சுட்டு செலவு - செல்லுதல்.

பாலுண்ணுமை முதலியன தலைவியின் திருவுடைமையை விளக்கின. தலைவி பாலுண்ணு மறுத்தலை,

> "பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
> விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
> புடைப்பிற் சுற்றும் பூந்தலைச சிறுகோல்
> உண்ணென் றூக்குபு புடைப்ப.....
> ....
> எவன் மறுக்குஞ் சிறுவீ யாட்டி." (நற். ஙஙஅ)

எனவரும் நற்றிணைச் செய்யுளானும் உணர்க.

பாட்டு - நுகூஎ : தோழி கூற்று

துறை :—வரைவிடை வைத்து நீங்குந் தலைமகற்குத் தோழி உரைத்தது. அஃதாவது, வரைவிடைவைத்துப் பொருளீட்டப் பிரிகின்ற தலைவனுக்குத் தோழி தலைவியின் நிலை யுணர்த்தி, விரைந்து மீள்க என்பதுபடக் கூறியது.

இதன்கண், தோழி தலைவனை நோக்கி, 'பெருமானே! தாய் சினந்து அலைக்கும் குழவி அத் தாயையே புகல் புகுமாறு

போல; இன்ன செயினும் இனியவே செயினும் நந் தலைவி நின்னையே புகலாக் கொள்ளும் இயல்பினள்; அவள் துன்பம் களைவோர் வேறியாரு மிலர் என்பதை மறவற்க என்கின்றாள்.

நகூஎ நனைமுதிர் ஞாழற் சினைமருள் திரள்வீ
நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்பத்
தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்
டன்ன வென்னுங் குழவி போல
இன்ன செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினளென் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே.

—அம்மூவனார்.

(இ - ள்.) நனை முதிர் ஞாழல் சினை மருள் திரள் வீ - அரும்புகள் முதிர்ந்த ஞாழலினது முட்டைபோன்ற திரண்ட மலர்களை, நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல - நெய்தலினது கரிய மலரிலே பெய்யுமாறு போல, ஊதை தூற்றும் உரவு நீர்ச் சேர்ப்ப - குளிர் காற்றுத் தூவாநின்ற வலிய கடற்கரையையுடைய தலைவனே!, தாய் உடனலு அலைக்கும் காலையும் வாய் விட்டு அன்ன என்னுங் குழவி போல - தாய் மாறுபட்டுத் துன்புறுத்தும் பொழுதும் தன் வாய் திறந்து அத்தாயையே அன்னையே என்று புகல் புகும் குழந்தையைப் போல, இன்ன செயினும் இனிது தலையளிப்பினும் - நீ இன்னதவற்றைச் செய்தாலும அனறி இனிதாகத தலையளி செய்தாலும், என் தோழி நின் வரைப்பினள - என் தோழியாகிய தலைவி நினது எல்லையுட்பட்டவளே ஆவள், தன் உறு விழுமம் களைஞர் இலள் - நின்னை யல்லால் தனது மிக்க துன்பதைதைப் போக்குவாரைப் பெற்றிலள்.

விளக்கம்:—நனை - அரும்பு. ஞாழல் - ஒருவகை மரம். இதன் மலர் ஐயவி போன்றதென "ஐயவி யன்ன சிறுவீ ஞாழல் (குற.) என இந்நூலிற் போந்தமையான் ஈண்டுச் சினை மருள் திரள்வீ என்றது - மீன் முட்டையினை ஒத்த மலர் என்று கொள்க. கழியின்கண் மலர்ந்த நெய்தற் பூவில் ஊதை ஞாழல் மலரைப் பெய்வதுபோலத் தூவும் என்க. உரவுநீர் - கடல். சேர்ப்பன் - நெய்தனிலத் தலைவன். அளியே செய்யும் இயல்புடையதாய் என்பதுபட 'அலைக்குங் காலையும்' என்றான். தாய் குழவிக்கு எத்தகையள் அத்தகையன் நீ என் றோழிக்கு, நீ நெடிது பிரிந்து அவளைத் துன்புறுத்துவாயாஞல் அத் துன்பத்தைப் போக்கி அவளை உய்யக் கொள்வார் பிறரிலர் என்பாள். 'தன்னுறு விழுமம் களைஞர் இலள்' என்றாள்.

விழுமம் - துன்பம். நின் வரைப்பினள் - நினது அருள் எல்லையுட் பட்டவள் என்க. வரைப்பு - எல்லை.

பாட்டு - நகூஅ : தலைவி கூற்று

துறை:—பிரிவுணர்த்திய தோழி, தலைமகன் பிரிந்து வினை முடித்து வருந்துணையும ஆற்றியுளராவரென்று உலகின்மேல் வைத்து, உரைத்தாட்குத் தலைமகள் ஆற்றுமை மீதூரச் சொல்லி யது, அஃதாவது-தலைவன் பிரிந்து சென்றமையைத் தலைவிக் குணர்த்திய தோழி, மேலும் உலகிலுள்ள சிறந்த மகளிர் தந் தணவர் பிரிந்த காலத்தே ஆற்றியிருத்தலே மரபு எனத் தலைவி ஆற்றும் பொருட்டுக் கூறினளாகத் தலைவன் பிரிந்தான் என்றமை கேட்ட தணியாளே ஆற்றுமை மிக்கவளாய்விட்ட தலைவி அத்தோழியைக் கடிந்து கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, 'தலைவனின் பிரிவு ணர்த்தி என்னைத் தன்பத்துள் வீழ்த்துவாரையன்றி அவரது வருகையை உணர்த்தி எனது கண்ணீர் துடைப்பாரை யான் பெற்றிலேன்' என்று கூறுகின்றாள்.

நகூஅ. தேற்ற மன்றே தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைத் துயர்கூர் காலைக்
கயலே ருண்கட் கனங்குழை மகளிர்
கைபுனை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துய ரெடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
மெய்ம்மலி யுவகையி னெழுதரு
கண்கலி ழுகுபனி யரக்கு வோரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(இ - ள்.) தண் எனத் தூற்றும் துவலைத் துயர்கூர் காலை -குளிரும்படி தூவாநின்ற மழைத்துளியையுடைய துன் பம் மிகுகின்ற பொழுதில், கயல் ஏர் உண்கண் கனம் குழை மகளிர் - கயல் மீனை ஒத்த மையுண்ட கண்களையும் கனிய குழைகளையும் உடைய மகளிர்கள், கைபுனை ஆக நெய்பெய்து மாட்டிய-தம் கையே கருவியாக நெய்யை வார்த்துக் கொளுத் திய, சுடர் துயர் எடுப்பும் புன்கண் மாலை-விளக்குகள் துன் பத்தை எழுப்புதற்குக் காரணமான இடும்பையையுடைய மாலைக் காலத்தே, அரும்பெறல் காதலர் வந்தென-பெறுதற் கரிய தலைவர் வந்தாராக, விருந்து அயர்பு மெய்மலி உவகையின்

விருந்து செய்து உடம்பு தளிர்த்தற்குக் காரணமான மகிழ்ச்சியோடே, எழுதரு கண்கலிழ் உகு பனி அரக்குவேர் தேற்றும் முன்னரே உண்டான கண் கலங்கியதனுலே வீழ்கின்ற தளியை துடைப்போரை யாம் அறிந்திலேம்.

விளக்கம்:—தேற்றும் தன்மைப் பன்மை. அன்று, ஏ. அசை நிலைகள். துவலை - நீர்த்துளி. தண்ணெனத் தூற்றுந் துவலைத் துயர் கூர் காலை என்றது, குளிராலே துன்புறுத்தும் இயல்புடையதும் தனிமைத் துயர் மிகுதற்கு ஏதுவாவதுமாகிய இக் கூதிர்க்காலத்தே என்றவாறு. கயலோ உண்கண் கனங்குழை மகளிர் என்றுள் இயற்கை யழகுஞ் செயற்கையழகுமுடையார் என்பது தோன்ற: எர் - உவமவுருபு உண்கண் - மையுண்ட கண். புணை - ஈண்டு நெய்பெய்தற் குரிய கருவியைக் குறித்து நின்றது. விளக்கேற்றியவுடன் காதலர்பால் நெஞ்சு படர்ந்து துன்பம் தோன்றலின் சுடர் துயர் எடுப்பும் மாலை என்றுள். காலை நண்பகல் மாலை என்னும் முப் பொழுதினும் மாலைப் பொழுதே காமநோய் மலரும் பொழுதாகலின் 'புன்கண் மாலை' என்றுள், புன்கண் - துன்பம்.

தலைவர் மீண்டு வந்தவுடன் விருந்து செய்து மகிழ்தல் மரபாகலின் 'விருந்து அயர்பு மெய்மலி உவகை' என்றுள், பனி அரக்குதற்கு உவகை ஏதுவாம் என்க.

தலைவன் பிரிவுணர்ந்தி வற்புறுத்தும் வன்கண்ணரை யன்றி அவர் வரவு கூறி மகிழ்விப்பாரைப் பெற்றிலேன் என்றவாறு.

மாலைப் பொழுதிலே மனைதோறும் விளக்கேற்றுதல் மரபு. இதனை, "மங்கையர் நெய்யுமிழ் சுரையர் நெடுத்திரிக் கொளீஇக், கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட," (முல்லைப் - சுள - கஅ) "மாலை மணிவிளக்கங்காட்டி இரவிற்கோர், கோலங் கொடியிடையார் தாங் கொள்ள," (சிலப் - ஈ: கக உ0) என்றும் பிறசான்றோர் ஓதுமாற்றானும் உணர்க.

பாட்டு - ஙஙஙஙு: தலைவி கூற்று

துறை:—வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது, தலைவன் வரைதற் கருத்தின்றிக் களவின்பமே விரும்பி ஒழுகுவானுக, அவ் வொழுக்கத்தினுல் தனக்கு உண்டாகும் இன்னுமையைத் தலைவி தோழிக்குக் கூறியது.

இதன்கண், தலைவி தோழியை நோக்கி, தலைவர் தழுவுங் கால் விலகியும், அவர் தணந்துழிப் பரவியும், இப் பசலைநோய் ஊரூண்கேணி உண்டுரையின்கண் உள்ள நீர்ப்பாசி ஒல்கின்றது காண்என்கின்றாள்.

நுகூகூ. ஊருண் கேணி யுண்டுறைத் தோகக
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

—பரணர்.

(இ - ள்.) தோழி!, காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி-நம் காதலர் முயங்குந்தோறும் முயங்குந்தோறும் விலகி, விடுவுழி விடுவுழிப் பரத்தலான்-அவர் பிரியுந்தோறும் பிரியுந் தோறும் பரவாநிற்றலானே, பசலை ஊருண் கேணி உண் துறை தொக்க பாசி அற்று - இப் பசலை நோய் ஊர்மக்களானே உண்ணப்படும் கேணியின்கண்ணே கூடிய பாசியையே ஒப்பா கின்றது.

விளக்கம்:—ஊருண் கேணி-ஊராரானே உண்ணப்படும் சிறுகுளம் எனினுமாம். நீரின்கட் பரவிய ஒருவகைப் பச்சைப் பாசி, அந்நீர் முகக்குங்கால்விலகுதலும் ஏனப் பொழுதின் யாண்டும் பரவி நீரை மறைத்தலும் இன்றுங் காணப்பட்டது. "பாசிபடு குட்டத்திற் கல் லினெவிட் டெறியப்படும்பொழுது நீங்கி, அது விடும்பொழுதிற் பரக் கும்" (உகக.) எனவரும் சிவஞான சித்தியார்ச் செய்யுளும் காண்க.

"விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (குறள் - ககஅசு.)

எனவருந் திருக்குறளும், "விடுவழி விடுவழிச் சென்றுங் கவர், தொடு வழித் தொடுவழி நீங்கின்றுற் பசப்பே," (கநூ0) எனவரும் கலியும் ஈண்டு நினைக்கற் பாலன.

தலைவனை வரைந்து கொள்ளும்படி தூண்டுமாறு தலைவி தோழிக் குக் குறிப்பாலுணர்த்தினளாக நினைக.

பாட்டு - சஂ00: தலைவன் கூற்று

துறை :—வினைமுற்றி வந்த தலைவன் தேர்ப்பாகனைத் தலை யளித்தது. அஃதாவது, தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்ற தலைவன், அவ்வினை முற்றியவழி மீண்டுவந்து தலைவி யைக் கண்ட பின்னர் தன் கருத்திற்கியையத் தேரினைக்கடிது செலுத்திய தேர்ப்பாகனைப் பாராட்டி மகிழ்வித்தது.

இதன்கண், தலைவன் பாகனைநோக்கி, நெடிய வழியிலே செல்வே மெனின், இன்றுபோய்த் தலைவியின் இடும்பை களை தல் அரிதென எண்ணினையாகிப் புதுவதாகக் குறுகிய வழி யொன்றை உண்டாக்கி அவ்வழியே விரைந்து வந்தமையானே தலைவிக்கு இறந்துபாடு எய்தாமற் காத்தனை நீதேர் தந்தாய்

என்றல் புல்லிது, தலைவியையே உயிரோடு தந்தனைகாண் எனப் பாராட்டுகின்றான்.

சஂ. சேயாறு செல்வா மாயின் இடரின்று
கழைகலம் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் உடைய வேகிக் கரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்
இன்று தந்தனை தேரோ
நோயுழந் துறைவியை நல்க லானே.

—பேயனார்.

(இ - ள்.) சேய் ஆறு செல்வாம் ஆயின் - பழையதூரிய வழியாற் செல்வோமானால், காமம் பெருந்தோட்கு இடர் இன்று கழைகலம் என்று - காமநோயுடைய பரிய தோளையுடைய தலைவிக்குத் துன்பத்தை இன்றே களைய மாட்டேமென்று, நன்று புரிந்து எண்ணிய மனத்தை ஆகி - நன்மையை விரும்பி நினைத்த நெஞ்சத்தை உடையையாகி, முரம்புகண் உடைய ஏகி - பருக்கைகளையுடைய மேட்டுநிலமாகிய இடம் நூறுங்கும்படி சென்று, புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்- புதிய வழியை உண்டாக்கிய அறிவுடைய வலவனே!, நோய் உழந்து உறைவியைத் தருதலான் - நோயினால் வருந்தி உறையாநின்ற தலைவியை இறந்துபடாமல் எனக்கு நீ தந்தமையானே, இன்று தேரோ தந்தனை - இன்று நீ தேரையோ தந்தனை! தலைவியையன்றே எனக்கு அளித்தாய்.

விளக்கம்:—சேயாறு - தூரிய வழி. புதுவழிப்படுத்த என்றமையால் சேயாறு பழையவழி என்பது பெற்றாம். 'சேயாறு சுற்றி வளைந்து சேறலின் அதன்மிசைச் செல்வோம் எனின், இன்றே சென்று இடர் களையமாட்டோம்: காமநோயுடைய தலைவிக்கு என்று நன்று கருதிக் கரம்பைப் புதுவழிப் படுத்து அவ்வழியே வந்த 'மதியுடை வலவ,' என்றான் என்க.

நன்று புரிந்து எண்ணிய மனத்தை என்றது, தலைவி இறந்து படாமல் உய்யக்கொள்ளக் கருதிய மனத்தை என்றவாறு.

குறுக்குவழி காண்பான் முரம்பு கண்ணுடையச் செலுத்தினான் என்க. புதுவழி, குறுகிய புதுவழி என்க.

விரைந்து சேறற்குத் தானே தன் அறிவாற் புதுவழி காண்டலின் 'மதியுடை வலவ!' என அவன் அறிவுடைமையைப் பாராட்டினான் என்க. இங்ஙனம் நீ புதுவழிப்படுத்து இன்றே வந்திராவிடின் தலைவி நோயால் இறந்துபடுதல் ஒருதலை; அங்ஙனமாகாவாறு தலைவியை உய்யக் கோடலின் தலைவியை நீயே எனக்குயிருடன் அளித்தாய்

என்பான், இன்று தோரோ தந்தாய் என்றான்; தலைவியையே தந்தாய் என்பது குறிப்பெச்சம்.

நோயுழந்துறைவி என்றது, நாம் குறித்த பருவத்தே வருவேம் என்னும் எண்ணம் பற்றுக்கோடாகப் பெருந்துன்பம் உழந்தும் உயிர்த்திருந்தவள் என்பதுபட நின்றது. எனவே, நாம் குறித்த பருவமாகிய இன்று வந்திலேமெனில் அவள் உயிர்நீப்பது தேற்றம் என்பது குறிப்பு. பெருந்தோள்: அன்மொழித் தொகை. தன்னைக் காண்டலும் தோள்கள் தடித்து அழகுறலானே, 'பெருந்தோள்' என்றான்.

பாட்டு - சூழல்: தலைவி கூற்று

துறை :—வேறுபாடுகண்டு இற் செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே சொல்லியது. அஃதாவது, தலைவியின் உடல் நிலை வேறுபட்டமை கண்டதமர் அவளைப் புறம் போகாது இற் செறித்தது ஒம்பிய வழித் தலைவி அந்நிலையின் இன்னலைத் தனக் குள்ளே சொல்லியது.

இதன்கண், 'துறைவனேடே கொண்ட மெய்தோய் நட்பா லுண்டான வேறுபாடு அவனைக் காணுமலே வருந்தும் நிலையினைத் தந்தது இஃதொரு வியப்பே' என்று தலைவி தன் னுள்ளே சொல்லிக் கொள்கின்றனள்.

சூழல். அடும்பி னெய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தோடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஒரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனே டொருநாள்
நக்குவிளை யாடலுங் கடிந்தன்
றறைதே கம்ம மெய்தோய் நட்பே.

—அம்மூவனார்.

(இ - ள்.) அடும்பின் ஆய் மலர் விரைஇ - அடும்பினது ஆராய்ந்தெடுத்த மலர்களைக் கலந்து, நெய்தல் நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல் ஒரை மகளிர் அஞ்சி-நெய்தன் மலராற் புனைந்த நெடிய மாலையை அணிந்தமையானே நீர் ஒழுகாநின்ற விளையாட்டு மகளிரை அஞ்சி, ஈர் ஞெண்டு கடலில் பரிக்கும் துறைவனொடு - குளிர்ச்சியுளள நண்டு கடலினுள்ளே ஓடுதற்குக் காரணமான துறையையுடைய தலைவனேடே, ஒருநாள் நக்கு விளையாடலும் - எப்போதாவது ஒருநாள் நகைத்து விளையாடு தலையும், மெய் தோய் நட்புக் கடிந்தன்று - அவனுடைய மெய்யைத் தீண்டுதற்குக் காரணமான நட்பு விலக்கியது, ஐதேகம்ம - இது வியத்தற்குரியது.

வினக்கம்:—மெய்தோய்தற் குரித்தாகிய நட்பு நக்குவிளையாடற்கும் இடனிலதாக்கியது வியத்தற்குரியது என்க. விளையாடலும் என்பதன் உம்மை இழிவுசிறப்பு. அடும்பு - நெய்தனிலத்துப் படர்வதோர் பூங்கொடி. ஆய்மலர் - ஆராய்ந்து பறித்தமலர் எனினுமாம். விரைஇ - விரவி : கலந்து. நீர்ப்பூவாகிய நெய்தல்மலர்த் தொடையல் சூடலின் கூந்தலில் நீர்வார்ந்தது என்க. நெடுந்தொடை - நீண்டமாலை. ஓரை - விளையாட்டு மகளிர் நண்டைப் பிடித்து அலைத்து விளையாடுவாராகலான் அவரை அஞ்சி அது கடலுள் ஒடிற்று என்க.

பரித்தல் - செல்லுதல். துறைவன் - நெய்தனிலத் தலைவன். ஒருநாள் என்றது யாண்டேனும் செவ்விபெற்ற ஒருநாள் என்பதுபடநின்றது ; களைவொழுக்கத்திற் செவ்விபெறலும் அருமையே ஆகலின்; கடிந்தன்று - கடிந்தது; விலக்கியது. ஈண்டு மெய்தோய்தற்குரிய தொன்றே விளையாடலும் கடிதற்கு ஏதுவாகலின் இதன்கண் ஒன்று ஒன்றுய்த் திரிந்தது எனப்பட்ட ஆக்கம்பற்றி மருட்கை தோன்றிற்று என்க.

ஐது வியப்புடையது.

"ஐவியப்பாகும்" (தொல். உரி - அஎ)

என்பது தொல்காப்பியம்.

எகு - அசைநிலை.

"ஐதேகம்ம இயைந்து செய்பொருளே." (நற்றிணை : ருஉ)

எனவரும் நற்றிணையினும் எகு என்னும் அசைபயின்று வந்தமை காண்க. ஐதே காமம் என்றும் பாடம். இதற்குக் காமம் வியத்தற்குரியதென்று பொருள் காண்க.

இத்தொகை முடித்தான் பூரிக்கோ.

இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்.

இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும், எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது.[1]

குறுந்தொகை மூலமும் உரையும் முற்றுற்றன.

---

1. ஈண்டுக் கூறிய அடிவரையறைக்கு மூலாணி, கூ0எ-ஆம் செய்யுளும் நகூக-ஆம் செய்யுளும் ஒன்பது ஒன்பது அடிகளை உடையனவாகக் காணப்படுகின்றன.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

	பக்கம்		பக்கம்
அகவன் மகளே	ஈடு	அன்னாய் இவணேர்	நிo
அஞ்சி லோதி	ஈoஎ	ஆசில் தெருவில்	சகக
அஞ்சுவ தறியா	ஈசஎ	ஆடமை புரையும்	ககக
அடும்பவிழ் அணிமலர்	நிஉக	ஆம்பற் பூவின்	சுஅ
அடும்பி னுய்மலர்	(நிகநி)	ஆய்வளே நெகிழவு	சஎஉ
அணிற்பல் அன்ன	எஉ	ஆர்கலி மிதித்த	எசு
அதுகொல் தோழி	கo	ஆர்கலி யேற்றெருடு	உஎo
அதுவர லன்மையோ	ஈடசுஈ	ஆர்கலி வெற்பன்	நிஉஅ
அத்த வாகை	நிநிஉ	இடிக்குங கேளிர்	அநி
அமர்க்க ணுமான்	சஅஉ	இதுமற் ..துணியிடை	உசுஉ
அமிழ்தத் தன்ன	உகஙக	இதுமற் ..முதுநீர்ப்	சசஎ
அமிழ்த முண்கநம்	உகஉ	இரண்டறி கள்விங்கு	சசுஎ
அமிழ்துபொதி செங்கா	உடி	இருங்கண் ஞாலத்	ஈடகநி
அம்ம...அன்னைக்	நிசo	இருள்திணிந் தன்ன	கஎஅ
அம்ம...இன்றவர்	நிசுo	இலங்குவளே நெகிழச்	கஅக
அம்ம...காதலர் இன்னே	சஉஎ	இலையி லஞ்சினை	ஙஎஙட
அம்ம...காதலர் நூலறு	கநிக	இல்லோன் இன்பங்	கஎநி
அம்ம ..கொண்கன்	ஙடஎ	இவளே, நின்சொற்	ககஅ
அம்ம ..நம்மூர்ப்	உகஉ	இவனிவ ளோம்பால்	டஈடநி
அம்ம...நம்மொடு	கஈநி	இழையணிந் தியல்வருங்	நிகசு
அம்ம ..புன்னை	சசக	இளமை பாரார்	கஅடி
அம்ம...முன்னின்று	நிஉடி	இனமயில் அகவு	ஈடசுநி
அம்ம...பாவதும்	ககஉ	இன்றியாண் டையளே	நிசுநி
அம்ம வாழியோ	நிஅஉ	இன்றே சென்று	உஎஈ
அயிரை பரந்த	உநிஎ	இன்ன ளாயினள்	கசஉ
அரிற்பவர்ப் பிரம்பின்...நீர்	கஎடி	ஈங்கே வருவர்	உஎஅ
அரிற்பவர்ப் பிரம்பின்..வியோ	நிசசி	ஈதலும் துய்த்தலும்	ஈஉ
அரும்பற மலர்ந்த	டிஈ	உடுத்துங் தொடுத்தும்	சசo
அரும்பெறல் அமிழ்தம்	கஉக	உதுக்கா ணதுவே	உஎசு
அருவிப் பரப்பின்	கசநி	உமணர் சேர்ந்து	கஅo
அருவி யன்ன	சoஉ	உரைத்திசின் தோழியது	சநிக
அருவி வேங்கைப்	கசo	உவரி யொருத்தல்	நிஅக
அருளும் அன்பும்	டிக	உழுந்துடைக் கழுந்திற்	நிஎஉ
அலர்யாங் கொழிவ	சசுநி	உளளது சிதைப்போர்	சஉக
அல்குறு பொழுதில்	சoநி	உள்ளார்.....கள்வர்த்தம்	உநி
அவரே, கேடில்	ஙகசி	உள்ளார்.....கிள்ளே	ஈஎ
அவரோ வாரார்	ஈஉஉ	உள்ளார்...உள்ளியும்	ஙசo
அவ்வினிம் புரீஇய	சசஙட	உள்ளிக் காண்பென்	சஉசு
அழிய லாயிழை	உoஎ	உள்ளினென் அல்லளே	கசஙட
அளிதோ தானே	உகசு	உள்ளின் உள்ளம்	கசஅ
அறந்தலைப் பட்ட	ஙoஙட	உறவளி உளரிய	சகஙட
அறிகரி பொய்த்தல்	உசுஎ	உறைபதி யன்றித்	உகo

	பக்கம்		பக்கம்
ஊஉ ரலரெழச்	ந_அ அ	கன்று முண்ணுது	சக
ஊருண் கேணி	(ந)கூஉ	கானினி வாழி தோழி	உசசு
ஊர்க்கும் அணித்தே	ககசந	காதலர் உழைய	சுக
எந்தையும் யாயும்உணரக்	(ந)(ந)அ	காந்தளங் கொழுமுகை	ங_கூஉ
எம்மணங் கினவே	எஅ	காந்தள் வேலி	ககO
எலுவ சிறுஅர்	கஅள	காமங் கடையிற்	(ந)Oக
எல்லாம் எவனே	சஅ_	காமங் காமம் என்ப	ககள
எல்லும் எல்லின்று	(ந)அO	காமந் தாங்குமதி	சங_உ
எல்லே கழிய	(ந)எசு	காமம் ஒழிவ	சுங_
எவ்வி இழந்த	உக	காமம் காமம்	உகசு
எழின்மிக வுடைய	ந_சுக	கார்புறந் தந்த	உ_ச
எழுதரு மதியங்	சஎக	காலையும் பகலும்	சக
எறிசுறாக் கலித்த	சஎ(ந)	காலை யெழுந்து	சுசு
எறும்பி யஃயிற்	உO	சாலே பரிதப்	சுந
எற்றே வாழி	க(ந)உ	கானங் கோழி	ந_(ந)ச
என்னெனப் படுங்கொல்	உ_அக	கான மஞ்ஞை	(ந)எ
ஐயவி அன்ன	எ(ந)_	கான யானை	ககந
ஓடுகீர் ஓதி	கOக	கான விருப்பை	சக(ந)_
ஒருநாள் வாரலன்	உ(ந)(ந)_	தூக்கு வென்றது	உஉஎ
ஒலிவெள் ளருவி	கஉக	குணகடல் திரையது	கஅசு
ஒறுப்ப வோவலர்	(ந)உ	குருகுகொளக் குளித்த	கஅச
ஒன்றே னல்லேன்	ந_Oஉ	குருகும் இருவிசும்	ந_அ சு
ஓம்புமதி வாழியோ	ந_சச	குவளை நாறுங்	சசஅ
ஓரூர் வாழினும்	ந_ந_அ	குவியிணர்த் தோன்றி	கந(ந)சு
கடலங் கான	ந_(ந)அ	குறுந்தாட் கூதளி	அள
கடலுட னுடியும்	சந_க	குறும்படைப் பகழிக்	சகஅ
கடல்பா டவிந்து	உ(ந)(ந)	குன்றக் கூகை	உஉக
கடும்புனல் தொகுத்த	கந(ந)O	கூந்தல் ஆம்பல்	கக சு
கணைக்கோட்டு வாளை	உ(ந)_எ	கூன்முண் முண்டகக்	எந
கண்டிசிற் பாண	(ந)(ந)_எ	கேட்டிசின் வாழி	சந
கண்ணி மருப்பின்	(ந)சந_	கேளா ராகுவர்	ந_எஉ
கணைதா வந்த	சந(ந)	கேளிர் வாழியோ	சகசு
கருங்கண் தாக்கலை	கOO	கைவலை நெகிழ்தலும்	(ந)(ந)சா
கருங்கால் வேங்கை	சுக	கைவினை மாக்கடம்	சர உ
கருங்கால் வேம்பின்	ந_சு	கொங்குதேர் வாழ்க்கை	சு
கலிமழை கெழீஇய	ந_கக	கொடியோர் நல்கா	(ந)சக
கலைகை தொட்ட	(ந)கஉ	கொடுங்கால் முதலைக்	சஅ(ந)
கல்லென் கானத்துக்	உ(ந)க	கொண்கன் ஊர்ந்த	ந_Oக
கவலை கெண்டிய	ந_சக	கொல்வினைப் பொலிந்த	சந(ந)ச
கவலை யாத்த	ந_உள	கொன்னூர் துஞ்சினும்	உOO
கவவுக் கடுங்குரையள்	ககஉ	கோடல் எதிர்முகைப்	கக
கழனி மாத்து	கச	கோடீர்...நாடொறும்	கஅ
கழிதேர்ந் தசைஇய	சந(ந)உ	கோடீர்...நாளும்	(ந)சசு
கழிய காவி குற்றும்	உOக	கௌவை யஞ்சிற்	கசச
கள்ளிற் கேளிர்	சந_எ	சிறுவீ ஞாழல்	சகக
கறிவளர் அடுக்கத்	சஉக	சிறுவெண் காக்கைச்	(ந)OO
கன்றுதன் பயமுலை	ந_உக	சிறுவெள் ளரவின்	கஎந_

	பக்கம்		பக்கம்
சிறைபனி உடைந்த	கஉசு	நலத்தகைப் புலத்தி	சகூடு
சுடர்சினந் தணிந்து	உஅஉ	நல்கின் வாழும்	சகூ0
சுடர்செல் வானஞ்	ஙடசஙட	நல்லுரை யிகந்து	சசச
சுடுபுன மருங்கிற்	சஙடஙட	நள்ளென் றன்றே	ககக
சுரஞ்செல் யானைக்	உசஙட	நறையகில் வயங்கிய	டுOஅ
சுனைப்பூக் குற்றுத்	உOசு	நனைமுதிர் ஞாழற்	ருகூO
செங்களம் படக்கொன்	ச	நன்னலங் தொலைய	கஙடசு
செப்பினஞ் செலினே	ஙடOO	நாகுபிடி நயந்த	டுகள
செல்வச சிரூ அர்	உகடு	நாணில மன்றவெங்	ருஙட
செல்வார் அல்லரென்	சுச	நீரைவளை முன்கை	டுOக
செவவரைச சேக்கை	உளக	நிலத்தினும் பெரிதே	எ
செவ்விகொள் வரகின்	சகக	நிலஙதொட்டுப் புகாஅர்	கஅகூ
செறுவர்க் குவகை	டுOஙட	நிலம்புடை பெயரினு	ருடுள
சென்ற நாட்ட	உசுடு	நிழலான் றவிந்த	ருஙடஉ
சேணெண் மாட்டிய	உகள	நினையாய் வாழி	டுகஙட
சேயாறு செல்வா	டுகூச	நீகண் டனையோ	கOக
சேயாறு சென்று	ஙடகூகூ	நீயுடம் படுதலின்	டுளக
சேயுயர் விசும்பி	சளO	நீரகால் யாத்த	டுளள
சேரி சேர மெல்ல	சசடு	நீர்நீ டாடிற்	டுஉகூ
சேறிரோ எனச	ஙடகூள	நீர்வார் கண்ணே	ஙடஙட
சேறஞ் சேறு மென்றலின்	சஅசு	நுதல்பசப் பிவர்ந்து	உசுஅ
சேலே வாழைச	சசுக	நெஞ்சே நிறையொல்	டுஅள
ஞாயிறு காயாது	டுசுச	நெடிய திரண்ட	ஙடள0
ஞாயிறு பட்ட	ககஙடு	நெடுங்கழை திரங்கிய	சகூசு
தச்சன் செய்த	அக	நெடுநீ ராம்பல்	டுஉசு
தண்கடற் படுதிரை	உஙடக	நெடுவரை மருங்கிற்	உஉஅ
தண்துளிக் கேற்ற	டுசுகூ	நெய்கனி குறும்பூழ்	டுளக
தலைப்புணைக் கொளினே	ஙடஉஙட	நெய்தற் பரப்பிற்	ககசுசு
தழையணி அல்குல்	உஉக	நெருப்பி னன்ன	உஙக
தாஅ வஞ்சிறை	உசள	நெறியிருங் கதுப்பொடு	உளடு
தாதிற் செய்த	எக	நோம்என் நெஞ்சே...புன்	கூ
தாமரை புரையுங் காமர்	க	நோமென் னெஞ்சே..இமை	உகூஙட
தாமே செல்ப	டுஉO	நோற்றோர் மன்ற	டுகடு
தாழிருள் துமிய	சOO	படரும் பைப்பயப்	ஙகஙட
தினைடோர் நள்ளி	ஙடO டு	பணைத்தோட் குறுமகள்	சகO
திரிமருப் பிரலே	டுO சு	பதலைப் பாணிப்	அசு
திரிமருப் பெருமை	சகடு	பயப்பென் மேனி	ஙடகக
தினைகிளி கடிகெனிற்	ஙடகசு	பரலவல் படுநீர்	ஙடசுசு
தீண்டலும் இயைவது	சOஙட	பருவத் தேனசைஇப்	உடுஉ
துணைத்த கோதைப்	சஅஅ	பலவிற் சேர்ந்த	டுளஙட
துறுக லயல்து	டுடு	பலவும் கூறுகவஃ	உசடு
தேற்ரு மன்றே	டுகக	பல்லா நெடுநெறிக்	கூஙூ
தொடிநெகிழ்ந் தனவே	ஙடஙO	பல்லோர் துஞ்சு	ஙடுள
தொல்கவின் தொலைந்து	டுசுஅ	பல்வீ பட்ட	டுகO
நசைநன் குடையர்	கடO	பழமழைக் கலித்த	கஉக
நசைபெரி துடையர்	டுசு	பழமழை பொழிந்தெனப்	கஉஅசு
நமக்கொன் றுரையா	ஙகூச	பழுஉப்பல் அன்ன	உசுO

பகிசம்		பகிகம்	
பறைபடப் பணிலம்	உசா	மருந்தெனின் மருந்தே	கOஉ
பனிப்புத லிவர்ந்த	ஙடுங்க	மலரேர் உண்கண்	ஙுசூஉ
பனைத்தலைக் கருக்குடை	ஙுஙுங	மலைச்செஞ் சாந்தின்	சஅO
பாசவ லிடித்த	ஙடசகூ	மலையிடை யிட்ட	உகூச
பார்ப்பன மகனே	உஉஙு	மல்குசுனை புலர்ந்த	ஙுகூ
பாலும் உண்ணுள்	ஙுஅஅ	மழைசேர்ந் தெழுதரு	ஙடஅஉ
பால்வரைந் தமைத்த	ஙுசள	மழைவிளை யாடுங்	கஙுஅ
பாவடி உரல	கஙடO	மள்ளர் குழீஇய	சள
புரிமட மரையான்	சளச	மறிக்குர லறுத்துத்	ஙடகO
புல்வீழ் இற்றிக்	கஙுஙு	மனையுறை கோழிக்	உOஉ
புள்ளும் புலம்பின	சகுங	மன்ற மராஅத்த	கஉள
புள்ளும் மாவும்	களஉ	மன்னுயிர் அறியாத்	ஙுசுக
புறவுப் புற்றத்தின்ன	சOள	மாக்கழி மணிப்பூக்	அO
புனவன்...கடியுண்	கஙுஙட	மாசறக் கழீஇய	உக
புனவன்... கிளிகுறைத்	ககஙட	மாரி ஆம்ப லன்ன	களO
பூண்வனைந் தன்ன	ஙடஙஉ	மாரிப் பித்திகத்து	உசஉ
பூவிடைப் படினும்	அடட	மால்வரை இழிதருந்	கடகூ
பூவொடு புரையுங்	டடடக	மாவென மடலும்	உள
பூவொத் தலமருந்	கOச	மானடி யன்ன	ஙடுஙு
பூழ்க்கா லன்ன	கூகூ	மானேறு மடப்பிணை	சளள
பெயர்த்தனென் முயங்க	கஉடட	மீன்னுசசெய் கருவிய	உகூள
பெயல்கண் மறைத்தலின்	ஙுடடக	முகைமுற் றினவே	உளஉ
பெயன்மழை துறந்த	உஙுO	முட்கால் இறவின்	கஙுகூ
பெய்த குன்றத்துப்	உகூO	முதைப்புனங் கொன்ற	உஉச
பெருங்கடற்...களிற்றுச்	டடசூO	முருகயர்ந் துவந்த	ஙுசக
பெருங்கடற்...நீத்து	சசுஅ	மூலையே முகிழ்முகிழ்த்	ஙுOச
பெருங்கடற் பரதவர்	சளஅ	மூல்லை யூர்ந்த	சOஅ
பெருநண் ணுற்றிற்	ககூள	மூழந்தாள் இரும்பிடிக்	ஙுஅஙு
பெருந்தண் மாரிப்	கடடஅ	மூழவுமுத லரைய	சஙுO
பெருவரை மீசையது	ககடட	மூளிதயிர் பிசைந்த	உசக
பெரூர் கொண்ட	ஙடஉஙு	மூனிபடர் உழந்த	ஙுடஙட
பெறுவ தியையா	உஅக	மூட்டு வேன்கால்	சஉ
பைங்காற் கொக்கின்	களள	மெய்யோ வாழி தோழி	களசூ
பொத்தில் காழ	டளசூ	மெல்லிய இனிய	சஙுஅ
பொய்கை யாம்ப	ஙுஙுட	மெல்லிய லோயே	ஙுஙுO
பொருத யானைப்	சஉஉ	மெல்லியல் அரிவைகின்	ககூக
பொழுதும் எல்லின்று	உடஉ	மென்தோள் நெகிழ்த்த	கசூஉ
பொன்னேர் ஆவிரைப்	உசஅ	யாஅங் கொன்ற	உஅள
மகிழ்நன் மார்பே	கOஙு	யாங்கறிந் தனர்கொல்	உஉஉ
மகிழ்ந்தநன் றலையும்	உடஅ	யாதுசெய் வாங்கொல்	உஅசூ
மடவ மன்ற	கூசூ	யாமெங் காமந்	ஙடஙட
மடவ வாழி	டசூஅ	யாயா கியளே மாஅ	சஙு
மட்டம் பெய்த	உஅப	யாயா கியளே விழவுமுத	கள
மணிவார்ந் தன்ன	டளள	யாயும் ஞாயும்	சூO
மண்ணிய சென்ற	சஙடு	யாரணங் குற்றனை	உடஙு
மயங்குமலர்க் கோதை	ஙுஅச	யாரினும் இனியன்	கஉச
மரங்கொல் கானவன்	டக உ	யாரும் இல்லைத்	டஅ

	பக்கம்		பக்கம்
யாவதும் அறிகிலர்	๒๒๐	விட்டென விடுக்குநாள்	๙๕๗
யானையங் துறைவோள்	๔๕๕	விரிதிரைப் பெருங்கடல்	๔๕๑
யானே ஈண்டை...ஆஞ	๔๕๔	வில்லோன் காலன	๔๒
யானே யீண்டை...எனல்	๑๔	விழுத்தலைப் பெண்ணை	๒๕๙
வங்காக் கடந்த	๒๔๘	வினையே ஆடவர்க்	๔๔๕
வண்டுபடத் தைதந்த	๙๒	வீங்கிழை நெகிழ	๗๙๗
வந்த வாடைச்	๕๕๑	வீழ்தாழ் தாழை	๙๒๙
வளர்பிறை போல	๕๙๔	வெண்மணல் விரிந்த	๗๑๗
வளையுடைத் தனைய	๕๗๕	வெண்மணற் பொதுளிய	๕๔๑
வளையோய் உவந்திசின்	๗๒๗	வெந்திறற் கடுவளி	๗๕
வளைவாய்ச் சிறுகிளி	๒๐๕	வெறியென உணர்ந்த	๗๙๘
வன்பரல் தெள்ளறல்	๕๗	வேட்டச செந்நாய்	๘๒
வாரலெஞ் சேரி	๙๘๐	வேதின வெரிநின்	๒๐๙๒
வாரா ராயினும்	๔๕๔	வேம்பின் பைங்காயென்	๒๘๕
வாருறு வணர்கதுப்	๔๒๐	வேரல் வேலி	๒๘
விசும்புகண் புதையப்	๗๕๕	வேரு முதலும்	๙๑๔
விடர்முகை யடுக்கத்து	๙๔๘	வேனிற் பாதிரிக்	๒๔๙๒
விட்ட குதிரை	๔๐๑	வைகல் வைகல்	๕๒๕

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை
முற்றும்

அருஞ்சொற்பொருள் அகரவரிசை

[எண் செய்யுள் எண்]

அஃகியோன்-குறைவுற்றோன் ௩௪சு
அஃதயர்கம் - அவ்வினையாட்டை ஆடுவேம் அ0
அஃதறியாதோர் - அவ்வுண்மை யறியாதவர் க௭0
அஃது அஞ்சுவதுடையளாயின் - அவ்வினையாட்டை அஞ்சுவா ளாயின் அ0
அஃதெவன்-அதனால் யாது பயன் உ௩௭, உ௫க
அகலம் - மார்பு க௫0
அகலிருவிசும்பு - அகன்ற பெரிய வானம் சா௩
அகல்வாய்க்குண்டு சுனை - அகன்ற வாயையுடைய ஆழமான சுனை ரு௯
அகல்வாய் வானம் - அகன்ற இடத்தையுடைய விசும்பு ௯உ
அகவன் மகள் - தெய்வங்களை அழைத்துப்பாடும் கட்டுவிச்சி உ௩
அகறல் - பிரிதல் எ௯
அகனுறத் தழீஇக் கேட்குநர்-உள்ளம் பொருந்த விரும்பிக் கேட்பவர் உ ௯
அகன்ற ஞான்று-பிரிந்தபொழுது சக
அகன்றலை - அகன்ற இடம் க௨ச
அகன்று வந்தென-பிரிந்து சென்றனவாக சுச
அகுதை - ஒரு வள்ளல் உ௯அ
அகல்-அந்தக்காலம் உளெ
அக்கொடியோன் - அந்தக் கொடுமையுடைய தலைவன் உசு
அங்கலுழ்மேனி - அழகு ஒழுகும் மேனி கசர௩
அங்கவடி - அழகிய கிளை க௫ச
அங்கால்-அழகிய அடி கசு
அங்குடிச் சீறூர்-அழகிய குடிகளையுடைய சிறியவூர் சக, எக
அசாவா - வருந்தாமல் உ௯க
அசைஇய - இளைப்புற்ற ௩0௩
அசைவளி - இயங்குங் காற்று உஅ
அச்சிரம் - பனிக்காலம் சுஅ
அஞர் - வருத்தம் ௩0ரு
அஞ்ச - அஞ்சும்படி கச
அஞ்சலை-அஞ்சாதே கொள் ௩00
அஞ்சல் எஞ்சினம் - அஞ்சுதலை நீங்கினேம் உக௯
அஞ்சல் என்மர்-அஞ்சாதே என்று ஆற்றுவிப்போர் ர௩.௯ரு
அஞ்சி - அதியமானஞ்சி ரூக
அஞ்சிறை - அழகிய சிறகு உ
அஞ்சுடர் - அழகிய ஒளி. (கடவுள் வாழ்த்து)
அஞ்சு வருபொழுது - அச்சமுண்டாகும் காலம் உசுக
அடிபொறிப்ப-அடிச்சுவடுண்டாக உ0எ
அடும்பிவர் மணற்கோடு-அடும்பங் கொடி படர்ந்த மணற் குன்று உசஅ
அடைகரை - நீரை அடைத்து நிற்கும் கரை களக
அடைசசி - உடுத்தி அ0
அட்ட - கொன்ற ௩சு
அணங்கியாங்கு - வருத்தினாற் போல ககக
அணங்கு - தெய்வம் ௩0அ
அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம் கர௩சு
அணங்குக - வருத்துவதாக கசுச
அணல - அலைதாடியையுடையன ௩சுச
அணவந்தன்ன-தலையை நிமிர்த்தி நோக்கினாற்போல சுச
அணவந்தாங்கு - எடுத்து நோக்கினாற்போல கஉஅ
அணிகொண்ட - அழகாகக் கொண்ட உஉ
அணிநிறக் கொழுமுகை - அழகிய நிறமுடைய கொழுவிய அரும்பு ௩எ0

அணிப்படூஉம் - அண்மையிலுண்டாகும உசஎள
அணிலாடு முன்றில்-அணில் விளையாடும் முற்றம் சக
அணிற்பல்லன்ன - அணிலின் பல்லை ஒத்த சகூ
ஆணேஇய - அணைந்த நூகஅ
ஆணெல்லியள் - பஞ்சனை போன்றமென்மையுடையள் எ0
ஆணையுங்கால் - தழுவும்பொழுது எ0
ஆண்டர் - இடையர் ககஎ
ஆண்ணல்-தலைமைத்தன்மை உரு0
ஆண்ணல் நல்லேறு - தலைமையுடைய நல்ல ஆண்மான் நூ்அ
அதற்பட்டு - அதன்க ணகப்பட்டு கஅச
அதிகன்-ஒரு பாண்டியன் படைத்தலைவன் நூகநூ
அது - அத்துயரத்தை கஉ
அதுகொல்-அதுதன்மைத்தோ ஙி
அதுபுலந்து-அதற்கு வருந்தி உகக
அதுவெனவுணரும்-அவன் கூறிய தாகிய அதுவே என்று நினைவாள் ககக
அத்தநீளிடை-பாலையாகியநீண்ட இடம் நூ0எ
அத்தம் - பாலைநிலம் சக, எக
அத்தவாகை - பாலையின்கண் உளள வாகை மரம் நூசூக
அத்தவேம்பு-பாலைநிலத்தினின்ற வேப்பமரம் உஅக
அத்தவோமை - பாலைநிலத்திலுள்ள ஓமை மரம் உ0எ
அத்தை - அசைநிலை கஉக, நூஅக
அந்தில் - அசைநிலை உகூநூ
அந்தீங்கிளவி - அழகிய இன்சொல் உ0சு
அந்தூம்பு - அழகிய துளை உஅஉ
அமராமுகத்தள் - விரும்பாத முகத்தை உடையள் நூகஉ
அமர்துணை - விரும்புதற்குக் காரணமான பெண்ணானை உகஙி
அமலை - ஒலி நூசூக
,, - சோற்றுத்திரள் உளள
அமலைவான்பூ - நிரண்டவெண்பூ உஅக
அமல் - அடர்ந்த உசு0
அமளி - படுக்கை நூ0
அமன்ற - அடர்ந்த உ0உ
அமிழ்தத்தன்ன - அமிழ்தம் போன்ற உ0சு
அமிழ்துபொதி செந்நா - அமிழ்தத்தின் இனிமை நிரம்பிய செவ்விய நாக்கு கச
அமைக - இருந்திடுக ககள
அமைதற்கு-பொருந்துவதற்கு ச
அமைந்த - தகுதியான ச
அமைந்தாங்கமைக - இருந்தபடி இருப்பதாக களஙி
அமைவிலர் - நெஞ்சம் பொருந்தாதவர் ச
அமபகட்டிளமுலை - அழகிய பரிய இளமையுடைய முலை எக
அமபல் - பழிமொழி ஙிக
அம்ம அசைநிலை கச
,, - வியப்பிடைச்சொல் உக
அம்மா அரிவை-அழகியமாமையையுடைய தலைவி சூநூ
அம்மெல்லாகம்-அழகிய மெல்லிய மார்பு கஙிக
அயம் - நீர் உகூநூ
அயர்வு மெய்நிறுப்பவும் - இளைப்பு உடலிலே நிலைபெறவும் நூகசூ
அயர்வோள் - ஆடுவோள் நூகூசூ
அயலது-பக்கத்தே உள்ளது நூசூ
அயிரை - ஒருவகை மீன் கஉஅ
அயின்றன்ன - தின்ரூற்போல உசுள
அரக்குவோர் - துடைப்போர் நூகூஅ
அரலை - அலரி அல்லது அரளி உகச
,, - ஒருமலை ஙிக
அரவம் - ஒலி நூ0க
அரவுநுங்குமதி - பாம்பால் விழுங்கப்படும் திங்கள் நூகஙி
அரி - மென்மை நூநூஅ
அரிசி - விதை நூசூக
அரிதவாவுற்றனை - பெறற்கரிதொன்றனை விரும்பாகின்றனை உக
அரிதுகண்படுக்கும் - அரிதில் துயிலும் நூ0ச
அரிதுபெறு சிறப்பு - பெறுதற்கரிய தலைமை க0க

அரிதுவாய்விட்டு - அருமையாக வாய்திறந்து உகூஅ
அரிது வேட்டனே - கிடைத்தற்கரியதொன்றினை விரும்பினேன் கஉo
அரிய கானம் - கடத்தற்கரிய காடு எஎ
அரியமாகிய காலை - யாம் காண்டற்கரியமாகிய களவுக் காலத்தே கஎஅ
அரியலம்புகவு - கள்ளுணவு உநிஅ
அரியள் - பெறற்கரியவள் கஉo
அரியார் சிலம்பு - உள்ளிடுபரலையுடைய சிலம்பு நூசுக
அரிவை - தலைவி உ
அரிற்பவர் பிரம்பு - பிணங்கிய கொடியையுடைய பிரம்பு கூக, நூசுஜ
அருங்கரை - கடத்தற்கரிய கரை கசுநி
அருங்காட்சியம் - காண்டற்கு அரியேம் நoநி
அரும்படர் எவ்வம் - பொறுத்தற கரிய நினைவாலுண்டாகும் துன்பம் நூசுo
அரும்பற - அரும்புகள் இல்லையாம்படி உசு
அரும்பனி - பொறுத்தற்கு அரிய பனி சுஅ
அரும்பனி அசிரம் - பொறுத்தற்கரிய பனியையுடைய அசிரம் அஉ
அரும்பிய சுணங்கு - தோன்றிய தேமல் எக
அரும்பும் - அரும்பெடுக்கும் நி
அரும்பூழத்த - அரும்பு தோன்றிய ககo
அரும்பெறலமிழ்தம் - பெறற்கரிதாகிய தேவருணவு அநூ
அரும்பொருள் - தேடற்கரிய பொருள் நிகூ
அருவி - மலைவீழ் அருவிநீர் சஉ
அருவிப்பரப்பு - அருவிநீர் பாயும் பரப்பு கoo
அருவிவேங்கை - அருவியின் மருங்கே வளர்ந்த வேங்கை மரம் கூசு
அருளும் - அன்பும் உo
அருளே மன்ற யாருமில்லது - அருள்தான் தன்னை ஏற்றுக் கொள்வாரை இலது களச
அருள்பொருள் என்னூர் - அருளே உறுதிப்பொருள் என்று கருதார் நூகூநி
அரைநாள் வாழ்க்கை - பாதிநாள் மட்டும் வாழும் வாழ்க்கை உஅo
அரையிருணடுநாள் - பாதியாகிய இருள்செறிந்த இடையாமம் கசo
அலங்கல் - அசைதலையுடைய எசு
,, - அசைகின்ற எக
அலங்குகுலை - அசைகின்ற குலை உநூக
அலப்பென் - வருந்துவேன் ஙக
அலமரல் - சுழற்சி உஅ
அலமருந்தகைய - சுழலுந்தன்மையுடையன எஉ
அலமலக்குறும் - கலங்கும் ஙநூ
அலம்வரும் - அசையும கசஅ
அலராகி - பழிமொழியாகி கூஎ
அலரெழுந்தன்று - பழிமொழி எழுந்தது நூஎஉ
அலாந்தன்று - பழியாயிற்று உகூச
அல்வேய் கண்டல் - மலர்பொருந்திய தாழை நூசo
அலவனுட்டிய - கண்டைப்பிடித்து அலைத்த நoநூ
அலைக்கு - அலைத்தலுக்கு அசு
அலைப்ப - வருத்தாநிற்ப உஅ
அலையாத்தாயர் - வருத்தாத அன்னைமார் உஙசு
அல்கலுந்துஞ்சாது - இரவுகடோறும் துயிலாமல் நூஅக
அல்கலும் - இரவுவருதலும் ககச
அல்கல் - இரவு நo
அல்கிசை - வைத்துண்ணும் உணவு கoஎ
அல்குநிழல் - தங்குதற்குரிய நன்னிழல் நூகூஅ
அல்குல் - இடை உள
அல்குறுபொழுது - இரவு உளநூ
அல்லல் நெஞ்சம் - வருத்தமுடைய நெஞ்சம் சநூ
அல்லலுயினும் - வாய்மையில்லாத வுயினும் உஅச

அல்லனெஞ்சம் - துன்பமுடைய நெஞ்சம் ௩அக
அவருண்ட என்னலன் - அவரால் நுகரப்பட்ட என் பெண்மை நலம் ககஉ
அவரை - அவரைக்கொடி உசo
அவர் - அத்தலைவர் கஉ, ஙக
,, - அத்தலைவருடைய உங
,, - நந்தலைவர் உக
,, இருந்தவென் னெஞ்சு - தலைவர் வீற்றிருந்த என் உள்ளம் ௩சo
அவர் ஊர் - தலைவருடைய ஊர் ஙo
அவர்திறத்து - அத்தலைவர் பொருட்டு உஅக
அவர்தன்னைச் சென்று - தலைவரை அணுகிச்சென்று ஈஅ
அவா நமக்கியாராகியர் - அவர் நமக்கு என்ன உறவினையுடையார் ககo
அவர்மலை - தலைவருடைய மலை ௩சo
அவலநீளிடை - துன்பமுடைய நீண்டவழி உஉச
அவல நெஞ்சம் - துன்பமுடைய நெஞ்சு கஙஈ
அவலம் - கவலை கஉ
அவலைடு செலவு - அத்தலைவலேடே போதல் ௩ஈஈ
அவலைடு மொழிம் - அவலேடே சேர்ந்துக்கூறும் ஙக
அவித்தன்று - அழித்தது ஈங
அவியாமாறு - தாங்காமையால் ௩எங
அவிழ - மலர ஈங
அவிழ்த்தற்கரிது - விலக்குதற் கரிது ௩கஈ
அவுணர் - அசுரர் க
அவை - கூட்டம் கசசு
அவ்வந்திரின் - அவ்விடத்திற்கு வருவாயாக ௩சுஎ
அவ்வரி - அழகிய கோடு கஅo
அவ்வரிக்குருளை - அழகிய கோடுகளுடைய குட்டி ககக
அவ்வரை - அதுகாறும் உஙசு
அவ்விளிம்பு - அழகியவிளிம்பு உஈஎ
அழப்பிரிந்தோர் - யாம் அழும்படியாகப் பிரிந்தோர் ஈoஎ
அழல் - அழுதல் ஈங
அழாஅல் - அழாதேகொள் கஈங
அழால் - அழாதேகொள் அஉ
அழாற்கோ - அழமாட்டேனே ககஉ
அழிசி - ஒரு மன்னன் உஙஅ
அழிதுளி - அழிந்ததுளி ஈங
அழிபடர் - மிக்கநினைவு களஈ
அழிபடர்நிலை - மிக்க துன்பமுடைய நிலை கஅங
அழியல் - வருந்தற்க எங, கசஈ
அழிவதெவன் - வருந்துவதெற்றிற்கு அசு
அழுகற் சின்னீர்-அழுகலையுடையசிலவாகிய நீர் ஙசு
அழுங்கலூர்-ஆரவாரத்தையுடையஊர் கஉ
அழுங்கனெஞ்சம்-துன்பமுடைய நெஞ்சம் ஈoஎ
அழுங்குவர் - தவிர்வர் கஈங
அழுதகண்டிடைப்பார் - அழுத கண்ணீரை மாற்றுவார் அஉ
அழுவம் - பாலைப்பரப்பு எ
அழுவம்-கடற்கரைப் பரப்பு ஈசo
அளிமதி - பாதுகாப்பாயாக ககங
அளிய - இரங்கத்தகுவன கூஉ
அளியர் - இரங்கத்தக்கவர் எ
அளியலோவளியள்-மிகவும் இரங்கத் தக்கவள் ஙசு
அளியேன்-இரங்கதகுவேன் ஈo
அஃக - வற கஉ
அஃஇ - கலந்து கஙஅ
அள்ளல் - சேறு கoஈ
அற - நீங்கும்படி கஉ
அறந்தலைப்பட்ட - அறத்தைச் செய்கின்ற உoகூ
அறல் - கருமணல் உஅசு
அறவது - அறமுடையது உசள
அறவளையினும் - வாய்மையுடையவளையினும் உஅச
அறனில்கொள் - அறத்தொடுபடாத கொலை உசுள
அறனில்தாய் - அறன் அறியாத தாய் உசச
அறிகரி பொய்த்தல் - கண்டறிந்ததை மறைத்துக் கூறல் கஅச

அறிதலுமறியார் - அறியார் உளசு
அறிந்திசினோர் - அறிந்தோர் கஅ
அறிவு - உகக
அறிவு காழக்கொள்ளுமளவை - அறிவு முதிரும்போது ஙஎக
அறுகை - அறுகம்புல் உருச
அறுசுனை - நீர் வறந்த சுனை ஙருசு
அறை - கற்பாறை ஙஅ
அற்று - அத்தகையது ககசு
அனைதற்கு - அதற்கு உகள
அனைப் பெருங்காமம் - அத்தகைய பெருங் காமநோய் கூக
அனைமதுகையர்கொல் - அத்தகைய வலியை உடையாரோ உகo
அனையேம் - அத்தன்மையேம் கசுச
அன்பிலங்கடையே - அன்பில்லாவிடத்து கூங
அன்பின - அன்புடையன ஙள
அன்பின்பால் - அன்பின் பகுதி ககசு
அன்புடை நெஞ்சம் - சo
அன்றையன்ன நட்பு - தொடக்க நாளிலிருந்ததுபோன்ற நட்பு ஙஅரு
அன்ன - போல கஉ
,, - அத்தகைய சஅ
,, வரவு - அப்படிப்பட்ட வருகை உஙo
அன்னவினியோள் - அத்தகைய இனிமையையுடையோள் உoசு
அன்னாய் - தோழியே! ஙஙி
அன்னை அங
அன்னை காணிய - நந்தாய் அறியும் பொருட்டு ஙசுo
அன்னையும் அத்தனும் - தாயும் தந்தையும் கூங
அன்னை - அந்தோ கசுக
ஆ அ - வியப்பிடைச் சொல் உஅ
ஆகியர் - ஆகுக சுக
ஆங்கறிந்திசின் - அவ்வாறு அறிந்துள்ளேன் உசள
ஆங்குணர்ந்தமையின் - அவ்வாறுணர்ந்தமையாலே களங
ஆங்கே - அவர் இருக்குமிடத்திற்கு கக
ஆசாகெந்தை - பற்றுக்கோடாகிய தந்தை போலும் தலைவன் களசு, ஙஉடு
ஆசில் - குற்றமில்லாத கoஅ
ஆசில் தெரு - குற்றமற்ற தெரு உளள
ஆடமை - அசைகின்ற மூங்கில் ககடு
ஆடரை - ஆடுகின்ற அடிப்பகுதி உசஅ
ஆடுகள மகள் - விறலி, கூத்தள் ஙக
ஆண்டும் - அவ்விடத்திற்கும் ககஙூ
ஆண்டொழிந்தன்று - அவ்விடத்தேயே நீங்கியது நிசு
ஆதியருமன் - ஒரு வண்மையோன் உகஙூ
ஆத்திரை - யாத்திரை, செலவு உகஙூ
ஆபயந்தநெய் - ஆன் அளித்த நெய் உக0
ஆமா - காட்டுப்பசு உஉஉ
ஆம் - நீர் உ0அ
ஆம்பல் - ஒருவகை நீர்ப்பூ சசு, அo
ஆம்பல்மலரினும் - ஆம்பற்பூவையுங் காட்டில் அச
ஆம்பலூறும் தேம்பொதி துவர் வாய் - ஆம்பற்பூ மணக்கும் தேன் பொதிந்துள்ள பவழ வாய் ஙூoo
ஆயம் ஆய்ந்த - மகளிரானே ஆராயப்பட்ட உசநி
ஆயிடை - அவற்றினிடையே சஙூ
ஆயிழை - அழகிய அணிகலன்களையுடைய தலைவியே ககசஙூ
ஆய்கழல் - அழகிய வீரக்கழல் கடி
ஆய்நலம் - ஆராய்தற்குரிய அழகு உஉஙூ
ஆரணங்கினள் - பொறுத்தற்கரிய வருத்தத்தைச் செய்பவள் எo
ஆரநாறும் - சந்தனமணக்கும் உஅசு
ஆரம் - சந்தனம் ஙளசு
ஆரம் - முதுதுமாலை ஙூஉக
ஆரலருந்த வயிற்ற - ஆரல்மீனை அருந்தி நிறைந்த வயிற்றையுடையனவாகிய ககச
ஆரல் - ஒருவகை மீன் உடி
ஆரளவு - அளத்தற்கரிய அளவு ஙூ
ஆரி - நிரம்பிய அருள் கடிஅ
ஆராது - வயிறுநிரம்பாமல் உகக

ஆரியர் - ஆரியக் கூத்தாடுவோர் ۷
ஆரிருள் - நிரம்பிய இருள் ۸۳۸
ஆர் - காம்பு ۱۴۱۲
ஆர்கலி - ஆரவாரம் ۸۴۱۵
ஆர்கலிவிழவு - ஆரவாரமுடைய விழா ۱۲۱۸
ஆர்கழல்பு - காம்பு கழன்று ۱۸۱۲
ஆர்களிறு - பொருந்திய ஆண் யானை ۱۳۱۲
ஆர்க்கவும்படுப - ஆரவாரிக்கவும் படுவர் ۸۷
ஆர்ந்தோர் - உண்டவர் ۱۸۱۳
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும் ۱۸۱۳
ஆர்பதம் - உண்ணும் உணவு ۱۸, ۱۸۱۴
ஆர்ப்ப - முழங்க ۸۱۳
ஆர்ப்பிசை - ஆரவாரிக்கும் முழக்கம் ۱۸۱۴
ஆர்வலர் - விருப்பமுடையோர் ۱۰۷
ஆலலுமாலின - ஆதலாலச் செய்தன ۱۲۱۸
ஆவிரை - ஒருவகைச் செடி ۸۷, ۱۸۱۲
ஆழி - உருள் ۱۲۰۳
., கடல் ۱۸۱۷
ஆளறிவுறீஇ - ஆள்வருகையை அறியச் செய்து ۱۸۱۳۰
ஆள்வினை - மேற்கோடற்குரிய தொழில் ۱۲۱۷
ஆறு - வழி ۸۱۲
ஆறுசென்மாக்கள் - வழிநடப் போர் ۸۴۰, ۱۲۱۸
ஆற்ற - பொறுக்கும்படி ۸۱۸
ஆற்றயல் - வழியின்பக்கத்தே ۱۲, ۱۸۱۳۰
ஆற்றலை-ஆற்றுகின்றாயிலை ۱۸۷۷
ஆற்றல் - பொறுத்தல் ۱۸۱۴
ஆனாதலைக்கும் - இடையறாது வருத்தும் ۱۲۱۲
ஆனாத்துயரம் - அமையாத துன்பம் ۸۴۱۳
ஆனாநாறும் - ஒழியாதே மணக்கும் ۱۳۱۸
ஆனாநோய் - அமையாத வருத்தம் ۱۱۷
ஆன் - பசு ۱۴۱
ஆன்றோர் - அறிவோர் ۸۴۴

இஃதெவன் - இஃதென்னகாரியம் ۸۳۱۴
இஃதோ - இதுதானே ۸۱۱۰
இஃதோ - இதோ பார்மின் ۱۸۱۳
இகந்து - நீங்கி ۱۲۸
இகலும் - மாறுபடும் ۱۳۱۷
இகழ்ந்தனர் - சோர்ந்திருந்தனர் ۱۴۱۲
இகழ்ந்தனன் - சோர்ந்திருந்தேன் ۱۴۱۲
இகுகரை - தாழ்ந்த கரை ۱۲۱۴
இகுதிரை - தாழ்கின்ற அலை ۱۰۸
இகுளை - தோழி ۱۳۱۸
இசின் - அசைநிலை ۱۲۰
இசையாதுகொல்-இயலாதோ ۱۴۱
இடிக்கும்-கடிந்துரைக்கின்ற ۱۳۱
இடித்திடித்து - அடிக்கடி இடித்து ۱۲۱۰
இடுக்கஞ்சியிரந்தோர் - துன்பத்தை அஞ்சி ஏற்றோர் ۱۲۱۴
இடுநிழல் - செயற்கை நிழல் ۸۱
இடும்பைநோய்-துன்பஞ் செய்யும் காமநோய் ۱۲۸
இடைப்பட விரைஇ - இடையிடையே கலந்து ۱۱۲
இடைமுலை - முலையிடை ۸۱۱
இடையிடுபு - நடுநடுவே இட்டு ۱۲۸
இட்டுவாய் - ஒடுங்கிய வாய் ۸۸۱۲
இணர - பூங்கொத்துக்களை உடையன ۸۰
இணரவிழ்புன்னை - கொத்தாக மலரும புன்னை ۱۲۸۸
இதழழிந்தூறும் கண்பனி - இமையைக் கடந்து ஊறுகின்ற கண்ணீர்த்துளி ۱۴۱۴
இதற்றுமாண்டது - இதற்கு இது சிறப்புடையது ۸۱۴
இதுபொழுதாகவும் - இது தகுந்த செவ்வியாகவும் ۱۲۸
இதுமற்றெவன் - இஃதென்னையோ ۱۲۸۸
இமயம் - இமயமலை ۸۳۱
இமைக்கண் - இமைப்பொழுதில் ۱۲۱۳
இமைக்கும் - ஒளிரும் ۸۳۰
இமைதீய்ப்பு - கண்ணிமையைச் சுடும்கருவி ۴
இமைப்ப - ஒளிர ۱۸۱۴

இமைப்புவரை - கண்ணிமைக்கும் அளவு காலம் உகஅ
இம்மை - இப்பிறப்பு சஙூ
இயங்குதொறியம்பும் - நடக்குந் தொறும் ஒலிக்கும் கஙoo
இயம்பியவுள - ஒலித்தன உள உளநு
இயம்பும் - ஒலிக்கும் சஉ
இயலணி - இயற்கையழகு கஙூநு
இயவு - வழி கஙூஅ
இயறேர் - இயங்கும்தேர் கஙச
இர - இரவு ஙூஅள
இரங்கும் - முழங்கும் கஙூச
இரண்டறி கள்வி இருவேறு ஒழுக்கத்தை அறிந்த கள்ளத் தன்மையுடையாள் ஙூ கஉ
இரந்தூண் - ஏற்றுண்ணும் உணவு ஙூஙூ
இரலை - ஆண்மான் ஙூநு
இரலைநன்மான் - நல்ல ஆண்மான் உநிo
இரவாளர் - இரவில்கதிர் அரிவோர் ஙூளஙி
இரவலர் - ஏற்போர் கஙூள
இரவிஞன் - இரவின்கண் ஙூ சo
இரவூர் - இராக்காலத்தையுடைய ஊர் கூக
இரிய - கெட்டோட ஙூ உக
இரீஇ - வைத்து உ சஙூ
இருக்கைமுடவன் - இருத்தற்றொழில் ஒன்றே உடைய முடவன் சo
இருங்கண்ஞாலம் - பெரிய இடத்தையுடைய உலகம் உசள
இருங்கழி - கரிய நீர்க்கழி கூ
இருங்குயில் - கரிய குயில் கஙூஉ
இருங்கூந்தல் - கரிய மயிர் நிஉ
இருடிணிந்தன்ன - இருள்செறிந்தாற்போன்ற கஉஙூ
இருந்திரோ-இருக்கின்றீரோ சுநி
இருந்துறை - பெரிய நீர்த்துறை அo
இருபேராண்மை - ஆண்டுபெரிய ஆண்மைகள் சஙூ
இருப்பை - ஒருவகைமரம் ஙூ உக
இருமருங்கினம் - இரண்டு உடலையுடையேயம் ஙூஎo
இருமருப்பெருமை - கரியகொம்பையுடைய எருமை கஅக
இரும்பிணர் - கரிய சருச்சரை கஉ
இரும்புலிக்குருளை - பெரிய புலிக்குட்டி சள
இருவாம் - இருவேம் உஙூள
இருவி - தினையரிந்த தாள் உஉo
இருவிசும்பிவரும் - பெரிய வானிற் பறந்து செல்லும் உசoo
இருவெதிர் - பெரிய மூங்கில் ஙூஅநி
இருவேமாகிய உலகம் - தலைவன் தலைவியென்னும் இருவேமாகப் பயின்ற உலகம் ஙுள
இருளிய - இருண்ட ஙி கச
இரை - உணவு கூஉ
இலங்குவளை - விளங்குகின்ற வளையல் கக, நிo
இலையிலஞ்சினை - இலையில்லாது மலர்ந்து அழகிதாகிய கொம்பு உநிச
இல்லாகுதும் - இல்லையாகின்றோம் உகoo
இல்லிறைப்பள்ளி - வீட்டிறப்பின் கண் உள்ள படுக்கை சசு
இல்லுய்த்துநடுதல் - வீட்டிற்கொணர்ந்து நடுதல் ஙி சுக
இல்லெலி - வீட்டிலுறையும் எலி கoள
இல்லோர் - நல்கூர்ந்தார் சுஙூ
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு - வறியோர் வாழ்க்கை இரத்தலினும் காட்டில் இழிந்தது உஅஙூ
இல்லோனின்பங் காமுற்றுங்கு - வறியவன் இன்பத்தை விரும்பி ஞற் போல. கஉo
இவணும் - இவ்விடத்தும் கஉசு
இவணெழிய-இவ்விடத்தே தனித்தித் தங்க உஉ
இவரும் - படர்கின்ற ஙூசு
இவள்-இத்தலைவி; நெஞ்சறிசுட்டு கஅ, உஎo
இவணேர் - இவ்வுலகத்துள்ளோர் ஙூகூநி
இவ்வுலகத்துப்பிறர் - நம்மகளும் தலைவனும் அல்லாத ஏனையோர் சச
இவ்வூர் - இவ்வூரிலுள்ளோர் கச

இவ்வென - இவை என்று உசஎ
இழந்த-இழந்தமையாலுண்டாகிய கக
இழிதரும் - இறங்காநின்ற ஈஎ
இழுக்கிய - விழுந்த ஈ0
இழுமென - இழும் என்னும் ஒலி யுண்டாக ஈடசஈ
இழையியர் - இயற்றுதற்கு அஈ
இழைகும் - இயற்றுகின்ற உ
இளமாணாகன் - இளமையுடைய மாணவன் ஈடஈட
இளமைகுமுடிவு - இளமைப்பரு வத்திற்கு முடிவாகும் கஈக
இளமைபாரார் - இளமையது அரு மையை நினையார் கஉச
இளையரும் மடவரும் - ஆண்டிள மையோரும் அறிவில்லாதோ ரும் உசஈ
இளையர் - இளமகளிர் ஈடஉ
இளையள்- ஆண்ணானிளமையுடை யாள் கக
இளையோர் - பிள்ளைகள் ௯க
இறடி - தினை. உகச
இறந்தோர் - கடந்துசென்றோர் ஈஎ
இறவினன்ன - இரைமீன்போன்ற கசு0
இறவின்வாடல் - இரைமீன்வற்றல் ஈஉ0
இறீஇயர் - முறிவனவாக கசஈக
இறுமுறை - அழியும்முறை கஈக
இறும்பு - குறுங்காடு கஈஈ
இறைஇறை-சிறிதுசிறிதாக ஈஉ
இறைகொள்பு - தங்குதலைக் கொண்டு கஈ
இறைத்துண-கையாலிறைத்துண் ணும்படி கஈ
இறைய - இறப்பிலுள்ளன ஈடஎச
இறையிறந்து - முன்கையைக் கடந்து ஈ0
இறையுற - தங்கும்படி கஉ
இற்றி - ஒருவகை மரம் க0௯
இனந்தலைப்பிரிந்த - கூட்டத்தி னின்றும் பிரிந்த உஎஉ
இனந்தீர்ந்து - தன் இனத்திற் பிரிந்து ஈஉஉ
இனந்தீராபருந்து-தன்கூட்டத்தை நீங்கிய பருந்து உ0எ

இனமீன் - திரளான மீன் கூ
இனி - இப்பொழுது கக
இனிச சென்றனன்-இப்பொழுது சென்றான் உ0ஈ
இனிதடங்கினர் - இனிதாக உறங் கினார் ஈ
இனியது கேட்டு - இனிமையுடைய செய்தியைக் கேள்வியுற்று ஈஈ ச
இனியறிந்தேன்-இப்போது அறிந் துகொண்டேன் அச
இனியன் - இனிய பண்புடை யோன் அஈ
இனை - துன்பம் ச அ
இனைமதி - வருந்துவாயாக கக
இனையல்-வருந்தாதேகொள் கஉ
இனையள் - இத்தன்மையுடையவள் எ0
இன்கடுங்கள் - இனிய கடுப்பை யுடைய கள் ஈடஈ0
இன்பாணித்து-இனிய தாளத்தை யுடையது உகக
இன்புறுக - இன்பமெய்துவதாக ஈடச
இன்புறுதுணை - இன்புறுதற்குரிய பிணைமான் ௯ஈ
இன்முகம்திரியாது - இனிய முகம மாறுபடாமல் உஈஉ
இன்றுகொல் - இல்லையோ சக
இன்றுய் - இல்லையாகி ஈடச
இன்றுபெரிது-இந்நாள் பெருநாள் கசக
இன்றுயின்முனிநர்-இனிய துயிலை வெறுத்தோர் உகஈ
இன்றையளவை - இற்றைநாள் ஈடஅஈ
இன்றையன்னநட்பு - இன்றுஇருப் பதுபோன்று எனறுமிருக்கும் நட்பு கஈஈ
இன்னகை யாயம்-இனிய புன்முறு வலையுடைய மகளிர்கூட்டம் ஈடஈக
இன்னது - இன்றிருக்குந்தன் மைத்து க0ஈ
இன்னபண்பின் இனை - இத் தன்மையோடே துன்பம் சஅ
இன்னமென்மைச் சாயலள்-இத்த கைய மெல்லிய சாயலையுடை யாள் ஈடஉஎ

இன்னம் - இத்தகையேயும் உஉஅ
இன்னளாக - இத்தன்மையளாகும் படி உஉசு
இன்னளாயினள் - இதனை ஒத்த னள் கூஅ
இன்னள் - இன்னவள் சஎஅ
இன்னுக்கானம் - துன்பமுடைய காடு உஎச
இன்னுதிசைக்கும் - இன்னுமையு டையதாய்க் கூறப்படும கஅக
இன்னுஎதறிதரும் - துன்பமுண் டாகும்படி வீசுகின்ற ககo
இன்னுமைத்து - துன்பமுடைத்து அஉசு
இன்னுவுறையுட்டு - துன்பந்தரும் உறை விடங்களையுடையது நுஅநு
இன்னுவென்றிராயின் - துன்பமு டையன என்பீராயுல் கஉச
இன்னுவைப்பு - துன்பமுடைய இடம் ஆ கச
இன்னிசை உருமின - இனிய முழக்கத்தையுடைய இடியை உடையன உoo
இன்னிழல் - இனிய நிழல் (நு)
இன்னுமற்றே - இன்னும் அத்த கையதோ அ.நுக
இன்னும் - இனிமேலும் கூச
இன்னும் பாடுக - இனியும்பாடுவா யாக உஅக
இன்னுயிர் இழப்பு-சாதல் ஆ சகூ
இன்னுயிர் கழியினும்-இனியஉயிர் நீங்கினும் கூஅட
இன்னுயிர் குறித்து - இனிய உயி ரைக் கவர்தல் கருதி உகசு
இன்னே-இப்பொழுதே உஅள
ஈங்கனம் - இங்கே அ அ.சு
ஈங்காகின்று - இவ்வண்ணம் ஆயிற்று உசஅ
ஈங்கிவண் - இப்படி இவ்விடத்தே கக
ஈங்கே - இவ்விடத்திற்கு கஉஉ
ஈங்கை-ஒருவகைமுண்மரம் கக()
ஈண்டையேன் - இவ்விடத்துள் ளேன் நுசை, கூஎ
ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில் சுஅட
ஈரம்பட்ட-ஈரம்உண்டான கஅ.க
ஈர் - அரிந்த கக
ஈர்ஞெண்டு - ஈரமுடைய நண்டு ககள
ஈர்த்தின்புறும் இழுத்தலானேயே இன்புறுமியல்புடைய சுக
ஈர்ந்தண் கொழுநிழல் - ஈரிய தண்மையுடைய கொழுவிய நிழல் கஉஅ
ஈர்மணற்காட்டாறு-ஈரிய மணலை யுடைய காட்டுவழி உஎநு
ஈர்மபுறம் - நெய்ப்புடைய முதுகு அ.அ.உச
ஈனில் - ஈனுதற்குரிய வீடு அநு
ஈன்றணிக்காரான் - ஈன்றணிமை யுடைய காரெருமை கஅக
உகள - துள்ளியாட சூநு
உகளினும் - துள்ளினாலும் கநு.ட
உகாய் - ஒருவகை மரம் உஎச அ.சுஅ.ட
உகிர்நுதி - நகத்தின் நுனி கசு
உசு - உதிர்கின்ற அ
உசுத்தரும் - சொரியும் உநுக
உசாவா - வினவாத கசநு
உசாவுநர் - வினவுவார் உசுசு
உடனுயிர் போகுக - ஒருங்கே இரு வருயிரும் போவதாக (நு)எ
உடன்கண்டன்று - ஒருங்கே கண் டது அ.ட.கக
உடன்று - சினந்து அ.ட.சுஎ
உடீஇ - உடுத்து கசுஎ
உடுக்கை - ஆடை (கடவுள் வாழ்த்து)
உடுத்துக் தொடுத்தும் பூண்டுஞ் சொரீஇயும் உசுநு
உடைஇ - உடைந்து அ.எ.ட
உடைதிரை - மோதி உடைகின்ற அலை நு
உடைதிரையொலி - உடையா நின்ற அலைமுழக்கம் அ.oஅ.ட
உடைந்த - பெருகிவழிந்த அசு
உட்கை - உள்ளங்கை சுo
உணங்கல் - உலரும் கூலம் சசு
உணராவுகு - உணருமுன்னர் உசுஎ
உணலாய்ந்திசின் - உண்ணுதலை ஆராய்ந்துள்ளேன் உசுஉ
உணீஇயர் - உண்ணுதல் உஎ
உண்கண் - மையுண்டகண் அ.அ
உண்கிளி-தின்னுகின்ற கிளி அ.சுo

உண்டுறை-நீருண்ணும் துறை கo, ஙஉகசு
உண்ணுது-உண்ணப்படாமல் உள
உண்ணோய் - அகத்துள்ள நோய் கஙo
உதவாது - பயன்படாமல் உள
உதுக்காண் - அதோபார் அக
உந்தி - வெள்ளம் ஙசுக
உப்புவிளை கழனி-உப்பளம் உசுசு
உப்பைமாறி-உப்பைவிற்று உசுசு
உப்பொய் சகடம் - உப்பைச செலுத்தும் வண்டி கசுஙி
உமணர் - உப்பு வாணிகர் கஉச
உமணிருது - உப்புவாணிக ருடைய எருது ஙஅஅ
உம்பர் அப்பால் கக, கஙஅ
உய - தப்புதற்கு உஙo
உயங்குதொறும் - வருந்துந்தோ றும் உசுச
உயங்குநடை-வருந்திய நடை ஙoள
உயங்குயிர் - வருந்திவிடும் மூச்சு ஙoஅ
உயர்கோடு-உயர்ந்த மரக்கொம்பு உக
உயர்கோட்டொருத்தல் - உயர்ந்த மருப்பையுடைய களிற்றியானை ஙகசு
உயர்திணையுமன் - மக்கள் இனத்து உரைமையன் உஉச
உயர்நிலையுலகம்-வானுலகம் ஙசo
உயர்ந்தன்று - உயர்ந்தது ஙக
உயவுத்துணை - உசாத்துணை உoள
உயவுநோய் - துன்புறுத்தும் பிணி உஅ
உயற்கு - தப்புதற்பொருட்டு ஙள
உயிர்க்குயிர் அன்னர்-உயிருக்கும் உயிர்போன்றவர் உகஅ
உயிர்செகுக்கும் - உயிரை மாய்க்கும் சுக
உயிர்த்து - பெருமூச்செறிந்து கசஉ
உயிர்த்தோன் - பெருமூச்செறிந்தோன் உகள
உய்குவம் - தப்புவேம் கக
உய்த்தனர்விடார் - செலுத்திவிடார் ஙoஙி
உய்யா - தப்பமாட்டாத சுக
உய்யேன்போல்வல் - பிழைக்க மாட்டேன்போலே இருந்தேன் கoஅ
உரம் - வலி கஙஙி
உரவுக்களிறு - வலியுடைய ஆண் யானை உசச
உரவுநீர் - கடல் ஙகள
உரவோராயின் - அறிஞராவார் எனின் உo
உரவோர் உரவோராக - அவ்வறிவுடையோர் அறிவுடையோரே ஆகுக உo
உரற்காலியானை - உரல்போன்ற காலையுடைய யானை உஙஉ
உரிமை செப்பினர் - உரிமையுடையை என்றமையைக் கூறினார் ஙஙிக
உரீஇய - உருவிய உகள
உருகெழுதாமரை - நிறம் பொருந்திய தாமரை கஉள
உருட்டும் - உருளச்செய்யும் ஙஅ
உருத்தெழுவனமுலை - சினந்து எழுகின்ற அழகிய முலை. உருவகமாகக்கொண்டு எழுகின்ற முலையுமாம் உளசு
உருப்பு - வெப்பம் கஙிச
உருமிசைப் புணரி - இடிமுழக்கத்தைப் போன்ற முழக்கத்தையுடைய அலை ஙஙிக
உரும் - இடி கஙிஅ
உரைத்திசின் - கூறுவாய் சுஙஙி
உரைப்பலோ - சொல்வேனோ ஙகஅ
உரையல் - கூறாதேகொள் கூஙி
உலகத்துப்பண்பு - உலகத்தியல்பு கசு
உலகமும் - உலகத்தாரும் சு
உலகு - ஆகுபெயர்; உயிர்கள். (கடவுள் வாழ்த்து)
உலந்த - இறந்துபட்ட எள
உலம்புதொறும் - ஒலிக்குந்தோறும் அசு
உலவை - வற்றல் மரம் எசு
உலைக்கல்-கொல்லன் உலைக்களத்துக் கல் கஉ
உலைபுறம் - உலைந்த முதுகு ஙoஅ

உலைவாங்கு மிதிதோல் - உலையிற் செறித்த துருத்தி கஎஉ
உவக்காண் - உகுகே ஈடஅஎ
உவந்திசின் - மகிழ்வாயாக ஈடஙிக
உவரி - உவர்த்து ஈடகக
உவல் - தழை உகஎ, எஎ
உழந்த - மோதுண்ட கஉ
உழவர் - உழுதொழில் செய்வோர் கo
உழாது - நிலத்தைக் கிளாயாமல் ஈடகக
உழிஞ்சில் - வாகை மரம் ஈடக
உழுந்துடை கழுந்து - உழுந்து துடைக்கும் தடி ஈடஅச
உழையர் - பகுதத்தவர் சுக, உஅக
உழையினம் - மான்திரள் சுஅ
உளமபும் - அலையும் அச
உளரி - கோதி அஉ
உளரெனப்படார்-செல்வர் என்று பாராட்டப்படார் உஅஈ
உளர்கால் - உளராவரோ அசு
உளி - ஒருகருவி ஈடoச
உளைநை - உயிரோடுளைவநை ஈடகசு
உள் அகைபு - நெஞ்சினுள்ளே வருந்தி ஈடசுசு
உள்கினஞ்செலின் - நினைத்தே மாய்ச சென்றால் உஎச
உள்வாய் - வாயின் உட்பகுதி கூஉ
உள்ளது சிதைப்போர் - தாயப் பொருளச செலவிடுவோர் உஅஈ
உள்ளது நாணே - இருப்பது நாணம் மட்டுமே ககஉ
உள்ளத்துக்கினிது - நெஞ்சிற்கு இனிமை தருவதொன்றும் சுo
உள்ளந்தகுகா - நெஞ்சு பொறுக்காத உக
உள்ளலம் - நினையேம் உoக
உள்ளலுமுள்ளாம் - நினையேம் உகஅ
உள்ளாது - நினையாமல் ஈடஅ
உள்ளாகொல்லோ - நினையமாட்டாரோ கசு, சுஎ
உள்ளி நினைத்தனென் - ஆழ்ந்து எண்ணினேன் கூக
உள்ளினனல்லனோ - நினைத்தே னல்லனோ கூக
உள்ளின் உள்ளம்வேம் - நினைத்தால் நெஞ்சம் வேகும் கoஉ
உறங்குமை - துயில்கின்ற ஞி
உறாதை - உறையூர் ககசு
உறழும் - நிகர்க்கும் உஉஉ
உறழுநிலை - ஒத்த நிலைமை ஈடஉஅ
உறுபசி - மிகுந்த பசி உசஞி
உறுவரி - மிக்க காற்று உஎஅ
உறைசிறந்து - மழைத் துளி மிகுந்து அசு
உறைதலும் - தங்குதலும் கக
உறைபதி - தங்கும் ஊர் கசஞி
உறைய - தங்காநிற்ப சுஞி
உறையறு மை-துளிகளற்ற வெண் முகில் ஈடஈடக
உற்றசூள் - செய்த வஞ்சினம் ஞிஈ
உற்றது மன்னும் ஒருநாள் - பொருந்தியது ஒருநாள் மட்டுமே உஎக
உற்றின்புறேம் - பொருந்தியின் புறமாட்டேம் சுக
ஊகம் - கருங்குரங்கு ஈடஎஈ
ஊங்குகலங்கடை - முன்பு ஈடஃ கூ
ஊண்மிசில் - உண்டொழிந்தது ஞிசு
ஊதுலை - ஊதப்படுங்கொல்லுலை கஞிஞ
ஊதை - குளிர்காற்று ஞிஞி, அசு
ஊதைதூற்றும் - குளிர்காற்றுத் தூவும் ஈடகஎ
ஊதையங்குளிர் - ஊதைக்காற்றினது குளிர்ச்சி ககஎ
ஊரன - மருதநிலத்தலைவன் அ, சுஞி
ஊரிற்றோன்றும் - ஊர்போலத் தோன்றும் உகஎ
ஊரின் ஊரின் - ஊர்கடோறும் கஈo
ஊருண்கேணி - ஊர்மக்கள்நீருண்டற்குரிய கேணி ஈடகஈக
ஊரா - பரவுகின்ற உஉ
ஊர்க்கும் அணித்து - ஊருக்கும் அண்மையில உள்ளது ககஈ
ஊர்க்குரீஇ-ஒருவகைக்குருவி ஆஞி
ஊர்துஞ்சுயாமம்-ஊரினர் துயிலா நின்ற இடையிரவு ஞி
ஊர்ந்தின்புறுராயினும் - ஏறியின் புறுராலும் சுக

ஊர்ப-ஊர்ந்துசெல்லாகிற்பா கள
ஊராபாழ்த்தனன - ஊர்பாழபட்டாற் போன்ற கஉச
ஊழுறுதீங்கனி - முதிர்ந்த இனிய பழம் உஎஅ
ஊழுத்த - மலர்ந்த கஎ அ
ஊழுப்படு - முதிர்ந்த ஊஅ
ஊறு - இடையூறு உகள
ஊணசைஇ - ஊனை த் தி ன் ன விரும்பி உஎஅங
எக்கா - இடிமணல் ஙி .
எகசர்ழல் - இ டு ம ண லி ன் மேலுள்ள நிழல் உஃஊ
எகால் - எந்தகாலம் உ எள
எஙகணவனே - எமதுகணவன் ஐ : சாரியை ஈஃ
எஙகண் - எமது கண்கள் .ஙரி
எடுப்பியோய் - எழுப்பினை ஃஎள
எடுப்புதி - எழுப்புகின்றாய் கஈள
எண - எள உ.ஃக
எண்ணுகோ-எண்ணுவேன் உஎ எ
எண்ணுதி - நினைகின்றாய் ஊங்ட
எண்ணெய்வி-எண்ணெய் தடவி ங கஎட
எதிரின - மாறுபட்டன கஙரிஃ
எதிர்முகை - தோன்றிய அரும்பு ஊஉ
எந்தை-என்தந்தை ஈ0
எந்நீரிரோ - எதுதன்மையுடையீரோ உகஃ
எமியம் - தமியேம் கஎஉ
எம்மணஙகியோள் - எம்மைவருத்தியவள் ககஃ
எம்மணஙகின-எம்மைத்துன்புறுத்தின ஙரிங
எம்மளவைத்தன்று - எமது ஆற்றலுட்பட்டதன்று கஎஉ
எம்மிலயலது - எம்வீட்டின்பக்கத்தது கஙஉஅ
எம்மில்-எம்முடைய வீட்டில் அ
எம்மில்லுய்துகொடுமோ - எம்மைஎம்வீட்டில் செலுத்திக்கொடுப்பாயாக ங ஙரி
எமமில்வருகுவை - எமது இல்லத்திற்கு வரக்கடவாய் .ஙஎஃ
எமமுறைக்கேளிர்-எந்தமுறையையுடைய உறவினர் ஈ0
எம்மே - எம்மை கஎஃ

எம்மையுய்த்தியோ-எம்மைமட்டும் செலுத்துகின்றனையோ ஊங
எம்மொடுணீஇயர் - எ ம் மே ா டு உண்ண ஙிஊ
எயிறனமுகைக்கும் - ப ற் க ள் போன்று அரும்பும் கஅஊ
எயினர-பாலைநிலமாக்கள் கஎ
எய்தின்று - அடைந்தது. (கடவுள் வாழ்த்து)
எய்த்த - இளைத்த .ஙகஅ
எருக்கங்கண்ணி-எருக்கம்பூ மாலை கள
எருத்து - கழுத்து கஙிஈ
எருமண் - கூந்தற்கிடும்மண்ணக .ஙா
எருவை - கொறுக்கைசகி கஎ0
எலுவ - நண்ப கஎஃஊ
எல்லறுபொழுது-ஒளியற்றகாலம் உ.ஙஈ
எல்லாருமறிய - உலகோர் எல்லாரும் அறியும்படி எஎ
எல்லி - இரவு ஈஎ
எல்லினன் - விளக்கத்தையுடையன் ஈஙி
எல்லுறும் - ஒளியையுடைய கஃ
எல்லூர்ச்சேர்தரும்-மாலைப்பொழுதில் ஊரில் வந்துசேரும் உஎஙி
எல்லைகழிய-பகல்கழிய .ஙகo
எல்லைசேறலின் - ஞாயிறுசென்றமையால் .ஙிஙி
எல்லவள - ஒளியுடைய வடிவையல் உகஊ
எவணரோ-எவ்விடத்துள்ளாரோ கஎஊ
எவன்கொல் - யாதுபயன் .ஙஅஎ
எவன்செய்கோ-என்னசெய்வேன் உஙி, ஃஊ
எவவமாக - துன்பம் உண்டாகும்படி கo.ஙி
எவ்வழியறிதும்-எவ்வாறு அறிந்துளேம் ஈ0
எவ்வி - ஒரு வள்ளல் ஃஃ
எழலொல்லா-எழமாட்டா உஃஃ
எழால் - புல்லூறுஎன்னும் பறவை கஙிக
எழிலி-முகில் ஙி.கஈ
எழில் - அழகு உ ஈள
எழினி - ஒருகுறுநிலமன்னன் அ0
எழுகலம் - எழுபாண்டம் உகo

எழுகுளிர்-ஏழுநண்டு உச
எழுதருமதியம் - தோன்றுகின்ற திங்கள் ஈடகரு
எழுதாக்கற்பு - வேதம் கருசு
எழுதிய - வரையப்பட்ட அக
எளியவாகிய - மெலிந்தனவாகிய எஎ
எளியள் - காண்டற்கு எண்மையுடையள் உசுக
எள்ள - இகழ கஅஉ
எள்ளற - பழிதீங்க ககஉ
எள்ளார்-இகழுமாட்டாரோ கசஎ
எறிகண் - நீருகுக்குங்கண் ஈடருஅ
எறிசுரை - கொல்கின்ற சுரைமீன் ஈடகஅ
எறிவளிகமழும் - வீசுங்காற்றுப் போல் மணக்கும் ககக
எறும்பி - எறும்பு கஉ
எற்குறித்து - என்னைக்குறிக்கொண்டு கசஎ
எற்புறங்கூறும் - என்னைப்புறங்கூறுகின்றாள் ஈடசுச
எற்றி - நினைந்து கசுரு
எற்றுறந்து - என்னைநீங்கி கஈஎ
எற்றே - எத்தகையதோ கூ
என - என்றுகூற சுரு
எனக்குமாகாது - எனக்கும்பயன்படாமல் உஎ
எனைத்து - எத்தனை உஈஎ
என்குவெம் - என்றுசொல்வோம் ககக
என்கொல்என்று - இஃதென்னையோ என்று கஎரு
என்சொற்றேறி - என்சொல்லைத் தெளிந்து அக
என்ப - என்று கூறுநிற்பர் கஉ
என்பது-என்னும் பழமொழி தஎ
என்பு - எலும்பு ஈ
என்மலைந்தனன்கொல்-என்னையேமேற்கொண்டனனோ கசுக
என்மொழிகோ - என்னென்று கூறுவேன் ககக
என்மோ - என்பாயாக ஈடகஉ
என்வன்கணன் - எனதுவன்கண்மையாலே ஈ.சக
என்றநாள் - என்றுகுறிப்பிட்டநாள் உசஅ
என்றி - என்கின்றாய் கசு
என்றிசின் - என்றேன் உகள
என்றும்என்றுமன் -எப்பொழுதும்என்மையேயாகும் கூஅ
என்றூழ் - ஞாயிறு உகரு
என்னலன் - என் அழகு ஙிச
என்னலன் - என் பெண்மைநலம் கூள
என்னன் - எத்தன்மையன் ஈடங.
என்னுகுவர் - என்ன நிலைமையை அடைவர் கூச
என்னுகுவை - என்ன நிலையினை அடைவாய் கசு
என்னுது - என்றிரங்காமல் உகசு
என்னுதோர் - என்று கருதாத தலைவர் கக0
என்னுயினள் - எந்நிலையை எய்தினள் கக0
என்னுய் - என்று கருதாய் ஈடஉள
என்னுயன் - என்வலி கூஙி
என்னை - தலைவன் உச
என்னைக்கும் - தலைவனுக்கும் உள
என்னையர் - தமையன்மார் கஉஈ
ஏகல் - உயர்ந்த உசுரு
ஏகு - அசைநிலை சா0க
ஏதாகின்று - எத்தன்மையை உடையதாகின்றது உஅரு
ஏதில - அயன்மையுடையன கஙுச
ஏதிலாளர் - நொதுமலர் கஙக
ஏதிலாளர் சுடலை - அயலோர் சுடுகாடு உஈக
ஏதில் சிறுசெரு - காரணமற்ற சிறுபோர் உஉக
ஏதின் மாக்கள் - அயலோர் அக
ஏந்தல - தலைமையானே கஅ0
ஏமப்பூசல - மகிழ்ச்சியாலுண்டாய ஆரவாரம் உசக
ஏமம-இன்பம் (கடவுள் வாழ்த்து)
ஏமவின்றுயில் - இன்பந்தரும் இனிய துயில் க0எ
ஏமாந்தன்று - ஏமாந்தது உளஈ
ஏமுற்றன்று-மயக்கமுற்றது உகச
ஏய்க்கும் - ஒக்கும். (கடவுள் வாழ்த்து) சுள
ஏவொத்து - அம்புகளைப்போன்று எஉ

எழில் - எழிலேம்பாலை ๔๖๘
எழூர்ப்பொதுவினை - எழூர்க்குச் செய்யும் பொதுத்தொழில் ๔๔๒
எறட்டு - ஆணைக்கொன்று ๖๒๔
எறுடைமழை - இடியையுடைய மழை ๔๔๘
எறுடையினம் - காளையையுடைய ஆனிரை ๒๔๗
எற்பன எற்பன - கையாலேற் பவைகள் ๒๔๘
எற்ற - எதிர்ந்த ๒๘
எற்ற கொம்பு - தாங்கிக்கொண்ட மரக்கிளை ๔๒๔
எற்றெழுந்து - துயில் உணர்ந்து எழுந்து ๑๐
எனலஞ்சிறுதினை - தினைவகையுள் வைத்துச் சிறிய தினை ๑๗๔
எனல் - தினை ๗๘, ๔๒
எனல் காவலர் - தினைகாப்போர் ๗๘
ஐது - அழகிதாகிய ๕๒
,, - வியப்புடைத்து ๘๐๔
ஐதே காமம் - காமம் நுண்ணிது ๒๔๔
ஐமபால் - கூந்தல் ๒๒๘
ஐயவி - வெண் சிறு கடுகு ๗๐
ஐயெனக்கரையும் - ஐயென ஒலிக்கும் ๒๕๔
ஐயெனத்தோன்றி - விரைந்து தோன்றி ๑๐๔
ஐவனம் - மலைநெல் ๔๐๐, ๑๔๔
ஒசியல் - ஒடிந்த கிளை ๔๔๒
ஒங்கீரோதி - ஒங்கிய நெய்ப் புடைய கூந்தல் ๔๐
ஒண்டாரகலம் - ஒள்ளிய மாலையை யணிந்த மார்பு ๑๕๕๒
ஒண்ணுதல் - அண்மெழித் தொகை, தலைவி ๒๒
,, - ஒளியுடைய நெற்றி ๔๐
ஒண்பூ - ஒளியுடைய மலர் ๒๘
ஒண்பொறி - ஒளியுடைய புள்ளி ๔๔๐
ஒய்யென - ஒய்யென்னும் ஒலியுண் டாக ๔๘
ஒரீஇ - விலக்கி ๒๐๑๒
ஒருகழை - ஒற்றை மூங்கில் ๔๘๐
ஒருசிறை - ஓரிடம் ๔๒๑๒
ஒருசொல் - ஒரோ ஒருசொல் ๕๘
ஒருதலை - ஒருபுறத்தே ๔๑๒
ஒருதானன்று - ஒன்றுமட்டுமே அன்று ๔๒๒
ஒருத்தல் - ஆண்பன்றி ๑๕๔๔
ஒருநன்று-ஒரோவோருதவி ๔๔๗
ஒருநாள் புணர்ப்புணரின் - ஒரு பொழுதுமட்டும் கூடநேருமா யின் ๒๘๐
ஒருநின் பாணன் - ஒருவனுகிய நினது பாணன் ๔๒๘
ஒருபருந்து - ஒற்றைப் பருந்து ๒๘๗
ஒருபழம் - ஒற்றைப் பழம் ๒๕
ஒருபாற்படுதல் செல்லாது - ஒரு பக்கத்தே பொருந்தாமல் ๑๕๐
ஒருமணி - ஒற்றைமணி ๔๕๐
ஒருமருங்கினம் - ஓர் உடலையுடை யேம் ๒๒๘๐
ஒருவேம் ஆகிய - பிரிவாலே ஒரு வேமாகிய ๗๘
ஒலிகழை-ஒலிக்கும் மூங்கில் ๒๗๒
ஒலிக்கும் - ஆரவாரிக்கும் ๘
ஒலித்தாங்கு - ஒலித்தாற்போல ๔๒๒๒
ஒலிநெடும்பீலி - தழைத்த நெடிய மயிற்றோகை ๒๕๕
ஒலிமென் கூந்தல் - தழைத்த மெல்லிய கூந்தல் ๒๒๗
ஒலி வெள்ளருவி - ஆரவாரிக்கும் வெள்ளிய அருவிநீர் ๘๘
ஒல்லா - பொருந்தமாட்டா ๗
ஒல்லென - ஒலிக்குறிப்பு ๒๘
ஒல்லேம்-பொருந்தமாட்டேம் ๔๕
ஒல்வாங்கு - இயன்றவரையில் ๗๒๒
ஒல்வாளல்லள் - உடம்படாள் ๕๒
ஒல்வையாயினும் - பொறுப்பா யாயினும் ๒๗๕
ஒழிவதாயினும் - நீங்குமாயினும் ๕๒
ஒழுகிய - நீண்டு வளர்ந்த ๔๔๗
ஒழுகுநீர் - ஓடும் நீர் ๒๗
ஒழுகை - சகட வரிசை ๒๘๘
ஒளித்த செய்தி - மறைத்துவைத்த களவுமண நிகழ்ச்சி ๒๒๔๕
ஒறுப்ப - தண்டிக்க ๒๕

ஒன்பதிற்றிருன்பது களிறு - எண் பத்தொரு ஆண்யானை உகூஉ
ஒன்றஞன் - ஒருகாரணத்தால் உ0அ
ஒன்றுடையேன் - ஒருசெயலை உடையேன் உஃ0
ஒன்று தெளிய - உண்மை விளங் குமபடி எஞ
ஒனறுமணம் - கலத்தற்குரிய மணம் ஈடஎ
ஒனறு மொழிக்கோசர் - வஞ்சி னத்தையுடைய கோசர எஈ
ஒன்றுவன் - பொருந்துவன் உ0அ
ஒன்றேன் - பொருந்தேன் உ0அ
ஒன்றோ - இதுமட்டுமோ கசச
ஓங்குமலை - உயர்ந்த மலை எசு, அஎ, அஅ
ஓங்கு வரையடுக்கம் - உயர்ந்த மலைப்பக்கம் சுக
ஓதம் - கடற் பெருக்கு க, ஈச0
ஓதி - கூந்தல் ஈஎக
,, - முந்தி; இடைக்குறை கச0
ஓமை - ஒருவகை மரம் எக, கஉச
ஓம்புமதி - பாதுகாப்பாயாக உஃ ஞ
ஓம்பென - பரிகரிப்பாயாக என்று கூற சஅ
ஓராங்கவிழ்ந்த - ஒரு தன்மையாக மலர்ந்த உ அஉ
ஓராங்காட்ட - ஒருங்கே அலைப்ப ஈகசு
ஓராங்கு - ஒரு தன்மையாக ஃ அ, உ ஞ்ஞ
ஓரான் வல்சி - ஒரு பசுப்பயனே விற்றுக்கொள்ளும் உ ண வு உகஞ்சி
ஓரி - ஆண்மயிர் உஉக
ஓரி முருங்க-தலைசூட்டுச சிதைய உசச
ஓரிற்பிசசை - ஒரேவீட்டிற்பெறும் பிசசை உளஎ
ஓரும் - அசைநிலை உசசு
ஓரேருழவன் - ஒற்றை எரையுடைய வறிய உழவன் கஈ0
ஓலை யாயம் - விளையாட்டு மகளிர் குழாம் சஅ
ஓரேன் - தெளிகிலேன் உஅ
ஓலை மகளிர்-விளையாட்டு மகளிர் சஎக

ஓர்க்கும் - செவிகொடுத்துக் கேட் கும் ஈடகசு
ஓர்யான் - ஒருத்தியாகிய நான் சு
ஓவலர் - நீங்காதவர் ஈடச
ஓவாதீயும் - ஒழியாதே வழங்கும் கக
ஓவாது - ஒழியாது கசுக
ஓங்குதல் வெள்ளம் - இரவாகிய வெள்ளம் கஉஉ, ஈ அள
கஞல - நெருங்க ஊ அஉ
கடக்கும் - வெல்லும் அ0
கடப்பாட்டாளன்-கடமையையுள் பவன் கசஈட
கடமா - ஒருவகைவிலங்கு களக
கடமை - ஒருவகைவிலங்கு ஈ கஉ
கடல - கடலிலுள்ளன கபச
கடலங்கானல்-கடற்கரையிலுள்ள அழகிய சோலை உ சஞ்சு
கடலாடு மகளிர் ஈடஉக
கடலாழ்கலம் - கடலில் மூழ்கும் மரக்கலம் உசச0
கடலும்கானலும் - கடலும்கடற் கரைச சோலையும் அக
கடல்சூழ்மண்டிலம் - உலகம் ஈ00
கடல்பாடவிந்து - கடல்முழக்க மொழிந்து களள
கடவதன்று - செலுத்தற்பால தன்று ஈ சுக
கடவன் - கடமையுடையோன் ஈகஅ
கடவுட்கற்பு - கடவுட்டன்மையு டைய கற்பு உஞ்உ
கடவுணண்ணியபாலோர் - துறவி கள் உ0ஈ
கடவுநர் - செலுத்துவோர் ககஅ
கடவுபு - வினவி உஞ்உ
கடவுமதி-செலுத்துவாயாக உஞ்0
கடவுள் அள
கடறு - காடு ஈஈக
கடற்கண்டாங்கு - கடலிடத்தே கண்டாற் போன்று ஈகஞ்
கடற்கெல்லாந்தானறிஞும் - கடல் வற்றி எல்லாகாணப்பட்டாலும் ஈளகஈ
கடற்றில் - காட்டின்கண் உ0கூ
கடனறிமாக்கள் - தத் தங் கட மையை உணர்ந்த மாந்தர் உகஞ்

கடன் - தெய்வத்திற்கிடும்பலிக் கடன் உகஅ

கடிகம்சேறும் - ஓட்டச்செல்வேம ककअ

கடிதிடியுரும் - விரைந்திடிக்கும் இடி ऊककक

கடிந்த - கடியப்பட்ட ஙऊङ

கடிந்த செறுவில் - களையப்பட்ட வயலில் ८०ऊ

கடிந்தன்று - விலக்கியது ४०क

கடிப்பு குறுந்தடி ८ए०

கடிய கழறல் ஓம்புமதி - கடுஞ் சொற்கூறி இடித்துரைத்தலை ஒழிக ८ऊ४

கடியாதோள் - தடைசெய்யாத வள் ङ ऊक

கடியுடை மரந்தொறும் - மண மூடைய பலாமரங்கடோறும் ञ८उ

கடியுண் கடவுள - புதியதை உண் ணுகின்ற தெய்வம ४०ग

கடீஇயர் - ஓட்டுதற்கு क ४क

கடுகுபு போகி - விரைந்து சென்று ञऊ४

கடுங்கணவேழம் - தறுகண்மை யுடைய யானை ४००

கடுங்குரல் - கடியவோசை ञऊ

கடுங்குரையள் - விரைவுடையள் कञ ८

கடுஞ்சுரை நல்லான் - விரைந்து பால்சுரக்கும் நல்ல ஆ कञ८

கடுஞ்சூல் - தலைசூல் ङ ०क

கடுத்தல் - மிகுத்தல் कञ

கடுநவை - பெருந்துன்பம் क०ए

கடுந்தேர்-விரைந்தோடுந்தேர் ४ग

கடுப்ப - ஒப்ப ककऊ

கடும்பகட்டியானை - விரைந்தசெல வையுடைய களிற்றியானை ऊक

கடும்பனி - மிகுந்தபனி एऊ

கடும்பாம்பு - கொடியநஞ்சுடைய பாம்பு ञ८ग

கடும்புனல் - விரைந்தோடும்நீர் क०ञ

கடுவளி - விரைவுடைய காற்று ञ८ए८

கடுவன் - ஆண்குரங்கு ८ऊ

கடைக்கொள - மூடிவடைய ऊक

கடைப்புணை தெப்பத்தின் கடைப் பகுதி ८८८

கட்கின்புதுமலர்-கண்ணுக் கினிய புதியமலர் ८०८

கட்கும் - களைஎடுக்கின்ற क००

கட்சி - காடு कऊ०

கட்டாள - பொன்னுரைகல் कऊ८

கட்டி - சேரன்படைத்தலைவருள் ஒருவன் कक

கட்டில் - அரசுகட்டில் ८८ग

கணகாய்வகை-காலக் கணக்கை ஆராய்கின்ற முறை ८ ऊक

கணங்கொள் - கூட்டத்தைத் தக் கவர்ந்து கொள்கின்ற क०ल

கணந்துள் - ஒருபறவை ञ०ग०

கணைக்கால்-திரட்சியுடைய தண்டு ऊ

கணைக்கோட்டுவாள் - திரண்ட கொம்பையுடைய வாளாமீன் कऊ

கண்கலிழ் - கண்கலக்கம் ञ०अ

கண்டகூறு - கண்கூடாக அறிந்தது ८

கண்டதுமொழிவல் - யான்கண்கூ டாக் கண்டதொன்றனைக கூறு வேன் ८ल०

கண்டரவந்த காமம்-கண்காட்டித் தருதலாலே உண்டான காமம் ञ०ग

கண்டல் - தாழை ककल

கண்டனம் வருகம் - பார்த்துவரு வேம ८ल

கண்டார்க்கேட்டனையோ - கண் டாரைக்கேட்டு அறிந்துகொண் டாயோ एग

கண்டிசின் - காண்பாயாக ककर

கண்ணகன்தூமணி - இடமகன்ற தூயமணி ञ८ल

கண்ணி - தலையிற்சூடுமாலை कक, ञ८र

கண்ணிமருப்பு - கண்ணிபோன்று வளைந்த கொம்பு ञ८ऊञ

கண்ணியவாண்மை - கருதிய ஆள் வினையுடைமை ञ८ऊक

கண்ணிற்காக்கும் - கண்ணுலேமட் டும் காவல் செய்கின்ற ग्अ

கண்ணினிதுடீஇயர் - கண்இனி தே உறங்குவார ञ८ऊग

கண்ணின்மானும்-கண்ணை ஒக்கும் கூ
கண்படுவரை - தங்கியிருக்கும்மேல உஎங
கண்பனிப்ப-கண்கலங்கிப்புளிப்ப கசுக
கண்பாடு - உறக்கம் ஙஎ
கண்மாறின்று - இடம்பெயர்ந்தது கஉஙஎ
கண்வலை - கண்ணுக்கிய வலை கஅச
கதவுமுயறல் - கதவைத்திறக்க முயலுதல் உகச
கதவு - மறைசெய்தி டஉக
கதழும் - விரைந்தோடும் சுகள
கதழ்வீழ்அருவி - விரைந்துவீழும் அருவி கடிச
கதுப்பிற்பாயல் - கூந்தலாகிய படுக்கை உஙஎச
கதுப்பு - கூந்தல் உக, அஉ
கதுவியாங்கு - கௌவிஞற் போன்று சஅங
கதூஉம் - கௌவுகின்ற அ, சுக
கமஞ்சூல் - நிறைந்த சூல் கஙஅ
கமண்டலம் - கரகம் கஙசூ
கமழும் - மணம் வீசுகின்ற உஉ
கமழ்சுளைப் பெரும்பழம் - மணக்கும் சுளையையுடைய பெரிய பலாப்பழம் ஙசஉ
கமழ்பூ - மணங்கமழும் பூ கo
கயந்தலை - மெல்லிய தலை ஙகூச
கயம் - குளம் கூ
கயவாய் - பெரிய வாய் களசு
கயனுடியானை - குளத்திலாடுகின்ற யானை களo
கயிறரிளருத்து - கயிற்றை அறுத்துச் செல்லும் காளை ககள
கயிறூடு பறை - கயிற்றிலேறி ஆடுங்கால் முழக்கும்பறை எ
கரந்தனள் - மறைத்தாள் கo
கரப்பாடும் - மறைத்தலையுடைய சொற்களைச் சொல்லும் கூ
கரம்பை - ஒருவகைநிலம் சoo
கருக்குடை நெடுமடல் - கருக்கோடுகூடிய நெடிய பனை மட்டை ஙஎஉ
கருங்கட்டாக்கலை - கரிய கண்ணையும் தாவுதலையும் உடைய ஆண் குரங்கு சுக
கருங்கட்டெய்வம் - கரிய கண்ணையுடையதொரு தெய்வம் அசு
கருங்காலன்றில் - கரிய காலையுடைய அன்றிற் பறவை ஙoக
கருங்கால் வேங்கை - கரிய அடியையுடைய வேங்கைமரம் உசு, சஎ
கருங்கால் வேம்பு - கரிய அடியையுடைய வேப்பமரம் உச
கருங்காழுலக்கை - கரிய வயிரமேறிய உலக்கை உஙஅ
கருங்கோட்டுப் புன்னை - கரிய கொம்புகளையுடைய புன்னை மரம் கஉஙஉ
கருங்கோல் - கரிய கொம்பு ஙஉ
கருநரை நல்லேறு - கரிய பெரிய நல்ல ஏறு ஙடகள
கரும்பு ஙடஙி
கரும்புடைப்பணைத்தோள் - கரும்பை ஒத்திய பருத்தோள் ஙஅச
கரும்பு நடுபாத்தி - கரும்பு நடுகின்ற பாத்தி உசுஉ
கருவி - தொகுதி சஉ
கருவிமாமழை - தொகுதியையுடைய பெரிய மழை கூச
கலந்தன - ஒன்றின சo
கலம் - பாண்டம் உள
கலாவம் - மயிற்றோகை உஉஙி
கலிகெழுகுறும்பூர் - ஆரவாரமிக்க குறும்பர்கள் ஊர் ஙஉஅ
கலித்த - தழைத்த கூஅ
,, - ஆரவாரித்த ஙடகஅ
கலிமயில் - ஆரவாரிக்கும் மயில் உஉஙி
கலிமழை - ஆரவாரிக்கும் மழை உசுச
கலிழும் - அழும் கக
,, - கலங்கும் களசு
கலுஇ - கலத்து உகக
கலைதொட — ஆண்குரங்கு தோண்ட கூo
கல்கெழுகானவர் - மலை பொருந்திய காட்டில் வாழுங்குறவர் எக
கல்பிறங்கு அத்தம் - மலைகள் விளங்கும் பாலை நிலம் சுசு
கல்பொரு சிறுநுரை - அலை கல்லிலமோதுங்கால் உண்டாகும் சிறிய நுரை உகo

கல்லாவன்பறழ் - தன்னெழிலைக் கற்றிலாத வலிய குட்டி ௬௬
கல்லிடுபெடுத்த - கல்லெறிந்து எழுப்பிய ௨௮
கல்லுறுகோடு - மலையைக் குத்திக் கல்லிய மருப்பு ௬௬
கல்லென் கானம் - கல்லென்னும் ஓசையை உடைய காடு ௬௬
கல்லென்ற - கல்லென்று முழங்கின ௨
கல்வரை மார்பர் - கற்களையுடைய மலைபோன்ற மார்பையுடைய தலைவர் ௭
கவட்டிலை-பிளவுபட்ட இலை ௨
கவணை - கவண் ௩
கவண் - கல்லெறியும் கருவி ௧
கவரும் - கவர்ந்து தின்னும் ௬
கவாகுரல் - தன்துணையைக் கவரும குரல்; கவர்த்த குரலுமாம் ௨
கவலை - கவர்த்த வழி ௨
,, - ஒருவகைக் கிழங்கு ௩
கவலைத்து - கவர்த்த வழிகளை உடையது ௬
கவவு - தழுவுகை ௧
கவளம் - யானையுணவு ௬
கவிர் - முள்ளுமுருங்கை ௦
கவின்பெறீஇயர் - அழகுபெறும் பொருட்டு ௩
கவைமகன் - இரட்டைப் பிள்ளை ௩
கவைமுள் - கவர்த்த முள் ௬
கழலோன் - வீரக்கழலையுடைய தலைவன் ௧
கழல் - வீரக்கழல் ௭
கழல் தொடி - உழலும் வீரவளையம் ௬
கழல் தொடியாஅய் - உழலுந் தொடியை யணிந்த ஆய் என்னும் வள்ளல் ௮
கழலப - கழன்று ௨
கழறும் - இடித்துரைக்கும் ௬
கழறுவோர் - இடித்துரைப்போர் ௬
கழனி - விளைநிலம் ௮
கழாது - தூய்மை செய்யாமல் ௬
கழிந்த மாரி - சென்ற கார்ப்பருவம் ௨
கழி முதுக்குறைமை - பேரறிவுடைமை ௬
கழிய-கழியின்கண் உள்ளன ௬
கழிவது கொல்லோ - நீங்குமோ ௨
கழீஇய - கழுவிய ௬
கழுது - பேய் ௬
கழுவுறு கலிங்கம் - தோய்த்த ஆடை ௬
கழைதிரங்காரிடை - மூங்கில்கள் உலர்கின்ற அரிய வழி ௩
களவன் - நடக்கூறுவோன் ௨,
௩
களவிற்கு - களவொழுக்கத்திற்கு ௭
களிறுவழங்கு சிறுநெறி-யானைகள் செல்லும் சிறிய வழி ௨
களிற்றுச செவியன்ன பாசடை - யானைக் காதுபோன்ற பசிய இலை ௨
களகலம் - நீக்கமாட்டேம் ௦
களைஞர் - களைபறிப்போர் ௩,
௬
களைவோரிலை - நீக்குவோரில்லை ௦
கள்வர் - ஆறலைப்போர் ௬
,, - பொய்யர் ௬
கள்ளியங்காடு - கள்ளியையுடைய பாலை ௬,
கள்ளிற் கேளிர் - கள்விற்கும் வீட்டிற்கு உறவினர் ௨
கறங்க - ஒலிக்க ௬
கறவை - கறக்கும் ஆன் ௦
கறி - மிளகுக்கொடி ௦
கறிக்கும் - கடிக்கும் ௩
கறைவிரல் - கறுப்பையுடைய விரல் ௬
கனவு ௬
கனவே மற்றிது - இது கனவோ ௬
கனைத்த - திரண்ட ௨
கன்முகை - மலைமுழைஞ்சு ௫
கன்றுற்றுப்படுத்த - கன்றுகளை மேய்தற்குரிய வழியிற் செலுத்திய ௨

கன்றிலோரா - கன்றில்லாத ஒரு பசு உசு0
கன்றும் - ஆன் கன்றும் உள
கன்றுவபிற்படர - கன் று கு ளிடத்தே செல்லா நிறப கo அ
காஞ்ஞெயன்ன - பொற் காசு போன்ற: ஐ சாரியை உளஅ
காசு - பொற்காசு சுள, கஜ அ
காஞ்சியூரன் - காஞ்சி மரத்தை யுடைய ஊரையுடைய தலைவன் கo
காட்டல் - காட்டாதே கக,உ
காட்டியோய் - காணசசெய்தோய் உ,உ,சு
காணுக்கழிப - காண்டல் மாத் திரையே செல்வர் உ,,, க
காணிய-காணும்பொருட்டு உ,,,,
காணுநர்ப்பெறின்-ஆராயவாரைப் பெற்றால் கஅ சு
காணேன் - காண்கிலேன் ந,,க
காதலர் - தலைவர் ச, ரo
காதலர்ப்படர்ந்து - தலைவரை நினைந்து ,, ரo
காதலாவரவு - தலைவர் வருகை எஅ
காந்தட்டி - காந்தளையுடைத்து க
காந்தள் - ஒருவகைசசெடி எசு, அச
காந்தள்வேலி-காந்தட்செடியாலா கியவேலி கoo
காமங்கடையின் - காமம்மிகுமா யின் ,, ரo
காமகாழ்நெகிழின் - காமநோய் முதிர்ந்தால் கள
காமத்துப்பகை - காமமாகியபகை உ,,எ
காமநோய் ,,
காமநாகுமதி - காமநோயைப் பொறுத்துக்கொள் உ,கo
காமம் - ஆகுபெயர், மெய்யுறு புணர்சசி சஉ
காமம்எய்க்கும்-காமம் மெலிவடை யும் ககஉ
காமம்காமம் என்ப - காமம்காமம் என அஞ்சுவர் க,,சு
காமம்செப்பாது - யான்விரும்பிய தனைச் சொல்லாமல் உ
காமம்நெரிதர - காமநோய்நெருக் குதலான் கஅக
காமர்-விருப்பம்; அழகுமாம்-(கட வுள் வாழ்த்து சுக
காமர்ப்பொருட்பிணி - விரும்புதற் குக்காரணமான பொருட்பற்று உ,,,
காமவெள்ளாரி-காமமாகிய ஒள் ளிய நெருப்பு ,,o,,
காயம் - கறி ,,அக
காயா - ஒருவகைசசெடி க அ,,,
காயும் - வெயில்வீசும் ,,அ
காய்விடுகடுநொடி - காய்வெடிக் கின்ற கடிய ஓசை கஎச
காரன்றென்றி - கார்ப்பருவம அன்று என்கின்றாய் கச அ
காரிதுபருவமாயின் - இது கார்ப்ப ருவமானால் ,,அஉ
காரிருள்ஞாலே - கரிதாக இருண்ட மடல் உ,அஉ
காரெனக்கூறினும் - கார்ப்பருவம் என்று கூறுவதுபோன்றிருப்பி னும் உக
கார் - கார்ப்பருவம் கஉசு
காரெனகார்ப்பருவம் என்று சுசு
கார்தலைமணந்த - கார்காலம்பொ ருந்திய கஅசு
கார்புறந்தந்த - முகிலாற்காக்கப் பட்ட கசுஉ
காலமாரி - பருவமழை உoo
காலன - காலிடத்தன எ
காலியற்கடுமா - காற்றுப்போல் விரையும் கடியகுதிரை உ,,o
காலியற்செலவு - காற்றியக்கம் போன்ற செலவு கஅசு
காலெறிகடிகை - அடியில்வெட் டப்பட்ட துண்டு உ சுஎ
காலைஎழுந்து - வைகறையிலே துயிலினின்றும் எழுந்து சுரு
காலைவருந்தும்-காலைநேரத்திலே துன்புறுகின்ற சுஅ
காலொடி - காற்றாலே ,,க
கால் - காற்று எ
காவலர் - ஊர்காவலர் உசுக
காவல்செல்லாது - காத்திராமல் உசு,,
காவன்மறந்தகானவன் - காவாது விட்ட குறவன் ந,சஉ

காவி - ஒருவகை நீர்ப்பூ க ச ச
காவிரி உ ஞ அ
காளைகூடன் - காட்டையுடைய நாட்டின் தலைவன் ஞ ச
கானங்கோழி - காட்டுக்கோழி உ ச உ
கானமஞ்ஞை - காட்டுமயில் ங உ அ
கானயானை - காட்டியானை ஞ ச, எ க
கானலஃதே - கடற்கரைச்சோலையின்கண்ணது க எ
கானவாதங்கை-குறக்குடிப்பிறந்த மகள ங ங ஞ
கானவைப்பு - முல்லைநிலம் க அ ந
கான்யாறு - காட்டியாறு க க ங
கூட்பி - போகட்டு க க ச
கிடப்பின் - கொண்டால் ங எ ஏ
கிண்கிணி - சதங்கை க ச அ
கிழக்குவீழ்ந்தன - கீழேதொங்கின ங ங எ
கிழவன் - தலைவன் ண ச
கிளந்தபின் - கூறியபின்னர் ந எ ச
கிளவி - சொல் க ஏ சு
கிளிவாய்ஒப்பின் - கிளியின் அலகை ஒப்பாக உடைய உ ச ஏ
கிளை இய - கிளைத்த ங ண எ
கிளைதது - தோண்டி ஞ அ
கிளைமழை - தோண்றுமழை க ஈ எ
கிளைமுதல்-சுற்றத்தாரிடத்து ஈ க
கிளையுடைமாந்தர் - உறவினரையுடைய மக்கள் உ ச எ
கிளையொடுகாக்க - சுற்றத்தோடே பாதுகாவல் செய்ய அ ஏ
கிள்ளை - கிளி கு எ
கீழிருந்து - அடிப்பகுதியிலிருந்து கொண்டு ஈ ஏ
கீழ்தாழ்வன்ன - கீழேவிழுமாறு போன்ற உ ஞ எ
கூச்சுகூ - ஒலிக்குறிப்பு க ஞ எ
கூடவரை - மேற்குப்பகுதி அ ஊ
கூடிக்கிய - கூடித்தற்கு ந ஞ சு
கூடிமுறை கூடிமுறை - கூடிக் டோறும் க ஞ ஏ
கூடுமி-(கொண்டை) சூட்டு ஞ ச எ
கூடுபிக்கோழி - சூட்டையுடைய கோழி உ ஞ ச
கூடைவன - குளிப்பன ச சு
கூட்டுவன் - சேரமன்னன் ஞ ச

கூணகடல் - கீழ்கடல் க உ அ
கூணன் - கூணம் உ ஏ சு
கூணில் - குறுந்தடி ஞ உ அ
கூண்டுநீரிலஞ்சி - ஆழ்ந்தநீரையுடைய பொய்கை ஈ க
கூண்டுநீர்ஆம்பல் - ஆழ்ந்தநீரில் நின்ற ஆம்பல் க உ உ
கூப்பைக்கோழி - குப்பையின்கண் மேயும் கோழி ஞ ஏ ஞ
கூமரிவாகை - இலையவாகைமரம் ஞ ச எ
கூய்ப்புகை - தாளிதப்புகை க சு எ
கூரவம் - கூராமரம் ஞ ச க
கூரற்கூந்தல் - கொத்தாகிய கூந்தல் க க உ
கூராலான் - கூரால்நிறமுடையபசு உ உ ச
கூரில்-தலைமையுடையோன் ஞ க
கூரீஇயோப்புவாள் - குருவியை ஓட்டுபவள் எ உ
கூருகு - அன்னம் ; நாரையுமாம் உ ஞ, உ சு ஏ
கூருகுளரிடம்-நாரைகள் சிறகைக் கோதுமிடம் உ உ அ
கூருகென மலரும் - அன்னம் போலப் பூக்கும் உ உ சு
கூருதிப்பூ - கூருதி போன்று சிவந்த மலர் க
கூருந்து - கூருந்தமரம் க ச அ
கூரை - குட்டி ஞ அ
கூல்லை - கஞ்சங்கூல்லை என்னும் செடி, கஞ்சா க க
கூவவுமணல் - குவிந்த மணல்மேடு உ ஞ சு, ஞ ஏ ஏ
கூவவுமென் முலையள் - குவிந்த மெல்லிய முலையை உடையாள் க ங உ
கூவளை - ஒருவகை நீர்ப்பூ ஞ ஏ
கூவளைத் தொடலை - கூவளை மலர் மாலை ஞ ச சு
கூவளைநாறும் கூவையிருங்கூந்தல்-கூவளைமலர் மணக்கும் செறிந்த கரிய கூந்தல் ஞ ஏ ஏ
கூவளையங்கண் - கூவளை மலர் போன்ற அழகிய கண் க ஞ
கூவளையொடு பொதிந்த - கூவளை மலரோடே சேர்த்துக் கட்டிய ஞ க

குவிமுகிழ் - குவிந்த அரும்பு கள
குவியிணர்த் தோன்றி - குவிந்த பூங்கொத்தையுடைய செங்காந் தள் ௪0ள
குவை - குவியல் ௫உ
குழலிசைக்குரல - வேய்ங்குழலின் இசை போன்ற குரலுடையன ௧௫க
குழல்விளங்கு ஆய்தூதல் - பன் மொழித் தொகை, தலைவி ௩ச
குழவி - கன்று ௧ங-உ
குழவியுள்ளி - கன்றை நினைந்து ங-ச ச
குழறினும் - ஒலித்தாலும் ௧௫-ங
குழீஇ - கூடி ங-0-ங
குழீஇய - கூடியுள்ள ங-க, ௧ங-ஃ
குழீஇய பதுக்கை - கூட்டமாக வுள்ள குவியல்கள் ங-ள உ
குழுமும் - முழங்கும் ங-உ ஈ
குழை பிசைந்தனையேம்-தளிரைக் கசக்கிஞெற் போன்றேம் உ அ
குழைய - குழைவதாக உ ச
குளகு - யானையுணவு ௧ங-சு
குளவி - காட்டுமல்லிகை ௫ச, ௧00
குளவி நாறும் - காட்டுமல்லிகை மணங் கமழும் ௫௫
குளித்த-நீருட்புக்கொளிந்த ௧உள
குறடு - ஒருவகைக் கருவி ௧௧அ
குறமகள் - குறப்பெண் ங-௩ச
குறவன் - குறிஞ்சி நிலத்தில் வாழ் பவன் அ உ
குறிஞ்சி - ஒருவகை மரம் ங-
குறிநின்றனன் - குறியிடத்தே நின்றான் ங-அ-
குறியிறைப்புதல்வர் - குறிய முன் கையையுடைய பிள்ளைகள் ங-௩ச
குறிவாயாத்தப்பல் - குறி வாய்ப் பசசெய்யாத தவறு ௧உக
குறுகலோம்புமின் - அடைதலைப் பரிகரிமின் ௧அச
குறுங்காலன்னம் - குறுகிய கால் களையுடைய அன்னம் ங-00
குறுங்காற் கட்டில் - குறிய காலை யுடையபடுக்கைக்கட்டில் ங-ஙக
குறுங்கை - குறிய கை ச ச
குறுஞ்சிறைத் தும்பி - குறிய சிறகையுடைய வண்டு உங-க
குறுநடை - குறிய நடையையுடை யோய் 20க
குறுநர் - பறிப்போர் ளஅ
குறுந்தாள் கூதளி-குறிய அடியை யுடைய கூதளஞ் செடி ச0
குறுந்தொடி - குறிய வளையலை உடையாள் உ-ங-ங
குறுமகள் - சிறுமி எ0
குறும்பல் சுனை - குறிய பலவாகிய சுனைகள் ள உ
குறும்பொறை-குறியகற்கள் ள-ச
குறும்பொறைக் கணவும் - குறிய பொற்றைக் கல்லில் ஏற நினிர்ந்து நோக்கும் ங-ங-ங-
குறுவட்டி - சிறு வட்டில் ள ங ங
குறைத்தலைப்பாவை - குறைத்த தலையுடைய அரிதாள் உ உ0
குன்றக்கூகை - மலையில் உள்ள பேராந்தை ள ங ங-
குன்றச் சிறுகுடி-மலையின் கண்ண தாகிய சிற்றூர் ங ங-உ
குன்றத்தன்ன - மலையையொத்த உ-ங-சு
குன்ற நாடன்-குறிஞ்சித் தலைவன் ங-சு, ங-அ
குன்றம் - மலை க
குன்றம் சேர - மேற்றிசை மலை யைச்சேர ள ச ங ங
குன்றம்பாடிய பாட்டு - மலையைப் பாடிய பாட்டு உ-ங-
குன்றி - குன்றிமணி. (கடவுள் வாழ்த்து)
குன்றுகெழுநாடர் - மலை பொருந் திய குறிஞ்சி நிலத்தையுடைய தலைவர் அள
குன்றூர் - ஒரூர் ள ச உ
கூகைக் கோழி - கோட்டானுகிய கோழி ங-ச ச ங-
கூடினும் - கூட்டைக் காட்டிலும் ங-ள உ ச
கூட்டும் - சேர்க்கும் ங-அ சு
கூதிருருவிற் கூற்றம் - கூதிர்ப் பருவத்தின் வடிவம்கொண்ட மறலி ள ச ள
கூதிர்யாமம் - கூதிர்ப்பருவத்து நள்ளிரவு அ சு
கூந்தலின் - கூந்தலையுங் காட்டில் உ

கூந்தல் அ()
கூந்தன் மெல்லணேயேம் - கூந்த லாகிய படுக்கையிடத்தேம் உ.எ()
கூம்ப - முகிழ்க்க (நு)நு
கூம்பிய சிறகர் - குவிந்துள்ள சிறகு ச.சு
கூம்பின - குவிந்தன க.உ.உ
கூம்புபொதி - குவிந்த அரும்பு ங.(நு)
கூருகிர் - கூரிய நகம் ங.(நு)க
கூரம்பனி - மிக்கபனி (நு)க
கூவல் - கிணறு உ.உ.சு
கூவுகேன் கொல் - அழைப்பேனே உ.அ
கூழை - கூந்தல் க.க.ங.
கூழை இருவி-கூழையான தினைத் தாள் க.(நு) ங.
கூழை நெய்தல் - கூழையான நெய்தல் உ.உ.சு
கூழை மூங்கில் - ஒடிந்த மூங்கில் க.எ.கூ
கூழையிரும்பிடி - குறிய கரிய பெண்யானை க.க.க
கூறல் - கூறவேண்டா க.எ(நு)
,, - சொல்லுதல் உ(நு)கூ
கூறிய பருவம் - வருவதாகக் குறித்த காலம் ச.சு
கூறினவதனை - சொன்னவெலென் னும் ங.ங.உ
கூற்றத்தன்ன - மறலி போன்ற உ.அ(நு).
கூற்றம் - மறலி உ.சு.எ
கூன்மலர் - வளைந்த பூ க.சு.எ
கூன்முண் முண்டகம் - வளைந்த முள்ளையுடைய முள்ளி (நு)க
கெடுநரும் - காணுமற் போவாரும் க(நு)()
கெட்டிடத்துவந்த உதவி-கேடுற்ற போது பிறர் வலிந்து செய்த உதவி உ.உ(நு)
கெண்டிய - தோண்டிய உ.(நு).(நு).
கெண்டை - ஒருவகை மீன் கூ.க
கெழீஇய - பொருந்திய உ
கெழு - பொருந்திய (நு).க
கெழுதகைமை - உரிமை உ.சு.க
கேடில் விழுப்பொருள் - கெடாத சிறப்புடைய செல்வம் உ.க.சு
கேடெவ னுடைத்து - என்ன கேடுளதாம் (நு).எ(நு).
கேட்குநர் - வினவுவோர் அ.சு
கேட்டிசின் - கேட்பாயாக (நு)()
கேண்மை - கேளிராந்தன்மை ; நட்பு (நு).அ, கூ.க, கூ()
கேழிருந்துறுகல் - கரிய நிறத்தை யுடைய குண்டுக்கல் க.க.க

கேளிர் - விளி; நண்பரே (நு)அ, உ.அ()
கேளேமல்லேம் - கேளாதிருந்தே மல்லேம் உ.சு.சு
கை - செயல் (நு)().அ
கைகரந்தன்ன - கைமறைபட்டாற் போன்று க.க.க
கைதை - தாழை (நு)().சு
கைதொட்ட - கையாற்றொண்டிய (நு).சு.உ
கைந்நில்லாது - என்பால்நில்லாது க.சு.கூ
கைந்நூல்யாவாம் - காப்புநூல் கட்டமாட்டாம் உ.க.அ
கையுணையாக - கையேகருவியாக (நு).கூ.அ
கைம்மிக - மிக சு.(நு).
கைம்மை - கணவனற்ற நிலை கூ.கூ
கையற - செயலறும்படி (நு)(நு)
கையறவிடின் - செயலறும்படிவிட் டால் க(நு)உ
கையறுமாலை - செயலறவுடைய மாலைப்பொழுது (நு).உ, (நு).அ.எ
கையாறு - துன்பம் சு.அ
கையில்லூமன் - கையில்லாத வூமையன் (நு)அ
கையுங்காலுந் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை-முன்னின்றார் கை யும் காலும் தூக்கத் தானுந்தூக் கும் கண்ணாடியுட்பாவை அ
கையுடைநன்மா - யானை (நு).க.அ
கைவள்ளோரி - கைவண்மையு டைய ஓரிவள்ளல் க.கூ.கூ
கைவிடுபசுங்கழை - கையால் வளைத்துவிட்ட பசியமூங்கில் (நு)சு
கைவினைமாக்கள் - தொழில்செய் வோர் (நு)().கூ
கோக்கு-ஒருவகைப்பறவை க.க.எ
,, - மாமரம் உ.சு

கொங்கர் - கொங்கநாட்டினர் நற.கபக

கொங்கு - பூந்துகள் உ, ஙக

கொடிக்கூந்தலள் - நீண்டகூந்தலை யுடையாள் கந.உ

கொடிசசி-குறிஞ்சிநிலமகள் உகச

கொடியன்-கொடுஞ்செயலை யுடை யோன் உ.நி.உ

கொடியிணர் - நீண்டபூங்கொத்து உக

கொடியோரல்லர் - கொடுமை யுடையோர் அல்லர் அள

கொடியோர் - கொடுந்தொழில் செய்வோர் அள

கொடியோரா - தீ ய ம க ளி ருடைய நா உ

கொடீஇயர் - கொடுக்க நிக

கொடுங்கழி - வளைந்த கழி ந. ஙநி

கொடுஞ்சி-ஒரு தேர் உறுப்பு உகஉ

கொடுஞ்சிறைப்பறவை - வளைந்த சிறகையுடைய பறவை கூ.

கொடுந்திமில் - வளைந்த தோணி ஆ ஙச

கொடுமணி - வளைந்த மணி அசு

கொடுமைஎன்றி - கொடுமையை நினைந்து உஉச

கொடுவரிஇரும்புலி - வளைந்த கோடுகளையுடைய பெரியபுலி உ.கநி

கொடுவில் - வளைந்தவில்; கொடிய வில்லுமாம் கஉ

கொணர்கம் - கொண்டுவருதற் பொருட்டு கக.ப

கொண்க - தலைவ கக ச

கொண்கன் - தலைவன் உகக

கொண்மார்-கொள்ளும்பொருட்டு கசு

கொம்மை-திரட்சி உ அக

கொமமை - பெருமை கநிக

கொய - கொய்ய உ ஙஅ

கொல்லி - ஒருமலை அக

கொல்லிக் குடவரை-கொல்லிமலை யின் மேற்குப்பக்கத்தே கஙஙி

கொல்லிக்குடவரைப்பாவை - ஒரு தெய்வப் படிவம் கஙஙி

கொலலை - தினைக்கொல்லை கசக

கொல்லினை - கொல்லன்தொழில் ந.ஙச

கொல்வையாயினும் - ஒறுப்பா யாயினும் உ.நிக

கொழுங்கொடியவரை கொழுதத கொடியையுடைய அவரை அஉ

கொழுதும் - கோதுகின்ற அ.நி

கொழுநன் - கணவன் அஙி

கொழுமடல்-கொழுத்தபனைமடல் ந.ஙக

கொளீஇ - கொண்டு ந. சஙப.

கொள்வாமென்றி - கொள்ளக்க வேம் என்கின்றனை நி.சஙக

கொன்முனை - அஞ்சுதகுபோர்க் களம் கூக

கொன்று - வெட்டி எந.

கொன்றை சு.சு

கொன்றைச்கானம் - கொன்றை மரத்தையுடைய முல்லைநிலக் காடு உக

கொன்னலர் - வீண்பழி நி.உ ஙி

கொன்னூர் - பெரிய ஊர் கந.அ

கோங்கு ஒருவகைமரம் உ.நி.சு

கோடல் - காந்தள் சுஉ

கோடியர் - கூத்தர் எஅ

கோடிவர்பு - கொம்பிலேறி உ எ ச

கோடுஇலகுவளை - சங்கரிக்கியற் றிய வினைங்குகின்ற வளையல் ந.க

கோடு - சங்கு கக

கோடுதோய் - கொம்புகளைத்தீண் டாநின்ற கூ.

கோடுகொடுத்து-கொம்பை விற்று கஙஙி

கோடைதூக்கும் - மேல்காற்று அலைக்கின்ற ந.சு.கூ

கோடையிட்ட - மேல்காற்றுக் குவித்த உ.சஅ

கோடையொற்றிய - மேல்காற்று மோதிய நி.சந.

கோடையொற்றினும்-மேல்காற்று மோதினாலும் நி.அஅ

கோட்டுமீன் - கொம்புடைய சுறாமீன் ந.ஙச

கோட்புலி-கொல்லும்புலி உ.நி.எ

கோதைபோல - மாலைபோன்று சூஉ

கோப்பன்ன - கோ வை யை ப் போன்ற உ.நி.

கோல் - திரட்சி உசுள

கோளிடம் - கொள்ளுமிடம் உகஙி

கோள்வல்லேற்றை-கொலைத்தொழில்வல்ல ஆண் கசக, ஈஉச
கௌவை - துன்பம் ஈச
,, - பழிமொழி ககஉ
சாஅய் - மெலிந்து ஈ0, கூஈ
சாஅய்நோக்கு - மெலிந்தபார்வை கஈஉ
சாந்து - சந்தனம் கடு0
,, - மயிர்ச்சந்தனம் ஈகஉ
சாம்பல் - வாடற்பூ சசு
சாயினன் - மெலிந்தான் எச
சாரல் - மலைப்பக்கம் ஈ., உஉ
சாரலுட - மலைப்பக்கத்தையுடைய நாட்டையுடைய தலைவனே கஅ, சுக
சால்பீன்றன்று - அமைதியைத்தந்தது கூ0
சால்பு - சான்றாண்மை ஈசுசு
சாறு - திருவிழா ஏக
சான்றோர்புகழும்முன்னர்நாணுப-பெரியோர்தங்கண்முன்னே தம்மைப்புகழ்தலையும் நாணுவர் உடுஉ
சீதட்டிக்காய்-குருட்டிக்காய்; உள்ளீடழிந்தகாய் உசுக
சீதவலர் - துகிலுடையோர் கசசு
சீதறியன்ன-சிதறினாற்போல கடஈ
சீதைஇ - சிதைத்து ஈசக
சீமைய - குவடுகளையுடைய ஈஎஉ
சிலமெல்லியவேகிளவி - சொற்கள் சின்மையும் மென்மையும் உடையன எ0
சிலம்பிற்சிலம்பும் - மலையில் எதிரொலிசெய்யும் ஈசு0
சிலம்பு - ஒருவகைக் காலணி எ
,, - பகுதிமலை உஉ
சிலம்புபுல்லென - மலைபொலிவின் றும்படி ஈஉஎ
சிலவாகுக - ஒருசிலவே ஆவதாக கூக
சிலை - ஆரவாரம் உஎஉ
சிலைதருங்குரல் - முழங்குமொலி கூச
சில்பெயல்-சிலவாகியமழை ஈஈஉ
சில்லவிழ்-சிலவாகியசோறு ஈசுஉ
சிறுஅர் - சிறுவர் கஉக
சிறிது - சிறிதுபொழுது கச

சிறியரும்பெரியரும் வாழும்ஊர் - அறிவிலிகளும் அறிஞரும்வாழுமாறின்ற ஊர் ஈசுஅ
சிறியிலை - சிறியஇலை: யகரம்விகாரத்தாற்கெட்டது உ0உ
சிறுகட்பெருங்களிறு - சிறிய கண்ணையுடைய பெரிய ஆண்யானை அஅ
சிறுகட்பெருங்கிரை - யானையின் பெரியதிரள் உசடு
சிறுகுடி - சிற்றூரிலுள்ளோர் கo0
சிறுகுடிக்குறவன் - சிற்றூரிலுள்ள குறவன் கூடு
சிறுகுடிப்பட்டென - சிற்றூரில் சேர்ந்ததாக ஈஉஉ
சிறுகுடைகோலி - சிறியகுடலையாக்குவித்து சுo
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு - சிறியகிளையிலேபெரியபலாப்பழம் தூங்கினாற்போன்று கஅ
சிறுகோற்குடம்பை - சிறுசுள்ளிகளாற்கட்டிய கூடு ஈ0க
சிறுதலைப்பிணை - சிறியதலையையுடைய பெண்மான் கஅங
சிறுதினைமறுகால் - தினைக்கொல்லையில் விதைக்கப்பட்ட மறுவிதைப்பு அஉ
சிறுநல்லூர் - சிறியநல்ல ஊர் குடு, அக
சிறுநாவொண்மணி - சிறியநாவையுடைய ஒளிபொருந்திய மணி ஈஈசு
சிறுநெறி - ஒடுக்கமானவழி கடுக
சிறுபசுங்கால - சிறியபசியகாலையுடையன உடு
சிறுபிடி - அன்மொழித்தொகை ஈ கூ0
சிறுமறி - சிறிய ஆடு ஈசுஉ
சிறுமனை - விளையாட்டுவீடு ஈஉசு
சிறுமாவையம் - சிறியகுதிரைகளோடு கூடியவிளையாட்டுத்தேர் கூக
சிறுவன்தாய் - தலைவி சடு
சிறுவீ - சிறிய பூ டுo
சிறுவெண்காக்கை - சிறிய வெள்ளிய கடற்காக்கை உசசு

சிறுவெம்மையள் - சிறிதேவெப்ப மூடையள் ஈடஎசு
சிறுவெள்ளரவின்-சிறிய வெள்ளிய பாம்பினுடைய ககக
சிறைபனி-தடுத்த கண்ணீர்த்துளி அசு
சினவலோம்புமதி - வெகுளாதே கொள் ஈடசுஉ
சினை - முட்டை ஊகள
சினைதொறும் - கொம்புகடோறும் அஈ
சினைப்பசும் பாம்பு-கருக்கொண்ட பசசைப்பாம்பு கூஙி
சின்மொழியினிவை - சிலமொழி களே பேசும் தலைவி கச
சின்னுட்டு-சிலநாள்களை யுடையது ஙிஙி
சின்னுள் - சிலநாள் உஈ0
சீரில்வாழ்க்கை - சிறப்பில்லாத வாழ்க்கை உசுஙி
சீர் சாலா - ஒப்பாகமாட்டா க0க
சீறடி - சிறிய அடி கசஅ
சூடர் - ஞாயிறு கசுஙி
,, - விளக்கு ஈடசுஅ
சுடர்செல் வானம் - ஞாயிறு மறைந்த வானம் உஈடச
சுடர்வாய் நெடுவேல்-ஒளிபொருந் திய நெடியவேல் ஈடஎஅ
சுட்டுபு - விரலாற் சுட்டிக்காட்டி சு0
சுரம்பலவிலங்கிய - சுரங்கள் பல குறுக்கிட்ட ஙிசு
சுரிநுகுப்பு - சுருண்ட குருத்து ஈடஅ
சுரியாரளைத்தலை - சுருளமைந்த மயிரையுடைய தலை உஅக
சுரிவளை - முறுக்குடைய சங்கு உசு0
சுரும்பு - வண்டு ஈடஉக
சுரை - சுரப்பு கஅள
சுவர் நல்லிசை-உச்சவிசை ஈ.உஈ
சுவர்வாய்ப்பற்றும் நின்படர்-சுவரி லிழைத்த கோடுகளைப்பற்றி எழும் நின் துன்பம் ஈடஙிஅ
சுருளறிந்த புண்-சுருமீன் எறிந்த மையால் பட்டபுண் உசுஊ
சுனைப்பூக் குற்றும் - சுனைமலர் களைப் பறித்தும் கசஉ
சூடுப - சூடாநிற்பர் கள
சூரரமகளிர் - தெய்வமகளிர் ஙிஈ
சூருடையதிக்கம் - தெய்வமுடைய மலைப்பக்கம் ஈடஎசு
சூர்-தீண்டிவருத்துந் தெய்வம் ஙிஉ
சூர்மலை - தெய்வமுறையும் மலை க0ஙி
சூழ்திசின் - -எண்ணியுள்ளேன் கக
சூன்முதிர் பேடை - கருமுதிர்ந்த பெண பறவை அஙி
சூன்முதிர்ப்பன்ன - சூல் முதிர்ந் தாற் போன்று ஈடஙி
செங்கட்காரான் - சிவந்த கண்ணை யுடைய பெண்ணெருமை உசுக
செங்கண் இரும்புலி - சிவந்த கண்ணையுடைய பெரிய புலி ஈ.உக
செங்களம் - குருதியாற் சிவந்த போர்க்களம் க
செங்காலுழுந்து - சிவந்த தண்டை யுடைய உழுந்து சுஅ
செங்காற் பல்லி - சிவந்த காலை யுடைய பல்லி கசு
செங்கோட்டியானை - குருதியாற் சிவந்த மருப்பையுடைய யானை க
செங்கோல் அம்பு-சிவந்த திரண்ட கணை க
செஞ்கோல் அவையம் - முறை பிறழாத அறங்கூ றவையம் உஎசு
செங்கோல் வாளி-சிவந்த திரண்ட கணை உஎஉ
செஞ்கோற் பதவு-சிவந்த தண்டை யுடைய அறுகம்புல் ஈ.சுஈ.
செஞ்சுடர் - செவ்விய விளக்கு ஈ.ஙிஈ.
செஞ்சுவல்-செம்மண்மேடு உஅஉ
செத்தும் - அழிந்தும் கஈ.ஈ.
செந்தலை அன்றில் - சிவந்த தலை யையுடைய அன்றிற் பறவை கசு0
செஞ்தொடை - செவ்விய அம்பு ஈ.அஙி
செந்நெல் - சிவந்த நெல் ஙிஊ
செந்நெற்றி - சிவந்த சூட்டு க0எ
செப்பம் - நேர்மை கசு

செப்பலுமாற்றும் - கூறவும் வன்மையில்லேம் ௨௫௮
செப்பின் - சொல்லாலே ௩௫௮
செப்பினம்செலின் - கூறிச் சென்றால் ௨0௭
செப்பு - ஒருவகை உலோகப் பாண்டம் ௯
செப்புநர்ப் பெறின் - சொல்வாரைப் பெற்றால் ௯௮
செம்புலப் பெய்நீர் - சிவந்த நிலத்திலே பெய்யப்பட்ட மழைநீர் ௫0
செம்பூ முருக்கு - சிவந்த பூவையுடைய பலாசமரம் ௪௩௫
செம்மல் - தலைவன் ௨௫௨
,, - வாடற்பூ ௩0
செயலை - அசோகமரம் ௨௪௫
செய்பொருள் - ஈட்டற்குரிய பொருள் ௪௯0
செய்வினை - செய்தற்குரிய தொழில் ௫௩
செய்வினை முடிமார் - தொழிலை முடிப்போர் ௩0௯
செய்வுறுபாவை - அரக்காற் செய்யப்பட்ட பாவை ௪௯௩
சேரீஇய - செறுதற்கு ௯௨
செருவுறு குதிரை - போர்க்களம் புக்க குதிரை ௩அ
செலவியங் கொண்மோ - போக எம்மை ஏவுதல் கொள்வாயாக ௪௪௫
செலவு - செல்லுதல் ௨௨
செலவுறு தகவு-செலுத்தாநின்ற வாழ்க்கை ௪௩
செலீஇயர் - செல்க ௨௯௨
,, - செல்லும் பொருட்டு ௪௪
செல்கம் - செல்வேம் ௪௪௫
செல்ப - செல்வார் ௩௫அ
செல்ப என்பவோ - செல்வார் என்று கூறுகின்றனரோ ௭௯
செல்லல் - துன்பம் ௪௪, ௨0
,, - போகாதே ௪௭
செல்லாதீம் - போகன்மின் ௩௩0, ௩௯0
செல்லாற்றுக் கவலை - செல்லும் ஆற்றிடைக் குறை ௨௯௩
செல்வச் சிறார் - செல்வமுடைய சிறுவர் ௪௫அ
செல்வர் கொல் - போவாரோ ௩அ0
செல்வாரல்லர் - செல்லமாட்டார் ஈ௩
செவிமுதலிசைக்கும் - செவியில் ஒலிக்கும் ௩அ0
செவிலியர்-வளர்ப்புத்தாயர் ௨௨
செவ்வரை - செங்குத்தான மலை ௪அ
செவ்வாய் வானம் - செக்கர் வானம் ௩அ0
செவ்வான் - செக்கர்வானம் ௪0அ
செவ்விப் பைம்புனம் - பருவமுடைய பசிய தினைப்புனம் ௪அ
செவ்வியை யாகுமதி - தக்க பருவத்தை உடையை யாகுக ௪அ
செவ்வீ - சிவந்த பூ ௩0
செவ்வெரிந்-சிவந்த முதுகு ௨௨
செறிகோள் - நெருங்கிய குலை ௪௪அ
செறிதுனி - நிரம்பிய துன்பம் ௨௯0
செறிநிரைவெண்பல் - செறிந்து நிரல்பட்ட வெள்ளிய பல் ௩அ
செறிந்தன - நெருங்கின ௫௪
செறியெயிறு - நெருங்கிய பற்கள் ௨
செறிவு - அடக்கம் ௨௪ஈ
செறுவர்க்கு - பகைவர்க்கு ஈ௩ஈ
செற்றும் - செறியாநிற்கும் ௨ஈ0
சென்மழை-செல்லும்முகில் ௪௫ஈ
சென்மோ - வருவாயாக ௨எ௩
சென்றநாட்ட - சென்று தங்கிய நாட்டிலுள்ளன ௪அ
சென்றநாட்டு - போய்த்தங்கிய நாட்டின்கண் ஈ௫
சென்றவாறு - போனவழி ௩எ
சென்றற்றே அங்கு - ஓடி அற்றுப் போனதுபோன்று ௯௯
சென்றைக்க - செல்க ஈ௩அ
சென்னி - உச்சி ௪ஈ
சேஎய் - முருகக்கடவுள் ௪
சேக்கும் - தங்கும் ௪ஈ
சேட்பட - தூரத்தே சென்றொழிய ௨ஈ௪

சேணிகந்தன்று - தூரத்தே சென்றது உகக
சேணோன் - பரணின்மேலிருப்போன் கஙO
,, - உயரத்திலிருப்பவன் ஙஙஎ
சேந்தனர் கொல்லோ - தங்கினரோ எக
சேந்தன்றந்தை - சேந்தனுடைய தந்தை உஙஅ
சேந்துவரல் - தங்கிவருதல் உசO
சேப்ப - சிவக்க உஞச
சேமச செப்பு - நீர் சேமித்து வைக்கும் கலம் உளள
சேம்பின் - சேப்பஞ் செடியினது எசு
சேயரிமழைக்கண் - சிவந்த கோடுகளமைந்த குளிர்ந்த கண் அசு
சேயர் - தொலைவிடத்திலுள்ளார் சுச
சேயள் - தூரத்திலுள்ளவள் கஉஅ
சேயாறு - தூரியவழி உசுக, சOO
சேயிலை வெள்வேல் - குருதியாற் சிவந்த இலையையுடைய வெள்ளிய வேல் கஙி
சேயிழை - அன்மொழித் தொகை உஅக
சேயுயர்விசும்பு - தூரிதாக உயர்ந்த வானம் ஙகச
சேய்த்துமன்று - தூரியது மன்று கஙஙி
சேய்ஞாட்டார் - தூரஞாட்டினர் சுச
சேரி - தெரு உஞக
சேரிசேர - சேரியை அணுகும்படி உகஅ
சேர்த்தி - ஓம்படைசெய்து சுக
சேர்ந்து கழிந்த - கூடிச் சென்ற கஉச
சேர்ப்ப - தலைவனே சக
சேவடி - செம்மையாகிய அடி. (கடவுள் வாழ்த்து)
சேவலங்கொடியோன் - முருகக் கடவுள். (கடவுள் வாழ்த்து)
சேறிரோ-செல்கின்றீரோ உசுஅ
சேறுஞ்சேறுமென்றலில் - போவோம்போவேம் என்று அடிக்கடி கூறுதலானே ஙஉஙி
சேறும் - செல்வேம் அO
சேற்றுநிலை - சேற்றில் நிற்கும் நிலை உசுக
சொல்பிறவாயின - சொல்பொய்யாயின ஙகசு
சொல்லகிற்றும் - சொல்லவல்லேமல்லேம் ஙகசுஅ
சொல்லவிந்து - பேச்சொழிந்து சு
சொல்லவுமாகாது - கூறவுமாட்டாமல் ஙஎசு
சொல்லின்எவன் - சொன்னல் என்ன கஅஞ
சொன்றி - சோறு உஙஙி
சோணை - ஓர்யாறு எஞ
சோரும்-சோர்ச்சியடைகின்ற அஅ
சோர்குவ - சொரிவன உஅஉ
சோர்விடை - சோர்ந்திருக்கும்அமயம் ஙஙஞ
சோலைவாழை - சோலையாகிய வாழை ஙOஅ
சோழர் கஙசு
ஞமலி - நாய் கஎக
ஞாங்கர் - பக்கம் கஙஉ
ஞாயிறனையன் - ஞாயிற்றை ஒப்பான் ஙகஞ
ஞாயிறு ஞிஅ
ஞாயிறு காயாது - ஞாயிறு சுடாமல் ஙஎஅ
ஞாயிறுபட்ட-ஞாயிற்று மண்டிலம் மறைந்த கூஉ
ஞாழல் - ஒருவகை மரம் ஞிO
ஞெகிழ - நெகிழ, கழல கக
ஞெகிழஞெகிழ்ந்தன்று - மனமிளகும்பொருட்டுநெகிழ்ந்தது அள
ஞெகிழி - கொள்ளி ஙஞிள
ஞெகிழ்த்த - நெகிழ்த்த உஞஉ
ஞெமை - ஒருவகை மரம் உஅஞி
ஞெரேரென - விரைந்து உகங
தகாஅன் - தகுதியில்லாதவன் உசு
தங்கடன் இறீஇயர்-தமது கடமையைச் செலுத்தும் பொருட்டு உசஞி
தச்சன் சுக
தடவுநிலை - வளைந்த நிலையினையுடைய சுசு
தடவுநிலைப் பெண்ணை - வளைந்து நிற்றலையுடைய பனை ஙOக
தடந்தாணுரை - வளைந்த காலையுடைய நாரை ஙஎசுக

தடமருப்பியானை - பெரிய கொம்பையுடைய யானை ௨௯௫
தடமென் றோள் - பெரிய மெல்லிய தோள் ௭௭, ௮௭
தடவின் - தடாமரத்தினது ௯௬0
தடைஇய - தடுத்த ௯௫௯
தட்டை - கிளிகடி கருவி ௨௨௫
தட்டைப் பறை - தட்டையாகிய பறை ௯௯௫
தணப்ப - விலகாநிற்ப ௫௯௮
தணப்பருங்காமம் - நீக்கற்கரிய காமம் ௯௭௭
தணவாவுங்கு - பிரியாத முன்பு ௫௯௮௬
தணிதல் - குறைதல் ௯௫௯
தணிந்து - ஆறி ௨௬௬
தண் சிதர் - குளிர்ந்த மழைத்துளி ௯0௯
தண்டாக் காமம் - நீங்காத காமம் ௬௭
தண்டியோர் - அமைந்தோர் ௯௭௭
தண்டு - முக்கோல் ௯௬௯
தண்டுடைக்கையர் - தடி பிடித்தவர் ௯௯௯
தண்டுறையூரன் - குளிர்ந்த நீர்த்துறையமைந்த ஊரையுடைய தலைவன் ௯௯
தண்ணந்துறைவன் - குளிர்ந்த கடற்றுறையை உடைய தலைவன் ௯
தண்ணியள் - குளிர்ச்சியுடையாள் ௮௯
தண் ணுமை - ஒருவகை முரசு ௫௯0
தண்பவர் - குளிர்ந்த கொடி ௯0௯
தண்பனிப்பாவை - மிக்க குளிர்ச்சியுடைய விளையாட்டுப் பாவை ௯௮
தண்பெரும் பவ்வம் - குளிர்ந்த பெரிய கடல் ௯௯௯
தண் வரல் வாடை - குளிர்ந்த வருகையுடைய வாடைக் காற்று ௫௬, ௭௯
ததும்பி - ஒலித்து ௭௮
ததும்பிய - முழங்கிய ௫௯௬
ததும்பும் - ஒலிக்கும் ௯௬
ததைந்த - செறிந்த ௨௯
தத்த - தத்திவீழ ௯௯

தந்தனை சென்மோ - கொடுத்து விட்டுச் செல்க ௨௫௯
தந்தோய் போல - தருவாய் போன்று ௯௯௭
தப்பல் - தவறு ௯௨௯
தப்பற்கு - தவற்றிற்கு ௭௯
தப்புலப்பினும் - தம்மைப் புலந்தாலும் ௯௭௭
தமரோரன்னள் - தமரோடொத்தவள் ௫௯௨
தமிய - தனிக்கும்படி ௯
தமியர் - தனித்துறைவோர் ௫௯, ௯௯
தமியேன் - தனிமையுடையேன் ௫0
தமியோர்க்கு - தனித்துறைவோர்க்கு ௯௨௯
தம்மிலர் - தமக்கென அறிவில்லாதார் ௨௮௯
தம்மில் - தம் வீட்டின்கண் ௮
தம்மிற்றமதுண்டன்ன - தம்வீட்டிலிருந்து தாம் ஈட்டிய உணவை உண்டாற்போன்று ௮௫
தம்மின்று - தம்மையன்றி
தம்மூரான் - தமதூரிடத்திலுள்ளான் ௯௭
தயங்க - விளங்கும்படி ௬௫௯
தயங்கு திரை - விளங்கிய அலை ௨௨
தரீஇய - கொணர்தற்கு ௨௯௯
தருஉம் - கொணர்ந்து நல்கும் ௯0
தருமார் - தருதற்கு ௨௯௯
தலை - கூந்தல்; ஆகுபெயர் ௫௫௭
தலைஇய - பொருந்திய ௫௬
தலைபோகாமை - கெடாமை ௯௭0
தலைப்புடை - முதலில் தூங்கிலை ஒலித்தல் ௫௫0
தலைப்பூண் - தெப்பத்தின் தலைப்பகுதி ௨௨௨
தலைய - பெய்ய ௯௯௬
தலையலர் - முதன் முதல் மலர்ந்த மலர் ௨௬௯
தலையின்று - பெய்தது ௫௭அ
தலைவரம்பு - எல்லை ௯௭௨
தவச்சிலவே - மிகச்சிலவே ௫௨அ
தவச்சிறிது - மிகவும் சிறியது ௯அ
தவப்பன்னாள் - மிகப் பலவாகிய நாட்கள் ௨௭௯
தவாஅ வாய - தவாஅ வாய்போன்ற வாயை புடையன ௯௯அ

தவறு - பிழை எள
தவ்வென - தவவென்னும் ஒசை யுண்டாக நெருங்க
தழல் - ஒருவகைக் கிளிகடி கருவி உருட்டு
தழீஇய - தழுவுதற்கு சுருங்கி
தழுவணி - குரவைகூத்து உருவம்
தழை - தழையாலாகிய உடை கருங்கூந்தல்
தழைதா ழல்குல் - தழையாடை தாழ்ந்த அல்குல் நெருங்கு
தளிதரு தண்கார் - துளியைத் தரும் குளிர்ந்த கார்காலம் சுருங்கி
தளை யவிழ்பல் பேதை - கட்டவிழ்ந்த பல மலர் ஒருங்கு
தற்கெழுதகுவி - தனக்குப் பொருந்திய தகுதியையுடைய தலைவி நெருங்கு
தற்படர்ந்தமை - தன்னை நினைந்து வருந்தியமை எழு
தனிப்போர் - காண்பாரில்லாப் போர் நெருங்கி
தன்புதல்வன்தாய் - மனைவி அ
தன்னுழையது - தன்னிடத்தது கழுவு
தன்னுறுவிழுமம் - தனக்குற்ற துன்பம் நெருங்குவ
தன்னூர் மன்றம் - தனது ஊரம் பலம் நெருங்கு
தன்னெயா - தமையன்மார் உவலை
தாஅ - தாவுகின்ற களவு
தாஅம் - தாவும், பரக்கும் நெருங்கி
தாஅய் - தாவி ஒருங்கு
,, - பரவப்பெற்று கூடு
,, - பரவி இருங்
தாக்கி - மோதி அழி
தாக்குவேன் கொல் - மோதுவேனே உயி
தாங்கல் செல்லா - பொறுக்கலாற்றாத, கருங்கண்
தாங்கவும் - தடுக்கவும் நெருக்கம்
தாங்கி - துடைத்து தூ
தாதமர் பூ - தாதுள்ள மலர் நெருங்கு
தாதிற் செய்த - பூந்தாதாலே இயற்றிய தூய
தாநீர் - பாயும்நீர் நெருக்கம்
தாமரை - ஆகுபெயராய் மலர்க் காயிற்று. (கடவுள் வாழ்த்து)
தாமரைக் கொங்கு - தாமரைப் பூவின் தாது நெருங்கு
தாமறிசெம்மை - தம் நெஞ்சறிந்த நடுவுநிலைமையுடைய உருவு
தாம் - அசை தூ
தாயின் மூட்டை - தாய் அற்ற மூட்டை கருங்கை
தாய்காண் விருப்பு - தாயைக் காண்டற்குரிய அவா கருவு
தாரல் - தாராதேகொள் உருவு
தார்மணி - மாலையிற் பதித்த மணி உருட்டு
தாவா - கெடாத நெருங்கு
தாவென் சொல்லினும் - கொடு என்று கேட்கும் சொல்லிலவிட நெருங்கு
தாழிருள்-தாழ்கின்ற இருள் உலகு
தாழை தைஇய - தாழை பொருந்திய நெருங்கு
தாழ்ந்தன்று - தங்கிற்று நெருங்கு
தாளி - ஒருவகை அறுகம்புல் கருங்
தானறியலள் - அவளே அவளறிந்திலள் நெருங்கி
தானே இருக்க - தான் மட்டுமே இருக்க உருவு
தான் - அசைநிலை கூடு
தான் தழுந்தட்ட - தானே தழுவி விச சமைத்த கருவி
தீகழொளி - விளங்குகின்ற ஒளி (கடவுள் வாழ்த்து)
திகழ் சிலம்பு-விளங்கும் பக்கமலை நெடு
திணிமணல்-செறிந்த மணல் களவு
திணைப்பிறத்தல் - உயர் குடியிற் பிறப்பது தூய
திண்டேர் - திண்ணிய தேர் கருவி
திண்டேர்நள்ளி-திண்ணியதேரையுடைய நள்ளி வள்ளல் உருவம்
திதலை - தேமல் உவ, கருங்கண்
திதிக்குறங்கு - தேமலையுடைய துடை உருவு
திமில் - தோணி கருவி
திரங்கிய - உலர்ந்த நெருங்கு
திரண்ட மென்றோள் - திரட்சியையுடைய மெல்லிய தோள் எழு
திரிமருப்பெருமை-முறுக்குடைய கொம்பையுடைய எருமை உருவம்
திருநுதல் - அழகிய நெற்றி ஒருங்கு

திருந்திறைப்பணைத்தோள் - திருந்திய முன்கையையுடைய மூங்கில் போன்ற தோள் ๑๔๘
திருமனை - செல்வ நிறைந்த வீடு ๔๘๔
தில் - அசைநிலை ๔๔๑
திவலை - துளி ๏๗
திறப்பல் - வெளிப்படுத்துவேன் ๏๑๘๔
திறவோர் - திறமையுடையோர் ๑๔๑
தினைத்தாள் அன்ன - தினையினது அடியைப்போன்ற ๑๏๗
தினைப்பிரப்பு - தினையையுடைய பிரப்பு ๑๔๏๒
தின்றதன் தப்பற்கு - தின்றமையாலுண்டான தவற்றிற்கு ๑๔๑๑
தீங்கழைக்கரும்பு - இனிய கழைச்சாதிக் கரும்பு ๘๗๗
தீங்குரலகவ - இனிய குரலானே அழைப்ப ๔๔๔๔
தீதில் நெஞ்சம் - குற்றமற்ற உளளம் ๔๐๔๙
தீதுமொழியினும் - பொய் கூறினாலும் ๑๔๙
தீநீர் - காட்சிக்கினிய நீர் ๗๏
தீம் பழம் - இனிய பழம் ๘, ๘๑
தீம் பால் இனிய பால் ๑๔
தீம்புளி நெல்லி - இனிய புளிப்புடைய நெல்லிக்கனி ๑๑๔๔
தீம்புளிப்பாகர் - இனிய புளிக்குழம்பு ๔๔๔๔
தீம்புனல் - இனிய நீர் ๔๔๔๔
தீய கலுழி - தீமையுடைய வெள்ளமே, (விளி) ๑๑๑๔
தீயுறு தளிர் - தீயிலிட்ட தளிர் ๑๑๘๑๑
தீயோரன்ன - தீயை ஒத்த ๔๗๏
தீர்க நின்படர் - நின் துன்பம் ஒழிவதாக ๑๏๗๔
துகள் - புழுதி ๑๔๔๔
துஞ்சலம் - உறங்கேம் ๔๔๑๘
துஞ்சாதுறைநர் - உறங்காதிருப்போர் ๔๙๗๏
துஞ்சாதேன் - உறங்காதேன் ๛๛
துஞ்சு களிறு - துயில்கின்ற யானை ๑๑๛๛
துஞ்சூர் - துயில்கின்ற ஊர் ๒๘

துஞ்சும் - துயிலும் ๛๛
துஞ்சூர் - துயிலும் ஊர் ๔๐๒
துட்கென்றன்று - அஞ்சிற்று ๔๛๔
துணங்கை - ஒருவகைக் கூத்து ๑๑๛๙
துணைதுறந்து - துணைவியைப் பிரிந்து ๒๐
துணைத்த - சேர்க்கப்பட்ட ๑๑๒๛
துதை - நெருக்கம் ๔๔๙๙
துமிப்ப - அழிப்ப ๔๘๔๔
தும்பி - வண்டு ๒๔๔
தும்பி - வண்டே ; விளி ๒
துயரெடுப்பும் - துன்பத்தை எழுப்பும் ๑๑๔๔๛
துயல்வு - அசைவு ๒๔๔๙
துயிலின் கங்குற்றுயில் - தலைவியோடு துயில்தலின் இனிதாகிய இரவின் துயில் ๒๑๏๙
துயிலின்ஞுது - துயிலுதல் துன்பமுடைத்து ๑๑๏๑๑
துயிறுறந்தன - உறங்குதலொழிந்தன ๔๘๛๛
துயிற்கண்மாக்கள் - தூங்கும் கண்களையுடைய அறிவில்லாதோர் ๔๔๏๏
துயிற்றி - போகட்டு ๒๑๑๘
துய்த்தல் - நுகர்தல் ๛๑๑
துவர் வாய் - சிவந்தவாய் ๒๛
துவலை - நீர்த்துளி ๏๗
துவன்றி - நெருங்கி ๒๔๏๗
துழைஇய - துழாவிய ๒๔๏๗
துளக்கும் - அசைக்கின்ற ๔๏๗๘
துளர் - களைக்கொட்டு ๑๑๔๔๒
துள்ளுநடை - துள்ளி நடக்கும நடை ๘๏๗
துறத்தல் வல்லியோர் - நீங்குதல் வன்மையுடையோர் ๒๛๛
துறு கல் - குண்டுக்கல் ๔๔, ๑๔๛
துறை அணிந்தன்று - நீர்த்துறையை அழகுசெய்தது ๏๐
துறைவன் - நெய்தனிலத்தலைவன் ๔๔
தூனி - புலவி ๔๘๔
தூனியல் - வருந்தாதேகொள் ๏๏๒
தூனி - வெறுப்பு ๘๔
தூபரி - விரைகின்ற குதிரை ๒๛๔

தூளி பரி-விரைந்த செலவு நக்கசு
தூன்னருஞ் சாரல்-கிட்டுதற்கரிய மலைப்பகுதி அக
தூன்னரும் பொதியில்-கிட்டுதற் கரிய பொதியமலை நடசு
தூன்னல் போகின்று-நெருங்குதல் ஒழிந்தது. ககநட
தூஉந்துவலை - தூற்றுகின்ற துளி கஎந்ட
தூக்கணங் குரீஇ - ஒருவகைக் குருவி நடஎச
தூக்கில் - சீர்தூக்குமிடத்தே கஎக
தூங்குபு - நான்று உருள
தூங்கும் - தொங்குகின்ற அந்ட
தூது - தூது மொழி கஎசு
தூதிரை - தூய அலை ருஙு
தூமணல் - தூயமணல் ருக
தூவி - இறகு கஎந்ட
தூவெள்ளருவி - தூய வெள்ளிய அருவி கூருஙு
தூற்றலும்-பலரறியக்கூறலும் நடஉ
தூற்றும் - தூவுகின்ற அசு
தெண்கடல்-தெளிந்த கடல் உகஉ
தெண்மணி - தெளிந்த ஒசை யுடைய மணி கருஙு
தெய்ய - அசைநிலை அக, நசுஙு
தெரிதீங்கிளவி - வினக்கமும் இனிமையுமுடைய சொல் உருஎ
தெரித்தூகடை - துள்ளி நடக்கும் நடை உகந்ட
தெருமரல் - மனசுழற்சி உருஎ
தெருவி னியலவும் - தெருவிலே இயங்கும்படியும் கஅஉ
தெளிமே-தெளிந்துகொள் உளந்ட
தெளியக்காட்டி - உணரும்படி எடுத்து விளக்கி உஅந்ட
தெள்விளி - தெளிந்த ஒசை உஎள
தெள்ளறல் - தெளிந்த நீர் சுருஙு
தெறுவது - துன்புறுத்துவது சுருஙு
தெறுவர-துன்பமுண்டாக நந்சு
தெறூஉம் - ஒறுக்கும் அள
தெற்றென - தெளியும்படி நஉ
தென்புலம் - தென்றிசை நகள
தேளெத்தர் - நாட்டினுள்ளார் கக
தேக்கொக்கு - தேமாங்கனி: ஆகுபெயர் உசு
தேங்கமழ் - தேன் மணக்கின்ற உஎருஙு
தேங்கமழ்பு-தேன்மணம் கமழ்ந்து நஅஉ
தே மொழி - இனிய சொல் எஉ
தேம் - தேன் உஉ
தேம்பாய் கூந்தல் - வண்டுகள் பாயும் கூந்தல் ககசு
தேம்பாய் மாமலர் - தேனெழுகுகின்ற அழகிய பூ நகள
தேம்பொதிக்கொண்ட - இனிமையைத் தம்பால் பொதிந்து கொண்ட அருஙு
தேயுமோ - அழியுமோ சஉ
தேய்த்த - இல்லையாக்கிய க
தேரை - ஒருவகைத் தவளை ககநட
தேர் - ஆராய்கின்ற உ
தேர்ந்து - ஆராய்ந்து நஎநட
தேர்மணிகொல் - தேரின் மணியோசையோ உஎருஙு
தேர் விலங்கின - தேரினது செலவைத் தடுத்தன உருசு
தேறலர் - தெளியாதவர் நஉச
தேறேன் - தெளியமாட்டேன்; நம்பேன் உக
தேற்றும் - தெளியாம் நஉகூஅ
தேன் - வண்டு உகக
தை இ - கட்டி கசஉ
,, - தடவி எசு
,, - தைத்திங்கள் ககூசு
,, - பொருந்தி ருஙு
தைஇயும் - பண்ணியும் உஎசு
தகைமுற்றின - அழகு முதிர்ந்தன கஅஅ
தைவந்தனன் - தடவினேன் நஎ
தைவந்தாங்கு - தடவினாற் போன்று உஎச
தைவர லசைவளி - தடவுதலையுடைய இயங்குங் காற்று ககூருஙு
தைவரல் - தடவுதல் ருஙு
தைவருவேன் - தடவுவேன் ககஉ
தொகுபு - கூடி கநநட
தொகுவளை முன்கை - பலவாகத் தொக்க வளையலை அணிந்த முன்கை கருஙு
தொடரி - தொடர்ந்து உருஎ
தொடர்பு - நட்பு சஉ
தொடலை - மாலை கசஉ
தொடலையாயம் - மாலையையுடைய மகளிர் கூட்டம் உகச

தொடாஅல் - தீண்டாதேகொள் ககூக
தொடியோள் - வளையலணிந்தவள் எ
தொடுத்தபோல - தொடுத்து விட் டாற்போல உருள
தொடுத்து - வளைத்துக்கொண்டு ங_ச_கூ
தொடுபு - தோண்டி ங_எங_
தொடுவுழித் தொடுவுழி - தொடுந் தோறும் தொடுந்தோறும் ங_க_கூ
தொடை மாண்ட - தொடுத்தல் மாட்சிமைப்பட்ட ரூஉ
தொண்டகச் சிறுபறை - குறிஞ்சிப் பறை ங_எரி
தொண்டி - ஒரு பட்டினம் கஉ_அ, உகo
தொண்டையர் - தொண்டை மண்டலத்து மன்னர் உ ரூo
தொய்யல் - நெகிழ்ச்சி ங_ரூள
தொய்யில் - மாதர் முலைமேல எழுதும் ஓவியம் உளரூ
தொலைய - அழியும்படி கூங_
தொலைய - தோற்றோட ங_ங_க
தொல்கவின்தொலைந்து - பழைய அழகழிந்து ங_அக
தொல்லைத்திங்கள்-கழிந்த திங்கள் (மாதம்) ககூங_
தொல்வழங்கு சிறுநெறி - பண்டு தொட்டு மக்கள்நடக்கும் சிறிய வழி உoள
தொழுதுகாண்பிறை - தொழுது காண்டற்குரிய பிறைத்திங்கள் களஅ
தொழுவம் - மாடுகட்டும் கொட் டகை ககo
தொன்முரண் - பழைய வலியுடை மை அஅ
தொன்மூதாலத்து - மிகப்பழைய ஆலமரத்தடியில் கஙி
தொன்றுமுதிர் - பழமை முதிர்ந்த ககரூ
தொன்னிலை - பழையநிலை ங_oங_
தோகை - மயில்; ஆகுபெயர் உரூ
தோணலம் - தோளின் அழகு ங_அக
தோண்மாறுபடும் வைகல்-புணர்ச் சியுறும் நாள் கoக
தோய் - தீண்டாநின்ற எரு
தோழி - பாங்கி ககரூ
தோளிணைத் துஞ்சிக்கழிந்தநாள் - தோள்களிலே துயின்று கழிக் கப்பட்ட நாள் ங_உ_ங_
தோற்றம் - வெளிப்படுதல் உரூ_ங_
தோனயந்துண்ட - பட்டையை விரும்பித்தின்ற எக
நகரடங்கியகற்பு - வீட்டின்கண் அடங்குதற்குக் காரணமான கற்பு ங_ந_அ
நகாஅவுங்கே - நகுதற்குமுன்னே உஉரூ
நகும் - நகைக்கும் கஉரூ
நகுவை - சிரிப்பாய் ககரூ
நகை - நகைத்தற்குரிய சொல் கூரூ
நக்க - சிரித்த ககரூக
நக்கதன்பயன்-நகைத்ததனு லுண் டான பயன் ங_அக
நக்கதோர்பழியுமிலம் - சிரித்ததா கிய ஒருபழிகூட இலேம் ங_உo
நக்கியாங்கு - நாவான்நக்கினாற் போன்று கூo
நக்குவிளையாடலும் - சிரித்துவிளை யாடுதலும் சoக
நசை - விருப்பம் ங_எ
நசைநன்குடையர்-நன்றாகவிருப்ப முடையர் உகங_
நசைந்தனையை - விரும்பப்பட்ட தன்மையையுடையாய் ருஉ
நசையாகுபண்பு - விருப்பமாகும் தன்மை சஅ
நசையில் - விருப்பத்தாலே ந_நுக
நசையினம் - விரும்பினேம் எநி
நஞ்சுண்டாங்கு-நஞ்சை உண்டாற் போன்று ங_உ_ச
நடுங்கஞர் - நடுங்குதற்குக்காரண மான துன்பம் எரு
நடுங்கலானீர் - நடுங்குதலேஒழியீர் களஅ
நடுங்கல்-நடுக்கம் கொள்ளல் நிஉ
நடுநாளென்னர் - இடையிரவு என்று கருதாதவராய் உரூஅ
நடுநாள்-நடுஇரவு அஅ, கூக, ங_உக
நட்பின் - நட்பையும் உ
நண்ணிய - பொருந்திய சக, எக
நத்துறந்து-நம்மைப்பிரிந்து உஉஅ
நந்திறத்து-நம்பொருட்டு உஅஜ

நந்நலம் - நமது பெண்மை நலம் (நற்சொல்)
நம்மனை - நமது வீடு (நற்குறி)
நம்மனை மடமகள் - நமது வீட்டிலு றையும் மடப்பமுடைய மகள் (நற்றாய்)
நம்மில்லோர் - நமது வீட்டிலுள் ளோர் (களவு)
நம்முன்னலர் - நம்மை நினையார் (நற்றோழி)
நம்மேசுவர் - நம்மையே பழிப்பர் (தலைவி)
நம்மேபோலும் - நம்மைப்போன்று (நற்கோ)
நம்மோரன்னாள் - நம்மோடொத்த வள் (பாங்கற்கூட்டு)
நம்மைவிட்டமையுமோ - நம்மைப் பிரிந்து பொருந்துவாரோ (நற்றோழி)
நயனிலராகுதல் - அன்பிலராதல் (நற்றாய்)
நயனுடைமை - அன் புடைமை (நற்றாய்)
நரந்தம் - நரந்தம்பூ (நெய்தல்)
நரலும் - ஒலிக்கும் (களவு)
நரைமுகவூகம் - வெள்ளிய முகத் தையுடைய கருங்குரங்கு (தலைவி)
நலங்கேழிரிவை - அழகுபொருந் திய தலைவி (நற்றாய்)
நலத்தகைப்புலத்தி - நன்மையும் அழகுமுடைய வண்ணத்தி (நற்றோழி)
நலம் - அழகு (கூற்று)
நல்கலுநல்குவர் - நல்கலையும்செய் வர் (நற்றாய்)
நல்காராயினும் - தண்ணளிசெய் யாரேனும் (நற்றாய்)
நல்கார் நயவாராயினும்-அளிசெய் யாது விரும்பாதவரும் ஆயினும் (கூற்று)
நல்கின்வாழும் நல்கூர்ந்தோர் - தாம் தண்ணளி செய்வதஞல் வாழுமியல்புடைய வறியவர் (நற்றாய்)
நல்குறுமகள் - ஈன்றமகள் (செவிலி)
நல்கூர்குரல் - மெலிந்தஓசை (அகம்)
நல்கூர்சுரமுதல் - வறியபாலைநிலத் தில் (நற்சுரை)
நல்லகம் - நல்லநெஞ்சம் (களவு, நற்சுரை, நற்றோ)
நல்லகூறி - நல்லசெய்திகளைப்பேசி (உள்ளுறை)
நல்லரா - நல்லபாம்பு (சுரம்)
நல்லறிவிழந்தகாமம் - நல்லறிவை இழப்பித்த காமம் (நற்றாய்)
நல்லான் - சிறந்தபசு (உள்ளுறை)
நல்லிசைவேட்ட - நல்லபுகழை விரும்பின (கற்பு)
நல்லியற்பாவை - நல்ல அழகுடைய தெய்வப்பாவை (அகம்)
நல்லுரை - பயனுடையசொற்கள் (உள்ளுறை)
நல்லை - நன்மையுடையாய் (உள்ளுறை)
நல்லையல்லை - நன்மைதருவாயல்லை (சுரம்)
நல்லோர் - மேன்மக்கள் (எ)
நல்லோள் - நன்மையுடையதலைவி (கற்பு)
நவ்வி - மான் (உவமை)
நளி - செறிவு (உரிச்சொல்)
நள்ளென - நள்ளென்னும் ஓசை யுண்டாக (களவு)
நள்ளென்றன்றே - செறிந்த இருளை உடையதா யிராநின்றது (சுரம்)
நறவுண்டாங்கு - கள்ளுண்டாற் போன்று (களவு)
நறவுமலிபாக்கம் - கள்மிகுந்தஊர் (நற்றோழி)
நறிய - நறுமணமுடையன (உரிச்சொல், உள்ளுறை)
நறுநுதல் - நறிய நெற்றி (நெய்தல்)
நறுந்தண்ணியவ்வே - நறிய மண மும் குளிர்ச்சியும் உடையன (களவு)
நறுந்தண்ணீரள் - நறுமையும்தண் மையும் உடைய தன்மையள் (எ)
நறுமா - நறிய மாமரம் (எற்று)
நறும்புகைஞெகிழி - மணப்புகை யையுடைய கொள்ளி (களவு)
நறுவடி - நறிய மாம்பிஞ்சு (நற்றோழி)
நறையகில் - மணமுடைய அகில் (நற்றோழி)
நற்கறிந்திசினோர்-நன்றாக அறிந்த வர் (உள்ளுறை)
நற்கு - நன்கு (களவு)

நற்பாலோர் - நல்வினையுடையோர் ๑๕๒
நற்றேர் - நல்ல தேர் ๒๘
நனிகேட்டு - மிகக்கேட்டு ๑๓๑
நனிசேய்நாட்டார்-மிகத்தூரியநாட்டிலுள்ளார் ๓๑๐
நனியின்னாது - மிகவும் துன்பமுடையது ๑๕๓
நனிவெயயள் - மிகவும் விருப்பமுடையாள் ๓๘
நனைமுதிர்புன்கு-அரும்பு முதிர்ந்த புன்கமரம் ๓๓๑
நன்நெறியவவே - நல்லநெறிப்பை உடையன ๑๑๒
நன்மொழிக்கு அசசமில்லை - நல்ல மொழியைப் பேச அச்சமில்லை ๓๑๑
நன்றுபுரிகொள்கை - நன்மையை விரும்பிய கோட்பாடு ๓๓๔
நன்றுமற்றில்லை - நன்மை வேறில்லை ๓๗
நன்றுமன் - மிகநன்றாகும் ๒๗
நன்றும் பெரிது - மிகவும் பெரிது ๑๑๒
நன்றும்சேய - மிகவும் தூரத்தன ๑๓๔
நன்றும்நல்ல - மிகவும் நல்லன ๑๑๕
நன்றெனவுணரார்-நன்மை என்று அறியமாட்டாதார் ๔๗
நன்றேமகனே - நலமோமகனே ๓๑๒
நன்னர் - நன்மை ๑๔๕
நன்னர்நெஞ்சத்தன் - நன்மை நிரம்பிய உள்ளமுடையவன் ๑๕๓
நன்னலம் - நன்றாகிய பெண்மை நலம் ๒๓๑
நன்னன் - ஒரு குறுநிலமன்னன் ๔๓๑
நன்னாடு - நல்ல வளமுடைய நாடு ๑๘, ๔๕
நன்னாண்-நல்லநாணம் ๓๕๕
நன்னுதல் - அன்மொழித்தொகை ๒๒
,, - தலைவி ๒๗
,, - நல்ல நெற்றி ๕๗
நன்னுதற்கவின் - நல்லநெற்றியின் அழகு ๑๐๒
நன்னெடுங்குன்றம் - நல்லநெடிய மலை ๓๒
நன்னெடுங் கூந்தல் - நல்லநீண்ட கூந்தல் ๓๒
நாகுபிடி-இளம்பெண்யானை ๓๕๕
நாடவச்சில - நாள்கள் மிகச்சில ๓๒๒
நாடன் - தலைவன் ๓๑
நாடொறும்-ஒவ்வொருநாளும் ๑๘
நாட்குரல் - பருவத்தே விளைந்த கதிர் ๕๑๐
நாட்டிற்போக்கிய - நாட்டிலே போகவிட்ட ๑๓๒
நாட்டின்நாட்டின் - நாடுகள் தோறும் ๑๓๐
நாட்டு - நாட்டிடத்தே ๑๘
நாட்டுயர் - நாடோறும் உறுந்துன்பம் ๓๑๒
நாணட்டு - நாணத்தைக் கொன்று ๑๑๓, ๓๒๘
நாணப்பெயரும் - நாணும்படி மீளும் ๒๘๒
நாணீக்கி-நாணத்தைவிட்டு ๑๗๒
நாணேர்பு-அந்நாளில் உடம்பட்டு ๒๓๗
நாணி - நாணங்கொண்டு ๒๒
நாணிய - நாணும்படி ๑๐
நாணில - நாணமுற்றில ๒๓๗
நாணுகம் - நாணமுறுவேம் ๑๕๕
நாண்மலர் - புதியமலர் ๓๑๗
நாமவர்ப்புலம்பின் - யாம்அவர் திறத்து வருந்தினால் ๓๕๐
நாமுளேமாக - நாம் உயிர்வாழும் பொருட்டு ๒๑๒
நாம்வெங்காதலர் - நாம்விரும்பும் காதலர் ๒๔๗
நாயில்வியன்கடை - நாயில்லாத அகன்ற முற்றம் ๒๑๑
நாரின்நெஞ்சம் - அன்பில்லாத நெஞ்சம் ๒๘๒
நாரின்மாலை - அன்பற்ற மாலைப் பொழுது ๑๘๗
நார்மென்றுதணியும் - பட்டையைத்தின்று தணித்துக்கொள்கின்ற ๒๑๕

நாலூர்க்கோசர் - நான்கு ஊரி லுள்ள கோசர் என்போர் கடு
நாள் - நாட்காலம் கஅச
நாறி - மணம்வீசி அச
நாறிதழ்க்குவளை - மணங்கமழும் இதழையுடைய குவளைமலர் சுஉ
நாறிருங்கூந்தல் - மணங்கமழும் கரிய கூந்தல் உஎஉ
நாறுவெண்பூ - மணக்காத வெள்ளியமலர் அடு
நாறுயிர் - மணக்கும் உயிர்ப்பு கூஉ
நீகர்மலர் - ஒளியுடைய பூ கூக
நிரந்து - வரிசையுற்று நுஉ
நிரம்பா - முற்றக்கைகூடா நுக
நிரம்பாமேனி - முற்ற வளராத உடல் கங
நிரை - பசுக்கூட்டம் கசச
நிரையவெள்வாள் - நிரல்பட்ட ஒள்ளியவாள் உஅ
நிலங்கரி - நிலங்கரிந்த சுஎ
நிலங்காணாலை - நிலத்தைக்காண் கின்றிலை ஙநுடு
நிலங்கொள்பாம்பு - நிலத்திலிறங் கும்பாம்பு கஙசு
நிலத்தினும் - மண்ணுலகத்தினுங் காட்டில் ஙட
நிலந்தொட்டுப்புகார் - நிலத்தைத் தோண்டிஅதனுட்புகுதார் கஙஐ
நிலம்படாஅ - நிலத்திற்றோயாத ககஉ
நிலம்பரந்தன்னபுன்கண் - நிலம் பரவினற்போன்று மிகப்பரந்த துன்பம் கஅசு
நிலம்புடை பெயரினும் - நிலம் இடம்பெயர்ந்தாலும் கஎஙட
நிலவுக்குவித்தன்ன - நிலவொளி யைக்குவித்துவைத்தாற் போன்ற கஉஙட
நிலவுநிறவெண்மணல் - நிலவொளி யின் நிறத்தையுடைய வெள்ளிய மணல் கஉஐ
நிலவும் இருளும் அக
நிலைஇய - நின்ற உசஉ
நிலையாப் பொருட்பிணி - நிலையுத லில்லாத பொருட்பற்று கநுஐ
நில்லாமையே நிலையிற்று - நிலையா மையே நிலைத்தது கசஙட
நிவக்கும் - உயரும் நுச
நிவந்த - உயர்ந்த கூ
நிழலான்றவிந்த - நிழலடங்கியில்லை யான கஙநுசு
நிழற்பட்டு - நிழலுண்டாகி கஎஅ
நிறம்பெயர்ந்து - மேனிமாறுபட்டு உசுஅ
நிறுக்கலாற்றிலேஎ - நிறுத்தமுடிக் தால் நுஅ
நிறை - அடக்கம் கூகநு
நிற்றுறந்து - நின்னைப் பிரிந்து கஙஎ
நினைத்துமருண்டனென் - எண்ணி மயங்கினேன் கூக
நினைப்பாகின்று - நினைவுமாத்திரை யே ஆயிற்று கஐஙி
நின்குறி - நினதுகுறியிடம் ககச
நின்சொற்கொண்ட-நீகுறையுறுஞ் சொற்களை ஏற்றுக்கொண்ட அக
நின்புரைமை - நினதுபெருமை உநுசூ
நின்னலதிலள் - நின்னையின்றி வேறுபற்றுக்கோடிலள் ககஙி
நின்வயின் - நின்பால் சஉ, உநுசூ
நினவயின் - நின்திறத்தில் கூசு
நின்னின்று அமைதல்வல்லாம் - நின்னையன்றி அமைதற்கு வன் மையிலேம் கூஐசூ
நீ அறியும்பூ - நின்னால் அறியப் பட்டமலர் உ
நீகண்டனையோ - நீயேநேரிற்கண் டாயோ எடு
நீடலர் - காலம் நீட்டியார் உடுஙட
நீடல் - காலம்நீட்டித்தல் நுசூ
நீடிய மரத்த - நீண்டமரத்தின் கண்ண கூக
நீடிரும்பெண்ணை-நீண்டகரியபனை கஙஎச
நீடினவரம்பின் - நீண்டவயல்வரம் பில் கூஐசூ
நீடுழந்தன்று - நெடிதுவருந்தியது கசசூ
நீத்துநீர் - நீர்துதற்குரியஆழ்ந்தநீர் ஙகஙட
நீத்தோர்க்கு - பிரிந்து சென் றோர்க்கு உகக
நீந்தி - கடந்து உசூ

நீந்தினமாயின் - கடந்தோமெனினும் ரு அ ள
நீயலென் - பிரியேன் ரு சு
நீயுண்டநலன் - நீ நுகர்ந்த எனது பெண்மைநலம் உ ரு சு
நீர - நீரின்கண்ணவாகிய க க ஒ
நீரத்தம் - நீரையுடையவழி உ ரு ஒ
நீரிலாறு - நீரற்ற வழி உ அ ரு
நீரில்வறுங்கயம் - நீரில்லாத வறிய குளம உ க ரு
நீரில்வைப்பு - நீரற்றபாலைநிலம் உ க க
நீரினும் - கடலினுங்காட்டில் ரு
நீருறைமகன்றில் - நீரில்வாழும் மகன்றிற் பறவை ரு ள
நீரொடுசொரிந்தமிச்சில் - நீரோடு தானம் செய்தெஞ்சிய பொருள் உ ரு ரு
நீரோரன்ன சாயல் - நீர்போன்ற மென்மை கூ ரி
நீர்கால்யாத்த - நீரைஅடியிலே கட்டப்பட்ட ரு அ அ
நீர்சுரம் - நீர்வழி ரு ஒ ச
நீர்ஞிப்பிறழினும் - நீரும்நெருப்பும் தத்தம் இயல்பின் மாறுபட்டாலும் ரு ள ரு
நீர்நசைவேட்கை - நீரைவிரும்பும் விருப்பம் உ எ ச
நீர்நாய் - நீரில்வாழும் ஒருவகை நாய் ரு சு ச
நீர்நீடாடிற் கண்ணும் சிவக்கும் ரு ரி ச
நீர்பரந்தொழுகலின் - நீர்பரவியோடுதலானே ரு ரு ரு
நீர்மலிகண் - அழுதலால்நீர்பெருகும்கண் க ஒ ரு
நீவார் - நீர் ஒழுகுகின்ற கூ அ
நீர்வார்கண்ணே - நீரொழுகும்கண்ணையுடையோயாய் உ உ
நீர்வார் கூந்தல் - நீரொழுகுங் கூந்தல் ச ஒ க
நீர்வேட்டாங்கு - நீரைவிரும்பினாற் போல க ள அ
நீலப்பைம்போது - நீலமாகிய பசியமலர் க க ஒ
நீலமென்சிறை - நீலநிறமுடைய மெல்லிய சிறகு உ ஒ க
நீவி - தடவி க க ஒ
நீவியோன் - தடவியவன் ரு ள கூ
நீனிறம் - நீலநிறம் உ சு கூ
நுகம்பட - நடுநிலையுண்டாகும்படி அ ஒ
நுசுப்பு - இடை எ க
நுணங்கி - நுணுகி க ரு சு
நுணுகிய - மெலிந்த எ க
நுண்டாது - நுண்ணிய எருத்துகள் ச சு
நுண்டோல் - நுண்ணிய கேடகம் கூ கூ உ
நுண்ணுறை - நுண்ணியமழை ரு ரு
நுண்பஃறித்தி - நுண்ணிய பலவாகிய தேமல் ஈ ஒ ஒ
நுண்பூண் - நுண்ணிய அணிகலன் க ச எ
நுண்மணல் - நுண்ணியமணல் க க சு
நுதிமாண்- நுனிமாட்சிமைப்பட்ட சு எ
நுந்தை - நின்தந்தை ச ஒ
நும்மிற்றகுமோ - நுமக்குத்தகுதியாமோ உ க சு
நும்மினுகும்-நும்மாலாகும் க அ ரு
நும்மும்பெறேமெம் - நும்மையும் பெறுதேமாய் க சு கூ
நுவலும் - கூறும் க எ ரு
நுவறலுநுவல்ப - குறைகூறுதலும்செய்வர் அ கூ
நுழை - நுணுக்கம் க ரு க
நுழைப்பான் - கோத்தற்கு சு எ
நுளம்பு - ஒருவகை ஈ அ சு
நூலறுமுத்தின்-கோத்தநூல் அற்ற முத்துக்களைப்போன்று ரு க
,, நூலறுந்துசிதறிய முத்துப்போல் க ரு ச
நெகிழசாஅய் - கழலும்படி மெலிந்து ரு ஒ
நெகிழ்த்த - கழலச்செய்த ரு க
நெகிழ்ந்த வளையள் - கழன்ற வளையலை உடையாள் ரு ஒ ரு
நெஞ்சமர்ந்தோள் - நெஞ்சிலுறையுந் தலைவி ரு சு
நெஞ்சம் : வினை ரு ச எ
நெஞ்சிற் கணியர் - நெஞ்சிற்கு அணித்தே உள்ளவர் உ உ அ

நெஞ்சிற்படர் - நெஞ்சின்கண் துயர் ஈக
நெஞ்சு களனுக - நெஞ்சு இடமாக நீடு
நெஞ்சு நேர்பவள் - நெஞ்சிற்குப் பொருந்தியவள் நாக
நெடுங்கயம் - நீண்ட வாவி கனக
நெடுஞ்சினை - நீண்ட கிளை எக
நெடுஞ்சேணுட்டர்-நெடிய தூரிய நாட்டினர் உஉஅ
நெடுஞ்சேண் - நெடியதூரம் கபக
நெடுநகர் - நெடியவீடு: நகரமுமாம் உநச
நெடுநல் யானை - நெடிய நல்ல யானை எள
நெடுநெறி - நெடியவழி சுச
நெடுநெதாடை-நெடியமாலை சஐக
நெடுமூதிடைய - நெடிய பழைய இடத்தை யுடையன உஅக
நெடும்பனை குறியவாகும் - நீண்ட பனை குறிய பனையாகும் உசஅ
நெடும்புற நிலை - நெடிது பின்னிற் கும் நிலை உகஅ
நெடுவரை - உயர்ந்தமலை சுஐ
நெடுவெண்ணிலவு - நீண்டநேரம் இருக்கும் வெள்ளிய நிலவு நள
,, - முழுத்திங்கள் ககநக
நெடுவெள்ளருவி-நீண்ட வெள்ளிய அருவி எஅ
நெட்டிரா - நீண்ட இரவு கசஙி
நெய்கனிகுறும்பூழ் - நெய்யிக்கு உளறுகின்ற குறும்பூழிறைச்சி நிஅக
நெய்தல் - ஒருவகை நீர்ப்பூ ஈ
நெய்தற் பரப்பு - நெய்தற் பூவைப் பரப்பிய படுக்கை ககந
நெய்பெய்தியின் - நெய் பெய்யப் பட்ட நெருப்பைப் போன்று ஐஅசு
நெய்பெய்து மாட்டிய-நெய்வார்த் துக் கொளுத்திய நிஈஅ
நெரிதர - நெரிக்க கநசஈ
,, - நெருங்கும்படி சுசு
நெரிதாள் - நெரிந்த அடி உஐஅ
நெருஞ்சி - ஒரு சிறு செடி உஐஉ
நெருஞ்சியனைய - நெருஞ்சிப் பூவைப் போல்வன நிகஙி
நெருப்பினன்ன - தீயை ஒத்த கசஐ
நெல்லி - நெல்லிக்காய் உசஉ
நெல்லியம்புளி - புளித்த நெல்லிக் கனி உஐக
நெறிகோட்டிரலை - நெறிப்புடைய கொம்பையுடைய ஆண்மான் கஅஈ
நெறித்தழை - நெறிப்புடைய தழையாடை உகஙி
நெறிமுதல் - வழியின்கண் உஙிஐ
நெறியயன் மராஅத்த - வழியயல் நின்ற கடம்பின்கண் ஈஉ
நெறியிருங் கதுப்பு - நெறிப்புடைய கரிய கூந்தல் கஈஐ
நெற்று-முதிர்ந்துலர்ந்த காய் நிஈ
நேமி - உருள் கஅஈ
நேரிறை முன்கை - நுண்ணிய பொருத்தினையுடைய முன்கை நிஙி
நேர்ந்து - உடம்பட்டு உகக
நோச்சி - ஒருவகை மரம் கஙிஅ
நொதுமலர்தலை - அயலாரிடத்து களக
நொதுமல் - அயன்மை கஉ
நொதுமல் வானம் - அயன்மை யுடைய வானம் உஙிக
நொப்பறை - நொய்தாகப் பறக் கும் பறப்பு களஉ
நோகு - வருந்துகின்றேன் கஙிஐ
நோக்கி நோக்கி - பார்த்துப் பார்த்து சஅஙி
நோதக - நோதல் பொருந்தும்படி ககஎ
நோதக - வருந்துமாறு உஙிஐ
நோதக்கன்று - வெறுக்கத்தக்கது எஅ
நோமென்னெஞ்சு - என் நெஞ்சு வருந்தும் உஐஉ
நோம் - வருந்தாநிற்கும் சு
நோயாகின்று - நோயாயிற்று உஎக
நோயுழந்துறைவி - நோயால் வருந்தி உறையும் தலைவி சஐஐ
நோயேம் - நோயையுடையேம் சுச
நோயை - நோயுடையாய் கஉஅ
நோயோ - வருத்தத்திற்குக் காரணமோ நீசு

நோய் செய்தன - துன்புறுத்தின ௧௨
நோய் தந்தனன் - காம நோயைத் தந்தான் ௪௬
நோய் நீந்தரும் படர் - துன்பமுழுக்கும் பொறுத்தற்கரிய வருத்தம் ௬௬௨
நோய் நொந்துறைவி - நோயால் வருந்தி உறையும் தலைவி ௪௪௨
நோய்ப்பாலோய் - நோய்க்குரிய ஔழுடையை ௪௨அ
நோய்மலி வருத்தம் - பிணியிருந்தமையால் உண்டான துன்பம் ௬௪௪
நோற்றோர் - நோன்பு செய்தவர் ௨௬
நோன்சினை - வலிய கொம்பு ௪௪௪
நோன்று கொளல் - பொறுத்துக் கோடல் ௧அ
ஃக - பிளக்கும்படி. (சுடவுள் வாழ்த்து)
பகலுமொல்லும் - பகற்பொழுதும் பொருந்துவதாம் ௨௪௯
பகலுறை முதுமரம் - பகலில் தங்குதற்கிடமான பழைய மரம் ௬௧௨
பகல் - நண்பகற்பொழுது ௬௨
பகழி - அம்பு ௪௨
பகுவாய் - பிளந்தவாய் ௪௧௧
பகுவாய்வள்ளை - பகுத்துக் கொண்டு வாயாற்பாடும் உலக்கைப்பாட்டு அ௬
பகைதரு நட்பு - பகைமை உண்டாக்குதற்குக் காரணமான நட்பு ௬௦ச
பகைமுகவூர் - போர்க்களத்தின் கண்ணதாகிய ஊர் ௨௪௨
பகையாகின்று - பகையாயிற்று ௬௪ச
பசந்தன - பசலை பூத்தன ௪௨
பசந்தனள் - பசப்பூரப்பெற்றாள் ௬௦ங
பசலை - பிரிந்துறையும் மகளிர்க்கு வருவதொரு நிறவேறுபாடு ௪௬, ௨௯, ச௮
பசி களைஇய - பசியை நீக்கும் பொருட்டு ௬௯
பசிப்பிணி - பசியாகிய நோய் ௨.௪௬
பசிப்பின் - பசியுண்டாயின் ௪00
பசுங்கலம் - சுடப்படாத மட்பாண்டம் ௨௪
பசுங்கழை - பசிய மூங்கில் ௯ச
பசுமரல் - பசிய மரற்கொடி ௪00
பசுமீன் - பச்சைமீன் ௪ச௪
பசும்புளி வேட்கைக் கடுஞ்சூன் மகளிர் - பசிய புளிச்சுவையை விரும்பும் தலைச்சூலையுடைய மகளிர் ௨அ௯
பசும்பூட்பாண்டியன் - ஒரு பாண்டியன் ங௬ங
பசுவெண்டிங்கள் - இளைய வெண்பிறை ௪௨௪
பசுவீமுல்லை - பசிய பூவையுடைய முல்லை ச௬
பசை - கஞ்சி ங௬0
பசைஇய பசந்தன்று - அன்புறுதற்பொருட்டுப் பசந்தது அ௯
பஞ்சாய் - ஒருவகைக் கோரைப்புல் ௨௯ச
பஞ்சி - பஞ்சு ங௬ங
படப்பை - தோட்டம் ௪அ
படப்பை வேங்கை - தோட்டத்திலுள்ள வேங்கைமரம் ௨ச௬
படரும் - செல்லும் ங௪௯
படர்தி - நினைக்கின்றனை ௪௨அ
படிவவுண்டி - விரதவுணவு ௪ங்ச
படீஇயர் - அடைக ௪0௯
படீஇயர் - படியும்பொருட்டு ௪0
படீஇயர் என்கண் - என் கண் துயில்க ௨சங
படுபதம் - அகப்படும் செவ்வி ௪சக
படுமலை - படுமலைப்பாலை என்னுமொருபண் ங௨ங
படுமுடை - உண்டான புலால் ௨அங
படுவலை - உயிரினம் அகப்படுகின்ற வலை ங௬ச௨
படைதலை பெயர்க்கும் - படையை இடத்தினின்றும் போக்கும் ங௬0
பட்டமாரி - பெய்தமழை ௨அக
பணிக்குறை வருத்தம் - தொழில் நிறைவேறுமையான் உண்டாகும் துன்பம் ங௪ங
பணிமொழி - பணிவுடைமையைப் புலப்படுத்தும் சொல் ௪௯ச

பணிலம் - சங்கு கடு
பணைப்பெருந்தோள் - மூங்கிலை ஒத்த பரிய தோள்கள் கoo
பணைமூங்கில் - பருத்த மூங்கில் உoக
பண்டொருகால் - பழைதாகிய தொருகாலத்தே உoங
பண்டையற்றே - முன்னிருந்த தன்மையே ஆயிற்றே உசக
பண்ணி - ஒப்பனைசெய்து சடு
பண்புடைத்தம்ம - அழகுடையது ஙடுக
பதடிவைகல் - பதர்நாள்; பயன் படாநாள் ஙஉங
பதலை - ஒருகண்மாக்கிணை என் னும்பறை டுக
பதனழிந்து -செவ்விகெட்டு உசுக
பதுக்கை - குவியல் எள
பயந்தக்காலும் - பசப்பூர்ந்த பொழுதும் உஷ
பயந்தலைப்படாப் பண்பினை-பயன் அடையாத தன்மையை யுடை யை ஙசஉ
பயப்பு - பசலை உகக
பயப்பொல்லாது - பசலைபொருந் தாது உசுச
பயமுலை - பாலுடைய முலை உஉடு
பயறு - ஒருவகைக்கூலம் க o
பயிரி - அழைத்து உஅடு
பயிரும் - அழைக்கின்ற கசு
பயிரும் - அழையாநிற்கும் எக
பயிர்ந்தாங்கு - அழைத்தாற்போல கஙக
பயிலியது - பயின்றது உ
பயிலிருள்நடுநாள் - இருள்செறிந்த நள்ளிரவு ஙஉக
பயிற்றி-பலகாலுஞ்சொல்லி கஎசு
பரக்கும் - பரவும் டுக
,, - பரவுகின்ற ஙஉo
பரதவர்-நெய்தனிலமாக்கள் கஅச
பரந்தன்று - பரவிற்று டுஅ
பரலவல் - பருக்கைக் கற்களை யுடைய பள்ளம் உடுo
பரிக்கும் - ஓடுகின்ற சoக
பரிசிலர்கோமான் - இரவலர் புரவலனாகிய அரசன் டுக
பரிதப்பின - நடைஓய்ந்தன சங
பரிந்தனென் - இரங்கினேன் டுஉ
பரியலென் - பரிதலையுடையேன் உoங
பரியவும் - ஓடாநிற்பவும் உஉக
பரீஇ - பருத்தி எஉ
பருவத்தேன் - செவ்வித்தேன் கஎடு
பருவரல் - துன்பம் ககள
பருவிலை - பரியஇலை க oo
பருவுகிர் - பரிய நகம் கஅo
பருவுறை-பரியமழைத்துளி உஎக
பரூஉத்திரி - பரியஆடை ஙங o
பரூஉப்பெருந்ததரல் - பருத்த பெரிய மரப்பட்டை உகங
பலகடம் - பல்வேறுகடமைகள் கஅக
பலராடு பெருந்துறை - பலரும் நீராடும்பெரியநீர்த்துறை உடுஅ
பலர்தொழ - பலதிறத்தினரும் தொழுமபடி ஙoஎ
பலர்புகுவாயில் - பலரும்புகுதற் குரிய தலைவாயில் ககஅ
பலவிற்சேர்ந்த - பலாமரத்தி லேறிய ஙஅச
பலவின் - பலாமரத்தையுடைய அங
பலவும்கூறுக-தமக்குத்தோன்றிய பலவற்றையும்கூறுவாராக கஎo
பலி - உணவு உக o
பல்காற்காண்டலும் - பலமுறை பாாப்பதும் சுo
பல்லா - பலபசுக்கள் சுச
பல்லிதழ் - அன்மொழித்தொகை; தாமரைப்பூ உடுக
,, - ஆகுபெயர். தாமரை மலர் டு
பல்லியம்-பலவாகிய இசைக்கருவி உசுஙு
பல்லிரும்கூந்தல் - பலவாகியகரிய மயிரையுடைய தலைவி கக
பல்லூழ் - பன்முறை உஅடு
பல்லோர் - பலர் கச
பல்வரிப்பாம்பு - பலவரிகளை யுடைய பாம்பு கஅடு
பவழத்தன்ன - பவழம்போன்ற (கடவுள் வாழ்த்து)
பழமாரினக்கலை - பழத்தை உண் ணும் திரளையுடையஆண்குரங்கு ஙஅச

பழவிறல் - பழைதாகியவெற்றி கஉரு
பழனம் - பொய்கை அ
பழிதீர்மாணலம் - குற்றமற்றமாட்சிமையுடைய பெண்மைநலம் உருஅ
பழிதீர்மாமை - குற்றமற்றமாமை நிறம் ரூஉஅ
பழியாங்கொல்ப - பழியை எவ்வாறுபொறுப்பர் உருஉ
பழுதன்று - குற்றமற்றது ரஉஉ
பழுமரம் - பழுத்தமரம் கஎஉ
பழூஉ - பேய் கஅ0
பள்ளியானை - படுக்கைகொண்டயானை கசஉ
பறந்தலை - போர்க்களம் ரூ
பறி - பறியோலை - (படுத்தற்குரியதடுக்கு) உஉக
பறிமுறை - முளைக்கும் முறை ரூஎ
பறை - சிறகு கஉசி
பறைதபுநாரை - சிறகிழந்தநாரை கஉஅ
பறைத்தாழுதி-பறக்கும் வண்டுக்கூட்டம் கஎரு
பறைநிவந்தாங்கு - பறத்தலிலே உயர்ந்தாற்போன்று உ0ரு
பறைபட - பறைகள் முழங்க கரு
பனம்பசுங்குடை - பனையோலையாற்செயத பசிய குடை கரஅ
பனிக்கடுங்குரையம் - பனியினதுகடுமையையுடையம் ரூரு0
பனிக்கடுநாள் - பனியின்கடுமையையுடையகாலம் ரூஅ0
பனிக்கடுந்திங்கள - பனிமிகுந்தமதிங்கள் (மாதம்) ரூசஅ
பனிபுலந்துறையும - குளிரைவெறுத்து உறைகின்ற ரூரூஎ
பனிப்புதல்-குளிர்த்தபுதல் உசஅ0
பனியாஞ - துளியைநீங்கா ரூசுரு
பனியே - பனிப்பருவத்தில் ரூஎசு
பனைபடு கலிமா - பனைமடலாற்செய்த குதிரை கஎரூ
பன்மலாச்சாரல் - பல்வேறு மலர்களையுடைய மலைப்பக்கம் கூரி
பன்மாணுகம் - பலமாட்சிமைகளையுடைய மேனி கஅகூ
பன்மீன்வேட்டம் - பலவகைமீனையும்கொல்லும் வேட்டை கஉரூ
பாஅய் - பரவி ரூஅப
பாஅல்பைம்பயிர்-பக்கத்தேயுள்ளபசியபயிர் கஅக
பாக - தேர்ப்பாகனே உருக
பாக்கம் - ஊர் ரூரூகூ
பாசடை - பசிய இலை கூ
பாசவல் - பச்சையாக(வறுதே)இடித்த அவல் உரூஅ
பாடமைசேக்கை - படுத்தல்அமைந்த படுக்கை உகசு
பாடில - உறங்காதனவாய் ககக
பாடில கலிழ்ந்து - துயிலுதலில்லாதனவாய்க்கலங்கி ரூசுரு
பாடி லுண்கண் - உறங்காதகண்ணை ரூருள
பாடினள்குறின் - பாடிக்குற்றிஞல்அகூ
பாடின்னருவி - முழங்குகின்றஇனிய அருவி ரூருரூ
பாடுக - பாடுவாயாக உரூ
பாடுகேளாய் - முழக்கத்தையுங்கேட்பாயாக ரூகூ0
பாணர் - இசைபாடுவோர் ரூஉரூ
பாணன் - இசைப்புலவன் அரு
பாணி - காலம் கரூசு
,, தாளம் ருகூ
பாதிரி - ஒருவகைமரம் கசள
பாம்பின்உரி - பாம்புரித்ததோல் கருச
பாம்பின் தூங்குதோல்-தொங்கும்பாம்புசட்டை உரூரு
பாம்பின்பையுடை இருந்தலை-பாம்பினது படத்தையுடைய கரியதலை உசுஅ
பாம்புபடவிடிக்கும் - பாம்புகள்சாகும்படி இடிஇடிக்கும் கருஅ
பாம்புபையவிய-பாம்புகளின்படம்அழிய ரூகக
பாம்புமிழ்மணி-பாம்புகான்றமணி உரூகூ
பாய - பரவிய கசரூ
பாரிபறம்பு - பாரியினதுபறம்புமலை ககூரு
பார்க்கும் - ஆராயும் உரு
பார்ப்பணமகன் (கரிசு
பார்ப்பு - குஞ்சு கரிஉ

பார்ப்புடைமந்தி - குட்டிகளை யுடைய பெண்குரங்கு உஎஅ
பார்வல் - பார்வை ககள
பாலே - ஊழே; (விளி) உஉக
பால்வரைந்தமைத்தல் - ஊழ்வினையாலே வரையறைசெய்து பொருத்தப்பட்ட நஉசுச
பால்வார்பு - பால் ஒழுகி நஉசஅ
பாவடியுரல - பரவியஅடியையுடைய உரலிடத்தனவாகிய அஉக
பாறி - சிதறி நுக
பாறை - கற்பாறை கஉ
பாஎள் - நடுஇரவு கூச
பிடி - பெண்யானை நள
பிணி - உடல்பற்றியநோய் க, சு
பிணித்தற்று-பிணிந்தன்று - வலித்தல் விகாரம் கஉக
பிரசம் - தேன் கூகஉ
பிரிந்திசினோர் - பிரிந்தவர் கூச
,, - பிரிந்திருப்போர் நஉந
பிரிந்தன - பிரிந்தாலுக நு
பிரிந்தோர்ப் புணர்க்கும்பண்பு - பிரிந்தோரைக் கூட்டும்உபாயம் கநுசு
பிரிந்தோர்ப்புணர்ப்போர் - பிரிந்தோரைக்கூட்டுவிப்போர் கசஎ
பிரியாதணங்கினர் - பிரியாததெய்வத்தன்மையையுடையோர் கூ0உ
பிரிவிலாயம்-பிரியாதவிளையாட்டு மகளிர் கூட்டம் கசசச
பிரிவுதலைவரின் - பிரிவுநேருமாயின் கூஉ
பிழையா வஞ்சினம் - பிறழாத சூளுறவுமொழி கூகஅ
பிள்ளை - குஞ்சு சசு, கூஉ
பிள்ளைக்கிளை - குஞ்சினம் கஉகூ
பிள்ளைவெருகு - குட்டியாகிய காட்டுப்பூனை க0எ
பிறங்கல் - விளக்கம் கசச
பிறங்குமலை - விளங்குகின்ற மலை நஉக
பிறந்தன்று - பிறந்தது நு0எ
பிறர் - பிறர்யாரும் அசு
பிறர்பிறர்-அயலோர்பலரும் கஎநு
பிறிதில்லை - வேறில்லை சுஅ
பிறிதுசெத்து - வேறொன்றை நினைத்து உகள
பிறிதுமர்குப - இறந்துபடுதலும் செய்வர் கள
பிறிதொன்றறியான் - தான்நினைந்ததையன்றி வேறொன்றும் அறியாதவன் நகஅ
பிறிதொன்றுகுறித்தது - வேறொன்றைக்கருதியது உகஅ
பிற்பட - பின்னேகிடக்கும்படியாக உநுசு
பின்பனி-பின்பனிக்காலம் நஉஅ
பின்றை - பின்னின்ற உகஅ
பின்னும் - மீண்டும் கசஉ
பின்னுவிடுகதுப்பு - பின்னல்நாலவிடப்பட்ட மயிர் உசசு
பின்னுவீழ் சிறுபுறம் - மயிர்ப்பின்னல் வீழ்ந்துகிடக்கும் சிறியமுதுகு நஉநஉ
பீடு - பெருமை நஉக
பீலி - தோகை கக0
,, - மயிற்றோகை உசச
புகரி - மான் நஉகக
புகர் - புள்ளி உஅச
புகர்நிழல் - புள்ளியமைந்த நிழல நஉ0நஉ
புகல்வேன் - விரும்பிமகிழ்வேன் சக
புகன்று - விரும்பி நஉசள
புகா - உணவு உநஉ
புக்கனன் - புகுந்தான் உசுக
புட்கொள - மிகுத்துக்கொள்ளும்படி கசo
புணரி - அலை கசச
புணரிய - கூடுதற்கு கo
புணர்குறி - புணர்தற்குரிய குறியிடம் உஉக
புதை - பற்றுக்கோடு உசள
,, - தெப்பம் உ0உ
புதைவன் - பற்றுக்கோடாவான் நகஅ
புதல - புதலிடத்தன கக0
புதல்வன் - மகன் நுநு
புதல்வன்தாய் - தலைவி நுநுக
புதுக்கோள்யானை - புதிதாகப் பிடிக்கப்பட்ட காட்டியானை கஉக
புதுநலன் - புதியபெண்மைநலம் அக
புதுநூல் - புதியநூல் சுள

புதுநீர்கொளீஇய - புதியநீரைக் கொள்ளும் பொருட்டு ๑๖๒
புதுப்பூங்கொன்றை - புதுவதாக மலர்ந்த கொன்றைமரம் ๒๔
புதுவழிப்படுத்த - புதியவழியுண்டாக்கிய ๕๐๐
புதுவோர்த்து - புதியவரையுடைத்து ๑๔๗
புத்தேணுலகு - கடவுள் உலகம் ๔๐๔
புயனீங்குபுறவு - மழைவறந்த முல்லைநிலம் ๑๔๔๔
புரி - விருப்பம் ๑๔๔๘
புரிமாண்டு-விருப்பம் மாட்சிமைப்பட்டு ๔๔๑๖
புரைத்தோவன்று - உயர்வுடையதன்று ๑๐๒
புரையும் - ஒக்கும். (கடவுள் வாழ்த்து)
புலர்தேர்யானை - மேய்சருற்புலத்தை ஆராய்கின்றயானை ๑๕๗
புலம்பசாவிட - தனிமைதீங்கும் வண்ணம் ๑๑๗
புலம்பணிந்தன்று - தனிமையேயழகுசெய்தது ๑๖๐
புலம்பயிர் - கழனியிலுள்ள பயிர் ๑๕๕
புலம்பி - தனிமைகொண்டு ๔๔
புலம்பில்-தனிமையுடையவீடு ๕๔
புலம்பின - ஒலித்தன ๑๔๐
புலம்புதரு குரல - தனிமைத்துனபத்தையுண்டாக்கும்குரலையுடையன ๔๔
புலம்புனியுடைத்து-தனிமையையிகவும் உடையது ๑๔๐
புலம்புமாருடையள் - தனிமையும் உடையள் ๗๔
புலம்புறுகடம் - தனிமைமிக்கபாலை ๔๔๕
புலம்பொடுவந்திய - தனிமையோடேதங்க ๔๔๗
புலர்பதம்-உலர்ந்த செவ்வி ๑๔๕
புலவ-புலாலுற்றம்வீசாநிற்ப ๑๕๐
புலவர் - அறிஞர் ๔๕๑
புலவி - பிணங்குதல் ๔๔๖
புலவியஃதெவன் - புலத்தலால் பயன் என்னை ๑๑
புலவுநாறுகல்லளை - புலாலுறும் மலைமுழைஞ்சு ๒๖๑
புலிநோக்கு - புலிபோன்றுமுன்னும்பின்னும் பார்க்கும்பார்வை ๑๕๗
புலிபுகாவுறுத்த - புலிதன்உணவினைவைத்த ๒๖๑
புலிப்பற்றாலி - புலிப்பல்லாற் செய்த ஓர் அணிகலன் ๔๑๔
புல்லார்நல்லான் - புல்உண்ணும் நல்லபசு ๒๔๖
புல்லின்-தழுவுமிடத்தே ๔๖๐
புல்லுரை - பயனிலாசசொற்கள் ๒๔
புல்லென்று - பொலிவிழந்து ๔๔, ๔๔
புல்வீழ் - புல்லிய விழுது ๔๐๕
புல்வேய்குரம்பை - புலால்வேயப்பட்டகுடில் ๒๑๖
புள்வாய்த்தூது-பறவைவாயிலாய்விடும் தூதுமொழி ๒๕๕
புள்ளிமிழ்-பறவைகள் ஒலிக்கின்ற ๒๔๑
புள்ளிமிழ்கானல் - பறவைகள்ஆரவாரிக்கும் சோலை ๒๔๔
புள்ளுமாவும் - பறவையும் விலங்குகளும் ๔๔๗
புள்ளுமோராம் - நிமித்தம்பாரேம் ๒๔๗
புறங்கவையினள் - முதுகைத்தழுவினள் ๑๖๔
புறஞ்சேர்பு - முதுகைச்சேர்ந்துநின்று ๗๔
புறந்தந்த - பாதுகாத்த ๔๒๕
புறவில் - முல்லைநிலத்தில் ๔๐๗
புறவுப்புறம்-புறவின்முதுகு ๒๔๔
புறவுப்பெடை - பெண்புறா ๔๔
புனலோடொழுகின் - நீரோடுசெல்வாளாயின் ๒๒๒
புனல் - நீர் ๒๐๐
புனவன் - குறவன் ๔๐๖
புனறரு பசுங்காய்-நீர்கொணர்ந்தபசியகாய் ๒๔๒
புனற்பூணை - தெப்பம் ๔๔๕๗
புனைந்த - இயற்றிய ๑๖๒
புனையல்-அணியாதேகொள் ๔๔๔
புனையாவு - புனைந்துரைக்கும் எல்லை ๑๐

புன்கண் - துன்பம் சசு
புன்புலம் - புன்செய் கஅஉ
புன்புறம் - புல்லியமுதுகு கஉஉ
புன்மை - துன்பம் ஙிள
புன்றலை-பொலிவிழந்ததலை உசக
புன்றலைமன்றம் - பொலிவிழந்த இடத்தையுடைய ஊரம்பலம் சுச
புன்னை - ஒருவகைமரம் ஙி
புன்னையஞ்சேரி- புன்னைமரங்களையுடைய அழகிய தெரு கூஉ0
பூகுமை - பூவாகிற்கும் அஉ
பூக்கொண்டு - பூவின்தேனைக் கொண்டு ஙூ
பூக்கொய்மகளிர் - மலர்பறிக்கும் மகளிர் உசு
பூசலாயம் - ஆரவாரமுடைய மகளிர்குழு ஙூசுள
பூசல் - போராட்டம் உக
,, - போர் சஙூ
பூச்சோர்அணை - பூக்கள்விழும் படுக்கை உருஙூ
பூணகவனமுலை-அணிகலன்களைத் தம்பாலுள்ள அழகிய முலை கூசஅ
பூண்வளைந்தன்ன - பூண்கட்டினாற் போன்ற உஉசு
பூத்தாழ்வெண்மணல் - பூக்கள் உதிர்ந்த வெள்ளிய மணல் ஙிஙூ
பூநாறுதண்கலுழ் - மலர்மணக்கும் குளிர்ந்த வெள்ளம் உ00
பூநாறுபலவுக்கனி - மலர்போன்று மணக்கும் பலாப்பழம் கூ0
பூப்போல் உண்கண்-தாமரைப்பூப் போன்ற மையுண்டகண கள0க
பூமலிதளவம் - மலர்மிகுந்த செம்முல்லை ஙூஅஉ
பூமலிபொதும்பர் - மலர்மிகுந்த பூங்கொமபு கூஅக
பூவிடைப்படினும் - நீர்ப்பூ தம் மிடைநினறு மறைப்பினும் ஙூள
பூவில்வறுந்தலை - பூசசூடப்பெறாத வறிய தலை ககூ
பூவென - சூடும்பூப்போலக்கருதி கள
பூவொத்து-தாமரைப்பூவை ஒத்து எஉ
பூழியர் - பூழிநாட்டார் கஅஙூ
பூழ்க்கால்-குறும்பூழ்ப்பறவையின் கால் சுள
பெண்கொலைபுரிந்தநன்னன் -ஒரு பெண்ணைக் கொன்ற நன்னன் என்னுங்குறுநிலமன்னன் உகூஉ
பெண்டினையாயின் - பெண்டாகிய நீ இத்தன்மையையாஞல் கூக
பெயாத்தனென் - புரட்டினேன் அச
பெயர்த்தும் - மீண்டும் கூச
பெயலாஞது - பெய்தலைஒழியாது ஙூஅ0
பெயல் - மழை கஉசு
பெயல்கண்மறைத்தலின் - மழை இடத்தைமறைத்தலாலே ஙூஙி
பெயல்தாழப்-மழைவிழுந்து கூகச
பெயனீர் - பெய்யும்மழைநீர் உகூ
பெய்ம்மார் - அணியுமபொருட்டு உ00
பெய்யாப்பூ - சூடாதமலர் கூ
பெரிதுடையர் - மிகவும் உடையர் ஙூள
பெரிதும் பேதைமன்ற - மிகவும் பேதைமையுடையது உளசு
பெரிதுவந்து - மிகமகிழ்ச்சியுற்று சக
பெரியநோன்றனிர் - பெரியவருத் தங்களைப் பொறுத்தீர் கள அ
பெருங்கவின் - பேரழகு உஙிஉ
பெருங்களிற்றுசெவியின்மான - பெரிய ஆண்யானையின் காது போன்ற எசு
பெருங்காட்டுளருமசைவுளி -பெரியகாட்டைமோதி அலைக்கும் அசைகின்ற காற்று உளஙூ
பெருங்குரல் - பெரியகதிர் ஙூ0
பெருங்குளம்-பெரியநீர்நிலை ஙூஉஙி
பெருங்கைவேழம் - பெரியகையையுடைய களிறு ஙூள
பெருஞ்சினை-பெரியமரகிளை உசு
பெருஞ்சென்மலன் - பெரிய தலைமையை உடையோன் ஙூஙூ
பெருந்தகைகாணிய - பெரிய நகைச்செயலைக் காணும் பொருட்டு கஙக
பெருந்தலைக்குறுமகள்-பெரியபெண் மைநலமநிரம்பியஇளையள் உகூஙி
பெருந்தன்று - பெரிய உதவி கஙஙி

பெருநீர் - கடல் : அன்மொழித் தொகை ஙசருநி
பெருந்தகை - பெரியதகுதியுடைமை உஙஎ
பெருந்தண்மாரி - பெரியகுளிர்ந்த மழைக்காலம் கூசை
பெருந்தேன் - பெரியதேனடை ஙக, ஙஎ
பெருந்தோடு - பெரியதொகுதி ஙஉசை
பெருந்தோட்குறுமகள் - பெரிய தோளையுடைய சிறுமி கூருந
பெருந்தோள் - பருத்ததோள் எக ,, - அன்மொழித் தொகை சஎஎ
பொருமை - பெருமானே உசசை
பெருமலைநாடன் - குறிஞ்சிநிலத் தலைவன் கூசு
பெருமழைக்கண் - பெரியகுளிர்ந்த கண்கள் எஉ
பெருமுதுசெல்வர் - பெரியபழைய நிதிக்கிழவர் ஙஙஎ
பெருமுதுபெண்டிர் - மிகமுதிர்ந்த பெண்டிர் கஅக
பெருமொழி - பெருமையுடைய சொல் அ
பெரும்பிறிதாகல் - சாதல் ஙஎஉ
பெரும்பிறிது - இறப்பு சுஙக
பெரும்புலவு - பெரியபுலாலுற்றம் கசுஙக
பெரும்புனம் - பெரிய தினைக்கொல்லை அஉ
பெரும்புனல் - வெள்ளம் அஎ
பெரும்பெயர் உலகம் - துறக்கம் அங
பெரும்பெயல் - பெரியமழை கஉ
பெரும்பேதை - பெரியபேதைமையுடையாள் கஙஙூ
பெரும்பேதைமைத்து - பெரிய அறிவின்மையை உடைத்தாம் எஅ
பெருவரை - பெரியமலை எஅ
பெருவான் - பெரியவானமே ! (விளி) உஎ
பெருவிறுப்பு-பெரியவிரைவு கஙஎ
பெருவிறல் - தலைவன் ஙஙஅ
பெறினே - பெறுவாயாயின் உக
பெறீஇயர் - பெறுக அங
பெறீஇயர் - பெறுவாயாக எஞ
பெறுக - பெறுவேனுக கச
பெறூஉம் - பெறுகின்ற ஙஎஅ
பெற்றி - தன்மை உஅ
பெற்றூங்கு - பெற்றபின்னர் கச
பேஎம் - அச்சம் அஎ
பேணுரும் - போற்றுதலுவரும் கஙஙு
பேதுறல் - மயங்குறுக ஙஞுஅ
பேதைப்பித்திகம் - அறிவற்றபிசினி கூச
பேதைமையால் - அறியாமையால் உஉக
பேதையூர் - அறிவிலிகளின் ஊர் அக
பேய்க்கொளீஇயள் - பேய்க்கோட்பட்டாள் உசுஙூ
பேரமர்க்கண்ணி - பெரியஅமர்த்தலையுடைய கண்களையுடையாள் கஙூக
பேரன்பினன் - பெரியஅன்பினையுடையோன் அஞ
பேரிசை - பெரும்புகழ் கஞஅ
பேரிலை - பெரியஇலை ஙஙஎ
பேரூர் - பெரிய ஊர் உஉக
பைஅவிந்தது - படம்ஒடுங்கியது கஅஞ
பைஎன - மெல்ல கஎஎ
பைங்கால்கொக்கு - பசியகாலையுடையகொக்கு கஉஞ
பைங்காற்கருக்கு - பசியகாம்பின் கண் உண்டான கருக்கு உஅக
பைதல் - பசுமை, ஈரம் கங
பைதலுரை - துன்பமுடையாரை கஉஞ
பைதலொக்கம் - துயரப்பார்வை உகஅ
பைந்தாது - பசிய பூந்துகள் கஎ
பைப்பய - மெல்லமெல்ல உகஞ
பைம்புதல் - பசியதூறு கூஅ
பொங்கர் - மரக்கிளை ஙூ
பொங்குபிதிர்-பொங்கியபிதிர் ஞஞ
பொங்குமயிர் - நிமிர்ந்தமயிர் கூஎ
பொதியில் - பொதியமலை அச
,, - ஊரம்பலத்தே கஞ
பொதுள - நிறைய கஞஞ
பொதுளிய - நிறைந்த உஅக
பொத்தில்காழ - பொந்திலாத வயிரத்தையுடையன உசஇ

பொய்க்குவது - பொய்சொல்வது உசு
பொய்கை - இயற்கைநீர்நிலை ஈக
பொய்க்கனு - பொய்யாகியகனவு ஈ0
பொய்த்தன-பொய்யாயின உ0ஈ
பொய்ப்பின் - பொய்ப்பாராளுல் உருி
பொய்யனுக - பொய்பேசுவோனுய் விட்டகாரணத்தால் கஉள
பொய்யேகாமம் - காமம்பொய்யா குமம உ0உ
பொய்வலாளன்-பொய்பேசுவதில் வன்மையுடைய தலைவன் ஈ0
பொய்வழங்கலர் - பொய்மொழி கூறமாட்டார் உக
பொர - மோதாநிற்ப எ
பொரிகாற்கள்ளி - பொரிந்த அடியையுடைய கள்ளி மரம் கருிச
பொரிதாள் - பொரிந்த அடிமரம் எக
பொரிப்பூம்புன்கு - பொரிபோன்ற பூவையுடைய புன்கமரம் ஈசக
பொருகயன்முரணிய வுண்கண - போரிடும கயல்மீன்களை மாறு பட்ட மையுண்டகண்கள் உருி0
பொருகளிறு-போரசெய்யும் ஆண் யானை உ0அ
பொருட்பிரிந்தோர் - பொருளீட்டப் பிரிந்தவர் உஉ0
பொருந்தும் - அமைந்திருக்கும கசஈ0
பொருவார் - பகைவர் போர்செய் வோர் உசு0
பொருளேமன்றபொருள் - செல்வமே தேற்றமாக உறுதிப் பொருளாம் கஎச
பொருளவயிற்பிரிவோர் - பொருளீட்டலின் நிமித்தம் பிரிந்த தலைவர் உ0
பொலங்கலம் - பொன்னுற்செய்த அணிகலம் சுஎ
பொலஞ்சூடி - பொன்வளிம்பு உஉசு
பொலம்படை - பொன்தட்டு உ0ஙி
பொலிந்த - அழகுற்ற கசஅ
பொழிந்தென - பெய்ததாக உசுக
பொழிலணிகொளா - பொழில் அழகைமேற்கொண்டு ஈசக
பொழில் புலம்ப-சோலைதனித்துக் கிடப்ப கஉஈ
பொழுதிடைதெரியின் - பொழுது வேறுபாடுதோன்றுமாயின் ஈஉ
பொளிக்கும் - உரிக்கும் ஈஎ
பொறிவரிவெஞ்சினவரவு - புள்ளி களையும் கோடுகளையும் வெவ் விய சினத்தையும் உடைய பாம்பு ககஈ0
பொறுக்கல்லேன் - பொறேன் உஉசு
பொறையருநோய் - பொறுத்தற் கரிய நோய் அசு
பொறையன் சேரமன்னன் அக
பொன்செய்புனையிழை - பொனுல் செய்த அணிதற்குரிய அணி கலன் உக
பொன்புனைபகழி - இரும்பாற் செய்த அம்பு ககு
பொன்பெய்பேழை - பொன்வைத் துள்ளபேழை உஈஙி
பொன்போற்சிறுதினை - பொன் னிறமுடைய சிறியதினை க0ருி
பொன்போன்மேனி - பொன் போன்ற நிறம் க0க
பொன்மலிபாடலி - பொன்மிக்க பாடலி நகரம் எருி
பொன்வரியலவன் - பொன்னிறக் கோடமைந்த நண்டு ஈ0ஙி
பொன்னிணர் - பொன்னிற மூடைய பூங்கொத்து ஈ0
பொன்னோமேனி - பொன் போன்ற மேனி ஈகஈ
போதல்பொருள் - போதலேசெய் யத்தக்கது உகள
போதின் - மலரானே ககக
போது - மலர் கசஅ
போந்தென - வந்துமோதிற்றுக ஈசு
போந்தை - பனை உஅக
போழும் - பிளந்துசெல்லும் ஈ0க
போழகண் - பிளந்தகண் ஈகக
மகணுதல் - மகளுடையநெற்றி ககச
மகவுடைமந்தி - குட்டியையுடைய பெண்குரங்கு உசு

மகளிர்தழீஇயதுணங்கையாணும் - மகளிர்தழுவியாடும்துணங்கைக் கூத்தின்கண்ணுமை ஙக
மகன்றிற்புணர்சசி - மகன்றிற்பற வையின் பிரியாப் புணர்சசி ருள
மகிழ்ந - தலைவனே ருங
மகிழ்நன் - தலைவன் எங
மகிழ்ந்ததன்றலையும் - களித்ததன் மேலும் கசுருி
மகிழ்ந்தன்று - மகிழ்ந்தது ககூள
மக்கள்போகிய - மனிதர்குடியோ டிய சக
மங்குல் - மேகம் சுருி
,, - இராக்காலம் கூO
மஞ்ஞை - மயில் கOருி
மடக்கட்குழவி - மடப்பமுடைய கண்ணையுடைய ஆன்கன று சுச
மடநாகு-மடப்பமிக்கபெண்ணாளை கசுச
மடந்தை - தோழியே உO
,, - தலைவி கருி
மடந்தையை - தலைவியை கசள
மடப்பிடிப்பரிசில் - யானையாகிய பரிசில் உகஅ
மடப்பிணை - மடப்பமுடையபெண் மான் ஙகஅ
மட மாத்தோகை-மடப்பமுடைய கரியதோகையையுடைய மயில் ஙடசள
மடலொடு - பனைமடலாற்செய்த குதிரையோடே ஙஉ
மடல் - பனைமட்டை கள
மடவ-அறியாமையுடையன உருிக
,, - பேதைமையுடையன சுசு
மடவந்தனள் - மடப்பம்வரப்பெற் றாள் கOO
மடவமாக-யாம்அறிவில்லேமாகுக உO
மடவை - அறியாமையுடையை உருிஉ
மடன் - ஒருபெண்மைப்பண்பு, மடப்பம் ஙஉச
மடறுழ்பெணணை - மடல்கள் தாழ்ந்துள்ள பனை அக
மடுத்த - கட்டிய ஙOச
மடை - பொருத்துவாய் கூ
மடை - தெய்வத்திற்கிடும் சோற் றுப்பலி ஙசஉ
மட்டம் - கள் ககஙஙூ
மணத்தற்கரிய-தழுவுவதற்கு அரு மையாகிய கOO
மணந்தஞான்று - மணஞ்செய்த பொழுது உருி
மணந்தனையம் - மணந்தநாளில் இருந்த தன்மைபோல இன்றும் உளேம் கOசு
மணந்துவக்கும் - அணைந்துமகிழ் வேம் கஅகூ
மணமிலகமழும்-நறுமணமில்லாத னவாய் மணக்கின்ற ஙஙO
மணவாவுநகே - மணப்பதற்கு முன்னர் ஙருிள
மணற் சிறுசிறை-மணலாற்கட்டிய சிறிய அணை கசஉகூ
மணிக்கலம் - நீலமணிபோலும் நிறமுடைய சுப்பி ககஙஙூ
மணிகேழன்ன - நீலமணியின் நிறம்போன்ற சுஙூ
மணிநெடுங்குன்று - மணிகளை யுடைய நெடிய மலை உசO
மணிப்பூ - நீலமணிபோன்ற நிறமுடைய மலர் ருிருி
மணிமருள்பூ - நீலமணிபோன்ற பூ க்ஙஅ
மணிவார்ந்தன்ன - நீலமணியின் சுடர் ஒழுகிஞற்போன்று உருிசு
மண்டை - சட்டி கசுகூ
மண்ணியசென்ற-குளிக்கப்போன உகஙஉ
மண் ணுறுமணி-கழுவப்பட்டமணி ஙசுள
மண்ணெடுத்துண்ணும்-மண்ணிற் பயன்விளைத்துண்ணும் உசO
மதரெழில்-மதர்த்த அழகு ஙசஅ
மதனழிந்து - வெறிகெட்டு ஙOஅ
மதி : முன்னிலையசைச்சொல் கஅ
மதித்து - கருதி சுசு
மதிமயக்குறூஉம் - அறிவை மயக்கும உஉசு
மதைஇய - மதர்த்த உஅசு
மந்தி - பெண்குரங்கு சுஙூ
மம்மர்த்து மயக்கழுடைத்து ஙகO
மயல் - மயக்கம் கருிசு
மயிர்வார்பு ஒழுகிய - மயிரெழுந்து ஒழுங்குபட்ட கசள

மயிலடியிலைய - மயிலடிபோன்ற இலையை உடையன ககூஅ
மயிலியல்-மயில்போன்ற சாயல் உ
மயிலலருத்தின் - மயிலின் கழுத்துப் போல கஅஉ
மயிற்கண் - மயிற்பீலியின்கண் கஅச
மரந்தலேதான்ரு ஊரர் - மரங்களின் உசுயுந் தெரிந்திலாத தூரிய ஊரினர் உ0ஈ
மரந்தை - ஓரூர் ஈச, கசுசு
மரபு - முறை கஅஉ
மரம்பயில்கானம - மரங்கள் செறிந்த காடு உசஈ
மராம் - வெண்கடம்பு உஉ
மரீஇயோர் - நட்டோர் க0உ
மருங்கற்று - என் பக்கலினின்று நீங்கி ஈடஉ
மருங்கில் - பக்கத்தில் குஅ
மருட்ட - மயக்க ஈ0
மருது - மருதமரம் ஞ0
மருது - பரிகாரம் சுஅ
மருந்தெனின் மருந்தே-அமிழ்தம் என்று கருதுமிடத்து அவள் அமிழ்தமே யாவாள் எக
மருவின் - பொருந்துவதினும் ஈடஉஉ
மருவேன் - கூடேன் ஈ.எக
மருள் : உவம உருபு கசுஅ
மருள்கூர்ந்து - மயக்கம் மிகுந்து ஈடகஅ
மருள்வேன் - மயங்குவேன் கூச
மரை - ஒருவகை விலங்கு உஈ.ஞ
மரையா - ஒருவகைக் காட்டு விலங்கு ககஞ
மலக்குறும்-கலக்கமெய்தும் கசுச
மலரே ரண்கண் - தாமரைமலர் போன்ற மையுண்டகண ஈஎள
மலாபதம் - மலரும் பருவம் உசக
மலிர்நிறை - மிக்கவெள்ளம கூக
மலிர் நெறி - ஈரமுள்ள வழி ஈஞிக
மலைகிழவோர் - மலைக்குரிமை யுடைய தலைவன் ஈடகஉ
மலைகிழவோன் - மலைகளையுடைய வன் உஈக
மலைச செஞ்சாந்து - மலையிற் ரோன்றிய சிவந்த சந்தனம் ஈஉக
மலைமுதற் சிறு நெறி-மலையின்கட் சிறிய வழி ஈ.எஅ
மலையன் - மலையமான் திருமுடிக் காரி கசுஅ, ஈ.கஉ
மலையிடையிட்ட நாட்டர்- மலைகள் குறுக்கிட்டுக்கிடக்க அவற்றிற்கு அப்பாலுளள நாட்டினர் உ0ஈ
மலையுடை யருஞ்சுரம் - மலைகளையுடைய கடத்தற்கரிய பாலை நிலம் ஈ.கூ
மல்குசுனை - நீர்பெருகும் சுனை ஈடசள
மல்குதொறும் - பெருகுந்தோறும் கூ
மல்கும் - பெருகும் க(ஞ)
மல்லல் - வளம் சஞ்
மழை கழுஉ மறந்த - மழை கழுவு தலை மறந்துவிட்ட உ.எகூ
மழை தூங்க - மழைபெய்ய உ0ஞ்
மழை விளையாடுமை - முகில்கள் தவழ்கின்ற க0அ
மள்ளர் - வீரர் ஈ.க, ஈ.சுச
மறத்தியோ - மறந்துவிட்டாயோ ஈ.0சு
மறந்தமைக்கு - மறப்பேன் க.ஈ.உ
மறப்பரோ - மறந்துவிடுவரோ ஞ்.கூ
மறப்புலிக்குருளை - வலியுடைய புலிக்குட்டி உ0கூ
மறி - குட்டி கஅள
மறிக்குரல் - ஆட்டின் கழுத்து உசுஈ.ஈ
மறியினம் ஆட்டுத்திரள் உ.உ.ச
மறு - கறை ஈ.சஈ.ஈ
மறுகில் - தெருவின்கண் கச
மறுகிற்ரோன்றி - தெருவிலே தோன்றி ஈ.உ
மறுகின் - தெருவின்கண் கள
மறுகுபு - சுழன்று ஈ.ஞ்சு
மறுப்ப - மறுத்துக்கூற ஈ.சா
மறுமை - மறுபிறப்பு சாகூ
மறுமையுலகம் - மறுமையில் வாழ்தற்குரிய உலகம் ககூகூ
மறுவந்து - சுழன்று சுஞ்
மறுவந்தோடி - சுழன்ரோடி ஈ.கூசா
மறுவரும் - சுழலுவாள் சஞ்
மறுவினட்பு - குற்றமற்ற நட்பு உசள

மறை - மறைத்துள்ள செய்தி கூள
மறைத்தற்காலே - மறைக்கும் செவ்வி ஙூஉக
மனதகை - மனமுடையை சOO
மனவு - சங்குமணி உஙூ
மனை - வீடு கஉச
மனைமரத்து - மனைப்படப்பையி லுள்ள மரத்தின்மேல் சகூ
மனையுறைகுரீஇ - வீட்டில் வாழும் குருவி சஈ
மனையுறைமகளிர்க்கு ஆடவர் உயிர் - குலமகளிர்க்குக் கண வரே உயிர்போல்வர் கஙூரு
மனையுறை வாழ்க்கை - வீட்டின் கணிருந்து வாழும் வாழக்கை ஙூஉஉ
மனையோள் - தலைவி ககஈச
மன்ற - தேற்றமாக ஈ, ஙூரு
,, - அசைநிலை ஙூO
மன்றத்தஃதே - அம்பலத்தின் கண்ணது கூள
மன்றத் துறுகல் - அம்பலத்துள்ள குண்டுக்கல் உஅச
மன்றத்தெரு - அம்பலமிருக்கும் தெரு சஈ
மன்ற மராம் - அம்பலத்தே நிற்கும் கடப்பமரம் அள
மன்றமரையா - அம்பலத்தே வந்த மரையான் ஙூஉக
மன்றவம் பெண்ணை - அம்பலத்தே நிற்கும் அழகிய பனை களள
மன்ற வினிவது - தேற்றமாக அழிவது உகஉ
மன்ற வேங்கை - அம்பலத்தே நின்ற வேங்கைமரம உசக
மன்னிக்கழிக-நிலைபெற்று நீங்குக ஙூஉரு
மன்னுதல் பெறும் - நிலைபெறும் கஈஈ
மன்னுயிர் - நிலைபேறுடைய உயிர் கள் ஙூளஈ
மாஅத்து - மாமரத்தினது ஙூஙக
மாஅயோள் - மாமையை உடைய வள் ஊ
மாக்கடனடுவண் - கருங்கடலின் நடுவே கஉக
மாக்கட்டு - மாக்களையுடையது கருஈ
மாக்கழி - கரிய கழி ருருரு
மாக்கள் - ஊர்மாந்தர் ஈ
மாக்கொடி - கரியகொடி ஙூ ஈ
மாசு - அழுக்கு கஉ
மாச்சினை - பெரிய கிளை களரு
மாட்டிய - கொளுத்திய கருO
மாணலம் - மாட்சிமைப்பட்ட அழகு எச
மாணாழை : அன்மொழித்தொகை ஙூசஅ
மாணை - ஒருவகைகைகொடி ஙூஈ
மாண்டக்கோனே - மாட்சிமை தக்கிருப்போனே ஙூக
மாண்வரி - மாட்சிமைப்பட்ட வரிகள் கOக
மாத்து - மாமரத்தினது அ
மாநீர் - கடல். சஊஈ
மாந்தி - உண்டு சஊஈ
மாப்பட்டாங்கு - விலங்கு அகப் பட்டாற்போல களக
மாமலர் - கரியமலர் ருரு
மாமழை - பெரிய மழை ஈO, சஉ
மாமலை - பெரியமலை ஊச
மாமுகமுசுகலை - கரியமுகத்தை யுடைய ஆண் குரங்கு கஉக
மாமை - ஒருவகை நிறம் கஈள
மாமைக்கவின் - மாமை நிறமாகிய அழகு உள
மாய - மறையாநிற்ப ஙூளஉ
மாயச செலவு - பொய்ச் செலவு ஙூஉரு
மாயிதழ்க்குவளை - கரிய இதழை யுடைய குவளை மலர் ஙூஙூஈ
மாயிருஞ்சோலை - பிகப் பெரிய சோலை உஙூஉ
மாயோயே - மாமையை உடைய வளே ஙூOO
மாய்க்கும் - தீட்டுகின்ற உக
மாய்வது - அழிவது கருO
மாரிக்குன்றம் - கார்காலத்து மலை உருஈ
மாரிமாலை - கார்காலத்து மாலைப் பொழுது உOO
மாரியாமபல் - கார்ப்பருவத்து ஆம்பல் மலர் களள
மாரியானையின் - மழையினைந்த யானை போல கஈக

மாரிவண்கை - மழைபோன்று வழங்கும் கை கூக
மாரிப்பீரத்தலர் - மழைக்காலத் துப் பீர்க்கம் பூ கூஅ
மார்பமர் இன்றுணை - மார்பைப் பொருந்தும் இனியதுணை ங2உக
மார்பு - மார்பை எங2
மாலையுண்மை - மாலைப்பொழுதின் இருப்பு ங2ஙஉ
மாலையும் புலம்பும் - மாலைப்பொழு தும் தனிமைத் துன்பமும் சசு
மாலையுற்றென - மாலைப்பொழு தில் வந்தனவாக , கங2க
மால்பு - கண்ணேணி உஎங2
மால்வரை - பெரிய மலை கூஙி
மாவெருத்து - பெரிய கழுத்து உங2உ
மாவென - குதிரையாக கள, ங2உ
மாறு நின்று - எதிர்த்து நின்று உகூள
மாற்றுகின்று - பரிகாரமாகின்றது ங2எள
மானடியன்ன - மானினது அடி யைப் போன்ற உசங2
மானேறு-ஆண்மான் உஙிசு, ங2கஅ
மான்று - மயங்கி உஅக
மீசையது - மேலே உள்ளது எஅ
மிதித்த - காலாற் றுவைத்த உச
,, - காலானே மிதிக்கப் பட்ட ஙிஉ
மிளை - காவற்காடு ங2கூ0
மின் உறழ் - ஒளிமிக்க ங2கச
மின்னிடை : அன் மொழித் தொகை; தலைவி உளள
மின்னிழை - ஒளியுடைய அணி கலன் உசசு
மின்னுபு - மின்னி ககூச
மீமிசை - மிக்க உயரம் உ00
மீளுர்குருகு - மீனைத் தின்னும் நாரை கசுஙட
மீளுணங்கல் - மீன்வற்றல் உகூ0
மீன் - விண்மீன் சச
மீன் எறிதூண்டில் - கோத்த மீனைக் கவரப்பட்ட தூண்டில் ஙிச
மீன்படுசுடரொளி - உற்கை வீழுத லான் உண்டாகும் மிக்கவொளி ங2ஙிள

மீன் வலை - மீன் படிக்கும் வலை களக
முகன் - முகம் ககூள
முகிழ் முகிழ்த்தன - அரும்பு போலத் தோன்றின ங2ங2ள
முகைதலைதிறந்த நாற்றம்-அரும்பு மலர்ந்ததனலுண்டான மணம் ங2அஉ
முகையின் முறுவல் - முகையா லாகிய நகைப்பு ககூஉ
முசு - குரங்கு ங2அ
முடக்காலிறவு - வளைந்த காலை யுடைய இறுமீன் க0க
முடங்கல் - வளைந்த ங2எச
முடங்குபுறம் - கூனிய முதுகு க0க
முடிநர் - முடிப்போர் ககூஙி
முடிந்தமைந்தன்று - ஊழ்ான் முடிக்கப்பெற்று அமைந்தது ங2கங2
முடுக - தூண்ட கஅக
முட்டை ங2அ
முட்பயந்தாங்கு - முள்ளையீன்றுற் போன்று உ0உ
முண்டகம் - முள்ளி சக
முதல - அடியை உடையன கஙூஅ, ங2உச
முது - அறிவு ங2சூஉ
முதுகாய் - நெற்று சூஅ
முதுநீர் - கடல் உகூக
முதுபோத்து - முதிய ஆண் கச0
முதுமால்பு - பழைய கண்ணேணி உஎங2
முதுவாய் - அறிவு வாய்த்த எஅ
முதைச்சுவல் - பழைய மேட்டு நிலம் உ0ச
முதைப்புனம்-பழங்கொல்லை கஙிடு
முந்தூழ் - மூங்கில் உங2க
முன்நாற்றிங்கள் நிறைபொறுத்து - பன்னிரண்டு திங்களிருந்து முதிர்ந்த கருப்பத்தைத் தாங்கி உஅள
முன்நீர் - கடல் கங2ச0
முயக்குஇடை மலைவு - தழுவுதற்கு இடையே உள்ள மாறுபாடு உகூள
முயங்க - தழுவிக்கொள்ள அச

முயங்கற்குமினிது - தழுவவும் இனிதாம் ரூஉ
முயலவும் - முயன்றாலும் நிரூ
முரம்பு - மேடு ஏ00
முருகயர்ந்து - முருகனை வழி பட்டு நூரூஉ
முலையிடை முளிநர் - முலையிடத் துத் துயிலை வெறுத்த தலைவர் நூக
முல்லை - முல்லையே! (விளி) கசூஉ
முல்லையூர்ந்த கல் - முல்லைபடர்ந்த குன்று உஎநி
முழந்தாள் - முழங்கால் ந்.கூகா
முழவின் - மத்தளத்தைப்போன்று எஅ
முழவு - மத்தளம் ந்.0க
முழுநெறி - முற்றியநெறிப்புடைய தழையுடை அ0
முளிதயிர் - இறுகிய கட்டித்தயிர் கசுஎ
முளிவெதிர் - உலர்ந்த மூங்கில் ந்.0ச
முளைக்கோடு - மூங்கில் முளை போன்ற மருப்பு ந்.சசு
முளைவாளெயிற்றள் - நாணல்முளை போன்ற ஒளியுடைய பல்லினள் கககூ
முள்ளூர்க்கானம் - முள்ளூர் என்னும் ஊரையடுத்த காடு ந்.கஉ
முள்ளெயிறு - முட்போன்ற கூர்மையுடைய பல் உசு, உசுஉ
முறி - தளிர் உஉந்
முறிகண்டன்ன - தளிரைப் பார்த்தாற் போன்ற உஎஅ
முறியருந்து குரங்கு - தளிரைத் தின்னும் குரங்கு உஅஅ
முறியினும் - தளிரைக் காட்டிலும் சுஉ
முறையுடையரசன் - செங்கோன்மையுடைய வேந்தன் உஎசு
முறாரூவிளம்புல் - முதிராத இளமையுடைய புல் உ0சா
முற்றுபு - சூல்முற்றி கூ0
முன்னடி - முன்னிடத்துள்ள தாகிய நூசா
முன்னது - முன்னர் உளதாகிய ககக
முனிபடர் - வெறுத்தற்குரிய துன்பம் நூருஎ
முனிவின்று - வெறுப்பின்றி சூ
முனைஇய - வெறுத்த உசுக
முனையது - இடத்தின் கண்ணது ககக
முனையான் பெருநிரை - போர் முனையினுள்ள பெரிய பசுத் திரள் அ0
முன்பு - வலிமை ந்.அஅ
முன்றில் - முற்றம், இல்முன் சசு
முன்றுறை - துறைமுன் கஉஅ
முனையியோர் - நினைந்து வருபவர் எ
முன்வர லேமம் - முன்வருவேம் என்ற காவல் மொழி உ00
முட்டுவேன்கொல் - முளசசெய்வேனே உஅ
மூதா - அகவை முதிர்ந்த ஆ உ0ச
மூய் - மூடி உந்நி
மூரன்முறுவல் - புன்சிரிப்பு உஅசு
மெய்சாயினள் - உடல் மெலிந்தனள சூ
மெய்தோய்நட்பு - மெய் பொருந்தக் காரணமான நட்பு சா0க
மெய்பிறிதாகுதல் - உடல் வேறுபடுதல் ககூரு
மெய்ம்மலி உவகை - உடல்தளிர்த்தற்குக் காரணமான மகிழ்ச்சி ந்.கூஅ
மெய்யுறன் மரீஇய - உடம்போடு அணைதலைப் பொருந்திய ந்.0
மெய்யோ - உண்மையோ கஉக
மெல்லடி-மென்மையுடைய அடி எ
மெல்லம்புலம்பன் - நெய்தனிலத் தலைவன் உசரு
மெல்லம்புலம்பு - நெய்தனிலம் நு
மெல்லிய இனிய மேவரு தகுர - மென்மையும் இனிமையும் விரும்பத் தக்கனவுமாகிய ந.0சு
மெல்லியற் குறுமகள் - மெல்லிய இயல்புடைய சிறுமி அகூ
மெழுகு - அரக்காற் செய்த கரு கரூரு
மென்குரல் - மெல்லிய கொத்து நூந்எ
மென்சினை - மெல்லிய கிளை க0
மென்சினை யாம் - மெல்லிய கொம்புகளையுடைய யாமரம் நூஎ

மென்றோள் சாய்த்தும் - மெல்லிய தோளே மெலியச செய்தும் ௯0
மேக்கு - உயர உச
மேய்தற்காங்கு - மேய்ந்தாற் போன்று ங்க
மேலவும் - அடியின் மேலுள்ளனவும் எ
மேவர - விருப்பமுண்டாகும்படி ஙஞ
மேவன - விரும்புவன அ
மேவாள் - விரும்பாள் ங ஙஙங

யான்றன்னறிவல் - யான் அவளை அறிவேன் நூ.எ
வங்கா - ஒரு பறவை கருங்க
வஞ்சினம் - சூண்மொழி பட.சூ
வடபுலவாடை - வடதிசையினின்றும் வரும் வாடைகாற்று நூ.கள
வடுகர் - வடுக நாட்டினர் க.க
வடுநாணலம் - பழியை அஞ்சிலேம் அ.அ
வணர் - வளைந்த அ.உ
வண்டல் - விளையாட்டு உ.நூ.அ
வண்டுபட - வண்டுகள் படியும்படி உ.க
வண்டுபடுமலர் - வண்டுகள் படியும் மலர் கூ.0
வண்ணத்துய்ம்மலர் - நிறமும் தூயயும் உடைய பூ க.க0, நூ.அ0
வதி குருகு - உறைகின்ற நாரை நெ
வதிந்த - தங்கிய க0.எ
வதியும் - தங்குகின்ற ச.சு
வதிவயின் - உறையுமிடம் நூ.கு.நெ
வந்ததன் தலையும் - வந்த பின்னரும் உ.ச0
வந்தன்று - வந்தது சுருங்கை, க0.சு
வந்து வந்து - அடிக்கடி வந்து உ.கூ.அ
வம்ப நாரை - புதிதாக வந்த நாரை உ.ங.சு
வம்பமாரி - பருவமல்லாத காலத்துப் பெய்யுமழை சு.சு
வம்பலர் - ஆறுசெலவோர் எ.எ
,, - வழிப்போக்கர் உ.கூ.எ
வம்புப் பெய்யும் - காலமல்லாத காலத்தே பெய்யாநிற்கும் நூ.அ.உ
வயச்சுரு - வலிய சுரமீன் உ.நூ.0
வயப்புலி - வலியுடைய புலி அ.அ
வயவுப்பெடை - வயாநோயுற்ற பெண்பறவை கூ.0.க
வயின் வயின் - இடங்கடோறும் க.நெ.0
வரம்பணை - வரம்பாகிய படுக்கை உ.நூ.அ
வரலன்மை - வாராமை உ.ச.அ
வரணசை இ - வரவிரும்பி சுருங்கை
வரித்த - கோடிய நூ.நெ.க
வரிநிழல் - கோடுகோடான நிழல் உ.நூ.உ
வரிப்புறம் - வரியமைந்த முதுகு கூ.க
வரிமிடறு - வரியமைந்த கழுத்து உ.எ.சு
வரிவண்டு - வரியுடைய வண்டு உ.க.0
வருடைமான் - எண்கால் வருடை, ஒருவகை மான் க.அ.எ
வருதலும் வரும் - வருதலும் செய்வான் அ.அ
வருதி - வருகின்றனை க.ச.க
,, - வருகின்றாய் நூ.உ.ச
வருத்தம் நோனாது - துன்பத்தைப் பொறாமல் நூ.0.எ
வருநர் - வருபவர் ச.எ
வருநர்ப்பாக்கும் - ஆற்றில் வருவாரை ஆராயும் உ.எ.ச
வருந்தி நொந்து - மிக வருந்தி சுருங்கை
வருந்துதும் - யாம் வருந்துகின்றேம் கூ.கூ
வருமோ - வருவாளோ சு.நூ
வரும் - வருவாள் க.,
வரும் என்றோள் - வருவான் என்று சொன்னவள் அ.நூ
வருவிரோ - வருவீரோ உ.சு.அ
வருவீரூளீரோ - உள்ளே வருவீர் யாரும் இருக்கின்றீரோ க.க.அ
வரைகோள் - வரைந்து கொள்ளுதல் உ.நூ.நூ
வரைக்கவான் - மலையினது தாழ்வரை நூ.நெ.நூ
வரைமருணெடுமணல் - மலை போன்ற நெடிய மணற்குவியல் நூ.ச.நெ
வரையா - மலைப்பசு நூ.சு.நூ
வரையாடு - மலையாடு உ.சு
வரையா நிரையம் - கால வரையறையில்லாத நரகம் உ.கூ.உ
வரையிழி யருவி - மலையினின்றும் வீழ்கின்ற அருவிநீர் கூ.0
வரைவு - மணம் க.சு.0
வலஞ்சுரி மராத்து - வலப்பக்கத்தே சுரித்த வெண்கடப்ப மலர் உ.உ
வலந்தப்பிய - வலிபிழைத்த க.டீ.நெ
வலவன் - தோப்பாகன் நூ.க.க
வலவோய் - பாகனே ! ச00

வலனேர்பு - வலமாகச் சுற்றி எழுந்து உ-ள
வலிதது வல்லுநர் - வற்புறுத்தி அத்தொழில் வன்மையுற்றோர் ங-கூ-கு
வலியாஞெஞ்சம் வலிப்ப - துணியாத நெஞ்சம் துணிய ந-சக
வலைப்பட்டாகுகு - வலையின்கண் அகப்பட்டாற்போன்று உ-சச
வல்லா - மாட்டாதவற்றை உ-கக
வல்லியோர் - வன்மையுடையோர் உ-கஅ
வல்லுவோர் - வன்மையுடையோர் ந-அ, எ-க
வல்லேவருக - விரைந்து வருக க-கக
வல்வில் ஓரி : ஒரு வள்ளல் க-ஙஙங

வாராதமையினும் - வாராதிருந்தாலும் ககள
வாராதுறையுநர் - வாராது தங்கிய தலைவர் சூ(ரு)
வாராரோ - வரமாட்டோரோ ங(அ)உ
வாரார் போல்வர் - வரமாட்டார் போலே இருந்தார் க0ங(ட)
வார் - நீண்ட அ(உ)
வார்குரல் - நீண்டகதிர் ந(ட)சூ(ட)
வார்தன்ன - படிந்தாற்போல ககசூ
வார்ந்து இலங்கு வையெயிறு - நேராகி விளங்குகின்ற கூரிய பற்கள் கச
வாலிழை - தூய அணிகலன் சூ(ரு), கஅஅ
வாலெயிறு - தூய பல் உ(ட)ள
வாவல் - வெளவால் கள(உ)
வாழி, ஓ : அசைநிலைகள் சூ(க)
வாழ்நாள் - உயிர்வாழும் நாள் ஙக
வாழேன் போல்வல் - உயிர் வாழமாட்டாதேன் போலே இருக்கின்றேன் க0ங(ட)
வாழை தந்தனை - வாழையை முறித்துக் கொணர்ந்தாய ங(ட)உள
வாழ்க்கை - உயிர்வாழ்தல் உ
வாழ்தலும் பழி - உயிர் வாழ்தலும் பழியாம் ந(ட)உ
வாளிழந்தன - ஒளிமழுங்கின சஙட
வாளை - வாளைமீன் அ, ங(ட)சூ(ட)
வாள்போல் வாய - ஈர்வாள் போலும் வாயை உடையன உ(ட)சூ(ரு)
வாள்போல் வைகறை - ஈர்வாளை ஒத்த விடியற்காலம் கஞ(ட)
வானமீனின - விண்மீன் போல க(ரு)0
வானமேறூர் - வானின்கண் ஏறிச் செல்லார் கங(ட)0
வானினும் - விசும்பினும் காட்டில் ங(ட)
வானெற்று - வெள்ளிய வற்றல் ந(ட)சூ(க)
வான்பூ - வெள்ளிய மலர் க0அ
வான்பூங் கரும்பு - வெள்ளியபூவையுடைய கரும்பு
வான் பொரி - வெள்ளிய பொரி (ரு)ங(ட)
வான்முகை - வெள்ளிய அரும்பு கஉள
வான்றோய்வற்றே - வானத்தை யளாவுவதுபோன்ற பெருக்க முடையது க0உ
விசும்பாடன்னம் - வானத்தில் அசைகின்ற அன்னம் உ0(ரு)
விசும்பு - வானம் எச
விசுமபுகண்புதைய - வானிடம் மறையா நிற்ப ங(ட)அ0
விசும்பு காணலை - வானத்தைக் காணகின்றிலை ந(ட)(ரு)(ரு)
விசும்புவீழ் கொள்ளி - வானத்தினின்றும உருகிவிழும் கொள்ளி கஅசூ
விசைப்பு - துள்ளியெழுதல் எச
விசையர் பெருமகன் - விசயக் கோன் என்னுமொரு வள்ளல் ங(ட)உஅ
விடரகம் - மலைமுழைஞ்சு சஉ
விடர்முகை யடுக்கம் - பிளப்பையும் முழைஞ்சுகளையும் உடைய மலைப்பக்கம் உகஅ
விடலை - தலைவன் கரு
விடல்சூழலன் - விடாநினையேன் ங(ட)00
விடியல் - வைகறை ங(ட)உ
விடுகம் - செலுத்துவேம் க0சூ
விடுகாணுண்டோ - இனிவிடுதற்கு நம்பால் நாணம் உளதோ உ(ட)சூ
விடுவழிவிடுவழி - விடுந்தோறும் விடுந்தோறும் உசூசூ
விட்டகுதிரை - அவிழ்த்து விடப்பட்ட குதிரை எச
விட்டென விடுக்குநாள் - கைவிட்டாய் என்று சொல்லும்படி விடுகின்ற நாள் உ(ட)ரு
வித்தி - விதைத்து க00
வித்திய - விதைக்கப்பட்ட எஉ
வியர்த்தனன் - உடல் வெயர்த்துள்ளேன் அச
வியலரில் - அகன்ற பிணக்கத்தையுடைய ங(ட)சூ(அ)
வியலறை - அகன்ற பாறைகள் சூ(ட)ங(ரு)
வியன்புலம் - அகன்ற நிலம் கசூஉ

வியன்புறை - அகன்ற கடற்புறை ஙஙட

விரவுமலர் - கலந்த மலர் ஙடஉ

விரிகாய் - வெடித்த காய் கஙஞ

விரிசடை - நற்சொல் ஆராய்தல் உகஅ

விரிதிரைப் பெருங்கடல் - விரிந்த அலையினையுடைய பெரிய கடல் கபக

விரிநீர் - கடல் உஉசு

விரிபு - விரிந்து உஉஅ

விருந்தயர்பு - விருந்துண்டு ஙடஅ

விருந்திறும் - புதிய ஊரிடத்தும் ஙடஙட

விருந்து அயர்மார் - விருந்துண்போர் கஙஙு

விருந்துவரக் கரைந்த காக்கை - விருந்தினர் வரும்படி கரைந்த காக்கை டகஏ

விருப்தே காமம் - காமம்புதுமையுடையது உஏஞ

விரைஇ - கலந்து சுஏக

விரையும்-விரைந்துசெல்லும் கூஉ

விலங்குநீர்ப்பரப்பு - குறுக்கிடும் கடல ஙடகஅ

விலங்குமலை - குறுக்கிட்ட மலை கஙஞ

விலைஞர்கைவலை - விற்போரிடத்தேயுள்ள கைவலையல் ககள

வில்கெழுதானை - வில்பொருந்திய படை ஙடஉஅ

வில்லகவிரல் - வில்லைஅகப்படப் பிடித்தத விரல்கள் ஙடஎஏ

வில்லோன் - வில்லையுடையவன் எ

விழவணி - விழாக்காலத்து அணிகலன் ஙடஅசு

விழவிலுணும்-விழக்களத்தின்கண் ணுமை ஙடக

விழவுமுதலாட்டி - மகிழ்தற்கு முதலாகவுள்ள தலைவி கஏ

விழவுமேம்பட்ட - திருவிழாப் போன்று சிறந்த கஉஙு

விழவொடுவருதி - விழாக்கொண்டாட்டத்தோடே வருகின்றாய் உகஙு

விழுத்தலைப்பெண்ணை - சிறந்த உச்சியையுடைய பனை கஅஉ

விழுமம் - துன்பம் உசுக

விழுமிது - சிறந்தது உஙஉ

விழைந்ததன்றலையும் - விரும்பியதன்மேலும் ககசஙு

விளரியார்ப்ப - விளரிப்பண்ணை இசைப்ப ஙடஙட சு

விளி - பாட்டு உகக

விளியாது - ஒழியாமல் ஙடகசு

விளிவாங்குவிளியினல்லது - அழியுங்கால் அழிவதன்றி ஙடஏஙு

விளைகனி - முதிர்ந்த பழம் கக

விளைந்து - கனிந்து அ

விறலவன் - வெற்றியையுடைய தலைவன் ஙடஙுக

விறல்கெழுசூலி - வெற்றிபொருந்திய சூலப்படையுடைய கொற்றவை உகஅ

விறல்வனப்பு - வெற்றியையுடைய அழகு ஊஉசு

விறற்பகை - வெற்றியையுடைய பகைவர் உகள

வினவலும் வினவாம்-கேட்டலுஞ் செய்யாம் உசுஅ

வினவுவதுடையேன் - வினவற்பாலதொருசெய்தியையுடையேன் ஙடசுஉ

வினவுவல்-யான்கேட்பேன் கசஅ

வினைநலம்பழுஇவருதும்-தொழில் நலம்பெற்று வருவாம் உஙுசு

வினைமுடித்தசெயமல் - தொழில் முற்றினையாள் உண்டான தலைமைத் தனமை உளஏ

வினையேஆடவர்க்குயிர்-தொழிலே ஆண்மகளுக்கு உயிர்போல்வது கஙடஙு

வீஇசுமந்து - மலர்சுமந்து உஏஏ

வீங்கி - பருத்து கஙுக

வீங்குமுலைசெருத்தல் - பருத்த முலைக்காம்பையுடைய மடியையுடைய ஆ. (ஆகுபெயர்) ஙடசச

வீந்தாங்கு-அழிந்தாற்போல் கசுஙு

வீயுகு துறுகல் - மலர்கள் உதிரப் பெற்ற குண்டுக்கல் சள

வீய்ந்துக்காங்கு - அழிந்து வீழ்ந்தாற்போல கசக

வீறுபெற்று-சிறப்பை எய்தி உஉஙு

வீழுறை - வீழ்கின்றமழைத்துவி உளஏ

வீழ்கோட்பல - தூங்குங்குலைகளை யுடைய பலா ௨௫௭
வீழ்தாழ்தாழை - விழுது தூங்கு கின்ற தாழை ௨௨அ
வீழ்வு - விழுந்து ௫௦சு
வீழ்தென - பெய்ததாக ௬0
,, - பெய்தலால் ௬௨
வீளையர் - சீழ்க்கையையுடையோர் ௨எ௨
வெஞ்சுரம் - வெம்மையுடைய பாலைநிலம் எஎ
வெஞ்சோறு - விரும்புதற்குரிய சோறு ௨௬0
வெண்குருகு - வெள்ளை நாரை ௬௬௫
வெண்கூதாளம் - ஒருவகைச்செடி ௨அ௨
வெண்கோட்டதவம் - வெள்ளிய கொம்பையுடைய அத்திமரம் ௨ச
வெண்கோட்டியானை - வெள்ளிய மருப்பையுடைய யானை எறி
வெண்டலை - நரைத்தலை ௬ச௯
வெண்டிரி - வெள்ளியதிரிச்சீலை ௫௫௫
வெண்டேர் - யானைக்கோட்டாற் செய்த வெள்ளிய தேர் ௬அ௬
வெண்ணெய் ௫அ
வெண்ணெற்று - வெள்ளிய வற்றல் எ
வெண்பறை - வெள்ளியசிறகு ௬௯௯
வெந்திறற்கடுவளி - வெப்பமும் ஆற்றலும் விரைவுமுடைய காற்று ௬௬
வெப்பத்தண்ணீர் - வெந்நீர் ௨எஎ
வெம்போர் - வெவ்விய போர் அ0
வெயில்கழிக்கும் - வெயில்படாமே நீக்கும் ௨௬௫
வெய்துற்று - துன்புற்று ச0௫, ௫௫௫
வெய்ய - வெப்பமுடையன ௬௬சு
வெய்யை - விருப்பமுடையாய் எ௫
வெரிந் - முதுகு ௬ச0
வெரீஇ - அஞ்சி ௫ச
வெருகினம் - காட்டுப்பூனைக்கூட்டம் ௬௫௬
வெருகுசிரித்தன்ன - காட்டுப்பூனை சிரித்தாற்போன்ற ௨௨0

வெருக்குப்பல்உரு - காட்டுப்பூனைப் பல்போன்ற உருவம் ௨ச0
வெரூஉம் - அஞ்சும் ௫ச
வெவ்வறை - வெப்பமுடைய பாறைக்கல் ௫அ
வெவ்வாய்ப்பெண்டிர் - வெவ்விய (தீய)வாயையுடைய மகளிர் ௫எ௫
வெவ்வெங்கலுழி - மிக்கவெப்ப முடைய கலங்கல்நீர் ௫௫சு
வெள்வீத்தாழை - வெண்டாழை ௬சு௫
வெள்வேர் - வெள்ளைவேர் ௬0சு
வெள்ளம் - ஆசைப்பெருக்கு ௨ச
வெள்ளிழுது - வெண்ணெய் ௨எஎ
வெள்ளென்பு - வெள்ளியஎலும்பு ௬அ௨
வெள்ளோத்தோடு - வெள்ளாட்டுத் தொகுதி ௬சு௫
வெறியயர்களம் - வெறியாடுமிடம் ௫௫
வெறியயர்களன் - வெறியாடுமிடம் ௫௬அ
வெறியுறுவனப்பு - வெறியாடு வோனது பிரயம் ௬0௫
வெறியெனவுணர்ந்த வேலன் - வெறியாடலே இந்நோய்க்குத் தீர்வாம்என எண்ணிய வேன் மகன் ௫சு0
வென்றிநெடுவேள் - வெற்றியை யுடைய முருகன் ௬௬
வென்றெறிமுரசு - வெற்றிமுரசு ௫அ0
வேங்கை - ஒருமரம் அ
வேட்டச்செந்நாய் - வேட்டையாடு கின்ற செந்நாய் ௫சு
வேண்டலென்-விரும்பமாட்டேன் ௨அ0
வேண்டிய-விரும்பியவற்றை ௫ச௬
,, - விரும்புவான் ௫௬
வேண்டும் - விரும்பாநிற்கும் ௨எ
வேண்டுவினை - தாம் விரும்பி மேற்கொண்ட தொழில் ௬௬௫
வேதின - ஈர்வாளினுடைய ௬ச0
வேந்துவிடுதொழில் - அரசனால் ஏவப்பட்ட தொழில் ௨ச௨
வேப்பஒண்பழம்-ஒளியுடைய வேப்பம்பழம் சுஎ

வேய் - மூங்கில் எ
வேய்ந்த - சூடிய சஅக
வேரல்வேலி - மூங்கில்வேலி கஅ
வேராலை - வேரிடத்துள்ள வலை
ககள
வேராலைப்பள்ளி - வேரிடத்துள்ள
வலையின்கட்படுக்கை.
வேருமுதலுங்கோடும் - வேரும்
அடிமரமும் கிளைகளும் உடுள
வேர்க்கோட்பல-வேரின்கட் சூலை
யையுடைய பலாமரம் கஅ
வேலன்-வேன்மகன், பூசாரி நுஉ
வேளிர் - வேளிர்குடிப்பிறந்தோர்
ககூச
வேறுபுலன் - வேற்றுநாடு களசு
வேற்றுப்பெருந்தெய்வம் - வேறு
கிய பெரிய கடவுளர் உசுஉ
வேற்றுமுனை-பகைவர்போர்முனை
கஉ0
வேனல் - வேனிற்பருவம் கூஉக
வேளட்டுவேலி - வேலாட்டுச்
செய்தவேலி உசடு
வேனிலஞ்சினை - வேனிற்காலத்து
அழகிய மரக்கொம்பு உஉ
வேனிலானை- வேனிற்காலத்தில்
நுஎசு
வேனிலானைறு - வேனிற்காலத்
துப் பொலிகாளை எச
வேனிலோரிணர் - வேனிற்காலத்
தின்ள ஒருகொத்து உகக
வேனிற்குன்றம் - வேனிற்பருவத்
தின்கண் மலை நுகசு
வைகல் - நாள் (கடவுள் வாழ்த்து)
வைகல்வைகல்வைகவும் - நாடோ
றும் நாள்கள் கழியாநிற்பவும்
உஅடு
வைகறையான் - விடியற்பொழு
தில் நுகஉ
வைகறொறும் - நாடோறும் உகஅ
வைகிய - தங்கிய கூ
வைப்பு - செல்வம் எக
வையார்வாளி - கூரியஎடியஅம்பு
உகூள
வெளவும் - கவரும் உஎக